JL
Q6m211,N12 NS
N12.8-10
162021

நிகழ்கால சத்தியம்.

Vol. VIII. மதராஸ்—ஏப்பிரல்மீ, 1919. No. 2.

மரித்தோர் எங்கே இருக்கிறார்கள்

(WHERE ARE THE DEAD)

மரித்தோர் எங்கே இருக்கிறார்கள்; என்ன செய்துகொண்டிருக்கிறார்கள்; அவர்களுக்குத் தன்னறிவு உண்டா; அவர்களால் நமக்கு ஏதாவது நன்மையாவது தீமையாவது செய்ய முடியுமா; அவர்களை எப்பொழுது பார்க்கலாம்; அவர்களின் நம்பிக்கை என்ன; இவை முதலிய விஷயங்களை நாம் மிகவும் திட்டமாய் அறிய வேண்டியது வெகு அவசியமாயிருக்கிறது. ஏனென்றால், இதைப்பற்றிய திட்டமான அறிவு நமது தேசத்தில் திரளான ஜனங்களுக்கு இல்லாததால் மரித்தோர்க்கு கோயிலைக் கட்டவும்; அவர்களுக்குப் பூசை பண்ணவும்; அவர்களை நோக்கி மன்றாடவும்; மரித்துப்போனவர்களின் பிரேதங்களை சுமந்தால் அதினால் தங்களுக்கு அவர்களால் வெகு உதவி கிடைக்குமென்றும்; வேறு. சிலர் அவர்கள் தங்களுடைய பகைஞராயிருந்தால் தங்கள் வீட்டைச் சுற்றிலும் இரவும் பகலுமாக அலைந்து திரிந்து உயிரோடிருந்த காலத்தில் அவர்கள் வருவித்த துன்பத்தைப்பார்க்கிலும் தங்களுக்கு வெகு தீங்கை இனிமேல் விளைவிப்பார்களென்று அவர்களுக்குப் பயப்பட்டு காணிக்கைகளையும் சில விசேஷித்த தினங்களில் வேஷ்டி, சேலை, சாப்பாடுகளும் வீடுகளில் தனித்த அறைகளில் வாங்கி அவர்களுக்குப் படைக்கிறதையும் நாம் பார்க்கிறோம். இன்னும் அநேகர் அவர்கள் வயதுபோன்ற ஆட்களை வீட்டுக்கு கூட்டிக்கொண்டு வந்து அவர்களுக்கு அன்ன வஸ்திரம் கொடுக்கிறதையும் பார்க்கிறோம். ஆகையால் இதைப்பற்றிய உண்மையை அறிய உலக ஞானிகளிடத்திலும், சாஸ்திரிகளிடத்திலும் போவோமானால் ஏமாந்து போவோம். ஏனென்றால், அவர்கள் இந்த அனுபோகத்தை இன்னும் அடையவில்லை. அடைந்தபின் அவர்களால் உயிரோடிருக்கும் நமக்கு இந்தக் காரியத்தில் வெளிச்சம் கொடுக்கவும் முடிவதில்லை. அப்படியானால் இதைப்பற்றி யாரிடத்தில் திட்டமாய் விசாரிக்கவேண்டுமானால்: எப்படி ஓர் கட்டடத்தின் திட்டமான காரியத்தை அதைக் கட்டின சிற்பாசாரி மூலமாய்த்தான் அறியக்கூடுமோ, அப்படியே மனுக்குலத்தைச் சிருஷ்டித்த சிருஷ்டிகர் மூலமாய்த்தான் நமது நிலைமை யாவற்றையும் திட்டமாய் அறியலாம். ஆகையால் மனிதர்களுக்கு தேவன் அருளிச்செய்திருக்கிற அவருடைய திருவசனமாகிய பரிசுத்த வேதத்தைக்கொண்டு இந்த சங்கதிகளை ஆராய்ச்சி செய்வோமாக.

"பிரபுக்களையும் இரட்சிக்கத் திராணியில்லாத மனுப்புத்திரனையும் நம்பாதேயுங்கள். அவனுடைய ஆவி பிரியும், அவன் தன் மண்ணுக்குத் திரும்புவான்; அந்நாளிலே அவன் யோசனைகள் அழிந்துபோம்." சங். 146: 3, 4. "செய்யும்படி உன் கைக்கு நேரிடுகிறது எதுவோ அதை உன் பெலத்தோடே செய்; நீ போகிற பாதாளத்திலே செய்கையும் வித்தையும் அறிவும் ஞானமும் இல்லையே." பிர. 9: 10. இவைகளினால் மரணத்தில் உணர்ச்சியும், அறிவும், எவ்விதமான கிரியைகளும், ஞானமும் இல்லையென்றும்; ஓர் காரியத்தை நினைக்கவும், பகுத்தறியக்கூடிய யோசனைகளும் ஓர் முடிவுக்கு வருகிறது என்றும் வெகு தெளிவாய்ப் பார்க்கிறோம். இப்பூமியில் நல்லோராயிருந்து மரிக்கிறவர்கள் எப்பொழுதும் தேவனைப் போற்றிப் புகழ்ந்துகொண்டிருக்கிறார்களென்று உலக மனிதர் அடிக்கடி சொல்லக் கேள்விப்படுகிறோம். ஆனால் சங்கீதக்காரனாகிய தாவீது பின்வருமாறு சொல்லுகிறான். "மரணத்தில் உம்மை நினைவுகூர்வதில்லை, பாதாளத்தில் உம்மைத் துதிப்பவன் யார்?" சங். 6: 5. "மரித்தவர்களும் மவுனத்தில் இறங்குகிற அனைவரும் கர்த்தரைத் துதியார்கள்." சங். 115: 17. இன்னும் இது யாதொரு உணர்ச்சியற்ற நிலைமையென்று பெரிய ஞானியாகிய சாலமோன்

சொல்லுகிறார். "உயிரோடிருக்கிறவர்கள் தாங்கள் மரிப்பதை அறிவார்களே, மரித்தவர்கள் ஒன்றும் அறியார்கள்; இனி அவர்களுக்கு ஒரு பலனும் இல்லை; அவர்கள் பேர் முதலாய் மறக்கப்பட்டிருக்கிறது. அவர்கள் சிநேகமும், அவர்கள் பகையும், அவர்கள் பொறாமையும் எல்லாம் ஒழிந்துபோயிற்று; சூரியனுக்குக் கீழே செய்யப்படுகிற தொன்றிலும் அவர்களுக்கு இனி என்றைக்கும் பங்கில்லை." பிர. 9: 5, 6. மனிதருடைய வீணான தாற்பரியங்களை ஒப்புக்கொள்ளாத எந்த நேர்மையுள்ள ஆத்துமாவுக்கும் முன்கூறிய வசனங்களே இதின் சத்தியத்தை அறிந்துகொள்ள போதுமான அத்தாட்சி. மறுபடியும் அதைச் சற்றுத் திருப்பி பார்ப்போம். "உயிரோடிருக்கிறவர்கள் தாங்கள் மரிப்பதை அறிவார்கள்." அவர்களுக்குத்தான் உணர்ச்சியும், அறிவும், ஞானமும், யோசனைகளும், நினைவுகளும் உண்டு. மரித்தவர்களுக்கு இது முற்றும் எதிரிடை. 'மரித்தவர்கள் ஒன்றும் அறியார்கள்' மரணத்தில் அறிவும், உணர்ச்சியும், யோசனைகளும் கிடைக்கவே கிடையாது. மரணமானது ஜீவனுக்கு முற்றும் எதிர்பதம். மரணத்தில் அவர்கள் சிநேகமும், பகையும், பொறாமையும், எல்லாம் ஒழிந்துபோயிற்று. அதுவுமன்றி, சூரியனுக்குக் கீழே செய்யப்படுகிறதொன்றிலும், இனி அவர்களுக்கு என்றைக்கும் பங்கில்லை. அவர்கள் சிநேகம் ஒழிந்து, அழிந்துபோனதால், பூமியில் உயிரோடிருக்கும் அவர்களது பகைஞருக்கு எவ்விதத் தீங்கும், அவர்கள் செய்யவும் முடியாது. இந்தத் தெளிவான சத்தியங்களை ஜனங்கள் அறிந்து விசுவாசிக்கிற விஷயத்தில், மரித்தோரைப்பற்றி உண்டாயிருக்கிற சகலவிதமான பொய் உபதேசங்களுக்கும் எவ்வளவோ. இலேசாய்த் தப்பித்துக்கொள்ளலாம். மரித்தோர்கள், உயிரோடிருக்கிற தங்களுடைய இனஜன பெந்துக்களின் காரியம் ஒன்றையும் அறியார்கள். "அவன் பிள்ளைகள் கனமடைந்தாலும் அவன் உணரான்; அவர்கள் சிறுமைப்பட்டாலும் அவர்களைக் கவனியான்." யோபு. 14: 21.

மரணத்தை நித்திரைக்கு ஒப்பிட்டிருக்கிறது.

வேதாகமத்தில் மரணத்தின் உணர்ச்சியற்ற நிலைமையைக் காட்ட நித்திரை என்ற பதம் உபயோகிக்கப்பட்டிருக்கிறது. சங்கீதக்காரனாகிய தாவீது பின்வருமாறு 13-ம் சங்கீதம் மூன்றாம் வசனத்தில் எழுதியிருக்கிறான்: "நான் மரண நித்திரை அடையாதபடிக்கு என் கண்களைத் தெளிவாக்கும்." நமது இரட்சகராகிய இயேசு கிறிஸ்துவும் அதை அவ்வாறே பேசுகிறார். "நம்முடைய சிநேகிதனாகிய லாசரு நித்திரையடைந்திருக்கிறான்; நான் அவனை எழுப்பப் போகிறேன் என்றார். அதற்கு அவருடைய சீஷர்கள்: ஆண்டவரே, நித்திரையடைந்திருந்தால் சுகமடைவான் என்றார்கள். இயேசுவானவர் அவனுடைய மரணத்தைக் குறித்து அப்படிச் சொன்னார்; அவர்களோ, நித்திரை செய்து இளைப்பாறுகிறதைக் குறித்துச் சொன்னாரென்று நினைத்தார்கள். அப்பொழுது இயேசு அவர்களை நோக்கி: லாசரு மரித்துப்போனான் என்று வெளிப்படையாய்ச் சொன்னார்." யோவான் 11: 11-14. அப்போஸ்தலனாகிய பவுல் "அதன்பின்பு அவர் ஐந்நூறு பேருக்கு அதிகமான சகோதரருக்கும் ஒரே வேளையில் தரிசனமானார்; அவர்களில் அநேகர் இந்நாள் வரைக்கும் இருக்கிறார்கள், சிலர் மாத்திரம் நித்திரையடைந்தார்கள்" என்று 1 கொரி. 15: 6-ல் சொல்லுகிறார். இன்னும் 1 தெச 4: 13-லும் பார்க்க: "அன்றியும், சகோதரரே, நித்திரையடைந்தவர்களினிமித்தம் நீங்கள் நம்பிக்கையற்றவர்களான மற்றவர்களைப்போலத் துக்கித்து அறிவில்லாதிருக்க எனக்கு மனதில்லை." மேன்மையான தீர்க்கதரிசியாகிய தானியேலும் அப்படியே எழுதுகிறான். "பூமியின் தூளிலே நித்திரை பண்ணுகிறவர்களாகிய அநேகரில் சிலர் நித்திய ஜீவனுக்கும், சிலர் நித்திய நிந்தைக்கும், இகழ்ச்சிக்கும் விழித்து எழுந்திருப்பார்கள்." தானி. 12: 2. ஆகவே மரணத்தில் அவர்கள் நித்திரை செய்ய படுத்துக்கொள்ளுவதாயும்; உயிர்த்தெழுதலில் நித்திரை தெளிந்து விழிக்கிறவர்களுமாயிருக்கிறார்கள். மரணத்துக்கும் உயிர்த்தெழுதலுக்கும் இடையில் அவர்களுக்கு ஓர் நீண்ட உணர்ச்சியற்ற நித்திரைதான். சுவிசேஷகனாகிய லூக்காவும், ஸ்தேவானுடைய மரணத்தைப்பற்றியும் அவ்வாறே எழுதியிருக்கிறார். அவனோ முழங்காற்படியிட்டு: ஆண்டவரே, இவர்கள்மேல் இந்தப் பாவத்தைச் சுமத்தாதிரும் என்று மிகுந்த சத்தமிட்டுச் சொன்னான். இப்படிச் சொல்லி, நித்திரை அடைந்தான்." அப். 7: 60.

தாவீது பரலோகத்தில் இல்லை.

தேவனுடைய சொந்த இருதயத்திற்கேற்ற மனுஷனாகிய தாவீதும், ஆத்துமா அழியாமை என்ற கொள்கைக் கொண்டிருக்கிறவர்களின் உபதேசத்தின்படி அழியாமல் பரலோகத்துக்குப் போகாமல், தனது கல்லறையில் தான் இன்னும் நித்திரை செய்துகொண்டிருக்கிறதாகப் பார்க்கிறோம். அப்போஸ்தலனாகிய பவுல் பின்வருமாறு அதைப்பற்றிப் பிரசங்கித்திருக்கிறார். "தாவீது தன் காலத்திலே தேவனுடைய சித்தத்தின்

படி அவருக்கு ஊழியஞ்செய்த பின்பு நித்திரையடைந்து, தன் பிதாக்களிடத்திலே சேர்த்துக்கொள்ளப்பட்டு (கல்லறையில்) அழிவைக் கண்டான்." அப். 13: 36. இதைவிட வெகு திட்டமாய் பேதுரு அப்போஸ்தலன் பெந்தெகொஸ்தே நாளில் பிரசங்கம் செய்திருக்கிறார். "தாவீது பரலோகத்திற்கு எழுந்து போகவில்லையே, நான் உம்முடைய சத்துருக்களை உமக்குப் பாதபடியாக்கிப்போடும் வரைக்கும், நீர் என் வலது பாரிசத்தில் உட்காரும் என்று கர்த்தர் என் ஆண்டவருடனே சொன்னார்." "சகோதரரே, கோத்திரத் தலைவனாகிய தாவீதைக் குறித்து நான் உங்களுடனே தைரியமாய்ப் பேசுகிறதற்கு இடங்கொடுங்கள்; அவன் மரணமடைந்து அடக்கம் பண்ணப்பட்டான்; அவனுடைய கல்லறை இந்நாள் வரைக்கும் நம்மிடத்திலிருக்கிறது." அப். 2: 34, 35-39. இன்னும் யோபின் புஸ்தகம் 7-ம் அதிகாரம் 21-ம் வசனத்தில் "என் மீறுதலை நீர் மன்னியாமலும், என் அக்கிரமத்தை நீக்காமலும் இருக்கிறது என்ன? இப்பொழுதே மண்ணில் படுத்துக்கொள்வேன்; விடியற்காலத்திலே என்னைத் தேடுவார்களானால் நான் இரேன் என்றான்." இதைப் பார்க்கும்போது மரணம் என்றால் "நான் இரேன்" ஜீவன் முழுவதும் அற்று இல்லாமற்போவதே. மரணம் என்ற பதத்தின் அர்த்தத்தை அறிந்துகொள்ள இதைவிட பலத்த வார்த்தைகளை உபயோகிக்கவேண்டிய தவசியமில்லையென்று தெரிகிறது.

மரித்தோர் தங்கள் கல்லறையிலிருக்கிறார்கள்.

இன்னொரு அதிகாரத்தில் யோபு வெகுவாய் மரணத்தைப்பற்றித் தர்க்கித்து ஓர் திட்டமான முடிவுக்கு வருகிறான். அவன் சொல்லுகிறதாவது "ஒரு மரத்தைக் குறித்தாவது நம்பிக்கையுண்டு; அது வெட்டிப்போடப்பட்டாலும் திரும்பத் தழைக்கும், அதின் இளங்கிளைகள் துளிர்க்கும், அதின் வேர் தரையிலே பழையதாகி, அதின் அடிக்கட்டை மண்ணிலே செத்தாலும், தண்ணீர் வாசனையினால் அது துளிர்த்து இளமரம்போலக் கிளை விடும்." பிற்பாடு அவன் மனிதனையும் மரத்தையும் வித்தியாசப்படுத்துகிறான். "மனுஷனோ செத்தபின் ஒழிந்து போகிறான், மனுப்புத்திரன் ஜீவித்துப்போனபின் அவன் எங்கே?" மறுபடியும் அவன் தானே அதற்கும் உத்தரவு கொடுக்கிறான். "தண்ணீர் ஏரியிலிருந்து வடிந்து, வெள்ளம் வற்றிச் சுவறிப்போகிறது போல, மனுஷன் படுத்துக்கிடக்கிறான், வானங்கள் ஒழிந்துபோகுமளவும் எழுந்திருக்கிறதும் இல்லை, நித்திரை தெளிந்து விழிக்கிறதும் இல்லை." இதைப் பார்க்கும்போது உயிர்த்தெழுதலின் காலம் வரைக்கும் அதாவது வானமும் சுருட்டப்பட்ட புஸ்தகம்போலாகி விலகிப்போகும் வரைக்கும் (வெளி. 6: 14.) மரித்தவர்கள் அந்த உணர்ச்சியற்ற நிலைமையில்தானிருப்பார்கள். இன்னும் அவன் சொல்லுகிறான் "நீர் என்னைப் பாதாளத்தில் ஒளித்து, உமது கோபம் தீருமட்டும் என்னை மறைத்து, என்னை திரும்ப நினைக்கும்படி எனக்கு ஓர் காலத்தைக் குறித்தால் நலமாயிருக்கும்." என்னைப் பாதாளத்தில் 'ஒளித்து' 'மறைத்து'வையுமென்கிறான். இப்படியாக முதல் கேள்விக்கு உத்தரவு சொல்லிப்போட்டு "மனுஷன் செத்தபின் பிழைப்பானோ?" என்கிறான். மறுபடியும் "எனக்கு மாறுதல் எப்போது வருமென்று எனக்குக் குறிப்பிக்கப்பட்ட போராட்டத்தின் நாளெல்லாம் நான் காத்திருக்கிறேன். என்னைக் கூப்பிடும்; அப்பொழுது நான் உமக்கு உத்தரவு சொல்லுவேன்; உமது கைகளின் கிரியைகளின்மேல் இரக்கம் வைப்பீராக" என்று யோபு 14: 7-15 ல் வாசிக்கிறோம். எனக்குக் குறிப்பிக்கப்பட்ட காலம் வரைக்கும் நான் பாதாளமாகிய என் கல்லறைக் குழியிலே காத்திருக்கிறேன்" என்றான். மேலும் தாம் காத்திருக்கிற இடத்தைப் பார்த்து "அப்படி நான் காத்துக்கொண்டிருந்தாலும் பாதாளம் எனக்கு வீடாயிருக்கும், இருளில் என் படுக்கையைப் போடுவேன். அழிவைப் பார்த்து, நீ எனக்குத் தகப்பன் என்கிறேன்; புழுக்களைப் பார்த்து, நீங்கள் எனக்குத் தாயும் எனக்குச் சகோதரியும் என்கிறேன். என் நம்பிக்கை இப்போது எங்கே? நான் நம்பியிருந்ததைக் காண்பவன் யார்? அது பாதாளத்தின் காவலுக்குள் இறங்கும்; அப்போது தூளில் ஏகமாய் இளைப்பாறுவோம் என்றான்." யோபு. 17: 13-16. இன்னும் விபரமாய் "துன்மார்க்கருடைய தொந்தரவு அங்கே ஓய்ந்திருக்கிறது; பெலனற்று விடாய்த்துப் போனவர்கள் அங்கே இளைப்பாறுகிறார்கள். கட்டுண்டிருந்தவர்கள் அங்கே ஏகமாக அமைந்திருக்கிறார்கள்; ஒடுக்குகிறவனுடைய சத்தம் அங்கே கேட்கப்படுகிறதில்லை. சிறியவனும் பெரியவனும் அங்கே சரியாயிருக்கிறார்கள். அடிமை தன் எஜமானுக்கு நீங்கலாயிருக்கிறான்" என்றான். யோபு 3: 17-19. சுவிசேஷ தீர்க்கதரிசியாகிய ஏசாயாவும் "பாதாளம் உம்மைத் துதியாது, மரணம் உம்மைப் போற்றாது; குழியில் இறங்குகிறவர்கள் உம்முடைய சத்தியத்தைத் தியானிப்பதில்லை, நான் இன்று செய்கிறதுபோல், உயிரோடிருக்கிறவனே, உம்மைத் துதிப்பான், தகப்பன் பிள்ளைக்கு உமது சத்தியத்தைத் தெரிவிப்பான்." என்று ஏசா. 38: 18, 19-ல் வெகு தெளிவாய் சொல்லியிருக்கிறான்.

உயிர்த்தெழுதலில் நித்திரை தெளிந்து விழிப்பார்கள்.

“இதோ ஒரு இரகசியத்தை உங்களுக்கு அறிவிக்கிறேன்; நாமெல்லாம் நித்திரையடைவதில்லை; ஆகிலும் கடைசி எக்காளம் தொனிக்கும்போது, ஒரு நிமிஷத்திலே, ஒரு இமைப் பொழுதிலே, நாமெல்லாரும் மறுரூபமாக்கப்படுவோம். எக்காளம் தொனிக்கும், அப்பொழுது மரித்தோர் அழிவில்லாதவர்களாய் எழுந்திருப்பார்கள்; நாமும் மறுரூப மாக்கப்படுவோம். அழிவுள்ளதாகிய இது அழியாமையையும், சாவுக்கேதுவான இது சாவாமையையும் தரித்துக்கொள்ளவேண்டும். அழிவுள்ளதாகிய இது அழியாமையையும், சாவுக்கேதுவாகிய இது சாவாமையையும் தரித்துக்கொள்ளும்போது, மரணம் ஜெயமாக விழுங்கப்பட்டது என்று எழுதியிருக்கிற வார்த்தை நிறைவேறும்.” 1 கொரி. 15: 51-54. இந்த மாறுதல் எப்போது வருமென்றுதான் யோபு தனக்குக் குறிக்கப்பட்ட நாட்கள் வரைக்கும் பாதாளமாகிய கல்லறைக் குழியில் காத்திருக்கிறேன் என்றான். இந்த பரிசுத்த நம்பிக்கையைப்பற்றிதான் அப்போஸ்தலனாகிய பவுலும் பின்வருமாறு சொல்லுகிறார். “கர்த்தருடைய வார்த்தையை முன்னிட்டு நாங்கள் உங்களுக்குச் சொல்லுகிறதாவது: கர்த்தருடைய வருகைமட்டும் உயிரோடிருக்கும் நாம் நித்திரையடைந்தவர்களுக்கு முந்திக்கொள்ளுவதில்லை. எனெனில், கர்த்தர் தாமே ஆரவாரத்தோடும், பிரதான தூதனுடைய சத்தத்தோடும், தேவ எக்காளத்தோடும் வானத்திலிருந்து இறங்கி வருவார்; அப்பொழுது கிறிஸ்துவுக்குள் மரித்தவர்கள் முதலாவது எழுந்திருப்பார்கள். பின்பு, உயிரோடிருக்கும் நாமும் கர்த்தருக்கு எதிர்கொண்டுபோக, மேகங்கள்மேல் அவர்களோடேகூட ஆகாயத்தில் எடுத்துக்கொள்ளப்பட்டு இவ்விதமாய் எப்பொழுதும் கர்த்தருடனேகூட இருப்போம். 1 தெச. 4: 14-17.

உயிர்த்தெழுதலே ஆதிமுதல் பரிசுத்தவான்களின் நம்பிக்கை.

சங்கீதக்காரன் “நானோ நீதியில் உம்முடைய முகத்தை தரிசிப்பேன்; நான் விழிக்கும்போது (நித்திரை தெளிந்து) உமது சாயலால் திருப்தியாவேன் என்று சங். 17: 15-ல் சொல்லுகிறான். யோபு தன் நம்பிக்கையைப்பற்றி எவ்வளவோ உறுதியாயும் வைராக்கியமாயும் பேசுகிறான். “ஆ நான் இப்பொழுது சொல்லும் வார்த்தைகள் எழுதப்பட்டால் நலமாயிருக்கும்; அவைகள் ஒரு புஸ்தகத்தில் வரையப்பட்டு, அல்லது என்றைக்கும் நிலைக்க அவைகளைக் கருங்கல்லிலே உளிவெட்டாகவும் ஈய எழுத்தாகவும் பதிந்தால் நலமாயிருக்கும். என் மீட்பர் உயிரோடிருக்கிறார் என்றும், அவர் கடைசி நாளில் பூமியின்மேல் நிற்பார் என்றும் நான் அறிந்திருக்கிறேன். இந்த என் தோல் முதலானவைகள் அழுகிப்போன பின்பு நான் என் மாம்சத்திலிருந்து தேவனைப் பார்ப்பேன்.” எசா. 26: 19-ல் பார்க்க. “மரித்த உம்முடையவர்கள் பிரேதமான என்னுடையவர்களோடே எழுந்திருப்பார்கள்; மண்ணிலே தங்கியிருக்கிறவர்களே விழித்துக் கெம்பீரியுங்கள். உம்முடைய பனி பூண்டுகளின்மேல் பெய்யும் பனிபோல் இருக்கும்; மரித்தோரை பூமி புறப்படப்பண்ணும்.” அப்போஸ்தலனாகிய பவுலும் தனது நம்பிக்கையைப் பற்றி இவ்வாறே உரைக்கிறார். “நல்ல போராட்டத்தை போராடினேன், ஓட்டத்தை முடித்தேன், விசுவாசத்தைக் காத்துக்கொண்டேன். இதுமுதல் நீதியின் கிரீடம் எனக்காக வைக்கப்பட்டிருக்கிறது, நீதியுள்ள நியாயாதிபதியாகிய கர்த்தர் அந்நாளிலே (நியாயத்தீர்ப்பின் நாளிலே) அதை எனக்குத் தந்தருளுவார். (ஆனால் மரித்ததுமல்ல;) எனக்கு மாத்திரமல்ல, அவர் பிரசன்னமாகுதலை விரும்பும் யாவருக்கும் அதைத்தந்தருளுவார்.” 2 தீமோ 4: 7, 8. அப்போஸ்தலனாகிய பேதுருவும் அப்படியே தமது நம்பிக்கையைப்பற்றி சொல்கிறார். “சுதந்தரத்தை இறுமாப்பாய் ஆளுகிறவர்களாக அல்ல, மந்தைக்கு மாதிரிகளாகவும் கண் காணிப்பு செய்யுங்கள். அப்படிச் செய்தால் பிரதான மேய்ப்பர் வெளிப்படும்போது வாடாத கிரீடத்தைப் பெறுவீர்கள்.” I பேதுரு 5: 4. அப்படியே, நமது இரட்சகரும் “நான் போய் உங்களுக்காக ஸ்தலத்தை ஆயத்தம் பண்ணின பின்பு, நான் இருக்கும் இடத்தில் நீங்களும் இருக்கும்படி, நான் மறுபடியும் வந்து உங்களை என்னிடத்தில் சேர்த்துக்கொள்வேன்” என்று யோவான் 14: 3-ல் வெகு தெளிவாய் திருவுளம்பற்றியிருக்கிறார். அவர் வந்து நம்மை தமது பிதாவின் வீட்டிற்கு கூட்டிக்கொண்டு போகுமளவும் யாவரும் இப்பூமியில்தான் இருக்கவேண்டும். சத்தியம் இவ்வாறு தெளிவாய் இருக்க அநேகர் பொய்க்குத் தகப்பனாகிய சாத்தான் என்னும் பழைய பாம்பின் புரட்டான வார்த்தைகளாகிய “நீங்கள் சாகவே சாவதில்லை” என்ற மாறுபாடான உபதேசத்தை நம்பி, தங்களது நம்பிக்கையை மரணத்தில் எதிர்பார்க்கிறார்கள். இதை வாசிக்கும் நண்பர்களே நம்முடைய நம்பிக்கையை கிறிஸ்தவ சபையின் நம்பிக்கையாகிய உயிர்த்தெழுதலில் வைத்து, பாவத்தைவிட்டு மனந்திரும்புகிற ஒவ்வொரு பாவிக்கும் கிறிஸ்துவின் சுவிசேஷம் அளிக்கிற ஈவாகிய நித்திய ஜீவனைப் பெற்றுக்கொள்ள சோர்ந்துபோகாமல் இடைவிடாமல் முயலுவோமாக.

ஈ. டி. தாயஸ்.

9 - AUG 19

“பெரிய வெள்ளிக்கிழமை” அதின் சரித்திர சம்பந்தம்

(HISTORICAL FACTS REGARDING “GOOD FRIDAY.”)

வாரத்தின் ஆறும் நாள் எது?

“வெள்ளிக்கிழமை: வாரத்தின் ஆறும் நாள்.”—வெப்ஸ்டர்.

ஆறும் நாளில் ஜனங்கள் என்ன செய்யவேண்டும்?

“ஆறும் நாளிலோ, அவர்கள் நாள்தோறும் சேர்க்கிறதைப் பார்க்கிலும் இரண்டத்தனையாய்ச் சேர்த்து, அதை ஆயத்தம்பண்ணிவைக்கக் கடவர்கள்.” யாத். 16: 5.

கிறிஸ்து சிலுவையில் அறையப்பட்ட நாள் எது?

“ஓய்வுநாளுக்கு முந்தின நாள் ஆயத்த நாளாயிருந்தது.” மாற். 15: 42; லூக். 23: 54-56.

ஆகையினால் யூதர்கள் என்ன சொன்னார்கள்?

“அந்த நாள் பெரிய ஓய்வு நாளுக்கு ஆயத்த நாளாயிருந்தபடியினால், உடல்கள் அந்த ஓய்வு நாளிலே சிலுவைகளில் இராதபடிக்கு யூதர்கள் உத்தரவு கேட்டுக்கொண்டார்கள்.” யோவான் 19: 31.

கிறிஸ்துவைப் பின்பற்றினவர்கள் யாவரும் அவர் சிலுவையில் அறையப்பட்டபின்பு என்ன செய்தார்கள்?

“திரும்பிப்போய், கந்தவர்க்கங்களையும் பரிமள தைலங்களையும் ஆயத்தம்பண்ணி, கற்பனையின்படியே ஓய்வுநாளில் ஓய்ந்திருந்தார்கள்.” லூக். 23: 56; யாத். 20: 8-11.

இயேசு சிலுவையிலறையப்பட்ட நாளுக்கு இப்பொழுது என்ன பெயர்?

“பெரிய வெள்ளிக்கிழமை.” அதாவது கிறிஸ்தவ சபையில் இயேசுக்கிறிஸ்துவின் பாடுகளையும் மரணத்தையும் நினைவு கூறுவதற்காக ஏற்படுத்தப்பட்டிருக்கும் ஒரு உபவாச நாள்.”—பக்ஸ் அகராதி.

வருஷத்தில் எந்த விசேஷித்த வெள்ளிக்கிழமைக்கு பெரிய வெள்ளிக்கிழமை என்று பெயர்?

“நம்முடைய கர்த்தராகிய இயேசுக்கிறிஸ்து சிலுவையிலறையப்பட்டதை நினைவு கூறும்படியாக அவர் உயிர்த்தெழுந்த நாளுக்கு முன்னுள்ள வெள்ளிக்கிழமைக்குப் பெரிய வெள்ளிக்கிழமை என்று பெயர்.—கொலம்பியன் அகராதி.

எந்த மாதத்தில் பெரிய வெள்ளிக்கிழமை ஆசரிக்கப்படுகிறது?

கிறிஸ்து பாடுபட்ட வாரத்திலுள்ள வெள்ளிக்கிழமையில் இது ஆசரிக்கப்படுகிறது. நமது இரட்சகரின் பாடுகளினாலே நமக்கு “பெரிய” இரட்சிப்பு வந்தால் அந்த நாளுக்குப் பெரிய வெள்ளிக்கிழமை என்று பெயர்.—பக்ஸ் அகராதி.

பெரிய வெள்ளிக்கிழமையை ஒரு உபவாச நாளாக என் ஆசரிக்கிறார்கள்?

“தற்காலத்தில் கிரேக்க சபையிலும் ரோமான் கத்தோலிக்க சபையிலும் பெரிய வெள்ளிக்கிழமையை ஒரு உபவாச நாளாக பயபக்தியுடன் ஆசரிக்கிறார்கள்.”—நூற்றாண்டின் அகராதி.

எல்லா வெள்ளிக்கிழமைகளைப்பற்றியும் என்ன சொல்லப்பட்டிருக்கிறது?

“ரோமான் கத்தோலிக்க சபையிலும் இன்னும் மற்ற கிழக்கு சபைகளிலும் கிறிஸ்மஸ் நாளைத்தவிர மற்றெல்லா வெள்ளிக்கிழமையிலும் கிறிஸ்து சிலுவையில் அறையப்பட்டதை நினைவு கூறும்படியாக உபவாசம் பண்ணுகிறார்கள்.” சர்வஞான புஸ்தக சாலை.

கொன்ஸ்தந்தீன்ராயன் பெரிய வெள்ளிக்கிழமையில் என்ன செய்யலாகாதென்று கட்டளையிட்டான்?

“நியாயஸ்தலங்களும் கச்சேரிகளும் கடை முதலானதுகளும் அந்த நாளில் சாத்தப்படவேண்டுமென்று கொன்ஸ்தந்தீன்ராயன கட்டளை யிட்டான்.”—கொலம்பியன் பொது அகராதி.

பெரிய வெள்ளிக்கிழமை என்கிற பெயர் முதல் முதலில் எப்படி ஆரம்பித்தது?

“கிறிஸ்துவின் பாடுகளையும் மரணத்தையும் நினைவு கூறுவதற்காக கிறிஸ்தவ தேசங்கள் முழுமையிலும் கொண்டாடப்பட்டுவரும் அந்த நாளுக்கு பெரிய வெள்ளிக்கிழமை என்று பெயர் வந்தது. கிறிஸ்து சிலுவையிலறையப்பட்டதை வருஷா வருஷம் வழக்கமாக ஆசரிக்க எப்போது ஆரம்பித்தார்களென்பது ஒரு இரகசியமாயிருக்கிறது.”—பிரிட்டானிக்கா பொது அகராதி.

ஈஸ்றர் ஞாயிறு, அதின் சரித்திர சம்பந்தம்.

(HISTORICAL FACTS REGARDING EASTER SUNDAY.)

வாரத்தின் எந்த நாள் ஞாயிற்றுக்கிழமை?

“வாரத்தின் முதலாம் நாள் ஞாயிற்றுக்கிழமை.”—வெப்ஸ்றர்.

கிறிஸ்து வாரத்தின் எந்த நாளில் உயிர்த்தெழுந்தார்?

“வாரத்தின் முதலாம் நாள் அதிகாலையிலே இயேசு எழுந்திருந்த பின்பு, மகதலேனா மரியாளுக்கு முதல்

முதல் தரிசனமானார்." மாற்கு 16: 9; லூக். 24: 1, 21; யோவான் 20: 1, 19.

ஈஸ்ற்றர் ஞாயிறைப்பற்றி என்ன சொல்லப்பட்டிருக்கிறது?

"இது நம்முடைய கர்த்தர் உயிர்த்தெழுந்த நாளாயிருப்பதினால் இதை வருஷத்தில் விசேஷித்த பண்டிகை நாளாக பயபக்தியுடன் ஆசரிக்கவேண்டும்."—கத்தோலிக் கிறிஸ்தய் போதினி 260-ம் பக்கம்.

எந்த விசேஷித்த சம்பவத்தை முன்னிட்டு ஈஸ்ற்றர் பண்டிகையை ஆசரிக்கிறார்கள்.

"நமது கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் உயிர்த்தெழுதலை நினைவு கூறும்படியாக கிறிஸ்தவ தேசங்கள் முழுவதிலும் இந்தப் பெரிய பண்டிகையைக் கொண்டாடுகிறார்கள்."—மார்க்க அறிவின் பொது அகராதி.

"ஈஸ்ற்றர் முத்தி"யைப்பற்றி என்ன சொல்லப்பட்டிருக்கிறது?

"ஈஸ்ற்றர் தினத்தில் ஜனங்கள் ஒருவரை ஒருவர் கண்டு சந்தித்து முத்தமிடுவார்கள். அப்படி முத்தமிடும் போது "கிறிஸ்து எழுந்தார் அல்லேலூயா" என்று சொல்லுவார்கள். அதற்கு மறுமொழியாக "அவர் மெய்யாகவே எழுந்தார் அல்லேலூயா." என்று சொல்லுவார்கள்.—கொலம்பியன் பொது அகராதி.

"ஈஸ்ற்றர்" என்னும் பதம் முதல் முதலில் எப்படி வந்தது?

"ஈஸ்ற்றர்" என்னும் பதம் ஆங்கிலேய சக்சோனிய பாஷையில் ஈஸ்ற்றர் (Easter) அல்லது ஈயோஸ்ற்றர் (Eostre) என்றும் ஜெர்மானிய பாஷையில் ஓஸ்ற்றர்ன் (Ostern) என்றும் வழங்கப்பட்டது."—பிரித்தானிக்கா பொது அகராதி.

"ஈஸ்ற்றர்" என்னும் பதம் எதிலிருந்து எடுக்கப்பட்டது?

"ஈஸ்ற்றர்" என்னும் பதம் சக்சோனிய பாஷையிலிருந்து வந்ததாகத் தோன்றுகிறது. அக்காலத்திலிருந்த அஞ்ஞானிகள் ஏப்பிரல் மாதத்தில் ஈயோஸ்ற்றர் (Eoster) என்று சொல்லப்படும் சிற்றின்ப தேவதையாகிய வீனஸ் என்னும் ராக்கினிக்கு மகிமையாக ஒரு பண்டிகை கொண்டாடினார்கள். ஆகையினால் அந்த ஈயோஸ்ற்றர் (Eoster) என்னும் பதத்திலிருந்தே ஈஸ்ற்றர் என்னும் வார்த்தை வந்திருக்கவேண்டும்."—டாக்டர் பர்ன்ஸ் வியாக்கியானம். அப். 12: 4.

அப்போஸ்தலர் காலத்தில் ஈஸ்ற்றர் பண்டிகை ஆசரிக்கப்பட்டதா?

"ஈஸ்ற்றர் பண்டிகை அப்போஸ்தலர் காலத்தில் ஆசரிக்கப்பட்டதென்பதை நாம் யாதொரு முகாந்தரத்தினாலும் ரூபிக்கவே முடியாது."—கொலம்பியன் பொது அகராதி.

அப்போஸ்தல நடபடிகளில் ஈஸ்ற்றர் பண்டிகை ஆசரிப்பைப்பற்றி ஏதாவது சொல்லப்பட்டிருக்கிறதா?

"இந்தப் புஸ்தகம் எழுதப்பட்ட காலத்தில் இந்தப் பண்டிகை ஆசரிக்கப்பட்டதென்பதற்கு யாதொரு ரூபகாரமுமில்லை."—டாக்டர் பர்ன்ஸ் வியாக்கியானம் அப். 12: 4.

புதிய ஏற்பாட்டில் ஈஸ்ற்றர் பண்டிகை ஆசரிப்பைப் பற்றி எங்கேயாவது சொல்லப்பட்டிருக்கிறதா?

"ஈஸ்ற்றர் பண்டிகை ஓர் கிறிஸ்தவ பண்டிகையாக ஆசரிக்கப்பட்டதென்பதைப்பற்றி புதிய ஏற்பாட்டிலாவது அல்லது அப்போஸ்தல சபையின் மூப்பர் எழுதிய புஸ்தகத்திலாவது எழுதப்படவேயில்லை." பிரித்தானிக்கா பொது அகராதி.

அப்போஸ்தலர் உயிரோடிருந்த காலத்தில் ஈஸ்ற்றர் பண்டிகை ஆசரிக்கப்பட்டு வந்ததா?

"அப்போஸ்தலர் காலத்திலிருந்த திருச்சபையில் இது ஒரு பண்டிகையாக ஆசரிக்கப்படவேயில்லை."—மார்க்க அறிவின் பொது அகராதி.

ஈஸ்ற்றர் பண்டிகை ஆசரிக்கப்படவேண்டிய தேதி எப்பொழுது குறிக்கப்பட்டது?

"கி. பி. 325-ம் வருஷத்தில் நிசேயாபுரியில் கூடின சங்கத்தில் மார்ச்சு மாதம் 21-ம் தேதிக்குப்பின் உண்டாகும் பௌர்ணமிக்கடுத்த ஞாயிற்றுக்கிழமையில் இந்தப் பண்டிகை ஆசரிக்கப்படவேண்டுமென்று குறிக்கப்பட்டது"—புது நூற்றாண்டின் அகராதி.

ஈஸ்ற்றர் பண்டிகை எப்போது யாரால் ஏற்படுத்தப்பட்டது?

"நாலாம் நூற்றாண்டின் துவக்கத்திலேயே (பவுலின் காலத்தில் மும்முரமாகக் கிரியை செய்த 2 தெச. 2: 7.) "அக்கிரமத்தின் இரகசியம்" இந்தத் தப்பான அஞ்ஞான ஈஸ்ற்றர் என்னும் பண்டிகையை ஏற்படுத்தினது."—அஞ்ஞான கிருத்திரமங்கள். 104-ம் பக்கம்.

யாதொரு பண்டிகைகளைப்பற்றி புதிய ஏற்பாட்டில் சொல்லப்பட்டிருக்கிறதா?

"கிறிஸ்தவ பண்டிகையாக நாம் ஒரு நாளை ஆசரிக்கவேண்டுமென்று புதிய ஏற்பாட்டில் சொல்லப்படவேயில்லை."—பிரித்தானிக்க பொது அகராதி.

ஆகையினால் எல்லாப் பண்டிகை நாட்களும் யாரால் ஏற்படுத்தப்பட்டது?

"ஞாயிற்றுக்கிழமை ஓய்வும் இன்னும் மற்றெல்லாப் பண்டிகை நாட்களும் மனுஷரால் ஏற்படுத்தப்பட்டது."—ரோஸ் என்பவரால் மொழி பெயர்க்கப்பட்ட நியான்டர் திருச்சபை சரித்திரம் 186-ம் பக்கம்.

எல்லாப் பண்டிகைகளுக்கும் ஆதாரமாயிருக்கும் இந்த "மனித உபதேசம்" எது?

"கத்தோலிக்க சபையின் நியமமே இந்த ஞாயிற்றுக்கிழமை ஓய்வுக்கும் மற்றெல்லாப் பரிசுத்த நாட்களுக்கும் ஆதாரமாயிருக்கிறது."—கத்தோலிக்க கிறிஸ்தவ போதினி, 253-ம் பக்கம்.

கிறிஸ்தவர்கள் 'பெரிய வெள்ளிக்கிழமை'யையும், 'ஈஸ்ற்றர்' ஞாயிறையும், ஞாயிற்றுக்கிழமை ஓய்வையும் அநேக நூற்றாண்டுகளாக ஆசரித்து வந்திருக்கிறார்கள். மேற்சொல்லிய காரியங்களுக்கு வேதத்திலாவது அல்லது அப்போஸ்தலருடைய போதனையிலாவது அல்லது ஆதிச்சபை மூப்பரின் போதனையிலாவது முகாந்தரங்களிருக்குமென்று நினைத்து அவர்கள் இதை ஆசரித்து வந்தார்கள். ஆனால் இந்தப் பத்திரிகையை அச்சிடுபவர்களைச் சேர்ந்த சபையார் வேதத்தில் இதற்கு யாதொரு ஆதாரமுமில்லாததைத் தெளிவாய்க் கண்டிருக்கிறபடியினால் இதை அவர்கள் ஆசரிக்கிறதேயில்லை. 'பெரிய வெள்ளிக்கிழமை'யையும், 'ஈஸ்ற்றர்' ஞாயிறையும் ஆசரிக்கவேண்டுமென்பது தேவ கட்டளை யல்லவென்று உலகத்தில் பெயர்போன சாஸ்திரிகள் எழுதிவைத்திருக்கிறார்கள். அதுபோலவே ஞாயிற்றுக்கிழமையை வாரத்தின் ஓய்வு நாளாக ஆசரிப்பதற்கும் யாதொரு முகாந்தரமேயில்லை.

ஒரு சிறு கேள்வியும் அதன் உத்தரவும்

(A SIMPLE QUESTION AND ITS ANSWER)

கிறிஸ்து சிலுவையில் அறையப்படுவதற்கு சில நாட்களுக்குமுன் இயேசு தமது சீஷர்களோடு ஒலிவ மலைக்குப் போனார். அப்பொழுது அவருடைய சீஷர்கள் "உம்முடைய வருகைக்கும் உலகத்தின் முடிவுக்கும் அடையாளம் என்ன?" என்று கேட்டார்கள். மத். 24: 3. கிறிஸ்து லூக்கா சுவிசேஷகனின் மூலமாய் இந்தக் கேள்விக்கு ஒருவாறாக உத்தரவு கொடுக்கிறார். "சூரியனிலும் சந்திரனிலும் நட்சத்திரங்களிலும் அடையாளங்கள் தோன்றும்." லூக். 21: 25.

இங்கே சீஷர்கள் தங்கள் பரம குருவை ஒரு சிறு கேள்வி கேட்கிறார்கள். அதற்கு அவர் ஒரு தகுந்த மறுமொழி கொடுக்கிறார். இது, இயேசு தமது சீஷர்களுடைய கேள்வியை கேவலம் அற்பம் என்று தள்ளிவிடவில்லையென்று தெளிவாய்க் காட்டுகிறது. நமது கர்த்தர், இந்தக் கேள்வி தமது சபையின் ஊன்றக் கட்டுதலுக்கு ஏற்றதென்று நினைத்து அதற்குத்தகுந்த மறுமொழி கொடுத்தார்.

தீர்க்கதரிசனம்.

"சூரியனிலும் சந்திரனிலும் நட்சத்திரங்களிலும் அடையாளங்கள் தோன்றும்."—அவருடைய வருகைக்கும் உலகத்தின் முடிவுக்கும் அடையாளம்—என்று இயேசு தெளிவாய்ச் சொல்லுகிறார். ஒளியில் வாசம் பண்ணும் கர்த்தர் வான ஜோதிகளிலுண்டாகும் அடையாளங்களைப்பற்றி தமது பிள்ளைகள் அறியாமலிருக்க அவர் அவர்களை விட்டுவிடவில்லை. அப்பேர்ப்பட்ட சம்பவங்கள் நடக்கும்போது அது என்ன காரணத்திற்காக கொடுக்கப்பட்டதென்பதை அவருடைய பிள்ளைகள் அறிந்துகொள்ளவேண்டும். இந்த அடையாளங்கள் எப்படி சம்பவிக்குமென்று கிறிஸ்து தாமே சொல்லியிருக்கிறார். அது மத். 24: 29, 30-ம் வசனங்களில் பின் வருமாறு எழுதப்பட்டிருக்கிறது. "அந்நாட்களின் உபத்திரவம் முடிந்தவுடனே, சூரியன் அந்தகாரப்படும், சந்திரன் ஒளியைக் கொடாதிருக்கும், நட்சத்திரங்கள் வானத்திலிருந்து விழும், வானத்தின் சத்துவங்கள் அசைக்கப்படும். அப்பொழுது, மனுஷ குமாரனுடைய அடையாளம் வானத்தில் காணப்படும்."

நமது கர்த்தர் தமது மகிமையோடு தமது ராஜ்யத்தில் வரும்போது நடக்கும் இந்த பயங்கரமான அடையாளங்களை தீர்க்கதரிசியாகிய யோவேல் பரிசுத்த ஆவியினால் ஏவப்பட்டு பின் வருமாறு எழுதுகிறார். "கர்த்தருடைய பெரிதும் பயங்கரமுமான நாள் வருமுன்னே சூரியன் இருளாகவும், சந்திரன் இரத்தமாகவும் மாறும்." யோவேல் 2: 31. கிறிஸ்து தமது பிதாவண்டைக்கு ஏறிப்போன பின்பு, இதே அடையாளங்களைப்பற்றி திவ்ய வாசகனாகிய யோவானின் மூலமாய் பின் வருமாறு உரைக்கிறார். "சூரியன் கறுப்புக் கம்பளியைப் போலக் கறுத்தது; சந்திரன் இரத்தம்போலாயிற்று. அத்திமரமானது பெருங் காற்றினால் அசைக்கப்படும்போது அதின் காய்கள் உதிருகிறதுபோல், வானத்தின் நட்சத்திரங்களும் பூமியிலே விழுந்தது." வெளி. 6: 12, 13. இந்த அடையாளங்களெல்லாம் நமது இரட்சகராகிய இயேசுக்கிறிஸ்துவின் மகிமையான வெளிப்

படுதலை முன்னறிவிக்கும் கட்டியக்காரர்களென்று நாம் இந்த வசனத்தின் மூலமாய் அறிந்துகொள்ளலாம்.

நிறைவேறுதல்.

நமது கர்த்தர் முன்னுரைத்ததற்குச் சரியாக வானத்தில் அடையாளங்கள் காணப்பட்டது. "அந்நாட்களின் உபத்திரவும் முடிந்தவுடனே, சூரியன் அந்தகாரப்படும்." தெரிந்துகொள்ளப்பட்டவர்கள் ஒரு குறிக்கப்பட்ட காலமட்டும் உபத்திரவப் படுத்தப்படுவார்களென்று இயேசு முன்னமேயே தமது சீஷர்களுக்குச் சொல்லியிருந்தார். "ஏனெனில், உலகம் உண்டானது முதல் இதுவரைக்கும் சம்பவித்திராததும், இனிமேல் சம்பவியாததுமான மிகுந்த உபத்திரவம் அப்பொழுது உண்டாயிருக்கும். அந்நாட்கள் குறைக்கப்படாதிருந்தால், ஒருவனாகிலும் தப்பிப்போவதில்லை; தெரிந்துகொள்ளப்பட்டவர்களினிமித்தமோ அந்த நாட்கள் குறைக்கப்படும்.' மத். 24: 21, 22.

"அந்நாட்களின் உபத்திரவம்" என்று இயேசு மறுபடியும் திருப்பிச் சொல்லுகிறதை நாம் கவனிக்கவேண்டும். பாப்பு மார்க்கமானது தேவனை உண்மையாய் ஆராதிக்கிறவர்களை இருண்ட காலமாகிய 1260 வருஷமளவும் உபத்திரவப்படுத்தின அந்த உபத்திரவத்தின் காலத்தையே இது குறிக்கிறது. கிறிஸ்தவ சபையின் சரித்திரத்தை அறிந்தவர்களுக்கு ஆறும் நூற்றூண்டின் மத்தியிலிருந்து பதினெட்டாம் நூற்றூண்டின் முடிவு மட்டும் பரிசுத்தவான்கள் ரோம மார்க்கத்தாரால் கொடூரமாக உபத்திரவப்படுத்தப்பட்டார்களென்று நன்றாய்த் தெரியும். பதினாரும் நூற்றூண்டில் காருண்ய கிறிஸ்தவ சீர்திருத்தல் ஆரம்பித்ததினால் பாப்பு மார்க்கத்தின் உபத்திரவம் சற்று தணிவடைந்து கி. பி. 1773-ம் வருஷத்தில் பாப்பு மார்க்க பாதிரிகளின் (Jesuit Society) இம்சைகள் முற்றுமாக நிறுத்தப்பட்டது. "அந்நாட்களின் உபத்திரவம்" முடிந்த சில வருஷத்துக்குப் பின்பு சூரியன் அந்தகாரப்பட்டு, சந்திரன் இரத்தமாக மாறவேண்டும். நமது கர்த்தருடைய தீர்க்கதரிசனத்தின் நிறைவேறுதலாக கி. பி. 1780-ம் வருஷம் மேமீ 19-ம் தேதி இரவு அந்தப் பெரிய அதிசயமான சம்பவம் நடந்தது. அந்த சம்பவம் நடந்ததென்று சரித்திரமும் உறுதிப்படுத்துகிறது.

"இருண்ட நாள்"

ஆங்கிலேய வான சாஸ்திரிகளிற் சிறந்தவராகிய கொர்ஷெல் என்பவர் (Herschel) 1780-ம் வருஷம் மேமீ 19-ம் தேதியைக் குறித்து "வட அமெரிக்காவின் இருண்ட நாள் ஒரு பெரிய ஆச்சரியமே. அதை யாவரும் அதிக ஆவலோடு வாசிப்பார்கள். ஆனால் தத்துவ ஞானிகளால் அதை விஸ்தரிக்கவே முடியாது' என்று எழுதுகிறார். அக்காலத்தில் வசித்த வான சாஸ்திரிகளில் பெயர்போனவரான சாஸ்திரியே இந்த உலக தத்துவ ஞானிகளால் இந்த ஆச்சரியமான சம்பவம் ஏன் சம்பவித்ததென்று விபரிக்கமுடியாதென்று சொல்லுகிறார்.

டாக்டர் டீவான்ஸ் என்பவர் எழுதின புஸ்தகமாகிய "நமது முதலாம் நூற்றூண்டு" என்னும் புஸ்தகத்தில் "கடந்த நூற்றூண்டில் சம்பவித்த எல்லா பிரசண்ட மாருதங்களைப் பார்க்கிலும் 1780-ம் வருஷம் மேமீ 19-ம் தேதியாகிய இருண்டநாளே அதிக ஆச்சரியத்தைக் கொடுக்கத்தக்கது. புதிய இங்கிலாந்தில் நமது கண்ணுக்குத் தோன்றும் எல்லா வானமும் ஆகாயம் முழுமையும் காரணமில்லாமல் இருண்டுபோயிற்று. இது அநேக ஜனங்களுடைய மனதிற்குச் சஞ்சலத்தை உண்டுபண்ணிற்று. மிருகஜாதிகள் மிரண்டோடின. பறவைகளும் கோழி முதலானவைகளும் தங்கள் இருப்பிடங்களுக்குச் சென்றன. ஆடு மாடுகள் தங்கள் தொழுவத்திற்குத் திரும்பின." என்று எழுதுகிறார். ஆயிரக்கணக்கான ஜனங்கள் பூலோக காரியத்தின் முடிவுநாள் இதுதானென்று நினைத்தார்கள். இருள் அதிக ஜாஸ்தியாயிருந்ததினால் திக்குத்திசை இன்னதென்றுகூட தெரியாமற்போயிற்று.

உவில்லியம் பெரினி என்பவர் இருண்ட நாளைப் பற்றி பூர்வ சரித்திரங்களில் நுட்பமாய் ஆராய்ச்சி செய்து 1905-ம் வருஷம் ஜூலை மாதத்தில் (Ladies' Home Journal) என்னும் பத்திரிகையில் அதைத் தொகுப்பாய் எழுதி வைத்தார். அந்த இருள் ஜனங்களுக்கு ஒரு பயங்கரத்தை உண்டுபண்ணிற்று. சில இடங்களில் ஒரு சிறு வெளிச்சங்கூட இல்லாதிருந்தது. சில இடங்களில் மரங்களின்மேலும் வீடுகளின்மேலும் சிறு மஞ்சள் நிறமான வெளிச்சம் இருந்தது. இந்த அசாதாரணமான இருள் காலை பத்து மணிக்கே ஆரம்பித்துவிட்டது. நேரம் செல்லச்செல்ல சூரிய அஸ்தமனத்திற்குள்ளாக இருள் மேலிட்டு அந்தகாரமானது. பள்ளிக்கூடத்துப் பையன்களையெல்லாம் வீட்டிற்கு அனுப்பிவிட்டார்கள். மனிதரும் ஸ்திரீகளும் தங்கள் வேலைகளை நிறுத்தினார்கள். ஏனென்றால் ஜனங்கள் அங்குமிங்கும் போகும்போது ஒருவரோடொருவர் மோதிக்கொண்டார்கள். அல்லாமலும் சூரிய கடிகாரத்தில் மணி இன்னதென்று நிதானிக்க முடியாமற்போயிற்று ஒவ்வொரு கடையிலும் வீட்டிலும் மெழுகுவர்த்திகள் கொளுத்தப்பட்டது. அப்படியிருந்தும்

ஜனங்களுடைய இருதயத்தில் திகிலும் தத்தளிப்பும் உண்டாயிருந்தது. சில பட்டணங்களில் மத்தியான வேளையில் தெருவில் போஜனங்கள் தங்கள் வீட்டிற்குப்போக வழி தெரியாமல் தடுமாறினார்கள்.

இரவானபோது இருள் கிலைப்போல அவ்வளவு கறுப்பாயிருந்தது. "ஒரு வெள்ளைக் கடுதாசிக்கும் ஒரு கறுப்புத் துணிக்கும் யாதொரு வித்தியாசமும் தெரியவில்லை." "தேவன் ஆதியில் வெளிச்சத்தை உண்டாக்கின பிறகு இருந்த இருளைவிட அன்று சாயுங்காலம் நூற்று நாற்பத்து நாலு மடங்கு இருளாயிருந்தது" என்று டாக்டர் சாமுவேல் பென்னி யென்பவர் அநேக வருஷங்களுக்குப்பிறகு அதைக் குறித்து எழுதும்போது அப்படி எழுதினார். "இது என்ன காரணத்திற்காக சம்பவித்ததென்று ஒருவராலும் விபரிக்க முடியவில்லை"யென்று மிஸ்ற்றர் பெரினி யென்பவர் சொல்லுகிறார்.

அதற்கு ஒரே ஒரு விஸ்தரிப்பு இருக்கிறது. அதாவது நமது கர்த்தர் தமது மகிமையின் பிரசன்னம் சமீபமாய் "வாசலருகே" இருக்கும்போது அடையாளங்கள் தோன்றுமென்று சொன்னதை நிறைவேற்ற சூரியனை அந்தகாரத்தால் மூடினார். இந்தக் காரணத்தை முன்னிட்டே அந்த சம்பவம் நடந்தது. "சூரியனிலும் சந்திரனிலும் நட்சத்திரங்களிலும் அடையாளங்கள் தோன்றும்" என்று அவர் சொன்ன வாக்கு நிறைவேற இது சம்பவித்தது. "அசாதாரணமான அந்தகாரம் நேரிட்ட அந்த நாள் இரவில் அதற்கு முந்தின நாள் பூரண வடிவமடைந்த சந்திரன் தீர்க்கதரிசனத்தின்படி இரத்தமாக மாறினது" என்று டாக்டர் ஆடம்ஸ் என்பவர் சொல்லுகிறார். இதைச் சற்று கவனித்துப் பாருங்கள். முந்தின நாள் பூரண வடிவமடைந்த சந்திரன் அன்றைய தினம் வெளிச்சங் கொடுக்கவில்லை. "சந்திரன் ஒளியைக் கொடாதிருக்கும்" என்று இரட்சகர் சொன்ன வாக்கு ஒரு வார்த்தை பிசகாமல் சம்பவித்ததைப் பாருங்கள்.

"நட்சத்திரங்கள் வானத்திலிருந்து விழும்."

1833-ம் வருஷம் நவம்பர்மீ 13-ம் தேதி இரவு நடந்த பெரிய நட்சத்திர வீழ்ச்சியைக் கண்ணூரக் கண்டவர்களில் ஆயிரக்கணக்கான ஜனங்கள் இன்னும் உயிரோடிருக்கிறார்கள். "நாட்களில் எவ்விதமாக இருண்ட நாள் அதிக வியப்பைக் கொடுக்கத்தக்கதாக இருக்கிறதோ அதுபோல இரவில், நட்சத்திரம் விழுந்த அந்த இரவு அதிக வியப்பைக் கொடுக்கிறதாயிருக்கிறது" என்று மிஸ்ற்றர் பெரினி சொல்லுகிறார். இரவின் முந்தின பாகம் சாதாரணமாக அதிக அமைதலாயிருந்தது. ஆனால் திடீரென்று ஒரு பிரகாசமான வெளிச்சம் வானத்திலே தோன்றினது. உடனே வானத்தின் நடுமையத்திலிருந்து எரிகிற விண் வீழ் கொள்ளிகளாகிய நட்சத்திரங்கள் நாலா பக்கங்களிலும் விழுந்தது. அதிவேகத்துடன் ஒன்றோடொன்று மோதிக்கொண்டு பிரகாசத்தோடு ஜொலித்துக்கொண்டு எண்ணித் கைக்கடங்காத நட்சத்திரங்கள் அங்குமிங்கும் சீரமாரியாய் அம்புபோல் பாய்ந்தன. அதின் பிரகாசம் அதிக ஜாஸ்தியாயிருந்ததினால் நித்திரை பண்ணின ஜனங்கள் விழித்து ஜன்னல் வழியாய்ப் பார்த்து பக்கத்திலிருக்கும் ஊரில் ஏதோ ஒரு பெரிய விபத்து நேரிட்டதென்று நினைத்தார்கள். வீட்டைவிட்டு வெளியே வந்து நின்றவர்கள் பகல் வெளிச்சத்தில் பத்திரிகைகளை எவ்வளவு தெளிவாய் வாசிக்கக்கூடுமோ அவ்வளவு தெளிவாக இரவு பிரகாசித்ததென்று கண்டார்கள்.

இதைக் கண்ணூரக் கண்ட யேல் சர்வ கலாசாலைப் பண்டிதராகிய ஆம்ஸ்டெட் என்பவர் உலகங்கள் உண்டானது முதற்கொண்டு ஒருபோதும் நடந்திராத பெரிய வாண வேடிக்கை இதுதானென்று சொல்லுகிறார். ஹென்ரி டான வார்டும் அவர் மனைவியும் இந்த சம்பவத்தைக் கண்டபொழுது "கடைசி நாட்களின் அடையாளம் இதுதான்" என்று தங்கள் இருதயத்தில் சிந்தித்துக்கொண்டார்களாம். "அத்திமரமானது பெருங்காற்றினால் அசைக்கப்படும்போது அதின் காய்கள் உதிருகிறதுபோல வானத்தின் நட்சத்திரங்களும் பூமியிலே விழுந்தது" என்றும் அவர் நினைத்தாராம். வெளி. 6: 13. தீர்க்கதரிசியின் வாக்கு அன்றிரவு எழுத்தின் பிரகாரம் நிறைவேறிற்றென்று மிஸ்ற்றர் வார்டு என்பவர் சொல்லுகிறார்.

"அவைகள் எப்படி விழுந்தன?" என்று அவர் கேட்கிறார். அதற்கு ஒரு உவமானத்தை இந்த உலகத்தில் கண்டு பிடிக்கவே முடியாது. முன்னே எடுத்துக் கூறிய யோவான் அப்போஸ்தலனுடைய உவமானத்தைத் தவிர வேறே பொருந்தின உவமானம் கிடையாது. பல மரங்கள் அசைக்கப்படாமல் ஒரே மரம் அசைக்கப்படும்போது காய்கள் எப்படி விழுமோ அதுபோல நட்சத்திரங்கள் விழுந்ததாகவும், பழுத்த பழங்கள் விழுவதைப்போலல்ல காய்கள் மரம் பலமாய் அசைக்கப்படும்போது எப்படி சிதறி விழுமோ அதுபோல விழுந்ததாகவும் மிஸ்ற்றர் வார்டு என்பவர் விபரித்துச் சொல்லுகிறார்.

இந்த நட்சத்திரவீழ்ச்சியானது "மாரிகாலத்துப் பனி குளிர் தேசங்களில் எவ்வளவு கனதியாய் பூமியில் விழுகிறதோ அதுபோல பூமியின் மிச்சமான பாகத்தில் விழுந்தது" என்று பரிட் என்னும் பண்டிதர் சொல்லுகிறார்.

முத்திரிக்கப்பட்டதல்ல, ஆனால் வெளிப்படுத்தப்பட்டது.

(NOT SEALED, BUT A REVELATION)

வேதாகமத்திலுள்ள சகல புஸ்தகங்களிலும் மிகவும் அருமையானதும் கடைசிக் காலங்களின் நிறைவேறுதலை வெகு திட்டவட்டமாய் எடுத்து காண்பிக்கிறதுமான வெளிப்படுத்தின விசேஷம் யென்ற புஸ்தகத்தைப்பற்றி திரளான ஜனங்கள் கொண்டிருக்கிற தப்பான எண்ணத்தைப் பார்க்கும்போது மிகவும் விசனப்படத்தக்கதாயிருக்கிறது. இப்புஸ்தகம் முத்திரிக்கப்பட்டதென்றும் அதிலுள்ள காரியங்கள் நமது புத்திக்கு எட்டாதது யென்றும் தற்காலத்தில் அநேகர் எண்ணி இதை வாசியாமலும் சற்றேனும் இதைப்பற்றி, சிந்தியாமலும் இருக்கிறார்கள். சகல சத்தியத்திற்கும் எதிராளியாகிய சாத்தானுடைய சகல அக்கிரமத்தையும், அவனுக்கு வரப்போகிற பயங்கர முடிவைப்பற்றியும், இதில் வெகு திட்டவட்டமாய் சொல்லி யிருப்பதால், ஜனங்கள் இந்தப் புஸ்தகத்தை படித்து சிந்திக்கிற விஷயத்தில், அவனையும், அவனுடைய சகல மோசமான உபதேசங்களையும், விட்டு பிரிந்துவிடுவார்களென்ற எண்ணத்தால், இந்த அருமையான புஸ்தகத்தைப்பற்றி இவ்வளவு தப்பறவான எண்ணத்தை ஜனங்களுக்கு அவன் உண்டாக்கியிருக்கிறதாகவேத் தெரிகிறது.

முதலாவது, இந்தப் புஸ்தகத்தின் பெயரே வெளிப்படுத்தின விசேஷம். முத்திரிக்கப்பட்டதும் மூடப்பட்டதுமான இரகசியமல்ல. நமக்கு வெளிப்படுத்தப்பட்டிருக்கிறவைகளைப்பற்றி, தேவன் மோசேயைக் கொண்டு பின்வருமாறு உரைத்திருக்கிறார். "மறைவானவைகள் நம்முடைய தேவனாகிய கர்த்தருக்கே உரியவைகள்; வெளிப்படுத்தப்பட்டவைகளோ, இந்த நியாயப் பிரமாணத்தின் வார்த்தைகளின்படியெல்லாம் செய்யும்படிக்கு, நமக்கும் நம்முடைய பிள்ளைகளுக்கும் என்றென்றைக்கும் உரியவைகள்." உபா. 29: 29. இன்னும் முதலாம் அதிகாரத்தின் முதல் மூன்று வசனங்களையும் சற்று கவனிப்போம். "சீக்கிரத்தில் சம்பவிக்கவேண்டியவைகளைத் தம்முடைய ஊழியக்காரருக்குக் காண்பிக்கும்பொருட்டு, தேவன் இயேசு கிறிஸ்துவுக்கு ஒப்புவித்ததும், இவர் தம்முடைய தூதனை அனுப்பி, தம்முடைய ஊழியக்காரனாகிய யோவானுக்கு வெளிப்படுத்தினதுமான விசேஷம். இவன் தேவனுடைய வசனத்தைக் குறித்தும், இயேசு கிறிஸ்துவைப்பற்றிய சாட்சியைக் குறித்தும், தான் கண்டயாவற்றையும் சாட்சியாக அறிவித்திருக்கிறான். இந்தத் தீர்க்கதரிசன வசனங்களை வாசிக்கிறவனும், கேட்கிறவர்களும், இதில் எழுதியிருக்கிறவைகளைக் கைக்கொள்ளுவர்களும் பாக்கியவான்கள், காலம் சமீபமாயிருக்கிறது." வெளி. 1: 1-3. இந்த புஸ்தகத்தின் முழு நோக்கமும், சீக்கிரத்தில் சம்பவிக்கவேண்டியவைகளை தம்முடைய ஊழியக்காரருக்கு காண்பிக்கும் பொருட்டாகவே எழுதப்பட்டிருக்கிறது. அநேகர் எண்ணிக்கொள்ளுகிறபடி அதிலுள்ள காரியங்களை நமக்கு மறைத்துவைக்க அல்ல; ஆனால் அதிலுள்ளவைகள் மிகவும் அருமையானதும், ஜனங்கள் அவசியம் அறியவேண்டியதாயுமிருப்பதால், இந்தப் புஸ்தகத்தை வாசித்து பார்க்கிறவர்களுக்கு முதலாய் ஆசீர்வாதம் கூறப்பட்டிருக்கிறது. இப்படிப்பட்ட ஆசீர்வாதம், வேதத்தின் வேறு எந்தப் புஸ்தகத்தை வாசிப்போர்களுக்கும் கூறப்படவே இல்லை. அது மாத்திரமல்ல, அதிலுள்ள சங்கதிகளை கேட்கிறவர்களையும், இன்னும் அதில் எழுதியிருக்கிறவைகளைக் கைக்கொள்ளுகிறவர்களையும் பார்த்து பாக்கியவான்களென்று சொல்லியிருக்கிறது. இவ்வளவு அருமையான ஆசீர்வாதத்தையுடைய இந்தப் புஸ்தகத்தை நாம் வாசித்து அதிலுள்ள சத்தியங்களை கைக்கொள்ளுவோமானால் எவ்வளவு பாக்கியமான நிலைமையை அடைகிறவர்களா யிருக்கிறோம். இந்தப் புஸ்தகத்தை நாம் நன்றாய் கவனித்து படிக்கிற விஷயத்தில் இது நமக்கு அநேக புது வெளிச்சங்களை காட்டுகிறதோடு, நாம் செய்யவேண்டிய அநேக புதுக் கடமைகளையும் நம்மேல் சுமத்துகிறதாயிருக்கிறது. வெளிப்படுத்தின விசேஷத்தில் கர்த்தராகிய இயேசு கிறிஸ்து நன்றாய் வெளிப்படுத்தப்பட்டிருக்கிறார். அந்த புஸ்தகம் முழுவதிலும் அவரே முக்கிய புருஷனாயிருக்கிறார். அவரே "அல்பாவும் ஓமேகாவும்" "யூதா கோத்திரத்தின் சிங்கமும்" "தாவீதின் வேரும்" "சிங்காசனத்தில் மத்தியிலிருக்கப்பட்ட ஆட்டுக்குட்டியும்" "பிரகாசமான விடி வெள்ளியும்" இன்னும் அவரே "ராஜாதி ராஜாவும்" "கர்த்தாதி கர்த்தாவும்" "இதோ மேகங்களுடன் வருகிறார் கண்கள் யாவும் அவரைக் காணும்" யென்றும் விபரமாய் வெளிப்படுத்தப்பட்டிருக்கிறார். சாத்தானுக்கும் அவருக்கும் நடந்துகொண்டிருக்கிற யுத்தத்தில் கடைசி பரியந்தம் ஜெயங்கொள்ளுகிற ஜெய கெம்பீரரென்றும் விளங்கப்படுகிறார். இந்தப் புஸ்தகத்தில் அநேக தீர்க்கத்தரிசனங்களும் அடங்கியிருக்கின்றன. உதாரணமாக:—ஏழு சபைகள், ஏழு முத்திரைகள், ஏழு எக்காளங்கள், ஏழு வாதைகள் முதலியவைகள்.

ஏழு என்னப்பட்ட இலக்கம் வேதாகமத்தில் பூரணத்தைக் காட்டுகிறதாயிருக்கிறது. இந்தப் புஸ்தகத்தின் இரண்டாம் மூன்றாம் அதிகாரத்தில், ஆசியாவிலுள்ள ஏழு சபைகளுக்கும் கொடுக்கப்பட்டிருக்கிற தூதானது, கிறிஸ்துவின் முதலாம் வருகையிலிருந்து இரண்டாம் வருகை மட்டும், இவ்வுலகத்திலிருக்கும் கிறிஸ்தவ சபைகளின் நிலைமையை, ஏழு பங்காக குறிப்பிட்டு பிரித்து, அவைகள் ஒவ்வொன்றையும்பற்றி தீர்க்கத்தரிசனமாய் உரைத்திருக்கிற தூதாயிருக்கிறது. ஒவ்வொரு காலத்தின் சபையின் சரித்திரமும், அவைகளுக்கு உண்டாகும் உபத்திரமும், எதிரியின் போராட்டமும், அப்பொழுது அந்தந்த சபைகள் நடந்துகொள்ளவேண்டிய விதமும், வெகு தெளிவாய் சொல்லப்பட்டிருக்கிறது. ஏழு எக்காளங்களடங்கிய தீர்க்கத்தரிசனமாவது, யுத்தங்களையும், இராஜாங்க வர்த்தமானங்களையும், குறித்துக் காட்டுகிறதாயிருக்கிறது. இன்னும், கிறிஸ்தவ நூற்றாண்டின் துவக்கத்திலிருந்து கிறிஸ்துவின் இரண்டாம் வருகைமட்டும் உலகத்திலுள்ள மத சரித்திரத்தை, வெகு திட்டமாயும், வரிசையாயும், ஏழு முத்திரைகள் அடங்கிய தீர்க்கத்தரிசனத்தில் காட்டியிருக்கிறது. நமது இரட்சகருடைய இரண்டாம் வருகைக்கு சற்று முன்னதாக இப்பூலோகத்திலுள்ள துன்மார்க்கர்மேல் அவரால் அனுப்பப்படும் கோபாக்கினையை ஏழு வாதைகளாக விபரமாய் பிரித்துக்காட்டியிருக்கிறது.

ஈ. டி. தாமஸ்.

(இன்னும் வரும்)

கிறிஸ்துவில் மாத்திரம் ஜீவன் உண்டு

(LIFE ONLY IN CHRIST)

ஜீவனின் இரகசியத்தைப்பற்றி உலகத்தின் பெயர்போன சாஸ்திரிகள் முற்காலத்தில் கவனமாய்ப் படித்து ஆராய்ச்சி செய்தார்கள். அப்படி ஆராய்ந்தபோதிலும் எல்லா சிருஷ்டிகளிலும் காணப்படும் அற்புதமான ஜீவனின் உற்பத்தியைப்பற்றி ஒரு போதுமான புத்தியுள்ள உத்தரவு சொல்ல சாஸ்திரங்களால் முடியவேயில்லை. மின்சார சக்தியை விஸ்தரிப்பது எவ்வளவு கஷ்டமோ அதுபோல ஜீவனின் மூலகாரணத்தை விஸ்தரிப்பதும் கஷ்டம். இவ்விரண்டும் வெளிப்படையாய்ச் செய்யும் காரியங்களும் அவைகளைக் கையாடுவதின் சட்டங்களும் எல்லாம் நமக்குத் தெரியும். ஆனால் அவைகளுக்கு வல்லமை எந்த ஒதுக்கிடத்திலிருந்து வருகிறதென்பதை நாம் கண்டுபிடிக்க முடியாதவர்களாயிருக்கிறோம்.

ஜீவனின் மூலஸ்தானம்.

ஆவியின் ஏவுதலால் எழுதப்பட்ட வேதாகமம் என்னும் புஸ்தகத்தண்டைக்கு நாம் வந்தால்தான் ஜீவன் என்ன என்று சரியாய் அறிந்துகொள்ளலாம். அதில் நாம், எல்லாவற்றையும் உண்டாக்கி அவைகளுக்கு ஜீவனையும் சுவாசத்தையும் கொடுக்கிறவரைப்பற்றிப் படிக்கிறோம். "அவருக்குள் ஜீவன் இருந்தது; அந்த ஜீவன் மனுஷருக்கு ஒளியாயிருந்தது" என்று வேதம் சொல்லுகிறது. யோவா. 1: 4. சிருஷ்டிகரும் இரக்ஷகருமாகிய கிறிஸ்து லௌகீக ஜீவன் நித்திய ஜீவன் என்பவைகளின் மூலஸ்தானத்தை மனிதருக்கு வெளிப்படுத்தும்படி இவ்வுலகத்திற்கு வந்தார். அவர் தன்னைக் குறித்துப் பேசும்போது "நானே வழியும், சத்தியமும் ஜீவனுமாயிருக்கிறேன்" என்று சொன்னார். அவரோடிருந்து அவர் செய்த அற்புதங்களைக் கண்ணாரக் கண்ட அவருடைய சீஷர்கள் "அந்த ஜீவன் வெளிப்பட்டது, பிதாவினிடத்திலிருந்தும் வெளிப்பட்டதுமான நித்தியமாயிருக்கிற அந்த ஜீவனை நாங்கள் கண்டு அதைக் குறித்து சாட்சி கொடுத்து அதை உங்களுக்கு அறிவிக்கிறோம்" என்று சாட்சி பகருகிறார்கள். 1 யோவா. 1: 2.

நாம் தேவனுடைய வசனத்தை வாசிக்கும்போது தாவரவர்க்கங்களும் ஜீவராசிகளும் ஆகிய எல்லா ஜீவனுள்ள வஸ்துக்களும் தங்கள் ஜீவனுக்காக மேலானவரையே நோக்கியிருக்கிறதென்று அறிந்துகொள்ளுகிறோம். ஒன்றிற்கும் தன்னில்தானே ஜீவனில்லை. கிறிஸ்துவுக்கோ அப்படியல்ல. "ஏனெனில் பிதாவானவர் (தேவன்) தம்மில்தாமே ஜீவனுடையவராயிருக்கிறதுபோல குமாரனும் (கிறிஸ்து) தம்மில்தாமே ஜீவனுடையவராயிருக்கும்படி அருள் செய்திருக்கிறார்" என்று வாசிக்கிறோம். யோவா 5: 26. கிறிஸ்து தம்மில்தாமே ஜீவனுடையவராயிருக்கிற மாத்திரமல்ல. அவர் எல்லா ஜீவப்பிராணிகளுக்கும் ஜீவனை அளிக்கிறவராயும் இருக்கிறார். நாம் அதை அறிந்தாலும் அறியாவிட்டாலும் நாம் நமது லௌகீக வாழ்விலும் வரப்போகிற வாழ்விலும் உண்மையாகவே கிறிஸ்துவிடத்திலிருந்துதான் நாம் ஜீவனைப் பெற்றுக்கொள்ளுகிறோம்.

"குமாரனை உடையவன் ஜீவனை உடையவன், தேவனுடைய குமாரன் இல்லாதவன் ஜீவன் இல்லாதவன்." 1 யோவா 5: 12. நாம் இந்த முக்கியமான உண்மையை விசுவாசித்தால் மனிதனுடைய தன்மையையும் பின்னால் வரப்போகிற நித்திய ஜீவனின் ஒன்றான நம்பிக்கையின் நிட்சயமான அஸ்திபாரத்தையும் அறிந்து கொள்ளலாம்.

ஜீவ ஆதாரமாயிருப்பவரோடு நமக்குள்ள சம்பந்தம்.

மின்சார விளக்கு மின்சார ஓட்டத்தோடு சம்பந்தப்பட்டிருக்கும் வரைக்கும் வெளிச்சம் கொடுக்கும். பிரதம யந்திரத்தோடு இருக்கும் சம்பந்தம் அற்றுப்போனால் விளக்கு உடனே அவிந்து விடுகிறது. விளக்குக்குத் தன்னில்தானே வெளிச்சமில்லை. அது வெளிச்சத்திற்காக மின்சார ஓட்டத்தை எதிர்பார்க்கிறது. அதே மாதிரியாக மனிதரும் மற்றெல்லா ஜீவப்பிராணிகளும் இருக்கிறார்கள். அவைகள் கிறிஸ்துவோடு இணைக்கப்பட்டிருந்தால் மாத்திரம் அவைகளுக்கு ஜீவன் உண்டு. அவைகளுக்கு அந்த சம்பந்தம் அற்றுப்போனால் அவைகள் ஜீவனற்ற நிலைமைக்கு வந்துவிடுகிறது. அந்த நிலைமை மரணமென்று அழைக்கப்படுகிறது. ஜீவனில்லாமலிருப்பதற்கு மரணமென்று பெயர்.

தேவனிடத்திலிருந்து குமாரன் மூலமாய் ஜீவன் நமக்கு வருகிறதென்று வேத வாக்கியங்களால் நாம் அறிந்தபிறகு நமக்கு அந்த ஜீவன் எப்படிக் கொடுக்கப்படுகிறதென்று கேட்கவேண்டும். "தேவனுடைய ஆவியானவர் என்னை உண்டாக்கினார்; சர்வ வல்லவருடைய சுவாசம் எனக்கு உயிர் கொடுத்தது" என்று யோபு சொல்லுகிறான். யோபு. 33: 4. சுவாசத்தின் மூலமாய் சிருஷ்டிகரிடமிருந்து மனிதருக்கு ஜீவ ஆவி வருகிறது. இந்த உண்மை அடிக்கடி வேதத்தில் சொல்லப்பட்டிருக்கிறது. உதாரணமாய் நாம் சங்கீதத்தில் "கர்த்தருடைய வார்த்தையினால் வானங்களும் அவருடைய வாயின் சுவாசத்தினால் அவைகளின் சர்வ சேனையும் உண்டாக்கப்பட்டது." சங். 33: 6. "நீர் உம்முடைய ஆவியை அனுப்பும்போது, அவைகள் சிருஷ்டிக்கப்படும். நீர் பூமியின் ரூபத்தையும் புதிதாக்குகிறீர். நீர் அவைகளின் சுவாசத்தை வாங்கிக்கொள்ள அவைகள் மாண்டு, தங்கள் மண்ணுக்குத் திரும்பும்", சங். 104: 29, 30. என்று வாசிக்கிறோம்.

மரணம் என்பது என்ன?

மரணமென்றால் என்ன? ஜீவ ஆதாரத்திலிருந்து பிரிக்கப்படுவதே மரணம். "சர்வ வல்லவருடைய சுவாசம்" நம்மைவிட்டு நீங்கிப்போவது, அங்க அமைப்பு மாறிப்போவது, பூதங்கள் தங்கள் உற்பத்தி ஸ்தானமாகிய பூமிக்குத் திரும்புதல் மரணம். ஜீவ சுவாசம் சரீரத்தைவிட்டுப் பிரிகிறதினால் சரீரத்தின் அவயவங்கள் வேலை செய்யாமல் அசைவற்றுப்போகும் நிலைமையே மரணம்.

"அவர் தம்முடைய இருதயத்தை அவனுக்கு விரோதமாய்த் திருப்பினாரானால் அவனுடைய ஆவியையும் அவனுடைய சுவாசத்தையும் தம்மிடத்தில் இழுத்துக் கொள்ளுவார். அப்படியே மாம்சமான யாவும் ஏகமாய் ஜீவித்துப்போம். மனுஷன் தூளுக்குத் திரும்புவான்." யோபு. 34: 14. "அவனுடைய ஆவி பிரியும், அவன் தன் மண்ணுக்குத் திரும்புவான்; அந்நாளிலே அவன் யோசனைகள் அழிந்துபோம்" சங். 146: 4. மரணத்தில் சரீரத்தைவிட்டுப் பிரிவது சுவாசம் ஒன்றுதான். அது காணக்கூடாததும் விபரிக்கக்கூடாததுமான ஒரு சக்தி. அந்த சக்தியே உயிருக்கு ஆதாரமாயிருக்கிறது. அது தேவனால் அருளப்பட்டதும் ஜீவ சுவாசமுடையதுமாயிருக்கிறது.

நித்திரை மரணத்திற்கு ஓர் அடையாளம்.

ஒரு சுகதேகி தூங்கும்போது அவன் மனதும் அவன் சரீரத்தின் எல்லா அங்கங்களும் யாதொன்றும் செய்யாமல் அசைவற்ற நிலைமையிலிருக்கிறது. ஆகையால் வேதாகமத்தில் நித்திரையை அந்த நீண்ட சம்பூரண நித்திரைக்கு ஒப்பிட்டுப் பேசப்பட்டிருக்கிறது. பின்வரும் வாக்கியங்கள் இதற்கு உதாரணமாயிருக்கிறது. "மனுஷன் படுத்துக் கிடக்கிறான், வானங்கள் ஒழிந்துபோகுமளவும் எழுந்திருக்கிறதுமில்லை, நித்திரை தெளிந்து விழிக்கிறதுமில்லை." யோபு. 14: 12. "நம்முடைய சிநேகிதனாகிய லாசரு நித்திரையடைந்திருக்கிறான்." யோவா. 11: 11.

மனிதன் செத்த பிறகு அவன் இன்னானென்று அறிந்துகொள்ளும்படி எது மீதியாக வைக்கப்பட்டிருக்கிறது? பரலோகத்தின் புஸ்தகத்தில் எழுதப்பட்டிருக்கும் அவனுடைய ஜீவியத்தின் குறிப்பு மாத்திரம் மீந்திருக்கிறது.

நாம் திரும்ப சிருஷ்டிக்கப்படுதலே நமது ஒன்றான நம்பிக்கை.

"மனுஷன் செத்தபின் பிழைப்பானோ? எனக்கு மாறுதல் எப்போது வருமென்று எனக்குக் குறிக்கப்பட்ட போராட்டத்தின் நாளெல்லாம் நான் காத்திருக்கிறேன். என்னைக் கூப்பிடும், அப்பொழுது நான் உமக்கு உத்தரவு சொல்லுவேன்; உமது கைகளின் கிரியையின்மேல் விருப்பம் வைப்பீராக." யோபு. 14: 14, 15. "இதைக்குறித்து நீங்கள் ஆச்சரியப்பட வேண்டாம்; ஏனென்றால் பிரேதக் குழிகளிலுள்ள அனைவரும் அவருடைய சத்தத்தைக் கேட்கும் காலம் வரும்." யோவா 5: 28.

ஆதியில் மனிதனைச் சிருஷ்டித்த கிறிஸ்துவே உயிர்த்தெழுதலில் மனிதனைத் திரும்பக் கூப்பிடுகிறார் உயிர்த்தெழுதல் என்றால் புதிதாய்ச் சிருஷ்டிக்கப்படுதல் என்று அர்த்தமாம். நமது சரீரத்தின் பூதங்களெல்லாம் திரும்பவும் ஒன்று சேர்ந்து கூட்டப்படவேண்டும். பின்பு ஜீவ சுவாசம் அதற்குக் கொடுக்கப்படவேண்டும். எசேக்கியேல் 37-ம் அதிகாரம் ஆறும் வசனமுதல் பத்தாம் வசனமட்டும் இதைப்பற்றித் தெளிவாய் விஸ்தரிக்கப்பட்டிருக்கிறது. "எனக்குக் கட்டளையிட்டபடியே நான் தீர்க்கதரிசனம் உரைத்தேன்; நான் தீர்க்கதரிசனம் உரைக்கையில் ஒரு இரைச்சல் உண்டாயிற்று; இதோ அசைவுண்டாகி, ஒவ்வொரு எலும்பும் தன் தன் எலும்போடே சேர்ந்துகொண்டது. நான் பார்த்துக்கொண்டிருக்கையில், இதோ, அவைகள்மேல் நரம்புகளும் மாம்சமும் உண்டாயிற்று, மேற்புறமெங்கும் தோலினால் மூடப்பட்டது; ஆனாலும் அவைகளில் ஆவியில்லாதிருந்தது. அப்பொழுது அவர் என்னைப் பார்த்து: நீ ஆவியை நோக்கித் தீர்க்கதரிசனம் உரை, மனுபுத்திரனே, நீ தீர்க்கதரிசனம் உரைத்து, ஆவியை நோக்கி: கர்த்தராகிய ஆண்டவர் உரைக்கிறது என்னவென்றால், ஆவியே, நீ காற்றுத்திசை நான்கிலுமிருந்து வந்து, கொலையுண்ட இவர்கள் உயிரடையும்படிக்கு இவர்கள் மேல் ஊது என்கிறார் என்று சொல் என்றார். எனக்குக் கற்பிக்கப்பட்டபடி நான் தீர்க்கதரிசனம் உரைத்தேன்; அப்போது ஆவி அவர்களுக்குள் பிரவேசிக்க, அவர்கள் உயிரடைந்து, காலூன்றி, மகா பெரிய சேனையாய் நின்றார்கள்."

மனிதன் தன் மரணத்திலிருந்து உயிர்த்தெழுதல் மட்டும் பூமியின் தூளிலே நித்திரை செய்கிறான். கிறிஸ்து நித்திரை அடைந்திருக்கும் பரிசுத்தவான்களை கல்லறையிலிருந்து தான் கூப்பிடுகிறார். கல்லறையிலிருக்கிற எல்லாரும் அவருடைய சத்தத்தைக் கேட்டு வெளியே வருவார்கள். "அப்படி நான் காத்துக்கொண்டிருந்தாலும், பாதாளம் எனக்கு வீடாயிருக்கும்" என்று யோபு சொல்லுகிறான். யோபு. 17: 13.

கல்லறையானது நீதிமான்கள் பரலோகத்தில் பிரவேசிப்பதற்குக் காத்திருக்கும் இடமாயிருக்கிறது. முற்காலத்திலே மரித்த அநேகர் முற்பிதாவாகிய யோபோடு ஜீவனை அளிப்பவருடைய சத்தத்துக்காக பொறுமையாய்க் காத்துக்கொண்டிருக்கிறார்கள். வருஷங்கள் நூற்றாண்டுகளாகி நூற்றாண்டுகள் யுகமாகிவிட்டது. இன்னும் அவர்கள் காத்துக்கொண்டிருக்கிறார்கள், அவர்கள் அதிக தாமதமாகிறதென்று அவசரப்படுகிறார்களா? ஜீவனுள்ளோருக்குக் காலம் கடந்துபோவது அதிகமாய்த் தோன்றும். கழிந்துபோகும் வருஷங்களை எண்ணக்கூடாமல் முழுவதும் பிரக்ஞை தப்பி நித்திரை அடைந்திருக்கிறவர்களுக்கு அது அப்படியிராது. ஆயிர வருஷம் கழிவது அவர்களுக்கு ஒரு க்ஷணம்போலிருக்கும். அவர்கள் கடைசியாக மகா நாளில் எழுப்பப்படும்போது அவர்கள் சற்று முன்புதான் நித்திரையில் தங்கள் கண்களை மூடினதுபோலவும் இதோ ஜீவனை அளிப்பவருடைய சத்தத்தினால் நித்திய ஜீவனுக்கு எழுந்திருக்கிறதுபோலவும் தோன்றும்.

கிறிஸ்தவனுடைய நம்பிக்கை இந்த உயிர்த்தெழுதலின் நாளையே நோக்கியிருக்கிறது. அப்பொழுதுதான் "அழிவுள்ளதாகிய இது அழியாமையையும் சாவுக்கேதுவாகிய இது சாகாமையையும்" தரித்துக்கொள்ளும். 1 கொரி, 15: 53, 54.

"குமாரனை உடையவன் ஜீவனை உடையவன், தேவனுடைய குமாரன் இல்லாதவன் ஜீவன் இல்லாதவன்." கிறிஸ்துவைப்பற்றும் விசுவாசத்தின் மூலமாய் நாம் ஜீவ ஆதாரத்தோடு இணைக்கப்படுகிறோம். அப்படி இணைக்கப்படுவதினால் கிறிஸ்துவின் வழிகளிலே நடக்கவும் கிறிஸ்து நமக்குள்ளே பிழைக்கவும் இடங்கொடுக்கிறோம். அந்த ஜீவனானது நித்திய காலமாக நம்மில் வெளிப்படுவதற்கு எத்தனங்களாகும்படி நாம் ஆயத்தம் பண்ணப்படுகிறோம்.

அந்த முடிவில்லாத ஜீவனை அடைய நீ விரும்புகிறாயா? அதை ஒரு ஈவாக ஒப்புக்கொண்டு ஜீவனைக் கொடுக்கிறவரோடு ஐக்கியமாகு. "ஒன்றான மெய்த்தேவனாகிய உம்மையும் நீர் அனுப்பினவராகிய இயேசுக் கிறிஸ்துவையும் அறிவதே நித்திய ஜீவன்." யோவான் 17: 3.

முத்திரை போடும் பெரிய தூது.

(THE GREAT SEALING MESSAGE)

வெளிப்படுத்தின விசேஷம் 14: 6, 7-இல் சொல்லப்பட்டிருக்கிறபடி "வானத்தின் மத்தியில்" பறக்கும் தூதனுடைய அடையாளத்தினால் "சகல ஜாதிகளுக்கும், கோத்திரத்தாருக்கும், பாஷைக்காரருக்கும், ஜனக்கூட்டத்தாருக்கும்" அறிவிக்கப்படும் "நித்திய சுவிசேஷம்" காட்டப்பட்டிருக்கிறது.

"தேவனுடைய சபையின் சரித்திரத்திலே அந்தந்த காலத்திற்கடுத்த விசேஷித்த ஒரு சத்தியம் ஒவ்வொரு விசேஷ காலத்திலும் அறிவிக்கப்பட்டிருக்கிறது. அவைகள் தீர்க்கதரிசனத்தில், அந்தந்த காலத்திற்கடுத்த சத்தியங்களாயிருந்தன. அவைகள் அததற்கடுத்த குறித்த காலம் வந்தபோது பிரசங்கிக்கப்பட்டன."

கிறிஸ்துவின் முதல் வருகையின் காலத்தில் யோவான் ஸ்நானகன் மேசியாவின் வருகையைப்பற்றியும், அவர் வரும் காலத்தைப்பற்றியும் சொல்லப்பட்டிருந்த தீர்க்கதரிசனங்களை ஜனங்களுக்கு எடுத்துக்

காண்பித்து, அக்காலத்துக்கடுத்த அந்த விசேஷித்த சத்தியத்தைப்பற்றிப் பிரசங்கித்தார். (மத். 3: 1-11; லூக். 3: 1-16 பார்க்க.) மேசியா வந்தபோது அவர் பிரசங்கித்து அறிவித்த விசேஷித்த சத்தியத்தின் பொருள் என்னவென்றால், "காலம் நிறைவேறிற்று, தேவனுடைய ராஜ்யம் சமீபமாயிற்று, மனந்திரும்பி சுவிசேஷத்தை விசுவாசியுங்கள்" என்பதுதான். மாற். 1: 14, 15. அவர், "காலம்" என்று சொன்னது, தானியேல் தீர்க்கதரிசனம். 9: 25 இல் குறிக்கப்பட்ட, மேசியா வருகையின் காலம்தான். அப்போஸ்தலர் பிரசங்கித்ததும் அக்காலத்திற்கடுத்த அந்தச் சத்தியத்தை உறுதிப்படுத்துகிறதாயிருந்தது. அவர்கள் போதித்ததின் பொருள், "இந்த இயேசுவே கிறிஸ்து" என்பது. (அப். 17: 3; 18: 5, 28. பார்க்க.)

அவர் நியாயத்தீர்ப்புக் கொடுக்கும் வேளை.

வெளிப்படுத்தின விசேஷம் 14-ம் அதிகாரத்தில் சொல்லப்பட்டிருக்கும் தரிசனமானது ஒரு விசேஷித்த தூது "தற்கால சத்தியமாக" அறிவிக்கப்படும் வேறொரு திட்டமான காலத்தைக் காட்டுகிறது. அது புராதனமான அதே "நித்திய சுவிசேஷத்தை" கூறுதலாயிருக்கிறது. ஆனால் தீர்க்கதரிசனத்தில் அந்த விசேஷ சம்பவம் நிறைவேறும் காலத்தில்தான் அது அறிவிக்கப்பட வேண்டியது. அந்த விசேஷ சம்பவம் இன்னதென்றும் அந்தத் தூதிலேயே காட்டப்பட்டிருக்கிறது. "தேவனுக்குப்பயந்து அவரை மகிமைப்படுத்துங்கள். அவர் நியாயத்தீர்ப்புக் கொடுக்கும் வேளை வந்தது. வானத்தையும் பூமியையும் சமுத்திரத்தையும் நீரூற்றுகளையும் உண்டாக்கினவரையே தொழுதுகொள்ளுங்கள்." வெளி. 14: 6, 7.

இந்தத்தூதானது ஒரு விசேஷித்த கிரியைக்கும் காலத்திற்கும் விசேஷித்த பிரகாரமாகப் பொருந்தினதாயிருக்கிறதென்பதை இதை வாசிக்கும்போதே கண்டுகொள்ளலாம். அந்தக் கிரியை தேவனுடைய நியாயத்தீர்ப்பின் கிரியைதான். அந்தக்காலம் நியாயத்தீர்ப்புக் கொடுக்கும் காலந்தான். அந்தத் தீர்க்கதரிசனத்தின் நிறைவேறுதலாக, அது நிறைவேறும் காலத்திலே அந்தத் தூது பிரசங்கிக்கப்படலாமே யன்றி வேறெந்தக் காலத்திலும் அது அறிவிக்கப்படக்கூடாதென்பதும், அதை வாசித்துப் பார்க்கும்போதே புலப்படும். ஏனென்றால், "அவர் நியாயத்தீர்ப்புக் கொடுக்கும் வேளை வந்தது" என்று அந்தத் தூது சொல்லுகிறபடியால், அந்த வேளை வந்தாலன்றி, அதைப் பிரசங்கிக்கிறவர்கள் அந்த வேளை எதுவென்று திட்டமாய் சொல்லக்கூடியதாயிருந்தாலன்றி, மற்றபடி அது பிரசங்கிக்கப்பட முடியாது.

ஆசரிப்புக் கூடாரத்தின் பரிசுத்த ஸ்தலத்தின் ஆராதனையையும், பரிசுத்த ஸ்தலம் சுத்திகரிக்கப்படுதலையும் பற்றிய பெரிய சத்தியங்கள் இந்தத் தூதைக் குறித்த உபதேசங்களில் வெளிப்படுத்தப்படுகின்றன. தானியேல் தீர்க்கதரிசனம் 8-ம் 9-ம் அதிகாரங்களில் சொல்லப்பட்டிருக்கும் நீண்ட காலத்தைப்பற்றிய தீர்க்கதரிசனக் கணக்கு, கி. மு. 457 முதல் கி. பி. 1844 வரையிலுள்ள நீண்ட காலமாகிய 2300 நாட்கள் என்று தீர்க்கதரிசனத்தில் சொல்லப்படும். 2300 வருஷங்களைக் குறிப்பிட்டிருக்கிறதென்று மனிதர் தெளிவாய் அறிந்துகொள்ளுகிறார்கள். இந்தக் காலமானது, அர்தசஷ்டா எருசலேமைத் திரும்ப எடுபித்துக் கட்ட உத்தரவு செய்த (எஸ்று 7) காலத்தோடு தொடங்கி, எபிரேயருடைய பெரிய பயபக்தியான பண்டிகை தினமாகிய பாவநிவாரணப் பெரிய நாளில், அக்டோபர் 22, 1844-இல் முடிகிறது.

பரிசுத்த ஸ்தலம் சுத்திகரிக்கப்படும் காலத்தைப்பற்றி தானியேல் 8: 14-இல் சொல்லபபட்டிருக்கிறது. லேவியர் ஆகமம் 16-ம் 23-ம் அதிகாரங்களிலும் எபிரேயர் நிருபம் 8-ம் 9-ம் அதிகாரங்களிலும் காட்டப்பட்டிருக்கும் முன்னடையாளங்களைக்கொண்டு இதின் பொருளை அறிந்துகொள்ளுகிறோம். 7-ம் மாதம் 10-ம் தேதியில் நடத்தப்பட்ட பாவநிவாரணப் பெரிய ஊழியமானது நியாயத்தீர்ப்பின் வேலையைப்பற்றி மிகத் தெளிவாய்க் காட்டுகிறது.

முன்னடையாளமானதிலிருந்து அதின் பொருளை நாம் கற்றுக்கொள்ளுகிறோம். தானி. 8: 14-ல் சொல்லப்பட்ட தீர்க்கதரிசன கால நிறைவேறுதல் வரும்போது, "அவர் (தேவன்) நியாயத்தீர்ப்புக் கொடுக்கும் வேளை வந்தது" என்கிற தூது உலகத்திற்கு அறிவிக்கப்படவேண்டியது.

இரட்சகருடைய முதல் வருகையின் காலம் வந்தபோது அதைப்பற்றிய தூது அறிவிக்கப்படவேண்டியதாயிருந்தது. அதைக்குறித்து, "தேவனால் அனுப்பப்பட்ட ஒரு மனிதன் இருந்தான். அவன் பெயர் யோவான்" என்று வாசிக்கிறோம். (யோ. 1: 6) இந்த மனுஷன் இரட்சகருக்கு முன் தூதனாக அந்தத் தூதை அறிவித்தான். அதேபிரகாரமாகக் கிறிஸ்துவின் இரண்டாம் வருகையின் காலத்தில் அதைப்பற்றிய தூது உலகத்திற்கு அறிவிக்கப்படவேண்டியதாயிருக்கிறபோது, வானத்தின் மத்தியில் பறக்கிற தூதனுடைய அடையாளத்தினால் காட்டப்பட்டபடி, "தேவனுக்குப் பயந்து அவரை மகிமைப்படுத்துங்கள். அவர் நியாயத்தீர்ப்புக்கொடுக்கும் வேளை வந்தது" என்கிற தூது அறிவிக்கப்படுகிறது.

சகலருக்கும் மகா முக்கியமானது.

உலகத்திலுள்ள சர்வ ஜனங்களின் கவனத்தையும் கவரும்படியான நோக்கத்தோடு தேவனால் அனுப்பப்படும் இந்தத் தூதானது ஒவ்வொரு ஆத்துமாவும் எதிர்நோக்கவேண்டிய ஓர் பயபக்தியான மகா முக்கிய விஷயத்தைத் தெரிவிக்கிறது. நாம் எல்லாரும் நியாயந்தீர்க்கப்படவேண்டியவர்களாயிருக்கிறோம். நியாயத்தீர்ப்புக் கொடுக்கும் காலம் "வந்தது."

இப்பூமியில் மனிதரின் நியாயஸ்தலங்களில் தீர்ப்புச் சொல்லுவதற்குச் சட்டம் ஏற்பட்டிருப்பதுபோலப் பரலோகத்தின் நியாயஸ்தலத்திலும் "தேவன் இயேசு கிறிஸ்துவைக்கொண்டு மனுஷருடைய அந்தரங்கங்களைக் குறித்து நியாயத்தீர்ப்புக்கொடுக்கும் நாளிலே" ரோ. 2: 12, 16. நாம் தேவனுடைய நியாயப்பிரமாணத்தினால் நியாயந்தீர்க்கப்படுவோம். இன்னொரு வேத வாக்கியத்

தில் நமக்குச் சொல்லப்படும் ஆலோசனை: "சுயாதீனப் பிரமாணத்தினால் நியாயத்தீர்ப்படையப் போகிறவர்களாய் அதற்கேற்றபடிப் பேசி அதற்கேற்றபடிச் செய்யுங்கள்." யாக். 2: 12.

இந்தச் சத்தியங்கள் மனிதர் தேவப்பிரமாணத்தை கவனத்தோடும் புத்தியோடும் படிக்கும்படியாகவும், தேவனுடைய நியாயஸ்தலத்தில் தங்கள் கிரியைகள் விசாரிக்கப்படும்போது அதற்கு ஆயத்தப்பட்டவர்களாயிருக்கும்படியாகவும், பரிசுத்த ஆவியானவர், மனிதர் தங்கள் மீறுதல்களைப் பார்க்கும்படியாக உணர்த்திப் பாவத்தைவிட்டுத் திரும்பும்படியாகவும் நடத்துகின்றன. எகோவாவின் ஓய்வுநாளாகிய ஏழாம் நாள் தேவனுடைய பிரமாணத்தில் ஓய்வு நாளாகக் காட்டப்பட்டிருக்கிறது. முதலாம் நாள் அல்ல. மனிதர் தங்கள் ஜீவியத்தில் அதற்குக் கீழ்ப்படியவேண்டியது.

நியாயத்தீர்ப்புக்குத் தகுதியாகுதல்.

வெளி. 14: 6-12 இல் அடங்கிய மூன்று தூதுகளின் பிரசங்கத்தினால் மனிதர் தங்கள் ஜீவியத்தை தேவனுடைய பிரமாணத்திற்கு ஒத்தபடி சீர்படுத்திக்கொண்டு, பாபிலோனிலிருந்து, அதாவது, மருள விழுந்த சபையின் குழப்பங்களினின்று தங்களை நீக்கிக்கொள்வதினால் நியாயத்தீர்ப்புக்கும் கிறிஸ்துவின் மகிமையான வருகைக்கும் ஆயத்தமும் தகுதியுமுள்ளவர்களாகிறார்கள். மிருகத்தையும் அதின் சொரூபத்தையும் (ரோமான் மார்க்கமும், மருளவிழுந்த புராட்டஸ்தாந்து மார்க்கமும்) வணங்காதபடிக்கும், மிருகத்தின் முத்திரையை (சபையும் ராஜாங்கமும் ஐக்கியப்பட்டு, ஞாயிற்றுக்கிழமையை ஆசரிக்கும்படிச் சட்டம் பிறப்பித்து அதைப் பலவந்தப்படுத்துகிறதற்கு இணங்கி நடக்குதல்) பெற்றுக்கொள்ளாதபடிக்கும் விலக்குகிற தேவனுடைய எச்சரிப்புக்குச் செவி கொடுக்கிறார்கள். இவர்களைக் குறித்து 12-ம் வசனத்தில் "தேவனுடைய கற்பனைகளையும் இயேசுவின்மேலுள்ள விசுவாசத்தையும் காத்துக்கொள்ளுகிறவர்களாகிய பரிசுத்தவான்களுடைய பொறுமை இதிலே விளங்கும்" என்று சொல்லப்பட்டிருக்கிறது.

இதைச் செய்துமுடிக்கும் தூதானது, முத்திரை போடும் பெரிய தூது என்று சொல்லப்படுகிறது. ஏனென்றால் இந்தத் தூதை ஏற்றுக்கொண்டு அதற்கு ஒத்தபிரகாரம் நடக்கிறவர்களை வேறொரு தீர்க்கதரிசனத்திலே "ஜீவனுள்ள தேவனின் முத்திரை"யைப் பெற்றவர்கள் என்று சொல்லியிருக்கிறது.

வெளிப்படுத்தின விசேஷம் 6-ம் அதிகாரத்தில் ஏழு முத்திரைகளைப்பற்றிய தரிசனமானது உலக சரித்திரத்தின் முடிவு வரைக்கும் நடக்கும் சில விசேஷங்களை ஒன்றன்பின் ஒன்றாய் சொல்லிக்கொண்டே வருகிறது. நவம்பர். 1. 1755-இல் லிஸ்பன் நகரிலுண்டான மிகப் பயங்கரமான பெரிய பூகம்பத்தைப்பற்றியும் மேய். 19. 1780-இல் சூரியனும் சந்திரனும் இருண்டுபோன சம்பவத்தைப்பற்றியும் நவம்பர். 13. 1833-இல் நட்சத்திரங்கள் விழுந்ததைப்பற்றியும் அதில் முன்னறிவிக்கப்பட்டிருக்கிறது. அதற்கு அடுத்த விசேஷம் கோபத்தின் மகா நாளாகிய உலகத்தின் முடிவுதான்.

ஆறாம் முத்திரையின் காலத்திலும், ஏழாம் முத்திரை திறக்கப்படுமுன்னும் தேவனுடைய ஜனத்திற்குள்ளே செய்யப்படவேண்டிய ஒரு வேலையைப்பற்றி 7-ம் அதிகாரம் எடுத்துக் காண்பிக்கிறது.

விடுதலையும் ஜெயமும்.

ஏழு முத்திரைகளைப்பற்றிய தரிசனத்தில் காணப்படுகிறவர்களும் இதே கூட்டத்தார்தான். அவர்களுடைய தொகை "லட்சத்து நாற்பத்து நாலாயிரம்." அவர்களைப் பற்றி, "புதுப்பாட்டைப் பாடினார்களென்றும் "அந்தப் பாட்டு பூமியிலிருந்து மீட்டுக்கொள்ளப்பட்ட இலட்சத்து நாற்பத்து நாலாயிரம் பேரே யல்லாமல் வேறொருவரும் கற்றுக்கொள்ளக்கூடாதிருந்தது" என்றும் வெளி. 14: 3-இல் சொல்லப்பட்டிருக்கிறது. "இவர்கள் மனுஷரிலிருந்து மீட்டுக்கொள்ளப்பட்டவர்கள்" என்று 4-ம் வசனம் சொல்லுகிறது.

15-ம் அதிகாரத்தில் அவர்கள் "கண்ணாடிக் கடல்" அருகே நிற்கிறவர்களாகக் காணப்படுகிறார்கள். இவர்கள் "மிருகத்திற்கும் அதின் சொரூபத்திற்கும் அதின் முத்திரைக்கும்......உள்ளாகாமல் ஜெயங்கொண்டவர்கள்" இவர்கள் "தேவனுடைய ஊழியக்காரனாகிய மோசேயின் பாட்டையும் ஆட்டுக்குட்டியானவருடைய பாட்டையும் பாடினார்கள்." வச. 2, 3. முந்தின பாட்டு மீட்டுக்கொள்ளப்பட்டதைப்பற்றியது, இரண்டாவது ஜெயங்கொண்டதைப்பற்றிய பாட்டு. ரோமை மார்க்கத்தினுடையவும், மருள விழுந்த புராட்டஸ்தாந்து மார்க்கத்தினுடையவும் கொடுமையினின்றும் விசுவாசத்தின் மூலமாய் அவர்கள் ஜெயங்கொள்ளுகிறார்கள். கிறிஸ்துவின் வருகையில் அவர்கள் பொல்லாதவர்களுடைய கையினின்றும் உலகத்தின் வல்லமையினின்றும் விடுவிக்கப்படுகிறார்கள். இவர்களைத் தவிர வேறு யாரும் இந்தப் பாட்டைப் பாடக்கூடாது. ஏனென்றால் அது அவர்களுடைய அனுபோகத்தைப் பற்றிய பாட்டாயிருக்கிறது. தேவனுடைய மீதியான ஜனங்கள்மாத்திரம் இந்த அனுபோகத்திற்குள்ளாகிறார்கள்.

நெற்றியில் முத்திரை போடப்பட்டவர்கள்.

அவர்கள் "பிதாவின் நாமம் தங்கள் நெற்றிகளில் எழுதப்பட்டிருந்தவர்கள்" என்று ஒரு வேத வாக்கியம் சொல்லுகிறது. வெளி. 14: 1. இன்னொரு வேத வாக்கியத்தில் அவர்கள் நெற்றிகளில் தேவனுடைய முத்திரை போடப்படுகிறதாக சொல்லப்பட்டிருக்கிறது. வெளி. 7: 3. மிருகத்தின் முத்திரையானது, தன்னுடைய அதிகாரத்தின் அடையாளம் என்று பாப்பு மார்க்கம் உரிமை பாராட்டும் ஒரு ஏற்பாடாயிருப்பதுபோல, தேவனுடைய முத்திரையானது அவருடைய அதிகாரத்தின் அடையாளத்தைக்காட்டும் ஓர் ஏற்பாடாயிருக்கிறது,

தேவனுடைய முத்திரைபோடும் இதே கிரியையானது, எசே. 9: 1-6 இல் காட்டப்பட்டிருக்கிறது.

இந்த வேத வாக்கியத்தில் "மனுஷரின் நெற்றிகளில் அடையாளம் போடு" என்று கர்த்தர் சொல்லுகிறார். "முத்திரை" என்பதும் "அடையாளம்" என்பதும் ஒன்றுதான். ரோ. 4: 11-இல் ஆபிரகாம் "விருத்த சேதனமாகிய அடையாளத்தைப் பெற்றான்" என்றும் அந்த "அடையாளம்" அவன் விசுவாசத்தினால் அடைந்த நீதிக்கு "முத்திரை" என்றும் வாசிக்கிறோம். இங்கே "முத்திரை" "அடையாளம்" என்னும் வார்த்தைகள் ஒரே கருத்தில் உபயோகிக்கப்பட்டிருக்கின்றன.

வெளி. 14: 1-இல் "பிதாவின் நாமம் தங்கள் நெற்றிகளில் எழுதப்பட்டிருந்தவர்கள்" என்று வாசிக்கிறோம். தேவனுடைய நாமம் என்பது அவருடைய குண லட்சணத்தையும் குறிக்கும். தேவனுடைய குணலட்சணம் அவருடைய பிரமாணத்தில் வெளிப்பட்டிருக்கிறது. அந்தப் பிரமாணம் 'பூரணமானது', 'பரிசுத்தமானது', 'நல்லது', 'ஆவிக்குரியது' என்று வேதம் சொல்லுகிறது. பத்துக் கற்பனைகளால் நமக்குக் கொடுத்திருக்கும் தேவப்பிரமாணமானது மெய்யாகவே அவருடைய குணலட்சணத்தின் நகலாயிருக்கிறது.

தேவப்பிரமாணத்தின் முத்திரை.

தேவப்பிரமாணத்தின் முத்திரை நாலாம் கற்பனையில் அடங்கியிருக்கிறது. நாலாம் கற்பனையில் சொல்லப்பட்ட ஓய்வு நாளாகிய ஏழாம் நாள், தேவனுடைய முத்திரையாயிருக்கிறது. "நான் தங்களைப் பரிசுத்தம் பண்ணுகிற கர்த்தர் என்று அவர்கள் அறியும்படிக்கு எனக்கும் அவர்களுக்கும் அடையாளமாய் இருப்பதற்கான என் ஓய்வு நாட்களையும் அவர்களுக்குக் கட்டளையிட்டேன்" எசே. 20: 12. என்று கர்த்தர் சொல்லுகிறார். மேலும் "உங்கள் தேவனாகிய கர்த்தர் நானே, நீங்கள் என் கட்டளைகளில் நடந்து, என் நியாயங்களைக் கைக்கொண்டு அவைகளின்படியே செய்து என் ஓய்வுநாட்களைப் பரிசுத்தமாக்குங்கள். நான் உங்கள் தேவனாகிய கர்த்தர் என்று நீங்கள் அறியும்படிக்கு அவைகள் எனக்கும் உங்களுக்கும் அடையாளமாயிருக்கும்" என்றும் சொல்லுகிறார். வச. 19, 20.

ஓய்வுநாளானது தேவனுடைய சிருஷ்டிப்பின் வல்லமைக்கு ஞாபகார்த்தமாயிருக்கிறது. யாத். 20: 8-11. அது அவருடைய பரிசுத்தமாக்கும் வல்லமைக்கும் அடையாளமாக அல்லது முத்திரையாக இருக்கிறது. கற்பனை கொடுக்க அவருக்கு இருக்கும் அதிகாரத்தை ரூபிக்கிற தேவனுடைய முத்திரையாக இருக்கிறது. ஓய்வுநாள் கற்பனையானது பிரமாணத்தைக் கொடுத்தவரின் நாமத்தையும், வானத்தையும் பூமியையும் உண்டாக்கின சிருஷ்டிகராக அவருக்கு இருக்கும் வல்லமையையும் அதிகாரத்தையும், அவர் ஆளுகை செய்யும் இராட்சியத்தையும் காட்டுகிற தேவப்பிரமாணத்தின் முத்திரையாயிருக்கிறது.

உலக சரித்திரத்தின் கடைசி காலங்களிலே மிருகத்திற்கும் அதின் முத்திரைக்கும் மனிதரைக் கீழ்ப்படுத்தும்படிப் பொல்லாங்கனின் சகல வல்லமையையும் கையாடப்பட்டு வருமென்பதை வெளி. 13-ம் அதிகாரம் காட்டக்கொள்ள இந்த மூன்று தூதுகளினாலே தேவன் நடத்தும் கடைசி வேலையும் 14-ம் அதிகாரத்தில் அதே பிரகாரமாகக் காட்டப்பட்டிருக்கிறது. அதினால் மனிதர் பாவத்தை விட்டுக் கீழ்ப்படிதலுக்கும் ஞாயிற்றுக்கிழமை ஆசரிப்பைவிட்டு ஓய்வுநாள் ஆசரிப்புக்கும் திரும்புகிறதைக் காண்கிறோம். இந்தக் கடைசி முடிவின் வேலையைக் குறிப்பிட்டு கர்த்தர் தாமே சொல்லுகிறதாவது: "தேவனுடைய கற்பனைகளையும் இயேசுவின் மேலுள்ள விசுவாசத்தையும் காத்துக்கொள்ளுகிறவர்களாகிய பரிசுத்தவான்களுடைய பொறுமை இதிலே விளங்கும்." வச. 12.

குழப்பத்தினின்று திரும்புதல்.

உலக சரித்திரத்தின் முடிவு காலங்களில் குழப்பமாகிய பாபிலோனிலிருந்தும், மனிதருடைய தப்பறையும் வேத ஆதாரமற்றதுமான கோட்பாடுகளிலிருந்தும், பாரம்பரியமாகிய குப்பையிலிருந்தும் ஜீவனுள்ள தேவனின் சுத்தமான வசனத்திற்கும் அவருடைய கற்பனைகளைக் கைக்கொள்ளுவதற்கும் திரும்புகிற உண்மையுள்ள ஆத்துமாக்கள் இவர்கள்தான். இவர்கள் ஞாயிற்றுக்கிழமை ஆசரிப்பைத் தள்ளிப்போடுவார்கள். அது பாப்பதிகாரத்தின் அடையாளமும் சூரிய வணக்கத்தின் சடங்காசாரங்களில் மீதியானதுமாயிருக்கிறது. அதின் ஆசரிப்பானது கடைசி காலங்களில் மறுளவிழுந்த புராட்டஸ்தாந்து மார்க்கத்திற்கு ஓர் அடையாளமாயிருக்கிறது.

இவர்கள் முத்திரைபோடும் பெரிய தூதின் பிரசங்கத்தினால் மீட்டுக்கொள்ளப்பட்டவர்களும், யெகோவாவின் மெய்யான ஓய்வுநாளாகிய ஜீவனுள்ள தேவனின் முத்திரையைப் பெற்றவர்களுமாயிருக்கிறார்கள்.

இந்தத் தூதானது தற்காலத்தில் உலக முழுமைக்கும் வல்லமையோடு செல்லுகிறது. இந்த வேலை சீக்கிரத்தில் முடிவு பெறும். இதை வாசிக்கும் நண்பனே, அது உனக்காகவும் செய்யப்படுகிறதா? வழக்கமான ஒரு குற்றம் எங்கும் வழக்கமாய்ப்போனதினால் உன்னை ஒருபோதும் குற்றமற்றவனாக்க மாட்டாது. தேவனுடைய நியாயாசனத்திற்கு முன்பாக ஞாயிற்றுக்கிழமை ஆசரிப்பு ஓய்வுநாளின் ஆசரிப்பாக ஒருபோதும் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது. புத்தியுள்ள எல்லாரும் இந்த நல்ல தூதை ஏற்றுக்கொள்ளும்படி தேவன் அழைக்கிறார். வேணுமென்று இதை உணராமற்போவது, வேணுமென்று பாவியாய்ப் போவதாயிருக்கிறது. ஒரு பக்கத்தில் இயேசு நிற்கிறார். அவர் உன்னை நீதியத்திற்கென்று தேவனுடைய இராட்சியத்தில் சேரும்படி இரட்சிக்க அவருக்கு இடங்கொடுக்கும்படி கேட்கிறார். மறு பக்கத்தில் மிருகமும் அதின் முத்திரையும் இருக்கிறது. அது தேவனைத் தாழ்த்தித் தன்னை ஆராதித்து தனக்குக் கீழ்ப்படியும்படிக் கேட்கிறது. நீ எந்தப் பக்கத்தில் நிற்பாய்? "யாரைச் சேவிப்பீர்களென்று இன்று தெரிந்துகொள்ளுங்கள்."

தேவ தூதர்களும் அவர்களின் தன்மையும் ஊழியமும்

(ANGELS, THEIR NATURE AND MINISTRY).

இப்பூமியிலுள்ள ஒவ்வொரு ராஜாங்கத்திலும், இராட்சிய பாரத்திற்கடுத்த, விசேஷ வேலைகளை நடத்தும்படித் தூதாட்களும் நம்பிக்கையுள்ள ஊழியர்களும் வைக்கப்பட்டிருக்கிறார்கள். தேவனுடைய அரசாட்சியிலும் அப்படித்தான். அவருடைய முக்கியமான தூதுகளைக்கொண்டு செல்லும்படி அவருக்கு உண்மையான தூதாட்கள் உண்டு. தேவனுடைய தூதாட்களாகிய தேவதூதரின் காரியங்களைப்பற்றி தேவ வசனமாகிய சத்திய வேதத்தில் மாத்திரம் காணலாம்.

தேவனுடைய நம்பிக்கையான தூதாட்கள் தேவதூதர்களென்று வேதாகமத்தினால் நாம் அறியலாம். அவர்கள் மனிதர்களைப்பார்க்கிலும் சற்று பெரியவர்களாயிருக்கிறார்களென்றும், தேவன் கிறிஸ்து மூலமாய் எல்லாவற்றையும் படைத்தபோது தேவ தூதர்களும் கிறிஸ்துவின் மூலமாய் சிருஷ்டிக்கப்பட்டார்களென்று சொல்லப்பட்டிருக்கிறது. மேலும் தேவதூதர்கள் கிறிஸ்துவுக்கு எல்லா விஷயத்திலும் பணிவாய்க் கீழ்படிந்து அவரை நமஸ்கரித்து வணங்குகிறார்களென்றும், சத்திய வேதம் தெளிவாய்ப் போதிக்கிறது.

அநேக ஜனங்கள் நம்புகிறதுபோல் மனிதர் மரித்த பிற்பாடு தேவ தூதர்களாய்ப் போகிறார்களென்று தேவ வசனம் சொல்லுகிறதேயில்லை. அல்லது எப்பொழுதேனும் மனிதன் தேவ தூதனாகக்கூடுமென்றாவது வேத வாக்கியங்களில் சொல்லப்படவில்லை. தேவ தூதர்கள் மனிதரிலும் வேறு வகையான சிருஷ்டிகள். ஒரு எறும்பு மனிதனாவது எப்படி அசாத்தியமோ அப்படியே மனிதனும் தேவதூதனாவது கூடாத விஷயம்.

ஆதியில் சிருஷ்டிக்கப்பட்ட தேவ தூதரின் தொகை இத்தனையென்று நமக்குச் சொல்லப்படவில்லை. அவர்கள் ஆயிரமாயிரம் பேர்களாகவும் கோடிகோடிப் பேர்களாகவும் இருக்கிறதாகச் சொல்லப்பட்டிருக்கிறது. தேவன் அவர்களுக்குக் கொடுக்கும் பற்பல வேலைகளைச் செய்வதற்கு அதிக சாமார்த்தியமும் பலமும் வேண்டியதாயிருப்பதால், தேவன் அவர்களுக்கு அதிக பலம் கொடுத்திருக்கிறாரென்பது நமக்குத் தெரிந்த காரியம்தான். ஐயாயிரம் பேர்கள்கொண்ட அசீரிய சேனையை அழிக்கும்படி தேவன் ஒரு தூதனை அனுப்பிய சங்கதி வேதத்தில் சொல்லப்பட்டிருக்கிறது. அந்த ஒரு தூதனுக்கு அவ்வளவு பெரிய வேலையைச் செய்யக்கூடிய வல்லமையிருந்தது. இன்னொரு திருஷ்டாந்தம்: கர்த்தர் தேவ தூதனைக்கொண்டு சகரியாவுக்குச் சொன்ன வார்த்தைகளைச் சகரியா நம்பாமற்போனதினால், தேவ தூதன் தெரிவித்த அந்த சங்கதி நிறைவேறும்மட்டும் ஊமையாயிருக்கும்படி தேவ தூதன் செய்தான்.

தேவ தூதர்கள் அடிக்கடி மனித ரூபமாக இப்பூமியில் அநேகருக்குக் காணப்பட்டிருக்கிறார்கள். ஆபிரகாமுக்கும் லோத்துக்கும் அப்படியே காணப்பட்டார்கள். கிறிஸ்து பரமேறிப் போனபோது வானத்தை அண்ணாந்து பார்த்துக்கொண்டிருந்த சீஷருக்கும் தேவ தூதன் காணப்பட்டான்.

துன்பங்கள், உபத்திரவங்கள், ஆபத்துகள் உண்டாகுங் காலங்களில் தேவ தூதர் வந்து தேவனுடைய பிள்ளைகளுக்கு ஒத்தாசை செய்ததைப்பற்றி அநேக உதாரணங்கள் நமக்கு வேதாகமத்தில் உண்டு. மெய்த்தேவனை வணங்கினதினிமித்தம் தானியேல் சிங்கங்களின் கெபியில் போடப்பட்டபோது, சிங்கங்களின் வாயை அடைக்கும்படியாகக் கர்த்தர் தமது தூதனை அனுப்பினார். ராஜா செய்த சிலையை வணங்கமாட்டோமென்று சொன்ன அந்த மூன்று புருஷரை அக்கினிச் சூளையில் போட்டபோது அக்கினி அவர்கள் உடுப்பைக்கூட எரிக்கீதபடி செய்து அவர்களோடு வந்து உலாவினவர் தேவ தூதன்தான். மெய் தேவனாகிய கர்த்தரைப்பற்றிப் பிரசங்கித்ததற்காகப் பேதுரு அப்போஸ்தலன் காவலில் வைக்கப்பட்ட இரண்டு சமயங்களில் தேவ தூதன் வந்து சிறைச்சாலையின் கதவைத் திறந்து பேதுருவை விடுவித்து, வெளியேபோய் தைரியமாய்ப் பிரசங்கித்துக்கொண்டிருக்கும்படிச் சொன்னான்.

ஒரு பாவி தன் பொல்லாத வழிகளை விட்டு மனந்திரும்பி ஜீவனுள்ள தேவனாகிய கர்த்தரை ஆராதிக்கும்போது பரலோகத்தின் தேவன் மாத்திரமல்ல, தேவ தூதர்களும்கூட சந்தோஷப்படுவதாக சொல்லப்பட்டிருக்கிறது. தேவனை மகிமைப்படுத்தி அவருக்கு ஊழியம் செய்கிறவர்களுக்கு அநேக பெரிய வாக்குத்தத்தங்கள் தேவ வசனத்தில் அடங்கியிருக்கின்றன. அவற்றில் ஒரு வாக்குத்தத்தம் என்னவென்றால்: தேவனுக்கு ஊழியஞ் செய்கிறவர்களுக்குச் சமீபத்தில் தேவ தூதர்கள் எப்போதும் இருப்பார்களென்பதும், அவர்களுக்குத் துன்பமுண்டாகுங்காலங்களில் அவர்களை விடுவிப்பார்களென்பதும்தான். இன்னொரு வாக்குத்தத்தம்: "உன் வழிகளெல்லாம் உன்னைக் காக்கும்படி

உனக்காக தம்முடைய தூதர்களுக்குக் கட்டளையிடுவார். உன் பாதம் கல்லிலிடறாதபடிக்கு அவர்கள் உன்னைத் தங்கள் கைகளில் ஏந்திக்கொண்டு போவார்கள்." ஜீவனுள்ள தேவனை மெய்யாய் ஆராதிக்கிறவர்களுக்கு மாத்திரம்தான் இந்த வாக்குத்தத்தங்கள் கொடுக்கப்பட்டிருக்கின்றன வென்பதற்குச் சந்தேகமில்லை.

கிறிஸ்து இவ்வுலகத்திற்குத் திரும்ப வரும்போதும் தேவ தூதர்கள் செய்யவேண்டிய ஒரு முக்கியமான வேலை அவர்களுக்கு வைக்கப்பட்டிருக்கிறது. அவர் வரும்போது பரலோகத்திலுள்ள தம்முடைய எல்லாப் பரிசுத்த தூதரையும் தம்மோடு கூட்டிக்கொண்டு வருவார். அவருடைய சத்தத்தைக் கேட்டவுடனே மரித்த எல்லா நீதிமான்களும் தாங்கள் இப்போது நித்திரை செய்யும் கல்லறைகளிலிருந்து உயிரோடெழுப்பப்படுவார்கள். அப்போது தேவ தூதர்கள் உயிரோடெழுந்த எல்லாரையும் கிறிஸ்துவோடுகூட இருக்கும்படியாக ஒன்றாய்க் கூட்டிச் சேர்ப்பார்கள். அச்சமயத்திலே உயிரோடிருக்கும் நீதிமான்களும் கூட்டப்படுவார்கள். அவர்கள் எப்பொழுதும் கிறிஸ்துவோடும் மரணத்தினால் தங்களைவிட்டுப் பிரிந்த தங்கள் அருமையானவர்களோடும் என்றும் பிரியாமல் வாழ்ந்திருக்கும்படி அவர்களையும் தேவ தூதர்கள் கிறிஸ்துவண்டைக்குக் கூட்டிக் கொண்டு போவார்கள்.

கால கதி

(THE SPIRIT OF THE AGE)

கடந்த நாலு வருஷங்களாக ஒவ்வொரு பட்டணத்திலும் தெருக்களிலும் ஒவ்வொரு மனிதனும் ஸ்திரீயும் பிள்ளையும் யுத்தத்தைப்பற்றியே பேசிக்கொண்டிருந்தார்கள். ஒவ்வொரு சமாச்சாரப் பத்திரிகையிலும், புதிதாய் அச்சிடப்பட்ட ஒவ்வொரு புஸ்தகத்திலும், யுத்தத்தைப்பற்றிய சமாச்சாரங்கள் அடங்கி யிருந்தது. இப்பொழுது யுத்தம் நின்றுவிட்டது. அவைகளைப்பற்றி சிந்திக்க இப்போது நமக்கு சமயம் இருக்கிறது. கடந்த வருஷங்களில் நாம் ஒரு விநோதமான காலத்தில் வசித்ததாகத் தெரிகிறது. இப்பொழுது மனிதரெல்லாரும் தங்கள் மனதில் என்ன சிந்தித்துக்கொண்டிருப்பார்கள். தற்காலத்தில் எல்லாரும் சமாதானத்தைப்பற்றியே சிந்தித்துக்கொண்டிருப்பார்களல்லவா? சமாதானத்தையும் அமைதியையும் யாவரும் விரும்புவார்கள். சமாதானம் உண்டாகுமா? உண்டானாலும் அது நீடித்திருக்குமா?

இரண்டாவது கேள்வியைவிட முதலாவது கேள்வி அதிக சுளுவாயிருக்கிறது. சகல ஜாதிகளும் நாலு வருஷமாக கடும் போர் புரிந்து பிறகு கொஞ்ச காலமாக சமாதானத்திற்கான ஏற்பாடுகள் செய்வார்களென்பதற்கு சந்தேகமில்லை. ஆனால் சமாதான உடன்படிக்கையானது எல்லா ஜாதியாருக்கும் திருப்தியாயிராதென்பது நிட்சயம். ஆனால் உலகமெங்குமுள்ள ஜனங்கள் ஜாதிகளுக்குள்ளிருக்கும் பகை முற்றிலும் நீங்கும்படி பிரயாசைப் படுவார்கள். ஆனால் மனுஷன் மனுஷீக தன்மையுள்ளவனாயிருக்குமட்டும் நித்திய சமாதானம் என்றைக்கும் நிலைத்திருக்கமாட்டாது. யுத்தம் ஆரம்பித்ததற்குப் பல வருஷத்திற்கு முன்னதாக எல்லா ஜாதியாரும் யார் சேர்த்தியான யுத்த ஆயத்தங்கள் செய்கிறார்களென்று பார்ப்போமென்று சபதம் போட்டுக் கொண்டார்கள். பின்பு பெரிய யுத்தக் கப்பல்களைக் கட்டினார்கள். சில வருஷத்திற்குப்பின்பு அந்த யுத்தக் கப்பல்கள் நல்லதல்லவென்று தள்ளிவிட்டு அதைவிட பிரமாண்டமான யுத்தக்கப்பல்களைக் கட்டினார்கள். இப்படியாக இவர்கள் யுத்த ஆயத்தங்களை மும்முரமாக செய்து கொண்டிருக்கும்போது, உலகம் நல்ல ஸ்திதியை அடைகிறதென்றும், கூடிய சீக்கிரத்தில் நித்திய சமாதானம் உண்டாகுமென்றும், எல்லா ஜாதிகளும் ஒருவரோடொருவர் சண்டை செய்யாமல் ஜீவிப்பார்களென்றும் அநேக கல்விமான்கள் பிரசங்கம் பண்ணினார்கள். இதன் உண்மையைப் பிரசங்கமல்ல கத்திகளும் பீரங்கிகளுமே நமக்கு வெளிப்படுத்தும். இந்தக் காரியங்களைப் பற்றிப் பிரசங்கித்தவர்கள் அதிக நல்ல மனிதர்கள்தான். ஆனால் அவர்கள் எண்ணின நோக்கம் தப்பானதாயிருந்தது. அவர்கள் பிரசங்கித்த காரியங்கள் நன்றாயிருந்த போதிலும் அவைகள் கடைசியில் நிறைவேறவில்லை. ஏனென்றால் அவர்கள் பிரசங்கித்த சில வருஷங்களுக்குப்பின் இந்த மகா யுத்தம் ஆரம்பித்தது

இப்பொழுது உலகத்தில் நடக்கும் காரியங்களை நாம் பார்க்கும்போதும் ஜனங்களுடைய நோக்கத்தை நாம் கவனிக்கும்போதும் தற்காலத்துக்கும் யுத்தம் ஆரம்பித்த காலத்திற்கும் யாதொரு வித்தியாசமுமில்லையென்று பார்க்கிறோம். ராஜ்யங்களெல்லாம் இப்பொழுது களைத்துப்போயிருப்பதினால் இப்பொழுது உடனே இன்னொரு யுத்தம் ஆரம்பிக்க முடியாது. அதே ராஜ்யங்கள் இன்னும் இருக்கிறதினாலும் அவர்கள் பொறாமையும் விரோதமும் சண்டை ஆரம்பியாததற்குமுன் எப்படியிருந்ததோ அதுபோல இப்பவும் இருக்கிறதினாலும் அவர்களுக்குத் திரும்பவும் வல்லமையும் பலனும் வந்தபிற்பாடு அவர்கள் மறுபடியும் யுத்தம் செய்ய ஆரம்பிப்பார்கள்.

ஒரே நிவாரணம்.

இந்த காரியங்களுக்கு ஒரு நிவாரணமும் இல்லையா? உலகத்தைப் பீடித்திருக்கும் இந்த நோயை நிவிர்த்தி செய்ய ஒரு ஔஷதமும் இல்லையா? இந்த கேள்விக்கு ஆம் என்று உத்தரவு சொல்லவேண்டும், நமது கர்த்தராகிய இயேசுக் கிறிஸ்துவும் அப்போஸ்தலரும் போதித்ததும் சாதித்ததுமான கிறிஸ்தவ கொள்கை அதை நமக்கு வெளிப்படுத்தும்.



ஜனங்களுக்குள் உண்டாகும் கலகங்கள்.

இயேசு கிறிஸ்துவின் ஜீவியத்தையும் உபதேசத்தையும்பற்றி சொல்லும் சுவிசேஷத்தை நாம் வாசித்தால் அப்பொழுது இயேசு கடைசி காலத்தில் உலகம் எந்த நிலைமையிலிருக்குமென்று போதித்ததற்கும் இப்பொழுது உலகத்தில் இவர்கள் போதிக்கிறதற்கும் உள்ள வித்தியாசம் நமக்கு நன்றாய் விளங்கும். உங்கள் சத்துருக்களைச் சிநேகியுங்கள் என்றும் தீமை செய்கிறவர்களுக்கு நன்மை செய்யுங்கள் என்றும் இயேசு போதித்தார். தற்காலத்தில் உலகத்தார் பழி வாங்குங்கள் பழி வாங்குங்கள் தீமைக்குத்தீமையையும் கண்ணுக்குக் கண்ணையும் பல்லுக்குப் பல்லையும் கொடுங்கள் என்று சொல்லுகிறார்கள். கிறிஸ்து தமது ராஜ்யத்திற்கு அன்பே பிரதானமாயிருக்கவேண்டுமென்று விரும்பினார். ஆனால் தற்காலத்திலிருக்கும் ராஜ்யங்களுக்கு பராக்கிரமமே பெரிதாயிருக்கிறது. காரியங்கள் இப்படியிருக்குமட்டும் ராஜ்யத்தில் சமாதானமும் ஒத்துமையும் உண்டாகுமென்று நாம் எதிர்பார்க்கவே கூடாது. கிறிஸ்து இரண்டாவதாக வருமட்டும் பொல்லாதவர்களும் எத்தருமானவர்கள் மோசம் போக்குகிறவர்களாகவும், மோசம் போகிறவர்களாகவுமிருந்து மென்மேலும் கேடுள்ளவர்களாவார்களென்று வேதம் சொல்லுகிறது.

கிறிஸ்து மார்க்கம் அவமாய்ப்போயிற்றா?

இதைப்பற்றி நான் பேசிக்கொண்டிருக்கும்போது ஒருநாள் ஒரு மனிதன் என்னை நோக்கி: ஐயா, கிறிஸ்து

மார்க்கம்தான் மெய்யான நித்திய சமாதானத்தை அளிக்கக்கூடுமென்று சொல்லுகிறீரே; பின்னை ஏன் இப்பொழுது முடிவுபெற்ற இந்த யுத்தம், முழுவதும் கிறிஸ்தவ ராஜ்யங்களுக்குள்ளேயே நடந்தது. கிறிஸ்து மார்க்கத்திற்கும் கிறிஸ்துவின் உபதேசத்திற்கும் இந்த சண்டை உண்டாகாமலிருக்கும்படி செய்ய வல்லமை இல்லையா என்று கேட்டான். ஆகையினாலே கிறிஸ்து மார்க்கம் அவமாய்ப் போயிற்றா? இல்லையே, கிறிஸ்து மார்க்கம் அவமாய்ப் போகவில்லை. வேதாகம போதனைகள் எப்போதும்போலவே அதிக வல்லமையுள்ளதாயிருக்கிறது. ஆனால், வேதாகமத்தின்படி நடக்கிறோமென்றும் கிறிஸ்து சென்ற பாதையில் செல்லுகிறோமென்றும் சொல்லுகிறவர்கள் சரியான பாதையைவிட்டு விலகி வழிதப்பிப்போய் தங்கள் சுய ஞானத்திலே குருடராய்ப் போயிருக்கிறார்கள். கிறிஸ்துவைப் பின்பற்றுகிறோமென்று சொல்லுகிறவர்களிடத்தில் குற்றமிருக்கிறதேயல்லாமல் கிறிஸ்து மார்க்கத்தில் ஒரு குற்றமுமில்லை. இதனால், கிறிஸ்தவ ஜாதிகளென்று தங்களைச் சொல்லிக்கொள்ளுகிறவர்கள் எல்லாரும் முற்றிலும் பொல்லாதவர்களென்று நான் அர்த்தங்கொள்ளுகிறதில்லை. மார்க்க விஷயத்தில் கிறிஸ்தவ ராஜ்யத்தார் அதிக கவலைத் தாட்சியாயிருக்கிறார்கள். தங்கள் வழி காட்டியாகிய வேதாகமத்தை வாசித்து தியானிப்பதில் ஜனங்கள் தங்கள் நேரத்தை அவ்வளவாய்ச் செலவிடமாட்டோமென்கிறார்கள். எல்லாவற்றிற்கும் பிரதானமான ஆத்தும காரியத்தைப்பற்றி ஜனங்கள் கொஞ்சமும் கவலைப்படுகிறதில்லை. உலகத்தார் சிற்றின்பத்தையும், பணத்தையும், இந்த உலக காரியங்களையும் நாடுகிறார்களேயல்லாமல் மறுமைக்குரிய காரியங்களைப்பற்றி சற்றேனும் கவலையற்றவர்களாயிருக்கிறார்கள்.

கடைசி நாட்களில் உலகத்தின் நிலைமை இப்பல்யிருக்குமென்று சிருஷ்டிகர் சொல்லியிருக்கிறதினால் நாம் இந்தக் காரியங்களை பார்க்கும்போது ஆச்சரியப்படவேண்டியதில்லை. முடிவு சமீபமாயிருக்கிறதென்பதற்கு இந்தக் காரியங்களும் ஒரு அடையாளமாயிருக்கிறது. இதை வாசிக்கும் என் நண்பனே! இவைகளையெல்லாம் நீ நன்றாய் நிதானித்துப் பார்த்து இந்த உலக காரியத்தில் அகப்பட்டுச் சிக்கிக்கொள்ளாமல் இந்த உலக சரித்திரத்தின் எந்த காலத்திலிருக்கிறோமென்பதை தேவன் கொடுத்த இந்த அடையாளங்களால் அறிந்துகொண்டு ஜாக்கிறதையாய் நட.

வெறுமையான தீபங்களை அலங்கரித்தல்

புத்தியில்லாத கன்னியாஸ்திரீகள் காண்பித்த பல மூடத்தனமான விஷயங்களில் ஒன்று எண்ணெயில்லாத் வெறுந் தீபங்களை அலங்கரிப்பதினால் அவற்றை எரியச்செய்யலாமென்று பிரயாசப்பட்டது. ஆனால் ஒரு வெறுந்தீபத்தை எவ்வளவாய் அலங்கரித்தாலும் அதை எரியும்படி செய்வது கூடாத விஷயம். எண்ணெய்க்கு பதிலாக அலங்கரிப்பினால் பிரகாசம் வரும்படி ஒருபோதும் செய்ய முடியாது.

தற்காலத்தில் சபைகளிலும் இவ்வித தப்பான காரியத்தைச் செய்வோர் பலர் உண்டு. அவர்கள் பேருக்கு மாத்திரம் கிறிஸ்தவர்களாயிருந்து வெளிவேஷமாக மாத்திரம் தங்களைக் கிறிஸ்தவர்களென்று காண்பிக்கிறார்கள். ஆனால் அதினால் பிரகாசம் உண்டாகிறதில்லை. இவ்விஷயத்தில் ஆயிரக்கணக்கானபேர்கள் அந்தப் புத்தியற்ற கன்னியாஸ்திரிகளைப் பின்பற்றுகிறவர்களாயிருக்கிறார்கள். அவர்கள் தங்கள் ஜெபங்களினாலும் தர்மங்கொடுப்பதினாலும் சபை விஷயங்களில் ஊக்கமாயிருப்பதினாலும் தாங்கள் சபையின் அவயவமாயிருப்பதை அலங்கரித்துக் காண்பிக்கிறார்கள். ஆனால் இருதயத்தில் பரம கிருபை யில்லாமையால் அவையெல்லாம் வீணாகவே யிருக்கின்றன. சபையில் பெரும்பான்மையோர் உபவாசத்திற்கும் ஜெபத்திற்கும் ஒரு வாரத்தைக் குறித்து நடத்தி வருகிறார்கள். ஆயினும் தங்கள் விளக்குகளில் எண்ணெய் உடையவர்களுக்கேயன்றி மற்றவர்களுக்கு அதினால் ஒரு நன்மையும் வராது. தேவனுக்குக் கீழ்ப்படிகிறதற்கு பதிலாகப் பண்டிகைகளை அநுசரிப்பதினால் அதைச் சரிப்படுத்தலாமென்று எத்தனித்த யூதர்களைப்பற்றி, அதையெல்லாம் தன் ஆத்துமா அரோசித்ததாக தேவன் சொன்னார்.

ஆயத்தம் செய்ய மறந்த ஸ்தல யாத்திரி

(THE PILGRIM WHO FORGOT TO PREPARE.)

நலப்பூர் என்னும் கிராமத்தில் மிகவும் ஐசுவரியவானான ஓர் குடியானவன் இருந்தான். அவனுக்குக் குமாரரும் குமாரத்திகளும், சுற்றத்தார் பலரும் அநேக வேலைக்காரர்களும் இருந்தார்கள். அவன் மிகவும் பேர்பிரஸ்தாப மடைந்த மனிதனாயிருந்தான். சுற்று கிராமங்களிலிருந்த ஜனங்களெல்லாரும் அவனை ஒரு ராஜாவைப்போல மதித்து வந்தார்கள். முதலில் இந்தப் பெரிய மனுஷனுடைய உத்தரவு கேட்காதபடிக்குத் தன் சொந்த வீட்டிலுங்கூட ஒருவனும் யாதொன்றையும் செய்யத் துணிந்ததில்லை.

காஞ்சீவரத்தில் பல நாட்களாய் நடத்தப்படும் ஒரு பெரிய திருவிழாவைப்பற்றி ஒருநாள் அவன் கேள்விப்பட்டான். ஐச்வரியவான்களும் ஏழைகளுமாகிய திரளான ஜனங்கள் புண்ணியமடையும்படியாகவும் தங்கள் பாவங்களைப் போக்கிக்கொள்ளும்படியாகவும் வெகு தூரம் பிரயாணம்செய்து அந்த ஸ்தலத்துக்குப் போவார்கள்.

அவன், தானும் அங்கே போகத் தீர்மானம் செய்துகொண்டு அதிக புண்ணியம் சம்பாதிக்கும்படியாகத் தன் குமாரர் குமாரத்திகள், உறவின் முறையார், வேலைக்காரர்கள் எல்லாரையும் தன்னோடு கூட்டிக்கொண்டு புறப்பட்டான். அவர்கள் அதிக பிரயாசத்தோடும் சந்தடியோடும் சாமான்களையெல்லாம் தயார் செய்துக்கொண்டு புறப்பட்டார்கள். அவன் புறப்பட்ட போது, கிராமத்து ஜனங்கள் எல்லாரும் கூட்டமாய் வந்து, அவனைச் சூழ நின்றுகொண்டு அவன் பத்திரமாய்ப் பிரயாணம் பண்ணி, சுகத்தோடு திரும்பி வந்து சேரவேண்டுமென்று விரும்புகிறவர்களாய் அவனுக்குப் பெரிய சலாம் செய்தார்கள். பிரயாணம் நீண்டதும் மிகவும் வருத்தமானதுமாயிருந்தது. தான் எவ்வளவு பெரிய மனுஷனென்று காண்பிக்கும்படியாகத் தானும் தன்னைச் சேர்ந்த எல்லாரும், எல்லா வேலைக்காரர்களும் முதல் வகுப்பு வண்டியிலேறிப் பிரயாணம் செய்தார்கள். அப்படியும் அவன் தனக்குச் சௌகரியமாயில்லையென்றும், மிகவும் கஷ்டமாயிருக்கிறதென்றும் முறையிட்டான். அவன், வண்டி மாற்றவேண்டிய சமயங்களில், ரெயில்வே உத்தியோகஸ்தர்களும் கூலி யாட்களும் தன்னைப்போன்ற பெரிய அந்தஸ்துள்ள மனிதனுக்குச் செய்யவேண்டிய சரியான மரியாதை செய்து கனப்படுத்தவில்லையென்று குறை கூறினான். ஆயினும் இதெல்லாமென்ன, நான் காஞ்சீவரம் போய்ச் சேர்ந்தால் அங்கே நன்றாய் இளைப்பாறி சந்தோஷமாயிருப்பேன். அங்கிருக்கிற ஜனங்கள் எனக்குச் சரியான மரியாதை செய்வார்களென்று சொல்லிக்கொண்டான்.

கடைசியாக அவர்கள் காஞ்சீவரம் வந்து சேர்ந்தார்கள். அப்போது அவன் தன் ஜனங்களைப் பார்த்து, இப்போது நாம் கடைசியாய்ப் பிரயாண முடிவுக்கு வந்துவிட்டோம், நாம் சந்தோஷமாய்த் தங்கி சாப்பிடவும் நித்திரை செய்யவும் நீங்கள் போய் ஒரு நல்ல வீடு அமர்த்துங்கள் என்று சொன்னான்.

அப்படியே அவர்கள் மரியாதையாக அவன் சொன்னபடியே செய்வதற்கு விடை பெற்றுக்கொண்டு, வீடு தேடப்போனார்கள். அவர்கள் வீணாக வெகு நேரம் பிரயாசப்பட்டுத் தேடி, ஒன்றும் அகப்படாமல் திரும்பி வந்து “இந்த ஊரில் ஆயிரக்கணக்கான பேர்கள் வந்து நிறைந்து விட்டார்கள். ஒரு எலி தங்கக்கூட இங்கே இடம் அகப்படவில்லை” என்று அவனுக்கு அறிவித்தார்கள்.

குடியானவன் இதைக் கேட்டபோது அதிகக் கோபமடைந்து, அவர்களைப்பார்த்து, நான் யாரென்று நீங்கள் ஏன் அவர்களுக்குச் சொல்லவில்லை, நலப்பூர் பிரபுவாகிய பெரிய மிராஸ்தார் வந்திருக்கிறார்கள். அவருக்கு ஒரு மாதத்திற்குத் தங்கியிருக்க ஒரு நல்ல வீடு வேண்டுமென்று சொல்லியிருந்தால் ஜனங்கள் என்னிடத்தில் ஓட்டமாய் ஓடி வந்து எனக்கு வேண்டிய பணிவிடையெல்லாம் செய்வார்களே என்று கேட்டான்.

அதற்கு அவர்கள், ஐயா, நாங்கள் இதெல்லாம் சொன்னோம், இன்னும் அதிகமாகவும் சொன்னோம். ஆனால் ஜனங்கள் எங்களைப் பார்த்து நகைத்து, நலப்பூர் மிராஸ்தாரென்றால் எங்களுக்கென்ன? அவனைப்பற்றி எங்களுக்கு ஒன்றும் தெரியாது, யாராயிருந்தாலும் சரி எவ்வளவு பெரிய மனுஷனாயிருந்தாலும் சரி, ஏற்கனவே வீடு அமர்த்தி அதற்குத்தகுந்த பணம் கட்டியிருந்தாலன்றி இங்கே, திருவிழா காலத்தில் வீடு கிடைக்கவே கிடைக்காது என்று சொல்லிவிட்டார்கள் என்றார்கள். இப்படிச் சொல்லவே அவனுக்குப் பின்னும் அதிக கோபம் உண்டாகிவிட்டது. அவர்களோ, நீங்களே வந்து பாருங்கள், நாங்கள் உங்களுக்குப் பொய் சொல்லுகிறதில்லை என்றார்கள். அவனும் போய்ப் பார்த்து, அவர்கள் சொன்னதெல்லாம் உண்மைதானென்று அறிந்து கொண்டான். அவனுக்கு எங்கும்

ஒரு இடமும் அகப்படவில்லை. வெகுநேரம் தேடிப் பார்த்து ஒன்றும் கிடையாதபடியால் அவனும் அவனுடைய பெரிய பரிவாரமும் வந்த வழியே திரும்பிப் போகவேண்டியதாயிற்று.

இந்தக் குடியானவன் தான் காஞ்சீவரத்திற்குப் புறப்படுவதற்கு முன்னமேயே இதைப்பற்றி யோசனை செய்யாதிருந்தது எவ்வளவு மூடத்தனம்! ஆம், நம்மிலும் சிலர் அவனைப்போலவே இருக்கிறதில்லையா?

எல்லாரும் பாவத்தின் துர்ப்பலன்களினின்று விடுதலையடைய ஆசிக்கிறார்கள். எல்லாரும் தேவனுடைய ஆசீர்வாதத்தைப் பெற்றுக்கொள்ளவேண்டுமென்று விரும்புகிறார்கள். நாம் பரலோகம் என்று சொல்லுகிற அந்தப் பாக்கியமான இடத்திற்குப் போய்ச் சேரவேண்டுமென்று எல்லாரும் வாஞ்சைப்படுகிறார்கள். ஆனால் அந்த ஆசீர்வாதங்களைப் பெற்றுக்கொள்ளும்படியாக ஏற்கனவே நாம் செய்யவேண்டிய ஆயத்தங்களைச் செய்ய எவ்வளவோதரம் தவறிப்போயிருக்கிறோம். அந்தப்பெரிய நியாயத்தீர்ப்பின் நாளுக்கு வரும்போது அநேக ஜனங்கள் தாங்கள் அதற்குச் செய்யவேண்டிய ஆயத்தங்களைச் செய்யவில்லையே யென்று உணர்ந்துகொள்ளுவார்கள். தங்கள் ஐசுவரியத்தைப்பற்றியும், பேர் பிரஸ்தாபத்தைப்பற்றியும், எஜமான் தங்களை ஏற்றுக்கொள்ளுவாரென்று நினைக்கிறார்கள். ஆனால் கண்டிப்பாகச் சர்வலோகத்தின் நியாயாதிபதிக்கு முன்பாக அவர்கள் நிற்கவேண்டியகாலம் வரும்போது தாங்கள் அதற்கு ஆயத்தமாயிருக்கிறதில்லை யென்பதை அறிந்துகொள்ளுவார்கள்.

இந்த ஆசீர்வாதங்களை அடையும்படியான உறுதியான திட நம்பிக்கை நமக்கு உண்டாகக் கூடுமா? நாம் இப்போது பாவம் நிறைந்தவர்களாயிருந்தபோதிலும் அந்த நிச்சயத்தை நாம் அடையக்கூடும். யாராருடைய இருதயங்கள் பெருமையினாலும் தன்னயத்தினாலும் பொறாமையினாலும் நிறைந்திருக்கின்றனவோ, யாரார் துர் ஆசை இச்சைகளும் பொல்லாத செய்கைகளுமுடையவர்களாயிருக்கிறார்களோ, அவர்களுக்கெல்லாம் தேவன் நிச்சயமாகவே தம்முடைய ஆசீர்வாதங்களை அளிக்கமாட்டார். ஆனால் நாம் இவைகளையெல்லாம் வெறுத்துத் தள்ளிப்போடவும், அக்கிரமங்களினின்று நம்மைச் சுத்திகரிக்கும் தேவ கிருபையை நாம் அடையவும் விரும்பினால் நாம் அதைப் பெற்றுக்கொள்ளலாம்.

அது எப்படி? எல்லாருக்கும் கர்த்தராயிருக்கிற இரக்கம் நிறைந்த தேவன் சுத்த கிருபையினாலே அதற்கு ஒரு வழி யுண்டாக்கி யிருக்கிறார். தேவனால் அனுப்பப்பட்டு இவ்வுலகத்திற்கு வந்தவரும், இவ்வுலகத்திலுள்ள எல்லா மனுஷருடைய பாவச்சுமைகளையும் சுமந்துகொண்டவருமாகிய கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் அளவற்ற கிருபையினால்தான். அவர் நல்லவராயிருந்ததினாலே சிலர் அவரைப் பகைத்துச் சிலுவையிலறைந்து கொன்றுபோட்டார்கள். ஆனால் அவர் தம்முடைய பாடுகள் மூலமாக நமக்காக அளவில்லாத புண்ணியத்தைச் சம்பாதித்தார். அவர் மரித்து உயிர்த்தெழுந்த பின்பு தம்முடைய சீஷர்களுக்கு இதை விளங்கப்பண்ணினார். அவர்பேரில் பக்தி விசுவாசமாயிருக்கிற எல்லாருக்கும் இந்தக் கிருபையை அருளுகிறார். முதலாவது, நாம் பாவிகளென்று உணர்ந்தறியவேண்டும். பிறகு, நாம் செய்த பாவங்களுக்காக நமது இருதயத்தில் உண்மையாய் மனஸ்தாபப்படுகிறவர்களாய் அவைகளை தேவனுக்கு முன்பாக ஒப்புக்கொண்டு அறிக்கையிட்டு நம்முடைய பாவங்களை மன்னிக்கும்படியாக அவரை மன்றாடவேண்டும். நாம் அப்படிச் செய்வோமானால் அவர் நம்முடைய பாவங்களை மன்னித்து, சொல்லிமுடியாத சமாதானத்தினாலும் சந்தோஷத்தினாலும் நம்முடைய இருதயங்களை நிறப்புவார்.

அப்புறம் பரலோக இராட்சியத்தை நாம் அடையும்படியாக அவருடைய சித்தத்தின்படி நடந்து அவர் பேரில் பக்தியாயிருக்கவேண்டுமென்பது பிரத்தியட்சமாயிருக்கிறது. இது நமது மேல்விழுந்த கடமையாயிருக்கிறது. நாம் இதைச் செய்யாவிட்டால் பரம ஆசீர்வாதங்களை அடையலாமென்று நாம் ஒருபோதும் நினைக்கக்கூடாது. ஆகையால் அந்த ஆசீர்வாதமும் பாக்கியமுமான நிலைமைக்குள் பிரவேசிக்க நாம் மெய்யாகவே விரும்பினால் அவர்பேரில் பக்தியாயிருப்போமாக.

ஆயிரமாயிரமான மகாத்துமாக்கள் இப்படிச் செய்து, இயேசுவின்பேரில் பக்தி விசுவாசம் வைப்பதானது பாவத்தினின்று தங்களை விடுதலையாக்குகிறதென்பதைக் கண்டு பிடித்திருக்கிறார்கள். தேவனுடைய கிருபை தங்களுக்கு அருளப்பட்டிருக்கிறதென்று அறிந்து அவர்கள் சமாதானமும் பாக்கியமுமுடையவர்களாயிருக்கிறார்கள். அந்தக் கிருபையினால்தான் நாம் இப்பூலோகத்தில் இச்சீவியத்தின் பாதையில் செல்லவேண்டும். இயேசு இப்பூலோகத்திற்குத் திரும்பி வரும்போது அவரைச் சந்திக்கும்படியாக அந்தக் கிருபையினால் தான் நாம் நம்மை ஆயத்தப்படுத்தவேண்டும். இதை வாசிக்கும் என் நண்பனே, நாம் அந்தப் புத்தியீனமான குடியானவனைப்போலிராமல் நமக்குக் காலமும் நல்ல சமயமும் இருக்கும்போதே அந்தப் பாக்கியமான மறுமைக்கும் வருஞ் சீவனுக்கும் வேண்டிய எல்லா ஆயத்தங்களையும் செய்துகொள்வோமாக.

அந்த மெய்யான வழியை எப்படிக் கண்டு பிடிப்பதென்பதைப்பற்றி இன்னும் அதிகமாய் அறிய விரும்புகிறவர்களிடமிருந்து கேட்கவும் அவர்களுக்குப் பதில் சொல்லவும் எனக்கு அதிக விருப்பமுண்டு. இதின் பத்திராதிபருக்கு எழுதிக் கேட்டுக்கொள்ளலாம்.

சமாசாரக் குறிப்புகள்

(NEWS AND NOTES)

ராணுவ அணி வகுப்புகள்.—

பாட்டரி.—ஆறு தாக்கும் பீரங்கிகளும், அநேக சாமக்கிரியைகள் சுமக்கும் வண்டிகளும், குதிரைகளும், சாதாரண மனிதர்களும் சேர்ந்துள்ளது.

ரெஜிமெண்ட்.—இது நான்கு குதிரையாட் படைகளும் ஆறு பீரங்கிப் படைகளும், நான்கு காலாட் படைகளும் சேர்ந்துள்ளது.

பிரிகேட்—இது நான்கு காலாட் படைகளும், பன்னிரண்டு குதிரைப்படைகளும், ஆறு பீரங்கிப் படைகளுமுள்ளது. இதற்கு பிரேகடியர் ஜெனரல் என்பவர் தான் தளகர்த்தன்.

துருப்பு.—இது குதிரைப்படையில் பாதி. இதற்கு ஒரு காப்டன், இரண்டு லப்டினன்ட்களும், ஐம்பத்தாறு குதிரை ஏறும் கமிஷனில்லாத ஆபீசர்களும் 20 காலாட்களும் உண்டு.

பட்டேலியன்.—இது 1096 காலாட்களுள்ள படை. இது இரண்டு வகுப்பாகச் செல்லும். ஒவ்வொரு வகுப்புக்கும் ஒரு மேஜர் உண்டு. பட்டேலியன் முழுவதற்கும் ஒரு லப்டினன்ட் கர்னல் மேலான அதிகாரி.

டிவிஷன்.—இதில் அநேக ராணுவ ஊழிய வகுப்பார் உண்டு. இதற்கு ஒரு பெரும்படை (army) என்றும் சொல்லலாம். இதில் பதினாயிரம் ஆட்களும் 300 ஆபீசர்களும் இருப்பார்கள். இதற்குத் தலைவர் எதையும் சுயாதீனமாய்ச் செய்யக்கூடியவர்.

உலகத்திலுள்ள மகா பெரிய ரெயில்வே ஸ்டேஷன்.—இது லண்டன் மகா நகரத்தில் பூமியின் கீழுள்ள எம்பாங்கு மென்ட்ஸ்டேஷன். இந்த ஸ்டேஷன் வழியாய் ஒரு நாளைக்கு 2139 இருப்புத்தொடர் வண்டிகள் ஓடுகின்றன. ஒவ்வொரு வண்டியும் ஸ்டேஷனில் நிற்கின்றது.

சகாய் அரிசி மண்டி.—சென்னை முனிசிபாலிடியார் ஏழைகளின் கஷ்டத்தையும் பரபரப்பையும் அறிந்து இவ்வருஷ முடிவுமட்டும் (official year) அரிசிமண்டி ஏற்பாடு செய்திருக்கின்றனர். கடந்த 5 மாதங்களில் 1000 ரூபாய் நஷ்டமாயினும் மன நோகாது ஏழைகட்கு உதவிபுரியும்பொருட்டு ரூபாய்க்கு 3½ படி விகிதம் விற்பனை செய்யத் தீர்மானித்திருக்கிறார்கள். இதுவும் ஒரு பெரிய தர்ம சகாயம்.

வாயுவேக மனோவேகப் படகு.—மெசொபொத்தேமியாவில் யுத்த காலத்தில் ஐபிராத், தைகிரீஸ் ஆறுகளின் மீது ஒரு இடமிருந்து வேறொரு இடம் ராணுவ உத்தியோகஸ்தர் சமாச்சாரக்காரர் வெகு துரிதமாய்ப் போக்குவரவு செய்வதற்கு நூதனமாய்க் கண்டு பிடித்த படவுகள் உண்டு. அவைகள் 25 அடி நீளமும் 15 அடி அகலமும் உள்ளவைகள். ஏறக்குறைய ஒரு டன் பளுவு சுமந்தேகக்கூடும். தண்ணீர்மீது பட்டதும் படாதது மாய் நீர்க் காகங்கள் தண்ணீர்மீது பறந்து செல்வது போல் ஒரு மணி நேரத்திற்கு 46 மைல் தூரம் ஓடுகின்றது. இப்படகிற்கு ஹைட்ரோப்ளிசியர் என்று பெயர்.

சமுத்திர அபாய வெடிமருந்து குண்டு.—இதற்கு சப்மரீன் வெடி சுரங்கம் என்று பெயர். மனுஷ சங்காரனின் புத்திக்சோச்சர சிருஷ்டிகளில் இது ஒன்று. யுத்த காலத்தில் சமுத்திர யுத்தத்தில் பிரயோகமான இப்பயங்கர வெடி மருந்து குண்டுக்கு சமுத்திர பாம் (bomb) என்று சொல்லலாம். உருண்டை வடிவமுள்ள இக்கருவி தண்ணீருக்குள் நங்கூரம் போடப்பட்டு மிதக்கின்றது. இக்குண்டுமீது இணைவாய் இசைந்திருக்கும் திராவகத்தையுடைய ஈயக்குண்டுகள் திடீரெனக் கப்பல்களைத் தாக்கும்பொழுது, உடைந்து, பயங்கரமான சப்தத்தோடு கூடிய நாசமோசத்தை விளைவிக்கின்றது.

மனுஷரின் ரோம வியாபாரம்.—மனுஷர்களின் சிரசிலுள்ள ரோமத்தைக்கொண்டு செய்யும் வியாபாரம் சாதாரணமான தன்று. இத்தாலியரே வியாபாரஞ் செய்பவர். ரோமம் சேகரம் ஆகும் இடங்கள் இத்தாலியா, தலமாட்டியா, சுவிட்சர்லாந்து என்னும் தேசங்களே. இந்நாடுகளிலுள்ள குடியானவ ஸ்திரீகள் தங்கள் சிரசிலுள்ள பின்பாக ரோமங்களைக் காலாகாலங்களில் கத்திரித்து மேற்படி வியாபாரிகளுக்குக் கொடுப்பதினால் தங்கள் ஜீவனத்தை அதிகரித்துக் கொள்ளுகிறார்கள். வருஷத்தில் இரண்டு தடவை ஒரு ஸ்திரீ இலேசாய்த் தன் ரோமத்தை வியாபாரிக்குக் கொடுக்கிறாள்.

நிகழ்கால சத்தியம்

வேத சன்மார்க்க சுகாதார விஷயங்களில் தற்கால அறிவுக்கொத்தபடி மனிதர் அபிவிருத்தியடைவதற்கென்று பிரசுரமாகும் ஓர் பத்திரிகை.

மதராஸ் ஏப்பிரல்௴ 1919.

இப்பத்திரிகை, பெங்களூரிலிருக்கும், எஸ். டி. ஏ. பப்ளிஷங்ஹவுஸ்காக, பட்டணத்தில் வெப்பேரி என்னுமிடத்தில் உள்ள அல்பீனியன் அச்சாபீசில் அச்சடிக்கப்பட்டு வருகிறது.

பத்திராதிபர் பாஸ்றர், ஜி. ஜி. லோளரி.

உதவி ,, ,, ஈ. டி. தாமஸ்.

தனிப்பிரதி ஒன்றுக் - ...	அணா 2
வருஷ சந்தா, தபாற்கூலி உள்பட	,, 10

இந்தப் பத்திரிகையை வாங்க விரும்புகிறவர்கள் இன்டர் நாஷனல் டிராக்ட் சொசைட்டி, 60, லோயர் கமண்டைன் ரோடு, ரங்கூன் என்று எழுதிப் பெற்றுக்கொள்ளலாம்.

விலையேறப்பெற்ற வாள்.—கிழக்கு தேசத்து முடி மன்னர் வாசம்பண்ணும் அரண்மனைகளிலும் மேற்கு தேசத்து ராஜ மாளிகைகளிலும் உள்ள பொக்கிஷசாலைகளில் அநேக விலையேறப்பெற்ற வாட்களிருக்கின்றன. அவைகளில் ருஷியா, துருக்கி, சீயம், பர்சியா, இந்தியா என்னும் தேசங்களிலுள்ள ராஜ மாளிகைகளில் இருக்கும் வாட்களில் இந்தியா தேசத்து பரோடா கேய்குவார் அவர்களுடைய ஆதீனத்திலுள்ள வாளொன்றே மகா மதிப்புள்ளது. அதன் பிடியும் அதை மாட்டியுள்ள வாறும் வைரக்கற்கள், இரத்தினக் கற்கள், நீலக்கற்கள், கோமேதகக்கற்கள் முதலியவைகளினால் பதிப்பிக்கப்பட்டிருக்கின்றன. அந்த வாளின் கிரயம் இரண்டு லட்சம் பவுன் பெறுமாம்.

திமிங்கல வேட்டை.—பயங்கரமான சமுத்திர ஜந்துக்களில் திமிங்கலம் ஒன்று. மீன் வேட்டை ஆடுவோர் திமிங்கலவேட்டை விசேஷித்ததென்பர். தென் ஆப்பிரிக்காவில் வருஷத்தில் இரண்டு தடவை திமிங்கல வேட்டை ஆடுகிறார்கள். அச்சமுத்திர மிருகம் சாதாரணமாய் 25 அடி நீள முள்ளது. இங்கிலாந்தில் ஸ்கார்பரோ என்னுமிடத்தில் அகப்பட்ட திமிங்கலம் 49 அடி நீளமுள்ளதாயிருந்தது. உலகத்தில் இதுமட்டும் பிடித்த மீன்களில் மகாப்பெரிய திமிங்கலம் ஆஸ்டெண்டு என்னும் துறைமுக ஸ்தானத்தில் பிடிபட்டது. அதன் நீளம் 100 அடியாம். அதை நிறுத்துப்பார்த்ததில் 249 டன் நிறையுள்ளதெனக் கண்டனர். அதினின்று உருக்கி எடுத்த எண்ணெய் நாலாயிரம் காலனாம். இவ்வெண்ணெய் மெழுகுவர்த்தி செய்வதற்கு ஏற்றதாம்.

ராஜ துக்கம்.—நமது மகா சக்ரவர்த்தி மாட்சிமை தங்கிய ஜியார்ஜி அரசரின் கடைசி புதல்வன் பிரின்ஸ் ஜான் என்பவர் சிலகாலம் பலட்சய ஸ்திதியிலிருந்து ஜனவரி மாதம் 18-தேதி கர்த்தருக்குள் நித்திரை யடைந்தனர். இது ராஜ துக்கமும் பிரஜைகளின் துக்கமுமாயிருக்கிறது. எல்லாவற்றையும் நன்மைக் கேதுவாக நடத்துகிற கர்த்தர் நமது சக்கரவர்த்தியையும், மகாராணியையும், ராஜ குடும்பத்தையும் ஆறுதல் படுத்துவாராக.

பஞ்சு இயந்திரச்சாலைக் கலகம்.—சில மாதங்களுக்கு முன் பிரம்பூர் பஞ்சு சாலையில் வேலை செய்யும் ஆட்களுக்குள் பெரும் கலகம் உண்டாகி இயந்திரவேலைத் தடைப்பட்டு விற்பனைக்கு வெளியாகக்கூடிய சரக்குகள் குறைந்துபோனதினால் சென்னைப் பட்டணத்தில் பெரும் வஸ்திர கஷ்டம் உண்டானது. அக்கலகம் நீங்கினதும் நற்காலம் வந்ததென சந்தோஷிக்கும் சமயத்தில் பம்பாய் மகா நகரத்திலுள்ள பல பஞ்சு இயந்திர சாலைகள், வேலைசெய்யும் ஆயிரக்கணக்கான ஜனங்களுக்குள் உண்டாகிய கலகத்தினால் வேலை நின்றுபோக துணிமணி கஷ்டம் முன்னிலும் அதிகப்பட்டிருக்கிறது. இக்கலகங்களும் நீங்கி வஸ்திரத்திற்கு க்ஷேம காலம் எப்பொழுதுதான் பிறக்குமோ.

9 - AUG 1920

நிகழ்கால சத்தியம்.

Vol. VIII. மதராஸ்:—ஜூலை௴, 1919. No. 3.

பத்திராதிபரின் அறிவிப்பு

இந்தப் பத்திரிகையை வாசிக்கும் என் நண்பரே! இந்தப் பத்திரிகையின் பின் பக்கத்தில் வரிசையாக எழுதப்பட்டிருக்கும் சில சிறு புஸ்தகங்களைச் சற்று கவனியுங்கள். இச்சிறு புஸ்தகங்களில் அநேக முக்கியமான காரியங்கள் அடங்கியிருக்கிறது. உங்களுக்குப் பிரியமானால் தாங்கள் அதை அனுப்புவோம். நாங்கள் பிரசுரிக்கும் புஸ்தகங்களின் பேரும் விலையும் அடங்கிய டாப்பை (Catalogue) ஒரு கார்டு எழுதிப் பெற்றுக் கொள்ளலாம்.

நமது பத்திரிகையை வாசிப்பவர்கள், பிரசுரிக்கும் கம்பெனியின் பேர் மாற்றப்பட்டிருப்பதை கவனித்திருக்கலாம். அநேக வருஷமாக இன்டர் நாஷனல் டிராக்ட் சொசைட்டி (International Tract Society) இந்தப் பத்திரிகையையும் இன்னும் இதுபோன்ற புஸ்தகங்களையும் பிரசுரித்தார்கள். நாம் இந்த சொசைட்டியை இன்டர் நாஷனல் டிராக்ட் சொசைட்டி என்று அழைத்தபோதிலும் புஸ்தகங்களெல்லாம் Seventh-day adventist Publishing House மூலமாய்தான் வெளியாக்கப்பட்டது. அநேக வருஷமாக நாம் இன்டர் நாஷனல் டிராக்ட்சொசைட்டி என்னும் பேரை வைத்து இவைகளைப் பிரசுரித்தோம். இது முதல் அந்தப் பேரை எடுத்துவிட்டு Seventh-day adventist Publishing House என்று வைத்துக்கொள்வோம்.

International Bible Students Society என்னும் ஒரு சொசைட்டியார் இந்தியாவில் வேலை செய்கிறார்கள். அவர்களுடைய பெயரும் நமது பெயரும் கொஞ்சம் ஒத்திருப்பதினால் அவர்கள் அச்சிடும் புஸ்தகங்களை நாம் பிரசுரிக்கிறோமென்று சிலர் தப்பாய் எண்ண ஏதுவுண்டு. அந்த தப்பான எண்ணங்களை நிவிர்த்தி செய்வதற்கென்றே நாம் நம்முடைய பெயரை மாற்றவேண்டியதாயிற்று.

இந்தப் பத்திரிகையை வாசிக்கும் அநேகருக்கு Seventh-day adventist என்பவர்களைப்பற்றி அவ்வளவு தெரியாது. நாங்கள் யாரென்றும் நாங்கள் என்ன செய்கிறோமென்றும் நீங்கள் அறிய அதிக ஆசைப்படலாம். "ஏழாம் நாள் வருகைக்காரர் யார்?" என்னும் பத்திரிகையைப் பார்க்க.

இந்தப் பத்திரிகையை வாசித்த பிற்பாடு அதை உங்கள் சிநேகிதர்களுக்கு வாசிக்கக் கொடுங்கள்.

இப்பத்திரிகை எங்கும் பரம்ப உதவி செய்யுங்கள்.

இந்தப் பத்திரிகையை அநேகர் வாசிக்கப் பிரியப்படுவார்களென்று நம்புகிறேன். இந்தப் பத்திரிகையை எங்கும் பரம்பச்செய்ய அநேகர் உதவி செய்வார்களென்றும் நம்புகிறேன்.

இப்பத்திரிகை தனிப்பிரதி ஒன்றுக்கு விலை	1 அணா.
வருஷ சந்தா தபாற்கூலி உட்பட	5 அணா.

ஒரு வருஷத்திற்கு 4 பிரதிகள் வாங்குபவர்கள் ரூ. 1-4-0 அனுப்பினால் அவர்களுக்கு ஒரு வருஷத்திற்கு பத்திரிகை இனமாக அனுப்பப்படும்.

அதாவது நாலு சந்தாக்காரர்களைச் சேர்த்து அவர்களிடமிருந்து பணம் வசூல் செய்து அனுப்புகிறவர்களுக்கு ஒரு வருஷத்திற்கு இந்தப் பத்திரிகை இனமாக அனுப்பப்படும். இதற்கென்று நீங்கள் உங்கள் சிநேகிதரோடு சில நிமிஷம் மாத்திரம் செலவிட்டால் போதும்.

பத்திராதிபர்.

இப்பத்திரிகையைப் பிரசுரிப்பதின் நோக்கம்

ஒருநாள் ஒரு மனிதன் என்னைப்பார்த்து ஐயா! நீர் இந்தப் பத்திரிகையினால் அதிக பணம் சம்பாதிக்கிறீர், நான் எங்கே போனாலும் உம்முடைய கோல்போர்ட்டர்கள் இந்தப் பத்திரிகைகளையும் புஸ்தகங்களையும் எங்கும் விற்கிறதை நான் பார்க்கிறேன் என்று சொன்னான். நாங்கள் பணம் சம்பாதிக்கிறதற்காக இந்தப் பத்திரிகையை பிரசுரிக்கிறதில்லையென்று சொன்னேன்.

பணம் சம்பாதிக்க நாம் இதைப் பிரசுரிக்கிறதில்லையென்பது உண்மைதான். இந்தக் காலத்துக்கு வேண்டிய முக்கிய சத்தியங்களை நம் தமிழ் நாட்டு ஜனங்களுக்கு தெரிவிக்கவேண்டுமென்றே நாங்கள் இதைப் பிரசுரிக்கிறோம். முற்காலத்தில் தேவன் ஒவ்வொரு காலத்திற்கும் அந்தந்த காலத்திற்கு ஏற்றபடி ஒரு விசேஷித்த தூதைக் கொடுத்திருந்தார். முற்கால சரித்திரங்களை வாசித்த அநேகருக்கு மனுஷ ஜாதிக்கு நேரிட்ட காரியங்களெல்லாம் தேவன் மூலமாய் நேரிட்டதென்று நன்றாய்த் தெரியும். மனிதன் சாத்தானுடைய வஞ்சகங்களுக்கு எச்சரிக்கையாயிருந்து வரப்போகிற காரியத்திற்காக தங்களை ஆயத்தப்படுத்தவும் தேவன் எவ்வளவு பிரயாசைப் படுகிறார். ஆதி முதலாய் தேவன் இப்படிச் செய்திருக்கிறார்.

தேவன் மனிதனைச் சிருஷ்டித்து ஏதேனென்னும் பூங்காவனத்தில் அவனை வைத்தவுடனே அவனுக்கு ஒரு விசேஷித்த கட்டளை கொடுத்தார். அதாவது "தோட்டத்திலிருக்கிற அந்த மரத்தின் கனியைப் புசிக்கவேண்டாம்" என்பதே. அவர் அந்தக் கட்டளை கொடுத்த பின்பு அதைப் புசித்தால் அவர்களுக்கு என்ன நேரிடுமென்றும் எச்சரித்தார். அவர்கள் அதைப் புசித்தால் சாவார்கள். அவர்கள் அதைப் புசிக்காவிட்டால் உயிரோடிருப்பார்கள். ஆனால் அவர்கள் அந்தக் கட்டளையைக் கைக்கொள்ளாததினால் பாவத்தில் விழுந்தார்கள். அந்தக் கட்டளையை மீறினதினால் உலகம் இந்நாள்மட்டும் வேதனைப் பட்டுக்கொண்டிருக்கிறது.

இதற்குப் பதினாறு நூற்றாண்டுகளுக்குப் பின்பு உலகம் அக்கிரமத்தினால் கறைபட்டுப் போனபடியால் தேவன் பூமியின் குடிகளை ஜலப்பிரளயத்தினால் நிர்மூலமாக்கத் தீர்மானித்தார். ஆனால் அவர் அதைச் செய்யுமுன்னதாக ஜனங்கள் தப்பிப் பிழைப்பதற்காக ஒரு எச்சரிப்பின் தூதை அனுப்பினார். நூற்றிருபது வருஷமாக ஏனோக்கும், மெத்துசலாக்கும், நோவாவும் உலகத்திற்கு வரப்போகிற அழிவைக் குறித்து ஜனங்களுக்குப் பிரசங்கித்தார்கள்.

இதற்கு அநேக நூற்றாண்டுகளுக்குப் பிற்பாடு பலஸ்தீனா நாட்டிலிருந்த ஜனங்களுக்கு தேவன் தமது உண்மையுள்ள ஊழியக்காரனாகிய ஆபிரகாமின் மூலமாய் ஒரு விசேஷித்த தூதை அனுப்பினார். எமோரியரில் அந்த தூதை ஏற்றுக்கொண்டவர்கள் இரட்சிக்கப்பட்டார்கள். ஏற்றுக்கொள்ளாதவர்களோ அழிந்துபோனார்கள். ஆபிரகாமின் காலத்தில் தேவன் சோதோம், கொமோரா என்னும் பட்டணங்களில் வசித்தவர்களுக்கு ஒரு விசேஷித்த தூதை அனுப்பினார். அதாவது "நான் இந்தப் பட்டணங்களை அழிப்பேன், உன் ஜீவன் தப்ப ஓடிப்போ" என்பதே.

"நாம் புத்திர சுவிகாரத்தை யடையும்படி நியாயப்பிரமாணத்திற்குக் கீழ்ப்பட்டவர்களை மீட்டுக்கொள்ளத் தக்கதாக காலம் நிறைவேறினபோது ஸ்திரீயினிடத்தில் பிறந்தவரும் நியாயப்பிரமாணத்திற்குக் கீழானவருமாகிய தம்முடைய குமாரனை தேவன் அனுப்பினார்." வனாந்தரத்தில் கூப்பிடுகிறவனுடைய சத்தமாயிருக்கிற யோவான் ஸ்நானகன் கிறிஸ்துவின் முதல் வருகையாகிய இந்தத் தூதைப் பிரசங்கித்தான். "கர்த்தருக்கு வழியை ஆயத்தப்படுத்துங்கள், அவருக்கு பாதையைச் செவ்வை பண்ணுங்கள்" என்று கூறினான்.

மேலே எடுத்துக்காட்டிய திருஷ்டாந்தங்களினால் தேவன் எல்லாக் காலத்திலும் ஜனங்களுக்கு அந்தந்த காலத்திற்குத்தகுந்த தூதுகளை அனுப்பினாரென்று நாம் அறிந்துகொள்ளுகிறோம்.

கடந்த காலங்களில் தேவன் கிருபையாய் ஜனங்களுக்கு எச்சரிப்பின் தூதை அனுப்பி வரப்போகிற அழிவிலிருந்து தப்பித்துக்கொள்ளும்படியான வழியை அவர்களுக்குக் காட்டியிருப்பாரானால் அவிசுவாசத்தினாலும், துன்பங்களினாலும், மார்க்க பேதங்களினாலும் இருளடைந்த இந்த உலகத்திலிருக்கும் ஜனங்கள் நேரான வழியில் நடக்கும்படியாக அவர்களுக்கு ஒரு தூதைக் கட்டளையிடுவாரென்பது அதிக நிட்சயமல்லவா? அவர் அப்படியே செய்வார். அவர் அப்படியே செய்து மிருக்கிறார். அவர் நேற்றும் இன்றும் என்றும் மாறாதவராயிருக்கிறார். உலகத்தின் ஜனங்களுக்கு தேவன் ஒரு தூதைக் கொடுத்திருக்கிறார். இயேசுக்கிறிஸ்து சீக்கிரம் வருவாரென்பதும் அதை எங்கும் பிரசித்தப்படுத்துங்கள் என்பதுமே அந்தத் தூது. இந்தத் தூதை பிரசித்தப் படுத்தும்படியாகத்தான் நாங்கள் இந்தப் பத்திரிகைகளையும் புஸ்தகங்களையும் பிரசுரம் செய்கிறோம். இந்த வேலையை நாங்கள் 80 வருஷமாக செய்துகொண்டு வருகிறோம். இன்னும் சமாதானப் பிரபு வருமட்டும் நாங்கள் இப்படியே செய்வோம். முன் சொல்லப்பட்டபடி நாங்கள் பண லாபத்தை முன்னிட்டாவது அல்லது ஆட்களைச் சேர்க்கவேண்டுமென்றாவது அல்லது ஒரு புது கொள்கையை ஸ்தாபித்து குழப்பத்தை உண்டாக்கவேண்டுமென்றாவது நாங்கள் இதைச் செய்யவில்லை. இது இந்த சந்ததிக்கு இந்த காலத்திற்கென்று கொடுக்கப்பட்ட தூதாயிருக்கிறதினால் நாங்கள் இதைப் பிரசித்தம் பண்ண முயற்சி செய்கிறோம். இதை ஏற்றுக்கொள்ளுகிறவர்களை இரட்சிக்க இதற்குத் திராணி யுண்டு. இது நியாயத்தீர்ப்பின் நாளில் இதை ஏற்றுக்கொள்ளாதவர்களுக்கு விரோதமாக ஒரு சாட்சியாயிருக்கும்.

இந்தத் தூதுக்கு ஆயிரக்கணக்கான பேரை ஆசீர்வதிக்கவும் இரட்சிக்கவும் திராணி உண்டென்பதை நாங்கள் அறிந்திருக்கிறதினால் "கர்த்தர் நல்லவரென்பதை ருசித்துப் பாருங்கள்" என்று உங்களுக்குப் புத்தி சொல்லுகிறோம்.

ஜி. ஜி. லோரி.

சத்திய வேதத்தில் சொல்லிய ஞானஸ்நானம்.

(A BIBLE READING ON BAPTISM)

ஞானஸ்நானமானது சுவிசேஷம் சொல்லும் கிறிஸ்தவ பிரமாணத்தின் ஓர் முக்கியமான ஏற்பாடாயிருக்கிறது. கிறிஸ்துவுக்கு முன்னோடியான யோவானால் அது முதலில் பிரசங்கிக்கப்பட்டது. புதிய ஏற்பாடாகிய இந்த ஞானஸ்நானத்தைக்குறித்து அவன் பிரசங்கித்து ஞானஸ்நானங்கொடுத்து வந்தமையால் அவன் ஸ்நானகனென்று அழைக்கப்பட்டான். வரப்போகிற மேசியாவைச் சந்தோஷத்தோடு ஏற்றுக்கொள்பவர்கள் மனந்திரும்பி தங்கள் பாவங்களை அறிக்கையிட்டு ஞானஸ்நானம் பெறவேண்டியவர்களாயிருந்தார்கள்.

மத். 3: 1-6. "அந்நாட்களில் யோவான் யூதேயாவின் வனாந்தரத்தில் வந்து: மனந்திரும்புங்கள், பரலோக ராஜ்யம் சமீபித்திருக்கிறது என்று பிரசங்கம் பண்ணினான். கர்த்தருக்கு வழியை ஆயத்தப்படுத்துங்கள்; அவருக்குப் பாதைகளைச் செவ்வைப் பண்ணுங்கள் என்று வனாந்தரத்திலே கூப்பிடுகிறவனுடைய சத்தம் உண்டென்று, ஏசாயா தீர்க்கதரிசியினால் சொல்லப்பட்டவன் இவனே...... .....அப்பொழுது, எருசலேம் நகரத்தாரும் யூதேயா தேசத்தார் அனைவரும், யோர்தானுக்கு அடுத்த சுற்றுப்புறத்தார் யாவரும் அவனிடத்திற்குப்போய், தங்கள் பாவங்களை அறிக்கையிட்டு, யோர்தான் நதியில் அவனால் ஞானஸ்நானம் பெற்றார்கள்."

கர்த்தருடைய வழியைச் செவ்வைப்படுத்துவதற்கு வேண்டியவைகளில் ஞானஸ்நானமும் ஒன்று. நாம் ஞானஸ்நானத்தைப் புறக்கணித்தாலும், அசட்டை செய்தாலும், கர்த்தரின் வழியைக் கோணலாக்குகிறவர்களும், கோணலான வழிகளில் நடக்கிறவர்களுமாயிருப்போமல்லவா?

யோவானால் ஞானஸ்நானம் பெற்றவர்கள் கிறிஸ்துவை ஏற்றுக்கொள்ள ஆயத்தமாயும், அதை அசட்டை பண்ணினவர்கள் அவரை புறக்கணித்தவர்களுமாயிருந்தார்கள்.

"யோவானுடைய உபதேசத்தைக் கேட்ட ஆயக்காரர் முதலான சகல ஜனங்களும் அவனாலே ஞானஸ்நானம் பெற்று, தேவன் நீதிபரர் என்று அறிக்கையிட்டார்கள். பரிசேயரும் நியாய சாஸ்திரிகளுமோ அவனாலே ஞானஸ்நானம் பெறாமல் தங்களுக்குக் கேடுண்டாக தேவனுடைய ஆலோசனையைத் தள்ளிவிட்டார்கள்." லூக். 7: 29, 30.

அவ்விதமாய் பரிசேயரைப்போலவும் நியாய சாஸ்திரிகளைப்போலவும் நாம் இராதபடிக்கு எச்சரிக்கையாயிருக்கவேண்டும். இயேசுவோ, எல்லா நீதியையும் நிறைவேற்ற ஞானஸ்நானம் அவசியமென்று கண்டார்.

"அப்பொழுது யோவானால் ஞானஸ்நானம் பெறுவதற்கு இயேசு கலிலேயாவை விட்டு யோர்தானுக்கருகே அவனிடத்தில் வந்தார். யோவான் அவருக்குத் தடை செய்து: நான் உம்மாலே ஞானஸ்நானம் பெற வேண்டியதாயிருக்க, நீர் என்னிடத்தில் வரலாமா என்றான். இயேசு அவனுக்குப் பிரதியுத்தரமாக: இப்பொழுது இடங்கொடு, இப்படி எல்லா நீதியையும் நிறைவேற்றுவது நமக்கு ஏற்றதாயிருக்கிறது என்றார்." மத்தேயு 3: 13-15.

இயேசு கலிலேயா நாட்டின் நாசரேத்திலிருந்து அறுபது மைல் தூரத்திலிருந்த யூதேயாவின் வனாந்தரங்களிலுள்ள யோர்தானுக்கு நடந்து வந்து ஞானஸ்நானம் பெற்றார். இயேசுவின் முன்மாதிரியிருக்க, தங்களுக்கு

அனுகூலமான சமயம் கிடைக்கவில்லையென்று ஞானஸ்நானம் பெறாமலிருக்கலாமா?

யோவான் ஞானஸ்நானங் கொடுத்தது மாத்திரமல்லாமல் இயேசுவும் இந்த நியமனத்தைக் கையாடி வந்தார். அவருக்குச் சீஷரானவர்களெல்லாரும் அவருடைய அதிகாரத்தால் ஞானஸ்நானம் பெற்று வந்தார்கள்.

"இவைகளுக்குப் பின்பு, இயேசுவும் அவருடைய சீஷரும் யூதேயா தேசத்திற்கு வந்தார்கள்; அங்கே அவர் அவர்களோடே சஞ்சரித்து, ஞானஸ்நானங் கொடுத்துவந்தார்." யோ. 3: 22.

"யோவானைப்பார்க்கிலும் இயேசு அநேகம் பேரைச் சீஷராக்கி ஞானஸ்நானங் கொடுக்கிறாரென்று பரிசேயர் கேள்விப்பட்டதாகக் கர்த்தர் அறிந்தபோது, யூதேயாவைவிட்டு மறுபடியும் கலிலேயாவுக்குப் போனார். இயேசு தாமே ஞானஸ்நானங் கொடுக்கவில்லை, அவருடைய சீஷர்கள் கொடுத்தார்கள்." யோ. 4: 1-3.

"ஆகையால் நீங்கள் புறப்பட்டுப்போய், சகல சாதிகளையும் சீஷராக்கி, பிதா குமாரன் பரிசுத்த ஆவியின் நாமத்திலே அவர்களுக்கு ஞானஸ்நானங்கொடுத்து, நான் உங்களுக்குக் கட்டளையிட்ட யாவையும் அவர்கள் கைக்கொள்ளும்படி அவர்களுக்கு உபதேசம் பண்ணுங்கள். இதோ உலகத்தின் முடிவு பரியந்தம் சகல நாட்களிலும் நான் உங்களுடனேகூட இருக்கிறேன்." இந்த பெரிய கட்டளையில் ஞானஸ்நானம் அடங்கியிருக்கிறது.

"உலகத்தின் முடிவு பரியந்தம்" சுவிசேஷம் பிரசங்கிக்கப்படுகிறவர்களால் சீஷர்கள் ஞானஸ்நானம் பெற வேண்டும்.

இந்தக் கட்டளைக்குக் கீழ்ப்படிந்து அப்போஸ்தலர்களும் இதை ஏற்படுத்திக் கையாடி வந்தார்கள்.

"பேதுரு அவர்களை நோக்கி: நீங்கள் மனந்திரும்பி, ஒவ்வொருவரும் பாவ மன்னிப்புக்கென்று இயேசு கிறிஸ்துவின் நாமத்தில் ஞானஸ்நானம் பெற்றுக் கொள்ளுங்கள், அப்பொழுது பரிசுத்த ஆவியின் வரத்தைப் பெறுவீர்கள்." அப். 2: 38.

பெந்தெகோஸ்தே நாளில் உன்னதத்திலிருந்து பரிசுத்த ஆவியினால் ஞானஸ்நானமும் வல்லமையும் பெற்ற சீஷர்கள் இத்தெய்வீக உற்சாகத்தினால் ஞானஸ்நானத்தின் அவசியத்தையும் நிச்சயத்தையும் கண்டார்கள்.

சில நாட்களுக்குப்பின் கர்த்தர் கொர்நேலியுவை நோக்கி: "நீ யோப்பா பட்டணத்துக்கு மனுஷரை அனுப்பி, பேதுரு என்று மறுபேர் கொண்ட சீமோனை அழைப்பி.........நீ செய்யவேண்டியதை அவன் உனக்குச் சொல்லுவான்" என்றார். அப். 10: 5, 6.

பேதுரு, கொர்நேலியுவும் அவன் சிநேகிதரும் கூடியிருக்கிறதைக் கண்டான். அப்பொழுது கொர்நேலியு பேதுருவை நோக்கி தேவன் உமக்குச் சொன்னவைகளையெல்லாம் நாங்கள் கேட்கச்சொல்லும் எனவே, பேதுரு, தன் யோசனைக்கு வந்ததையும், தான் இரட்சிக்கப்படுமுன்னே அறிந்தவைகளையுமல்ல, சிலுவையில் அறையப்பட்டு உயிர்த்தெழுந்த இயேசுவைத் தேவன் உயிருள்ளோரையும், மரித்தோரையும் நியாயந் தீர்க்க எப்படி அபிஷேகம் பண்ணினாரென்று, கர்த்தர் தனக்குச் சொன்னபடியே சொல்லிப் பிரசங்கித்தான்.

"இந்த வார்த்தைகளைப் பேதுரு பேசிக்கொண்டிருக்கையில் வசனத்தைக் கேட்டவர்கள் யாவர்மேலும் பரிசுத்த ஆவியானவர் இறங்கினார்..........அப்பொழுது பேதுரு: நம்மைப்போல் பரிசுத்த ஆவியைப் பெற்ற இவர்களும் ஞானஸ்நானம் பெறாதபடிக்கு எவனாகிலும் தண்ணீரை விலக்கலாமா என்று சொல்லி, கர்த்தருடைய நாமத்தில் அவர்களுக்கு ஞானஸ்நானங் கொடுக்கும்படி கட்டளையிட்டான்." அப். 10: 44-48. பெந்தெகோஸ்தே நாளில் யூதர்களுக்கு எப்படி கட்டளை கொடுத்தானோ, அப்படியே இப்போதும் கட்டளை கொடுத்தான்.

புறஜாதியாரின் அப்போஸ்தலனாகிய பவுலும் தான் ஞானஸ்நானம் பெற்றது மாத்திரமல்ல, அதைக்குறித்துப் பிரசங்கித்து அதைக் கையாடி வந்தான். அவன் அத்தேனேயிலிருந்து கொரிந்துவுக்குப் போய் தேவாலயத்தில் யூதர்களுக்குமுன் இயேசுவே கிறிஸ்து என்று சாட்சி கொடுத்தான். ஆனால் யூதர்கள் எதிர்த்து தேவதூஷணஞ் சொல்ல ஆரம்பிக்கவே அவன் அவர்களை விட்டு புறசாதியாரிடத்திற்குப் போய்விட்டான்.

"ஜெப ஆலயத்தலைவனாகிய கிறிஸ்பு என்பவன் தன் வீட்டார் அனைவரோடும் கர்த்தரிடத்தில் விசுவாசமுள்ளவனான். கொரிந்தியரில் அநேகரும் சுவிசேஷத்தைக் கேட்டு விசுவாசித்து, ஞானஸ்நானம் பெற்றார்கள்." அப். 18: 8.

ஸ்தேவானும் அவன் குடும்பத்தாரும் முதலில் இவன் மூலமாய்த்தான் குணப்பட்டார்கள். இவருக்கும், கிறிஸ்புவுக்கும் காயுவுக்கும் இன்னும் வேறு சிலருக்கும் இவனே ஞானஸ்நானங் கொடுத்தான். தாங்கள் வணங்கி வந்த விக்கிரகங்களையும், வீரர்களையும் விட்டுக் கிறிஸ்துவினிடத்தில் வந்தவர்களுக்கு இவன் ஞானஸ்நானங் கொடுக்கவில்லை; ஏனெனில் இவர்கள் பவுல் தன் நாமத்தில் ஞானஸ்நானங் கொடுக்கிறானென்று எண்ணி

கிறிஸ்துவைப் பின்பற்றுவதை விட்டு தன்னை வணங்க ஆரம்பிப்பார்களென்று பயந்ததினாலும், தன்னிடத்திலிருந்த தீமோத்தேயும், சீலாவும் தன்னைப்போலவே ஞானஸ்நானங் கொடுக்கக்கூடியவர்களென்று நினைத்ததினாலுந்தான் இவன் அவர்களுக்கு ஞானஸ்நானங் கொடுக்கவில்லை. 1 கொரி. 1: 13-ல் "கிறிஸ்து பிரிந்திருக்கிறாரா? பவுலா உங்களுக்காக சிலுவையில் அறையப்பட்டான்? பவுலின் நாமத்திலா ஞானஸ்நானம் பெற்றீர்கள்?" என்று எழுதி யிருக்கிறபடி அவர்களெல்லாருக்கும் ஞானஸ்நானங் கொடுக்கப்பட்டது. பவுல் அல்ல, கிறிஸ்துவே அவர்களுக்காக சிலுவையில் அறையப்பட்டார்; ஆகையால் அவர்கள் பவுலின் நாமத்தில் அல்ல, கிறிஸ்துவின் நாமத்தில் ஞானஸ்நானம் பெற்றார்கள். இங்கே சொல்லியிருக்கும் ஞானஸ்நானம் எப்படிப்பட்டதென்று காட்டுகிறது? அவர்களில் சிலருக்குப் பவுல் தானே கொடுத்த ஞானஸ்நானத்தைப் போன்றதல்லவா?

ஞானஸ்நானம் அவ்வளவு விசேஷித்ததல்லவென்றும், பவுல் தன் ஊழியத்தின் ஆரம்பத்தில் மாத்திரம் சில்பேருக்கு ஞானஸ்நானங் கொடுத்ததாகவும், அதற்குப்பின் அவருக்கு அதைப்பற்றி மேலான அறிவு வந்தமையால் அதைக் கையாடாமலிருந்தாரென்றும் இவ்வதிகாரத்தில் அவர் காட்டுகிறதாக சிலர் எண்ணுகிறார்கள். இதற்கு எதிரிடையானதே சத்தியம். தானே ஞானஸ்நானங் கொடுக்கக்கூடாதென்று பின்வாங்கிய இடத்திலேயே, அநேகம்பேருக்கு அவன் ஞானஸ்நானம் கொடுத்ததென்று அவனுக்கு நினைப்பில்லை; அவன் ஒருவருக்கும் ஞானஸ்நானங் கொடாதிருந்தாலும், கொஞ்சபேருக்கு மாத்திரங் கொடுத்திருந்தாலும் அவனுக்கு நினைப்பிருக்குமே. அவன் வாக்குச் சாதுரியவானானபடியால் அதிகமாய்ப் பிரசங்கத்தை நடத்திவர, அவனுக்கு உதவியாயிருந்தவர்கள் ஞானஸ்நானங் கொடுக்கவும், சபையின் காரியங்களை ஒழுங்காய் நடத்தவுங் கூடியவர்களாயிருந்தார்கள்.

ஞானஸ்நானம் பெறவேண்டியவர்கள் யார்? எப்போ?

"அவனுடைய வார்த்தையைச் சந்தோஷமாயேற்றுக் கொண்டவர்கள் ஞானஸ்நானம் பெற்றார்கள்." அறியாக்குழந்தைகளல்ல; கடமையென்னுங் கட்டாயத்தாலோ, தண்டனைக்குப் பயந்தோ, தாங்கள் எதைச் செய்தாலும் முறுமுறுத்துக்கொண்டே செய்கிற ஆண்களும் பெண்களுமல்ல; அவனுடைய வார்த்தையைச் சந்தோஷமாய் ஏற்றுக்கொண்டவர்களே ஞானஸ்நானம் பெற்றார்கள்.

"தேவனுடைய ராஜ்யத்துக்கும் இயேசு கிறிஸ்துவினுடைய நாமத்துக்கும் ஏற்றவைகளைக் குறித்து பிலிப்பு பிரசங்கித்ததை அவர்கள் விசுவாசித்தபோது புருஷரும் ஸ்திரீகளும் ஞானஸ்நானம் பெற்றார்கள்." அப். 8: 12.

எப்போ? "அவர்கள் விசுவாசித்த போது"

யார்? "புருஷரும், ஸ்திரீகளும்"

"அப்பொழுது பிலிப்பு பேசத்தொடங்கி, இந்த வேத வாக்கியத்தை முன்னிட்டு இயேசுவைக்குறித்து அவனுக்குப் பிரசங்கித்தான். அவ்விதமாய் அவர்கள் வழிநடந்து போகையில், தண்ணீருள்ள ஓரிடத்திற்கு வந்தார்கள். அப்பொழுது மந்திரி: இதோ, தண்ணீர் இருக்கிறதே, நான் ஞானஸ்நானம் பெறுவதற்குத் தடையென்ன என்றான். அதற்குப் பிலிப்பு நீர் முழு இருதயத்தோடும் விசுவாசித்தால் தடையில்லை யென்றான்..........." அப். 8: 35-37.

"அவனுக்கும் அவன் வீட்டிலிருந்த யாவருக்கும் (பவுலும், சீலாவும்) கர்த்தருடைய வார்த்தையைப் போதித்தார்கள். மேலும், இராத்திரியில் அந்நேரத்திலேதானே அவன் அவர்களை அழைத்துக்கொண்டு போய், அவர்களுடைய காயங்களைக் கழுவினான். அவனும் அவனுடையவர்கள் அனைவரும் உடனே ஞானஸ்நானம் பெற்றார்கள்." அப். 16: 32, 33. அவர்கள் ஞானஸ்நானம் பெறாமல் ஆறுமாசம் காத்திருக்கவில்லை. அவனுடைய வீட்டில் பிள்ளைகளும் பெண்களும் இருந்திருக்கலாம், ஆனால் அவர்களெல்லாரும் அப்போஸ்தலர் சொன்ன கர்த்தரின் வார்த்தையைக் கேட்டு விசுவாசிக்கக்கூடிய பருவமுள்ளவர்களாயிருந்தார்கள்.

சுவிசேஷத்தைக் கேட்டு, விசுவாசித்து ஞானஸ்நானம் பெற்றுக்கொள் என்பதே கர்த்தரின் கட்டளையாயிருக்கிறது. "விசுவாசமுள்ளவனாகி ஞானஸ்நானம் பெற்றவன் இரட்சிக்கப்படுவான்." மாற்கு 16: 16.

எப்படி ஞானஸ்நானம் பெறுகிறது.

நாம் காண்கிறபடி, இயேசுவும், "யூதேயா தேசத்தார் அனைவரும், எருசலேம் நகரத்தார் யாவரும் அவனிடத்திற்குப் போய், தங்கள் பாவங்களை அறிக்கையிட்டு, யோர்தான் நதியில் ஞானஸ்நானம் பெற்றார்கள்." (மாற்கு 1: 5.) தண்ணீரில் பெற்றபடியால் தண்ணீரில்தான் ஞானஸ்நானம் பெறவேண்டும்.

"சாலீம் ஊருக்குச் சமீபமான அயினோன் என்னும் இடத்திலே தண்ணீர் மிகுதியாயிருந்தபடியினால்,

யோவானும் அங்கே ஞானஸ்நானம் கொடுத்து வந்தான்.” யோ. 3: 23. தற்காலத்தில் வழங்கி வருகிறபடி தெளிக்கத் “தண்ணீர் மிகுதியாய்” வேண்டியதில்லை. சமுத்திரத்தின் தண்ணீரைப்போலவே தொட்டியின் தண்ணீரும் நலமாகிறது. மற்றவர்களைத் தண்ணீரில் அமிழ்த்தினவர்கள், தண்ணீர் ஆழமாய் தொப்பூள் வரையில் வரத்தக்கதாயிருந்தால் அது ஆழமில்லாத தண்ணீரிலே அமிழ்த்தி ஞானஸ்நானம் கொடுப்பதிலும் அதிக நன்றாய்க் கொடுக்கக்கூடுமென்று அறிவார்கள்.”

அப். 8: 38, 39. “இரதத்தை நிறுத்தச் சொன்னான். அப்பொழுது பிலிப்பும் மந்திரியும் ஆகிய இருவரும் தண்ணீரில் இறங்கினார்கள்; பிலிப்பு அவனுக்கு ஞானஸ்நானம் கொடுத்தான். அவர்கள் தண்ணீரிலிருந்து கரை யேறினபொழுது, கர்த்தருடைய ஆவியானவர் பிலிப்புவைக் கொண்டுபோய் விட்டார். மந்திரி அப்புறம் அவனைக் காணாமல், சந்தோஷத்தோடே தன் வழியே போனான்.” அவர்கள் தண்ணீரில் இறங்கினார்கள்; தண்ணீரிலிருந்து கரை யேறினார்கள். இயேசு தண்ணீரிலிருந்து கரை யேறினபோது ஆவியானவர் புறாவைப்போல் அவர்மேல் தங்க, வானத்திலிருந்து ஒரு சத்தம் உண்டாகி, இவர் என்னுடைய நேச குமாரன் இவரில் பிரியமாயிருக்கிறேன்” என்று சொல்லிற்று. அப்படியே இங்கே ஆவியானவர் பிலிப்பைக் கொண்டுபோய் குணப்பட்ட எத்தியோப்பியனுக்குச் சாட்சியாக அவன் இருதயத்தைச் சந்தோஷத்தால் நிரப்ப, அவன் சந்தோஷத்தோடு தன் வழியே போனான்.

“ஞானஸ்நானத்திலே அவரோடேகூட அடக்கம் பண்ணப்பட்டவர்களாகவும், அதிலே அவரை மரித்தோரிலிருந் தெழுப்பின தேவனுடைய செயலின்மேலுள்ள விசுவாசத்தினாலே அவரோடேகூட எழுந்தவர்களாகவும் இருக்கிறீர்கள்” கொலோ. 2: 12. ஆனபடியால் ஞானஸ்நானம் பெறுகிறதென்றால் புதைக்கப்படுவதுதான். தண்ணீரில் இறங்குகிறது மாத்திரமல்ல அதில் புதைக்கப்பட்டு எழுந்திருத்தலே ஞானஸ்நானம் பெறுதலாம். ஆனால் இந்த வசனமானது தண்ணீரில் ஞானஸ்நானம் பெறுவதைக் குறித்துச் சொல்லாமல், நாம் கிறிஸ்துவோடு மரித்து அடக்கம் பண்ணப்பட்டு அவரோடு உயிர்த்தெழுதலுக்கும், பாவத்திற்குரிய பழைய மனுஷன் செத்து கிறிஸ்துவோடு புதிய மனுஷனாய் எழுந்திருப்பதற்கும் ஒப்பனையாய்ச் சொல்லியிருக்கிறதென்று சிலர் சொல்லுவார்கள். இது சரிதானென்று ஒத்துக்கொண்டாலும் இந்த விஷயத்தை இது கொஞ்சமாகிலும் தடுக்கிறதில்லை. குறிப்பான ஞானஸ்நானம் குறிப்பாய்ப் புதைக்கப்பட்டு மறுபடி எழுந்திருக்கிறதென்றால், சாதாரண ஞானஸ்நானம் சாதாரணமாய்ப் புதைக்கப்பட்டு மறுபடி எழுந்திருத்தல்தான்.

“கிறிஸ்து இயேசுவுக்குள்ளாக ஞானஸ்நானம் பெற்ற நாமனைவரும் அவருடைய மரணத்துக்குள்ளாக ஞானஸ்நானம் பெற்றதை அறியாமலிருக்கிறீர்களா? மேலும் பிதாவின் மகிமையினாலே கிறிஸ்து மரித்தோரிலிருந்து எழுப்பப்பட்டதுபோல நாமும் புதிதான ஜீவனுள்ளவர்களாய் நடந்துகொள்ளும்படிக்கு, அவருடைய மரணத்துக்குள்ளாகும் ஞானஸ்நானத்தினாலே கிறிஸ்துவுடனேகூட அடக்கம் பண்ணப்பட்டோம். ஆதலால் அவருடைய மரணத்தின் சாயலில் நாம் இணைக்கப்பட்டவர்களானால், அவர் உயிர்த்தெழுதலின் சாயலிலும் இணைக்கப்பட்டிருப்போம்.” ரோம. 6: 3-5.

ஆனபடியால் ஞானஸ்நானமானது தேவனுடைய வார்த்தையாகிய சுவிசேஷத்தைக் கேட்டு அதைத் தன் இருதயத்தில் விசுவாசித்து அதற்குக் கீழ்ப்படிய விரும்பி புதைக்கப்படுகிறதும் (நடப்படுகிறதும்) கிறிஸ்துவோடேகூட நடக்க எழுப்பப்பட்டு, தேவனுடைய ஊழியத்திற்கு தன் ஜீவனை ஒப்புவிக்கப் புது ஜீவியாய் நடக்கும்படி தண்ணீரிலிருந்து எழுப்பப்படுகிறதுமேயாம்.

ஞானஸ்நானத்தின் கருத்து.

1. அது சுத்தமாக்குவதற்கு ஓர் அடையாளம்.

“இப்பொழுது நீ தாமதிக்கிறதென்ன? நீ எழுந்து கர்த்தருடைய நாமத்தைத் தொழுதுகொண்டு, ஞானஸ்நானம் பெற்று, உன் பாவங்கள் போகக் கழுவப்படு.” அப். 22: 16.

“புருஷர்களே, உங்கள் மனைவிகளில் அன்பு கூருங்கள்; அப்படியே கிறிஸ்துவும் சபையில் அன்பு கூர்ந்து, தாம் அதைத் திருவசனத்தைக்கொண்டு தண்ணீர் முழுக்கினால் சுத்திகரித்து, பரிசுத்தமாக்குகிறதற்கும், கறை திரை முதலானவைகள் ஒன்றும் இல்லாமல் பரிசுத்தமும் பிழையற்றதுமான மகிமையுள்ள சபையாக அதைத் தமக்கு முன் நிறுத்திக்கொள்வதற்கும் தம்மைத்தாமே அதற்காக ஒப்புக்கொடுத்தார்” எபேசி. 5: 25-27.

தண்ணீர் பாவத்தைக் கழுவமாட்டாது; கிறிஸ்துவின் இரத்தம் தவிர வேறொன்றும் பாவத்தைக் கழுவக்கூடாது; தண்ணீர் புறம்பான மாம்சத்தின் மாசைக் கழுவுமாபோல், பாவத்தினால் கறைப்பட்ட இருதயத்தை அதின் எல்லாக் கறையிலிருந்தும் இயேசுவின் இரத்தம் கழுவக்கூடும். ஆகையால், தண்ணீரை இருதய சுத்திகரிப்புக்கு ஓர் அடையாளமாய் வைத்திருக்கிறது.

2. நமக்காகக் கிறிஸ்து மரித்து உயிர்த்தெழுந்தார் என்னும் நமது விசுவாசத்துக்கும், அவர் மூலமாய் மரித்தோரின் உயிர்த்தெழுதல் உண்டென்னும் நம்பிக்கைக்கும் அது அடையாளமாயிருக்கிறது.

“ஆதலால் அவருடைய மரணத்தின் சாயலில் நாம் இணைக்கப்பட்டவர்களானால், அவர் உயிர்த்தெழுதலின் சாயலிலும் இணைக்கப்பட்டிருப்போம்.” ரோ. 6: 5. கிறிஸ்துவுடனேகூட நாம் மரித்தோமானால் அவருடனேகூட பிழைத்தும் இருப்போம்.

நாம் தண்ணீருக்குள் போகும்போது ஜீவனுள்ளோரின் நாட்டிலிருந்து அறுப்புண்டு போகிறபடியால் இது மரணத்துக்குக் குறிப்பாயும், தண்ணீரிலிருந்து கரை யேறினவுடனே மறுபடியும் நாம் ஜீவனுள்ளோரின் நாட்டில் சேர்க்கப்படுகிறபடியால் இது உயிர்த்தெழுதலுக்குக் குறிப்பாயும் இருக்கிறது.

ஞானஸ்நானம் பெறுவதில் எவ்விதத்திலாவது ஏதாகிலும் விசேஷித்ததாவது இரட்சிப்பாவது உண்டா?

“அதற்கு ஒப்பனையான ஞானஸ்நானமானது, மாம்ச அழுக்கை நீக்குதலாயிராமல், தேவனைப் பற்றும் நல்ல மனச்சாட்சியின் உடன்படிக்கையாயிருந்து இப்பொழுது நம்மையும் இயேசுக்கிறிஸ்துவினுடைய உயிர்த்தெழுதலினால், இரட்சிக்கிறது” 1 பேது. 3: 21.

இவ்வசனத்தில் முக்கியமானது “அதற்கு ஒப்பனையான ஞானஸ்நானமானது, இப்பொழுது நம்மையும் இயேசு கிறிஸ்துவினுடைய உயிர்த்தெழுதலினால் இரட்சிக்கிறது.” இதனால் ஞானஸ்நானமானது தேவனைப்பற்றும் நல் மனச்சாட்சியின் உடன்படிக்கையாயிருக்கிறதென்றும், இயேசு கிறிஸ்துவின் மூலமாய் வரும் உயிர்த்தெழுதலாகிய, தேவனால் அருளிய சத்தியத்தை விசுவாசிக்கிறோமென்றும் காட்டுகிறது. இது தற்கால இரட்சிப்பைக் குறிக்கிறதே யல்லாமல் இனி வரும் இரட்சிப்பை யல்ல. “இப்பொழுது நம்மை இரட்சிக்கிறது.” இதனால் நாம் தேவனோடு நல்மனச்சாட்சியுடன் சம்பந்தப் படுகிறோம்: தண்ணீர் தெளிப்பினால் அல்லது ஊற்றுவதினால் ஞானஸ்நானம் பெற்றவர்களில் அநேகர் மனச்சமாதான மில்லாதவர்களாயிருக்கக் காண்கிறோம்: ஆனால் அவர்கள் கிறிஸ்துவோடு புதைக்கப்பட்டு ஞானஸ்நானம் பெற்றபோதோ, அவர்கள் சுத்த மனச்சாட்சியுள்ளவர்களாயிருக்கக் காண்கிறோம்.

“நீங்கள் இவைகளை அறிந்திருக்கிறபடியினால், இவைகளைச் செய்வீர்களானால், பாக்கியவான்களாயிருப்பீர்கள்” யோ. 13: 17.

“பலியைப்பார்க்கிலும் கீழ்ப்படிதலும், ஆட்டுக்கடாக்களின் நிணத்தைப்பார்க்கிலும் செவி கொடுத்தலும் உத்தமம்” 1 சாமு. 15: 22.

நீங்கள் மனம்பொருந்தி செவி கொடுத்தால் தேசத்தின் நன்மையைப் புசிப்பீர்கள்” ஏசா. 1: 19.

அவர் குமாரனாயிருந்தும் பட்டபாடுகளினாலே கீழ்ப்படிதலைக் கற்றுக்கொண்டு, தாம் பூரணரான பின்பு, தமக்குக் கீழ்ப்படிகிற யாவரும் நித்திய இரட்சிப்பை அடைவதற்குக் காரணரானார்.” எபி. 5: 8, 9.

பரிசுத்தவான்களின் நம்பிக்கை

(THE HOPE OF THE SAINTS.)

சில தினங்களுக்குமுன் நான் ஓர் கிறிஸ்தவ ஆஸ்பத்திரிக்குப் போயிருந்தேன். அங்குள்ள வைத்தியர் வந்திருக்கும் சகல பிணியாளிகளையும் தமக்கு முன் வைத்து அவர்களுக்கு சில உபதேசங்கள் கற்றுக்கொடுத்தார். அதாவது, மரணம் நமக்கு வரும்போது நாம் அதை வெகு சந்தோஷத்துடன் ஏற்றுக்கொள்ளவேண்டும்; சற்றேனும் நாம் முறுமுறுக்கவே கூடாது; நமது மரணப் படுக்கையின் பக்கத்திலிருக்கும் இனஜன பந்துக்களும், அதை விரோதித்து ஓலமிடவுங் கூடாது; ஏனென்றால், மரணம்தான் நம்மை இப்பூமியிலிருந்து நமது பழைய தகப்பனிடத்திற்கு அழைத்துக்கொண்டு போகும் ஓர் அன்பான வண்டியாயிருக்கிறது என்றார். இப்படி மரணம் அவரால் எண்ணப்பட்டிருந்தும், அந்த ஆஸ்பத்திரியில், எத்தனையோ வகையான மருந்துகளை வைத்துக்கொண்டு, இந்த வைத்தியரும், அவர் உடன் ஊழியக்காரர்களும் இராப்பகல் கண் விழிப்புடனிருந்து வியாதியஸ்தருடைய கை நாடியை அடிக்கடி கைக்கடிகார நிமிஷத்துடன் ஒத்துப்பார்த்துக்கொண்டே எவ்வளவோ பிரயாசத்துடன் வேலை செய்கிறதை நான் பார்த்து மிருக்கிறேன்.

அப்படியானால் இவர்கள் அந்த ஆஸ்பத்திரியை வைத்து இவ்விதமாய் அரும்பிரயாசத்துடன் வேலை

செய்கிற நோக்கம், —அந்த அன்பான வண்டியில் ஏறி எப்பொழுதும் துன்பம் நிறைந்த இந்த பொல்லாத லோகத்திலிருந்து, நித்தியானந்தமுள்ள நமது பரம தகப்பனின் சமுகத்திற்கு தங்களால் கூடியவாறு ஒருவரையும் போகவிடக் கூடாதபடி தடுக்கிறதாக, அவரது உபதேசத்திற்கு முற்றும் விரோதமான கிரியைகளென்று நமக்குப் புலப்படவில்லையா? இப்படிப்பட்ட உபதேசங்கள் தற்காலத்தில் எத்தனையோ கிறிஸ்தவ பீடங்களிலிருந்து முதலாய், பிறந்துகொண்டு இருக்கிறது. இதின் உண்மையை சற்று ஆராய்ச்சி செய்வோமாக.

ஆதிமுதல் இப்பூமியிலே ஜீவித்திருக்கிற சகல பரிசுத்தவான்களின் நம்பிக்கை என்ன? அவர்கள் தங்கள் நம்பிக்கையை மரணத்தில் வைத்திருந்தார்களா? அல்லது அதைவிட வேறு ஓர் சம்பவத்தை எதிர் நோக்கியிருந்தார்களா?

மனுக்குலத்தின் முதலாம் மனுஷனாகிய ஆதாமின் ஏழாம் தலைமுறையாகிய ஏனோக்கின் நம்பிக்கை என்ன? "இதோ எல்லாருக்கும் நியாயத்தீர்ப்புக் கொடுக்கிறதற்கும், அவர்களில் அவபக்தியுள்ளவர்கள் யாவரும் அவபக்தியாய்ச் செய்து வந்த சகல அவபக்தியான கிரியைகளினிமித்தமும், தமக்கு விரோதமாய் அவபக்தியுள்ள பாவிகள் பேசின கடின வார்த்தைகளெல்லாவற்றினிமித்தமும், அவர்களைக் கண்டிக்கிறதற்கும், ஆயிரமாயிரமான தமது பரிசுத்தவான்களோடுங்கூட கர்த்தர் வருகிறார் என்று முன்னறிவித்தான்." (யூதா. 14, 15.)

சங்கீதக்காரனாகிய தாவீதின் நம்பிக்கை எங்கே இருந்தது? "நம்முடைய தேவன் வருவார், மவுனமாயிரார்; அவருக்குமுன் அக்கினி பட்சிக்கும்; அவரைச் சுற்றிலும் மகா புசல் கொந்தளிப்பாயிருக்கும்." (சங். 50: 3.) "அவர் வருகிறார். அவர் பூமியை நியாயந்தீர்க்க வருகிறார்; அவர் பூலோகத்தை நீதியோடும், ஜனங்களைச் சத்தியத்தோடும் நியாயந் தீர்ப்பார்." (சங் 96:13.)

முற்பிதாக்களில் மிகுந்த பொறுமைசாலியாகிய யோபு என்பவர், தமது நம்பிக்கை எங்கே இருக்கிறதாய் வெகு வைராக்கியத்துடன் பேசுகிறார்? "ஆ, நான் இப்பொழுது சொல்லும் வார்த்தைகள் எழுதப்பட்டால் நலமாயிருக்கும்; அவைகள் ஒரு புஸ்தகத்தில் வரையப்பட்டு, அல்லது என்றைக்கும் நிலைக்க அவைகள் கருங்கல்லிலே உளி வெட்டாகவும், ஈய எழுத்தாகவும் பதிந்தால் நலமாயிருக்கும். என் மீட்பர் உயிரோடிருக்கிறார் என்றும், அவர் கடைசி நாளில் பூமியின்மேல் நிற்பார் என்றும் நான் அறிந்திருக்கிறேன். இந்த என் தோல் முதலானவை அழுகிப்போன பின்பு, நான் என் மாம்சத்தில் இருந்து தேவனைப் பார்ப்பேன். அவரை நானே பார்ப்பேன்; அந்நிய கண்கள் அல்ல; என் கண்களே அவரைக் காணும்; இந்த வாஞ்சையினால் என் உள்ளந்திரியங்கள் எனக்குள் சோர்ந்து போகிறது." (யோ. 19: 23-27.)

வெகு ஊக்கத்துடன் ஊழியஞ்செய்த அப்போஸ்தலனாகிய பேதுருவின் நம்பிக்கை என்ன? "உங்களிலுள்ள மூப்பருக்கு உடன் மூப்பனும், கிறிஸ்துவின் பாடுகளுக்குச் சாட்சியும், இனி வெளிப்படும் மகிமைக்குப் பங்காளியுமாயிருக்கிற நான் புத்தி சொல்லுகிறதென்னவென்றால்: உங்களிடத்திலுள்ள தேவனுடைய மந்தையை நீங்கள் மேய்த்து, கட்டாயமாய் அல்ல, மனப்பூர்வமாயும், அவலட்சணமான ஆதாயத்திற்காக அல்ல, உற்சாக மனதோடும், சுதந்தரத்தை இறுமாப்பாய் ஆளுகிறவர்களாக அல்ல, மந்தைக்கு மாதிரிகளாகவும், கண் காணிப்பு செய்யுங்கள். அப்படிச் செய்தால் பிரதான மேய்ப்பர் வெளிப்படும்போது மகிமையுள்ள வாடாத கிரீடத்தைப் பெறுவீர்கள். (1 பேதுரு. 5:1-4.)

இதுபோக, கிறிஸ்துவுக்காக அதிக கஷ்ட நஷ்டத்தோடும், வெகு பாடோடும் ஊழியஞ்செய்த அப்போஸ்தலனாகிய பவுலும் இது விஷயத்தில் பின்வருமாறு உரைக்கிறார். "நம்முடைய குடியிருப்போ பரலோகத்திலிருக்கிறது. அங்கேயிருந்து கர்த்தராயிருக்கிற இயேசு கிறிஸ்து என்னும் இரட்சகர் வர எதிர்பார்த்துக்கொண்டிருக்கிறோம்." (பிலி. 3: 20.)

"நாம் அவபக்தியையும் லௌகீக இச்சைகளையும் வெறுத்து, தெளிந்த புத்தியும் நீதியும் தேவ பக்தியும் உள்ளவர்களாய் இவ்வுலகத்திலே ஜீவனம் பண்ணி, நாம் நம்பியிருக்கிற ஆனந்த பாக்கியத்துக்கும், மகா தேவனும், நமது இரட்சகருமாகிய இயேசு கிறிஸ்துவினுடைய மகிமையின் பிரசன்னமாகுதலுக்கும் எதிர்பார்த்துக்கொண்டிருக்கும்படி நமக்குப் போதிக்கிறது." (தீத்து 2: 12, 13.)

இன்னும் இவைகளைப்போல் எத்தனையோ வேத வசனங்களை பழைய புதிய ஏற்பாட்டிலிருந்து யெடுத்து சகல பரிசுத்தவான்களின் நம்பிக்கையும் மரணமல்ல; ஆனால் இயேசு கிறிஸ்துவின் மகிமையின் பிரசன்னமாகுதலே யென்று வெகு தெளிவாய் ரூபிக்கலாம். எல்லாவற்றிற்கும் மேலாக நமது அருமை இரட்சகர் தாமே திருவாய்மலர்ந்தருளியிருக்கிற பின் கூறப்படும் வசனங்களை நன்கு கவனிப்போமாக :—

"பிள்ளைகளே, இன்னும் கொஞ்சக்காலம் நான் உங்களுடனேகூட இருப்பேன்; நீங்கள் என்னைத் தேடுவீர்கள்; ஆனாலும் நான் போகிற இடத்துக்கு நீங்கள் வரக்கூடாதென்று நான் யூதரோடே சொன்னதுபோல இப்

பொழுது உங்களோடும் சொல்லுகிறேன்." "சீமோன் பேதுரு அவரை நோக்கி: ஆண்டவரே, நீர் எங்கே போகிறீர் என்றான். இயேசு அவனுக்குப் பிரதியுத்தரமாக: நான் போகிற இடத்துக்கு இப்பொழுது நீ என் பின்னே வரக்கூடாது, பிற்பாடு என் பின்னே வருவாய் என்றார்." (யோ. 13: 33, 36.) "உங்கள் இருதயம் கலங்காதிருப்பதாக; தேவனிடத்தில் விசுவாசமாயிருங்கள், என்னிடத்திலும் விசுவாசமாயிருங்கள். என் பிதாவின் வீட்டில் அநேக வாசஸ்தலங்கள் உண்டு; அப்படியில்லாதிருந்தால், நான் உங்களுக்குச் சொல்லியிருப்பேன்; ஒரு ஸ்தலத்தை உங்களுக்காக ஆயத்தம் பண்ணப் போகிறேன். நான் போய் உங்களுக்காக ஸ்தலத்தை ஆயத்தம் பண்ணின பின்பு, நான் இருக்கிற இடத்திலே நீங்களும் இருக்கும்படி, நான் மறுபடியும் வந்து உங்களை என்னிடத்தில் சேர்த்துக்கொள்ளுவேன். (யோவான் 14: 1-3.) ஆகவே மரணம் நாம் நம்பியிருக்க வேண்டிய ஆனந்த பாக்கியமல்ல; ஆனால் இயேசு மகாராஜாவின் பிரசன்னத்தினமே என்று நமது இரட்சகர் தாமே வெகு தெளிவாய் வற்புறுத்திப் போதிக்கிறார்.

மரணமானது இப்பொல்லாத லோகத்தைவிட்டு உடனே நம்மை நமது பரம தகப்பனின் சமுகம் சேர்க்கிறதாயிருக்குமானால், நம்மைச் சடுதியாய்க் கொல்லும் வியாதிகளையும், பகைவர்களையும், எதிரிகளின் கொடூர ஆயுதங்களையும், நாம் வெகுவாய் நேசித்து அவர்களை எப்பொழுதும் ஆசீர்வதிக்கிறவர்களாகவே காணப்பட வேண்டாமா? கடந்த நாலு வருஷங்களாக சுமார் 78 லட்சம் ஆத்துமாக்கள் சென்ற யுத்தத்தில் மாண்டிருப்பதை நாம் அடிக்கடி நினைத்து, வெகு மனவேதனைப்பட்டு எத்தனையோ தடவை இப்பெரிய பாதகத்துக்கு காரணமாயிருந்த ஜெர்மனியர்மேலும், அவர்களது சக்கரவர்த்தியாகிய கேயிசர்மேலும் கோபதாபங் காட்ட வேண்டிய காரணமேன்? அவ்வளவு எண்ணிறந்த ஆத்துமாக்களை இக்கொடிய பூலோகத்திலிருந்து இக்கட்டுகளுக்கு நீக்கி, க்ஷணப்பொழுதில் இன்ப லோகம் சேர்த்ததே ஓர் பெரிய சிலாக்கியம் என்றும், புண்ணியம் என்று எண்ணி நாம் நமது எதிரிகளை நமது உயிர் உள்ளளவும் உள்ளத்திலே வெகு நன்றியறிதலுடன் துதிக்க வேண்டாமா!

ஆகையால், இதை வாசிக்கும் நண்பர்களே! இந்த விஷயத்தை சற்று நின்று யோசிப்போமாக! உங்கள் மனதில் குடிகொண்டிருக்கும், தப்பானதும் வேதத்துக்கு முற்றும் எதிரிடையானதுமான உபதேசங்களை உங்கள் முற்பிதாக்கள் தொன்றுதொட்டு உபதேசித்து வந்தவைகளென்று மனதில் கற்கித்து சத்திய சுவிசேஷத்தின் வெளிச்சத்திற்கு எவ்விதத்திலும் எதிர்த்து நில்லாதேயுங்கள்.

மரணம் ஆரம்பத்திலே ஓர் தேவ தண்டனையாய்; அல்லது சாபமாகத்தான் மனுஷ ஜாதிக்கு வந்தது என்று எத்தனையோ இடங்களில் வாசிக்கிறோம். "ஒரே மனுஷனாலே பாவமும், பாவத்தினாலே மரணமும் உலகத்திலே பிரவேசித்தது போலவும்." "ஒருவனுடைய மீறுதலினாலே மரணம் ஆண்டுகொண்டிருக்க." (ரோ. 5: 12, 17.) இன்னும் 'பரிகரிக்கப்படும் கடைசி சத்துரு மரணம்' என்று 1 கொரி. 15: 26-ல் வாசிக்கிறோம்.

இப்பூலோகத்தின் போராட்டம் முடிந்து, சகல பரிசுத்தவான்களும் தாங்கள் நித்திரை செய்கிற கல்லறையிலிருந்து, இயேசு இரட்சகருடைய எக்காள சத்தத்தைக் கேட்டு உயிரோடு எழும்பும்போது "மரணமே உன் கூர் எங்கே? பாதாளமே உன் ஜெயம் எங்கே" என்று நமது பிராண சத்துருக்களாகிய, மரணத்துக்கும், சாத்தானுக்கும் வெட்க முண்டாக மரணக் கட்டைவிட்டு அவிழ்க்கப்பட்டதும் பாடுவார்கள். அப்பொழுதுதான் நமது சத்துருவாகிய மரணத்தால் ஒருவரையொருவர் விட்டு பிரிக்கப்பட்டவர்கள், இனிமேல் ஒருபோதும் பிரிக்கப்படாதபடி ஒன்று சேர்க்கப்படுவார்கள்.

இந்த மகிமை பொருந்திய நாளாகிய இயேசு மகாராஜனின் பிரசன்ன நாளே ஆதிமுதல் சகல பரிசுத்தவான்களின் நம்பிக்கையாய் இருந்துகொண்டே இருக்கிறது. இந்த நம்பிக்கையை நாம் அனுபவிக்கவேண்டிய தினம் வெகு சீக்கிரம் வரும்படி 'உமது ராஜ்யம் வருவதாக' என்று ஊக்கத்துடன் ஜெபிப்போமாக.

ஏ. டி. தாமஸ்.

ஐசுவரியவானும் ஏழை லாசருவும்

(THE RICH MAN AND LAZARUS)

லூக்கா 16: 19-31 னின் வியாக்கியானம்.

ஒரு மனிதன் மரித்து அடக்கம் பண்ணப்பட்டபின், யோசிக்கவும், துன்பப்படவும், சந்தோஷிக்கவும், நடக்கவும், பேசவும் கூடுமென்று உலகத்தில் அநேகர் எண்ணுகிறார்கள். நல்லவர்கள் என்றென்றைக்கும் இன்பத்தை அனுபவிக்கும்படியாக ஓர் இடத்திற்கும், பொல்லாதவர்கள் என்றைக்கும் துன்பத்தை அனுபவிக்கும்படியாக மற்றோரிடத்திற்கும் போகிறார்களென்று அநேகர் எண்ணுகிறார்கள். இந்தக் கொள்கை சத்தியமென்று ரூபிக்க லூக்கா 16-ம் அதிகாரத்தில் கிறிஸ்து சொன்ன அந்த உவமையை எடுத்துக் காட்டுவார்கள். இந்த வசனங்களுக்கு தப்பான அர்த்தம் சொல்லி அநேகரை வழி விலகிப்போகப் பண்ணுகிறார்கள். ஆகையினாலே நாம் இந்த உவமையைக் கவனமாகப் படித்து கிறிஸ்து அதை என்ன நோக்கத்திற்காகக் கொடுத்தாரென்று அறிந்துகொள்ளவேண்டும். இதை அறிய விரும்புகிறவர்கள் இந்தப் பத்ததியைக் கவனமாய் வாசிக்கும்படியாகக் கேட்டுக்கொள்ளுகிறேன்.—பத்திராதிபர்.

இதை நாம் படிக்கும்பொழுது கிறிஸ்து உண்மையாய் நடந்த காரியத்தை இங்கே சொல்லுகிறாரா? அல்லது ஒரு சத்தியத்தை நமக்கு உவமையின் மூலமாய் வெளிப்படுத்துகிறாரா என்று நாம் திட்டமாய் அறிந்துகொள்ளவேண்டும். மனிதருடைய பாவங்களை உணர்த்திக் காட்டும்படியாக அவர் அவர்களோடு உவமைகளாய்ப் பேசினாரென்று நாம் 15-ம் அதிகாரத்திலேயே பார்க்கிறோம். தொண்ணூற்றொன்பது ஆடுகள், காணாமற்போன வெள்ளிக்காசு, கெட்ட குமாரன், அநீதியுள்ள உக்கிராணக்காரன் என்பவைகளையெல்லாம் நாம் வாசித்தவுடனே அவைகள் உவமைகளென்று நமக்குத் தெரிகிறதல்லவா? அப்படியே இதையும் ஒரு உவமையென்று சொல்ல இடமுண்டு.

"ஐசுவரியமுள்ள ஒரு மனுஷனிருந்தான்" என்று கிறிஸ்து சொன்னதினால் சிலர் இது ஒரு உவமையல்ல என்கிறார்கள். கிறிஸ்து தமது சீஷர்களுக்கு மேலே சொல்லப்பட்ட அநேக உவமைகளைச் சொல்லும்போது "ஒரு மனுஷனுக்கு இரண்டு குமாரர்களிருந்தார்கள்." (லூக்கா 15: 11) என்றும், "ஒரு பட்டணத்திலே ஒரு நியாயாதிபதி இருந்தான்......அந்தப் பட்டணத்திலே ஒரு விதவையும் இருந்தாள்." (லூக்கா 18: 2, 3) என்றும் சொன்னார். லூக். 16: 19-31 றில் கிறிஸ்து விசேஷமாய் இரண்டு பேரைக் குறித்துப் பேசினதினால் அது மெய்யாய் நடந்த காரியமென்று நாம் சொல்லுகிறதற்கு முகாந்தரமில்லை.

ஒரு மனிதன் நரகத்திலிருந்து பேசியிராவிட்டால், கிறிஸ்து, ஒருவன் நரகத்திலிருந்து பேசினானென்று சொல்லியிருக்கமாட்டாரென்றும், ஒரு உண்மையை அல்லது ஒரு சத்தியத்தை விஸ்தரிக்க அவர் ஒரு கட்டுக்கதையைச் சொல்லியிருக்கமாட்டாரென்றும் அநேகர் சாதிக்கிறார்கள். இவர்கள் சாதிக்கிறது தப்பிதமென்று ரூபிக்க வேதத்தில் வேறு இடங்களில் உபயோகிக்கப்பட்டிருக்கும் இதைப்போன்ற உதாரணங்களை இங்கு எடுத்துக் காட்டுவோம். நியா. 9: 7-இல் காட்டு விருட்சங்கள் தங்களுக்கு ஒரு ராஜாவை அபிஷேகம் பண்ணும்படி கூடின என்று சொல்லப்பட்டிருக்கிறது. அபிமலேக்கை ராஜாவாக அபிஷேகம் பண்ணுவது மதியீனமென்று சீகேமியர் அறியும்படியாக இது உபயோகிக்கப்பட்டிருக்கிறதென்று லேசாய் விளங்குகிறது. இன்னும் 2 ராஜா 14: 9-ல் "லீபனோனிலுள்ள முட்செடியானது, லீபனோனிலுள்ள கேதுரு மரத்தை நோக்கி, நீ உன் மகளை என் மகனுக்கு மனைவியாக விவாகஞ் செய்து கொடு என்று சொல்லச் சொல்லிற்று" என்று எழுதியிருக்கிறது. ஆகையினாலே நாம் இந்த வசனத்திலிருந்து தாவரவர்க்கங்கள் கொள்வினை கொடுப்பினை செய்கிறதென்று கற்றுக்கொள்ளுகிறோமா? இல்லையே, இது இஸ்ரவேல் ராஜாவும் யூதாவின் ராஜாவும் சபதம் கூறிக்கொள்ளுகிறதைக் குறிக்கிறது.

ஒரு உண்மையான காரியத்தை அதிலிருந்து கற்றுக்கொள்ளும்படியாகவே கிறிஸ்து ஒரு உதாரணத்தை உபயோகித்தார். இந்த உதாரணத்தை நாம் கவனிக்கும்பொழுதே இதில் சொல்லப்பட்டிருக்கும் யாவும் சரியாய்ப் பொருந்தாதென்று தெரிகிறது. கிறிஸ்து இந்த உவமையை ஆயக்காரருக்கும் பாவிகளுக்கும், வேதபாரகருக்கும் பரிசேயருக்கும் சொன்னார். இவர்களெல்லாரும் ஒருகாலத்தில் பழைய ஏற்பாட்டில் சொல்லப்பட்டிருக்கும் வேத வசனங்களின் சத்தியத்தை நன்றாயறிந்திருந்தார்கள். ஆனால் அவர்கள் புறஜாதிகளுடைய நாடுகளுக்கு சிறையாகக் கொண்டுபோகப்பட்டதினால் அவர்கள் தேவனால் வெளிப்படுத்தப்பட்ட சத்தியங்களை விட்டு வழி விலகி, தாங்கள் பழகின புறஜாதிகளின் விசுவாசத்தை இவர்களும் கைப்பற்றிக்கொண்டார்கள். மனிதர் மரித்தபின்பு பாதாளத்திலிறங்கி அங்கே வாதிக்

கப்படுகிறார்களென்றும் சிலர் அங்கே பாக்கியத்தை அனுபவிக்கிறார்களென்றும் எகிப்தியரும், பாபிலோனியரும், பெர்சியரும் விசுவாசித்தார்கள். ஆகையினாலே எபிரேயருக்கும் இந்த எண்ணமிருந்தது. ஜோசிபஸ் என்னும் சரித்திரக்காரன் இதைப்பற்றி பின் வருமாறு எழுதுகிறான்.

நரகத்தைப்பற்றி ஜோசிபஸ் எழுதுகிறதாவது.

"பாதாளத்தில் நரகம் என்னும் ஒரு இடம் இருக்கிறது. அது இன்னம் முழுவதும் கட்டப்படவில்லை. இந்த உலகத்தின் வெளிச்சம் அதில் பிரகாசிக்கிறதில்லை ஆகையினாலே அது எப்போதும் இருளடைந்திருக்கும். அது ஆவிகளின் காவல் வீடாக உபயோகிக்கப்படுகிறது. இந்த இடத்திற்கு வர ஒரு சரிவான பாதை உண்டு......

நீதிமான்கள் மரித்தபின் தூதர்களின் கூட்டத்தோடும் கீதங்களோடும் வெளிச்சம் நிறைந்த வலது பாரிசத்திற்குக் கொண்டுவந்து விடப்படுகிறார்கள்.

இந்த இடத்தை நாம் ஆபிரகாமின் மடியென்று அழைக்கிறோம்.

ஆனால் அநீதிமான்களோ மரித்தபின் வாதிக்கிற தூதர்களினாலே பலவந்தமாய் இழுக்கப்பட்டு இடது பக்கத்தில் தள்ளப்படுகிறார்கள். மறுமடியும் அந்தத் தூதர்கள் அவர்களை நரகத்திற்கு இழுத்துக்கொண்டு போகிறார்கள். அங்கே கொதிக்கிற நீராவியையும் அதன் சத்தத்தையும் அவர்களால் சகிக்க முடிகிறதில்லை. அவர்கள் வேதனைப்படுகிற அந்த இடத்திலிருந்து முற்பிதாக்களையும் நீதிமான்களையும் பார்க்கக்கூடும். ஒரு நீதிமான் இங்கே வரவும் அல்லது ஒரு அநீதிமான் அங்கே போகவும் கூடாதபடி அவர்களிருவருக்கும் நடுவே ஒரு பெரும் பிளப்பு இருக்கிறது."

ஜோசிபஸ் என்பவன் முதலாம் நூற்றாண்டில் வசித்த ஒரு யூத சரித்திரக்காரன். அவன், கிறிஸ்துவின் காலத்திலிருந்த யூதர்களுடைய விசுவாசத்தை எழுதினான். இவர்களுடைய விசுவாசத்திற்கும் அந்தப் புறஜாதிகளுடைய விசுவாசத்திற்கும் யாதொரு வித்தியாசமுமில்லை. அவர்கள் தப்பாய் எண்ணின காரியத்தைக் கொண்டே அவர்களுக்கு ஒரு பாடத்தைக் கற்பிக்கவேண்டுமென்று கிறிஸ்து இந்த உவமையைச் சொன்னாரென்று நாம் இவைகளையெல்லாம் வாசித்த பிற்பாடு லேசாக அறிந்துகொள்ளுகிறோம்.

ஐசுவரியத்தையும் அந்தஸ்தையும் பற்றியது.

கிறிஸ்து எதைக் கற்பிக்கவேண்டுமென்று இந்த உவமையைச் சொன்னாரென்று நாம் சற்று சிந்திப்போம். ஐசுவரியமும் சம்பிரமமும் உள்ள ஒரு மனிதன் இவ்வுலகத்திலும் மறு உலகத்திலும் தேவனால் தயவு பாராட்டப் படுகிறானென்றும், ஏழையும் நிர்ப்பந்தமுமான மனிதன் நித்தியகாலமாக அந்த சாபத்தைத் தாங்கிக்கொண்டிருக்கிறானென்றும் அக்காலத்து யூதர்கள் எண்ணினார்கள். அந்த எண்ணத்தை மாற்றவேண்டுமென்றே கிறிஸ்து இதைச் சொன்னாரென்று எல்லா வேத வியாக்கியானிகளும் ஒத்துக்கொள்ளுகிறார்கள். யோபைத் தேற்ற வந்த மனிதர்களுக்கும் இந்த எண்ணம் இருந்தது. இப்பொழுது உலகத்திலிருக்கிற ஜனங்களிலனேகருக்கு இதே எண்ணம் இருக்கிறது.

"இவைகளையெல்லாம் பொருளாசைக்காரராகிய பரிசேயரும் கேட்டு அவரைப் பரியாசம் பண்ணினார்கள்." என்று 14-ம் வசனத்தில் சொல்லப்பட்டிருக்கிறது. இயேசு அவர்களுடைய பொருளாசைத்தனத்தைக் கண்டித்து அவர்களை நோக்கி "மனுஷருக்குள்ளே மேன்மையாக எண்ணப்படுகிறது தேவனுக்கு முன்பாக அருவருப்பாயிருக்கிறது." என்று சொன்னார். வச. 15. உயர் குலமும் ஐசுவரியமும் ஒரு மனிதனின் மறு ஜீவியத்திற்கு ஒரு உதவியும் செய்யமுடியாதென்றும், எளிமையும் நிர்ப்பாக்கியமும் ஒரு மனிதனின் மறு ஜீவியத்திற்கு யாதொரு கெடுதியையும் உண்டு பண்ணாதென்றும் கற்பித்தார். இவைகளை அவர்கள் மனதில் பதிக்கவேண்டுமென்றே அவர்களுடைய தப்பான விசுவாசத்தை எடுத்துக் காட்டினார்.

இதில் சொல்லப்பட்டிருக்கும் மூன்று காரியங்கள் ஜனங்களுடைய பொதுவான எண்ணத்திற்கு விரோதமாயிருக்கிறது.

மோட்சத்திற்கும் நரகத்திற்கும் சம்பந்தமுண்டா?

முதலாவதாக, நாம் இதை எழுத்தின்படி எடுத்துக்கொள்ளுவோமானால் மோட்சமும் நரகமும், ஒருவரை ஒருவர் பார்த்து சம்பாஷித்துக் கொள்ளத்தக்கதாக அவ்வளவு சமீபத்திலிருக்கவேண்டும். அப்படியிருக்குமானால் அது திருவசனத்திற்கு நேர் விரோதமாயிருக்கும். வேதாகமத்தில் அநேக இடங்களில் உலகம் பாவமற சுத்திகரிக்கப்பட்ட பிற்பாடு அதில் பாவிகளும், பாவமும் இனி இராதென்று சொல்லப்பட்டிருக்கிறது. இப்பொல்லாத உலகம் புதிப்பிக்கப்பட்டு நீதிமான்களின் வாசஸ்தலமாகும். அதில் புதிய எருசலேமென்னும் பரிசுத்த நகரம் இருக்கும். யோவான், வெளிப்படுத்தின விசேஷம் 21-ம் அதிகாரத்தில் புதிய பூமியையும் அதன் குடிகளையும்பற்றி பின்வருமாறு எழுதுகிறார். "நான் புதிய எருசலேமாகிய பரிசுத்த நகரத்தை தேவனிடத்தினின்று பரலோகத்தைவிட்டு இறங்கி

வரக் கண்டேன். அவர்களுடைய கண்ணீர் யாவையும் தேவன் துடைப்பார்; இனி மரணமுமில்லை, துக்கமுமில்லை, அலறுதலுமில்லை, வருத்தமுமில்லை; முந்தினவைகள் ஒழிந்துபோயின." "இடுக்கம் மறுபடியும் உண்டாகாது" என்று தீர்க்கதரிசியாகிய நாகூம் எழுதுகிறார்.

ஆகையினாலே உலகத்தின் முடிவில் தேவன் துன்மார்க்கருக்கு தண்டனை விதிக்கும்போது அவர்களில் ஒருவனும் தப்பிப்போவதில்லை. "இதோ, சூளையைப் போல எரிகிற நாள் வரும்; அப்பொழுது அகங்காரிகள் யாவரும் அக்கிரமஞ் செய்கிற யாவரும் துரும்பாயிருப்பார்கள்; வரப்போகிற அந்த நாள் அவர்களைச் சுட்டெரிக்கும்; அது அவர்களுக்கு வேரையும் கொப்பையும் வைக்காமற் போகுமென்று சேனைகளின் கர்த்தர் சொல்லுகிறார்." மல்கியா 4: 1. இனி என்றைக்கும் துன்பமும், அலறுதலும், வருத்தமுமிராதென்று கர்த்தர் சொல்லுகிறார். லூக்கா 16-இல் சொல்லப்பட்டிருக்கும் அந்தக் காட்சி எப்பொழுதும் நடந்துகொண்டிருக்குமானால் அங்கே துன்பமும் அலறுதலும் சதா காலங்களிலும் இருக்குமே. அந்தப் பெரும் பிளப்புக்கு அந்தப் பக்கத்திலிருந்து அல்லது புதிய எருசலேமின் மதில்களுக்கு வெளியேயிருந்து இரட்சிக்கப்பட்டவர்களுடைய சிநேகிதர்களும் இனத்தாரும் வேதனைப்பட்டு தண்ணீருக்காக கதறிக்கொண்டிருப்பார்களானால் இரட்சிக்கப்பட்டவர்களின் நித்தியானந்தத்திற்கு அது ஒரு தடையாயிருக்குமல்லவா? அது அப்படியிருக்குமானால் மோட்சம் நரகத்திற்கு ஒப்பாயிருக்குமே. அது அப்படியிராது. "மரணமும் பாதாளமும்" (நரகமும்) அக்கினிக் கடலிலே தள்ளப்பட்டு நிர்மூலமாக்கப்படும். வெளி. 20: 14.

இரண்டாவதாக, நாம் இதை எழுத்தின்படியே உண்மையாக எடுத்துக்கொள்ளுவோமானால் மனிதர் மரித்தவுடனே தூதர்கள் அவர்களை அவர்களிருக்கவேண்டிய இடத்திற்கு உடனே கொண்டுபோகிறார்களென்று ஒத்துக்கொள்ளவேண்டும். ஆனால் 1 தெச. 4: 16, 17-லும், மத். 24: 30, 31-லும் உயிர்த்தெழுதலின் நாளில் அறுக்கிறவர்கள் தேவ தூதர்களென்றும், உயிர்த்தெழுதல் கிறிஸ்துவின் இரண்டாம் வருகையில் நடக்கிறதென்றும் சொல்லப்பட்டிருக்கிறது. பின்னால் சொல்லப்பட்டது உண்மையானால் முன்னால் சொல்லப்பட்டது உண்மையன்று.

மோசேக்கும் தீர்க்கதரிசிகளுக்கும் அபயமிடுதல்.

மூன்றாவதாக, பொதுவாய்ச் சொல்லப்படுகிறபடி நரகம் அல்லது ஆதேஸ் அவ்வளவு சூடாயிருக்குமானால் தண்ணீர் நீராவியாக மாறிவிடும். அப்படியானால் ஒரு துளி தண்ணீர் அவர்களுடைய களைப்பை ஆற்ற முடியாது. இது சரீரக்களைப்பல்ல இது ஆத்துமக் களைப்பென்று சில வியாக்கியானிகள் சொல்லுகிறார்கள். இது ஆத்துமக்களைப்பாயிருக்குமானால் நாவுக்குத் தண்ணீர் அவசியமா?

ஐசுவரியவான், லாசருவைத் தன் ஐந்து சகோதரர்களண்டைக்கு அனுப்பும்படியாக வேண்டிக்கொண்டபொழுது கிறிஸ்து ஆபிரகாமின் மூலமாய் "அவர்களுக்கு மோசேயும் தீர்க்கதரிசிகளுமுண்டு அவர்களுக்கு அவர்கள் செவி கொடுக்கட்டும்." என்றார். ஆத்துமா அழியாமை உள்ளதா? மனிதன் செத்தபிறகு ஆத்துமாவுக்கு என்ன சம்பவிக்கிறது என்று நாம் அவர்களிடத்தில் கேட்போம்.

ஆதேஸ் என்னும் பதம் புதிய ஏற்பாட்டில் நரகமென்றும் பழைய ஏற்பாட்டில் அல்லது மோசேயும் தீர்க்கதரிசிகளும் எழுதின புஸ்தகத்தில் ஷியோல் என்றும் உபயோகிக்கப்பட்டிருக்கிறது. இந்த இரண்டு பதத்திற்கும் கல்லறை அல்லது பாதாளம் என்று அர்த்தமாம். 1 கொரி. 15: 55-இல் "மரணமே உன் கூரெங்கே? பாதாளமே (கிரேக்க பாஷையில் ஆதேஸ்) உன் ஜெய மெங்கே?" என்று சொல்லப்பட்டிருக்கிறது. கிறிஸ்து பிதாவை நோக்கி "என் ஆத்துமாவைப் பாதாளத்தில் விடீர்" (கிரேக்க பாஷையில் ஆதேஸ், எபிரேய பாஷையில் ஷியோல்) என்று சொன்னார். சங். 16: 10; அப். 2: 27. கிறிஸ்து மூன்றுநாள் ஆதேஸில் அதாவது பாதாளத்தில் அல்லது கல்லறையில் இருந்தார். வியாக்கியானிகள் நரகமென்று அழைக்கும் அந்த இடத்தில் அவர் இருக்கவேயில்லை.

நரகம் அல்லது பாதாளத்தை ஆதேஸ் என்றும் ஆதேஸை ஷியோல் என்றும் அவ்விரண்டையும் பாதாளம் அல்லது கல்லறை என்று ஞாபகத்தில் வைத்துக்கொண்டு நாம் மோசேயும் தீர்க்கதரிசிகளும் எழுதின புஸ்தகத்தைப் பார்ப்போம். அந்த வார்த்தை உபயோகிக்கப்பட்டிருக்குமிடத்திலெல்லாம் மூல பாஷையின் பதமாகிய ஷியோல் என்னும் பதத்தை உபயோகிப்போம்.

யோபும், சாலமோனும், தாவீதும், ஏசாயாவும் சொல்லுகிற தீர்ப்பு.

யோபு ஷியோலுக்கு போனால் தாவீதை என்றார் "நீர் என்னை ஷியோலில் மறைத்தால் நலமாயிருக்கும்......எனக்கு மாறுதல் எப்போது வருமென்று எனக்குக் குறிக்கப்பட்ட போராட்டத்தின் நாளெல்லாம் நான் காத்திருக்கிறேன்." "நான் காத்துக்கொண்டிருந்தாலும் ஷியோல் எனக்கு வீடாயிருக்கும்; இருளில் என் படுக்கையைப் போடுவேன்........அது ஷியோலின் காவலுக்குள் இறங்கும், அப்போது தூளில் ஏகமாய் இளைப்பாறுவோம்." யோபு. 14: 13, 14; 17: 13, 16. இருளிலும் தூளிலும் காத்திருக்கும் இடத்திற்கு நரகம், பாதாளம் அல்லது கல்லறை என்று பெயர்.

சாலமோன் ஷியோலில் அறிவும் ஞானமும் ஒன்றும் கிடையாது என்று சொல்லுகிறான். "செய்யும்படி உன் கைக்கு நேரிடுகிறது எதுவோ அதை உன் பெலத்தோடே செய்; நீ போகிற ஷியோலிலே செய்கையும் வித்தையும் அறிவும் ஞானமும் இல்லையே." பிர. 9: 10. ஆகையினால் பாதாளத்தில் தன்னறிவு கிடையாது, அங்கே கிரியையுமில்லை, நாம் உபத்திரவத்தைச் சகிக்கிறோமென்று உணரும் உணர்ச்சியுமில்லை.

தாவீது "மரணத்தில் உம்மை நினைவு கூர்வதில்லை, ஷியோலில் உம்மைத் துதிப்பவன் யார்?" என்று சொல்லுகிறார்.

ஆபிரகாம் பரலோகத்தில் பாவிகளுடைய துன்பத்தையும் பரிசுத்தவான்களுடைய சந்தோஷத்தையும் பார்த்துக்கொண்டிருக்கிறதில்லையென்பதை இப்போது ரூபிக்கலாம். "தேவரீர் எங்கள் பிதாவாயிருக்கிறீர், இஸ்ரவேலுக்கு (யாக்கோபுக்கு) நாங்கள் அறியப்பட்டவர்களுமல்ல." ஏசா. 63: 16. தேவன் பரலோகத்திற்கு மூன்று பேரை எடுத்துக்கொண்டிருப்பாரானால் அவர் ஆபிரகாம், யாக்கோபு, தாவீது என்னும் மூன்று பேரைத்தான் எடுத்திருப்பார். ஆனால் நாம் மேலே காட்டின வசனத்தில் ஆபிரகாமும் யாக்கோபும் தன்னறிவில்லாமலிருக்கிறார்களென்று சொல்லப்பட்டிருக்கிறது. அப்போஸ்தலனாகிய பேதுரு தாவீதைக் குறித்து "சகோதரரே, கோத்திரத் தலைவனாகிய தாவீதைக் குறித்து நான் உங்களுடனே தைரியமாய்ப் பேசுகிறதற்கு இடங்கொடுங்கள். அவன் மரணமடைந்து அடக்கம் பண்ணப்பட்டான். .....தாவீது பரலோகத்திற்கு எழுந்துபோகவில்லையே" என்று சொல்லுகிறார். அப். 2: 29, 34. கிறிஸ்து இப்பூமியிலிருந்த காலத்தில் இம்மூன்று பேரும் தங்கள் கல்லறைகளில் இளைப்பாறிக்கொண்டிருந்தார்கள்.

மரணத்திற்கும் உயிர்த்தெழுதலுக்கும் இடையிலுள்ள காலத்தில் நீதிமான்களும் அநீதியான்களும் பாதாளமாகிய கல்லறையில்தான் இருக்கவேண்டும். கிறிஸ்துவின் இரண்டாம் வருகையில் நீதிமான்கள் அங்கிருந்து வெளியே வருவார்கள். (1 கொரி. 15: 51-55.) இரண்டாம் உயிர்த்தெழுதலில் பொல்லாதவர்கள் நித்திய அழிவுக்கென்று அங்கேயிருந்துதான் வெளியே வருவார்கள். (வெளி. 20: 13.)

வேதத்தைப் படிக்கும்போது நாம் எப்படி தர்க்கிக்கவேண்டும்.

நரகம் நித்திய காலமாக எரிந்துகொண்டிருக்கும் ஒரு இடம் என்று போதிக்கும் அநேகர் தங்கள் தப்பான போதனைக்கு ஆதாரமாக இயேசுநாதர் உவமையாய்ப் பேசின லூக்கா 16: 19-31 ஐ எடுத்து ரூபிப்பார்கள்.

உவமைகளை எடுத்து அவை வேதாகமக் கொள்கைகளில் ஒன்று என்று போதிப்பதைக் குறித்து தேவபக்தியுள்ள வியாக்கியானியாகிய ஆடம் கிளார்க் என்பவர் "உதாரணமாகவும் உவமைகளாகவும் உபயோகிக்கப்பட்டிருப்பவைகளை வேதாகமக் கொள்கைகளென்று நாம் போதிக்கக்கூடாது. நமது இரட்சணியத்துக்கடுத்த காரியங்களில் நமது ஆத்தும விசுவாசத்தை ஸ்தாபிப்பதற்கு வெளிப்படையாகவும் திட்டமாகவும் சொல்லப்பட்டிருக்கும் வசனங்களே அதிக அவசியம்." என்று சொல்லுகிறார். டிரென்ச் என்னும் வேத வியாக்கியானி "உவமைகளைக்கொண்டு வேதாகமக் கொள்கைகளை ஸ்திரப்படுத்தக்கூடாது.......இந்த சட்டத்தை அநேகர் மறந்துவிடுகிறார்கள். மார்க்க பேதகக்காரருக்கும் தர்க்கிக்கிறவர்களுக்கும் வேதத்தில் தெளிவான வசனங்கள் கிடைக்காமற்போனால் அவர்கள் உவமைகளை எடுத்துக்கொள்ளுகிறார்கள்." என்று அதிக தெளிவாய்ச் சொல்லுகிறார்.

மனிதனுடைய நிலைமை இன்னதென்றும் அவனுக்குப் பின்னால் என்ன சம்பவிக்கிறதென்றும் வேதத்தில் வெகு தெளிவாய்ச் சொல்லப்பட்டிருக்கிறது. மனிதன் சாகுந் தன்மையுள்ளவனென்றும், அவன் செத்தபின் கல்லறைக்குப் போகிறானென்றும் அங்கே உயிர்த்தெழுதலின் நாள்மட்டும் தன்னறிவில்லாமல் நித்திரை பண்ணுகிறானென்றும், பின்பு பாவிகள் முற்றிலும் நிர்மூலமாக்கப்படுகிறார்களென்றும், பரிசுத்தவான்கள் நித்திய ஜீவனை யடைகிறார்களென்றும், வேதத்தில் எங்கும் தெளிவாய்ச் சொல்லப்பட்டிருக்கிறது.

ஏழாம் நாள், வருகைக்காரர் யார்?

(WHO ARE THE SEVENTH-DAY ADVENTISTS?)

அட்வென்றிஸ்ற் சபையார் ஒரு மெய்யான கிறிஸ்தவ சபையாராயிருக்கிறார்கள். ஏனென்றால் அவர்கள் கிறிஸ்து இரண்டாவதுதரம் வருவாரென்று விசுவாசித்து அதைப் பிரசங்கிக்கிறார்கள். கிறிஸ்து இரண்டாவதுதரம் கண்கள் யாவும் காணத்தக்க விதமாக வெளிப்படும்போது அவரைப் பின்பற்றினவர்கள் யாவரையும் அவர்கள் மரித்திருந்தாலும் உயிரோடிருந்தாலும் அவர்களைத் தேவனுடைய வாசஸ்தலத்திற்குக் கொண்டுபோவாரென்றும், அவருடைய கற்பனைகளைக் கைக்கொள்ளாத அவிசுவாசிகள் யாவரும் அவருடைய வருகையின் மகிமையின் பிரசன்னத்தினால் அழிக்கப்படுவார்களென்றும், அதின் பின் ஆயிர வருஷ அரசாட்சி ஆரம்பிக்குமென்றும், அந்த ஆயிர வருஷ அரசாட்சி முடியும்போது பூமி அக்கினியினால் சுத்திகரிக்கப்பட்டு மறுபடியும் புதிதாக சிருஷ்டிக்கப்படுமென்றும் விசுவாசிக்கிறார்கள். யோவான் 14: 1-3; வெளி 20; 2 பேது. 2: 10-13 பார்க்க.

அவர்கள் வாரத்தின் முதல் நாளை தேவனுடைய பரிசுத்த ஓய்வுநாளென்று கொண்டாடாமல் வாரத்தின் ஏழாம்நாளையே பரிசுத்த ஓய்வுநாளென்று ஆசரிக்கிறார்

ணல் அவர்கள் ஏழாம் நாள் வருகைக்காரர் என்று அழைக்கப்படுகிறார்கள். இந்தக் காரியத்தில் அவர்கள் இதர கிறிஸ்தவர்களுக்கு முற்றிலும் வேறானவர்களாயிருக்கிறார்கள். கர்த்தர் வாரத்தின் ஏழாம் நாளில்தான் ஓய்ந்திருந்து அதை ஆசீர்வதித்து அதைப் பரிசுத்தமாக்கினாரென்று விசுவாசிக்கிறார்கள். கிறிஸ்துவுக்கு முன்னிருந்த தீர்க்கதரிசிகளும், பரிசுத்தவான்களும், கிறிஸ்துவும், அவருடைய அப்போஸ்தலர்களும் அதே நாளைதான் ஆசரித்து வந்ததினாலும், வேதாகமத்தில் ஞாயிற்றுக்கிழமை ஆசரிப்புக்குச் சார்பாக யாதொன்றும் சொல்லப்பட்டிராததினாலும் இந்தக் கூட்டத்தார் அந்த நாளையே ஆசரித்தும் பிரசங்கித்தும் வருகிறார்கள்.

மனித சரீரத்துக்குக் கெடுதியை உண்டுபண்ணும் யாதொன்றையும் புசிக்கவும் குடிக்கவும் கூடாதென்று உபதேசிக்கிறார்கள். இந்தக் காரணத்தை முன்னிட்டே மெய்யான ஏழாம் நாள் வருகைக்காரரில் ஒருவரும் புகையிலையாவது, பொடியாவது, வெற்றிலை பாக்காவது, அல்லது வேறெந்த மயக்கந்தரும் லாகிரி வஸ்துக்களையாவது, தேத்தண்ணீராவது, காப்பியாவது உட்கொள்ளுகிறதேயில்லை. விலையேறப்பெற்ற ஆடையாபரணங்களை உடுத்திக்கொள்வது நல்லதல்லவென்றும் பிரசங்கிக்கிறார்கள். பொன் வெள்ளி, ரத்தினக் கற்களால் செய்யப்பட்ட எந்தவிதமான ஆபரணங்களையும் அணிந்துகொள்வது கூடாதென்றும் உபதேசிக்கிறார்கள். மனத்தாழ்மையும் சாந்தமுமாகிய உள்ளான அலங்கரிப்பே மெய்யான அலங்கரிப்பாயிருக்கிறதென்று விசுவாசிக்கிறார்கள்.

ஆத்துமாவைப்பற்றிப் போதிப்பதில் இவர்களுக்கும் இதர கிறிஸ்தவர்களுக்கும் வித்தியாச முண்டு. அழியாமை தேவன், கிறிஸ்துவின் சுவிசேஷத்தின் மூலமாய் நமக்கு அருளும் ஒரு ஈவென்று அவர்கள் விசுவாசிக்கிறார்கள். 2 தீமோ. 1: 10. சுவிசேஷத்தை விசுவாசிக்கிறவர்கள் மாத்திரம் கிறிஸ்துவின் வருகையில் நடக்கும் நீதிமான்களின் உயிர்த்தெழுதலில் அழியாமையைத் தரித்துக்கொள்ளுவார்கள். 1 கொரி. 15: 53, 54. ஆனால் விசுவாசியாதவர்கள் யாவரும் அந்த ஈவைப் பெற்றுக்கொள்ளவே மாட்டார்கள். அவிசுவாசிகள் அழியாமையைப் பெற்றுக்கொள்ளாததினால் மல்கியா 4; வெளி. 20-இல் சொல்லப்பட்டிருக்கிறபடி அவர்கள் மகா நாளில் அக்கினியினால் சமூலமாய் அழிக்கப்படுவார்கள். இதற்கு இன்னும் அநேக வேத வாக்கியங்கள் உண்டு. அவிசுவாசிகளும் அழியாமையை அடைவார்களானால் அவர்களை அழிக்க தேவனாலும் கூடாமற் போகுமே. பாவம் செய்கிற ஆத்துமாவே சாகும். எசேக். 18: 4 பார்க்க.

நீங்கள் அறிய ஆசிக்கும் அநேக போதகங்கள் இன்னும் உண்டு. அவைகள் யாவற்றையும் இங்கு எடுத்து எழுத இடம் போதாது. சபையின் விசுவாசத்தைப் பற்றி இவ்வளவோடு நிறுத்துவோம்.

சபையின் முக்கிய நோக்கமென்ன? வெளி. 14: 6, 7-ல் சொல்லப்பட்டிருக்கும் கிறிஸ்துவின் வருகையின் சுவிசேஷத்தை உலகமெங்கும் பிரசங்கிப்பதே சபையின் முக்கிய நோக்கமாயிருக்கிறது. இந்த நிறைவேற்ற வேண்டுமென்று அவர்கள் இதற்கான முயற்சி செய்கிறார்கள். இந்த வேலை சித்திபெறும்படியாக இவர்கள் அநேக வழிபாடுகள் செய்திருக்கிறார்கள். அவைகளில் இரண்டை மாத்திரம் இங்கே சொல்லி அதில் அவர்கள் அடைந்திருக்கும் வளர்ச்சியையும் இங்கே இலக்கத்தில் காட்டுகிறேன். பள்ளிக்கூட வேலை இவைகளில் முதன்மையானது. தேவனுடைய அறுப்புக்கு வேலையாட்களை அனுப்பும்படி அவர்களை பயிற்றுவிக்க தங்களுக்கு பள்ளிக்கூடங்கள் அவசியமாயிருந்தது. அவர்கள் பள்ளிக்கூடங்களை ஏற்படுத்தினார்கள். தற்சமயத்தில் 10 வகுப்புக்குக் கீழ்பட்ட 824 பள்ளிக்கூடங்கள் உண்டு. அவைகளில் 17,178 மாணாக்கர்களும் 1059 உபாத்தியாயர்களு முண்டு. ரூ. 73,37,880 செலவழித்து 68 உயர்தர பள்ளிக்கூடங்களும் சர்வ கலாசாலைகளும் ஏற்படுத்தியிருக்கிறார்கள். அவைகளில் 7,964 மாணாக்கர்களும் 583 உபாத்தியாயர்களும் உண்டு. வருஷா வருஷம் நூற்றுக்கணக்கான மாணாக்கர்கள் தங்கள் கல்வியை முடித்து சுவிசேஷ ஊழியத்தில் சேருகிறார்கள்.

புஸ்தகங்கள் பிரசுரிப்பது ஒரு முக்கியமான வேலை. தற்சமயத்தில் இக்கூட்டத்தாரிடத்தில் ரூ 6,501,531 பொருமான 40 அச்சுக்கூடங்கள் இருக்கிறது. அவைகளில் 740 பேர் வேலை செய்கிறார்கள். 130 வாரப் பத்திரிகைகளும் மாதாந்தரப் பத்திரிகைகளும் இன்னும் ஆயிரக்கணக்கான புஸ்தகங்களும் 90 பாஷைகளில் பிரசுரிக்கப்படுகிறது.

இந்த சபையின் அங்கத்தினர் இதர கிறிஸ்தவ மார்க்கத்தாரைப் பார்க்கிலும் தொகையில் குறைந்தவர்களாயிருந்தாலும் இவர்களுடைய சபைச் சட்டங்கள் அதிக ஒழுங்காயிருக்கிறது. ஒருவரைச் சபையின் அங்கத்தினராகச் சேர்ப்பதில் அதிக ஜாக்கிரதையாயிருக்கிறார்கள். இந்த மிசியோனில் 5390 ஓய்வுநாள் பள்ளிக்கூடங்கள் இருக்கிறது. அதில் 153,781 அங்கத்தினர் உண்டு. போன வருஷம் ஓய்வுநாள் பள்ளிக்கூடங்களில் சேர்க்கப்பட்ட காணிக்கை ரூ. 1,356,561. இந்த மிசியோனில் 2, 216 சபை உண்டு. அவைகளில் 153,857 அங்கத்தினர் இருக்கிறார்கள். கடந்த வருஷம் சராசரி நூற்றுக்கு எட்டரை வீதம் அங்கத்தினர் புதிதாக சேர்க்கப்பட்டார்கள். கடந்த வருஷம் அவர்கள் செலுத்திய தசம பாகம் ரூ. 8,840,721. சுவிசேஷ வேலை பரம்புவதற்கென்று செலுத்தின காணிக்கை ரூ. 4,061,055.

எங்களைப் புகழும்படிக்கு, நாங்கள் இதை எழுதவில்லை. எங்களுடைய வேலையை அறியவேண்டியவர்களுக்கு இது உதவியாயிருக்குமென்றே இதை எழுதினோம். இது "பலத்தினாலும் பராக்கிரமத்தினாலும்" முடியாது. இந்த வேலை கர்த்தருடைய ஆவியினாலேயே நடந்தேறி முடியும். ஜி. ஜி. லேனரி.

யுத்தத்தின் பயங்கர சேதங்கள்

பலமாய் ஸ்தாபிக்கப்பட்ட ராஜ்யங்களில் பதினாறும், யுத்தம் காரணமாக உள்நாட்டுக் குழப்பங்களினால் புதிதாய் எழும்பின மூன்று ராஜ்யங்களும், இந்த பெரிய யுத்தத்திற்காக தங்கள் ஜனங்களைக் கூட்டிச் சேர்த்தார்கள். நான்கு ராஜ்யத்திற்கு விரோதமாய், பதினைந்து ராஜ்யங்கள் சண்டை செய்தது. இந்த நான்கு ராஜ்யங்களில் சிலவற்றோடு, இன்னும் பன்னிரண்டு ராஜ்யங்கள் யுத்தம் தொடங்கினது. ஆனால் யுத்த முஸ்திப்பில் கலக்கவில்லை. இவைகள் எல்லாம் நீங்கலான இதர ஐம்பது சுய ஆட்சி நாடுகளில் ஐந்து, முந்திய நாலு ராஜ்யங்களில் சிலவற்றோடுள்ள சம்பந்தத்தை நீக்கிக்கொண்டது. யுத்தம் காரணமாக யுத்தத்தில் கலக்காத நாடுகள் முதலாய் மிகவும் கஷ்டமான நிலைமைக்குள் ஏங்கி விட்டன.

புதிதாய் எழும்பிய மூன்று நாடுகளில் ருஷியாவின் பலிஷ் (Polish) ஜாதியார் 150,000 சேனையுடனும், ருஷியாவின் சிபேரியா நாட்டில் ஒரு ஜாதியார் (Czecho Slovak) 180,000 சேனையுடனும், துருக்கியருக்கு விரோதமாய் ஹெட்ஜாஷ் ராஜா (Hedjaz) 250,000 அராபியா சேனையுடனும், நேச கட்சியார் சார்பிலிருந்தார்கள். ஆகவே, இவைகளைச் சேர்த்து நேசக் கட்சியார் 39,676,864 வீரருடன், ஐரோப்பிய மத்திய ராஜ்யங்களின் 19,500,000 வீரர்களுக்கு விரோதமாய் போர் புரிந்தார்கள்.

கொஞ்சம் குறைய 60,000,000 வீரர்கள் போரிட்டார்கள். இப்பெரிய தொகையில் 7,000,000 இறந்தார்கள். 6,000,000 (காயப்பட்டவர்களில் நூற்றுக்கு முப்பது வீதம்) ஜீவகாலம் வரை வேலை செய்ய முடியாத ஊனரானார்கள்.

ஆனால், இத்தொகை யுத்தத்தில் செத்தவர்களையும் ஜீவியகாலம்வரை வேலை செய்ய முடியாதபடி ஊனப்பட்டவர்களையும் மாத்திரம் குறிக்கிறது. யுத்த ஆயுதங்களினால் அல்லாமல் பஞ்சத்தினாலும், படுகொலைகளினாலும், வியாதியினாலும் பொது ஜனங்கள் அதிகக் கஷ்டப்பட்டவர்களாயிருக்கிறார்கள்.

முதல் அட்டவணையில் :—

கடலில் செத்த அமெரிக்கர்	...	692
ஷை பிரிட்டிஷார்	...	20,620
ஆகாயக் கப்பல் தாக்கலால் இறந்த இங்கிலீஷ் ஆண் பெண் சிறவர்	...	1,270
பலவகையாய்க் கொலை செய்யப்பட்ட பெல்ஜியர்	...	30,000
ஷை பிராஞ்சியர்	...	40,000
முழுகு கப்பலால் யுத்தத்தில் தலையிடாத நாடுகளில் இறந்தவர்கள்	...	7,500
	மொத்தம்	100,082

இரண்டாவது அட்டவணையில் :—

பொது ஜனங்களின் சாவு.

துருக்கியால் கொலையுண்டதும், பசியினால் வருத்தப்பட்டு மரித்ததுமான அமெரிக்கர் சிறியர், யூதர், கிரேக்கர்	...	4,000,000
யுத்தத்தினாலுண்டான இன்புளுயென்சா நிமோனியா சுரத்தால் இறந்தவர்கள்	...	4,000,000
படுகொலையாலும், வியாதியாலும் செத்த சர்பியர்கள்	... ...	1,085,441
	மொத்தம்	9,085,441

இவை யுத்தத்திலும் பொது ஜனங்களிலும் இறந்தவர்களைக் குறிக்கிறது :—

யுத்தச் சாவு	... ...	7,781,806
பொது ஜனங்கள் சாவு	...	9,185,523
	மொத்தம்	16,967,329

இவை மாத்திரமல்ல; ருஷிய போலந்தின் ரோடுகளிலும், போல்ஷிவிக்கி (Bolsheviki) இருட்டறைகளிலும், கொல்லப்பட்டுள்ள கோடிக்கணக்கான ஜனங்களை மதிப்பிட்டு முடியாது.

யுத்த சன்னத்தர்களின் தொகையும் சேதமும் நேசக்கட்சி.

ஜனம்.	யுத்தசன்னத்தர்.	சாவு.	காயப்பட்டவர்கள்.	கைதிகள் அல்லது காணமற் போனவர்கள்.	மொத்த சேதம்.
அமேரிக்கர் ...	4,272,521	67,813	192,483	14,363	274,659
பிரிட்டிஷ் ...	7,500,000	692,065	2,037,325	360,367	3,089,757
பிரான்சு ...	7,500,000	1,385,300	2,675,000	446,300	4,506,600
இத்தாலி ...	5,500,000	460,000	947,000	1,393,000	2,800,000
பெல்ஜியம் ...	267,000	20,000	60,000	10,000	90,000
ருஷியா ...	12,000,000	1,700,000	4,950,000	2,500,000	9,150,000
ஜப்பான் ...	800,000	300	907	3	1,210
ருமேனியா ...	750,000	200,000	120,000	80,000	400,000
செர்பியா ...	707,343	322,000	28,000	100,000	450,000
மாண்டிநிகிரோ ...	50,000	3,000	10,000	7,000	20,000
கிரேக்கு ...	230,000	15,000	40,000	45,000	100,000
போர்த்துக்கல் ...	100,000	4,000	15,000	200	10,000
மொத்தம் ...	39,676,864	4,869,478	11,075,715	4,956,233	20,892,226

மத்திய ராஜ்யங்கள்.

ஜனம்.	யுத்தசன்னத்தர்.	சாவு.	காயப்பட்டவர்கள்.	கைதிகள் அல்லது காணமற் போனவர்கள்.	மொத்த சேதம்.
ஜெர்மனி ...	11,000,000	1,611,104	3,683,143	772,522	6,066,[illegible]
ஆஸ்திரிய ஹங்கேரி ..	5,500,000	800,000	3,200,000	1,211,000	5,211,[illegible]
பல்கேரியா ...	400,000	201,224	152,399	10,825	264,[illegible]
துருக்கி ...	1,600,000	300,000	570,000	130,000	1,000,[illegible]
மொத்தம் ...	19,500,000	2,912,328	7,605,542	2,124,347	12,542,2[illegible]
ஆக மொத்தம் ...	59,176,864	7,781,806	18,681,257	7,080,580	33,434,44[illegible]

மேற்குறித்த அட்டவணை பதினாறு ராஜ்யங்களின் சண்டை செய்த ஜனத்தொகையையும்; நஷ்டத்தையும் குறிக்கிறது. நேசக் கட்சியார் சார்பில் சண்டைசெய்த மூன்று புது நாடுகளின் நஷ்டமும் சன்மெரினோ (San Marino) தீவிலிருந்து இத்தாலிக்கு உதவிசெய்ய அனுப்பப்பட்ட 300 வீரர்களினாலுண்டான நஷ்டத்தையும் குறிக்க இன்னும் ஒரு ஆதாரமும் கிடைக்கவில்லை. (The Advent Review & Sabbath Herald March 6, 1919.)

இதை வாசிக்கிற நண்பர்களே! இவைகளைப்பற்றி உலகத்தில் வந்து உதித்த பெரிய சற்குருவாகிய இயேசு கிறிஸ்து என்ன சொல்லியிருக்கிறாரென்று சற்று கவனிக்கவும்—"அது நடக்கும்போது நானே அவரென்று நீங்கள் விசுவாசிக்கும்பொருட்டு, இப்பொழுது அ[illegible] நடப்பதற்கு முன்னமே, அதை உங்களுக்குச் சொல்[illegible]கிறேன்." யோ. 13: 19. "ஜனத்துக்கு விரோதமாய் ஜனமும், ராஜ்யத்துக்கு விரோதமாய் ராஜ்யமும் எழும்பும்; பஞ்சங்களும், கொள்ளை நோய்களும், பூமி யதிர்ச்சிகளும் பல இடங்களில் உண்டாகும். இவையெல்லாம் வேதனைகளுக்கு ஆரம்பம்." "அக்கிரமம் மிகுதியாவதினால் அநேகருடைய அன்பு தணிந்துபோம். முடிவு பரியந்தம் நிலைநிற்பவனே ரட்சிக்கப்படுவான்." மத். 24: 7, 8, 12, 13.

ஈ. டி. தாமஸ்.

ஏழு சபைகள்

(THE SEVEN CHURCHES)

இந்த புஸ்தகத்தில் சொல்லியிருக்கிற அருமையான காட்சிகள் யாவும், அப்போஸ்தலனாகிய யோவானுக்கு, அவருடைய ஜீவியத்தின் கடைசி காலத்தில் வெளிப்படுத்தப்பட்டவைகள். இவைகள் அவருக்கு ஏறக்குறைய கி. பி. 96-ம் வருஷத்தில் அருளப்படும்போது, அவர் பத்மு தீவிலிருந்தார். அங்கே அவர் "தேவ வசனத்தினிமித்தமும், இயேசு கிறிஸ்துவைப்பற்றிய சாட்சியினிமித்தமும்" ஓர் கைதியாக தொமிஷியன் என்னும் ரோம ராயனால் அனுப்பப்பட்டிருந்தார். இப்படிப்பட்ட நிலைமையில் அவர் இருக்கும்போது அவருடைய சகல பயமும் நீங்கத்தக்க வண்ணமாக கர்த்தராகிய இயேசுவே அவருக்கு எவ்வளவோ மகிமை பொருந்தியவராய் தரிசனமாகி, பரலோகத்தின் சகல மகத்துவங்களையும் அவருக்கு விளக்கிக் காட்டியிருக்கிறார். அவரை நோக்கி, "பயப்படாதே, நான் முந்தினவரும், பிந்தினவரும், உயிருள்ளவருமாயிருக்கிறேன்; மரித்தேன், ஆனாலும் இதோ சதா காலங்களிலும் உயிரோடிருக்கிறேன். ஆமென்: நான் மரணத்திற்கும் பாதாளத்திற்குமுரிய திறவு கோல்களை உடையவராயிருக்கிறேன்" என்கிறார்.

இந்தப் புஸ்தகத்தின் இரண்டாம், மூன்றும் அதிகாரங்களில் ஏழு சபைகளுக்கும் அருளப்பட்ட தூதுகள் அடங்கியிருக்கின்றன. இந்த ஏழு சபைகளுக்கும் கொடுக்கப்பட்ட தூதுகள் ஆசியாவிலுள்ள இந்தப் பேர்களுடைய ஏழு சபைகளுக்கும் அந்தக் காலத்திற்கு அடுத்த தூதுகளாகவல்ல, இவைகள் யோவானுக்கு அருளப்பட்ட கால முதல், உலகத்தின் கடைசி காலமட்டுமுள்ள கிறிஸ்துவின் சபையை, ஏழு காலமாகப்பிரித்து, ஒவ்வொரு காலத்திற்கும் அடுத்ததாகக் கொடுத்த தூதுக்களென்று அநேக வேத வியாக்கியானிகளால் ஒப்புக்கொள்ளப்படுகின்றன. பின் சொல்லப்படுபவைகளை இதற்கு முக்கிய காரணமாக அனுமானிக்கவும்.

1. முதலாம் அதிகாரம் நான்காம் வசனத்தில் "யோவான் ஆசியாவிலுள்ள ஏழு சபைகளுக்கும் எழுதுகிறதாவது" என்று ஆரம்பிக்கிறார். இதைப் பார்க்கும்போது, ஆசியாவிலே இருந்த சபைகள் ஏழுதான் யென்று அர்த்தம் கொள்ளத்தக்கதாயிருக்கிறது. ஆனால் அதே காலத்தில் இந்த ஏழு சபைகளையும் தவிர, ஆசியாவில் இந்த சபைகளின் மத்தியிலும், வெகு சமீபத்திலும், கொலோசே, மெலித்தா, துரோவா, எரோபோலீஸ், மக்னீஷியா முதலிய சபைகளும் இருந்திருக்கின்றன. இதைப் பார்க்கும்போது ஆசியாவிலுள்ள சபைகளுக்கு என்று எழுதியும், சின்ன ஆசியாவிலுள்ள எல்லா முக்கிய சபைகளை முதலாய் பெயரிடவுமில்லை.

2. இந்த ஏழு சபைகளுக்கும் சொல்லப்பட்டிருக்கிற தூதுகளில், வெகு சொற்பமானவைகள்தான் யோவான் காலத்திலும் அதற்கடுத்த கிறிஸ்தவ நூற்றாண்டுகளிலும் சம்பவித்திருக்கின்றன. மற்றும் ஏராளமான காரியங்கள் இந்த சபைகளின் காலத்துக்குப்பின் எத்தனையோ நூற்றாண்டுகளில் சம்பவித்திருக்கிற காரியங்களாயிருக்கின்றன. கடைசி மூன்று சபைகளுக்கும் சொல்லப்பட்டிருக்கிற தூதுகள், வெகு சமீபவத்தில் சம்பவிக்கப்போகின்ற கிறிஸ்துவின் இரண்டாம் வருகையோடு சம்பந்தப்பட்டிருக்கிற காரியங்களைக் குறிக்கிறதாக வெகு தெளிவாயிருக்கின்றன.

3. முதலாம் அதிகாரம் வாக்கியம் இருபதில் "என் வலது கரத்தில் நீ கண்ட ஏழு நட்சத்திரங்களின் இரகசியத்தையும், ஏழு பொன் குத்துவிளக்குகளின் இரகசியத்தையும் எழுது; அந்த ஏழு நட்சத்திரங்களும் ஏழு சபைகளின் தூதர்களாம்; நீ கண்ட ஏழு குத்துவிளக்குகளும் ஏழு சபைகளாம்." என்று வாசிக்கிறோம். அவருடைய வலது கரத்தில் ஏந்திக்கொண்டிருந்த ஏழு நட்சத்திரங்களும், ஏழு சபையின் தூதர்களாம். தூதர்கள் என்பது யாபேரும் ஒப்புக்கொள்ளுகிறபடி ஊழியக்காரர்களையே குறிக்கிறது. அப்படியே தேவ குமாரன், குறிக்கப்பட்டிருக்கிற இந்த ஏழு சபைகளின் ஊழியக்காரர்களை மாத்திரம் தமது கையில் ஏந்தி, அவர்களுடைய சகல பாதுகாப்பையும், நடத்துதலையும் தான், கவனிக்கிறவராயிருந்தாரோ? அல்லது சுவிசேஷ கால முதல் அவருடைய சகல மெய்யான ஊழியக்காரர்களையும் தமது தாங்குதலான வல்லமையோடு பராமரித்து நடத்துகிறவராயிருக்கிறாரா? நிட்சயமாகவே சபைக்கு தலைவராகிய கிறிஸ்து, தமது சகல மெய்யான ஊழியக்காரர்களையும், தமது வல்லமையுள்ள வலது கரத்தால் உலகத்தின் முடிவு பரியந்தம் தாங்கி நடத்துகிறவராயிருக்கிறார்.

4. அந்த ஏழு குத்துவிளக்குகளின் மத்தியிலே மனுஷ குமாரன் காணப்பட்டார். (வெளி. 1: 13.) இதினாலே அவர் தமது சபைகளாகிய குத்துவிளக்குகளுக்கு, தம்மிலேயிருந்து எக்காலமும் வெளிச்சம் கொடுக்கிறவராயும், அவைகளின் மத்தியிலே இவர்

காணப்படுவதால் இவர் சமுகம் அவரது சபையோடு எக்காலங்களிலும் இருப்பதாகவும், தமது சபைகளை பாதுகாப்பதுமன்றி, அவைகளுடைய சகல கிரியைகளையும், வெகு நுட்பமாய்க் கண்டுபிடிக்கிறவருமாயிருக்கிறார். அவர் தமக்கும், தமது சபைக்கும் இதே தன்மையுடையவராக உலகத்தின் கடைசி பரியந்தம் இருக்கிறதில்லையா?

5. ஏழு என்ற இலக்கத்தை உபயோகிக்கிற காரணமாவது:—இந்த எண் வேதாகமத்தில் எப்பொழுதும் பூரணத்தையும், நிறைவையும் காட்டுகிறதாயிருக்கிறது. அப்படியே உலக தோற்றத்தில் முதலாய் ஏழு நாள் கொண்டது ஓர் பூரண வாரமாக ஏற்படுத்தப்பட்டு, இன்னும் அப்படியே நடந்துகொண்டு வருகிறதாயுமிருக்கிற சத்தியத்தை, எப்பொழுதும் நினைப்பூட்டுகிறதாயுமிருக்கிறது. ஏழு நட்சத்திரங்கள், ஏழு குத்து விளக்குகள் என்பவைகளைப்போல ஏழு சபை யென்னும் பதமும், தான் குறித்துக் காட்டுகிற காரியத்தின் பூரணத்தை காட்டுகிறதாயிருக்கிறது.

6. ஆனால் இந்த ஏழு சபைகளின் பெயரை தெரிந்துகொண்ட காரணமோ வென்றால் கொடுக்கப்பட்டிருக்கிற ஏழு சபைகளின் பெயரின் அர்த்தங்கள், இந்த ஏழு சபைகளால் குறிக்கப்பட்டிருக்கிற காலங்களில் நடந்தேறவேண்டியதாயிருக்கிற சம்பவங்களுக்கு வெகு திட்டமாய் பொருந்தியதாயிருக்கிறது.

வைராக்கிய சபை.

1. எபேசு (விரும்பப்படத்தக்கது) வெளி. 2: 1-7. தேவனுடைய ஆதி சபையின் குணத்தையும், நிலமையையும் இந்த வார்த்தை வெகு திட்டமாய் காட்டுகிறதாயிருக்கிறது. இந்த சபையின் காலத்து ஜனங்கள், கிறிஸ்தவ உபதேசத்தை வெகு சுத்தமாய்க் கேட்டு ஒப்புக்கொண்டது மன்றி, பரிசுத்த ஆவியின் அனுக்கிரகத்தையும், ஆசீர்வாதத்தையும் அனுபவித்தவர்களாயிருந்தார்கள். என்றாலும் இவர்களிடத்திலும் ஒரு குறைவு காணப்பட்டதாக வாசிக்கிறோம்.

"நீ ஆதியில் கொண்டிருந்த அன்பை விட்டாய்" இதைக் கவனிக்கும்போது எல்லாவித கிறிஸ்தவ அனுபோகங்களும், வேத வியாக்கியானங்களும், சகலவித ஆராய்ச்சிகளும், கல்வி தேர்ச்சிகளும் இருந்தபோதிலும்; அவரிடத்திலிருக்கவேண்டிய அன்பில் குறைவுள்ளவர்களாக காணப்பட்டால் யாதொரு பிரயோசனமேயில்லை. அந்தக் குறைவு இருதயத்தை இருளாக்கிப்போடும்.

'நிக்கொலாய் மதஸ்தரின்' கிரியைகளாவது:—அநேக பெண்களை, மனைவிகளாய் அநேகர் சேர்ந்து வைத்துக் கொள்ளலாமென்பதும்; விபசாரம், வேசித்தனம் பாவமில்லை யென்பதும்; விக்கிரகங்களுக்குப் படைத்தவைகளைப் புசிக்கலாமென்பவைகளுமே.

இந்த முதல் சபையால் குறிக்கப்பட்ட காலம் கிறிஸ்துவின் உயிர்த்தெழுதலிலிருந்து முதலாம் நூற்றாண்டு முடிய; அதாவது கடைசி அப்போஸ்தலனின் மரணமட்டும் (கி. பி. 34-100.)

துன்பப்பட்ட சபை.

2. சிமிர்னா (சுகந்த வாசனை) வெளி. 2: 8-11. இந்த சபையின் காலத்தில் தேவனுடைய பரிசுத்தவான்களில் அநேகர் அஞ்ஞான ரோம அரசாட்சியால் வெகு துன்பம் அடைந்தார்கள். இவைகளில் மிகவும் கொடுமையானது, தையோக்லிஷியன் என்ற அஞ்ஞான ரோமராயன் காலத்தில் 'பத்து உபத்திரவங்கள்' யென்று பத்து தீர்க்கத்தரிசன வருஷங்களாய் (கி. பி. 303-313) கிறிஸ்தவ சபைகள் அனுபவித்த, மிகுந்த துன்பங்களே. எப்படி இந்த தூது ஓர் தீர்க்கதரிசனமாயிருக்கிறதோ, அப்படியே இதில் குறிக்கப்பட்டிருக்கிற நாளும், தீர்க்கதரிசன நாளாகவேயிருக்கிறது. (எசே. 4: 4-6.) இந்த சபை படப்போகிற மிகுந்த உபத்திரவத்தை அறிந்தவரானதால், முதலாவதே அதைப்பார்த்து, பின்வருமாறு தைரியப்படுத்துகிறார். "முந்தினவரும், பிந்தினவரும், மரித்திருந்து பிழைத்தவருமானவர் சொல்லுகிறதாவது" நீங்கள் என்னைப்போல் மரித்தாலும் நான் உயித்தெழுந்திருக்கிறபடியே உங்களையும் ஏற்ற காலத்தில் உயிரோடே எழுப்புவேன். ஆகையால் எவ்வித மரணம் வந்தாலும் பயப்படாதிருங்கள் என்கிறார். இந்த உபத்திரவம் சிமிர்னா சபைக்கு மாத்திரமன்றி, அந்தக் காலத்திலுள்ள சகல கிறிஸ்தவ சபைகளுக்கும் நேரிட்டதால், இதைப்போலவே மற்றும் சபைகளுக்கும் கொடுக்கப்பட்ட தூதுகளும் அந்தந்த சபைகள் குறிப்பிடுகிற கால முழுவதிற்கும் உரியதென்பதற்கு இதுவும் ஓர் தகுந்த நியாயமே. தேவனுடைய மெய்யான பிள்ளைகளுக்கு 'யூதர்' என்னும் பதம் உபயோகிக்கப்பட்டிருக்கிறது. (ரோ. 2: 28, 29) இந்த சபையின் காலம் (கி. பி. 100-323.)

3. பெர்கமு (உன்னதம்) வெளி. 2: 12-17. இந்த சபையை முதலாவதாகவே கண்டிப்பாய் எச்சரித்து, "இருபுறமும் கருக்குள்ள பட்டயத்தை உடையவர் சொல்லுகிறதாவது" என்று ஆரம்பித்து, நீ மனம் திரும்பாவிட்டால், என் வாயின் பட்டயத்தால் யுத்தம் பண்ணுவேன் என்கிறார். கிறிஸ்து மார்க்கத்தில் அநேக முக்கிய கண்காணிகள், பிலேயாமைப்போலிருந்து செல்வத்தையும், ஜனங்களின் பிரியத்தையும், விரும்பி கிறிஸ்து மார்க்கத்தின் உன்னத மேன்மையைத் தாழ்த்தி, திரளான ஜனங்களை சபையில் சேர்க்க விரும்பி, அநேக அஞ்ஞான பழங்க வழக்கங்களுக்கு இடம் கொடுத்து விட்டார்கள். இப்படி ஆவிக்குறிய காரியத்தில், பிலேயாமின் போதகம் சபையில் வந்து ஏறிவிட்டது. கொன்ஸ்தந்தீன் (Constantine) ராயனுடைய காலமுதல் (313. கி. பி.) கிறிஸ்தவர்களை சங்கரித்த அதே அதிகாரம், கிறிஸ்து மார்க்கத்தை அனுசரித்தது மன்றி, திரளான ஜனங்களை கிறிஸ்து மார்க்கத்தில் சேர்க்கவேண்டுமென்று வெகுமதிகளாலும், உயர்ந்த உத்தியோகந்தாலும் பிரயாசப்பட்டது. இதுவுமன்றி, இப்படி சபைக்குள் கொண்டுவந்துவிட்ட அஞ்ஞான நாட்களையும், சடங்குகளையும், சட்டங்களால் ஸ்தாபித்து, உறுதிப்படுத்த ஆரம்பித்துவிட்டார்கள்.

'அந்திப்பா' யென்பது பாப்பு மார்க்க அதிகாரத்துக்கு எதிர்த்த கூட்டத்தாரைக் குறிக்கிறது. இந்த சபையின் காலம் கி. பி. 323 லிருந்து பாப்பு மார்க்கம் ஸ்தாபிக்கப்பட்ட வருஷமாகிய 538 டோடு முடிகிறது.

ஜனங்களுக்கு பிரியமான சபை.

4. தியாத்திரா (மனஸ்தாபப் பலி) வெளி. 2: 18-29. இந்தச் சபையும் வெளி. 12: 14-16 ல் சொல்லப்பட்டிருக்கிற காலமும் ஒன்றுதான். இந்தச் சபையின் காலத்து ஜனங்கள் பாப்பு மார்க்கத்தின் நிஷ்டூரங்களுக்கு பயந்து மலைகளிலும், குன்றுகளிலும், போய் வசித்தார்கள். இந்தச் சபைக்கு முந்தின சபையின் காலத்திலே ஆவிக்குறிய காரியங்களில் வேசித்தனங்கள் ஆரம்பித்துவிட்டது என்று பார்த்தோம். இங்கே சொல்லப்பட்டிருக்கிற யேசபேலின் ஜீவியத்தை சற்று கவனிப்போம்.

1. இவள் ஓர் வைராக்கியமுள்ள சூரிய வணக்கக்காரி.

2. இவள் ஓர் இஸரவேலின் ராஜாவை விவாகம் பண்ணினவள்.

3. இவள் தன் காலத்திலே மெய்யான யெகோவாவின் வணக்கத்துக்குப் பதிலாக தனது சூரிய வணக்கத்தை ஏற்படுத்தினாள்.

4. தன்னுடைய கொள்கையை ஒப்புக்கொள்ளாத தேவனுடைய ஜனங்களை வெகுவாய்த் துன்பப்படுத்தினாள். பழைய காலத்து சூரிய வணக்கத்தையும், அத்தோடு சேர்ந்த சகல வீண் பக்தியையுடைய பாப்பு மார்க்க கொள்கைகளையும் இது சரியாய் குறிக்கிறதாயிருக்கிறது. யேசபேலைப்போல், பாப்பு மார்க்கம், பூமியின் ராஜாக்களின் சிநேகத்தை நாடி, அவர்களின் அதிகாரத்தைச் சேர்த்துக்கொண்டு தேவனுடைய மெய்யான பிள்ளைகளை துன்பப்படுத்தினது. இப்படி இந்தத் துன்பங்களில், ஆயிரக்கணக்கான தேவனுடைய தாசர்கள் பயங்கரமும், கொரூமுமான, மரணங்களால் மடிவிக்கப்பட்டார்கள். இந்த உபத்திரவக் காலத்தைப்பற்றி நமது இரட்சகர் மத். 24: 21, 22 ல் "உலக முண்டானது முதல் இதுவரைக்கும் சம்பவித்திராததும், இனிமேல் சம்பவியாததுமான மிகுந்த உபத்திரவம் அப்பொழுது உண்டாயிருக்கும். அந்த நாட்கள் குறைக்கப்படாதிருந்தால் ஒருவனாகிலும் தப்பிப்போவதில்லை; தெரிந்துகொள்ளப்பட்டவர்களினிமித்தமோ அந்த நாட்கள் குறைக்கப்படும்." என்று திருவுளம்பற்றியிருக்கிறார். மார்க்கச் சீர்திருத்தலால் (Reformation) அந்த உபத்திரவம் குறைக்கப்பட்டது. அதுவுமன்றி, யேசபேலின் கொள்கை எப்படி பலப்பட ஆரம்பித்ததோ, அப்படியே, இந்தச் சபையின் காலத்து ஜனங்கள், பாப்பு மார்க்கத்தின் தப்பான அஞ்ஞான உபதேசங்களை, கைக்கொள்ள ஆரம்பித்து விட்டார்கள். அப்படிப்பட்ட உபதேசங்களை விட்டு விலகவேண்டுமென்றும், அது தனக்கு மிகவும் அருவருப்பாயிருக்கிறதென்றும், வெகு கண்டிப்பாய் எச்சரிக்கிறார். இந்தச் சபையின் காலம், ஒரு காலமும், காலங்களும், அரைக்காலமும் என்றும் (தானி. 7: 25; 12: 7; வெளி. 12: 14.) 42 மாதங்களென்றும் (வெளி. 11: 2; 13: 5.) 1260 நாளென்றும் (வெளி. 11: 3; 12: 6.) குறிக்கப்பட்டிருக்கிறது. இவைகள் பாப்பு மார்க்கத்தின் நிஷ்டூரக் காலங்களாகிய கி. பி. 538-1798 வருஷங்களைக் குறிக்கிறதாயிருக்கிறது.

நற்கிரியைகளின் சபை.

5. சர்தை (சந்தோஷப் பாடல்) வெளி. 3: 1-6. இந்தச் சபை சந்தோஷப்படவேண்டியதற்கு காரணமென்ன வென்றால்:—தேவனுடைய ஜனங்களின் மிகுந்த உபத்திரவத்தின் காலங்கள் இப்பொழுது ஓர் முடிவுக்கு வந்துவிட்டது. சீர்திருத்தலின் காலத்தில் உண்டான பெரிய சுத்த மார்க்க எழுப்புதல் கொஞ்சக் காலத்துக்குள் பின் வாங்க ஆரம்பித்துவிட்டது. இவ்விதமாக, அநேக பெரிய புரோட்டஸ்டண்டு மார்க்கங்களும் தாங்கள் சாதித்த சத்தியங்களை விட்டு, பின்வாங்கி உலகத்துக்கு பிரியப்பட ஆரம்பித்துவிட்டது. ஆகையால் அந்தச் சபையைப் பார்த்து 'நீ உயிருள்ளவனென்று பெயர் கொண்டிருந்தும் செத்தவனாயிருக்கிறாய்' என்கிறார். இந்தச் சபையின் காலம் பாப்பு மார்க்க அதிகாரம் முடிவான 1798 லிருந்து இரட்சகர் மத். 24: 29 ல் சொல்லியபடி நட்சத்திரங்கள் விழுந்த 1833-ம் வருஷ

மட்டும் குறிக்கிறதாயிருக்கிறது. இக்காலத்திலிருந்துதான் உலகமெங்கும் இரண்டாம் வருகையைப்பற்றிய பெரிய எழுப்புதலான கூட்டங்கள் எழும்பிவிட்டன.

அன்புள்ள சபை.

6. பிலதெல்பியா (சகோதர சிநேகம்) வெளி. 3: 7-13. இந்தச் சபையிலுள்ளவர்கள் சர்தை சபையில் மிகவும் உண்மையுள்ளவர்களாகக் காணப்பட்டவர்கள். இந்தக் காலத்தில் பெரிய நியாயத்தீர்ப்பின் தூது எங்கும் சென்றது. இந்த தூதை ஏற்றுக்கொண்டவர்கள் அவருடைய வருகைக்கு ஆயத்தப்பட்டவர்களாய் உலகத்தைவிட்டு பிரிந்தார்கள். அவர்களைப் பார்த்து "நீ என் நாமத்தை மறுதலியாமல், என் வசனத்தைக் கைக்கொண்டபடியினாலே, இதோ, திறந்த வாசலை உனக்கு முன்பாக வைத்திருக்கிறேன், அதை ஒருவனும் பூட்டமாட்டான்" என்கிறார். அதாவது, இந்தக் காலத்தில்தான் தானியேல் 8: 14 ல் சொல்லிய 2300 இராப்பகல் தரிசனம் முடிவாகிறதாயிருந்ததால், அவர் பரலோகத்திலிருக்கிற கூடார ஸ்தலத்தின் பரிசுத்த ஸ்தலத்தைவிட்டு, மகா பரிசுத்த ஸ்தலத்தில் பிரவேசித்து, கடைசியாக தம்முடைய ஊழியத்தை முடிக்கப் போவதால்தான் "திறந்த வாசலை உனக்கு முன்பாக வைத்திருக்கிறேன்" என்கிறார். இந்தச் சபையின் காலம், நியாயத்தீர்ப்பின் தூது உலகத்திற்குப்போக ஆரம்பித்த 1833-ம் வருஷத்திலிருந்து, பரலோகத்தின் மகா பரிசுத்த ஸ்தலத்துக்குள் கிறிஸ்து சென்று, நியாயத்தீர்ப்பின் வேலை ஆரம்பிக்கப்பட்டிருக்கிற 1844-ம் வருஷம் வரை குறிக்கிறது.

வெது வெதுப்பின் சபை

7. லவோதிக்கேயா (ஜனத்தின் நியாயத்தீர்ப்பு அல்லது நீதியுள்ள ஜனங்கள்) வெளி. 3: 14-22. இந்தக் காலத்தின் ஜனங்கள் பெரிய பேர் கிறிஸ்தவர்களும், சற்றேனும் மெய்யான தேவ பயமும், உண்மையான பக்தியு மற்றவர்கள்.

இவர்களுக்கு தேவ அன்பில் அனலுமில்லை, தேவனை விட்டுப் பிரிந்திருப்பதாய் மனச்சாட்சில் குளிருமல்ல. இப்படியாக இது ஆவிக்குரிய காரியத்தில் மிகவும் நிர்பந்தமும், பரிதபிக்கக்கூடியதுமான நிலைமையில் இருக்கிறதாயிருந்தும், தனது செல்வச்செருக்கையும், ஐசுவரியத்தையும், வல்லமையையும், அதிகாரத்தையும், வெகுவாய் மதித்து பெருமை பாராட்டுகிறதாயிருக்கிறது. இது நம்மெல்லாருக்கும் தெரிந்திருக்கிறபடி தற்காலம் உலகமெங்குமிருக்கிறபடி பெயர் கிறிஸ்தவ சபைகளின் நிலைமை. ஆனால் கர்த்தரோ அதைப்பார்த்து மிகவும் பரிதபித்து அதற்குப் பின்வாறு ஆலோசனை சொல்கிறார்.

1. நெரிப்பிலே புடமிடப்பட்ட பொன்:—விசுவாசமும், அன்பும் (1 பேது. 1: 7.)

2. வெண் வஸ்திரம்:—நீதி (வெளி. 19: 8.

3. கலிக்கம்:—பரிசுத்த ஆவி (1 கொரி. 2: 12-16) இவைகளை என்னிடத்தில் பணமுமின்றி, விலையுமின்றி வாங்கி அநுபவித்துக்கொள் என்கிறார்.

இந்தச் சபையின் காலத்தில்தான் (வெளி. 14: 6-16 ல்) சொல்லிய மூன்று பெரிய தூதுகளும், கிறிஸ்துவின் வருகைக்குச் சற்று முன்னதாக உலகத்திற்குச் செல்லுகிறதாயிருக்கிறது. இப்படி இந்த தூதுடன் வாசற்படியிலே நின்று ஒவ்வொருவரையும் தட்டுகிறார். இதற்கு இணங்கி இடம் கொடுப்போமானால் பெரிய ஆசீர்வாதம் கூறுகிறார். "இதோ, வாசற்படியிலே நின்று தட்டுகிறேன், ஒருவன் என் சத்தத்தைக் கேட்டு, கதவைத் திறந்தால், அவனிடத்தில் நான் பிரவேசித்து, அவனோடே போஜனம் பண்ணுவேன், அவனும் என்னோடே போஜனம் பண்ணுவான். நான் ஜெயங்கொண்டு என் பிதாவினுடைய சிங்காசனத்திலே அவரோடேகூட உட்கார்ந்ததுபோல, ஜெயங்கொள்ளுகிறவனெவனோ அவனும் என்னுடைய சிங்காசனத்தில் என்னோடேகூட உட்காரும்படிக்கு அருள்செய்வேன்." இவ்விதமாய் "தேவனுடைய கற்பனைகளையும் இயேசுவின்மேலுள்ள விசுவாசத்தையும் காத்துக்கொள்ளுகிறவர்களாகிய" ஓர் நீதியுள்ள ஜனத்தை உலகமெங்கும் கூட்டிச் சேர்க்கிறதாயிருக்கிறது. இந்த ஏழு சபைகளிலும் ஜெயம் கொள்ளுகிறவர்களுக்கு சொல்லப்பட்டிருக்கிற பெரிய வாக்குத்தத்தங்களுக்கு, இதை வாசிக்கும் ஒவ்வொரு நண்பர்களும் பங்குள்ளவர்களாகும்படி, நமது காலத்தில் உலகமெங்கும் வெகு தீவிரமாயும், வல்லமையாயும், நம்மைச்சுற்றிலும் சென்றுகொண்டிருக்கிற இந்தக் கடைசி சத்திய தூதுகளுக்குச் செவி கொடுத்து நமது வழிகளை சீர்படுத்துவோமாக.

ஈ. டி. தாமஸ்.

ஏன் பிரேதக்குழிகளண்டையில் உட்கார்ந்திருக்கிறீர்கள்?

ஏசாயா, தன் தீர்க்கதரிசனப் புஸ்தகம் 65-ம் அதிகாரம் 4-ம் வாக்கியத்தில், பிரேதக் குழிகளண்டையில் உட்கார்ந்து பாழான ஸ்தலங்களில் இராத்தங்குகிறவர்களைக் குறித்துப் பேசி யிருக்கிறார்.

தற்காலத்தில் ஜனங்கள் பிரேதக்குழிகளண்டைக்கு நேராக தங்கள் மனதைத் திருப்பி, மரித்தவர்கள் மூலமாய் அநேக இரகசியங்களை அறிந்துகொள்ளலாம் என்கிற எண்ணம், அவர்களுக்குள் நாளுக்குநாள் அதிகரித்துக்கொண்டு வருகிறதை நாம் பார்க்கிறோம். அந்த தீர்க்கதரிசியே 8-ம் அதிகாரம் 19-ம் வாக்கியத்தில் "உயிருள்ளவர்களுக்காகச் செத்தவர்களிடத்தில் விசாரிக்கலாமோ"? என்று ஒரு கேள்வியும் கேட்டிருக்கிறார்.

இப்படி ஜனங்கள் உயிருள்ளவர்களைக் குறித்து அறிந்துகொள்ள, செத்தவர்களிடத்துக்குத் திரும்புகிறதைப்பற்றி, தீர்க்கதரிசி ஆச்சரியப்பட்டு, நாம் "வேதத்தையும் சாட்சி ஆகமத்தையும் கவனிக்கவேண்டு"மென்று கற்பித்து "இந்த வார்த்தையின்படியே சொல்லாவிட்டால், அவர்களுக்கு விடியற்காலத்து வெளிச்சமில்லை" என்கிறார். வச. 20.

இனி வருங்காலத்தில் சம்பவிப்பவைகளில் நாம் அவசியமாய் அறியவேண்டியவைகளெல்லாம், தேவ வசனத்தில் வெளிப்படுத்தப்பட்டிருக்கிறது. செத்தவர்களிடத்தில் நாம் விசாரித்தறிந்து கொள்ளக்கூடியது யாதொன்றும் கிடைக்கவே கிடையாது. ஏனென்றால், "உயிரோடிருக்கிறவர்கள் தாங்கள் மரிப்பதை அறிவார்களே, மரித்தவர்கள் ஒன்றும் அறியார்கள்; இனி அவர்களுக்கு ஒரு பலனு மில்லை, அவர்கள் பேர் முதலாய் மறக்கப்பட்டிருக்கிறது" என்று வேத வசனம் சொல்லுகிறது. பிர. 9: 5.

எதையும் அறிந்துகொள்வதற்கு நாம் மரித்தோரை விசாரிப்போமானால், சாத்தானின் பொய் புராணங்களாலும், கட்டுக்கதைகளாலும், மூடப்பக்திக்குரியவைகளாலும், நம்முடைய மனதை நிரப்புகிறதற்கு இடங்கொடுக்கிறவர்களாயிருப்போம்.

இயேசு கிறிஸ்துவே உலகத்துக்கு வந்து, எந்த மனுஷனையும் பிரகாசிப்பிக்கிற மெய்யான ஒளியாயிருக்கிறார். யோவான் 1: 9. நாம் முழு இருதயத்தோடும் அவரிடத்திற்கு திரும்புவோமாக. அப்பொழுது அவர் ஆத்துமாக்களின் எல்லா வாஞ்சையையும் திருப்தி செய்கிறதை நாம் காண்போம்.

பூரண நம்பிக்கை.

"நோவா தனக்குக் கர்த்தர் கட்டளையிட்டபடி யெல்லாம் செய்தான்." ஆதி. 7: 5. இப்படிப்பட்ட கிரியை, நோவாவின் ஜீவியத்தில் ஒரு தடவை மாத்திரமல்ல, அநேகந்தடவையில் காணப்பட்டது. நாளுக்குநாள் அவன் தேவனுடைய சித்தத்தையும், விருப்பத்தையும் நிறைவேற்றிக்கொண்டு வந்தான். ஆனால் அவன் தன்னைச் சுற்றிலுமுள்ள மற்ற ஜனங்களுக்கு, பேழையைப் பண்ணும் விஷயத்தில் ஓர் அறிவீனன்போல் காணப்பட்டான். பேழையின்மேல் ஒரு துளி மழையாவது விழாமலிருந்தபோதிலும், அவன் தான் அடைத்து வைத்திருந்த எல்லா ஜெந்துக்களுக்கும் ஆகாரங் கொடுத்துப் போஷித்து வந்தான். அவனும், அவனின் குடும்பமும், பேழைக்குள் பிரவேசித்த பிற்பாடு கதவு அடைபட்டதையும், அவன் கண்டபோதிலும், இன்னும் பூமியில் மழை பெய்யாமல் தாமதித்த அந்த ஏழு நாள் மட்டும், அவன் விசுவாசத்தோடு "தனக்குக் கர்த்தர் கட்டளையிட்டபடி யெல்லாம்" செய்வாரென்று உறுதியாய் அவரில் நம்பி காத்திருந்தான். அவனிடத்தில் காணப்பட்ட அந்த பூரண நம்பிக்கை நம்மிலும் காணப்படும்படி முயலுவோமாக.

ஸ்திரீயானவளும், வலுசர்ப்பமும்.

ஆதி. 3: 15-இல் சொல்லப்பட்டிருக்கிற ஸ்திரீயும், சர்ப்பமும், வேதாகம புஸ்தகத்தில் அடங்கியுள்ள கடைசி புஸ்தகமாகிய வெளிப்படுத்தின விசேஷத்தில் சொல்லப்பட்டிருக்கிற ஸ்திரீயும், சர்ப்பமும், வாஸ்தவத்தில் ஒன்றே. "அப்பொழுது தேவனாகிய கர்த்தர் சர்ப்பத்தைப் பார்த்து........உனக்கும், ஸ்திரீக்கும், உன் வித்துக்கும் அவள் வித்துக்கும் பகை உண்டாக்குவேன்; அவர் உன் தலையை நசுக்குவார், நீ அவர் குதிங்காலை நசுக்குவாய் என்றார்."

ஆதி. 3: 15-இல் சொல்லப்பட்டிருப்பது, ஒரு அடையாளமான தீர்க்கதரிசனமாயிருக்க, ஏவாள் இவ்விதமான தேவ கட்டளைக்கு, தனது சொந்த தாற்பரியத்தை வைத்து; விசுவாசித்து, தன் சொந்த மகனாகிய காயீனே வரும் ரட்சகரென்று எண்ணினாள். கர்த்தர் சர்ப்பத்தின் பின்னிலைமையைப்பற்றி பேசும்போது அவர் சர்ப்பத்தைப்பற்றி சொல்லாமல், முழுவதும் அந்த சர்ப்பத்தை தனது அதிகாரத்திற்குள் அடக்கி வந்த அந்த சாத்தானைப்பற்றியே உரைத்தார். இவ்விஷயத்தைப்பற்றி நாம் பின் வருமாறு தெளிவாய் அறிந்து கொள்ளலாம். "உலகமனைத்தையும் மோசம் போக்குகிற பிசாசு என்றும் சாத்தான் என்றும் சொல்லப்பட்ட பழைய பாம்பாகிய பெரிய வலுசர்ப்பம் தள்ளப்பட்டது." வெளி. 12: 9; 20: 2.

அந்த ஸ்திரீயும், வலுசர்ப்பமும் ஒன்றுக்கொன்று ஒருபொழுதும் இசைந்து கொள்ளாதபடி, தேவன் அவ்விரண்டுக்கும் எப்பொழுதும் மாறாத பகையை உண்டாக்குகிறார். ஆகவே, இவ்விரண்டு பேரும் தங்களின் யோசனைகளில் வெகு தூரம்; அதாவது வானத்திற்கும் பூமிக்கும் எவ்வளவு தூரமோ, அவ்வளவு தூரமாய் ஒருவருக்கொருவர் விலகி யிருக்கிறார்கள். 'ஸ்திரீ' என்று தீர்க்கதரிசனமாய் சொல்லப்பட்ட பதம் ஏவாளையாவது மற்றெந்த பெண்ணையாவது குறிக்கிறதில்லை. ஏனென்றால், எதிரியாகிய நீயோனிடத்தில் பெண்களுக்கு பகையைப் பார்க்கிலும் சிநேகமே சாதாரணமாய் ஏற்பட்டிருக்கிறது.

'ஸ்திரீ' என்று பேசும் விஷயத்தில் அது ஒரு சபையை குறிக்கும் அடையாளமாயிருக்கிறது. இதை இரண்டு திருஷ்டாந்தங்களுடன் காண்பிக்கிறேன். "நான் உங்களை கற்புள்ள கன்னியாகக் கிறிஸ்து என்னும் ஒரே புருஷனுக்கு ஒப்புக்கொடுக்க நியமித்தபடியால், உங்களுக்காக தேவ வைராக்கியமான வைராக்கியங் கொண்டிருக்கிறேன்." 2 கொரி. 11: 2. "செல்வமாய் வளர்ந்த ரூபவதியான சீயோன் குமாரத்தியைப் பாழாக்குவேன்." எரே. 6: 2. இவ்விதமாய் 'ஸ்திரீ' என்று தீர்க்கதரிசனத்தில் சொல்லும்போதெல்லாம் சபையைத்தான் குறிக்கிறது. ஏதேன் தோட்டத்தின் காலத்திலிருந்து இந்நாள்மட்டும் ஸ்திரீயும், சர்ப்பமும் பிராணச் சத்துருக்களாயிருந்து செய்யும் கொடிய சண்டையை, தேவன் முன்னமே ஒரு சித்திரப் படம் போல வர்ணித்திருக்கிறார்.

"வலுசர்ப்பம் அவளுக்கு முன்பாக நின்றது. சகல ஜாதிகளையும் இருப்புக்கோலால் ஆளுகை செய்யும் ஆண் பிள்ளையை (கிறிஸ்து) அவள் பெற்றாள்; அவளுடைய பிள்ளை தேவனிடத்திற்கும் அவருடைய சிங்காசனத்தினிடத்திற்கும் எடுத்துக்கொள்ளப்பட்டது." வெளி. 12: 4, 5. "அப்பொழுது வலுசர்ப்பமானது ஸ்திரீயின்மேல் கோபங்கொண்டு, தேவனுடைய கற்பனைகளைக் கைக்கொள்ளுகிறவர்களும், இயேசு கிறிஸ்துவைக்குறித்து சாட்சியை உடையவர்களுமாகிய அவளுடைய சந்ததியான மற்றவர்களுடனே (கடைசி காலத்தின் சபையுடனே) யுத்தம் பண்ணப்போயிற்று." வெளி. 12: 17.

முக்கிய கவனிப்பு.

சர்ப்பம்—பிசாசு என்னப்பட்ட சாத்தான்.
ஸ்திரீ—மெய்யான சபை.
வித்து—கிறிஸ்து.
சர்ப்பத்தின் தலையை நசுக்குதல்—கிறிஸ்து சாத்தானின்மேல் செலுத்தும் முழு அதிகாரம்.

"உங்கள் நாமங்கள் பரலோகத்தில் எழுதியிருக்கிறதற்காக சந்தோஷப்படுங்கள்." ஆனால், அநேக ஜனங்களோ தங்கள் நாமங்கள் பெரிய கூட்டங்களிலும், காட்சிசாலைகளிலும் முதன்மையாய் கூறப்படுகிறதினாலும், இன்னும் அநேகர் தங்களுடைய பெயர் எல்லோரும் வாசிக்கும் உலக பேப்பர்களிலேயும் பெரிய பத்திரிகைகளிலேயும் காணப்படுகிறதினாலும், மற்றவர்கள் தங்கள் பெயர்கள் கோவில்களிலுள்ள புஸ்தகங்களில் பதியப்பட்டிருக்கிறபடியினாலும் சந்தோஷப் படுகிறார்கள். இவைகளெல்லாம் உலகக் காரியங்களே. இப்படிப்பட்ட உலக மகிமை வெகு சீக்கிரம் மறக்கப்பட்டு போகும். சுமார் நூறு வருஷங்களுக்கு முன்னுள்ள பேர்பெற்ற மனுஷர்களுடைய நாமங்களெல்லாம் மறக்கப்பட்டும், தற்சமயமுள்ள இந்த சந்ததியினால் கேள்விப்படாமலு மிருக்கின்றன. நாம் நித்திய காலமாய் நீதிமானான தேவனுடைய பிள்ளைகளுடன் சந்தோஷப்படத்தக்கதாய், ஒருபொழுதும் மாறக்கூடாததுமான இடமாகிய பரலோகத்தில் நமது நாமங்கள் எழுதப்பட ஏன் நாம் பிரயாசப்படக்கூடாது?

தேவன் இரண்டு தடவை எழுதினார்.

நாம் வேதத்தில் தேவன் இரண்டு விஷயங்களில் தமது சொந்த கையால் எழுதினார் என்று பார்க்கிறோம். தேவன் மேகத்தோடும், இடி முழக்கத்தோடும், பிரகாசத்தோடும் வானத்திலிருந்து இறங்கி, தமது பரிசுத்தமான பிரமாணத்தை அங்கு கூடிவந்த ஜனங்களுக்கு பிரசித்தப் படுத்தினார். பின்பு 'தேவனுடைய விரலால் எழுதப்பட்டுள்ள' பிரமாண மடங்கிய இரண்டு கற்பலகைகளை அவர் மோசேயினிடத்தில் கொடுத்தார் என்று வாசிக்கிறோம். கற்பலகையின்மேல் எழுதப்பட்டது என்று விளங்கும் அவ்வார்த்தை அக்கற்பனையின் அழியப்படாத தன்மையை காட்டுகின்றது. இது தேவனின் நித்தியத்தையும், மாறாத குணத்தையும் காட்டுகிற அறிகுறியாயிருக்கிறது.

அவர் இரண்டாம் தடவை எழுதினார் என்னும் விஷயம், யோவான் சுவிசேஷம் எட்டாம் அதிகாரத்தில் சொல்லப்பட்டிருக்கிறது. அங்கே ஒரு விபசார ஸ்திரீயைக் கண்டுபிடித்து, கிறிஸ்துமுன் அவளை கொண்டுவிட்டு பரிசேயர்கள் குற்றஞ் சாட்டினபோது, "இயேசுவோ குனிந்து விரலினால் தரையிலே எழுதினார்" என்று சொல்லியிருக்கிறது. இதை நாம் நுட்பமாய் படிக்கும் பட்சத்தில், நமது கர்த்தர் அவரைச் சுற்றிலும் நின்றுகொண்டிருந்த அந்த ஜனங்களின் குணத்தை என்றும் நிலைக்கக்கூடிய கல்லிலல்ல; ஆனால் காற்றால் சுலபமாய் கொண்டுபோகக்கூடிய தூசியாகிய மண்ணின்மேல் எழுதினார் என்று பார்க்கிறோம்.

நாம் அவருடைய நித்தியமான குணத்தை அடைய வேண்டுமென்பதே நமக்கு அவருடைய வாக்குத்தத்தம். "அந்த நாட்களுக்குப் பின்பு நான் அவர்களோடு பண்ணும் உடன்படிக்கையாவது: நான் என்னுடைய பிரமாணங்களை அவர்களுடைய இருதயங்களில் வைத்து, அவைகளை அவர்களுடைய மனதில் எழுதுவேன் என்று கர்த்தர் சொல்லுகிறார்." அப்படியே நாமும் அவரின் குணத்தையும், அவரின் பிரமாணத்தையும் நமது இருதயங்களில் தரிக்கும்போது, நம்முடைய ஜீவியம் அவருடன் கட்டப்படும் என்பதற்கு யாதொரு சந்தேகமே யில்லை.

சமாசாரக் குறிப்புகள்

இந்தக் கொடிய யுத்தம் நாலு வருஷமாக நடந்தது. இந்த நாலு வருஷத்திற்குள் கோடிக்கணக்கான ரூபாய்களும் கோடிக்கணக்கான உயிர்களும் நாசமாய்ப் போயிற்று. யுத்தத்தில் சம்பந்தப்பட்ட ஒவ்வொரு ஜாதியாரும் அதின் கசப்பை ருசித்தார்கள். ஆனால் இது மற்ற ராஜ்யங்களைப்பார்க்கிலும் ஜெர்மனிக்கு அதிக கசப்பாயிருந்திருக்கும். ஏனென்றால் அவர்கள் முழுவதும் தோற்கடிக்கப்பட்டார்கள். அவர்கள் வருவித்த சேதங்கள் யாவையும் கட்டிக்கொடுக்கவேண்டுமென்று கட்டளை பிறந்திருக்கிறது.

ஜெர்மனி முன்னே ஒரு பலத்த ராஜ்யமாயிருந்தது, அவர்களுடைய தரைச்சேனை உலகத்தின் எல்லா ராஜ்யங்களைப்பார்க்கிலும் அதிக நேர்த்தியாக பயிற்றுவிக்கப்பட்டும் ஆயுதம் தரிப்பிக்கப்பட்டும் இருந்தது. இப்பொழுது அந்த சேனை தாறுமாறாய்ப் போயிருப்பதை நாம் பார்க்கிறோம். அவர்கள் பிரஜைகளைக் கொள்ளையிடுகிறார்கள். தங்கள் சொந்த ராஜ்யத்திலேயே அவர்கள் கலகம் செய்கிறார்கள். தங்கள் சொந்த மனிதரையே தாங்கள் அடக்கி சீருக்குக் கொண்டுவர முடியவில்லை. ஆகையினாலே ஜெர்மனி இப்பொழுது பலவீனமான ராஜ்யங்களில் ஒன்றாயிருக்கிறதென்று நாம் சொல்லலாம்.

ஜெர்மனி முற்றிலும் தாழ்த்தப்பட்டது.

தன்னைத்தான் உயர்த்துகிறவனெல்லாம் தாழ்த்தப்படுவானென்று வேதம் சொல்லுகிறது. அது ஜெர்மனிக்கு சரியாகவே சம்பவித்தது. யுத்தம் நின்றபோது செய்த உடன்படிக்கையை நாம் வாசித்துப் பார்த்தால் ஜெர்மனி எப்படி தாழ்த்தப்பட்டதென்று நமக்குத் தெரியும்.

நேசக் கட்சிக்காரர் பின் வருமாறு செய்யும்படியாக ஜெர்மனிக்கு உத்தரவு பண்ணினார்கள்:—

(1) ஜெர்மானியர் யுத்தம் செய்வதை நிறுத்தவேண்டும்.

(2) சண்டை நடந்தபொழுது, பெல்ஜியம், பிரான்சு, உருசியா முதலிய தேசங்களில் அவர்கள் படையெடுத்துச் சென்றபொழுது தாங்கள் கைப்பற்றிய பூசாணங்கள் யாவையும் விட்டுவிட்டுப் போகவேண்டும்.

(3) ஜெர்மானியர் ஏறக்குறைய 50 வருஷங்களுக்கு முன் பிரான்சு தேசத்திலிருந்து தாங்கள் பிடித்துக்கொண்ட அல்சேஸ்லொரேன் என்னும் மாகாணத்தைத் திரும்பவும் பிரான்சுக்காரருக்குக் கொடுத்துவிடவேண்டும்.

(4) பிரான்சு, பெல்ஜியம் தேசங்களின் எல்லைகளிலிருந்து ரைன் நதியின் கிழ்கரை வரையில் பரவியிருக்கும் ஒரு பெரிய ஜெர்மானிய மாகாணத்தையும் அதிலுள்ள அநேக பெரிய கோட்டைகளையும் சமாதானம் முற்றும் நிலைபெறும் வரையில் நம்முடைய சேனைகள் வசம் விட்டுவைக்கவேண்டும்.

(5) ஜெர்மானியர் தாங்கள் படையெடுத்துச் சென்ற பெல்ஜியம் பிரான்சு, உருசியா முதலிய தேசங்களிலிருந்து பிடித்துவந்த ஆண்களையும் பெண்களையும் அவரவர் சுதேச பட்டணங்களுக்கும் கிராமங்களுக்கும் அனுப்பிவிடவேண்டும்.

(6) சண்டை நடந்த காலத்தில் ஜெர்மானியர் நம்மிடமிருந்து பிடித்த கைதிகளையெல்லாம் திரும்ப அனுப்பிவிடவேண்டும். ஆனால் நம்முடைய சேனைகள் பிடித்திருந்த ஜெர்மன் கைதிகளை சமாதானம் உறுதியாய் நிலைபெறும் வரையில் நம்மிடத்திலேயே வைத்திருக்கவேண்டும்.

(7) சண்டை நடந்த காலத்தில் ஜெர்மானியர் திருடிப்போன பொன்னையும், தஸ்தாவேஜுகளையும் திரும்பக் கொடுத்துவிடவேண்டும்.

(8) இன்னும் ஜெர்மானியர் திரும்பக் கொடுத்துவிடவேண்டியவைகள் பின் வருமாறு:—2500 மிகவும் பெரிய பீரங்கிகள், 2500 சிறு பீரங்கிகள், 2000 ஆகாயக் கப்பல்கள், 5000 இருப்புப்பாதை நீராவி யந்திரங்கள், 150,000 இருப்புபபாதை ஜாமான் வண்டிகள், 5000 பாரமிழுக்கும் மோட்டார் வண்டிகள், 6 ஜெர்மானியருடைய பெரிய சண்டைக் கப்பல்கள், 8 சின்ன சண்டைக் கப்பல்கள், 50 "சங்காரன்" என்று அழைக்கப்படும் அதிவேகமாய் ஓடும் சிறு சண்டைக் கப்பல்கள், பெரிதும் சிறிதுமான அவர்களுடைய எல்லா முழுகு கப்பல்களும் வேறு அநேக கப்பல்களுமாம்.

ஜெர்மானியர் அதிக பலவீன மடைந்து கீழ்படிய வேண்டியதாக இருந்ததினால் நேசக்கட்சிக்காரர் இந்தக் கட்டளைகளைக் கொடுத்தார்கள். ஜெர்மானியருக்கு வேறு வழியில்லை. அவர்களுடைய சேனைகள் வரவரக் குறைந்துகொண்டே வருகிறது. ஆனால் நேசக்கட்சிக்காரருடைய சேனையோ வரவர அதிகரித்துக்கொண்டே வருகிறது. ஜெர்மானியர் செய்யும்படி நேசக்கட்சிக்காரர் அவர்களுக்குக் கொடுத்த கட்டளைகளை ஜெர்மானிய ஸ்தானாதிபதிகள் பார்த்து அதிக பயந்தார்கள். அவ்வளவு கேட்கவேண்டாமென்று அவர்கள் நேசக்கட்சிக்காரரை வருந்திக் கேட்டுக்கொண்டார்கள். நேசக்கட்சிக்காரர் கேட்டது நியாயமாயிருந்ததினால் ஜெர்மானியர் அந்தக் கட்டளைகளைக் கைக்கொண்டு அதின்படி செய்யாத பட்சத்தில் சண்டை மறுபடியும் ஆரம்பிக்குமென்று சொன்னார்கள். மேலே சொல்லப்பட்ட யாவற்றையும் அவர்கள் நமக்கு திருப்பிக் கொடுத்த பின்பு அவர்களால் மறுபடியும் யுத்தம் செய்ய சத்துவம் இராது.

ஜெர்மானியர் தங்கள் பணத்தையும் மனிதரையும் மாத்திரமல்ல அவர்களுக்கு ஆப்பிரிக்காவிலும் இன்னும் பல இடங்களிலுமிருந்த நாடுகளையும் இழந்தார்கள்.

சமாதான உடன்படிக்கை.

யுத்தம் இப்பொழுது ஓய்ந்திருக்கிறது. பெரிய ராஜ்யங்களின் பிரதிநிதிகளெல்லாம் இந்தக் காரியங்களை

நிகழ்கால சத்தியம்

வேத சன்மார்க்க சுகாதார விஷயங்களில் தற்கால அறிவுக்கொத்தபடி மனிதர் அபிவிருத்தியடைவதற்கென்று பிரசுரமாகும் ஓர் பத்திரிகை.

மதராஸ் ஜூலைமீ 1919.

இப்பத்திரிகை, பெங்களூரிலிருக்கும், எஸ். டி. ஏ. பப்ளிஷிங்கவுஸ்காக, பட்டணத்தில் வெப்பேரி என்னுமிடத்தில் உள்ள அல்பீனியன் அச்சாபீஸில் அச்சடிக்கப்பட்டு வருகிறது.

பத்திராதிபர் பாஸ்றர், ஜி. ஜி. லோரி.
உதவி ,, ,, ஈ. டி. தாமஸ்.

தனிப்பிரதி ஒன்றுக்	...	அணா 2
வருஷ சந்தா, தபாற்கூலி உள்பட		,, 10

இந்தப் பத்திரிகையை வாங்க விரும்புகிறவர்கள் இன்டர் நாஷனல் டிராக்ட் சொஸைட்டி, 60, லோயர் கமண்டைன் ரோடு, ரங்கூன் என்று எழுதிப் பெற்றுக் கொள்ளலாம்.

ஒரு முடிவுக்குக் கொண்டுவரும்படியாகவும், பல ராஜ்யங்களுக்கு புது எல்லை குறிக்கும்படியாகவும் இந்த சண்டைக்குக் காரணமாயிருந்தவர்களுக்கு அபராதம் விதிக்கும்படியாகவும் இப்பொழுது பிரான்சு தேசத்தில் ஒரு பெரிய பஞ்சாயத் போன்ற கூட்டங் கூடுகிறார்கள்.

அது என்றைக்கும் நிலைநிற்குமா?

உலகத்தின் பெரிய கல்விமான்கள் இனி யுத்தம் இருக்காதென்றும் ஜாதிகள் இனி ஐக்கியமாயிருப்பார்களென்றும் பேசிக் கொள்ளுகிறார்கள். இனி எந்த ராஜ்யத்தாரும் சண்டையிடவே மாட்டார்களென்று அநேகர் சொல்லுகிறார்கள். ராஜ்யத்தில் இனி யுத்தம் உண்டாகாதபடி செய்ய முயற்சி செய்கிறார்கள். அது முடியுமா? ஆயிரக்கணக்கானபேர் அதற்கு ஆம் என்கிறார்கள். ஆனால் அது எவ்வாறு முடியுமென்று ஒருவராலும் சொல்ல முடியவில்லை. சில வருஷங்களுக்கு முன்பு ஒரு பெரிய சமாதான உடன்படிக்கை பண்ணப்பட்டது. அதில் யுத்தம் முதலானவைகளைப்பற்றி அநேக சட்டம் விதித்தார்கள். இப்பொழுது நடந்த யுத்தத்தில் அந்த சட்டங்களெல்லாம் மீறப்பட்டது. அதே மனிதர்கள் மறுபடியும் உலகத்தார் யாவரும் சமாதானமாயிருக்கும்படி வேறொரு உடன்படிக்கை செய்ய பிரயாசைப்படுகிறார்கள். இவர்கள் சமாதானம் என்று பேசிக்கொண்டிருக்கும்பொழுது அமெரிக்கர் என்ன செய்கிறார்கள். அவர்கள் உலகத்திலுள்ள கப்பல்களிலெல்லாம் அதிக பிரமாண்டமான கப்பல்களைச் செய்கிறார்கள். மனிதர் சமாதானம் சமாதானம் என்று சத்தமிட்டபோதிலும் சமாதானப்பிரபு வருமட்டும் உலகத்தில் சமாதானமே உண்டாகாது. அமெரிக்கா ஐக்கிய மாகாணத்து தேசாதிபதியாகிய வில்ஸன் என்பவர்தான் உலகத்தை இரட்சிப்பவரென்று அநேகர் சொல்லிக் கொள்ளுகிறார்கள். ஆனால் அது உண்மையன்று. இப்பொழுது உலகம் உட்பட்டிருக்கும் இந்த சங்கடமான நிலைமையிலிருந்து அதை இரட்சிக்க அவராலாவது அல்லது வேறெந்த மனுஷனாலாவது முடியவே முடியாது. கிறிஸ்துவின் நித்திய ராஜ்யம் ஸ்தாபிக்கப்பட்டால் மாத்திரம்தான் இந்தத் துன்பங்களுக்கெல்லாம் ஓர் முடிவு வரும். அவருடைய வருகையின் நாள் அதிக சமீபமாயிருக்கிறது.

சபைகளின் ஐக்கியம்.

ராஜ்யங்களெல்லாம் எப்படி ஐக்கியப்பட்டு இனி சமாதானமாயிருப்பதற்கான ஏற்பாடுகள் செய்கிறார்களோ அதுபோல உலகத்தின் பற்பல பாகங்களிலிருக்கும் கிறிஸ்தவ சபைகள் தாங்களும் ஐக்கியமாயிருக்க வேண்டுமென்று பிரயாசைப் படுகிறார்கள்.

அவர்கள் எண்ணின எண்ணம் ஒரு மேலான எண்ணம் தான். ஒரு சமாதான ஐக்கியம் உண்டாவதை நாமெல்லாரும் விரும்புவோம். பெரிய ராஜ்யங்கள் ஐக்கியப்படுவது எப்படி அசாத்தியமாயிருக்கிறதோ அதுபோலவே சபைகளும் ஐக்கியப்படுவது அசாத்தியமான காரியம். இதற்கு வெளிப்படையான முகாந்தரங்களுண்டு. சபைகளை நடத்துகிறவர்கள் களங்கமில்லாத தேவனுடைய வசனத்தை விட்டுவிட்டு மனித போதனையைப் போதிக்கத் துவக்கினதினால் சபை முதலாவது பிரிய ஆரம்பித்தது. அப்படிப் பிரிந்துபோன சபைகள் மறுபடியும் ஐக்கியமாகவேண்டுமானால் மனிதர் முதலாவது வேதத்தின் போதனைகளை ஒப்புக்கொள்ள வேண்டும். ஐக்கியமாயிருப்பது ஒரு நல்ல காரியம்தான். சபையை நடத்துகிறவர்கள் மனித போதனைகளை விட்டுவிட்டு வேதாகமத்தின் சத்திய போதகத்தின்படி போதிப்பார்களானால் அவர்களுக்குள் ஒரு ஐக்கியம் உண்டாகுமென்பதற்கு நம்பிக்கையுண்டு.

உதாரணமாக ஓய்வுநாளை எடுத்துக்கொள்வோம். ஏழாம் நாள்தான் ஓய்வுநாளென்று வேதாகமம் திட்டமாய் போதிக்கிறது. அந்த நாளை ஆசரிக்கும்படி தேவன் நமக்குக் கட்டளையிட்டிருக்கிறார். ஆனால் இந்நாட்களில் கிறிஸ்தவர்களில் மிச்சமான பேர் வாரத்தின் முதலாம் நாளை ஓய்வுநாளாக ஆசரிக்கிறார்கள். வாரத்தின் ஏழாம் நாளை தேவனுடைய பரிசுத்த ஓய்வுநாளாக ஆசரிப்பது அவனுடைய கடமையென்று அறிந்திருக்கிற ஒரு மனிதன் அந்த நாளைக் கைக்கொள்ளாத வேறொரு சபையோடு ஐக்கியப்பட்டிருப்பது அசாத்தியமான காரியமல்லவாவென்று நீங்களே சிந்தித்துப் பாருங்கள். இன்னொரு வகையாய்ப் பார்ப்போமானால் வாரத்தின் முதலாம் நாளை ஆசரிக்கும் ஒரு மனிதன் வாரத்தின் ஏழாம் நாளை ஆசரிக்கிறவனோடு ஐக்கியப்பட கொஞ்சமும் பிரியப்படவே மாட்டானல்லவா. ஆகவே எல்லாரும் வேதாகமத்தை ஒத்துக்கொண்டு வேதமே தங்கள் வழிகாட்டி யென்று ஏற்றுக்கொள்ளுமளவும் ஐக்கியமுண்டாகுமென்று நாம் நினைக்கவே கூடாது.

நிகழ்கால சத்தியம்.

Vol. VIII. மதராஸ்:—அக்டோபர்மீ, 1919. No. 4.

உலக யுத்தத்தின் கிரயம்

(THE COST OF THE WORLD WAR)

யுத்தத்தின் கிரயம் இவ்வளவென்று உயிரோடிருக்கும் எந்த மனிதனாலும் உத்தேசிக்கவே முடியாது. இந்த யுத்தத்தில் எவ்வளவு இரத்தமும் பொன்னும் செலவிடப்பட்டதென்று சில முக்கியமான பத்திரிகையின் மூலமாய் ஒருவாராக அறிந்துகொள்ளலாம். யுத்தத்தில் இவ்வளவு பண செலவும் ஜன நாசமும் நேரிட்டதென்று நாம் ஒருவாராக அறிந்துகொண்டாலும் யுத்தத்தின் காரணமாக உண்டான மன மடிவையும் சஞ்சலத்தையும் கண்ணீரையும் நம்மால் கணக்கிடவே முடியாது.

அமெரிக்க யுத்த காரியதரிசியாகிய பேக்கர் (Mr. Baker) என்பவர் கடந்த யுத்தத்தின் பணச்செலவு யாத்திரம் ரூ. 600000000000 என்றும் போர் புரிந்த இரு கட்சிக்காரர்களின் சைனியங்களின் உயிர்ச்சேதம் 9000000 என்றும் கணக்கிட்டிருக்கிறார். யுத்தம் நடந்த நாட்களில் தினசரி ஏறக்குறைய 6000 வீரர்கள் மாண்டார்கள். ஒரு வருஷத்தில் மாண்டவர்களின் தொகை ஏறக்குறைய 2250000.

இந்த சண்டையினால் உண்டான உயிர்ச்சேதத்தை நாம் நினைக்கும்பொழுது நமது மனம் தத்தளிக்கிறது. நாம் இதை மற்ற சம்பவங்களோடு ஒப்பிட்டுப் பார்ப்போம். நாலு நீண்ட வருஷங்களாக நடைபெற்ற யுத்தத்தில் தினசரி 6000 பேர் மாண்டதையும் 1773-ம் வருஷத்தில் இந்தியாவில் நடந்த பூகம்பத்தினால் ஒரே நிமிஷத்தில் 300000 பேர் உயிரிழந்ததையும் ஒத்துப் பாருங்கள். 1703-ம் வருஷத்தில் ஜப்பான் தேசத்தில் உண்டான பூமி யதிர்ச்சியினால் 20000 ஆத்துமாக்கள் மாண்டன. கொடிய பஞ்சத்தினாலும் கொள்ளை நோய்களினாலும் நேரிட்ட உயிர்ச்சேதங்களை இந்த யுத்த ஜன நாசத்தோடு ஒப்பிடும்போது இந்த யுத்தத்தினால் உண்டான சேதத்தை நாம் அற்பமென்று தள்ளி விடுவோம்.

இந்த உலகத்தின் மொத்த ஜனத்தொகை, 1800000000. ஒரு வருஷத்தில் சராசரி 80000000 பிள்ளைகள் பிறக்கிறார்கள். 66000000 மனிதர்கள் இறக்கிறார்கள். அப்படியானால் ஒரு வருஷத்தில் ஜனத்தொகையின் விர்த்தி ஏறக்குறைய 14000000. பிறக்கிறவர்கள் யாவரும் கூடிய சீக்கிரத்தில் இறக்க வேண்டியதாயிருக்கிறதினால் சீக்கிரத்திற்குள்ளாக மரண ஜன சங்கிகை அதிகரிக்கவேண்டும். யுத்தத்திலும் பஞ்சத்திலும் சாகாமல் சாதாரணமாய்ச் சாகிறவர்களின் மரண பதிவைப் பார்த்தால் சராசரி ஒரு நாளில் முழு உலகத்திலும் 180000 பேர் மரிக்கிறதாகத் தெரியவருகிறது. ஆனால் யுத்தத்தில் மாண்டவர்களின் தொகையைக் கணக்கிடும்போது ஒரு நாளில் ஏறக்குறைய 6000 பேர் உயிரிழந்ததாகக் கணக்கிடப்படுகிறது. ஜனங்களின் மரண தொகையையும் போர் வீரரின் மரண தொகையையும் ஒப்பிட்டுப் பார்க்குமிடத்து முப்பத்து ஒன்றுக்கு ஒன்று வீதம் கணக்கிடப்படுகிறது. அதாவது கடந்த காலத்தில் உத்தேசம் முப்பத்தோறு ஜனங்கள் மாத்திரம் மரித்திருப்பார்களானால் அவர்களில் ஒரே ஒரு சிப்பாய் மரித்திருப்பதாகக் கணக்கிடுகிறார்கள். யுத்தத்தின் நாச மோசங்கள் அதிகமாயிருந்தபோதிலும் அதைவிட பயங்கரமான ஏதோ ஒரு வல்லமை மனுஷ ஜீவன்களை சடுதியான அழிவுக்கு உட்படுத்துகிறது.

ஐரோப்பாவில் நடந்த யுத்தம் இப்போது முடிந்தது. சமாதான உடன்படிக்கையும் கையொப்ப மிடப்பட்டுத் தீர்ந்தது. என்றபோதிலும் உலக முழுவதிலும் தினசரி ஏறக்குறைய 180000 பேர் மாண்டு போகிறார்கள். நர ஜீவன்களின் சத்துராதியானவன் அதிக மும்முரமாய்த் தன் கிரியையை நடப்பிக்கிறான். உலகத்தி

லுள்ள யாவரையும் சங்கரித்துத் தீருமட்டும் அவன் இளைப்படைய மாட்டான்.

இப்படி மரண மடைந்த கோடிக்கணக்கான ஜனங்கள் இப்போது எங்கே யிருக்கிறார்களென்று தேவனுடைய பரிசுத்த மனிதர் நமக்குச் சொல்லியிருக்கிறார்கள். மரித்தோர் எங்கே யிருக்கிறார்களென்றும் அவர்கள் இப்போது என்ன செய்துகொண்டிருக்கிறார்களென்றும், இனிமேல் அவர்களுக்கு என்ன சம்பவிக்கப்போகிறதென்றும் தேவன் அந்தப் பரிசுத்த மனிதர்களுக்கு வெளிப்படுத்தியிருக்கிறார். அந்த மகா சத்தியங்களைப் பிற்பாடு உங்களுக்கு அறிவிப்போம்.

H. L. PEDEN.

பிரயாணமும் போக்கு வரவும்

(TRAVEL AND COMMUNICATION.)

முற்காலத்தில் பிரயாணம் பண்ணுவது அதிய மெதுவாயும் கஷ்டமாயும் அலுப்பாயும் இருந்தது. முற்காலத்தில் ஒருவன் அதிவேகமாய்ப் பிரயாணம் பண்ண வேண்டுமானால் அவன் ஒட்டகத்தின் மேலாவது குதிரை யேறியாவது அல்லது பாய்மரக் கப்பலிலாவது பிரயாணம் பண்ணவேண்டும். ஆனால் சாதாரணமாய் மாட்டு வண்டியிலும் ஜட்கா வண்டியிலும் பல்லக்கிலும் பிரயாணம் பண்ணினார்கள்.

1807-ம் வருஷத்தில் ராபர்ட் பல்டன் (Robert Fulton) என்னும் ஒரு அமெரிக்கன் நீராவிப்படகைக் கண்டு பிடித்ததிலிருந்து பிரயாண சாதனத்தில் ஒரு அபிவிர்த்தி உண்டாயிருக்கிறது. அநேக வருஷங்களாக அவர் நீராவியையும் அதன் சக்தியையும் அதன் பிரயோஜனத்தையும்பற்றி பரிசோதனை செய்தார். இவர் தன் காலத்தை வீணில் செலவிடுகிறாரென்று அநேக ஜனங்கள் அவரைப் பரிகாசம் பண்ணினார்கள். கடைசியாக அவர் நீராவிப் படகை செய்து முடித்து அதில் யந்திரங்களை அமைப்பித்து அதை ஓட்டுவதற்கு தயாராக வைத்திருந்தார். அவருடைய காரியம் வாய்க்காதென்று அநேக ஜனங்கள் சிரித்து பரிகாசம் பண்ணும்படி கூடி வந்திருந்தார்கள். நீராவிப்படகு தானாக ஓடாது என்றார்கள். குறித்த நேரத்தில் பல்டன் என்பவர் நீராவிப் படகை ஓட்ட ஆரம்பித்தார். அவர் நினைத்திருந்த மாதிரியே படகு முன்னோட ஆரம்பித்தது. அது நியூயார்க் (New York) பட்டணத்திலிருந்து அல்பானி (Albany) என்னும் ஊருக்கு ஹட்சன் நதி மார்க்கமாய் 150 மைல் தூரம் சென்றது. இது ஜனங்களுக்கு அதிக ஆச்சரியத்தை உண்டு பண்ணினது.

அதன் பின்பு அமெரிக்காவின் நதிகளில் செல்லத்தக்க இன்னும் வேறு அநேக நீராவிப் படகுகள் செய்யப்பட்டன. பிற்பாடு சமுத்திரங்களைக் கடக்கத்தக்க பெரிய நீராவிக் கப்பல்களைச் செய்தார்கள். இம்மரக்கலங்களைக் கட்டுவதில் மனிதர் கொஞ்சங்கொஞ்சமாய்த் தேர்ச்சி யடைந்து அவைகளை முன்னிலும் பெரிதாயும் அதிக பலமானதாயும், அதிக வேகமாய் ஓடக்கூடியதாயும் உண்டாக்கக் கற்றுக்கொண்டார்கள். தற்காலத்தில் ஏறக்குறைய ஆயிரம் அடி நீளமுள்ள நீராவிக் கப்பல்கள் இருக்கிறது. அவைகள் ஒவ்வொன்றிலும் மூவாயிரம் பிரயாணிகள் தாராளமாய்ப் பிரயாணம் செய்யலாம். மேலும் அதில் ஏராளமான ஜாமான்கள் வைத்துக்கொள்ளலாம். இந்தக் கப்பலில் அலங்காரமான மண்டபங்களும் அழகிய சாப்பாட்டு அறைகளும், சமையல் கட்டுகளும், ஸ்நானம் செய்யும் இடங்களும் இருக்கும். இவைகளெல்லாம் மின் சாரத்தால் விளக்கு ஏற்றப்பட்டும் நீராவியால் சூடாக்கப்பட்டும் இருக்கும். தற்காலத்து அழகிய விடுதிகளைப்போல எல்லாம் அலங்கரிக்கப்பட்டிருக்கும். இது மாத்திரமல்ல, கப்பல் நடுச் சமுத்திரத்திலிருக்கும்போதே கம்பியில்லாத் தந்தியின் மூலமாய் உலகத்தின் ஐந்து கண்டங்களிலிருந்து சமாசாரங்களைப் பெற்றுக்கொண்டு கப்பலிலேயே தினந்தோறும் பத்திரிகைகளை அச்சிடுகிறார்கள். கப்பலில் போகும் பிரயாணிகள் தரைக்கு ஆயிரக் கணக்கான மைல் தூரத்திலிருந்தபோதிலும் உலகத்தில் நடக்கும் பெரிய வர்த்தமானங்களை இந்த தினசரி பத்திரிகையின் மூலமாய் அறிந்து கொள்ளுகிறார்கள்.

இந்த அலங்காரமான கப்பல்கள் ஒரு மணி நேரத்திற்கு 20 மைல் வீதம் ஓடுகின்றன. முற்காலத்து பாய் மரக்கப்பலில் ஒருவன் ஏறி இங்கிலாந்திலிருந்து இந்தியாவுக்கு யாத்திரை பண்ணவேண்டுமானால் இரண்டு, அல்லது நாலு மாதம் பிடிக்கும். ஆனால் தற்காலத்தில் ஒரு வேகமான நீராவிக்கப்பல் வழியாய் ஏறக்குறைய இருபது நாட்களுக்குள் வந்து விடலாம். இப்பொழுது ஆயிரக்கணக்கான பலத்த நீராவிக்கப்பல்கள் ஒவ்வொரு சமுத்திரங்களிலும் நீந்திச் செல்லுகின்றது. பற்பல கண்டங்களிலும் தேசங்களிலுமுள்ள ஆறுகளிலும் குடாக்களிலும் ஆயிரம் பதினாயிரமான சிறு நீராவிக் கப்பல்கள் ஜனங்களையும் ஜாமான்களையும் ஏற்றிக்கொண்டு போகிறது.

நீராவி யந்திரம் கண்டு பிடிக்கப்பட்டு இப்பொழுது ஏறக்குறைய 150 வருஷங்களாகிறது. இந்த யந்திரம் தண்ணீரை வெளிச்செலுத்தும் ஒரு சக்கரத்தை சுற்றவாவது அல்லது வேறு எந்த காரியத்திற்காவது உதவும். 50 வருஷங்களுக்குப் பின் அதாவது 1814-ம் வருஷத்தில் ஜார்ஜ் ஸ்டீவன்சன் (George Stephenson) என்னும் ஒரு ஆங்கிலேயன் இரண்டு சமமான இருப்புப்பாதைகளின் வழியாய் ஓடும் நீராவி யந்திரத்தைக் கண்டு பிடித்தார். ஸ்டீவன்சனுடைய யந்திரம் (Locomotive) நேராயும் சமமாயும் ஓடக்கூடும். அந்நாளிலிருந்து இந்நாள்மட்டும் ஆயிரக்கணக்கான ஜனங்கள் இந்த நீராவி யந்திரத்தில் தேர்ச்சி யுண்டாக்க வேண்டுமென்று பிரயாசைப்பட்டு வருகிறார்கள். தற்காலத்திற்குள்ளாக அவர்கள் அந்த வண்டிகளில் அதிக தேர்ச்சி செய்திருக்கிறார்கள். பிரயாணிகளுக்கு வசதியான வண்டிகளும், சாப்பாட்டு வண்டிகளும், படுத்துத் தூங்கும் வண்டிகளும், இன்னும் பிரயாணிகளுக்கு நானாவித இன்பங்களைத் தரும்படி வசதியாய்ச் செய்யப்பட்டிருக்கிறது.

அமெரிக்காவில் வியாபாரிகளுக்கென்று ஒரு விசேஷித்த வண்டி ஏற்படுத்தப்பட்டிருக்கிறது. அது தினந்தோறும் நியூயார்க் (New York) பட்டணத்திலிருந்து ஷிக்காகோ (Chichago) பட்டணத்திற்கு ஓடுகிறது. இந்த இரு பட்டணத்திற்குமுள்ள தூரம் ஏறக்குறைய ஆயிரம் மைல். இந்த வண்டி இருபது மணி நேரத்தில் அவ்வளவு தூரம் பிரயாணம் பண்ணுகிறது. அப்படியானால் ஒரு மணி நேரத்தில் சராசரி 50 மைல் வீதம் ஓடுகிறது. அது சில இடங்களில் நின்று மணிதனை ஏற்றிக்கொள்ளுகிறதினால் சில சமயத்தில் ஒரு மணிக்கு 60 மைலுக்கு மேல்கூட ஓடவேண்டியதாயிருக்கும். ஒரு வியாபாரி தன் வியாபார விஷயமாய் ஒருநாள் முழுவதையும் நியூயார்க் பட்டணத்தில் செலவழித்துவிட்டு பிறகு மோட்டார் வண்டியில் ஏறி வந்து இந்த இருப்புப் பாதை வண்டியில் ஏறுகிறான். இரா முழுவதும் படுக்கிறதற்காக அமையப்பெற்ற ஒரு வண்டியில் தங்கிவிட்டு காலையில் வியாபார விஷயமாய் ஆபீசுகள் திறக்கப்படும் சமயத்தில் ஷிக்காகோ என்னும் பட்டணத்திற்கு வந்து விடுகிறான். இப்படியாக வியாபார விஷயமாய் ஒருநாளை நியூயார்க்கிலும் அடுத்த நாளை ஆயிரம் மைலுக்கப்பாலிருக்கும் ஷிக்காகோவிலும் கழிக்கலாம். அதேமாதிரியாக ஒருவன் கல்கத்தாவிலிருந்து பம்பாய்க்கு 40 மணி நேரத்திலும், லாகூரிலிருந்து சென்னைக்கு 90 மணி நேரத்திலும் பிரயாணம் செய்யலாம்.

அநேக தேசங்களில் இருப்புப்பாதை வண்டிகள் சர்வ சாதாரணமாகிவிட்டது. 1913-ம் வருஷத்தின் முடிவில் இங்கிலாந்தில் 23,436 மைல் தூரமும் பிரான்சில் 31,807 மைல் தூரமும், ஜெர்மனியில் 39,600 மைல் தூரமும், ருஷியாவில் 48534 மைல் தூரமும், ஐக்கிய மாகாணங்களில் 255,332 மைல் தூரமும் இருப்புப் பாதைகள் போடப்பட்டிருக்கிறது. 1853-ம் வருஷம் வரையில் இந்தியா தேசத்தில் இருப்புப்பாதையே கிடையாது. ஆனால் 1915-ம் வருஷத்திற்குள் 35,285 மைல் தூரம் அழகான இருப்புப்பாதைகள் போடப்பட்டது.

சீன தேசத்தார் முற்காலத்தில் இருப்புப்பாதைகளின்மேல் பிரியப்படவே யில்லை. அவைகள் அசுத்த ஆவி பிடித்து அங்குமிங்கும் அலைகிற வஸ்துக்களென்று நினைத்தார்கள். ஆனால் 1887-ம் வருஷத்தில் இருப்புப்பாதைபோட ஆரம்பித்து தற்காலத்திற்குள் 7000 மைல் தூரம் இருப்புப்பாதைகள் போட்டிருக்கிறார்கள்.

முதலில், உலகம் தட்டையாயிருக்கிறதென்று எல்லாரும் நினைத்தார்கள். சாஸ்திரம் விர்த்தியானதினால் உலகம் கோளம் போல உருண்டையாயிருக்கிறதென்று மனிதர் நம்புகிறார்கள். பூமியின் வடிவம் கண்டு பிடிக்கப்பட்ட பிறகு மாகிலன் (Magellan) என்னும் ஒரு போர்த்துகல் தேசத்தான் சில தேர்ந்த கப்பலோட்டிகளைத் தெரிந்துகொண்டு ஸ்பானியரிடமிருந்து சில மரக்கலங்களை பெற்றுக்கொண்டு உலகத்தை சுற்றிப் பிரயாணம் பண்ணும்படி புறப்பட்டான். அவர்கள் மேற்கு முகமாய்ப் பிரயாணம் பண்ணி அத்லாந்திக் மகா சமுத்திரத்தைக் கடந்து தென் அமெரிக்காவில் தென் கரையைச் சுற்றி வந்து பசிபிக் மகா சமுத்திரத்தைக் கடந்து பிலிப்பியன் தீவுகளில் ஒன்றாகிய கியூபா தீவுக்கு வந்தார்கள். இந்த இடத்தில் மாகிலனும் அவனோடு வந்த சில மனிதரும் கொலை செய்யப்பட்டார்கள். தப்பிப் பிழைத்தவர்கள் இந்து மகா சமுத்திரத்தைக் கடந்து ஆப்பிரிக்காவின் தென் கரையைச் சுற்றியோடி கடைசியாக தாங்கள் புறப்பட்ட இடத்திற்கே திரும்பவும் வந்து சேர்ந்தார்கள். இப்படிப் பிரயாணம் பண்ண மூன்று வருஷம் பிடித்தது. (1619—1622) ஆனால் தற்காலத்தில் உலகத்தை சுற்றிப் பிரயாணம் பண்ண மூன்று வருஷம் தேவை யில்லை. 1889-ம் வருஷத்தில் இரண்டு யௌவன ஸ்திரீகள் உலகத்தை சுற்றி வரும்படி தீர்மானித்தார்கள். ஒருத்தி மேற்கு முகமாகவும் மற்றவள் கிழக்கு முகமாகவும் கப்பல் வழியாயும் இடை இடையே ரெயில் மார்க்கமாயும் பிரயாணம் பண்ணினார்கள். அவர்களில் ஒருத்தி 73 நாட்

களுக்குப்பிறகு தான் புறப்பட்ட இடத்திற்கே வந்து சேர்ந்தாள். அதிலிருந்து இந்நாள் வரைக்கும் போக்கு வரவுக்குறிய சாதனங்களில் அதிக விர்த்தி யடைந்து கொண்டு வந்திருக்கிறதினால் தற்காலத்தில் ஒரு மனிதன் 35 நாள், 21 மணி, 35 நிமிஷத்திற்குள் உலகத்தை ஒரு தரம் சுற்றி பிரயாணம் செய்து விடலாம்.

நூறு வருஷங்களுக்கு முன்பு ஒருவன் தன் சொந்த ஊரை விட்டு பிரயாணம் செய்வது அதிக அபாயமாயிருந்தது. ஆனால் இப்பொழுது பிரயாணம் செய்வது சர்வ சாதாரணமாகிவிட்டதினால் ஜனங்களெல்லாரும் தங்கள் காலத்தின் மிச்சமான பாகத்தை பிரயாணம் செய்வதில் செலவிட விரும்புகிறார்கள். எந்த வேளையும் கோடிக்கணக்கான ஜனங்கள் குதிரைமேலும், வண்டிகளிலும், சைகில்களிலும் (Bicycle) மோட்டார் வண்டிகளிலும், மின்சார வண்டிகளிலும், இருப்புப்பாதை வண்டிகளிலும், பிரயாணம் பண்ணுகிறார்கள். 1917-ம் வருஷம் அக்டோபர் மாதத்தில் மாத்திரம் பம்பாய் பட்டணத்து மின்சார வண்டிகளில் எறக்குறைய 50,000,000 பேர் பிரயாணம் பண்ணியிருக்கிறார்கள். சைகில் வண்டிகளும், மோட்டார் வண்டிகளும், உலகத்தின் எல்லாப் பாகங்களிலும் அதிக சாதாரணமான வஸ்துக்களாகி விட்டது. அமெரிக்கா தேசத்தில் மாத்திரம் 30 லக்ஷம் மோட்டார் வண்டிகள் இருக்கிறது. அமெரிக்காவின் சில பாகங்களில் சராசரி பத்துபேரில் ஒருவனுக்கு ஒரு மோட்டார் வண்டி இருப்பதாகக் கணக்கிடப்பட்டிருக்கிறது. இந்த மாதிரி மோட்டார் வண்டிகளைச் செய்யும் போர்டு (Ford) கம்பெனிகாரர் சராசரி ஒரு நிமிஷத்தில் இரண்டு மோட்டார் வண்டிகள் செய்வதாக்க் கணக்கிடப்பட்டிருக்கிறது.

இவ்வளவு காலம் நீரிலும் நிலத்திலும் பிரயாணம் பண்ணுவதற்கேற்ற சாதனங்களை கண்டுபிடித்தார்கள். ஆனால் தற்காலத்தில் ஆகாயமார்க்கமாய்ப் பிரயாணம் பண்ணும்படியாக அநேகர் முயற்சி செய்கிறார்கள். இப்படிப் பிரயாசைப்பட்டவர்களில் வீர நெஞ்சுடைய நூற்றுக்கணக்கான பேர்கள் தங்கள் உயிரை இழந்திருக்கிறார்கள். ஆனால் மனிதர் மனந்தளராமலும், அதைரியப்படாமலும் அதிக பிரயாசைப்பட்டு இப்பொழுது பல வகையான ஆகாயக் கப்பல்களைக் கண்டுபிடித்திருக்கிறார்கள். ஜெர்மனியில் ஜனங்கள் 900 அடி நீளமான ஆகாய விமானங்களை உண்டுபண்ணி யந்திர சக்தியால் ஒரு மணி நேரத்திற்கு 60 மைல் முதல் 80 மைல் வீதம் ஓடும்படி செய்தார்கள். ஆனால் இப்பொழுது உலகத்தின் எல்லா ஜாதியாரும் அதிகமாக ஆகாயக் கப்பல்கள் செய்கிறார்கள். இந்த ஆகாயக்கப்பல்கள் இருபது ஆட்களையும் அவர்களுடைய சாப்பாடுகளையும் இன்னும் வேண்டிய வெடி குண்டுகளையும் ஏற்றிக்கொண்டு போகத்தக்க அவ்வளவு பெரிதாயிருக்கிறது. சில இடங்களில் தபால்களையும் வியாபாரச் சரக்குகளையும் இதில் ஏற்றிக்கொண்டு போகிறார்கள். இனிமேல் இந்தியாவுக்கும் இங்கிலாந்துக்கும் ஆகாய மார்க்கமாய்ப் பிரயாணம் பண்ணும்படி ஒரு ஆகாயக் கப்பல் மார்க்கம் ஏற்படுத்தப்போகிறதாகக் கேள்வி. நாம் ஒரு ஆச்சரியமான நூற்றாண்டில் வசிக்கிறோமென்பது உண்மை யல்லவா?

முற்காலத்தில் சமாச்சாரங்கள் அதிக மெதுவாகக் கொண்டுபோகப்பட்டது. ஒரு ராஜ்யத்தில் சண்டை, ஜெயம், தோல்வி, பூமி யதிர்ச்சி, விபத்து முதலானவைகள் சம்பவிக்குமானால் அதை இன்னொரு ராஜ்யத்திலுள்ள ஜனங்கள் கேள்விப்படுவதற்குக் குறைந்தது சில மாதங்கள் செல்லும். ஆனால் தற்காலத்திலே அப்படியல்ல. எந்த தேசத்தில் நடக்கும் சங்கதியையும் உலகத்தின் எப்பக்கத்தாரும், தந்தி, கம்பியில்லாத் தந்தி கடல் தந்தி, தபால் முதலியவற்றின் மூலமாய் சிலமணி நேரத்திற்குள் தெரிந்துகொள்ளக்கூடும். கடந்த நூற்றாண்டில் உலகத்தின் பெரிய ராஜ்யங்களெல்லாம் கடிதங்களையும், தாட்களையும், புஸ்தகங்களையும், சாமான்களையும் ஓரிடமிருந்து மற்றோரிடத்திற்கு இலேசாக அனுப்பும்படி தபால் மார்க்கத்தை ஏற்படுத்தினார்கள். உலக முழுவதும் ஸ்தாபிக்கப்பட்டிருக்கும் தபாலாபீசுகளின் இலக்கத்தையும், அவைகளிலிருந்து கொண்டு போகப்படும் கடிதங்களின் இலக்கத்தையும் இங்கு எடுத்து எழுதினால் அது எண்ணிக்கைக் கடங்காது. இந்தியாவில் வருஷா வருஷம் தபாலாபீசுகளின் தொகை அதிகரித்துக்கொண்டே வருகிறது. 1916-ம் வருஷக் கடைசியில் எடுத்த கணக்கின்படி இந்தியாவிலிருக்கும் தபாலாபீசுகளின் மொத்தத் தொகை 19,328 ற்கு அதிகமாயிருக்கிறது. இந்தியாவில் வருஷா வருஷம் ரசீது பெற்றுக்கொண்டு அனுப்பப்படும் கடிதங்கள் மாத்திரம் 100 கோடிக்கு அதிகமாயிருக்கிறது. சாதாரண கடிதங்களின் தொகை கோடிக்கணக்கா யிருக்கிறது.

ஆங்கிலேயர் முதல் முதலில் இந்தியாவுக்கு வந்தபொழுது, இங்கிலாந்திற்கு ஒரு கடிதம் எழுதி அதற்கு பதில் பெற்றுக்கொள்ள ஒரு வருஷம் சென்றது. தற்காலத்தில் ஒருவன் இந்தியாவிலிருந்து இங்கிலாந்திற்கு ஒரு காகித மெழுதி 7 அல்லது 8 வாரத்திற்குள் பதில் பெற்றுக்கொள்ளக்கூடும். இது மாத்திரமல்ல, இந்தியாவிலிருக்கும் ஒரு வியாபாரி லண்டன் நகரில் படிக்கும் தன் மகனுக்கு சில மணிநேரத்திற்குள் தந்தி மூலமாய் செய்தி யனுப்பலாம். அவசியமாயிருந்தால் தந்தி மூலமாய் அவனுக்கு பணமும் அனுப்பலாம்.

அமெரிக்க தேசத்தானாகிய சாமுவேல் மார்ஸ் (Samuel Morse) என்பவர் மின்சார தந்தியைக் கண்டு பிடித்தார். முதல் முதல் மின்சாரத் தந்திக் கம்பிகள் வாஷிங்டன் (Washington) என்னும் பட்டணத்திற்கும் பால்டிமோர் (Baltimore) என்னும் பட்டணத்திற்கும் போடப்பட்டது. அவ்விரு பட்டணத்திற்கு மிடையிலுள்ள தூரம் 40 மைல். இந்த இரு பட்டணங்களும் தந்திக்கம்பிகளால் இணைக்கப்பட்டது. இந்த கம்பி செய்தி கொண்டு வருமாவென்று பார்க்கும் படி இரு இடத்திலும் ஆண்களும் பெண்களும் கூட்டம் கூட்டமாய்க் கூடி வந்தார்கள். குறிக்கப்பட்ட நேரத்தில் அவர் மாய யந்திரத்தினால் "தேவன் நடப்பித்த தென்ன ?" ("What hath God wrought?") என்னும் வார்த்தைகளைத் தட்டினார். அதே வார்த்தைகள் மறு முனைக்குச் சென்றது. முதல்முதலில் தந்தி சமாச்சாரமாக அடிக்கப்பட்ட வார்த்தைகள் இதுதான். அந்தக் காலத்திலிருந்து மின்சார தந்தியை அபிவிர்த்தி செய்து கோடிக்கணக்கான மைல் நீளத்திற்கு கம்பிகளையும், தந்தி மரங்களையும் நாட்டி உலகத்தின் முக்கிய பட்டணங்களையெல்லாம் இணைத்திருக்கிறார்கள்.

ஒரு தந்தி சமாச்சாரம் உலக முழுவதும் சுற்றி வருவதற்கு எவ்வளவு நேரம் பிடிக்குமென்று அறிய ஒரு வியாபாரி நியூயார்க் பட்டணத்திலிருந்து மேற்கு முகமாய் ஒரு சமாச்சாரம் அனுப்பினான். அவன் அனுப்பிய அந்த சமாச்சாரம் இரண்டு மணி நேரத்திற்குள் கிழக்கு முகமாய் அவனுக்கு வந்து எட்டினது.

ஒருவன் அநேக மைல் தூரத்திற்கு அப்பாலிருந்தாலும் அவன் மற்றொருவனோடு பேசும்படியாக மின்சாரப் பேசும் கருவி (Telephone) 1877-ம் வருஷம் கண்டு பிடிக்கப்பட்டது. முதலில் அந்த யந்திரத்தினால் சிறிது தூரத்திற்கு மாத்திரம் பேச முடிந்தது. ஆனால் இப்பொழுது மிக நேர்த்தியான யந்திரத்தைக்கொண்டு இரண்டாயிரம் அல்லது மூவாயிரம் மைல் தூரத்திற்கப்பாலிருக்கும் ஒருவனோடு தெளிவாய்ப் பேசி அதை அறிந்து கொள்ளக்கூடும். ஒரு விசேஷித்த யந்திரத்தைக்கொண்டு இப்பொழுது கம்பி வழியாய்ப் படங்கள் அனுப்பவும் கூடும்.

அநேகருக்குத் தெரிந்தபடி இப்பொழுது கம்பியில்லாமலும் சமாச்சாரங்கள் அனுப்பப்படுகிறது. தற்காலத்தில் இந்தக் கருவியினால் ஆகாய மார்க்கமாய் ஆயிரக்கணக்கான மைல் தூரத்திற்கு சமாச்சாரம் அனுப்ப முடியும். இந்தப் பூமியின் சுற்றளவின் மூன்றிலொரு பங்கு தூரத்திற்குக்கூட இந்தத் தேர்ச்சி யடைந்த யந்திரத்தினால் சமாச்சாரம் அனுப்ப முடியும். இவ்விதமான கம்பி யில்லாத தந்தியினால் இந்த யுத்தத்திலும் அவர்கள் தங்கள் கப்பல் சேனைகளையும் கரைச் சேனைகளையும் தொலை தூரத்திலிருந்துகொண்டே நடத்தினார்கள். அல்லாமலும் கம்பியில்லாமலே பேசும் கருவியையும் இப்பொழுது கண்டு பிடித்திருக்கிறார்கள்.

இருநூறு வருஷங்களுக்கு முன் வசித்த பெரிய ஆங்கிலேய வான சாஸ்திரியாகிய சர் ஐசக் நியூட்டன் (Sir Isaac Newton) தேவ வசனத்தில் சொல்லப்பட்டிருக்கும் தீர்க்கதரிசனங்களை அதிக கருத்தாக ஆராய்ச்சி செய்தார். இப்படி ஆராய்ச்சி செய்தபிறகு, பிற்காலத்தில் மனிதருடைய அறிவு பெருகிப்போய் ஒரு மணி நேரத்திற்கு 50 மைல் வீதம் ஓடும்படியான யந்திரங்களைக் கண்டுபிடித்து பிரயாணம் பண்ணுவார்களென்று எழுதினார்.

எறக்குறைய நூறு வருஷங்களுக்கு முன்னே பிரான்சு தேசத்தில் சில பேர்போன நாஸ்திகர்கள் இருந்தார்கள். அவர்களில் வால்டேர் (Voltaire) என்பவன் ஒருவன். அவன் சர் ஐசக் நியூட்டன் எழுதின காரியங்களைக் குறித்து பரிகாசம் பண்ணி "பூமி ஆகர்ஷண சக்தியை சர் ஐசக் நியூட்டன் கண்டுபிடித்து நம்மெல்லாரையும் அதிசயிக்கும்படி செய்தார். ஆனால் அவர் தன் கிழப்பிராயத்தில் வேதாகமம் என்னும் புஸ்தகத்தைப் படிக்க ஆரம்பித்தார். அந்தக் கட்டுக் கதையில் சொல்லப்பட்டிருக்கிறவைகள் உண்மையென்று நம்பி ஒரு மணி நேரத்தில் 50 மைல் வீதம் பிரயாணம் பண்ணத்தக்கதாக அறிவு விர்த்தியாகி விடுமென்று எழுதியிருக்கிறார்." என்று சொன்னான்.

இந்த இரண்டு மனிதரில் ஞானவான் யார்? என்னும் கேள்வியை நாம் கேட்போம். வால்டேர் எழுதிய புஸ்தகங்களையெல்லாம் மனிதர் அதிகமாய் மறந்து விட்டார்கள். ஆனால் நியூட்டன் எழுதியவைகளோ இன்னும் நிலைத்திருக்கிறது. அவர் வேதாகம தீர்க்கதரிசனங்களிலிருந்து எடுத்து எழுதினவைகளெல்லாம் இப்பொழுது நிறைவேறுகிறது. இப்பொழுது மனிதர்கள் முன்னைவிட அதிகமாய் அந்த தீர்க்கதரிசனங்களை ஆராய்ச்சி செய்கிறார்கள்.

இக்காலத்தில் அறிவு பெருகிப்போயிருக்கிறது. உலகத்தின் எல்லா தேசங்களிலுமுள்ள ஜனங்கள் அங்குமிங்கும் ஓடி ஆராய்கிறார்கள். இதை வாசிக்கும் என் நண்பனே! கடந்த நாலு வருஷத்திற்குள்ளாக இந்த உலகத்தில் பிரயாணத்திலும் போக்கு வரவிலும் எவ்வளவு விர்த்தி யுண்டாயிருக்கிற தென்பதை சிந்தித்துப்பார். தேவன் இவைகளையெல்லாம் முன்னமே அறிந்து எறக்குறைய 2500 வருஷங்களுக்கு முன்பே தீர்க்கதரிசனத்தின் மூலமாய் இவைகளை வெளிப்படுத்தினார். தேவன் வெளிப்படுத்திய காரியங்களெல்லாம் இப்பொழுது நிறைவேறுகிறதை நாம் பார்க்கும்போது இவைகளெல்லாம் நாம் இப்போது முடிவு காலத்தில் வசிக்கிறோமென்பதற்கு அறிகுறிகளாயிருக்கிறதென்று எண்ணிக்கொள்வோமாக.

பூர்வ பாதைகளை நோக்குங்கள்

(LOOK FOR THE OLD PATHS.)

ஒவ்வொருவரும் நூதனமான ஒன்றைக் கண்டு பிடிக்கவேண்டுமென்று ஆராய்ச்சி செய்யும் காலத்தில் நாம் வசிக்கிறோம். நமது வீடுகளில் அன்றாட உபயோகத்துக்கு வேண்டியவைகளை இலகுவாயும் விலை சரசமாயும் செய்யும்படியாக தொழிலாளிகள் முயற்சி செய்கிறார்கள். பயிரிடுகிறவர்கள் நிலத்தைப் புதுமாதிரியாக உழுது பயிரிட பிரயாசைப் படுகிறார்கள். யுத்த வீரர்கள் மனிதரைக் கொல்லும் ஆயுதங்களைக் கண்டு பிடிக்க பிரயாசைப் படுகிறார்கள். புதிதாய் உண்டாகும் வியாதிகளைச் சொஸ்தப்படுத்த வைத்தியர்கள் புது மருந்து கண்டு பிடிக்கிறார்கள். நாம் எல்லாரும் இப்போது அறிவு பெருக்கத்தின் காலத்தில் வசிக்கிறோமென்று சொல்லுகிறார்கள். அப்படியே நாம் வசிக்கிறோம். இப்பொழுது புதிதாய்க் கண்டு பிடிக்கப்படும் வஸ்துக்கள் மனிதருக்கு அதிக பிரயோஜனமானவைகளாயிருக்கிறது.

இரட்சண்யத்துக்கு வேறே புது வழி கிடையாது.

இந்த உலகத்துக்கடுத்த காரியங்கள் புதிது புதிதாக கண்டு பிடிக்கப்பட்டபோதிலும் ஒருவன் இரட்சிக்கப்படுவதற்கு புது வழி இன்னும் கண்டு பிடிக்கப்படவில்லை. பாவத்தை விட்டுவிடுவதற்கு ஒரே ஒரு வழி மாத்திரமுண்டு. சர்வ லோகத்தையும் படைத்த தேவனோடு ஒப்புரவாக ஒரே ஒரு வழி மாத்திரமுண்டு. அந்த வழி இயேசுக்கிறிஸ்துதான். இந்த வழியையல்லாமல் வேறு வழியில்லை. இது ஒரு புது வழியல்ல. இது ஆதியிலேயே மனிதனுக்கு வெளிப்படுத்தப்பட்ட வழி. உலகத்தில் மனிதர் சிருஷ்டிக்கப்பட்ட பிறகு தேவனும், கிறிஸ்துவும், தேவ தூதர்களும், முற்பிதாக்களும், தீர்க்கதரிசிகளும், நல்லோர் யாவரும் இந்த ஒரே வழியைதான் கடைசி பரியந்தம் போதித்தார்கள். அந்நாள் முதல் இந்நாள் பரியந்தம் தேவன் ஆதியில் மனிதனுக்குக் கொடுத்த இந்த ஒரு வழியையல்லாமல் வேறே வழி கண்டு பிடிக்கப்படவேயில்லை. அந்த வழியென்ன? அந்த வழியை இயேசு பின்வருமாறு உரைக்கிறார். "தேவன், தம்முடைய ஒரே பேறான குமாரனை விசுவாசிக்கிறவன் எவனோ அவன் கெட்டுப்போகாமல் நித்திய ஜீவனை அடையும்படிக்கு, அவரைத் தந்தருளி, இவ்வளவாய் உலகத்தில் அன்பு கூர்ந்தார்." யோவான் 3:16. இயேசுக்கிறிஸ்துவைப்பற்றும் விசுவாசமே அந்த வழி. மனிதன் வேறு வழிகளைக் கண்டு பிடிக்கலாம் சிலர் இரட்சிக்கப்படும்படி வேறு வகை தேடலாம். ஆனால் வேத எழுத்துக்களில் சொல்லப்பட்டிருக்கிற வழி ஒன்றுதான். கிறிஸ்துவை விசுவாசிப்பது அவசியமல்லவென்றும் நாம் நல்ல ஜீவியம் செய்தால் இரட்சிக்கப்படுவோமென்றும் சிலர் சொல்லுகிறார்கள். வேறு சிலர், நாம் கிறிஸ்துவை விசுவாசித்தால் போதும் அவருடைய கற்பனைகளைக் கைக்கொள்வது அவசியமல்ல என்று சொல்லுகிறார்கள். சிலர், நாம் இரட்சிக்கப்படுவதற்கு கற்பனைகளைக் கைக்கொள்வது அவசியமென்கிறார்கள். ஆனால் அவர்கள் அதைக் கைக்கொள்ளுகிறதில்லை. நாம் கிறிஸ்துவை விசுவாசிக்க வேண்டுமென்றும், அவருடைய கற்பனைகளைக் கைக்கொள்ளுகிறதினால் நாம் அவரை விசுவாசிக்கிறோமென்று காட்டவேண்டுமென்றும் வேதம் சொல்லுகிறது. மனிதர்களுடைய சொந்த இரட்சண்ய ஒழுங்கைக் குறித்து நாம் எச்சரிக்கையாயிருந்து பூர்வ வழிகளைத் தேடுவோமாக.

பூர்வ வழிகளைத் தேடுங்கள்.

இரட்சண்யத்திற்கு ஓர் புது வழியில்லாவிட்டால் ஒரு பழைய வழி இருந்திருக்கவேண்டும். அந்தப் பூர்வ வழி ஓர் நல்ல வழியாயிருந்திருக்கும். வேதாகமம் இதைப்பற்றி என்ன சொல்லுகிறதென்று கேளுங்கள்: "வழிகளிலே நின்று, பூர்வ பாதைகள் எவையென்று கேட்டு விசாரித்து, நல்ல வழி எங்கே என்று பார்த்து, அதிலே நடவுங்கள்; அப்பொழுது உங்கள் ஆத்துமாவுக்கு இளைப்பாறுதல் கிடைக்கும் என்று கர்த்தர் சொல்லுகிறார்; அவர்களோ, நாங்கள் அதிலே நடக்கமாட்டோம் என்கிறார்கள்." எரே. 6: 16.

இந்த அறிவு பெருக்கத்தின் காலத்திலே சிலர், மோட்சம் சேர ஒரு புது வழி கண்டுபிடிக்கப் பிரயாசைப் படுகிறார்கள். இந்த உலகத்தில் மனம்போல ஜீவித்து, மனதார பாவம் செய்து, தங்கள் விருப்பப்படி உண்டு, உடுத்து, குடித்து கடைசியாக இரட்சிக்கப்பட்டு "நல்லது, உத்தமமும் உண்மையுமுள்ள ஊழியக்காரனே" என்னும் [illegible] அழைப்பால் அழைக்கப்படும் ஒரு புதிய வழியைக் கண்டு பிடிக்கப் பிரயாசைப் படுகிறார்கள். அப்பேர்ப்பட்ட வழியைக் கண்டு பிடிப்பது அசாத்தியமென்று நான் உங்களுக்குச் சொல்லுகிறேன். ஒரே ஒரு வழி உண்டு. அது தேவனுடைய வழி. நாம் வழிகளிலே நின்று, பூர்வ பாதைகள் எவையென்று கேட்டு விசாரித்து அதிலே நடக்கவேண்டுமென்று மேற்சொல்லிய வசனம் நமக்குச் சொல்லுகிறது. நாம் அப்படிச் செய்வோமானால் நமது ஆத்துமாவுக்கு இளைப்பாறுதல் கிடைக்குமென்று சொல்லப்பட்டிருக்கிறது. ஆகையினாலே நாம் வேறொரு புது வழியைக் கண்டு பிடிக்க முயற்சி செய்யாமல் தேவனுடைய வசனத்துக்குச் செவி கொடுத்து பூர்வ பாதைகளைக் கண்டு பிடிக்க முயற்சி செய்வோமாக.

பூர்வ வழியில் நடந்த சில நல்லோர்.

பூர்வ வழியில் நடந்த சிலரைப்பற்றி உங்களுக்கு அறிவிக்க விரும்புகிறேன். அவர்களுடைய விசுவாசத்துக்கும் தற்கால ஜனங்களுடைய விசுவாசத்திற்குமுள்ள வித்தியாசத்தைப் பாருங்கள். நாம், ஏனோக்கு, நோவா, ஆபிரகாம், யோபு, கிறிஸ்து, பவுல் என்னும் இவரைச் சற்று கவனிப்போம். ஏனோக்கு ஒரு நல்ல மனிதனாயிருந்தான். அவன் தேவனோடு நடந்தானென்றும், அவன் மிகவும் நல்லவனாயிருந்தபடியால் அவன் மரணத்தை ருசியாமல் தேவனால் பரலோகத்துக்கு எடுத்துக்கொள்ளப்பட்டானென்றும் சொல்லப்பட்டிருக்கிறது. அவன் ஒரு நல்ல மனிதனாயிருந்திருப்பானால் அவனுடைய விசுவாசமும் நம்பிக்கையும் நமக்கு ஒரு நல்ல முன் மாதிரியாயிருக்கவேண்டும். ஏனோக்கு, ஆதாமுக்கு ஏழாவது தலைமுறையாயிருந்தபோதிலும் கிறிஸ்து இரண்டாம்தரம் இப்பூமியில் தமது சரீரத்தோடு பிரசன்னமாவாரென்று விசுவாசித்தான். இதைக்குறித்து தீர்க்கதரிசி "ஆதாமுக்கு ஏழாம் தலைமுறையான ஏனோக்கும் இவர்களைக் குறித்து: இதோ எல்லாருக்கும் நியாயத்தீர்ப்பு கொடுக்கிறதற்கும், அவர்களில் அவபக்தியுள்ளவர்கள் யாவரும் அவபக்தியாய்ச் செய்து வந்த சகல அவபக்தியான கிரியைகளினிமித்தமும், தமக்கு விரோதமாய் அவபக்தியுள்ள பாவிகள் பேசின கடின வார்த்தைகளெல்லாவற்றினிமித்தமும், அவர்களைக் கண்டிக்கிறதற்கும், ஆயிரமாயிரமான தமது பரிசுத்தவான்களோடுங்கூட கர்த்தர் வருகிறாரென்று முன்னறிவித்தான்." என்று எழுதியிருக்கிறார். யூதா. 14, 15. பூர்வத்தார் விசுவாசித்தபடி நாமும் விசுவாசிக்கவேண்டுமானால் நாம் கிறிஸ்துவின் இரண்டாம் வருகையை விசுவாசிக்கவேண்டும். இது ஒரு விபரீதமான புது கொள்கையென்று ஒருவனும் சொல்லமுடியாது. ஏனென்றால் உலகத்தோற்ற முதல் இதை அவர்கள் விசுவாசித்தும் பிரசங்கித்தும் வந்திருக்கிறார்கள்.

நோவா தேவனுடைய மனுஷனாயிருந்தான், தேவன் சொன்னதையெல்லாம் அவன் விசுவாசித்தான். ஜலப்பிரளயம் வருமென்றும் அதில் அவன் அழிந்து போகாதபடிக்கு ஒரு பெரிய பேழையை உண்டுபண்ண வேண்டுமென்றும் தேவன் கற்பித்தபோது நோவா அதை விசுவாசித்தான். பூமியின்மீது ஒரு துளி மழையாவது பெய்ததை அவன் பாராமலிருக்க தேவன் சொன்னதினால் அது சம்பவிக்குமென்று நிட்சயித்தான். அக்காலத்திலிருந்த பெரியோர் மழை பெய்யாதென்று சந்தேகித்தபோதிலும் நோவா தேவனை விசுவாசித்தபடியால் அவன் அதைக் குறித்து சந்தேகிக்கவேயில்லை. அநேகர் அவனைப் பைத்தியக்காரனென்று இகழ்ந்தபோதிலும் அவன் தேவனுடைய வார்த்தையை நம்பினதினால் அந்த இகழ்ச்சியை ஒரு பொருட்டாக எண்ணவில்லை. பூர்வ பாதையில் நடந்த பூர்வீக மனிதரின் நடக்கை இதுதான். அது போலவே தற்காலத்திலுள்ள பெரிய மனிதர் வேதத்தில் சொல்லப்பட்டிருப்பவைகள் பைத்தியம் என்று வேதத்தைச் சந்தேகிக்கும்போது நாம் நோவா செய்ததுபோல் செய்வோமாக. தேவனுடைய வசனத்தை விசுவாசித்து அதற்குக் கீழ்ப்படியுங்கள். தேவனுடைய வசனத்தை விசுவாசித்ததினால் நோவாவும் அவன் வீட்டாரும் இரட்சிக்கப்பட்டார்கள். தேவ வசனத்தை விசுவாசியாததினால் அக்காலத்திலிருந்த மற்ற ஜனங்கள் அழிவுக்கு ஆளானார்கள்.

பூர்வ பாதையில் நடந்த நல்லோர்களில் ஆபிரகாம் ஒருவன். தேவன் அவனை "என் சிநேகிதனாகிய ஆபிரகாம்" என்று அழைத்தார். அப்படி அழைக்கப்படுவதற்கு அவன் என்ன செய்தான். அவன் தேவனை விசுவாசித்தது மாத்திரமல்ல அவன் தேவனுக்குக் கீழ்ப்படிந்து அவருடைய கற்பனைகளைக் கைக்கொண்டானென்று சொல்லப்பட்டிருக்கிறது. "ஆபிரகாம் என் சொல்லுக்குக் கீழ்ப்படிந்து, என் விதிகளையும் என் கற்பனைகளையும், என் நியமங்களையும், என் பிரமாணங்களையும் கைக்கொண்டான்." ஆதி. 26: 4. ஆபிரகாம் ஒரு கற்பனையை மாத்திரமல்ல ஆனால் பத்துக் கற்பனைகளையும் கைக்கொண்டான். பத்துக் கற்பனைகளில் ஒன்றை அல்லது இரண்டை மாத்திரம் கைக்கொள்ளுகிறதில் பிரயோஜனமில்லையென்றறிந்து ஆபிரகாம் எல்லாவற்றையும் கைக்கொண்டான். அவன் கொலை செய்யாமலும், களவு செய்யாமலும், விக்கிரகத்தை வணங்காமலும் மாத்திரமிருக்காமல் நான்காம் கற்பனையில் கட்டளையிடப்பட்டிருக்கும் கர்த்தருடைய ஓய்வுநாளையும் கைக்கொண்டான். பூர்வ பாதையில் நடந்த இந்த மனுஷன் ஓய்வுநாளைக் கைக்கொண்டு வந்தான். அப்படியானால் பூர்வ பாதைகளைத் தேடி அதில் நடக்கப் பிரயாசைப்படுகிற நாம் என்ன செய்யவேண்டும்? பூர்வ

பாதையில் நடந்தவர்கள் தேவனை விசுவாசித்து அவருடைய சத்தத்துக்குக் கீழ்படிந்ததுபோல நாமும் கீழ்படியவேண்டும். ஆகையினாலே ஓய்வுநாளை ஆசரிக்கிறது புது கொள்கையாயிருக்கிறதென்று சிலர் சொன்னால் அவர்கள் சொல்வது தப்பான காரியமென்று நாம் அறிந்துகொள்ளவேண்டும். இந்தக் கொள்கை ஒரு புதுக்கொள்கை யல்ல. இது உலகம் உண்டாக்கப்பட்டபொழுதே கொடுக்கப்பட்ட பூர்வீக கட்டளையாயிருக்கிறது. ஆதி. 2: 1-3 பார்க்கவும்.

மரணத்தில் மனிதனுடைய நிலைமை என்ன என்பதை வேதாகமத்திலிருந்து எடுத்துச் சொல்லும்போது இது ஒரு விநோதமான புது கொள்கையாயிருக்கிறது, இதை விசுவாசிக்க மாட்டோம், இதை செவி கொடுத்துக் கேட்கவும் மாட்டோமென்று அநேகர் சொல்லுகிறார்கள். இது ஒரு புது போதனையா? இது ஆதிமுதலாய் இவ்வண்ணம் போதிக்கப்பட வில்லையா? ஒருவன் மரித்தபின் உயிர்த்தெழுதலின் நாள்மட்டும் அவன் இளைப்பாறிக்கொண்டிருக்கிறானென்று பூர்வ பாதையில் நடந்த முன்னோர் விசுவாசிக்க வில்லையா? அவர்கள் மரித்த உடனே நேராக மோட்சத்துக்குப் போவதாக எண்ணினார்களா? எல்லா மனிதரிலும் மிகப் பொறுமையுள்ளவனாயிருந்த யோபு பூர்வ பாதையில் நடந்தான். அவனுடைய விசுவாச மென்ன? "மனுஷனோ வென்றால் செத்தபின் ஒழிந்து போகிறான், மனுப்புத்திரன் ஜீவித்துப்போனபின் அவன் எங்கே? தண்ணீர் ஏரியிலிருந்து வடிந்து, வெள்ளம் வற்றிச் சுவறிப்போகிறதுபோல, மனுஷன் படுத்துக் கிடக்கிறான், வானங்கள் ஒழிந்துபோகுமளவும் எழுந்திருக்கிறதும் இல்லை. நித்திரை தெளிந்து விழிக்கிறதும் இல்லை. நீர் என்னைப் பாதாளத்தில் ஒளித்து, உமது கோபம் தீருமட்டும் என்னை மறைத்து, என்னைத் திரும்ப நினைக்கும்படிக்கு எனக்கு ஒரு காலத்தைக் குறித்தால் நலமாயிருக்கும். மனுஷன் செத்தபின் பிழைப்பானோ? எனக்கு மாறுதல் எப்போது வருமென்று எனக்குக் குறிக்கப்பட்ட போராட்டத்தின் நாளெல்லாம் நான் காத்திருக்கிறேன். என்னைக் கூப்பிடும், அப்பொழுது நான் உமக்கு உத்தரவு சொல்லுவேன்; உமது கைகளின் கிரியையின்மேல் விருப்பம் வைப்பீராக." யோபு. 14: 10-15. "அப்படி நான் காத்துக்கொண்டிருந்தாலும், பாதாளம் எனக்கு வீடாயிருக்கும்; இருளில் என் படுக்கையைப் போடுவேன்... என் மீட்பர் உயிரோடிருக்கிறார் என்றும், அவர் கடைசி நாளில் பூமியின்மேல் நிற்பாரென்றும் நான் அறிந்திருக்கிறேன்." யோபு. 17: 13; 19: 25. யோபு மரித்தவுடனே தான் பரலோகத்திற்குப் போவதாக எண்ணாமல் தன் மீட்பர் வருமளவும் பிரேதக் குழியில் படுத்து இளைப்பாறுவதாக எண்ணினாரென்று மேற்சொல்லிய வசனங்களினால் அறிந்துகொள்ளுகிறோம். கிறிஸ்து உயிர்த்தெழுந்து கல்லறை யண்டையில் மரியாளுக்குத் தரிசனமான பொழுதும் அப்படியே போதித்தார். "இயேசு அவளை நோக்கி: என்னைத் தொடாதே, நான் இன்னும் என் பிதாவினிடத்திற்கு ஏறிப்போகவில்லை என்றார்." கிறிஸ்து தாம் மரித்த மூன்றாம் நாள் உயிர்த்தெழுந்த பிறகும், பரலோகத்திற்கு ஏறிப்போக வில்லை என்கிறார். கிறிஸ்துவானவர் முதலாய் மரித்த உடன் பரலோகத்திற்கு ஏறிப்போகாதிருக்கும்பொழுது மனிதன் மரித்தபின் பரலோகத்துக்குப் போகமுடியுமென்று விசுவாசிக்கலாமா? தாவீது பரலோகத்திற்கு எழுந்து போகவில்லையென்று அப்போஸ்தலனாகிய பேதுரு சொல்லுகிறார். அப். 2: 34 பார்க்கவும். மரித்த உடனே தான் தன் பலனை அடையப்போகிறதில்லையென்று அப்போஸ்தலனாகிய பவுலும் தெளிவாய்ப் போதிக்கிறார். "நான் இப்பொழுதே பான பலியாக வார்க்கப்பட்டுப் போகிறேன்; நான் தேகத்தை விட்டுப் பிரியும் காலம் வந்தது. நல்ல போராட்டத்தைப் போராடினேன், ஓட்டத்தை முடித்தேன், விசுவாசத்தைக் காத்துக்கொண்டேன். இது முதல் நீதியின் கிரீடம் எனக்காக வைக்கப்பட்டிருக்கிறது, நீதியுள்ள நியாயாதிபதியாகிய கர்த்தர் அந்நாளிலே அதை எனக்குத் தந்தருளுவார்; எனக்கு மாத்திரமல்ல, அவர் பிரசன்னமாகுதலை விரும்பும் யாவருக்கும் அதைத் தந்தருளுவார்." 2 தீமோ. 4: 6-8. இயற்கையிலேயே மனிதன் சாகாமை உள்ளவன் அல்ல. நித்திய ஜீவன் இயேசுக் கிறிஸ்துவைப்பற்றும் விசுவாசத்தின் தேவ ஈவாயிருக்கிறது. அதை நாம் அவருடைய இரண்டாம் வருகையில் பெற்றுக்கொள்வோம். ஆகையினால் நாம் நித்திய ஜீவனைப் பெற்றுக்கொள்ள விரும்பினால் நாம் இயேசுவை விசுவாசித்து அவருக்குக் கீழ்படிவோமாக. தாவீதும் யோபும், பவுலும், கிறிஸ்துவும்கூட தாங்கள் மரித்தவுடன் ஆதியில் தாங்கள் உண்டாக்கப்பட்ட மண்ணுக்குத் திரும்புவதாக விசுவாசித்தார்கள். கிறிஸ்துவை விசுவாசித்தவர்கள் யாவரும் உயிர்த்தெழுதலில் நித்திய ஜீவனைத் தரித்துக்கொண்டு இப்படியாக சதா காலங்களிலும் சாகாமல் உயிரோடிருப்பார்கள். மெய்க்கிறிஸ்தவனின் மெய்யான நோக்கம் இதுதான்.

நாம் தேவனுடைய வசனத்தைப் படிக்கும்பொழுது மனித போதனையினாலும் மனித விசுவாசத்தினாலும் வழி நடத்தப்படாமல் தேவனுடைய திருவசனத்தினாலே மாத்திரம் வழி நடத்தப்படவேண்டும், தேவன் நமக்கு ஞானத்தையும் புத்தியையும் தந்திருக்கிறார். நல்ல வழி எதென்று பார்த்து அறியும்படி நமக்குக் கற்பிக்கிறார். நமக்குக் கொடுக்கப்பட்ட வெளிச்சத்தில் நாம் நடப்போமானால் அவர் நம்மை வழி நடத்துவதாக வாக்களிக்கிறார்.

ஜி. ஜி. லேனரி.

தசமபாகம் வாங்குதல்

(TITHING.)

இயேசு பரத்துக்கேருமுன்னே தம்முடைய சீஷர்களை நோக்கி "நீங்கள் உலகமெங்கும் போய் சர்வ சிருஷ்டிக்கும் சுவிசேஷத்தைப் பிரசங்கியுங்கள்" என்று கற்பித்தார். மாற். 16: 15. இந்தக் கட்டளையானது உலகமெங்கும் செல்லுகிறதாயும் இந்தக் கிருபையின் காலம் முடிவடையுமட்டும் நிறைவேற்றப்பட்டு வருகிறதாயு மிருக்கிறது.

சகல ஜாதிகளுக்கும் பாஷைக்காரருக்கும் கோத்திரத்தாருக்கும் சுவிசேஷத்தை அறிவிக்கும்படியாகக் கொடுக்கப்பட்ட இந்த தேவ கட்டளையின் மேன்மையைப் பார்க்கும்போது பல நூற்றாண்டுகளாகப் பூமியின் கடைசிமட்டும் சிதரிப்போயிருக்கும் பெருத்த சேனைகளாகிய சுவிசேஷ ஊழியர்களின் ஆதரிப்புக்கென்று கர்த்தர் ஏதாவது ஒரு ஏற்பாட்டை ஸ்தாபித்திருக்கிறாரா என்கிற கேள்வி நம்முடைய மனதில் தோன்றுகிறது. அறுப்புக்கு எஜமானாகிய கர்த்தர் அறுக்கிறவர்களாகிய தம்முடைய ஊழியக்காரரின் ஆதரிப்பை மனிதரின் உதார குணத்திற்கு அல்லது அவர்களுடைய இஷ்டத்திற்கு விட்டுவிட்டாரா. அல்லது திட்டமான ஒரு ஒழுங்கை ஏற்படுத்தி அதினாலே அந்த ஊழியர்கள் ஆதரிக்கப்படவேண்டுமென்று நியமித்திருக்கிறாரா? கர்த்தரால் அழைக்கப்பட்ட ஊழியக்காரர்கள் ஒரு ஒழுங்கான ஏற்பாட்டின்படி கிரமமாய் ஆதரிக்கப்பட்டு நடத்தப்படுவதும் அல்லது திட்டமான ஏற்பாடொன்றுமில்லாமல் தாட்சி யடைந்து தங்கள் ஆதரிப்புக்கென்று வேறொரு வேலையைத் தேடிக்கொள்வதும் மனிதரின் இஷ்டத்தைப் பொறுத்ததாயிருக்கிறதா அல்லது ஆவிக்குறிய காரியங்களில் அலுவலாயிருக்கிறவர்கள் ஆதரிக்கப்படுவதற்கென்று தேவன் தம்முடைய வசனத்தில் ஓர் ஏற்பாட்டைப்பற்றிச் சொல்லியிருக்கிறாரா? சுவிசேஷத்தைப் பிரசங்கிக்கிறவர்களுக்கு சுவிசேஷத்தினால் பிழைக்கும் உரிமை உண்டென்பதை யாரும் மறுக்கமாட்டார்கள் என்பது நிட்சயம்.

இந்தக் கேள்விகளைக் கேட்பது இவற்றிற்கு உத்தரவு சொல்லும்படியாக அல்ல கர்த்தர் தம்முடைய வேலையின் அந்தப் பாகத்தையும் மனிதருடைய சுய எண்ணத்தின் பிரகாரம் தீர்க்கப்படும்படியாக விட்டுவிட்டாரென்றுவது அல்லது இழந்துபோனதைத் தேடும்படியாக உலகத்தின் கடையாந்தரங்கள்மட்டும் போகும்படி கட்டளை கொடுத்து அழைக்கப்பட்டவர்களை ஆதரிப்பதற்கு ஒரு ஒழுங்கும் செய்யாமல் இருந்துவிட்டாரென்றுவது நினைப்பது நியாயமல்ல.

"எவன் தன் சொந்தப்பணத்தைச் செலவழித்து தண்டிலே சேவகம் பண்ணுவான்? எவன் திராட்சத் தோட்டத்தை உண்டாக்கி அதின் கனியில் புசியாதிருப்பான்? எவன் மந்தையை மேய்த்து அதின் பாலைச் சாப்பிடாதிருப்பான்?" 1 கொரி. 9: 7.

"நாங்கள் உங்களுக்கு ஞான நன்மைகளை விதைத்திருக்க உங்கள் சரீர நன்மைகளை அறுத்தால் அது பெரிய காரியமா. மற்றவர்கள் உங்களிடத்திலே இந்த அதிகாரத்தைச் செலுத்தினால் அவர்களிலும் நாங்கள் அதிகமாய்ச் செலுத்தலாம் அல்லவா? அப்படியிருந்தும் கிறிஸ்துவின் சுவிசேஷத்திற்கு யாதொரு தடையும் உண்டாகாதபடிக்கு நாங்கள் இந்த அதிகாரத்தைச் செலுத்தாமல் எல்லாப் பாடும் படுகிறோம். ஆசாரிய ஊழியம் செய்கிறவர்கள் தேவாலயத்திற்குரியவைகளில் புசிக்கிறார்களென்றும் பலிபீடத்தை அடுத்துப் பணிவிடை செய்கிறவர்களுக்குப் பலிபீடத்திலுள்ளவைகளில் பங்கு உண்டென்றும் அறியீர்களா. அந்தப்படியே சுவிசேஷத்தை அறிவிக்கிறவர்களுக்குச் சுவிசேஷத்தினாலே பிழைப்பு உண்டாகவேண்டுமென்று கர்த்தரும் கட்டளையிட்டிருக்கிறார்." 1 கொரி. 9: 11-14.

திராட்சத் தோட்டத்தை உண்டாக்குகிறவன் அதின் கனியைச் சாப்பிடுவது நியாயமாயிருப்பது போலவும், மந்தையை மேய்ப்பவன் அதின் பாலைச் சாப்பிடுவது தகுதியாயிருப்பதுபோலவும், ஆசாரிய ஊழியம் செய்கிறவன் தேவாலயத்திற்குரியவைகளில் புசிக்கிறது கிரமமாயிருப்பதுபோலவும், சுவிசேஷத்தை அறிவிக்கிறவர்களுக்கு சுவிசேஷத்தினாலே பிழைப்பு உண்டாகவேண்டுமென்று கர்த்தரும் கட்டளையிட்டிருக்கிறார். அல்லது ஏற்பாடு பண்ணியிருக்கிறார். தம்முடைய ஊழியர்களின் ஆதரிப்புக்கான இந்த ஒழுங்கை கர்த்தர் தாமே ஏற்படுத்தியிருக்கிறாரென்று பரிசுத்த ஆவியினால் ஏவப்பட்ட அப்போஸ்தலன் இதினால் தெளிவாய்க் காண்பிக்கிறார். கர்த்தர் தம்முடைய பரிசுத்த உபயோகத்திற்கென்று பிரித்தெடுத்து வைத்ததிலிருந்து தம்முடைய தாசர் செய்யும் ஊழியத்திற்குக் கூலி கொடுக்கிறார். அவர்களுடைய ஆதரிப்புக்கு வேண்டிய உதவிக்கு ஆதாரம் எதிலிருந்து வரவேண்டுமென்றும் அவர் தெளிவாய்க் காட்டியிருக்கிறார். எந்த ராஜாங்கத்தாரும்

போர்ச்சேவகர்களின் ஆதரிப்புக்கும் பராமரிப்புக்கும் வேண்டிய தகுதியான ஏற்பாடுகள் செய்யாதபடி அவர்களை அனுப்புகிறதில்லை. அப்படியிருக்க பரலோகத்தில் பூரணமான ராஜாங்கத்தில் எத்தனைக் கதிகமாய் அதைப்பற்றிய ஏற்பாடெல்லாம் இருக்கு மென்பதற்கையமில்லை.

மற்ற மனுஷருக்கெல்லாம் அவசியமாயிருப்பது போலவே சுவிசேஷ ஊழியத்திற்கென்று தங்கள் காலத்தை செலவிடுகிறவர்களுக்கும் ஆகாரமும் உடையும் வசிக்க வீடும் அவசியமாயிருக்கிறது. அவர்கள் அழைக்கப்பட்டிருக்கும் அந்த வேலைக்கென்றே தங்கள் முழு நேரத்தையும் செலவிடும்படியாகவும் அவர்கள் செய்யும்படி அழைக்கப்பட்டிருக்கும் அந்த வேலை தடைபடாமலிருக்கும்படியாகவும் அவர்கள் தங்கள் பிழைப்பின்பொருட்டு இவ்வுலக காரியங்களில் சிக்கிக் கொள்ளாமலிருக்கும்படியாகவும் அவர்களுடைய பராமரிப்புக்கென்று கர்த்தர் ஒரு ஒழுங்கை ஏற்படுத்தியிருக்கிறார். "வேலையாள் தன் கூலிக்குப் பாத்திரனாயிருக்கிறான்" என்று சொல்லப்பட்டிருக்கிறது. இது லௌகீக காரியங்களில் அலுவலாயிருக்கிறவர்களுக்கு மாத்திரமல்ல ஞான காரியங்களில் வேலையாயிருக்கிறவர்களுக்கும் பொருந்தும். சுவிசேஷ ஊழியர்கள் ஓர் மகத்தான வேலை செய்கிறவர்களாயிருக்கிறார்கள். அவர்கள் உண்மையுள்ளவர்களாயிருந்தால் நட்சத்திரங்களைப் போல என்றென்றைக்குமுள்ள சதா காலங்களிலும் பிரகாசிப்பார்கள்." அவர்கள் கர்த்தருடைய ஊழியராயிருப்பதினாலே அவர்கள் எவ்விதத்திலாகிலும் தங்கள் ஜீவனத்திற்கு வேண்டியதை சம்பாதித்துக்கொள்ளட்டும் என்று அவர் விட்டுவிடாமல் அதற்கென்று ஓர் ஏற்பாட்டைத் திட்டப்படுத்தி யிருக்கிறார். அவர்கள் மனிதனுடையதிலிருந்தல்ல தேவனுடைய பொக்கிஷத்திலிருந்து ஆதரிக்கப்படவேண்டும். கர்த்தர் தம்முடைய ஊழியக்காரரின் ஆதரிப்பை மனுஷருடைய இஷ்டத்திற்கு விட்டுவிட வில்லை. அவர் சிருஷ்டிகராயிருப்பதினால் உலகத்திலுள்ள யாவும் அவருக்குச் சொந்தமானது. அதிலே அவர் தம்முடைய ஊழியருக்குப் போதுமானதை பிரத்தியேகப் படுத்தியிருக்கிறார். அது செலுத்தப்படவேண்டியபடி செலுத்தப்படுமானால் தேவனுடைய பொக்கிஷத்தில் அதற்குத் தேவையான பொருள் இருக்கும். அது குறைவாயிருப்பதற்குக் காரணம் மனிதர் அதைச் சரியாய்ச் செலுத்தாமல் தேவனுடைய பொக்கிஷத்தில் சேரவேண்டியதை திருடிக் கொள்வதுதான்.

மேலே சொல்லப்பட்ட வேத வாக்கியத்தில் பரிசுத்த ஆவியினால் ஏவப்பட்ட அப்போஸ்தலன் லேவியருடைய ஆசாரியத்துவத்தின் ஆதரிப்புக்கென்று ஏற்பட்ட தசம பாகத்தைப்பற்றிப் பேசியிருக்கிறார். கர்த்தர் லேவிக் கோத்திரத்தை மற்றக் கோத்திரங்களிலிருந்து பிரித்து வைத்தார். மற்ற கோத்திரங்களுக்கெல்லாம் நிலங்கள் சுதந்தரமாகப் பங்கிட்டுக் கொடுக்கப்பட்டது. ஆனால் லேவியின் கோத்திரத்தைப்பற்றிக் கர்த்தர் தாமே அவர்களுடைய சுதந்தரமாயிருந்ததாக எழுதப்பட்டிருக்கிறது. "இதோ லேவியின் புத்திரர் ஆசரிப்புக் கூடாரத்தின் பணிவிடையைச் செய்கிற அவர்களுடைய வேலைக்காக இஸ்ரவேலருக்குள்ளவை யெல்லாவற்றிலும் தசம பாகத்தை அவர்களுக்குச் சுதந்தரமாகக் கொடுத்தேன்." எண். 18: 21. தசமபாகம் அதாவது பத்தில் ஒரு பங்கு அவர்களுடைய ஆதரிப்புக்காக கர்த்தரால் கட்டளை யிடப்பட்டது. லேவிக் கோத்திரமானது ஆசரிப்புக்கூடார வாசஸ்தலத்தின் பணிவிடைகளைச் செய்யும்படியாக பிரத்தியேகப் படுத்தப்பட்டது. அவர்கள் தேசத்தில் அவர்களுக்குச் சுதந்தரம் கொடுக்கப்படவில்லை. ஆயினும் கர்த்தர் அவர்களுடைய ஆதரிப்புக்குப் போதுமானதைச் செய்திருந்தார். அது எவ்விதமாகக் கிடைக்கவேண்டுமென்பது இதில் தெளிவாய் சொல்லப்பட்டிருக்கிறது. அவர்கள் தசம பாகத்தினால் ஆதரிக்கப்படவேண்டியவர்களாயிருந்தார்கள்.

யூதர் காலத்திலிருந்தல்ல முற்பிதாக்கள் காலமுதற்கொண்டே இருக்கிறது.

தசமபாகம் வாங்குதல் முற்பிதாக்கள் காலத்தில் முதல் முதல் சொல்லப்பட்டிருக்கிறது;

"உன்னதமான தேவனுடைய ஆசாரியனாயிருந்த சாலேமின் ராஜாவாகிய மெல்கிசேதேக்கு அப்பமும் திராட்ச ரசமும் கொண்டு வந்து அவனை ஆசீர்வதித்து வானத்தையும் பூமியையும் உடையவராகிய உன்னதமான தேவனுடைய ஆசீர்வாதம் ஆபிரகாமுக்கு உண்டாவதாக உன் சத்துருக்களை உன் கையில் ஒப்புக்கொடுத்த உன்னதமான தேவனுக்கு ஸ்தோத்திரம் என்று சொன்னான். இவனுக்கு ஆபிரகாம் எல்லாவற்றிலும் தசம பாகம் கொடுத்தான்." ஆதி. 14: 18-20.

தசமபாகம் செலுத்தும் ஏற்பாடு அக்காலத்தில்தான் ஆரம்பித்ததாக இந்த வேத வாக்கியம் சொல்லுகிறதில்லை. இந்த ஏற்பாட்டைப்பற்றி அக்காலத்திலேயே நன்றாய் அறியப்பட்டிருந்ததாக இதினால் தெரிகிறது. புதிதாய் ஸ்தாபகமாகிறவைகள் ஓர் கட்டளையினால் ஆரம்பிக்கும். ஆனால் இந்த வேத வாக்கியம் தசமபாகம்

வாங்கும் வழக்கம் கட்டளை யிடப்பட்டதைப்பற்றி சொல்லுகிறதாயிராமல் ஏற்கனவே ஏற்படானதும் நன்றாய் அறியப்பட்டிருந்ததுமான ஓர் ஒழுங்கு அனுஷ்டானத்திலிருந்ததைத் தெரிவிக்கிறது. எபிரேயருடைய அனுஷ்டான கிரமத்தில் ஜனங்களுடைய வரும்படியெல்லாம் பத்திலொருபங்கு சபை கூடும் தேவாராதனையின் ஆதரிப்புக்கென்று பிரத்தியேகப்படுத்தப்பட்டது. ஆனால் தசமபாகம் வாங்கும் ஏற்பாடானது எபிரேயர் காலத்திலேதான் துவக்கமானதல்ல. பூர்வ முதல் கர்த்தர் தசம பாகத்தை தமக்குச் சொந்தமென்று வைத்திருக்கிறார். இந்த உரிமையானது ஒப்புக்கொள்ளப்பட்டும் கனப்படுத்தப்பட்டும் வந்தது. உன்னதமான தேவனுடைய ஆசாரியனாயிருந்த மெல்கிசேதேக்குக்கு ஆபிரகாம் தசம பாகம் செலுத்தினார். யாக்கோபு பெத்தேலிலே துரத்தப்பட்டவராகவும் அலைந்து திரிகிறவராகவும் இருந்த காலத்தில் "தேவரீர் எனக்குத் தரும் எல்லாவற்றிலும் உமக்குத் தசமபாகம் செலுத்துவேன்" என்று கர்த்தருக்குப் பொருத்தனை பண்ணினார். இஸ்ரவேல் ஒரு ஜனமாக ஸ்தாபிக்கப்பட்ட காலத்தில் தசமபாகம் செலுத்தும் கட்டளையானது தேவ ஏற்பாடாக திரும்பவும் உறுதிப்படுத்தப்பட்டது. இந்தக் கட்டளைக்குக் கீழ்படிவதில் அவர்கள் ஆசீர்வாதம் அடங்கியிருந்தது.

தேவனுக்குச் சொந்தமானது.

இப்பூலோகத்திலுள்ள எல்லாப் பொருட்களுக்கும் கர்த்தருக்குமுள்ள சம்பந்தத்தை நாம் நன்றாய்ப் படித்துணர்ந்து கொள்ளுவோமானால் தசம பாகம் செலுத்துவதைப்பற்றிய விஷயத்தை மிகவும் திட்டமாய் அறிந்து கொள்வதற்கும் அதிலுள்ள ஆசீர்வாதத்தையும் மேன்மையையும் அதிக தெளிவாய்க் கண்டுகொள்வதற்கும் உதவியாயிருக்கும். கர்த்தர் வேறுவிதமான ஒரு ஏற்பாட்டை செய்யக்கூடாமையினாலே அல்லது தமக்கு வேறொன்றும் இல்லாமையினாலே நாம் அவருக்குத் தசமபாகம் செலுத்தவேண்டுமென்று கேட்கிறதில்லை. தேவன் தாமே இந்த ஏற்பாட்டைக் கட்டளை யிட்டிருப்பதினாலே நாம் அதைப் பூரணமானதாகவும் அன்பு நிறைந்த தேவன் மனிதருக்கென்று ஏற்படுத்தி யிருக்கும் உத்தமமான ஏற்பாடாகவும் மதிக்கவேண்டும். பாவத்தில் விழுந்த மனுஷ ஜாதிக்கு அவர் இந்த தெய்வீக ஏற்பாட்டை ஒரு ஆசீர்வாதமாக வைத்திருக்கிறார். தேவன் மனிதனை உண்டாக்கினபோதே அவர் அவனுக்கு ஓர் நிபந்தனையை ஏற்படுத்தி அதைக்கொண்டு அவர் மனிதனைச் சோதித்தார். ஏதேன் தோட்டத்திலே "பார்வைக்கு அழகும் புசிப்புக்கு நலமுமான சகலவித விருக்ஷங்களும்" வளர்ந்தது. நன்மை தீமை அறியத்தக்க விருக்ஷம் ஒன்று தவிர மற்றெல்லாவற்றிலும் அவன் புசிக்கும்படியாக தோட்டத்திலிருந்த எல்லாவற்றையும் அவனுக்குக் கொடுத்திருந்தார். அந்த ஒரு விருக்ஷத்தைப்பற்றி மாத்திரம் அதின் கனியைப் புசிக்க வேண்டாமென்றும் புசித்தால் சாவீர்களென்றும் கட்டளையிட்டிருந்தார். அந்த விருக்ஷம் நலமானதாயிராததினாலல்ல அது கர்த்தருக்குச் சொந்தமானதாயிருந்ததினாலே அப்படிக் கற்பித்தார். சிருஷ்டிகர் தனக்கென்று பிரத்தியேகப்படுத்தியிருந்ததை அது தேவனுக்குச் சொந்தமானதென்று அவன் மதித்து அதை தேவனுடையதாக விட்டுவிடுகிறானா இல்லையா என்று பார்க்கும்படி கீழ்படிதல் என்னும் பரிக்ஷை மனிதனுக்கு முன் வைக்கப்பட்டது. இந்தப் பரிக்ஷையில் மனிதன் தவறிப்போனான். மனிதனுக்குச் சொந்தமாயிராததும் கர்த்தர் தமக்கென்று பிரத்தியேகப் படுத்தினதுமாயிருந்ததை அவன் தனக்கென்று உபயோகப் படுத்திக்கொள்ளப் பார்த்தான். அதின் பலனாகப் பாவமும் அதின் சகல பயங்கரமான துர்ப்பலன்களும் இப்பூலோகத்திற்கு வந்தது. அதற்கு நிவாரணமாக தேவனுடைய மாசற்ற சுதனின் ஜீவன் கொடுக்கப்படவேண்டியதாயிற்று.

மனிதன் பாவத்தில் விழுந்த பிற்பாடும் இதே விதமான ஒரு பரிக்ஷை சதமபாகத்தைப்பற்றிய விஷயத்தில் மனிதனுக்கு முன்பாக வைக்கப்பட்டு பூலோகத்திலுள்ளவைகளெல்லாம் தேவனுக்குச் சொந்தமானதென்பதை மனிதன் அங்கிகரித்துக்கொள்ளுகிறானோ அல்லது தேவன் நியாயமாய்த் தம்முடையதென்று உரிமை பாராட்டுவதை அவன் அவமதித்து கர்த்தர் தமக்கென்று பிரத்தியேகப்படுத்தியிருப்பதை தன்னயமுள்ளவனாய் தன்னுடையதாக உபயோகித்துக் கொள்ளுகிறானோ என்பது சோதிக்கப்படுகிறது.

மனிதன் இப்பூலோகத்தில் தேவனுடைய பொருட்களின்பேரில் வைக்கப்பட்ட ஓர் உக்கிராணக்காரனாய் மாத்திரம் இருக்கிறான். அவனுக்கே சொந்தமானது ஒன்றுமில்லை. "பூமியும் அதின் நிறைவும் உலகமும் அதிலுள்ள குடிகளும் கர்த்தருடையது." சங். 24: 1. "இதோ, வானங்களும் வானாதி வானங்களும், பூமியும் அதிலுள்ள யாவும், உன் தேவனாகிய கர்த்தருடையவைகள்." உபா. 10: 14.

"சகல காட்டு ஜீவன்களும் பர்வதங்களில் ஆயிரமாயிரமாய் திரியும் மிருகங்களும் என்னுடையவைகள். மலைகளிலுள்ள பறவைகளை யெல்லாம் அறிவேன்; வெளியில் நடமாடுகிறவைகளெல்லாம் என்னுடைய

வைகள். நான் பசியாயிருந்தால் உனக்குச் சொல்லேன்; பூமியும் அதின் நிறைவும் என்னுடையவைகளே." சங். 50: 10-12. "வெள்ளியும் என்னுடையது, பொன்னும் என்னுடையது என்று சேனைகளின் கர்த்தர் சொல்லுகிறார்" ஆகாய் 2: 8. எல்லாம் கர்த்தருக்கே சொந்தம். நம்மிடத்திலுள்ள ஆடு மாடுகள் கோழி முதலியவைகளும், பொக்கிஷ சாலையில் அல்லது நம்முடைய பணப்பைகளில் உள்ள பொக்கிஷங்கள் யாவும் சுரங்கங்களிலுள்ள உலோகங்களும் எல்லாம் அவருடையதே. நாம் அவருக்குச் செலுத்தும்போது ஏற்கனவே அவருக்குச் சொந்தமாயிருக்கிறதைத்தான் அவருடைய காரியமாய் உபயோகிக்கிறதற்கென்று திரும்பக் கொடுக்கிறோமேயன்றி மற்றபடியல்ல. எல்லாம் அவருடையதாயிருப்பதினாலே தம்முடைய வேலைக்கென்று தமக்கு எவ்வளவு தேவையென்றும் அதை எப்படி யாரிடத்தில் கொடுப்பதென்றும் கற்பிக்க அவருக்கு அதிகாரமுண்டு. மனிதன் பொருளுக்கு எஜமானாயிராமல் உக்கிராணக்காரனாய் மாத்திரம் இருக்கிறான். "நான் திரும்பி வருமளவும் இதைக்கொண்டு வியாபாரம் பண்ணுங்கள்" என்று கர்த்தர் சொல்லியிருக்கிறார்.

பூமியிலே தம்முடைய ஊழியத்திற்கென்று உபயோகிக்கும்படியாகக் கர்த்தர் தசமபாகத்தை அதாவது பத்திலொரு பங்கை தமக்கென்று பரிசுத்தமானதாகப் பிரத்தியேகப்படுத்தியிருக்கிறார். "தேசத்திலே நிலத்தின் வித்திலும் விருக்ஷங்களின் கனியிலும் தசமபாகமெல்லாம் கர்த்தருக்கு உரியது. அது கர்த்தருக்குப் பரிசுத்தமானது. ஒருவன் தன் தசமபாகத்திலே எவ்வளவாவது மீட்டுக்கொள்ள மனதாயிருந்தானானால் அதனுடன் ஐந்தில் ஒரு பங்கைக் கூட்டிக்கொடுக்கக் கடவன். கோலின் கீழ்ப்பட்ட ஆடுமாடுகளிலே பத்திலொரு பங்காகிறதெல்லாம் கர்த்தருக்குப் பரிசுத்தமானது. அது நல்லதோ இளப்பமானதோ என்று அவன் பார்க்க வேண்டாம். அதை மாற்றவும் வேண்டாம். மாற்றினால் அதுவும் அதற்குப் பதிலாகக் கொடுக்கப்பட்டதுமாகிய இரண்டும் பரிசுத்தமாகும். அது மீட்கப்படக் கூடாது." லேவி. 27: 30-33.

தசமபாகம் "கர்த்தருக்குப் பரிசுத்தம்" என்பதைக் கவனியுங்கள். ஓய்வுநாள் அல்லது காலத்தில் ஏழில் ஒருபங்கு பரிசுத்தமானது. தசமபாகத்தின் பரிசுத்தத்தைப்பற்றியும் ஓய்வுநாளின் பரிசுத்தத்தைப்பற்றியும் ஒரே வார்த்தைதான் உபயோகிக்கப்பட்டிருக்கிறது. இரண்டும் பரிசுத்தமானதென்று சொல்லப்பட்டிருக்கிறது. விசேஷமாய் ஓய்வுநாளை ஆசரிக்கிறவர்களுக்கு இது மகா முக்கியமானதாயிருக்கவேண்டும். ஓய்வுநாளை மற்ற நாட்களைப்போலவே பாவித்து அதை நம்முடைய சொந்த லௌகீக காரியங்களுக்கென்று உபயோகிப்பது எப்படி பாவமாயிருக்கிறதோ அப்படியே பரிசுத்தமான தசமபாகத்தைச் சாமானியமாக மதித்து அதை நமது சொந்த லாபத்திற்கென்று உபயோகிப்பதும் பாவமாயிருக்கிறது. பரிசுத்தமானதை எடுத்து அதைத் தன் சொந்த உபயோகத்திற்கென்று தன்னயமான எண்ணத்தோடு செலவிடுவது மிகவும் பயங்கரமான பாவம். நாம் தசமபாகத்தை ஓர் நன்கொடையாகக் கொடுக்கிறதில்லை. நமக்குச் சொந்தமாயிராததை நாம் கொடுக்க முடியாது. தேவன் நமக்குக் கொடுக்கிற எல்லாவற்றிற்காகவும் நாம் அவரைச் சிருஷ்டிகராகவும் எல்லாவற்றிற்கும் சொந்தக்காரராகவும் ஒப்புக்கொண்டு அவர் தமக்குப் பரிசுத்தமானதென்று உரிமை பாராட்டுவதை அவருடைய பொக்கிஷத்தில் வைக்கிறோம்.

மனுஷன் தேவனை வஞ்சிக்கலாமா? ஜனங்கள் தம்மை வஞ்சிப்பதாகக் கர்த்தர் சொல்லுகிறது விபரீதமாகத் தோன்றும். நம்முடைய பிறனை வஞ்சிப்பது பெரிய பாவம். அப்படியானால் சிருஷ்டிகரை வஞ்சிப்பது எத்தனைக்கு அதிக பாவமாயிருக்கிறது. சிருஷ்டிகருக்குச் சொந்தமானதும் அவர் பரிசுத்தமானதென்று விளம்புகிறதுமானதை ஒருவனும் தன் அற்பமான கையை நீட்டி அபகரிக்கத் துணியமாட்டான் என்று தோன்றும். ஆனால் தம்முடைய ஜனங்கள் தம்மை வஞ்சிப்பதாகக் கர்த்தர் அவர்களுக்கு விரோதமாய் முறையிடுகிறார். அது எப்படியென்று கேட்கிறாயா? அவர் சொல்லுகிறதாவது:

"நீங்கள் உங்கள் பிதாக்களின் நாட்கள் தொடங்கி என் கட்டளைகளைக் கைக்கொள்ளாமல் அவைகளை விட்டு விலகிப்போனீர்கள். என்னிடத்திற்குத் திரும்புங்கள் அப்பொழுது உங்களிடத்திற்குத் திரும்புவேன், என்று சேனைகளின் கர்த்தர் சொல்லுகிறார். நாங்கள் எந்த விஷயத்தில் திரும்பவேண்டும் என்கிறீர்கள். மனுஷன் தேவனை வஞ்சிக்கலாமா? நீங்களோ என்னை வஞ்சிக்கிறீர்கள். எதிலே உம்மை வஞ்சித்தோம் என்கிறீர்கள். தசமபாகத்திலும் காணிக்கைகளிலும் தானே நீங்கள் சபிக்கப்பட்டவர்கள் ஜனத்தாராகிய நீங்கள் எல்லாரும் என்னை வஞ்சித்தீர்கள்." மல்கி. 3: 7-9.

கர்த்தர் இந்தப் பயங்கரமான குற்றத்தை தமது ஜனத்திற்கு விரோதமாய்ச் சொல்லுமுன்னே, "நான் கர்த்தர், நான் மாறாதவர்," என்று முகவுரையாய்ச் சொல்லியிருக்கிறார். தசமபாகத்தைச் செலுத்தாமல் வைத்துக்கொள்வது மல்கியா தீர்க்கதரிசியின் காலத்திலே திருட்டாக எண்ணப்பட்டால் "களவு செய்யாதிருப்பாயாக"

என்கிற கற்பனையின் மீறுதலாக மதிக்கப்பட்டால் தேவன் பரிசுத்தமானதென்று விளம்பினதும் தம்முடைய ஊழியத்திற்கென்று பிரித்து வைத்திருப்பதுமானதை அவருடைய பொக்கிஷத்தில் செலுத்தாமல் வைத்துக்கொள்வது இப்பொழுதும் களவாகவே இருக்கிறது. கர்த்தர் மாறுகிறதில்லை. அதை மீறுகிறவன் யேகோவாவின் சாபத்தை தம்மில் வருவித்துக்கொள்ளுகிறான். "நீங்கள் சபிக்கப்பட்டவர்கள்." தேவனுடைய சாபத்திற்குள்ளாயிருப்பது மகா பயங்கரம். தேவனுடைய குமாரன்பேரில் விசுவாசிப்பதாகவும் அவருடைய இரத்தத்தில் பாவமறக் கழுவப்பட்டிருப்பதாகவும் தெருக்கள் சுத்தப்பொன்னும் வாசல்கள் முத்துமான நித்திய நகரம் இருக்கிற இராஜ்ஜியத்தில் மறுரூபமாக்கப்பட்டவனாகப் பிரவேசிப்பதற்கு ஆயத்தப்பட்டிருப்பதாகவும் சொல்லிக்கொண்டிருந்தும் தன் சிருஷ்டிகரும் இரக்ஷகருமானவருடைய பொக்கிஷத்தில் தன் கையைப்போட்டு தேவனை வஞ்சித்து பரிசுத்தமானதைக் கொள்ளையாடி அதைத் தன் சொந்த உபயோகத்திற்கென்று எடுத்துக்கொள்ளும் தன்னயமுள்ள வஞ்சகனைப் பார்ப்பது தேவனுடைய பார்வையில் மெய்யாகவே ஓர் துயரமான காட்சியாயிருக்கிறது. சிலர் சொல்வதுபோல, நான் தசமபாகம் செலுத்த முடியாது என்னுடைய சொற்ப வரும்படி முழுவதும் எனக்கவசியம் ஜீவனத்திற்குத் தேவையாயிருக்கிறது என்று சொல்வது வீண் சாக்குப்போக்கு கர்த்தருடைய சாபத்தைச் சுமத்திக்கொண்டு முழுவதையும் உபயோகிப்பதைப் பார்க்கிலும் தேவனுடைய ஆசீர்வாதத்தோடு அதில் பத்தில் ஒன்பது பங்கை உபயோகிப்பது மகா உத்தமமானது. தன் அழிவுக்குக் காரணமாக பண ஆசைக்கு இடங்கொடுத்த யூதாஸை நாம் நினைத்துக் கொள்ளவேண்டும். அவன் விழுந்துபோனான். விழுந்தவன் பின்பு என்றைக்கும் எழுந்திருக்கவேயில்லை. பணப்பை அவனை அமிழ்த்திப்போட்டது. "வாரி இறைத்தும் விருத்தியடைவாரும் உண்டு. அதிகமாய்ப் பிசினித்தனம் பண்ணியும் வறுமை அடைவாரும் உண்டு." நீதி. 11: 24.

இந்தப் பரிதாபமான நிலைமை மாற்றப்படுவதெப்படியென்று கர்த்தர் நமக்குச் சொல்லுகிறார். "என் ஆலயத்தில் ஆகாரம் உண்டாயிருக்கும்படி தசமபாகங்களையெல்லாம் பண்டசாலையிலே கொண்டுவாருங்கள். அப்பொழுது நான் வானத்தின் பலகணிகளைத் திறந்து இடங்கொள்ளாமற் போகுமட்டும் உங்கள்மேல் ஆசீர்வாதத்தை வருஷிக்கமாட்டேனோ என்று அதினால் என்னைச் சோதித்துப்பாருங்கள் என்று சேனைகளின் கர்த்தர் சொல்லுகிறார். பூமியின் கனியைப் பட்சித்துப்போடுகிறவைகளை உங்கள் நிமித்தம் நான் கண்டிப்பேன். அவைகள் உங்கள் நிலத்தின் பலனை அழிப்பதில்லை. வெளியிலுள்ள திராட்சக்கொடி பழமில்லாமற் போவதுமில்லையென்று சேனைகளின் கர்த்தர் சொல்லுகிறார். அப்பொழுது எல்லா ஜாதிகளும் உங்களைப் பாக்கியவான்கள் என்பார்கள். தேசம் விரும்பப்படத்தக்கதாயிருக்கும் என்று சேனைகளின் கர்த்தர் சொல்லுகிறார்." மல். 3: 10-12.

கர்த்தருக்கு உண்மையாக தசமபாகம் செலுத்துகிறவர்களுக்கு வரும் ஆசீர்வாதத்தைப்பற்றி இந்த வசனங்களில் சொல்லப்பட்டிருக்கும் வாக்குத்தத்தத்தைப் பார்க்கிலும் பெரிதான வாக்குத்தத்தம் தேவனுடைய பரிசுத்த புஸ்தகத்தில் வேறெதற்கும் அருளப்பட்டிருக்கிறதில்லை. வானத்தின் பலகணிகள் அவர்களுக்குத் திறக்கப்பட்டிருக்கும். பூமியின் கனியை பட்சித்துப் போடுகிறவைகள் கண்டிக்கப்படும். அவர்கள் களஞ்சியம் மிகுதியாய் நிறைந்திருக்கும். அளவற்ற ஆசீர்வாதம் அவர்கள்பேரில் பொழியப்படும். கர்த்தர் இந்த வேத வாக்கியத்தில் தம்முடைய ஊழியனின் வாயைக் கொண்டு மொழிந்த இந்த ஆசீர்வாதத்தைப்பார்க்கிலும் அதிகமானது என்ன இருக்கிறது. மனிதனுடைய இருதயமானது தன்னயத்தினாலும் பண ஆசையினாலும் கடினப்பட்டுப்போய் கர்த்தருக்குச் சொந்தமானதை தனக்கு அபகரித்துக்கொள்வது மெய்யாகவே விசனகரமானது. நாம் நம்முடைய கடமையை நிறைவேற்றினால் தேவன் தமது வாக்குத்தத்தத்தையும் நிறைவேற்றுவார் என்பது நிட்சயம். மாரிகாலத்துக் குளிர் காற்றினாலே வசந்த காலம் தடுக்கப்பட்டிருக்குமாப்போல கர்த்தருக்குச் சொந்தமானதை அவருக்குச் செலுத்த அசதியாயிருப்பதினாலே தேவனுடைய வேலையானது தவக்கப்பட்டிருக்கிறது.

"தேவனுடைய கற்பனைகளை கைக்கொள்வதாகச் சொல்லிக்கொள்ளுகிற அநேகர் கர்த்தர் தங்களுக்கு ஒப்புவித்ததும் அவருடைய பொக்கிஷத்தில் சேரவேண்டியதுமான பொருளை தங்கள் சொந்த உபயோகத்திற்கென்று அபகரித்துக்கொள்ளுகிறார்கள். அவர்கள் தசமபாகங்களிலும் காணிக்கைகளிலும் தேவனை வஞ்சிக்கிறார்கள். அவர்கள் மாய்மாலம் பண்ணி அவருடையதை எடுத்துக்கொள்வதினால் தங்களுக்கே சாபத்தை வருவித்துக் கொள்ளுகிறார்கள். அவர்கள் தங்கள் பொருளாசையினாலும் மாய்மாலத்தினாலும் தசமபாகத்திலும் காணிக்கைகளிலும் தேவனை வஞ்சிப்பதினாலும் தங்களுக்குத் தரித்திரத்தையும், இளைப்பையும் சபைக்கு அந்தகாரத்தையும் வருவிக்கிறார்கள்."

பொய்யையும் மெய்யையும் காண்பிக்கிற கண்ணாடி

(THE MIRROR OF FABLE AND FACT.)

நிகழ் காரியங்களையும், வருங் காரியங்களையும், கடந்த காரியங்களையும் காண்பிக்கக் கூடிய கண்ணாடி ஒன்று வானத்திலிருந்து விழுந்ததென்பது முன்னோர்களின் எண்ணம். ஆனால் அது பாரம்பரியத்தை யடுத்த கட்டுக்கதை என்று நாம் அறிந்துகொள்ளலாம். அப்படி முன்னோர்கள் எண்ணினது இப்போது யதார்த்தமாயிருக்கிறது. அவர்களுக்குச் சொர்ப்பனம்போலக் காணப்பட்டது இப்போது நமது கண் முன்பாக நிறைவேறுகிறது.

நாம் மேலே சொல்லிய அந்த முன்னோர்களுடைய எண்ணத்தை வியாக்கியானப்படுத்தி எழுதும்போது ஒருவர் "தேவன் தமது அளவற்ற ஞானத்தினால் உண்டாக்கின அந்த கண்ணாடி அவருடைய வசனம் தானென்றும், கடந்த காரியங்களையும், நிகழ் காரியங்களையும் வருங் காரியங்களையும், பாவ உலகத்தின் பயங்கரத்தையும், இனி வரும் புது பூமியின் பாக்கியத்தையும், இன்னும் தேவ இரகசியங்கள் யாவற்றையும் மனிதனுக்கு வெளிப்படுத்தும்படியாக தேவன் அதை மனிதருக்குத் தந்தருளினாரென்றும், அதை ஒருவன் சரியாய்க் கையாடுவானானால் 'நான் செய்ததெல்லாவற்றையும் எனக்கு அறிவித்த ஒரு புஸ்தகத்தை வந்து பாருங்கள். அது தேவனுடைய புஸ்தகமல்லவா?' என்று சொல்லக்கூடியவனா யிருப்பான்" என்றும் எழுதி யிருக்கிறார்.

'ஆ, இது என்ன ஆச்சரியமான புஸ்தகம்! நாம் அதை ஆராய்ச்சி செய்யும்போது அதில் நமக்கு அநேக வெளிப்படுத்தல்கள் அடங்கி யிருக்கிறதாகத் தெரிய வரும். ஆகையினாலே அந்த ஆச்சரியங்களை நமக்கு வெளிப்படுத்தினவரை நாம் ஆராதிப்பது அவசியம். இதைப்போன்ற வல்லமை வேறெந்த புஸ்தகத்திற்குமே கிடையாது. அதை வாசிப்பவர்கள் மனதில் அது கிரியை செய்கிறது. நாஸ்திக கூட்டத்தார் யாவரும் அதைப்பற்றி ஏளனம் பண்ணி இன்னும் சொற்ப காலத்திற்குள் இந்தப் புஸ்தகத்தை ஒருவரும் கையாடமாட்டார்களென்று முன்னுரைத்தபோதிலும் இப்போது இந்தப் புஸ்தகம் எங்கும் அதிசீக்கிரமாய் பரம்புவதைக் கண்டு "இந்தப் புஸ்தகம் விசேஷித்த விதமாய் இவ்வுலகத்தில் ஆழமாய் வேரூன்றியிருக்கிறது" என்று அறிந்து கொள்ளுகிறார்கள்.

ஒரு கெட்டிக்காரனான ஆங்கிலேய வித்துவான் வேதாகமத்தின் விலை மதிக்கக்கூடாத பிரயோஜனத்தைப்பற்றி பின்வருமாறு நற்சாட்சி கொடுத்திருக்கிறார். "வேதாகமமானது, தேவாலயத்திலிருந்து கிளம்பும் சுகந்த தூப வாசனையைப்போல கிளம்பின கிரேக்க கலைஞானத்தைப்பார்க்கிலும் பதின்மடங்கு பிரசித்தி பெற்றதாயிருக்கிறது. கிறிஸ்தவ தேசங்களிலுள்ள எல்லா ஆலயங்களிலும் வாராவாரம் இது பிரசங்கிக்கப்பட்டு வருகிறது. அதில் அடங்கியிருக்கிற போதனைகள் யாவும் சன்மார்க்கத்துக் கடுத்ததாயிருக்கிறது. குடிசையில் வசிக்கும் குடியானவனுக்கும் அரண்மனையில் வசிக்கும் அரசனுக்கும் அது அவசியமாயிருக்கிறது. அது ஞானிக்கு ஞானத்தைப் புகட்டுகிறது. துன்பப்படும் ஆத்துமாவுக்கு இன்பத்தை அளிக்கிறது. பெரியோர் முதல் சிறியோர் மட்டுமுள்ள ஆண் பெண் யாவரும் அந்தப் புஸ்தகத்தில் வெளிப்படுத்தப்பட்டிருப்பவரைப் பணிந்துகொள்ளுகிறார்கள். வியாதியஸ்தருக்கு அதில் ஆறுதலடங்கி யிருக்கிறது. கப்பல் சேதத்தினின்று தன்னைத் தற்காத்துக் கொள்ளும்படியாக முயற்சி செய்கிற ஒரு மாலுமி முதலாவதாக, வேதாகமத்தையே தன் மோக்ஷமென்று நினைத்து அதைத் தன்னோடுகூட வைத்துக்கொள்ளுகிறான். நாம் பாலனாகப் பிறந்தபோது அது நம்மை ஆசீர்வதித்தது. வேதாகமமே மனிதனுடைய வழி காட்டியும், தோழனும், தேற்றரவாளனுமாயிருக்கிறது.

எனக்கருமையான சிநேகிதனே, நீ அதை உணர்ந்து [illegible] கேட்கிறேன். "நீ நடக்கும்போது அது உன்னை வழி நடத்தும், நீ தூங்கும்போது அது உன்னைத் தற்காக்கும். நீ நித்திரை தெளிந்து விழிக்கும்போது அது உன்னோடு சம்பாஷிக்கும்" அதன் சத்தியத்தில் மாத்திரம் நமக்கு திருப்தி யிருந்தால் போதாது. அதன் வல்லமையை நாம் பூரணமாய் விசுவாசிக்கவேண்டும். அது தேவனால் அருளப்பட்ட புஸ்தகமென்று ஒத்துக்கொள்வது நல்ல காரியம்தான். அதை நமது இருதயத்தில் பேணி வைப்பது மிகவும் நல்லகாரியம். "உம்முடைய வசனத்தின் பிரசித்தம் வெளிச்சம் தந்து, பேதைகளை உணர்வுள்ளவர்களாக்கும்."

கைதிகளின் விடுதலை

(PRISONERS SET FREE.)

கடைசியாக, ஐரோப்பாவில் நடந்த மகா யுத்தம் சமாதானமடைந்தது. அதன் சம்பந்தமாக நமது சக்கரவர்த்தி நம் ராஜ பிரதிநிதிக்கு கைதிகளை விடுதலை பண்ணும்படியாக ஒரு தாக்கீது பிறப்பித்தார். ராஜ பிரதிநிதி சக்கரவர்த்தியின் தாக்கீது பிரகாரம் பின் வருமாறு கட்டளை யிட்டார்:—

இந்தப் பெரிய யுத்தத்தினால் நமது இந்திய ஜனங்களுக்கு உண்டான வருத்தத்தைப் பார்த்து நமது சக்கரவர்த்திக்கு அதிக துக்கம் உண்டாயிற்று. அவர் தமது துக்கத்தை வெளிப்படுத்தும்படியாக ஒரு மாதத்திற்கென்று காவலி லடைக்கப்பட்டிருந்த கைதிகளை விடுதலை செய்யவேண்டுமென்று கட்டளை யிட்டார். ஆகையினாலே ஒரு மாதத்திற்கென்று சிறையி லடைக்கப்பட்டிருந்த குற்றவாளிகள் யாவரையும் விடுதலை செய்ய ஏற்பாடாயிற்று. புதிதாக ஒரு மாத காவலில் வைக்கப்பட்டவர்களும் அவர்கள் ஒரே ஒரு நாள் மாத்திரம் காவலிலிருந்தபோதிலும் விடுதலையாக்கப்படுவார்கள். அப்படி விடுதலை யாக்கப்படுகிறவர்களின் நடத்தை நல்லதென்று கண்டால் மாத்திரம் அவர்களுக்கு விடுதலை உண்டு.

ஒரு மாதத்திற்கு அதிகமான காலம் காவல் தண்டனை யடைந்தவர்களுக்கு அவர்கள் தண்டனையில் ஒரு மாதம் குறைக்கப்படும். அப்படி ஒரு மாதத்திற்கு மேற்பட்ட காவல் தண்டனை யடைந்தவர்களின் நடத்தை நன்றாயிருந்தால் மாத்திரம் அவர்களுக்கு ஒரு மாத தண்டனை குறைக்கப்படும். அவர்கள் ஒரு வருஷத்திற்கு காவலிலிருக்கவேண்டியவர்களா யிருந்தாலும் அவர்களுக்கும் ஒரு மாத தண்டனை நீக்கப்படும்.

தீவாந்திரங்களில் கடுங்காவல் தீர்ப்படைந்தவர்களுக்குங்கூட ஒரு வருஷத்தில் ஒருமாதம் குறைக்கப்படும். இது அவர்களுக்கு அதிக சந்தோஷத்தைக் கொடுக்குமல்லவா? ஆகவே அநேக வருஷ கடுங் காவல் தீர்ப்பு பெற்ற அநேகம் கைதிகள் இரண்டொரு வருஷத்திற்கு முன்னதாக விடுதலையாக்கப்படுவார்கள். அவர்கள் தங்கள் இனஜன பந்துக்களை சீக்கிரத்தில் சந்திப்போமென்கிற அவாவுடையவர்களா யிருப்பார்கள்.

இன்னும் ஒரு சந்தோஷ செய்தி யிருக்கிறது. அது மிகவும் கவனிக்கத்தக்கது. கடன் வாங்கின நிமித்தம் காவலிலடைபட்டவர்களுக்கும் மீட்பு உண்டு. அவர்கள் ரூபா 100-க்கு மேற்படாமல் கடன்பட்டிருப்பார்களானால் ராஜாங்கத்தார் அவர்கள் கடனைத் தீர்த்து விடுவார்கள். நமது சக்கரவர்த்தி இந்தியர்களாகிய நமக்கு இந்த தடவைப் பாராட்டி யிருக்கிறார். அவர் நீடூழி காலம் அரசு புரியவேண்டுமென்று நாம் மன்றாடுவோமாக.

காரிருளில் பிரகாசிக்கிற பூரண சந்திரனுடைய சுடர் ஒளிபோல எங்கும் பிரகாசிக்கிறவரும், சர்வ ஞானமும் நன்மையும் பொருந்தினவராகிய நமது தெய்வீக ராஜனாகிய கர்த்தராகிய இயேசுக்கிறிஸ்து சீக்கிரத்தில் மேகங்களின்மீது இறங்கி வந்து மரணக் காவலி லடைப்பட்டிருக்கும் தமது பரிசுத்தவான்களை விடுதலை செய்வார். இப்படி நம்மை விடுதலை பண்ணுபவரை நாம் நமது இரக்ஷகரென்று அழைக்கிறோம். அவரே சகல ஞானத்திற்கும் ஊற்றாயும் அன்பு மிகுந்த சம்பன்னராயும் இருக்கிறார். "இதைக்குறித்து நீங்கள் ஆச்சரியப்படவேண்டாம்; ஏனென்றால் பிரேதக் குழிகளிலுள்ள அனைவரும் அவருடைய சத்தத்தைக் கேட்குங் காலம் வரும்; அப்பொழுது, நன்மை செய்தவர்கள் ஜீவனை அடையும்படி எழுந்திருக்கிறவர்களாகவும், தீமை செய்தவர்கள் ஆக்கினையை அடையும்படி எழுந்திருக்கிறவர்களாகவும் புறப்படுவார்கள்." "ஏனெனில், கர்த்தர் தாமே ஆரவாரத்தோடும், பிரதான தூதனுடைய சத்தத்தோடும், தேவ எக்காளத்தோடும் வானத்திலிருந்து இறங்கி வருவார்; அப்பொழுது கிறிஸ்துவுக்குள் மரித்தவர்கள் முதலாவது எழுந்திருப்பார்கள். பின்பு, உயிரோடிருக்கும் நாமும் கர்த்தருக்கு எதிர்கொண்டுபோக, மேகங்கள்மேல் அவர்களோடேகூட ஆகாயத்தில் எடுத்துக் கொள்ளப்பட்டு, இவ்விதமாய் எப்பொழுதும் கர்த்தருடனேகூட இருப்போம்." யோவான் 5: 28, 29; 1 தெச. 4: 16, 17.

தேவனுடைய சித்தம் இதுவே, கிறிஸ்தவனின் நம்பிக்கையும் இதுவே. ஜனன மரண, துன்ப துக்கங்களால் பீடிக்கப்பட்டிருக்கும் நமக்கு இதைவிட மேலான நம்பிக்கை வேறேதாவது உண்டா? நமது இரக்ஷகராகிய இயேசுக்கிறிஸ்துவைத் தவிர வேறே யாராவது இவைகளை நமக்கு அருள முடியுமா? ஒரு ரோகிக்கு ஔஷதம் எப்படி தேவையோ அப்படியே இது நமக்கு தேவையாயிருக்கிறது. சந்திரோதயமானது சமுத்திர அலைகளை எப்படி கவர்ந்து இழுக்கிறதோ அதுபோல கிறிஸ்துவின் வருகையின் நம்பிக்கை நம்மை தட்டி எழுப்புகிறதா யிருக்கிறது. நாம் அந்த நம்பிக்கையை விட்டுவிடாமல் அவருடைய வருகைக்கு நம்மை ஆயத்

தப்படுத்த கிறிஸ்துவின் நல்லாவி தாமே நமக்கு உதவி செய்வாராக. ஆகவே நாம் அவருடைய நீதியான மார்க்கத்தைக் கைக்கொண்டு உலகத்தில் ஜீவிக்கவேண்டியவர்களாயிருக்கிறோம். அவருடைய சிலுவையின் உபதேசத்தை நாம் எங்கும் பிரசித்தப்படுத்துவதற்கு அவர் நமக்கு உதவி செய்வார்.

கிறிஸ்து மரித்து மீண்டும் மூன்றாம் நாளில் உயிர்த்தெழுதலின் முதற் பலனாக எழுந்தாரென்று வேதம் நமக்குப் போதிக்கிறது. நாம் இதை முழுவதுமாக அறியவேண்டுமானால் வேதாகமத்தையும் சரித்திரத்தையும் கவனமாய்ப் படிக்கவேண்டும். இந்தியர்களுக்கு இவ்வளவு தயவு பாராட்டின நமது சக்கரவர்த்தியும் இந்த நம்பிக்கை உடையவராயிருக்கிறார். இந்தியர்களாகிய நாமும் இதிலே நமது நம்பிக்கையை வைப்போமானால் நாம் அந்த முதலாவது உயிர்த்தெழுதலில் பங்கு பெறுவோமென்பதற்கு ஐயமில்லை.

N. B. Solomon.

மோசேயும் எலியாவும்

(MOSES AND ELIAS)

இயேசு தமது சீஷர் முன்பாக மறுரூபமானபொழுது மோசேயும் எலியாவும் அவர்கள் மத்தியில் தோன்றினார்களென்று நாம் வாசிக்கிறோம். இந்த இரண்டு மனிதர்கள் இங்கே காணப்பட்டது மனிதர் மரித்தபின் தங்கள் பலனை அடைந்து தீர்க்கிறார்களென்பதை ரூபிக்கிறதென்று அநேகர் விசுவாசிக்கிறார்கள். இந்த இரண்டு மனிதர்களுடைய காரியங்களை நாம் கவனமாய்ப் பார்ப்போமானால் இவர்களுடைய எண்ணம் தப்பானதென்று நாம் அறிந்துகொள்ளலாம்.

எலியா, கிறிஸ்துவுக்கு அநேக நூற்றாண்டுகளுக்கு முன் வசித்தான். அவன் மரித்த உடனே பரலோகத்துக்குப் போயிராவிட்டால் கிறிஸ்து மறுரூபமானபோது எப்படி அவன் மலையின்மேல் காணப்பட்டானென்று ஒருவன் கேட்கலாம். ஏனோக்கு எப்படி மரணத்தைப் பாராமல் பரலோகத்துக்கு எடுத்துக்கொள்ளப்பட்டாரோ அதுபோல எலியாவும் மரணத்தைப் பாராமல் பரலோகத்துக்கு எடுத்துக்கொள்ளப்பட்டான். 2 ராஜா 2-ம் அதிகாரம் பார்க்கவும். மோசே மரித்தான் தேவன் தாமே அவனை அடக்கம் பண்ணினார். அவனுடைய கல்லறையை இந்நாள்வரைக்கும் ஒருவனும் கண்டதில்லை. உபா. 34-ம் அதிகாரம் பார்க்கவும். தேவன் பிறகு மோசேயை உயிரோடெழுப்பி பரலோகத்திற்கு எடுத்துக்கொண்டாரென்று வேறு வேத வாக்கியங்களில் தெளிவாய் சொல்லப்பட்டிருக்கிறது. யூதா. 9. ஆகையினாலே மோசேயும் எலியாவும் இயேசுவோடுகூட மலையின்மேல் தரிசனமாயிருக்கக் கூடுமென்று தெரிகிறது.

கிறிஸ்துவின் வருகையில் இரட்சிக்கப்படப்போகிற இரண்டு வகையான ஜனங்களுக்கு இந்த இரண்டு மனிதரும் முன்னடையாளமாயிருக்கிறார்கள். மரணத்தைப் பாராமல் பரலோகத்துக்கு எடுத்துக்கொள்ளப்பட்ட எலியா, கிறிஸ்துவின் வருகையில் இப்பூமியில் உயிரோடிருக்கும் நீதிமான்களுக்கு முன்னடையாளமாயிருக்கிறார். எலியா எவ்வண்ணமாக உயிரோடே பரலோகத்துக்கு எடுத்துக்கொள்ளப்பட்டாரோ அதுபோல உயிரோடிருக்கும் நீதிமான்கள் யாவரும் கர்த்தரோடுகூட ஆகாயத்தில் எடுத்துக்கொள்ளப்படுவார்கள். 2 தெச. 4: 16, 17 பார்க்கவும். மோசே, கிறிஸ்துவின் வருகையில் மரித்தோரிலிருந்து உயிரோடெழுப்பப்படப்போகிற நீதிமான்களுக்கு முன்னடையாளமாயிருக்கிறார். மோசே மரித்து அடக்கம் பண்ணப்பட்டு உயிர்த்தெழுந்து பிறகு பரலோகத்துக்கு எடுத்துக்கொள்ளப்பட்டபிரகாரம் ஆபேல் முதல் கிறிஸ்துவின் வருகைமட்டும் மரித்த நீதிமான்கள் யாவரும் உயிர்த்தெழுதலின் நாளில் உயிரோடெழுப்பப்பட்டு சாகாமையைத் தரித்துக்கொண்டு என்றைக்கும் உயிரோடிருக்கும்படியாக பரலோகத்துக்கு எடுத்துக்கொள்ளப்படுவார்கள். தேவனுடைய பிள்ளைகள் இந்தப் பாவத்தால் சபிக்கப்பட்ட உலகத்திலிருந்து விடுபடும் காலம் அதிக சமீபமாயிருக்கிறது. நாம் கிறிஸ்துவை விசுவாசித்து அவருக்குக் கீழ்ப்படிவோமானால் அந்நாள் வரும்போது தேவன் தமது பிள்ளைகளுக்கு அளிக்கும் பலனில் நாமும் பங்கடைவோம். நாம் உயிரோடிருப்போமானால் சாகாமையைத் தரித்துக்கொண்டு பரலோகத்துக்கு எடுத்துக்கொள்ளப்படுவோம். நாம் மரித்திருந்தோமானால் உயிரோடெழுப்பப்பட்டு மற்றவர்களோடுகூட உயர எடுத்துக்கொள்ளப்படுவோம். இதை வாசிக்கும் ஒவ்வொருவரும் இந்த பாக்கியமான சிலாக்கியத்தில் பங்கு பெறும்படியாக தேவன் தாமே கிருபை செய்வாராக.

ஜி. ஜி. லோரி.

மெய்க்கிறிஸ்தவனின் அலங்கரிப்பு

(THE ADORNMENT OF THE TRUE CHRISTIAN.)

மனிதரும் ஸ்திரீகளும் தங்கள் இளமைப்பருவத்திலிருந்து இவ்வுலகத்தின் விலையேறப்பெற்ற வஸ்துக்களினால் தங்களை அலங்கரித்துக்கொண்டு வந்திருக்கிறார்கள். ஆனால் தேவன் அவைகளை வெறுக்கிறார். அவர் உள்ளான அலங்கரிப்பின்மேல் பிரியப்படுகிறார்.

கிறிஸ்துவின் மார்க்கம் வெளிப்படையானதாயிருக்கிறது. லௌகீக காரியத்துக்கடுத்த கடமைகள் யாவும் அதில் அடங்கியிருக்கிறது. அதில் பாவத்திற்கு இடமில்லை. நமது சரீரம் ஆவி ஆத்துமா யாவும் தேவனுக்குச் சொந்தம்.

நாம் உலகத்தின் முடிவுக்கும் கிறிஸ்துவின் இரண்டாம் வருகைக்கும் சமீபிக்கும்போது இதன் உண்மை அதிக தெளிவாய் விளங்குகிறது. அஸ்தமித்துக் கடந்துபோகிற ஒவ்வொரு நாளும் நம்மை கிறிஸ்து வானங்களிலிருந்து வெளிப்படும் காலத்திற்கு சமீபமாய்க் கொண்டுபோகிறது மாத்திரமல்லாமல் நம்மைத் தேவனண்டைக்குக் கிட்டிச் சேர்க்கிறதாயுமிருக்கிறது. வேதாகமக் கொள்கைகளின்படி நாம் ஜீவிக்கவேண்டும். நாம் குடிப்பதும் உண்பதும் உடுத்துவதும் அதற்கு ஒத்ததாயிருக்கவேண்டும். ஒரு மனிதன் கிறிஸ்து மார்க்கத்தைப்பற்றி பலவிதமாய்ப் போதிக்கலாம். ஆனால் அவனுடைய ஜீவியத்தைப் பார்த்தால் அவனுடைய சாதனை அவன் போதனைக்கு ஒத்திருப்பதாகத் தோன்றுகிறதில்லை.

பெருமையும் தாழ்மையும்.

தாழ்மையே கிறிஸ்துவின் ஜீவியத்திற்கு அஸ்திபாரமாயிருக்கிறது. தேவ சாயலாயிருந்தவர் மனித சாயலானார். தேவனாயிருந்தவர் மனிதனானார். தேவனுக்கு சமமாயிருப்பதை அவர் கொள்ளைபாடின பொருளாக எண்ணாமல் தன்னைத்தான் வெறுமையாக்கி அடிமையின் ரூபமெடுத்தார். கர்த்தரும் எஜமானுமாயிருந்தவர் பாவத்தில் வழி தப்பிப்போனவர்களுக்காக ஊழியம் செய்யும்படி அடிமையின் ரூபமெடுத்தார்.

நாம் தாழ்மையை நமது ஜீவியத்திற்கு மூலாதாரமாகக் கொள்ளாவிட்டால் கிறிஸ்துவின் முன் மாதிரியைப் பின்பற்றவே முடியாது. தாழ்மையான இயேசுவைப் பின்பற்றுகிறவனுடைய ஜீவியத்தில் பெருமைக்கு இடம் இல்லை. அந்தஸ்தையும் பெயர் பிரஸ்தாபத்தையும் சக்தியையும் உடையையும்பற்றிய பெருமை நமக்குள் இருக்கலாகாது கிறிஸ்துவை உண்மையாய்ப் பின்பற்றுகிற ஒவ்வொருவனுடைய ஜீவியத்திலும் இவைகள் சிறுகவும் அவர் பெருகவும் வேண்டும்.

நாம் இயேசுக்கிறிஸ்துவை அதிகமதிகமாய்க் கிட்டிச் சேரும்போது நாம் உலகத்துக்கு நமது பெருமையைக் காட்டுவதில் பிரியப்படுகிறதில்லை. கிறிஸ்துவைப் பின்பற்றுகிறோமென்று சொல்லிக்கொண்டும் அவருடைய மார்க்கத்தின் கொள்கையைச் சற்றேனும் அறியாமல் "மாயசந்தை"யைப்போல தங்களை உடுத்திக்கொள்ளுகிறவர்கள் அநேகரிருக்கிறார்கள். ஆடம்பரம் பண்ணுவது கிறிஸ்தவனுடைய ஊழியமென்று சிலர் எண்ணுகிறார்கள். மனிதர் புகழும்படியாக தங்களை அலங்கரிக்கவேண்டுமென்று சிலர் தங்கள் காலத்தையும் எண்ணத்தையும் செலவிடுகிறார்கள். இவர்கள் "இயேசுக்கிறிஸ்துவை, சிலுவையிலறையப்பட்ட அவரையேயன்றி, வேறொன்றையும் உங்களுக்குள்ளே அறியாதிருக்கத் தீர்மானித்திருந்தேன்" என்று சொன்ன பவுலை ஒத்தவர்களல்ல. அவர்கள் தங்கள் ஜீவியத்திலும் உடையிலும் பாவனையிலும் கிறிஸ்துவுக்குப் புகழ்ச்சியை உண்டாக்காமல் தற்புகழ்ச்சியைத் தேடிக்கொள்ள தங்கள் முழு சிந்தையையும் செலவிடுகிறார்கள்.

இப்படிச் செய்கிறதினால் கிறிஸ்தவனுடைய நடை உடை பாவனையைப்பற்றிச் சொல்லியிருக்கும் தெளிவான தேவ உபதேசத்தை அவர்கள் மீறி நடக்கிறார்கள். கிறிஸ்தவனுடைய உடை எப்படியிருக்கவேண்டுமென்பதைப்பற்றி தேவன் நமக்குக் கட்டளையிட்டிருக்கிறார். வேதாகமத்திற்கு ஒத்தபடி ஜீவிக்கவேண்டுமென்று விரும்புகிற ஒவ்வொருவரும் இதைக் கவனமாய்ப் படித்து இதின்படி நடக்கவேண்டும்.

ஒரு கிறிஸ்தவன் தன்னை மிதமிஞ்சி உடுத்திக்கொள்ளவும், பொன், விலையேறப்பெற்ற கற்கள், மோதிரம், கடுக்கன், சிற்றாபரணம், அஸ்த கடகம் இன்னும் இவை போன்ற தாழ்மையையும் அந்தஸ்தையும் கற்பையும் மீறி நடக்கச்செய்யும் எவ்வித ஆபரணங்களையும் உபயோகிக்கவும் கூடாதென்று வேதம் கற்பிக்கிறது.

ஒளிக்கப்பட்ட "போன்."

சபைகளிலுள்ள ஸ்திரீகளைக் குறித்து பேதுரு பரிசுத்த ஆவியினால் ஏவப்பட்டு "பயத்தோடுகூடிய உங்கள் கற்புள்ள நடக்கையை அவர்கள் பார்த்து......மயிரைப் பின்னி, பொன்னாபரணங்களை அணிந்து, உயர்ந்த வஸ்திரங்களை உடுத்திக்கொள்ளுதலாகிய புறம்பான அலங்

கரிப்பு உங்களுக்கு அலங்காரமாயிராமல், அழியாத அலங்கரிப்பாயிருக்கிற சாந்தமும் அமைதலுமுள்ள ஆவியாகிய இருதயத்தில் மறைந்திருக்கிற குணமே உங்களுக்கு அலங்காரமாயிருக்கக் கடவது. அதுவே தேவனுடைய பார்வையில் விலையேறப்பெற்றது" என்றெழுதினர். 1 பேது. 3: 2-4.

பொன்னை ஆபரணங்களாக செய்து அதை அலங்கரிப்புக்கென்று உபயோகிக்கக் கூடாதென்று இங்கே சொல்லப்பட்டிருக்கிறது. இதனால் பொன் உதவாது என்கிற அர்த்தமல்ல. பொன்னை ஆபரணமாக அணியக்கூடாதென்று மாத்திரம் சொல்லியிருக்கிறது. அப்படியே வேறெந்த உலோகத்தையாவது வஸ்துக்களையாவது நம்மை ஆடம்பரமாய் அலங்கரித்துக்கொள்வதற்கென்று உபயோகிக்கக்கூடாது. இந்த போதனைக்கு நாம் செவி கொடுப்போமானல் ஆபரணங்களை நாம் உபயோகிக்கவே கூடாது.

"மயிரைப் பின்னுதல்." இதனால் நாம் மயிரைப் பின்னமல் அலங்கோலமாய் வைக்கவேண்டுமென்கிற அர்த்தமல்ல. அதை முன்னிட்டு நமது இருதயத்தில் ஓர்விதமான பெருமை குடி கொள்ளும்படி நாம் விடக் கூடாது.

"உயர்ந்த வஸ்திரங்களை உடுத்திக்கொள்ளுதல்." பெருமை உண்டாக்கத்தக்க உயர்ந்த வஸ்திரங்களை நாம் உபயோகிக்கக் கூடாது. ஆபரணத்தை நாம் எதற்காக அணிந்து கொள்ளுகிறோமோ அதே காரணத்திற்காக நாம் ஆடம்பரமான மிதமிஞ்சின உயர்ந்த வஸ்திரங்களை உபயோகிக்கக்கூடாது. அலங்கரிப்பும் ஆடம்பரமும் உதவாதென்றுதான் இதில் நமக்கு எச்சரிக்கப்பட்டிருக்கிறது. ஒரு கிறிஸ்தவ மனிதனிடத்திலாவது ஸ்திரீயினிடத்திலாவது இந்தக் காரியங்கள் காணப்படவே கூடாது.

மெய்யான அலங்கரிப்பும், பொய்யான அலங்கரிப்பும்.

அப்போஸ்தலனுகிய பவுல் தீமோத்தேயுவுக்கு பின் வரும் புத்திமதிகளை எழுதினர். "புருஷர்கள் கோபமும் தர்க்கமுமில்லாமல் பரிசுத்தமான கைகளை உயர்த்தி, எல்லா இடங்களிலேயும் ஜெபம் பண்ணவேண்டுமென்று விரும்புகிறேன். ஸ்திரீகளும் மயிரைப் பின்னுதலினுலாவது, பொன்னினுலாவது, முத்துக்களினுலாவது, விலையேறப்பெற்ற வஸ்திரத்தினுலாவது தங்களை அலங்கரியாமல், தகுதியான வஸ்திரத்தினுலும், நாணத்தினுலும், தெளிந்த புத்தியினுலும், தேவ பக்தியுள்ளவர்களென்று சொல்லிக்கொள்ளுகிற ஸ்திரீகளுக்கு ஏற்றபடியே நற்கிரியைகளினுலும்; தங்களை அலங்கரிக்கவேண்டும்." 1 தீமோ. 2: 8-10.

இங்கே, பேதுரு எழுதின மாதிரியே பவுலும் ஆபரணங்களையும் உயர்ந்த வஸ்திரங்களையும் குறித்து எச்சரிக்கிருர். ஆனல், இங்கே அவர் ஒன்றைக்கூட்டிச் சொல்லுகிருர். அது தற்கால உலக ஆசாரத்தைக் கண்டிக்கிறது. அவர் தகுதியான வஸ்திரத்தைக் குறித்துப் பேசுகிருர்.

இந்த உபதேசம் இப்பொழுது நமக்கு அத்திய அவசியமாயிருக்கிறது. தற்கால உலக ஆசாரத்திற்கு ஏற்ற உடைகள் தூர் இச்சையைப் பிரப்பிக்கிறது. பாரிஸ் (Paris) பட்டணத்தின் அக்கிரமம் நிறைந்த வீடுகளிலிருந்து உண்டாகும் ஆசாரமான உடைகளை பெண்கள் உடுத்துகிறதினுல் அவர்கள் தங்கள் மகிமையையும் கனத்தையும் சுகத்தையும் ஜீவனையுங்கூட இழந்துவிடுகிருர்கள். தற்கால உலக ஆசாரப்படி உடைகளை உடுத்துகிற பெண்கள் தங்கள் சரீரத்தை சரியாய் மூடிக்கொள்ளாததினுல் அவர்கள் தங்களைக் காம விகாரத்தில் வழி நடத்துகிறவர்களாயிருப்பார்கள்.

கிறிஸ்துவின் சபையைச்சேர்ந்த ஸ்திரீகளே! தேவனுடைய வார்த்தைக்குச் செவி கொடுத்து "தகுதியான வஸ்திரத்தினுல்" உங்களை அலங்கரித்துக்கொள்ளுங்கள். நீங்கள் நீதியிலும் சன்மார்க்கத்திலும் நடந்து உங்களுடைய நடக்கைகளினுலே, தற்காலத்து யௌவன ஸ்திரீகளை கிறிஸ்துவின் மார்க்கத்திலிருந்து வழி தப்பிப்போய் துரிச்சைகளில் அழிந்துபோகப்பண்ணும் இந்த உலக ஆசாரங்களை வேரோடு பிடுங்கப் பிரயாசைப் படுவீர்களாக. உங்கள் உதவி தேவையாயிருப்பவர்களுக்கு நீங்கள் உடையிலும் நன் நடக்கையிலும் பாவனையிலும் முன்மாதிரியாயிருங்கள். நீங்கள் உங்களைப் பொன்னினுலும், ஆபரணங்களினுலும், உயர்ந்த வஸ்திரங்களினுலும் அலங்கரித்துக்கொள்ளாமல் "ஸ்திரீகளுக்கேற்ற நற்கிரியைகளினுலே உங்களை அலங்கரித்துக்கொள்ளுங்கள்."

பெண் பிள்ளைகளை உடைய தாய்மார்களே! நீங்கள் உங்கள் பிள்ளைகளை நல்லாலோசனையில் நடத்தி, அவர்கள் தேவ வசனத்தின் உபதேசத்தில் நிலைத்திருக்கும்படியாகவும் தற்கால உலக ஆசாரத்தில் அவர்களை இழுக்கும்படியான எவ்விதமான காரியங்களையும் விலக்கும்படியாகவும் கற்பியுங்கள். உங்கள் பிள்ளைகளுக்கு வேத சத்தியங்களைக் கற்றுக்கொடுங்கள். அவர்களைக் கிறிஸ்துவுக்குள் வழி நடத்துங்கள். அவர்கள் உங்களில் கிறிஸ்துவின் குணங்களைக் காணும்படி செய்யுங்கள். உங்களுடைய ஜீவியத்தில் கிறிஸ்தவ மனத்தாழ்மையையும் சாந்தத்தையும் அவர்கள் காணும்படி நடவுங்கள். உலக ஆசாரத்தைப் பின்பற்றுகிறதினுல் வரும் தீமைகளை அவர்களுக்குப் போதியுங்கள். அவர்களுடைய வழியில் வரக்கூடிய சோதனைகளை அவர்களுக்குச் சுட்டிக்காட்டி அவர்களுடைய குணம் தெய்வீக சுபாபமுள்ளவைகளாக மாறுவதற்கு உதவி செய்யுங்கள்.

தங்கள் ஆபரணங்களினிமித்தம் துக்கித்தார்கள்.

கர்த்தர், இஸ்ரவேல் ஜனங்களைத் தாம் வாக்குத்தத்தம் பண்ணின தேசத்திற்குக் கொண்டுவரு முன்னதாக அவர்கள் தங்களுடைய ஆபரணங்களையெல்லாம் கழற்றிவிடும்படியாக செய்தார். "துக்கமான இவ்வார்த்தைகளை ஜனங்கள் கேட்டபோது, ஒருவரும் தங்கள் ஆபரணங்களைப் போட்டுக்கொள்ளாமல் துக்கித்துக்கொண்டிருந்தார்கள். ஏனென்றுல், நீங்கள் வணங்காக் கழுத்துள்ள ஜனங்கள், நான் ஒரு நிமிஷத்தில் உங்கள் நடுவில் எழும்பி, உங்களை நிர்மூலம் பண்ணுவேன்; ஆகையால், நீங்கள் போட்டிருக்கிற உங்கள் ஆபரணங்களைக் கழற்றிப்போடுங்கள்; அப்பொழுது நான் உங்களுக்குச் செய்யவேண்டியதை அறிவேன் என்று இஸ்ரவேல் புத்திரருக்குச் சொல் என்று கர்த்தர் மோசேயோடே சொல்லியிருந்தார். ஆகையால், இஸ்ரவேல் புத்திரர் ஓரேப் மலை யருகே தங்கள் ஆபரணங்களைக் கழற்றிப் போட்டார்கள்." யாத். 33: 4-6.

அதேமாதிரியாக தேவன் ஞான இஸ்ரவேலரை வாக்குத்தத்தம் பண்ணப்பட்ட தேசமாகிய புதிய பூமிக்குக் கொண்டுவரு முன்னதாக அவர்கள் உலக பழக்கங்களையும் ஆசாரங்களையும் விட்டுவிட்டு தங்கள் ஆபரணங்கள் யாவற்றையும் களைந்துவிட்டு முழுவதும் கிறிஸ்துவின் கிருபையால் அலங்கரிக்கப்படவேண்டுமென்று விரும்புகிருர்.

ஒரு தெரிந்துகொள்ளப்பட்ட ஜனம்.

முற்காலத்திலிருந்ததுபோல இப்பொழுது இருக்கும் தேவனுடைய ஜனங்களும் உலகத்தினின்று பிரித்தெடுக்கப்பட்ட ஒரு தெரிந்துகொள்ளப்பட்ட ஜனமாயிருக்கவேண்டும்.

"நீதிக்கும் அநீதிக்கும் சம்பந்த மேது? ஒளிக்கும் இருளுக்கும் ஐக்கிய மேது? கிறிஸ்துவுக்கும் பேலியாளுக்கும் இசை வேது? அவிசுவாசியுடனே விசுவாசிக்குப் பங்கேது? தேவனுடைய ஆலயத்துக்கும் விக்கிரகங்களுக்கும் சம்பந்த மேது?......ஆனபடியால், நீங்கள் அவர்கள் நடுவிலிருந்து புறப்பட்டுப் பிரிந்துபோய், அசுத்தமானதைத் தொடாதிருங்கள் என்று கர்த்தர் சொல்லுகிருர். அப்பொழுது, நான் உங்களை ஏற்றுக்கொண்டு, உங்களுக்குப் பிதாவாயிருப்பேன், நீங்கள் எனக்குக் குமாரரும் குமாரத்திகளுமாயிருப்பீர்களென்று சர்வ வல்லமையுள்ள கர்த்தர் சொல்லுகிருர்." 2 கொரி. 6: 14-18.

அப்படியானல் இங்கே கிறிஸ்தவர்கள் உடுத்திக் கொள்ளவேண்டிய உடையைப்பற்றி தேவனுடைய வசனம் திட்டமாய் சாட்சி பகருகிறது. கிறிஸ்துவைப் பின்பற்றுகிற யாவரும் உலகத்தின் பழக்க வழக்கங்களை விட்டுவிடவேண்டுமென்று இதில் திட்டமாய்ச் சொல்லப்பட்டிருக்கிறது.

பரிசுத்தமாக்கப்பட்ட மாமிசமும் இரத்தமும்.

இந்த சாட்சியை நாம் என்ன செய்யலாம். நாம் அதைக் கிறிஸ்தவ மரியாதையுடன் ஏற்றுக்கொண்டு அதின்படி நடப்போமா? அல்லது நாம் அதை முற்றிலும் வெறுத்துத் தள்ளிவிடுவோமா? மோதிரங்களையும் அஸ்தகடகங்களையும், கடுக்கன்களையும், ஆபரணங்களையும், உயர்ந்த வஸ்திரங்களையும் அணிந்துகொள்வதினுல் வரும் தீமைகள் இன்னதென்று நமக்குத் தெரியாவிட்டாலும் நமக்காக தமது ஜீவனைக் கொடுத்த அவரை முன்னிட்டு நாம் அவைகளைத் தள்ளிவிடக்கூடாதா? இவ்வுலக சிற்றின்பங்களின்மேல் நாம் அன்பு வைப்பதைப் பார்க்கிலும் நாம் அவர்மேல் அதிக அன்பு வைக்கக்கூடாதா? இதைக்குறித்து தேவன் சொல்லுகிற புத்திமதியை நாம் கேட்டு நமது ஜீவியமும் நமது நடக்கையும் அவருடைய வார்த்தைக்கு ஒத்ததாயிருக்கும்படிக்கு நாம் முயலுவோமாக.

எல்லாவற்றிற்கும் மேலாக, நாம் மற்றவர்களுக்கு ஒரு தடையாயிராதபடிக்கு எச்சரிக்கையாயிருப்போமாக. இக்காரியங்களில் நாம் பிறருக்கு முன்மாதிரியாயிருக்க வேண்டும். இடறல் உண்டாகும்போது "எந்த மனுஷனுல் இடறல் வருகிறதோ அவனுக்கு ஐயோ" என்பதைக் கவனித்துக் கொள்ளுங்கள்.

தேவனுடைய இரக்கமான புத்திமதி இதுதான். "அப்படியிருக்க, சகோதரரே, நீங்கள் உங்கள் சரீரங்களைப் பரிசுத்தமும் தேவனுக்குப் பிரியமுமான ஜீவ பலியாக ஒப்புக்கொடுக்கவேண்டுமென்று, தேவனுடைய இரக்கங்களை முன்னிட்டு உங்களை வேண்டிக் கொள்ளுகிறேன்; இதுவே நீங்கள் செய்யத்தக்க புத்தியுள்ள ஆராதனை." ரோமர் 12: 1.

நமது சரீரங்களை, பரிசுத்தமாக்கப்பட்ட மாமிசமும் இரத்தமுமாக அதின் எல்லா அவயவங்களோடும் தேவனுக்கு ஒப்புவிக்கவேண்டும். இப்படிச் சொல்லும்போது இது கண்களையும், காதுகளையும், நாவையும்; கால் கை முதலானவைகளையும் குறிக்கிறது. இவைகளை நாம் முழுவதுமாக தேவனுக்கு ஒப்புக்கொடுப்போமானல் நாம் நமது தேகத்தைக் கெடுத்துக்கொள்ள மாட்டோம், தீட்டுப்படுத்தமாட்டோம், வேதம் கற்பிக்கிறதற்கு விரோதமாக நாம் நமது சரீரத்தை அலங்கரிக்கவும் மாட்டோம். நேர்மையும் தெளிவும், சாந்தமும் மனத்தாழ்மையுமே ஒரு மெய்க்கிறிஸ்தவனுடைய லட்சணமாயிருக்கிறது.

விஷ ஜுரத்தைத் தடுக்கும் விதம்

(PREVENTION FOR INFLUENZA)

"சென்னைப்பட்டணத்து பிரதான வைத்தியர் (Surgeon-General) எழுதிய கடிதத்தில் பல போதனைகள் அடங்கி யிருந்ததால் அதை யாவருக்கும் தெரிவிக்கும்படி இங்கு எழுதுகிறோம். அந்தக் கடிதத்தில் பின் வருமாறு எழுதப்பட்டிருந்தது.

"கடந்த வருஷத்தில் உலகத்தின் எல்லாப் பாகங்களிலுமுள்ள ஜனங்கள் ஆங்கிலேய பாஷையில் இன்புளுயென்ஸா (Influenza) என்று அழைக்கப்படும். ஓர்வித விஷ ஜுரத்தினல் பீடிக்கப்பட்டார்கள். அந்த விஷ ஜுரம் அவர்களைவிட்டு நீங்கின பிறகு அவர்கள் பலவீனமடைந்து வேறு வியாதிகளுக்கு உட்பட்டார்கள். இந்த விஷ ஜுரம் வேனிற் காலத்தில் வந்தபோது ஜனங்களுக்கு அவ்வளவு சேதம் வருவிக்கவில்லை. ஆனல் மாரிகாலத்தில் வந்தபோது அநேக ஜனங்களை வாரிக்கொண்டு போனது. அந்த ஜுரம் மறுபடியும் வந்தாலும் வரும். ஆகையினல் நாம் அதைத் தடுக்கப் பிரயாசைப்படவேண்டும். நாம் அப்படி தடுக்க முயற்சி செய்வோமானல் அது நமக்கு ஒரு சேதமும் வருவிக்க முடியாதென்று நான் சொல்லுகிறதில்லை. ஆனல் இந்த புத்திமதியை ஜனங்கள் கையாடுவார்களானல் அது அவர்களுக்கு அதிக பிரயோஜனமாயிருக்கும்.

இந்த புத்தி போதனையை யாவரும் கையாடவேண்டுமென்பது சட்டமல்ல. அவரவர் பிரயோஜனத்திற்கென்று இந்தப் போதனைகள் கொடுக்கப்படுகிறது.

இந்த விஷ ஜுரம் வருமுன்னதாக மனிதனுக்கு இருமலும் தும்மலும் உண்டாகிறது. அப்படி ஒரு மனிதனுக்கு இருமலும் தும்மலும் வரும்போது நாம் அவனேடு சேராமல் ஜாக்கிறதையாயிருக்கவேண்டும். இந்த விஷக் காய்ச்சலும் இருமலும் தும்மலும் உள்ள மனிதன் மற்ற ஜனங்களோடு சேர்ந்திருக்கக் கூடாது.

இந்த காய்ச்சல் யாருக்கு வருகிறதோ, அவர்களோடு நாம் அவ்வளவாய் நெருங்கியிருக்கக்கூடாது. அது நமக்கு வந்தால் நாமும் மற்றவர்களோடு சேராமல் இருக்கவேண்டும்.

வேளைக்கு வேளை நாம் சரியான சமயத்தில் சாப்பிடவேண்டும். நன்றாய்த் தூங்கவேண்டும். தேக அப்பியாசம் செய்யவேண்டும். ஜல தோஷம் பிடிக்காமல் பார்த்துக்கொள்ளவேண்டும். லாகிரி வஸ்துக்களை உபயோகிக்கக்கூடாது. நாம் இந்த புத்திமதியின்படி நடப்போமானல் இந்த விஷக்காய்ச்சல் நமக்கு வந்தாலும் தாங்கிக்கொள்ளலாம். நாம் இருமும்போதும் தும்மும்போதும் அந்த வியாதி மற்றவர்களுக்குத் தொத்துகிறது. அகையால் நாம் இருமும்போதும் தும்மும்போதும் கைக்குட்டையால் நமது மூக்கையும் வாயையும் மூடிக்கொள்ளவேண்டும்.

நாம் வேலை செய்த பிற்பாடு நித்திரை செய்ய போகும்போது ஜன்னல்களைத் திறந்து வைத்துவிட்டு நித்திரை செய்யவேண்டும். நாம் நமது நாசித்துவாரங்களைக் கழுவவேண்டும். ஒரு தேக்கரண்டி உப்பை எடுத்து கொஞ்சம் தண்ணீரில் கரைத்து வாயில் ஊற்றி தொண்டையில் படும்படி நன்றாய்க் கொப்பளிக்கவேண்டும்.

ஜன நெருக்கமான அறைகளுக்கும் திரளான ஜனக் கூட்டங்களின் மத்தியிலும் போகக்கூடாது.

ஒருவனுக்கு காய்ச்சலாவது இருமலாவது வந்தால் அவன் உடனே ஆஸ்பத்திரிக்குப் போகவேண்டும். அப்படி முடியாத பட்சத்தில் வீட்டிற்குப்போய் தன் படுக்கையைப் போட்டு கம்பளியால் தன்னை மூடிக்கொண்டு கூடுமானல் உடனே ஒரு வைத்தியனை அழைத்து தக்க சிகிச்சை செய்யவேண்டும். வியாதியாயிருக்கும் ஆள் ஒரு சுத்தமான தனி அறையில் படுத்துக்கொள்வது உத்தமம். அப்படி யில்லாவிட்டால் தன் படுக்கையை சுற்றி ஒரு திரை கட்டவேண்டும். நாசித் துவாரங்களிலிருந்து வரும் அசுத்தத்தை கைக்குட்டையால் துடைத்தால் பிற்பாடு அந்தக் கைக்குட்டையை கொதிக்கிற தண்ணீரில் போட்டு நன்றாய்க் கழுவவேண்டும். அல்லது கடுதாசி முதலியவற்றில் துடைத்தால் அவைகளை உடனேக்குடனே நெருப்பில் போட்டுக் கொளுத்திவிடவேண்டும்.

வியாதி பூரணமாய்ச் சொஸ்தமாகும் வரைக்கும் வேலைக்குப் போகாமலிருக்கவேண்டும். ஏனென்றால் அப்படி உடனே வேலைக்குப் போவதினல் மற்றவர்களுக்கு அந்த வியாதி லேசாக தொத்திக்கொள்ளுகிறது மாத்திரமல்லாமல் அவன் உடனே வேலை செய்ப ஆரம்பித்தபடியால் பலவீனத்தினல் வேறு வியாதிகள் வருவதற்கும் ஏது உண்டு.

விஷ ஜுரம் நின்றுபோய் பூரண சுகம் வருமட்டும் ஏறக்குறைய ஒரு வாரமளவும் கூட்டங்களுக்கும் ஜனங்கள் கும்பலாயிருந்து வேடிக்கை பார்க்கும் இடங்களுக்கும் போகாமலிருப்பது உத்தமம். இந்த மாதிரி காய்ச்சல் வரும்போது வியாதிக்காரர்கள் சூரிய வெளிச்சம் நன்றாய்ப் படக்கூடிய அறைகளில் இருப்பது நல்லது. இந்த விஷ ஜுரமுள்ள வியாதியஸ்தரை நாம் அடிக்கடி சந்திக்கக்கூடாது. ஏனென்றால் இந்த வியாதி ஒரு மனிதனிடமிருந்து மற்றொரு மனிதனுக்கு இலேசாக தொத்தக்கூடும். ஆகையினலே இப்படிப்பட்ட விஷ ஜுரத்தைத் தடுப்பதற்கு சுத்த ஆகாயமும் நல்ல காற்றும் மிக்க அவசியம்."

ஞாயிற்றுக்கிழமையில் அப்போஸ்தலர் செய்ததென்ன?

(WHAT THE APOSTLES DID ON SUNDAY.)

வேதாகமத்தை நாம் கருத்தும் கவனமுமாய்ப் படிப்போமானல் ஏழாம் நாள்தான் மெய்யான வேதாகம ஓய்வுநாளென்று அறிந்துகொள்ளுவோம். ஞாயிற்றுக்கிழமையை ஓய்வுநாளாக ஆசரிக்கிற சபையார், அப்போஸ்தலர்கள் ஞாயிற்றுக்கிழமையைப் பரிசுத்த தினமாகக் கொண்டாடினர்களென்று சாதிக்கிறர்கள். அதன் உண்மையை உணர்ந்தறியும்படியாக நாம் வேதாகமத்தைக் கவனிப்போமாக.

நாம் இதை இலேசாகக் கண்டு பிடிக்கலாம். ஏனென்றால் புதிய ஏற்பாட்டில் வாரத்தின் முதலாம் நாளைப் பற்றி எட்டு இடங்களில் மாத்திரம் சொல்லப்பட்டிருக்கிறது. அவைகளில் ஆறு இடங்களில் கிறிஸ்து வாரத்தின் முதலாம் நாளில் மரித்தோரிலிருந்து உயிர்த்தெழுந்ததின் சம்பந்தமாக சொல்லப்பட்டிருக்கிறது. அவை யாவன: மத். 28: 1; மாற். 16: 2, 9; லூக். 24: 1; யோவான் 20: 1, 19. அவ்வசனங்களை இங்கே வரிசையாக எடுத்து எழுதுவோம்.

"ஓய்வுநாள் முடிந்து, வாரத்தின் முதலாம் நாள் விடிந்து வருகையில், மகதலேனா மரியாளும் மற்ற மரியாளும் கல்லறையைப் பார்க்க வந்தார்கள்."

"வாரத்தின் முதலாம் நாள் அதிகாலையிலே சூரியன் உதயமாகிறபோது கல்லறையினிடத்தில் வந்தார்கள்."

"வாரத்தின் முதலாம் நாள் அதிகாலையிலே இயேசு எழுந்திருந்தபின்பு, மகதலேனா மரியாளுக்கு முதல் முதல் தரிசனமானர்."

"வாரத்தின் முதலாம் நாள் அதிகாலையிலே தாங்கள் ஆயத்தம் பண்ணின கந்தவர்க்கங்களை அவர்கள் எடுத்துக் கொண்டு, வேறு சில ஸ்திரீகளோடுங்கூடக் கல்லறையினிடத்தில் வந்தார்கள்."

"வாரத்தின் முதலாம் நாள் காலையில் அதிக இருட்டோடே, மகதலேனா மரியாள் கல்லறையினிடத்திற்கு வந்து கல்லறையை அடைத்திருந்த கல் எடுத்துப்போட்டிருக்கக் கண்டாள்."

"வாரத்தின் முதலாம் நாளாகிய அன்றையத்தினம் சாயங்கால வேளையிலே, சீஷர்கள் கூடியிருந்த இடத்தில், யூதர்களுக்குப் பயந்ததினல் கதவுகள் பூட்டியிருக்கையில், இயேசு வந்து நடுவே நின்று: உங்களுக்குச் சமாதானம் என்றார்."

அது பரிசுத்தமாக்கப்படவில்லை.

மேலே எடுத்து எழுதிய வசனங்களில் ஒன்றிலாகிலும் அந்த நாள் பரிசுத்தமாக்கப்பட்டதென்றும் இது முதல் அதைப் பரிசுத்தமாய் ஆசரிக்கவேண்டுமென்றும் கட்டளையிடப்படவேயில்லை. இயேசு உயிர்தெழுந்த அந்த நாளில் தமது சீஷர்களைச் சந்தித்தாரென்று மாத்திரம் சொல்லப்பட்டிருக்கிறது. கிறிஸ்து தமது ஊழியக்காரர்களுக்கு வாக்களித்த பிரகாரம் அவர் மூன்றும் நாள் மரித்தோரிலிருந்து உயிர்த்தெழுந்தாரென்று இந்த வசனங்களில் சொல்லப்பட்டிருக்கிறது. ஆகையினலே கிறிஸ்து துயரப்படுகிற தமது சீஷர்களைத் தேற்றும்படியாக அவர்களுக்குத் தரிசனமானர்.

சீஷர்கள் கூடியிருந்ததாக யோவான் 20: 19-ல் சொல்லப்பட்டிருப்பது ஒரு தேவாராதனைக் கூட்டத்தையாவது அல்லது ஜெபக்கூட்டத்தையாவது அல்லது கிறிஸ்து உயிர்த்தெழுந்ததை முன்னிட்டு கொண்டாடும் ஒரு கூட்டத்தையாவது குறிக்கிறதில்லை. கிறிஸ்து தோட்டத்தில் மரியாளுக்குத் தரிசனமானது போலவும், மற்ற மரியாளைச் சந்தித்ததுபோலவும், எம்மாவு என்னும் கிராமத்திற்குப் போன இரண்டு சீஷர்களுக்கு வழியில் பிரசன்னமானதுபோலவும் தாம் உயிர்த்தெழுந்ததை "திடசாட்சியாய்" அறிவிக்கும்படிக்கு இவர்களுக்கும் தரிசனமானர்.

அல்லாமலும் கிறிஸ்து அவர்கள்முன் காணப்பட்டபொழுது அவர்கள் ஜெபத்திலாவது வேண்டுதலிலாவது தரித்திருக்கவில்லை. ஏனென்றால் "பதினொருவரும் போஜன பந்தியிலிருக்கையில் அவர்களுக்கு அவர் தரிசனமாகி, உயிர்த்தெழுந்திருந்த தம்மைக் கண்டவர்களை அவர்கள் நம்பாமற் போனதினிமித்தம் அவர்களுடைய அவிசுவாசத்தைக் குறித்தும் இருதய கடினத்தைக் குறித்தும் அவர்களைக் கடிந்துகொண்டார்" என்று வேதம் நமக்குத் தெளிவாகச் சொல்லுகிறது. மாற். 16: 14. அவர் எழுந்தாரென்பதை அவர்கள் விசுவாசியாமலிருந்தபோது, அவர் எழுந்ததை நினைவு கூறும்படியாக கூடி வந்தார்களென்பது விபரீதமாய்த் தோன்றுகிறது. அவர்களோ தங்கள் வீட்டில் கூடியிருந்து போஜனம் பண்ணிக்கொண்டிருந்தார்கள்.

இயேசு தமது சீஷர்களைச் சந்தித்தபோது உயிர்த்தெழுதலை நினைவு கூறும்படியாக இது முதல் வாரத்தின் முதலாம் நாளை ஆசரிக்கவேண்டுமென்று கட்டளையிட்டேயில்லை. அல்லது அதை ஒரு பரிசுத்த நாளாகப் பாவிக்கவேண்டுமென்று அவர் சொல்லவுமில்லை. அவர் அந்த நாளைக்குறித்து ஒன்றும் பேசவில்லை. அவர் தமது சீஷர்களை நோக்கி: உங்களுக்குச் சமாதானம் என்றார். பின்பு அவர்களை ஆசீர்வதித்து பரிசுத்த ஆவியைப் பெற்றுக்கொள்ளுங்கள் என்றார். அவர், அவர்களை ஆசீர்

வதித்தாரே யல்லாமல் அந்த நாளைக்குறித்து ஒன்றும் சொல்லவில்லை.

வாரத்தின் முதலாம் நாளைக்குறித்து ஏழாவதாக அப். 20: 7-ல் சொல்லப்பட்டிருக்கிறது. வேதாகமத்தில் இந்த ஒரே வாக்கியத்தில் மாத்திரம் வாரத்தின் முதலாம் நாளில் கூட்டம் நடந்ததாக சொல்லப்பட்டிருக்கிறது. இதை வைத்துக்கொண்டு ஞாயிற்றுக்கிழமை ஒரு பரிசுத்தமான நாள் என்று நாம் தர்க்கிக்க முடியாது. அப்படித் தர்க்கித்தால் ஒரு மத சம்பந்தமான கூட்டம் ஒரு நாளைப் பரிசுத்தமாக்கக்கூடுமென்று சொல்லுகிறவர்களாயிருப்போம். ஆனால் கர்த்தருடைய ஓய்வுநாள் மாறாத தேவனுடைய பிரமாணமாகிய அந்த மேலான அஸ்திபாரத்தின்மேல் ஸ்தாபிக்கப்பட்டிருக்கிறது.

அப்படியானால் வாரத்தின் முதலாம் நாளில் நடத்தப்பட்ட இந்த ஒரு கூட்டத்தைப்பற்றி நாம் என்ன சொல்லலாம்? முதலாவதாக, அந்தக் கூட்டம் இரவில் நடத்தப்பட்டது. ஏனென்றால் "அவர்கள் கூடியிருந்த மேல் வீட்டிலே அநேக விளக்குகள் வைத்திருந்தது." (வச. 8.) பவுல் நடு ராத்திரி மட்டும் பிரசங்கித்தார். (வச. 7.) விடியற்காலமட்டும் இளைப்பாறி பின்பு புறப்பட்டார். (வச. 11.)

வேதாகமக் கணக்கின்படி சூரியன் அஸ்தமிக்கிறபோது ஒரு நாள் முடிகிறது. (ஆதி. 1: 5, 8, 13, 19, 23, 31, லேவி. 23: 32; மாற். 1: 32 பார்க்க.) இந்தக் கூட்டம் வாரத்தின் முதலாம் நாள் இரவில் நடத்தப்பட்டபடியால் அது வாரத்தின் முதலாம் நாளின் ஆரம்ப நேரத்தில்தான் நடத்தப்பட்டிருக்கவேண்டும். தற்காலக் கணக்கின்படி "சனிக்கிழமை இரவு" அந்தக் கூட்டம் நடத்தப்பட்டிருக்கவேண்டும்.

"சனிக்கிழமை இரவு" கூட்டம் நடந்த பிற்பாடு என்ன சம்பவித்ததென்று பார்ப்போம். பவுலோடே கூட வந்தவர்கள் ஓய்வுநாள் முடிந்தவுடனே கடல் மார்க்கமாய் எருசலேமுக்குப் போகப் புறப்பட்டார்கள். ஞாயிற்றுக்கிழமை பவுல் கரை மார்க்கமாய்ப் போய் அவர்களை ஆசோ பட்டணத்தில் சந்தித்தார். துரோவா பட்டணத்திலிருந்து ஆசோ பட்டணத்திற்கு கடல் மார்க்கமாய் ஏறக்குறைய 60 மைல் தூரமும் கரைமார்க்கமாய் கொஞ்சங்குறைய 20 மைல் தூரமும் இருக்கும். ஆகையினாலே கப்பல் போகு முன்னதாக பவுல் அந்த இடத்திற்குக் கால் நடையாய்ப் போய்ச் சேர முடியும்.

பவுல் ஞாயிற்றுக்கிழமையில் பிரயாணம் பண்ணவில்லை யென்று வியாக்கியானிகளில் சிலர் வித்தியாசமான அபிப்பிராயம் கொள்ளுகிறார்கள். கானிபேர், ஹாவ்ஸன் (Conybeare and Howson) என்னும் இரண்டு வியாக்கியானிகள் எழுதின "பவுலின் ஜீவிய சரித்திரம்" ("Life of Paul") என்னும் புஸ்தகத்தின் 20-ம் அதிகாரம் 11-வது பத்தியிலிருந்து சில வரிகளை நாம் இங்கு எடுத்து எழுதுவோம். "அப்போஸ்தலன் தமது மீட்பரிடமிருந்து பலத்தையும் சமாதானத்தையும் பெற்றுக்கொண்டு வசந்த காலத்தில் ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் விருக்ஷங்களுக்கும் நீரூற்றுகளுக்குமிடையே ரஸ்தா மார்க்கமாய்த் தனிமையாகப் பிரயாணம் பண்ணினார்."

வாரத்தின் முதல் நாளைப்பற்றி இன்னும் ஒரே ஒரு வசனத்தில் சொல்லியிருக்கிறது. அதை 1 கொரி. 16: 2-ல் காணலாம். அந்த வசனத்தையும் அதற்கு முந்தின வசனத்தையும் சேர்த்து இங்கே எழுதுகிறோம். "பரிசுத்தவான்களுக்காகச் சேர்க்கப்படும் தர்மப்பணத்தைக் குறித்து நான் கலாத்தியா நாட்டுச் சபைகளுக்குப் பண்ணின திட்டத்தின்படியே நீங்களும் செய்யுங்கள். நான் வந்திருக்கும்போது பணஞ் சேர்க்குதல் இராதபடிக்கு உங்களில் அவனவன் வாரத்தின் முதல்நாள்தோறும், தன்தன் வரவுக்குத் தக்கதாக எதையாகிலும் தன்னிடத்திலே சேர்த்து வைக்கக் கடவன்." இதைச் சுருக்கமாய்ச் சொல்லவேண்டுமானால், நீங்கள் ஒவ்வொருவரும் தேவன் உங்களை ஆசீர்வதித்தற்குத்தக்கதாக எதையாகிலும் உங்கள் வீட்டில் சேர்த்து வையுங்கள், என்று சொல்லலாம்.

தேவாராதனைகளில் சேர்க்கப்படும் பொதுவான காணிக்கைகளைப்பற்றி இங்கே பேசாமல் அவனவன் சேர்த்து வைக்கவேண்டியதைப்பற்றி இங்கே சொல்லுகிறார். ஏனென்றால் அவர் முன்னமேயே அவர்களுக்குப் புத்தி சொல்லியிருந்ததாக தாம் கொரிந்தியருக்கு எழுதின இரண்டாவது நிருபத்தில் பின்வருமாறு எழுதியிருக்கிறார். "உங்கள் தான தர்மமானது லோபத்தனமாய்க் கொடுக்கப்பட்டதாயிராமல், உதாரத்துவமாய்க் கொடுக்கப்பட்டதாயிருக்கும்படியாக அதை ஆயத்தப்படுத்துகிறதற்குச் சகோதரரை ஏவி உங்களிடத்தில் முன்னதாக அனுப்புவது எனக்கு அவசியம் என்று காணப்பட்டது." 2 கொரி. 9: 5.

புதிய ஏற்பாட்டில் வாரத்தின் முதலாம் நாளைக் குறித்துச் சொல்லியிருக்கிற வசனங்கள் இவைகள் தான். அவைகளில் எந்த வசனமாவது அந்த நாள் பரிசுத்தமாக்கப்பட்டதென்று நமக்குப் போதிக்கிறதில்லை. புதிய ஏற்பாடு எழுதப்பட்ட காலத்தில் வசித்தவர்களில் ஒருவராவது "சூரியனுடைய நாள்" ஒரு பரிசுத்தமான நாள் என்று எண்ணவேயில்லை. ஆனால் அஞ்ஞானிகள் அந்த நாளை ஒரு பண்டிகை நாளாகக் கொண்டாடினார்கள்.

இதன் சம்பந்தமாக, புதிய ஏற்பாடு முழுமையிலும் ஏழாம் நாள் ஓய்வுநாளென்று அழைக்கப்பட்டிருப்பதை நாம் கவனிக்கவேண்டும். பத்துக் கற்பனையிலும் அதற்கு இந்தப் பெயரே வழங்கப்பட்டிருக்கிறது. இது யூதருடைய ஓய்வுநாளானதினால் இதற்கு இந்தப் பெயர் வழங்கவில்லை. புதிய ஏற்பாட்டை எழுதினவர்கள் கிறிஸ்தவர்களாயிருந்து பரிசுத்த ஆவியினால் ஏவப்பட்டு அவைகளை எழுதினபடியால் அவர்களும் ஏழாம் நாளை ஓய்வுநாளென்றே அழைத்தார்கள். எல்லாக் காலங்களிலும் இருக்கும் கிறிஸ்தவர்களுக்கு ஏழாம் நாள் ஓய்வு நாளாக இராமலிருக்குமானால் அதற்கு அந்தப் பெயர் பரிசுத்த ஆவியினால் அளிக்கப்பட்டிருக்காதென்பது அதிக நிட்சயம்.

சமாசாரக் குறிப்புகள்

இந்தியாவில் விஷ ஜுரத்தினால் (Influenza) மாண்டவர்களின் தொகை சற்றேறக்குறைய 60 லக்ஷம். இந்த விஷ ஜுரம் இந்தியாவில் இன்னும் இருக்கிறது.

கடந்த ஜூலை மாதத்தில் அமெரிக்க ஐக்கிய மாகாணத்திலிருக்கும் ஷிக்காகோ (Chicago) என்னும் ஒரு பெரிய பட்டணத்தில் வெள்ளைக்காரர்களுக்கும் நீகிரோ ஜாதியாரொன்றும் கறுப்பு மனிதருக்கும் பெருங் கலகம் நடந்தது. அந்தக் கலகத்தில் ஏறக்குறைய 2 லக்ஷம் பேர் சம்பந்தப்பட்டிருந்தார்கள். அவர்களில் அநேகர் காயப்பட்டார்கள், அநேகர் கொலை யுண்டார்கள்.

சென்ற சில வாரத்திற்குள்ளாக அநேக ஆகாயக் கப்பலோட்டிகள் அமெரிக்காவிலிருந்து இங்கிலாந்துக்கு தங்கள் விமானங்களை யாதொரு சேதமின்றி ஆகாய மார்க்கமாய்க் கொண்டு வந்தார்கள். இது மிகவும் ஆச்சரியமாகத்தானிருக்கிறது. இந்தப் பெரிய விமானங்கள் ஏறக்குறைய 600 அடி நீளமும் அதற்குத் தகுந்த அகலமுமுள்ளதாய் அதிக பிரமாண்டமாயிருக்கிறது. அவைகள் ஓரிடத்திலும் தங்காமல் அமெரிக்காவிலிருந்து இங்கிலாந்திற்கு ஒரு பெரிய வெள்ளைக் கழுகு போல ஒரு மணி நேரத்திற்கு 80 முதல் 120 மைல் வீதம் பறக்கிறது. அத்லாந்திக் மகா சமுத்திரத்தைக் கடப்பதற்கு 108 மணி நேரமும் 12 நிமிஷமும் செல்லுகிறது. 'இந்தியாவின் நியாயவாதி' ('Advocate of India') என்னும் ஒரு சமாசாரப் பத்திரிகையிலிருந்து ஆகாய தபால் மார்க்கம் இந்தியாவில் ஸ்தாபிக்கப்படப் போகிறதென்று நாம் அறிந்துகொள்ளுகிறோம். இதைச் சீக்கிரம் ஆரம்பிக்கவேண்டுமென்பது இந்திய ராஜாங்கத்தாரின் அபேக்ஷை. ஆகாய தபால் மார்க்கத்தின் முக்கிய ஸ்தானங்களாக பம்பாய், கராச்சி, பூனா, டில்லி, சிம்லா, லாகூர், கல்கத்தா, மதராஸ் முதலான பல இடங்களைத் தெரிந்துகொண்டிருக்கிறார்கள். இன்னும் மத்திய இந்தியாவில் பம்பாயுக்கும் டில்லிக்கும் நடுவே ஒரு ஸ்தானத்தையும், மத்திய மாகாணங்களில் பம்பாயுக்கும் கல்கத்தாவுக்கும் இடையே ஒரு ஸ்தலத்தையும், மூன்றாவதாக பம்பாயுக்கும் மதராஸுக்கும் இடையில் ஹைதராபாதில் ஒரு இடத்தையும் ஏற்படுத்த உத்தேசிக்கிறார்கள். இதைப்பற்றி இன்னும் முழுவதுமாக திட்டம் செய்யவில்லையென்று தெரிகிறது. இப்பொழுது நடக்கும் ஆப்கானிய யுத்தத்தை முன்னிட்டு இது தவக்கப்பட்டிருக்கிறது. சீக்கிரத்திற்குள்ளாக ஏராளமான ஆகாயக் கப்பல்கள் இங்கே கொண்டுவரப்படும். இங்கிலாந்திலிருந்து இந்தியாவுக்கு அநேக ஆகாயக் கப்பல்கள் அனுப்புவதாக ஏற்பாடு செய்திருக்கிறார்கள். இதற்குச் செல்லும் செலவு முதலானவைகளெல்லாம் முன்னமேயே தீர்மானிக்கப்பட்டபடியால் இந்த வேலை சீக்கிரத்தில் ஆரம்பிக்குமென்று நம்புகிறோம்.

கெய்சரின் விசாரணை.—ஜர்மனிய மந்திரியாகிய கௌன்ட்வான் பெத்மன் ஹால் வெக் என்பவர் கெய்சரின் ராஜாங்க நடத்தைக்கெல்லாம் தாமே காரணர் ஆனதால் கெய்சர் ராயனுக்கு பதிலாய் தன்னை விசாரணைக்குட்படுத்தி தீர்ப்பளிக்க வேண்டுமென்று விரும்புகிறார்.

ஜர்மானிய யுத்த கப்பல்களின் முடிவு.—யுத்தம் நிறுத்தப்பட்ட துவக்கத்தில் இந்த யுத்த கப்பல்கள் யாவும் சமாதான உடன்படிக்கையில் கையெழுத்தாகும் வரைக்கும் அங்கிலேயருடைய சமுத்திரக்கரை பக்கமாய்ச் சேர்த்துப் பாதுகாக்கப்பட்டு வந்தன. உடன்படிக்கைப் பிரகாரம் அவைகள் நேசகட்சியார் பக்கம் சேர்க்கப்படவேண்டுமென்று தீர்மானித்துவிட்டபடியால் அப்பத்திரத்தில் கையெழுத்துப் போடுகிறதற்குமுந்தி அவைகளில் ஒன்றுகுறைய எல்லா போர்க் கப்பல்களையும் நேசக்கட்சியார் அடையாதபடி சமுத்திரத்தில் அமிழ்த்திவிட்டார்கள்.

கெய்சரின் மகன் உரைத்த மொழி.—தகப்பனோடு கூட இருந்த மகன் ஓடி ஒளித்துக்கொள்ள எத்தனித்து, சூடர்ஸ்வலியிலுள்ள வெரிங்கன் என்னும் தீவில் வந்து சேர்ந்தனன். அவ்விடத்திலிருந்து நிறைவேறியுள்ள உடன்படிக்கையின் நிபந்தனைகளினால் வருத்தமும் பத்து வருஷத்திற்குள் இன்னும் ஒரு பெரிய போரும் விளையுமே யொழிய வேறல்ல. இங்கிலாந்து, பிரான்சு, அமெரிக்கா என்னும் நாட்டிற்கு தற்கால உடன்படிக்கை முடிவினால் திருப்தியேயொழிய வேறல்ல. தன் தகப்பன் ஜர்மனிதேசம் திரும்பாரென்றும், தாம் அந்த யுத்தத்திற்கு காரணர் அல்ல என்றும் எவ்வித விசாரணை கூட்டத்திற்கும் இணங்காரென்றும், இணங்குவதைவிட முதலில் சாவாரென்றும், தன்னை குறித்தோவெனில், ஜர்மனிய தேசத்திற்குத் திரும்பி சைலீசியா என்னும் இடத்திலுள்ள தன் சொந்த ஜமீனில் இருக்கப்போகிறதாகச் சொன்னார்.

நிகழ்கால சத்தியம்

வேத சன்மார்க்க சுகாதார விஷயங்களில் தற்கால அறிவுக்கொத்தபடி மனிதர் அபிவிருத்தியடைவதற்கென்று பிரசுரமாகும் ஓர் பத்திரிகை.

மதராஸ் அக்டோபர்மீ 1919.

இப்பத்திரிகை, பெங்களூரிலிருக்கும், எஸ். டி. ஏ. பப்ளிஷிங்கவுஸ்காக, பட்டணத்தில் வெப்பேரி என்னுமிடத்தில் உள்ள அல்பீனியன் அச்சாபீசில் அச்சடிக்கப்பட்டு வருகிறது.

பத்திராதிபர் பாஸ்றர், ஜீ. ஜீ. லேளரீ.

உதவி „ „ ஈ. டி. தாமஸ்.

தனிப்பிரதி ஒன்றுக் ...	அணா 1
வருஷ சந்தா, தபாற்கூலி உள்பட.	„ 5
சிங்கப்பூர் பிறந்த முதலிய ஸ்ட்ரேயிட் செற்றில் மெண்டுகளுக்கு தனிப்பிரதி ஒன்றுக்கு ...	8 சென்ட் (8 cents)
வருஷசந்தா தபாற்கூலி உள்பட ..	30 சென்ட் (36 cents)

இப்பத்திரிகைகளை விற்க அநுமதி பெற்ற ஏஜண்டுகள் மூலமாயாவது, நேரே இந்த சொசைட்டிக்கு எழுதியாவது, முன்பணம் செலுத்திப் பெற்றுக்கொள்ளலாம். முன் பணம் செலுத்துவோர், பணம் பெற்றுக்கொள்பவரிடமிருந்து ரசீது வாங்கிக்கொள்ளவேண்டியது.

நோட்டீஸ்.

இப்பத்திரிகையில் முதல் பக்கத்தின் மேல் பாகத்தில் நீலமான கோட்டைக் கண்டால், இந்த மாதப் பத்திரிகையோடு உங்கள் வருஷ சந்தா முடிவாகிறதென்று அறிந்துகொள்ளலாம். அடுத்த நம்பர் உங்களிடத்தில் வரும்படியாகத் தாமதமின்றி உடனே வருஷ சந்தாவைப் புதுப்பித்துக்கொள்ளவேண்டும்.

ஓர் அதிசயமான நூதனம்.

சில வருஷங்களுக்கு முன்னர் மின்சார பேசு கருவிதான் (Telephone) ஒரு பெரிய அதிசயமென் யாவரும் எண்ணினார்கள். 25 அல்லது 30 மைல் தூரத்திற்கு கம்பிகள் போட்டு அதன் ஒரு முனையி ஒரு ஆளும் அதன் மறு முனையில் ஒரு ஆளும் இருந் கொண்டு ஒருவர் பேசுவதை 50 மைல் தூரத்திற்க பால் அதன் மறுமுனையிலிருப்பவர் அறிந்துகொள்ள கூடுமென்று யார் நம்புவார்கள். ஆனால் அதை இ பொழுது எல்லாரும் நம்புகிறார்கள். ஆனால் இதை விட மேலான ஒரு நூதனம் கண்டு பிடிக்கப்பட்டிரு கிறது. தொலை தூரத்திலிருக்கிற ஒருவனோடு பேசு தற்கு கம்பி அனுவசியமென்று மனிதர்கள் அறிந் கொண்டார்கள். கம்பியில்லாமல் பேசுவது ஒரு நூதன மல்லவா? அநேக வருஷமாக கம்பியில்லாமல் ஆகாய தின் வழியாய் தொலை தூரத்திலிருக்கிற ஒருவனே பேசும்படியான ஒரு கருவியைக் கண்டுபிடிக்க முயற் செய்தார்கள். கடைசியாக அதைக் கண்டு பிடித்தா கள். இப்பொழுது ஆயிரக்கணக்கான மைல் தூரத்தி கப்பாலிருக்கிற ஒருவனோடு, நாம் முகமுகமாய்ச் சம்ப ஷிப்பதுபோல எந்தப் பாஷையிலாவது பேசலாம் 1919-ம் வரு மார்ச்சுமீ 19-ம் தேதி காலை 7 மணிக்கு கம்பியில்லாத பேசும் கருவியினால் ஒரு மனிதன் ஐய லாந்திலிருந்துகொண்டு அமெரிக்காவிலிருக்கிற ஒரு மனிதனோடு சம்பாஷித்தான். ஒருவன் பேசின வார்த்தை மற்றொருவனுக்கு அதிக தெளிவாய் விளங் கினதென்றும் ஒருவன் பேசி முடிந்தவுடனே அதி தாமதியால் மற்றவனுக்கு போய்ச்சேர்ந்ததென்றும் சொல்லப்படுகிறது. இது என்ன ஆச்சரியம்! மனிதர் கள் இன்னும் எதைக் கண்டு பிடிக்கப்போகிறார்களோ, தெரியவில்லை.

இதன் அர்த்தமென்ன? இது அதிக தெளிவாயிருக்கி றது. பரலோகத்தையும் பூலோகத்தையும் படைத் சர்வத்திற்கும் வல்ல தேவன் தம்முடைய வசனத்தில் உலகத்தின் முடிவுக்கு முன்னதாக "அறிவு பெருகிப் போமென்று சொல்லியிருக்கிறார். நாம் இவைகளை யெல்லாம் பார்க்கும்பொழுது நாம் முடிவுக்கு சமீபித்து வருகிறோமென்று அறிந்துகொள்ளுகிறோம். இயேசு சீக்கிரம் இவ்வுலகத்திற்கு திரும்ப வருவார். நல்லவர் கள் பொல்லாதவர்கள், திரவிய சம்பன்னர் தரித்திரர், பெரியோர் சிறியோராகிய சர்வ ஜனங்களும் தங்கள் ஜீவியத்தில் தாங்கள் செய்த கிரியைகள் யாவையும் குறித்து கணக்கு ஒப்புவிக்கவேண்டும். இந்த உலகத் தில், அவரவர் செய்த கிரியைகளுக்குத்தக்கதாக அவர்க ளுக்குப் பலனளிக்கப்படும். அல்லாமலும், நல்லவர் களுக்கு நித்திய ஜீவனும் பொல்லாதவர்களுக்கு நித்திய மரணமும் அளிக்கப்படும். ஒவ்வொரு புதிய அதிசய மும், ஒவ்வொரு அதிசயமான நூதனமும் கண்டுபிடிக் கப்படுவது நமது தேவனைச் சந்திக்க நம்மை ஆயத்தப் படுத்தும் எச்சரிப்பின் செய்தியாயிருக்கிறது.

நிகழ்கால சத்தியம்.

Vol. IX. மதராஸ்:—ஜனுவரிமீ, 1920 No. I.

162021

ஜெர்மனியரின் தோல்விக்குக் காரணம்

(THE REASON WHY GERMANY DID NOT SUCCEED)

"ஜெர்மனியர் என் ஜெயமடையவில்லை" யென்று அநேகர் கேட்கிறார்கள். நாற்பது வருஷமாக அவர்கள் ஆயத்தம் பண்ணவில்லையா? எல்லா ராஜ்யங்களைவிட அவர்களிடத்தில் அதிக பலமான தரைச்சேனை இருக்கவில்லையா? அவர்களுடைய சேனைகளெல்லாம் ஒழுங்காக பயிற்றுவிக்கப்பட்டு ஆயுதம் தரிப்பிக்கப்படவில்லையா? அப்படியானால், அவர்கள் என் தோல்வியடைந்தார்கள்? இன்னொரு கேள்வி இருக்கிறது. என் ஒன்றின்பின் ஒன்றாக இருபது ராஜ்யங்கள் சேர்ந்து ஜெர்மனியை எதிர்த்து சண்டை யிட்டது?

இவைகளெல்லாம் விசேஷித்த கேள்விகள் தான். இவைகளுக்கு உத்தரவு சொல்லுவதும் அவ்வளவு கஷ்டமல்ல. நாற்பது வருஷங்களாக மற்ற ராஜ்யங்கள் ஒன்றும் செய்யாமலிருந்தபோது ஜெர்மனியர் இந்த யுத்தத்திற்காக ஆயத்தம் பண்ணினார்களென்பது வாஸ்தவமே. உலகம் ஒருபோதும் பார்த்திராத பெரிய யுத்தத்திற்கென்று அவர்கள் இரகசியமாக தரை சேனைகளையும் கப்பல் சேனைகளையும் பலப்படுத்தினார்கள். கடந்த யுத்தத்தில் ஜெர்மனியர் கொஞ்சங்குறைய ஜெயமடையும் தருணத்திலிருந்தார்களென்பதும் வாஸ்தவந்தான். அவர்கள் அப்படி ஜெயமடையும் தருணத்திலெல்லால் ஏதோ ஒன்று அவர்களுக்குத் தடையாயிருந்தது. அநேக சமயங்களில் அவர்களுக்கு ஆபத்து நேரிட்டது. சில சமயங்களில் நேச கட்சிக்காரரில் சொற்ப வீரர்கள் எதிரிகளின் பெரிய சேனையைப் பின்னிட்டுப்போகும்படி செய்தார்கள். ஒரு இடத்தில் ஒரே ஒரு மனிதன் ஆயுதம் தரித்த 138 ஜெர்மனியரை சிறை பிடித்ததாக நாம் வாசிக்கிறோம். கடந்த யுத்தத்தில் இதைப்போன்ற ஆயிரக்கணக்கான சம்பவங்கள் நடந்தது. இதன் காரணம் யாது? ஒன்றின்பின் ஒன்றாய் உண்டான துரதிஷ்டத்தினால் அவர்கள் தோல்வி யடைந்தார்களா?

மேற்சொல்லப்பட்ட கேள்விக்கு உத்தரவு சொல்லவேண்டுமானால் இந்த யுத்தம் ஆரம்பித்ததின் நோக்கம் இன்னதென்று நாம் முதலில் அறிந்துகொள்ளவேண்டும். இந்த யுத்தத்திற்கு பலபேர் பலபல காரணங்களைக் கொடுக்கிறார்கள். அவர்கள் சொல்லுகிற அந்தக் காரணங்கள் யாவும் யுத்தத்தில் சம்பந்தப்பட்டதாயிருக்கிறது. ஆனால் ஜெர்மன் ராஜ்யம் ஐரோப்பாவின் மற்ற ராஜ்யங்களை வென்று ஐரோப்பா முழுமையையும் ஒரு குடையின் கீழ்படுத்தி இப்படியாக உலக முழுவதையும் வென்று ஒரு சமஸ்த ராஜ்யத்தை ஸ்தாபிக்க வேண்டுமென்பதே அவர்களுடைய ஒன்றான நோக்கமாயிருந்தது.

சுருக்கமாய்ச் சொல்லப்போனால், ஜெர்மனியருக்குள்ளிருந்த அதிகாரத்தின் ஆசையும் உலக முழுவதையும் அரசாளவேண்டுமென்கிற இச்சையுமே இந்த யுத்தத்திற்குக் காரணமாயிருந்தது. ஜெர்மன்காரர்கொண்ட இந்த எண்ணமும் துரிச்சையும் தெய்வீக சித்தத்திற்கு மாறாயிருந்ததால் அவர்கள் தோல்வி யடைந்தார்கள்.

இப்படிப்பட்ட காரியத்தை இப்பொழுதுதான் அவர்கள் முதலாவதாக முயற்சிக்கவில்லை. அநேக வருஷங்களுக்குமுன் பிஸ்மார்க் (Besmark) என்னப்பட்ட ஒரு பெரிய ஜெர்மன் சக்கரவர்த்தி இப்படிச் செய்யப் பிரயாசைப்பட்டார். ஏறக்குறைய நூறு வருஷத்திற்குமுன் நெப்போலியன் (Nepolean) என்னும் ஒரு பிரான்சு தளகர்த்தன் ஐரோப்பா முழுமையையும் ஒன்றாய் இணைக்கப் பிரயாசைப்பட்டும் அது சித்திக்கவில்லை. ஒருகாலத்தில் பூமியெங்கும் ஒரே ஜாதியும் ஒரே பாஷையுமாயிருந்தது. அவர்கள் யாவருக்கும் ஒரேவிதமான பேச்சும் இருந்தது. இவர்களை இப்படி விட்டுவிட்டால் இவர்கள் ஒருமனப்பட்டு தங்கள் பலத்தினாலும் ஞானத்தினாலும் தேவனுடைய சித்தத்திற்கு விரோதமாய்ச் செய்ய ஆரம்பிப்பார்களென்று அவர் அவர்களை பூமி

யின் மீதெங்கும் சிதறப்பண்ணி அவர்கள் பாஷையைத் தாறுமாறாக்கினாரென்று சத்தியவேதம் சொல்லுகிறது. அக்காலத்திலிருந்து மனிதர் வெவ்வேறு பாஷைக்காரராகப் பிரிந்துபோனார்கள். கிறிஸ்துவுக்கு ஏறக்குறைய 600 வருஷத்துக்குமுன் நேபுகாத்நேச்சாரென்றும் ராஜா அக்காலத்து நாகரீகமடைந்த உலக முழுவதையும் அரசாண்டான். பாபிலோன் ராஜாவாகிய நேபுகாத்நேசார் ஒரு சர்வ ராஜா என்று அழைக்கப்பட்டான். அவனுக்குப்பின் அரசாண்ட மூன்று பெரிய ராஜ்யங்களாகிய மேதியா பெர்சியா, கிரேக்கு ரோமையும் சமஸ்த ராஜ்யங்களென்றே அழைக்கப்பட்டன. கிறிஸ்துவுக்குப்பின் ரோம ராஜ்யம் பத்து பங்காகப் பிரிக்கப்பட்டது. அந்நாள் முதற்கொண்டு இந்நாள் மட்டும் அந்த ஐரோப்பிய ராஜ்யங்கள் மறுபடியும் இணைக்கப்படவேயில்லை. இயேசுக்கிறிஸ்துவின் வருகைமட்டாக அவைகள் இணைக்கப்படவு மாட்டாது.

2500 வருஷங்களுக்குமுன் எழுதப்பட்ட தானியேலின் புஸ்தகத்தின் இரண்டாம் அதிகாரத்தில் ரோம ராஜ்யம் பிரிக்கப்படுமென்று முன்னுரைக்கப்பட்டிருக்கிறது. தேவன் அந்த ராஜாவுக்கு சொப்பனத்தில் ஒரு பெரிய சிலையைக் காண்பித்தார். அக்காலமுதல் உலகத்தின் முடிவுமட்டாக உள்ள உலக சரித்திரத்தைக் காட்டுகிற அந்த சிலை நாலு உலோகங்களால் செய்யப்பட்டிருந்தது. பொன்னான தலை பாபிலோன் ராஜ்யத்தைக் குறிக்கிறது. வெள்ளியான மார்பும் புயங்களும் இரண்டாம் ராஜ்யமாகிய மேதிய பெர்சியாவைக் குறிக்கிறது. வெண்கலமான வயிறு மூன்றாவது ராஜ்யமாகிய கிரேக்க ராஜ்யத்தைக் குறிக்கிறது. இரும்பான கால்கள் உலகப்பிரசித்திபெற்றதும் பலத்ததுமான ராஜ்யமாகிய ரோம ராஜ்யத்தைக் குறிக்கிறது. ஆனால் அந்த சிலையின் பாதங்களும் விரல்களும் பாதி இரும்பும் பாதி களிமண்ணுமாயிருந்தது. இது ரோம ராஜ்யம் பிரிக்கப்படுவதையும் பாதி உரமும் பாதி நெரிசலுமாயிருப்பதையும் குறிக்கிறது. தீர்க்கதரிசி "பாதங்களும் கால் விரல்களும் பாதி குயவனின் களிமண்ணும் பாதி இரும்புமாயிருக்க நீர் கண்டீரே, அந்த ராஜ்யம் பிரிக்கப்படும்; ஆகிலும் களிமண்ணோடே இரும்பு கலந்திருக்க நீர் கண்டபடியே இரும்பினுடைய உறுதியில் கொஞ்சம் அதிலே இருக்கும். கால் விரல்கள் பாதி இரும்பும் பாதி களிமண்ணுமாயிருந்தது என்னவென்றால் அந்த ராஜ்யம் ஒரு பங்கு உரமும் ஒரு பங்கு நெரிசலுமாயிருக்கும். நீர் இரும்பைக் களிமண்ணோடே கலந்ததாகக் கண்டீரே அவர்கள் மற்ற மனுஷரோடே சம்பந்தங் கலப்பார்கள்; ஆகிலும் இதோ, களிமண்ணோடே இரும்பு கலவாததுபோல அவர்கள் ஒருவரோடொருவர் ஒட்டிக்கொள்ளாதிருப்பார்கள்" என்று சொன்னார். தானி. 2: 41-43.

மேற்சொல்லப்பட்ட வசனங்களிலிருந்து ராஜ்யம் பிரிக்கப்படுமென்றும் அவைகள் மறுபடியும் ஐக்கியப்படப் பிரயாசைப்பட்டாலும் அது வாய்க்காதென்றும் பார்க்கிறோம். ஆகையினாலே எத்தனை பெரிய மனிதரும் சக்கரவர்த்திகளும் சேர்ந்து ராஜ்யங்களையெல்லாம் ஒன்று சேர்த்து அரசாளப் பிரயாசைப்பட்டாலும் அது அவர்களால் முடியாது. உலகத்தில் ராஜ்யங்கள் பிரிக்கப்பட்டிருக்கும்போது பரலோகத்தின் தேவன் தமது ராஜ்யத்தை ஸ்தாபிப்பார் என்று நாம் அடுத்த வசனத்தில் வாசிக்கிறோம். "அந்த ராஜாக்களின் நாட்களிலே, பரலோகத்தின் தேவன் என்றென்றைக்கும் அழியாத ஒரு ராஜ்யத்தை எழும்பப்பண்ணுவார்; அந்த ராஜ்யம் வேறே ஜனத்துக்கு விடப்படுவதில்லை; ஒரு கல் கையால் பெயர்க்கப்படாமல் மலையிலிருந்து பெயர்ந்து, உருண்டுவந்து, இரும்பையும் வெண்கலத்தையும் களிமண்ணையும் வெள்ளியையும் பொன்னையும் நொறுக்கினதை நீர் கண்டீரே, அப்படியே அது அந்த ராஜ்யங்களையெல்லாம் நொறுக்கி, நிர்மூலமாக்கி, தானே என்றென்றைக்கும் நிற்கும். இனிமேல் சம்பவிக்கப்போகிறதை மகா தேவன் ராஜாவுக்கு தெரிவித்திருக்கிறார்; சொப்பனமானது நிச்சயம், அதின் அர்த்தம் சத்தியம் என்றான்." தானி. 2: 44, 45. நாம் இப்பொழுது "அந்த ராஜாக்களின் நாட்களிலே" வசித்துக்கொண்டிருக்கிறோம். தேவன் சீக்கிரத்திற்குள்ளாக தம்முடைய ராஜ்யத்தை இவ்வுலகத்தில் நிலைநிறுத்துவார். இது கிறிஸ்துவின் பிரசன்னமாகுதலில் நடக்கும்.

தேவன் பிரித்ததை இணைக்கப் பிரயாசைப்பட்டதும் தேவன் சம்பவியாதென்று சொல்லியிருந்த காரியத்தை செய்ய வீணாக முயற்சித்ததுமே ஜெர்மனியரின் தோல்விக்குக் காரணம்.

ஜி. ஜி. லேனீ.

உயிர்த்தெழுந்தபின் கிறிஸ்து செய்யும் வேலை

(CHRIST'S WORK SINCE HIS ASCENSION)

"தேவன் ஒருவரே, தேவனுக்கும் மனுஷருக்கும் மத்தியஸ்தரும் ஒருவரே......மனுஷனாகிய இயேசுக் கிறிஸ்து அவரே" 1 தீமோ. 2: 5, 6.

"வானங்களின் வழியாய் பரலோகத்திற்குப்போன தேவ குமாரனாகிய இயேசு என்னும் மகா பிரதான ஆசாரியர் நமக்கு இருக்கிறார். எபி. 4: 14.

ஆசாரிய முறைமையின் உள்ளான அர்த்தம் இன்னதென்று அறிந்துகொள்ளாமல் கிறிஸ்துவின் ஆசாரிய ஊழியத்தைப்பற்றிப் பேசுவது உசிதமல்ல. கிறிஸ்து நமது பிரதான ஆசாரியராயிருக்கிறாரானால் செய்யும்படி அவருக்கு ஒரு வேலையு மிருக்கவேண்டும். அவருடைய ஆசாரியத்துவத்திற்கு ஒரு வேலை யிருக்குமானால் அந்த ஊழியத்தை நடத்த ஒரு இடமிருக்கவேண்டும். லேவியரின் ஆசாரிய முறைமை நம்முடைய கர்த்தராகிய இயேசுக்கிறிஸ்துவின் பிரதான ஆசாரிய ஊழியத்திற்கு முன்னடையாளமாயிருக்குமானால், பூமியிலிருந்த நிழலாட்டமான ஊழியமும் ஆசாரியத்துவமும் பரலோகத்தில் செய்யப்படும் ஆசாரிய ஊழியத்திற்கு முன்னடையாளமாயிருந்திருக்க வேண்டும்.

"மேற் சொல்லியவைகளின் முக்கியமான பொருளென்னவெனில்; பரலோகத்திலுள்ள மகத்துவ ஆசனத்தின் வலது பாரிசத்திலே உட்கார்ந்திருக்கிறவருமாய், பரிசுத்த ஸ்தலத்திலும், மனுஷரால் அல்ல, கர்த்தரால் ஸ்தாபிக்கப்பட்ட மெய்யான கூடாரத்திலும் ஆசாரிய ஊழியம் செய்கிறவருமாயிருக்கிற பிரதான ஆசாரியர் நமக்குண்டு.

"ஒவ்வொரு பிரதான ஆசாரியனும் காணிக்கைகளையும் பலிகளையும் செலுத்தும்படி நியமிக்கப்படுகிறான்; ஆதலால் செலுத்தும்படி ஏதோ ஒன்று இவருக்கும் அவசியம் வேண்டியதாயிருக்கிறது. பூமியிலே அவர் இருப்பாரானால் ஆசாரியராயிருக்கமாட்டார்; ஏனெனில், நியாயப்பிரமாணத்தின்படி காணிக்கைகளைச் செலுத்துகிற ஆசாரியர்கள் இருக்கிறார்களே; இவர்கள் செய்யும் ஆராதனை பரலோகத்திலுள்ளவைகளின் சாயலுக்கும் நிழலுக்கும் ஒத்திருக்கிறது; அப்படியே, மோசே கூடாரத்தை உண்டுபண்ணப் போகையில்: மலையிலே உனக்குக் காண்பிக்கப்பட்ட மாதிரியின்படியே நீ எல்லாவற்றையும் செய்ய எச்சரிக்கையாயிரு என்று தேவன் அவனுக்குக் கட்டளையிட்டார்" என்று நாம் வாசிக்கிறோம். எபி, 8; 1-5,

இந்த வேத வாக்கியங்களிலிருந்து நாம்: பூலோக ஊழியமும் பரலோக ஊழியமுமாகிய இரண்டு ஊழியமுண்டென்றும் பூலோக காரியங்கள் பரலோக காரியங்களின் நிழலுக்கு ஒத்திருக்கிறதென்றும், பரலோகத்திலிருப்பவைகள் "மெய்யான"வைகளென்றும் அறிந்துகொள்ளுகிறோம்.

சிலுவையின் மரணம் ஆரம்ப சாதகம்.

நாம் இப்பொழுது பாவ நிவாரணத்தைப்பற்றி சற்று கவனிப்போம். சிலுவையோடு பாவ நிவாரண வேலை முடிந்து போயிற்றென்று சிலர் சொல்லுகிறார்கள். ஆனால் பாவ நிவாரண வேலையைப் பிரதான ஆசாரியன் மாத்திரந்தான் செய்யவேண்டுமென்று தெரிகிறது. இதைப்பற்றி நாம் லேவி. 16-ம் அதிகாரத்திலும் எபி. 9: 7-லும் பார்க்கிறோம். பூலோக கூடாரத்தில் பாவ நிவாரண நாளில் பிரதான ஆசாரியன் இரத்தத்தோடு பிரவேசிக்கவேண்டியது. யூதர்கள் வருஷத்திற்கு ஒரு முறை இந்த நாளை பயபக்தியோடு ஆசரிப்பார்கள். தற்காலத்தில், சிதறியிருக்கும் யூதர்கூட தங்கள் காலக் கணக்கின்படி "யோம் கிப்பர்" (Yom Kippur) என்னும் நாளை ஓர் பரிசுத்த ஆராதனை நாளாகக் கொண்டாடுகிறார்கள். ஒரு யூதன் தன் ஓய்வுநாளை மீறுவான். தன் மத கோட்பாடுகளுக்கு விரோதமான எதையும் செய்வான். ஆனால் "யோம் கிப்பர்" என்னும் அந்தப் பாவ நிவாரணப் பெரிய நாள் வரும்போது தன் வியாபாரத் தொழில்களையும், மற்றக் கருமங்களையும் விட்டுப் போட்டு அந்த நாளின் 24-மணி நேரமும் ஒரு துணிக்கை சாப்பாடும் ஒரு துளி தண்ணீரும்கூட தன் வாயில் பிரவேசிக்காதபடி உபவாசம் செய்வான்.

பிரதான ஆசாரியன் பாவ நிவாரணம் பண்ணு முன்னதாக ஒரு பலி செலுத்துவான். நமது பிரதான ஆசாரியராகிய கிறிஸ்து பரலோக கூடாரத்தில் பாவ நிவாரணம் பண்ணும்படியாக கல்வாரி பலி அவசியமாயிருந்தது. அப்படியானால் அவருடைய அன்பான இரட்சண்ய வேலைக்கென்று பலி செலுத்தப்பட்டிருக்க, சிலுவையிலேயே பாவ நிவாரண வேலை முடிந்திருக்குமானால் பிரதான ஆசாரியர் பாவ நிவாரண ஊழியம் செய்வது எங்கே? காய்பா பிரதான ஆசாரியனாயிருந்தானென்று சொல்லுவாயா? அந்த எண்ணத்தை அடியோடே அகற்றிப்போடு. இயேசுக்கிறிஸ்து பிரதான ஆசாரியராயிருந்தாரென்று சொல்லுகிறாயா? அவர்

நமது பிரதான ஆசாரியராக தம்மையே பாவ நிவாரண பலியாக சிலுவையில் பலி யிட்டாரா?

இதற்கு மறு மொழியாக எபி. 8: 3 ஐ வாசிப்போம். "ஒவ்வொரு பிரதான ஆசாரியனும் காணிக்கைகளையும் பலிகளையும் செலுத்தும்படி நியமிக்கப்படுகிறான்; ஆதலால் செலுத்தும்படிக்கு ஏதோ ஒன்று இவருக்கும் அவசியம் வேண்டியதாயிருக்கிறது." இங்கே நமது பிரதான ஆசாரியராகிய இயேசுக்கிறிஸ்துவைப்பற்றியும் அவர் பரலோகத்தில் செய்யும் ஊழியத்தைப்பற்றியும் உரைக்கப்பட்டிருக்கிறது. "பூமியிலே அவர் இருப்பாராஞல் ஆசாரியராயிருக்கமாட்டார்; ஏனெனில் நியாயப்பிரமாணத்தின்படி காணிக்கைகளைச் செலுத்துகிற ஆசாரியர்கள் இருக்கிறார்களே" என்று 4-ம் வசனத்தில் சொல்லப்பட்டிருக்கிறது. ஆசாரிய முறைமையின் கட்டளைப்படி லேவி கோத்திரத்திலுள்ள ஆரோனின் குடும்பத்திலிருந்து மாத்திரம் ஆசாரியத்துவமும் பிரதான ஆசாரியரும் வரவேண்டும். நாம் அதைப்பற்றி "நமது கர்த்தர் யூதாக்கோத்திரத்தில் தோன்றினுரென்பது பிரசித்தமாயிருக்கிறது; அந்தக் கோத்திரத்தாரைக்குறித்து மோசே ஆசாரியத்துவத்தைப்பற்றி ஒன்றும்சொல்லவில்லையே." என்று எபி. 7: 14-ல் பார்க்கிறோம்.



கிறிஸ்து ஜீவனைக் கொடுக்கிறவர்.

கிறிஸ்து "வானங்கள் வழியாய்ப் பரலோகத்திற்குப் போன" பிற்பாடுதான் அவர் நமக்காக மகா பிரதான ஆசாரியராஞர். ஆகையினாலே சிலுவையிலே பாவ நிவாரண வேலை முடிவடைய வில்லையென்று அறிந்துகொள்ளுகிறோம். சிலுவையிலே, பாவ நிவாரணத்திற்கு அஸ்திபாரமான அந்த பரம பலி மாத்திரம் செலுத்தப்பட்டது.

குறிக்கப்பட்ட காலமும் வேலையும்.

லேவியரின் ஆசாரிய முறைமையிலும் ஊழியத்திலும் பாவ நிவாரணப் பெரிய நாளின் வேலையைச் செய்யும்படியாக ஒருகாலம் குறிக்கப்பட்டிருந்தது. "பிரதான ஆசாரியன் மாத்திரம்" இந்த ஊழியத்தைச் செய்ய வேண்டும். (எபி. 9: 7; லேவி. 16: 17) "ஏழாம் மாதம் பத்தாம் தேதி" அதற்குக் குறிக்கப்பட்ட காலம். (லேவி. 16: 29). "அந்த ஏழாம் மாதம் பத்தாந்தேதி உங்களுக்குப் பாவ நிவிர்த்தி செய்யும் நாளும் சபை கூடும் பரிசுத்த நாளுமாயிருப்பதாக." லேவி. 23: 27.

இவைகளெல்லாம் மெய்யாய் சம்பவிப்பவைகளுக்கு நிழலாயிருக்குமாஞல் வசந்த காலத்தில் கிறிஸ்து சிலுவையி லறையப்பட்டதற்கும் இலை யுதிர் காலமாகிய "ஏழாம் மாதம் பத்தாந்தேதியிலே" பாவ நிவாரணம் செய்யப்படுவதற்கும் காலபேதம் இருக்கிறனிதப் பார்க்கிறோம்.

ஆகையினாலே இயேசு கல்வாரியில் பலியிடப்பட்டபோது பாவநிவாரண வேலை முடிவடைய வில்லை யென்பது பிரத்தியட்சமாயிருக்கிறது. உயிர்த்தெழுந்த கர்த்தராகிய நம்முடைய பிரதான ஆசாரியரின் வேலை அப்பொழுதுதான் ஆரம்பித்தது. "தேவனுக்கும் மனுஷருக்கும் மத்தியஸ்தரும்" பரிந்து பேசுகிறவருமாகிய இயேசுக்கிறிஸ்து பாவத்தை நிவிர்த்தி செய்யும் ஒரே கிருபாதார பலியாக தம்மையே பலியிட்டார். அந்த இரத்தத்தாலேயே இப்பொழுது அவர் நமக்காக பாவ நிவாரணம் பண்ணுகிறார். அவர் பூலோகத்திலல்ல பரலோகத்தில் "கர்த்தரால் ஸ்தாபிக்கப்பட்ட மெய்யான கூடாரத்திலும் ஆசாரிய ஊழியஞ் செய்கிறவருமாயிருக்கிறார்." எபி. 8: 2.

இந்தப் பரிபூரண ஊழியமும் இந்த ஒரே பிரதான ஆசாரியரும் அவருடைய பழுதற்ற பலியும் அந்த மெய்யான கூடாரமும், லேவிய ஆசாரிய முறைமைக்கும் தேவன் பாவிகளுக்காகச் செய்யும் வேலைக்கும் பூலோக ஆசரிப்புக் கூடாரத்தில் நடந்த பலி முதலான சடங்குகளுக்கும் முற்குறிப்பொருளாயிருந்தது.

ஒன்று முடிந்து மற்றொன்று ஆரம்பிக்கிறது.

கி. பி. 70-ம் வருஷத்தில் தேவாலயம் ரோமர்களால் அழிக்கப்பட்டதிலிருந்து பூலோகத்தில் வேறொரு

ஆசரிப்புக்கூடாரம் இருந்ததில்லை. இயேசு சிலுவையி லறையப்பட்டு அன்று தெய்வ எத்தனமாய் தேவாலயத் திரைச்சீலை கிழிக்கப்பட்ட பிற்பாடு அங்கே நடத்தப்பட்ட ஊழியமெல்லாம் விருதாவாயிருந்தது. கிறிஸ்து பரத்துக்கேறின உடனே வனாந்தரத்தில் செய்யப்பட்ட கூடாரத்தின் மாதிரியாயிருந்த அந்த பரலோக கூடாரத்திலே அவர் தமது ஊழியத்தை ஆரம்பித்தார். எபி. 8: 1, 2 பார்க்கவும். நமது மகா பிரதான ஆசாரியராகிய இயேசுக் கிறிஸ்துவின் ஊழியத்தினாலே நாம் பரலோக கூடாரத்திலும் அதன் ஊழியத்திலும் உட்செல்ல உபாய முண்டு. நாம் இப்பொழுது பரம கூடாரத்தின் வாசற்படியண்டைக்கு ஆடுகள் கடாக்களின் இரத்தத்தோடல்ல, நமது விசுவாச பலியோடும் தேவ ஆட்டுக்குட்டியின் விலையேறப்பெற்ற இரத்தத்தோடும் சேருகிறோம். இதற்கு முன்னடையாளமாயிருந்ததை அவர்கள் விசுவாசித்து பலி செலுத்தினபோது அவர்கள் பாவங்கள் எப்படி நிவிர்த்தியாக்கப்பட்டதோ அதுபோலவே நமது பாவங்களும் நிவிர்த்தியாக்கப்படும்.



பலி பீடம் ஆட்டுக்குட்டிக்கு முன்னடையாளம்.

பூலோக கூடாரத்து ஊழியம் வருஷாந்தர ஊழியமாயிருந்தது. அதாவது, ஒவ்வொரு வருஷமும் அவர்கள் பண்டிகைகளையும் உபவாசங்களையும் பலி முதலான ஊழியங்களையும் செய்து வந்தார்கள். இவைகளில் விசேஷித்தது பாவ நிவாரணப் பெரிய நாளில் நடத்தப்பட்ட ஊழியந்தான். ஏழாம் மாதம் பத்தாம் தேதியில் நடத்தப்பட்ட இந்த ஊழியம் அந்த ஒரு வருஷ முழுவதிலும் நடத்தப்பட்ட பலி முதலானவைகளை யெல்லாம் ஒரு முடிவுக்குக் கொண்டுவந்தது. அந்த நாளைக்குறித்து கர்த்தர் மோசேக்குக் கட்டளை யிட்டதாவது:

"அந்த ஏழாம் மாதம் பத்தாந்தேதி உங்களுக்குப் பாவ நிவிர்த்தி செய்யும் நாளும் சபை கூடும் பரிசுத்த நாளுமாயிருப்பதாக; அப்பொழுது நீங்கள் உங்கள் ஆத்துமாக்களைத் தாழ்மைப்படுத்தி, கர்த்தருக்குத் தகன பலி செலுத்தக் கடவீர்கள். அந்த நாள் உங்கள் தேவனுகிய கர்த்தருடைய சந்நிதியில் உங்களுக்காகப் பாவ நிவிர்த்தி செய்யப்படும் பாவ நிவாரண நாளாயிருக்கிறபடியால், அதிலே யாதொரு வேலையும் செய்ய வேண்டாம். அந்நாளிலே தன்னைத் தாழ்மைப்படுத்தாத எந்த ஆத்துமாவும் தன் ஜனத்தில் இராதபடிக்கு அறுப்புண்டு போவான். அந்நாளிலே ஒரு ஆத்துமா யாதொரு வேலையைச்செய்தால் அந்த ஆத்துமாவை அவன் ஜனத்தில் நடுவிலே வைக்காமல் அழிப்பேன்" என்றார். லேவி. 23: 27-30.

பாவ நிவாரண நாளில் ஓர் நியாயத்தீர்ப்பு நடப்பதாக இந்த வசனத்தின் மூலமாய் அறிந்துகொள்ளுகிறோம். கீழ்படியாமல் பாவத்தில் நிலைத்திருப்பவன் அந்நாளிலே "அறுப்புண்டு போவான்."

பாவ நிவாரண நாளின் ஊழியத்தைப்பற்றி லேவியராகமம் 16-ம் அதிகாரத்தில் தெளிவாய்ச் சொல்லப்பட்டிருக்கிறது. பிரதான ஆசாரியன் "தனக்காகவும், தன் வீட்டாருக்காகவும் பாவ நிவிர்த்தி" செய்த பிற்பாடு (வச. 6) ஜனத்தினுடைய பாவத்திற்காக நிவாரணம் செய்வான். (வச. 5.) இதற்காக இரண்டு வெள்ளாட்டுக் கடாக்களைக் கொண்டுவந்து கர்த்தருக்கென்று ஒரு ஆட்டையும் போக்காடாக ஒரு ஆட்டையும் தெரிந்துகொள்ளுவார்கள். (வச. 8:)

"கர்த்தருக்கென்று சீட்டு விழுந்த வெள்ளாட்டுக்கடாவை"க்கொன்று (வச. 9, 15) அதன் இரத்தத்தை எடுத்துக்கொண்டு பிரதான ஆசாரியன் மாத்திரம் உடன்படிக்கைப் பெட்டியும் கிருபாசனமும் இருக்கிற மகா பரிசுத்த ஸ்தலத்தில் திரைக்குள்ளே பிரவேசிப்பான். (எபி. 9: 7; லேவி. 16: 15, 17). ஜனத்திற்காக செலுத்தப்பட்ட பலியை தேவன் ஏற்றுக்கொண்ட பிறகு பிரதான ஆசாரியன் "பரிசுத்த ஸ்தலத்திற்காகப் பிராயச்சித்தம் செய்து" (வச. 16) பலிபீடத்தை சுத்தி செய்து (வச. 18.) இப்படியாக "இஸ்ரவேல் புத்திரரின் தீட்டுகள் நீங்க சுத்திகரிப்பான்." (வச. 19.) இந்தப் பாவ நிவாரண வேலை ஒரு சுத்திகரிப்பின் வேலையாயிருந்தது.

ஒவ்வொரு வருஷமும் பாவங்கள் அகற்றப்பட்டது.

வருஷ முழுவதிலும் மனந்திரும்பினவர்களுடைய பாவங்களெல்லாம் அவர்கள் கூடார வாசலுக்குக்

கொண்டுவந்த பலி மிருகத்தின்மேல் சுமத்தப்பட்டது. பின்பு பாவிக்குப்பதிலாக அந்த பலி மிருகத்தைக் கொன்று அந்த இரத்தத்தை ஆசாரியன் எடுத்து திரைக்கு முன்பாகவும் தூப பீடத்தின் கொம்புகளிலும் தெளித்து இப்படியாக பாவத்தை அந்த மனுஷனிடத்தி லிருந்து நீக்கி பரிசுத்த ஸ்தலத்தில் சேர்ப்பான். ஏழாம் மாதம் பத்தாந்தேதியிலே பாவ நிவாரணப் பெரிய நாளில் எல்லா ஜனங்களுக்காகவும் ஒரு ஊழியம் நடக்கும். அந்நாளிலே இஸ்ரவேல் புத்திரர் யாவரும் தங்கள் பாவங்கள் நீங்க சுத்திகரிக்கப்பட்டு இவ்வண்ணமாக கூடாரமும் சுத்திகரிக்கப்படும். பரிசுத்த ஸ்தலத்திற்குள் கொண்டுவரப்பட்ட பாவங்கள் மாத்திரம் நீக்கப்பட்டு சுத்திகரிக்கப்பட்டதென்பதை நாம் மனதில் வைக்கவேண்டும். அப்படி பரிசுத்த ஸ்தலத்துக்குக் கொண்டுவரப்பட்ட பாவங்கள் முன்னமே அறிக்கையிடப்பட்டு மன்னிக்கப்பட்டன வென்பதையும் நாம் மறக்கக்கூடாது. அதாவது, பாவ மன்னிப்பும் பாவம் பரிசுத்த ஸ்தலத்திலிருந்து சுத்திகரிக்கப்படுவதும் வெவ்வேறான காரியங்களாயிருக்கிறது.

ஒரு மனிதன் மெய் விசுவாசத்தோடு ஒரு பலி மிருகத்தைக் கொண்டுவந்து தன் பாவத்தை அதன்மேல் அறிக்கையிட்டு அதைப் பலி செலுத்துவதினால் அவனுடைய பாவங்கள் மன்னிக்கப்பட்டன. ஆனால் அப்படி மன்னிக்கப்பட்டு பரிசுத்த ஸ்தலத்திற்குக் கொண்டுவரப்பட்ட பாவங்களெல்லாம் பாவ நிவாரணப் பெரிய நாளில் பரிசுத்த ஸ்தலம் சுத்திகரிக்கப்படும்போது நீக்கப்படும். தங்கள் பாவங்களுக்காக தங்களைத் தாழ்மைப் படுத்தாமலும் தங்கள் இருதயங்களை சுத்திகரித்துக்கொள்வதற்கு தேவனைத் தேடாமலும் இருக்கிறவர்கள் யாவரும் தேவனுடைய ஜனத்தின் நடுவிலிராதபடிக்கு அறுப்புண்டு போவார்கள். இந்த நியாயத்தீர்ப்பின் வேலைக்கு பரிசுத்த ஸ்தலம் சுத்திகரிக்கப்படுவதென்று சொல்லப்பட்டிருக்கிறது.

யூதகாலக் கணக்கின்படி ஏழாம் மாதம் பத்தாந் தேதியிலே "யோம் கிப்பர்" என்னும் உபவாச நாளாகிய பாவ நிவாரண நாளை உலகமெங்கும் கைக்கொள்ளுகிற வைதீக யூதர்களைப்பற்றி அமெரிக்க ஐக்கிய மாகாணத்தைச்சேர்ந்த பிலதெல்பியா (Philadelphia) பட்டணத்து சமாச்சாரப் பத்திரிகை ஒன்றில் "யோம் கிப்பர் ஒரு நியாயத்தீர்ப்பின் நாள். அப்பொழுது அவனவனுடைய கிரியைகளுக்குத் தக்கதாக அவனவனுக்கு விதி நியமிக்கப்படும்." என்று பிரசுரிக்கப்பட்டிருந்தது.

நாம் முடிவுரையாக, பூலோக கூடாரத்தில் நடத்தப்பட்ட ஆசாரிய ஊழியம் யாவும் பரலோக கூடாரத்தில் நடத்தப்படும் ஆசாரிய ஊழியத்திற்கு ஒரு நிழலாயிருந்ததென்றும் (எபி. 8: 1-5; 9: 1-28 பார்க்கவும்) ஏழாம் மாதம் பத்தாந் தேதியிலே அந்தப் பாவ நிவாரணப் பெரிய நாளாகிய பரிசுத்த ஸ்தல சுத்திகரிப்பு நமது மகா பிரதான ஆசாரியராகிய கிறிஸ்துவின் வேலை முடிந்தபின் அவனவனுடைய கிரியையின்படி அவனவனுக்கு நித்தியத்திற்கென்று பலனளிக்கப்படும் அந்த மகா நியாயத்தீர்ப்பின் நாளுக்கு முன்னடையாளமாயிருந்ததென்றும் சொல்லலாம்.

தசம பாகம் வாங்குதல்

(தொடர்ச்சி.)

கிறிஸ்துவினால் புகழப்பட்டது.

தசமபாகம் செலுத்தும் பரிசுத்தமான கடமையை இரட்சகர் எவ்விதத்திலும் மாற்றவாகிலும் குறைக்கவாகிலும் இல்லையென்பது பிரத்தியட்சமாயிருக்கிறது. "மாயக்காரராகிய வேத பாரகரே பரிசேயரே உங்களுக்கு ஐயோ! நீங்கள் ஒற்தலாமிலும் வெந்தையத்திலும், சீரகத்திலும் தசமபாகம் செலுத்தி நியாயப்பிரமாணத்தில் கற்பித்திருக்கிற விசேஷித்தவைகளாகிய நீதியையும், இரக்கத்தையும் விசுவாசத்தையும் விட்டுவிட்டீர்கள். இவைகளையும் செய்யவேண்டும். அவைகளையும் விடாதிருக்கவேண்டும்."

"இவைகளையும்" அதாவது "விசேஷித்தவைகளாகிய நீதியையும் இரக்கத்தையும் விசுவாசத்தையும்" செய்யவேண்டும். "அவைகளையும்" அதாவது தசமபாகம் செலுத்துவதையும் விட்டுவிடாதிருக்கவேண்டும். பரிசேயர் இந்த விஷயத்தில் அதிக ஜாக்கிறதை யுள்ளவர்களாயிருந்தார்கள். தங்கள் தோட்டங்களிலுண்டான எந்தச் சிறு பூண்டின் விளைவிலும்கூட தசமபாகம் செலுத்தினார்கள். ஆனால் இயேசு, அதைப்பற்றி நீங்கள் அவ்வளவு ஜாக்கிரதையாயிருக்க வேண்டியதில்லையென்று சொல்லவே இல்லை. அது முக்கியமான காரியமல்லவென்றாகிலும் அவைகள் முன்னடையாளமும் நிழலுமான காரியங்களாயிருந்து கிறிஸ்துவில் நிறைவேறி ஒழிந்து போகிறவைகளென்றாகிலும் அவர் சொன்னதில்லை. அப்படிப்பட்ட சொற்ப விஷயங்களைப்பற்றி கர்த்தர் கவனிக்கிறதில்லை யென்றும் சொல்லவில்லை. அவர் முற்றிலும் வேறு விதமாகச் சொன்னார். அவைகளையும் நீங்கள் விட்டுவிடாதிருக்க வேண்டும் என்றதினாலே அதுவும் அவர்கள் நிறைவேற்றவேண்டிய கடமை என்பதாகக் காண்பித்தார். தசமபாகம் அவசியம் செலுத்தப்படவேண்டும் என்பதைப்பற்றி இன்னும் அதிக உறுதியாயும் கண்டிப்பாயும் வேறெவ்விதமாய் சொல்லப்படக்கூடும்? வேத பாரகரும் பரிசேயரும் தசமபாகம் செலுத்தவேண்டியது அவசியமானால் இயேசுவைத் தங்கள் இரட்சகராக விசுவாசிக்கிறவர்களும் அவர் சீக்கிரமாக வானத்தின் மேகங்களிலே திரும்பவும் வருவாரென்று எதிர்பார்க்கிறவர்களும் அப்படிச் செய்யவேண்டியது எவ்வளவு அதிக அவசியமாயிருக்கிறது. விட்டுவிடக் கூடாதென்று இயேசு சொல்லுகிறதை விட்டுவிடுகிறவர்கள் தங்கள் ஆத்தும அழிவுக்கு தப்பித்துக்கொள்ள முடியாது.

வேதாகமங்களில் கற்பிக்கப்பட்ட பரிசுத்த கடமைகளை நிறைவேற்றும் கிரியையானது நம்மை தேவனுக்கு பிரியமுள்ளவர்களாக்கி விடுகிறதில்லை என்பது உண்மையானாலும் நம்முடைய கீழ்படிதலானது விசுவாச ஜீவியத்தின் கனியாக விளங்கவேண்டியது அவசியம். கற்பிக்கப்பட்டவைகளைச் செய்வதிலே தேவனுடைய பிரமாணத்தில் முக்கியமானவைகளாயிருப்பதை நாம் தள்ளிப்போடுவோமானால் அதைப்பற்றிக் கிறிஸ்து கடிந்துகொள்ளும் கண்டிப்பு நமக்கும் செல்லுகிறதாயிருக்கிறது. பரிசேயர் செய்யாமல் விட்டுவிட்ட விஷயங்களைப்பற்றி கிறிஸ்து அவர்களைக் கடிந்துகொண்டபோது தசமபாகம் செலுத்துவதைப்பற்றியும் அவர் பேசி அதை விட்டுவிடக்கூடாத ஒரு காரியமென்பதாக அவர்களுக்குச் சொன்னார்.

செலுத்தாமையினால் வரும் தீங்குகள்.

தேவனுடைய ஜனங்கள் தசமபாகம் செலுத்துவதில் அசட்டையாயிருந்தபோது அதினால் வந்த தீங்குகளைப் பற்றி நெகேமியா சொல்லுகிறதாவது:

"பின்னையும் லேவியருக்கு அவர்கள் பங்குகள் கொடுக்கப்படவில்லை யென்பதையும் பணிவிடை செய்கிற லேவியரும் பாடகரும் அவரவர் தங்கள் வெளிநிலங்களுக்கு ஓடிப்போனார்கள் என்பதையும் நான் அறிந்துகொண்டேன்." நெகேமியா 13: 10.

தசமபாகம் லேவியருடைய சுதந்தரமாயிருந்தது. எண். 18: 21. அது செலுத்தப்படாமையினாலே அவர்கள் லௌகீக வேலைகளைப் பார்க்கவேண்டியதாயிற்று. அவர்கள் வயல்களில் வேலைசெய்யப் போனார்கள். அதினால் தேவனுடைய ஊழியம் அசட்டை பண்ணப்பட்டு அவருடைய வீடு கைவிடப்பட்டதாயிற்று. அதே விதமாக தேவனுடைய பொக்கிஷத்திற்குச் சொந்தமானதை நாம் செலுத்தாமல் வைத்துக்கொண்டால் அப்பொழுது நடந்ததுபோலவே இப்பொழுதும் நடக்கும். எல்லாரும் உண்மையாக தசமபாகம் செலுத்துவார்களானால் தற்காலத்தில் இன்னும் அதிகமான ஊழியர்கள் தங்கள் சுய தேசத்திலும் தூர தேசங்களிலும் சுவிசேஷத்தை அறிவிப்பார்கள். நெகேமியா இந்தப் பரிதாபமான நிலைமை வளர்ந்து வரும்படியாக விட்டுவிட இல்லை. தேவாலயத்தின் ஊழியத்தை திரும்ப ஏற்படுத்தி ஏகோவாவின் ஆராதனையை திரும்ப ஸ்தாபித்தபோது ஜனங்கள் தசமபாகம் செலுத்தாததையும் அதினால் தேவனுடைய பொக்கிஷ சாலை வெறுமையாய்ப் போனதையும் நெகேமியா கண்டார். "அப்பொழுது நான் தலைமையானவர்களோடே வழக்காடி தேவனுடைய ஆலயம் கைவிடப்பட்டுப் போவானேன் என்று சொல்லி அவர்களைச் சேர்த்து அவரவர் நிலையில் அவர்களை வைத்தேன்". நெகேமியா 13: 11. ஓர் உண்மையான தேவ ஊழியன் செய்யவேண்டிய பிரகாரமாக அவர்களுடைய தப்பிதத்தினால் வந்த கெடுதியை நெகேமியா அவர்களுக்கு எடுத்துக் காண்பித்து அவர்கள் சீர்படும்படி ஏவினார். அதினால் நல்ல பலன் உண்டானது. "அப்பொழுது யூதரெல்லாம் தானியம் திராக்ஷ ரசம் எண்ணெய் என்பவைகளில் தசம பாகத்தைப் பொக்கிஷ அறைகளில் கொண்டுவந்தார்கள்." வச. 12.

தசமபாகத்தைச் செலுத்தாமல் வைத்துக்கொள்வது பாவம். அது மெய்யாகவே திருட்டாயிருக்கிறது. தேவன் தமக்குப் பரிசுத்தமானதென்று சொன்னதை அவருடைய பொக்கிஷத்தில் செலுத்தாமல் வைத்துக்கொள்வது தேவனை வஞ்சிக்கிறதாயிருக்கிறது. அது நமதுபேரில் சாபத்தை வருவிக்கிறதுமல்லாமல் நமது ஞான வளர்ச்சியையும் தடைபடுத்துகிறது. இப்படிப்பட்ட பாவத்தில் விழுகிறவர்களைச் சபையை நடத்துகிறவர்கள் சீர்படுத்தி அவர்களுக்காக உண்மையாய் உழைக்கவேண்டும். தசமபாகம் அதிகரிக்கவேண்டுமென்கிற எண்ணத்தை மாத்திரம் வைத்துக்கொண்டு அல்ல இப்படிச் செய்கிறதினால் சிருஷ்டிகரை வஞ்சிக்கிறவர்களுடைய ஆத்துமங்களை இரட்சிக்கும்படியாகக் கவலைப்படவேண்டும். இவ்விஷயத்தில் சபை உத்தியோகஸ்தரின் கடமை இன்னதென்பதைப்பற்றி இங்கு எடுத்துச் சொல்லுவோம்:—

"கர்த்தராகிய இயேசுவுக்குத் தங்களை ஒப்புவித்த மேய்ப்பர்களை அல்லது மூப்பர்களை சபை நியமித்து, தசமபாகத்தைச் சேர்க்கும் ஊழியத்தை உண்மையாய்ப் பார்க்கும் உத்தியோகஸ்தர்களைத் தெரிந்துகொள்ளும்படி இவர்கள் பிரயாசப்படவேண்டும். அவர்கள் இதற்குத் தகுதியற்றவர்களாய்க் காணப்பட்டாலும், தேவனுக்குச் சொந்தமானதை அவருக்குச் செலுத்தவேண்டுமென்கிற முக்கிய விசேஷத்தை அவர்கள் சபைக்கு முன்பாகக் காட்டத் தவறிப்போனாலும், அல்லது அந்த உத்தியோகஸ்தர்கள் உண்மையில்லாதவர்களாய் இருந்தாலும் சபைக்கு அதிக கெடுதி யுண்டாகும். சபைக்கு ஆசீர்வாதத்தை அல்லது சாபத்தை வருவிக்கும் அந்த முக்கிய விஷயத்தில் அவர்கள் அசடராயிருக்கிறார்கள். அப்படிப்பட்டவர்களை அந்த உத்தரவாதத்தினின்று நீக்கி, அதற்குத்தகுதியான மற்றவர்களைப் பரிசோதித்துப் பார்த்து நியமிக்கவேண்டும்."

இதற்குச் சம்பந்தமாக ஆகானுடைய திருஷ்டாந்தத்தை கவனமாய்ப் படிக்கவேண்டும். எரிகோவில் கண்டு பிடிக்கப்படும் வெள்ளியும் பொன்னும் வெண்கலத்தினாலும் இரும்பினாலும் செய்யப்பட்ட பாத்திரங்களும் எல்லாம் கர்த்தருக்குப் பரிசுத்தமானவைகளென்றும் "அவைகள் கர்த்தரின் பொக்கிஷத்தில் சேரும்" என்றும் கர்த்தர் சொல்லி யிருந்தார். யோசுவா. 6: 19. ஆனால் ஆகான் "கொள்ளையிலே நேர்த்தியான ஒரு பாபிலோனிய சால்வையையும் இருநூறு வெள்ளிச் சேக்கலையும் ஐம்பது சேக்கல் நிறையான ஒரு பொன் பாளத்தையும் நான் கண்டு அவைகளை இச்சித்து எடுத்துக்கொண்டேன். இதோ, அவைகள் என் கூடாரத்தின் மத்தியில் பூமிக்குள் புதைத்திருக்கிறது. வெள்ளி அதன் அடியில் இருக்கிறது" என்று சொன்னான். யோசுவா. 7: 21. கர்த்தர் அந்தப்பட்டணத்தை அவர்களுக்குக் கொடுத்தபோது அதைச் சுற்றி வந்து எக்காளம் ஊதி ஆர்பரித்த கூட்டத்திலிருந்த ஒருவன் இப்படிப்பட்ட பொல்லாப்பான காரியத்தைச் செய்தது எவ்வளவு விசனமான காரியம். ஆனால் பொருளாசையானது அப்படிச் செய்யும்படியாக அவனை ஏவிற்று. இது பாவமென்றும் மீறுதல் என்றும் திருட்டு என்றும் மாயம் என்றும் அப்படிப்பட்ட சபிக்கப்பட்ட காரியத்தை தங்களைவிட்டு விலக்காவிட்டால் நான் அவர்களோடு இருக்கமாட்டேன் என்றும் கர்த்தர் சொல்லுகிறார். வச. 11-13 பார்க்க. இதினால்தான் இஸ்ரவேலர் தங்கள் சத்துருக்கள் முன்பாக நிற்கக்கூடாமற் போயிற்று. பாளயத்தில் ஒருவன் திருடனாயிருந்தான். கர்த்தருடைய பொக்கிஷத்தில் சேரவேண்டியதை அவன் திருடி தன்னுடைய பொருளோடு சேர்த்து வைத்துக்கொண்டிருந்தான்.

இந்த மோசமான செய்கையைப்பற்றிய சரித்திரம் பயங்கரமாயிருக்கிறது. நாமும் பண ஆசையினாலே ஆகானைப்போல தேவனுடைய பொக்கிஷத்தில் சேரவேண்டியதைத் திருடி நம்முடைய பொருளோடுகூட சேர்த்துவைத்திருக்கிறோமோ என்று நம்மை ஜாக்கிரதையாய் சோதித்துப் பார்க்கும்படி இந்தச் சரித்திரம் நம்மை ஏவவேண்டும். நாம் உண்மையாய் நம்மையே சோதித்துப் பார்ப்போமானால் ஆகான் செய்த இந்தப் பாவம் நம்மிலும் கண்டு பிடிக்கப்படலாமென்று மிகுந்த பயத்தோடு சொல்லுகிறோம். இக்காரணத்தினால்தான் தற்காலத்தில் இஸ்ரவேல் பலவீனப்பட்டதாயும் தேவனுடைய வேலையை நடத்தவேண்டிய பிரகாரம் நடப்பிக்கக் கூடாததாயு மிருக்கிறது.

தசமபாகமென்பது எது?

தசமபாகமென்றால் என்ன? எவற்றின்பேரில் நாம் தசமபாகம் செலுத்தவேண்டும்? நாங்கள் விற்கிறவைகளின் கிரயத்தின்பேரில் மாத்திரம் தசமபாகம் செலுத்தவேண்டுமென்று சிலர் நினைக்கிறார்கள். இது சரியல்ல. தசமபாகமென்பது நம்முடைய சகலவிதமான வரும்படியினின்றும் செலுத்தப்படவேண்டிய பத்தில் ஒரு பாகம். "தேசத்திலே நிலத்தின் வித்திலும் விருக்ஷங்களின் கனியிலும் தசமபாகமெல்லாம் கர்த்தருக்கு உரியது. அது கர்த்தருக்குப் பரிசுத்தமானது." லேவி. 27: 30.

எந்தெந்த விதத்தில் நமக்கு ஆதாயம் கிடைக்கிறதோ அதற்கெல்லாம் செல்லும் நியாயமான செலவு போக மீதியில் பத்திலொருபாகம் செலுத்தப்படவேண்டும். முந்த நம்முடைய வரும்படியில் தசமபாகம் செலுத்திவிட்டு மீதியிருக்கும் பாகத்தை நம்முடைய சொந்த உபயோகத்திற்குச் செலவிடவேண்டும். தேவன் தன்னோடுகூட இருந்து தான் போகுமிடத்திலெல்லாம் தன்னைக் காப்பாற்றி உண்ண ஆகாரமும் உடுக்க வஸ்திரமும் கொடுத்து சமாதானத்தோடு தன் தகப்பன் வீட்டிற்குக் கொண்டுவந்து சேர்த்தால் தேவன் தனக்குத் தரும் எல்லாவற்றிலும் தசமபாகம் செலுத்துவதாக யாக்கோபு பொருந்தனை பண்ணிக்கொண்டான். ஆதி. 28: 20-22.

தசமபாகம் செலுத்தும் விஷயத்தில் நாம் தேவனிடத்தில் பாகஸ்தராயிருப்பதாக மதித்து கூட்டு வியாபார விஷயத்தில் நாம் பாகஸ்தராயிருந்தால் எவ்வளவு ஜாக்கிரதையோடு கணக்குப் பார்ப்போமோ அவ்வளவு ஜாக்கிரதையாய் நம்முடைய வரும்படியைக் கணக்குப் பார்த்துச் செலுத்தவேண்டும்.

யாருக்கு அதைச் செலுத்தவேண்டும்.

தசமபாகம் எந்த நோக்கத்திற்கென்று உபயோகிக்கப்படவேண்டுமென்பதை கர்த்தர் வெகு தெளிவாய்ச் சொல்லியிருக்கிறார். "பின்னும் கர்த்தர் ஆரோனை நோக்கி: அவர்களுடைய தேசத்தில் நீ ஒன்றையும் சுதந்தரித்துக்கொள்ளவேண்டாம். அவர்கள் நடுவே உனக்குப் பங்கு உண்டாயிருக்கவும் வேண்டாம். இஸ்ரவேல் புத்திரர் நடுவில் நானே உன் பங்கும் உன் சுதந்தரமுமாயிருக்கிறேன். இதோ, லேவியின் புத்திரர் ஆசரிப்புக் கூடாரத்தின் பணிவிடையைச் செய்கிற அவர்களுடைய வேலைக்காக இஸ்ரவேலருக்குள்ளவை எல்லாவற்றிலும் தசமபாகத்தை அவர்களுக்குச் சுதந்தரமாகக் கொடுத்தேன்.........இஸ்ரவேல் புத்திரர் கர்த்தருக்கு ஏரெடுத்துப் படைக்கும் படைப்பாகிய தசமபாகத்தை லேவியருக்குச் சுதந்தரமாகக் கொடுத்தேன். ஆகையால் இஸ்ரவேல் புத்திரரின் நடுவே அவர்களுக்குச் சுதந்தரமில்லை யென்று அவர்களுக்குச் சொன்னேன் என்றார்." எண். 18: 20-24.

ஆகையால் தசமபாகமானது முழுமையும் ஆசரிப்புக் கூடார ஊழியத்தில் சம்பந்தப்பட்டிருப்பவர்களின் ஆதரிப்புக்கென்றே உபயோகிக்கப்படவேண்டியதா யிருந்தது. தற்காலத்திலும் நாம் அதே ஒழுங்கையும் நோக்கத்தையும் அனுசரித்து சுவிசேஷ ஊழியத்திற்கென்று அனுப்பப்பட்டிருக்கும் தேவ ஊழியருடைய பராமரிப்புக்கென்றே இந்தப் பொக்கிஷத்தை உபயோகிக்கவேண்டும். வேறு விஷயங்களுக்கு அதை உபயோகித்தால் அதினால் பல குழப்பங்கள் ஏற்படுவதுமன்றி சுவிசேஷ வேலையும் தடைப்பட்டுப்போகும். கர்த்தருக்கும் அது கோப மூட்டுதலாயிருக்கும்.

மனிதன் தன் இஷ்டப்படி தனக்குத் தகுதியென்று காணும் எந்த நோக்கத்திற்கும் அதை உபயோகிக்கும்படியாகவும் தனக்கு இஷ்டமான யாருக்காகிலும் அதைச் செலுத்தும்படியாகவும் அநுமதி கொடுக்கப்பட்டிருக்கிறதில்லை. முற்காலத்திலே தசமபாகங்களைச் சேர்த்து வைப்பதற்கு பண்ட சாலைகள் வைக்கப்பட்டிருந்தன. அதைப்பற்றி தீர்க்கதரிசி சொல்லுகிறதாவது:

"என் ஆலயத்தில் ஆகாரம் உண்டாயிருக்கும்படிக்குத் தசமபாகங்களையெல்லாம் பண்ட சாலையிலே கொண்டு வாருங்கள். அப்பொழுது நான் வானத்தின் பலகணிகளைத் திறந்து இடங்கொள்ளாமற் போகுமட்டும் உங்கள்மேல் ஆசீர்வாதத்தை வருஷிக்கமாட்டேனோ வென்று அதினால் என்னைச் சோதித்துப் பாருங்கள் என்று சேனைகளின் கர்த்தர் சொல்லுகிறார்." மல். 3:10.

"அப்பொழுது யூதரெல்லாரும் தானியம், திராட்சரசம், எண்ணெய் என்பவைகளில் தசமபாகத்தைப் பொக்கிஷ அறைகளில் கொண்டுவந்தார்கள்." நெகே. 13: 12.

"அப்பொழுது நான் ஆசாரியனாகிய செலேமியாவையும், வேத பாரகனாகிய சாதோக்கையும், லேவியரில் பெதாயாவையும், இவர்களுக்குக் கைத்துணையாக மத்தனியாவின் குமாரன் சக்கூரின் மகனாகிய ஆனானையும் பொக்கிஷ அறைகளின்மேல் விசாரிப்புக்காரராக வைத்தேன். அவர்கள் உண்மையுள்ளவர்கள் என்று எண்ணப்பட்டார்கள். ஆகையால் தங்கள் சகோதரருக்குப் பங்கிடுகிற வேலை அவர்களுக்கு ஒப்புவிக்கப்பட்டது" என்றும் நெகேமியா சொல்லுகிறார். வச. 13. 12-ம் அதிகாரம் 44-ம் வசனம் பார்க்க.

பூர்வத்திலே அதிகமாக தானியம் முதலியவைகள் தசமபாகமாகச் செலுத்தப்பட்டு வந்தது. தற்காலத்திலே பணம் அதிகமாய் உபயோகப்படுவதினால் தசமபாகத்தைப் பணமாகச் செலுத்துகிறோம். இதினால் தேவன் ஆதியில் செய்திருந்த ஏற்பாடு எவ்விதத்திலும் மாற்றப்படுகிறதில்லை. நாம் நம்மால் கூடியமட்டும் முற்காலத்தில் கர்த்தர் கட்டளையிட்டிருந்த ஒழுங்கைப் பின்பற்றி நடக்க பிரயாசைப்படவேண்டும். அக்காலத்திலிருந்தது போலவே இக்காலத்திலும் நமக்குப் பொக்கிஷ சாலைகளும் பொக்கிஷதாரிகளும் உண்டு. ஆகையால் சபையில் ஏற்படுத்தியிருக்கும் ஒழுங்கின்படியே யார் மூலமாக அது செலுத்தப்படவேண்டுமோ அவர்கள் மூலமாக அது அனுப்பப்பட்டு அதைப் பகிர்ந்துகொடுக்கும் உத்தரவாதம் யாருக்குக் கொடுக்கப்பட்டிருக்கிறதோ அவர்களால் அது தேவ ஊழியருக்குப் பகிர்ந்து கொடுக்கப்படவேண்டும். அப்படிச் செய்வதினால் குழப்பங்கள் ஒன்றும் ஏற்படாமல் கர்த்தருடைய தசமபாகமானது நிதானமாகச் செலவிடப்படும்.

தேவ ஊழியர் தசமபாகம் செலுத்தவேண்டுமோ?

தசமபாகத்தைப் பெற்றுக்கொண்டு அதினால் ஆதரிக்கப்படும் தேவ ஊழியரும் தசமபாகம் செலுத்தவேண்டுமோ? ஆம், செலுத்தவேண்டும். தசமபாகம் செலுத்தும் விஷயமானது சன்மார்க்கத்திற்கடுத்த கடமைகளில் ஒன்றாயிருக்கிறது. எல்லாம் தேவனுக்குச் சொந்தமானதென்பதை அதினால் நாம் அங்கீகரிக்கிறோம். அது இவ்வுலகப் பொக்கிஷங்களின்மேலுள்ள பற்றுதலினின்று நம்மைப் பிரிக்கும்படியான ஏற்பாடாயிருக்கிறது. நாம் பெற்றுக்கொள்ளும் எல்லாவற்றிலிருந்தும் எப்போதும் தசமபாகம் செலுத்தும் பழக்கமானது பண ஆசையை நம்மைவிட்டு அகற்றுகிறது

யிருக்கிறது. ஆகையால் நாம் முன்னே பார்த்தபடி தசமபாகம் செலுத்துவது எல்லாருக்கும் ஆசீர்வாதமாயிருப்பதற்கென்று தேவனால் ஏற்படுத்தப்பட்டிருக்கிறது. பண ஆசைக்கும் சுயநயத்திற்கும் சோதிக்கப்படுவது மற்றவர்களுக்குச் சாபமாயிருப்பதுபோலவே தேவ ஊழியம் செய்யும் சுவிசேஷ போதகருக்கும் இருக்கிறது. அவர்களுக்கும் தசமபாகம் செலுத்துவதினால் உண்டாகும் ஆசீர்வாதம் தேவை. ஆகையால் அவர்களும் உண்மையாயும் கண்டிப்பாயும் கர்த்தருடைய பொக்கிஷத்தில் தசமபாகம் செலுத்த வேண்டியதுதான். இப்படி அவர்கள் செய்வதானது கர்த்தருக்குக் கீழ்படிவதினால் வரும் ஆசீர்வாதத்தை அவர்களும் ருசிக்கும்படி செய்கிறதாயிருக்கிறது மல்லாமல் விசுவாசிகளுக்கு மாதிரியாயு மிருக்கிறது.

எபிரேயருக்குள்ளும் இந்த ஏற்பாடு இருந்தது. லேவியரும்கூட தசமபாகம் செலுத்தவேண்டியவர்களாயிருந்தார்கள். "நீ லேவியரோடு சொல்லவேண்டியது என்னவென்றால் இஸ்ரவேல் புத்திரர் கையில் வாங்கிக்கொள்ளும்படி நான் உங்களுக்குச் சுதந்தரமாகக் கொடுத்த தசமபாகத்தை நீங்கள் அவர்கள் கையில் வாங்கும்போது தசமபாகத்தில் பத்தில் ஒரு பங்கை கர்த்தருக்கு ஏறெடுத்துப் படைக்கும் படைப்பாகச் செலுத்த வேண்டும்." எண். 18: 26. "லேவியர் தசமபாகம் சேர்க்கும்போது ஆரோனின் குமாரனாகிய ஒரு ஆசாரியன் லேவியரோடுகூட இருக்கவும் தசமபாகமாகிய அதிலே லேவியர் பத்தில் ஒரு பங்கை எங்கள் தேவனுடைய ஆலயத்திலுள்ள பொக்கிஷ அறைகளில் கொண்டுவரவும் திட்டம் பண்ணிக்கொண்டோம்." நெகே. 10: 38.

தசமபாகம் செலுத்துவது எல்லார் மேலும் விழுந்த கடமையாக கர்த்தர் ஏற்பாடு செய்திருக்கிறார். ஒருவனுடைய வரும்படி தசமபாகத்தின் மூலமாய் வருகிறதாயிருந்தபோதிலும் அதினால் அவன் தன் வரும்படியில் கர்த்தருக்குத் தசமபாகம் செலுத்தவேண்டிய கடமையினின்று எவ்விதத்திலும் நீக்கப்பட்டிருக்கிறதில்லை.

தசமபாகத்தை மீட்டுக்கொள்ளுதல்.

"ஒருவன் தன் தசமபாகத்திலே எவ்வளவாவது மீட்டுக்கொள்ள மனதாயிருந்தானானால், அதனுடன் ஐந்தில் ஒரு பங்கைக் கூட்டிக்கொடுக்கக் கடவன்."

"கோலின் கீழ்ப்பட்ட ஆடுமாடுகளிலே பத்தில் ஒரு பங்காகிறதெல்லாம் கர்த்தருக்குப் பரிசுத்தமானது."

"அது நல்லதோ இளப்பமானதோ என்று அவன் பார்க்கவேண்டாம்; அதை மாற்றவும் வேண்டாம்; மாற்றினால் அதுவும் அதற்குப் பதிலாகக் கொடுக்கப்பட்டதுமாகிய இரண்டும் பரிசுத்தமாகும். அது மீட்கப்படக் கூடாதென்று அவர்களோடே சொல் என்றார்." லேவி. 27: 31-33.

தசமபாகத்தை நாம் நம்முடைய சொந்த உபயோகத்திற்கென்று வைத்துக்கொண்டால் அதைத் திரும்பச் செலுத்தும்போது ஐந்தில் ஒரு பங்கு சேர்த்துக்கொடுக்க வேண்டுமென்கிற நிபந்தனை அதிக கடுவட்டி சேர்த்து பலவந்தமாய் வசூல் செய்யவேண்டுமென்கிற நோக்கத்தோடு கொடுக்கப்படாமல் பரிசுத்தமானதை நம்முடைய சொந்த உபயோகத்திற்காக எடுத்துக்கொள்ளும் சோதனைக்கு நம்மை விலக்கிக் காக்கும்படியாகவே ஏற்பட்டது. ஏனென்றால் இது மனுஷனுக்குக் கண்ணியாயிருக்கிறது. "பரிசுத்தமானதை விழுங்குகிறதும் பொருத்தனை செய்தபின்பு யோசிக்கிறதும் மனுஷனுக்குக் கண்ணியாயிருக்கும்." நீதி. 20: 25. கர்த்தருக்குச் சொந்தமானது பரிசுத்தமானதாயிருப்பதினால் அதை நாம் எடுத்துக்கொள்ளக் கூடாதென்று கர்த்தர் சித்தமாயிருக்கிறார்.

நாம் எவ்வளவு பெரிய தொகை கொடுக்கிறோமென்பதை அல்ல எவ்வளவு உண்மையோடு அதைச் செலுத்துகிறோமென்பதையே கவனிக்கிறார். பூர்வத்தில் மந்தையிலிருந்து தசமபாகம் செலுத்தப்பட்டபோது ஆடுகளெல்லாம் ஒரு பட்டியில் அடைக்கப்பட்டிருக்கும் அதின் வாசல் வழியாய் ஒவ்வொரு ஆடாய் மாத்திரம் வெளிப்படும்படி அதின் கதவு அதிக சிறியதாயிருக்கும். சொந்தக்காரன் சிவப்பு வர்ணம் தோய்த்த ஒரு கோலை கையில் பிடித்துக்கொண்டு வாசலுக்கு வெளியே நிற்பான். ஆடுகள் எல்லாம் ஒவ்வொன்றாய் வெளியே வரும். ஆடுகளைக் கணக்கிட்டு "கோலின் கீழ்ப்பட்ட" ஆடுகளிலே பத்தாவதானவைகளையெல்லாம் அந்தக் கோலினால் அடையாளம் செய்து விடுவான். அவைகளைப் பிறகு மாற்றக்கூடாது. அது சொந்தக்காரன் அதிக பிரியத்தோடு வளர்த்த நேர்த்தியான பெரிய ஆடாயிருந்தாலும் அது கர்த்தருக்குச் சொந்தம். அவன் அதை எடுத்துக்கொண்டு அதற்குப் பதிலாக வேறொன்றைக் கொடுக்கக்கூடாது. அல்லது அந்தப் பத்தாவதானது கேவலமான சின்ன ஆடாயிருந்தாலும் அதையும் அவன் மாற்றி அதற்குப் பதிலாகப் பெரிதான வேறொன்றைக் கொடுக்கக்கூடாது. ஏனென்றால் அது பத்தாவதானது. பிரத்தியட்சமாகக் கர்த்தருக்கென்று பரிசுத்தமாக்கப்பட்டதை அவருக்குச் செலுத்துவதில் நாம் எவ்வளவு ஜாக்கிரதையும் கண்டிப்புமாயிருக்க வேண்டுமென்பதை இது நமக்குக் காட்டுகிறது. இவ்விஷயத்திலே நாம் கற்றுக்கொள்ளவேண்டிய கீழ்ப்படிதலின் பரிக்ஷையும் தேவனுக்குப் பாகஸ்தராயிருக்கும் விஷயத்தை அங்கிகரித்து நடப்பதில் நாம் அசட்டாயிருக்கக்கூடாதென்பதும் இதிலே நமக்கு முன்பாகக் காட்டப்பட்டிருக்கிறது.

நம்முடைய நன்மைக்காக.

அறப்புக்கு எஜமானாகிய கர்த்தர் தசமபாகம் சேர்க்கும் ஒழுங்கை ஏன் ஏற்படுத்தினார்? அவருக்கு வறுமையுண்டாயிருப்பதினாலல்ல அல்லது உலகத்தின் கடையாந்தரங்கள்வரைக்கும் சுவிசேஷத்தைச் சுமந்து செல்லும் ஊழியர்களை ஆதரிப்பதற்கென்று பணம் சேகரிப்பதற்கு இந்த ஒரே வழி மாத்திரம் உண்டென்று அல்ல. கர்த்தர் தம்முடைய வேலைக்கு வேண்டிய திரவியம் இருக்கும்படியாகக் கற்களைத் தங்கக் கட்டிகளாக்கவும் அல்லது வானத்திலிருந்து பொன் வருஷிக்கும்படிச் செய்யவும் கூடும். ஆனால் அதிலும் அதிக உத்தமமான வழியை அவர் தெரிந்துகொண்டார். தசமபாகங்களும் காணிக்கைகளுமே தம்முடைய ஜனத்திற்கு உதவி செய்வதற்கு ஏற்ற வழி யென்று அவர் கண்டதினால் அந்த ஏற்பாட்டை ஸ்தாபகம் பண்ணினார். தசமபாகம் செலுத்தும் ஏற்பாடு நமக்குத் தோழனும் உபகாரியுமாயிருக்கிறது. மனுஷனுடைய இருதயம் திருக்குள்ளதும் பண ஆசையுள்ளதுமாயிருக்கிறது. பண ஆசை எல்லாத் தீமைக்கும் வேராயிருக்கிறது. இந்தத் தீமையானது ஒவ்வொருவனுடைய இருதயத்திலும் மறைந்திருக்கிறது. பெருமையும் பேராவலும் பண ஆசையுமுள்ள மனிதன் தன் இருதயத்திலுண்டாகும் இச்சையை மேற்கொள்வதற்கு உதவியாயிருக்கும்படியாக கர்த்தர் தம்முடைய ஞானத்தின்படியேயும் அன்பினாலேயும் இந்தத் தசமபாக ஏற்பாட்டை ஸ்தாபித்திருக்கிறார். நம்முடைய காரியங்களில் தேவனும்கூட பாகஸ்தராயிருப்பதை நாம் இதின் மூலமாய் ஒப்புக்கொள்ளுகிறோம். நம்முடைய எல்லாக் காரியங்களிலும் நாம் அவரோடு கணக்குப் பார்க்கவேண்டும். அவருக்குச் சேரவேண்டிய பாகம் இவ்வளவு என்றும், நமக்குச் சேரவேண்டிய பாகம் இவ்வளவு என்றும் நாமே தீர்மானிக்கவேண்டும். நம்முடைய சகல வரும்படிகளுக்கும் அவரே காரணராயிருக்கிறார். நமக்கு இருக்கும் சகலத்தையும் அவரே நமக்குக் கொடுத்து அதில் தசமபாகத்தைத் தமக்குத் திரும்பக் கொடுக்கும்படியாகக் கேட்கிறார். இது பரிசுத்தமானதென்றும் இப்பூமியில் தம்முடைய வேலை நடந்தேறும்படியாக இது உபயோகிக்கப்படவேண்டுமென்றும் சொல்லியிருக்கிறார். மீதியிருப்பதை நாம் நமது சொந்த உபயோகத்திற்கென்று செலவிடுவதோடுகூட தேவ காரியங்களுக்கென்று செலுத்தும் காணிக்கைகளுக்கும் கொடுக்கவேண்டும். தசமபாகம் செலுத்துவது நமது மேல் சுமத்தப்பட்ட ஒரு பாரமான சுமை என்று எண்ணாமல் அதினால் கர்த்தரிடத்திலிருந்து பெற்றுக்கொள்ளும் பெரிய ஆசீர்வாதத்தை நோக்கவேண்டும்.

ஓய்வுநாளானது கர்த்தர் நமக்குக் கொடுத்திருக்கும் காலத்தில் ஏழில் ஒரு பங்கை அவருக்கென்று செலவிடும்படிக் கேட்கிறது. ஆனால் அது கர்த்தர் நமக்கு அளிக்கும் பெரிய ஆசீர்வாதங்களில் ஒன்றாயிருக்கிறது. நம்முடைய வரும்படியில் கர்த்தருக்குச் செலுத்தவேண்டிய தசமபாகத்தைப்பற்றிய விஷயமும் அப்படித்தானிருக்கிறது. ஓய்வுநாள், தசமபாகம் ஆகிய இவ்விரண்டும் பரிசுத்தமானவைகளாயிருக்கின்றன. ஆனால் பரிசுத்த ஓய்வுநாளின் நேரத்தை நமது சொந்த வேலைக்கு உபயோகிப்பதோ அல்லது கர்த்தருக்குச் செலுத்தவேண்டிய தசமபாகத்தை நமது சொந்த காரியங்களுக்கு எடுத்துக்கொள்வதோ, இவற்றில் எது பெரிய பாவம் என்பதைத் தீர்மானிப்பது மனிதனுடைய காரியமல்ல. அவைகள் இரண்டும் பாவம்தான். இரண்டும் இருதயத்திற்கு ஞான அந்தகாரத்தைக் கொடுக்கிறவைகள்தான். ஓய்வுநாளைக் கைக்கொள்வதிலோ அல்லது உண்மையாய் தசமபாகம் செலுத்துவதிலோ எதில் அதிக ஆசீர்வாதமிருக்கிறதென்பதையும் நாம் அளவிடக்கூடாது. தேவன் இவ்விரண்டிற்கும் ஏராளமான ஆசீர்வாதங்களை வாக்களித்திருக்கிறார். மெய்யான ஓய்வுநாளை ஆசரிப்பதினாலே பெரிய ஆசீர்வாதங்களை அடைந்து அனுபவிக்கிறவர்கள் கர்த்தருக்கு உண்மையாய்த் தசமபாகம் செலுத்துவதினாலே கர்த்தரிடத்திலிருந்து இன்னும் அதிகமான ஆசீர்வாதங்களைப் பெற்றுக்கொள்ளலாமென்பது நிச்சயம். இவ்விஷயத்தில் நாம் உண்மையுள்ளவர்களாயிருந்தால் அவர் நமக்கு வானத்தின் பலகணிகளைத் திறந்து நமதுபேரில் மெய்யாகவே ஆசீர்வாதங்களை வருஷிக்கப்பண்ணுவதாக வாக்களித்திருக்கிறார்.

"தேவனுடைய பிரமாணம் எப்படி என்றும் நிலைத்திருக்கிறதாயிருக்கிறதோ அப்படியே அவர் ஏற்படுத்தின தசமபாகம் வாங்கும் ஏற்பாடும் நிலையுள்ளதாயிருக்கிறது. இந்தத் தசமபாக ஏற்பாடானது யூதருக்கு ஒரு ஆசீர்வாதமாக இருந்தது. இல்லாவிட்டால் தேவன் அதை அவர்களுக்கு விதித்திருக்கமாட்டார். அப்படியே முடிவுகாலமட்டாக அதை அனுசரிப்பவர்களுக்கெல்லாம் அது ஆசீர்வாதமாயிருக்கும். நம்முடைய பரமதகப்பன் தமக்குத் திரவியத்தைச் சேர்த்துக்கொள்ளும்படியாக இந்த ஒழுங்கை ஸ்தாபிக்காமல் மனிதனுக்குப்

பெரிய ஆசீர்வாதமாயிருக்கும்படியாகவே அதை ஏற்படுத்தினார். இந்த நற்கிரியையானது மனிதனுக்கு அவசியமானதென்று அவர் கண்டார்."

"சகல வருமானத்திலும் லாபத்திலும் பத்தில் ஒரு பாகம் தம்முடையதாயிருக்கு மென்பதை தேவன் தம்முடைய ஜனத்திற்குப் பிரமாணமாக வைத்திருக்கிறார். பத்தில் ஒன்பது பாகத்தை நான் உனக்குக் கொடுத்திருக்கிறேன். அதின் சகல லாபத்திலும் தசமபாகத்தை நான் உன்னிடத்தில் கேட்கிறேனென்று தேவன் சொல்லுகிறார்."

"சபையின் ஒவ்வொரு அவயவமும் தசமபாகத்தைக் கர்த்தருக்குப் பரிசுத்தமானதாகத் தத்தம் செய்யவேண்டிய கடமைக்குத்தான் கீழ்ப்பட்டிருப்பதை உணர வேண்டும். ஒருவனும் தன் இஷ்டத்திற்கு அல்லது தன்னயமுள்ள இருதயத்தின் இச்சைக்கு இடங்கொடுப்பதினால் தேவனை வஞ்சிக்கக்கூடாது."

"தேவரீர் எனக்குத் தரும் எல்லாவற்றிலும் உமக்குத் தசமபாகம் செலுத்துவேன் என்று யாக்கோபு சொன்னான். சுவிசேஷ வெளிச்சம் பூரணமாக அருளப்படாத அந்தக் காலத்திலிருந்தவர்கள் தேவனுக்குச் செலுத்தினதைப்பார்க்கிலும், சுவிசேஷ வெளிச்சத்தையும் சலாக்கியங்களையும் பூரணமாய் அனுபவிக்கிற நாம், கொஞ்சமாய்க் கொடுக்கலாமா? இல்லை, நாம் அதிக ஆசீர்வாதங்களை அனுபவிக்கிறபடியால் கர்த்தருக்கு நாம் செய்ய வேண்டிய கடமைகளும் அதிகமாயிருக்கிறதல்லவா? தேவனுடைய அளவிடக்கூடாத அன்புக்கும் அவர் அருளின விலை மதிக்கக்கூடாத ஈவுக்கும், நாம் அவருக்குச் செலுத்தும் பொருளும் அவருக்காகச் செலவிடும் காலமும் நாம் அவருக்குப் பாராட்டும் அன்பும் எம்மாத்திரம். நம்மை முழுவதும் கர்த்தருக்குப் பிரதிஷ்டை செய்யும்படியாக கிறிஸ்து கல்வாரி சிலுவையிலிருந்து அழைக்கிறார். நாமும் நமக்குள்ள யாவும் தேவனுக்கென்று சமர்ப்பிக்கப்படவேண்டும்."

"நாம் செய்யவேண்டிய வேலை மிகவும் பெரிதாயிருப்பதினால் தேவனுடைய ஜனங்கள் மனப்பூர்வமாயும் தாராளமாயும் கர்த்தருடைய வேலைக்கென்று பொருள் உதவி செய்யவேண்டும். தற்காலத்தில் அறிவிக்கப்படும் சத்திய தூதைக் கேட்காத ஆயிரக்கணக்கான பேர்கள், ஆம், லட்சக்கணக்கான பேர்கள், ஆப்பிரிக்காவிலும் சீனாவிலும் இந்தியாவிலும் இருக்கிறார்கள். அவர்களுக்கெல்லாம் இந்த எச்சரிப்பின் தூது அறிவிக்கப்படவேண்டும். சமுத்திரங்களிலுள்ள அநேகம் தீவுகள் தேவனைப்பற்றிய அறிவுக்காகக் காத்திருக்கின்றன. தேவன் நம்மைத் தம்முடைய உக்கிராணக்காரராக அழைத்திருக்கிறார். நாம் உண்மையாய்ப் பகிர்ந்து கொடுக்கும்படியாக அவர் தம்முடைய திரவியங்களை நமது கையில் கொடுத்திருக்கிறார். தமக்குச் சொந்தமானதைத் தமக்குச் செலுத்தும்படியாக அவர் கேட்கிறார். சுவிசேஷம் உலகத்தின் எல்லாப் பாகங்களிலும் அறிவிக்கப்படுவதற்கு உபயோகமாகும்படி அவர் தசமபாகத்தைத் தம்முடைய பரிசுத்தமான பங்காகப் பிரத்தியேகப்படுத்தியிருக்கிறார். சகோதரரே, சகோதரிகளே உங்களுடைய சுயநயம் பாராட்டும் குணத்தை அறிக்கையிட்டு அதை விட்டு விடுங்கள். கர்த்தருக்கு உங்கள் பொருத்தனைகளையும் காணிக்கைகளையும் கொண்டு வாருங்கள். நீங்கள் செலுத்தாமல் வைத்துக்கொண்ட தசமபாகங்களையுங்கூட அவருக்குக் கொண்டுவாருங்கள்."

கிறிஸ்தவ சபைகளின் ஏக ஐக்கியம்

(WILL THE CHRISTIAN CHURCHES UNITE.)

கடந்த சில வருஷங்களாக அமெரிக்காவிலும் இன்னும் பல மேற்கத்தி நாடுகளிலும் உள்ள பற்பல சபையின் கண்காணிகள் கிறிஸ்தவ சபைகள் யாவும் ஏக ஐக்கியமடையும்படியாக சங்கங்களைக் கூட்டுகிறார்கள். பரிசுத்த வேதாகமத்தில் வெளிப்படுத்தப்பட்டிருக்கும் சத்தியங்களில் மேற்கத்தி நாடுகளிலுள்ள சபைகள் மாத்திரமல்ல இந்தியாவிலும் உலகத்தின் மற்ற பாகங்களிலும் உள்ள சபைகள் யாவும் ஐக்கியப்பட்டால் அதிக நலமாயிருக்கும். அவர்கள் மனித கோட்பாடுகளையும் பாரம்பரியங்களையும் விட்டுவிட்டு வேதாகமமே தங்கள் வழிகாட்டியென்று அதைக் கடைபிடிப்பார்களானால் அவர்களுடைய ஏக ஐக்கியத்திற்குப் பங்கமில்லை. ஆனால் கிறிஸ்தவ சபையின் கண்காணிகள் யாவரும் அப்படி செய்கிறது கஷ்டமாயிருக்கும்.

எப்படியும் அவர்கள் ஏக ஐக்கியப்படுவார்கள். இப்பொழுது ராஜ்யங்கள் எப்படி ஐக்கியப்படுகிறதோ அது போல சபைகளும் ஐக்கியமடையும். அப்பேர்ப்பட்ட காரியம் சம்பவிக்குமென்று வேதாகமத்தில் தெளிவாய் சொல்லப்பட்டிருக்கிறது. "ஆனாலும், கடைசி நாட்களில் கர்த்தருடைய ஆலயமாகிய பர்வதம் பர்வதங்களின் கொடுமுடியில் ஸ்தாபிக்கப்பட்டு, மலைகளுக்கு மேலாய் உயர்த்தப்பட்டிருக்கும், எல்லா ஜாதிகளும் அதினிடத்திற்கு ஓடி வருவார்கள். திரளான ஜாதிகள் புறப்பட்டுவந்து: நாம் கர்த்தரின் பர்வதத்துக்கும் யாக்கோபின் தேவனுடைய ஆலயத்துக்கும் போவோம் வாருங்கள்; அவர் தமது வழிகளை நமக்கு போதிப்பார், நாம் அவர் பாதைகளில் நடப்போம் என்பார்கள்; ஏனெனில் சீயோனிலிருந்து வேதமும் எருசலேமிலிருந்து கர்த்தரின் வசனமும் வெளிப்படும்.......அவனவன் தன் தன் திராட்ச செடியின் நிழலிலும், தன் தன் அத்தி மரத்தின் நிழலிலும் பயப்படுத்துவார் இல்லாமல் உட்காருவான்; சேனைகளுடைய கர்த்தரின் வாய் இதைச் சொல்லிற்று. சகல ஜனங்களும் தங்கள் தங்கள் தேவனுடைய நாமத்தைப்பற்றிக்கொண்டு நடப்பார்கள்; நாங்களும் எங்கள் தேவனாகிய கர்த்தருடைய நாமத்தைப் பற்றிக்கொண்டு என்றென்றைக்குமுள்ள சதா காலங்களிலும் நடப்போம்." மீகா. 4: 1, 2, 4, 5.

கடைசி காலத்தில் ஜனங்கள் யாவரும் ஐக்கியப்படும்படியாகப் புறப்படுவார்களென்று நாம் மேற்சொல்லிய வசனங்களிலிருந்து அறிந்துகொள்ளுகிறோம். ஒவ்வொருவனும் தன் இஷ்டம்போல் நடந்து தன்னிஷ்டப்பிரகாரம் தேவனை வணங்கி கிறிஸ்தவர்களோடு ஏக ஐக்கியப்பட்டு இருக்கவேண்டுமென்பதே அவர்களுடைய நோக்கமாயிருக்கிறதென்று 4-ம், 5-ம் வசனங்களில் சொல்லப்பட்டிருக்கிறது. தங்களுடைய மார்க்க விசுவாசம் எப்படியிருந்தாலும் மற்ற சபைகளோடு பொதுவாக ஐக்கியப்படலாமென்று நினைக்கிறார்கள். தற்காலத்தில் இந்தியாவிலும் இதே விதமான ஐக்கியத்தைப்பற்றி பேசிக்கொள்ளுகிறார்கள். சில நாட்களுக்கு முன் இந்தியாவிலுள்ள சபைகளெல்லாம் ஐக்கியப்படும்படியான எத்தனங்கள் செய்யும்படியாக அநேக இடங்களில் கூட்டங்கூடினார்கள். இங்கிலாந்து திருச்சபையைச் சேர்ந்தவர்களும் இதர சுவிசேஷ மார்க்கத்தாரும் ஒரு ஐக்கியத்தை உண்டுபண்ணப் பிரயாசைப்படுகிறார்கள். இருபக்கத்திலும் சிலர் ஐக்கியப்பட ஆசையுள்ளவர்களாகவும் சிலர் அதற்கு எதிர்த்து நிற்கிறவர்களாகவும் இருக்கிறார்கள். கடைசியாக வேதத்தில் முன்னுரைக்கப்பட்டபடி அவர்கள் ஐக்கியப்படுவார்கள். இது நிறைவேறினவுடன் அந்த ஐக்கியத்திற்குட்படாத இதர சபைகளுக்குத் துன்பகாலம் ஆரம்பிக்கும். தங்கள் விசுவாசத்தினிமித்தம் அவர்கள் அந்த ஐக்கியத்தில் பங்குபெறமாட்டார்களென்று மீகா. 4: 6, 7-ம் வசனங்களில் சொல்லப்பட்டிருக்கிறது. "அந்நாளிலே நான் நொண்டியானவளைச் சேர்த்து, தள்ளுண்டவளையும் தீங்கு அனுபவித்தவளையும் கூட்டிக்கொண்டு, நொண்டியானவளை மீதியான ஜனமாகவும், தூரமாய்த் தள்ளுண்டு போனவளை பலத்த ஜாதியாகவும் வைப்பேன்; அவர்கள்பேரில் கர்த்தர் சீயோன் பர்வதத்திலே இதுமுதல் என்றென்றைக்கும் ராஜாவாயிருப்பார்." மீகா. 4: 6, 7.

ஆனபடியினாலே, இந்த ஐக்கியத்தில் சம்பந்தப்படாத சில சபைகள் கர்த்தரால் விசேஷித்த ஆசீர்வாதங்களை அடைவார்கள். இந்த ஐக்கியத்திற்குட்பட்டவர்கள், உட்படாதவர்களை உபத்திரவத்திற்கும் துன்பத்திற்கும் உள்ளாக்குவார்கள். அப்பேர்ப்பட்ட ஐக்கியம் உண்டாகுமென்பதற்குச் சந்தேகமில்லை. ஏனென்றால் அது வேதாகமத்தில் முன்னுரைக்கப்பட்டிருக்கிறதினாலும், இதை நிறைவேற்றும்படியாக யாவரும் முயற்சி செய்கிறதினாலும் இது கட்டாயம் கை கூடும்.

ரோமாபுரியிலிருக்கும் பாப்பானவர் இந்த காரியங்களில் அதிக முயற்சி எடுக்கிறார். சுவிசேஷ மார்க்கத்தார் ரோமான் சபையைவிட்டுப்பிரிந்த இந்த நாலு நூற்றாண்டுகளாக அவர்களை எப்படியாவது திரும்ப ஐக்கியப்படுத்தவேண்டுமென்பதே அவர்களுடைய ஒன்றான நோக்கமாயிருந்தது. பிற்காலத்தில் வேதாகமத்திற்குச் சார்பாயிராதவர்கள் யாவரும் ரோமான் சபையோடு திரும்ப ஐக்கியப்படுவார்களென்பதற்கு ஐயமில்லை. அவர்கள் வெளிப்படையாக அவர்களோடு சேராவிட்டாலும் ஆவியின் அனலில் குன்றிப்போவார்கள். அதாவது அவர்கள் வெளிப்படையாக தங்களுடைய மூந்தின நாமத்தையே தரித்துக்கொண்டிருந்தாலும் அவர்கள் உள்ளான பிரகாரம் ரோமான் சபைக்கு ஒத்த விசுவாசமுடையவர்களாயிருப்பார்கள். இந்த கடைசி ஏற்பாட்டிற்கு உட்படுமுன்னதாக அவர்கள் முதலாவதாக சில ஏற்பாடுகள் செய்யவேண்டும். முதலாவதாக, இவர்களுக்குள்ளேயே ஐக்கியமுண்டாகவேண்டும். பிற்பாடு ரோம சபை ஐக்கியப்பட்டவர்களைத் தங்கள் தொழுவத்திற்குள் கூட்டிச் சேர்ப்பார்கள். இப்பொழுது இந்த ஏற்பாடுகள் நடந்தேறுகிறதை நாம் பார்க்கிறோம். நாம் அந்தியகாலத்திற்கு சமீபிக்கிறோமென்பதற்கு இவை சாட்சி.

ஜி. ஜி. லோரி.

ஏழு முத்திரைகள்

(THE SEVEN SEALS)

இந்த மாதப்பத்திரிகையில் வெளிப்படுத்தின விசேஷம் 5-ம், 6-ம், 7-ம், 8-ம் அதிகாரங்களில் சொல்லியிருக்கிற ஏழு முத்திரைகளைப்பற்றி படிக்கலாமென்று எண்ணுகிறேன். ஐந்தாம் அதிகாரத்தில், இந்த முத்திரிக்கப்பட்ட புஸ்தகத்தைப்பற்றி முதலாவதாக மிகவும் திட்டமாய் வாசிக்கிறோம். இந்த முத்திரைகளுக்குள் அடங்கியிருக்கப்பட்ட சங்கதிகள் மிகவும் முக்கியமானவைகளும், மனிதரின் இரட்சிப்புக்கு அவைகளை அறிய வேண்டியது வெகு அவசியமானவைகளாயிருப்பதாக அப்போஸ்தலனாகிய யோவானுக்கு தெரிந்ததால்தான் இவைகளின் இரகசியத்தை அறியும்படி அவர் மிகவும் அழுததாகத் தெரிகிறது. மேலும் அவைகளின் விஷயமாய் பூலோகத்திலிருந்து மீட்கப்பட்டவர்களாய் பரலோகத்திலிருக்கிற பரிசுத்தவான்களாகிய, நான்கு ஜீவன்களும், இருபத்து நான்கு மூப்பர்களும் வெகு சிறத்தையும் எடுத்ததாகவும் தெரிகிறது. இந்த ஏழு முத்திரைகளிலும் அப்போஸ்தலர் காலத்திலிருந்து, கிறிஸ்துவின் இரண்டாம் வருகை மட்டுமுள்ள உலகத்தின் மார்க்க சரித்திரத்தை ஏழு பாகமாகப் பிரித்துக் காட்டியிருக்கிறது.

1-ம் முத்திரை.

முதலாம் முத்திரையை ஆட்டுக்குட்டியானவர் உடைத்தபோது, தீர்க்கதரிசியான யோவான் கண்ட காட்சியில் "ஒரு வெள்ளைக் குதிரையைக் கண்டேன்" என்கிறார். (வெளி. 6: 1, 2 பார்க்க.) இதுதான் அப்போஸ்தலர்களது சபையின் தன்மையை யெடுத்துக் காட்டுகிறதாயிருக்கிறது. இந்தக்குதிரையின் வெண்மை நிறம் அந்தக் காலத்தின் கிறிஸ்தவ சபையின் சுத்த உபதேசத்தையும், அவர்களுடைய பரிசுத்த ஜீவியத்தையும், வெகு தெளிவாய் குறித்துக் காட்டுகிறது. அவர்கள் சத்தியத்தையே விசுவாசித்தவர்கள். அது அவர்கள் வெளியரங்க ஜீவிய நடக்கையிலேயே வெகு தெளிவாய்க் காணப்பட்டது. அப்படிப்பட்ட சுத்தமான உபதேசமும், ஜீவியமும், அவர்களில் இருக்கப்போய்த்தான் வெகு பலமாக அந்தக்காலத்தின் அஞ்ஞானக் கொள்கைகளை யெதிர்த்து, அதே நூற்றாண்டிலே சுவிசேஷத்தை அந்தக் காலத்திலுள்ள உலகம் முழுவதிற்கும் ஆதி அப்போஸ்தலர்களே பிரசங்கித்துவிட்டதாக வாசிக்கிறோம். (கொலோ. 1: 6, 23) தற்காலத்து சபையும் அதே சுத்த உபதேசத்தையும், விசுவாசத்தையும் அடைகிற விஷயத்தில் உலகமெங்கும் தற்காலம் அறிவிக்கும்படி தேவன் கொடுத்திருக்கிற சத்திய தூது, இந்தத் தலைமுறையிலே அறிவிக்கப்பட்டுப் போகுமென்று ஐயமறச் சொல்லலாம். முதலாம் முத்திரையால் குறிக்கப்பட்ட காலம் கிறிஸ்துவின் காலத்திலிருந்து கி. பி. 100 வரை.

2-ம் முத்திரை.

இரண்டாம் முத்திரையை உடைத்தபோது தீர்க்கதரிசி "சிவப்பான வேறொரு குதிரை புறப்பட்டது" என்கிறார். (வெளி. 6: 3, 4 பார்க்க.) இந்தக் காலத்து சபை அப்போஸ்தலர் காலத்துக்கு அடுத்ததாயிருக்கிறது. குதிரையின் வெண்மை நிறம் மாறியிருக்கிறது கவனிக்க வேண்டியதோர் காரியம். இந்தக்காலத்து சபைகள்... அநேக தப்பறையான கொள்கைகளால் கறைப்பட ஆரம்பித்து விட்டதால் குதிரையின் நிறமும் சிவப்பாயிருக்கிறது. அப்போஸ்தலனாகிய பவுல், முன் தீர்க்க தரிசனமாக உரைத்துவந்த பிற்கூறிய வசனங்கள் இக்காலத்தில் நிறைவேற ஆரம்பித்துவிட்டன. "நான் போன பிற்பாடு மந்தையை தப்பவிடாத கொடிதான ஓநாய்கள் உங்களுக்குள்ளே வரும். உங்களிலும் சிலர் எழும்பி, சீஷர்களைத் தங்களிடத்தில் இழுத்துக்கொள்ளும்படி மாறுபாடானவைகளைப் போதிப்பார்களென்று அறிந்திருக்கிறேன்." (அப். 20: 29, 30) இன்னும் அவர் தெசலோனிக்கேயருக்கு எழுதிய நிருபத்தில் "விசுவாச துரோகம் முந்தி நேரிடுமென்றும்" "அக்கிரமத்தின் இரகசியம் இப்பொழுதே கிரியை செய்கிறது." (2 தெச. 2: 3-6) என்றும் தன் காலத்தைப்பற்றியே சொல்லியிருக்கிறார். கடைசி அப்போஸ்தலன் மரித்து சொற்பக்காலத்துக்குள், இவைகளில் சொல்லியபடி இவ்வுலக ஆடம்பரங்களான அநேக தப்பறையான உபதேசங்கள் நுழைய ஆரம்பித்துவிட்டன. கிறிஸ்தவ ஊழியர்கள் இராசாங்கத்தாரின் அதிகாரத்தையும், வல்லமையையும், தேட ஆரம்பித்து விட்டார்கள். இதின் பலனாக சபைகளில் தொந்தரவும், குழப்பங்களும், சண்டையும் இரத்தம் சிந்தலும் நடந்தேறலாயின. கண்காணியென்றும், மூப்பனென்றும்,சொல்லப்படும் வார்த்தைகள் கிறிஸ்த சபையில் ஒரே உத்தியோகத்தைக் குறிக்கிறதாக அப்போஸ்தலர் காலத்திலே வழங்கி வந்திருக்க (தீத்து. 1: 5-7) இவைகளை வெவ்வேறாக அர்த்தப்படுத்தவும், சபையின் கண்காணிகள் அல்லது மூப்பர்கள் சபைகளால் தெரிந்தெடுக்கப்பட்டு, அவைகளின்

ஊழியக்காரர்களாக ஆதி சபைகளில் இருந்திருக்க, இக்காலத்திலோ அவர்கள் சபைகளை அரசாண்டு அதிகாரம் செய்கிறவர்களும், ஆண்டவர் சுவாமிகளாக அழைக்கப்படவும் ஆரம்பித்து விட்டார்கள். கடைசியாக ரோமாபுரி கண்காணியார், லோகமெங்குமிருக்கும் எல்லாக் கண்காணிகளிலும் மேலென்றுஞ் சாதித்து, அதிகாரம் செலுத்தி, அரசாட்சி செய்ய ஆரம்பித்துவிட்டது. இவ்விதமாக இந்தக் காலத்தில் சுத்த கிறிஸ்தவ உபதேசத்திற்கு பதிலாக கத்தோலிக்க கொள்கை ஊன்ற ஆரம்பித்துவிட்டது. இதினுடைய காலம் கி. பி. 100-ல் இருந்து ரோமாபுரி ராயனாகிய கொனஸ்தந்தீன் கிறிஸ்தவனாகிய வருஷம் உள்பட கி. பி. 323-வரை.

3-ம் முத்திரை.

மூன்றாம் முத்திரையை உடைத்தபோது "இதோ ஒரு கறுப்புக் குதிரையைக் கண்டேன்" என்று தீர்க்கதரிசி சொல்லுகிறார். (வெளி. 6: 5, 6 பார்க்க.) இந்தக் குதிரையின் கறுப்பு நிறத்தைப் பார்க்கும்போது, இந்தக் காலத்துச் சபை சத்திய சுவிசேஷத்தை விட்டு முழுவதும் மாறி, கறைப்பட்டு, வெண்மைக்கு முற்றும் எதிரிடையான இந்தக் கறுப்பு நிறமாக மாறிவிட்டதாக தெளிவாக தெரிகிறதில்லையா? இந்த முத்திரையில் அடங்கிய காரியம் ரோமான் கத்தோலிக்க கொள்கையைப்பற்றி தேவன் பிடித்த ஓர் படம்போல் தெரிகிறது.

கொன்ஸ்தந்தீன் ராயன் கிறிஸ்தவனான பிற்பாடு, அவனுடைய அதிகாரத்தை வைத்துக்கொண்டு, ரோமாபுரி கண்காணியார் உலக முழுவதுமுள்ள கிறிஸ்தவ சபைகளின் பெரிய கண்காணியாரென்று ஏற்பாடு செய்து அவருக்குத்தான், சகல கண்காணிகளையும் ஏற்படுத்த அதிகாரம் உண்டென்றும், அவருக்கு கீழ் எத்தனையோ வகுப்பான கண்காணிகளின் வரிசை இருக்க வேண்டும் என்றும், அவர்கள் கொண்ட கொள்கையை, எவ்வளவோ குழப்பங்களுக்கும், இரத்தம் சிந்தலுக்குமிடையில், வெகு பலத்துடன் நிலைநிறுத்தினார்கள். இன்னும் சபையில் விசுவாசத்துக்குப் பதிலாக, வீண் பக்தி உண்டாக ஆரம்பித்துவிட்டது. அஞ்ஞானிகளுடைய அநேக வழக்க பழக்கங்களை கிறிஸ்தவப் பெயரிட்டு உள்ளே கொண்டுவர ஆரம்பித்துவிட்டார்கள். கிறிஸ்துவினிமித்தமும் அவருடைய சத்தியத்தினிமித்தமும் அநேக ஜனங்களைத் தங்களுடைய ஆடம்பரமான சடங்காசாரங்களினால் சுவிசேஷத்திற்குப் புறம்பாக்கினார்கள்.

எருசலேமுக்கும் இன்னும் பலஸ்தீனா நாட்டிலுள்ள அநேக ஸ்தலங்களுக்கும், புண்ணிய யாத்திரை செய்ய ஆரம்பித்தார்கள். அந்தப் பட்டணங்களின் தெருவிலுள்ள தூசிகளை அள்ளிக்கொண்டுபோய் ஐரோப்பாவின் அநேக இடங்களில் வெகு கிரயத்திற்கு விற்க ஆரம்பித்தார்கள். அப்போஸ்தலருடைய எலும்புகளென்று கணக்கில்லா எலும்புகள் பற்பல இடங்களில் தோன்றப்பட்டு, அவைகளுக்கு வணக்கங்கள் ஆரம்பித்து விட்டன. இயேசு பாலகன் பிறந்தபோது கிடத்தப்பட்ட மாட்டுத் தொழுவத்தின் முன்னணையென்று ஏராளமான தொழுவத்துண்டுகள் விற்கப்பட்டன. அவர் அறையப்பட்ட மெய்யான சிலுவையின் துண்டுகளென்று அநேக சிலுவைகள் செய்யுத்தக்க மரத்துண்டுகள் விற்கப்பட்டன. அவரைக் கடாவின ஆணிகளென்று பெருந் தொகைக்கு நூற்றுக்கணக்கான ஆணிகள் விற்கப்பட்டன. அப்போஸ்தலனாகிய பரிசுத்த பேதுருவின் மண்டையோடு என்று இரண்டு ஓடுகள் கண்டு பிடிக்கப்பட்டு, விசேஷித்த இடங்களில் வைத்து பூசிக்கப்பட்டன. கன்னி மரியாள் உட்சட்டை யென்றும், தலை மயிரென்றும், யோவான் ஸ்நானகன் தலையென்றும், தீர்க்கதரிசிகள், அப்போஸ்தலர்களுடைய போர்வைகளென்றும், பரிசுத்தவான்களின் புயங்கள், கைகள், கிறிஸ்துவின் தலையிலே சுற்றியிருந்த சீலை, அவருடைய இரத்தம், அவருடைய முள்முடியின் துணுக்கை, அவர் போட்டிருந்த அங்கியென்று பற்பல இடங்களில் பற்பல சாமான்களை வைத்து நமஸ்கரிக்கவும், அவைகளை நோக்கி வேண்டிக் கொள்ளவும் ஆரம்பித்தார்கள். நல்ல மனிதர்கள், அவர்கள் மரணத்திற்குப் பிற்பாடு பரிசுத்தவான்களாக நமஸ்கரிக்கப்பட்டு ஜெபங்களில் வேண்டிக்கொள்ளப்பட்டார்கள். சீக்கிரத்துக்குள்ளாக பரிசுத்தவான்களின் தொகை கணக்குக் கடங்காததாய் ஆகிவிட்டதால், ஒரே நாளில் அவர்கள் எல்லாரையும் நோக்கி வேண்டிக்கொள்வது கூடாத காரியமானதால், ஜெப மாலைகள் ஏற்படுத்தப்பட்டு, அதிலுள்ள ஒவ்வொரு மணியும், ஒவ்வொரு பரிசுத்தவான்களை நோக்கிச் செய்யும் விண்ணப்பத்துக்கு சரியென்று நியமித்தார்கள். இன்னும் ஆதித்த வாரமென்ற சூரிய வணக்கத்தின் நாளாகிய ஞாயிற்றுக்கிழமையை யெகோவாவின் பரிசுத்த ஓய்வுநாளாகிய ஏழாம் நாளுக்குப் பதிலாக ஏற்படுத்தினார்கள். அலங்காரமான கோவில்கள் கட்டி, அதில் மெய்யான தேவனாகிய சர்வ வல்லமையுள்ளவரைத் தொழுதுகொள்ளாமல், ஓர் சிறிய அப்பத்துண்டை (Wafer God) தேவனாக்கி, நமஸ்கரிக்க ஆரம்பித்துவிட்டார்கள். மேலும் பூசை

யென்றும் (mass) ஆராதனையாகிய ஓர் சுத்த விக்கிராராதனை ஏற்படலாயிற்று. அதில் இந்த அப்பம், இயேசு இரட்சகரின் சரீரத்தின் அடையாளமாயிராமல், குருவானவர் "ஹாக், எஸ்ற் மியும், கார்ப்பஸ்" என்னும் நாலு லத்தீன் வார்த்தைகளைச் சொன்னதும், மெய்யாகவே அது இயேசு கிறிஸ்துவின் திருச்சரீரமும், இரத்தமும், ஆத்துமாவும், தேவ சுபாவமுமாக மாறிவிடுகிறதென்று போதிக்கவும், அதை நமஸ்கரிக்கவும் ஆரம்பித்தார்கள். அவர் ஒரேதரம் மனுஷஜாதிக்காகப் பலியிடப்பட்டிருக்க, (எபி. 9: 28.) பூசையென்னும் ஆராதனையில் குரு கிறிஸ்துவை இரத்தமில்லாத பலியாக பலியிடுகிறார் என்றும் போதிக்க ஆரம்பித்துவிட்டார்கள். அஞ்ஞானிகள் விக்கிரகத்தைக் கும்பிடுவதுபோல், இவர்களும் விக்கிரகத்தை உண்டாக்கவும், நமஸ்கரிக்கவும் தலைப்பட்டார்கள். ரோமாபுரி கண்காணியாரின் உத்தியோகத்தை வெகுதூரம் உயர்த்தி, கடைசியாகப் பூமியிலே தேவனுடைய ஸ்தானத்தையும் அவர் எடுக்கலாச்சுது. குருக்களுக்கு பாவங்களை மன்னிக்கும் அதிகாரம் கொடுக்கப்பட்டதாக போதிக்கத் தலைப்பட்டார்கள். பிற்பாடு ஒவ்வொருவகைப் பாவத்திற்கும் குறிப்பிட்ட பணத்தை வாங்கிக்கொண்டு பாவ மன்னிப்புச் சீட்டுக் கொடுக்க ஆரம்பித்தார்கள். குருக்கள் விவாகஞ் செய்யக்கூடாதென்று கட்டளை பிறப்பிக்கப்பட்டது. இதினால் அநேக அவமானங்களும், நிந்தைகளும் ஆச்சுது; மரித்துப்போனவர்களின் ஆத்துமாக்கள் இருக்கிறதற்கு ஒரு இடம் கண்டுபிடிக்கப்பட்டு அதற்கு உத்தரிக்கும் ஸ்தலமென்று நாமஞ் சூட்டப்பட்டது. மேலும் இந்த இடத்துக்கு மனிதருடைய ஆத்துமா போனபின் குருவுக்கு குறிப்பிட்ட ஓர் தொகையைக் கொடுத்து, அவர் பூசை சொல்லுவதால் அந்த இடத்தைவிட்டு வெளியேற்றப்படலாமென்று ஓர் வழியும் ஏற்பாடானது.

அப்போஸ்தலன் கண்ட தரிசனத்திலே "குதிரையின்மேலிருந்தவன் ஒரு தராசைத் தன் கையிலே பிடித்திருந்தான். அப்பொழுது ஒரு பணத்துக்கு ஒரு படி கோதுமையென்றும், ஒரு பணத்துக்கு மூன்று படி வாற் கோதுமையென்றும்" உண்டான சத்தத்தைக் கேட்டேன் என்கிறார். (வெளி. 6: 5, 6) தராசைப் பார்க்கிறதினால் ஏதோ ஓர் வியாபாரம் சபையில் நடக்கிறதாகத் தெரிகிறது. ஆம், சபையின் நற்காரியங்களை கிரயத்துக்கு விற்க ஆரம்பித்து விட்டார்கள். எல்லாவற்றிற்கும் கிரயம் குறிக்கப்பட்டாயிற்று. பிள்ளை பிறந்தபோதும் குருவுக்குப் பணங்கொடுக்கவேண்டும்; பிள்ளை பிறந்து நெற்றியிலே குரு, தண்ணீர் தெளிக்கும்போதும், ஞான உபதேசத்துக்கு பிள்ளை போகும்போதும், திடப்படுதல் அடையும்போதும், பாவ மன்னிப்பு பெற குருவிடம் போகும்போதும், பிள்ளை பெரியதாகி விவாகம் செய்யும்போதும், விவாகம் செய்யப்பட்டவர்களுக்கு குழந்தைகள் பிறக்கும்போதும், பிறந்த பிள்ளைகளை ஆலயத்துக்குக் கொண்டுபோய் ஸ்தோத்திரம் செலுத்தும்போதும் குருவுக்குப் பணம் கொடுக்கவேண்டும். மரண அவஸ்தையிலிருக்கும்போதும், மரித்து அடக்கம் பண்ணப்படும்போதும், பின்னும் மரித்த பிற்பாடு உத்தரிக்கும் ஸ்தலத்தைவிட்டு வெளியேற்றுதலுக்கும் குருவுக்குப் பணம் கொடுக்கவேண்டும். இப்படியாக சபையிலே உயிரோடிருந்தாலும் மரித்திருந்தாலும் குருவுக்குப் பணம் இவ்விருவிதத்திலும் கிடைத்தது.

இதுபோக, சபையின் உத்தியோகமும் பணத்துக்கு விற்கப்பட்டன. பணமிருக்குமானால் ஓர் குரு கண்காணி உத்தியோகத்தை வாங்கிப்போடலாம்; ஓர் கண்காணி அத்தியக்ஷ குருவின் உத்தியோகத்தையும் வாங்கிப்போடலாம். ஓர் அத்தியக்ஷ குரு சிரேஷ்ட குருவின் உத்தியோகத்தையும் வாங்கிப்போடலாம், இன்னும் போதுமான பணமிருக்குமானால் பாப்புவின் உத்தியோகத்தையும் வாங்கிப்போடலாம். இப்படியே சகலத்தையும் பணத்துக்கு விற்பனை செய்ய ஆரம்பித்துவிட்டார்கள்.

இவ்விதமாக இயேசு இரட்சகரின் சுத்தமான "சுவிசேஷ வெளிச்சம், இருள் நிறைந்த அஞ்ஞானமாகிவிட்டது. ஆகையாலந்தக் குதிரை கறுப்பு நிறமாகக் காணப்பட்டதற்காக நாம் ஒருவரும் ஆச்சரியப்பட வேண்டாம் இவைகள் யாவும் ஒன்றின்பின் ஒன்றாக மெள்ளமெள்ள நடந்தேற ஆரம்பித்தன. சிலர் மாத்திரம் இதின் மாறுபாடான தன்மையைக் கண்டுபிடித்துக் கொண்டார்கள். ஆனால் திரளான ஜனங்களோ இது தான் சத்தியமான மெய்கிறிஸ்தவ சபையென்று நம்பி ஏமாற்றப்பட்டுப் போனார்கள். இந்த முத்திரையின் காலம் கி. பி. 323-லிருந்து பாப்பு மார்க்கம் உன்னதமாய் ஸ்தாபிக்கப்பட்ட காலமாகிய 538-வரை.

(இன்னும் வரும்.)

ஏ. டி. தாமஸ்.

சுகாதார விஷயங்கள்

வைத்திய சாஸ்திரத்தின் சம்பந்தமாக கடந்த நூற்றாண்டில் உண்டான அபிவிர்த்தி

(ADVANCES IN MEDICAL SCIENCE DURING THE PAST HUNDRED YEARS)

மயக்கத்தைக் கொடுக்கும் ஓர்வித மருந்தை (anaesthetic) கண்டுபிடிக்கு முன்னதாக ஒரு ராணுவ ரண வைத்தியர் பட்டாள வைத்திய சாலையை தன் சிநேகிதனுக்குக் காட்டிக்கொண்டிருந்தார். கடுங்காயப்பட்டு வேதனை பொறுக்கமாட்டாமல் அலறிக்கொண்டிருந்த சிலர் ஓர் அறையிலிருந்தார்கள். அந்த சிநேகிதன் ரண வைத்தியனைப் பார்த்து இவர்களை சொஸ்தப்படுத்த என்ன சிகிச்சை செய்தீரென்று கேட்டதற்கு அவர் "இவர்களுக்கு ஒன்றும் செய்யமுடியாது. நாம் எதையாவது அறுத்து வைத்தியம் செய்தால் அவர்கள் வலி பொறுக்கமாட்டாமல் உடனே செத்துப்போவார்கள். ஆகையினால் அவர்களுக்கு ஒரு வைத்தியமும் செய்ய முடியாது" என்று சொன்னார்.

ஆனால் தற்காலத்தில் கால் துண்டிக்கப்பட்ட அல்லது முகத்தில் கொடிய காயப்பட்ட அல்லது குடல்கள் சரிந்த ஒரு மனிதனுக்கு மயக்கம் தருவிக்கும் மருந்தைக் கொடுத்து அவனுடைய வேதனையை மட்டுப்படுத்துகிறார்கள். பின்பு தேர்ந்த ரண வைத்தியர்கள் அவர்களுக்குக் காயம் கட்டி அநேகருடைய ஜீவனை ரட்சிக்கிறார்கள்.

இந்த மருந்து கண்டுபிடிக்கப்படுவதற்கு முன் ரண வைத்தியம் செய்வது அதிக நிஷ்டூரமாயிருக்கும். காயத்தை அறுக்கு முன்னதாக நோயாளியை ஒரு மேசையில் கிடத்தி கயற்றினால் இருகக் கட்டுவார்கள். அல்லது சில பலமான மனிதர்கள் அவர்களை அசையாமல் கெட்டியாய்ப் பிடித்துக்கொள்ளுவார்கள். ரண வைத்தியனால் மாத்திரம் தங்கள் உயிர் காப்பாற்றப்படுமென்று அறிந்தபோதிலும் அந்த வேதனையைப் பொறுக்கக்கூடாமல் அநேகர் வைத்தியம் செய்துகொள்ளப் பிரியப்பட மாட்டார்கள்.

வைத்திய சாஸ்திரத்தில் அநேக தேர்ச்சி உண்டாயிருக்கிறது. நோயாளிகளை அறுக்கும்போது அவர்களுக்கு யாதொரு வேதனையுமில்லை. ஏனென்றால் அவர்கள் அந்த மருந்தை முகர்ந்த மாத்திரத்தில் சுமரணை தப்பி அயர்ந்த நித்திரை மயக்கத்திற்குள்ளாகிறார்கள். வயிற்றில் ஒரு பெரிய கட்டி புறப்பட்டவனுக்கு அந்த மருந்தை முகரும்படி செய்து அவன் வயிற்றை அறுத்து அப்பெரிய கட்டியை வெளியில் எடுத்துவிட்டு மறுபடியும் அறுத்த இடத்தைத் தைத்து அதன்மேல் ஒரு கட்டுகட்டி விடுகிறார்கள். அத்தருணத்தில் அவனுக்கு கொஞ்சங்கூட வலியில்லாமலிருக்கும்.

இந்த மருந்து கண்டுபிடிக்கப்பட்ட கடந்த எழுபது வருஷத்தில் எத்தனையோ மனிதர்களுடைய பிராணனும் வேதனையும் காக்கப்பட்டது. தற்காலத்தில் வைத்திய சாஸ்திரத்தில் உண்டான தேர்ச்சிக்கு இது ஒரு சிறிய காரியமாய்த் தோன்றுகிறது. மனிதன் தன்னை உண்டாக்கினவருக்கு விரோதமாய் பாவம் செய்ததின் பலனாக மனித ஜாதி முழுமைக்கும் வியாதி வருகிறது. என்றாலும் வியாதிக்கு முக்கிய காரணம் இன்னதென்று சமீபத்தில்தான் கண்டுபிடிக்கப்பட்டது. அசுத்த ஆவிகளும் இரவில் சுவாசிக்குதலும், சீதோஷ்ண ஸ்திதியுமே நோய்களுக்குக் காரணமாயிருக்கிறதென்பது முன்னோர்களின் எண்ணம். ஆனால் இந்த எண்ணங்களெல்லாம் தப்பிதமென்று தற்கால வைத்தியர்களும் சாஸ்திரிகளும் ரூபிக்கிறார்கள்.

வைத்தியர்கள் உபயோகிக்கும் அணுதரிசனக் கண்ணாடி நூறு வருஷங்களுக்குமுன் கண்டுபிடிக்கப்பட்டது. மனித கண்களால் காணக்கூடாத வஸ்துக்களையெல்லாம் அந்தக் கண்ணாடியின் மூலமாய்ப் பார்க்கலாம். மனித கண்ணுக்குத் தென்படாத எண்ணிக்கைக்கடங்காத சிறு தாவரங்களும் ஜெந்துகளும் ஆகார

யத்திலும் பூமியிலும் தண்ணீரிலும் இருப்பதை சாஸ்திரிகள் அணுதரிசனக் கண்ணாடியினால் கண்டு பிடித்தார்கள். அந்த சிறு தாவரங்கள் ஆலம் வித்திலும் சிறியதாயிருக்கும் ஏரி குளங்களில் முளைக்கும் செடியைப்பார்க்கிலும் மிக சிறிதாயிருக்கிறது.

அச்சிறு தாவரங்களுக்கும் ஜெந்துக்களுக்கும் அணு அல்லது கிருமி என்று பெயர். மனிதரைப்பீடிக்கும் நோய்களில் மிச்சமானவைகளுக்கு இந்த அணுக்களே காரணமென்று ரூபிக்கிறார்கள். அந்த அணுக்கள் வெகு நுட்பமானவைகளாயிருக்கிறது. அம்மாதிரியான பத்து லக்ஷம் அணுக்களை ஒன்றாய்ச் சேர்த்தால் அவை ஒரு கடுகு விதை பருமனுள்ளதாயிருக்கும். அவைகள் அவ்வளவு சிறியவைகளாயிருந்தபோதிலும் கொடிய வியாதியைப் பிறப்பிக்கின்றன. அக்கிருமிகள் மனித உடலினுட்சென்ற பிற்பாடு அவைகள் ஏராளமாய் ஜெனிப்பிக்கப்பட்டு விஷத்தைப் பிறப்பிக்கின்றன. அந்த விஷம் நோய்க்கும், காய்ச்சலுக்கும், வாந்திக்கும், சீதபேதிக்கும், பாரிசவாய்வுக்கும் இன்னும் இவைபோன்ற நோய்களுக்கும் காரணமாயிருக்கிறது. ஒருவிதமான கிருமி க்ஷய ரோகத்தையும், இன்னொருவித கிருமி விஷ பேதியையும், மற்றொரு விதமான கிருமி கண்ட மாலையையும், வேறொரு விதமான கிருமி கண் வலியையும் மற்றொன்று கட்டிகளையும் பிறப்பிக்கின்றன.

இந்தக் கிருமிகளைக் கண்டுபிடித்த பிற்பாடு நோய் பரவாவண்ணம் வைத்தியர்கள் அதற்கு வேண்டிய ஏற்பாடுகளைத் தேடுகிறார்கள். உதாரணமாக, விஷ பேதியையும், விஷக்காய்ச்சலையும், சீதபேதியையும், இரத்த பேதியையும் பிறப்பிக்கும் விஷக்கிருமிகள் நமது சாப்பாட்டின் வழியாயும் பானத்தின் வழியாயும் நமது தேகத்தினுட் செல்லுகின்றனவென்று நம்மெல்லோருக்கும் தெரியும். இந்த வியாதிகளுக்கு நாம் விலகி யிருக்க வேண்டுமானால் முதலாவது நமது சாப்பாடும் பானமும் விஷக்கிருமிகளில்லாமல் சுத்தமா[illegible]க்கவேண்டியது அவசியம். மேலே சொல்லப்ப[illegible] வியாதிகள் நமக்கு வாராதபடிக்கு நாம் நமது சாப்பா[illegible]டை சமைத்து பானத்தைக் கொதிக்க வைப்போமானால் அந்த கிருமிகளெல்லாம் செத்துப்போகும்.

நாற்பது வருஷத்துக்கு முன் மலேரியா என்னும் விஷக்காய்ச்சல் கெட்ட வாயுவைச் சுவாசிப்பதினால் உண்டாகிறதென்று புருஷரும் ஸ்திரீகளும் நம்பினார்கள். 1880-ம் வருஷத்தில் ஒரு வைத்தியன் மலேரியா என்னும் விஷ ஜுரம் ஒரு விஷக்கிருமி மனித ரத்தத்தில் சம்பந்தப்படுகிறதினால் உண்டாகிறதென்று கண்டு பிடித்தார். அந்த விஷக்கிருமிகள் கொசுக்கள் மனிதரைக் கடிக்கும்போது மனித சரீரத்தில் பிரவேசிக்கிறது. மலேரியா விஷஜுரத்தால் பீடிக்கப்பட்ட ஒரு மனிதனுடைய இரத்தத்திலிருக்கும் விஷக்கிருமிகளை ஒரு கொசு அவனிடமிருந்து எடுத்து பிறகு ஒரு வியாதியில்லாத மனிதனைக் கடிக்கும்போது அக்கிருமிகளை அவனுடைய தேகத்தில் செல்லும்படி செய்கிறது. இப்படியாக அவனும் அந்த வியாதியைப் பெற்றுக்கொள்ளுகிறான். இந்த விஷக்காய்ச்சலைப் பிறப்பிக்கிறது எது என்று அறிந்தபிற்பாடு ஒருவன் இரவில் தன் சரீரத்தை கொசு வலையினால் மூடிக்கொள்ளுகிறதினாலும், சூரியன் அஸ்தமித்தபிறகு கொசுக்கள் தன்னைக் கடிக்காதபடி காத்துக்கொள்ளுகிறதினாலும் அவன் அந்த வியாதியினின்று தன்னைத் தப்புவித்துக்கொள்ளுகிறான். சாயுங்காலத்திலும், இராத்திரியிலுமே மலேரியா விஷத்தைக் கொசுக்கள் பரவச் செய்கிறது.

பதினெட்டாம் நூற்றாண்டின் கடைசி மட்டும் வருஷாவருஷம் வைசூரி என்னும் நோய் லக்ஷக்கணக்கான மனிதரை வாரிக்கொண்டு போனது. பிற்பாடு ஒரு ஆங்கில வைத்தியர் கோமாரி நிணநீரினால் அம்மை குத்தும் விதத்தைக் கண்டுபிடித்தார். இப்பொழுது நாம் வைசூரிக்குப் பயப்படுகிறதில்லை. வைசூரி வராமல் தடுப்பதற்கு நாம் அம்மை குத்திக்கொள்ளுகிறோம். அப்படி நன்றாய் அம்மை குத்திக்கொண்ட ஒருவன் அம்மை வார்த்திருக்கும் ஒரு மனுஷனோடு படுத்திருந்தாலும் அந்த அம்மை அவனுக்குத் தொத்தாது.

வியாதிகளைத் தடுக்கும்படியாக வைத்திய சாஸ்திரத்தின் சம்பந்தமாக கடந்த நூற்றாண்டில் அநேக ஆச்சரியமான அபிவிர்த்தி உண்டாயிருக்கிறது.

வியாதிகளின் காரணத்தைக் கண்டுபிடித்த பிற்பாடு தற்காலத்தில் அவ்வியாதிகளுக்கு சரியான மருந்துகளையும் கண்டுபிடித்திருக்கிறார்கள். கொய்னா (Quinine) என்னும் மருந்தானது மலேரியா என்னும் விஷக்காய்ச்சலைப் பிறப்பிக்கும் கிருமிகளைக் கொல்லுகிறதென்று வைத்தியர் கண்டு பிடித்தார்கள். ஆகையினாலே மலேரியாக் காய்ச்சலுள்ள ஒரு வியாதியஸ்தனுக்கு கொய்னா மருந்து கொடுத்து சொஸ்தமாக்குகிறார்கள். கந்தகம், சொறி சிரங்கை உண்டாக்கும் கிருமிகளைக் கொல்லுகிறதென்று தெரியும். ஆகவே, நமக்கு சொறி சிரங்கு வந்தால் கந்தகத்தை எண்ணெயில் குழைத்து தேகத்தில் இரண்டு மூன்று முறை தடவினால் அந்த சொறி சிரங்கு ஆறிப்போகும்.

விஷக்கிருமிகளினால் வியாதி உற்பத்தியாகிறது என்று கண்டுபிடிக்கு முன்னதாக ஒரு வைத்தியன் ஒருவனுடைய தேகத்தில் ஆயுதம் பிரயோகித்து சிகிச்சை செய்வானானால் அவன் அறுத்த இடம் சரியாய் சொஸ்தமடையுமுன்னதாக அங்கங்கே சீழ் பிடிக்கிறதுண்டு. ஆனால் இப்பொழுது ஒரு ரண வைத்தியர் ஐயோடைன் (Tincture of Iodine) என்னும் ஓர்வித திராவக தைலத்தை உபயோகிப்பதினால் ஒரு சொட்டு சீழ்கூட பிடிக்காதபடி அவர் ஒரு மனிதனின் தேகத்தின் எந்த இடத்தையும் அறுத்து தைத்து விடுகிறார். இப்படிச் செய்வதினால் தற்காலத்து வைத்தியர் அற்புத அதிசயங்களைச் செய்கிறார்களென்று சொல்லலாம். தேர்ந்த வைத்தியர் மனிதனின் மண்டை ஓட்டைக் கீறி வியாதிப்பட்ட மூளையின் ஒரு பாகத்தை எடுத்துவிட்டு மறுபடியும் சொஸ்தப்படுத்தி விடுகிறார்கள். ஒருவனுடைய குடல்களில் கொஞ்சம் கெட்டுப் போயிருந்தால் வைத்தியர் அந்தக் குடலின் கெட்டுப் போன பாகத்தை அறுத்து இரு முனையையும் தைத்து வியாதியஸ்தனுக்கு நற்சுகத்தையும் பெலனையும் அளிக்கிறார்கள். உடைந்துபோன எலும்பை எடுத்துவிட்டு அதற்குப்பதிலாக வேறு நல்ல எலும்பை ஒட்டவைக்கிறார்கள். கொஞ்ச நாளுக்குள் ஒட்டப்பட்ட எலும்பு நன்றாய் உரம் கொள்ளுகிறது. ஒருவனுடைய சதை பீறுண்டு அல்லது நெருப்புப்பற்றி வெந்துபோனால் மற்றவனுடைய சதையில் கொஞ்சம் அறுத்து காயப்பட்டவனுடைய சதையோடு ஒட்ட வைக்கிறார்கள். ஒருவனுடைய மூக்கு தற்செயலாய் வெட்டுண்டு போனால் அவனுடைய விரலில் ஒன்றை வெட்டி அவன் மூக்கில் வைத்து அவனுக்கு ஒரு புது மூக்கை உண்டாக்குகிறார்கள். அது பார்வைக்கு ஒரு இயற்கையான மூக்கைப்போலவே தோன்றும். நூறு வருஷத்திற்கு முன்னிருந்த வைத்தியர்கள் இப்பேர்ப்பட்ட அதிசயங்கள் செய்யப்படுமென்று தங்கள் கனவிலும் காணவில்லை.

சரீரத்திற்குள் என்ன நடக்கிறதென்பது முற்காலத்து வைத்தியர்களுக்கு கருகலாயிருந்தது. தேகத்துக்குள்ளிருப்பவைகளைப் பரிசோதிக்கவாவது, பார்க்கவாவது ஏலாதவர்களாயிருந்தார்கள். இரத்தாசயம், சுவாசாசயம் என்பவற்றில் உண்டாகும் சத்தத்தைக் கேட்டு அவைகளின் ஸ்திதியை உணர்த்தும்படியான கருவி ஒன்றை (Stethescope) இந்த நூற்றாண்டில் நவீனமாய்க் கண்டு பிடித்தார்கள். கண்ணாடியும் மின்சார விளக்கும் சேர்ந்த ஒரு கருவியினால் வைத்தியர் குரல் வளை, இரைப்பை, ஜலப்பை, கீழ் குடல் முதலியவற்றை ஊடுருவிப் பார்க்கக்கூடியவர்களா யிருக்கிறார்கள். 1895-ம் வருஷம் ஓர்வித மின்சார விளக்கினால் இதைவிட ஆச்சரியமான நூதனம் ஒன்று கண்டு பிடிக்கப்பட்டது. ரோயென்றகன் என்பவர் (Roentgen) ரசாயண கர்ம சாலையில் (Chemical laboratory) ஓர் வித மின்சார விளக்கு வைத்துக்கொண்டு, மேசையின் மேல் ஒரு கொத்து சாவியும், மேசையின் அறையில் சில படம் பிடித்த கண்ணாடியும் வைத்துக்கொண்டு தன் வேலையைப் பார்த்துக்கொண்டிருந்தார். அவர் தாம் படம்பிடித்த கண்ணாடிகளைக் கழுவி படத்தை எடுத்த பிற்பாடு ஒவ்வொரு படத்திலும் ஒரு கொத்து சாவியின் உருவம் இருப்பதைக் கண்டார். இது அவருக்கு விந்தையையும் வியப்பையும் உண்டு பண்ணிற்று. அவர் அதை ஆய்ந்து ஆராய்ச்சி செய்தார். அவர் மேசைக் கவயத்தில் சில படம் பிடிக்கும் கண்ணாடிகளையும், மேசையின்மேல் வேறு சில பொருட்களையும் வைத்து, அந்த விசேஷித்த மின்சார விளக்கைக் கொளுத்தி வைத்தால் மாத்திரம் மேசையின்மேல் வைக்கப்பட்ட பொருட்களின் உருவம் அந்தப்படங்களில் காணப்படுகிறதென்று கண்டறிந்தார். அநேக சிறந்த சாஸ்திரிகள் இந்த நூதனமான விளக்கைப்பற்றி ஆழ்ந்த ஆராய்ச்சி செய்து கடைசியாக, அந்த விசேஷித்த விளக்கின் சுடர் காகிதம், மரம், மாமிசம் ஆகிய இவற்றில் மாத்திரம் ஊடுருவிப் பிரகாசிக்கக்கூடுமென்று கண்டுபிடித்தார். இந்த விளக்குக்கு எக்ஸ்ரே (Xray) என்று பெயர். இந்த விளக்கின் மூலமாய் தேகத்துக்குள்ளிருக்கும் எலும்புகளைப் பார்த்தால் அவை சதையினாலும் சருமத்தினாலும் மூடப்படாமலிருப்பதுபோல அதிக துலாம்பரமாய்த் தோன்றும். ஒருவனுடைய எலும்புகளுக்கு சேதம் நேரிட்டால் அவைகள் உடைந்துபோயிருக்கிறதாவென்று இந்த விளக்கின் மூலமாய்ப் பார்க்கலாம். ஒருவன் துபாக்கிக் குண்டால் சுடப்பட்டால் அல்லது ஒரு பிள்ளை ஒரு நாணயத்தை விழுங்கிவிட்டால் வைத்தியர் இந்த விநோதமான கருவியின் மூலமாய் துபாக்கிக் குண்டு அல்லது நாணயம் தேகத்தின் எந்த இடத்திலிருக்கிறதென்று இலேசாக அறிந்துகொள்ளக்கூடும். இந்த விளக்கைக்கொண்டு இரத்தாசயம் இரத்தத்தை எப்படி வெளிச்செலுத்துகிறதென்றும் சரீரத்திற்குள்ளிருக்கும் மற்ற யந்திரங்கள் தங்கள் தங்கள் கிரியையைக் கிரமமாய்ச் செய்கிறதாவென்றும் பார்க்கலாம்.

இப்பொழுது ஒரு சிறு மாணாக்கனுக்குத் தெரிகிற அநேக காரியங்கள், பல நூற்றாண்டுகளுக்கு முன்னதாக ஆசியாவிலும் ஐரோப்பாவிலுமிருந்த கைதேர்ந்த வைத்தியர்களுக்குத் தெரியாதிருந்ததென்பது திண்ணம். அவர்கள் முற்காலத்தில் சாமர்த்திய மில்லாதவிதமாய்ச் செய்தார்கள். அவர்கள் தங்கள் முன்னோர்செய்த

பிரகாரம் ஒரு அபிவிர்த்தியுமில்லாமல் சிகிச்சை செய்தார்கள். அறிவு பெருக்கத்தின்காலம் அப்போது நிறைவேருததினலே அவர்கள் வைத்திய சாஸ்திரத்தின் சம்பந்தமாக அபிவிர்த்தி யடையவில்லை. இந்த நூற்றுண்டில், அதாவது, உலக சரித்திரத்தின் முடிவு காலத்தில் வேதத்தில் சொல்லப்பட்ட தீர்க்கதரிசனத்தின்படியே இவையெல்லாம் நிறைவேறுகிறது. அந்த தீர்க்கதரிசனத்தில், முடிவுகாலம் வரும்போது அறிவும் பெருகிப் போகுமென்று உரைக்கப்பட்டிருக்கிறது. நாம் உலக சரித்திரத்தின் முடிவுகாலத்தில் வசிக்கிறேமென்பதற்கு வைத்திய சாஸ்திரத்தின் சம்பந்தமாக கடந்த சில வருஷங்களில் உண்டான அபிவிர்த்தியே அறிகுறியாயிருக்கிறது.

சிசு விவாகம்

(CHILD MARRIAGE)

அமெரிக்காவிலே நாநூறு பேருக்கதிகமான சீனர்கள் தங்கள் தேசத்தில் வழங்கி வரும் ஓர் துர் வழக்கமாகிய சிசு விவாகத்தைத் தங்களால் இயன்றமட்டும் தடுப்பதற்கு என்னென்ன ஏற்பாடுகள் செய்பக்கூடுமோ அதெல்லாம் செய்யும்படியாக அங்கு வேலை செய்யும் மிஷனரிமார்களைத் தூண்டவேண்டுமென்று அமெரிக்காவிலுள்ள கிறிஸ்தவர்களுக்கு மனுப்பண்ணியிருக்கிறார்கள். அப்படித் தாங்கள் விண்ணப்பம் செய்வதற்குப்பின் வரும் நியாயங்களைக் காட்டி யிருக்கிறார்கள்:—

1. சிறு பிராயத்தில் விவாகம் செய்யும் வழக்கமானது, சந்ததிகளின் க்ஷீண தசைக்கும் அழிவுக்கும் காரணமாயிருக்கிறது.

2. சரியான வயதுக்கு வந்தபின் கலியாணம் செய்கிறவர்களுக்குப் பிறக்கும் பிள்ளைகளுக்குப் பல அனுகூலங்கள் உண்டென்பது திட்டமாய்ப் பரிட்சிக்கப்பட்டும் தீர்மானயாக நிரூபிக்கப்பட்டு மிருக்கிறது. அப்படிப்பட்ட பிள்ளைகளுக்கு நல்ல ஞாபக சக்தி, அதிக மனே சக்தி, தேகபலம் நீண்ட ஆயுசு, சரீர வளர்த்தி, எதையும் தாங்கிக்கொள்ளும் சக்தி, சரீரத்தில் வியாதிகளைத் தடுக்கும் சக்தி, ஜீவிய காலத்தில் நெடுங்காலத்திற்கு சந்தான விர்த்தி முதலிய விசேஷ அனுகூலங்களுண்டு.

3. இந்த அனுகூலங்களினல் பொதுவான சாமார்த்தியமும், பொருள் சம்பாதிக்கும் திறமையும் உண்டாக ஏது உண்டு. ஆகவே, அதிக அக்கிரமங்களுக்கும் குற்றங்களுக்கும், நிர்ப்பாக்கியத்திற்கும் தரித்திரத்திற்கும் காரணங்களாயிருப்பவைகளை இவைகள் அகற்றி விடுகின்றன.

4. ஒருவன் தன் கலியாணத்தை இரண்டொரு வருஷம் பிந்தி வைத்துக்கொள்ளுகிறதினல் இன்னும் அதிகமாகப் படிக்கவும் அல்லது அதிக அனுபோகமடையவும், அல்லது அதிக திரவியம் சம்பாதிக்கவும் இப்படியாகக் குடும்பத்தின் உத்தரவாதங்களுக்குத் தன்னை ஆயத்தப்படுத்திக்கொள்ளவும் அவனுக்கு நல்ல சமயம் கிடைக்கிறது. அப்படி முன்னதாகவே தன்னை ஆயத்தப்படுத்திக்கொண்டால் தன் பிள்ளைகளைப் படிக்க வைக்கவும் குடும்பத்திற்கு அவசியமானவற்றை யெல்லாம் சவதரிக்கவும் கூடியவனவான். அது மாத்திரமல்ல, தன் சொந்த சரீரம் அதிகமதிகமாய் பலப்படவும் மனே சக்தி அதிகப்படவும் அவனுக்குச் சமயக் கிடைக்கிறதினல் அவன் பிள்ளைகளும் பலமுள்ளவர்களும் புத்திசாலிகளுமாயிருப்பார்கள்.

5. நம்முடைய ஜனங்கள் சிறு பிராயத்திலேயே விவாகம் செய்கிற வழக்கத்தை நிறுத்தி, கிறிஸ்தவ தேசங்களில் செய்வதுபோல, சரியான வயதுக்கு வந்த பிறகு அல்லது ஒரு குடும்பத்தை ஆதரிக்கக்கூடிய நிலைமைக்கு வந்த பிற்பாடு செய்வார்களானல், தரித்திரமும் பிச்சை யெடுத்து ஜீவனம் செய்வதும் நமது தேசத்தில் அதிகமாய் குறைந்து விடும்.

மேலே சொல்லப்பட்டதெல்லாம் சீனவிலுள்ள ஜனங்களைப்பற்றி சொல்லப்பட்டது. இதை வாசிக்கும் என் நண்பரே இந்தியாவின் நிலைமையைச் சற்று கவனித்துப்பாரும். சீனவைப்போலவே இந்தியாவிலும் சிறு பிள்ளைகளுக்கு விவாகம் செய்விப்பதினல் பல கெடுதிகள் உண்டாயிருக்கிறது. இந்தப் பொல்லாத வழக்கத்தினலுண்டாகும் கொடிய தீங்குகளை நன்ருய்க் கண்டுணர்ந்து இந்தியாவிலும் சீர்திருத்தங்கள் செய்யத் தொடங்கியிருக்கிறார்கள். இந்தியாவின் படிப்பாளிகளும் சீர்திருத்திகளும் இந்தியாவை இவ்விஷயத்தில் நல்ல நிலைமைக்குக் கொண்டுவரும்படியாக எவ்வளவோ பிரயத்தனங்கள் செய்தபோதிலும் சாதாரண ஜனங்களின் மனதில் இத்துர்வழக்கத்தினலுண்டாகும் கெடுதிகள் இன்னதென்றும் அதை எப்படி சீர்படுத்துகிறதென்றும் புலப்படுகிறதே யில்லை. இவ்விஷயத்தில் பூரண சித்திபெறுமட்டும் இந்திய சீர்திருத்திகளும் ஊக்கமான பிரயத்தனங்கள் செய்வார்களென்று நம்புகிறேம்.

Mookergee,

திருச்சபையும் ஜாதியும்

ஜாதி என்பது கடவுளால் ஆதிமுதற்கொண்டு ஸ்தாபிக்கப்பட்ட ஒரு ஏற்பாடல்ல. தொழிலும் நிறமுமே துவக்கத்தில் இவ்வித்தியாசத்தைக் காட்டினதென்பதற்குக் கோத்திரம், வர்ணம் என்னும் சொற்களின் வழக்கே சாட்சியாகும். மனு வானவர் தர்ம சாஸ்திரம் எழுதின காலமுதற்கொண்டும் அதற்குமுன் உபநிடதங்களால் மனித ஆன்மா புல், பூண்டு, மரம், புழு மிருகம் பறவையாகப் பிறக்கக்கூடும் என்னும் புனர்ஜனன போதகம் முளைத்தது முதற்கொண்டும் ஜாதியைப்பற்றிய எண்ணத்திற்குள்ள மதிப்பு வேருயிற்று. அதிக புண்ணியம் செய்தோன் உயர் குலத்திலும் பாவம் செய்தோன் இழி குலத்திலும் பிறக்கிறான் என்று மனிதர் நம்பத்தலைப்பட்டு உயர் குலத்தோர் இழி குலத்தோரை நாயினும் கடையராய் எண்ணி ஒடுக்கத்தலைப்பட்டார்கள். இதுவே தற்கால இந்து மார்க்கத்தில் காணப்படும் ஜாதி வேறுபாட்டின் தன்மை.

இவ்வித ஏற்பாட்டுக்குக் கிறிஸ்தவ திருச்சபையில் இட முண்டா? இல்லவே இல்லையென்று திட்டமாய் வேதம் சொல்லுகிறது. "தேவன் எல்லாரையும் ஒரே இரத்தத்தினல் பூமி யெங்கும் குடி யிருக்கப் பண்ணினர்" என்றும் எல்லாரும் ஏகமாய்க் கெட்டுப்போய் தேவனுடைய மகிமையற்றவர்களாயிருந்து இலவசமாய்க் கிறிஸ்து இயேசுவிலுள்ள கிருபையினலே மீட்கப்பட்டிருக்கிறேம் என்றும் "கிருபையினலே விசுவாசத்தைக்கொண்டு இரட்சிக்கப்பட்டீர்கள். இது உங்களால் உண்டானதல்ல, இது தேவனுடைய ஈவு; யாதொருவன் பெருமை பாராட்டாதபடி இது கிரியைகளால் உண்டானதும் அல்ல" என்றும் அது திட்டமாய்ச் சொல்லுகிறது.

அப்படியிருக்க மெய்க்கிறிஸ்தவ திருச்சபையில் இருந்துகொண்டு தனக்குப் புண்ணியம் யாதொன்றுமில்லையென்றும் இயேசுக்கிறிஸ்துவின் புண்ணியமொன்றே தன் நம்பிக்கையென்றும் விசுவாசிக்கிற மனிதனிடத்தில் எந்தப்பெருமைக்கு இடமிருக்க நியாய முண்டு? தனக்கு லாபமாயிருந்தவைகளைக் கிறிஸ்துவின்பொருட்டுக் குப்பையும் சேதமுமாக எண்ணுபவனல்லோ கிறிஸ்தவன். அப்படி எண்ணுத ஒருவனிருந்தால் பவுல் கொரிந்தியரைக் கேட்டதுபோல நீ பெற்றிராதது உனக்கு என்ன இருக்கிறது? நீயும் பெற்ருயேயாகில் பெற்றிராதவன்போல் ஏன் பெருமை பாராட்டுகிருய் என்று கேட்பது நியாயமாயிருக்கும்.

நம்மெல்லாருக்கும் ஒரே ஞானஸ்நானம் ஒரே பிதா, ஒரே விசுவாசம், ஒரே இரட்சிப்பு, ஒரே நம்பிக்கை ஒரே ஆவி யிருக்கும்போது திருச்சபையில் யூதன், கிரேக்கன், மிராசுதார், பண்ணையாள், வெள்ளைத் தோலர், கருந்தோலர், வேளாளர், குறவர், மறவர், கள்ளர், வன்னியர், பள்ளர், பறையர் என்கிற வித்தியாசங்களுக்கும் அவ்வித்தியாசங்களைக்காட்டும் ஜாதிப்பட்டங்களுக்கும் இடங்கொடுத்து வருவது வேதப்பொருத்தமாகுமா? ஆண்டவருக்கு உகந்தகாரியமென்னலாமா?

ஜாதிபேதம் திருச்சபையில் இருப்பதற்கு இன்னொரு காரணம் மனிதருக்கு இயல்பாயுள்ள பெருமைக்குணமே. என்னிடத்தில் கற்றுக்கொள்ளுங்கள், ஏனெனில் நான் மெத்தனவும் மனத்தாழ்மையுமாயிருக்கிறேன் என்று சொன்னவரைத் தன் மீட்பராக உடையவன் அகந்தைக் கிடங்கொடான். திருச்சபை சகல ஜாதிகளுக்கும் தாய்வீடு. அதிலுள்ளோர் அனைவரும் அன்பால் ஆளப்படவேண்டிய சகோதரர்; ஒரே சரீரத்தின் அவயவங்கள்.

அப்போஸ்தலர் காலத்துச் சபையிலும் ஆதிச்சபையிலும் எவ்வளவு அன்பு அன்ருடகப் பிழைப்பில் வெளிப்பட்டது. அதைக்கண்ட புறமதஸ்தர் இதோ! இவர்கள் எவ்வளவாய்ச் சிநேகிக்கிருர்கள் என்ருர்கள். தற்காலத்துச்சபைகளிலும் சபை ஊழியரிடத்தும் அன்பல்ல, வன்பே ஆளுகிறதென்றெருவாறு கூறலாம். பேதுரு முதல்முதல் ரோமனுன கொர்நேலியு வீட்டுக்கு ஆண்டவர் கட்டளைப்படி உட்பிரவேசிக்க நேர்ந்தபோது அது அவனுக்கு எவ்வளவு சங்கடமாயிருந்தது. ஆயினும் தேவன் சுத்தமாக்கினவைகளை நீ தீட்டாக எண்ணுதே என்ற கட்டளைக்குக் கீழ்படிந்து தன் ஜாதி யபிமானத்தை விட்டான். அதுபோல நாமும் இழிகுலத்தாரான சகோதரருக்கும் பட்சம் காட்ட வேண்டியவர்கள். இழிகுலத்தரை இகழ்ந்துகொண்டு எட்டி நிற்பதல்ல, அவர்களைக் கிட்டிப்போய் கிறிஸ்துவின் ஆச்சரியமான அன்பு வல்லமையால் அவர்களுக்கு ஊழியம் செய்து அவர்களை உள்ளும் புறம்பும் உயர்த்தல் உயர்ந்தோர் கடமை. அவ்வாறே தாழ்ந்த குலத்தவரும் உயர் குலத்தவரைக்கண்டு ஒட்டாரம் பண்ணி முன் இருந்த மேரை மரியாதைவிட்டு இடறலுண்டாக்காதபடி வீடு வாசல், உணவு, உடை, சரீரம் ஆத்துமா இவற்றைச் சுத்தமாய்வைக்கப் பிரயாசைப்படவேண்டும் இப்படியிருந்தால் சபை கூடிவரும் தருணங்

களில் சபையாருக்குள் அன்பும் அனுதாபமும் மரியாதையும் ஒழுக்கமும் காணப்படும்.

திருச்சபையானது தன்னில் ஜாதி வேற்றுமை என்கிற வாசனைக்கும் இடம் இல்லை என்பதை தெய்வ வசனப தேசத்தாலும் தன் நடபடிகளாலும் காட்டவேண்டும். இது சபையின்மேல் விழுந்த கடமையென்று நான் வெகு பெலமாய் உணருகிறேன். இங்கிலீஷ் சபை, இதர சபைகள் இவ்விஷயத்தில் நல்ல மாதிரியை நமக்கு முன்வைத்து திருச்சபையில் சபையார் பேர்களைச் சொல்ல நேரும் சமயங்களில் அப்பேர்களோடு பிள்ளை, நாடார், சேர்வை, நாயுடு, செட்டி முதலிய பட்டங்களைக் கூட்டாமல் கனம் அல்லது Mr. இன்னார் என்றுமட்டும் சொல்லுகிறார்கள். இப்பழக்கத்தை அனுஷ்டானத்துக்குக் கொண்டு வருவது இதன் மேன்மைக்கும் அழைப்புக்கும் மிகவும் அடுக்கும் .....

ஆகிலும் நாம் மனுஷர் பார்வையில் நீதிமான்களாவதற்கல்ல, நமது நினைவுகளையும் செய்கைகளையும் நியாயந்தீர்க்கிற தேவனுக்கு முன்பாக அன்பு நிறைந்த அவருடைய பிள்ளைகளாய் வெளிப்படுவதற்கு ஜாதியென்கிற விஷ சம்பந்தமான சகல வழக்கங்களையும் ஜாதி பட்டங்களையும்கூட அடியோடே தொலைப்போமாக.

அருணோதயம்.

கிறிஸ்தவர்களின் ராஜ பக்தி

(THE LOYALTY OF CHRISTIANS)

சில நாட்களுக்கு முன் வட இந்தியாவில் நடந்த கலகத்தில் அந்நாட்டுக் கிறிஸ்தவர்கள் ஆங்கிலேய ராஜாங்கத்தார் பக்கம் பக்தியாயிருந்தார்களென்று 'மதராஸ் டைம்ஸ்' (The Madras Times) என்னும் வர்த்தமானப் பத்திரிகையில் வெளியிடப்பட்டது.

ஆபத்திலிருந்த ஐரோப்பியருக்கும் ராஜாங்கத்தாருக்கும் அந்நாட்டுக் கிறிஸ்தவர்கள் தங்களாலியன்ற உதவி செய்தார்களென்று சொல்லப்பட்டிருக்கிறது. இது நூதனமான காரியமல்ல. எல்லா தேசங்களிலுமிருக்கிற கிறிஸ்தவர்கள் யாவரும் ராஜபக்தி யுள்ளவர்களாயிருக்கிறார்கள். மேலான அதிகாரமுடையவர்களுக்குக் கீழ்படிந்து அவர்களுக்காக வேண்டுதல் செய்வது கிறிஸ்தவ போதகத்தில் ஒன்று. "எந்த மனுஷனும் மேலான அதிகாரமுள்ளவர்களுக்குக் கீழ்படியக்கடவன், ஏனென்றால், தேவனாலேயன்றி ஒரு அதிகாரமுமில்லை; உண்டாயிருக்கிற அதிகாரங்கள் தேவனாலே நியமிக்கப்பட்டிருக்கிறது. ஆதலால் அதிகாரத்திற்கு எதிர்த்து நிற்கிறவன் தேவனுடைய நியமத்திற்கு எதிர்த்து நிற்கிறான்; அப்படி எதிர்த்து நிற்கிறவர்கள் தங்களுக்குத் தாங்களே ஆக்கினையை வருவித்துக்கொள்ளுகிறார்கள். மேலும் அதிகாரிகள் நற்கிரியைகளுக்கல்ல துர்க்கிரியைகளுக்கே பயங்கரமாயிருக்கிறார்கள், ஆகையால் அதிகாரத்திற்குப் பயப்படாதிருக்கவேண்டுமானால், நன்மைசெய், அதினால் உனக்குப் புகழ்ச்சி உண்டாகும். உனக்கு நன்மை உண்டாகும்பொருட்டு, அவன் தேவ ஊழியக்காரனாயிருக்கிறான். நீ தீமை செய்தால் பயந்திரு; பட்டயத்தை அவன் விருதாவாய்ப் பிடித்திருக்கவில்லை; தீமை செய்கிறவன்மேல் கோபாக்கினை வரப்பண்ணும்படி, அவன் நீதியைசெலுத்துகிற தேவ ஊழியக்காரனாயிருக்கிறானே. ஆகையால் நீங்கள் கோபாக்கினியி னிமித்தம் மாத்திரமல்ல, மனசாட்சியி னிமித்தமும் கீழ்ப்படியவேண்டும். இதற்காகவே நீங்கள் வரியையும் கொடுக்கிறீர்கள். அவர்கள் இந்த வேலையைப் பார்த்துவருகிற தேவ ஊழியக்காரராயிருக்கிறார்களே." ரோமர் 13: 1-6. கிறிஸ்தவர்கள் ராஜாங்கத்தாருக்கும் சக்கரவர்த்திக்கும் கீழ்ப்படிந்து நடக்கவேண்டும். அப்படி செய்வது நல்லது. நம்மைக் காக்கும்படியாகவே தேவன் ராஜாங்கத்தை ஏற்படுத்தி யிருக்கிறார்.

சில நாட்களுக்குமுன் ஒருவர் 'மதராஸ் டைம்ஸ்' (Madras Times) என்னும் பத்திரிகையின் பத்திராதிபருக்கு ஒருவன் ராஜபக்தியாயிருப்பதினால் அவனுக்கு ஒரு லாபமும் வருகிறதில்லை என்று எழுதினார். கிறிஸ்தவர்கள் எவ்வளவு ராஜபக்தியாயிருந்தாலும் ராஜாங்கத்தார் அவர்களுக்கு பெரிய உத்தியோகம் கொடுக்கமாட்டார்களென்றும் கிறிஸ்தவர்கள் செய்த உதவியை அவர்கள் மறந்துவிடுகிறார்களென்றும் சொன்னார். கடைசியாக அவர் ராஜபக்தியாயிருப்பதினால் ஒரு பிரயோஜனமு மில்லையென்று முடித்தார். இவர் தனக்கு நன்மை வந்தால் மாத்திரம்தான் ராஜபக்தியாயிருக்கவேண்டுமென்று நினைத்தார். இது ஒரு தப்பான எண்ணம். நாம் எந்நாளும் ராஜாங்கத்தின் மூலமாய் அநேக நன்மைகளைப் பெற்றுக்கொள்ளுகிறோம். இருப்புப் பாதைகளையும், தபால் மார்க்கத்தையும், தந்தி, ரஸ்தா, ஆஸ்பத்திரி, பள்ளிக்கூடம் முதலானவைகளையும் கவனித்துப்பாருங்கள். ஆங்கிலேய ராஜாங்கத்தின் மூலமாய் இவைகளெல்லாம் நமக்குக் கிடைத்திருக்கிறது. சிலகாலத்துக்குமுன் நான் சீன தேசத்திற்குப் போயிருந்தேன். அங்கே நான் கரடுமுரடான ரஸ்தாக்களையும் சிற்சில இருப்புப் பாதைகளையும் தேசம் பொதுவாய் நாகரீக மடையாமலிருக்கிறதையும் கண்டேன். இந்தியாவில் நமக்கு இவ்வித அனுகூலங்களெல்லாம் இருக்கிறதற்காக சந்தோஷப்படுகிறேன். ஆகையினாலே நாம் ராஜாங்கத்தையும் அதிகாரிகளையும் குற்றப்படுத்தாமல் நமது இரட்சகராகிய இயேசு இவ்வுலகத்தில் சமாதானமாய் ஜீவித்ததுபோல நாமும் ஜீவிப்போமாக.

ஜி. ஜி. வெளரி.

சமாசாரக் குறிப்புகள்

சென்னையிலிருக்கும் ரீமிங்டன் டைப் ரைட்டர் கம்பெனியாருக்கு அமெரிக்காவிலுள்ள நியூயார்க் (New Yoak) பட்டணத்திலிருந்து பின்வரும் சேதி வந்தது: "நியூயார்க் பட்டணத்தில் ரீமிங்டன் டைப் ரைட்டர் ஒன்றில் ஒரு நிமிஷத்திற்கு 137 வார்த்தைகள் வீதம் 30 நிமிஷம் வரையில் எழுதப்பட்டது. சராசரி ஒரு நிமிஷத்திற்கு 148 வார்த்தைகள் அடிக்கப்பட்டது. இதைவிட வேகமாய் ஒருவரும் வேறெந்த டைப் ரைட்டரிலும் அடிக்கவே யில்லை." சில வருஷங்களுக்கு முன்பு ஜனங்கள் எப்படி எழுதினார்களென்றும் இப்போது எப்படி எழுதுகிறார்களென்றும் சற்று கவனித்துப் பாருங்கள். டைப் ரைட்டர் யந்திரம் சில வருஷங்களுக்கு முன்புதான் புதிதாய்க் கண்டுபிடிக்கப்பட்டது. என்றபோதிலும் ஒரு மனிதன் பேசுவதைப் பார்க்கிலும் அதிக வேகமாய் அதில் எழுத முடியும்.

மின்சார பேசும் கருவியில் (Telephony) தற்காலத்தில் அதிக அபிவிர்த்தி யடைந்திருக்கிறது. அநேக வருஷகாலமாக இதைப்பற்றிப் பரிசோதித்துப் பார்த்து கடைசியாக அதில் சித்தியடைந்தார்கள். தொலை தூரத்திற்குக் கம்பிகள் போட்டு கஷ்டமில்லாமல் 2500 மைலுக்கப்பாலிருப்பவர்களோடு சம்பாஷித்து வந்தார்கள். பிற்பாடு கம்பியில்லாமலே பேசவேண்டுமென்று நினைத்து அதின்படியே கம்பியில்லாமலே பேச ஆரம்பித்தார்கள். நியூயார்க் பட்டணத்தில் யந்திர விதியில் தேர்ந்தவரான மில்ஸ் என்பவர் (Mr. Mills) வெர்ஜினியாமாகாணத்துஆர்லிங்டன் (Arlington) பட்டணத்திலிருந்து 4900 மைல் தூரத்திற்கப்பாலிருக்கும் முத்துத்தீவுகளின் (Pearl Island) துறைமுகப்பட்டணமாகிய ஹாவே (Hawaii) என்னும் பட்டணத்திற்கு கம்பியில்லாத பேசும் யந்திரத்தின் மூலமாய் அனுப்பின சேதி வெகு தெளிவாக வந்து எட்டினது மிகவும் வியக்கத்தக்கது. ஆகாய விமானங்கள் பூமிக்குமேலே எவ்வளவு தூரத்திற் பறந்தாலும் சரி எவ்வளவு வேகமாய்ப் பறந்தாலும் சரி அங்கிருந்து பூமியிலிருப்பவர்களோடு சம்பாஷித்துக்கொள்ளும்படியாக அவ்விமானங்களில் கம்பியில்லாதபேசும் யந்திரம் அமைக்கப்பட்டிருக்கிறது.

ஏறக்குறைய பத்து வருஷங்களுக்கு முன்புதான் முதல்முதலாய் ஆகாய விமானங்கள் செய்து பறக்கவிட்டார்கள். அக்காலத்தில் அது அதிக உபயோகப்படுமென்று ஒருவரும் நினைக்கவில்லை. என்றபோதிலும் சென்ற பெரிய யுத்தத்தில் இவைகள் அதிக பிரயோஜனமாயிருந்தது. ஜனங்கள் தேசத்தின் ஓரிடத்திலிருந்து மற்றோரிடத்திற்கு மனிதரையும் தபால்களையும் ஏற்றிக்கொண்டு போகிறது மாத்திரமல்லாமல் அநேக கம்பெனியார்கள் தபால்களையும் வியாபாரச் சரக்குகளையும் ஏற்றிக்கொண்டு சமுத்திரத்தையும் கடந்து செல்லுகிறார்கள். ஒரு அமெரிக்கன் முதல் முதலில் சேதமில்லாமல் ஆகாய விமானத்தின் மூலமாய் அத்லாந்திக் மகா சமுத்திரத்தைக் கடந்து சென்றான். ஒரு ஆங்கிலேயன் முதல் முதலில் ஓரிடத்திலும் தங்காமல் அமெரிக்காவிலிருந்து இங்கிலாந்திற்குப் பறந்து சென்றான். அவர்கள் நியூபவுண்லாந்து நாட்டிலிருந்து ஐயர்லாந்திற்கு 16 மணி நேரத்தில் 1900 மைல் தூரம் பறந்து சென்றார்கள்.

சப்தமில்லா ஆகாசக் கப்பல்.—ஜர்மானியர் சப்தமில்லாமல் பறக்கவும் ஒரே தடவையில் 64 பேரை சுமந்து போகவும் தக்கதான பெரிய ஆகாசக்கப்பல்களை ரகசியமாய்ச் செய்து கண்டுபிடித்திருக்கிறார்கள். நமது பிரிட்டிஷாரும் இவ்வித விமானத்தை வேறு முறையாய் கண்டு பிடிக்கிறார்கள்.

ஓர் வியாபாரச் சட்டம்.—வியாபாரிகள் தங்களிஷ்டப் பிரகாரம் பொருள்களின் கிரயத்தை உயர்த்தி அதிக லாபத்தை அடையாதபடி பொருள்களின் உயர்ந்த விலையை வியாபார போர்ட் மெம்பர்கள் குறைக்கும்படியான ஓர் சட்டம் ஹவுஸ் ஆப் காமன்ஸ் சபையில் ஏற்படுத்தியாயிற்று.

நமது வேல்ஸ் இளவரசன்.—இவர் இப்போது கன்னடா தேசத்தில் விஜயஞ்செய்து வருகிறார். இந்தியாவிற்கும் சீக்கிரம் வருவார் என்று நம்புகிறோம்.

ஜெர்மன் கைதிகள்.—இங்கிலாந்திலுள்ள மொத்த ஜெர்மன் சிறையாளிகள் 91,818. இவர்களில் கப்பலோட்டிகள் 2,908 ஸிவிலியன்ஸ் 4,306. விவசாயத் தொழிலில் அநேகர் வேலை செய்து வருகிறார்கள்.

நீண்ட பட்டுநாடா (ரிப்பன்).—கடந்த யுத்தத்தில் போர் புரிந்தோர் போர்க்களத்தில் உதவி செய்தோர் யாவருக்கும் அளிக்கப்படப்போகிற யுத்த மெடல்களை தொங்கவிடுவதற்கு பட்டு ரிப்பன் என்னும் நாடா நெய்திருக்கிறார்கள். அதின் நீளம் 270 மைல்.

நிகழ்கால சத்தியம்

வேத சன்மார்க்க சுகாதார விஷயங்களில் தற்கால அறிவுக்கொத்தபடி மனிதர் அபிவிருத்தியடைவதற் கென்று பிரசுரபர்கும் ஓர் பத்திரிகை.

மதராஸ் ஜனுவரிமீ 1920.

இப்பத்திரிகை, பெங்களூரிலிருக்கும், எஸ். டி. ஏ. பப்ளிஷிங்கவுஸ்காக, பட்டணத்தில் வெப்பேரி என்னுமிடத்தில் உள்ள அல்பீனியன் அச்சாபீசில் அச்சடிக்கப்பட்டு வருகிறது.

பத்திராதிபர் பாஸ்றர், ஜி. ஜி. லோளரி.
உதவி ,, ,, ஈ. டி. தாமஸ்.

தனிப்பிரதி ஒன்றுக் ... அணு 1
வருஷ சந்தா, தபாற்கூலி உள்பட ,, 5
சிங்கப்பூர் பினங்கு முதலிய ஸ்ட்ரேயிட் சேற்றில் மெண்டுகளுக்கு தனிப்பிரதி ஒன்றுக்கு ... 8 சென்டு (8 cents)
வருஷசந்தா தபாற்கூலி உள்பட ... 30 சென்டு (36 cents)

இப்பத்திரிகைகளை விற்க அநுமதி பெற்ற ஏஜண்டுகள் மூலமாயாவது, நேரே இந்த சொசைட்டிக்கு எழுதியாவது, முன்பணம் செலுத்திப் பெற்றுக்கொள்ளலாம். முன் பணம் செலுத்துவோர், பணம் பெற்றுக்கொள்பவரிடமிருந்து ரசீது வாங்கிக்கொள்ளவேண்டியது.

நோட்டீஸ்.

இப்பத்திரிகையில் முதல் பக்கத்தின் மேல் பாகத்தில் நீலமான கோட்டைக் கண்டால், இந்த மாதப் பத்திரிகையோடு உங்கள் வருஷ சந்தா முடிவாகிறதென்று அறிந்துகொள்ளலாம். அடுத்த நம்பர் உங்களிடத்தில் வரும்படியாகத் தாமதமின்றி உடனே வருஷ சந்தாவைப் புதுப்பித்துக்கொள்ளவேண்டும்.

சில மாதங்களுக்கு முன்னதாக நான் தென் திருவாங்கூர் இராட்சியத்தில் பிரயாணஞ் செய்துகொண்டிருக்கும்போது ஓர் சிநேகிதனுடைய கையில் 'கிறிஸ்துவின் பிரசன்னக் கும்மி' யென்று அச்சிட்ட ஓர் சிறு புஸ்தகத்தைக் கண்டேன். இந்தக் கும்மியைப் பாடினவர் யாரென்றும், அது எங்கு அச்சிடப்பட்டதென்றும் எனக்குத் தெரியவில்லை. ஆனால் அது எங்கள் மிஷனால் அச்சிடப்பட்டதல்ல; இது உறுதி. அவர் பாடியிருக்கும் கும்மியில் சில வரிகள் கிறிஸ்துவின் வருகைக்கு அடையாளமான சில சம்பவங்களின் நிறைவேறுதலை வெகு திட்டமாய்ச் சொல்லுவதால் அவைகள் என் விசுவாசத்துக்கு மிகவும் பெலமாயிருக்கிறது; அப்படியே உங்களுக்கு மிருக்கும் என்று எண்ணி சில வரிகளை மாத்திரம் அதிலிருந்தெடுத்து பின் வரைகிறேன்.

ஈ. டி. தா.

அடையாள சம்பவம்.

15. *"மாடியர் தீர்க்கதரிசி கனமிகையாம்*
மாட்சியுடன் நித்தம் நித்தமுமே
தேடி விழிப்புடன் வேதத்திலாய்ரியில்
சிந்தை தெளியும் திடமுடனே.

16. *அந்தத்தினம் வருதற் கடையாளமாய்*
ஆயிரத் தெழுநூற் றெண்பதாண்டில்
முந்த மேய் மாசம் பத்தொன்பதாம் தேதியில்
முன்னுற்ற விண்ணடையாளம் கேளும்.

17. *பட்டப்பகலிலே வெய்யோ னிருண்டது;*
பகர்மதி யொளி வீசாதென்று
திட்டமாய்க் கர்த்தர் முன் சொன்னபடி சோமன்
திடிரென்றொளி மறைத்ததுவே.

18. *அன்றுபத்திரவத்தின் நாள் முடிந்தது,*
ஆண்டவர் வருகையின் மகிமை,
என்றுமுள்ள அவர் ராச்சியம் சமீபம்
இருக்குதடுத்தென்று காட்டினவே.

19. *முள்ளவன் சொற்படி ஆயிரத்தெண்ணூற்று*
முப்பத்துமூன்று மாண்டதிலே
விண்ணின்று நட்சத்திரங்களுதிர்ந்தன,
மெய்யாய்த் திக்காய்கள் போல மண்ணில்.

20. *கோட்டமாக முளங்குங் கடல் பொங்கி,*
கொதியலைகள் எழும்பி நம்மை
மீட்டவன் ராச்சியத்திற்கு மாவன்மையாய்
விரைந்துறுவதைக் காட்டினவே."

நிகழ்கால சத்தியம்.

Vol. IX. மதராஸ்:—ஏப்பிரல்மீ, 1920. No. 2.

அளவற்ற அன்பு

முன் ஒரு காலத்தில் மிக்க ஏழையும் வேலைசெய்ய சத்துவமுமற்ற விருத்தாபியனுமான போர்ச்சேவகன் ஒருவன் இருந்தான். அவன் வழியருகே உட்கார்ந்து வீணை வாசித்து வழி நடக்கிற ஜனங்களண்டை பிச்சை கேட்பது வழக்கம். ஒருநாள் அவன் அதிக நேரம் வீணை வாசித்து கை சோர்ந்து களைப்படைந்து வீணையைக் கீழே வைத்துவிட்டு இன்னது செய்வதென்று தோன்றாதவனாய் உட்கார்ந்து அழுதுகொண்டிருந்தான். போகிற வருகிற ஜனங்கள் அவனைக் கொஞ்சமும் கவனிக்கவில்லை. கடைசியாக ஒரு மனிதன் வந்து அவனை நோக்கி,

"என் சிநேகிதனே, நீ களைத்துப்போயிருக்கிறாய், உன்னால் வீணை வாசிக்க முடியாது, நான் அதை எடுத்து உனக்காக வாசிக்கிறேன்" என்று சொல்லி வாசிக்கத் தொடங்கினான். அந்த ஊரிலுள்ள ஜனங்கள் ஒருபோதும் கேட்டிராத அவ்வளவு இனிய இராகங்களை வாசிக்க ஆரம்பித்தான். ஜனங்கள் யாவரும் அவனைச் சூழ நின்று வேடிக்கை பார்த்தார்கள். இப்படியாக திரளான ஜனங்கள் வந்து கூடினார்கள். அந்த அன்னியன் வீணை வாசிக்கும்பொழுது பிச்சைக்காரன் தன் தொப்பியைக் கையில் பிடித்துக்கொண்டிருந்தான். ஜனங்களெல்லாரும் அதில் காசு போட்டார்கள். சீக்கிரத்தில் அந்த தொப்பி நிறைய காசு விழுந்தது. அந்தப் பணத்தை உன் பையில் போட்டுவிட்டு மறுபடியும் உன் தொப்பியை நீட்டு என்று அன்னியன் சொன்னான். பின்பு அவன் மறுபடியும் வீணையை அதிக இனிமையாய் வாசிக்க ஆரம்பித்தான். அதைக் கேட்டுக்கொண்டிருந்த யாவரும் கண்ணீர்விட ஆரம்பித்தார்கள். இரண்டாம் தரம் அவன் தொப்பி நிறைய காசு விழுந்தபோது அன்னியன் வீணையைக் கீழே வைத்துவிட்டு அந்த விருத்தாப்பியனான போர்வீரனிடம் விடை பெற்றுக்கொண்டு தன் வழியே போய்விட்டான். அவன் புறப்பட்டுப் போனபின்பு ஜனங்கள் ஒருவரை ஒருவர் நோக்கி: "இது அதிசயமாயிருக்கிறதே, அந்த மனுஷன் யார்? அவன் எங்கிருந்து வந்தான்" என்று விசாரிக்கத் தொடங்கினார்கள். அவன் உலகப்பிரசித்திபெற்ற வாத்தியக்காரனாகிய புட்சர் என்று ஒருவன் சொன்னான்.

அது வாஸ்தவம் தான். அவன் அந்த விருத்தாப்பியனை போர்வீரனுக்குப் பதிலாக அவன் பக்கத்தில் வந்து அவனுடைய தரித்திரத்தைத் தானும் சகித்து நின்றான். விருத்தாப்பியன் வாசிக்கக் கூடாதிருந்த அந்த வீணையை அவன் எடுத்து வாசித்தான். மன்னர்கள் முன்னும் இன்னும் மற்ற பிரபுக்கள் முன்னும் நின்று வீணை வாசிக்கும் அந்தப் பெரிய மனுஷன் வழியருகே ஒரு பிச்சைக்காரன் பக்கத்தில் நின்று வீணை வாசித்தது எவ்வளவு இழிவான காரியம். யாருமற்ற அந்த விருத்தாப்பிய போர் வீரனுக்கு உதவி செய்ய வேண்டுமென்றே அவன் அப்படிச் செய்தான்.

இயேசுக்கிறிஸ்துவும் நமக்கு இப்போர்ப்பட்ட காரியத்தைச் செய்திருக்கிறார். அந்த பிச்சைக்காரன் எவ்வண்ணமாக வழியருகே உட்கார்ந்து அழுதுகொண்டிருந்தானோ அதுபோல நாமும் பாவத்தில் அமிழ்ந்திப்போய் உதவியற்றவர்களாயிருந்தோம். அந்த அன்னியன் வந்து எப்படி அந்தப் பிச்சைக்காரனுடைய வீணையை எடுத்து தான் வாசித்து இவ்விதமாக அவனுக்கு உதவி செய்தானோ அதுபோல கிறிஸ்து இவ்வுலகத்திற்கு வந்து நமது பாவங்களைத் தாமே சுமந்து தீர்த்தார். நமக்குப் பதிலாக துன்பத்தையும் பாடுகளையும் அநுபவிக்க அவர் வெட்கப்படவில்லை. அவருடைய அளவற்ற அன்பும் இரக்கமும் அவ்வளவு பெரிதாயிருந்ததால் அவர் நம்மை நித்திய மரணத்திலிருந்து

தப்புவிக்கும்படியாக தம்முடைய ஜீவனையும் கொடுத்தார். "அவர் அசட்டை பண்ணப்பட்டவரும், மனுஷரால் புறக்கணிக்கப்பட்டவரும், துக்கம் நிறைந்தவரும், பாடு அநுபவித்தவருமாயிருந்தார்; அவரை விட்டு, நம்முடைய முகங்களை மறைத்துக்கொண்டோம்; அவர் அசட்டை பண்ணப்பட்டிருந்தார்; அவரை எண்ணாமற் போனோம். மெய்யாகவே அவர் நம்முடைய பாடுகளை ஏற்றுக்கொண்டு, நம்முடைய துக்கங்களைச் சுமந்தார்; நாமோ, அவர் தேவனால் அடிபட்டு வாதிக்கப்பட்டு, சிறுமைப்பட்டவரென்று எண்ணினோம். நம்முடைய மீறுதல்களினிமித்தம் அவர் காயப்பட்டு, நம்முடைய அக்கிரமங்களினிமித்தம் அவர் நொறுக்கப்பட்டார்; நமக்குச் சமாதானத்தை உண்டுபண்ணும் ஆக்கினை அவர்மேல் வந்தது; அவருடைய தழும்புகளால் குணமாகிறோம். நாமெல்லாரும் ஆடுகளைப்போல வழி தப்பித் திரிந்து, அவனவன் தன்தன் வழியிலே போனோம்; கர்த்தரோ நம்மெல்லாருடைய அக்கிரமத்தையும் அவர்மேல் விழப்பண்ணினார். அவர் நெருக்கப்பட்டும் ஒடுக்கப்பட்டும் இருந்தார், ஆனாலும் தம்முடைய வாயை அவர் திறக்கவில்லை; அடிக்கப்படும்படி கொண்டுபோகப்படுகிற ஒரு ஆட்டுக்குட்டியைப்போலவும், தன்னை மயிர் கத்தரிக்கிறவனுக்கு முன்பாகச் சத்தமிடாதிருக்கிற ஆட்டைப் போலவும், அவர் தம்முடைய வாயைத் திறவாதிருந்தார். இடுக்கணிலும் நியாயத்தீர்ப்பிலுமிருந்து அவர் எடுக்கப்பட்டார்; அவருடைய வம்சத்தை யாரால் சொல்லி முடியும். ஜீவனுள்ளோருடைய தேசத்திலிருந்து அறுப்புண்டுபோனார்; என் ஜனத்தின் மீறுதலினிமித்தம் அவர் வாதிக்கப்பட்டார். துன்மார்க்கரோடே அவருடைய பிரேதக்குழியை நியமித்தார்கள்; ஆனாலும் அவர் மரித்தபோது ஐசுவரியவானோடே இருந்தார்; அவர் கொடுமை செய்யவில்லை; அவர் வாயில் வஞ்சனை இருந்தது மில்லை." ஏசா. 53: 3-9.

ஆ, இது என்ன அதிசயமான அன்பு! கிறிஸ்து நம்மை நேசித்து நமக்காகத் தம்மை ஒப்புக்கொடுக்க வெட்கப்படாதிருக்கும்போது நாம் அவரைப் பின்பற்ற ஏன் வெட்கப்படவேண்டும்? அவர் தம்மை முழுவதுமாக நமக்கு ஒப்புக்கொடுத்தாரே, நாம் அவருக்கு எதைச் செலுத்தினோம்? நம்மெல்லாருக்காக அவர் பாடநுபவித்தாரே, நாம் அவருக்காக பாடுகளை அநுபவித்தோமா? நாம் செய்த பாவத்தின் தண்டனையிலிருந்து நம்மை மீட்டு இரட்சித்து அவர் இருக்கிறவண்ணமாக நாமும் இருக்கும்படியாக அவர் நம்மைப் போல மனுஷனானார். ஆகவே, நாம் அவரை நேசித்து, அவருக்குக் கீழ்படிந்து, அவரை கனம் பண்ணுவோமாக.

பத்திராதிபர்.

ஆசியாவின் எழுச்சி

(THE AWAKENING OF ASIA)

ஆசியாக்கண்டமானது "மனித ஜாதியின் உறைவிடம்" என்று அழைக்கப்படுகிறது. தேவன் ஆசியாக் கண்டத்தில் ஆதித்தாய் தகப்பன்மாரைச் சிருஷ்டித்தார். அவர்களுடைய பின் சந்ததியார் பலுகிப்பெருகி பூமியின் மீதெங்கும் சிதறியிருந்தபோதிலும் மனித ஜாதியின் மனமானது ஆசியாக்கண்டத்தையே நோக்கிக்கொண்டிருக்கிறது.

ஜாதிகளின் ஆரம்பம்.

மனிதன் சிருஷ்டிக்கப்பட்டு ஏறக்குறைய 17 நூற்றாண்டுகளுக்குப்பின் மனித ஜாதியின் அக்கிரமங்களினிமித்தம் தேவன் அவர்களை ஜலப்பிரளயத்தினால் அழித்தார். ஆனால் நோவாவையும் அவனுடைய குடும்பத்தையும் மாத்திரம் அதினின்று தற்காத்தார். அதற்கு இருநூறு வருஷங்களுக்குப் பின்பு நோவாவின் சந்ததியார் பலுகிப் பெருகினார்கள். அவர்கள் ஐப்பிராத்து நதியின் பள்ளத்தாக்குகளில் வசித்தபொழுது தேவனுக்கு விரோதமாய் எழும்பி தங்களுக்கு ஒரு நகரத்தையும் வானத்தை அளாவும் சிகரமுள்ள ஒரு கோபுரத்தையும் கட்ட ஆரம்பித்தார்கள். அப்பொழுது "பூமியெங்கும் ஒரே பாஷையும் ஒரேவிதமான பேச்சும் இருந்தது." ஆதி. 11: 1.

"மனுப்புத்திரர் கட்டுகிற நகரத்தையும் கோபுரத்தையும் பார்க்கிறதற்குக் கர்த்தர் இறங்கினார். அப்பொழுது கர்த்தர்: இதோ, ஜனங்கள் ஒரே கூட்டமாய் இருக்கிறார்கள்; அவர்கள் அனைவருக்கும் ஒரே பாஷையும் இருக்கிறது; அவர்கள் இதைச்செய்யத் தொடங்கினார்கள்; இப்பொழுதும் தாங்கள் செய்ய நினைத்தது ஒன்றும் தடைபடமாட்டாது என்று இருக்கிறார்கள். நாம் இறங்கிப்போய் ஒருவர் பேசுவதை மற்றொருவர் அறியாதபடிக்கு அங்கே அவர்கள் பாஷையைத் தாறுமாறாக்குவோம் என்றார். அப்படியே கர்த்தர் அவர்களை அவ்விடத்திலிருந்து பூமியின் மீதெங்கும் சிதறிப்

போகப் பண்ணினார்; அப்பொழுது நகரம் கட்டுவதை விட்டுவிட்டார்கள். பூமியெங்கும் வழங்கின பாஷையை கர்த்தர் அவ்விடத்தில் தாறுமாறாக்கினபடியால் அதின் பேர் பாபேல் என்னப்பட்டது; கர்த்தர் அவர்களை அவ்விடத்திலிருந்து பூமியின் மீதெங்கும் சிதறிப்போகப் பண்ணினார்." ஆதி. 11: 5-9.

மனுஷ ஜாதி பூமியின்மீதெங்கும் சிதறிப்போனதின் உண்மையான விபரம் இதுதான். சில ஜாதியாரும் கோத்திரத்தாரும், ஆசியாவின் மேற்குப் பாகத்தில் குடியேறினார்கள். அநேகர் மேற்கு முகமாகவும் கிழக்கு முகமாகவும் வடக்கு முகமாகவும் பிரயாணப்பட்டார்கள். மேற்கு முகமாய் பிரயாணம் போனவர்கள் ஆப்பிரிக்காவிலும், ஐரோப்பாவிலும் குடியேறினார்கள். அவர்களின் பின் சந்ததியார் இப்பொழுது அத்தேசங்களில் குடியிருக்கும் ஜனங்கள்தான். ஆசியாவின் மேற்கு பாகத்தில் அசீரியரும், பாபிலோனியரும், மேதிய பெர்சியரும் எபிரேயரும் குடியிருந்தார்கள்.

பூர்வீக உலக சரித்திரத்தில் பற்பல காலங்களில் ஆசியாவின் மேற்கு பாகத்திலும், ஐரோப்பாவிலும், ஆப்பிரிக்காவின் வடபாகத்திலும் இருந்த ராஜ்யங்கள் பலத்தவைகளாயிருந்து தங்களைச் சுற்றிலுமிருந்த தேசங்களை அரசாண்டார்கள். இந்த ராஜ்யங்கள் சில நூற்றாண்டுகள் மட்டும் அரசாண்டன. அவைகளின் மகத்துவமும் வல்லமையும் அழிந்துபோயின. அவைகளுடைய பேர் மாத்திரம் சரித்திர புஸ்தகங்களில் இந்நாள்மட்டும் இருக்கிறது.

கீழ் ஆசியாவின் ஜாதிகள்.

பாபேல் கோபுரத்தைக் கட்டின காலத்தில் பாஷைகள் தாறுமாறாக்கப்பட்டபொழுது சில ஜனங்கள் இந்தியாவிலும், சிலர் ஆசியாவின் வட, கீழ் பாகங்களிலும் குடியேறினார்கள். மங்கோலியர் சீனர், மஞ்சூரியர், ஜப்பானியர் முதலியவர்கள் இவர்களிலிருந்து தோன்றினவர்கள்.

ஆசியாவின் மேற்கு பாகத்திலும் ஐரோப்பாவிலும் இருந்த ராஜ்யங்களைப்பற்றி சரித்திரங்கள் நமக்குத் தெளிவாய்ச் சொல்லுகிறது. அவர்கள் ஒருவருக்கொருவர் ஐக்கியமாயிருந்தார்கள். அவர்களுடைய மரக்கலங்கள் பெரிய கடற்றுறை பட்டணங்களுக்கெல்லாம் சென்றது. ஒரு தேசத்தில் நவீனமாய்க் கண்டு பிடிக்கப்பட்டவைகள் மற்ற ராஜ்யங்களுக்குக் கொண்டு போகப்படும். படித்த வித்துவான்கள் ஊரூராய்ச் சென்று தங்கள் கல்வியின் பலனை பிறருக்கு அறிவித்தார்கள்.

மெய்த்தேவனை ஆராதித்து வந்த எபிரேயரும்கூட அநேக நாடுகளில் பிரயாணம் பண்ணி அங்கங்கேயுள்ள ஜனங்களுக்கு வானத்தையும் பூமியையும் சிருஷ்டித்த மெய்யான தேவனைப்பற்றிய அறிவைப் போதித்தார்கள்.

ஆனால் மத்திய ஆசியாவிலும் கீழ் ஆசியாவிலும் தென் ஆசியாவிலும் இருந்த ஜாதிகள் இப்படி செய்யவில்லை. அவர்கள் தங்களுக்குள்ளே கொள்வினை கொடுப்பனை பண்ணிக்கொண்டு தங்கள் எல்லைக்கு அப்பாலிருக்கும் மற்ற ஜாதியாரோடு எவ்வளவும் கலவாதிருந்தார்கள். விசேஷமாக இந்தியா, பர்மா, சீனா என்னும் இம்மூன்று தேசங்களிலிருந்தவர்கள் இப்படியிருந்தார்கள்.

இந்து தேசம்.

ஆசியாவிலுள்ள நாடுகளெல்லாவற்றைப்பார்க்கிலும் இந்தியா தேசமானது மிக வளப்பமும் செல்வம் மிகுந்ததுமாயிருந்ததால் மேற்கத்தி ஆசிய நாட்டாரும் ஐரோப்பியரும் இந்தியாவுக்கு பலமுறை படையெடுத்து வந்தார்கள். இப்படையெடுப்புகளின் பலனாக மத சம்பந்தமாகவும் பொது ஜன பழக்க வழக்க சம்பந்தமாகவும் பெரிய மாறுதல்களுண்டாயின. ஆனால் கடந்த 50 வருஷமாக வியாபாரத்திலும் கைத்தொழிலிலும் இந்தியர்கள் அதிக தேர்ச்சி யடைந்திருக்கிறார்கள். இதர நாட்டார் முதலாவதாக தங்கள் முதலை வைத்து வியாபாரம் பண்ண ஆரம்பித்தார்கள். ஆனால் தற்காலத்தில் சுதேச வியாபாரிகளின் தொகை அதிகரித்து விட்டது.

கல்வியிலும் இந்து தேசமானது இப்பொழுது முன்னுக்கு வந்திருக்கிறது. பெரிய பட்டணங்களில் இப்பொழுது சமஸ்தருக்கும் சிறு பள்ளிக்கூடங்கள் ஏற்படுத்தப்பட்டிருக்கிறது. இந்தியா பர்மா தேசங்களிலுள்ள இளைஞர்கள் இந்த நாகரீக மதிகரிக்கும் காலத்தில் தங்களுக்கு ஓர் உயர்தர கல்வி எவ்வளவு அவசியமென்று உணருகிறார்கள். எல்லாவற்றிற்கு மேலாக இந்திய மாதர்களும் தேச காரியங்களைத் தாங்களும் செய்யப் பிரயத்தனப்படுகிறார்கள். கூடிய சீக்கிரத்திற்குள்ளாக இந்திய ஸ்திரீகள் தேச சன்மார்க்க கூட்டுறவிலும் சங்கங்களிலும் தங்கள் உரிமையைக் கொண்டாடுவார்களென்று நம்புகிறோம். ஸர். ஜே. சி. போஸ், ஸர். ரவீந்தரநாத்தஹோர், காலம் சென்ற கனம். டாடாபாய் நவ்ரோஜி, கனம். கோகலே, கனம் ஹான்டி முதலியவர்களைப் பிறப்பிக்கும் இந்து தேசமானது ஆசியாவின் ராஜ்யங்களில் பிரதான இடத்தை உரித்தாயிருக்கிறது; கூடிய சீக்கிரத்திற்குள்ளாக இந்தியாவானது

ஆங்கிலேய ராஜ்யத்தில் விசேஷித்த பொருப்பான காரியங்களைத் தாங்கக் கூடியதாகும்.

19-ம் நூற்றாண்டின் பிந்தின ஐம்பது வருஷங்களில் இந்தியா பர்மா என்னும் இருதேசங்களின் வியாபாரம் நான்மடங்கு அதிகரித்திருக்கிறது. வியாபார விர்த்தியைப்பற்றி ஒருவர் 1914-ம் வருஷத்தில் பின்வருமாறு எழுதினார். "இந்தியாவும் பர்மாவும் உலகத்தில் அரிசி ஏற்றுமதி செய்யும் தேசங்களில் முக்கியமானவை. இந்தியா தேயிலை ஏற்றுமதி செய்யும் தேசங்களில் முதன்மையானது. ஆர்கென்றினா தேசம் நீங்கலாக நமது தேசம் அதிகமான பதனிட்ட தோல் ஏற்றுமதி செய்கிறது. பருத்தி ஏற்றுமதி செய்வதில் இந்தியாவானது அமெரிக்க ஐக்கிய மாகாணத்திற்கு இரண்டாவதாயிருக்கிறது. கோதுமை விளையும் தேசங்களில் இந்து தேசமானது, அமெரிக்க ஐக்கிய மாகாணத்திற்கும் உருஷியாவுக்கும் அடுத்ததாயிருக்கிறது. வங்காள நாட்டில் தாதா இரும்பு தொழிற் சாலையில் ஏறக்குறைய பதினாயிரம் பேர் வேலை செய்கிறார்கள். அமெரிக்கா ஐக்கிய மாகாணத்து இரும்பு விலையைவிட இந்தியாவில் குறைந்த விலைக்கு இரும்பு அகப்படுகிறது."

எல்லாக் காரியங்களிலும் இந்தியாவும் பர்மாவும் அதிக விர்த்தி யடைந்திருக்கிறது. கடந்த அரை நூற்றாண்டில் வியாபார விஷயமாக 9 கோடி ரூபாயிலிருந்து 140 கோடி ரூபாயிக்குமேல் விர்த்தியாயிருக்கிறது. இந்தியாவில் 35,285 மைல் தூரம் இருப்புப் பாதைகள் போடப்பட்டிருக்கிறது. இருப்புப்பாதை மைல் கணக்கின்படி இது உலகத்தில் நாலாவதாயிருக்கிறது. இந்தியாவில் 76,000 மைல் தூரத்திற்கு தந்திக்கம்பிகள் போடப்பட்டிருக்கிறது. அதன் மூலமாய் இந்தியாவின் ஒரு முனையிலிருந்து அதன் மறுமுனை மட்டும் செய்தி அனுப்பலாம்.

இந்தியாவில் 46000 மைல் நீளமான நீர்ப்பாய்ச்சும் வாய்க்கால்களுண்டு. அவைகள் 2 கோடியே 20 லக்ஷம் ஏக்கர் விஸ்தாரமான நிலத்தை நீர்ப்பாய்ச்சுகிறது. இப்படி யிருப்பதினால் சில ஜில்லாக்களில் பஞ்சமே வருகிறதில்லை.

உவில்லியம் கேரி (William Carey) என்னும் போதகர் கல்குத்தாவில் 18-ம் நூற்றாண்டில் அச்சு யந்திரத்தை ஸ்தாபித்தார். 1915-ம் வருஷக்கடைசியில் இந்தியாவில் 3102 அச்சுக்கூட்டங்களும் அவைகளில் 3836 சமாசாரப் பத்திரிகைகளும் வெளியாயின. 1915-ம் வருஷத்தில் மாத்திரம் 11477 புஸ்தகங்கள் இந்தியா பர்மாவின் சுதேச பாஷைகளிலும் 1602 புஸ்தகங்கள் ஐரோப்பிய பாஷைகளிலும் பிரசுரிக்கப்பட்டது.

ஆகையினாலே, மற்ற தேசங்கள் மட்டுமல்ல இந்தியாவும் பர்மாவும்கூட தேர்ந்து விர்த்தி யடைவதற்கு காலம் சமீபித்திருக்கிறது. இவற்றின் தாற்பரியமென்ன ?

ஜப்பான்.

கீழ்தேசங்களிலுண்டான எழுப்புதல் இந்தியாவிற்கு மாத்திரம் அடுத்ததல்ல. தற்காலத்தில் ஜப்பான் நாகரீகமடைந்த தேசங்களிலொன்றாக எண்ணப்படுகிறது. கடந்த ஐம்பது வருஷத்திற்குள்ளாக ஜப்பான் தேசமானது கல்வியிலும், அச்சிடுதலிலும், வியாபாரத்திலும் கைத் தொழிலிலும், போக்கு வரவிலும், ராஜாங்கத்துக்கடுத்த விஷயங்களிலும் விர்த்தியடைந்திருக்கிறதென்பதை நாம் மனதில் வைக்கவேண்டும்.

19-ம் நூற்றாண்டின் மத்தியில் ஜப்பான் தேசத்தைச் சேர்ந்த உயர் குலத்தோர் தங்கள் ஜாதிக்கட்டுப்பாடுகளை வேரோடே தொலைத்துவிட்டு இதர ஜனங்களோடு சரிசமானமானார்கள். இதற்குப்பிறகு அவர்கள் ராஜ்யம் விர்த்தியடைய ஆரம்பித்தது. இவ்விதமாக இந்தியாவிலும் ஜாதிபேதம் என்னும் வேலி பிரிக்கப்பட்டால் ஜப்பான் தேசத்திலுண்டான விர்த்தி இங்கும் காணப்படும். காலஞ்சென்ற ஜப்பான் தேசத்து ஒகுமா பிரபு (Count Okuma) 1913-ம் வருஷம் பின்வருமாறு எழுதினார்.

"ஜப்பான் தேசமானது அபிப்பிராயத்திலும், ஏற்பாட்டிலும் மும்முறை மாறுதலடைந்திருக்கிறது. இப்பொழுது நலாவது மாறுதலு மடைந்திருக்கிறது.

"முதலாவதாக, அவர்கள் தங்கள் புராதன பழக்க வழக்கங்களை விட்டுவிட்டு, தங்கள் ராஜாங்கத்தை மாற்றி, ஒரு ஜப்பான் ஐக்கிய ராஜ்யத்தை ஸ்தாபித்தார்கள்.

"இரண்டாவதாக, அவர்கள் தங்கள் ராஜாங்கத்தை சீர்படுத்தி தங்கள் மகாணத்திலும் பிரதேசங்களிலும் தங்களுக்கும், அந்நியருக்கும் ஒரு சம்பந்தம் ஏற்படுத்தி அதின்படி நடந்தார்கள்.

"மூன்றாவதாக அவர்கள் உருஷியரோடும் சீனரோடும் கைகலந்து இருமுறை யுத்தம்பண்ணி இப்படியாக இராணுவ பலத்தை அதிகரிக்கச் செய்தார்கள்."

சீனா.

கடந்த முப்பது வருஷத்துக்குள்ளாகத்தான் சீனா தேசமானது இப்பொழுது இருக்கும் புது நிலைமைக்கு

வந்தது. பொது ஜன வரியை கல்வி முதலிய நற்காரியங்களில் உபயோகிப்பதற்கு தடையாயிருந்த ஏகாதிபத்திய அரசாட்சியை இந்த முப்பது வருஷத்தில் தள்ளிப் போட்டார்கள். பிற்பாடு ராஜாங்கத்தார் பள்ளிக்கூடங்களை ஸ்தாபிக்க ஆரம்பித்தார்கள். இப்பொழுது, ஏறக்குறைய 20 லக்ஷ மாணாக்கர்கள் ராஜாங்க பள்ளிக்கூடங்களில் கல்வி கற்று வருகிறார்கள். முன்னே, கணக்கு, சாஸ்திரம் முதலியவற்றைப் படிக்காமல் சுதேச ஞானிகள் எழுதியவற்றை மாத்திரம் பாராயணம் பண்ணினார்கள்.

இப்பொழுது தேசமெங்கும் அச்சுயந்திரங்களை ஸ்தாபித்து, தாங்களே சமாசாரப் பத்திரிகைகளைப் பிரசுரித்து வருகிறார்கள்.

இப்பொழுது சீன ராஜாதிபத்தியத்தின் ஆளுகையில் தபால் மார்க்கத்தையும், இருப்புப்பாதை, தந்தி முதலியவற்றையும் ஸ்தாபித்திருக்கிறார்கள். ஐரோப்பிய சேனைகள் எவ்விதமாய்ப் பயிற்றுவிக்கப் படுகிறதோ அவ்விதமாக இவர்கள் தங்கள் சேனையைப் பயிற்றுவித்திருக்கிறார்கள். பெரிய ஆயுத சாலைகளில் ஏராளமான வெடி மருந்து குண்டுகளையும், துப்பாக்கி பீரங்கிகளையும் சேகரம் செய்திருக்கிறார்கள். தேச முழுவதிலுமுள்ள ஜனங்கள் யாவரும் நூதனமான வழிகளை இன்னும் படித்துக்கொள்ள அசடராயிருக்கிறதால் அவர்களைச் சீர்திருத்தப் பிரயாசைப் படுகிறார்கள்.

சீனாவின் பெரிய பட்டணங்களில் இரும்பு ஆலைகள் இருக்கிறது. அவைகளில் வருஷா வருஷம் கோடிக்கணக்கான மணங்கு நிறையுள்ள இரும்பு சாமான்கள் செய்யப்படுகிறது. 1900-ம் வருஷத்திலிருந்து 1910-ம் வருஷத்திற்குள்ளாக நாற்பத்தாறு பட்டு நெசவு சாலைகள் ஸ்தாபிக்கப்பட்டது. அவைகளில் விசேஷித்தவை ஷாங்காய் (Shanghai) என்னும் பட்டணத்திலிருக்கின்றன. ஷாங்காய்ப் பட்டணத்தில் கைக்கடியாரம், கடியாரம் தோல் சப்பாத்து, கண்ணாடி, சவுக்காரம், வண்டிகள், வீட்டு ஜாமான்கள் முதலியவைகளை உண்டாக்கும் சீனருடைய தொழிற் சாலைகள் அநேக மிருக்கின்றன.

பிலிப்பியன் தீவுகளைப்பற்றியும், இன்னும் இதர தேசங்களைப்பற்றியும் எவ்வளவோ பேசலாம். அவைகளை இப்பொழுது எழுதுகிறதற்குச் சமயமில்லை.

பலத்த பிரயத்தனங்களும் அவற்றின் தாற்பரியமும்.

அதிசயிக்கத்தக்க அபிவிர்த்திகள் ஆசியாக்கண்டத்தில் உண்டாகிறதினால் வேதாகமத் தீர்க்கதரிசனங்களைப் படிக்கும் மாணாக்கர்கள் உலகத்தின் ராஜ்யங்களுக்கு தேவன் செய்த ஏற்பாடுகள் நிறைவேறுகிறதைக் காணலாம். தீர்க்கதரிசியாகிய தானியேல் உலக ராஜ்யங்களில் சரித்திரத்தை ஆதிமுதல் அந்தம் வரையில் பார்த்தபொழுது "முடிவு காலத்தில்" அநேகர் இங்குமங்கும் ஓடி ஆராய்வார்கள்; அறிவும் பெருகிப் போம் என்றார். நாம் முன்னமே "அநேகர் இங்குமங்கும் ஓடி ஆராய்வார்கள்." என்றும் தீர்க்கதரிசனத்தின் நிறைவேறுதலாக தற்காலத்தில் இருப்புப்பாதை வண்டிகளும், நீராவிக் கப்பல்களும் கண்டுபிடிக்கப்பட்டு மனிதர் ஓரிடத்திலிருந்து மற்றோரிடத்திற்கு அதிக விரைவாகப் பிரயாணம் பண்ணுகிறார்களென்று பார்த்திருக்கிறோம். தற்காலத்தில் பிரயாணம் செய்கிறதுபோல இவ்வுலக சரித்திரத்தில் வேறெந்தக் காலத்திலும் இவ்வளவு துரிதமாய்ப் பிரயாணம் செய்யவே இல்லை.

"அறிவும் பெருகிப்போம்." உலகத்தில் எல்லா தேசங்களிலும் எல்லா ஜாதியாருக்குள்ளும், பள்ளிக்கூடங்கள் பரவியிருப்பதும் சமாசாரப் பத்திரிகைகளும் இன்னும் இதர பத்திரிகைகளும், புஸ்தகங்களும் அதிகரித்திருப்பதும், தற்காலத்தில் நவீனமாய்க் கண்டுபிடிக்கப்பட்ட நூதனங்கள் யாவும் அந்தப் புராதன தீர்க்கதரிசனத்தின் நிறைவேறுதலாயிருக்கிறது. தானியேல் தீர்க்கதரிசியால் முன்னுரைக்கப்பட்ட அந்த முடிவு காலத்தில் நாம் வசிக்கிறோம். திரளான ஜனங்கள் இங்குமங்கும் ஓடுகிறதினாலும் அறிவு அதிசயிக்கத்தக்கவிதமாய்ப் பெருகிப்போயிருக்கிறதினாலும் அநேக நூற்றாண்டுகளுக்கு முன்னதாக தேவ ஆவியினால் ஏவப்பட்டு உரைக்கப்பட்ட தீர்க்கதரிசனம் இப்பொழுது உண்மையாக நிறைவேறுகிறதென்னலாம்.

இந்த மாறுதல் ஏறக்குறைய ஐம்பது வருஷத்திற்கு முன்னதாகவே ஆசியாவில் ஆரம்பித்திருக்கிறது. இந்தியாவில் நடக்கும் இந்த மாறுதல்களும் தேவனுடைய தாசனாகிய தானியேல் முன்னுரைத்த தீர்க்கதரிசனத்தின் நிறைவேறுதலென்றே சொல்லலாம்.

என் இந்து சிநேகிதனுக்கு ஓர் கடிதம்

(A LETTER TO MY HINDU FRIEND)

எனது பிரியமுள்ள வர்தராஜ்க்கு எழுதும் செய்தி யாவது,

உம்முடைய கடிதத்தைப் பெற்றுக்கொண்டேன். கிறிஸ்துவைப்பற்றி அறியவேண்டும் என்று எழுதியிருந்ததை நான் வாசித்தபோது எனக்கு அதிக சந்தோஷமுண்டாயிற்று. என்னிடத்தில் அவரைப் பற்றி கேட்க நீர் வெட்கப்படவேண்டியதில்லை. உலகத்தில் எல்லா ஜாதியாரும் விசுவாசிக்கிற அந்த மகாத்மாவைப்பற்றி அறியாதவர்கள் எத்தனையோ பேர் இந்தியாவில் இருக்கிறார்கள். அவர் அன்பும் பட்சமுமுள்ள ஒரு பெரிய போதகராகையால் ஒவ்வொருவரும் அவரைப்பற்றி அறியவேண்டும். முன்னமே நான் அவரைப்பற்றி உமக்கு எழுதலாம் என்று நினைத்தேன். ஆனால் நீர் கிறிஸ்துவைப் பகைத்தீர் என்றும் அவரைப் பற்றி யறிய விருப்பமில்லாமலிருந்தீர் என்றும் நான் கேள்விப்பட்டதினாலே அதை எழுதவில்லை. அவர் உமக்கு விரோதமாய் ஒன்றும் செய்யாமலிருக்கும்போது நீர் அவரை ஏன் பகைத்தீர் என்று எனக்கு விளங்கவில்லை. மெய்யாகவே அவர் உம்மை நேசித்தார். இப்பொழுதும் அவர் உன்னை தன் சொந்த சகோதரனைப் போல் சிநேகித்து வருகிறார்.

கிறிஸ்துவின் பிறப்பையும் பெற்றோரையும் அவருடைய ஊழியத்தையும் கடைசியாக அவருக்கு நேரிட்டதைப்பற்றி அறிய நீர் விரும்புகிறீர். அச்சங்கதிகளையெல்லாம் நான் உமக்குச் சந்தோஷமாய்ச் சொல்லுவேன். ஆனால் எல்லாவற்றையும் இப்பொழுதே சொல்ல முடியாது. இப்பொழுது அவற்றுள் சிலவற்றை மாத்திரம் எழுதுகிறேன். மற்றவைகளைப் பின்னால் எழுதுவேன். இயேசுக்கிறிஸ்து பலஸ்தீனா நாட்டிலுள்ள பெத்லெகேம் என்னும் கிராமத்தில் பிறந்தார். அங்கே யூதர்கள் வாசம் பண்ணினார்கள். அவர் ஏறக்குறைய இரண்டாயிரம் வருஷங்களுக்கு முன் பிறந்தார். ஆனால் இவ்வுலகத்தில் பிறக்கிறதற்கு முன்னதாக பரலோகத்திலிருந்தார். அவர் வானத்தையும் பூமியையும் சமுத்திரத்தையும் அவைகளிலுள்ள எல்லாவற்றையும் உண்டாக்கின தேவனுடைய ஒரே பேறான குமாரன். தேவனுடைய ஒரே பேறான குமாரனானபடியால் அவர் தேவனால் மிகவும் நேசிக்கப்பட்டார். அவர் தம்முடைய பிதாவுடன் அதிக சந்தோஷமாயிருந்தார். பரலோகத்தில் தூதர்களும் அவரை அதிகமாய் நேசித்தார்கள். அவர்கள் அவர் முன்பாக விழுந்து அவரை வணங்கினார்கள். அவர்கள் எப்போதும் அவருக்குக் கீழ்ப்படிந்தார்கள். அவருக்கு அதிக கனமும் மகிமையும் இருந்தது.

தேவன் மனிதனை உண்டாக்கி இவ்வுலகத்தில் வைத்த பிற்பாடு அவன் தேவனுக்கு விரோதமாய் பாவம் செய்தான். இதைப்பற்றி தேவன் அதிக மனஸ்தாபப்பட்டார். பாவத்தின் சம்பளம் மரணமானதால் மனுஷன் பாவஞ் செய்ததால் அவன் மரிக்கவேண்டிய தவசியமாயிருந்தது. பிரியமான சகோதரனே நாள்தோறும் எத்தனையோ ஜனங்கள் மரிக்கிறார்கள் என்று உமக்குத் தெரியும். எங்கே பார்த்தாலும் துன்பமும் துக்கமுமே நிறைந்திருக்கிறது. இவைகளைப் பார்க்கும்பொழுது எவ்வளவோ பயங்கரமாயிருக்கிறது. ஆனால் இவைகள் எல்லாம் மனிதன் தேவனுக்குக் கீழ்ப்படியாமற் போனதினால் நேரிட்டது. பிதாவாகிய தேவனும் குமாரனாகிய கிறிஸ்துவும் மனுஷ ஜாதி படுகிற வருத்தங்களையும் வியாகுலங்களையும் பார்த்தபோது அவர்கள் மிகவும் வருத்தப்பட்டு எவ்விதத்திலாகிலும் அவருக்கு உதவி செய்ய விரும்பினார்கள். ஆகவே அவர்கள் மனுஷன் மறுபடியும் தன் ஜீவனை அடைவதற்கேற்ற சில ஏற்பாடுகளை உண்டாக்க விரும்பினார்கள். மனிதனை நித்திய மரணத்திலிருந்து இரட்சிக்க விரும்பினார்கள் அப்போது கிறிஸ்து தான் பரலோகத்தின் சம்பத்தையும் மகிமையையும் விட்டு இப்பூவுலகில் வந்து மனிதனாகப் பிறந்து மனிதருக்குள் சஞ்சரித்து, அவர்கள் ஜீவிக்கவேண்டிய வகையை அவர்களுக்குக் காண்பிப்பதாக பிதாவினிடத்தில் சொன்னார். கடைசியாக மனிதர் நித்திய ஜீவனை அடையும்படி அவர்களுக்காக மரிக்கவும் மனங்கொண்டார். அவர் பாவத்தின் தண்டனையைச் சகித்துக்கொள்வதற்கும், மனிதனுக்குப் பதிலாகக் கோரமான மரணத்தை உத்தரிப்பதற்கும் தம்மை ஒப்புக்கொடுத்தார். பிதாவாகிய தேவன் தம்முடைய ஒரே பேறான குமாரன், இவ்வளவு உபத்திரவத்தையும் நிந்தனைகளையும் உத்தரிக்க வேண்டியதிருக்கிறதே என்று நினைத்து அதிக வருத்தப்பட்டார் ஆனால் இவ்வகையால் லக்ஷக்கணக்கான ஜனங்கள் ரட்சிக்கப்படுவார்கள் என்பதை நினைத்துக் கடைசியாகச் சம்மதித்தார்.

ஆகவே காலம் நிறைவேறினபோது கிறிஸ்து பரலோகத்தின் மகிமையையும் பேரின்பத்தையும் விட்டு

இப்பூவுலகத்திற்கு வந்தார். அவர் ஒரு பெரிய ராஜாவாகவாவது அல்லது ஒரு தேவ தூதனாகவாவது வரவில்லை. ஆனால் அவர் மனிதரால் விஸ்தரிக்கமுடியாத பிரகாரமாய் ஒரு கன்னிகையின் வயிற்றிலே பிறந்தார். தம்முடைய குமாரனை உலக இரட்சகராக அனுப்புவதாக தேவன் தம்முடைய ஜனங்களுக்கு பலமுறை சொல்லியிருந்தார். கிறிஸ்து இவ்வுலகத்திற்கு வருகிறதற்கு ஏறக்குறைய நாலாயிரம் வருஷங்களுக்கு முன்னதாக அவரை பூமிக்கு அனுப்புவதாக தேவன் வாக்குக் கொடுத்தார். அதற்கு பிறகு அவர் இதே வாக்குத்தத்தத்தை பல தடவைகளில் சொல்லியிருக்கிறார். வேதாகமம் என்னும் புஸ்தகத்தில் அவர் பிறப்பதற்கு பல நூற்றாண்டுகளுக்கு முன்னே பிறக்கப்போகிற ஊரையும் காலத்தையும் திட்டமாய் சொல்லியிருக்கிறார். ஆகவே அக்காலத்திலுள்ள அநேக நல்ல ஜனங்கள் கிறிஸ்துவின் வருகைக்காக காத்துக்கொண்டிருந்தார்கள்.

கிறிஸ்து பிறந்தபோது பூலோகத்தில் மாத்திரமல்ல பரலோகத்திலும் சந்தோஷமுண்டாயிற்று. தேவதூதர்களும் களிகூர்ந்து பாடினார்கள். அவர்களில் அநேகம்பேர் கிறிஸ்து பிறந்த இடத்திற்கு சமீபத்தில் வந்து, உன்னதத்திலிருக்கிற தேவனுக்கு மகிமையும், பூமியிலே சமாதானமும், மனுஷர்மேல் பிரியமும் உண்டாவதாக என்று பாடினார்கள். அந்தப் பாட்டை கேட்ட மேய்ப்பர்களுக்கு யேசு பிறந்த இடத்தைச் சொன்னார்கள்; ஆகவே அவர்கள் எல்லாரும் அவரைப் பார்க்கப் போனார்கள். அங்கே யேசுவையும் அவருடைய தாயாகிய மரியாளையும் ஒரு மாட்டுத் தொழுவத்தில் கண்டார்கள். அவர்கள் ரொம்ப ஏழைகளாயும் தங்குகிறதற்கு முதலாய் சரியான இடமில்லாதவர்களாயுமிருந்தார்கள். என்றாலும் அந்த ஜனங்கள் அவரைப்பார்த்தபோது, தேவ குமாரன் என்று அறிந்து அவரை வணங்கினார்கள். ஆனால் சாத்தானோ கடுங்கோபமாயிருந்தான். கிறிஸ்து இவ்வுலகத்தில் வந்து மனிதனாகப் பிறப்பது அவனுக்குப் பிரியமில்லை. ஏனென்றால் அவன் எல்லா மனுஷரும் கெட்டு அழிந்து போவதையே விரும்பினான். அவர் இவ்வுலகத்திற்கு வருவாரானால் அநேக ஜனங்களை பாவத்திலிருந்து இரட்சிப்பார் என்று அவன் அறிந்திருந்தான். ஆகவே அவன் என்ன செய்தானென்று உமக்குத் தெரியுமா? அவன் யேசுவைக் கொலை செய்யும்படியாக ஒரு பொல்லாத ராஜாவாகிய ஏரோதுவை தூண்டிவிட்டான். ஆனால் இயேசு பிறந்த இடம் திட்டமாய் அவனுக்குத் தெரியாததினால், எப்படியாவது அவரைக் கொல்லவேண்டுமென்ற நோக்கத்துடன் அந்தப் பட்டணத்திலுள்ள இரண்டு வயதுக்குட்பட்ட ஆண் பிள்ளைகள் எல்லாரையும் கொலை செய்யக் கட்டளை இட்டான். இது என்ன கொடூரமான செய்கை என்று பாரும். ஆனால் தேவன் இந்தப் பொல்லாத ராஜா தம்முடைய குமாரனை கொலை செய்ய விட்டுவிடவில்லை. தேவன் தமது தூதனை அனுப்பி, இயேசுவையும் அவருடைய தாயையும் தகப்பனையும் எடுத்து வேறொரு தேசத்திற்கு அழைத்துக்கொண்டு போகும்படி செய்தார். இப்படியாக அவர்கள் தப்புவிக்கப்பட்டார்கள். அந்தப் பொல்லாத ராஜா மரித்தபின் அவர்கள் திரும்பவும் அதே ஊருக்கு வந்தார்கள். அங்கே யேசு தமது பெற்றோருடன் முப்பது வயதுமட்டும் வசித்து வந்தார். இக்காலத்தில் அவர் தம்முடைய பெற்றோருக்கு சகல விஷயத்திலும் கீழ்ப்படிந்து நடந்தார். இவ்விஷயத்தில் இவர் சிறு பிள்ளைகளுக்கும் வாலிபருக்கும் நல்ல முன்மாதிரி காண்பித்தார்.

இயேசு இவ்வுலகில் இருந்தபோது அவர் தேவ குமாரனும் தேவ தன்மையை உடையவராயும் இருந்தபோதிலும், அவர் சோதனைகளை ஜெயிக்கும்படியாக ஒரு போதும் தம்முடைய தேவ சுபாவத்தை உபயோகிக்கவில்லை. மனுஷர் தேவ உதவியால் நல்ல ஜீவியம் செய்யமுடியும் என்பதை அவர் உலகத்தாருக்குக் காட்ட விரும்பினார். சாத்தானின் சோதனையை மேற்கொள்வதற்காக கிறிஸ்து இரவும் பகலும் இடைவிடாமல் ஜெபித்தார். முப்பதாம் வயதில் அவர் யோவான் ஸ்நானகனால் ஞானஸ்நானம் பெற்றார். ஞானஸ்நானம் பெற்றவுடனே சாத்தான் அவரை சோதித்தான். ஆனால் அவன் அவரை மேற்கொள்ளவில்லை. கிறிஸ்து மனிதரைப்போல் அநேக விஷயங்களில் சோதிக்கப்பட்டபோதிலும் அவர் ஒரு பாவமும் செய்யவில்லை. ஞானஸ்நானத்திற்குப் பின்னால் அவர் ஒரு குருவைப் போல் தம்முடைய வேலையை செய்யத் தொடங்கினார். இப்படியாக அவர் மூன்று வருஷத்திற்குமேல் வேலை செய்தார். என்னுடைய அடுத்த கடிதத்தில் இந்த மூன்று வருஷ காலத்தில் அவர் என்ன செய்தாரென்றும் என்ன போதித்தார் என்றும் கடைசியாக அவருக்கு என்ன நேரிட்டதென்றும் சொல்லுவேன்.

இப்படிக்கு,
உமது உண்மையுள்ள,
ஜி. ஜி. லேளரி.

எழு முத்திரைகள்

(THE SEVEN SEALS)

(தொடர்ச்சி.)

4-ம் முத்திரை.

நாலாம் முத்திரையை உடைத்தபோது தீர்க்கதரிசியானவர் "இதோ மங்கின நிறமுள்ள ஒரு குதிரையைக் கண்டேன்" என்கிருர். (வெளி. 6: 7, 8) குதிரையின் மங்கின நிறமானது சாவுக்கேதுவான பழுப்பு நிறத்தைக் காட்டுகிறது. இந்தக் காலத்தில், பாப்பு மார்க்க கொள்கையை ஒப்புக்கொள்ளாமல், சத்திய சுவிசேஷத்தைப் பின்பற்றினவர்களை உபத்திரவப்படுத்தவும், உபத்திரவம் தாங்க முடியாமல் காடுகளுக்கு ஓடினவர்களை மிருகங்கள்போல் வேட்டையாடிப் பிடித்து, கொலை செய்யவும் ஆரம்பித்து விட்டார்கள். ஆயிர வருஷங்களாக மெய்யான கிறிஸ்து மார்க்கத்தை, பூமியிலிருந்து முழுதும் நீக்கிப்போட, தவறிப்போன சபையாகிய பாப்பு மார்க்கம் பிரயாசப்பட்டது. சுமார் 5 கோடிக்கும் 10 கோடிக்கும் இடையிலுள்ள ஓர் பெருந் தொகையான ஜனங்கள் தங்கள் விசுவாசத்துக்காக இரத்த சாட்சியாய் கொலை செய்யப்பட்டார்கள். இவர்களுடைய இரத்தம் தண்ணீர்போல் ஒடினது. இந்தப் பயங்கரமான காலங்களில் சிலர் ஐரோப்பாவின் மலைகளிலே பதுங்கி ஒளித்து, தங்களது இருதயத்திலே சுவாலித்து எரிந்துகொண்டிருந்த சத்தியத்தைக் காத்து, இவ்விதமாக மனச்சாட்சிக்கு கொடுக்கவேண்டிய மார்க்க சுயாதீனத்தை, உலகத்துக்குக் காட்டினார்கள். இந்த முத்திரையின் காலம் சரித்திரத்தில் இருண்ட காலமென்று அழைக்கப்படுகிற கி. பி. 538-லிருந்து பதினாரும் நூற்ருண்டிலுண்டான புராத்தஸ்தாந்து சீர்திருத்தத்தின் ஆரம்பம் வரை.

5-ம் முத்திரை.

"அவர் ஐந்தாம் முத்திரையை உடைத்தபோது தேவ வசனத்தினிமித்தமும் தாங்கள் கொடுத்த சாட்சியினிமித்தமும் கொல்லப்பட்டவர்களுடைய ஆத்துமாக்களை பலிபீடத்தின் கீழே கண்டேன்..........எங்கள் இரத்தத்தைக் குறித்து எதுவரைக்கும் நியாயத்தீர்ப்புச் செய்யாமலும், பழி வாங்காமலும், இருப்பீர் என்று மகா சத்தமிட்டுக் கூப்பிட்டார்கள்." (வெளி. 6: 9-11.)

இது சுவிசேஷ மார்க்கத்தாரின் (Protestant) சீர்திருத்தலின் காலத்தைக் குறிக்கிறது. இந்தக் காலத்தில், ஆபேலின் இரத்தம், தான் சிந்தப்பட்ட இடமாகிய பூமியிலிருந்து தன்னைச் சிந்தினவனுக்குப் பதில் செய்யும்படி கூப்பிட்டாற்போல், முந்தின முத்திரையின் காலத்தில் கோடிக்கணக்காய் பலியிடப்பட்ட பரிசுத்தவான்கள், தாங்கள் இந்தப் பூமியிலே பலியிடப்பட்ட இடங்களாகிய பலிபீடத்தின் கீழேயிருந்து, தங்களைக் கொன்று போட்டவர்களுக்குப் பதில் செய்யும்படி கூப்பிடுகிறதாக வாசிக்கிரோம். இந்தப் பரிசுத்தவான்கள் மரிக்கிற காலத்தில் இவர்களைப் பெரிய கைதிகளென்றும், துரோகிகளென்றும், பூமியில் ஜீவிக்க முதலாய் தகுதியற்றவர்களென்றும், ஜனங்களுக்கு கூறப்பட்டிருந்தன. இப்பொழுது பெரிய மார்க்க சீர்திருத்தக்காரர் எழும்பி பரிசுத்த வேதாகமத்தை ஜனங்களுக்குத் தெரியத்தக்க பாஷையில் அச்சிட்டும், வாசிக்க கொடுக்கவும், ஆரம்பித்து விட்டதால் முந்தின முத்திரையின் காலத்தில் மரித்தவர்கள் சாதித்த சத்தியமும், அதற்காக அவர்கள் காட்டின நேர்மையும், ஜனங்களுக்கு இப்பொழுது புலப்பட்டு, திரளான பேர், பாப்பு மார்க்கத்தின் விக்கிரகாராதனையை விட்டுப் பிரிய ஆபம்பித்தார்கள். மரித்துப்போன பரிசுத்தவான்களின் சிரேஷ்ட குணங்களும் இவர்களுக்கு இப்பொழுதுதான் விளங்கினதால் 'அவர்கள் ஒவ்வொருவருக்கும் வெள்ளை அங்கிகள் கொடுக்கப்பட்டது.' என்று சொல்லியிருக்கிறது. இந்த ஐந்தாம் முத்திரையின் காலம் பதினாரும் நூற்ருண்டிலிருந்து ஆரம்பித்து 18-ம் நூற்ருண்டின் மத்தி வரை நீடித்தது.

6-ம் முத்திரை.

"அவர் ஆரும் முத்திரையை உடைக்கக் கண்டேன்; ......இதோ, பூமி மிகவும் அதிர்ந்தது; சூரியன் கறுப்புக் கம்பளியைப்போலக்கறுத்தது; சந்திரன் இரத்தம்போலாயிற்று".........(வெளி. 6: 12) இதில் பூமி மிகவும் அதிர்ந்தது என்று வாசிக்கிரோம். இது 1755-ம் ஆடு நவம்பர்மீ 1-ம் தேதியில் லிஸ்பன்மா நகரில் நடந்த பூமி யதிர்ச்சியே. இந்தப் பூமி யதிர்ச்சி 4,000,000 மைல் தூரம் பூமியை அசையப்பண்ணிற்று 100,000 ஜனங்களுக்குமேல் இதினால் அன்று மாண்டிருக்கிரார்கள். இதுதான் உலகத்தில் இம்மட்டும் உண்டாயிருக்கிற பூமி யதிர்ச்சியில் மிகவும் பெரியது.

சூரியன் கறுப்புக் கம்பளியைப்போலக் கறுத்தது. சந்திரன் இரத்தம்போலாயிற்று. இது 1780-ம் ஆடு மேமீ 19-ம் தேதி நடந்தாயிற்று. அன்று காலை சுமார் 10-மணியிலிருந்து சூரியன் மங்கி இப்பூமியில் ஓர் காலமும் காணப்படாத பெரிய இருளை பகல் நேரத்தில் கண்டதாக சரித்திரங்களிலும், சாஸ்திரிகளின் புஸ்தகங்களிலும் வாசிக்கிரோம். அன்று பகல் இவ்விருளைக் கண்ட ஆடு, மாடுகள், மந்தையை விட்டுத் திரும்பினதாகவும்;........கோழிகள் கூட்டில் போய் அடைந்ததாகவும்; ஆந்தைகள் இரவு என்று எண்ணி வெளியே புறப்பட்டதாகவும்; வீடுகளிலே எழுத வாசிக்க மெழுகுவர்த்திகள் கொழுத்தினதாகவும்; வெகு உறுதியாய் அன்று இந்த அனுபோகம் பார்த்தவர்கள் எழுதியிருக்கிறதைப் பார்க்கிரோம். அப்பொழுது இந்தக் காட்சியைக் கண்ணுற்ற தேவனுடைய பிள்ளைகள் யாவரும், நிச்சயமாகவே இது நமது இரட்சகர் தமது வருகைக்கு கடைசியாக சுட்டிக்காட்டின அடையாளமென்றே உறுதியாய் நம்பினார்கள். அன்று இரவே சந்திரன் இரத்தமாக மாறினதாகவும், வெகு திட்டமாய் எழுதப்பட்டிருக்கிறதை வாசிக்கிரோம்.

"அத்தி மரமானது பெருங் காற்றினால் அசைக்கப்படும்போது அதின் காய்கள் உதிர்கிறதுபோல வானத்தின் நட்சத்திரங்களும் பூமியிலே விழுந்தது." (வெளி. 6: 13) இந்த வாக்கியத்தின் சத்தியமும் 1833-ம் ஆடு நவம்பர்மீ 13-ம் தேதி நடந்தேறியாயிற்று. இந்த விண்மாரியைக் கண்ணுற்ற அநேகர் இன்னும் உயிரோடிருக்கிருர்கள்.

"வானமும் சுருட்டப்பட்ட புஸ்தகம்போலாகி விலகிப்போயிற்று, மலைகள், தீவுகள் யாவும் தங்கள் இடங்களை விட்டு அகன்று போயின" (வெளி. 6: 14) இதுதான் அடுத்தாற்போல் பார்க்கவேண்டிய சம்பவம். அது இன்னும் நடக்கவில்லை.

ஆகையால் இதை வாசிக்கும் என் பிரிய நண்பர்களே! தற்சமயம் நாமிருக்கப்பட்ட காலம் வெளி. 6-ம் அதிகாரத்தின் 13-ம் 14-ம் வசனத்தின் மத்தியே. இப்படிப்பட்ட காலத்தில் வசிக்கிற நாம் இயேசு இரட்சகரின் வருகைக்கு ஆயத்தப்பட்டிருக்கிரோமா? அவர் வரும்போது, "இதோ இவரே நம்முடைய தேவன்; இவருக்காக காத்திருந்தோம்; இவர் நம்மை இரட்சிப்பார்; இவரே கர்த்தர், இவருக்காகக் காத்திருந்தோம்; இவருடைய இரட்சிப்பினால் களிகூர்ந்து மகிழுவோம்" (ஏசா. 25: 9) என்று களிப்புடன் சொல்ல ஆயத்தமாயிருக்கிறீர்களா? அல்லது யாதொரு ஆயத்தமுமில்லாமல் மிகவும் பரிதபிக்கப்படத்தக்க விதமாய் "பர்வதங்களையும் கல் மலைகளையும் நோக்கி நீங்கள் எங்கள்மேல் விழுந்து, சிங்காசனத்தின்மேல் வீற்றிருக்கிறவருடைய முகத்திற்கும், ஆட்டுக்குட்டியானவருடைய கோபத்திற்கும் எங்களை மறைத்துக்கொள்ளுங்கள்;—அவருடைய கோபாக்கினையின் மகா நாள் வந்துவிட்டது; யார் நிலைநிற்கக்கூடும்" (வெளி. 6: 16, 17) என்று சொல்லுவீர்களா? இதைச் சற்று நிதானித்து ஓர் தீர்மானம் பண்ணுவீர்களாக.

7-ம் முத்திரை.

"அவர் ஏழாம் முத்திரையை உடைத்தபோது, பரலோகத்தில் ஏறக்குறைய அரைமணி நேரமளவும் அமைதல் உண்டாயிற்று." (வெளி. 8: 1) ஆரும் முத்திரை வெளி. 6-ம் அதிகாரத்தோடு முடிந்தாயிற்று. 7-ம் முத்திரையைப்பற்றி 8-ம் அதிகாரத்தின் துவக்கத்திலே வாசிக்கிரோம். இதற்கிடையில் வெளிப்படுத்தின விசேஷத்தின் ஏழாம் அதிகாரம் முழுவதும் இருக்கிறது. அப்படியானால் இதில் சொல்லப்பட்டிருக்கிற சங்கதி 6-ம் முத்திரை முடியுமுன்னும், 7-ம் முத்திரையை உடைக்கு முன்னும், நடந்தேறவேண்டிய ஓர் பெரிய சம்பவமாய்த் தோன்றுகிறது. நிச்சயமாகவே இந்தச் சத்தியத்தையும் நாம் அறியவேண்டியது வெகு அவசியமாயிருக்கிறது. இதைப் பற்றி நமது அடுத்த பத்திரிகையில் வெகு திட்டமாய்ப் படிக்கலாமென்று எண்ணுகிறேன்.

"அவர் ஏழாம் முத்திரையை உடைத்தபோது பரலோகத்தில் ஏறக்குறைய அரைமணி நேரமளவும் அமைதல் உண்டாயிற்று" என்று (வெளி. 8: 1-ம்) பார்க்கிரோம். பரலோகத்திலே, தேவ சமுகத்தில் கணக்கில்லாத தேவ தூதர்கள் இருக்கிறதாக பின்கூறிய வசனங்களில் வாசிக்கிரோம். "பின்னும் நான் பார்த்தபோது, சிங்காசனத்தையும் ஜீவன்களையும் மூப்பர்களையும், சூழ்ந்திருந்த அநேக தூதர்களுடைய சத்தத்தைக் கேட்டேன். அவர்களுடைய இலக்கம் பதினாயிரம் பதினாயிரமாகவும், ஆயிரமாயிரமாவுமிருந்தது." (வெளி. 5: 11; தானி. 7: 9, 10.) இவ்வளவு ஏராளமான தேவ தூதர்கள் இருக்கப்பட்ட இடத்தில், அமைதல் உண்டாகவேண்டுமானால், ஏதாவது ஒரு காரியம் அவர்களுக்கு சம்பவிக்கவேண்டுமே. நிட்சயமாகவே அவர்கள் யாவரும் அதைவிட்டு, அப்புறப்பட்டு, வேறு இடம் போனால்தான் அமைதல் உண்டாகக்கூடும். அப்படிப்பட்ட காலம் எப்பொழுதாவது பரலோகத்தில் சம்பவிக்குமென்று பரிசுத்த வேதாகமத்தில் வாசிக்கிரோமா? ஆம், பின்கூறிய வசனத்தினால், கிறிஸ்து பூலோகத்திற்கு இரண்டாம் தடவையாக வந்து நம்மைப் பரலோகத்திலிருக்கும், அவருடைய பிதாவின் வீட்டிற்கு அழைத்துக்கொண்டு போகும்போது, இந்தச் சத்தியம்

நிறைவேறுமென்று நிச்சயிக்கிறோம். "அன்றியும் மனுஷ குமாரன் தமது மகிமை பொருந்தினவராய் சகல **பரிசுத்த** தூதரோடும்கூட வரும்போது, தமது மகிமையுள்ள சிங்காசனத்தின்மேல் வீற்றிருப்பார்." (மத். 25: 31) அப்படியானால், இந்த அமைதல் இயேசு இரட்சகர் பரலோகத்தைவிட்டு, இப்பூலோகத்திற்கு இரண்டாந் தடவை சகல பரிசுத்த தேவ தூதரோடும் வரும்போது, உறுதியாகவே நிறைவேறும். மேலும் இந்த அமைதல் ஏறக்குறைய அரைமணி நேரந்தான் உண்டாகுமென்று பார்க்கிறோம். இது தீர்க்கதரிசனத்தின் காலம். அதாவது தீர்க்கதரிசனத்தில் ஒரு நாள் ஒரு வருஷமாகக் கணிக்கப்பட்டிருக்கிறது. (எசே. 4: 6; எண். 14: 34) அப்படியானால் அரைமணி நேரமானது, ஓர் நாளின் நாற்பத்தெட்டுப் பாகத்தில் ஓர் பாகம், அதாவது 360 நாள் கொண்ட ஓர் வருஷத்தின் நாற்பத்தெட்டில் ஓர் பாகம்; இன்னும் தெளிவாய்ச்சொல்லவேண்டுமானால் ஏழைநாள். இதிலிருந்து, நாம் திட்டமாய் அறிந்துகொள்ளுகிற சத்தியம் என்னவென்றால், நமது இரட்சகர் பரலோகத்தை விட்டு, தமது சகல தூதர்களுடன் புறப்பட்டு, இப்பூலோகத்துக்கு வந்து, உயிரோடிருக்கும் தமது பிள்ளைகளையும், நித்திரை செய்யும் தமது பிள்ளைகளையும், மறுரூபப்படுத்தி, (மத். 24: 31.) பரலோகத்தில் அவர் இப்பொழுது ஆயத்தப்படுத்திக்கொண்டிருக்கிற இடத்துக்குக் கொண்டுபோய் சேர்க்க, ஏழைநாட் செல்லுமென்று வெகு தெளிவாய்ப் பார்க்கிறோம். இதற்குப் பிற்பாடுதான், பரலோகத்தில், பரிசுத்தவான்கள், கிறிஸ்துவோடு ஆயிர வருஷ அரசாட்சியை ஆரம்பிப்பார்கள்.

ஈ. டி. தாமஸ்.

இரு இரகசியங்கள்

(TWO MYSTERIES)

முன் ஓர் காலத்தில் புருஷிய தேசத்துக் காசனை பிரதெரிக் என்பவர் சவாரி போய்க்கொண்டிருக்கையில் வயோதிபனான கிருஷிகன் ஒருவன் வழியருகே தன் நிலத்தை மகிழ்ச்சியுடன் உழுதுகொண்டிருந்ததைக் கண்டார்.

"வயோதிபனே, நீ ஒரு பணக்காரனாயிருக்கவேண்டும்" என்று சொல்லி "இந்த நிலம் உன்னுடையதா?" என்று கேட்டார்.

அவர் ராஜா என்று அறியாத அந்த சமுசாரி "இல்லை, ஐயா, நான் அவ்வளவு ஐசுவரியவானல்ல, நான் கூலிக்கு உழுகிறேன்" என்று மறுமொழி சொன்னான்.

"உனக்கு நாள் ஒன்றுக்கு கூலி யென்ன?" வென்று ராஜா கேட்டார்.

"எட்டணா" என்று வேளாளன் விடை பகர்ந்தான்.

"இது அதிக மல்லவே, இதைக்கொண்டு காலங் கழிக்கக் கூடுமா?" என்று ராஜா கேட்டார்.

"இதைக்கொண்டு ஜீவனம் செய்து கொஞ்சம் மீதியும் வைத்திருக்கிறேன்" என்றான்.

"அது எப்படி" என்று ராஜா கேட்டார்.

"நல்லது, நான் உமக்குச் சொல்லுகிறேன்—இரண்டணா எனக்கும் என் மனைவிக்கும் செலவாகிறது. இரண்டணாவைக்கொண்டு என் பழைய கடன்களைச் செலுத்துகிறேன். இரண்டணாவைக் கடன் கொடுக்கிறேன். மீதி இரண்டணாவை நான் கர்த்தருக்குக் கொடுக்கிறேன் என்றான்.

"இது நான் அறிந்துகொள்ளக்கூடாத இரகசியமாயிருக்கிறதே" என்று ராஜா சொன்னார்.

"அப்படியானால், நான் உமக்கு அதைத் தெரிவிக்கிறேன், எனக்கு உதவி வேண்டியதாயிருந்தபோதும் நான் பெலவீனமாயிருந்தபோதும் என்னைப் பாதுகாத்து வந்த வயோதிபரான பெற்றோர் இருவர் வீட்டில் எனக்குண்டு. இப்பொழுது அவர்கள் பலவீனமாகி உதவி வேண்டியவர்களாயிருப்பதால் நான், அவர்களை ஆதரித்து வருகிறேன். இதுதான் நான் நாளொன்றுக்கு இரண்டணா செலுத்தி வருகிற என் பழைய கடன். என் பிள்ளைகள் கிறிஸ்தவ போதனையடையத்தக்கதாக நான் செலவிடுகிற இரண்டணா நான் கடன் கொடுக்கிறதற்குச் சரி, நானும் என் மனைவியும் முதிர் வயதாகி என் பிள்ளைகள் நன்றாயிருக்கும்போது அவர்கள் அதை எங்களுக்குத் திரும்பச் செலுத்துவார்கள். கடைசி இரண்டணாவைக்கொண்டு நான் ஆதரவற்ற என் இரண்டு சகோதரிகளை ஆதரித்து வருகிறேன். "இது தான் நான் கர்த்தருக்காகக் கொடுக்கிறது" என்று சொன்னான்.

"வயோதிபனே, நிதானமாய்ச் சொன்னாய், இப்போது, நீ சிந்திக்கும்படியான ஒரு விஷயத்தை உனக்குச் சொல்லுகிறேன். நீ முன் எப்போதாவது என்னைப் பார்த்ததுண்டா?" என்று அரசன் கேட்டான்.

"ஒருபோதும் உம்மைப் பார்த்ததில்லை" யென்று கிருஷிகன் சொன்னான்.

"ஐந்து நிமிஷத்திற்குள் நீ என்னை ஐம்பது தடவை பார்த்து, என்னைப்போலொத்த ஐம்பது உருவங்களை உன் சட்டை சாக்கில் கொண்டுபோவாய்" என்று அரசன் சொன்னார்.

"இது நான் விடுவிக்க முடியாத இரகசியமாயிருக்கிறதே" என்று வயோதிபன் சொன்னான்.

அப்படியானால் நான் அதை விடுக்கிறேன் என்று அரசன் சொல்லி தமது சட்டை சாக்கில் கைபோட்டு ராஜாவின் உருவம் பதிக்கப்பட்டிருந்த ஐம்பது புதிய தங்க நாணயங்களை அவன் கையில் எண்ணிக்கொடுத்து, இது தங்க நாணயங்கள், இதுவுங்கூட நமது தேவனாகிய கர்த்தரிடத்திலிருந்து வருகிறது.. நான் சம்பளம் கொடுக்கிற அவருடைய அதிகாரியாயிருக்கிறேன் என்று சொல்லி விடைபெற்றுப் போய் விட்டார்.

இச்சிறு கதையானது கிறிஸ்தவ ஜனங்களுக்கு இருக்கவேண்டிய மனதிருப்தியை நன்கு விளக்குகிறது. பணத்தையும் சொத்தையும் சேர்க்கவேண்டுமென்று கவலைப்பட்டு நாம் ஏன் காலத்தைக் கழிக்க வேண்டும்? வேண்டும்! வேண்டும்! இன்னும் வேண்டும்! என்று சொல்லுவது மனித இருதயத்தின் இயல்பாயிருக்கிறது. எவனிடத்தில் அதிகம் இருக்கிறதோ அவனுக்கே அதிகம் தேவையாயிருக்கிறது. இது நமது எஜமானாகிய கிறிஸ்துவிலிருக்கும் சிந்தையல்ல. நமக்கு முன்மாதிரியாயிருந்த கிறிஸ்து இவ்வுலக ஐசுவரியத்தையும் ஆடம்பரத்தையும் நாடினதில்லை. ஆடையாகாரத்தோடு அவர் திருப்தியாயிருந்தார். கிறிஸ்து இயேசுவிலிருந்த அதே சிந்தையை நாம் நமது ஜீவியத்தில் அதிகமாய்க் காட்டப் பிரயாசைப் படவேண்டும். "உலகத்திலே நாம் ஒன்றும் கொண்டுவந்ததுமில்லை, இதிலிருந்து நாம் ஒன்றும் கொண்டுபோவதுமில்லை என்பது நிச்சயம்." நாம் இங்கிருக்கும்போது நமது ஜீவனத்திற்கு வேண்டியவைகளே நமக்கு அவசியமாயிருக்கிறது. நாம் சோம்பேறிகளாயிருந்து இவ்வுலகத்தில் தரித்திரரும் நிர்ப்பாக்கியருமாயிருக்கவேண்டுமென்பது கடவுளுடைய விருப்பமல்ல. நம்முடைய தினசரி ஜீவனத்திற்கு வேண்டியவைகளைச் சவதரிக்கும்படியாக தேவன் நமக்குச் சத்துவத்தைக் கொடுத்திருக்கிறார். அவைகள் நமக்கு உண்டாயிருந்தால் அதுவே போதுமென்றிருக்கக் கடவோம்.

ஓய்வுநாள் ஆசரிப்பின் மைல் கல்

(MILEPOSTS FOR SABBATH OBSERVANCE)

தேவன் தங்களுக்குக் கட்டளையிடாத ஒரு நாளை சிலர் ஆசரித்துக்கொண்டிருக்கிறார்களென்று அநேக ஜனங்கள் இப்பொழுது நினைக்கிறார்கள். "சனிக்கிழமை ஓர் காலத்தில் ஓய்வுநாளாக ஆசரிக்கப்பட்டது; அது யூதருக்கு மாத்திரமே கொடுக்கப்பட்டதென்றும் பழைய உடன்படிக்கையின் காலத்தில் அது யூதருக்குக் கொடுக்கப்பட்டதென்றும், அது இப்போது ஒழிந்து போயிற்றென்றும், புறஜாதியார் அந்நாளை ஆசரிக்கத் தேவையில்லையென்றும் சொல்லி, இவ்விதமாக தற்காலம் தாங்கள் ஆசரிக்கும் இம்முறைமைக்குச் சாக்குப் போக்குகளைச் சொல்லப் பிரயாசைப்படுகிறார்கள்.

ஏழாம்நாள் ஓய்வானது யூத ஜாதியாருக்கென்று மாத்திரம் கொடுக்கப்பட்ட ஒரு ஏற்பாடா? அப்படியிருக்குமானால் அது அவர்களுடைய காலத்திற்கு முன்பு கொடுக்கப்படவில்லை யென்றும், அதற்கு பிற்பாடும் அது ஒரு நிலையான ஏற்பாடாக ஆசரிக்கப்படவில்லை யென்றும் நாம் கண்டறியலாம். ஏழாம் நாள் ஓய்வானது யூதருடைய காலத்திற்கு முன்னதாகவும் சீனாய் மலையில் நியாயப்பிரமாணம் கொடுக்கப்படுவதற்கு முன்னதாகவும், யூத ஜாதி உலகமெங்கும் சிதறிப்போன பிற்பாடும் ஆசரிக்கப்பட்டதென்று பார்க்கிறோம். ஆகையினாலே நாம் ஒரே நோக்கமுடையவர்களாய் இப்படிப்பட்ட தப்பான சாக்குப்போக்குகளை விலக்கவேண்டும். தேவன் அருளிய மற்ற ஒன்பது பிரமாணங்களைப் போலவே, ஓய்வுநாளும் எல்லா மனுஷருக்கும் உரியதென்று ஏற்றுக்கொள்ளவேண்டும். இக்கற்பனைகளில் எதையாவது அலக்ஷியமென்று தள்ளிவிடுகிறவன் கற்பனையை மீறுகிறான். இந்த ஒரு கற்பனை மாத்திரம் குறிக்கப்பட்ட ஒரு காலத்திற்கென்றும் அல்லது யூதருக்கு மாத்திரமா கொடுக்கப்பட்டதென்றும் மறுபடியும் கேட்கிறோம்.

ஆதிமுதற்கொண்டு ஆசரிக்கப்பட்டது.

கீழே காட்டிய வடி விவரத்தின்படி சிருஷ்டிப்பிலேயே தேவன் ஏழாம் நாளை ஆசீர்வதித்து அதைப் பரிசுத்தமாக்கினாரென்று பார்க்கிறோம். "ஓய்வுநாள் மனுஷனுக்கா உண்டாக்கப்பட்டது" என்று கிறிஸ்து சொன்னார். (மாற். 2: 27) முதல் மனுஷனாகிய ஆதாமுக்கு, ஓய்வுநாள் கொடுக்கப்பட்டதென்று கிறிஸ்துவினுடைய வார்த்தை தெளிவாய்க் காண்பிக்கிறது. தேவன் சீனாய் மலையில் நியாயப்பிரமாணத்தைக்

கொடுக்கு முன்னதாகவே அது இருந்தது. (ஆதி. 26: 5.)

கி. மு. 1996—1821 மட்டும் வசித்த முற்பிதாவாகிய ஆபிரகாம் இப்பிரமாணத்தைக் கைக்கொண்டார். சீனாய் மலையில் நியாயப்பிரமாணம் கொடுக்கப்படும் முன்னதாக, அந்தக்காலத்தில் வசித்தவர்கள் ஏழாம்நாள் ஓய்வை ஆசரித்தார்கள். இதற்கு அத்தாட்சியாக வடிவிவரணத்தில் மூன்றாவது பங்கைப் பார்க்க. இங்கே இஸ்ரவேல் புத்திரர், சீனாய் மலைக்கு வரும் முன்னதாக அவர்கள் தமது பிரமாணத்தைக் கைக்கொள்ளுகிறார்களா இல்லையா என்று தேவன் அவர்களைப் பரீக்ஷித்தார். (யாத். 16: 4.)

அப்படியானால் தேவனுடைய பிரமாணத்தின்படி ஏழாம் நாளை ஆசரிப்பது அவசியம். தேவனுடைய பிரமாணத்தை அலக்ஷியம் செய்து, ஓய்வுநாளில் மன்னாவை சேர்க்கப்போனவர்களைப் பார்த்து "என் கட்டளைகளையும் பிரமாணங்களையும் கைக்கொள்ள எந்த மட்டும் மனதில்லாதிருப்பீர்கள்" என்று தேவன் சொன்னார். (யாத். 16: 26-28.)

ஓய்வுநாளானது பழைய உடன்படிக்கைக்கு அடுத்ததென்று இன்னமும் யாராவது சாதிப்பார்களானால், சீனாய் மலையில் நியாயப்பிரமாணம் கொடுக்கப்படும் முன்னதாக ஓய்வுநாளுக்கு முந்தின நாளில் மன்னா வருஷிக்கப்பட்டதென்று எடுத்துரைக்கிறோம். (யாத். 16: 1.) ஏழாம் நாள் ஓய்வு பழைய உடன்படிக்கைக்கு முன்னானது என்றும் சீனாய் மலையில் நியாயப்பிரமாணம் கொடுக்கப்படும் முன்னதாக இருந்த முற்பிதாக்களின் காலத்தில் ஆசரிக்கப்பட்டதென்றும் இதிலிருந்து தெளிவாய் விளங்குகிறது.

எருசலேமின் அழிவுக்குக் காரணம்.

இப்பொழுது, சீனாய் மலையில் ஏழாம் நாள் ஓய்வு ஆசரிக்கப்பட்டதைப்பற்றி விஸ்தரிக்க வேண்டியதில்லை. இஸ்ரவேலர் ஓய்வுநாளை உண்மையாய்க் கைக்கொண்டிருப்பார்களானால் எருசலேம் நகரம் அழிக்கப்பட்டிருக்கமாட்டாது. எபிரேய ஜாதியும் இது பரியந்தம் நிலைத்திருந்திருக்கும். (எரே. 17: 21-27) ஆனால் அவர்கள் ஓய்வுநாளைப் பரிசுத்த குலைச்சலாக்கினதினிமித்தம் தேவன் அவர்களைப் புறஜாதிகளுக்குள்ளே சிதறடித்தார். (எசே. 20: 23-24) கி. மு. 606—536 வரையும், பாழாய்க்கிடந்த எருசலேம் தன்னுடைய ஓய்வை ஆசரித்து, அந்த எழுபது வருஷங்கள் முடியும் வரையும் ஓய்ந்திருந்தது. (2 நாளா. 36: 19-21.)

அவர்கள் சிறையிருப்பிலிருந்து விடுதலையான பின்பும் ஓய்வுநாள் ஆசரிக்கப்பட்டு வந்ததென்று நாம் பார்க்கிறோம். ஆனால், தற்காலத்திலிருக்கிற சில ஜனங்களைப் போலவே, அவர்களிலும் சிலர் ஓய்வுநாள் ஆசரிப்பு அவசியமில்லையென்று நினைத்தார்கள். இந்தப் பெரிய பாவத்திற்காக நெகேமியா என்பவர் அவர்களைக் கடிந்துகொண்டு, இந்தப் பெரிய பாவத்தினால் அவர்களுக்கு நேரிட்ட அந்த எழுபது வருஷ சிறையிருப்பை எடுத்துணர்த்தினார்.

கிறிஸ்து ஓய்வுநாளை ஆசரித்தார். அவர் தமது தந்தையுடன் தச்சுவேலை செய்யும் காலத்திலும் "தம்முடைய வழக்கத்தின்படி" ஓய்வுநாளை ஆசரித்தார். அவர் தமது ஊழியத்தைச் செய்த காலத்திலும் இவ்வழக்கத்தை அவர் விட்டுவிடவில்லை. நாம் வேறொரு நாளை ஆசரிக்கும்படி அவர் நமக்கு முன்மாதிரியைப் பின்வைத்துப் போகவில்லை. (லூக். 4: 16.)

கிறிஸ்துவின் மரணத்திற்குப் பின்பு, ஆதித்திருச்சபையிலுள்ள சீஷர்கள் "கற்பனையின்படியே ஓய்வுநாளில் ஓய்ந்திருந்தார்கள். (லூக். 23: 56) கிறிஸ்துவின் சரீரத்திற்கு ஓய்வு நாளில் கந்தவர்க்கமிடாமல் ஞாயிறு காலையில் கந்தவர்க்கமிடப் போனார்கள். (லூக். 24: 1.)

கி. பி. 45-ம் வருஷம் வரையிலும், யூதராலும் புறஜாதியாராலும் ஓய்வுநாள் ஆசரிக்கப்பட்டு வந்தது. (அப். 13: 42-44).

கி. பி. 53-ல் புறஜாதிகளின் பெரிய அப்போஸ்தலனாகிய பவுல் ஏழாம் நாள் ஓய்வை ஆசரித்தார். (அப். 17: 2; 18: 4.) இவர் கொரிந்து பட்டணத்தில் ஒன்றரை வருஷம் சஞ்சரித்த காலத்தில் வாரத்து நாட்களிலே கூடாரவேலை செய்து, ஓய்வுநாள்தோறும் பிரசங்கித்தாரென்று அப். 18-ம் அதிகாரத்தில் நாம் வாசிக்கிறோம். (வச. 1-11.)

எருசலேமின் அழிவுக்கு முன்னதாக, கிறிஸ்து தம்முடைய சீஷர்களைப் பார்த்து "நீங்கள் ஓடிப்போவது மாரிகாலத்திலாவது, ஓய்வுநாளிலாவது சம்பவியாதபடிக்கு வேண்டிக்கொள்ளுங்கள்" என்று சொன்னபடியினால், கி. பி. 70-ம் வருஷமட்டும் ஏழாம் நாள் ஓய்வு ஆசரிக்கப்பட்டதென்று நாம் நிச்சயிக்கிறோம். (மத். 24: 20.)

கி. பி. 96-ல் யோவான் அப்போஸ்தலன் கர்த்தருடைய நாளில் ஆவிக்குள்ளானார். (வெளி. 1: 10) இங்கே சொல்லப்பட்டிருக்கும் கர்த்தருடைய நாளானது ஞாயிற்றுக்கிழமை என்று யாராவது சொல்வார்களானால், ஞாயிற்றுக்கிழமையை தேவனல்ல, மனுஷனே கர்த்தருடைய நாளென்று அழைக்கிறானென்று நாம் சொல்லலாம். எப்பொழுதும் தேவன் ஓய்வுநாளை தம்முடைய பரிசுத்த நாளென்றே அழைக்கிறார். (ஏசாயா 58: 13.) அவர் ஞாயிற்றுக்கிழமைக்கல்ல ஓய்வுநாளுக்கே ஆண்டவராயிருக்கிறார். (மாற். 2: 28.) தேவன் பரிசுத்தமாக்காத நாளை நாம் என் கர்த்தருடைய நாளென்று அழைக்கவேண்டும். தேவன் பரிசுத்தமாக்கின நாளை கர்த்தருடைய நாளல்லவென்றும்; பரிசுத்தமாக்காதநாளை கர்த்தருடைய நாளென்றும் சொல்ல நாம் துணியலாமா? எண். 23: 8, 20-ம் வசனங்களிலிருக்கிற எச்சரிப்பை நாம் கவனிப்போமாக.

ஓய்வுநாள் 'இருண்ட காலத்திலும்' (Dark ages) ஆசரிக்கப்பட்டதென்றும், அப்படி ஆசரித்தவர்கள் உபத்திரவப்படுத்தப்பட்டார்களென்றும் நாம் சரித்திரங்களில் வாசிக்கிறோம்.

எல்லாவற்றிற்கும் மேலாக, புதிய பூமியிலே இரட்சிக்கப்பட்ட கூட்டத்தார் ஓய்வு நாளை ஆசரிப்பார்கள் (ஏசா. 66: 22, 23) ஓய்வுநாள் எதுமட்டும் நிலைத்திருக்கும். அது நித்திய காலமாக நிலைத்திருக்குமென்பது தெளிவாயிருக்கிறது.

ஓய்வுநாள் யூதருக்கென்று மாத்திரம் கொடுக்கப்படவில்லையென்றும், அது ஒழிந்துபோகவில்லை யென்றும் பற்பல திருஷ்டாந்தங்களினால் ரூபித்துக் காட்டினோம். அது "மனுஷனுக்காக" உண்டாக்கப்பட்டது. "ஆகையால், தேவனுடைய ஜனங்களுக்கு இளைப்பாறுகிற காலம் இனி வருகிறதாயிருக்கிறது." (எபி. 4: 9.)

சிருஷ்டிப்பில் ஓய்வுநாள். கி. மு. 4004. ஆதி. 2: 2, 3.	சீனாய்க்குமுன் நியாயப்பிரமாணம் கி. மு. 1822. ஆதி. 26: 5.	பழைய உடன்படிக்கைக்கு முன் ஓய்வுநாள் பிரமாணம். கி. மு. 1491. யாத். 16: 25-30.

சீனாயில் ஓய்வுநாள். கி. மு. 1491. யாத். 20: 8-11.	சிறையிருப்பில் ஓய்வுநாள். கி. மு. 606. எரே. 17: 21-27.	சிறையிருப்புக்குப் பின் ஓய்வுநாள். கி. மு. 434. நெகே. 13:15-19.
கிறிஸ்து ஓய்வு நாளை ஆசரித்தது. கி. பி. 27. லூக். 4: 16.	சீஷர்கள் ஓய்வு நாளை ஆசரித்தது. கி. பி. 31. லூக். 23: 56.	புறஜாதியார் ஓய்வுநாளை ஆசரித்தது. கி. பி. 45. அப். 13: 42-44.
பவுல் ஓய்வுநாளை ஆசரித்தது. கி. பி. 53. அப். 17:2; 18: 4.	எருசலேமின் அழிவில் ஓய்வுநாள். கி. பி. 70. மத். 24: 20.	யோவான் ஓய்வு நாளை ஆசரித்தது. கி. பி. 96. வெளி. 1: 10.

'இருண்ட காலத்தில்' ஓய்வு நாள். கி. பி. 538-1798.	புதிய பூமியில் சதா காலங்களிலும் ஓய்வுநாள் ஏசா. 66: 22, 23.

தேவனுடைய நாளும் என்னுடைய நாளும்

வாரத்தில் இரண்டு நாட்களைப்பற்றி நான் சற்றேனும் கவலைப்படுகிறதேயில்லை. அந்த இரண்டு தங்கமான தினங்களையும் யாதொரு திகிலும் கவலையுமின்றி கைக்கொண்டு வருகிறேன்.

இந்த தினங்களிலொன்று 'நேற்றையத்தினம்.' 'நேற்றையத்தினம்' தன்னுடைய எல்லா கவலைகளோடும், மனவருத்தங்களோடும், அபஜெயங்களோடும், தன் எல்லா துன்பங்களோடும், துக்கங்களோடும் நான் திரும்ப நினைக்கக்கூடாத வண்ணமாக என் திறமைக்கு மிஞ்சி கடந்துபோய்விட்டது. நான் செய்த எந்த வேலைகளையும் தவிர்க்கவும் முடியாது; நான் பேசின எந்த வார்த்தையையும் மறுக்கவும் முடியாது; என்னால் நேற்று எழும்பின கலகத்தை அமர்த்தவும் முடியாது. என் ஜீவியத்திலுண்டாகக்கூடிய சகல மனவருத்தங்களும், வியாகுலங்களும், தப்பிதங்களும், இவையெல்லாம் கற்பாறையிலிருந்து எண்ணெயையும், கசப்பான ஊற்றிலிருந்து தித்திப்பான தண்ணீரையும் கொண்டுவரக்கூடியவரும், குறைவை நிறைவாக்கவும், புலம்பலை பூரிப்பாக்கவும், கூடியவருமான வல்லவரின் கரத்திலிருக்கின்றன. நேற்றயத்தினத்திற்காக நான் செய்யவேண்டியது ஒன்றுமில்லை. ஆனால், நேற்றையத்தினத்தின் ரோஜா புஷ்பத்தின் வாசனையைப்போன்ற சந்தோஷத்தையும், இன்பத்தையும், மட்டும் நான் என் ஞாபகத்தில் பேணி வைத்திருக்கிறேன். அது நேற்று என்னுடையதாயிருந்தது; ஆனால், இன்றைக்கோ அது தேவனுடையதாயிருக்கிறது.

நான் கவலைப்படாத அடுத்ததினம் "நாளையத்தினம்" தான். அது அதற்குரிய கவலைகளோடும், வருத்தங்களோடும், துன்பங்களோடும், துயரங்களோடும், பெருமையான வாக்குத்தத்தங்களோடும், அதினுடைய தவறுதல்களோடும், மேன்மையான நோக்கங்களோடும், இளப்பமான குறைவுகளோடும், சென்றுபோன தன் உடன் சகோதரியாகிய நேற்றையத்தினத்தைப் போலவே நாளையத்தினமும் எனக்கு எட்டாத தூரத்திலிருக்கிறது. நாளையத்தினத்திற்குரிய சூரியன், ரோஜாப்பூ வர்ணம் பொருந்திய அழகுடையதாய் உதித்தாலும் உதிக்கலாம்; அல்லது, அது மேக மந்தாரத்திற்குள்ளே இருந்தாலும் இருக்கலாம். என்றாலும், அது எப்படியும் உதிக்கும். நாளையத்தினம், இன்றைக்கு தேவனுடைய கரத்தில் இருக்கிறது;

நாளைக்குத்தான் அது என்னுடையதாகும். நாளையத் தினத்தைப்பற்றி இன்று எனக்கு யாதொன்று மில்லை. ஆனால், நாளையத்தினத்திற்குறிய இன்பமான வாக்குத்தத்தத்தின் நம்பிக்கையை மாத்திரந்தான் என் னுள்ளத்தில், ஒரு நட்சத்திரத்தைப்போல், மின்னி மின்னி பிரகாசித்துக்கொண்டிருக்கிறது. இதைத் தவிர, நாளையத்தினத்திற்குறிய மற்ற யாவும் நேற்றைய யத்தின் பொக்கிஷங்களையுடைய கருணை கடவுளின் பாதுகாப்புக்குள் அடங்கியிருக்கின்றன. ஆகாய விரிவைப்பார்க்கிலும் விசால முள்ளவரும், கடல்களைப் பார்க்கிலும் ஆழமுள்ளவரும், நட்சத்திரங்களைப் பார்க்கிலும் உன்னதத்திலிருக்கிறவருமான நேசரைத்தான் நாளைக்குறிய என் எல்லா காரியத்திற்காக நான் நம்பி சார்ந்திருக்கிறேன்.

இன்றையத் தினத்திற்குறியதைத் தவிர வேறொன் றும் இன்று எனக்கடுத்ததல்ல. எந்த மனுஷனும் இன்றைக்குறிய போராட்டத்தை போராடக்கூடும்; எவரும் ஒரே ஒரு நாளுக்குறிய சுமையை லேசாய் சுமக்கக் கூடும்; எவரும் இன்றைக்குறிய சோதனையை வெல்லக்கூடும். என் மோட்ச பிரயாண வழியை சந்தோஷிப்பிக்கிற என் பெலன் இதுவே. ஒவ்வொருநாளும் அந்தந்த தினத்திற்குறிய காரியங்களைத்தான் நினைக்கிறேன், செய்கிறேன், செய்து முடிக்கிறேன். அதுவே லேசான நாள்; அது மனிதனுடைய நாள். நான் அதை செய்யும்பொழுது, நான் ஒன்றும் செய்யமுடியாத நேற்றயத்தினத்தையும் நாளையத்தினத்தையும் குறித்து, அன்புள்ள உன்னத கர்த்தர் கவலை யெடுத்துக் கொள்ளுகிறார்.

கிறிஸ்தவ பண்டிகைகளும் அவற்றின் சரித்திர சம்பந்தமும்

கிறிஸ்மஸ் அல்லது கிறிஸ்து பிறந்த நாள். (CHRISTMAS DAY)

கிறிஸ்மஸ் பண்டிகை ஏன் டிசம்பர் மாசம் 25-ம் தேதியில் வருகிறது? இயேசுவானவர் அந்த காலத்தில் பிறந்தாரென்று காட்டும்படியான அத்தாட்சி ஒன்றும் வேதத்தில் காட்டப்படவில்லை.

வேனிற் காலத்தின் பின்பாகம் அல்லது இலை யுதிர் காலம், இயேசு பிறந்த அதிக நிச்சயமான வருஷகாலமாயிருக்கிறதாக காணுகிறதென்று லார்னர் (Dr. Lardner) என்னும் சாஸ்திரி சொல்லுகிறார். பலஸ்தீனா நாட்டு மந்தை மேய்ப்பர்கள்கூட அக்காலத்தில் வெளிகளிலே மந்தைகளுக்கு மேய்ச்சல் காட்டி இரவில் மந்தையைக் காத்துக்கொண்டிருந்தார்கள். அப்பொழுது அவர்களுக்கு அந்த நற்செய்தி அறிவிக்கப் பட்டதென்று நாம் வேதத்தில் வாசிக்கிறோம். அது மாரிகாலமாயிருக்குமானால் பலஸ்தீனா நாட்டில் சீதள காலத்தில் மேய்ப்பர் வெளியில் தங்கி மந்தையைப் பார்த்துக்கொள்ளக்கூடாததாயிருக்கும்.

கிறிஸ்தவ சபையில் கிறிஸ்மாஸ் அல்லது கிறிஸ்துவின் பிறப்பு என்றும் ஒரு பண்டிகையைப்பற்றி 3-ம் நூற்றாண்டு வரையும் கேள்விப்பட்டதே யில்லை என்று ஹிஸ்லப் என்பவர் சொல்லுகிறார்.

கிறிஸ்து பிறப்பதற்கு வெகு காலத்துக்கு முன்பு பாபிலோனியருடைய வானராக்கினியின் மகனுடைய ஜன்ன நாளை நினைவுகூறும்படியாக வருஷத்தில் திட்டமான இந்த சமயத்தில் அஞ்ஞானிகளுக்குள்ளே ஒரு பண்டிகை கொண்டாடப்பட்டு வந்தது. அஞ்ஞான ரோமையிலும் அஞ்ஞான எகிப்திலும் கிறிஸ்மஸ் விருக்ஷம் (Christmas tree) வைப்பது வழக்கமாயிருந்தது. ஆங்கில சாக்ஸன் ஜாதியாருடைய அஞ்ஞானிகளான முற்பிதாக்களும் டிசம்பர் மாசம் 25-ம் தேதியை (Yale day) குழந்தையின் நாள் என்று அழைத்து வந்தார்கள். அவர்கள் கிறிஸ்து மார்க்கத்தோடு சம்பந்தப்படுவதற்கு வெகு காலத்திற்கு முன்பே இது நடந்தது. அஞ்ஞான மார்க்கமானது இந்த ஜனன நாளை வெகு தூரம் விசாலமாக ஆசரித்து வந்தது. சொல்ல வேண்டுமானால் இப்பண்டிகை பாபிலோனியரின் மேசியாவின் பிறந்த நாளாக கொண்டாடப்பட்டது.

நாற்பது நாள் உபவாச பண்டிகை. (LENT DAYS)

இது பாபிலோனியரின் தேவியை தொழுதுகொள்ளுகிறவர்களிடத்திலிருந்து இரவலாக வாங்கப்பட்டது. இவ்விதமான நாற்பதுநாளுபவாச பண்டிகையானது கூர்டிஸ்தான் தேசத்திலுள்ள பேய் வணக்கக்காரரான அஞ்ஞானிகளால் வருஷத்தின் வசந்த காலத்தில் இந்நாள் வரைக்கும் ஆசரிக்கப்பட்டு வருகிறது. அவர்கள் அதைப் பாபிலோனியரிடத்திலிருந்து சுதந்தரமாய்ப் பெற்றுக்கொண்டார்கள். எகிப்தியருடைய இந்த நாற்பது நாளுபவாச பண்டிகையானது மகா மத்தியஸ்த தேவனாகிய அதோனியஸ், அல்லது ஓசிரிஸ் என்பவருடைய ஞாபகத்திற்கென்றே விசேஷமாகக் கொண்டாடப்பட்டது. அஞ்ஞானிகளுக்குள் இந்த லெந்து என்னும் பண்டிகையானது தம்முசு தேவனுடைய மரணத்திற்கும் உயிர்த்தெழுதலுக்கும் நினைவு கூறுதலாகக் கொண்டாடப்பட்டது. அநேக தேசங்களில் இந்தப் பண்டிகை கிறிஸ்தவ பண்டிகை கொண்டாடப்படுகிற காலத்திற்கு அதிக பிந்தி கொண்டாடப்பட்டது. எகிப்தில் மே மாதத்திலும், பிரித்தானியாவில் சில சமயங்களில் எப்பிரல் மாதத்திலும் பலஸ்தீனாவிலும் அசிரியாவிலும் ஜூன் மாதத்திலும் கொண்டாடப்பட்டது.

ரோம சபையோ அஞ்ஞான பண்டிகையை கிறிஸ்தவ பண்டிகையாக சமப்படுத்தி கி. பி. 525-ல் கொண்டாட ஆரம்பித்தது. இப்படி சரிப்படுத்தி முடிப்பதற்குக் கருவியாயிருந்தவர் சின்ன தியோனிசியு என்னும் சன்னியாசியே. (Abbot Dionysius the little.)

பெரிய வெள்ளிக்கிழமை (Good Friday)

ஓசீரியஸ் என்னும் தேவன் மரித்த தினத்தில் அவனுடைய தொண்டர்கள் தங்கள் சரீரத்தின் ஒவ்வொரு உறுப்புகளிலிருந்து இரத்தம் தாரைதாரையாய் பாயும் வரைக்கும் சவுக்குகளால் தங்களை அடித்துக்கொள்ளும் வழக்கத்தைப்போல, இந்த தினத்தில் ரோமையிலும், மாடிரிட் நகரத்திலும் ரோமானித்தாரின் விக்கிரகாராதனைக்கு உறைவிடமான மற்ற பட்டணங்களிலும் செய்து வருகிறார்கள்.

"கத்தோலிக்க சபையின் நியமமே ஞாயிற்றுக்கிழமை ஓய்வுக்கும் மற்றெல்லாப் பரிசுத்த நாட்களுக்கும் ஆதாரமாயிருக்கிறது"—கத்தோலிக்க கிறிஸ்தவ போதினி 253-ம் பக்கம்.

கிறிஸ்தவர்கள் பெரிய வெள்ளிக்கிழமையையும், ஈஸ்ற்றர் ஞாயிறையும், ஞாயிற்றுக்கிழமை ஓய்வையும் அநேக நூற்றாண்டுகளாக ஆசரித்து வந்திருக்கிறார்கள். மேற் சொல்லிய காரியங்களுக்கு வேதத்திலாவது அல்லது அப்போஸ்தலருடைய போதனையிலாவது அல்லது ஆதிச்சபை மூப்பரின் போதனையிலாவது முகாந்தரங்கள் இருக்குமென்று நினைத்து அவர்கள் இதை ஆசரித்து வந்தார்கள். ஆனால் வேதத்தில் இதற்கு யாதொரு ஆதாரமு மில்லையென்று தெளிவாய்த் தெரிகிறது. இப்பண்டிகைகளெல்லாம் தேவ கட்டளை யல்லவென்று உலகத்தில் பெயர்போன சாஸ்திரிகள் எழுதி வைத்திருக்கிறார்கள். அதுபோலவே ஞாயிற்றுக்கிழமையை வாரத்தின் ஓய்வுநாளாக ஆசரிப்பதற்கும் யாதொரு முகாந்தரமே யில்லை.

உயிர்த்தெழுந்த பண்டிகை. (Easter day)

ஈஸ்ற்றர் என்பது வானலோக ராக்கினி என்ற பெல்த்தீஸ் என்பவளுடைய நாமதேயங்களில் ஒன்றாகிய அஸ்த்தார்தியே யல்லாமல் வேறொன்றுமல்ல. நினிவே பட்டணத்து ஜனங்கள் அதை "இஷ்டர்" என்று உச்சரித்தார்கள் "ஈஸ்ற்றர்" என்னும் வார்த்தை மூன்றும் நான்காம் நூற்றாண்டுகளிலிருந்து மெய்யான கிறிஸ்தவ சபையில் வழங்கப்படவில்லை. (Papal mysteries.)

மேற்காட்டிய பண்டிகைகளும் இன்னுமநேக பண்டிகைகளும் உற்சவங்களும் அஞ்ஞான மார்க்கத்தாருக்கு அனுசரணையாக பாப்பு மார்க்கம் ஏற்படுத்தியிருப்பதாக சரித்திரத்தின் மூலமாய் தெளிவாகிறது.

அப்போஸ்தலருடைய சொரூபங்களை தேர் முதலானவைகள் கட்டி அதில் வைத்து, இந்துக்கள் விக்கிரகங்களை வாகனங்களில் வைத்து கொட்டு முழக்குடனே ஊர்கோலம் வருவதுபோலவே பாப்பு மார்க்கத்தாரும் செய்கிறார்கள். அச்சமயங்களில் பேதமையான ஜனங்கள் அவ்விக்கிரகங்களையும் சொரூபங்களையும் வணங்குவதும் பூசை செய்வதும் வழக்கமாயிருக்கிறது.

திருச்சபைக்கு ஆதிகாரணராகிய உலக குரு உபதேசித்தவைகளில் தம்முடைய ஜனன மரண நாட்களை உற்சவமாக கொண்டாடவேண்டுமென்று சொன்னதாக வேதாகமத்தில் ஒரு இடத்திலும் காணப்படவில்லை.

அவருடைய திரு ஊழியத்தை நிறைவேற்ற அவர் தாமே தெரிந்துகொண்ட அப்போஸ்தலர்கள்கூட இரட்சகருடைய பிறப்பு மரிப்பு தினங்களை கொண்டாடவில்லை யென்றும், அல்லது தங்களுடைய மரணத்தையோ, சொரூபத்தையோ, இரட்சகருடைய சொரூபத்தையோ விக்கிரகாராதனைக்குச் சமமாக நடத்த வேண்டுமென்றாவது சொரூபம் உண்டாக்கவேண்டுமென்றாவது போதிக்கவில்லையென்று சத்திய வேதம் தெளிவாய்ப் போதிக்கிறது. பிந்தி உண்டான திருச்சபையில் சில நூற்றாண்டுகளாக இப்படிப்பட்ட சொரூப வணக்கம் உற்சவம் முதலானவை கொண்டாடப்படவில்லையென்று திருச்சபை சரித்திரம் தெளிவாய்க் காட்டுகிறது.

பின்னிட்டு உண்டான் பாப்புக்கள் ஜனங்களுடைய வசதிக்கும் அனுகூலத்திற்கும் ஏற்றபடி அஞ்ஞான மார்க்கத்திலுள்ள விக்கிரகாராதனைக்குப் பதிலாக சொரூப வணக்கம், அநேக பண்டிகைகள், உபவாச தினங்கள் உற்சவதினங்கள், அப்போஸ்தலரை நினைவுகூறும் திருநாட்கள் முதலியவைகளை உண்டாக்கி திருச்சபையின் உண்மையான சத்தியத்தைக் கவிழ்த்துப்போட்டார்கள்.

அப்போஸ்தலனாகிய பவுல் கொலோசேயருக்கு எழுதின நிருபத்தில் (கொலோ. 2: 16) பண்டிகை நாள் மாதப்பிறப்பு முதலியவைகள் கிறிஸ்துவின் சிலுவையோடு முடிவடைந்ததாக சொல்லுகிறார்.

சீர்திருத்தப்பட்ட சபையோ சகலவித அஞ்ஞான உலக இன்பங்களுக்கு ஆதாரவாகிய சகல பண்டிகைகளையும் ஒழித்துவிட்டு மெய்யான இரட்சகர் நமக்கு ஆயத்தப்படுத்தியிருக்கிற மேலோக இன்பத்தை நம் ஒவ்வொருவருக்கும் கொடுக்கவும், அவர் நமக்குப் போதித்தப்போன பிரகாரம் "நான் மறுபடியும் வந்து உங்களை என்னிடத்தில் சேர்த்துக்கொள்ளுவேன்." என்கிற காலம் வரும்வரையும் அவருடைய வருகைக்குக் காத்திருந்து அவரிடத்தில் மெய்யான பாக்கியத்தைப் பெற்றுக் கொள்ளும்படிக்கு தேவனுடைய கற்பனைகளையும் இயேசுவின்மேலுள்ள விசுவாசத்தையும் காத்துக்கொள்ளுகிற (வெளி. 14: 12) ஆயத்தமுள்ள சபையாயிருக்கும். ஆகையால் நாம் உலகாசாரங்களை ஒழித்து உன்னதத்தின் தேவனுக்கு மகிமையுண்டாகத்தக்கதான அவருடைய தசபிரமாணங்களையே நமது அணிகலமாக்கி அவருடைய வருகையே நமக்கு பெரிய உற்சவமாயிருக்கும்படிக்கு ஆயத்தப்படுவோமாக.

Selected.

மனுஷ தத்துவம்

(NATURE OF MAN)

மனுஷன் அழிவுக்கேதுவானவன்.

1. "அழிவில்லாத தன்மை தேவன் ஒருவருக்கே உரியது. ஆகையால் மனுஷன் அழிவுக்குரியவனே. 1 தீமோ. 6: 16; 1: 17.

2. மனுஷன் அழியாமையைத் தேடும்படி போதிக்கப்படுகிறதினாலே (ரோ. 2: 7). அவன் அழிவுக்கேதுவானவனென்று ஏற்படுகிறது. யோபு. 4: 17; 1 கொரி. 15: 54.

3. மனுஷன் பூமியின் மண்ணினாலே உருவாக்கப்பட்டு (ஆதி. 2: 7.) தேவனுடைய சாயலாக சிருஷ்டிக்கப்பட்டான். ஆதி. 1: 26, 27.

4. தேவன் சர்வ ஞானமுள்ளவராயும் மட்டற்றவராயுமிருக்கிறதினாலே மனுஷனும் அப்படியே இருக்கிறானென்று நாம் சொல்லுகிறதில்லை. அதுபோலவே மனுஷன் தேவ சாயலாக சிருஷ்டிக்கப்பட்டதாலே அவன் தேவனைப்போல அழிவில்லாத தன்மையுள்ளவனென்று சொல்லவும் கூடாதே.

ஜீவ சுவாசம்.

5. மனுஷன் பூமியின் மண்ணினாலே உருவாக்கப்பட்டபின் தேவன் ஜீவ சுவாசத்தை அவன் நாசியிலே ஊதினார். மனுஷன் ஜீவாத்துமாவானான். ஆதி. 2: 7; யோபு 33: 4.

6. சுவாசம் என்கிற வார்த்தைக்கு 'ஷாமா' வென்ற மூலபதம் வழங்கப்பட்டிருக்கிறது. அது பழைய ஏற்பாட்டில் எபிரேய பாஷையில் இருபத்துநாலு தடவையும் கல்தேய பாஷையில் ஒரு தடவையும் (தானி. 5: 23) வருகிறது. ஆனால் இந்த 'ஷாமா' வென்ற சுவாசம் அழியாத்தன்மை அல்லது சாவாத்தன்மை உள்ளதென்று காட்டுகிற குறிப்புகள் யாதொன்றும் அவைகளில் இல்லை.

7. மிருகங்களுக்கும் 'ஷாமா' வென்ற ஜீவ சுவாசமிருக்கிறதாகச் சொல்லப்பட்டிருக்கிறது. ஆதி. 7: 22.

ஆத்துமா.

8. ஆத்துமா வென்கிற வார்த்தைக்கு எபிரேய பாஷையில் 'நிபேஷ்' என்ற பதம் வழங்கப்பட்டிக்கிறது. அது பழைய ஏற்பாட்டில் 754 தடவை வருகிறது. கிரேக்கு பாஷையில் அதற்கு 'சூச்சி' என்று பேர். அது புதிய ஏற்பாட்டில் 104 தடவை வருகிறது. ஆனால் மனுஷனுடைய ஆத்துமா சாகாதென்றாவது அல்லது அழிந்துபோகாதென்றாவது ஒரு வாக்கியத்திலும் சொல்லப்படவில்லை.

9. மிருகங்களுக்கும் ஜீவாத்துமா இருக்கிறதாகச் சொல்லப்பட்டிருக்கிறது. ஆதி. 1: 30; வெளி. 11: 3. இந்த வாக்கியங்களில் ஜீவாத்துமா என்றர்த்தமுள்ள எபிரேய பதத்துக்கு தமிழில் பிராணிகளென்று மொழி பெயர்த்திருக்கிறது.

10. மனுஷனுடைய ஆத்துமாவைத் தனியே பார்த்தாலும் அது அழிவிக்குரியதாகவே யிருக்கிறது. ஏனென்றால் பாவஞ் செய்கிற ஆத்துமாவே சாகுமென்று வேதம் சொல்லுகிறது. எசே. 18: 4, 20; மத். 10: 28.

ஆவி.

11. ஆவி என்ற வார்த்தை 'ரூவக' என்ற எபிரேயப் பதத்துக்குச் சரி. அது பழைய ஏற்பாட்டில் 377 தடவை வருகிறது. கிரேக்குப் பாஷையில் அதற்கு 'நியூமா' வென்று பேர். அது புதிய ஏற்பாட்டில் 385 தடவை வருகிறது. ஆனால் மனுஷனுடைய ஆவி அழியாதென்றாவது அல்லது சாகாதென்றாவது ஒரு வாக்கியத்திலும் சொல்லப்படவில்லை.

12. மிருகங்களுக்கும் ஜீவ ஆவியிருக்கிறதாகச் சொல்லப்பட்டிருக்கிறது. ஆதி. 7: 15, 22; பிர. 3: 19-21. இந்த வாக்கியங்களில் ஆவி என்றர்த்தமுள்ள எபிரேய் பதத்துக்கு தமிழில் சுவாசமென்று மொழி பெயர்த்திருக்கிறது.

பொழிப்புரை.

13. சுவாசம், ஆத்துமா, ஆவி என்றர்த்தமுள்ள மூல பதங்கள் பழைய ஏற்பாட்டிலும் புதிய ஏற்பாட்டிலுமாக சுமார் 1644 தடவை வருகிறது. ஆனால் சாகாத ஆத்துமா அல்லது அழியாத ஆவி இவை போன்ற வாசகம் அவைகளில் இல்லை என்பது ஆட்சேபிக்கக்கூடாத சங்கதியாயிருக்கிறது. மேலும் மனுஷனுடைய ஆத்துமாவாவது ஆவியாவது சாகாது அல்லது சாகக்கூடாது என்பதைக் காட்டத்தக்க யாதொரு குறிப்புகளும் அவைகளில் இல்லை. ஆகையால் ஆத்துமா அல்லது ஆவி அழியாத்தன்மையுள்ளதென்பதற்கு யாதொரு அத்தாட்சியுமில்லை என்றேற்படுகிறது.

138-ம் பாடம் Bible Doctrines by
O. H. Johnson.

சுகாதார விஷயங்கள்

ஓர் சம்பாஷணை

பாக்கியம் பிள்ளை:—நான் அந்தப்பயலை லேசிலே விடமாட்டேன். நான் மீசை முளைத்த ஆண் பிள்ளை என்பதை அவனுக்குக் காட்டுவேன்.

சமாதானம் பிள்ளை:—யார்மேல் அண்ணா உங்களுக்கு அவ்வளவு கோபம்? நீங்கள் ஆண்பிள்ளை என்று எல்லோருக்கும் தெரியுமே.

பாக்:—வா, தம்பி சமாதானம், அந்த சந்தோஷம் பயல் என்னைப்பற்றி பல இடங்களிலே கேவலமாய்ப் பேசிக்கொண்டு திரிகிறானாம். அவன் பல்லை உதிர்த்து அவன் கையிலே கொடுக்கிறேன்.

சமா:—உங்களைப்பற்றி சந்தோஷம் பிள்ளை கேவலமாக என்ன பேசினார்? அவர் பொய் பேசுகிறவரென்று நான் இதுவரையும் கேள்விப்பட்டதில்லையே.

பாக்:—பொய்யோ, மெய்யோ! அவன் என்னைப் பற்றிப் பேசுகிறதற்கு எம்மாத்திரம்? நேற்றுப் பயல்கள் என் பேரைக் கெடுக்கப் பார்க்கலாமா?

சமா:—அவர் என்ன சொன்னார் அண்ணா? அதைச் சொல்லுங்கள்.

பாக்:—நான் குடிகாரனென்று இவன் கண்டானா? இவன் ஏன் மற்றவர்களிடம் என்னைப்பற்றித் தூற்றுகிறான்?

சமா:—ஏன் அண்ணா, இப்போதுங்கூட நீங்கள் பேசுகையில் சாராய நாற்றம் அடிக்கிறதே. நீங்கள் குடிக்கிறீர்களென்று மற்றவர்கள் சாட்சி தேவையில்லையே. நீங்களே "என் அப்பன் குதிருக்குள் இல்லை" என்றால்போல் சாட்சி கொடுக்கிறீர்களே.

பாக்:—என்ன தம்பி நீ நல்ல பிள்ளை என்று எண்ணியிருந்தேன். நீயுமா என்னைக் குடிகாரனென்று அந்த சந்தோஷம் பயலைப்போல் சொல்லுகிறாய்? அவனை நான் சிரிப்பாசிரிக்க வைக்காவிட்டால் நான் தாவீது பிள்ளை மகனல்ல.

சமா:—சந்தோஷம் பிள்ளை உங்களைப்பற்றிக் குறை வாய்ப் பேசியிருந்தால் அதற்கு நீங்கள் தானே காரணம். அவரை ஏன் குற்றம் சாட்டுகிறீர்கள்?

பாக்:—அந்தப்பயல் எனக்குச் சாராயம் வாங்கிக் கொடுத்தானா? நான் என் பணத்தில் வாங்கிக் குடித்தால் அவனுக்கென்ன?

சமா:—"வாய்த்தவிடும்போய் அடுப்பு நெருப்பும் அவிந்தால்போல்," உங்கள் காசை செலவழித்து, உங்கள் மதிப்பு கெட நீங்களே வழி வைக்கிறீர்கள் என்று எனக்குத் தோன்றுகிறது ....நமது கோவிலில் உங்களை மூப்பனாராய்த் தெரிந்துகொள்ள இரண்டு சீட்டுகள் குறைந்தனவே. காரணத்தை விசாரித்தால் பல பேர் உங்கள் குடியினிமித்தம் உங்களை மூப்பர் வேலைக்கு தகுதியற்றவர்களென்று எண்ணினதாக தெரிகிறது.

பாக்:—நான் குடித்துவிட்டு யாரிடத்தில் சண்டைக்குப் போனேன், எங்கே வெறித்துக் கிடந்தேன்.

சமா:—அதைப்பற்றி எனக்கு ஒன்றும் தெரியாது. மிதமாய்க் குடிக்க ஆரம்பித்த பலர் சில வருஷங்களுக்குள் மிஞ்சின குடியர்களாய்ப் போனதை நான் பார்த்திருக்கிறேன்.

பாக்:—நான் அப்படியாக மாட்டேன். புத்தி கெட்ட பயல்கள் மிருகத்தைப்போல் குடித்தால் எல்லோரும அப்படியிருப்பார்களென்று எண்ணவேண்டாம்.

சமா:—நீங்கள் மிருகத்தின் பேச்செடுத்தீர்களே, எல்லா மிருகங்களும் இயற்கையில் கடவுள் கொடுத்த தண்ணீரைக் குடித்து சுகமாயிருக்கையில் மனுஷரில் சிலர் இயற்கைக்கு விரோதமாய் மதுபானத்தைக் குடித்துத் தங்கள் சுகத்தைக் கெடுத்துக்கொள்வது பரிதாபமே.

பாக்:—மட்டாய் குடித்தால் நல்ல பசிதீபனம் உண்டாகிறது. உடம்பு வலி எல்லாம் போய் கலகலப்பு கொடுக்கிறது தம்பி. அதைப்பற்றி நான் அனுபோக சாட்சி சொல்லக்கூடும்.

சமா:—எலும்பும் தோலுமாயிருக்கும் வண்டி மாடுகளுக்கு நல்ல தீனிப்போட்டு அவைகளைப் பலப்படுத்தாமல் கூரான தார்க்குச்சி யொன்றை வைத்துக்கொண்டு அதைக் குத்தி வண்டி யோட்டுவது போலிருக்கிறது

நீங்கள் சொல்லுவது. அஜீரணம் உண்டானால் தகுந்த வைத்தியர்களிடம் உங்களைக் காட்டி. மருந்து வாங்கி சாப்பிடாமல் தற்கால வைத்திய நிபுணர்கள் நமது சரீர சுகத்துக்கு கெடுதியானதென்று சொல்லும் மதுபானத்தை அருந்துதல் தற்கொலை யென்றே சொல்ல வேண்டும்.

பாக்:—நான் மதுபானம் குடிக்க ஆரம்பித்தது வைத்தியர் உத்திரவின்படிதான். நாகப்பட்டணத்தில் சர்ஜனயிருந்த பிக்கிரி துரையினிடம் என் சுகவீனத்தைப் பற்றி மூன்று வருஷங்களுக்குமுன் சொன்னபோது அவர் தான் என்னை தினம் பகலிலும் இரவிலும் சாப்பாட்டுக்கு முன் ஒரு திராம் சாராயம் சாப்பிடச் சொன்னார். வைத்திய நிபுணர் மதுபானம் சுகத்துக்கு கெடுதியென்று அபிப்பிராயப்படுவதாய் சொல்லுகிருயே.

சமா:—பிக்கிரி துரையைப் பற்றி நானும் கேள்விப்பட்டிருக்கிறேன். அவர் மதுபானம் குடிப்பவரா, அல்லவா?

பாச்:—அவர் தினம் மதுபானம் குடிக்கிற வழக்க முண்டு.

சமா:—மதுபானம் குடிக்கிறவர்கள் மற்றவர்களையும் குடியில் பழக்கும் தன்மையுள்ளவர்களென்று உங்களுக்குத் தெரியாதா? வயிற்று வலிக்கு சாராயம், உடம்புவலிக்கு சாராயம், காய்ச்சலுக்கு சாராயம், மூலவியாதிக்கு சாராயம், பிரசவத்துக்கு சாராயம் என்றுதான் பிக்கிரி துரைபோன்ற குடிகார வைத்தியர்கள் சொல்லி அநேக குடும்பங்களை பாழாக்கி யிருக்கிருர்கள். அந்த பிக்கிரி துரை இரண்டு மாசத்துக்கு முன்தான் வியாதிப்பட்டு எந்த மருந்து கொடுத்தும் சுகமாகாமல் சாராயம், சாராயம் என்று சொல்லி உயிர் விட்டாராம். அவர் சாகும் வரையும் அவர் கிட்ட இருந்த பெரிய ஐரோப்பிய டாக்டர் தாம் அவருக்கு வெகு நேர்த்தியான மருந்துகள் கொடுத்தும் பிரயோசனமற்றுப் போனதற்கு காரணம் பிக்கிரி துரையின் முழு சரீரமும் சாராயத்தில் ஊறிப்போனதுபோல் இருந்ததுதான் என்று சொன்னாராம்.

பாக்:—இது உனக்கு எப்படித் தெரியும்?

சமா:—பிக்கிரி துரை சாகையில் என் அண்ணனும் அவனைப் பார்க்கப்போயிருந்தார்கள், பெரிய டாக்டர் சொன்ன எல்லாவற்றையும் எனக்கு சொன்னார்கள்,

யமனும் மதுபானமும் பிராண சிநேகிதர்.

குடிகாரர் பலர் குடி ஆரம்பித்த பிறகு தேக புஷ்டியுள்ளவர்களாய் தோன்றினாலும் அவர்கள் சரீர முழுவதும் சாராயத்தில் கெட்டுப்போகிறதாம். மதுபானம் நமது தேகத்துக்குட்சென்று வயிறு ஈரல் முதலிய அவயவங்களைக் கெடுத்து அவைகள் உணர்ச்சி கெட்டு, தோலைப் போல் சுருங்கச் செய்கின்றனவாம். சாராயம் உபயோகிப்போர் பலர் சத்திர சிகிச்சைக்காக (Operation) பெரிய டாக்டரிடம் வந்திருக்கிருர்கள். அவர்களில் வெகு சிலரே சுகமடைந்திருக்கிருர்கள். சாராயமே உபயோகியாதிருப்போர் நூற்றுக்கு 95 பேர் சுகமடைந்திருக்கிருர்கள். காயப்பட்டு இரத்தம் பெருகின சிலர் தங்களுக்கு தைரியமுண்டாக சாராயம் குடித்து வந்தால் இரத்தம் மட்டுக்கு மிஞ்சின வேகத்தோடு பெருகி இறந்தும்போனதை பெரிய டாக்டர் கண்ணாரக் கண்டிருக்கிருராம். இப்பொழுது குடியினால் உங்கள் தேகத்துக்கு உண்டாகும் கெடுதி தெரியாவிட்டாலும் அது ஏதோ ஒரு நாளில் காட்டிவிடும். நீங்கள் சாயங்காலத்தில் குடித்திருக்கும்போது உங்களுக்கு உடம்பு நன்றாயிருப்பது போல் தோன்றுகிறது. அதிகாலையில் தலை வலியும் சோர்வும் உங்களுக்கு இல்லையா? குடிக்காத எங்களுக்கு அதிகாலையில்தான் உற்சாகமும் பெலனும் ஜாஸ்தி.—இப்பொழுதுதான் பள்ளிக்கூடத்தி விருந்து திரும்பிக் களைப்போடு வருகிறேன். தாகமாயிருக்கிறது. கொஞ்சம் தண்ணீருக்கு உத்தரவு பண்ணுங்கள்.

பாக்:—ராகேல், தம்பி சமாதானம் பிள்ளைக்கு கொஞ்சம் தண்ணீர் கொடு.

சமா:—என்ன! அண்ணி முகத்திலே சந்தோஷமில்லை. காரண மென்ன?

பாக்:—கை நிறைய ரூபாய் இருந்தால் பெண்களுக்கு சந்தோஷம்தான் ரூபாய் குறைந்தால் விசனந்தான்.

ராகேல்:—ஆம், இவர்கள் குடிக்க ஆரம்பித்தது முதல் என் கை நிறைய ரூபாய் இல்லாததுதான் குறையாகும். என் மனம் நிறைந்திருக்கையில் ரூபாய் இருந்துதான் என்ன? இல்லாமல்தான் என்ன?

சமா:—என்ன அண்ணி, உங்கள் காதும் கழுத்தும் வெறுமையாயிருக்கிறதே, ஓலை எங்கே, அட்டிகை எங்கே?

ராகேல்:—உங்கள் அண்ணனைத்தான் கேளுங்கள்?

சமா:—என்ன அண்ணா! அண்ணியின் நகைகள் எங்கே?

பாக்:—அவைகள் பத்திரமாயிருக்கின்றன.

சமா:—அடகுவைத்து கடன் வாங்கியிருக்கிறீர்களா? லாய் கடன் வாங்கத் தலைப்பட்டு விட்டீர்களா? இனி உங்கள் குடித்தனம் முன்னேறினாற்போலத்தான்—யாரிடத்தில் அண்ணா கடன் வாங்கியிருக்கிறீர்கள்?

பாக்:—சுப்பா ரெட்டியாரிடம் 100 ரூபாயும் சாலோமோன் பிள்ளையிடம் 80 ரூபாயும் வாங்கியிருக்கிறேன்.

மேலே காட்டப்பட்டிருக்கிற படம் மதுபானத்தினால் வரும் முடிவைக் காட்டுகிறது. அநேக வீடுகளில் குடியினால் வருமையும் தரித்திரமும் நிறைந்திருக்கிறது. பணமெல்லாம் குடியில் செலவழிந்துவிட்டதால் பிள்ளைகள் சாப்பாட்டுக்காக அழுகிருர்கள்.

பாக்:—இந்தக் காலத்தில் ஈடு இல்லாமல் ஆர் கடன் கொடுக்கிருர்கள்?

சமா:—வெகு நேர்த்தி! மாசம் ஐம்பது ரூபாய் சம்பளம் வாங்குகிற உங்களுக்கு பிள்ளைகள் மூன்றுதான். நீங்கள் பாங்கியில் பணம் போட்டு வைப்பதற்குப் பதி

சமா:—இந்த ரூபாயெல்லாம் எப்படி செலவழிந்தது?

பாக்:—நான் வியாதிக்காரனாய்ப் போய்விட்டேன். ஆனதால் வைத்தியத்துக்காகவும் குடும்பச் செலவிலும்தான் இந்த ரூபாய் சென்று விட்டது.

சமா:—பாருங்கள் அண்ணா. எட்டு ரூபாய் சம்பளம் வாங்குகிற அந்த சாலோமோன் பிள்ளை, 50 ரூபாய் சம்பளம் வாங்குகிற உங்களுக்கு கடன் கொடுக்கக்கூடியவராயிருப்பது எவ்வளவு ஆச்சரியம்? குடியாமலிருப்பதால் அவர் நல்ல நிலைமையிலிருக்கவும், நீங்கள் குடிப்பதால் கடன்காரராயிருக்கவும் நேரிட்டிருக்கிறது. "கடன் வாங்கியும் பட்டினி, கலியாணம் பண்ணியும் சன்னியாசி" என்பது போலிருக்கிறது உங்கள் நிலைமை. உங்களைப்பற்றியிருந்த மதிப்பும் குறைந்து போய்விட்டது. ஞானியான சாலமோனும் "திராட்சரசம் பரிகாசஞ்செய்யும், மதுபானம் அமளி பண்ணும்; அதினால் மயங்குகிற ஒருவனும் ஞானவானல்ல" என்று சொல்லுகிறார். (நீதி. 20: 1)

பாக்:—இனி நான் மதுபானத்தை விடுதல் லேசல்லவே, என்ன செய்வேன்.

சமா:—உங்கள் மனசில் அதைவிடத் தீர்மானிப்பதோடு தேவ ஒத்தாசையையும் தேடி ஜெபித்தால் உங்களால் முடியாததொன்றுமில்லை. திண்டுக்கல் சுந்தரம் பிள்ளை மகன் தனசாமி அதிக குடி பழகி கொழும்புக்குப் போயிருந்தான். அங்கே ஒரு போதகருடைய பிரசங்கத்தைக் கேட்டு குணப்பட்டு அது முதல் குடியை விட்டுவிட்டான். அவன் சில நாட்களுக்குமுன் இங்கு வந்திருக்கையில் அவனுடைய பழைய சிநேகிதனாகிய சாராயக் கடைக்காரன் அவனைக் குடிக்கக் கூப்பிட்டான். தனசாமி நான் குடியை விட்டுவிட்டேன், அது முதல் எனக்கு ஒரு கட்டி உண்டாகி வரவர பெரிதாகிறது என்றான். அது கேட்ட சாராயக் கடைக்காரன் குடியை நிறுத்துகிறது மோசம், நீ மறுபடியும் குடிப்பதே நல்லது என்றான்.

பாக்:—எனக்கும் இதுவிஷயத்தைப்பற்றிப் பயமுண்டு.

சமா:—முழுவதும் கேளுங்கள் அண்ணா. அப்போது தனசாமி தன் இடுப்பில் சுற்றியிருந்த ஒரு கச்சையை அவிழ்த்து, அதிலிருந்து ஒரு முடிப்பைத் திறந்து, இதுதான் ஐயா அந்தக்கட்டி, நான் குடியை விட்டது முதல் நாளாவட்டத்தில் இந்தக் கட்டி வளர்ந்து 20 பவுனாகி இருக்கிறது. இந்தக் கட்டி கரைய எனக்கு மனதில்லை என்று சொன்னான். சாராயக் கடைக்காரன் வெட்கிப்போனான். நம்முடைய அரசருங்கூட தமது குடிகளுக்கு முன்மாதிரியாக மதுபான உபயோகத்தை நிறுத்தியிருக்க நாம் எல்லோரும் அவருடைய நல்ல முன்மாதிரியைப் பின்பற்றுவது நலம். இந்த யுத்தத்தில் சம்பந்தப்பட்டிருக்கும் பல தேசங்களிலும் மதுபானத்தை ஒழிப்பதே ஜெயத்துக்கு வழியென்று கண்டுபிடித்திருக்கிறார்கள். பிசாசோடு போராடும் கிறிஸ்தவர்கள் மதுபானத்துக்கு அடிமைகளாயிருக்குமட்டும் சத்துருவை ஜெயிக்கவும் விழித்திருந்து ஜெபிக்கவும் முடியாது.

பாக்:—இன்று நாம் செய்த சம்பாஷணையை ஆண்டவர் ஆசீர்வதிப்பாராக, ஆமென்.

Tranquebar Mission Almanac.

அற்பமாய் எண்ணப்பட்டிருக்கும் உலகப் பிரசித்திபெற்றவர்

இயேசுவின் பிறப்பு ராஜரீகமாயிராமல், தாழ்மையாயிருந்தது. ராஜாங்கத்திற்கு கீழ்ப்பட்ட ஒரு குடியின் வம்சத்திலே, தாழ்மையான பெற்றோரின் வயிற்றிலே, பிரபல்ய மாகாதிருந்த ஓர் கிராமத்திலே அவர் பிறந்தார். அவர் எந்த புஸ்தகத்திற்கும் நூலாசிரியராயிருந்ததுமில்லை; அவருடைய எழுத்துக்குதவியாக எப்பொழுதாவது ஒரு குமஸ்தாவை அவர் வைத்திருந்ததுமில்லை; ஒருபொழுதும் எவ்வித வர்த்தமான பத்திரிகையை அவர் பிரசுரித்தது மில்லை; கலிலேயாவின் "வர்த்தமானி"யிலாவது, எருசலேமின் "சமாசாரப் பத்திரிகை"களிலாவது, அவர் யாதொரு வியாசம் எழுதினதுமில்லை. என்றாலும் அவருடைய வார்த்தைகள் இன்னும் இருக்கின்றன. அவைகள் இன்றைக்கும் இவ்விடத்தில் மாத்திரமு மல்ல. உலக முழுவதும் அறியப்பட்டிருக்கின்றன.

அவர் ஒரு தச்சனாயிருந்தார்; என்றாலும் அவருடைய காலத்திலாவது, அதற்குப் பிந்தின காலத்திலாவது உள்ள தச்சர்களைப் பார்க்கிலும் மேலாக நாம் அவரை அறிவோம். அவர் எவ்வித ராணுவத்தை சேர்ந்தது மில்லை. எவ்விதப் பட்டாளத்திற்கும் உத்தியோகஸ்தராயிருந்ததுமில்லை; என்றாலும் எந்த ராணுவ தளகர்த்தனுடைய பெயராவது, அல்லது வேறெந்த உத்தியோகத்திலுள்ள மனுஷனின் ஜீவியமாவது, கிறிஸ்துவைப்போல் அவ்வளவு தூரம் பிரபல்யமாகவில்லை. அவருக்கு உதவிசெய்ய யாதொரு தீர்க்கதரிசி யிருந்தது மில்லை; அவர் காலத்திலிருந்த யோவான் ஸ்நானகனும் சிறைச்சேதம் பண்ணப்பட்டுப்போனான்; அவர் குடும்ப சகிதமாயிருந்தது மில்லை; அவருக்குச் சொந்த வீடென்று சொல்ல ஒரு ஸ்தலம் இருந்ததுமில்லை; அவர் தமது இனஜன பந்துக்களுக்கு வைத்துப்போக யாதொரு ஆஸ்தி யிருந்தது மில்லை; அவர் வைத்துப்போன பொக்கிஷமெல்லாம் ஓர் தையலில்லாத அங்கிதான். அதற்கு முதலாய் அவர் தொங்கின சிலுவையின் கீழிருந்தே, அவரைச் சிலுவையிலறைந்தவர்கள் தானே சீட்டுப் போட்டார்கள். சில வருஷங்களாக அவர் போதக ஊழியம் செய்து, சொற்ப ஜனங்களைத் தம்மண்டை சேர்த்திருந்தார். ஆனால், கடைசியாக அந்த தொண்டர்களில் ஒருவனாலே காட்டிக்கொடுக்கப்பட்டார். பின்பு பொது ஜனத்தின் விருப்பத்தின்படி சங்கரிக்கப்பட, கள்ளர்களுக்கு மத்தியிலே ஜீவனைவிட்டு, ஒரு இரவக்கல்லறையிலே அடக்கம் பண்ணப்பட்டார். என்றாலும் இப்பூலோகத்தின் எந்த ராஜாவாவது, பிரபுவாவது, வேறு எவ்வித தனவானாவது இவரைப்போல் இவ்வளவு பிரபல்யமாய் அறியப்பட்டிருக்கிறது மில்லை. இதற்கு காரணமேன்? இதற்கு ஒரே ஒரு வியாக்கியானம்தான் உண்டு. அதாவது அவர் மனுஷனல்ல, தேவனாயிருந்தார்.

G. B. Thompson.

? கேள்விகளுக்கு விடை ?

நீங்கள் கேட்க மனதானால் திரும்பி வந்து கேளுங்கள்.

கேள்வி.—ஒரு மனிதன் தான் செய்த பாவங்களுக்குத் தக்கதாகக் கிடைக்கும் தண்டனைகளிலிருந்து தப்பித்துக் கொள்ளக்கூடுமா?

உத்தரவு.—ஆம் அது கூடும், ஏனென்றால் "தேவன் தம்முடைய ஒரே பேறான குமாரனை விசுவாசிக்கிறவன் எவனோ அவன் கெட்டுப்போகாமல் நித்திய ஜீவனை அடையும்படிக்கு அவரைத் தந்தருளி இவ்வளவாய் உலகத்தில் அன்பு கூர்ந்தார்." யோவா. 3: 16 இதில் ஒரு மனிதன் கர்த்தராகிய இயேசுக்கிறிஸ்துவை உலக ரட்சகராக ஏற்றுக்கொண்டு அவரை விசுவாசித்தானானால் அவன் அழிந்து போகமாட்டான் என்றும் நித்திய ஜீவனை அடைவான் என்றும் திட்டமாகச் சொல்லியிருக்கிறது. நாம் அவரை விசுவாசித்து அவரை நம் இரட்சகராக ஏற்றுக்கொண்டால் நம்முடைய பாவங்களை அவர் நமக்கு மன்னித்து நம்மைச் சுத்திகரிக்க வல்லவராயிருக்கிறார். பாவங்களுக்காக நாம் தண்டிக்கப்படமாட்டோம். (எசா. 1: 18, 1 யோவா. 1: 9 பார்க்க) "அவர் அசட்டை பண்ணப்பட்டவரும், மனுஷரால் புறக்கணிக்கப்பட்டவரும், துக்கம் நிறைந்தவரும், பாடு அநுபவித்தவருமாயிருந்தார். அவரைவிட்டு நம்முடைய முகங்களை மறைத்துக்கொண்டோம்; அவர் அசட்டை பண்ணப்பட்டிருந்தார்; அவரை எண்ணாமற்போனோம். மெய்யாகவே அவர் நம்முடைய பாடுகளை ஏற்றுக்கொண்டு, நம்முடைய துக்கங்களைச் சுமந்தார்; நாமோ அவர் தேவனால் அடிபட்டு வாதிக்கப்பட்டு, சிறுமைப்பட்டவரென்று எண்ணினோம். நம்முடைய மீறுதல்களினிமித்தம் அவர் காயப்பட்டு, நம்முடைய அக்கிரமங்களினிமித்தம் அவர் நொறுக்கப்பட்டார்; நமக்குச் சமாதானத்தை உண்டுபண்ணும் ஆக்கினை அவர்மேல் வந்தது; அவருடைய தழும்புகளால் குணமாகிறோம்." எசா. 53: 3-5.

கேள்வி.—பாவத்தின் தண்டனை என்ன?

உத்தரவு.—பாவத்தின் சம்பளம் மரணம் தேவனுடைய கிருபை வரமோ நம்முடைய கர்த்தராகிய இயேசுக்கிறிஸ்துவினாலுண்டான நித்தியஜீவன். ரோ. 6: 23. நம்முடைய ஆதித் தகப்பனாகிய ஆதாமுடைய பாவத்தினாலே இவ்வுலகத்தில் வியாதிகளும், வருத்தங்களும், மரணமும் வந்தது. ஆதாமின் பின் சந்ததிகளாகிய நாமும் அவனைப்போலவே நம்முடைய பலவீனங்களைச் சகித்து மரிக்கவேண்டிய தவசியம். மேற்சொன்ன வசனத்தில் சொல்லியிருக்கும் பாவத்தின் சம்பளமாகிய மரணம் நாம் எல்லாரும் அடைகிற சாதாரண மரணம் அல்ல. இந்தச் சாதாரண மரணம் ஆதாமின் பாவத்தினாலே இப்புவியில் வந்தது. நல்லவர்களானாலும் சரி பொல்லாதவர்களானாலும் சரி நாம் எல்லாரும் இம்மரணத்தை அடையவேண்டிய தவசியம். ஆனால் கர்த்தராகிய இயேசுக்கிறிஸ்துவின் மூலமாய் இம்மரணத்திலிருந்து நமக்கு ஒரு உயிர்த்தெழுதல் உண்டு. கிறிஸ்துவை விசுவாசித்தாலும் சரி விசுவாசியாவிட்டாலும் சரி எல்லாரும் இம்முதலாம் மரணத்திலிருந்து உயிர்ப்பிக்கப்படுவோம். ஆகையால் இது ஒரு நித்திய மரணமல்ல. பாவத்தின் சம்பளமாகிய இரண்டாம் மரணமே நித்திய மரணம். அம்மரணத்திலிருந்து ஒரு உயிர்த்தெழுதலுமில்லை. இது ஒவ்வொருவரும் தம்தம் பாவங்களுக்காக அடைகிற தண்டனை. நன்மை தீமை இன்னதென்று நாம் அறிந்தும் பாவத்திலே நிலைத்திருப்போமானால் பாவத்தின் சம்பளமாகிய அந்த நித்திய மரணத்தை அடைவோம் என்பது நிச்சயம். இம்மரணத்திலிருந்து ஒரு உயிர்த்தெழுதலுமில்லை. முதலாம் மரணம் நம்முடைய ஜீவிய ஓட்டத்தின் முடிவில் நடக்கும். எல்லாரும் இம்மரணத்தில் பங்கடைந்து பிரேதக்குழிகளில் உலக முடிவுமட்டும் காத்திருக்கவேண்டும். 1 தெச. 4: 16, 17-இல் எல்லாரும் எழுந்திருப்பார்கள் என்றும், நீதிமான்கள் அல்லது கிறிஸ்துவை விசுவாசித்தவர்கள் கிறிஸ்துவின் இரண்டாம் வருகையில் பரலோகத்திற்கு எடுத்துக்கொள்ளப்படுவார்கள் என்றும் சொல்லப்பட்டிருக்கிறது. துன்மார்க்கர் அல்லது கிறிஸ்துவை ஒப்புக்கொள்ளாதவர்கள் ஆக்கினைத் தீர்ப்படைந்து பிற்பாடு அக்கினியால் சுட்டெரிக்கப்பட்டுப் போவார்கள். அவர்கள் முழுவதுமாக அழிந்து மறுபடி ஒருபோதும் எழுந்திருக்கமாட்டார்கள்.

இந்த இரண்டாம் நித்திய மரணத்திலிருந்து நாம் நீங்க வேண்டுமானால், நமக்காக தம் ஜீவனைக் கொடுத்த கிறிஸ்துவை விசுவாசிக்கவேண்டும்.

கேள்வி.—பாவத்தின் சம்பளம் நித்திய மரணமாயிருக்குமானால் நம்மை மீட்டு இரட்சிக்கும்படியாகக் கடன் செலுத்தின இயேசு முதலாம் மரணத்தையல்ல இரண்டாம் மரணத்தையே உத்தரித்திருக்கவேண்டும். அவர் அந்த நித்திய மரணத்தையே அடைந்திருக்கவேண்டும். அவர் அந்த மரணத்தை அடைந்திருந்தால் எப்படி திரும்பவும் உயிர்த்தெழுந்தார்.

உத்தரவு.—பாவத்தின் சம்பளம் நித்திய மரணம் என்பது உண்மையே. இரண்டாம் மரணத்தை உத்தரித்தவர்களுக்கு உயிர்த்தெழுதல் இல்லையென்பதும் உண்மையே. கிறிஸ்து இரண்டாம் மரணத்தை உத்தரித்து மரண தண்டனைக்குள்ளானார் என்பதும் உண்மையே. மரணத்திலிருந்து உயிர்த்தெழுந்து இப்பொழுது பரலோகத்தில் நமக்கு பிரதான ஆசாரியராக

இருக்கிறார் என்பதும் உண்மையே. கிறிஸ்து முதலாம் மரணத்தை மாத்திரம் உத்தரித்தாரானால் அழிவுள்ள மனிதர்களைத் திரும்ப நேசித்திருக்கமாட்டார். அதுவுமல்லாமல் நம்மை முதலாம் மரணத்திலிருந்து மாத்திரம் ரட்சித்திருப்பார். ஆனால் அவர் அதைவிட மேலானதைச் செய்தார். அவர் ஒரே தடவையில் முதலாம் மரணத்தையும், இரண்டாம் மரணத்தையும் உத்தரித்தார். அவர் ஒரே சமயத்தில் உலகத்தாரின் பாவப் பாரங்களையும் இவ்விரண்டு மரணத்தையும் உத்தரித்ததினாலே அவர் மிகவும் வருத்தப்பட்டார். அவ்வருத்தமே அவரை "அப்பா பிதாவே இப்பாத்திரம் என்னைவிட்டு நீங்கக்கூடுமானால் நீங்கும்படி செய்யும். என் தேவனே, என் தேவனே என் என்னைக் கைவிட்டீர் என்று சொல்லும்படி பண்ணினது. இம்மரணம் ஒரு சாதாரண மரணமாயிருந்தால் அவர் அப்படிச் சொல்லியிருக்கமாட்டார். ஏனென்றால் அவர் சரீர மரணத்துக்குப் பயந்தவர் அல்ல.

இப்போது நமது கேள்வியின் இரண்டாம் பாகத்தைப் பார்ப்போம். கிறிஸ்துவானவர் அடைந்த மரணம், பாவத்தின் தண்டனையாகிய நித்திய மரணமாயிருந்தால், அவர் எப்படி மரித்தோரிலிருந்து எழுந்திருக்க முடியும். இது பரம இரகசியம். கிறிஸ்துவானவரின் பிறப்பைப்போலவே அவருடைய உயிர்த்தெழுதலும் இரகசியமானது. கிறிஸ்துவின் பிறப்பின் போங்கை விஸ்தரிக்க ஒருவராலும் கூடாது. அதுவும் ஒரு இரகசியம். அவர் பிறந்து மனிதர் மத்தியில் வாசம்பண்ணி ஊழியம் செய்தார் என்று நமக்குத் தெரியும். ஆனால் இதற்கு வேதாகமம் கொடுக்கும் விஸ்தரிப்பைத்தவிர வேறு விஸ்தரிப்பு நம்மால் கொடுக்க முடியாது. அடிமையின் ரூபத்தை எடுத்தார் என்றும், ஒரு மனிதனாக வந்தார் என்றும் மாத்திரம் வேதாகமம் நமக்கு விளக்கிக் காட்டுகிறது. அப்படியே அவர் உயிர்த்தெழுந்தார் என்றும் நாம் அறிகிறோம். அதற்கு மெய்யாகவே அநேக சாட்சிகள் உண்டு. அவர் எவ்வண்மையாய் உயிர்த்தெழுந்தார் என்று நம்மால் சொல்ல முடியாது. "இஸ்ரவேலரே நான் சொல்லும் வார்த்தைகளைக் கேளுங்கள்; நீங்கள் அறிந்திருக்கிறபடி நசரேயனாகிய இயேசுவைக்கொண்டு தேவன் உங்களுக்குள்ளே பலத்த செய்கைகளையும் அற்புதங்களையும் அடையாளங்களையும் நடப்பித்து, அவைகளினாலே அவரை உங்களுக்கு வெளிப்படுத்தினார். அப்படியிருந்தும் தேவன் நிர்ணயித்திருந்த ஆலோசனையின்படியும், அவருடைய முன்னறிவின்படியேயும் ஒப்புக்கொடுக்கப்பட்ட அந்த இயேசுவை நீங்கள் பிடித்து, அக்கிரமக்காரருடைய கைகளினாலே சிலுவையில் ஆணி யடித்துக் கொலை செய்தீர்கள். தேவன் அவருடைய மரண உபாதிகளின் கட்டை அவிழ்த்து அவரை எழுப்பினார்; அவர் மரணத்தினால் கட்டப்பட்டிருக்கக் கூடாதிருந்தது" என்று அப். 2: 22-24 இல் சொல்லப்பட்டிருக்கிறது. விசுவாசத்தினாலே நாம் வேதாகமம் சொல்லுகிறது யாவும் உண்மை என்று நம்புகிறோம்.

கேள்வி.—1 பேதுரு 4: 6-ஐ விஸ்தரிக்க.

உத்தரவு.—"இதற்காக மரித்தோரானவர்கள் மனுஷ முன்பாக மாம்சத்திலே ஆக்கினைக்குள்ளாக்கப்பட்டிரு தும் தேவன் முன்பாக ஆவியிலே பிழைக்கும்படியா அவர்களுக்கும் சுவிசேஷம் அறிவிக்கப்பட்டது. ஆதித்திருச்சபையின் காலத்தில் கிறிஸ்துவின் சுவி சேஷத்திற்காக தங்கள் ஜீவனையும் அற்பமாக எ ணின சில தேவனுடைய பிள்ளைகளைக்குறித்து இங்கே சொல்லப்பட்டிருக்கிறது. அப்படியே மாம்சத்தின்ப கிறிஸ்துவானவரும் குற்றவாளியாகத் தீர்க்கப்பட்டா ஆனால் அவர்கள் அநுபவித்த மரணத்துன்பங்களி பலனாக வரப்போகிற உலகத்தில் அவர்கள் மகிமை பட்டு, அழியாமையையும் நித்திய ஜீவனையும் அடைவார்கள் "இதற்காகவே மரித்தோரான அவர்களுக்கும் சுவிசே ஷம் அறிவிக்கப்பட்டது." என்னும் வசனத்திலிருந் இந்தக் கேள்வி கேட்கப்படுகிறது. இதற்கு உத்தர மிகவும் இலேசானது. சுவிசேஷம் அறிவிக்கப்பட்டது அது யாருக்கு அறிவிக்கப்பட்டது? இப்போது மரி திருக்கிறவர்களுக்கு அறிவிக்கப்பட்டது. அது எப் பொழுது அறிவிக்கப்பட்டது? அவர்கள் உயிரோடே யிருந்தபோது அறிவிக்கப்பட்டது. அது அவர்களுக்கு யாரால் அறிவிக்கப்பட்டது? அவர்கள் உயிரோடிருந் காலத்தில் வசித்த சுவிசேஷகர்களால் இது பிரசங்கிக்க பட்டது. இச்சுவிசேஷம்தான் கிறிஸ்துவை அவர்கள் ஏற்றுக்கொள்ளுகிறதற்கும் இங்கே சொல்லப்பட்ட உபத்திரவத்தை வருவிக்கிறதற்கும் காரணமாயிருந்தது.

கேள்வி.—2 பேதுரு 1: 15 ஐ விஸ்தரிக்க.

உத்தரவு.—"மேலும் நான் சென்றுபோன பின்பு இவைகளை நீங்கள் எப்பொழுதும் நினைத்துக்கொள்ள ஏதுவுண்டாயிருக்கும்படி பிரயத்தனம் பண்ணுவேன்." இங்கே இக்கேள்வியைக் கேட்கிறவர், பவுலப்போஸ்த லன் தன்னுடைய மரணத்துக்குப்பின் சில காரியங் களைச் செய்வதாக வாக்குக் கொடுத்திருக்கிறாரென்று ஒருவேளை நினைக்கலாம். அது உண்மையா? வசனத் தைக் கவனத்தோடு கவனிப்போமாக. தான் ஜனங்களுக் குக் கற்பித்ததை, மறந்துபோகக்கூடாதென்பதே பவு லப்போஸ்தலனின் விருப்பம். அவர்கள் மறந்துபோகக் கூடாதென்று இவர் எப்போது நினைத்தார்? "மேலும் நான் சென்றுபோனபின்பு இவைகளை நீங்கள் எப்பொ தும் நினைத்துக்கொள்ள விரும்புகிறேன்." ஆகவே அவர் கள் மறந்து போகாதபடி தான் என்ன செய்வதாகச் சொல்லுகிறார். நான் பிரயத்தனம் பண்ணுவேன் என்று சொல்லுகிறார். எப்போது பிரயத்தனம் பண்ணுவார். அவர் மரிக்குமுன் உயிரோடிருக்கும் போது அவர் பிரயத்தனம் பண்ணுகிறார். அவ மரித்தபின் பிரயத்தனம் பண்ணமுடியாது. ஏனெ றால் மனிதன் மரித்தபின் ஒன்றும் அறியான் என் சத்திய வசனம் சொல்லுகிறது "மரணத்தில் உம்மை நினைவு கூர்வதில்லை பாதாளத்தில் உம்மை துதிப்பவன் யார்." சங். 6: 5. "செய்யும்படி உன் கைக்கு நேரி கிறது எதுவோ அதை உன் முழு பலத்தோடே செய். நீ போகிற பாதாளத்திலே செய்கையும் வித்தையும் அறிவும் ஞானமும் இல்லையே." பிர. 9: 10 ஐ பார்க்க.

சமாசாரக் குறிப்புகள்

ஆங்கிலேய சிங்காசனத்துக்குரிமைக்காரரும், ஆங்கிலேய தீவுகளுக்கு அதிபதியும், ரென்பிரோ, காரிக், ஸ்கொத்துலாந்து தேசங்களுக்குப் பிரபுவும், உவேல்ஸ் இளவரசருமாகிய மகிமைதங்கிய ஆல்பர்ட் கிறிஸ்தியன் ஜார்ஜ் ஆன்ட்ரு டேவிட் வில்சன் என்பவர், கடந்த நவம்பர் மாதம் அமெரிக்காவை விஜயம் செய்தார். அவரை அமெரிக்க தேசத்தார் சகல மரியாதையுடன் ஏற்றுக்கொண்டார்கள்.

கூடிய சீக்கிரத்திற்குள்ளாக ஒரு கோடி ஜனங்கள் ஐரோப்பாவிலிருந்து அமெரிக்காவுக்குப் பணம் சம்பாதிக்கும்படியாக புறப்பட்டுப்போக உத்தேசிக்கிறார்கள்.

உலகத்தின் நாலுபாகங்களிலும் கலகம் அதிகரிக்கிறது. சில இடங்களில் சுரங்கவெட்டிகளும், இருப்புப்பாதை வண்டி ஓட்டுபவர்களும், போலீஸ் சிப்பாய்களும், நீராவி யந்திரத்தில் நெருப்பு தள்ளுகிறவர்களும், ரொட்டி சுடுகிறவர்களும், இன்னும் இவர்களைப்போலொத்த அநேக கூலியாட்களும் அதிக சம்பளத்திற்காகக் கலகம் பண்ணி வேலை செய்யாமல் நின்று விட்டார்கள். இது, உலகம் தற்சமயத்தில் என்ன கதியாயிருக்கிறதென்று காட்டுகிறது. ஐசுவரியவான்கள் ஏழைகளுக்கு விரோதமாக எழும்பி அவர்களைக் கீழடக்கப் பார்க்கிறார்கள்.

ஜெர்மனியரைக் கொல்லும்படியாக உண்டாக்கப்பட்ட விஷ வாயுவைக்கொண்டு இப்பொழுது இங்கிலாந்து தேசத்தில் எலிகளை நிர்மூலம் பண்ணுகிறார்கள். இவ்விஷவாயு நிறைத்து வைத்திருக்கும் பெரும் பாத்திரங்களை எலி வளைக்குச் சமீபத்தில் வைத்து சிறு குழாய்களின் வழியாய் விஷ வாயுவை வளைக்குள் செல்லும்படி செய்கிறார்கள். அப்பொழுது எலிகள் உடனே செத்துப்போகிறதில்லை. அவைகள் மயங்கிப்போய் வெளியே வரும்போது அவைகளைச் சுளுவாய்க் கொன்றுபோடுகிறார்கள். இந்தியாவிலுள்ள எலிகளை நாம் ஏன் அவ்விதமாகக் கொல்லக்கூடாது.

யுத்தம் நடந்துகொண்டிருந்த காலத்தில் "டாங்க்" (Tank) என்னும் ஓர்வித யந்திரத்தைக் கண்டு பிடித்தார்கள். அது இருப்புத்தகட்டால் முழுவதும் மூடப்பட்ட ஒரு பெரிய மோட்டார் வண்டியைப்போலுள்ளது. அதன் வெளிப்பக்கத்தில் பலமான பீரங்கிகள் வைக்கப்பட்டிருக்கும். உள்ளே யிருக்கும் மனிதர்கள் தங்களுக்கு யாதொரு சேதமுமில்லாமல் வெளியே யிருப்பவர்களோடு சண்டை செய்வார்கள். இதற்கு சமப்படுத்தப்பட்ட நல்ல ரஸ்தாக்கள் அவசியமில்லை. இதற்கு சக்கரத்திற்குப் பதிலாக சிறுபற்களுள்ள சுழலும் சங்கிலிகள் அமைக்கப்பட்டிருக்கிறது. அது சுவர்கள், வேலிகள், மரங்கள்; சிற்றோடைகள், கோட்டைகள் முதலியவற்றின்மேல் நகர்ந்து செல்லக்கூடும். யுத்தத்தில் இது ஒரு விசேஷித்த ஆயுதமாக உபயோகிக்கப்பட்டது.

சண்டை நின்றுபோயிற்று இம்மாதிரியான யந்திரங்களுக்கு ஒரு புது வேலை கண்டுபிடிக்கப்பட்டிருக்கிறது. சமுத்திரத்தின் அடிவாரத்தில் நகர்ந்து செல்லக்கூடிய இவைபோன்ற பெரிய யந்திரங்களை செய்திருக்கிறார்கள். யுத்தம் நடந்த காலத்தில் கடலில் ஆழ்த்தப்பட்ட கப்பல்களைக் கண்டு பிடித்து அவைகளிலிருக்கும் ஜாமான்களையும் எடுக்கும்படியாக உத்தேசிக்கிறார்கள். ஏறக்குறைய எண்ணாயிரம் கப்பல்கள் இப்பொழுது கடலில் அமிழ்ந்து கிடக்கின்றன. அவைகளில் கோடிக்கணக்கான ரூபாய் பெறுமான பொன்னும் வெள்ளியும் விலையேறப்பெற்ற வஸ்துக்களும் இருக்கின்றன. இப்புது யந்திரத்தின் மூலமாய் சமுத்திரத்தின் ஆழத்தில் நகர்ந்து சென்று கப்பல்கள் அமிழ்ந்து கிடக்கும் இடங்களைக் கண்டு பிடித்து அவைகளினுட்சென்று அங்கிருக்கப்பட்ட திரவியத்தை எடுக்கும்படியாக உத்தேசிக்கிறார்கள். அப்படிப்பட்ட யந்திரங்கள் வாயுவும் தண்ணீரும் உட்செல்லாதபடி சந்துகள் துவாரங்களில்லாமல் முழுவதும் அடைக்கப்படவேண்டும். உள்ளிருப்பவர்கள் சுவாசிக்கும்படியாக, ஆகாயம் ஒரு பெரிய ரப்பர் குழாய் வழியாய் மேலேயிருந்து அனுப்பப்படவேண்டும். தண்ணீரின் வழியாய் பார்க்கக்கூடிய அவ்வளவு பிரகாசமான விளக்கு அவர்களுக்கு அவசியம். இந்த யந்திரங்கள் வேறு உபயோகத்திற்கும் உதவும். சமுத்திரத்தின் ஆழத்திலிருக்கும் அநேகவிதமான விநோதங்களைக் கண்டு பிடிக்கலாம். கப்பல்கள் நீந்திச் செல்லக்கூடாத அபாயமான இடங்களைக் கண்டு பிடித்து இனி கப்பல் சேதமில்லாமல் போக்கு வரவு செய்யும் மார்க்கத்தை உண்டுபண்ணலாம். நாம் நிச்சயமாகவே ஒரு அதிசயமான யுகத்தில் வசித்துக்கொண்டிருக்கிறோம். மனிதர் வானத்தின் மின்னலைப்போல ஆகாயத்திலும் சமுத்திரத்தின்மீதும் பிரயாணம் பண்ணுகிறார்கள். இப்பொழுது சமுத்திரத்தின் ஆழத்திலும்கூட பிரயாணம் பண்ணும் வழியைக் கண்டுபிடித்திருக்கிறார்கள். இன்னும் என்னத்தைக் கண்டுபிடிக்கப் போகிறார்களோ?

நிகழ்கால சத்தியம்

வேத சன்மார்க்க சுகாதார விஷயங்களில் தற்கால அறிவுக்கொத்தபடி மனிதர் அபிவிருத்தியடைவதற்கென்று பிரசுரமாகும் ஓர் பத்திரிகை.

மதராஸ் எப்பிரல்மீ 1920.

இப்பத்திரிகை, பெங்களூரிலிருக்கும், எஸ். டி. ஏ. பப்ளிஷிங்கவுஸ்காக, பட்டணத்தில் வெப்பேரி என்னுமிடத்தில் உள்ள அல்பீனியன் அச்சாபீசில் அச்சடிக்கப்பட்டு வருகிறது.

பத்திராதிபர் பாஸ்றர், ஜீ. ஜீ. லோரி.

உதவி ,, ,, ஈ. டி. தாமஸ்.

தனிப்பிரதி ஒன்றுக் ...	அணா 1
வருஷ சந்தா, தபாற்கூலி உள்பட	,, 5
சிங்கப்பூர் பினாங்கு முதலிய ஸ்ட்ரேயிட் செற்றில் மெண்டுகளுக்கு தனிப்பிரதி ஒன்றுக்கு ...	8 சென்டு (8 cents)
வருஷசந்தா தபாற்கூலி உள்பட ...	30 சென்டு (36 cents)

இப்பத்திரிகைகளை விற்க அநுமதி பெற்ற ஏஜண்டுகள் மூலமாயாவது, நேரே இந்த சொசைட்டிக்கு எழுதியாவது, முன்பணம் செலுத்திப் பெற்றுக்கொள்ளலாம். முன் பணம் செலுத்துவோர், பணம் பெற்றுக்கொள்பவரிடமிருந்து ரசீது வாங்கிக்கொள்ளவேண்டியது.

நோட்டீஸ்.

இப்பத்திரிகையில் முதல் பக்கத்தின் மேல் பாகத்தில் நீலமான கோட்டைக் கண்டால், இந்த மாதப் பத்திரிகையோடு உங்கள் வருஷ சந்தா முடிவாகிறதென்று அறிந்துகொள்ளலாம். அடுத்த நம்பர் உங்களிடத்தில் வரும்படியாகத் தாமதமின்றி உடனே வருஷ சந்தாவைப் புதுப்பித்துக்கொள்ளவேண்டும்.

முக்கிய கவனிப்பு

ஏறக்குறைய எட்டு வருஷமாக நாங்கள் இப்பத்திரிகையைப் பிரசுரிக்கின்றோம். கடந்த காலத்தில் இது மூன்று மாதத்திற்கொருமுறை பிரசுரிக்கப்பட்டு வந்தமையால் அநேக சந்தாதாரர்களுடைய வேண்டுகோளின் மேல் இதை ஓர் மாதாந்தரப் பத்திரிகையாக வெளிப்படுத்த விரும்புகிறோம். ஆகையால் 1920-ம் வருஷம் ஜுலைமீ முதற்கொண்டு "நிகழ்கால சத்தியம்" ஓர் மாதாந்தரப் பத்திரிகையாக வெளிப்படும். இதை யாவரும் விருப்பத்தோடு வாசிக்கத்தக்கதாக ஒரு இனிய பத்திரிகையாக வெளிப்படுத்த விரும்புகிறோம். ஒவ்வொரு பத்திரிகையிலும் சுகாதார விஷயங்கள் அநேகம் வெளிப்படும். எங்கள் பத்திராதிபர்களில் ஆங்கிலேய வைத்தியர் ஒருவர் இருப்பதால் அவர் அநேக நல்ல சுகாதார விஷயங்களின்பேரில் எழுதுவார்.

இதுமட்டும், இப்பத்திரிகைக்கு வருஷ சந்தா அணா 5 ஆக இருந்தது. இனிமேல் மாதாந்தரப் பத்திரிகையானபடியால் வருஷ சந்தா விலை ரூ. 1 ஆக்கப்படும். இனி வருஷத்தில் நாலு பத்திரிகைகளுக்குப் பதிலாக பன்னிரண்டு பத்திரிகைகள் பிரசுரிக்கப்படும்.

நீங்கள் இம்மட்டும் இப்பத்திரிகையை வாசித்து வந்திருப்பீர்களானால், இனிமேலும் இதைத் தருவிக்கும்படியாகக் கேட்டுக்கொள்ளுகிறோம். இந்தப் பத்திரிகை உங்களுக்கும் உங்கள் நண்பருக்கும் அதிக உதவியாயிருக்குமென்று நம்புகிறோம். நீங்கள் இதுவரைக்கும் சந்தாதாரா யில்லாமலிருந்திருப்பீர்களானால் உங்கள் விலாசத்தை ஆபீசுக்கு எழுதிப் பத்திரிகையைப் பெற்றுக்கொள்ளும்படியாகக் கோருகிறோம். இந்தப் பத்திரிகைக்கு நீங்கள் செலவிடும் பணம் விருதாவாய்ப் போகாதென்று நீங்கள் அறிந்துகொள்ளலாம்.

பத்திராதிபர்.

காந்தி டெலிபோன்.—இதுவரைக்கும் கண்ணாடியை சூரியகாந்திக்குக் காட்டி அதின் ஒளியால் ஒருவருக்கொருவர் விக்கல்பண்ணி பேசிக்கொள்வது வழக்கம். இனிமேல் அந்த ஒளியின் மூலமாகவே பாஷையும் செல்லும்படியான ஒரு கருவி ரன்சின் என்ற ஒரு லண்டன் சாஸ்திரியார் கண்டு பிடித்திருக்கிறார்.

ஆகாயவியான வேகம்.—லெப்டினன்ட் ரோமனட் என்ற ஓர் பிரான்ஸ்தேச விமானி ஒரு மணி நேரத்தில் 190 மைல் தூரம் பறந்தான். இதுவரைக்கும் அவ்வளவு வேகமாய் பறந்ததில்லையாம்.

22 JUL 1920

நிகழ்கால சத்தியம்.

Vol. IX. மதராஸ்:—ஜுலைமீ, 1920. No. 3.

கலகங்கள்
(STRIKES)

கலகம் என்றால் என்ன? ஆலை, கம்பெனி முதலிய தொழிற் சாலைகளில் வேலை செய்யும் வேலைக்காரர்கள் ஒன்று சேர்ந்து தொழிற்சாலை தலைவர்களுக்கு விரோதமாக எழும்பி தங்களுக்கு அதிக கூலி கொடாவிட்டால் தாங்கள் ஆலையில் வேலை செய்ய மாட்டோம் என்றும் வேலை செய்ய வருகிறவர்களை தடை செய்வோமென்றும் கட்டுப்பாடு பண்ணுவதற்கு ஸ்டிரைக் அல்லது கலகம் என்று பெயர்.

தற்காலத்தில் வேலை செய்கிறவர்களுக்கும் பணத்தை வைத்துக்கொண்டு தொழிற்சாலைகளை நடத்துகிற எஜமான்களுக்கும் அதிக தொந்தரவுகள் நேரிடுகிறது. அநேக தடவைகளில் வேலைக்காரர்கள் ஸ்டிரைக் செய்து தங்களுக்கும் மற்றவர்களுக்கும் துன்பத்தை வருவிக்கிறார்கள்.

ஒரு அமெரிக்க பத்திரிகையில் பின்வருமாறு வாசிக்கிறோம்:—

"கடந்த மூன்று வருஷத்திற்குள்ளாக அமெரிக்கா ஐக்கிய மாகாணத்தில் 11,092 கலகங்கள் நடந்ததாக கவர்ன்மென்றார் கணக்கிட்டிருக்கிறார்கள். சண்டை நடந்த 1917-ம் 1918-ம் வருஷங்களில் மாத்திரம் 7000-க்கு அதிகமான கலகங்கள் உண்டானதாக கணக்கிடப்பட்டிக்கிறது. சண்டை நின்று சமாதானமானதிலிருந்து கடந்த 11 மாதங்களில் 3000 ஸ்டிரைக் தினசரி 9 என்று கணக்கிடப்பட்டிருக்கிறது. சிலநாட்களுக்குமுன் நியூயார்க் என்னும் பட்டணத்தில் ஒரே சமயத்தில் 300 ஸ்டிரைக் நடந்தது".

இக்கலகங்கள் அமெரிக்காவில் மாத்திரம் அல்ல உலகத்தின் எல்லா இடங்களிலும் நடக்கிறது. கொஞ்ச நாட்களுக்குமுன் இங்கிலாந்து தேசத்திலே இருப்புப்பாதை, டிராம் வண்டி, முதலானவைகளில் வேலை செய்கிறவர்கள் ஒன்று சேர்ந்து தங்களுக்கு அதிக கூலி வேண்டுமென்று கட்டுப்பாடு பண்ணினார்கள். மற்ற தொழில் செய்கிறவர்களும் அப்படியே செய்தார்கள். உருஷியாவிலும் ஐரோப்பாவிலும், சீனாவிலும், ஜப்பானிலும், இந்தியாவிலும்கூட இதே மாதிரியான கலகங்கள் நடந்து வருகிறது. முதலை வைத்து வியாபாரம் பண்ணும் எஜமான்கள் ஏழைகளை வருத்தப்படுத்துகிறார்கள். ஏழை கூலிக்காரர்களெல்லாம் ஒரு கூட்டங்கூடி தங்களுக்கு அதிக கூலி வேண்டுமென்று முதலாளிகளோடு சண்டை போடுகிறார்கள்.

இதுவும் கடைசி காலத்துக்குறிய ஓர் அடையாளமாயிருக்கிறது. இது, நாம் முடிவுக்குச் சமீபிக்கிறோமென்பதைக் காட்டுகிறது. 2000 வருஷங்களுக்கு முன்னதாக கடைசி காலத்தில் இவ்விதமான காரியங்கள் சம்பவிக்குமென்று தேவன் தமது ஊழியக்காரர் மூலமாய் முன்னுரைத்திருக்கிறார். "ஐசுவரியவான்களே, கேளுங்கள், உங்கள்மேல் வரும் நிர்ப்பந்தங்களின் நிமித்தம் அலறி அழுங்கள். உங்கள் ஐசுவரியம் அழிந்து உங்கள் வஸ்திரங்

ரங்கள் பொட்டரித்துப் போயின. உங்கள் பொன்னும் வெள்ளியும் துருப்பிடித்தது; அவைகளிலுள்ள துரு, உங்களுக்கு விரோதமாகச் சாட்சியாயிருந்து, அக்கினியைப்போல உங்கள் மாமிசத்தைத் தின்னும். கடைசி நாட்களிலே பொக்கிஷத்தைச் சேர்த்தீர்கள். இதோ, உங்கள் வயல்களை அறுத்த வேலைக்காரருடைய கூலி உங்களால் அநியாயமாய்ப் பிடிக்கப்பட்டு கூக்குரலிடுகிறது; அறுத்தவர்களுடைய கூக்குரல் சேனைகளுடைய கர்த்தரின் செவிகளில் பட்டது. பூமியிலே நீங்கள் சம்பிரமமாய் வாழ்ந்து, சுக போகத்தில் உழன்றீர்கள், கொழுத்தவைகளை அடிக்கும் நாளில் நடக்கிறதுபோல உங்கள் இருதயங்களைப் போஷித்தீர்கள், நீதிமானை நீங்கள் ஆக்கினைக்குள்ளாகத் தீர்த்துக் கொலை செய்தீர்கள் அவன் உங்களோடே எதிர்த்து நிற்கவில்லை. இப்படியிருக்க, சகோதரரே, கர்த்தர் வருமளவும் நீடிய பொறுமையாயிருங்கள். இதோ, பயிரிடுகிறவன் பூமியின் நற்பலனை அடையவேண்டுமென்று, முன்மாரியும் பின்மாரியும் வருமளவும், நீடிய பொறுமையோடே, காத்திருக்கிறான். நீங்களும் நீடிய பொறுமையோடிருந்து, உங்கள் இருதயங்களை ஸ்திரப் படுத்துங்கள்; கர்த்தரின் வருகை சமீபமாயிருக்கிறதே." யாக். 5: 1-8.

இப்பத்திரிகையைப் பிரசுரிக்கும் 7-ம் நாள் வருகைக்காரர் இவ்விதமான காரியங்கள் சம்பவிக்குமென்று கடந்த 50 வருஷமாக பிசங்கித்துக்கொண்டு வந்திருக்கிறோம். நாங்கள் அப்படி பிரசங்கிக்க ஆரம்பித்த காலத்தில் உலகத்தில் இதுபோன்ற கலகங்கள் நடப்பதாகக் காணப்படவேயில்லை. வேலைக்காரர்களுக்கும் முதலாளிகளுக்கும் நல்ல ஒற்றுமையிருந்தது. இப்பேர்ப்பட்டவைகள் நேரிடுமென்று நாங்கள் சத்தியவேதத்திலிருந்துதான் அறிந்து கொண்டோம். ஆனால் அக்காலத்திலிருந்த ஜனங்கள் எங்களைப் பரிகாசம் பண்ணினார்கள். ஆனால் நாங்கள் சொன்னதைவிட அதிக கேடான காரியங்கள் இப்போது சம்பவிக்கிறதை நாம் பார்க்கிறோம். இந்தத் தீர்க்கதரிசனங்களில் அநேகம் இப்பொழுது நமது கண் முன்பாக நிறைவேறுகிறது. ஆனால் மனிதர், இந்தத் தீர்க்கதரிசனங்கள் அவைகள் எழுதப்பட்ட காலத்துக்கடுத்தவைகளாயிருக்கிறதென்று சொல்லுகிறார்கள்.

எல்லாத் தீர்க்கதரிசனங்களும் உலகத்தின் முடிவையும், இயேசுக் கிறிஸ்துவின் மகிமையின் பிரசன்னமாகுதலையும் குறிக்கிறது. அவைகள் எல்லாம் ஒன்றன்பின் ஒன்றாக நிறைவேறுகிறதை நாம் பார்க்கிறோம். அப்படியானால் இந்தத் தீர்க்கதரிசனங்கள் முன்னுரைக்கிற அந்த மகா பெரிய சம்பவம் சீக்கிரத்தில் சம்பவிக்குமென்று நாம் ஏன் விசுவாசிக்கக் கூடாது.

அங்கார்கனென்னும் கிரகத்திலிருந்து வந்த செய்தி

(MESSAGE FROM MARS)

கம்பியில்லாத தந்திக் கருவிகளில் ஓர்விதவிநோதமான சப்தம் கேட்டதாக சிலநாட்களுக்கு முன் சமாசாரப் பத்திரிகைகளில் வெளியிடப்பட்டிருந்தது. அந்த விநோதமான சப்தம் பல தடவைகளில் கேட்டது. அது அதிக தொலைதூரத்திலிருந்து யாரோ ஒருவர் அனுப்புகிற செய்தியைப்போலிருந்தது. ஆனால் அந்தப் பாஷையை வியார்த்திக்க முடியவில்லை. இந்த செய்தி ஒரே சமயத்தில் அமெரிக்காவிலும், இங்கிலாந்திலும், ஐரோப்பாவிலும் எட்டினதாம். சிலர் இது அங்காரகன் அல்லது வேறொரு கிரகத்திலிருந்து அனுப்பப்பட்ட செய்தியாயிருக்க வேண்டுமென்று உத்தேசிக்கிறார்கள். அது மெய்யோ, பொய்யோ, இந்த செய்தி எங்கிருந்து வருகிறதென்றும் அதன் அர்த்த மென்னவென்றும் ஒருவருக்கும் தெரியவில்லை.

மற்ற கிரகங்களிலுள்ள ஜனங்கள் இவ்வுலகத்திலுள்ளவர்களோடு பேசுவது கூடாத காரியமல்ல. இந்த உலகத்தைத் தவிர சிருஷ்டிக்கப்பட்ட வேறு கிரகங்கள் உண்டென்று சத்திய வேதம் தெளிவாய்ப் போதிக்கிறது. அக்கிரகங்களில் வசிக்கும் ஜனங்கள் இவ்வுலகத்தில் வசிக்கிற ஜனங்களுடைய செய்கைகளை உற்று நோக்க அதிக ஆசையுள்ளவர்களாயிருப்பது ஆச்சரியமல்ல. நமது உலகம் மாத்திரம் பாவத்தில் விழுந்தது. இந்த உலகத்தை இரட்சிக்கவே கிறிஸ்து இப்பூமிக்கு வந்தார். இது மற்ற 99 ஆட்டையல்ல ஆனால் காணாமற்போன அந்த ஒரே ஆட்டைக் குறிக்கிறது. பாவத்தினால் இவ்வுலகத்திற்கும் அதிலுள்ள ஜனங்களுக்கும் வந்த பலனை மற்ற கிரகங்களிலுள்ளவர்கள் உற்று நோக்கிக்கொண்டிருக்கிறார்கள். பாரச்சுமையின்கீழ் ஓர் விருத்தாப்பியன் தள்ளாடுவதுபோல இவ்வுலகம் பாவச் சுமையின்கீழ் தள்ளாடுவதை அவர்கள் கண்டு மனதுருகிறார்கள். கடந்த சில வருஷங்களாக நடந்த சண்டையிலும் இரத்தஞ் சிந்துதலிலும் நம்மை நல்வழியில் நடத்த அவர்கள் வாஞ்சித்திருப்பார்கள். நாம் உலக முடிவுக்கு சமீபிக்கிறோம். சீக்கிரத்திற்குள்ளாக கிறிஸ்து இவ்வுலகத்திற்கு வந்து பாவத்தையும் பாவிகளையும் நிர்மூலமாக்கி தமது பிள்ளைகளை தாம் அவர்களுக்காக ஆயத்தம் பண்ணின வாசஸ்தலங்களுக்குக் கொண்டுபோவார். நாம் அந்த மகா சம்பவத்திற்கு அதிசீக்கிரமாய்த் தீவிரிப்பதை மற்ற கிரகங்களிலுள்ளவர்கள் பார்க்கும்போது நாம் நமது பாவத்தை விட்டுவிட்டு தேவனிடமாக திரும்பி அவரை சமாதானத்தோடு சந்திக்க நம்மை எச்சரிப்பது ஒரு ஆச்சரியமல்ல. அவர்கள் நம்மை இந்த விநோதமான சப்தத்தினால் எச்சரிக்கிறார்களோ இல்லையோ என்பது ஒருவருக்கும் தெரியாது. ஆனால் தேவன் தமது திருவசனத்தின் மூலமாக அவர் வருகை சமீபிக்கிறதென்று சுட்டிக் காட்டி நம்மை ஆயத்தப்படும்படி அழைக்கிறார். அந்த அழைப்பை நீ அங்கிகரிக்கிறாயா?

என் இந்து சிநேகிதனுக்கு ஓர் கடிதம்

(A LETTER TO MY HINDU FRIEND. NO. 2)

என் பிரியமுள்ள வரதராஜுலுக்கு எழுதும் சேதியாவது:—

நான் முன் எழுதின கடிதத்திற்கு நீர் பதில் எழுதினதற்காக அதிக சந்தோஷப்படுகிறேன். நான் எழுதின காரியம் உமக்கு அதிக பிரியத்தைக் கொடுத்ததற்காகவும் எனக்கு சந்தோஷம். இம்மானுவேலின் சரித்திரம் எவ்வளவு இன்பமானது. அதை ஆயிரந்தரம் சொன்னாலும் அது ஒவ்வொருதரமும் அதிக இன்பத்தைக் கொடுக்கிறது. இந்தக் கடிதத்தில் நான் இயேசுவின் அற்புதங்களையும் உபதேசத்தையும்பற்றி எழுத யோசிக்கிறேன்.

அவர் இந்தியாவிலிருக்கும் நம்மைப்போல ஓர் ஏழை மனிதன் தான். அவருடைய தகப்பனார் ஓர் தச்சன். இயேசு தம்முடைய இளமைப் பிராயத்தில் தன் தகப்பனாருடைய தச்சுப் பட்டரையில் வேலை செய்து வந்தார். அவர் அப்படி வேலை செய்யும்போது பல மனுஷர்களைக் கண்டு அவர்களோடு பழகியிருப்பார். அவருடைய ஜீவியத்தில் அநேக சோதனைகள் வந்திருக்கலாம். ஆனால் அவர் அவற்றையெல்லாம் தைரியமாய் மேற்கொண்டார். அவர் ஒரு சோதனையிலும் விழவில்லை. உலகத்தில் அநேக மகாத்துமாக்கள் இருந்தார்கள், அநேக படிப்பாளிகள் இருந்தார்கள். அவர்களில் ஒரு பாவமும் செய்யாதவர்கள் ஒருவருமில்லை. ஆனால் இயேசு ஒரு தப்பிதமும் செய்தவரல்ல. அவர் ஒருவரையும் பகைக்கவில்லை. அவர் ஒருவரோடும் கடுஞ் சொற்கள் சொன்னதில்லை. அவருடைய மனதில் கெட்ட எண்ணங்கள் உதித்ததில்லை. அவரிடத்தில் பெருமையும் பிடிவாதமும் இருந்ததில்லை. அவர் பிறர் பொருளை இச்சித்ததில்லை. அவர் கெட்ட வார்த்தை பேசினதில்லை. அவர் மயக்கந்தரும் மதுபானங்களையாவது சரீரத்தைக் கெடுக்கும் வேறெந்த விஷபதார்த்தங்களையாவது உட்கொள்ளவில்லை. அவர் எல்லாக் காரியத்திலும் இளைஞர்களுக்கு ஓர்

நல்ல முன்மாதிரியாயிருந்தார். ஐயோ! அப்பேர்ப்பட்ட மனிதர்களை இப்போது காண்பது அரிது. அவர் ஒருவரே அவ்வாறு ஜீவித்தார்.

அவர் முப்பது வயதானபோது அவர் தன் தகப்பன் வீட்டைவிட்டுப் புறப்பட்டு ஜனங்களுக்கு உபதேசிக்கும்படியாக ஓர் சந்நியாசியைப்போல காலங்கழித்தார். அவர் தாம் உபதேசித்த இடங்களிலெல்லாம் ஜனங்களுக்கு அதிக உதவி செய்தார். ஒரு மனுஷனுக்கு வியாதியிருந்தால் அவர் தமது பரம பிதாவின் வல்லமையைக்கொண்டு அந்த மனுஷனை சொஸ்தமாக்கினார். குருடருக்கும் பார்வை யளித்தார். பசித்தவர்களைத் திருப்தியாக்கினார். வருத்தப்படுகிறவர்களைத் தேற்றினார். துன்பப்பட்ட யாவருக்கும் அவர் துணையாயிருந்தார். அவர் சிறு பிள்ளைகளை நேசித்தார். முதியோரிடத்தில் பட்சமாயிருந்தார். அவர் போன இடமெல்லாம் ஜனங்களுக்கு உதவி செய்தார். யூதரின் தலைவர்களும் ஆசாரியர்களும் தவிர மற்ற யாவரும் அவரில் அன்பு கூர்ந்து அவரைக் கனம் பண்ணினார்கள். இயேசுவின் ஜீவியமும் அவருடைய வார்த்தைகளும் சுத்தமும் உண்மையுமாயிருந்ததால் ஜனங்கள் தங்களைப் பின்பற்றுவதை விட்டுவிட்டு இவரைப் பின்பற்றுவார்களென்று பயந்ததினால் இவர்கள் அவரைப் பகைத்தார்கள்.

கிறிஸ்து இவ்வுலகத்திலிருந்த போதகர்களிளெல்லாம் பெரியவர். இவர் பெரிய கல்விச்சாலைகளில் வித்தை கற்று பட்டங்களைப் பெறாதிருந்தாலும் எந்த மனிதனும் இவரைப்போல் பேசினதேயில்லை. தேவனாகிய அவர் மனித அவதாரமெடுத்ததினால் அப்படிப் போதகம் பண்ணினார். அவருடைய போதகங்கள் யாவும் புஸ்தகங்களில் எழுதப்படவில்லை. ஆனால் எழுதப்பட்டவைகள் யாவும் நேர்த்தியானவைகளாயிருக்கிறது. அவர் மலையின்மேல் செய்த பிரசங்கத்தைப்பற்றி அவருடைய சீஷர்களில் ஒருவர் எழுதியிருக்கிறதை மத்தேயு 5-ம், 6-ம், 7-ம் அதிகாரங்களில் வாசிக்கவும். அவர் மனிதர் தங்கள் பாவங்களையெல்லாம் விட்டுவிட்டு எல்லா மனிதரோடும் சமாதானமாய் ஜீவியம் செய்யும்படியாகவும் மெய்யான தேவனையே வணங்கி அவருக்குக் கீழ்படியும்படியாகவும் கற்பித்தார். இயேசு தாம் தேவனுடைய குமாரனென்று அவருக்குத் தெரியும். தாம் இவ்வுலகத்திற்கு வந்ததின் நோக்கமும் அவருக்குத்தெரியும். ஆகையினால் தாம் போன இடமெல்லாம் தம்மை தேவனுடைய குமாரனாகவும் தமது பரம பிதா பரலோகத்திலிருக்கிறாரென்றும் வெளிப்படுத்தினார். மனிதர்கள் ஜீவிக்கவேண்டிய வழியை அவர்களுக்குக் காண்பிக்கவேண்டுமென்றே அவர் மனிடவதாரமெடுத்தாரென்று அவருக்குத் தெரியும். ஆகையினாலே அவர் ஜனங்களை நோக்கி "நானே வழியும் சத்தியமும் ஜீவனுமாயிருக்கிறேன்" என்றார். ஒருவன் மறுமையில் நித்திய ஜீவனை யடையவேண்டுமென்றால் தம்மை விசுவாசிக்கவேண்டுமென்றும் போதித்தார். பரலோக ராஜ்யத்தை நாம் அடையும்படியாக அவரை விசுவாசிப்பதே ஒன்றான வழி யென்று போதித்தார். அக்காலத்தில் ஆயிரக்கணக்கான ஜனங்கள் அவரை தேவ குமாரனென்று விசுவாசித்து பின்பற்றினார்கள். அக்காலமுதல் லக்ஷக்கணக்கான ஜனங்கள் உலகத்தின் எல்லாப் பாகங்களிலும் அவரைப் பின்பற்றுகிறார்கள். அவர்கள் கிறிஸ்துவை விசுவாசித்து அவருக்குக் கீழ்படிகிறதினால் கிறிஸ்தவர்களென்று அழைக்கப்படுகிறார்கள்.

அவருடைய ஜீவியம் பரிசுத்தமும் உபதேசம் உண்மையுமாயிருக்கிறதினால் நானும் அவரை விசுவாசிக்கிறேன். நான் ஏறக்குறைய 20 வருஷ காலமாக அவரை விசுவாசிக்கிறேன். அவருடைய ஜீவியத்தைப்பற்றி படிக்கப்படிக்க, அவர் நிட்சயமாகவே தேவனுடைய குமாரனாயிருக்கிறார் என்று நான் கண்டறிகிறேன். நீயும் அவரைப்பற்றி அதிகமதிகமாய் அறிந்து விசுவாசித்து அவரைப் பின்பற்றுவாயென்று நம்புகிறேன்.

இத்தோடு கடிதத்தை முடிக்கிறேன். பிற்பாடு இதைப்பற்றி இன்னும் எழுதுகிறேன்,

இப்படிக்கு, உமது உண்மையுள்ள
ஜி. ஜி. லேளரி.

உலகத்தின் முடிவு இன்னும் வரவில்லை

(THE END OF THE WORLD NOT COME YET)

சில ஜனங்கள் 1919-ம் ஞு டிசம்பர் மீ 17-ம் தேதியில் உலகம் முடியுமென்று நாள் குறித்தார்கள். ஆனால் அந்த நாள் மற்ற நாட்களைப்போலவே கழிந்துபோயிற்று. அதில் விசேஷித்த சம்பவம் ஒன்றும் நடக்கவில்லை. அநேக ஜனங்கள் பலபல காலங்களில் உலகம் முடியுமென்று நாள் குறித்தார்கள். சிலர் ஜனங்களைப் பயமுறுத்தும் படியாகவும் சிலர் பண லாப மடையும்படியாகவும், இதை நம்பின சிலர் மற்றவர்களை எச்சரிக்கும்படியாகவும் இப்படிச் செய்தார்கள். நம்முடைய கர்த்தர் "அந்த நாளையும் அந்த நாழிகையும் என் பிதா ஒருவர் தவிர மற்றொருவனும் அறியான்; பரலோகத்திலுள்ள தூதர்களும் அறியார்கள்" என்று சொல்லியிருந்தபோதிலும் 19 நூற்றாண்டுகளாக ஜனங்கள் கிறிஸ்துவின் வருகைக்கு நாள் குறித்துக்கொண்டே வந்திருக்கிறார்கள்.

கி. பி. 1000-ம் வருஷத்தில் திரளான ஜனங்கள் எழும்பி பலஸ்தீன நாட்டில் எருசலேம் பட்டணத்திற்கருகாமையிலுள்ள சீயோன் மலைக்குப்போய் அங்கே உலக முடிவைக் காண எதிர்பார்த்தார்கள். கி. பி. 1533-ம் வருஷத்தில் ஸ்றோவிலர் (Stoeffler) என்பவர் இன்னும் ஒரு ஜலப்பிரளயம் வரப்போகிறதென்று போதித்தார். நோவாவைப்போல அநேகர் அவனை விசுவாசித்து தங்களை ஆயத்தப்படுத்தினார்கள். ஓர் ஐசுவரியனான பிரான்சு தேசத்து சீமான் ஒரு பெரிய கப்பலைக் கட்டி அதில் தனக்கும் தன் குடும்பத்துக்கும் ஆறு மாதத்திற்குப் போதுமான உணவுப்பொருள்களைச் சேகரித்து வைத்தான். வேறொரு பட்டணத்திலிருந்த ஜனங்கள் தங்களுடைய பணங்களைப் பொதுவாக செலவிட்டு ஒரு பெரிய கப்பலைக் கட்டி தங்களைக் காத்துக்கொள்ள விரும்பினார்கள். குறிக்கப்பட்ட தினத்தில் ஸ்தோவிலர் தமது கடைசி பிரசங்கத்தைப்பண்ணி உரத்த சத்தமாக "இதோ வருகிறது" என்று கூப்பிட்டார். ஆனாலும் அது வரவில்லை. அவனால் வஞ்சிக்கப்பட்ட ஜனங்கள் யாவரும் கோபமடைந்து அந்தத் தீர்க்கதரிசியை ஓர் தடாகத்தில் தள்ளிவிட்டார்கள்.

உவில்லியம் மில்லர் என்னும் ஓர் நல்ல மனிதன் 1844-ம் வருஷத்தில் கிறிஸ்து வருவாரென்று போதித்தார். அதை விசுவாசித்தவர்கள் ஏமாந்துபோனார்கள். இந்தியா தேசத்திலுள்ள மலையாள நாட்டில் ஒருவர் அப்பொழுது உலகம் முடியுமென்றும், கிறிஸ்துவின் ராஜ்யம் சீக்கிரம் ஸ்தாபிக்கப்படப்போகிறதென்றும் பிரசங்கம் பண்ணினார். ஆயிரக்கணக்கானபேர் அவனை விசுவாசித்தார்கள். அவன் புதிய எருசலேமில் பிரவேசிக்க ஜனங்களுக்கு டிக்கட்டு விற்பனை செய்தான். ஜனங்கள் யாவரும் 15 ரூபாய் பெருமான ஓர் தங்க நாணயத்தைக் கொடுத்து அதை வாங்கினார்கள். குறிக்கப்பட்ட தினம் நெருங்கினது. இவனும் ஏராளமான பணத்தைச் சம்பாதித்தான். குறித்த தினம் வந்தபோது நூதனமாய் ஒன்றும் நடக்கவில்லை. ஆனால் போதகர் தான் தண்டல் பண்ணின பணத்தை எல்லாம் கைப்பற்றிக்கொண்டு காணாமல் போய்விட்டான்.

ரசல் போதகர், 1914-ம் வருஷத்தில் புறஜாதிகளின் ராஜ்யங்களும் பட்டணங்களும் அழிக்கப்பட்டு சாத்தான் கட்டப்பட்டு 1000 வருஷம் சமாதானமும் சவுக்கியமும் உண்டாகுமென்று அநேக வருஷமாகப் பிரசங்கித்தார். இந்த உபதேசத்தினால் அநேகர் வஞ்சிக்கப்பட்டார்கள். சாத்தான் கட்டப்பட்டு சமாதானமும் சவுக்கியமுமான ஆயிரவருஷ அரசாட்சி ஆரம்பிக்கிறதற்குப் பதிலாக உலக சரித்திரத்தில் ஒருபோதும் கேள்விப்பட்டிராத பயங்கரமான ஐரோப்பிய யுத்தம் ஆரம்பித்தது.

இவைகள் போதிக்கப்படுவது சாத்தானுக்கு அதிக பிரீதி. ஏனென்றால் ஜனங்கள் இவைகளை விசுவாசித்தபின் அவைகள் சம்பவியாமற்போனால், அவர்கள் மனந்தளர்ந்து வேதாகமத்தின் சத்திய போதகங்களை நம்பாமற் போவார்களென்பது அவனுடைய எண்ணம்.

கிறிஸ்துவின் வருகையைப்பற்றி திட்டமான காலம் வேதாகமத்தில் எவ்விடத்திலுவது எழுதப்படவில்லை. ஆனால் அவர் வருகை சமீபமாயிருக்கிறதென்று காட்டுவதற்கு சில அடையாளங்கள் கொடுக்கப்பட்டிருக்கிறது. நாம் இந்த அடையாளங்கள் நிறைவேறுகிறதைக் காணும்போது அவருடைய வருகை சமீபமாயிருக்கிறதென்று அறிந்துகொள்ளக் கூடுமேயல்லாது அவருடைய வருகையின் நாளை அறியவே முடியாது. கிறிஸ்துவின் வருகையைக் குறிக்கும் தீர்க்க தரிசனங்கள் அநேக மிருக்கிறது. அவர் வருமுன்னதாக அவை யாவும் நிறைவேறித் தீரவேண்டும். அவைகளில் சில நிறைவேறிவிட்டன, சில இப்பொழுது நிறைவேறுகின்றன, இன்னும் சில நிறைவேறவேண்டியதாயிருக்கிறது.

நிறை வேறின தீர்க்கதரிசனங்களாவன :—

1. மத்தேயு 24: 21, 22-ல் சொல்லப்பட்ட அஞ்ஞான பாப்பு, ரோம உபத்திரவ காலம். இது தானியேல் வெளிப்படுத்தின விசேஷம் என்னப்பட்ட புஸ்தகங்களில் சொல்லப்பட்டபடி 18-ம் நூற்றாண்டு வரை நீடித்தது.

2. "ஆறும் முத்திரை உடைக்கப்பட்டபொழுது உண்டான சம்பவம். இது 1755-ம் வருஷம் நவம்பர்மீ 1-ம் தேதி லிஸ்பன் பட்டணத்தில் உண்டான பூமி யதிர்ச்சியைக் குறிக்கிறது. வெளி. 6: 12.

3. 1789-ம் ஞு மேமீ 19-ம் தேதி சூரியனும் சந்திரனும் இருண்டது. மத். 24: 29; வெளி. 6: 12.

4. 1833-ம் ஞு நவம்பர்மீ 13-ம் தேதி நட்சத்திரங்கள் விழுந்தன. மத். 24: 29; வெளி. 6: 13.

நிறைவேறுகிற தீர்க்கதரிசனங்களாவன.

1. யுத்தங்களும், பஞ்சங்களும், பூமி யதிர்ச்சிகளும், பூமியின்மேல் ஆபத்தும், ஆகாய மண்டலங்களில் அடையாளங்களும் நடக்கின்றன. லூக். 21: 25, 26; மாற். 13: 7, 8; மத். 24: 6, 7.

2. கள்ளக் கிறிஸ்துக்களும் கள்ளத் தீர்க்கதரிசிகளும். மத். 24: 24-28. மாற். 13: 21, 22.

3. கிறிஸ்தவர்களுக்குள் ஆவி தளர்ந்துபோகும். 2 தீமோ. 3: 1-5.

4. அறிவு பெருக்கமும், வேதாகமம் பரம்புதலும். தானி. 12: 4.

கிறிஸ்துவின் இரண்டாம் வருகைக்கும் உலகத்தின் முடிவுக்கு முன்னதாக இன்னும் நிறைவேறவேண்டிய தீர்க்கதரிசனங்கள்.

1. "ராஜ்யத்தினுடைய இந்தச் சுவிசேஷம் பூலோகமெங்குமுள்ள சகல ஜாதிகளுக்கும் சாட்சியாகப் பிரசங்கிக்கப்படும், அப்போது முடிவு வரும்." மத். 24: 14.

2. அந்திக்கிறிஸ்து வெளிப்படுதலும், மரித்தவர்களோடு சம்பாஷிக்கும் கட்சிக்காரரின் வளர்ச்சியும். "அக்கிரமத்தின் இரகசியம் இப்பொழுதே கிரியை செய்கிறது; ஆனாலும் தடை செய்கிறவன் நடுவிலிருந்து நீக்கப்படுமுன்னே அது வெளிப்படாது. நீக்கப்படும்போது, அந்த அக்கிரமக்காரன் வெளிப்படுவான்; அவனைக் கர்த்தர் தம்முடைய வாயின் சுவாசத்தினாலே அழித்து, தம்முடைய வருகையின் பிரசன்னத்தினாலே நாசம் பண்ணுவார். அந்த அக்கிரமக்காரனுடைய வருகை சாத்தானுடைய செயலின்படி சகல வல்லமையோடும் அடையாளங்களோடும் பொய்யான அற்புதங்களோடும், கெட்டுப்போகிறவர்களுக்குள்ளே அநீதியினால் உண்டாகும் சகலவித வஞ்சகத்தோடும் இருக்கும். இரட்சிக்கப்படத்தக்கதாய்ச் சத்தியத்தின்மேலுள்ள அன்பை அவர்கள் அங்கிகரியாமல் போனபடியால் அப்படி நடக்கும்." 2 தெச. 2: 7-10.

3. மதமும் ராஜாங்கமும் சம்பந்தப்பட்ட ஓர் வல்லமை, அந்திக்கிறிஸ்து, மரித்தவர்களோடு சம்பாஷிக்கும் கட்சிக்காரர் முதலானவர்களுடைய உதவியினால் உலக முழுவதிலுமுள்ள ராஜ்யங்களை உபத்திரவப்படுத்தி அவர்கள் கீழ்ப்படியாவிட்டால் மரண தண்டனை விதிக்கும். வெளி. 13: 11-17.

4. உலகத்திற்கும், மெய்க்கிறிஸ்தவர்களுக்கும் வரப்போகிற ஒரு பெரிய உபத்திரவ காலம். "உன் ஜனத்தின் புத்திரருக்காக நிற்கிற பெரிய அதிபதியாகிய மிகாவேல் அக்காலத்திலே எழும்புவான்; யாதொரு ஜாதியாரும் தோன்றினது முதல் அக்காலமட்டும் உண்டாயிராத ஆபத்துக்காலம் வரும்; அக்காலத்திலே புஸ்தகத்திலே எழுதியிருக்கிறவர்களாகக் காணப்படுகிற உன் ஜனங்கள் அனைவரும் விடுவிக்கப்படுவார்கள்." தானி. 12: 1.

5. உபத்திரவ காலத்தில் உண்டாகும் கடைசியான ஏழு வாதைகள்.

அவையாவன :—

மனந்திரும்பாதவர்களுக்கு "பொல்லாத கொடிய புண்" உண்டாகும்.

சமுத்திரம் இரத்தம் போலாகும்.

ஆறுகளும் நீரூற்றுகளும் இரத்தமாக மாறும்.

சூரியனுடைய காங்கையினால் மனிதர் தகிக்கப்படுவார்கள்.

"மிருகத்தின்" ராஜ்யம் இருளடையும்.

அக்காலத்தில் ஐபிராத் நதி பாயும் தேசத்தை அரசாளும் ராஜ்யம் அழிக்கப்படும் அல்லது எடுத்துப்போடப்படும். கிழக்கத்தி ராஜ்யங்களும் உலகத்தின் மற்ற ராஜ்யங்களும் "சர்வ வல்லமையுள்ள தேவனுடைய மகா நாளில் நடக்கும் யுத்தத்திற்கு" அர்மகெதோன் என்னுமிடத்திலே கூடுவார்கள்.

பூமியின்மேல் மனுஷர்கள் உண்டான நாள் முதற்கொண்டு உண்டாயிராத பெரிய பூமியதிர்ச்சி உண்டாகும். உலகத்திலுள்ள "புறஜாதிகளுடைய பட்டணங்கள் விழுந்தன." பாபிலோன் நியாயந் தீர்க்கப்பட்டது. "தீவுகள் யாவும் அகன்று போயின; பர்வதங்கள் காணப்படாமற்போயின. தாலந்து நிறையான பெரிய கல் மழையும் வானத்திலிருந்து மனுஷர்மேல் விழுந்தது." வெளி. 16.

"அப்படியே இவைகள் சம்பவிக்கிறதை நீங்கள் காணும்போது, தேவனுடைய ராஜ்யம் சமீபமாயிற்றென்று அறியுங்கள்...........உங்கள் இருதயங்கள் பெருந்திண்டியினாலும் வெறியினாலும் லவுகீக கவலைகளினாலும் பாரமடையாதபடிக்கும், நீங்கள் நினையாத நேரத்தில் அந்த நாள் உங்கள்மேல் வராதபடிக்கும் எச்சரிக்கையாயிருங்கள். பூமியிலெங்கும் குடியிருக்கிற அனைவர்மேலும் அது ஒரு கண்ணியைப்போல வரும். ஆகையால் இனிச் சம்பவிக்கப்போகிற இவைகளுக்கெல்லாம் நீங்கள் தப்பி, மனுஷ குமாரனுக்கு முன்பாக நிற்கப் பாத்திரவான்களாக எண்ணப்படுவதற்கு, எப்பொழுதும் ஜெபம் பண்ணி விழித்திருங்கள் என்றார்." லூக். 21: 31-36.

உலகத்தின் புராதன பட்டணம்

(THE OLDEST CITY IN THE WORLD.)

மனிதர்கள் பட்டணங்களில் கூடி வசிக்கவேண்டுமென்பது தேவ ஏற்பாடல்ல. ஜனங்கள் பூமியின்மீது சிதறியிருந்து நிலத்தைப் பண்படுத்தி ஜீவிக்கவேண்டுமென்பதே தேவனுடைய நோக்கம். ஆகவே, தேவன் ஆதாமையும் ஏவாளையும் சிருஷ்டித்து அவர்களுக்கு சரியான தொழிலை ஏற்படுத்தினார். ஆனால், சீக்கிரத்திற்குள்ளாக ஜனங்கள் நகரங்களிலும் பட்டணங்களிலும்கூட ஆரம்பித்தார்கள். அப்பொழுது அக்கிரமம் பூமியில் பெரிதாயிற்று. அக்கிரமத்தின் பலனாக ஜலப்பிரளயம் வந்தது. அதன்பின்பு ஜனங்கள் நகரத்தைக் கட்ட ஆரம்பித்தார்கள். அவைகளெல்லாவற்றிலும் பெரியது பாபிலோன். அதைப்பற்றி மூாத்திரம் எழுதப்பட்டிருக்கிறது.

பாபிலோன் என்னுமிடத்தில் ஜனங்கள் வானத்தை அளாவும் சிகரமுள்ள ஒரு கோபுரத்தைக்கட்ட எண்ணினார்கள். இனிமேல் வேறொரு ஜலப்பிரளயம் வந்தால் தங்களைக் காத்துக்கொள்ளும்படியாக இதைக் கட்ட நினைத்தார்கள். இந்த இடத்தில்தான் தேவன் அவர்களுடைய பாஷையைத் தாறுமாறாக்கி அவர்கள் கோபுரத்தைக் கட்டாதபடி பூமியின் மீதெங்கும் சிதறடித்தார்.

பிற்பாடு பாபிலோன் முதலாம் உலக ராஜ்யத்தின் தலைநகராயிற்று. நிம்ரோத் இதைக் கட்டினான். இவனே உலகத்தில் முதலாம் ராஜாவாயிருந்தான். உலக சரித்திரத்தில் இதுவே ஐசுவரியத்திலும் வல்லமையிலும் சிறந்து விளங்கிற்று.

நிம்ரோத் அதைக்கட்ட ஆரம்பித்தபோதிலும் 1000 வருஷங்களுக்குப்பிறகு நேபுகாத்நேசார் என்னும் ராஜா அதை முழுவதும் கட்டி முடித்தான். அவன் 20 லக்ஷம் பேரைக் கொண்டு அதைக் கட்டி முடித்தான். அதைக் கட்டி முடித்தபின் உலகத்தின் நாலு பாகங்களிலுமிருந்து ஐசுவரியத்தையும் திரவியத்தையும் அதில் கொண்டு வந்து சேர்த்தான். அதன் கோட்டைக்குள் பல ராஜ்யங்களிலிருந்து சிறை பிடிக்கப்பட்டவர்கள் இருந்தார்கள்.

அந்த நகரத்தின் மதில்கள் 350 அடி உயரமுள்ளதாயிருந்தது என்று சரித்திரக்காரர் சொல்லுகிறார்கள். அந்த நகரத்திற்கு நூறு பிரமாண்டமான வாசல்களிருந்தது. மலைப் பிரதேசமான மேதியாவிலிருந்து பாபிலோன் ராஜா ஒரு ராணியை விவாகம் பண்ணினான். அவளுக்கு இன்பத்தைத் தருவிக்கும்படியாக தொங்கு தோட்டங்களை நகரத்திற்குள் உண்டு பண்ணினான். அது மதிலளவு உயரமாயிருந்தது. பேல் என்னும் தேவதையின் நாமத்தில் கட்டப்பட்ட ஒரு தேவாலயம் இருந்தது. அதன் கோபுரம் தரை மட்டத்திற்குமேல் 600 அடி உயரமாயிருந்தது. நகரத்தின் தெருக்கள் பளபளப்பான கற்களால் பரவப்பட்டிருந்தது. அந்நகரத்தின் விஸ்தீரணமும், அழகும் அமைப்பும் அவ்வளவு சிறந்ததாயிருந்ததால் அது உலகத்திலுள்ள எல்லா நகரங்களைப்பார்க்கிலும் அதிக வல்லமையும் விசேஷித்ததுமாயிருந்தது.

ஒரு நாள் ராஜா தன் அரமனையின்மேல் உலாவிக்கொண்டிருக்கும்போது நகரத்தின் அழகைப்பார்த்து "இது என் வல்லமையின் பராக்கிரமத்தினால், என் மகிமைப் பிரதாபத்துக்கென்று, ராஜ்யத்துக்கு அரமனையாக நான் கட்டின மகா பாபிலோன் அல்லவா" என்று சொன்னது ஆச்சரியமல்ல. இது உலகத்தின் வல்லமையையும் ஐசுவரியத்தையும் நன்கு விளக்கும் ஓர் படமாயிருந்தது. உலகத்தின் ராஜ்யங்கள் யாவும் அதைக்கண்டு கலங்கின.

ஆனால் அதன் மகிமை அதைவிட்டு எடுபட்டுப்போயிற்று. மகா அலெக்சந்தர் பதினாயிரம் ஆட்களைக்கொண்டு பாபிலோனை திரும்ப எடுப்பித்துக் கட்ட முயன்றும் அது கைகூடவில்லை. இடிந்து பாழடைந்து கிடக்கிற கட்டடங்கள் மாத்திரம் பாபிலோன் முன்னிருந்த இடத்தைக் காட்டுகிறது. அந்த அழகும் மகத்துவமுமான நகரம் முழுவதுமாக அழிக்கப்பட்டுப்போனது எவ்வளவு ஆச்சரியம். மனிதர் கட்டின பிரமாண்டமான கட்டடங்களும் வேலைப்பாடுகளும் இனி ஒருபோதும் நினைக்கப்படாதபடி அழிந்துபோனது எவ்வளவு ஆச்சரியம். ஆனால் இதன் அழிவைப்பற்றி பல நூற்றாண்டுகளுக்கு முன்னதாகவே ஒரு எபிரேய தீர்க்கதரிசி முன்னுரைத்தது அதிக ஆச்சரியம்.

பாபிலோனின் சரித்திரமானது, தேவனை மறந்த எந்தப் பட்டணத்திற்கும், ராஜ்யத்திற்கும் மனிதனுக்கும் செல்லுகிறதாயிருக்கிறது. அவர்கள் மாடமாளிகைகளையும் கூடகோபுரங்களையும் கட்டினாலும் தேவன் அவர்களுடைய இருதயத்தில் ஆளுகை செய்யாவிட்டால் அவர்களும் அவர்களுடைய வேலைகளும் பாபிலோன் பாழாக்கப்பட்டதுபோல, பாழாகும்.

சுகாதார விஷயங்கள்

சுருட்டு பிடிக்கும் வழக்கம் மனிதருக்கு கெடுதியை உண்டாக்குகிறது. அவர்கள் தேக வளர்ச்சியும் புத்திக் கூர்மையும் குன்றிப்போகிறது. இரத்தாசயமும் சுவாசாசயமும் பல வீனமடைகிறது. இதை பிடிப்பதினால் வீண் செலவே ஒழிய யாதொரு நன்மையுமில்லை. சீன கவர்ன்மெண்டார் இதற்கு ஒரு ஏற்பாடு செய்திருக்கிறார்கள். இந்திய கவர்ண்மெண்டாரும் அந்த நல் முன்மாதிரியைப் பின்பற்றினால் நலமாயிருக்கும்.

உள்நாட்டு சீன கவர்ண்மெண்டாரின் கட்டளைப்படி பின்வரும் கட்டளைகளைப் பிரப்பித்து ஜனங்களுக்குள் அனுப்பினார்கள்.

"நமது தேசத்திலுள்ள யாவரும் சுருட்டு சிகரெட்டு பிடிக்கிறார்களென்று தெரியவருகிறது: இதை நிறுத்தாமற்போனால் அபினி சாப்பிட்டபோது நமது தேசம் க்ஷீணதிசை அடைந்ததைவிட அதிகமாக கெட்டுப்போகும்." ஆகையினால் புகையிலை உபயோகிப்பதை முழுவதுமாக நிறுத்துவதற்குமுன் பின்வரும் கட்டளைகளை விதிக்கிறோம்.

1. 18-வயதுக்குக் கீழ்பட்ட ஆணாவது பெண்ணாவது சிகரெட்டு சுருட்டு முதலியவை பிடிக்கக்கூடாது.

2. ராணுவத்தையாவது கப்பல் சேனையையாவது சேர்ந்த யாராவது இவைகளை உபயோகித்தால் தண்டிக்கப்படுவார்கள்.

3. கவர்ண்மெண்டைச்சேர்ந்த பள்ளிக்கூடங்களிலும் சர்வ கலாசாலைகளிலும் சுருட்டு சிகரெட்டு முதலியவைகளைக் கண்டிப்பாய் உபயோகிக்கக் கூடாது.

ஓர் அதிசயமான சொப்பனம்
(A WONDERFUL DREAM.)

ஏறக்குறைய இரண்டாயிரம் வருஷங்களுக்கு முன் பாபிலோன் என்னும் அழகான பட்டணத்தில் நேபுகாத்நேச்சார் என்பவன் அரசாண்டு வந்தான். அவன் ஓரிரவு நித்திரை செய்துகொண்டிருக்கும்போது ஒரு பளபளப்பான சிலை ஒன்று நின்றதாக சொப்பனம் கண்டான். அதின் தலை பொன்னும், அதின் மார்பும் புயங்களும் வெள்ளியும், அதின் வயிறும் தொடையும் வெண்கலமும், அதின் கால்கள் இரும்பும் அதின் பாதங்கள் பாதி இரும்பும் பாதி களிமண்ணுமாயிருந்தது.

ராஜா அந்த சிலையைப் பார்த்து ஆச்சரியப்பட்டபொழுது, வேறொரு சம்பவம் நடந்தது. கைகளால் பெயர்க்கப்படாத ஒரு கல் பெயர்ந்து உருண்டு வந்து, சிலையின் பாதங்களில் மோதி அதை நொறுக்கிப்போட்டது. பின்பு அந்த இடத்தில் ஒன்றும் காணப்படவில்லை. ராஜா நித்திரை கலைந்து விழித்தபோது சொப்பனம் இன்னதென்று தோன்றவில்லை. அவன் சொப்பனத்தை நினைக்க நினைக்க அவன் ஆவி கலங்கினது.

ராஜா சூனியக்காரரையும் ஜோசியரையும் அழைத்து சொப்பனத்தைச் சொன்னால் அவர்களுக்கு வெகுமதி கொடுப்பதாகவும் இல்லாவிட்டால் மரண தண்டனை விதிப்பதாகவும் சொன்னான். ஆனால் அவர்கள் தங்களுக்கு தவணை கொடுக்க வேண்டிக்கொண்டார்கள். தன்னை அவர்கள் ஏமாற்றப் பார்க்கிறார்களென்று ராஜா அறிந்து இவ்விதத் தொழில்

செய்து ஜனங்களை ஏமாற்றுகிற, இந்த ஜோசியர் சூனியர் முதலானவர்களையெல்லாம் அழித்துபோடக் கட்டளை பண்ணினான்.



ஓர் அதிசயமான சொப்பனம்.

ராஜ கட்டளையை நிறைவேற்றவேண்டி சேவகர்கள் பட்டணத்தில் சுற்றித் திரிந்து ஜோசியக்காரன் அல்லாத ஒரு மனுஷனைப் பிடித்தார்கள். அவன் பெயர் தானியேல். அப்

பொழுது தானியேல் தேவனை நோக்கி ஜெபம் பண்ணினான். சர்வ லோகங்களையும் சிருஷ்டித்த தேவன் அவனுடைய ஜெபத்திற்கு மறு உத்தரவு கொடுத்தார். தேவன் சொப்பனத்தையும் அதின் அர்த்தத்தையும் தானியேலுக்கு வெளிப்படுத்தினார். பின்பு தானியேல் ராஜ சமுகத்திற்கு முன்பாக கொண்டுவந்து விடப்பட்டபோது சொப்பனத்தையும் அதின் அர்த்தத்தையும் ராஜாவுக்கு வெளிப்படுத்தினான். ராஜா அதைக் கேட்டு ஆச்சரியப் பட்டான்.

தானியேல் ராஜாவிடம் முகஸ்துதி பேசவில்லை. தேவன் ஒருவரே இரகசியங்களை அறிந்திருக்கிறாரென்றும் அவர்தான் சர்வத்தையும் சிருஷ்டித்தாரென்றும் ராஜாவுக்கு விளக்கிக் காட்டினான். சிலையானது உலகத்தில் ஒன்றன்பின் ஒன்றாகத் தோன்றும் நாலு பெரிய ராஜியங்களைக் குறிக்கிறது. நேபுகாத் நேச்சாரின் ராஜியத்துக்குப்பிறகு மூன்று உலக ராஜ்யங்கள் தோன்றும். சிலையின் பாதங்கள் பாதி இரும்பும் பாதி களிமண்ணுமாயிருந்தது போல நாலாவது ராஜ்யம் அநேக சிறு ராஜ்யங்களாகப் பிரிக்கப்படும் என்று விஸ்தரித்தான்.

இனிமேல் சம்பவிக்கப்போகிறவைகள் ராஜாவுக்கு அறிவிக்கப்பட்டபடியால் அவன் ஆச்சரியமடைந்தான். இப்பொழுது வசிக்கும் நாம்கூட ஆச்சரியப்படலாம். வரப்போகிற ராஜ்யங்களைப்பற்றி ராஜாவுக்கு அறிவிக்கப்பட்டது. ஆனால் நாம் இப்பொழுது முன் ராஜ்யங்கள் வந்ததையும் அவைகள் இல்லாமற்போனதையும் பார்க்கிறோம்.

பொன்னான தலையாகிய பாபிலோன் ராஜ்யம் ஒழிந்து அதின் பின்பு வெள்ளியான மார்பும் புயங்களுமாகிய மேதிய பெர்சிய ராஜ்யம் எழும்பினது. வெண்கலமான வயிறும் தொடைகளுமாகிய கிரேக்க ராஜ்யம் பெர்சியவை ஜெயித்தது. கிரேக்க ராஜ்யம் கொஞ்ச காலம் அரசாண்டபின் இரும்பான கால்களைக் குறிக்கும் ரோம ராஜ்யம் எழும்பினது. ரோம ராஜ்யம் பல நூற்றாண்டுகளாக அரசாட்சி செய்தது. சிலையின் பாதங்கள் பாதி இரும்பும் பாதி களிமண்ணுமாயிருந்ததுபோல ரோம ராஜ்யம், பிரான்சு, இங்கிலாந்து, ஜெர்மனி, இத்தாலியா முதலிய சிறு ராஜ்யங்களாக பிரிக்கப்பட்டது.

உவில்லியம் கேய்ஸர் சக்கரவர்த்தி ரோமராஜ்யம் ஏகராஜ்யமாயிருந்ததுபோல, ஐரோப்பிய ராஜ்யங்களை ஒரே ராஜ்யமாக சேர்க்க பிரயாசைப்பட்டான். இதற்குமுன் அநேக ராஜாக்கள் இதேமாதிரி செய்யப் பிரயாசைப்பட்டும் வாய்க்கவில்லை. இரகசியங்களையும் வருங்காரியங்களையும் முன்னமே அறிந்திருக்கிற தேவன் இனிமேல் தமது நித்திய ராஜ்யம் ஸ்தாபிக்கப்படுமட்டும் ஒரு ஏக உலக ராஜ்யம் இருக்காதென்று தானியேல் என்னும் தீர்க்கதரிசியின் மூலமாய் முன்னுரைத்திருக்கிறார்.

ஜெர்மனி, பிரான்சு, இங்கிலாந்து முதலான எல்லா ராஜ்யங்களும் ஒருபோதும் இராதபடிக்கு அழிக்கப்படும் காலம் வரும். கைகளால் பெயர்க்கப்படாத கல், பெயர்ந்து உருண்டு வந்து சிலையின் பாதங்களில் மோதி அதை நொறுக்கிப் போட்டது, இதைக் குறிக்கிறது. ராஜாவின் சொப்பனத்தில் காணப்பட்ட சிலை பாவமும் அநியாயமும் நிறைந்த உலக ராஜ்யங்களைக் குறிக்கிறது.

பாபிலோனும், மேதிய பெர்சியாவும், கிரேக்கு, ரோமை, சண்டையிடும் ஐரோப்பிய ராஜ்யங்கள் யாவும் பரிசுத்த தீர்க்கதரிசனத்தின் நிறைவேறுதலின் ஞாபக சின்னமாயிருக்கிறது. தேவ எத்தனத்தினால் ராஜா கண்ட சொப்பனத்தின் அர்த்தத்தின்படி பாவம் நிறைந்த உலக ராஜ்யங்கள் ஒன்றன்பின் ஒன்றாக எழும்பியிருக்குமானால் அதின் பின் சொல்லப்பட்டிருக்கும் பாவமில்லாத தேவ ராஜ்யம் ஸ்தாபிக்கப்படுவது அதிக நிட்சயமல்லவா? கடந்த காரியங்களையும் நிகழ் காரியங்களையும் யோசித்துப் பார்க்குமிடத்து நாம் முழு நம்பிக்கையோடு "உம்முடைய ராஜ்யம் வருவதாக; உம்முடைய சித்தம் பரமண்டலத்திலே செய்யப்படுகிறதுபோல பூமியிலேயும் செய்யப்படுவதாக," என்று ஜெபிக்க வேண்டாமா? தானியேலின் வேண்டுதலுக்கு செவி கொடுத்த தேவன், நமது விண்ணப்பங்களுக்கு செவி கொடுப்பார். தேவனுடைய ராஜ்யத்தைக் குறிக்கும் அந்தக் கல் சீக்கிரத்திற்குள்ளாக இந்த உலக ராஜ்யங்களை நொறுக்கிப்போட்டு ஒரு பெரிய பர்வதமாகி பூமியையெல்லாம் நிரப்பும்.

H. L. Peden.

தீமையும் நன்மையும்

(EVIL AND GOOD)

நன்மைக்குத் தீமை செய்வது பேய்க்குணம்
தீமைக்குத் தீமை செய்வது மிருக குணம்
நன்மைக்கு நன்மை செய்வது மனித குணம்
தீமைக்கு நன்மை செய்வதோ தெய்வ குணம்.

சாத்தான் ஒரு காலத்தில் பரலோகத்திலிருந்தான். அவன் பரலோகத்திலிருந்து இப்பூலோகத்திற்கு தள்ளப்பட்டபோது, மனிதர்கள் தன்னைப்போல ஜீவிக்கும்படியாக விரும்பினான். மனிதர்கள், தன்னைப்போல நடக்கவும், பேசவும், உண்ணவும், சுருட்டுப் பிடிக்கவும், மதுபானம் பண்ணவும் அவனுக்கு மெத்த பிரீதி. தன் நடக்கையினாலும், மாதிரியினாலும், மனிதர்களை தன்னைப்போலாக்கும்படி விரும்பினான். அவன் தான் எண்ணிய வேலையை செய்து முடித்தான். இப்பொழுது அவனைப் பின்பற்றுகிறவர் அநேகர். சிலர் அவனை வெகுவாய் பின்பற்றுகிறதினால், அவர்கள் மனிதரோ அல்லது சாத்தானோ என்று அறிகிறது கஷ்டம்.

கிறிஸ்துவும் ஒரு காலத்தில் பரலோகத்திலிருந்தார். சாத்தான் இப்பூலோகத்தில் இவ்விதமான வேலைகளைச் செய்தானென்று அவர் கண்டபோது தானும் இப்பூலோகத்திற்கு வந்தார். அவர் மனிதர்கள் தம்மைப்போல ஜீவிக்கும் மார்க்கத்தை காட்ட விரும்பினார். மனிதர்கள் தம்மைப்போல ஜீவிக்கவும், பேசவும், உபதேசிக்கவும், ஒருவரிலொருவர் அன்பாயிருக்கவும் விரும்பினார். மனிதர்கள் எப்படி கிறிஸ்தவ ஜீவியம் செய்யவேண்டுமென்று உபதேசித்தார். இப்பொழுது எல்லா நாடுகளிலும் அவரைப் பின்பற்றுகிறவர்கள் அநேகர் இருக்கிறார்கள்.

சாத்தான் எல்லாத் தீமைக்கும், அருவருப்புகளுக்கும் அவலக்ஷணத்திற்கும், துன்பம், துக்கம், துயரங்களுக்கும் ஆதிகாரணனாயிருக்கிறான். அவன் மனிதர்களை வஞ்சகர்களாகவும், வீணர் பொருளாசைக்காரர், தூஷகர், பகைஞர் பெருமைக்காரர்களாக்குகிறான். மனிதர்களுக்குள்ளே, பிரிவினைகளும், சண்டைகளும் உண்டாக்க காரணனாயிருக்கிறான்.

ஆனால், கிறிஸ்துவோ, நன்மை, அழகு, சந்தோஷம், ஆனந்தம் முதலியவைகளுக்கு காரணனாயிருக்கிறார். மனிதர்கள், பெருமை, பொருளாசை, மாயை, மேன்மை பாராட்டுதல் முதலிய தீய குணங்களை வெறுக்கும்படி ஏவுகிறார். மனிதர்கள் ஒருவரையொருவர் நேசிக்கவும் போதுமென்கிற மனதுடையவர்களாயிருக்கவும் விரும்புகிறார்.

சாத்தான் மரணத்தைக் கொடுக்கிறான். கிறிஸ்துவோ ஜீவனை அளிக்கிறார்.

கிறிஸ்துவுக்கும் சாத்தானுக்கும் ஆயிரக்கணக்கான வருஷங்களாக நடந்த பெரும் போராட்டம் இன்னும் நடந்துகொண்டேயிருக்கிறது. நீ எந்த பக்கத்தில் சேர விரும்புகிறாய்? நீ சாத்தான் பக்கம் சேர்ந்து அவனுக்கு ஊழியம் செய்தாலும் அவன் உன்னைப் பகைப்பான். அவன் உனக்கு துன்பையும் உபத்திரவத்தையும் வருவித்து கடைசியான நித்திய மரணத்தை சுதந்தரமாகக் கொடுப்பான். கிறிஸ்து உன்னை நேசிக்கிறார். நீ அவரையும் சேவித்து அவரைப் பின்பற்றுவாயாகில், இவ்வுலகில் சந்தோஷத்தையும் ஆனந்தத்தையும் மறுவுலகில் நித்திய ஜீவனையும் மனோவாக்குக்கெட்டாத ஆனந்தத்தையும் அளிப்பாரென்பது திண்ணம்.

யாரைச் சேவிப்பீர்களென்று இன்று தெரிந்துகொள்ளுங்கள். நானும் என் வீட்டாருமோவென்றால் கர்த்தரையே சேவிப்போம்.

தேவனுடைய ராட்சியத்தின் அஸ்திபாரம் அன்பாயிருக்கிறது. ஆனால் சாத்தானின் ராட்சியமும்கூட அன்பிலேயே அஸ்திபாரப் படுத்தப்பட்டிருக்கிறது. தேவனுடைய அன்பு பிறனை நேசிக்க கூடியதும், சாத்தானின் அன்பு தன்னயமுள்ளதுமாயிருக்கிறது.

"ஏனென்றால் தேவன் தம்முடைய ஒரே பேறான குமாரனை, விசுவாசிக்கிறவன் எவனோ அவன் கெட்டுப்போகாமல் நித்திய ஜீவனை அடையும்படிக்கு அவரைத் தந்தருளி இவ்வளவாய் உலகத்தில் அன்பு கூர்ந்தார்." தன்னுடைய சொந்த குமாரனை உலகத்துக்கென்று தத்தம் செய்ய ஏவினது இந்த பெரிய அன்பே. இந்த மகா பெரிய கிரியையின் மூலமாய் ஆண்டவர் வெளிப்படுத்தியிருக்கிற அன்பைவிட, பெரிய அன்பு வேறொன்றுமில்லை. அப்படியே சாத்தானும் தனக்கிருந்த, புகழ்ச்சி, மகிமை, தன்னைத்தான் உயர்த்துதல், என்ற இவை முதலானவற்றின்மேலுள்ள இச்சைதான் அவன் விழுகுதலுக்குக் காரணமாயிருந்தது. அவன் தன்னைத்தான் உயர்த்தினதினால் அவன் விழுந்தான். ஆனால் கிறிஸ்துவோ, தன்னை தாழ்த்தினதினால் ஏற்ற காலத்தில் உயர்த்தப்பட்டார்.

முத்திரைபோடும் வேலை

(THE SEALING WORK)

நமது முந்தின பத்திரிகைகளில் ஏழு முத்திரைகளைப்பற்றி கடைசியாகப் படித்தோம். நாமிருக்கப்பட்ட காலத்தில் ஆறும் முத்திரை உடைக்கப்பட்டு அதில் நடந்தேறவேண்டிய காரியங்களில் அநேகம் வெகு திட்டவட்டமாய் சம்பவித்தாயிற்றென்றும், நாம் தற்சமயம் இருக்கப்பட்ட காலமானது வெளி. 6ம் அதிகாரம் 13-ம், 14-ம் வசனங்களுக்கு இடையிலுள்ளதென்றும், வெகு தெளிவாய்க் காட்டினோம். 14-ம் வசனத்தில் சொல்லப்பட்டதாகிய "வானமும் சுருட்டப்பட்ட புஸ்தகம்போலாகி விலகிப்போயிற்று; மலைகள் தீவுகள் யாவும் தங்கள் இடங்களை விட்டு அகன்றுபோயின", என்ற சம்பவங்கள் நடந்து, இந்த உலகம் முடிவடையுமுன் வெளி. 7-ல் சொல்லப்பட்டிருக்கிற பெரிய வேலையாகிய "தேவனுடைய ஊழியக்காரர் நெற்றியில்," "ஜீவனுள்ள தேவனுடைய முத்திரையை"க்கொண்டு முத்திரை போடுதல் நடக்கவேண்டியதாயிருக்கிறது. இதைப்பற்றி பின்வருமாறு வாசிக்கிறோம்:—"இவைகளுக்குப் பின்பு பூமியின் நான்கு திசைகளிலும் நான்கு தூதர்கள் நின்று, பூமியின்மேலாவது, சமுத்திரத்தின்மேலாவது, ஒரு மரத்தின்மேலாவது, காற்று அடியாதபடிக்கு, பூமியின் நான்கு காற்றுகளையும் பிடித்திருக்கக் கண்டேன். ஜீவனுள்ள தேவனுடைய முத்திரைக் கோலையுடைய வேறொரு தூதன் சூரியன் உதிக்குந் திசையிலிருந்து ஏறிவரக் கண்டேன்; அவன் பூமியையும் சமுத்திரத்தையும் சேதப்படுத்துகிறதற்கு அதிகாரம் பெற்ற அந்த நான்கு தூதரையும் நோக்கி:—நாம் நமது தேவனுடைய ஊழியக்காரரின்

நெற்றிகளில் முத்திரை போட்டுத் தீருமளவும் பூமியையும் சமுத்திரத்தையும் மரங்களையும் சேதப்படுத்தாதிருங்கள் என்று சத்தமிட்டுக் கூப்பிட்டான்." வெளி. 7: 1-3. தீர்க்கதரிசன ஆகமங்களில் காற்றுகள், என்ற பதம் குழப்பங்கள், சண்டைகள், முதலியவற்றை குறிக்கிறதாயிருக்கின்றன. (எரே. 25: 31-33; 49: 36, 37 பார்க்க) அப்படியானால் இதை நன்றாய்க் கவனித்துப் பார்க்கும்போது இந்தப் பெரிய வேலை முடிந்து தீருமட்டும் இராட்சியங்களுக்குள் இந்த வேலைக்கு இடையூறான யாதொரு சண்டையும் வராதபடி தேவனால் காக்கப்பட்டிருக்கிறதாகத் தெரிகிறது. இந்த வேலை முடியவும், வெளி. 16: 14, 15-ம் வாக்கியங்களின் நிறைவேறுதலைப் பார்ப்போம். இந்த வேலையின் வளர்ச்சியும், மகிமையும், கிழக்கிலே சூரியன் அதிகாலையில் எப்படி பெலயீனமாய் எழும்பி வரவர எவ்வளவோ மகிமையாயும் உன்னதமாயும் பிரகாசிக்கிறதோ அப்படியே யிருக்கும்.

முத்திரை.

ஓர் முத்திரை, எப்பொழுதும் ஓர் சட்டம், அல்லது கீழ்ப்படியவேண்டிய ஓர் பிரமாணத்தோடும் சம்பந்தப்பட்டிருக்கும். இராஜாக்கள் தங்கள் தாக்கீதை உறுதிப்படுத்துகிறதற்கும், அந்தச் சட்டங்கள் யாரால் கொடுக்கப்பட்டதென்று காட்டும்படியாகவும், தங்கள் பெயரும், தங்கள் அதிகாரப் பட்டங்களும், தங்கள் அதிகாரத்துக்கு உட்பட்டிருக்கிற இராட்சியத்தையும் காட்டி, வைக்கிற கையொப்பம் என்ற ஓர் அடையாளமாயிருக்கிறது. அப்படியே 1 இரா. 21: 8; எஸ்தர் 3: 12-ல் வாசிக்கிறோம். இன்னும் வேதாகமத்தில் 'அடையாளம்' 'முத்திரை' யென்ற பதங்கள் ஒரே கருத்தாகவே உபயோகிக்கப்பட்டு வருகின்றன. ஆதி. 17: 11; ரோம. 4: 11; வெளி. 7: 3; எசே. 9: 4. என்றும், வாக்கியங்களை ஒன்றோடொன்று ஒப்பிட்டு வாசித்துப் பார்த்தால் திட்டமாய் அறிந்துகொள்ளலாம். இங்கே சொல்லப்பட்டிருக்கிற முத்திரையை தரித்துக்கொள்ளுதலின் விதமாவது: ஜனங்கள் தற்சமயம் நெற்றியில் போட்டுக்கொள்ளுகிற எவ்விதமான குறிகளின் மாதிரியல்ல; ஏதோ ஓர் விசேஷித்த ஏற்பாட்டை கைக்கொள்ளுவதால், மெய்யான தேவனை சேவிக்கிற அவருடைய உண்மையான ஊழியக்காரர் யாரென்றும், அபத்த ஊழியக்காரர் யாரென்றும் பிரித்துக் காட்டுகிறதாயிருக்கிறது.

ஜீவனுள்ள தேவனுடைய முத்திரை.

ஜீவனுள்ள தேவனுடைய முத்திரையையும் அவருடைய பிரமாணத்தில்தான் பார்க்கவேண்டும். "சாட்சி ஆகமத்தைக் கட்டி, என் சீஷருக்குள்ளே பிரமாணத்தை முத்திரையிடு என்றார்." (இங்கிலிஷ் மொழி பெயர்ப்பின்படி) ஏசா. 8: 16. தேவனுடைய பத்துக் கற்பனையையும் நன்றாய்க் கவனித்தால் நான்காம் பிரமாணத்தில்தான், உலகத்தைச் சிருஷ்டித்த சிருஷ்டி கர்த்தா, தாமென்றும், தாம் சருவலோகத்தையும் சிருஷ்டித்தவரென்றும், தம்முடைய நாமம் தேவனாகிய கர்த்தரென்றும் சொல்லுகிறார்; ஆகையால், இந்தப் பிரமாணத்தில்தான், அவருடைய முத்திரை திட்டமாய் அடங்கியிருக்கிறது. அப்படியே பின்கூறிய வசனங்களிலும் வெகு விவரமாய் திருவுளம்பற்றி யிருக்கிறார். "நீ இஸ்ரவேல் புத்திரரை நோக்கி, நீங்கள் என் ஓய்வுநாட்களை ஆசரிக்கவேண்டும்; உங்களைப் பரிசுத்தப்படுத்துகிற கர்த்தர் நான் என்பதை நீங்கள் அறியும்படி, இது உங்கள் தலைமுறை தோறும் எனக்கும் உங்களுக்கும் அடையாளமாயிருக்கும்." யாத். 31: 13. "அது என்றைக்கும் எனக்கும் இஸ்ரவேல் புத்திரருக்கும் அடையாளமாயிருக்கும்; ஆறு நாளைக்குள்ளே கர்த்தர் வானத்தையும் பூமியையும் உண்டாக்கி ஏழாம் நாளிலே ஓய்ந்திருந்து பூரித்தார் என்றார்." யாத். 31: 17. நான் தங்களைப் பரிசுத்தம் பண்ணுகிற கர்த்தர் என்று அவர்கள் அறியும்படிக்கு, எனக்கும் அவர்களுக்கும் அடையாளமாய் இருப்பதற்கான என் ஓய்வு நாட்களையும் அவர்களுக்குக் கட்டளை யிட்டேன்." எசே. 20: 12. "என் ஓய்வு நாட்களைப் பரிசுத்தமாக்குங்கள் நான் உங்கள் தேவனாகிய கர்த்தர் என்று நீங்கள் அறியும்படிக்கு அவைகள் எனக்கும் உங்களுக்கும் அடையாளமாயிருக்கும் என்றேன்," எசே. 20: 20.

இவ்விதமாகவே, உலகத்தோற்ற முதல் சகல காலங்களிலும், தேவனுடைய ஓய்வு நாள் ஆசரிப்பு, அவருக்கும் அவரை சேவிக்கிற ஜனங்களுக்கும் அடையாளமாகவே இருந்து வந்திருக்கிறது; ஆதியாகமம் புஸ்தகத்தையும், அதின் ஆறு நாள் சிருஷ்டிப்பையும், அச்சிருஷ்டிப்பின் ஞாபக சின்னமாகிய ஏழாம் நாள் ஓய்வையும், மறுதலித்து, இவ்வுலகத்துக்கு துவக்கமாக ஓர் சிருஷ்டிப்பு இல்லையென்றால், அதற்கு முடிவு மில்லையென்றும், இன்னும் சொல்லவேண்டுமானால் சகலமும் கிறிஸ்துவால் உண்டாயிற்று என்கிற சத்தியத்தையும் மறுதலிக்கிற நிலைமையிலிருக்கிற இந்த உலகத்துக்கு, வானத்தையும் பூமியையும் சமுத்திரத்தையும் சிருஷ்டித்த மெய்யான தேவன், தமது தூதர்களை அனுப்பி, தமது ஊழியக்காரர்களின் நெற்றியில் ஜீவனுள்ள தேவனுடைய முத்திரையைக்கொண்டு முத்திரை போடும்படி கேட்கிறார்.

தேவனுடைய இந்த முத்திரையைத் தரித்துக்கொள்ளுதல், உலகத்தைவிட்டுப் பிரித்துக் காட்டுமோ என்று கேட்கிறவர்களுக்கு, நாம் சொல்லக்கூடிய உத்தரவு என்னவென்றால் இதை வாசித்து இந்தக் கேள்வி கேட்கும் என் பிரிய நண்பனே! நீர் தேவனுடைய பிரமாணமாகிய நான்காம் பிரமாணத்தில் தேவன் கேட்டிருக்கிறபடி ஏழாம் நாளாகிய சனிக்கிழமையை, ஓய்வுநாளாக அனுசரித்து, அதற்கு கூறப்பட்டிருக்கிற ஆசீர்வாதங்களுக்குப் பங்காளியாகிப்பாரும், எவ்வளவு சீக்கிரத்தில் உமது சங்கதி வெளியே பரவுகிறதென்றும், உமது இனஜன பெந்துக்களும், உம்மைச் சுற்றியிருக்கும் உமது சிநேகிதர்களும், உமக்கு எப்பேர்ப்பட்ட எதிரிகளாகி விடுகிறார் என்றும், அறிந்துகொள்வீர். உலகத்தைவிட்டு, உம்மை நிச்சயமாகவே, அது பிரித்துக் காட்டுகிறதாயிருக்கிறது. இதே காலத்தையும், இதே சந்தர்ப்பத்தையும், எசேக்கியேல் 9-ம் அதிகாரத்திலும் காட்டியிருக்கிறது. அதில் எருசலேமைப்பற்றி ஓர் காட்சியாகவும், அதற்குள்ளே செய்யப்படுகிற சகல அருவருப்புகள் நிமித்தம், பெருமூச்சு விட்டழுகிற மனுஷரின் நெற்றிகளில் அடையாளம் போடு என்று ஓர் தூதனுக்கு சொல்லுகிறார். அவனுக்குப்பின்னே மற்ற தூதர்களை நகரமெங்கும் ஊடுருவப்போய், உங்கள் கண்கள் தப்பவிடாமலும், நீங்கள் இரங்காமலும், அடையாளம் போடப்படாத மற்றவர்களை சங்காரம் செய்யுங்கள் என்றார். (வாக்கியம் 4-6 பார்க்க.)

இப்படியாக, இந்த முத்திரை போடுதலின் ஊழியம் முடிந்ததும், நமது இரட்சகராகிய இயேசுவின் பிரதான ஆசாரிய ஊழியமும் மகா பரிசுத்த ஸ்தலத்தில் முடிவடைந்து, உலகமெங்கும் தமது தூதர்களை அனுப்பி, சர்வ சங்காரம் செய்ய ஆயத்தமாயிருக்கிறார். இந்தப் பெரிய வேலை நட்சத்திரங்கள் அத்திக்காய்போல் விழுந்த வருஷமாகிய 1833-ம் வருஷமுதல், உலகமெங்கும் நடந்து வருகின்றது. என் பிரிய சிநேகிதனே! நீர் எகோவாவின் பிள்ளை என்பதற்கு இந்த மெய்யான அடையாளமாகிய அவருடைய முத்திரையைத் தரித்து வருகிறீரா? அப்படியானால், வெளி. 14: 1-5-ல் சொல்லப்பட்டிருக்கிற ஆனந்த பாக்கியத்துக்கும் நீர் ஓர் பங்காளியாவீர்.

ஈ. டி. தாமஸ்.

நிகழ்கால சத்தியம்

வேத சன்மார்க்க சுகாதார விஷயங்களில் தற்கால அறிவுக்கொத்தபடி மனிதர் அபிவிருத்தியடைவதற்கென்று பிரசுரமாகும் ஓர் பத்திரிகை.

மதராஸ் ஜூலை மீ, 1920.

இப்பத்திரிகை, பெங்களூரிலிருக்கும், எஸ். டி. ஏ. பப்ளிஷிங்கவுஸ்சாக, பட்டணத்தில் வெப்பேரி என்னுமிடத்திலுள்ள அல்பீனியன் அச்சாபீசில் அச்சடிக்கப் பட்டு வருகிறது.

பத்திராதிபர் பாஸ்டர், ஜி. ஜி. லேவரி.

உதவி ,, ,, ஈ. டி. தாமஸ்.

	ரூ.	அ.	ப.
தனிப்பிரதி ஒன்றுக்கு ...	0	1	6
வருஷ சந்தா, தபாற் கூலி உள்பட ...	1	0	0
சிங்கப்பூர் பினங்கு முதலிய வெளி ஊர்களுக்கு தனிப் பிரதி ஒன்றுக்கு ...	0	2	0
வருஷசந்தா தபாற்கூலி உள்பட ...	1	4	0

நோட்டீஸ்.

இது நிகழ்கால சத்தியமென்னும் மாதாந்தரப் பத்திரிகையின் முதலாம் பத்திரிகை. இது தென்னிந்தியாவில் வெளிப்படும் மாதாந்தரப் பத்திரிகைகளுள் மிகச் சிறந்ததாய் விளங்க ஆசிக்கிறோம். இதில் ஒவ்வொரு முறையும் சுகாதார விஷயங்களைப் பற்றி எழுதும்படி ஒரு ஆங்கிலேய வைத்தியரை நியமித்திருக்கிறோம். இதை யாவரும் விருப்பமாய் வாசிப்பார்களென்று நம்புகிறோம்.

இப்பொழுது நிகழ்கால சத்தியம் வருஷத்திற்கு நான்கு முறை யல்ல. மாதம் ஒரு முறை பிரசுரிக்கப்படும். பழைய விலைப்படி சந்தாதாராய்ச் சேர்ந்தவர்களுக்கு ஒரு மூன்று மாதப் பத்திரிகைக்குப் பதிலாக ஒரு மாதாந்தரப் பத்திரிகை அனுப்புவோம். அவர்களுக்குச் சேரவேண்டிய பத்திரிகை சேர்ந்தபின் சந்தா முடிவு பெறும். அவர்கள் உடனே தங்கள் சந்தாவை புதுப்பித்துக்கொள்ளும்படியாகக் கேட்டுக் கொள்ளுகிறோம்.

சமாசாரக் குறிப்புகள்

ரிபார்ம் கௌன்சில்.—வருகிற வருஷத்திலிருந்து ஏற்படப்போகிற சென்னை சீர்திருத்தச் சபையின் மொத்த அங்கத்தினர் 127. அவர்களில் தாழ் வகுப்பினர்க்கு 5, இந்திய கிறிஸ்தவர்களுக்கு 5, மகம்மதியர்களுக்கு 13, பிராமணரல்லாத இந்துக்களுக்கு 28, பிரத்தியேகப்படுத்த, மெஸ்டன் பிரபு முடிவு உரைத்துப்போனார்.

ஜெர்மனி குழப்பம்.— உலகத்தையே ஆள ஆசைப்பட்ட ஜெர்மனி தன்னையே ஆள அசாத்தியப்பட்டிருக்கிறது. இரண்டு பெரிய கக்ஷிகள் எழும்பி, ஒன்றுக்கொன்று பலமாய் விரோதம் செய்து வருகின்றது. இதனிடையில் பால்விஷிக் கலகக்காரர் கிருத்தியம் இவ்வளவவ்வளவல்ல.

யுத்தக் களத்துக் கல்லறைகள்.—யுத்தத்தில் மாண்ட இந்திய மகம்மதியர்கள் அதிக மரியாதையாய் கல்லறைகளில் அடக்கம் பண்ணப்பட்டிருக்கிறார்கள். இக்கல்லறைகளை கவனிப்பதற்கே ராஜாங்கத்தார் ஒரு சங்கத்தை ஏற்படுத்தியிருக்கிறார்கள். அவர்கள் அடக்கம் பண்ணப்பட்டிருக்கிற இடத்தில் ஒரு மகம்மதிய கோரியும் ஒரு இந்து ஆலயமும் கட்டத் தீர்மானித்திருக்கிறார்கள். அவரவர்களுடைய மார்க்க வாசாரத்திற்குப் பங்கம் வராவண்ணம் நடத்தி வருவதைக் கவனிக்கும்போது பிரிட்டிஷ் ராஜாங்கத்தின் மதிப்பு விளங்குகிறது.

அமெரிக்கா மதுபான விலக்கு.—அமெரிக்காவில் மதுபானம் கொண்டுபோகும் வண்டிகள் பிடிக்கப்பட்டால் அவ்வண்டிகளின் சக்கரங்களை பவுண்டில் அடைத்து விடுகிறார்கள். சிலர் கால் சராயில் கொண்டு போகிறதை அறிந்துகொண்டு போகிறவர்களின் கால் சட்டையை கழற்றிக்கொள்ள சட்டம் ஏற்படுத்துவார்கள்போல் தோன்றுகிறது. குடிப்பிசாசு ஒருவனைப் பிடித்துக் கொண்டால் அது அவனைவிட்டு சீக்கிரம் போகாது.

OFFICE OF ... 2- AUG 1920 MADRAS

நிகழ்கால சத்தியம்.

Vol: IX. மதராஸ்:—ஆகஸ்டு மீ, 1920. No. 4.

பத்திராதிபர் குறிப்புகள்

(EDTITORIOL NOTES)

நிகழ்கால சத்தியத்தைப் பல நாளாக வாசித்த ஒருவர் இப்பத்திரிகையில் ஒரு பத்தியை எழுதினவர் அதில் கத்தோலிக்க சபையைக் குற்றப்படுத்தி எழுதியிருப்பதாகச் சொல்லுகிறார். நாம் மற்ற சபைக்கு விரோதமாக எதையும் சொல்லக்கூடாதென்றும் சொல்லுகிறார். இந்தப் பத்திரிகையின் நோக்கம் இதர கிறிஸ்தவ மதஸ்தர்களை கெடுப்பது அல்லது குற்றம் சாட்டுவது அல்ல. இதர கிறிஸ்தவர்கள் தள்ளிவிட்ட அல்லது செய்யாமல் விட்டுவிட்ட வேதாகம சத்தியங்களை எடுத்துரைப்பதே எங்கள் ஒன்றான நோக்கம். இப்படி எடுத்துரைப்பதில் சில சமயங்களில் சில மதங்களின் நாமத்தை உரைக்கும்படி நேரிட்டாலும் நேரிடலாம். ஆனால் நாங்கள் கெடுதியான எண்ணத்தோடு அப்படி எடுத்துரைக்கிறதில்லை. எல்லா மெய்க்கிறிஸ்தவர்களையும் நாங்கள் நேசித்து, நல்வழி தெரிந்து கொள்வதில் அவர்களுக்கு எங்களால் ஆன உதவி செய்ய விரும்புகிறோம்.

சென்னைப்பட்டணத்தில் "கிறிஸ்தவ அபிமானி" ('Christian Patriot') என்னும் ஓர் ஆங்கிலேய சமாசாரப் பத்திரிகை வாரந்தோறும் பிரசுரிக்கப்படுகிறது. அதில் இந்திய கிறிஸ்தவர்களுக்கு இன்பத்தைத் தரத்தக்க அநேக காரியங்கள் எழுதப்படுகிறது. நல்லதல்லாத வேறு சில விஷயங்களும் அதில் உண்டு. அது பிறருக்கு பிரயோஜனத்தை யல்ல சிலவேளைகளில் கெடுதியை விளைவிக்கிறது. அதில் ஐரோப்பிய மிஷனெரிகளையும் சில நல்ல இந்திய கிறிஸ்தவர்களையும் குற்றப்படுத்துகிறார்கள். இது கிறிஸ்தவர்களுக்கு அழகல்ல. ஆங்கில பத்திரிகையில் தர்க்கிக்கப்படும் விஷயங்களை தமிழ் தெரிந்தவர்கள் அறிந்துகொள்ளும்படியாக "கிறிஸ்தவ அபிமானி"யை தமிழிலும் பிரசுரிக்க உத்தேசிக்கிறார்கள். அது தமிழில் பிரசுரிக்கப்படுமானால் ஆங்கில "கிறிஸ்தவ அபிமானி" ('Christian Patriot') யில் வெளிப்படும் அனுவசியமான விஷயங்களை யல்ல மற்ற நல்விஷயங்களை தமிழில் வெளிப்படுத்துவார்களென்று விரும்புகிறோம். இது ஜனங்களுக்கு அதிக நன்மை பயக்கும். அது சரியல்ல, இது தப்பிதம், அது கெட்டது என்று சொல்லுவது மிக எளிது. அது இன்னின்ன மாதிரி செய்யவேண்டுமென்று காட்டுவதோ மிக அரிது.

'கிறிஸ்தவ அபிமானி' என்னும் பத்திரிகையில் ஓர் நன்றியற்ற பிள்ளை சிறு வயது முதல் தன் பெற்றோரால் காப்பாற்றப்பட்டபிறகு அவன் பெரியவனானபோது பெற்றோரைச் செருப்பால் அடிக்கப் புறப்பட்டான் என்று சொல்லப்பட்டது என் ஞாபகத்திற்கு வருகிறது. மிஷனெரிமார்கள் தங்கள் வேலையில் சில தப்பிதங்கள் செய்திருக்கலாம்,

அவர்கள் தப்பிதம் செய்தது ஆச்சரியமல்ல. தங்கள் பிள்ளைகளை வளர்ப்பதில் பெற்றோர் தப்பிதம் செய்திருக்கலாம். அவர்களுடைய வருமையினாலே தங்கள் பிள்ளைகளுக்கு செய்ய வேண்டிய அளவை செய்யாமலிருந்திருக்கலாம். இந்தக் காரணத்தை முன்னிட்டு அவர்கள் தங்கள் பெற்றோரின் கழுத்தை அறுக்கப் பார்க்கலாமா? தங்கள் பெற்றோர் அவர்களுக்கு செய்தமட்டிற்காவது நன்றியறிதலாயிருக்கக்கூடாதா? இந்திய சபைகள் தங்கள் சொந்தக் கால்களில் ஊன்றி நிற்பதைப் பார்க்க மிஷனெரிகளுக்கு அதிக பிரியம். புதிய கால்களை உடைய சபை நிற்பதற்குப் பதிலாக உதைக்க ஆரம்பிப்பது சரியல்ல.

ஓர் பத்திரிகையின் பத்திராதிபர் இந்துமத சம்பந்தமான யோக அப்பியாசத்தை கிறிஸ்து மதத்தில் அப்பியாசிக்கவேண்டும்; ஏனென்றால் அப்படி அப்பியாசிப்பதால் பிரிந்துபோன ஆவிகளுடன் பேசலாம் என்று சொல்லுகிறார். இப்பேர்ப்பட்ட எண்ணம் மனிதனுடைய ஆத்துமா மரித்த பின்னும் அறிவுள்ளதாயிருக்கிறது அல்லது மரித்தவர்களின் ஆவி தன்னறிவுள்ளதாய் பூமிக்கு திரும்பிவந்து மனிதரோடு சம்பாஷிக்கிறது என்னும் நம்பிக்கையில் சம்பந்தப்பட்டிருக்கிறது. இந்த விசுவாசத்திற்கு கிறிஸ்தவ கொள்கைக்கு அஸ்திபாரமான சத்திய வேதத்தில் யாதொரு ஆதாரமுமில்லை. சொல்லவேண்டுமானால் இந்த விசுவாசம் சத்தியவேதாகம போதகத்திற்கு விரோதமாயிருக்கிறது. "பாவம் செய்கிற ஆத்துமாவே சாகும்" என்று சத்தியவேதம் சாட்சி கூறுகிறது. எசேக். 18: 4. மனிதனின் மரணத்தைப்பற்றி தாவீது "அவனுடைய ஆவி பிரியும், அவன் தன் மண்ணுக்குத் திரும்புவான்; அந்நாளிலே அவன் யோசனைகள் அழிந்துபோம்" என்று சொல்லுகிறார். சங். 146: 4. "உயிரோடிருக்கிறவர்கள் தாங்கள் மரிப்பதை அறிவார்களே, மரித்தவர்கள் ஒன்றும் அறியார்கள்;..........அவர்கள் சிநேகமும், அவர்கள் பகையும், அவர்கள் பொறாமையும் எல்லாம் ஒழிந்துபோயிற்று; சூரியனுக்குக் கீழே செய்யப்படுகிற தொன்றிலும் அவர்களுக்கு இனி என்றைக்கும் பங்கில்லை" பிரசங்கி 9: 5, 6. இந்த வேத வாக்கியங்கள் உண்மையாயிருக்குமானால் உயிரோடிருக்கிற ஒரு மனுஷன், மரித்து ஒன்றும் அறியாதிருக்கிற ஒருவனோடு பேசுவது கூடாத காரியமாயிருக்கிறது.

இந்தியாவில் பிரசுரிக்கப்படும் அநேக பத்திரிகைகளில் மதுவிலக்கைப்பற்றி சவிஸ்தாரமாய் சொல்லப்பட்டிருக்கிறது. இதுவரை நிகழ்கால சத்தியத்தை வாசித்தவர்கள் நாங்கள் மதுவிலக்கை சார்ந்து போதித்தோம் என்பதை நன்றாய் அறிவார்கள். மனிதர்கள் மயக்கந்தரும் எவ்விதமான லாகிரி பதார்த்தங்களையும் உபயோகிக்கக்கூடாதென்று நாங்கள் போதித்து வந்திருக்கிறோம். இந்தியாவில் வறுமை வியாதி முதலியவைகளுக்கு இதுவே காரணம். மதுபானத்தில் செலவிடும் பணத்தை உணவு உடை முதலியவற்றில் செலவிடவேண்டும். மெய்யான மதுவிலக்கு என்றால் மதுபானத்தை மாத்திரமல்ல இன்னும் அநேக காரியங்களைக் குறிக்கிறது என்று நம்புகிறோம். அதாவது, தேயிலை, காப்பி, புகையிலை, வெற்றிலைபாக்கு மற்றுமுள்ள கெடுதி யுண்டாக்கும் பானங்கள் யாவையும் விலக்கவேண்டும்.

கிறிஸ்துநாதராவது அப்போஸ்தலராவது ஓய்வுநாளை மாற்றினார்களா?

(DID CHRIST OR THE APOSTLES CHANGE THE SABBATH?)

கிறிஸ்துநாதராவது, அப்போஸ்தலராவது, வாரத்தின் முதலாம் நாளாகிய ஞாயிற்றுக்கிழமையை, ஏழாம் நாளாகிய ஓய்வுநாளுக்குப் பதிலாக மாற்றி, ஏற்பாடு செய்திருப்பார்களானால், அப்படிச் செய்யப்பட்ட மாறுதல் புதிய ஏற்பாட்டில் வாரத்தின் முதலாம் நாளைப் பற்றி பேசப்படும் இடங்களில் காணப்படவேண்டுமே.

மத்தேயு, தனது சுவிசேஷத்தை கி. பி. 41-ல் அதாவது கிறிஸ்துவின் மரணத்திற்கு 10 வருஷத்துக்குப் பிற்பாடு எழுதியிருக்கிறார். அப்பொழுது வாரத்தின் முதலாம் நாள் ஓய்வுநாளாக ஸ்தாபிக்கப்பட்டிருக்குமானால், அது அவருக்குத் தெரிந்திருக்கவேண்டுமே. பின் கூறப்படும் வாக்கியங்களை நன்கு கவனிப்போமாக:—"ஆயத்த நாளுக்குப் பின்னான மறு நாளிலே பிரதான ஆசாரியரும், பரிசேயரும் பிலாத்துவினிடத்தில் கூடி வந்து."—"ஓய்வுநாள் முடிந்து, வாரத்தின் முதலாம் நாள் விடிந்து வருகையில், மகதலேனா மரியாளும், மற்ற மரியாளும், கல்லறையைப்பார்க்க வந்தார்கள்." மத். 27: 62; 28: 1. இவ்வாக்கியங்களில் கண்டபடி, அவர் வாரத்தின் முதலாம் நாளை முதல் நாளென்றும், அதற்கு முந்தின நாளாகிய ஏழாம் நாளை ஓய்வுநாளென்றும், அதற்கு முந்தின ஆறாம் நாளை ஆயத்த நாளென்றும், எவ்வளவோ தெளிவாய் அழைத்திருக்கிறார். ஆகையால், அவர் இப்படி எழுதும் காலத்தில் ஓய்வுநாளைப்பற்றி யாதொரு மாறுதல் இருந்ததாகத் தெரியவே இல்லை. மேலும் அவர் தமது சுவிசேஷம் எழுதி 29 வருஷத்துக்குப் பிற்பாடு, எருசலேம் அழிக்கப்படும்போதும், கிறிஸ்தவர்கள் ஓய்வுநாளை மீறிவிடாதபடிக்கு, நமது அருமை இரட்சகர் தாமே அதைப்பற்றி சீஷர்களுக்கு கற்பித்த அருமையான கட்டளையையும் வெகு தெளிவாய் எடுத்துரைத்திருக்கிறார். "நீங்கள் ஓடிப்போவது மாரிகாலத்திலாவது, ஓய்வுநாளிலாவது, சம்பவியாதபடிக்கு வேண்டிக்கொள்ளுங்கள்" மத். 24: 20. மத்தேயு சுவிசேஷகன் சொல்லும் இந்தச் சாட்சியைப் பார்க்கும்போது, நமது இரட்சகர் தமது மரணத்திற்கு 39 வருஷத்துக்குப் பிற்பாடு முதலாய், தமது சீஷர்கள் இந்த நாளின் பரிசுத்தத்தை மீறி, அதின் ஆசீர்வாதத்தை இழந்து, தேவனுடைய பிரமாணத்தை அவமாக்கிவிடக்கூடாதென்று, மிகவும் வாஞ்சைகொண்டிருந்ததாகத் தெரிகிறது.

மாற்கு, தனது சுவிசேஷத்தை கி. பி. 64-ல் எழுதியிருக்கிறார். கிறிஸ்துவுக்குப் பிற்பாடு, வாரத்தின் முதலாம் நாளை, ஓய்வுநாளாய் ஆசரித்திருந்தால், இவருக்கும் தெரிந்திருக்கவேண்டுமே. அவர் அந்த நாளை, எப்படிக் குறிப்பிடுகிறாரென்று சற்றுக் கவனிப்போம். "ஓய்வுநாளுக்கு முந்தின நாள் ஆயத்த நாளா யிருந்தபடியால், சாயங்காலமான போது" "ஓய்வுநாளானபின்பு மகதலேனா மரியாளும், யாக்கோபின் தாயாகிய மரியாளும், சலோமே என்பவளும், அவருக்குச் சுகந்தவர்க்கமிடும்படி, அவைகளை வாங்கிக்கொண்டு, வாரத்தின் முதலாம் நாள் அதிகாலையிலே சூரியன் உதயமாகிறபோது கல்லறையினிடத்தில் வந்து," மாற்கு 15: 42; 16: 1, 2 இவரும் மத்தேயு சுவிசேஷகனைப்போலவே பேசுகிறார். இவைகளைப் பார்க்கும்போது, வாரத்தின் முதலாம் நாளை ஓய்வுநாளாக அல்ல, வேலை நாளாகவே ஆசரித்ததாகத் தெரிகிறது.

லூக்கா, தனது சுவிசேஷத்தை கி. பி. 60-ல் எழுதியிருக்கிறார். அவர் பரிசுத்த ஸ்திரீகள், இரட்சகருடைய மரணத்திற்கு பிற்பாடும், கற்பனையின்படியே ஓய்ந்திருந்தார்களென்று, எவ்வளவோ பிரத்தியட்சமாய் பேசுகிறார். "அந்த நாள் ஆயத்தநாளா யிருந்தது; ஓய்வுநாளும் ஆரம்பமாயிற்று. கலிலேயாவிலிருந்து அவருடனேகூட வந்திருந்த ஸ்திரீ

களும் பின்சென்று, கல்லறையையும், அவருடைய சரீரம் வைக்கப்பட்ட விதத்தையும் பார்த்து, திரும்பிப்போய், கந்தவர்க்கங்களையும், பரிமள தைலங்களையும், ஆயத்தம் பண்ணி, கற்பனையின்படியே ஓய்ந்திருந்தார்கள்." "வாரத்தின் முதலாம் நாள் அதிகாலையிலே தாங்கள் ஆயத்தம் பண்ணின சந்தவர்க்கங்களை அவர்கள் எடுத்துக்கொண்டு, வேறு சில ஸ்திரீகளோடுங்கூடக் கல்லறையினிடத்தில் வந்தார்கள்" லூக் 23: 54-56; 24: 1. இரட்சகருக்குப் பிற்பாடு ஏழாம் நாள் ஓய்வு மாற்றப்பட்டதாயிருந்தால், இந்த ஸ்திரீகளுக்கு அது தெரியாமற் போனதும், நமது இரட்சகரின் மரணத்திற்கு சுமார் 29 வருஷங்களுக்குப்பின் இந்த சுவிசேஷத்தை எழுதினவர்க்கும் தெரியாமற் போனதும் விபரீதமே.

யோவான், பத்மு தீவிலே கர்த்தருடைய நாளாகிய பரிசுத்த ஓய்வுநாளிலே ஆவிக்குள்ளாகி, அவருக்கு வெளிப்படுத்தப்பட்ட தரிசனங்களை எழுதினபிற்பாடு கி. பி. 97-ல், தனது சுவிசேஷத்தை எழுதும்போதும், வாரத்தின் முதலாம் நாளைப்பற்றிப் பேசும் இரண்டு இடத்திலும் எவ்வாறு பேசுகிறாரென்று பார்ப்போமாக. "வாரத்தின் முதலாம் நாள் காலையில், அதிக இருட்டோடே, மகதலேனா மரியாள் கல்லறையினிடத்திற்கு வந்து கல்லறையை அடைத்திருந்த கல் எடுத்துப்போட்டிருக்கக் கண்டாள்." "வாரத்தின் முதல் நாளாகிய அன்றையதினம் சாயங்கால வேளையிலே, சீஷர்கள் கூடியிருந்த இடத்தில், யூதர்களுக்குப் பயந்ததினால் கதவுகள் பூட்டியிருக்கையில், இயேசு வந்து நடுவே நின்று: உங்களுக்குச் சமாதானம் என்றார்." யோ. 20: 1, 19. இவ்வாக்கியங்களில் கண்டிருக்கிறபடி வாரத்தின் முதலாம் நாளை ஓய்வுநாளென்றாவது, சிலர் எண்ணிக்கொள்ளுகிறபடி அதை கர்த்தருடைய நாளென்றாவது அவர் அழைக்கவேயில்லை.

இவ்விதமாக புதிய ஏற்பாட்டில் ஏழாம் நாளைக்குறித்துப் பேசப்படும் 59 இடத்திலும், அதை ஓய்வுநாளென்றும்; முதலாம் நாளைப்பற்றிப் பேசப்படும் எட்டு இடத்திலும், அதை வாரத்தின் முதலாம் நாளென்றும், அழைக்கப்பட்டிருக்கிறதைப் பார்க்கிறோம். கிறிஸ்துவின் மரணத்துக்குப் பிற்பாடு, ஓய்வுநாளில் மாறுதல் ஆகியிருக்குமானால், வாரத்தின் முதலாம் நாளுக்கு புதிய ஓய்வுநாள் என்ற பதத்தையாவது, எவ்விடத்திலேனும், யாராவது, உபயோகித்திருக்கலாமே.

(இன்னும் வரும்)

மோசேயின் அனுபோகத்திலிருந்து கற்றுக்கொள்ளும் பாடம்

(A LESSON FROM THE EXPERIENCE OF MOSES)

"மோசே பெரியவனான காலத்தில், அவன் தன் சகோதரரிடத்தில்போய், அவர்கள் சுமை சுமக்கிறதைப்பார்த்து, தன் சகோதரராகிய எபிரேயரில் ஒருவனை ஒரு எகிப்தியன் அடிக்கிறதைக்கண்டு, அங்கும் இங்கும் பார்த்து, ஒருவரும் இல்லை என்று அறிந்து, எகிப்தியனை வெட்டி, அவனை மணலிலே புதைத்துப்போட்டான். (யாத். 2: 11, 12.)

ஒரு வாலிபன் தான் உண்மையுள்ள கிறிஸ்தவனாயிருக்கும்படி அடிக்கடி முயற்சி செய்து வந்தான். மேலும் அவன் கிறிஸ்துவின் மாதிரியை பின்பற்ற விரும்பியும் பெரிய தப்பிதங்களை செய்து வந்தான். அவன் தேவனுக்கும் மனிதனுக்கும் விரோதமாய் பாவங்களைச் செய்தான். தான் செய்த தப்பிதங்களையும் பாவங்களையும் அவன் நினைத்து அதைரியமடைந்தான். அப்போது அவன் தனக்குள்ளே சொல்லிக்கொண்டதாவது: "ஏன் நான் இன்னும் முயற்சி செய்யவேண்டும்? நான் தப்பிதம் செய்திருக்கிறேன். நான் செய்ததெல்லாம் தப்பிதமென்று எனக்கு தெரியும். கடவுள் அதை அறிவார். மனிதரெல்லோரும் அதை அறிந்திருக்கிறார்கள். ஒவ்வொருவரும் அதைப்பற்றி சம்பாஷித்துக்கொண்டி

ருக்கிறார்கள் ஆகையால் நான் என்ன செய்வது? அந்த முயற்சியை விட்டொழித்து இனி கிறிஸ்தவனாயிருக்கும்படி முயற்சி செய்யாமலிருப்பதே மிகவும் நலமென்று எண்ணுகிறேன்."

இவ்வண்ணமாக அவன் சிந்தித்துக்கொண்டிருக்கையில் மேலே சொன்ன மோசேயின் அனுபோகம் அவன் மனதில் உதித்தது, மேலும் அவன் அவ்வனுபோகத்திலிருந்து தனக்கு ஒரு பாடத்தைக் கற்றுக்கொண்டான். மேலே காட்டிய வசனங்களில் மோசே தன் தேவனை சேவிக்கமுயன்று தன் சகோதரரை விடுவிக்க எத்தனிக்கையில் அவன் ஒரு பயங்கரமான தப்பிதத்தை செய்தான். அவன் மனிதனை கொல்லுகிறதான பெரிய தப்பிதத்தை செய்தான். தேவனுடைய ஊழியக்காரனாய் இருப்பதற்குப் பதிலாக அவன் ஒரு கொலைபாதகனானான். ஆனால் இவன் இப்படிப்பட்ட பயங்கரமான தப்பிதத்தை செய்தபோதிலும் தேவன் அவனை தள்ளிப்போடவில்லை. மோசே இத்தப்பிதத்தை செய்திருந்தபோதிலும் அவனுடைய இருதயத்தில் இன்னும் நன்மை செய்யவேண்டுமென்கிற ஆவல் இருக்கிறதென்று தேவன் கண்டார். ஆகையால் தேவன் மோசேயை நாற்பது வருஷ காலம் தன் ஊழியத்திற்கென்று பயிற்றுவித்தார். இந்த நாற்பது வருஷகாலத்துக்குள் மோசே தேவனை எப்படி சேவிப்பதென்று தெளிவாய் அறிந்துகொண்டான், மேலும் அவ்வப்பியாசம் முடிந்தபிறகு, தேவனுக்கென்று பலத்த வேலைகளைச் செய்ய அவன் கூடியவனாயிருந்தான்.

சில சமயங்களில் நாம், மன்னிக்கப்படாத அவ்வளவு பெரிய தப்பிதத்தை செய்திருக்கிறோமென்று நினைக்கலாம், ஆனால் நாம் அவ்வண்ணமாக சிந்திக்கப்படாது. தேவன் மோசேயின் பாவத்தை மன்னிக்கக்கூடியவராயிருந்து, பிற்பாடு இஸ்ரவேலரை ரட்சிக்க அவனை ஒரு காரிய கர்த்தாவாக உபயோகித்திருப்பாரானால், நன்மையுங்கூட அவர் அவ்வண்ணமே செய்வார். ஆகையால் தேவனிடத்தில் நம்பிக்கையாயிரு. புதிதாகிய மனோதைரியத்தைக் கொண்டிரு. உன்னதத்திற்கு படிகளாகவும், மிகவும் நல்ல அனுபோகமாகவும் உனக்கு உதவி செய்கிறதாகிய அவ்வித தப்பிதங்களை செய்தாயென்று மனந்தளர்ந்து போகாதே. தேவன், செய்யும்படி உனக்கு ஒப்புவிக்கிற எல்லாவற்றையும் நீ செய்யும்படி அவர் பலத்தையும் ஞானத்தையும் தந்தருளுவார்.

G. G. L.

தேவ மனிதனும் தேவ குமாரனுமாகிய இயேசு

(CHRIST THE MAN AND SON OF GOD)

"இவர் என்னுடைய நேச குமாரன் இவரில் பிரியமாயிருக்கிறேன்." மத். 3: 17. உலகங்கள் உண்டாக்கப்படாததற்கு முன் ஆதியிலிருந்தே அவர் தேவனுடைய பிரிய புத்திரனாயிருக்கிறார். "ஆதியிலே வார்த்தை இருந்தது. அந்த வார்த்தை தேவனிடத்திலிருந்தது. அந்த வார்த்தை தேவனாயிருந்தது. அவர் ஆதியிலே தேவனோடிருந்தார்" என்று எல்லா சீஷரிலும் கிறிஸ்துவை அதிகமாய் நேசித்த அப்போஸ்தலனாகிய யோவான் சொல்லுகிறார். யோவான் 1: 1, 2. இயேசு "வார்த்தை" என்று அழைக்கப்படுகிறார். மனித எண்ணத்தை வெளிப்படுத்தும் சப்தத்திற்கு வார்த்தை என்று பெயர். கிறிஸ்து தேவ எண்ணத்தை வெளிப்படுத்துகிறவராயிருக்கிறார். அவர் "நானும் என் பிதாவும் ஒன்றாயிருக்கிறோம்" என்று சொல்லுகிறார். யோவான் 10: 30. அதினால் அவர்கள் இருவரும் ஒன்றாயிருக்கிறார்களென்பது அர்த்தமல்ல, அவர்கள் ஆவியிலும், நோக்கத்திலும் ஒன்றாயிருக்கிறார்களென்பது இதன் அர்த்தம். கிறிஸ்து தேவனாகவும் மனிதனாகவும் இருந்தார் என்று பைரன் என்னும் பிரபு சொல்லுகிறார்.

அவர் இவ்வுலகத்திலிருந்தபோது "தச்சனுடைய குமாரன்" என்று அழைக்கப்பட்டார். ஓர் பெரிய மனுஷன் கிறிஸ்துவை உலகத்தை சிருஷ்டித்த மகா தச்சனின் மகன் என்று அழைக்கிறார். இயேசுவின் பிறப்பை மரியாளுக்கு அறிவிக்கவந்த தூதன் "பரிசுத்த ஆவி உன்மேல் வரும்; உன்னதமானவருடைய பலம் உன்மேல் நிழலிடும்; ஆதலால் உன்னிடத்தில் பிறக்கும் பரிசுத்தமுள்ளது தேவனுடைய குமாரன் என்னப்படும்." என்றான் லூக். 1: 35. இயேசுக்கிறிஸ்து மெய்யாகவே தேவனுடைய தெய்வீக குமாரனாயிருக்கிறார். அவர் தேவ லக்ஷணம் பொருந்தியவர். அவர் தம்மை தேவ குமாரனென்று பல முறை விளம்பியிருக்கிறார். இந்தக் காரணத்தை முன்னிட்டே யூதர்கள் அவரைக் கொல்ல வகை தேடினார்கள். ஒரு சமயத்தில் பரிசேயர் அவர்மேல் கல்லெறிய கல்லுகளை எடுத்தபோது "நீங்கள் எந்த கிரியையினிமித்தம் என்மேல் கல்லெறிகிறீர்கள்" என்று கேட்டார். அதற்கு அவர்கள் "நற்கிரியையின் நிமித்தம் நாங்கள் கல்லெறிகிறதில்லை? நீ மனுஷனாயிருக்க உன்னை தேவன் என்று சொல்லி இவ்விதமாக தேவ தூஷணஞ் சொல்லுகிறபடியினால் உன்மேல் கல்லெறிகிறோம் என்றார்கள்." யோவான் 10: 33. தேவ குமாரனென்று உரிமை பாராட்ட அவருக்குப் பாத்தியமுண்டா? ஆம்.

நிறைவேறித்தீர்ந்த அநேக தீர்க்கதரிசனங்கள் இவ்வுரிமையை வெளிப்படுத்துகிறது. அவர் பாவஞ் சுமக்கிறவராக வருகிறார் என்று ஆதி. 3: 15-ல் சொல்லப்பட்டிருக்கிறது. அவரது வருகையின் காலத்தைப்பற்றி ஆதி. 49: 10-ல் சொல்லப்பட்டிருக்கிறது. அவர் இன்ன குடும்பத்தில் பிறப்பாரென்று ஏசா. 11: 1-ல் சொல்லப்பட்டிருக்கிறது. அவருடைய பெயரும் குணாதிசயங்களும் ஏசா. 7: 14-லும் ஏசா. 42: 1-4 லும் முறையே முன்னுரைக்கப்பட்டிருக்கிறது. ஏசா. 53: 3, 7-ல் அவரது துன்பம் பாடுகள் மரணம் முன்னுரைக்கப்பட்டிருக்கிறது. சங். 22. கிறிஸ்துவின் பிறப்பு, பாடுகள் மரணம் முதலியவைகளைப்பற்றி அவர் பிறப்பதற்கு பல நூற்றாண்டுகளுக்கு முன்னே தீர்க்கதரிசனமாக உரைக்கப்பட்டிருக்கிறது. இவ்வாக்குத்தத்தங்களின் நிறைவேறுதலில் கிறிஸ்துவின் தேவ தன்மை வெளியங்கமாகிறது. இவரே உலகத்திற்கு "ராஜாதி ராஜா" வாயிருக்கிறார். நீயும் நானும் அவருக்குத் தொண்டு செய்யும் குடிகளாயிருக்கிறோம்.

அவருடைய பாவமற்ற ஜீவியம் அவரை தேவ குமாரனென்று வெளிப்படுத்துகிறது. அவரை நியாயம் விசாரித்த அதிபதியுங்கூட "நான் அவனிடத்தில் ஒரு குற்றமும் காணேன்" என்று சொன்னான். யோவான் 18: 38. நாஸ்திக்கர்களில் பெயர்போனவரான ரீனன் என்பவர், கிறிஸ்து தேவனல்லவென்று ரூபிக்கும்படியாக எழுதின புஸ்தகத்தில் அவரது குற்றமற்ற ஜீவியத்தை அவர் கண்டு அவரை "நிகரற்ற இயேசு" என்று அழைக்கிறார். அநேக மனிதர்கள் பொது ஜன நன்மைக்காக தங்கள் ஜீவனைக் கொடுத்து இப்படியாக தங்கள் பெயர் தலைமுறைகள்தோறும் நினைவு கூறப்படும்படி செய்கிறார்கள். அவர்கள் எவ்வளவு பெரிய மனிதர்களாயிருந்தபோதிலும் அவர்கள் பாவிகளே. ஒருவருடைய ஜீவிய சரித்திரத்தைப்பற்றி எழுதும்போது அவருடைய குற்றங்களை அதில் எழுதுகிறதில்லை. குற்றமற்ற மனிதர்கள் ஒருவரும் இருந்ததில்லை. ஆனால் கிறிஸ்து "நீதியின் சூரியன்" என்று அழைக்கப்படுகிறார். மல். 4: 2. அவருடைய குற்றமற்ற ஜீவியத்தினாலே, அவர் தம்மை தேவ குமாரனென்று ரூபிக்கிறார்.

எல்லாவற்றிற்கும் மேலாக நமது இருதயம் அவர் தேவகுமாரனென்று சாட்சியிருக்கிறது. நமது அறிவும் அப்படியே சொல்லுகிறது. தேவ வல்லமையானது மனித இருதயத்தில் அவர் தேவ குமாரனென்று சாட்சியிடும்படி ஏவுகிறது. செண்ட் ஹெலினா (St. Helene) என்னும் தீவில் சிறையாக்கப்பட்டிருந்த நெப்போலியன் என்னும் தளகர்த்தன் "நான் மனிதரை அறிவேன் ஆனால் கிறிஸ்து ஒரு மனிதனல்ல" என்று சொல்லுகிறான். ஆம் கிறிஸ்து மனிதரிலும் மேலானவர்தான். இதைப்பற்றி நாம் சந்தேகிக்காதபடி தேவன் நமது இருதயங்களில் கிரியை செய்கிறார். தேவ குமாரனாகிய இயேசுவே

நாம் பார்க்கிறவைகள் யாவையும் சிருஷ்டித்தார் என்று நம்புகிறோம். முற்காலத்தில் ஒருவர் "கிறிஸ்து என்னப்பட்ட இயேசுவை நான் என்ன செய்யவேண்டும்?" என்று கேட்டார். நீ உத்தரவு சொல்லவேண்டிய கேள்வி இதுதான். நீ அவரை உன் ஜீவனின் அதிபதியாக ஏற்றுக்கொள்ளவேண்டும்; அல்லது அவரை முற்றிலும் புறக்கணித்துவிடவேண்டும். நீ இரண்டில் ஒன்றைத் தெரிந்துகொள்ளவேண்டும். அவைகளின் முடிவோ மகா முக்கியமானது.

H. G. Woodward

திராட்சச்செடியில் நிலைத்திருத்தல்.

(ABIDING IN THE VINE)

"நான் மெய்யான திராட்சச்செடி, என் பிதா திராட்சத்தோட்டக்காரர். என்னில் கனி கொடாதிருக்கிறகொடி எதுவோ அதை அவர் அறுத்துப்போடுகிறார்; கனி கொடுக்கிற கொடி எதுவோ, அது அதிக கனிகளை கொடுக்கும்படி அதைச் சுத்தம் பண்ணுகிறார். நான் உங்களுக்குச் சொன்ன உபதேசத்தினாலே நீங்கள் இப்பொழுதே, சுத்தமாயிருக்கிறீர்கள். என்னில் நிலைத்திருங்கள், நானும் உங்களில் நிலைத்திருப்பேன்; கொடியானது திராட்சச்செடியில் நிலைத்திராவிட்டால் அது தானாய்க் கனி கொடுக்கமாட்டாததுபோல, நீங்களும் என்னில் நிலைத்திராவிட்டால், கனி கொடுக்க மாட்டீர்கள். நானே திராட்சச்செடி, நீங்கள் கொடிகள். ஒருவன் என்னிலும், நான் அவனிலும் நிலைத்திருந்தால், அவன் மிகுந்த கனிகளைக் கொடுப்பான்; என்னையல்லாமல் உங்களால் ஒன்றும் செய்யக்கூடாது." யோ. 15: 1-5.

"நீங்கள் என்னிடத்தில் அன்பாயிருந்தால் என் கற்பனைகளைக் கைக்கொள்ளுங்கள்." யோ. 14: 15. ஒருவன் கிறிஸ்துவிலும் கிறிஸ்துவின் விசுவாசத்திலும் நிலைத்திருப்பானானால், அவன் தேவனுடைய கற்பனைகளை கைக்கொள்வான். ஏனென்றால் கிறிஸ்து நம்மில் நிலைத்திருப்பாரானால், அப்போது அவர் நம்முடைய சுய சித்தத்தை மறக்கும்படி செய்து தேவ சித்தத்தை நிறைவேற்றுகிறதற்கு நமக்கு உதவி செய்வார். கிறிஸ்து நம்மை விட்டு பிரிகிற அந்தட்க்ஷணமே அவருக்கும் நமக்கும் உள்ள சம்மந்தம் நீக்கப்பட்டுப் போகிறது. எப்படி ஒரு வேருள்ள மரத்தில் ஒட்டியிராத ஒரு கிளையானது உலர்ந்து போகிறதோ அப்படியே தேவனுடைய கற்பனைகளை கைக்கொள்ளாதவர்களும் ஆவியில் மரணமடைகிறார்கள். எவர்களிடத்தில் தேவ ஆவி இருக்கிறதோ, அவர்கள் கற்பனைகளை கைக்கொள்ளுவார்கள். மேலும் எவர்களிடத்தில் தேவ ஆவியானவர் இல்லையோ அவர்கள் கற்பனைகளை மீறி நடப்பார்கள்.

தேவன் மனிதனை களிமண்ணினால் உண்டாக்கினாரென்று நாம் வேதத்தில் வாசிக்கிறோம். இதற்குப் பிறகு மனிதன் அதே களிமண்ணையெடுத்து ஒரு தெய்வத்தையும் உண்டாக்கினான். பிறகு தேவன் தாம் உண்டாக்கின அக்களிமண் உருவின்மேல் ஊத அது ஒரு ஜீவாத்துமாவாயிற்று; அவ்வாத்துமாவானது நினைக்கிறதற்கும், வேலை செய்கிறதற்கும், யூகிக்கிறதற்கும் நன்மை, தீமை இவை இரண்டிற்குமுள்ள வித்தியாசத்தை கண்டுபிடிக்கிறதற்கும், தனக்கும் மற்றவர்களுக்கும் உதவி செய்கிறதற்கும் உரிய தத்துவங்களை உடைத்தாயிருக்கிறது. ஆனால் மனிதன் உருவாக்கின விக்கிரகங்கள், அல்லது தேவர்கள் என்னப்பட்டவைகள் எப்படி இருக்கிறதென்று பார்ப்போம்! நமக்கிருக்கும் தத்துவங்கள் அவைகளுக்கும் உண்டோவென்று பார்த்தால், அவைகள் உதவியற்றவைகளும், வேலை செய்ய சக்தியற்றவைகளும், ஊமையும், உபயோகமற்றவைகளுமாயிருக்கிறது. அநேக நூற்றாண்டுகளாய் அவைகள் இப்பூமியில் நிலைத்திருந்தும் அவைகளில் ஒன்றுக்காவது இன்னும் ஜீவன் கொடுக்கப்படவில்லை. இவ்வுதாரணமானது, தேவனுடைய கிரியைக்கும் மனுஷனுடைய வேலைப்பாட்டிற்குமுள்ள வித்தியாசத்தை நன்றாய் விளக்கிக் காட்டுகிறது.

"எங்களுக்கு அல்ல, கர்த்தாவே, எங்களுக்கு அல்ல, உமது கிருபையினிமித்தமும், உமது சத்தியத்தினிமித்தமும், உம்முடைய நாமத்திற்கே மகிமை வரப்பண்ணும். அவர்களுடைய தேவன் இப்பொழுது எங்கே என்று புறஜாதிகள் சொல்வானேன்? நம்முடைய தேவன் பரலோகத்தில் இருக்கிறார்; தமக்கு சித்தமான யாவையும் செய்கிறார். அவர்களுடைய விக்கிரகங்கள் வெள்ளியும் பொன்னும், மனுஷருடைய கைவேலையுமாயிருக்கிறது. அவைகளுக்கு வாயிருந்தும் பேசாது; அவைகளுக்குக் கண்களிருந்தும் காணாது. அவைகளுக்குக் காதுகளிருந்தும் கேளாது; அவைகளுக்கு மூக்கிருந்தும் முகராது; அவைகளுக்குக் கைகளிருந்தும் தொடாது; அவைகளுக்குக் கால்களிருந்தும் நடவாது; தங்கள் தொண்டையால் சத்தமிடவும் மாட்டாது. அவைகளைப் பண்ணுகிறவர்களும், அவைகளை நம்புகிறவர்கள் யாவரும், அவைகளைப்போலவே இருக்கிறார்கள். இஸ்ரவேலே, கர்த்தரை நம்பு; அவரே அவர்களுக்குத் துணையும் அவர்களுக்குக் கேடகமுமாயிருக்கிறார்." சங். 115: 1-9.

G. G. L.

நீ சிலருடைய தப்பிதங்களை அவர்களுக்கு எடுத்துணர்த்தும்போது, அவர்கள் உடனே தங்கள் குற்றங்களை அறிக்கையிட்டு; தங்கள் துன்மார்க்க செய்கையைவிட்டு, உனக்கு மிகவும் நெருங்கின அருமையுள்ள நேசர்களாகின்றார்கள். ஆனால் மற்ற சிலர் அப்படியாகாமல், உன்மேல் கோப மூண்டு, மனக்கடினப்பட்டு, தங்கள் குற்றங்களை விட்டுவிட்டு உனக்கு சிநேகர்களாவதற்கு பதிலாக அவர்கள் உன்னைப் பகைத்து, உனக்கு சத்துருவாகிறார்கள். இவ்விதமாகவே அவர்கள் நம் கர்த்தராகிய கிறிஸ்து நாதருக்கும் செய்தார்கள். இவ்விதமாக கிறிஸ்துவின் போதகங்களை, சரியாயும், உண்மையுடனும், போதிக்கிறவர்களுக்கும், அவர்கள் இவ்வண்ணமே செய்கிறார்கள்.

ஐயரின் அறையில் கேள்விப்பட்டது No 1:

(HEARD IN A PASTOR'S STUDY)

(வேதத்தை ஆராய்ச்சி செய்ததில் அதில் தான் விசுவாசிக்கிறதற்கு விரோதமாக சில காரியங்கள் இருக்கிறதை அற்புதநாதன் என்பவர் அறிந்து சந்தேகத்தை நிவிர்த்திக்கும்படியாக ஐயரிடம் சென்றார். கனம், பாக்கியநாதன் ஐயர் என்பவர் அவரைத் தன் புஸ்தகசாலைக்குள் அழைத்துச்சென்று பின் வருபவைகளைப்பற்றி பேச ஆரம்பித்தார்).

ஐயர்.—"சலாம், என் அருமை மகனே, இவ்வளவு காலையில் நீ ஏன் இங்கு வந்தாய்?"

அற்புதநாதன்.—"ஸ்தோத்திரம் ஐயா, நான் சும்மா வந்தேன். பரிசுத்த வேதாகமத்தைப்பற்றிய சில சந்தேகங்களை நிவிர்த்தி செய்துகொள்ள தங்களிடம் வந்தேன். நான் சேலத்திலே கிறிஸ்தவ குடும்பத்தில் பிறந்தவன், என் தகப்பனார் C. M. S. மிஷியோனில் இருபது வருஷமாக உபதேசியாராயிருந்தார். நான் சிறு வயது முதல் வேதம் படித்திருக்கிறதெல்லாம் உங்களுக்குத் தெரியுமே. (ஆகா! அப்பறம்! என்ன என்று ஐயர் கேட்க அற்புதநாதன்) நான் நாளதுவரையும் காலஞ்சென்ற என் தகப்பனாருடைய உபதேசத்தில் சற்றும் சந்தேகங்கொள்ளவில்லை. என் தாய் தேவ பக்தியுள்ளவர்கள். ஆனால் நான் சில காலமாக வேதத்தை அதிகமாக ஆராய்ச்சி செய்து வந்ததில் நான் இதற்குமுன் அறியாத அநேக விஷயங்கள் எனக்கு வெளியாகியிருக்கிறது."

ஐயர்.—என் அருமை மகனே, தேவனுடைய சத்திய வேதத்தை ஆராய்வதில் உனக்கு அதிக விருப்பமிருக்கிறதானால் எனக்கு அதிக சந்தோஷமே. நீயும் என்னைப்போல ஒரு ஐயராகவேண்டுமென்று தேவன் உன்னை வழி நடத்துகிறார். நீ வேதத்தை ஆராய்ச்சி செய்ததில் இதற்குமுன் அறியாத விஷயங்கள் என்னென்ன வெளிப்பட்டது? அதை நான் அறியப் பிரியப்படுகிறேன்."

அற்புத.—ஆம். நான் அறிந்த அந்த விஷயங்கள் என் தந்தையின் போதகத்திற்கும் சபைச் சட்டத்திற்கும் ஒத்ததாயில்லை யென்று முன் சொன்னேன். உதாரணமாக, நாம் ஞாயிற்றுக்கிழமையை ஓய்வுநாளாக ஆசரிக்கவேண்டுமென்றும் அன்றையதினம் கோவிலுக்குப் போகவேண்டுமென்றும் கற்பிக்கப்படுகிறோம். ஆனால் வேதாகமத்திலே ஏழாம் நாளை ஓய்வுநாளாக ஆசரிக்கவேண்டுமென்று சொல்லப்பட்டிருக்கிறது. அதுமாத்திரமல்ல இது பத்துக்கற்பனையிலேயே சொல்லப்பட்டிருக்கிறதென்பது எனக்கு ஆச்சரியமாயிருக்கிறது. இதை நான் முன்னமேயே பார்க்காதது வியப்பாயிருக்கிறது. தேவன் தமது சொந்த விரல்களால் எழுதிக்கொடுத்த நியாயப்பிரமாணத்திலே வாரத்தின் முதல் நாளை அல்ல, வாரத்தின் ஏழாம் நாளை ஓய்வுநாளாக ஆசரிக்கவேண்டுமென்று எழுதியிருப்பதை பார்த்தபிறகு எனக்கு சற்று மனப்பிராந்தி பிடித்திருக்கிறது. என் சிநேகிதர்களைக் கேட்டு அவர்களும் என் சந்தேகத்தை நிவிர்த்திசெய்ய முடியாததால் தங்களிடம் வந்தேன். நீர் பட்டம்பெற்ற அநேக வருடமாக அனுபோக மடைந்த ஐயராயிருப்பதால் இதை எனக்கு விபரிக்கவேண்டும்." என,

ஐயர்.—ஆம், ஆம், தம்பி, நீ, என்னிடம் வந்ததற்காக சந்தோஷம். உன்னைப்போன்ற இளைஞர்கள் வேதாகமத்தின் ஆழ்ந்த இரகசியங்களை அறிந்துகொள்ள முடியாததால் என்னிடம் வருவது ஸகஜந்தான். நான் வேதாகமம் முழுவதையும் கற்றிருக்கிறதினால் உன் சந்தேகத்தை சுலபமாய் நிவிர்த்திக்க என்னால் கூடும். ஓய்வுநாளைக்குறித்து நீ கொஞ்சமும் கவலை கொள்ளவேண்டாம். சற்பனை யூதருக்கு கொடுக்கப்பட்டது. மகனே, அது இந்தியராகிய நமக்கு கொடுக்கப்படவில்லை, பார்த்தாயா. யூதர்கள் சனிக்கிழமையை ஆசரிக்கவேண்டியது கடமை. ஆனால் நாம் அதைக் கைக்கொள்ளவேண்டியதில்லை. முற்காலத்தில் கொடுத்த கற்பனைகளெல்லாம் கிறிஸ்துவின் மரணத்தோடு ஒழிந்துபோய்விட்டது. அது முதல் நாம் யூதருக்கு முன் கொடுக்கப்பட்ட சற்பனைகளுக்குக் கீழ்பட்டவர்களல்ல. நாம் இப்பொழுது புது உடன்படிக்கைக்குக் கீழ்பட்டிருக்கிறோம். கிறிஸ்து ஞாயிற்றுக்கிழமையில் உயிர்த்தெழுந்ததால் நாம் அந்த நாளை ஆசரிக்கவேண்டும். இப்பொழுது இது உனக்கு விளங்குகிறதென்று நினைக்கிறேன். இனி அதைப்பற்றி கவலைப்படவேண்டாம்.

அற்புத.—ஐயா, தாங்கள் ஓய்வுநாள் யூதருக்காக மாத்திரம் உண்டாக்கப்பட்டதென்றும் அவர்கள் மாத்திரம் அதை கைக்கொள்ளவேண்டும் என்றும் சொல்லுகிறீர். ஆனால் ஆதியிலேயே உலகத்தின் முதலாவது ஏழாம் நாளில் ஓய்வுநாள் ஸ்தாபிக்கப்பட்டதென்று நான் வேதாகமத்தில் வாசித்தேன். தேவன் அந்த நாளில் ஓய்ந்திருந்து அதை ஆசீர்வதித்துப் பரிசுத்தமாக்கினாரென்று ஆதியாகமம் 2: 1, 2-ல் சொல்லப்பட்டிருக்கிறது. இது யூதரென்னும் ஒரு ஜாதியார் தோன்றுவதற்கு பல நூற்றாண்டுகளுக்கு முன்னே நடந்தது. அல்லாமலும், "மனுஷன் ஓய்வுநாளுக்காக உண்டாக்கப்படவில்லை, ஓய்வுநாள் மனுஷனுக்காக உண்டாக்கப்பட்டது" என்று மாற்கு 2: 38-ல் காணலாம், ஆகையினால் இந்த இரண்டு வசனங்களிலிருந்து நாம் ஓய்வுநாள் ஒரு ஜாதியாருக்கல்ல பொதுவாக எல்லா மனுஷ ஜாதிக்காக உண்டாக்கப்பட்டதென்று அறிந்துகொள்ளுகிறோம். கிறிஸ்துவின் மரணத்தோடு கற்பனை ஒழிந்துபோனதென்று ஏன் சொல்லவேண்டும். கிறிஸ்து "வானமும் பூமியும் ஒழிந்துபோனாலும், நியாயப்பிரமாணத்திலுள்ளதெல்லாம் நிறைவேறுமளவும், அதில் ஒரு சிறு எழுத்தாகிலும், ஒரு எழுத்தின் உறுப்பாகிலும், ஒழிந்துபோகாதென்று உங்களுக்குச் சொல்லுகிறேன்" என்றார். மத். 5: 18. நீங்கள் சொல்லுகிறபடி ஏழாம்நாளை ஆசரிக்கவேண்டுமென்கிற கற்பனை ஒழிந்துபோகுமானால், கொலை செய்யாதிருப்பாயாக, களவு செய்யாதிருப்பாயாக என்கிற மற்ற கற்பனைகளைப்பற்றி என்ன சொல்லுகிறீர்கள். இவை யாவும் தேவன் தம்முடைய சொந்த விரலினால் கற்பலகைகளில் எழுதிக்கொடுத்த அதே நியாயப்பிரமாணத்திலல்லவோ அடங்கியிருக்கிறது. ஓய்வுநாள் பிரமாணம் ஒழிந்து

போகுமானால் மற்ற ஒன்பது கற்பனைகளும் ஒழிந்துபோயிருக்கவேண்டும். ஆகையினால் ஒருவன் கொலை களவு செய்தால் அது குற்றமல்லவென்று கோருகிறேன். என்னமோ அது எனக்கு விளங்கவில்லை. அதை எனக்கு விளங்கிக் காட்டவேண்டும். இன்னம் ஒன்று இருக்கிறது. கிறிஸ்துவின் உயிர்த்தெழுதலை நினைவுகூரும்படியாக வாரத்தின் முதல்நாளை ஆசரிக்கவேண்டுமென்று சொல்லுகிறீர்களே, கிறிஸ்தாவது அல்லது அவரது அப்போஸ்தலராவது ஓய்வுநாளுக்குப் பதிலாக வாரத்தின் முதல் நாளை ஆசரிக்கவேண்டுமென்று எவ்விடத்திலாவது சொல்லியிருக்கிறார்களா?

ஐயர்.—இந்த நியாயப்பிரமாணத்தைப்பற்றி நீ கலங்கவேண்டாம். நீ சிறுவனாயிருக்கிறதினால் இதை அறிந்துகொள்ளுவது அசாத்தியம். என்னைப்போலப் பெரிய மனிதர்களாயிருக்கிறவர்கள் மாத்திரம் அதை அறிந்துகொள்ளக்கூடும். ஞாயிற்றுக்கிழமையைத் தான் ஆசரிக்கவேண்டுமென்று கிறிஸ்து சொல்லவில்லை என்பது வாஸ்தவந்தான். ஆனால் நாம் அப்படி செய்வது அவருக்குப் பிரியமென்று சாதாரணமாக எண்ணுகிறோம். அநேக நூற்றாண்டுகளாகக் கிறிஸ்தவர்கள் ஞாயிற்றுக்கிழமையையே ஆசரித்து வந்தார்கள். ஆகையினாலே நாமும் அதைக் கைக்கொள்ளவேண்டும்.

அற்புத.—"ஆனால் அந்தக் கற்பனைகள் ஒழிந்துபோயிற்றோ?" என்றான், அதற்கு,

ஐயர்.—"ஆம், அவை யாவும் கிறிஸ்துவின் மரணத்தில் ஒழிந்துபோயிற்று." என்றார்.

அற்புத.—இப்பொழுது பிரமாணம் ஒழிந்துபோனபடியால் கொலை களவு செய்வது நியாயந்தானே?

ஐயர்.—இல்லை, இல்லை. நாம் கொலை களவு செய்யக்கூடாது. சரி, இந்தப் பிரமாணத்தைப்பற்றி நன்றாய் யோசித்து அப்புறம் சொல்லுகிறேன்.

அற்புத.—அப்படியானால் கிறிஸ்து ஞாயிற்றுக்கிழமையை ஆசரிக்கும்படி கட்டளை கொடுக்கவில்லையென்றும், ஜனங்கள் சாதாரணமாய் நினைத்ததினாலும் அநேக நூற்றாண்டுகளாக கிறிஸ்தவர்கள் அதைக் கைக்கொண்டு வந்ததினாலும் நாமும் அப்படி செய்யவேண்டும் என்றும் சொல்லுகிறீர்கள். ஐயா, கிறிஸ்து ஞாயிற்றுக்கிழமையை ஆசரிக்கவேண்டுமென்று கட்டளை கொடுக்காததினால் நமக்கு கட்டளை கொடுக்கப்படுமட்டும் ஆதியில் கொடுத்த அந்தக் கட்டளையைக் கைக்கொள்ளவேண்டியது கடமையென்று எனக்குத் தோன்றுகிறது. கிறிஸ்தவர்கள் பல நூற்றாண்டுகளாக ஞாயிற்றுக்கிழமையைக் கைக்கொண்டு வந்திருக்கிறதினாலே நாமும் அதைக் கைக்கொள்ளவேண்டுமென்பது ஒரு சரியான முகாந்திரமல்ல. ஒருவேளை அவர்கள் இதில் தப்பிதம் செய்திருப்பார்கள். நாம் ஞாயிற்றுக்கிழமையைக் கைக்கொள்ளவேண்டுமென்ற கட்டளை கொடுக்கப்படாததினாலே அவர்கள் தப்பிதம் செய்திருக்கிறார்களென்று நான் நினைக்கிறேன். நாம் ஞாயிற்றுக்கிழமையை ஆசரிக்கிறதினாலே நாமும் தப்பிதம் செய்கிறோம்."

ஐயர்.—(கோபத்தோடு அற்புதனைதனை நோக்கி) நீ அப்படி பேசக்கூடாது. கிறிஸ்தவ குருமார்களையும் அத்தியக்ஷர்களையும், உலகத்தின் பெரிய படிப்பாளிகளையும் கவனித்துப் பார். அவர்கள் யாவரும் ஞாயிற்றுக்கிழமையை ஆசரிக்கிறார்கள். அவர்களெல்லாரும் தப்பிதம் செய்கிறார்களென்று நீ சொல்வாயா? இந்தப் பெரிய மனிதர்களுடைய எண்ணத்தை நாம் மதிக்கவேண்டுமென்று நீ எண்ணுகிறாயல்லவா? என்று கேட்டார்.

அற்புத.—ஆம், ஐயா, நாம் அவர்களுடைய எண்ணத்தை மதிக்கவேண்டியதுதான். ஆனால் அவர்களுடைய எண்ணம் வேதாகமத்திற்கு விரோதமாயிருக்குமானால் நாம் அவர்களையல்ல வேதத்தையே மதிக்கவேண்டும். என்றாலும் அவர்கள் யார்? அவர்களும் நம்மைப்போல மனிதர்தானே? அவர்களும் வேதத்தில் சொல்லியபடி நடவாவிட்டால் தப்பிதம் செய்ய ஏதுவிருக்குமல்லவா?

ஐயர்.—நீ இவ்வண்ணம் பேசுவது தகாது. நாம் வேதாகமத்தைப்பற்றி அவ்வளவாய்க் கவனிக்கக்கூடாத காலத்தில் வசிக்கிறோம் என்று படித்த உனக்கு தெரியாதா? மார்க்க சம்பந்தமாக நம்மை வழி நடத்த வேதாகம புஸ்தகங்களைவிட உலகத்தில் பெரிய கல்விமான்களிருக்கிறார்கள். நமது அத்தியக்ஷர்களையும், ஆசரியாபிஷேப் முதலியவர்களையும் பார். அவர்கள் பெரிய கலாசாலைகளில் வித்தை கற்றவர்கள். அவர்கள் பரிசுத்தமுள்ளவர்கள், நாம் சனிக்கிழமையை ஆசரிப்பது அவசியமல்லவென்று அவர்கள் சொல்லுகிறார்கள். நாம் இந்தப் பெரிய படிப்பாளிகளுடைய எண்ணத்தின்படி நடப்பது மிக மேலானது. அது இருக்கட்டும். நமக்கு இந்தக் காரியங்களைப்பற்றி என்ன தெரியும்?

அற்புத.—ஐயா, நான் சொல்வதை சற்று கவனியுங்கள். நீர் வேதாகமத்தைவிட மனித போதனைகளை அதிகமாக மதிக்கிறீர்களென்று நினைக்கிறேன். நீங்கள் வேதாகமத்தை விசுவாசிக்கிறீர்களா? அது கிறிஸ்தவ மதத்திற்கு அஸ்திபாரமல்லவா? வேதாகமம் நம்மை இன்னது செய்யவேண்டுமென்று கற்பிக்கும்போது நாம் அதை செய்யாவிட்டால் தேவனுடைய பார்வையில் நாம் குற்றவாளிகளல்லவா? வேதத்தைப் பின்பற்றுவதைவிட மனிதரைப் பின்பற்றுவது உசிதமென்று உங்களுக்குத் தோன்றுகிறதுபோலிருக்கிறது. கடைசியில் மனிதர் நம்மை இரட்சிக்க முடியுமா? என்று கேட்க,

ஐயர்.—ஆம், நீ சொல்வது சரிதான். நீ சொல்வதை ஒத்துக்கொள்ளுகிறேன். நாம் ஏழாம் நாளை ஆசரிக்கவேண்டுமென்று வேதாகமம் போதிக்கிறதென்றும், ஞாயிற்றுக்கிழமை ஆசரிப்புக்கு வேதத்தில் ஆதாரமில்லையென்றும் எனக்குத் தெரியும். ஆனால் ஒன்றை மாத்திரம் நீ ஞாபகத்தில் வைத்துக்கொள்ளவேண்டும். எல்லா ஜனங்களும் ராஜாங்கத்தாரும் இதற்கு மாறாக நடக்கிறபடியால் நாம் ஓய்வுநாளை ஆசரிப்பது கூடாத காரியம். நான் ஓய்வுநாளைக் கைக்கொண்டு அதை மற்றவர்களுக்கும் போதிப்பேனானால் என்னை வேலையினின்று நீக்கிப் போடுவார்கள். அப்புறம் எனக்கு தொந்தரவு நேரிடும். பின்பு நான் என்ன செய்வேனென்று எனக்குத் தெரியாது என்றார்.

அற்புத.—சரி ஐயா, நான் வீட்டுக்குப் போக விடை கொடுக்கவேண்டும். நீங்கள் கொடுத்த புத்திமதிகளுக்காக வந்தனம். என்னுடைய சந்தேகங்கள் இன்னும் நிவிர்த்தியாகவில்லை. ஓய்வுநாளை ஆசரிக்கவேண்டியது நமது கடமை என்று தெரிந்தும் உத்தியோகம் போய்விடுமென்று பயந்து அதைக் கைக்கொள்ளாவிட்டால் நீங்கள் நடுத்தீர்வை நாளில் தேவனுக்கு முன்பாக என்ன சொல்லுவீர்களென்று நான் அதிசயப்படுகிறேன். சலாம் ஐயா, நான் போய் வருகிறேன் என்று எழுந்திருக்க,

ஐயர்.—(அற்புதனைதனை நோக்கி) சலாம் தம்பி, நீ இவ்வளவு நேரம் சம்பாஷித்ததற்காக சந்தோஷப்படுகிறேன். இன்னொரு சமயம் இவ்விடம் வரத்தவறவேண்டாம். நான் ஒரு காரியம் உன்னைக் கேட்டுக்கொள்ளுகிறேன். நமது சம்பாஷணையைப்பற்றி நமது மேல் விசாரணைக் குருவிடம் ஒன்றும் காட்டிக்கொள்ளவேண்டாம். நீ இதைப்பற்றி அவரிடம் சொன்னால் எனக்கு தொந்தரவு நேரிடும் என்று சொல்ல அற்புதனாதன் விடைபெற்றுத் தன் வழி போனான்.

உண்மை உரைப்போன்.

(இன்னும் வரும்)

சுகாதார விஷயங்கள்

O. SMITH, M. D. டாக்டர் சிமித்.

இப்பத்திரிகையை வாசிப்போருக்கு ஓர் விஞ்ஞாபனம்

(A REQUEST TO OUR READERS)

முந்தின பத்திரிகையில், சுகாதார விஷயங்களின்பேரில் பத்ததிகளை எழுதும் ஒரு ஆங்கில வைத்தியர் நியமிக்கப்பட்டிருப்பதாகக் கூறியிருக்கிறோம். அவ்வைத்தியர் இது முதல் தமது வேலையை ஆரம்பிப்பார்.

வைத்திய சாஸ்திரம் சுவிசேஷத்தின் வலது கையைப்போலிருக்கிறதென்றும் அதுவே சுவிசேஷத்தைப் பரவச்செய்யும் ஓர் கருவியென்றும் கர்த்தர் சொல்லியிருக்கிறார். இரக்ஷகர் இவ்வுலகில் வசித்த காலத்தில் வியாதியஸ்தரைச் சொஸ்தப்படுத்துவதிலும் விழுந்தவர்களைத் தாங்குவதிலும் தமது காலத்தை கழித்தார். நாம் இந்தப் பாவ உலகத்தில் இருக்கும் பரியந்தம் எப்பொழுதும் இந்த வேலை நடக்கவேண்டியதாயிருக்கிறது. காலம் செல்லச் செல்ல முடிவு சமீபிக்க சமீபிக்க, தேவனுடைய நியாயத்தீர்ப்புகள் பூமியின் குடிகளின் மேல் விசாரிக்கப்படும்போது இந்த வேலையும் அதிகமாய் நடைபெறவேண்டும்.

தேவனுடைய பிள்ளைகள் தங்களைச் சுற்றிலுமிருப்பவர்களுக்கு ஓர் வெளிச்சத்தைப் போல் பிரகாசிக்கவேண்டுமென்று தேவன் கட்டளையிட்டிருக்கிறார். அவர்கள் கர்த்தருடைய வருகை சமீபமாயிருக்கிறதென்றும் அதற்காக ஜனங்கள் தேவனுடைய கற்பனைகளைக் கைக்கொண்டு ஆயத்தப்படும்படி எச்சரிக்கிறது மாத்திரமல்லாமல் வியாதியஸ்தருக்கு உதவி செய்து அவர்கள் தங்கள் சரீரத்தை எப்படி பேணி பாதுகாக்கவேண்டுமென்று அவர்களுக்குப் போதிப்பது தேவனுடைய நோக்கம். இயேசு முதலாவதாக தமது சீஷர்களை உபதேசிக்கும்படி அனுப்பினபோது "வியாதியுள்ளவர்களைச் சொஸ்தமாக்குங்கள், குஷ்டரோகிகளைச் சுத்தம் பண்ணுங்கள், பிசாசுகளைத் துரத்துங்கள்" என்று சொல்லி அனுப்பினார். சுவிசேஷத்தைப் பிரசங்கிப்பதைவிட இம்மாதிரியான வேலை செய்வது அதிக முக்கியமென்பது இதனால் விளங்குகிறது. நமது சரீரம் தேவனுடைய ஆலயமாயிருக்கிறதென்றும் அதில் தேவ ஆவி வாசம்பண்ணும்படியாக அது வியாதியின்றி சொஸ்தமான நிலைமையிலிருக்கவேண்டுமென்றும் மனிதர்களுக்குப் போதிக்கப்படவேண்டும். இந்துக்கள் தங்கள் தெய்வங்களை வைத்திருக்கும் கோவிலையும், மகமதியர் தங்கள் கோரியையும் எப்படி மதித்து வருகிறார்களோ அதுபோல நாமும் மதிக்கவேண்டும்.

இதை வாசிக்கிற நீங்கள் யாவரும் எனக்கு அறிமுகமானவர்களல்ல. உங்கள் ஒவ்வொருவருக்கும் இன்னின்னது தேவையென்று அறிந்து நான் உதவி செய்யமுடியாது. நாம் எல்லாரும் ஒன்று சேர்ந்து ஒருவரை ஒருவர் தாங்கி தேவனுடைய வேலை வளர்ந்து விர்த்திப்பதில் உதவி செய்யவேண்டியவர்களாயிருக்கிறோம். "உன் ஆத்துமா வாழ்கிறது போல நீ எல்லாவற்றிலும் வாழ்ந்து சுகமாயிருக்கும்படி வேண்டுகிறேன்" என்று தேவன் நம் ஒவ்வொருவருக்கும் விண்ணப்பம் பண்ணுகிறார்.

நாம் ஒருவரை ஒருவர் தாங்கி ஒருவருக்கொருவர் உதவி செய்ய ஒரே ஒரு வழி உண்டு. வைத்திய விஷயமான கேள்வியாவது அல்லது இன்ன வியாதிக்கு என்ன செய்வதென்று வியாதியின் நிலைமையை அதிக விபரமாய் எழுதியாவது தெரிவித்தால் அதற்கு தக்க விடையை நாங்கள் இப்பத்திரிகையின் "கேள்விகளுக்கு விடை"யில் தெரிவிப்போம்.

இவ்விதமாய் நீங்கள் சித்தியடைந்தால் அதை எங்களுக்கு விபரமாய் தெரியப்படுத்தினால் அது பிறருக்கு பிரயோஜனமாயிருக்கும்படி அதை நமது பத்திரிகையில் வெளியிடலாம். இவ்விதமாய் நாம் நமது பத்திரிகையின் சுகாதார விஷயங்களை ஜொலிக்கச் செய்வோம்.

இப்படிக்கு,
ஓ. சிமித், M. D.
Dr. O. SMITH,
5, Coles Road, Bangalore.

கண் நோய்

(SORE EYES)

(பப்ளிஸிடி பீரோவிலிருந்து)

கண்களில் மேக நீர் (cataract) விழுந்திருப்பதை யெடுத்துக்கொள்ளுவதற்கு, நன்றாய்ப் பழக்கப்பட்ட, தேர்ச்சியுடைய வைத்தியனைத்தவிர வேறு யாரையாவது. கண்ணைக் குத்த செய்தால் ஆபத்து நேரிடுமென்று ஜனங்களுக்கு எச்சரிக்கை செய்து ஒரு துண்டு பத்திரிகை சமீபத்தில் பிரசுரிக்கப்பட்டது. கண் ரண வைத்தியம் செய்வதில் பழக்கமுள்ள வைத்தியர்கள் இல்லாத ஜில்லாக்களில், அவ்விதமான கண் வைத்தியம் செய்துக்கொள்ளவேண்டிய ஏழை நோயாளிகளை, சர்க்கார் செலவில் சென்னையிலுள்ள கவர்ன்மெண்டு கண்ணாஸ்பத்திரிக்கு அனுப்பும்படிக்கு, டிஸ்ட்ரிக்ட் மெடிக்கல் ஆபீஸர்களுக்கும், சிவில் சர்ஜன்களுக்கும் அதிகாரம் கொடுக்கப்பட்டிருக்கிறது. இதினால், சாதுரியமாய் சிகிச்சை செய்யவேண்டிய எல்லா கண் பார்வை சம்பந்தமான வியாதியஸ்தர்கள் எல்லாருக்கும் இவ்வைத்தியம் கிடைக்கும் என்று நம்புகிறோம்.

இந்த நோக்கத்தோடே விசாகப்பட்டணம், மதுரை, தஞ்சாவூர் முதலிய இடங்களிலும் கண் வைத்தியத்திற்கென்றே பிரத்தியேகமான வைத்திய சாலைகள் ஏற்படுத்தப்பட்டிருக்கின்றன.

கிறிஸ்துவின் இராட்சியம், பரதீசு திரும்ப எடுப்பிக்கப்படல்

(KINGDOM OF CHRIST, PARADISE RESTORED)

1. தேவன் உலகத்தை என்ன நோக்கத்திற்காக உண்டாக்கினார்? ஏசா. 45: 18.
2. பொல்லாதவர்கள் உலகத்தைச் சுதந்தரிப்பார்களென்று தேவன் சொல்லியிருக்கிறார்? நீதி. 10: 30.
3. யாருக்குத் தேவன் இந்த உலகத்தைக் கொடுத்தார்? சங். 115: 16.
4. யாருக்கு இந்த உலகத்தைத் தருவதாக முக்கியமாய் வாக்களித்தார்? ஆதி. 13: 15.
5. இந்த வாக்குத்தத்தம் முழு உலகத்தையும் குறிக்கிறதா? ரோம. 4: 13.

6. தேவன் அந்த வாக்குத்தத்தத்தை அவன் சாகிறதற்கு முன்னே நிறைவேற்றினாரா? அப். 7: 2-5.

7. அவனுடைய பிள்ளைகள் வாக்குத்தத்தத்தின் நிறைவேறுதலை அடைந்தார்களா? எபி. 11: 13.

8. ஆபிரகாம் எதை எதிர்ப்பார்த்துக்கொண்டிருந்தான்? எபி. 11: 10.

9. ஆபிரகாமுக்குச் சொல்லப்பட்ட வாக்குத்தத்தத்திற்கு இயேசு வித்தாயிருந்தாரா? கலா. 3: 16.

10. ஆபிரகாமின் பிள்ளைகள் யார்? கலா. 3: 29.

11. அப்படியானால் எல்லா கிறிஸ்தவர்களும் ஆபிரகாமுக்குக்குக் கொடுக்கப்பட்ட வாக்குத்தத்தத்தை சுதந்தரிக்கவேண்டுமோ?

12. வாக்குத்தத்தம் பெற்றவர்கள் அதை அடையாமல் மரித்துப்போனால் தேவன் பிறகு எப்படி அந்த வாக்குத்தத்தத்தை நிறைவேற்றுவார்? எசே. 37: 12-14.

13. தேவன் தம்முடைய ஜனங்களுக்கு இந்தப் பூலோகத்தைக் கொடுக்குமுன் என்ன செய்வார்? எசா. 65: 17.

14. முன்னிருந்த கிறிஸ்தவர்கள் எதற்காக எதிர்ப்பார்த்திருந்தார்கள்? 2 பேது. 3: 13.

15. நாம் அப்படிப்பட்டவைகளுக்காக எதிர்ப்பாக்கும்போது எப்படிப்பட்டவர்களாயிருக்கவேண்டும்? வச. 11, 14.

16. யோவானுக்குப் புதிய வானமும் புதிய பூமியும் காட்டப்பட்டதா? வெளி. 21: 1.

17. எசாயா புதிய பூமியின் அழகை எப்படி விஸ்தரிக்கிறார்? எசாயா 35-ம் அதிகாரம்.

18. யோவான் புதிய வானத்தையும் புதிய பூமியையும் தவிர வேறே எதையும் பார்த்தான். வெளி. 21: 10.

19. இதுதானா கிறிஸ்துவின் ராஜ்யத்திற்குத் தலை நகரம்? வெளி. 22: 3.

20. இந்நகரத்தின் அளவென்ன? வெளி. 21: 15, 16.

அதன் சுற்றளவு 1500 மைல். அதாவது ஒவ்வொரு பக்கத்திலும் 375 மைல் வேதாகமத்தில் நகரங்களை அளந்தமாதிரி இது தான். உதாரணமாக பாபிலேனின் அளவு 60 மைல். உண்மையாகவே அதற்கு ஒவ்வொரு பக்கமும் 15 மைல் அளவு தான்.

21. அந்த நகரத்தின் சுவர்களையும் வாசல்களையும்பற்றி என்ன விஸ்தரிப்பு கொடுக்கப்பட்டிருக்கிறது? வச. 10-14.

22. சுவர் எதினால் செய்யப்பட்டிருந்தது? வச. 18-20.

23. வாசல்கள் எதினால் செய்யப்பட்டிருந்தது? வச. 23.

24. அங்கே சூரியனும் சந்திரனும் இருந்ததா இல்லையா?

25. அந்த நகரத்தின் வெளிச்சத்தைப்பற்றி என்ன சொல்லப்பட்டிருக்கிறது? வச. 23.

26. புதிய பூமியில் சூரியனும் சந்திரனு முண்டா? எசா. 30: 26.

27. தேவன் புதிய பூமியை சுதந்தரிக்கிறவர்களுக்கு என்ன செய்வார்? வெளி. 21: 4.

28. புதிய பூமியில் தொழுதுகொள்ளுகிறதற்கு சரியான காலங்களுண்டா? எசா. 66: 22, 23.

29. புதிய பூமியில் எல்லாரும் பங்கு பெருவார்களா? வெளி. 21: 7, 27; மத். 5: 5.

30. இயேசு தாமே யார் அந்த நகரத்தில் பிரவேசிப்பார்களென்று சொல்லி யிருக்கிறார்? வெளி. 22: 12-14.

தே. ஆரோன்.

சமாசாரக் குறிப்புகள்

(NEWS AND NOTES)

அமெரிக்காவில் உடை, உணவுப்பொருட்களின் விலை குறைந்துவிட்டது.

அமெரிக்காவில் 131 வயதுள்ள ஒரு மனிதன் இருக்கிறான். அவன் பெண்ஜாதிக்கு 35 வயது. அவன் கடைசி குமாரனுக்கு 5 வயது.

உலகத்தின் மற்றெந்த தேசங்களைவிட அமெரிக்காவில் அதிக மண்ணெண்ணெய் செய்யப்படுகிறது. எல்லா தேசங்களைவிட இதில் மண்ணெண்ணெய் அதிகமாக உபயோகிக்கப்படுகிறது.

அமெரிக்காவில் சராசரி மூன்று குடும்பத்திற்கு ஒரு மோட்டார் வண்டி இருப்பதாகக் கணக்கிடப்பட்டிருக்கிறது. 1909-ம் வருஷத்தில் இருந்த மோடார் வண்டிகளைப்பார்க்கிலும் இப்போது அமெரிக்காவில் ஒன்பது மடங்கு அதிகமாயிருக்கிறது.

அமெரிக்க ஐக்கிய மாகாணத்துக் கருகாமையிலுள்ள மெக்ஸிகோ (Mexico) என்னும் தேசத்தில் கலகத்தை அடக்கும்படியாக 30,000 அமெரிக்க சைனியங்களும் சில யுத்தக் கப்பல்களும் அனுப்பப்பட்டிருக்கிறது.

மெக்ஸிகோவில் சுதேச கலகம் நடக்கிறது. அதின் தேசாதிபதி கொலை யுண்ணப்பட்டார். தற்காலத்தில் ராஜாக்களின் கிரீடங்களும் சிங்காசனங்களும் ஆபத்தான நிலைமையிலிருக்கிறது.

கலகங்கள் இப்பொழுது சர்வ சாமானியமாகிவிட்டது. அமெரிக்காவில் ஷிகாகோ (Chicago) என்னும் பெரிய பட்டணத்தில் வாடகை வீடுகளில் வாசம் செய்யும் ஜனங்கள் ஒன்றுசேர்ந்து வாடகை உயர்த்தப்பட்டதால் உயர்ந்த வாடகை கொடுக்கமாட்டோமென்றும் வீட்டை காலி செய்யவும் மாட்டோமென்று கட்டுப்பாடு பண்ணியிருக்கிறார்கள்.

ஐயர்லாந்தில் இன்னும் கலகம் நடந்து வருகிறது. அவர்கள் சுயாதீனம் அடையுமட்டுக் சண்டை செய்வதாக சபதம் கூறியிருக்கிறார்கள். அநேக இடங்களில் அவர்கள் ராஜாங்கத்தாருக்கு விரோதமாய் கலகம் செய்கிறார்கள்.

இக்கலகத்திற்குக் காரணராயிருந்த அநேக பிரபுக்களை ஜெயில் அடைத்தபோது அவர்களுக்கு சுயாதீனம் கொடுக்கப்படுமட்டும் ஒன்றும் சாப்பிடமாட்டோமென்று மறுத்துவிட்டார்கள். சிலநாட்களுக்குமுன் அவர்களில் 69 பெயர் ஒன்றும் சாப்பிடாமல் மரணத்தருவாயிலிருந்ததினால் அவர்கள் விடுதலையாக்கப்பட்டார்கள். இது ஒரு புது மாதிரியான கலகம்.

ராஜாவும் ராஜ குடும்பத்தாருமே தங்களுடைய துன்பங்களுக்கெல்லாம் காரணர்களென்று உருஷியர் எண்ணி அரசன் இல்லாவிட்டால் துன்பம் நேரிடாதென்று ராஜாவையும் அவர் குடும்ப முழுவதையும் கொன்றுபோட்டார்கள். அவர்களுடைய துன்பம் குறைவதற்குப்பதிலாக அது அதிகரிக்கிறது. இந்தியர்களாகிய நாம் இதிலிருந்து என்ன கற்றுக் கொள்ளலாம்.

நிகழ்கால சத்தியம்

வேத சன்மார்க்க சுகாதார விஷயங்களில் தற்கால அறிவுக்கொத்தபடி மனிதர் அபி விருத்தியடைவதற்கென்று பிரசுரமாகும் ஓர் பத்திரிகை.

மதராஸ் ஆகஸ்டுமீ, 1920.

இப்பத்திரிகை, பெங்களூரிலிருக்கும், எஸ். டி. ஏ. பப்ளிஷிங்கவுஸ்காக, பட்டணத்தில் வெப்பேரி என்னுமிடத்திலுள்ள அல்பீனியன் அச்சாபீஸில் அச்சடிக்கப் பட்டு வருகிறது.

பத்திராதிபர் பாஸ்றர், ஜி. ஜி. லோனீ.
உதவி ,, ,, ஈ. டி. தாமஸ்.
மானேஜர், எல். சி. ஷெப்பர்டு, பி. ஏ.

	ரூ.	அ.	ப.
தனிப்பிரதி ஒன்றுக்கு ...	0	1	6
வருஷ சந்தா, தபாற் கூலி உள்பட ...	1	0	0
சிங்கப்பூர் பினங்கு முதலிய வெளி ஊர்களுக்கு தனிப் பிரதி ஒன்றுக்கு ...	0	2	0
வருஷசந்தா தபாற்கூலி உள்பட ...	1	4	0

நோட்டீஸ்.

இதனால் சகலருக்கும் தெரிவிப்பது யாதெனில் நிகழ்கால சத்தியம் என்னும் பத்திரிகை இது முதல் ஓர் மாதாந்தரப் பத்திரிகையாக வெளிப்படும். இனிவரும் பத்திரிகைகளில் அநேக இனிய விஷயங்கள் வெளியிடப்படும். உங்கள் சந்தா முடிவு பெறுமானல் உடனே புதுப்பித்துக் கொள்ளுங்கள். ஒரு வருஷத்திற்கு தபாற்கூலி உட்பட விலை ரூ. 1. இந்தப் பத்திரிகையை உங்கள் நண்பர்களுக்குக் காட்ட மறக்க வேண்டாம்.

பத்திராதிபர்.

பத்திராதிப நோட்டீஸ்.

இது முதல் மிஸ்றர் எல். சி. ஷெப்பர்டு பி. ஏ. என்பவர், பெங்களூர் எஸ். டி. ஏ. பப்ளிஷிங்கவுஸ்காக மானேஜராயிருப்பார். பத்திரிகைகள் புஸ்தகங்கள் முதலானவை வேண்டுவோர், எஸ். டி. ஏ. பப்ளிஷிங் கவுஸ், 3 வீலர் ரோடு, பெங்களூர், என்று எழுதிப் பெற்றுக்கொள்ளலாம். புஸ்தகங்களின் கிரயத்தைப்பற்றியாவது, பத்திரிகை வரவில்லையென்று முறையிடவேண்டுமானல் மானேஜராகிய மிஸ்றர் ஷெப்பர்டுக்கு எழுதவும். பத்திரிகையில் அச்சிட்டிருப்பதைப்பற்றிய கேள்வி ஏதாவது இருக்குமானல் மாத்திரம் பத்திராதிபருக்கு எழுதலாம்.

இப்பொழுது நிகழ்கால சத்தியம் வருஷத்திற்கு நான்கு முறை அல்ல. மாதம் ஒரு முறை பிரசுரிக்கப்படும். பழைய விலைப்படி சந்தாதாராய்ச் சேர்ந்தவர்களுக்கு ஒரு மூன்று மாதப் பத்திரிகைக்குப் பதிலாக ஒரு மாதாந்தரப் பத்திரிகை அனுப்புவோம். அவர்களுக்குச் சேரவேண்டிய பத்திரிகை சேர்ந்தபின் சந்தா முடிவு பெறும். அவர்கள் உடனே தங்கள் சந்தாவை புதுப்பித்துக்கொள்ளும்படியாகக் கேட்டுக் கொள்ளுகிறோம்.

இதில் ஒவ்வொரு முறையும் சுகாதார விஷயங்களைப்பற்றி எழுதும்படி ஒரு ஆங்கிலேய வைத்தியரை நியமித்திருக்கிறோம். இதை யாவரும் விருப்பமாய் வாசிப்பார்களென்று நம்புகிறோம்.

கடைசி பக்கத்திலிருக்கும் விளம்பரத்தைக் கவனியுங்கள். அந்தப் புஸ்தகங்களில் ஏதாவது உங்களுக்கு அவசியமா? அப்படியானல் மானேஜருக்கு ஆடர் பண்ணுங்கள்.

இத்தமிழ் சஞ்சிகையானது தமிழ் நாட்டாருக்கு நன்மை பயக்கும்படியாகப் பத்திராதிபரும் மானேஜரும் பிரயாசைப் படுகிறார்கள். கிறிஸ்தவர்களும் மகமதியருக்கும் ஹிந்துக்களுக்கும் இன்பத்தைக் கொடுக்கக்கூடிய விஷயங்கள் இப்பத்திரிகையில் மாதாமாதம் வெளியாகும். வேறெந்தத் தமிழ் சஞ்சிகையிலும் இவ்வித அரிய விஷயங்கள் வெளியாகாது. இது பரியந்தம் நீங்கள் சந்தாதாராயில்லாவிட்டால் உடனே சந்தாதாராகச் சேரலாம்.

நிகழ்கால சத்தியம்.

Vol. IX. மதராஸ்:—செப்டம்பர்மீ, 1920. No. 5.

OFFICE OF ... 14 SEP 1920

பத்திராதிப வியார்த்தி.

அரசாங்க சீர்திருத்தம்
(GOVERNMENT REFORM SCHEME)

சென்னை ராஜதானியிலுள்ள ஜனங்கள் அநேக மாதங்களாக அரசாங்க விஷயத்தில் சில சுயாதீனங்கள் தரவேண்டுமென்று வேண்டிக்கொண்டார்கள். சட்ட நிருபண சபையில் இந்தியர்களும் ஓர் பாகம் வகிக்கவேண்டுமென்றும் அந்த சட்டங்களைத் தாங்களும் நிறைவேற்றவேண்டுமென்றும் விரும்பினர்கள். ஜனங்கள் கேட்ட யாவற்றையும் ராஜாங்கத்தார் அளிக்காவிட்டாலும், அவர்களுடைய வேண்டுகோளை மதித்து அவர்கள் கேட்டுக்கொண்டதில் சிலவற்றை அளித்திருக்கிறார்கள். தங்களுக்கு அளிக்கப்பட்ட சிலாக்கியங்களைச் சரியானபடி உபயோகித்தால் பிற்காலத்தில் இதைவிட மேலான சுயாதீனம் அளிக்கப்படும் என்பதற்கு ஐயமில்லை.

இந்த அரசாங்க சீர்திருத்தத்தை ஜனங்கள் அறிய ஆசைப்படுவார்களென்று பின் வருபவைகளை எடுத்துரைக்கிறோம்.

"மாட்சிமைதங்கிய நமது சக்கிரவர்த்தியார் இந்தியாவின் அரசாட்சி சம்பந்தமாக சில புதிய ஏற்பாடுகளை அங்கீகரித்தாரென்பதும், அப்புதிய ஏற்பாடுகள் இன்னும் சில மாதங்களுக்குள் நடவடிக்கைக்கு வருமென்பதும் யாவருக்கும் இப்பொழுது தெரிந்த விஷயம்.

இப்புதிய ஏற்பாட்டுக்கும் பழைய ஏற்பாட்டுக்கும் உள்ள வித்தியாசம் என்ன? புதிதாக எவ்விதமான அதிகாரங்களும் உரிமைகளும் சென்னை மாகாணவாசிகளுக்கு அளிக்கப்பட்டிருக்கின்றன?

தற்கால ஏற்பாட்டின்படி கனம்பொருந்திய கவர்னரும் அவரது நிர்வாக சபையும் இராஜதானியின் நிர்வாகங்களை நடத்தி வருகிறார்கள். இவ்வாளுகை இந்தியா கவர்ன்மெண்டாருக்குத் திருப்தி யுண்டாகுமாறு சென்னை கவர்னர் நன்றாக நடத்தவேண்டும்.

மேலும், தற்கால ஏற்பாட்டின்படி சட்டநிருபண சபை, உத்தியோக முறையில் அங்கத்தினராக இருப்பவர்களையும் சேர்த்து மொத்தம் 46 அங்கத்தினர்களோடு கூடியது ஆகும். அவர்களில்:—

உத்தியோகஸ்தர்கள்	12
கவர்னரால் தெரிந்தெடுக்கப்பட்ட உத்தியோகஸ்தரல்லாதவர்கள் ...	13
குடிகளால் தெரிந்தெடுக்கப்பட்டவர்கள்	21
ஆகமொத்தம் ...	46

இவ்வாறு குடிகளால் தெரிந்தெடுக்கப்படும் 21 அங்கத்தினரில் இருவர் மகம்மதியராலும், மற்றவர்கள் ஜமீன்தார்களாலும், பெரிய மிராசுதாரர்களாலும், வியாபாரிகளாலும், தோட்டக்காரர்கள் (Planters) ஆலும், ஜில்லா தாலுக்கா போர்டுகளின் மெம்பர்களாலும், முனிஸிபல் கவுன்ஸிலர்களாலும், சென்னை சர்வகலா சபையாராலும், சென்னை கார்பொரேஷன் கவுன்ஸிலர்களாலும் தெரிந்தெடுக்கப்படுகிறார்கள்.

இந்த சபைக்கு அனேக அதிகாரங்கள் உண்டு. இதன் அனுமதியின்றி யாதொரு புதிய சட்டமும் ஏற்படுத்த முடியாது. இதின் அங்கத்தினர் கேள்விகள் மூலமாய் துரைத்தனத்தின் நோக்கங்களை அறிந்துகொள்ளலாம். அல்லியும் இவர்கள் பொது ஜனங்கள் விருப்பங்களை சபையில் பேசி அவற்றை தீர்மானங்களாக சபையினர் அங்கீகரிக்குமாறு செய்து ஜனங்களின் அபிப்பிராயத்தை துரைத்தனத்தாருக்குத் தெரிவிக்கவும் கூடும். ஆனால் இப்புதிய ஏற்பாடு செய்ய தீர்மானித்ததற்கு இரண்டு காரணங்கள் உள. முதலாவது, துரைத்தனத்தார் இச்சட்ட சபையின் தீர்மானங்களின்படியே நடக்கவேண்டுமென்ற கட்டாயம் இல்லை. இந்தியா துரைத்தனத்தாரின் நோக்கமும், இச்சட்ட நிரூபண சபையாரின் நோக்கமும் எதாவதொரு விஷயத்தில் ஒத்திராவிட்டால், மாகாண துரைத்தனத்தார் இந்தியா துரைத்தனத்தாரின் சொற்படியே நடக்கக் கடமைப்பட்டிருக்கிறார்கள். இரண்டாவது, இச்சட்ட சபையின் அங்கத்தினரில் பாதிக்குமேல் கவர்ன்மெண்டு உத்தியோகஸ்தர்களாகவும் அல்லது கவர்ன்மெண்டாரால் நியமிக்கப்பட்டவர்களாகவும் இருக்கிறார்கள். அன்றியும் மற்றவர்களோ, 7,000 செல்வாக்குள்ள பணக்காரக் குடிகளால் மாத்திரம் தெரிந்தெடுக்கப்பட்டவர்கள். ஆதலால் குடிகளால் தேர்ந்தெடுக்கப்பட்ட மெம்பர்களை அதிகப்படுத்தவேண்டுமென்றும் எலக்ஷனில் இன்னும் அநேக ஜனங்களுக்கு செல்வாக்கு இருக்கவேண்டுமென்றும் எல்லோரும் நிர்பந்தித்திருக்கிறார்கள்.

புதிய ஏற்பாட்டின் முக்கிய அம்சங்கள் பின்வருமாறு :—

முதலாவது—சட்ட சபையின் அங்கத்தினரில் பெரும்பான்மையோர் குடிகளால் தேர்ந்தெடுக்கப்படுவார்கள். புதச்சபையின் அங்கத்தினர் 127 பேர்கள். இவர்களில் குடிகளால் தேர்ந்தெடுக்கப்படுபவர்கள் 98. அன்றியும் முன்போல பணக்காரர்களும் பட்டதாரிகள் மட்டும்தான் அங்கத்தினர்களைத் தேர்ந்தெடுக்கும் அதிகாரம் பெற்றிருக்கவில்லை. அநேக சிறு குடிகளும் சொற்ப சொத்துள்ள ஏழைகளும்கூட 'வோட்' கொடுக்கும் அதிகாரம் பெறுவார்கள். ஆகவே புதுச்சபையின் அங்கத்தினர் முன்னிருந்ததை காட்டிலும் அதிகமான இவ்விராஜதானியின் ஜனங்களின் மனோபாவத்தைச் சட்ட சபையில் எடுத்துப் பேசக்கூடியவர்கள் ஆவர்.

இரண்டாவது—முக்கிய அம்சம் என்னவென்றால், "இனி சில இலாகா ஸம்மந்தப்பட்டவரையில் இந்தியா கவர்ன்மெண்டாருடைய அபிப்பிராயப்படியேதான் மாகாண துரைத்தனத்தார் நடக்கவேண்டுமென்பது இல்லாது, இனி ஏற்படும் சட்ட சபைக்கு இஷ்டப்படி நடத்தவேண்டுமென்பதேயாம். இவ்விதம் விடப்பட்ட இலாகாக்களுக்கு 'மாற்றப்பட்ட இலாகாக்கள்' என்று பெயர். அவை கல்வி, வியவசாயம், ஜில்லா தாலுக்கா போர்டுகள், முனிஸிபாலிடிபோன்ற மற்றும் சில முக்கியமானவைகள். இனிமேல் இவ்விலாகாக்கள் ஸம்பந்தப்பட்டவரையில் மாகாண துரைத்தனத்தார், சட்ட சபையைத் திருப்தி செய்யவேண்டுமே யல்லாது இந்தியா கவர்ன்மெண்டை திருப்தி செய்யவேண்டியதில்லை.

இதற்காக, இனிமேல், அடியில் குறித்த ஏற்பாடுகள் செய்யப்படும். கனம்பொருந்திய கவர்னர் புதுச்சபையில் அங்கத்தினரிலிருந்து இரண்டு மூன்று மந்திரிகளை நியமிப்பார். இப்பொழுது கவர்னரும் நிர்வாக சபையிலுள்ள மெம்பர்களைப்போல மந்திரிகள் கல்வி, வியவசாயம் முதலிய பிரித்துக்கொடுத்த இலாகாக்களின் வேலைகளை நடத்தி வருவார்கள். இவ்விலாகாக்களின் வேலைகளைச் சபையோர்களுக்குத் திருப்தியாகவும் விவேகத்தோடும் மந்திரிகள் நடத்திவரவேண்டும். அவ்விதம் அவர்கள் நடந்துகொள்ளாவிட்டால், அவர்கள் இலாகாச் செலவுக்குத் தேவையான பணத்தைக் கொடுக்க இச்சபை மறுத்துவிடலாம்.

இப்புதிய ஏற்பாட்டினால் மேலே எடுத்துக்காட்டிய சுதந்தரங்களைத்தவிர இன்னும் அநேக விஷயங்களில் புதிய அதிகாரங்களும் விருத்தி செய்யத்தக்க சமயங்களும் இம்மாகாண வாசிகளுக்கு வாய்க்கும். ஆனால் முக்கியமானவை மேற்கூறிய இரண்டு அம்சங்களேயாம். மந்திரிகளின் ஆதீனத்தில் எந்தெந்த இலாகாக்கள் விடப்படும் என்பதையும், யார் யார் 'வோட்' கொடுக்கலாம் என்பதையும், இன்னும் மற்ற விவரங்களையும் மற்றொரு விளம்பரத்தில் வெளியிடுவோம். ஆனால் இப்பொழுது அடியிற்கண்ட ஒரு விஷயத்தை மாத்திரம் ஞாபகத்தில் வைத்துக்கொள்வது நலம். நட்ப்பு விளம்பரத்தை வாசிப்போரில் ஏறக்குறைய எல்லோரும் புதுச்சட்ட சபையின் அங்கத்தினர்களைத் தெரிந்து எடுக்கும் நிமித்தம் 'வோட்' கொடுக்க அருகர்களாகவேயிருப்பீர்கள். நீங்கள் தெரிந்தெடுக்கும் அங்கத்தினரிலிருந்தேதான், கனம்பொருந்திய கவர்னர் தன் மந்திரிகளை நியமிப்பார். இப்புதிய மந்திரிகள் வியவசாயம், கல்வி, ஜில்லா தாலூகா போர்டுகள், பஞ்சாயத்துகள், முனிஸிபாலிடி முதலிய விஷயங்களையும் மற்றும் இதர முக்கியமான விஷயங்களையும் கவனித்து நடத்தவேண்டியவர்கள்.

அவர்கள் வியவசாயத்தை அபிவிருத்திசெய்ய என்ன முயற்சிகள் செய்யவேண்டும், புதிய பள்ளிக்கூடங்கள் ஏற்படுத்த முடியுமா, பெற்றோர்கள் பிள்ளைகளைப் பள்ளிக்கூடத்திற்கு கட்டாயம் அனுப்பவேண்டியது அவசியமா, பள்ளிக்கூடத்தில் என்ன என்ன பாடங்கள் சொல்லிக்கொடுக்கவேண்டும், ஜில்லா போர்டுகள், கிராமங்களில் புதிய பாதைகளைப் போடவேண்டுமா, அதற்காக புதிய வரி வசூல் செய்யவேண்டுமா என்பவைகளை தீர்மானிக்க வேண்டியவர்கள் ஆவார்கள். மேற்சொல்லிய விஷயங்களையும், இன்னும் இதுபோன்ற முக்கியமான இதர விஷயங்களையும் இம்மந்திரிகளே யோசித்து சட்ட சபையின் மற்ற அங்கத்தினருடன் கலந்துபேசி முடிவு செய்து அவர்கள் சம்மதத்தையும் பெறவேண்டும். மந்திரிகள் மதியோடு தீர்மானிக்காவிட்டாலும் ஸரி அல்லது அவர்கள் சரியாகத் தீர்மானித்ததை சட்டசபையின் இதர அங்கத்தினர்கள் ஒத்துக்கொள்ளாவிட்டாலும் ஸரி இராஜாங்க காரியமும் கெட்டு, ஜனங்களும் கஷ்டப்படுவார்கள். ஆகையால் சட்ட சபையின் அங்கத்தினரைத் தெரிந்தெடுக்க உங்களுக்கு 'வோட்' உரிமையிருந்தால், எவன் ஒருவன் தானும் விவேகத்தோடு இம்மாதிரி விஷயங்களில் முடிவுக்கு வரக்கூடியும் மந்திரிகளோடுகூடி உழைப்பவனோ அவனை நீங்கள் பொறுக்கி யெடுக்கவேண்டும்.

மற்றொரு விஷயத்தையும் நாம் ஞாபகத்தில் வைத்துக்கொள்ளவேண்டும். அதாவது நமது மாட்சிமைதங்கிய சக்ரவர்த்தியார் இப்புதிய ஏற்பாட்டின் மூலமாக இந்தியா தேசத்து ஜனங்களுக்கு, புதிய அதிகாரங்களையும் உரிமைகளையும் அளித்தபோது நாம் இப்பொழுது கொடுத்த புதிய அதிகாரத்தைச் சரிவரச் செலுத்தி பொறுப்பைச் சரிவர வகித்து வரும் பக்ஷத்தில் மேன்மேலும் அதிக அதிகாரங்களையும் உரிமைகளையும் நமக்கு வழங்கப் போவதாக வாக்குதத்தம் செய்திருக்கிறார் என்பதே."

இன்னொரு சமயத்திலே அரசாங்க சீர்திருத்தம் என்னும் இந்த சங்கதியைக்குறித்து இன்னும் எழுதுவோம்.

சென்னை ராஜதானியின் கவர்னராகிய லார்ட் வில்லிங்டன் என்பவர் சொன்ன விஷயங்கள்

(WHAT LORD WILLINGDON OF MADRAS SAYS)

"யுத்த அப்பியாசத்தில் முற்றிலும் தேர்ச்சி யடைந்து, பள்ளிக்கூடத்தைவிட்டுப் பிரியும் தருணத்திலிருந்த சில யுத்த வீரர்களுக்கு வில்லிங்டன் பிரபு பின் வருமாறு சொல்லுகிறார்.

உலகத்திற்கு சமாதானத்தை வருத்துவிக்கும் ராஜ்ய உடன்படிக்கையானது சீக்கிரத்தில் இவ்வுலகத்திற்கு சமாதானத்தைக் கொடுக்கும் என்று நாம் எல்லோரும் கேள்விப்பட்டிருக்கிறோம். அப்படியிருக்க யுத்த தளவாடங்களின் உதவியை நாம் ஏன் ஒழித்துவிடக் கூடாது? ஆனால் தற்காலத்தில் நடக்கும் வெளித்தோற்றமான விஷயங்களின்மட்டில் எனக்குத் தோன்றுகிறது என்னவென்றால், யுத்த தளவாடங்கள் அவசியமில்லாத இக்காலத்திலுங்கூட, இதர தேசங்கள் யுத்தத்துக்கென்று பெருந்தொகையான பணத்தை இதில் செலவிடுதலானது, எனக்கு மிகவும் ஆச்சரியத்தைக் கொடுக்கிறது. இவ்விதமான சமாதானம் பூமியில் அநேக வருஷம் நீடித்திருக்கும் என்பதை நம்புவதற்கு இடமில்லை. ஆகையினால் இதின் நிமித்தமாய் எனக்குத் தோன்றுகிறது என்னவென்றால், ஆங்கிலேய அரசாட்சியின் மேலுள்ள உத்திரவாதமானது நமக்கு மிகவும் அதிகமாயிருக்கிறது. மேலும் அரசாங்கத்தை முன்னிலும் அதிகமாய் இக்காலங்களில் காப்பாற்றவேண்டும்."

ராட்சியங்களுக்குள்ள சமாதான உடன்படிக்கையானது, அதிக வருஷங்களாக நில்லாது என்று கவர்னர் துரை சொன்னது மிகவும் சரியே. மனுஷ ஜாதிகள் எண்ணுகிறபடி இது ஒருபோதும் நடைபெறாது. ஜலப்பிரளயம் உண்டானதின் பின்பு—தேவன் ஜாதிகளை பிரித்து அவர்கள் ஒரே ஜனமாயிருந்து ஒற்றுமையுடன் வாழாதிருக்க அவர்கள் பாஷையைத் தாறுமாறாக்கினார். ஆனால் மனுஷரில் ஒருவரும் தேவன் பிரித்ததை மறுபடியும் ஒன்றாய் இணைக்கக் கூடாதிருந்தது. தேவன் ஜாதிகளை பிரித்திருக்கிறார் என்பது உண்மையாயினும், மனுக்குலத்தார் தாங்கள் மறுபடியும் ஒன்றாய் சேர்க்கப்பட அவர்களுக்கு மனதில்லை. பகை, காய்மகாரம், குரோதம், பெருமை ஆகிய இவைகள், அவர்கள் ஒற்றுமையுடன் சமாதானமாயிருக்கும்படி அவர்களுக்கு இடந்தருகிறதில்லை. மனுஷ இருதயத்தில் அக்கிரமமும் பாவமும் எவ்வளவு காலம் குடிகொண்டிருக்குமோ அவ்வளவு காலம், யுத்தமும் குழப்பமும் இருக்கும். மனுஷர்கள் நாளுக்குநாள் நல்லவர்கள் ஆகிறதற்குப் பதிலாக அவர்கள் மிகவும் அதிகமாய் கெட்டுப்போகிறார்கள்.

"பொல்லாதவர்களும் எத்தர்களுமானவர்கள், மோசம் போக்குகிறவர்களாயும், மோசம் போகிறவர்களாயுமிருந்து மேன்மேலும் கேடுள்ளவர்களாவார்கள்." 2 தீமோ. 3: 13;

ஆங்கில அரசாட்சியின் உரிமையானது முன்னேயைவிட இப்போது அதிகரித்திருக்கிறதென்றும், அரசாங்கமானது தன்னைக் காப்பாற்றிக்கொள்வதற்கு மிகவும் பாத்தியப்பட்டிருக்கிறதென்றும் வில்லிங்டன் பிரபு சொல்லுகிறார். ஏனெனில் அவருக்கும் இன்னும் மற்ற பெரிய மனுஷர்களுக்கும் தெரிந்திருக்கிறபடியே யுத்தமும், கலகமும், நம்மை விட்டு இன்னும் விலக வில்லை. இதைவிட பெரியதான யுத்தமும் கலகமும் இனி சம்பவிக்கப்போகிறதென்று அவர்கள் நன்றாய் அறிந்திருக்கிறார்கள். இதுவும் கிறிஸ்து மார்க்கம் போதிக்கிறபடியே இதற்கு இசைந்திருக்கிறது. இதை அறிந்துகொள்வதற்கு இரு

பத்தைந்து நூற்றாண்டுகளுக்கு முன்பு வசித்திருந்த ஒரு தீர்க்கதரிசி சொல்லுகிறதை சற்று கவனிக்கலாம்.

"இதைப் புறஜாதிகளுக்குள்ளே கூறுங்கள்; யுத்தத்திற்கு ஆயத்தம் பண்ணுங்கள், பராக்கிரமசாலிகளை எழுப்புங்கள்; யுத்தவீரர் எல்லாரும் சேர்ந்து ஏறிவரக்கடவர்கள். உங்கள் மண்வெட்டிகளைப் பட்டயங்களாகவும், உங்கள் அரிவாள்களை ஈட்டிகளாகவும் அடியுங்கள்; பலவீனனும் தன்னைப் பலவான் என்று சொல்வானாக. சகல ஜாதிகளே, நீங்கள் சுற்றிலுமிருந்து ஏகமாய் வந்து கூடுங்கள்; கர்த்தாவே, நீரும் அங்கே உம்முடைய பராக்கிரமசாலிகளை இறங்கப்பண்ணுவீராக. ஜாதிகள் எழும்பி, யோசபாத்தின் பள்ளத்தாக்குக்கு வருவார்களாக; சுற்றிலுமுள்ள ஜாதிகளை நியாயந்தீர்க்க அங்கே நான் வீற்றிருப்பேன். பயிர் முதிர்ந்தது, அரிவாளை நீட்டி அறுங்கள், வந்து இறங்குங்கள், ஆலை நிரம்பியிருக்கிறது, ஆலையின் தொட்டிகள் வழிந்தோடுகிறது; அவர்களுடைய பாதகம் பெரியது. நியாயத்தீர்ப்பின் பள்ளத்தாக்கிலே ஜனங்கள்—திரள் திரளாய் இருக்கிறார்கள்; நியாயத்தீர்ப்பின் பள்ளத்தாக்கிலே கர்த்தரின் நாள் சமீபமாயிருக்கிறது. சூரியனும், சந்திரனும் இருண்டுபோகும், நட்சத்திரங்கள் ஒளி மழுங்கும். கர்த்தர் சீயோனிலிருந்து கெர்ச்சித்து, எருசலேமிலிருந்து சத்த மிடுவார்; வானமும் பூமியும் அதிரும் ஆனாலும் கர்த்தர் தமது ஜனத்துக்கு அடைக்கலமும் இஸ்ரவேல் புத்திரருக்கு அரணான கோட்டையுமாயிருப்பார்." யோவேல் 3: 9-16. இவ்வசனங்களானது கடைசி நாட்களில் சம்பவிக்கப்போகிறதை ஒரு படம்போல் நமக்குக் காட்டுகிறது. தற்காலம் இவ்வுலகில் நாம் பார்க்கிற இவைகளும் இன்னும் மற்ற சம்பவங்களும், இவ்வுலகமானது அதன் முடிவுக்கு அதிக சமீபமாய் இருக்கிறதென்று நிச்சயமாகவே காட்டுகின்றன. கயிற்றினால் சுற்றி ஆட்டப்படும் பம்பரமானது அதன் வேகம் குறைந்து கீழே விழுந்துபோகிற தருணத்தில் தள்ளாடுகிறதுபோல இப்பழைய உலகமும் தள்ளாடிக்கொண்டிருக்கிறது. ஆனாலும் உலகம் கூடிய சீக்கிரம் ஒரு நிலைவரமான முடிவுக்கு வரும் என்பது சத்தியம்.

G. G. L.

என் இந்து சிநேகிதனுக்கு ஓர் கடிதம்

(LETTER TO MY HINDU FRIEND)

எனது பிரியமுள்ள வர்தராஜ்க்கு எழுதும் செய்தியாவது :—

நான் சில நாளுக்கு முன் எழுதின கடிதத்தில், உனக்கு அவருடைய சில போதனைகளைப்பற்றியும் அவர் செய்த சில அதிசயங்களைப்பற்றியும் எழுதினேன். நான் எழுதினதிலிருந்து இயேசு ஒரு நல்ல மனிதனாயிருந்தாரென்றும், உலகத்தின் ஜனங்களுக்கு ஒரு முன்மாதிரியாயிருந்தாரென்றும் நீ அறிந்துகொள்ளலாம். அவர் அப்படிப்பட்ட நல்ல மனிதனாயிருந்தும், அநேக வியாதியஸ்தருக்கும் ஏழைகளுக்கும் உதவி செய்திருந்தும், அநேக ஜனங்களுக்கு நன்மை செய்திருந்தும் அக்காலத்து ஜனங்கள் அவரை விரும்பவில்லை. ஆகையினாலே அவரை கொலைசெய்யப் பிரயாசப்பட்டார்கள். அவர்கள் அவரை தேவனுடைய குமாரன் என்று நம்பாமல் அவரைக் கொன்றுபோட்டால் அவரைப்பற்றி திரும்பக் கேள்விப்படமாட்டோம் என்று நினைத்தார்கள். ஆகையினாலே அவர்கள் அவரிடத்தில் குற்றம் கண்டுபிடிக்கப் பிரயாசப்பட்டார்கள் ஆனால் அவர் நல்ல மனிதனாயிருந்ததால் அவர்கள் அவரிடத்தில் ஒரு குற்றமும் கண்டுபிடிக்க முடியவில்லை.

பிற்பாடு அவர்கள் அவர்மேல் பொய்க்குற்றங்களைச் சாட்டினார்கள். அவர் ராஜாங்கத்துக்கு விரோதமான காரியங்களைச் செய்கிறதாகக் குற்றம் சாட்டி, கடைசியாக அவரைப் பிடித்து நியாயஸ்தலத்துக்குக் கொண்டுபோய் அவருக்கு விரோதமாக அநேக பொய் சாட்சி

களைச் சொன்னார்கள். நியாயாதிபதி அவர்களுக்குதான் அவரிடத்தில் ஒரு குற்றத்தையும் காணவில்லை ஆகையினாலே அவனை விட்டுவிடவேண்டும் என்று சொல்ல அவர்கள் கோபத்தோடு அவனைச் சிலுவையில் அறையும் சிலுவையில் அறையும் அவன் ஜீவிக்கத்தகாதவன் என்று சொன்னார்கள். இவைகளெல்லாவற்றிற்கும் இயேசு ஒன்றும் பேசவில்லை. அவருக்கு விரோதமாகக் கொண்டுவரப்பட்ட குற்றங்களில் அவர் குற்றவாளியாகக் காணப்படவில்லை. ஆனாலும் நியாயாதிபதி ஜனங்களுக்குப் பயந்து அவரைக் கொல்லுவதற்கு உத்தரவளித்தான். ஆகையினாலே அவர்கள் அவர் கைகளைக் கட்டி அவர் தலையிலே முட்கிரீடம் சூட்டி அவரை வாரினால் அடித்து, முகத்தில் துப்பி அவருக்கு விரோதமாகச் செய்யவேண்டிய தெல்லாவற்றையும் செய்தார்கள். அச்சமயங்களிலெல்லாம் தன்னை வாதிப்பவர்களுக்கு ஒன்றும் செய்யவும் இல்லை அவர்களோடு ஒன்றும் பேசவும் இல்லை. அவர்களுடைய சீஷர்கள் பயந்து ஓடிப்போனார்கள். அவரை இம்மாதிரி ஓர் இரவு முழுவதும் வாதித்தார்கள். ஆகையால் அவருக்கு நடக்கமுடியவில்லை ஆனாலும் அவரை அவர்கள் நகரத்துக்கு வெளியே கொல்லும் ஸ்தல வரையில் நடக்க வைத்தார்கள். அந்நாட்களில் பெரிய குற்றவாளிகளை மரச்சிலுவையில் அறைந்து அவர்கள் சாகுமட்டும் அவர்களை அங்கேயே விட்டுவிடுவது வழக்கம். கிறிஸ்துவுக்கும் அவர்கள் எவ்வளவு தீமை செய்யவேண்டுமோ அவ்வளவு தீமை செய்யவேண்டுமென்று எண்ணி அவருக்கும் அம்மாதிரியே செய்தார்கள். சிலுவை அதிக பளுவான மரத்தினால் செய்யப்பட்டது. அதின் உயரமான பாகம் 14 அல்லது 16 அடி உயரமாயிருக்கும். அதின் குறுக்குத் துண்டு 8 அடி நீளம் இருக்கும் இதை அவர்கள் அவ்விடத்திற்குத் தூக்கிக்கொண்டு போகும்படியாக அவரைக் கட்டாயப்படுத்தினார்கள். ஒரு பெரிய கூட்டம் அவரைச் சூழ்ந்திருந்தது. அவருக்கு நடக்கவும் பலன் இல்லை. கடைசியாக அவர் அவ்விடம் போய்ச்சேர்ந்தார். அவர் தாகமாகவும் களைப்பாகவும் இருந்தார். அவர் முதுகில் பட்ட அடிகளினால் இரத்தம் ஓடினது. பிற்பாடு அவரை சிலுவையின்மேல் கிடத்தி பெரிய ஆணிகளையும் சுத்திகளையும் எடுத்து அவர் கையிலும் காலிலும் ஆணி அந்தச் சிலுவையில் பதியும் வரையில் அடித்தார்கள். இது அவருக்கு அதிக வலியைக் கொடுத்தது. ஆனாலும் அவர் ஒன்றும் பேசவில்லை. அம்மாதிரியே அவர் பக்கத்திலும் இரண்டு திருடர்களைச் சிலுவையில் அறைந்தார்கள். போர்ச்சேவகர்கள் அவர்களை சிலுவையில் கட்டும்போது அவர்கள் ஓடிப்போகப் பிரயாசப்பட்டார்கள் ஆனால் கிறிஸ்து ஒன்றும் செய்யவில்லை. ஆணிகளை அடித்தபிறகு சிலுவையை அங்கு வெட்டப்பட்டுள்ள குழிகளில் நாட்டினார்கள். அப்பொழுது கிறிஸ்துவின் பாரமெல்லாம் ஆணி யடிக்கப்பட்ட கையில் தொங்கினதினால் அவருடைய சதை கிழிக்கப்பட்டிருக்கும். சேவகர்கள் அதைப்பார்த்து ஒருவேளை சிரித்திருப்பார்கள். அங்கே அவர் குடிக்கத் தண்ணீர் இல்லாமலும் உஷ்ணத்தைத் தடுக்கவும் அவர் காயங்களில் உட்கார்ந்த ஈக்களை விரட்ட முடியாமல் கஷ்டத்தோடு ஆகாயத்தில் தொங்கினார். இப்படியாக அவஸ்தைப்பட்டு சீக்கிரம் மரணமடைந்தார். அவர் காலையிலே சிலுவையில் அறையப்பட்டு பகலில் இறந்துபோனார். பிற்பாடு அவருடைய சீஷர்கள் அவரை அடக்கம் பண்ணினார்கள். சீஷர்கள் அவருடைய திரேகத்தை எடுத்துக்கொண்டுபோய் விடுவார்களென்று நினைத்து கல்லறைக்குப் பக்கத்தில் ஒரு காவல் வைத்தார்கள். ஆனாலும் அவ்விரவு தேவனுடைய தூதன் கல்லறையின் மேல்க்கல்லைப் புறட்டித் தள்ளிவிட்டான், அப்பொழுது இயேசு உயிர்த்தெழுந்தார். அதாவது திரும்பவும் உயிரடைந்து தன் வேலையைச் செய்யப் புறப்பட்டார்

அவர் உயிர்த்தெழுந்தபிறகு 40 நாள் இவ்வுலகத்திலிருந்து பின்பு பரலோகம் போனார். அவர் போனபோது தான் திரும்பி வருவேனென்றும், அவர்கள் அவருடைய ஜீவியத்தையும், போதனையைப்பற்றி உலகத்தின் எல்லா ஜனங்களுக்கும் சொல்லி அவர்கள் அவரைத் தேவ குமாரரென்று ஏற்றுக்கொண்டு, அவருடைய கற்பனைகளுக்குக் கீழ்ப்

படிந்தால் அவர்களுக்கு ஞானஸ்நானம் கொடுத்து கிறிஸ்தவர்களாக்கும்படியும் அவர் திரும்பி வரும்போது உயிருள்ள நீதிமான்களையும், மரித்திருக்கிற நீதிமான்களை உயிர்ப்பித்து அவர்களையும் தன்னோடு கூட்டிக்கொண்டு போவார் என்றும் சொன்னார். எல்லா அநீதிமான்களும் அவரை விசுவாசிக்காதவர்களும் அவருடைய இரண்டாம் வருகையில் நெருப்பினால் அழிக்கப்படுவார்கள். கிறிஸ்து திரும்ப வரும் காலம் கிட்டி நெருங்குகிறதினால் அவர் உன்னையும் என்னையும் ஆயத்தமாயிருக்கும்படி விரும்புகிறார். ஆகையினாலே நாம் அவருடைய ஜீவியத்தைப்பற்றியும் போதனையைப்பற்றியும் படித்து அவருடைய இரண்டாம் வருகைக்காக எதிர் நோக்க ஆயத்தப்பட்டிருக்கவேண்டும்.

இப்படிக்கு,
உமது உண்மையுள்ள
ஜி. ஜி. லௌரி.

ஐயரின் அறையில் கேள்விப்பட்டது

(HEARD IN A PASTOR'S STUDY)

(தொடர்ச்சி)

(சத்தியநாதன் என்னும் வாலிபன் ஐயரைக்காண வருகிறான். ஐயர் ஒரு அடக்கத்திற்ககாக வெளியே போயிருக்கிறார். சத்தியநாதன் போவதற்குள் அவர் வந்து விடுகிறார்.)

சத்திய நாதன்:—(ஐயர் வீட்டுக்கதவை) ஐயா! ஐயா! (என்று பலமாகத் தட்டுகிறான்.)

ஐயரின் மனைவி:—"அங்கே கூப்பிடுகிறது யார்?"

சத்தி:—"நான்தான் அம்மா, ஐயரைப் பார்க்க வந்தேன். அவர் வீட்டில் இருக்கிறாரா?"

மனைவி:—"ஐயர் வீட்டிலில்லை. அவர் அடக்கத்துக்குப் போயிருக்கிறார். அவர் சீக்கிரம் வந்து விடுவார். உள்ளே வந்து உட்காரு" என்றாள்.

சத்தி:—செத்துப்போனது யார் அம்மா?"

மனைவி:—மூப்பர் அருளானந்தம் பிள்ளையின் பெண்சாதி நேற்று ராத்திரி இறந்து போனதைப்பற்றி நீ இன்னம் கேள்விப்படவில்லையா? ரொம்ப பரிதாபம். அவள் மூன்று சிறு பிள்ளைகளையும் தன் புருஷனையும் விட்டுப் போய்விட்டாள். இனிமேல் அவர்கள் கஷ்டப்படவேண்டியதுதான். அவள் ஒரு தேவ பக்தியுள்ள மனுஷி. கோவிலுக்கு ஒழுங்காய் வருவாள். தேவன் அவளை இவ்வளவு சீக்கிரமாய் எடுத்துக்கொண்டதுதான் எனக்கு விளங்கவில்லை" என்றாள்.

சத்தி:—அவள் செத்துப்போனது எனக்குத் தெரியாது. இது ரொம்ப பரிதாபம் தான் அம்மா, நம்மால் என்ன செய்யமுடியும். சில மாதங்களுக்கு முன்தான் என் தாயார் இறந்து போனார்கள். (அப்பொழுது ஐயர் உள்ளே வர)

மனைவி:—"இதோ ஐயர் வந்து விட்டார்" என்றாள்.

சத்தி:—சலாம் ஐயா, நீங்கள் சுகந்தானே?

ஐயர்:—சலாம் அப்பா. நான் சுகந்தான். உன் சுகம் எப்படி! வீட்டில் யாவரும் க்ஷேமம் தானே?

சத்தி:—நீங்கள் அடக்கத்துக்குப் போயிருந்தீர்களென்று கேள்விப்பட்டேன். நமது மூப்பனாருடைய பெண்ஜாதியின் மரணத்தைப்பற்றிக் கேள்விப்பட எனக்கு அதிக விருத்தம்.

ஐயர்:—ஆம் அப்பா, அது பரிதாபம். மூப்பனுருடைய பெண்ஜாதியை நான் சிறு பிள்ளை முதல் அறிவேன். பாவம், அவள் இப்பொழுது செத்துப்போய் விட்டாள். அவளுடைய புருஷனையும் அயலகத்தாரையும் எப்படித் தேற்றினாலும் அவர்களுக்கு தேறுதல் இல்லை. மரணத்தை அவர்கள் சத்துருவாகப் பாவிக்காமல் சிநேகிதனுகப் பாவிக்க வேண்டுமென்றும் பரலோகத்தின் தேவன் தமது பிள்ளையை தம்மண்டைக்கு அழைத்துக் கொள்ளும்படியான பல்லக்கு என்றும் சொன்னேன். இன்னும் நாம் அதற்காக துக்கப் படாமல் சந்தோஷப்பட வேண்டுமென்றும் அவள் உயிரோடிருந்து அனுபவிக்கும் சுகத்தைப்பார்க்கிலும் இப்பொழுது நல்ல சுகங்களையும் பரலோக ஆடல் பாடல்களையும் அனுபவிக்கிறுளென்றும் சொன்னேன். நாம் பேசுகிற செய்கிற காரியங்கள் யாவையும் அவள் பார்த்துக்கொண்டிருக்கிறுளென்றும், வேளாவேளைகளில் அவள் இப்பூமிக்கு வந்து தன் பந்து மித்திரரை பார்த்துச் செல்லுவாளென்றும் சொன்னேன். ஆகையால் நாம் மரணத்தைக்குறித்து சஞ்சலப்படக்கூடாது என்று சொன்னபோதிலும் அவர்கள் அவளுக்காகத் துக்கித்துக்கொண்டே யிருக்கிறுர்கள்'' என்றுர்.

சத்தி:—ஆம் ஐயா, உயிரோடிருப்பதைவிட மரிப்பது நலமென்று நான் நினைக்கிறேன். ஏனென்றுல் மரித்தோர் இச்சீவியத்தின் துன்பங்களை எல்லாம் விட்டு ஓய்ந்திருக்கிறுர்கள். ஆனுல் மரித்தபின் மனிதனுடைய நிலைமை என்னவென்று சிந்திக்கிறேன். அவள் முழுவதுமாய் மரித்துப்போகாமல் பரலோகத்தில் பேரின்பத்தை அனுபவிக்கிறுளென்று அவர்களுக்கு சொன்னதாக சொன்னீர்கள். அப்படியானுல் மரிக்கிறவர்கள் யாவரும் பரலோகத்திற்குப்போய் அங்கே உயிரோடிருக்கிறுர்களென்பது உண்மைதானு ஐயா ?

ஐயர்:—ஆம், தம்பி, மரித்தவர்கள் நீதிமான்களாயிருந்தால் அவர்கள் பரலோகத்துக்குபோய் அங்கே ஆனந்தத்தை அனுபவிக்கிறுர்கள். பகுத்தறிவுள்ள மனித ஆத்துமா சாகாமை உள்ளது என்று உனக்குத் தெரியாதா. ஆத்துமா ஒருபோதும் சாகாது. அது சதா காலங்களிலும் உயிரோடிருக்கும். அது தேவன் உயிருள்ளவரைக்கும் உயிரோடிருக்கும். ஆகையினுலே ஒருவன் நீதிமானுயிருந்தால் அவன் செத்த பிற்பாடு பரலோகத்திற்குப் போகிறுன்.'' என

சத்தி:—(ஐயரை நோக்கி) ஒருவன் கெட்டவனுயிருந்தால் அவன் எங்கே போகிறுன் ?'' என்று கேட்டான்.

ஐயர்:—''அவன் பரலோகத்திற்குப் போகாமல் நரகத்திற்குப்போய் தன் பாவத்திற்காக பாடு படுகிறுன்.''

சத்தி:—அப்படியானுல் மரித்தவுடன் நீதிமான்கள் மோட்சத்துக்கும் பாவிகள் நரகத்திற்கும் போனுல் நீங்கள் போன ஞாயிற்றுக்கிழமை நியாயத்தீர்ப்பைப்பற்றி என் பிரசங்கிக்கவேண்டும். நியாயத்தீர்ப்பு என்றுலென்ன ?

ஐயர்:—ஒவ்வொரு மனிதனும் மோட்சத்துக்கு அல்லது நரகத்திற்குப் பாத்திரனுயிருக்கிறுனு என்று தீர்மானிப்பதற்கு நியாயத்தீர்ப்பு அவசியமாயிருக்கிறது.''

சத்தி:—''இரண்டு மனிதர்கள் இறந்து போகிறுர்களென்று வைத்துக்கொள்வோம் நீதிமானென்று எண்ணப்பட்டவன் பரலோகத்திற்கும் பாவி யென்று எண்ணப்பட்டவன் நரகத்திற்கும் போகிறுர்கள். பிற்பாடு நூறுவருஷம் சென்று நியாயத்தீர்ப்பு ஆரம்பிக்கிறது. இந்த இருவருடைய சங்கதியும் தீர்க்கப்படுகிறது. அந்தத் தீர்ப்பில் மோக்ஷத்துக்குப் போனவன் நரகத்திற்கும், நரகத்திற்குப் போனவன் மோக்ஷத்துக்கும் பாத்திரனென்று தீர்க்கப்படுகிறது. இது பயங்கரம் அல்லவா ? ஆகையினுலே முதலில் ஒருவனை நியாயந் தீர்த்த பிற்பாடு அவனை போகவேண்டிய இடத்திற்கு அனுப்புவது நியாயமென்று எனக்குத் தோன்றுகிறது'' என்றுன்.

ஐயர்:—(சத்தியநாதனை நோக்கி) ''மரித்தபின் சரீரமும் மோக்ஷத்துக்குப் போகிறதென்று நீ நினைக்கக்கூடாது. ஆத்துமா முதலில் போகிறது. நியாயத்தீர்ப்புக்குப் பிறகு சரீரம் அங்கே போகிறது'' என்றுர்.

சத்தி:—''ஐயா, அப்படியானுல் மரித்தவனுடைய ஆத்துமா பரலோகத்துக்குப்போகிறதென்று வைத்துககொள்வோம். ஆயிர வருஷங்களுக்குப் பிற்பாடு நியாயத்தீர்ப்பு நடக்கிறது. அதில் சரீரம் பரலோகத்துக்குப் போகாமல் நரகத்துக்குப் போகவேண்டுமென்று தீர்மானிக்கப்படுகிறது. அப்படியானுல் என்ன செய்யவேண்டும்.''

ஐயர்:—''அப்பேர்ப்பட்ட கேள்வி நீ கேட்கக்கூடாது. என்னிடத்தில் அப்படிப் புத்தியீனமான கேள்வியை நீ கேட்கக்கூடாது'' என்று கோபமாய் பேசினுர்.

சத்தி:—''ஐயா, நான் கேள்வி கேட்கிறதினுல் உங்களுக்கு கோபம் வருகிறது. ஆனுல் இவற்றின் உண்மையை அறிய விரும்புகிறேன். கிறிஸ்தவர்களாகிய நாம் வேதாகம போதகத்தின்படியே நடக்கவேண்டுமென்பது என் விருப்பம். ஆனுல் நம்மில் அநேகர் செய்கிற காரியங்கள் வேதாகமத்திற்கு ஒத்திருக்கிறதில்லை. சத்தியத்தை அறிந்துகொள்ளவே நான் சம்பாஷணை செய்கிறேன்'' என்றுன்.

ஐயர்:—ஆம், ஆம், அது சரிதான், உனக்கு இஷ்டமான கேள்வியைக் கேள். நாம் மறுபடியும் தர்க்கிப்போம்.

சத்தி:—நாம் பழைய கேள்வியை ஆரம்பிப்போம். ஒரு மனிதன் சாகும்போது அவன் நிச்சயமாய் சாகாமல் வேறு ஒரு இடத்தில் போய் ஜீவிக்கிறுன். இது சரிதானு?

ஐயர்:—அது சரிதான். ஆகையினுல்தான் நான் அவர்களை மரணத்திற்காக சஞ்சலப் படக்கூடாதென்று சொன்னேன்.

சத்தி:—''அப்படியானுல் ஜனங்கள் மரணத்துக்கு ஏன் பயப்படுகிறுர்கள். ஜனங்கள் வைத்தியரைக் கூப்பிட்டு ஆஸ்பத்திரியில் மருந்து முதலானவைகள் வாங்கி சாப்பிட்டு ஏன் மரணத்திலிருந்து தங்களைக் காப்பாற்றிக் கொள்ளுகிறுர்கள். சாவு நமக்கு சிநேகிதனுனுல் நாம் எல்லாரும் சாகப் பிரியப்படவேண்டுமல்லவா ? அப்படியானுல் இந்தப் பெரிய யுத்தமும், இன்புளுயென்ஸா என்னும் விஷ ஜுரமும் லக்ஷக்கணக்சான ஜனங்களை மோக்ஷத்திற்கு அனுப்பியிருக்கிறது. ஆகையினுலே இந்த ஜில்லாவிலிருக்கும் நல்ல மனிதர்களையெல்லாம் துப்பாக்கியினுல் சுட்டு பரலோகத்துக்கு அனுப்பினுல் அவர்கள் அங்கே சுகத்தை அனுபவிப்பார்களென்று நினைக்கிறேன்'' என்று சொல்ல.

ஐயர்:—(மறுபடியும் கோபத்தோடு) நீ சொல்லுகிறது யாவும் புத்தியீனமாய்த் தோன்றுகிறது. தேவன் நம்மொவ்வொருவருக்கும் ஒரு வேலையை நியமித்து நாம் அதை நிறைவேற்றும் வரைக்கும் நம்மை ஜீவனேடு வைத்திருக்கிறுர். பிற்பாடு தம்மண்டைக்கு அழைத்துக் கொள்ளுகிறுர். அதாவது, தேவன் நம்மை சிருஷ்டித்து சிலகாலம் இவ்வுலகத்தில் இருக்கும்படி செய்கிறுர். ஆகையால் நாம் சாக முடியாது'' என்று சொன்னுர்.

சத்தி:—ஆனுல் நான் ஆதியாகமம் 2: 17-ல் தேவன் ஆதாமை சிருஷ்டித்து அவனை நோக்கி தோட்டத்தின் ஒரு மரத்தின் கனியைப் புசித்தால் சாகவே சாவாய் என்று சொன்னுர் என்று வாசித்திருக்கிறேன். அதை சாப்பிட்டால் பரலோகத்துக்குப் போவாய் என்று சொல்லாமல் சாவாய் என்று சொன்னுர். எசேக்கியேலின் தீர்க்கதரிசன புஸ்தகத்தில் ''பாவஞ் செய்கிற ஆத்துமாவே சாகும்'' என்று வாசித்திருக்கிறேன். அது எந்த வசனமென்று எனக்குத் தெரியவில்லை. நீங்கள் ஐயராயிருக்கிறதினுல் அது உங்களுக்குத் தெரியுமென்று நினைக்கிறேன். ரோமருக்கு எழுதின நிருபத்தில் ''பாவத்தின் சம்பளம் மரணம்'' என்று எழுதப்பட்டிருக்கிறது. இயேசு மரித்துப்போன லாசருவை எழுப்பப் போனபோது ''லாசரு மரித்துப்போனுன்'' என்று தெளிவாய்ச் சொன்னுர். ஒரு மனிதன் நிட்சயமாய்ச் சாகாவிட்டால் இந்த மூன்று வசனங்களின் அர்த்தமென்ன? மனிதர்கள் சாகிறுர்

கவென்று தேவன் சொல்லுகிறார். ஆனால் அவர்கள் நிச்சயமாய் சாகிறதில்லையென்று நீங்கள் சொல்லுகிறீர்கள்.

ஐயர்:—"அப்பா, தம்பி. இந்த வசனங்களை நீ தப்பர்த்தம் பண்ணக்கூடாது. நான் உனக்கு முன் சொன்னதுபோல மனிதன் சுபாவத்தில் சாகாமை யுள்ளவனாயிருக்கிறான். ஆகையால் அவன் முழுவதுமாய் சாக முடியாது. இதை நீ அறிந்து கொண்டால் இந்த வசனங்களின் அர்த்தம் உனக்கு சரியாய்த் தோன்றும்."

சத்தி:—ஆம். இந்த சாகாமையைப்பற்றி நீங்கள் என்ன சொல்லுகிறீர்கள். அநேக பிரசங்கிமார்களும் உபதேசியார்களும் மனிதன் சாகாமை உள்ளவன் என்று சொல்லக் கேள்விப்பட்டிருக்கிறேன். நான் வேதத்தை நன்றாய் ஆராய்ந்து பார்த்தும் அதில் மனிதன் சாகாமை உள்ளவன் என்று ரூபிக்க ஒரு வசனம்கூட எனக்குக் கிடைக்கவில்லை. 1 தீமோ. 6: 15, 16-ல் தேவன் "ஒருவராய் சாகாமை யுள்ளவ"ரென்று சொல்லப்பட்டிருக்கிறது. 2 தீமோ 1: 10-ல் "ஜீவனையும் அழியாமையையும் சுவிசேஷத்தினாலே வெளியரங்க மாக்கினார்" என்று எழுதப்பட்டிருக்கிறது. இயேசு, "தேவன் தம்முடைய ஒரே பேறான குமாரனை விசுவாசிக்கிறவன் எவனோ அவன் கெட்டுப்போகாமல் நித்திய ஜீவனை அடையும்படிக்கு, அவரைத் தந்தருளி, இவ்வளவாய் உலகத்தில் அன்பு கூர்ந்தார்" என்று சொல்லுகிறார். (யோவா 3: 16). இந்த வசனங்களிலிருந்து நாம் தேவன் மாத்திரம் சாகாமை உள்ளவரென்றும், நாம் அதை இன்னும் பெற்றுக்கொள்ளவில்லையென்றும் அறிந்துகொள்ளுகிறோம். நாம் சாகாமை யென்னும் அந்த பெரிய ஈவை அடைவதற்காக இயேசு ஒரு வழியை ஆயத்தம் பண்ணியிருக்கிறார். நாம் இயேசுக்கிறிஸ்துவை விசுவாசித்தால் அதைப் பெற்றுக்கொள்வோம். நான் சொல்லுகிறது சரிதானா ஐயா? என்று கேட்டான்.

ஐயர்:—இதெல்லாம் எனக்குத் தெரியாதப்பா. நீ சொல்லுகிறது யாவும் எனக்கு விநோதமாயிருக்கிறது. நான் அநேக வருஷமாக வேதாகம சாஸ்திரம் கற்றிருந்தபோதிலும் இவைகளைப்பற்றி நான் கேள்விப்படவேயில்லை. நானும் உன்னை ஒரு கேள்வி கேட்கிறேன். நாம் சாகாமையை இன்னும் தரித்துக்கொள்ளவில்லை யென்றும் நாம் கிறிஸ்துவை விசுவாசிப்பதினால் அதை அடையலாமென்றும் நீ சொல்லுகிறாய். நாம் எல்லாரும் கிறிஸ்துவை விசுவாசிக்கிறோமே. என் நமக்கு சாவாமை இப்பொழுது இல்லையென்று நீ சொல்லுகிறாய். நாம் கிறிஸ்துவை விசுவாசிக்கிறதினால் இப்பொழுதே நாம் சாகாமையைத் தரித்துக்கொள்ளவேண்டும். நாம் இப்பொழுதே அதை அடையாவிட்டால் எப்பொழுது அது நமக்குக் கொடுக்கப்படும்?

சத்தி:—ஐயா, இது ஒரு கஷ்டமான கேள்வி அல்ல. 1 கொரி. 15: 52, 54-ல் "எக்காளம் தொனிக்கும், அப்பொழுது மரித்தோர் அழிவில்லாதவர்களாய் எழுந்திருப்பார்கள்; நாமும் மறுரூபமாக்கப்படுவோம்........அழிவுள்ளதாகிய இது அழியாமையையும், சாவுக்கேதுவாகிய இது சாவாமையையும் தரித்துக்கொள்ளும்போது, மரணம் ஜெயமாக விழுங்கப்பட்டது என்று எழுதியிருக்கிறவார்த்தை நிறைவேறும்" என்று அப்போஸ்தலனாகிய பவுல் சொல்லுகிறது ஞாபக மில்லையா? இதிலிருந்து நாம் கிறிஸ்துவின் இரண்டாம் வருகையில் நடக்கும் உயிர்த்தெழுதலில் சாவாமையைத் தரித்துக்கொள்ளுவோமென்று அறிந்துகொள்ளுகிறோம். கிறிஸ்துவை விசுவாசித்தவர்கள் மாத்திரம் இதைப் பெற்றுக்கொள்ளுவார்கள். கிறிஸ்துவும் "குமாரனைக் கண்டு, அவரிடத்தில் விசுவாசமாயிருக்கிறவன் எவனோ, அவன் நித்திய ஜீவனை அடைவதும், நான் அவனைக் கடைசி நாளில் எழுப்புவதும், என்னை அனுப்பினவருடைய சித்தமாயிருக்கிறது" என்று யோவா. 6: 40-ல் சொல்லியிருக்கிறார். இங்கே கடைசி நாள் என்பது கிறிஸ்துவின் வருகையையும் உயிர்த்தெழுதலின் நாளையும் குறிக்கிறது. இப்போது இது விளங்குகிறதா? என் மனதில் இன்னொரு கேள்வி இருக்கிறது அநேக கிறிஸ்தவர்கள் விசுவாசிக்கிறதுபோல இயற்கையி

லேயே மனிதன் சாவாமையுடையவனாயிருந்து மரித்தவுடனே பரலோகத்திற்குப்போனால் கிறிஸ்துவின் முதல் வருகையினாலும் இரண்டாவது வருகையினாலும் வரும் பலன் என்ன. அதை எனக்கு தயவுசெய்து சொல்லுங்கள்.

ஐயர்:—இவை யெல்லாம் எனக்குப் புதிதான காரியங்களாயிருக்கிறது. நான் வேதத்தை அநேக வருஷமாக வாசித்தபோதிலும் இந்தக் காரியங்களெல்லாம் என் மனதிற்குத் தோன்றவில்லை. நான் வேதத்தைக் கொஞ்சம் சரியாகப் படித்த பிற்பாடு இன்னொருதரம் இவைகளைப்பற்றி தர்க்கிப்போம். நீ பிற்பாடு என்னை வந்து பார்க்கலாம்.

சத்தி:— (எழுந்து நின்று) நான் மறுபடியும் வருகிறேன். நீங்கள் எங்கள் வீட்டிற்கு வந்து ரொம்ப நாளாகிறது. தயவுசெய்து ஒருதரம் எங்கள் வீட்டுக்கு வாருங்கள் ஐயா, நாம் இப்போது பேசின காரியங்களில் என் மாமனுக்கு பிரியம் உண்டு. நீங்கள் வந்தால் அவருக்கு அதிக பிரியமாயிருக்கும். நான் போய் வருகிறேன்" என.

ஐயர்:—"ஆம், நீ இப்போது போகலாம். உன் மாமனைக் கேட்டதாக சொல்" என்றதும் சத்தியநாதன் விடைபெற்றுக்கொண்டு தன் வீடுபோய்ச் சேர்ந்தான்.

உண்மை உரைப்போன்.

இயேசுவின் அன்பு.

(THE LOVE OF JESUS)

இயேசு அன்பின் அவதாரம். அவர் ஒரு அன்புள்ள மனிதன். அவருக்கு ஒரு அனலுள்ள இருதயம் உண்டு. சில பூர்வீக கிறிஸ்தவர்கள் அவருடைய இருதயம் நெருப்புப்பற்றி எரிகிறதைப்போலிருக்கும் படம் வைத்திருந்தார்கள். அதுவும் ஒரு சரியான சாயலே. அவருடைய இருதயம் அன்பினாலே பற்றி எரிந்தது. துக்கப்படுகிறவர்களுக்காகவும் வியாதியஸ்தருக்காகவும் பாவிகளுக்காகவும் அவருக்கு இருக்கும் அன்பினால் அவருடைய இருதயம் பற்றி எரிந்தது. ஆக்ஸ்போர்ட் (Oxford) சர்வ கலாசாலையின் மாணாக்கனான ஹென்றி மார்ட்டீன் (Henry Martyn) என்பவர் நூறு வருஷங்களுக்கு முன்னே லண்டன் பட்டணத்திற்குப் போதகராக வந்தார். தன் மரணம் சமீபித்தபோது அவர் மனுஷ ஜாதியின் அன்பின் ஊழியத்தில் "இப்பொழுது என்னை தேவனுக்காக எறித்துப்போடுகிறேன்" என்று சொன்னார். தற்காலத்தில் அப்படிப்பட்ட அன்புள்ள ஒருவனும் கிடையாது. இயேசு மெய்யான அன்பு எப்படிப்பட்டதென்று படித்துக் கொடுத்திருக்கிறார்.

இயேசுவின் அன்புக்கோர் அளவில்லை. பவுல் அவ்வன்பை "அறிவுக்கெட்டாதது" என்று அழைக்கிறார். எபே. 3: 19. நாம் கேட்கிறதெல்லாவற்றைப்பற்றி நம்முடைய மட்டுள்ள புத்தியினாலே அறிந்துகொள்ள முடியாது. ஆனால் நாம் இயேசுவினுடைய அன்பைப்பற்றி கொஞ்சமாவது தெரிந்துகொள்ளலாம். ஹென்றி டிரம்மண்ட் (Henry Drummond) என்னும் படிப்பாளி அன்பைப்பற்றி "அது உலகத்தில் இருக்கும் எல்லாவற்றைவிடப் பெரியது" என்று சொல்லுகிறார். இந்த யுகம் பெரிய காரியங்களடங்கிய யுகம், பெரிய மனிதருள்ள யுகம், பெரிய நூதன விர்த்தியுள்ள யுகம், பெரிய ஆபத்துள்ள யுகம் பெரிய நூதனங்கள் கண்டு பிடிக்கப்படும் யுகம். நாம் இப்பொழுதுதான் இந்தப் பெரிய உலக யுத்தம் முடிவுக்குக் கொண்டுவரப்பட்டிருக்கிறதாகக் கேள்விப்படுகிறோம். இவைகளெல்லாவற்றைவிட பெரியது அன்பு. அவ்வன்பிலும் பெரிய அன்பு, இயேசுவினுடைய அன்பே.

தாவீது ராஜா தன்னுடைய மரண மடைந்த சிநேகிதனாகிய யோனத்தானின் அன்பை "ஓர் அதிசயப்படத்தக்கது" என்கிறார். நாம் இயேசுவினுடைய அன்பைப்

பற்றி என்ன சொல்லலாம். இயேசுவினுடைய அன்பு மாறாதது. நம்முடைய சிநேகிதரின் அன்பு குன்றிப்போகும்போது நமக்கு அதிக மனநோவு இருக்கிறது. ஆனால் இயேசுவினுடைய அன்பைப்பற்றி "தாம் இவ்வுலகத்தில் இருக்கிற தம்முடையவர்களிடத்தில் அன்பு வைத்தபடியே முடிவுபரியந்தமும் அன்பு வைத்தார்" என்று சொல்லப்பட்டிருக்கிறது. உன்னுடைய சிறு பிராயத்திலிருந்து இம்மட்டும் உனக்கிருந்த சிநேகிதர்களையெல்லாம் கணக்கிட்டு அவர்களில் இன்னும் யாரெல்லாம் சிநேகிதர்களாய் இருக்கிறார்களென்று பார். இயேசுவினுடைய அன்பே எல்லாவற்றிலும் பெரியது. ஒரு கவிராயன் "நான் மாறுகிறேன், அவரோ மாறுகிறதில்லை. அவருடைய அன்புக்கு ஓர் ஓய்வு இல்லை" என்று எழுதியிருக்கிறார். கிறிஸ்துவுக்கு 600 வருஷங்களுக்கு முன் வசித்த எரேமியா அவருடைய அன்பு சதா காலங்களிலும் நிலைத்திருக்கும் என்று சொல்லுகிறார். எரே 3: 3. C. H. ஸ்பர்ஜன் (C. H. Spurgeon) என்பவர் தன்னுடைய சிநேகிதன் ஒருவனைச் சந்திக்கப்போனபோது அவனுடைய வீட்டிலிருக்கு ஒரு காற்றுத் திசைகாட்டியின்மேல் "தேவன் அன்பாகவே இருக்கிறார்" என்று எழுதப்பட்டிருக்கிறதைக் கண்டு, அவனை நோக்கி காற்று பல திசைகளிலும் அடிக்கிறப்போல் தேவனுடைய அன்பும் மாறுமா என்று கேட்க அவன் "இல்லை, காற்று எங்கெங்கே அடித்தாலும் அங்கேயும் தேவன் அன்பாகவே இருக்கிறார்" என்றான். அம்மாதிரியே நாம் எங்கே திரும்பினாலும் எங்கேயிருந்தாலும் இயேசு நம்மை நேசிக்கிறார். "கிறிஸ்துவின் அன்பை விட்டு நம்மைப் பிரிப்பவன் யார்" என்று பவுல் கேட்கிறார். அதற்கு நாம் "யாரால் முடியும்" என்று கேட்போமாக.

இயேசுவினுடைய அன்பு அதிக பலமுள்ளது. அதிக காங்கையினாலே கடினமான பாறையையும், கெட்டியான உலோகங்களையும் உருக்கலாம். அம்மாதிரியே நம்முடைய இருதயம் எவ்வளவு கடினமாயிருந்தபோதிலும் அவருடைய அன்பு இளகப்பண்ணும். பாரிஸ் பட்டணத்தில் அப்பட்டணத்துச் சுய அரசாக்ஷிக்காக ஒரு கலகம் உண்டானபோது ஒரு கிறிஸ்தவ பிரசங்கியார் கைதியாக பாஸ்ற்றல் (Bastile) என்னும் ஊரில் அடைபட்டிருந்தார். அவரைக் கொலை செய்யும்படியாக வெளியே கொண்டு போகப்பட்ட பிற்பாடு அவர் இருந்த அரையின் சிலுவைபோல் இருந்த ஓர் ஜன்னலின் மேல் "உயரம்" என்றும், அடியில் "ஆழம்" என்றும், இரண்டு பக்கங்களிலும் "அகலம்" என்றும் எழுதியிருந்தார். அதாவது கல்வாரியிலிருந்த சிலுவை கிறிஸ்துவின் அன்பின் ஆழத்தையும், அகலத்தையும், உயரத்தையும்பற்றிப் போதிக்கிறது

இயேசுவினுடைய அன்பு அவரை ஒரு அன்புள்ள மனிதனாக்கிற்று. பிள்ளைகள் எப்போதும் அவர்கூட இருக்க சந்தோஷப்பட்டார்கள். அவர் எல்லாரையும் நேசித்தார். ஒருவனும் "அவர் என்னை நேசிக்கவில்லை" என்று சொல்ல முடியாது அதிக தண்ணீரும் அன்பை அணைக்க முடியாது என்று சாலமோன் ஞானி சொல்லுகிறார். அம்மாதிரியே அது இயேசுவினுடைய அன்பையும் அணைக்க முடியாது. அவருடைய அன்பு தன்னைத்தானே பலியாகக் கொடுக்கும் அன்பு. எல்லா மெய்யான அன்பும் அப்படிப்பட்டதே. ஆனால் இயேசு தன்னுடைய ஜீவனையும் பாராமல் நம்மை நேசித்தார். நாம் இன்னும் பாவிகளாயிருக்கும்போதே அவர் நம்மை சிநேகித்தார். நாம் நமக்கு நன்மை செய்கிறவர்களை சிநேகிக்கிறோம். ஆனால் இயேசு நாம் சிநேகிக்கத் தகாதவர்களாயிருக்கும்போதே அவர் நம்மை சிநேகித்தார். அவர் நமக்காக தம்முடைய ஆத்துமாவை மரணத்திலூற்றினார். எசா. 53: 12. இதைத் திருஷ்டாந்தப்படுத்துவதற்கு நமக்கு ஆர்னால்ட் வின்க்கில்ரெய்ட் (Arnold Winkelreid) என்பவருடைய கதை உண்டு. தம்முடைய தேசம் சத்துருவால் பிடிபட்டு தம்முடைய தேசத்தார் யாவரும் சங்கரிக்கப்பட இருந்தபோது அவர்கள் தப்பித்து ஓட ஓர் வழியில்லை ஆனாலும் ஒன்றுண்டு. அவர் சத்துருக்களின் மத்தியிலோடி அவர்களுடைய ஈட்டியால் தன்னை குத்திக்கொண்டு "விடுதலைக்கு வழி உண்டு பண்ணுங்கள்" என்று சொல்லிக்கொண்டு மடிந்தார். அப்போது ஜனங்கள் தங்கள் சத்துருக்களின் நடுவாய் ஓட முடிந்தது. இம்மாதிரியே இயேசுவும் தம்முடைய ஜீவனைக் கொடுத்து நமக்கு விடுதலைக்கு வழி பண்ணினார். அப்போஸ்தலனாகிய பவுல் அவருடைய அளவற்ற அன்பைக் கண்டு அதினாலே "என்னில் அன்பு கூர்ந்து எனக்காக தம்மைத்தாமே ஒப்புக்கொடுத்த தேவனுடைய குமாரனைப் பற்றும் விசுவாசத்தினாலே பிழைத்திருக்கிறேன் என்று சொன்னார். கலா 2: 20. அப்படி உன்னால் சொல்லக் கூடுமா?

G. H. Woodward.

சுகாதார விஷயங்கள்

O. SMITH, M. D. டாக்டர் சிமித்.

வியாதி

(DISEASE)

எங்கே பார்த்தாலும் ஜனங்கள் தங்களுக்கு அல்லது தங்கள் சிநேகிதருக்கு இன்னின்ன வியாதி உண்டாகிறதென்று பேசிக்கொள்ளுகிறார்கள். எல்லா சமாசாரப் பத்திரிகையிலும் இதர சஞ்சிகைகளிலும் இன்னின்ன வியாதிகளுக்கு நிவாரணம் என்று விளம்பரப் படுத்துகிறார்கள். வருஷாவருஷம் உலகத்தில் இதற்குமுன் தோன்றாத புது வியாதிகள் ஜனங்களுக்கு வருகிறது. இந்தியாவில் மாத்திரமல்ல உலகத்தின் ஏனைய இடங்களிலும் இப்படியே நடக்கிறது. வைத்தியர்கள் புது வியாதிக்கு மருந்து கண்டுபிடிப்பதற்குள் இன்னொரு புது வியாதி உற்பத்தியாகிறது. ஆதலால் வைத்தியர் அந்த வியாதிக்கு நிவாரணம் தேடவேண்டியதாயிருக்கிறது. மனிதர் இறப்பதும் பிறப்பதும் எவ்வளவு சகஜமாயிருக்கிறதோ அதுபோலவே வியாதியும் வருஷாவருஷம் உற்பத்தியாகிக் கொண்டே வருகிறது.

அதுமாத்திரமல்ல, வியாதியின் கொடுமையினாலே பெற்றோர் பலங்குன்றி பலமற்ற பிள்ளைகளைப் பெறுகிறார்கள். அப்பிள்ளைகள் ஒரு வருஷத்திலோ ஒன்பது வருஷத்திலோ அல்லது புருஷ பிராயத்திலோ இறந்துவிடுகிறார்கள். அது ஏன் அப்படிச் சம்பவிக்கிறது? முதியோரும் இளையோரும் ஏன் சாகிறார்கள்? அவர்கள் அசௌக்கியமடைந்து சாகிறார்கள் என்கிறோம். அசௌக்கியம் என்றால் என்ன?

நாம் அசௌக்கியம் என்னும் பதத்தை இரண்டாகப் பிரித்துப் பார்ப்போம். அ ('இன்மை' என்னும் அர்த்தத்தைக் கொடுக்கும் எதிர்மறை வாக்கு) சௌக்கியம். அதாவது சௌக்கியம் இல்லாமை. சௌக்கியம் இல்லாயலிருப்பதே வியாதி யல்லவா? தேகத்தின் சில அவயவங்கள் சௌக்கியமில்லாமலிருப்பதால் வியாதி உண்டாகிறது.

ஆதியில் தேவன் மனிதனைச் சிருஷ்டித்தபோது அவனுடைய தேகத்தின் அவயவங்களெல்லாம் பூரண பலமும் சௌக்கியமுமுள்ளவைகளாயிருந்தது. கண்களின் பார்வை சரியாயிருந்தது, காது நன்றாய்க் கேட்டது. அவைகளுடைய வேலைக்கு தடை உண்டாக்கக் கூடியவைகள் ஒன்றும் அவைகளில் காணப்படவில்லை. இரத்தாசயமும், சுவாசாசயமும் இரைப்பையும், சரீரத்தின் மற்ற அவயவங்கள் யாவும் யாதொரு வேதனையில்லாமல் தங்கள் வேலையைச் செய்தன. மனிதன் தன் வேலையையெல்லாம் முடித்தபிற்பாடுகூட களைப்படையவில்லை. அந்த காலத்தில் மனித சரீரத்தில் வியாதியுண்டாகவில்லை. அக்காலத்தில் சரீரத்தின் ஒவ்வொரு அவயவங்களும் மற்ற அவயவங்களோடு சேர்ந்து தங்கள் வேலையைச் சரிவர செய்தன. உள்ளும் புறம்பும் சமாதானமிருந்தது,

அதற்குப்பின்பு பாவம் உலகத்திற்கு வந்தபோது சமாதானமும் பாக்கியமும் பறந்து விட்டன. ஜனங்கள் சமாதானமாய் ஜீவிக்காமல் ஒருவரை ஒருவர் கொல்ல ஆரம்பித்தார்கள். உள்ளிருந்த சமாதானமும் ஐக்கியமும் நீங்கிப்போனதினால் சரீரத்தின் அவயவங்கள் தங்கள் வேலையைச் சரியாக செய்யவில்லை. அவயவங்களில் வலி ஆரம்பித்தது. இதைத்தான் "இயற்கை சட்ட விரோதம்" என்று அழைக்கிறார்கள். இப்படியாக இது வரவர பலங்குன்றி தளர ஆரம்பித்தது.

மனிதன் தேவனுடைய ஒழுங்கை விட்டு விலகிப்போனதினால் தன் சரீரத்திற்குக் கெடுதியை உண்டாக்கும் பானங்களையும் ஆகாரத்தையும் அருந்த ஆரம்பித்ததான். இரைப்பையில் ஜீரணிக்கக்கூடாத வஸ்துக்களும் ஆரோக்கியமற்ற பதார்த்தங்களும் தங்க ஏற்பட்டதினால் இரைப்பைக்கு அசௌக்கியம் நேரிட்டது. அது அசௌக்கிய மடைந்ததினால் குடல்களுக்கு வேண்டியவைகள் கிடைக்கவில்லை. ஆதலால் அவைகளும் அசௌக்கிய மடைந்தன. இவைகள் அசௌக்கிய மடைந்ததினால் இரத்தம் கெட்டுப்போய் இரத்தாசயத்திற்கும் சிரசு, கை கால்களுக்கும் சரியான உணவு அகப்படவில்லை. ஆகையால் அவைகள் தங்கள் வேலையைச் செய்யக்கூடவில்லை அவைகளுக்குச் சரியான உணவு இல்லாததால் பலவீன மடைந்தன.

மனிதரும் செய்யத்தகாதவைகளைச் செய்து தங்கள் பலத்தை செலவழித்தார்கள். அவர்கள் சரியாக இளைப்பாறவில்லை. சரீரத்தின் அவயவங்களுக்கு சரியான உணவும் இளைப்பாறுதலும் கொடுக்காததினால் அவைகள் பலவீன மடைந்து தங்கள் வேலையைச் செய்யவில்லை. சில சமயங்களில் மனிதன் தேக அப்பியாசம் செய்யாமல் நாள் முழுவதும் உட்கார்ந்து அல்லது படுத்து இருப்பதும் தப்பிதம். ஆகாரமும் இளைப்பாற்றியும் எவ்வளவு அவசியமோ அதுபோல தகுந்த தேக அப்பியாசமும் அவசியம். குளிரையும் காற்றையும் தாங்கும்படியான ஆடையை அணியாமலிருக்கிறான். நல்ல உணவு இல்லாமல் பலவீனப்பட்ட அவயவங்கள் அதிகமாகத் தளர்ந்துபோகிறதினால் மனிதனுக்கு வியாதியுண்டாகிறது.

வியாதி இதுதான் அதற்குக் காரணமும் இதுதான். ஒருவனிடமிருந்து மற்றொருவனுக்கு வியாதி தொத்துகிறதென்பது சரிதான். ஆனால் ஒவ்வொருவரும் தங்கள் சரீரத்தைப்பற்றி கவலை யெடுத்துக்கொள்ளுவார்களானால் அதிக நல்லது. எல்லா அவயவங்களும் தங்கள் வேலையைச் சரியாகச் செய்யுமானால் பிறருடைய வியாதி அவனுக்கு அவ்வளவு இலேசாகத் தொத்தாது. ஒரு பலமான ஆளுக்கு ஒரு வியாதி தொத்தினாலும் அது அவனுக்கு பெரிய தீங்கை விளைக்காது. அவன் அதிலிருந்து தப்பித்துக்கொள்ளலாம்.

ஓ. சிமித், M. D.

புகையிலை

(TOBOCCO.)

இவ்வுலகத்தில் ஜனங்கள் கையாடிவரும் அதிக கெட்ட பழக்கங்களில் புகையிலையும் மதுபானமும் ஒன்று. அவை பிரயோஜனமற்றவைகளும், அதிக செலவும், தீங்கு முள்ளவைகளுமாயிருக்கிறது. அந்தப்பழக்கம் ஜனங்களை அதை விட்டுவிட முடியாமல் பிடித்துக் கொள்ளுகிறது. மனிதன் அடிமையாகிறான் மதுபானமும் புகையிலையும் மனிதனுக்கு எஜமானாகிறது.

அநேக நூற்றாண்டுகளுக்குமுன் ஐரோப்பாவுக்கும் ஆசியாவிற்கும் புகையிலையினுடைய உபயோகம் தெரியாது. பதினாலாம் நூற்றாண்டில் அமெரிக்காவானது கண்டு பிடிக்கப்பட்டபோது அங்கே சிவப்பு இந்தியர் (Red Indian) என்னும் ஓர் விதமான ஜனங்கள் வசித்தார்கள். அவர்களுக்கு எப்படி சுருட்டுக் குடிப்பதென்று தெரியும். அதை அவர்கள் சீக்கிரத்தில் வெள்ளைக்காரருக்குப் படித்துக் கொடுத்தார்கள். அவர்கள் முதலில் அவ்விந்தியர் சுருட்டுக் குடிப்பதைப் பார்த்து "இந்தியர் இலைகளைச் சுருட்டி அதைப் பத்த வைத்து பேய்களைப்போல தங்கள் மூக்கினால் புகை விட்டார்கள்". என்று சொன்னார்கள். அக்காலம் துடங்கி இம்மட்டும் வெள்ளைக்காரர் அந்த இலையை உபயோகித்துக்கொண்டு வருகிறார்கள்.

இந்தப் புகையிலைக்குப் பதிலாக அவர்கள் அமெரிக்க இந்தியர்களுக்கு மதுபானம் குடிக்கக் கற்றுக்கொடுத்தார்கள். இந்தியர்கள் அதை "நெருப்புத் தண்ணீர்" என்று அழைக்கிறார்கள். அம்மாதிரியே அதுவும் இருக்கிறது.. அது மனிதனுடைய வயிறை எறியப் பண்ணுகிறது. அது அவர்களுடைய மூளையையும், சரீர சுகத்தையும் கெடுக்கிறது. அப்படிக் கெடுத்து அது அவர்களை மிருகங்களைவிட அதிக கேவலமாக்குகிறது. மதுபானம் குடிக்கும் அப்பழக்கம் அமெரிக்க இந்தியர்களை அற்றுப்போகும்படி செய்திருக்கிறது. புகையிலையை வெள்ளைக்காரர் கையாடுவதினாலே அவர்களும் அதிகப் பலவீனராய்ப் போய்விட்டார்கள்.

இந்தியாவிலும் அநேக லக்ஷக்கணக்கான பேர்கள் இந்த இரண்டு கெட்ட வழக்கங்களையும் கையாடி வருகிறார்கள். ஜனங்கள் தங்களுக்கு ஒரு நன்மையையும் கொடுக்கக் கூடாதிருக்கிற அவைகளை என் செய்யவேண்டும்? அது அதிக செலவும் அதிக கெடுதியும் உண்டுபண்ணுகிறதினால் அதை என் உபயோகிக்கவேண்டும்? நான் சில இடங்களில் சிறுவர், சிறுமிகளும், பெரியோர்களும் இந்தக் காரியங்களைச் செய்யக் கண்டிருக்கிறேன். நீ இவ்வித காரியங்களைச் செய்கிறதினால் ஒரு பன்றி அல்லது ஒரு கழுதையைவிட கேவலமாய் நடந்துகொள்ளுகிறாய் என்று உனக்குத் தெரியுமா? அந்த மிருகங்களுக்குப் புத்தியிருந்தாலும் அப்படிப்பட்ட கேவலமான வஸ்துக்களைத்தொட ஒருநாளும் துணியாது. ஆகையினாலே இப்பொழுதே அப்பழக்கங்களை விட்டுவிடுவோமாக.

தேவனுடைய அப்பொன் தளம்போட்ட வீதியில் ஒருவனும் சுருட்டு குடியான். அப்பட்டணத்தின் குடிகள் புகையிலையை விரும்பமாட்டார்கள். அங்கே ஒரு சாராயக் கடையுமிராது. ஏனென்றால் ஒருவரும் அதைப்பற்றி கவலைப்பட மாட்டார்கள். அவர்கள் ஏன் கவலைப்படமாட்டார்களென்பதற்குக் காரணமென்னவென்றால் அவர்கள் பூமியிலேயே அப்பழக்கங்களை விட்டுவிட்டார்கள். வரப்போகிற உலகத்துக்குப் போகிறவர்கள் இப்பூமியிலேயே நல்வழியில் நடக்கவேண்டும். நாம் அங்கே எப்படி இருக்கவேண்டுமென்று தெரியுமோ, அப்படியே இங்கேயும் இருக்கப் பிரயாசைப்படவேண்டும். "தீட்டுள்ளதும் அருவருப்பையும், பொய்யையும் நடப்பிக்கிறதுமாகிய ஒன்றும் அதில் பிரவேசிப்பதில்லை." வெளி. 21: 27. வெளிப்படுத்தின விசேஷத்தின் சில பாகங்களை அறிந்துகொள்வது அதிக கஷ்டம். ஆனால் இது அப்பாகங்களில் ஒன்றல்ல பாஷை நடை அதிக தெளிவா இருக்கிறது. நாம் தேவனுடைய கட்டளைகளை நிறைவேற்றுவதில் அசடராயிருக்கக்கூடாது.

G. G. L

நிகழ்கால சத்தியம்

வேத சன்மார்க்க சுகாதார விஷயங்களில் தற்கால அறிவுக்கொத்தபடி மனிதர் அபிவிருத்தியடைவதற்கென்று பிரசுரமாகும் ஓர் பத்திரிகை.

மதராஸ் செப்டம்பர்மீ, 1920.

இப்பத்திரிகை, பெங்களூரிலிருக்கும், எஸ். டி. ஏ. பப்ளிஷிங்கவுஸ்காக, பட்டணத்தில் வெப்பேரி என்னுமிடத்திலுள்ள அல்பீனியன் அச்சாபீசில் அச்சடிக்கப்பட்டு வருகிறது.

பத்திராதிபர் பாஸ்றர், ஜி. ஜி. லௌரீ.
உதவி ,, ,, ஈ. டி. தாமஸ்.
மானேஜர், எல். சி. ஷேப்பர்டு, பி.எ.

	ரூ.	அ.	ப.
தனிப்பிரதி ஒன்றுக்கு ...	0	1	6
வருஷ சந்தா, தபாற்கூலி உள்பட ...	1	0	0
சிங்கப்பூர் பினுங்கு முதலிய வெளி ஊர்களுக்கு தனிப்பிரதி ஒன்றுக்கு ...	0	2	0
வருஷசந்தா தபாற்கூலி உள்பட	1	4	0

நோட்டீஸ்.

இதனால் சகலருக்கும் தெரிவிப்பது யாதெனில் நிகழ்கால சத்தியம் என்னும் பத்திரிகை இது முதல் ஓர் மாதாந்தரப் பத்திரிகையாக வெளிப்படும். இனிவரும் பத்திரிகைகளில் அநேக இனிய விஷயங்கள் வெளியிடப்படும். உங்கள் சந்தா முடிவு பெறுமானால் உடனே புதுப்பித்துக் கொள்ளுங்கள். ஒரு வருஷத்திற்கு தபாற்கூலி உட்பட விலை ரூ. 1. இந்தப் பத்திரிகையை உங்கள் நண்பர்களுக்குக் காட்ட மறக்க வேண்டாம்.

பத்திராதிபர்,

சமாசாரக் குறிப்புகள்.

(NEWS AND NOTES)

இந்த வருஷம் அமெரிக்காவில் கோதுமை விளைவு குறைந்துபோயிற்றென்று செய்தி வந்திருக்கிறது. அமெரிக்காவிலிருந்து ஏற்றுமதி செய்வதற்குப் போதுமான கோதுமை கிடையாது. ஆகையால் கோதுமையின் விலை ஜாஸ்தியாகுமென்று இதனால் தெரிகிறது.

இப்பொழுது முடிவுபெற்ற பெரிய யுத்தத்தினாலே ஐரோப்பாவில் எங்கும் உணவு பொருட்கள் குறைவுபட ஆரம்பித்து விட்டது. அநேக ஜனங்கள் ஆகாரமில்லாமல் தவித்துக்கொண்டிருக்கிறார்கள். அப்படிக் கஷ்டப்படுகிறதினால் அவர்கள் சண்டையும் கலகமும் செய்ய ஆரம்பிப்பார்கள்.

ஐயர்லாந்தில் கலகம் இன்னும் நடந்து வருகிறது. ஜெர்மனியர்தான் இதற்குக் காரணமென்று சிலர் சொல்லுகிறார்கள். இந்தக் கலகத்தை நடைபெறச் செய்ய ஜெர்மனியர் பண உதவி செய்கிறார்களென்று அவர்கள் சொல்லுகிறார்கள்.

உருசியா தேசத்திலே ஒரு மனிதனின் தினசரி கூலி ரூ. 240. ஆனால் அங்கே ஒரு ரொட்டியின் விலை ரூ. 300. அங்கே பணத்திற்கு மதிப்பு கிடையாது. அவர்கள் சுயாதீனம் வேண்டுமென்றார்கள். அவர்களுக்கு இப்போது சுயாதீனம் இருக்கிறது. அந்த சுயாதீனத்தினால் அவர்களுக்கு அதிக தொந்தரவு உண்டாயிருக்கிறது.

இந்த வருஷத்தில் மகிமை தங்கிய ஜார்ஜு சக்ரவர்த்தியின் ஜெனன நாளிலே அநேகருக்கு கௌரதா பட்டங்கள் கொடுக்கப்பட்டது. சென்னைப்பட்டணத்து Hon. Sir, Dewan Bahadur, P. T. Chettiar-க்கு (Knight) நைட் பட்டம் கொடுக்கப்பட்டது. இவர் சென்னை நகரவிசாரணை சங்கத்தின் அங்கத்தினர்.

சென்னைப்பட்டணத்து போலீஸ் டிபிடி கமிஷனராகிய திவான் பகதூர் பி. பி. நாயுடு என்பவருக்கு I. S. O. என்னும் கௌரதா பட்டம் சக்கரவர்த்தியின் ஜெனன நாளில் அளிக்கப்பட்டது.

நிகழ்கால சத்தியம்.

Vol. IX. மதராஸ்:—அக்டோபர்மீ, 1920. No. 6.

OFFICE OF ... 15 OCT 1920 MADRAS

EDITORIAL CORNMENT.

பத்திராதிபக் குறிப்புகள்.

நமது ஆபீசுக்கு மாதாமாதம் வருகிற ஓர் தெலுங்குப் பத்திரிகையில் ஒருவர் "அழியாமை" என்னும் விஷயத்தின்பேரில் ஓர் உபந்நியாசம் எழுதியிருந்தார். அதில் அவர் நூதனமான சில விஷயங்களை எடுத்துரைத்திருக்கிறார். அவர் எழுதியவற்றில் சில வேதாகம போதகத்திற்கு ஒவ்வாததாயிருக்கிறதினால் அவைகளை நமது பத்திரிகையில் கூறலானோம்.

அவர் பின் வருமாறு சொல்லுகிறார்: "கிறிஸ்து நமக்காக பரலோகத்தில் ஒரு வாசஸ்தலத்தை ஆயத்தம் பண்ணியிருக்கிறார். நமது இரட்சகர் நமக்கு முன் அங்கே சென்றிருக்கிறார். நாமும் அங்கே வரும்படியாக அவர் காத்துக்கொண்டிருக்கிறார். தீர்க்கதரிசிகளும், அப்போஸ்தலரும், பரிசுத்தவான்களும், இரத்தச் சாக்ஷிகளும், எல்லா பரிசுத்த ஸ்திரீகளும் பிள்ளைகளும் அங்கே சென்றிருக்கிறார்கள்."

இந்தச் சன்மார்க்கர் யாவரும் பரலோகத்திற்குப் போயிருக்கிறார்களென்பதற்கு அத்தாக்ஷி எங்கே யிருக்கிறதென்று அந்த உபந்நியாசத்தை எழுதினவரைக் கேட்க விரும்புகிறோம். அவர்கள் அங்கே போயிருக்கிறார்களென்று வேதாகமத்தில் எவ்விடத்திலும் சொல்லப்படவில்லை. மரித்தவுடன் மனிதர்கள் பரலோகத்திற்குப் போகிறதில்லை யென்பதற்கு வேதத்தில் அநேக அத்தாக்ஷிகள் உண்டு. அப். 2: 29, 34-ல் தேவனுடைய இருதயத்திற்கு ஏற்ற புருஷனாகிய தாவீது இன்னும் பரலோகத்துக்குப் போகவில்லை யென்று சொல்லப்பட்டிருக்கிறது. தாம் உயிர்த்தெழுந்த அன்று காலையில் கிறிஸ்து பரலோகத்திற்கு இன்னும் போகவில்லை யென்று சொல்லுகிறார். யோவான் 20: 17. அவர் மரித்த உடனே பரலோகத்திற்குப் போகவில்லை யென்று இதனால் தெளிவாய் விளங்குகிறது. அப்போஸ்தலனாகிய பவுல் தாம் மரணமடையுமுன் தாம் இப்பொழுதே தன் பலனைப் பெறாமல் கிறிஸ்துவின் இரண்டாம் வருகையில் அதைப் பெற்றுக்கொள்வதாகச் சொல்லியிருக்கிறார். 2 தீமோ 4: 7, 8. இயேசுக்கிறிஸ்து இரண்டாம்தரம் வல்லமையோடும் மகிமையோடும் வரும்போது நீதிமான்கள் தங்கள் பலனை யடைவார்கள். அதற்கு முன் அவர்கள் அதை அடையமாட்டார்கள். வெளி. 22: 12. நீதிமான்கள் யாவரும் மரித்தவுடனே பரலோகத்துக்கு எழுந்தருளிப் போவார்களானால், கிறிஸ்துவின் இரண்டாம் வருகையினாலும், நியாயத்தீர்ப்பினாலும், மரித்தோரின் உயிர்த்தெழுதலினாலும் யாதொரு பிரயோஜனமுமிராது. அவர்கள் முன்னதாகத் தங்கள் பலனை அடைந்தாயிற்றானால் இவைகளினால் யாதொரு பிரயோஜனமுமில்லை. இப்பேர்பட்ட காரியங்களை யார் எழுதினாலும் அதினால் மோசம் போகாதேயுங்கள். இந்த முக்கியமான விஷயத்தின்பேரில் வேதாகமம் என்ன சொல்லுகிறதென்று ஆராய்ந்து அறியுங்கள்.

திருச்சினாப்பள்ளியில் நாளது ஜூலை மாதம் 13-16 தேதிகளில் எஸ். பி. ஜி. மிஷனால் ஓர் மிஷனரி கான்பரன்ஸ் நடத்தப்பட்டது. அதில் கிறிஸ்தவர்கள் 'தசமபாகம் கொடுக்க வேண்டியது' அவசியமென்றும், அது கர்த்தருக்கு பரிசுத்தமானதென்றும், அதினால் அநேக ஆசீர்வாதங்களுக்கு இடமுண்டென்றும், வெகு அருமையான ஓர் பிரபந்தம் வாசிக்கப்பட்டதாகவும் அறிந்து சந்தோஷப்படுகிறோம். இப்படியே இன்னும் அநேக கிறிஸ்தவ சங்கத்தார் இவ்வளவு காலமாய் தசமபாகம் கொடுக்குதல், யூதருடைய கொள்கையென்றும், பழைய ஏற்பாட்டின் முறைமையென்றும் எண்ணி, அவைகளை அசட்டை செய்து, அதற்குரிய ஆசீர்வாதங்களை இழந்துபோய், கடந்த சில வருஷங்களாக தேவனுடைய இந்தப் பரிசுத்த ஏற்பாட்டை வெகுவாய் சபைகளில் வற்புறுத்தி ஊன்றி வருகிறார்கள். ஆம், மெய்யாகவே இது தெய்வ ஏற்பாடுதான். இதின் ஆசீர்வாதத்தை மிகவும் அனுபவித்திருக்கிறவர்களாகையால் வெகு உறுதியாய்ச் சொல்லுகிறோம்.

எப்படி நமது சகல உடைமைகளிலும் தசமபாகம் கர்த்தருக்குப் பரிசுத்தமானதோ அப்படியே தேவன் நமக்கு கொடுத்திருக்கிற காலங்களிலும் ஓய்வுநாள் கர்த்தருக்குப் பரிசுத்தமானது "ஏழாம் நாளோ உன் தேவனாகிய கர்த்தருடைய ஓய்வுநாள்." யாத். 20: 10. இந்தப் பரிசுத்த ஏற்பாட்டையும் யூதருடையதென்றும், பழைய ஏற்பாட்டின் பிரமாணமென்றும் எண்ணி, அவமதித்து, அதின் ஆசீர்வாதத்தை இழந்து வருகிற சகல கிறிஸ்தவ சங்கத்தாரும் இதைப்பற்றி சீக்கிரம் தங்கள் மனச்சாட்சியில் சூடுண்டாகி தங்களுடைய மிஷனரி கான்பரன்ஸ்களிலும், சபைகளிலும், தேவனுடைய இந்த நித்திய பரிசுத்த ஏற்பாட்டையும் பெலமாய்ப் போதித்து, ஸ்தாபித்து, பின்கூறிய வாக்கியங்களில் கண்டிருக்கிற ஆசீர்வாதங்களுக்குப் பங்காளிகளாகும்படி விரும்புகிறோம்.

"ஆறுநாளும் வேலை செய்யலாம்; ஏழாம் நாளோ வேலை ஓய்ந்திருக்கும் ஓய்வுநாள்; அது கர்த்தருக்குப் பரிசுத்தமானது."

"அது என்றைக்கும் எனக்கும் இஸ்ரவேல் புத்திரருக்கும் அடையாளமாயிருக்கும்; ஆறு நாளைக்குள்ளே கர்த்தர் வானத்தையும் பூமியையும் உண்டாக்கி; ஏழாம் நாளில் ஓய்ந்திருந்து பூரித்தார். யாத். 31: 15, 17.

"என் பரிசுத்த நாளாகிய ஓய்வுநாளிலே உனக்கு இஷ்டமானதைச் செய்யாதபடி, உன் காலை விலக்கி, உன் வழிகளின்படி நடவாமலும், உனக்கு இஷ்டமானதைச் செய்யாமலும், உன் சொந்தப் பேச்சை பேசாமலுமிருந்து, ஓய்வுநாளை மனமகிழ்ச்சியின் நாளென்றும், கர்த்தருடைய பரிசுத்த நாளை மகிமையுள்ள நாளென்றும் சொல்லி அதை மகிமையாக எண்ணுவாயானால்,

அப்பொழுது கர்த்தரில் மனமகிழ்ச்சியாயிருப்பாய்; பூமியின் உயர்ந்த இடங்களில் உன்னை ஏறியிருக்கும்படி பண்ணி, உன் தகப்பனாகிய யாக்கோபுடைய சுதந்தரத்தால் உன்னைப் போஷிப்பேன்; கர்த்தருடைய வாய் இதைச் சொல்லிற்று." ஏசா. 58: 13, 14.

(HEARD IN A PASTOR'S STUDY)

ஐயரின் அறையில் கேள்விப்பட்டது

(தொடர்ச்சி.)

(பாக்கியநாத ஐயர், சத்தியநாதன் வீட்டுக்குப் போகுதல். சத்தியநாதரின் மாமன் செல்வநாதன் வீட்டில் இருக்கிறார். வெளியேபோயிருந்த சத்தியநாதன், ஐயர் வீட்டை விட்டுப் போவதற்குள் தன் சிநேகிதனோடு வீடு வந்து சேருகிறான்).

ஐயர்:—"சலாம், செல்வநாதம் பிள்ளையவாள் க்ஷேமந்தானா, நேற்றைய தினம் கோவிலுக்கு வரவில்லையே. உடம்புக்கு என்ன?" என்று சொல்லிக்கொண்டே செல்வநாதன் முன் உட்கார்ந்தார்.

செல்வ:—"ஆம் ஐயா, நேற்று முதுகு வலியால் கொஞ்சம் அசௌக்கியமாயிருந்தேன். வீட்டிலிருந்தே வேதம் வாசித்தேன். இன்றைக்குக் கொஞ்சம் தாவிலை. உங்கள் சுகம் எப்படி?" என்றார்.

ஐயர்:—"கடவுளுடைய கிருபையால் க்ஷேமம். சத்தியநாதன் எங்கே?" என்றார்.

செல்வ:—அவன் எங்கேயோ வெளியே போயிருக்கிறான். அவனைப் பார்க்க வேண்டுமா?

ஐயர்:—அவன் எங்கே யிருக்கிறானென்று சும்மா கேட்டேன். அவன் இரண்டு மூன்றுதரம் என்னைப் பார்க்க வந்தான். வேதத்தைப்பற்றியும் அதன் உபதேசத்தைப் பற்றியும் என்னிடத்தில் அநேக கேள்விகள் கேட்டான். நான் அவனைப்பற்றி உம்மிடத்தில் சில காரியம் பேசவேண்டியிருப்பதினால் அவன் இங்கே இல்லாதது நல்லதுதான். அவனுடைய பேச்சையும் கேள்வியையும் பார்க்கும்போது அவன் நமது சபைக் கொள்கைகளுக்கு விரோதமான காரியங்களை யாரிடத்திலிருந்தோ அல்லது கள்ளப் போதகருடைய புஸ்தகங்களிலிருந்தோ அவைகளைக் கற்றுக்கொள்ளுகிறதாகத் தோன்றுகிறதினால் நீங்கள் உங்கள் மருமகனை நமது சபைக்கு விரோதமாயிருக்கிற கள்ளப் போதனைகளுக்கு எச்சரிக்கையாயிருக்கும்படி புத்தி சொல்லவேண்டும். அவன் நமது சபையைத் தவிர வேறு சபைக் கோவில்களுக்குப் போகிறானா? என்று கேட்டார்.

செல்வ:—"இல்லை, அதைப்பற்றி எனக்குத் தெரியாது. பெரும்பாலும் அவன் போகமாட்டான் என்றே நினைக்கிறேன்" என்று விடை பகர்ந்தார்.

ஐயர்:—"அவன், என்னால் உத்தரவு சொல்ல முடியாத விபரீதமான கேள்விகளைக் கேட்கிறதினால் எனக்கு வெட்கமாயிருக்கிறது. இதெல்லாம் அவன் எங்கிருந்து கற்றுக் கொள்ளுகிறானென்று நான் அறிய விரும்புகிறேன்."

செல்வ:—"அப்படி உத்தரவு சொல்லக்கூடாத கேள்விகள் என்ன?"

ஐயர்:—"அவன், ஞாயிற்றுக்கிழமையை ஓய்வுநாளாக ஆசரிப்பதைப்பற்றிச் சந்தேகப்படுகிறான். நாம் இன்னும் ஏழாம் நாளை ஓய்வுநாளாக ஆசரிக்கவேண்டுமென்று நம்புகிறான். மனிதர் மரித்தவுடன் பரலோகத்துக்குப் போகிறார்கள் என்பதில் சந்தேகப்படுகிறான். ஒன்றிற்கு வேதவாக்கிய ஆதாரமில்லாவிட்டால் அதை நம்பமாட்டேனென்கிறான். நமது அத்தியக்ஷர்கள் வேதத்தில் சொல்லப்பட்டிராததைச் சொன்னால் நம்பமாட்டேன் என்கிறான்."

செல்வ:—நல்லது, அவன் சொல்லுவது சரிதானே நமது உபதேசிமார் வேதாகமத்திற்கு ஒத்தபடி உபதேசிக்க வேண்டியதல்லவா? நமது விசுவாசத்திற்கு வேதாகமம் வழிகாட்டியல்லவா?

ஐயர்:—இது என்ன விநோதம். நீங்கள்கூட சத்தியநாதனைப்போல் பேச ஆரம்பித்துவிட்டீர்களே. இதனால் என்ன சம்பவிக்கப்போகிறதென்று எனக்கு விளங்கவில்லை.

(இருவரும் சற்றுநேரம் மௌனம் சாதிக்க)

ஐயர்:—"மேஜைமேலிருந்த ஒரு பத்திரிகையைக் கையில் எடுத்துக்கொண்டு இது என்ன பத்திரிக்கை" என்று கேட்டார்.

செல்வ:—அது நிகழ்கால சத்தியமென்னும் ஓர் நல்ல பத்திரிகை.

ஐயர்:—இதில் எதைப்பற்றி யெழுதியிருக்கிறது. இதைப் பிரசுரிப்பது யார்? தெரியுமா?" என்றார்.

செல்வ:—(ஐயரை நோக்கி) இதைப் பிரசுரிப்பது யாரென்று எனக்குத் தெரியாது. புஸ்தகம் விற்கிற ஒருவர் இதைக் கொண்டுவந்தார். அதில் என்ன எழுதப்பட்டிருக்கிறதென்று பாருங்கள்.

ஐயர்:—ஆகா, எனக்குத் தெரிகிறது. இதிலே, கிறிஸ்து சீக்கிரம் வருகிறாரென்றும், வருகையின் அடையாளம் இன்னதென்றும், மெய்யான ஞானஸ்நானம், இராப்போஜனம், மெய்யான ஓய்வுநாள், மனிதனுடைய தன்மை முதலியவைகளைப்பற்றியும் எழுதப்பட்டிருக்கிறது, விற்பனைக்குத் தயாராயிருக்கிற புஸ்தகங்களைப்பற்றிய விளம்பரமும் இருக்கிறது. இதில் எழுதப்பட்டிருக்கிற புஸ்தகங்களில் ஏதாவது வாங்கியிருக்கிறீர்களா?

செல்வ:—நாங்கள் வாங்கி சிலவற்றை வாசித்தும் இருக்கிறோம்.

ஐயர்:—ஐயா, "இப்பேர்ப்பட்ட புஸ்தகங்களையும் பத்திரிகையையும் வாங்கி வாசிப்பதினால் நீங்கள் பெரிய தப்பிதம் செய்கிறீர்கள். அந்தக் கேள்விகளையெல்லாம் சத்தியநாதன் ஏன் கேட்கிறானென்று இப்போது தெரிகிறது. இந்தப் பத்திரிகைகளும் புஸ்தகங்களும் S. D. A. மிசியோன் ஆசாமிகளால் பிரசுரிக்கப்படுகிறது அவர்களுக்கு எச்சரிக்கையாயிருக்கவேண்டும்." என்றார்.

செல்வ:—நீங்கள் ஏன் ஐயா அப்படிப் பேசுகிறீர்கள். நாங்கள் ஏறக்குறைய இரண்டு வருஷத்திற்கு அதிகமாக இந்தப் புஸ்தகங்களை வாசித்துக்கொண்டு வருகிறோம். இதை எழுதுகிறவர்கள் வேதாகமத்திற்கு ஒத்தபடி எழுதுகிறார்களென்று அறிந்திருக்கிறோம். வேதத்திலில்லாததை அவர்கள் போதிக்கவே மாட்டார்கள். அவர்கள் போதனைகள் கெடுதியுள்ளவைகளென்று சொல்லுகிறீர்கள். அப்படி அவர்கள் போதிக்கிற பொய்ப் போதகங்களில் சிலவற்றைக் காட்டுங்கள் பார்ப்போம்" என்றார்.

ஐயர்:—அவர்களைப்பற்றி எனக்கு அவ்வளவாய்த் தெரியாது. அவர்கள் கிறிஸ்து சீக்கிரம் வருவாரென்றும் உலகம் சீக்கிரம் முடிவடையுமென்றும், சண்டைகளும் கலகங்களும் பஞ்சம் முதலானவைகள் யாவும் கிறிஸ்து வருகையின் அடையாளங்களென்றும் போதிப்பதாகக் கேள்விப்பட்டேன். நாம் கைக்கொள்ளுகிற ஞாயிற்றுக்கிழமையைத் தள்ளிவிட்டு வாரத்தின் ஏழாம் நாளைக் கைக்கொள்ளுகிறார்கள். மனிதன் மரித்தவுடன் தன் பலனை அடைகிறதில்லையென்றும் சுருட்டு பிடிப்பதும் மதுபானம் அருந்துவதும் பாவமென்றும் போதிக்கிறார்கள். வருமானத்தில் பத்திலொன்றை கோவிலுக்குச் செலுத்தவேண்டுமென்றும் ஜனங்களெல்லாரும் வேதாகமத்தைத் தாங்களே கருத்தாய் ஆராயவேண்டுமென்றும், குருக்கள் அத்தியக்ஷர்களுடைய சொற்களைவிட வேதாகமத்தையே நம்பவேண்டுமென்றும் போதிக்கிறார்கள். குழந்தைகளுக்கு ஞானஸ்நானம் கொடுக்கக்கூடாதென்றும் மனிதனைத் தண்ணீரில் முழுகச்செய்து ஞானஸ்நானம் கொடுக்கவேண்டுமென்று போதிக்கிறதாகவும் நான் கேள்விப்பட்டேன். இராப்போஜனத்திற்குச் சேருமுன் கிறிஸ்து செய்த மாதிரி ஒருவர் ஒருவருடைய கால்களைக் கழுவவேண்டுமென்றும் இன்னம் சில விபரீதமான கொள்கைகளையும் போதிக்கிறார்கள். நமது சபைக் கொள்கைகளுக்கு இவைகள் முற்றிலும் விரோதமாயிருக்கிறது. எனக்கு அவைகள் கொஞ்சம்கூட பிடிக்கவில்லை. உதாரணமாக சுருட்டு பிடிப்பதை யார் விட்டுவிடக்கூடும். அப்போதைக்கப்போது கொஞ்சம் கள் குடிப்பதனால் என்ன கெடுதி? பிஷப்புகூட கொஞ்சம் மதுபானம் குடிக்கிறார். எப்பொழுதும் சுருட்டு பிடிக்கிறார். அப்பேர்ப்பட்ட பெரிய மனிதன் இதைச் செய்யும்போது நாம் அவைகள் பாவமென்றும் எப்படிச் சொல்லலாம். குழந்தை ஞானஸ்நானத்தைப்பற்றி வேதத்தில் அத்தாட்சியில்லையென்று எனக்குத் தெரியும். ஆனால் நாம் அநேக காலமாக அப்படிச் செய்து வந்திருக்கிறதினால் அதை விட்டுவிட முடியாது. நாம் அவர்களைப் பிள்ளைகளாயிருக்கும்போதே ஞானஸ்நானம் கொடுக்காவிட்டால் அவர்களுக்கு ஒருபோதும் ஞான ஸ்நானம் கொடுக்கவே முடியாதென்று நினைக்கிறேன். ஏனென்றால் அவர்கள் பெரியவர்களான பிற்பாடு வேறெந்த கிறிஸ்தவ சபையிலாவது போய்ச் சேர்ந்துகொள்வார்கள். நமது சபையின் ஆத்துமாக்களின் இலக்கமும் குறைந்துவிடும்.

செல்வ:—ஆம் கால் கழுவுவது சரியா சரியல்லவா?

ஐயர்:—யோவான் 13-ம் அதிகாரத்தில் நாம் அப்படிச் செய்யவேண்டுமென்று கற்பிக்கப்பட்டிருக்கிறதென்று நம்மெல்லாருக்கும் பிரத்தியக்ஷமாய்த் தெரியும். கிறிஸ்து தாம் வைத்துப்போனமாதிரியை நாம் பின்பற்றவேண்டுமென்று சொல்லுகிறார். நாம் இந்தியர்களல்லவா. நமக்குள் இது ஒரு அருவருப்பானதல்லவா? ஜனங்களுக்கு இதைப்பற்றிப் பிரசங்கித்தால் அவர்கள் இதை ஏற்றுக்கொள்ளவேமாட்டார்கள். அவர்கள் கோபத்தால் கோவிலுக்கு வரமாட்டார்கள். காணிக்கையும் குறைந்து போகும். நான் அநேக வருஷமாக ஐயர் வேலை பார்த்து வருவதினால் ஜனங்களுக்குப் பிரியமில்லாததைப் பிரசங்கித்தால் அவர்களுக்குக் கோபம் வருமென்று அனுபோகத்தினால் அறிந்திருக்கிறேன். நான் கதைகளோடு கூடிய நேர்த்தியான பிரசங்கங்களைச் செய்து ஜனங்களுக்கு சிரிப்பு மூட்டி சந்தோஷப்படுத்தினால் அவர்கள் ஒழுங்காய்க் கோவிலுக்கு வருவார்கள்.

செல்வ:—இவைகளெல்லாம் வேதத்துக்கு ஒத்தபடியிருந்தால் நாமும் அதின்படி நடக்கவேண்டுமல்லவா? எங்களை நல் வழியில் நடத்துவதற்காகவே உங்களை இங்கே ஐயராக நியமித்திருக்கிறார்கள். இந்தக் காரியங்களெல்லாம் வேதாகமத்தில் சொல்லப்பட்டிருக்குமானால் மனிதர் என்ன சொன்னபோதிலும் அதைப் பிரசங்கித்து அதின்படி நடக்கவேண்டியது உங்கள் கடமையல்லவா? இந்தப் பத்திரிகையில் எழுதப்பட்டிருப்பது வேதத்திற்கு ஒத்திருக்கிறவரையில் அதைத் தப்பிதமென்று தள்ளிப்போடக்கூடாது; என்று நான் உத்தேசிக்கிறேன். உதாரணமாக ஓய்வுநாளை எடுத்துக்கொள்வோம். இந்தப் பத்திரிகையிலும் புஸ்தகங்களிலும் ஏழாம் நாள்தான் மெய்யான ஓய்வுநாளென்று, வேதவாக்கியங்களைக்கொண்டு விஸ்தரித்துக் காட்டியிருக்கிறதினால் நாம் அதைத்தான் கைக்கொள்ளவேண்டும். நாம் ஞாயிற்றுக்கிழமையைக் கைக்கொள்ளவேண்டுமென்று வேதத்தில் ஒரு இடத்திலாவது சொல்லப்படவில்லை. ஏழாம்நாளை ஓய்வுநாளாக ஆசரிக்கவேண்டுமென்கிற கட்டளை பத்துக்கற்பனைப் பிரமாணத்தில் இருக்கிறது. ஆகையினால் நாம் அதைக் கைக்கொள்ளாவிட்டால் பாவம் செய்கிறவர்களாயிருப்போம். நமக்கு இதுவரைக்கும் கற்பிக்கப்பட்டிருக்கிற பிரகாரம் மனிதர் மரித்தவுடன் பரலோகத்திற்குப் போகிறதில்லை என்று தெளிவாய்த் தெரிகிறது. உதாரணமாக லாசருவை எடுத்துக்கொள்வோம். கிறிஸ்து அவனை மரித்தோரிலிருந்து எழுப்பினபோது லாசருவைப் பரலோகத்திலிருந்து வரச்சொல்லாமல் கல்லறையிலிருந்து வரச்செய்தார். கிறிஸ்து மரித்தபொழுது பரலோகத்திற்குப் போகவில்லை. ஏனெனில் அவர் உயிர்த்தெழுந்த அந்த ஞாயிறு காலையில்தான் பிதாவிடத்திற்கு எழுந்து போகாததால் தன்னைத் தொடவேண்டாமென்று சொன்னார். (யோவா. 20: 17.) அப்போஸ்தலருடைய நடபடிகள் 2: 34-ல் பேதுரு தாவீதைக் குறித்துப் பேசும்போது "தாவீது 'பரலோகத்திற்கு எழுந்துபோகவில்லையே" என்று சொன்னார். இவைகளை நாம் சரியாகப் படித்தால் மனிதன் மரித்தபின் பிரேதக்குழியில் உயிர்த்தெழுதலின் நாள்மட்டும் தன்னறிவற்ற நிலைமையிலிருக்கிறான் என்று தெரிகிறது. உயிர்த்தெழுதலின் காலத்தில் நீதிமான்கள் உயிரோடெழுப்பப்பட்டு போகிறார்கள். துன்மார்க்கர் உயிரடைந்து தங்கள் பாவங்களுக்காக தண்டனையடையும்படி அக்கினிக்கடலில் தள்ளப்படுகிறார்கள். இப்போது இதற்கு நீங்கள் என்ன சொல்லுகிறீர்கள்.

ஐயர்:—"ஆம், இவைகளில் சிலது வேதாகமத்தில் சொல்லப்பட்டிருக்கிறதென்று எனக்குத் தெரியும். என் புத்திக்கு அவைகள் சரியாய்த் தோன்றுகிறது. இவைகளையெல்லாம் ஜனங்கள் நம்பும்படி செய்வதும் வேதத்தில் சொல்லப்பட்டிருக்கிறவைகள் யாவையும் கைக்கொள்வதும் வெகு பிரயாசம். உதாரணமாக நமது ஜனங்களை ஓய்வுநாளைக் கைக்கொள்ளும்படி செய்தால் என்ன குழப்பம் நேரிடும். அன்றைக்குத்தான் நமது கிராமத்தில் பெரிய சந்தை கூடுகிறது. அன்றைக்குச் சந்தைக்கு போகாவிட்டால் சாப்பாடில்லாமல் பட்டினி கிடக்கவேண்டியதுதான். மரித்தவுடன் பாவிதன் நரகத்திற்குப் போகி

றார்களென்று போதிக்காவிட்டால் ஒருவரும் குணப்பட்டு சபையில் சேரமாட்டார்கள். அவர்களுக்குப் பய மிராது. தங்கள் இஷ்டமானபடியெல்லாம் செய்வார்கள். இவைகளெல்லாம் நமக்குப் பிடித்தமானதல்ல. இந்தப் புஸ்தகம் நல்லதல்ல. இனி இப்பேர்ப்பட்ட புஸ்தகங்களை வாங்கவேண்டாம்" என்று சாந்தமாய் மொழிந்தார்.

செல்வ:—"ஆனால் இந்தப் புஸ்தகத்தில் நல்ல போதனைகள் அடங்கியிருக்கிறதே. நாங்கள் இதுகாறும் கோவிலில் கேட்ட பிரசங்கங்களைக்காட்டிலும் இது எங்களுக்கு அதிக பிரயோஜனமாயிருந்திருக்கிறது. நாங்கள் தேவனை எப்படி நேசிக்கவேண்டுமென்றும் அவருடைய கற்பனைகளை எவ்வளவு ஜாக்கிறதையாய்க் கைக்கொள்ளவேண்டுமென்றும் போதிக்கிறது. அவைகளில் சொல்லப்பட்டிருப்பதெல்லாம் வேதாகமத்தில் எழுதப்பட்டிருக்கிறது." என்றார். அப்பொழுது சத்தியநாதன் தன் சிநேகிதனோடு உள்ளே வந்து ஐயருக்கு வந்தனம் கூறி க்ஷேமத்தை விசாரித்தான்.

ஐயர்:—நான் உங்கள் வீட்டிற்கு ரொம்ப நாளாக வரவில்லை. நீங்கள் எல்லாரும் க்ஷேமந்தானென்று நம்புகிறேன் உன்னோடுகூட வந்திருப்பவர் யார்? என்று கேட்டார். அதற்கு,

சத்தி:—அவர் என் சிநேகிதர். எங்களிடம் அடிக்கடி வருவார். அவர் பெயர் சுவிசேஷமுத்து நாடார்.

ஐயர்:—(சுவிசேஷமுத்து நாடாரை உபசரித்து) "ஐயா உங்கள் சொந்த ஊர் எது" என்று கேட்டார்.

சுவிசேஷ:—"நான் திருநெல்வேலி ஜில்லாவைச்சேர்ந்த ஆனைகுளத்திலிருந்து வந்திருக்கிறேன்" என்றார்.

ஐயர்:—நீர் குடும்பஸ்தரா?

சுவி:—"ஆம், ஐயா, எனக்குக் கலியாணம் ஆகிவிட்டது" என்றார்.

ஐயர்:—தாங்கள் எந்த வேலையாக இவ்விடம் வந்தீர்?

சுவி:—"ஐயா, நான் ஒரு புஸ்தகம் விற்பவர். கிறிஸ்தவ சன்மார்க்க புஸ்தக விற்பனையாக இங்கே வந்தேன்."

ஐயர்:—"ஆகா, தெரியும், தெரியும். தாங்கள் என்ன புஸ்தகம் கொண்டு வந்தீர்."

சுவி:—நான் வேதாகமப் பங்குகள், 'கிறிஸ்துவைச் சேரும் வழி' 'வேத பாடங்கள்' "நிகழ்கால சத்தியம் என்றும் பத்திரிகைகளை விற்கிறேன்."

ஐயர்:—அப்படியானால் தாங்கள் S. D. A. மிஷியோனைச் சேர்ந்த ஆசாமி யல்லவா?" என்று கேட்டார்.

சுவி:—ஆம் ஐயா, நான் அதைச் சேர்ந்தவர்தான்.

ஐயர்:—இது C. M. S. வட்டத்தைச் சேர்ந்த கிராமமென்று தங்களுக்குத் தெரியாதா? இங்கே உமது புஸ்தகத்தை என் கொண்டுவந்தீர்? இந்துக்களுக்கு இந்த புஸ்தகத்தை விற்கிறதுதானே." என்றார்

சுவி:—"நான், இந்துக்கள், மகமதியர், கிறிஸ்தவர்கள் எல்லாருக்குள்ளும் வேலை செய்கிறேன்" என்றார். உடனே,

சத்தி:—(ஐயரை நோக்கி) "இவர் நமது கிராமத்திற்கு வருவதை என் தடை செய்கிறீர்கள். அவர் நல்ல மனிதன். அவருடைய புஸ்தகங்களை நாங்கள் விரும்புகிறோம். வேத ஆராய்ச்சியில் அவர் எங்களுக்கு அதிக உதவி செய்கிறார். நாங்கள் ஒவ்வொரு இரவும் இங்கே வேதம் படிக்கிறோம்." என்றான்.

ஐயர்:—"ஆம், ஆம் அது சரிதான் வேறொருவர் என் நமக்கு வேதம் படித்துக் கொடுக்க வேண்டும். எங்களுக்கு வேதம் படித்துக்கொடுக்கத் தெரியாதா? உபதேசியார் இருக்கிறார். நான் இருக்கிறேன். நீ வேதம் படிக்க விரும்பினால் அல்லது ஏதாவது சந்தேகமிருந்தால் என்னிடம் வரலாமே. அதற்கு தடையென்ன இருக்கிறது. இந்தப் புஸ்தகம் விற்பவருக்கு என்ன தெரியும்? அவர் படிப்பாளியா? அவர் கலாசாலைப் பண்டிதரிடம் கல்வி கற்றாரா? அவருக்குப் படித்துக்கொடுக்கத் தெரியுமா? நான் ஒரு கேள்வி கேட்டால் அவர் திண்டாடி ஓட்டம் பிடிக்க வேண்டியதுதான்." என்றார். அதற்கு,

செல்வ:—"அது எல்லாம் உண்மையாயிருக்கலாம். அவர் சொல்லுகிறதில் சாரம் இருக்கிறது. வேதத்திற்கும் ஒத்திருக்கிறது. என்றாலும் நீங்கள் அவரைச் சில கேள்விகள் கேளுங்கள் அவர் அதற்குப் பயந்து ஓட்டம் பிடிக்கிறாரா அல்லது உத்தரவு சொல்லுகிறாரா என்று பார்ப்போம். எனக்கு இவற்றின் உண்மையை அறிய அதிக ஆசை. எனக்கு தேவனுடைய சித்தத்தின்படி செய்ய அதிக ஆசை யிருக்கிறது. நீங்கள் சொல்வது சரியானால் நான் அதைப் பின்பற்றுகிறேன். அல்லது இவருடைய புஸ்தகங்களில் சொல்லப்பட்டிருப்பது உண்மையானால் அதைப் பின்பற்றுகிறேன்" என்றார். உடனே,

சத்தி:—"ஆமாம், ஐயா, அதுதான் சரி! அதுதான் சரி! உண்மையை அறியவேண்டும். நீங்கள் ஒரு பாதிரியார். உங்களுக்கு பைபில் நன்றாய்த் தெரியும். பொய் யெது என்றும் சத்தியம் எது என்றும் தெரியும். இவர் சொல்வது பொய்யாயிருந்தால் நீங்கள் எங்களுக்கு நல்ல வழியைக் காட்டவேண்டும். இந்த விஷயங்களைப்பற்றி நீங்கள் அவரிடம் கேள்வி கேட்கவேண்டும். அவருடைய உத்தரவுக்கு வேத வாக்கிய ஆதாரம் காண்பிக்க வேண்டும். அப்படியில்லாவிட்டால் நாங்கள் அவரை நம்பமாட்டோம்." என்றான்.

ஐயர்:—ஆம், நீ சொல்லுகிறது சரி, நான் ஒரு படித்தவர். அவருக்கு ஒன்றும் தெரியாது. அவரோடு தர்க்கிப்பது எனக்கு உகந்ததாகத் தோன்றவில்லை." என்று சொன்னவுடன்,

சுவி:—பரவாயில்லை ஐயா. நீங்கள் என்னை எந்த கேள்வி கேட்டாலும் வேதத்திலிருந்து அதற்கு உத்தரவு கொடுக்கும்படியாக பிரயாசப்படுகிறேன். எனது ஞானத்தினால் நான் உங்களுடைய கேள்விகளுக்கு விடை பகர முடியாது" என்றார்.

ஐயர்:—உம்மோடு இவைகளைப்பற்றித் தர்க்கிக்க எனக்கு மனந்தான். நேரமாகிவிட்டதனால் நான் வீட்டிற்குப் போகவேண்டும்." என்றார்.

சத்தி:—எப்படியிருந்தாலும் நாம் இவைகளைப்பற்றி தர்க்கிக்கவேண்டும். நாங்கள் எல்லாரும் நாளைக்கு உங்கள் வீட்டிற்கு வந்து இதைப்பற்றி தர்க்கிக்கலாமென்று நினைக்கிறோம். உங்களுக்குச் சம்மதந்தானே" என்று கேட்டதும்.

ஐயர்:—அப்படியே வாலாம், சரியாய் பத்து மணிக்கு வாருங்கள், நான் இப்போது போய் வருகிறேன்." என்று சொல்லிவிட்டு மூவரிடமும் விடை பெற்றுக்கொண்டு தன் வீட்டுக்குப் போனார். (உண்மை உரைப்போன்.)

(இன்னும் வரும்.)

(THE SEVEN TRUMPETS)

ஏழு எக்காளங்கள்.

எக்காளங்கள் தொனிக்கிறது எப்பொழுதும் யுத்தங்களுக்கு அடையாளம் (எரே. 4: 5, 19; செப். 1: 16) வெளிப்படுத்தின விசேஷத்தின் 8-ம் 9-ம் அதிகாரங்களில் கிழக்கு ரோம இராட்சியத்துக்கும் மேற்கு ரோம இராட்சியத்துக்கும் விரோதமாக பற்பல ஜாதியார்களாலும் கூட்டத்தார்களாலும் நடத்தப்பட்ட பயங்கரமான யுத்தங்களைப்பற்றியும், அதினாலே உண்டான ரோம ராட்சியத்தின் அழிவைப்பற்றியும், வெகு தெளிவாய்ச் சொல்லியிருக்கிறது.

வெளி. 8: 7-ல் முதலாம் தூதன் எக்காளம் ஊதினதாக வாசிக்கிறோம். அப்பொழுது நடந்த சம்பவமானது காத்ஸ் என்ற ஜாதியார் அலாறிக் என்ற தளகர்த்தனோடு பழைய ரோம இராட்சியமாகிய மேல் ரோமையின்மேல் கி.பி. 395—410-ல் எடுத்த முதல் பெரிய படையெடுப்பைக் குறிக்கிறதாயிருக்கிறது.

வசனங்கள் 8-9 ல் சொல்லப்பட்டிருக்கிற இரண்டாம் எக்காளத்தின் விபரமானது வண்டல்ஸ் ஜாதியார் பயங்கரமான கெனசரிக் மூலமாய் கி. பி. 428-476. செய்த பயங்கர படையெடுப்புகளையும், ஜெயங்களையும், தெரிவிக்கிறதாயிருக்கிறது. ஒரே நாள் இரவு படையெடுப்பில் அக்கினியினாலும், பட்டயத்தினாலும் ரோம இராட்சியத்தின் கடல் சேனையில் 1113 கப்பல்களையும், ஓர் லட்சம் ஆட்களையும் சேதமாக்கினான். இவன் போர்கள் ஜாஸ்தியாய் கடலில் நடந்தேறின.

வசனங்கள் 10-11-ல் மூன்றும் எக்காளத்தின் செய்தியை வாசிக்கிறோம். இங்கே சொல்லப்பட்டிருக்கிற பெரிய நட்சத்திரம் ஹன்ஸ் ஜாதியாரின் தளகர்த்தனாகிய அற்றில்லாவைக் குறிக்கிறது. இவன் ஐரோப்பாவின் பெரிய ஆறுகள் உற்பத்தியாகிற ஆல்ப்ஸ் மலையின் அடிவாரத்திலுள்ள நாடுகள் யாவற்றையும் பாழாக்கினான். இவனுடைய படையெடுப்பு, கி. பி. 441-453. வரைதான் நடந்தேறின.

இதற்குப் பிற்பாடு 4-ம் எக்காளத்தைப்பற்றி 12-ம் வாக்கியத்தில் வாசிக்கிறோம். இதில் சொல்லப்பட்டிருக்கிற விசேஷங்கள் கி. பி. 476-652 யில் ஹெருலியரும் இன்னும் சில ஜாதியாரும் ஒடேஸரின் தளகர்த்தத்தின்கீழ் ரோம இராட்சியத்தின்மேல் சண்டை செய்து உலகமெங்கும் கீர்த்திபெற்ற மகா நகரமாகிய ரோமாபுரி பட்டணத்தைக் கைப்பற்றி, மேல் ரோம இராட்சியத்தை அழித்த செய்தியைக் குறிக்கிறதாயிருக்கிறது. இவ்விதமாய் இந்த நாலு எக்காளங்களினால் காட்டப்பட்டிருக்கிற யுத்தங்களால் மேற்கு ரோம இராட்சியம் அழிக்கப்பட்டு பத்துப்பாகமாகப் பிரிக்கப்பட்டுப் போயிற்று.

நான்காம் எக்காளத்திற்கும் ஐந்தாம் எக்காளத்திற்கும் இடையில் பின் கூறப்பட்டிருக்கிற பயங்கரமான செய்தியை வாசிக்கிறோம். "பின்பு ஒரு தூதன் வானத்தின் மத்தியிலே பறந்துவரக்கண்டேன்; அவன் மகா சத்தமிட்டு: இனி எக்காளம் ஊதப்போகிற மற்ற மூன்று தூதருடைய எக்காள சத்தங்களினால் பூமியில் குடியிருக்கிறவர்களுக்கு ஐயோ, ஐயோ, ஐயோ, ஆபத்து வரும் என்று சொல்லக்கேட்டேன்." வச. 13.

வெளி. 9: 1-12-ல் ஐந்தாம் எக்காளமாகிய முதல் ஆபத்தால் நட்சத்திரம் என்று குறித்திருக்கிற மகம்மதாலும், வெட்டுக்கிளிகள் என்ற நாமத்தால் அழைக்கப்பட்டிருக்கிற அவருடைய தொண்டர்களாலும், போர்ச்சேவகர்களாலும் 622-ம் வருஷத்திற்கு பிற்பாடு தங்களது மார்க்க விர்த்திக்காகச்செய்த அவர்களுடைய போர்களைக் குறிக்கிறதாயிருக்கிறது. மகம்மது இராட்சியம் சாதாரணமாய் சரித்திரங்களில் துருக்கி அல்லது ஆட்டமென் ராட்சியமென்று அழைக்கப்பட்டு வருகின்றன. அந்த இராட்சியத்தை முதலில் 1299-ம் வருஷம் ஜூலை 27-ல் ஸ்தாபித்தது ஆத்மேன் என்ற சுல்தான். இவன் எழும்பும்வரை முகம்மதியர்கள் யாதொரு ராஜா இல்லாமல் இருந்தார்கள். இந்த ஆத்மேனைப்பற்றி 11-ம் வாக்கியத்தில் பின் வருமாறு வாசிக்கிறோம். "அவைகளுக்கு ஒரு ராஜன் உண்டு, அவன் பாதாளத்தின் தூதன்; எபிரேயு பாஷையிலே அபெத்தோன் என்றும், கிரேக்குப் பாஷையிலே அப்பொல்லியோன் என்றும் அவனுக்குப் பெயர்." வாக்கியம் 10-ல் "அவைகள் ஐந்து மாதமளவும் மனுஷரைச் சேதப்படுத்துவதற்கு அதிகாரம் உடையவைகளாயிருந்தன." என்று எழுதியிருக்கிறது. வேதாகமத்தின் கணக்கின்படி ஐந்து மாதமும் 150 நாள் அதாவது 150-வருஷமாகிறது. (எசே. 4: 6.)

அப்படியே 150-வருஷமாக இடைவிடாமல் கிரேக்கு இராட்சியத்தோடு யுத்தம் செய்து கிரேக்க இராட்சியமானது தனது சுயாதீனத்தை இழந்துபோகும்படி பண்ணிற்று.

6-ம் எக்காளமாகிய இரண்டாம் ஆபத்தைப்பற்றி வெளி 9-ம் அதிகாரம் 13-ம் வசனத்திலிருந்து பார்க்கிறோம். இதில் 15-ம் வசனத்தில் தீர்க்கதரிசனமாக சொல்லப்பட்டிருக்கிற 1-மணி 15 நாளும், ஒரு நாள்ஒரு வருஷமும், ஒரு மாதம் 30 நாளும் அதாவது 30-வருஷமும், ஒரு வருஷம் 360 நாள் அதாவது 360 வருஷமுமாக மொத்தம் 391 வருஷத்தையும் 15 நாளையும் குறிக்கிறதாயிருக்கிறது. அப்படியே ஜூலை 27, 1449-ம் வருஷத்திலிருந்து பயங்கரமான யுத்தங்களைச் செய்து 1840-ம் வருஷம் ஆகஸ்டு 11-ம் தேதியாகிய இந்தத் தீர்க்கதரிசனம் முடிந்த நாளோடு ஆட்டமென் இராட்சியமாகிய துருக்கி இராட்சியம் தனது சுயாதீனத்தை இழந்தது, கீழ் தேசத்தின் வியாதிக்கார மனுஷன் என்று அழைக்கப்படுகிற இந்த துருக்கி இராட்சியம் அது முதல் ஐரோப்பாவின் பெரிய இராட்சியங்களால் பாதுகாத்து, தாங்கப்பட்டு வருகிறது. இவ்விதமாக 5-ம் 6-ம் எக்காளங்களால் குறிக்கப்பட்டிருக்கிற யுத்தங்களால் கீழ் ரோமை இராட்சியம் அழிவடைந்தது.

7-ம் எக்காளமாகிய மூன்றும் ஆபத்து பரலோகத்தில் நியாயத்தீர்ப்பு ஆரம்பித்த வருஷமாகிய 1844-லிருந்து உலகமெங்கும் நடந்தேறி வருகிற சர்வலோக யுத்தத்தின் ஆயத்தத்தையும் கடைசியாக இப்பூலோகத்தின் இராட்சியங்கள் கவிழ்க்கப்பட்டு பரிசுத்தவான்கள் நித்திய ராட்சியத்தை சுதந்தரித்துக்கொள்ளும் காலம்வரைக்கும் குறிக்கிறதாயிருக்கிறது—இப்படியாக ஏழு எக்காளங்களும் இந்த உலகத்தின் முடிவுக்கு நம்மைக்கொண்டு வருகிறது. "ஏழாம் தூதன் எக்காள மூதினான்; அப்பொழுது உலகத்தின் ராஜ்யங்கள் நம்முடைய கர்த்தருக்கும், அவருடைய கிறிஸ்துவுக்குமுரிய ராஜ்யங்களாயின; அவர் சதாகாலங்களிலும் ராஜ்யபாரம் பண்ணுவார் என்னும் கெம்பீர சத்தங்கள் வானத்தில் உண்டாயின." 15 வெளி. 11: 14-18; 16: 12-16; 19: 11-21.

இதை வாசிக்கும் என் பிரிய நண்பனே! நீர் தற்சமயம் வசிக்கிற காலம் உமக்கு விளங்குகிறதா? இந்த ஏழு எக்காளங்களினால் சொல்லப்பட்டிருக்கிற பயங்கரமான யுத்தங்களையும் நாச மோசங்களையும் அறிந்துகொண்டீரா? இவ்வளவு திட்டவட்டமாய் தேவன் நமக்கு இவ்வுலக சம்பவங்களுக்கும் பூமியிலே தேவனுடைய வேலைக்குமிருக்கிற சம்பந்தத்தை விளக்கிக் காட்டி, மனுஷர்கள் பாவத்தின் கோஷ்டத்திற்கும் பாழாக்குதலுக்கும் விலகி நமது பிரதான ஆசாரியருடைய பரிந்து பேசுதலினால் இரட்சிப்பின் புண்ணியத்தை நாம் தவறாமல் அடைந்துகொள்ளும்படி நம்மை எதிர்நோக்குகிறார்.

ஈ. டி. தாமஸ்.

(ORDER IN THE HOME.)

குடும்ப விஷயங்கள்

இந்தியராகிய நாம் நமது வீட்டுக் காரியங்களில் அநேகத்தை மிகவும் நுட்பமாய்க் கவனித்து அவைகளைச் சீர்திருத்தவேண்டியது அத்தியந்த அவசியமாய் இருக்கிறது—ஏனெனில், அநேக வீடுகள் சேர்ந்தது ஓர் ஊரும், பல ஊர்கள் சேர்ந்தது ஓர் கிராமமும், பல கிராமங்கள் சேர்ந்தது ஓர் தாலூகாவும், பல தாலூகாக்கள் சேர்ந்தது ஓர் ஜில்லாவும், பல ஜில்லாக்கள் சேர்ந்தது ஓர் இராஜதானியும், பல இராஜதானி சேர்ந்து நமது இந்திய தேசமாகிறது. வீட்டார்களின் ஜீவியமும், நல்லொழுக்கமும் எப்படியோ, அப்படியே அந்த ஊரார், கிராமத்தார், தாலூகாக்காரர், ஜில்லாக்காரர், இராஜதானியார் இன்னும் சொல்லவேண்டுமானால் அத்தேசத்தார் யாவரின் ஜீவியமும், நல்லொழுக்கமும் இருக்கவேண்டுமென்று யாவரும் ஐயமறச்சொல்லலாம்.

நமது தேசத்திலுள்ள அநேக மகான்கள் நமது அழகிய தேசம் பல விஷயங்களில் சீர்திருத்தமடையவேண்டுமென்று சொல்லுகிறார்கள். வாஸ்தவத்திலே நமது தேசம் மாத்திரமல்ல, உலகம் முழுவதும் அநேக காரியங்களில் சீர்திருத்தமடையவேண்டியது மிகவும்

அவசியமாயிருக்கிறது. எந்தத்தேசம் சீர்திருத்தமடைய வேண்டுமென்றாலும் அதைப் பற்றி அந்தந்தத் தேசத்தின் குடிகளை சிறுபிராயமுதல் மடியிலும், மார்பிலும், பக்கத்திலும் வைத்து பழக்கி வளர்ப்பித்து வருகிற தாய்மாரிடமே பேசவேண்டியது மிகவும் அவசிய மென்பது யாவருக்கும் சொல்லாமல் தெரிந்த காரியமே. இப்படிப்பட்ட சீர்திருத்தங்களை ஒவ்வொன்றாக அடிக்கடி இப்பத்திரிகையின் மூலமாய் எழுதி என் சுயதேச சகோதரிகளிடம் நெருங்கி இருந்து பேசலாமென்று எண்ணுகிறேன்.

முதலாவதாக, தாய்மாராகிய நாம் ஒவ்வொரு குடும்பத்திலும் எவ்வளவு பொறுப்பான ஸ்தானத்தில் வைக்கப்பட்டிருக்கிறோமென்பதை நன்கு உணருவோமாக. நாமே வீட்டுக்கு அரசியாயிருக்கிறோம். நமது புருஷன் வீட்டிலிருக்கும் நமக்கும், கடவுள் நமக்கு கொடுத்திருக்கிற நமது அருமை பிள்ளைகளுக்கும், ஆகாரம், உடுப்பு, கல்வி முதலியவைகளுக்கு வேண்டிய பணத்தைத் தேடும்படி காலை முதல் மாலை வரை வெய்யிலோ, மழையோ, காற்றோ பாராமல் அங்குமிங்கும் ஓடித்திரியும்போது, தாய்மாராகிய நாம் வெய்யிலுக்கும், மழைக்கும், காற்றுக்கும் வெகு பந்தோபஸ்தாய்க் கட்டப்பட்டிருக்கிற நமது வீட்டில் யாதொரு சந்தடியுமன்றி வெகு பத்திரமாயும், மிகச் சந்தோஷமாயுமிருக்கிறோம். இப்படி இருக்கப்பட்ட நமது இடத்திலே முதலாவதாக நமது வேலையை ஆரம்பிப்போமாக. அநேகர் முதல்வேலை எதுவென்று யோசிக்கலாம். தேவாதிதேவன் ஆதியிலே இப்பூலோகத்தை உண்டாக்கும்போது அவர் செய்ய ஆரம்பித்த முதல் கிரியை 'ஒழுங்கே.' அதாவது ஒழுங்கின்மையாயிருந்த உலகத்தை ஒழுங்குப்படுத்தினார். மேலும், பரலோகத்தில் முதல் சட்டமும் ஒழுங்காம். அப்படியே நாமும் நமது வீட்டுக்காரியங்களை ஒவ்வொன்றையும் ஒழுங்குப்படுத்தவேண்டும். முதலில் வீட்டிலுள்ள ஒவ்வொரு ஜாமான்களையும் ஒழுங்காய் வைப்போமாக. ஒவ்வொரு ஜாமான்களுக்கும் ஒவ்வொரு இடம் குறிப்பிட்டிருக்கவேண்டும். குறிக்கப்பட்ட இடங்களில் குறிக்கப்பட்ட ஜாமான்களைத் தவறாமல் வைக்கவேண்டும். கட்டில் போடவேண்டிய இடத்தில் கட்டிலும், தொட்டில் போடவேண்டிய இடத்தில் தொட்டிலும், பெட்டி வைக்கவேண்டிய இடத்தில் பெட்டியும், இன்னும் தவலை, செம்பு, பானை, சட்டி, முறம், விளக்கு, எண்ணெய் சீசா, தீப்பெட்டி, உப்புமரவை, ஊசி, கத்தரிக்கோல், தையல்பெட்டி, துடைப்பம் (வாருகோல்,) முதலியவைகள் யாவற்றிற்கும் தவறாமல் இடமிருக்கவேண்டும். இவைகள் யாவற்றிற்கும் ஒவ்வொரு இடம் குறிப்பிட்டு அந்தந்த ஜாமான்களை அந்தந்த இடங்களில் வைக்கவேண்டும். எத்தனையோ வீடுகளில் காலை விழித்து எழுந்த நேரமுதல் சுமார் ஒருமணி நேரம் வரைக்கும், துடைப்பத்தைக் கண்டீர்களோ, கண்டீர்களோவென்று வீட்டில் புருஷன் முதல் பிள்ளைகள் யாவற்றையும் விசாரித்து இன்னும் அடுத்தவீடு அண்டை வீட்டுக்காரிடத்திலும் நீங்கள் என் துடைப்பத்தைக் கண்டீர்களோவென்றும், நேற்று சாயந்தரம் என் கையில் வைத்திருந்தேன், கடைசியாக முற்றத்தை வாரி தள்ளிப்போட்டு கையிலே கொண்டுவந்தேன்; எதிலேயோ வைத்துவிட்டேன்; நான் நினைக்கிறேன் என் இடது கையைக்கொண்டு வைத்தேன்போல் தெரிகிறது; அதுதான் வைத்த இடம் ஞாபகம் இல்லையென்றும்; குப்பை வாரிப்போடும் முறத்தை அல்லது பெட்டியைக் கண்டீர்களோ என்றும் அலைகிற என் அருமைச் சகோதரிகளின் தொகைக்குக் கணக்கில்லை. இப்படியே மாலை மயங்கும்போது, விளக்கு எண்ணெய் சீசா, தீப்பெட்டி முதலியவைகளை மணிக் கணக்குகளாகத் தேடி, அவைகள் நிமித்தம் வீட்டிலே அநாவசியமான கலகம், குழப்பம் உண்டாக்குகிற என் அருமைப் பெண்களின் இலக்கமும் ஓர் எண்ணுக்கும் அடங்காது. இதுபோக இன்னும் சற்றுப் படித்திருக்கிறதாக எண்ணிக்கொள்ளுகிற சகோதரிகளில் சிலரைப் பார்ப்போம். ஏதாவது திடீரென உண்டாகிற ஓர் அவசரத்தின் பேரில், அவர்களிடம் போய் அம்மா! உன் ஊசியையும் நூலையும் சற்று தயவுசெய்து தாவென்று கேட்டால்; வெகு அவசரமாய் ஓர் குறித்த இடத்தில் போய் வெகு உறுதி

யாய் எடுத்து வருகிறதாக வெகு துரிதமாய் போவார்கள். பிற்பாடு காத்து காத்து இருந்தாலும் போன அம்மாளைக் காணாமல் போகும். அம்மாவைக் காணோமேயென்று வீட்டினுள்ளேபோய் பார்க்கப்போனால், அவர்கள் கொல்லைப்பக்கத்தில் போய் காலையில் தான் வாரிப்போட்ட குப்பையைக் கிண்டிக்கொண்டிருப்பார்கள். என் அம்மா! நீங்கள் இங்கே வந்து என்ன செய்துகொண்டிருக்கிறீர்கள் என்றால்; அது அம்மா நேற்று மதியம் என் சட்டைக்கு ஓர் லேஸ் வைத்து தைத்துக்கொண்டிருந்தேன். அடுத்தவீட்டு பாப்பாத்தி அம்மாளும் வந்து கூடப் பேசிக்கொண்டே இருந்தார்கள். இருவரும் பேச்சிலும், தையலிலும் இருந்துவிட்டோம். அப்படி இருக்கும்போது திடீரெனப் பக்கத்து போலீஸ் ஸ்டேஷனிலும், பெரிய கோயிலின் கோபுரத்து மணியிலும் 12 அடித்துவிட்டது. பள்ளிக்கூடத்துக்குப்போன எங்கள் பையன்கள் திரும்பிவர நேரமாயிற்று. அவர்கள் 12 மணிக்கு வந்ததும் சாப்பாடு ஆயத்தமாயிருக்காவிட்டால் சனியன்கள் தலைப்பிறட்டாய் நிற்கும்; அந்த இழவில் நின்று முடியாது; ஆகையால்தான் மணி அடித்ததும் அந்த அம்மாளையும் வீட்டுக்குப் போகச்சொல்லிவிட்டு என் சட்டையையும், ஊசியோடு பக்கத்தில் கிடந்த சின்னக்கட்டிலிலே போட்டுவிட்டுப் போய், அவசரம் அவசரமாய் குழம்பைக் கூட்டி அடுப்பிலே வைத்தேன். நீங்கள் ஊசிக்கேட்டதும் எனக்கு இது ஞாபகம் வந்து தான் ஓடிப்போய் அந்தக் கட்டிலிலே பார்த்தேன். கட்டிலை அந்த இடத்தில் காணோம். யாரோ அதை எடுத்து இங்கே சமையல் அறை பக்கம் கொண்டுபோட்டு இருக்கிறது. நான் அதிலே போட்டிருந்த கோடிச்சட்டையைக் கசக்கி தரையிலே எறிந்திருக்கிறது. அது எங்கள் அக்காள் எனக்கு கொஞ்சம் காசு தரவேண்டியது இருந்தது; அதற்காகப் பட்டணத்திலிருந்த அத்தான் மூலமாய் வாங்கி அனுப்பினப் பட்டுத்துணி; சட்டையிலே நூல் தொங்கிறது; அதிலே கோர்த்திருந்த அந்த ஊசியைக் காணோம். போனவாரம் கடையிலே போய் நான் நாலு ஊசி வாங்கிக்கொண்டு வந்தேன். அதிலே இரண்டு ஊசி வாங்கிக்கொண்டுவந்த அன்றைக்கேக் காணோம். நேற்று மதியம் துணித்தைக்கப் போகும்போது ஒன்றுதானிருந்தது. இப்போது அதையுங் காணோம். பிசாசுதான் கொண்டுபோகுமோ; அது ஒரு ஆச்சரியமாய் இருக்கிறது. ஒருவேளை இன்று காலையில் எங்கள் வீட்டு வேலைக்காரப்பிள்ளை வீடு பெருக்கி வாரிப்போடும்போது, அது இதையும் சேர்த்து வாரிப்போட்டிருக்குமென்றுதான் இந்தக் குப்பையைக் கிண்டிப் பார்த்துக்கொண்டிருக்கிறேன். இவள் எங்கே இருந்து எங்கள் வீட்டை வாழவைக்க வந்தாளோ கழுதை; சவம் வந்த நாள்முதல் இப்படி எத்தனையோ சாமான்களை தொலைத்திருக்கிறது பிசாசு; மூதிக்குக் கண் முதுகிலேதான் இருக்குமோ!

ஐயோ! என் அருமைச் சகோதரியே!! நீ ஓர் படித்த பெண்ணாயிருந்தும் நான் ஓர் அவசரத்திற்கு கேட்ட ஓர் அற்ப சாமானுக்கு நீ எங்கே ஆரம்பித்து எங்கு வந்துவிட்டாய், எவ்வளவோ அநாவசியமும், அவலட்சணமுமான வார்த்தைகளைப் பேசியாயிற்று. உன் பாடும் இப்படித்தானா? இவைகள் யாவற்றிற்கும் காரணம் யார்? நீயே நன்றாய் யோசித்துப்பார். உன் அருமைப் பிள்ளைகளை முதலாய் என்ன வார்த்தையெல்லாம் சொல்லி விட்டாய். சரி இருக்கட்டும்.

ஓர் இந்திய சகோதரி.

(இன்னும் வரும்.)

---

1. "ராஜ்யத்தினுடைய இந்தச் சுவிசேஷம் பூலோகமெங்குமுள்ள சகல ஜாதிகளுக்கும் சாட்சியாகப் பிரசங்கிக்கப்படும், அப்போது முடிவு வரும்." மத்தேயு 24: 14.

சுகாதார விஷயங்கள்

O. SMITH, M. D. டாக்டர் சிமித்.

(LIQUOR PROHIBITION IN AMERICA.)

அமெரிக்காவில் மதுவிலக்கு

சில நாட்களுக்கு முன்பு அமெரிக்காவில் மயக்கந் தரும் எவ்வித மதுபானங்களையும் உண்டாக்கக்கூடாதென்று ஓர் சட்டம் பிறந்தது. கடந்த நாற்பது வருஷகாலமாக ஜனங்கள் இந்தச் சட்டத்தைப் பிறப்பிக்கப் பிரயாசைப்பட்டார்கள். கடைசியில் அது கைகூடினது. இந்தச் சட்டத்தைப் பிறப்பிப்பதால் வருமான வரி குறைந்துபோகுமென்று அநேக உத்தியோகஸ்தர் தடுத்தார்கள். மதுவிலக்கு சட்டம் பிறப்பிப்பதால் கொலை களவு முதலிய குற்றங்கள் குறைவுபடும் என்றும் ராஜாங்கத்திற்கு அப்போது அதிக செலவிராதென்றும் அநேகர் சொன்னார்கள். அது உண்மையென்று பின்வரும் விருத்தாந்தங்களினால் கண்டறியலாம்.

அமெரிக்காவின் ஓர் மாகாணத்து நியாயாதிபதி தன் கச்சேரியில் வேலையில்லாததினால் தன் வேலையை ராஜிநமா செய்துவிட்டார். அவருடைய பட்டணத்தில் மதுபானம் விற்கப்படாததினால் குற்ற விசாரணைக் கேஸ் ஒன்றுமில்லை யென்று முகாந்தரம் சொன்னார்.

சின்சினாட்டி (Cincinnati) என்னும் மாகாணத்தில் மதுபானம் விற்பனை செய்யப்பட்ட காலத்தில் கச்சேரியில் கொலை, களவு விசாரணைக்கு வரும் குற்றவாளிகள் சராசரி ஒரு நாளைக்கு நூறுபேர் என்று கணக்கிடப்பட்டிருக்கிறது. மதுவிலக்குக்குப் பிறகு சராசரி நாள் ஒன்றுக்கு பத்து குற்றவாளிகள் என்று கணக்கிடப்பட்டிருக்கிறது.

“மிஷிகான் மாகாணத்திலுள்ள டெடிராய்ட் (Detroit, Michigan) என்னுமிடத்தில் மதுவிலக்கு ஏற்படுத்தப்பட்ட முதல் வருஷத்தில் குற்றவாளிகளின் தொகை முந்தின வருஷத்தைவிட 1034 குறைவுள்ளதாகக் காணப்பட்டது. தற்கொலைக் குற்றத்தில் அகப்பட்ட குற்றவாளிகளின் தொகை முந்தின வருஷத்தொகையில் பாதிதான் இருந்ததாகவும், கன்னமிட்டுக் களவு செய்யும் குற்றவாளிகளின் தொகை முந்தின வருஷக் கணக்கைவிட 1000 குறைவாயிருந்ததாகவும், மதுபானம் விற்கப்பட்ட காலத்தில் 428 பிச்சைக்காரர் இருந்ததாகவும் மதுவிலக்கு ஏற்பட்ட பிற்பாடு 36 பிச்சைக்காரர் இருந்ததாகவும், முந்தின வருஷத்தில் மிதமிஞ்சிக் குடித்து வெறிகொண்டவர்கள் 7290 என்றும் ஆனால் அடுத்த வருஷத்தில் அவர்கள் தொகை 3624 என்றும், முந்தின வருஷத்தில் 132 மரண அபாயங்கள் என்றும் ஆனால் அடுத்த வருஷத்தில் அவைகளின் தொகை 84 என்றும், முந்தின வருஷத்தில் மோட்டார் வண்டியில் நேரிட்ட அபாயங்களில் பாதிதான் அதற்கடுத்த வருஷத்தில் நேர்ந்ததென்றும், முந்தின வருஷத்தில் நேரிட்ட அபாய மரணங்களில் மூன்றிலொருபங்குதான் அதற்கடுத்த வருஷத்தில் நேரிட்டதென்றும், லாகிரி வஸ்துக்களை மிதமிஞ்சி உபயோகித்ததினால் முந்தின வருஷத்தில் மாண்டவர்கள் 92 என்றும் அதற்கடுத்த வருஷம் 17 என்றும் கணக்கிடப்பட்டிருக்கிறது. இப்படி மதுவிலக்கினால் கொலை களவு அபாயமரணம் முதலிய யாவும் குறைவுபட்டு வரும்போது மதுவிலக்கு மனித சுயாதீனத்திற்கு தடையாயிருக்கிறதென்று சிலர் சொல்லுகிறார்கள்.

மாசெச்சிஷுசெட்ஸ் (Massuchusetts) என்னும் மாகாணத்தில் அநேக ஜில்லா ஜெயில்களெல்லாம் மூடப்பட்டுப் போனதாகவும் மீதியிருக்கப்பட்ட ஜெயில்களில் குற்றவாளிகள் ஒருவரும் வராமலிருக்கிறதினால் அவைகளும் சீக்கிரத்தில் சாத்தப்படுமென்றும் செய்தி வந்திருக்கிறது. ஒரு ஜெயிலில் சராசரி நாள் ஒன்றுக்கு 35 கைதிகள் விடுதலையாக ஒரே ஒரு கைதி மாத்திரம் குற்றவாளியாக உள்ளே அழைக்கப்பட்டானும். ஆகையால் அந்த ஜெயில் எவ்வளவு சீக்கிரத்தில் ஒரு குற்றவாளியுமில்லாமல் போகுமென்றும் நீங்களே நிதானித்துக் கொள்ளுங்கள்.

குற்றங்கள் எல்லாம் குறைந்துவர பாங்கியில் பணம் பெருகிறது. தொழில் துறைகளில் வியாபார விஷயங்கள் விர்த்தியடைந்து வருகிறது. “ஒகியோ மாகாணத்திலுள்ள டொலிடோ (Toledo, Ohis) என்னும் பட்டணத்தின் பாங்கியில் கடந்தவருஷம் ஜூலை

மாதத்தில் கணக்குகள் ஒழிக்கப்பட்டபோது கடந்த வருஷத்தைவிட இந்த வருஷத்தில் ஜாஸ்தியாய்ப் போடப்பட்ட பணம் 12,000,000 டாலர் என்று தெரிய வந்தது. இந்தத் தொகையைக் கணக்குப் பார்த்தால் தினசரி 400,000 டாலர் பாங்கியில் போடப்படுகிறதென்று அறியலாம். டொலிடோ பட்டணத்துப் பயிர் நில காரியக்காரர் பயிரை அறுவிடைசெய்ய கைதிகள் இல்லாததால் தான் பணம் கொடுத்து கூலியாட்களைக் கொண்டுவர வேண்டியதாயிற்று என்கிறார். மதுவில்க்கு ஏற்பட்ட பிறகு எல்லா சரக்குகளின் விற்பனையும் ஜாஸ்தியாகிவிட்டது. ஆனால் லாகிரி வஸ்துக்கள் விற்பனை குறைவுபட்டது. சிற்றுண்டி பானம் விற்போன், மிட்டாய்காரன், கசாப்காரன், சில்லரைக் கடைக்காரன், பயாஸ்கோப் படம் காட்டுகிறவர்கள் யாவருக்கும் மதுவிலக்கு சட்டம் ஏற்படுத்தப்பட்ட பிறகு விற்பனை 100-க்கு 25 வீதம் அதிகரித்திருக்கிறது. பாங்கியில் பணமும் 100-க்கு 25வீதம் அதிகரித்திருக்கிறது.

"முன்னே பட்டணங்களின் பெரிய போலீஸ் டாணுக்களில் குடிகாரரும் கயவாளிகளும், ஆண்டிப் பிச்சைக்காரரும் போக்கிரிகளும், கில்லாடிக் கூட்டத்தாரும் நூற்றுக் கணக்காய் அடைப்பட்டிருப்பார்கள். ஆனால் மதுவிலக்குக்குப் பிற்பாடு, போலீஸ்கார்ர்கள் இன்னும் ஒருவரையாவது பிடித்து அடைக்கவில்லை."

மதுவிலக்கு சட்டம் ஏற்படுத்துவது நல்லதல்லவென்று சிலர் சொல்லுகிறார்கள். மேற்கூறிய காரியங்கள் மதுவிலக்கினால் அமெரிக்காவுக்கு என்ன நன்மை உண்டாக்குகிறதென்பதை நன்கு விளக்குகிறது. அமெரிக்காவுக்கு நன்மையை விளைவிக்கும் விஷயம் மற்றெல்லா நாடுகளுக்கும் நன்மையையே விளைவிக்கும். அது இந்து தேசத்திற்குங்கூட நன்மையை உண்டாக்குமென்பதற்கு ஐயமில்லை.

G. G. L.

வி ய ா தி

தடுக்கும் விதம்.

வியாதியின் காரணத்தைப்பற்றி நாம் இதுவரைக்கும் சிந்தித்தோம். இப்பொழுது வியாதி நமது சரீரதிற்கு வாராவண்ணம் எப்படி தடுப்பதென்றும் அப்படி அவைகள் வரும்பட்சத்தில் என்ன செய்யவேண்டுமென்றும் சற்று சிந்திப்போம்.

முதலாவதாக நாம் நமது சாப்பாட்டைப்பற்றி ஜாக்கிரதையாயிருக்கவேண்டும். நமது உடலுக்கு ஊட்டத்தைத் தரும் உணவுகளை மாத்திரம் உட்கொள்ளவேண்டும். உடலுக்கு ஊட்டத்தையும் இரைப்பைக்கு அதிக கஷ்டத்தையும் கொடாதிருக்கிற உணவை சாப்பிடவேண்டும். இது உண்மையென்று யாவரும் ஒத்துக்கொள்வார்களல்லவா? நாம் நமது ஆகாரம் சாப்பிடுவதோடுகூட நமது சரீரத்தின் உள்ளே அமைக்கப்பட்டிருக்கும் அவயவங்களை எப்போதும் சுத்தமாய் வைக்கும்பபயாக சுத்தமான தண்ணீரை அடிக்கடி அருந்தவேண்டும்.

பிற்பாடு நன்றாய்த் தேக அப்பியாசம் செய்யவேண்டும். சுவாசாசயத்தையும் இரத்தத்தையும் எப்போதும் சுத்தமாய் வைக்கும்படியாக நல்ல ஆகாயத்தை உட்கொள்ளவேண்டும். நாம் தினந்தோறும் குறைந்தது ஒருமணி நேரம் சுத்த ஆகாயத்தில் தேக அப்பியாசம் செய்யவேண்டும். சுத்த ஆகாயத்தைப் பலமுறை உட்கொண்டு சுவாசாசயத்தை சுத்தி செய்யவேண்டும். அப்படி தேக அப்பியாசம் செய்து களைத்துப்போன பிற்பாடு ஜலதோஷம் பிடிக்காவண்ணம் போதுமான உடை உடுத்திக்கொள்ளவேண்டும்.

அடிக்கடி வெந்நீரில் ஸ்நானம் செய்யவேண்டும். ஸ்நானம் செய்த பிற்பாடு தேகத்தை நன்றாய் துடைக்கவேண்டும். பிற்பாடு தேகத்தில் காற்று படாவண்ணம் வஸ்திரம் கட்டிக்கொள்ளவேண்டும். குளிர்ந்த ஜலத்தில் தினந்தோறும் ஸ்நானம் செய்தால் நமது சருமங்கள் எப்போதும் சுத்தமாயிருக்கும்.

உடம்பு அசௌக்கியமாயிருப்பதாகக் காணப்பட்டால் அன்றைக்கு சாப்பிடாமல் ஆமணக்கெண்ணெய் குடித்தால் நல்லது. சுத்த ஜலமும் அடிக்கடி குடிக்கவேண்டும். அடுத்த நாள் முன் குடித்ததைவிட கொஞ்சம் குறைச்சலாக பேதிக்கு குடிப்பது நலம். சுத்த ஆகாயத்தில் தேக அப்பியாசம் செய்யவும் மறந்துபோகக்கூடாது.

நாம் கவனிக்கவேண்டிய இன்னொரு விஷயம் இருக்கிறது. சூரிய வெப்பத்தில் நாம் அதிகமாய் நடமாடவேண்டும். சூரிய வெளிச்சம் நமக்கு இன்றியமையாததாயிருக்கிறது. சூரிய வெளிச்சம் நமது வீடுகளில் தாராளமாய் உட்செல்லும்படியாக கதவு ஜன்னல்கள் யாவற்றையும் திறந்துவைக்கவேண்டும். வீட்டில் குளிராயும் இருளாயும் இருக்குமிடத்திலே உள்ள விஷக்கிருமிகளை கொல்லக்கூடிய சக்தி சூரிய வெப்பத்திற்குண்டு. இக்கிருமிகள் இருளும் சதுப்புமான இடத்தில் பலுகுகின்றன. அவைகள் நமது சரீரத்தினுட்சென்று நமக்கு வியாதியை உண்டாக்காதபடி சூரிய வெப்பம் அவைகளைக் கொன்றுவிடக்கூடும். நமது சரீரத்தைப் பேணுவதற்கு இவைகள் முக்கிய விஷயங்கள். இவைகளை நாம் அனுசரித்து வருவோமானால் நாம் சுக தேகிகளாயிருப்போமென்பதற்குச் சந்தேகமில்லை. இப்படிச் செய்வோமானால் நமது சரீரத்தில் வியாதி அவ்வளவு தோன்றாது.

டாக்டர் ஓ. சிமித்.

? கேள்விகளுக்கு விடை ?

நீங்கள் கேட்க மனதானால் திரும்பி வந்து கேளுங்கள்.

கேள்வி:—நாலு அல்லது ஐந்து மாதக் குழந்தைக்கு மாதத்திற்கு இரண்டொரு முறை ஓர்விதக் காய்ச்சல் உண்டாகிறது. அதின் காரண மென்ன? அதற்காக என்ன செய்யவேண்டும்.

உத்தரவு:—அக்குழந்தை ஓர்வேளை மலக்கட்டினால் அவஸ்தைப்படும். 'பாலைத் தவிர அதற்கு வேறே ஏதாவது ஆகாரங் கொடுக்கிறீர்களா? நாலு ஐந்து மாதக் குழந்தைக்கு பாலைத்தவிர வேறொரு ஆகாரமும் கொடுக்கக்கூடாது. பால்கூட ஒத்துக்கொள்ளாமல் குடித்தவுடன் வாந்தி யெடுக்குமானால் பால் குடிக்கக் கொடுக்கும்போதெல்லாம் அதில் கொஞ்சம் தெளிந்த சுண்ணாம்புத் தண்ணீர் கலந்து கொடுக்கவும். குழந்தைகளுக்கு மூன்று மணி நேரத்திற்கு ஒருதரம் பால் கொடுக்கவும். பிள்ளை மூன்று மணி நேரத்திற்குள்ளாக ஆகாரத்திற்கு அழுமானால் சுத்தமான சுடு தண்ணீர் கொஞ்சம் குடிக்கக் கொடுக்கவும். குழந்தைக்கு ஒரு நாளைக்கு இரண்டொருமுறை மலசுத்தியானால்தான் அதன் குடல்கள் சுத்தமாயிருக்கும். . சரியாக மலசுத்தி யாகாவிட்டால் அதின் விஷம் உடலில் தங்கி காய்ச்சல் உண்டாகிறது. அப்படிக் குழந்தைக்கு காய்ச்சல் ஆரம்பிப்பதைக் கண்டால் உடனே இரண்டு தேக்கரண்டி ஆமணக்கெண்ணெய் (விளக்கெண்ணெய் Castor-oil) கொடுக்கவும். அடுத்த நாள் ஒரு தேக்கரண்டியும் அதற்கடுத்தநாள் அரை தேக்கரண்டியும் கொடுக்கவும். குழந்தையின் குடல்கள் சுத்தமாயிருந்தால் காய்ச்சலே வராது.

கேள்வி:—சிறு குழந்தை ஆகாரம் சாப்பிட்டவுடன் எப்போதும் வாந்தி யெடுக்கிறது. அதற்காக என்ன செய்யவேண்டும்?

உத்தரவு:—ஒரு வேளை உங்கள் குழந்தைக்கு அடிக்கடி ஆகாரம் கொடுக்கிறீர்கள். இரண்டு மாதக் குழந்தைக்கு இரண்டு மணிக்கு ஒருதரம் ஆகாரம் கொடுத்தால் போதும். அதற்கிடையில் ஆகாரம் கொடுக்கக்கூடாது. மூன்று அல்லது மூன்றரை மாதக் குழந்தைக்கு மூன்று மணி நேரத்திற்கு ஒருதரம் ஆகாரம் கொடுத்தால் போதும். அடிக்கடி பால் குடிக்கக் கொடுப்பதினால் இரைப்பைக்கு ஜீரண சக்தி குன்றிப்போய் குழந்தை வாந்தி யெடுக்கிறது. ஆகையால் குழந்தையின் இரைப் பைக்கும் இளைப்பாறுதல் தேவை.

குழந்தைக்குத் தண்ணீர் கலக்காத பசும் பால் கொடுப்பதும் இரைப்பைக்குக் கெடுதிதான். பாதி சுடவைத்த பசும் பாலுக்கு பாதி சுடு தண்ணீர் கலந்து கொஞ்சம் தெளிந்த சுண்ணாம்புத் தண்ணீர் (Lime Water) விட்டுக் கொடுக்கவேண்டும். அப்படிக் கொடுத்தும் குழந்தை வாந்தி யெடுக்குமானால் ஒரு பங்கு பசும் பாலுக்கு இரண்டு பங்கு சுடு தண்ணீரும் கொஞ்சம் தெளிந்த சுண்ணாம்புத் தண்ணீரும் விட்டுக் கொடுக்கவேண்டும். குழந்தை அதையும் தாங்கக்கூடாவிட்டால் ஒரு நாளைக்கு சுடுதண்ணீர் குடிக்கக் கொடுத்து ஆசன துவாரத்தின் வழியாய் கொஞ்சம் சோப்புத் தண்ணீர் செலுத்தவேண்டும் (Enema) சோப்புத் தண்ணீர் வெளியானவுடன் பிற்பாடு சுடு தண்ணீரை சற்று ஆறவைத்து ஆசன துவாரத்தின் வழியாய் மறுபடியும் செலுத்தவேண்டும். பிற்பாடு குழந்தை இரண்டு மாதமாயிருந்தால் அதற்கு ஒரு தேக்கரண்டி விளக்கெண்ணெயும் மூன்று முதல் ஆறு மாதக் குழந்தையாயிருந்தால் இரண்டு தேக்கரண்டியும் ஆறு மாத முதல் ஒரு வருஷக் குழந்தை வரைக்கும் மூன்று தேக்கரண்டியும் கொடுக்கவேண்டும். அடுத்த நாள் காலையில் முந்தின நாள் கொடுத்ததில் பாதி விளக்கெண்ணெய் கொடுக்கவேண்டும். இப்படியாக இரைப்பைக்கு ஒருநாள் இளைப்பாறுதல் கொடுத்தபிறகு ஒரு பங்கு பசும் பாலுக்கு இரண்டு பங்கு ஜலமும் கொஞ்சம் தெளிந்த சுண்ணாம்புத் தண்ணீரும் கலந்து கொடுக்கவேண்டும். இப்பொழுது குழந்தை வாந்தி யெடுக்காவிட்டால் இரண்டொருநாள் கழித்து ஒரு பங்கு பாலுக்கு ஒரு பங்கு தண்ணீரும் கொஞ்சம் தெளிந்த சுண்ணாம்பு தண்ணீரும் கொடுக்கவேண்டும். இப்படியாக ஆகாரம் கொடுக்கும்போதெல்லாம் தெளிந்த சுண்ணாம்புத் தண்ணீரைக் கலந்து கொடுக்க மறக்கக்கூடாது. ஏனெனில் சுண்ணாம்புத் தண்ணீருக்கு பாலை ஜீரணிக்கச் செய்யும் சக்தியிருக்கிறது.

டாக்டர், ஓ. சிமித்.

நிகழ்கால சத்தியம்

வேத சன்மார்க்க சுகாதார விஷயங்களில் தற்கால அறிவுக்கொத்தபடி மனிதர் அபி விருத்தியடைவதற்கென்று பிரசுரமாகும் ஓர் பத்திரிகை.

மதராஸ் அக்டோபர்மீ, 1920.

இப்பத்திரிகை, பெங்களூரிலிருக்கும், எஸ். டி. ஏ. பப்ளிஷிங்கவுஸ்காக, பட்டணத்தில் வெப்பேரி என்னுமிடத்திலுள்ள அல்பீனியன் அச்சாபீசில் அச்சடிக்கப் பட்டு வருகிறது.

பத்திராதிபர் பாஸ்றர், ஜி. ஜி. லௌரி.
உதவி ,, ,, ஈ. டி. தாமஸ்.
மானேஜர், எல். சி. ஷெப்பர்டு, பி. ஏ.

	ரூ.	அ.	ப.
தனிப்பிரதி ஒன்றுக்கு ...	0	1	6
வருஷ சந்தா, தபாற் கூலி உள்பட ...	1	0	0
சிங்கப்பூர் பினங்கு முதலிய வெளி ஊர்களுக்கு தனிப் பிரதி ஒன்றுக்கு ...	0	2	0
வருஷசந்தா தபாற்கூலி உள்பட ...	1	4	0

நோட்டீஸ்.

இதனால் சகலருக்கும் தெரிவிப்பது யாதெனில் நிகழ்கால சத்தியம் என்னும் பத்திரிகை இது முதல் ஓர் மாதாந்தரப் பத்திரிகையாக வெளிப்படும். இனிவரும் பத்திரிகைகளில் அநேக இனிய விஷயங்கள் வெளியிடப்படும். உங்கள் சந்தா முடிவு பெறுமானால் உடனே புதுப்பித்துக் கொள்ளுங்கள். ஒரு வருஷத்திற்கு தபாற்கூலி உட்பட விலை ரூ. 1. இந்தப் பத்திரிகையை உங்கள் நண்பர்களுக்குக் காட்ட மறக்க வேண்டாம்.

பத்திராதிபர்.

சமாசாரக் குறிப்புகள்.

(NEWS AND NOTES)

இலங்கைத்தீவிலே போ (Bo) என்னும் ஒரு மரம் இருக்கிறது. அது 2,250 வருஷமாக அங்கே யிருக்கிறதாக சொல்லப்படுகிறது.

கல்குத்தாவின் சுற்றுப்பக்கங்களில் மழை அதிகமாகப் பெய்ததினால் ஆறுகளில் கரைபிரண்டு வெள்ளம் அதிகரித்தது. இந்தப் பிரவாகத்தினால் ஆயிரக்கணக்கான ஜனங்கள் தங்கள் வீடுவாசல்களையும் ஜாமான்கள் யாவற்றையும் இழந்திருக்கிறார்கள்.

பஞ்சாப் நாட்டில் நடந்த கலகத்தில் ஏறக்குறைய 1000 பேர் ஆங்கிலேய வீரர்களாலும் சுதேச படை வீரர்களாலும் சுட்டு கொல்லப்பட்டார்கள். இப்படி செய்யும்படியாக வீரர்களுக்குக் கட்டளையிட்ட சேனாதிபதி ஓர் தப்பிதம் செய்தாரென்று ராஜாங்கத்தார் அவரைத் தண்டிச்சார்கள்.

இங்கிலாந்தின் சிம்மாசனத்துக்குறியவராகிய உவேல்ஸ் இளவரசர் இந்த வருஷம் இந்தியாவுக்கு வரமாட்டார். இப்பொழுது அவர் ஆஸ்ற்றிரேலியாவிலிருக்கிறார். அவர் கொஞ்சம் சுகயீனமாயிருக்கிறதினால் இந்தியாவுக்கு வர முடியாது.

ஐயர்லாந்திலுள்ள ஜனங்கள் இன்னும் சுய அரசாட்சிக்காக சண்டையிட்டுக்கொண்டிருக்கிறார்கள். அவர்கள் ஆங்கிலேய அரசாட்சியிலிருந்து தங்களை முழுவதுமாய் பிரித்துக்கொள்ள விரும்புகிறார்கள். அமெரிக்காவைப்போல் தங்களுக்கும் குடியாசு வேண்டுமென்று விரும்புகிறார்கள்.

அமெரிக்காவிலே, சாராயம் கலந்த எந்த மதுபானத்தையும் செய்தாலும் அல்லது விற்றாலும் அபராதமும் சிறைச்சாலையுமே அதற்கு விதிக்கப்படும் தண்டனை. ஆகவே இப்பொழுது அங்கே குடிகாரரைக் காண்பதரிது. இதன் பலனாக அமெரிக்காவில் குற்றங்கள் அதிகமாகக் குறைந்துகொண்டே வருகிறது. அநேக ஜெயில்களில் இப்பொழுது குற்றவாளிகளைக் காணோம். அமெரிக்காவுக்கு நன்மை பயக்கும் ஓர் காரியம் இந்தியாவுக்கு நன்மையையே உண்டுபண்ணுமென்பதற்கு ஐயமில்லை.

நிகழ்கால சத்தியம்.

Vol. IX. மதராஸ்:—நவம்பர்மீ, 1920. No. 7.

(AMERICA'S WAR PREPARATION.)

அமெரிக்கரின் யுத்த முயற்சி

சமாதானம்! ராஜ்யங்களின் ஐக்கியம்! இனி சண்டை கிடையாது! என்று ஆர்ப்பரித்தவர்களில் அமெரிக்கரும் ஒருவரென்பது நம்மெல்லாருக்கும் தெரிந்த விஷயம். அமெரிக்காவிலே அநேக சமாதான சங்கங்கள் ஏற்படுத்தப்பட்டிருக்கிறது. இச்சங்கங்களின் தலைவர்கள் ராஜ்யங்கள் யாவும் இனி யுத்த ஆயுதங்கள் உபயோகிக்கக்கூடாதென்று ஆர்பாட்டம் செய்கிறார்கள். ஆனால் அநேகர் இனி சண்டையில்லாத சமாதானம் வேண்டுமென்று விரும்பும்போது அமெரிக்கர் யுத்த ஆயத்தங்கள் செய்வது விபரீதமாய்த் தோன்றுகிறது. அமெரிக்காவிலும் மற்ற தேசங்களிலுமுள்ள அநேகர் இதன் தாற்பரியம் என்ன? என்று கேட்கிறார்கள். மகா பெரிய ஐரோப்பிய யுத்தம் முடிவடைந்த உடனே அமெரிக்கர் ஏன் யுத்தக் கப்பல்களைக் கட்டவேண்டும். இதர ராஜ்யங்கள் தங்கள் குடி ஜனங்களுக்காக வீடுகளைக் கட்டி, வியாபாரத்தை ஸ்திரப்படுத்தும்போது அமெரிக்கர் யுத்தக் கப்பல்களைச் செய்துகொண்டிருக்கிறார்கள். சமீப காலத்தில் அவர்கள் ஒரு பெரிய யுத்தக் கப்பலைக் கட்டி முடித்தார்கள். அது உலகத்தில் உள்ள எந்த யுத்தக் கப்பல்களைப்பாக்கிலும் பிரமாண்டமானது. அமெரிக்கா உலகத்தில் மிக வல்லமையான ராஜ்யமாய் விளங்கவேண்டுமென்று அமெரிக்க யுத்த பிரதிநிதி சொல்லுகிறார்.

இந்த விஷயத்தைக் கருத்தாய் ஆராய்கிறவர்களுக்கு இந்த மகா பெரிய யுத்தம் முழுவதுமாக நடந்தேறவில்லை என்பது தெரியவரும். இந்த ஐரோப்பிய யுத்தம் முடிந்தபோது அநேகர் இனி யுத்தம் ஒருபோதும் உண்டாகாதென்று சொல்லிக்கொண்டார்கள். யுத்தம் செய்து ஜனங்கள் சலிப்படைந்ததினால் சமாதானத்தைச் சந்தோஷமாக ஏற்றுக்கொள்ளுவார்களென்று ஜனங்கள் நினைத்தார்கள். ஆனால் அது அப்படியல்ல. மனிதர் உலகத்தில் சஞ்சரிக்கும் வரைக்கும் சண்டை நிலைத்திருக்கும்.

கிறிஸ்து தமது இரண்டாம் வருகைக்குமுன் சம்பவிக்கும் அடையாளங்களைப்பற்றிப் பேசும்போது யுத்தத்தை விசேஷித்துப் பேசுகிறார். அவருடைய வருகைக்கும் உலகத்தின் முடிவுக்கும் அடையாளம் என்னவென்று சீஷர்கள் கேட்டபோது இயேசு அவர்களுக்குப் பிரதியுத்தரமாக: "ஜனத்துக்கு விரோதமாய் ஜனமும், ராஜ்யத்துக்கு விரோதமாய் ராஜ்யமும் எழும்பும்; பஞ்சங்களும் கொள்ளைநோய்களும், பூமி யதிர்ச்சிகளும் பல இடங்களில் உண்டாகும்" என்றார். (மத். 24: 7). நாம் இப்பொழுது உலகத்தைப் பார்ப்போமானால் கிறிஸ்து சொன்னவைகள் யாவும் நிறைவேறுகிறதைக் காண்கிறோம். யுத்தத்தின் பயங்கர சேதங்களை நாம் எங்கும் பார்க்கிறோம். ஜனங்கள் யுத்தத்துக்கு ஆயத்தப்படுவதைப்பற்றிக் கேள்விப்படுகிறோம். இவற்றின் தாற்பரியம் என்ன? இந்தக்

கேள்விக்கு ஒரே ஒரு உத்தரவு உண்டு. நாம் உலகத்தின் முடிவுக்குக் கிட்டிச் சேருகிறோம் என்பதே அந்த உத்தரவு. இவை யாவும் முடிவை முன் குறிக்கும் அடையாளங்கள்.

ராஜ்யங்கள் யாவும் யுத்தத்திற்காகவும் இரத்தஞ் சிந்துதலுக்காகவும் ஆயத்தம் செய்து தீவிரிக்கும்போது நாம் நம்மை கிறிஸ்துவின் இரண்டாம் வருகைக்காக ஆயத்தம் பண்ண வேண்டும்.

G. G. L.

(THE ORIGIN AND END OF EVIL.)

பாவ உற்பத்தியும் அதின் முடிவும்.

பாவம் என் உலகத்தில் வந்ததென்பது முழு மனித ஜாதிக்கும் ஓர் பெரிய இரகசியமாயிருக்கிறது. இந்த இரகசியத்தை வெளிப்படுத்த எண்ணி ஒவ்வொரு மதத்திலுள்ள தொண்டர்கள் யாவரும் வீண் தேற்றமான விஷயங்களை எடுத்துரைக்கிறார்கள். இந்த விஷயத்தைப்பற்றி ஆழ்ந்த யோசனை செய்தாலும் பாடுகளுக்கும் வருத்தங்களுக்கும் சரியான காரணம் என்ன என்று கண்டு பிடிக்க முடியாதவர்களாயிருக்கிறார்கள். இந்தக் கேள்விக்கு சரியான உத்தரவு அகப்படாததினால் கிறிஸ்தவர்கள் தேவனுடைய ஞானத்தையும் கிருபையையும் நம்பாமல் அவருடைய பரிசுத்த வசனத்தில் சொல்லப்பட்டிருக்கும் சத்தியங்களைத் தள்ளிப்போடுவதற்கு இதை ஒரு சாக்காக வைத்துக்கொள்ளுகிறார்கள். ஆனால் தேவன் தமது திருவசனத்திலே பாவ உற்பத்தியையும் அது உலகத்திற்கு எப்படி வந்ததென்பதையும்பற்றிச் சொல்லியிருக்கிறார். பாவத்தினால் உலகம் எப்படிப் பாழாய்ப்போனதென்று அதில் சொல்லியிருக்கிறார். கடைசியாக பாவம் நிர்மூலமாகி துன்பமும் துக்கமும் பாடும் சஞ்சலமும் இனி ஒருபோதும் தோன்றாதென்றும் சொல்லியிருக்கிறார். பாவம் உலகத்தில் என் வந்ததென்பதற்கு தகுந்த காரணம் சொல்ல முடியாது. ஆனால் தேவன் தமது ஜனங்களை ஞானமாயும் அன்பாயும் நடத்துகிறாரென்று வேதத்தில் திட்டமாக வெளிப்படுத்தியிருக்கிறது.

எல்லாரும் நியாயப்பிரமாணத்துக்குக் கீழானவர்கள்.

சர்வ லோகங்களிலும் பிரமாணத்துக்குக் கீழ்ப்படாத வஸ்து ஒன்றுமேயில்லை. சூரிய சந்திர நட்சத்திராதிகளும் ஏனைய வானராசிகளும் ஆதியில் சிருஷ்டிகர் நியமித்த பிரமாணத்திற்கு ஒத்ததாகவே நடக்கின்றன. நமது பூமியும் ஓர் பிரமாணத்திற்கு ஒத்தபடியே தன் மண்டலத்தில் சலனமாகிறது. பூமியின் சலன சக்தியை சாஸ்திரிகள் கண்டு பிடித்தார்கள். அவர்கள் பூமியை சலனிக்கச் செய்யவில்லை. அல்லது அதை மாற்றவில்லை. ஏனெனில் தேவன் உண்டாக்கினதை மனிதன் மாற்ற முடியாது. உலகமும் ஒரு பிரமாணத்திற்கு ஒத்தபடி இயங்குகிறது. சாஸ்திரிகள் இந்த சலன சக்தியைக் கண்டறிந்த பிற்பாடு அநேக முக்கியமான விஷயங்களைக் கண்டு பிடித்தார்கள். உலகத்தில் காணப்படும் எல்லா லோகப்பொருட்களும் பல பொருட்களின் சம்பந்தத்தால் உண்டாயிருக்கின்றன. சில விதிகளுக்கொத்தபடி சம்பந்தப்பட்டால்மாத்திரமே, பல லோகப் பொருட்கள் மற்றொரு லோகப்பொருளாக மாறும். அந்த விதிகளுக்கு மாறாக சாஸ்திரிகள் சில லோகப் பொருட்களைச் சம்பந்தப்படுத்தினால் அதனால் வேறு லோகப் பொருள் உண்டாகாதென்பது திண்ணம். ஏனெனில் இயற்கை விதியாகிய தேவ பிரமாணம் மாறாததாயிருக்கிறது. தேவன் சர்வ லோகங்களையும் தாம் ஆதியில் நியமித்த பிரமாணத்தின்படி இயங்கச் செய்கிறாரென்பதற்குச் சாஸ்திரம் சாட்சியாயிருக்கிறது.

உயிரற்ற வஸ்துக்கள் சிருஷ்டிப்பின் விதிக்குக் கீழ்ப்பட்டதாயிருக்கும்படியாக சிருஷ்டிக்கப்பட்டதுபோல, உயிருள்ள வஸ்துக்களும் ஓர் பிரமாணத்திற்குக் கீழ்ப்பட்டிருக்கிறது

சிருஷ்டிப்பினாலே சிருஷ்டிகருக்கும் சிருஷ்டிகளுக்கும் முன் இராத ஓர் சம்பந்தம் ஏற்பட்டிருக்கிறது. சிருஷ்டிகள் யாவும் தங்கள் சிருஷ்டிகருக்குக் கீழ்படியும்படியாக சிருஷ்டிப்பிலேயே ஓர் பிரமாணம் ஏற்படுத்தப்பட்டிருக்கிறது. உலகமும் மனுஷ ஜாதியும் சிருஷ்டிக்கப்பட்டபோது இன்னும் அதிகமான சம்பந்தம் உண்டாகத் தலைப்பட்டது. இது தேவனுக்கும் மனிதனுக்கும் உள்ள சம்பந்தத்தையும், மனிதனுக்கும் மனிதனுக்குமுள்ள சம்பந்தத்தையும் குறிக்கிறது. சிருஷ்டிப்பினாலே மனிதன் தேவ பிரமாணத்திற்குக் கட்டுப்பட்டவனாகிறான். அதனால் அவன் தேவனுக்கும் மற்ற மனிதருக்கும் செய்யவேண்டிய கடமைகள் ஏற்படுகிறது. இந்தக் கடமைகளடங்கிய பிரமாணங்களைத் தேவன் மனித பாஷையில் இயம்பினார். அதற்குப் "பத்துக் கற்பனைகள்" என்று பெயர்.

பத்துக் கற்பனைகளின் உற்பத்தி.

சீனாய் மலையில் தேவன் மோசேக்குக் கற்பலகைகளில் எழுதிக்கொடுத்தபோதுதான் பத்துக்கற்பனை ஆரம்பமாயிற்றென்று கிறிஸ்தவர்கள் போதிக்கிறார்கள். இது உண்மையல்ல. ஏனென்றால் சிருஷ்டிப்பினால் இந்தப் பிரமாணம் உற்பத்தியாயிற்று. இது உண்மையாதலால் இந்தப் பிரமாணத்தை தேவனாலும் மாற்ற முடியாது. தேவன் அதை மாற்ற வேண்டுமென்றாலும் மனித ஜாதி யாவும் அழிக்கப்படுமுன்னதாக அதை மாற்ற முடியாது. இந்தக் கற்பனைகளில் முதல் நான்கு கற்பனைகளில் மனிதன் தேவனுக்குச் செலுத்தவேண்டிய கடமைகளைக் குறித்தும், மற்ற ஆறு கற்பனைகளில் மனிதன், மனிதனுக்குச் செலுத்த வேண்டிய கடமைகளைக் குறித்தும் சொல்லப்பட்டிருக்கிறது. பிரமாணம் இருக்கவேண்டியதின் அவசியத்தை ஒருவன் அறிந்துகொள்ளுவானானால் பத்துக் கற்பனைப் பிரமாணம் மாறாததென்பதையும் அதின் உற்பத்தியையும் இலேசாக அறிந்துகொள்ளலாம். சீனாய் மலையில் பத்துக் கற்பனை மோசேயின் மூலமாய்க் கொடுக்கப்படுமுன்னதாகவே இருக்கிறதென்பதை ரூபிக்க சில வேத வசனங்களை அடியில் எடுத்துரைப்போம்.

அந்நிய தெய்வங்களை விலக்கிப்போடும்படியாக யாக்கோபு தன் வீட்டாரனைவருக்கும் புத்தி சொன்னதாக ஆதி. 35: 2-4-ல் பார்க்கிறோம். "என்னையன்றி உனக்கு வேறே தேவர்கள் உண்டாயிருக்கவேண்டாம்" என்று கற்பனை சொல்லுகிறது. யாக்கோபின் குடும்பத்தார் தேவனையன்றி "வேறே தேவர்"களை வைத்திருந்தார்கள். இது ஒரு பாவம். ஏனெனில் நியாயப்பிரமாணத்தை மீறுகிறது பாவம் (1 யோவா. 3: 4). யாக்கோபு தன் வீட்டாரைச் சுத்தம்பண்ணிக்கொள்ளும்படியாகச் சொன்னான். இஸ்ரவேல் புத்திரர் வனாந்தரத்தில் பிரயாணம் பண்ணின காலத்தில் தேவன் அவர்களை வான அப்பமாகிய மன்னாவினால் போஷித்தார். வாரத்தின் ஆறாம் நாளிலே இரண்டத்தனையாக மன்னா வருஷிக்கப்பட்டது. ஆனால் ஏழாம் நாளிலே மன்னா பெய்யவில்லை. தேவன் கொடுத்த கட்டளைக்கு விரோதமாக சிலர் ஏழாம் நாளிலே மன்னாவைத் தேடப்போனபோது கர்த்தர் "என் கட்டளைகளையும் என் பிரமாணங்களையும் கைக்கொள்ள எந்தமட்டும் மனதில்லாதிருப்பீர்கள்" என்று சொன்னார். யாத். 16: 27, 28. யோசேப்பின் சகோதரர்கள் திருடுகிறதற்கு அஞ்சினார்களென்று ஆதி. 44: 8-ல் பார்க்கிறோம். திருடுவது பாவம் என்பதைக் காட்டும்படியான ஓர் பிரமாணத்தை அவர்கள் அறிந்திராவிட்டால் அவர்கள் திருட பயந்திருக்கமாட்டார்கள். "கொலை செய்யாதிருப்பாயாக" என்று ஆறாம் கற்பனை சொல்லுகிறது. இந்தக் கற்பனையை மீறினதினால் காயீன் பாவம் செய்து தண்டனைக்குள்ளானானென்று ஆதியாகமம் 4-ம் அதிகாரத்தில் பார்க்கிறோம். சீனாய் மலையில் மோசேக்குக் கற்பலகைகளில் எழுதிக்கொடுக்கு முன்னதாகவே பத்துக்கற்பனை யாவும் இருந்ததென்று இன்னும் அநேக திருஷ்டாந்தங்களினால் ரூபகாரப்படுத்தலாம்.

சிருஷ்டிப்பில் இந்தப் பிரமாணம் ஏற்பட்டிருப்பதினால் சிருஷ்டிப்பிலிருந்தே இது இருந்து வருகிறதென்பதற்குச் சந்தேகமில்லை. சிருஷ்டிகருக்கும் சிருஷ்டிகளுக்கும் ஏற்

பட்டிருக்கிற சம்பந்தத்தினால் இந்தப் பிரமாணம் ஏற்பட்டிருக்கிறபடியினால் சிருஷ்டிகரும் சிருஷ்டிகளும் உள்ளவரைக்கும் அப்பிரமாணத்தை அழிக்கவாவது மாற்றவாவது முடியாது.

பிரமாணத்தைக் கைக்கொண்டால் ஆசீர்வாதம், மீறினால் தண்டனை.

இராஜாங்க, அல்லது ஜன சங்கத்துக்கடுத்த பிரமாணங்களைக் கைக்கொள்ளுகிறவர்களுக்குச் சன்மானமும் அசட்டைபண்ணுகிறவர்களுக்குத் தண்டனையும் விதிக்கப்படுவது போல, தேவ பிரமாணத்திற்கும் உண்டு. இந்தப் பிரமாணத்திலே, ராஜாவும் அவருடைய ராஜ்யத்தின் குடிகளும் இருக்கிறார்களென்று குறிப்பிடப்பட்டிருக்கிறது. "ஆதியிலே தேவன் வானத்தையும் பூமியையும் சிருஷ்டித்தார்" என்று ஆதியாகமம் முதலாம் அதிகாரத்தில் சொல்லப்பட்டிருக்கிறது. தேவன் எல்லாவற்றையும் சிருஷ்டித்தபடியினால் அவரே எல்லா வஸ்துக்களின்மேலும் ஆளுகை செலுத்தும் கர்த்தாவாயிருக்கிறார். தூதாக்களும், மனிதரும், மிருகங்களும் மரம் முதலானவைகள் யாவும் அவருடைய வார்த்தையின் வல்லமையினால் உண்டாக்கப்பட்டது. "பூமியெல்லாம் என்னுடையது" என்று சொல்லுகிறார். (யாத். 19: 5) உலக முழுவதும் தேவனுடைய இராட்சியமாயிருக்கிறது. வானங்களும் அவைகளிலுள்ள சர்வ சேனைகளும் அவரைச் சேர்ந்தது. வானத்திலும் பூமியிலுமுள்ள ஜீவராசிகள் யாவற்றிற்கும் அவரே ஆண்டவராயிருக்கிறார். தமது ராஜ்யத்திலுள்ள குடிகளுக்கென்றே தேவன் சிருஷ்டிப்பிலே தமது பிரமாணத்தை ஸ்தாபித்தார். அவர் கற்பனையில் தம்மை "தேவனாகிய கர்த்தர் நானே" என்று விளம்புகிறார். "வானங்கள், பூமி, சமுத்திரம்" அவருடைய ராஜ்யத்தின் எல்லையென்று பிரமாணத்தில் சொல்லப்பட்டிருக்கிறது. "அவைகளிலுள்ள எல்லாம்" தமது பிரஜைகளென்றும் பிரமாணத்தில் சொல்லப்பட்டிருக்கிறது. தேவன் தமக்கு மகிமையாகவும் இன்பமாகவும் இருக்கும்படியாக சர்வ லோகத்தையும் சிருஷ்டித்தார். தேவன் தமது ராஜாங்கத்தை உலக ராஜாங்கத்தைப்போல பலத்தில் அஸ்திபாரப்படுத்தாமல் அன்பால் அஸ்திபாரப்படுத்தியிருக்கிறார். ஆகையினால் ஜீவ ராசிகள் யாவும் தங்கள் சுய இஷ்டத்தின்படி தேவனை உண்மையாய்ப் பற்றிக்கொண்டு அவர் அன்பில் நிலைத்திருக்கலாம். அல்லது தேவனைத் தங்கள் ராஜா அல்லவென்று தள்ளிவிடவேண்டுமென்று விரும்பினாலும் அப்படியே செய்யலாம். தேவன் அவர்களை இரண்டிலொன்றைத் தெரிந்துகொள்வதற்கு சுயாதீனமுடையவர்களாகச் சிருஷ்டித்திராவிட்டால் அவருடைய அன்பையும் கிருபையையும் சிருஷ்டிகளால் அறிந்துகொள்ளமுடியாது. இப்படி அவர்களைச் சிருஷ்டித்திராவிட்டால் அவர்கள் தேவனுக்குக் கீழ்படியாமலிருக்கவேண்டுமென்று விரும்பினாலும் அவர்கள் அப்படிச் செய்யக்கூடாதவர்களாயிருப்பார்கள். அப்பொழுது அன்பல்ல வல்லமையே அவருடைய ராஜ்யத்தின் அஸ்திபாரமாயிருக்கும். அப்படி ஜனங்கள் தங்கள் சுய இஷ்டத்தின்படி தேவனை ஏற்றுக்கொள்ளவோ அல்லது தள்ளிவிடவோ கூடாத நிலைமையிலிருக்கும்போது ஒரு பிரமாணம் இருக்கவேண்டிய அவசியமிராது.

(இன்னும் வரும்.) ——— இ. எம். மெலீன், பீ.ஏ.

(HEARD IN A PASTOR'S STUDY)

ஐயரின் அறையில் கேள்விப்பட்டது.

(தொடர்ச்சி).

(அடுத்த நாள் காலையில் ஐயர், சபை உதவிக்காரர்களில் இருவரையும், உபதேசியாரையும், மூன்று மூப்பனாரையும், பள்ளிக்கூட உபாத்தியாயரையும் மிசியோன் விஷயமாகப் பேசும்படியாக ஒன்பது மணிக்குத் தன் வீட்டிற்கு வரும்படியாக் ககட்டளையிட்டார். இவர்களுடைய சபை விஷயங்கள் பேசி முடியு முன்னதாக, சத்திய நாதனும் அவன் மாமன் செல்வநாதனும், புஸ்தகம் விற்பவரைக் கூட்டிக்கொண்டு தாங்கள் சொன்ன கெடு தவறாமல் வந்தார்கள்).

மிசியோன் ஊழியர்கள் ஐயர் வீட்டிற்கு வந்து சபை விஷயங்களைப்பற்றிப் பேசின பின்பு பின்வரும் சம்பாஷணை நடந்தது.

ஐயர்:—நமது சபையாரில் சிலர் கள்ளப்போதகங்களுக்குத் தங்கள் செவியைச் சாய்த்திருக்கிறார்கள். ஆகையால் நாம் அதிக ஜாக்கிறதையாயிருக்கவேண்டும். நூதனமான கொள்கைகளையுடைய புஸ்தகங்களை ஒருவர் நமது கிராமத்தில் விற்கிறார். அவைகள் நமது சபைக் கோட்பாடுகளுக்கு முற்றிலும் விரோதமாயிருக்கிறது. நமது சபையாரில் சிலர் அப்புஸ்தகங்களை வாங்கி வாசித்து வருகிறதினால் அவர்கள் மனதில் சில குழப்பங்கள் உண்டாகிறது. நீங்கள் யாராவது அந்தப் புஸ்தகங்களைப் பார்த்திருக்கிறீர்களா? அல்லது அவைகளைப்பற்றி கேள்விப்பட்டிருக்கிறீர்களா? என்று கேட்டார். அதற்கு,

உபதேசியார்:—"ஆம், ஐயர், கடந்த சில நாட்களாக நான் நமது சபையாரில் சிலரைப் பார்க்கப்போயிருந்தேன். அவர்களுடைய வீடுகளில் நிகழ்கால சத்தியம் என்னும் பத்திரிகையைப் பார்த்தேன். அவைகளில் எழுதப்பட்டிருப்பதை அவர்கள் அதிக ஆவலோடு வாசிக்கிறார்கள். சில சமயங்களில் அவர்கள் சில கேள்விகள் கேட்கிறார்கள்; அதற்கு என்னால் உத்தரவு சொல்ல முடியவில்லை. நானும் அவர்களுடைய பத்திரிகையில் சிலதை வாசித்தேன். அவைகள் நமது சபைக்கொள்கைக்கு விரோதமாயிருந்தாலும் அவை வேதாகமத்திற்கு ஒத்திருக்கிறது." என்று சொன்னதும்,

உபாத்தியாயர்:—ஐயா, நானும் அந்தப் பத்திரிகையைப்பற்றிக் கேள்விப்பட்டேன், அவைகளை நமது சபையார் வாசிப்பது நல்லதல்ல. அதை நாம் தடுக்கவேண்டும். பள்ளிக்கூடத்திற்கு வருகிற பையன்கள்கூட அந்தப் பத்திரிகையைப்பற்றிப் பேசிக்கொள்ளுகிறார்கள். நாம் கிறிஸ்து பிறந்த பண்டிகையை டிசம்பர் 25-ம் உ கொண்டாடுவதும், மற்ற பண்டிகைகளை ஆசரிப்பதும் ஞாயிற்றுக்கிழமையை ஓய்வு நாளாகக் கைக்கொள்வதும் தப்பிதமென்று ஒருவன் சொன்னான். நான் அவனை ஏன் என்று கேட்டதற்கு இவைகளெல்லாம் வேதத்தில் சொல்லப்படவில்லை என்று சொன்னான். அது அவனுக்கு எப்படித் தெரியுமென்று கேட்டதற்கு தான் அதை நிகழ்கால சத்தியம் என்னும் பத்திரிகையில் வாசித்ததாக விடை பகர்ந்தான். இன்னொரு பையன் நாம் சுருட்டு பிடிக்கக்கூடாதென்றும், நான் சுருட்டு பிடிக்கிறதினால் மற்ற பையன்கள் எல்லாரும் சேர்ந்து என்னைக் கேலி பண்ணும்படியாக தூண்டினான். (ஒரு சிட்டிக் மூக்குத்தூளைப் போட்டுக்கொண்டு) அப்புறம் நான் அவனைப் பிரம்பால் மூன்று அடி அடித்து அவனுடைய குறும்புக்காக பெஞ்சுமேல் ஒருமணிநேரம் நிற்கும்படி தண்டனை கொடுத்தேன். இப்பேர்ப்பட்ட பத்திரிகைகள் நல்லதல்ல. நீங்கள் ஐயராயிருப்பதனால் நமது சபையார் ஒருவரும் அதை வாங்கக்கூடாதென்று கட்டுப்பாடு பண்ணவேண்டும். உங்கள் அபிப்பிராயம் என்ன? என்று கேட்டார்.

ஐயர்:—"ஆனால் நாம் என்ன செய்யமுடியும். ஜனங்கள் அவைகளை அதிக பிரியமாய் வாசிக்கிறார்கள். நாம் அதைத் தடுத்தால் அவர்களுக்கு உடனே கோபம் வரும். நேற்று நான் செல்வநாதபிள்ளையையும் அவர் மருமகனையும் பார்க்கப்போயிருந்தேன். அவர்களும் இவைகளில் அதிக பிரியப்படுகிறார்கள். சத்தியநாதன் ஒரு நாட்டையராவானென்று எண்ணிக்கொண்டிருந்தேன். அது எல்லாம் வியர்த்தமாய்ப் போயிற்று. அவன் புத்திக்கூர்மையுள்ளவன். நாம் அவர்களோடு தணிந்து பேசி தப்பிதத்தை எடுத்துக் காட்டவேண்டும். அவருக்குப் புஸ்தகங்களை விற்ற ஒருவர் நமது கிராமத்திற்கு வந்திருக்கிறார். அவர்கள் இப்பொழுது என்னைப் பார்க்க வருவார்கள்" என்றார்.

உபாத்தியாயர்:—(கோபத்தோடு) "அவர் ஏன் உங்களைப் பார்க்க வரவேண்டும்? நான் மாத்திரம் நீங்களாயிருந்திருப்பேனானால் அவரை இந்தக் கம்பவுண்டுக்குள் வராதபடி

துரத்தி அடிப்பேன். நமது மிசியோன் கம்பவுண்டுக்கு வருவதற்கு அவருக்கு என்ன நியாயமிருக்கிறது ?" என்று கேட்டார்.

ஐயர்:—சத்தியநாதனும் அவன் மாமனும் அவரை என்னிடம் அழைத்துக்கொண்டு வந்து இந்த விஷயங்களின்பேரில் தர்க்கிக்கும்படி கேட்டுக்கொண்டார்கள். வேதாகமத்தில் ஞானஸ்நானத்தைப்பற்றியும், ஓய்வு நாளைப்பற்றியும், ஞாயிற்றுக்கிழமையை ஓய்வுநாளாக மாற்றினதைப்பற்றியும், மரித்தபின் மனிதன் எங்கே போகிறான், அவன் நிலைமை என்ன என்பதைப்பற்றியும், என்ன சொல்லப்பட்டிருக்கிறதென்று அவர்கள் அறிய ஆசைப்படுகிறார்கள். உபாத்தியாயரே! நாம் அவரோடு தர்க்கிக்காமல் அவரைத் துரத்திவிடுவது நல்லதல்ல. நாம் அப்படிச்செய்தால் சத்தியநாதன் முதலானவர்களைக் கோபம் மூட்டுகிறதாயிருக்குமேயல்லாது அதினால் நன்மை ஒன்றும் உண்டாகாது. ஆகையினால் அவர் இங்கு வந்த பிறகு சில கடினமான கேள்விகளைக் கேட்டால் அவரால் அதற்கு விடை கொடுக்கமுடியாது. இதைச் சத்தியநாதன் பார்த்தால் அவன் மனதிற்குத் திருப்தியாயிருக்கும்" என்றவுடன்,

உபாத்தியாயர்:—"ஆம், நீங்கள் சொல்லுகிறீர்களே, அதுதான் சரி, அதுதான் சரி. நீங்கள் முதல் கேள்வி கேட்டவுடனே அடிபட்ட நாய் வாலை கீழே போட்டுக்கொண்டு ஓடுவதுபோல அவர் ஓடவேண்டும். அப்புறம் அவர் மறுபடியும் இந்தப்பக்கமே தலைகாட்டமாட்டர். பின்பு சனியன் தொலைந்து விடும். அவரால் என்ன செய்ய முடியும், ஒரு கை பார்ப்போம்" என்று கடுகடுத்துச் சொன்னார்.

ஐயர்:—("ஜன்னல் வழியாய் பார்த்துக்கொண்டே) அதோ! அவர்கள் வருகிறார்கள். நீங்கள் இப்பொழுது போகவேண்டாம். என்னுடைய தர்க்கம் முடிகிறவரைக்கும் நீங்கள் இங்கிருந்து அதைக் கேட்டுக்கொண்டிருக்கவேண்டும்" என்றார்.

உபா:—"ஆம், ஆம், ஐயா, நாங்களெல்லாரும் இங்கேயே இருப்போம். அந்த தர்க்கத்தை நாங்கள் பார்க்கவேண்டும். நாங்கள் அது முடியுமட்டும் இங்கிருந்து உங்களுக்கு உதவிசெய்யவேண்டுமானாலும் செய்வோம்" என்று உற்சாகத்தோடு உரைத்தார். (அத்தருணத்தில் மூவரும் உள்ளேவர)

ஐயர்:—சலாம், சலாம், "உள்ளே வாருங்கள். வந்து உட்காருங்கள். உங்களைப் பார்க்க எங்களுக்கு ரொம்ப சந்தோஷம். நீங்களெல்லாரும் க்ஷேமமென்று நம்புகிறேன். நமது உபதேசியார், மூப்பனார், உபாத்தியாயர் யாவரும் சபை விஷயமாக இங்கு வந்தார்கள். அவர்களை இங்கிருந்து நமது தர்க்கத்தைப் பார்த்துப்போகச் சொல்லியிருக்கிறேன். அவர்கள் தங்கள் வேலைக்குப்போக நேரமாகிறதினால் நமது தர்க்கத்தை சீக்கிரம் ஆரம்பிப்போம்" என்று சொல்லிவிட்டு புஸ்தகம் விற்பவராகிய சுவிசேஷமுத்து நாடாரைக் கூப்பிட்டு நேரமாகிறதினால் தான் சில கேள்வி கேட்பதாகவும் அவர் அதற்கு வேதத்திலிருந்து மறுமொழி கொடுக்கவேண்டுமென்றும் சொன்னார். உடனே,

சுவி:—"நல்லது ஐயா, உங்களுடைய கேள்விகளுக்கு நான் விடைகொடுக்கத் தயாராயிருக்கிறேன். நானும் உங்களை சில கேள்விகள் கேட்க விரும்புகிறேன். அதற்கு நீங்கள் வேதத்திலிருந்து விடை யளிக்கவேண்டும்" என்று கேட்டார்.

ஐயர்:—"சரி, நான் முதலாவது என்னுடைய கேள்விகளைக் கேட்கிறேன். பிற்பாடு உம்முடைய கேள்விகளைக் கேட்கலாம்." என்று கேள்விகளைக் கேட்க ஆரம்பிக்க சுவிசேஷமுத்து என்பவர் பின்வரும் உத்தரவை கொடுத்தார்.

முதலாவது கேள்வி:—எல்லாக் கிறிஸ்தவர்களும் ஞாயிற்றுக்கிழமையை ஓய்வு நாளாக ஆசரிக்கக்கொள்ள நீங்கள் மாத்திரம் சனிக்கிழமையை ஏன் ஓய்வுநாளாக ஆசரிக்கவேண்டுமென்று போதிக்கிறீர்கள் ?

விடை:—வாரத்தின் ஏழாம் நாளாகிய சனிக்கிழமை ஒரு பரிசுத்த நாள். எல்லாவற்றையும் சிருஷ்டித்த தேவன், அந்த நாளை ஆசரிக்கும்படியாக நமக்குக் கட்டளையிட்டார். தேவன் அந்த நாளில் ஓய்ந்திருந்து அதை ஆசீர்வதித்துப் பரிசுத்தமாக்கினாரென்று ஆதி. 2: 1-3-ல் தெளிவாய் சொல்லப்பட்டிருக்கிறது. யாத்திராகமம் 20-ம் அதிகாரத்தில் தேவன் பத்துக் கற்பனையைக் கொடுத்தபோது நாம் ஏழாம் நாளை ஆசரிக்கும்படியாகக் கட்டளையிட்டார். "ஓய்வுநாளைப் பரிசுத்தமாய் ஆசரிக்க நினைப்பாயாக; ஆறுநாளும் நீ வேலைசெய்து, உன் கிரியைகளையெல்லாம் நடப்பிப்பாயாக; ஏழாம்நாளோ, உன் தேவனாகிய கர்த்தருடைய ஓய்வுநாள்; அதிலே நீயானாலும், உன் குமாரனானாலும், உன் குமாரத்தியானாலும், உன் வேலைக்காரனானாலும், உன் வேலைக்காரியானாலும், உன் மிருகஜீவனானாலும், உன் வாசல்களிலிருக்கிற அந்நியனானாலும், யாதொரு வேலையும் செய்யவேண்டாம். கர்த்தர் ஆறுநாளுக்குள்ளே வானத்தையும், பூமியையும் சமுத்திரத்தையும் அவைகளிலுள்ள எல்லாவற்றையும் உண்டாக்கி, ஏழாம்நாளிலே ஓய்ந்திருந்தார்; ஆகையால், கர்த்தர் ஓய்வு நாளை ஆசீர்வதித்து, அதைப் பரிசுத்தமாக்கினார்." என்று நான்காம் கற்பனையில் சொல்லப்பட்டிருக்கிறது.

இரண்டாம் கேள்வி:—இந்தக் கற்பனைகளெல்லாம் யூதருக்குக் கொடுக்கப்பட்டதென்றும் ஆகையினாலே யூதர்கள்மாத்திரம் ஓய்வுநாளைக் கைக்கொள்ளவேண்டுமென்றும் உமக்குத் தெரியாதா ?

விடை:—யூதரென்னும் ஜாதியார் உண்டாவதற்குப் பல நூற்றாண்டுகளுக்கு முன்னமேயே ஓய்வுநாள் உண்டாக்கப்பட்டு மனிதருக்கென்று கொடுக்கப்பட்டது. ஓய்வுநாள் சிருஷ்டிப்பிலேயே ஸ்தாபிக்கப்பட்டது. அதன் பிறகு யூதர் தேவனுடைய ஜனமாக தெரிந்துகொள்ளப்படு முன்னதாகவே பல நூற்றாண்டுகளாக ஆசரிக்கப்பட்டு வந்தது. மாற்கு 2: 27-ல் ஓய்வுநாள் மனுஷனுக்காக உண்டாக்கப்பட்டதென்று கிறிஸ்து தாமே சொல்லியிருக்கிறார். அவர் யூதருக்காக உண்டாக்கப்பட்டதென்று சொல்லாமல் மனிதனுக்காக உண்டாக்கப்பட்டதென்று சொல்லுகிறார். இந்தியர்களாகிய நாம் மனிதர்களாயிருப்போமானால் ஓய்வுநாள் யூதருக்கு மாத்திரமல்ல நமக்கும் பொருந்தினதாயிருக்கிறது.

மூன்றாம் கேள்வி:—கிறிஸ்து நியாயப்பிரமாணத்தை நிறைவேற்றி அதை ஒழித்துப் போடவில்லையா ? கிறிஸ்துவுக்கு முன்னிருந்த ஜனங்கள் ஓய்வுநாளையும் மற்றக் கற்பனைகளையும் கைக்கொண்டார்களென்பது உண்மைதான். ஆனால் அவர் நியாயப்பிரமாணத்தை அழித்துப்போட்டு நாளை மாற்றினதினால் நாங்கள் ஞாயிற்றுக்கிழமையை ஆசரிக்கிறோம். அது நியாயமல்லவா ?

விடை:—இல்லை ஐயா. அது எனக்கு நியாயமாய்த் தோன்றவில்லை. கிறிஸ்து பத்துக் கற்பனையாகிய நியாயப் பிரமாணத்தை மாற்றவாவது அழிக்கவாவது வரவில்லை. ஏனென்றால் மத்தேயு 5: 17-ல் அவர் "நியாயப் பிரமாணத்தையானாலும் தீர்க்க தரிசனங்களையானாலும் அழிக்கிறதற்கு வந்தேனென்று எண்ணிக்கொள்ளாதேயுங்கள்; அழிக்கிறதற்கு அல்ல, நிறைவேற்றுகிறதற்கே வந்தேன்" என்று சொல்லுகிறார். பின்னும் வானமும் பூமியும் ஒழிந்துபோனாலும் என் வார்த்தைகள் ஒழிந்துபோகாதென்று சொல்லுகிறார். கிறிஸ்து நியாயப் பிரமாணத்துக்குக் கீழ்படிந்து அதை நிறைவேற்றி நமக்கு ஒரு மாதிரியைப் பின்வைத்துப் போயிருக்கிறார். இப்பொழுது அவர் பூமியிலிருப்பாரானால் தாம் முன் ஆசரித்த நாளையே ஆசரிப்பார். ஏனெனில் எபிரேயர் 13: 8-ல் "இயேசு கிறிஸ்து நேற்றும் இன்றும் என்றும் மாறாதவராயிருக்கிறார்" என்று சொல்லப்பட்டிருக்கிறது.

நான்காம் கேள்வி:—ஓய்வுநாளை ஆசரிக்காமலிருப்பது பாவம், அதனால் நாம் பரலோகத்துக்குப் போக முடியாதென்று நினைக்கிறீரா ?

விடை:—ஆம் ஓய்வுநாளைப்பற்றி அறிந்த பின் அதை ஆசரிக்காமலிருப்பது பாவம் தான். 1 யோவான் 3: 4–ல் "பாவம் செய்கிற எவனும் நியாயப்பிரமாணத்தை மீறுகிறான்; நியாயப்பிரமாணத்தை மீறுகிறதே பாவம்" என்று சொல்லப்பட்டிருக்கிறது. நியாயப்பிரமாணத்தில் நாம் ஓய்வுநாளைக் கைக் கொள்ளவேண்டுமென்று சொல்லப்பட்டிருக்கிறது. நாம் அதைக் கைக்கொள்ளாவிட்டால் நியாயப்பிரமாணத்தை மீறின பாவிகளாகிறோம். நாம் நமது பாவத்தை அறிக்கைசெய்து மன்னிப்பு பெறாவிட்டால் இரட்சிப்படைய மாட்டோம். நாம் ஓய்வுநாளை ஆசரிப்பாயாக என்று சொல்லுகிற நான்காம் கற்பனையை மீறினாலும் களவு செய்யாதிருப்பாயாக என்கிற மற்றக் கற்பனையை மீறினாலும் எல்லாம் ஒன்றுதான்.

ஐந்தாம் கேள்வி:—ஞாயிற்றுக்கிழமை ஓய்வுநாளென்று இராஜாங்கத்தார் சொல்லுகிறதில்லையா? படிப்பாளிகளான குருமார் யாவரும் ஞாயிற்றுக்கிழமை ஓய்வுநாளென்று சொல்லுகிறதில்லையா? ஓய்வுநாளை ஆசரிக்கிற சிலராகிய நீங்கள் முழு உலகத்தையும் எதிர்க்க முடியுமா? பெரும்பான்மையோர் செய்கிறதுதான் சரியென்றும் அவர்கள் இதைப்பற்றி என்ன சொல்லுகிறார்களென்றும் கேட்கக்கூடாதா?

உத்தரவு:—ராஜாங்கத்தில் ஞாயிற்றுக்கிழமை பொதுவான லீவு நாள் என்பது உண்மைதான். ஆகையினாலே அது ஒரு "ஓய்வுநாள்" என்று நாம் எப்படி நம்பலாம். ஜார்ஜ் ராஜா பிறந்த நாளும் ஒரு பொதுவான லீவு நாள்தான். ஆனால் நாம் அதைப் பரிசுத்த நாளாக ஆசரிக்கிறோமா? ஞாயிற்றுக்கிழமை ஓய்வுநாள் என்று ராஜாங்கத்தார் சொன்னபோதிலும் தேவனுடைய பார்வையில் நாம் அதைக் கைக்கொள்ளக் கடமைப்பட்டவர்களல்ல. மார்க்க விஷயத்தில் தேவனும் அவருடைய வார்த்தையுமே நமக்கு வழி காட்டி. மனிதருக்குள் உள்ள காரியங்களை சரிவர நடத்துவது இராஜாங்கத்தாருடைய வேலை. தேவனுக்கும் மனிதனுக்கு முள்ள சம்பந்தத்தில் ராஜாங்கத்தாருக்கு யாதொரு பொறுப்பு மில்லை. ராயனுடையதை ராயனுக்கும் தேவனுடையதை தேவனுக்கும் செலுத்துங்கள் என்று கிறிஸ்து சொன்னதின் அர்த்தம் இதுதான். கிறிஸ்துவைப் பற்றிப் பிரசங்கிக்கக்கூடாதென்று ரோம ராஜாங்கத்தார் அப்போஸ்தலரைத் தடுத்தபோது அவர்கள் தங்கள் உபதேசத்தை நிறுத்திவிடவில்லை.

தற்காலத்துப் படிப்பாளிகளில் அநேகர் ஞாயிற்றுக்கிழமைதான் ஓய்வுநாளென்று சொன்னாலும் அவர்கள் சொல்லுவதனால் அது மெய்யான ஓய்வுநாளாகிறதில்லை. ஏழாம் நாள் மெய்யான ஓய்வு நாளென்று தேவன் சொல்லுகிறார். உலக முழுவதும் இதற்கு மாறாகச் சொன்னாலும் அதனால் தோஷ மில்லை. தேவன் உண்மையுள்ளவர், அவரை எதிர்க்கிறவர்கள் யாவரும் பொய்யர். கிறிஸ்து இவ்வுலகத்தில் உயிரோடிருந்த காலத்திலிருந்த ரபிமார்கள் யாவரும் அவரைப் பெயல்செபூல் என்றும், கள்ளக் கிறிஸ்து என்றும் உலகத்தில் ஜீவிக்கத்தகாதவனென்றும் சொன்னார்கள். அவர்கள் சொன்னது உண்மையா? அவர்கள் சொன்னது தப்பிதமென்று நமக்கு இப்போது தெரிகிறது. அது போல இதுவும் தப்பிதம்தான். "தேவன் நமது பட்சத்திலிருந்தால் நமக்கு விரோதமாயிருப்பவன் யார்?"

மெய்யான ஓய்வுநாளைக் கைக்கொள்ளுகிறவர்கள் கொஞ்சம் பேர் என்பது உண்மைதான். ஏனெனில் அதில் நமக்கு அநேக உபத்திரவங்களிருக்கிறது. உபத்திரவங்கள் நிமித்தம் நாம் அதை விட்டு விடக்கூடாது. மார்க்க விஷயங்களில் நாம் பெரும்பான்மையோரைப் பின்பற்றக்கூடாது. பெரும்பான்மையோர் எப்படித் தவறிப்போனார்களென்றும் சிலர் எப்படி நல்லவர்களாயிருந்தார்களென்றும் வேதத்தில் அநேக திருஷ்டாந்தங்கள் சொல்லப்பட்டிருக்கிறது. தானியேல் மூன்றும் அதிகாரத்தில் மூன்று எபிரேய புருஷர்களுடைய கதை சொல்லப்பட்டிருக்கிறது. அவர்கள் சிலராயிருந்தபோதிலும் சரியான வழியில் நடந்துகொண்டார்கள். கிறிஸ்துவும் அவருடைய சீஷர்களும் சிலராயிருந்தபோதிலும் அவர்கள் சரியாய் நடந்துகொண்டார்கள். ஆனால் பெரும்பான்மையோர் தவறிப்போனார்கள். இராஜாங்கத்துக்கடுத்த விஷயங்களிலும் பொதுஜன சங்கங்களிலும்

பெரும்பான்மையோருடைய வாக்கு மூலங்கள் செல்லும். ஆனால் மார்க்க விஷயத்தில் அப்படியல்ல. "தீமை செய்ய திரளான பேர்களைப் பின்பற்றாதிருப்பாயாக" என்று வேதம் சொல்லுகிறது (யாத். 23:2.) "பயப்படாதே சிறு மந்தையே, உங்களுக்கு ராஜ்யத்தைக் கொடுக்க உங்கள் பிதா பிரியமாயிருக்கிறார்" என்றும் சொல்லப்பட்டிருக்கிறது.

ஆறும் கேள்வி:—ஒரு மனிதன் மரித்தவுடனே பரலோகத்திற்குப் போகிறதில்லையென்று பிரசங்கிக்கிறீர்களே, அது என்ன?

உத்தரவு:—தாவீது பரலோகத்துக்குப் போகவில்லையென்று வேதம் சொல்லுகிறது. (அப். 2: 34 பார்க்க). தாம் மரித்த பிற்பாடு பரலோகத்துக்குப் போகவில்லையென்று கிறிஸ்து சொல்லுகிறார். மரித்தவுடனே பரலோகத்திற்குப் போனவர்களைப்பற்றி வேதத்தில் ஒரு இடத்திலும் சொல்லப்படவில்லை. ஆகையினாலே மரித்தவர்கள் பரலோகத்திற்குப் போகாமல் உயிர்த்தெழுதலில் தங்கள் பலனைப் பெறும் மட்டும் கல்லறைகளில் காத்திருக்கிறார்களென்று போதிக்கிறோம்.

ஏழாம் கேள்வி:—ஆனால் மனிதனுடைய ஆத்துமா சாவாமையுள்ளது. ஆகையினால் அது சாக முடியாது. மரித்த பின் அது ஏதாவது ஓரிடத்திற்குப் போகவேண்டுமே?

உத்தரவு:—மனிதனுடைய ஆத்துமா சாவாமை உள்ளதென்றும் அது அழியாதென்றும் வேதத்தில் ஒரு இடத்திலாவது சொல்லப்பட்டில்லை. ஆனால் தேவன் ஒருவராய் சாவாமையுள்ளவரென்று வேதத்தில் சொல்லப்பட்டிருக்கிறது தேவன் ஒருவர் மாத்திரம் சாவாமையுடையவராயிருந்தால் நாம் சாவாமையுடையவர்களல்லவென்று தெளிவாய் விளங்குகிறது.

எட்டாம் கேள்வி:—ஆனால் மரண மடைந்த நமது சிநேகிதர் பரலோகத்திற்குப் போய் அங்கே பாக்கியத்தை அனுபவிக்கிறார்களென்று நாம் இதுபரியந்தம் கற்பிக்கப்பட்டும் விசுவாசித்தும் வந்திருக்கிறோமே?

உத்தரவு:—மரித்தோர் ஒன்றும் அறியார்களென்றும் அவர்கள் யோசனைகள் அழிந்து போகிறதென்றும் வேதத்தில் சொல்லப்பட்டிருக்கிறது. "உயிரோடிருக்கிறவர்கள் தாங்கள் மரிப்பதை அறிவார்களே, மரித்தவர்கள் ஒன்றும் அறியார்கள்; இனி அவர்களுக்கு ஒரு பலனுமில்லை, அவர்கள் பேர் முதலாய் மறக்கப்பட்டிருக்கிறது. அவர்கள் சிநேகமும், அவர்கள் பகையும், அவர்கள் பொறாமையும், எல்லாம் ஒழிந்துபோயிற்று; சூரியனுக்குக் கீழே செய்யப்படுகிறதொன்றிலும் அவர்களுக்கு இனி என்றைக்கும் பங்கில்லை. பிர. 9: 5, 6. "அவனுடைய ஆவி பிரியும், அவன் தன் மண்ணுக்குத் திரும்புவான்; அந்நாளிலே அவன் யோசனைகள் அழிந்துபோம்." சங். 146: 4. இது இப்படியிருப்பதினால் அவர்கள் பரலோகத்திலே பாடிக்கொண்டு பாக்கியமாயிருக்கிறார்களென்று எப்படி சொல்லலாம்."

ஒன்பதாம் கேள்வி:—மனிதர் மரித்த பின் பரலோகத்துக்குப் போகிறதில்லையென்று சொல்லுகிறீர். அப்படியானால் மோசேயும் எலியாவும் எப்படிப் போனார்கள்? அவர்கள் இருவரும் பரலோகத்திலிருக்கிறார்களே.

உத்தரவு:—எலியா மரணத்தைக் காணாமல் பரலோகத்துக்கு எடுத்துக்கொள்ளப்பட்டார். (1 ராஜா. 2: 1-11 பார்க்க.) கிறிஸ்துவின் இரண்டாம் வருகையில் மரணத்தைத் தரிசிக்காமல் பரலோகத்திற்குப் போகிறவர்களுக்கு எலியா முன்னடையாளமாயிருக்கிறார். மோசே மரித்தாலும் அவர் இப்போது பரலோகத்திலிருக்கிறாரென்பது உண்மைதான். மோசே மரித்தோரிலிருந்து எழுப்பப்பட்டு பரலோகத்திற்குப் போனாரென்று நம்ப நியாய முண்டு. (யூதா 9 பார்க்க.) கிறிஸ்துவின் இரண்டாம் வருகையில் உயிரோடெழுப்படுகிறவர்களுக்கு மோசே முன்னடையாளமாயிருக்கிறார்." என்று விடை பகர்ந்து முடித்தார். இவை யாவற்றையும் ஐயரும் மற்ற யாவரும் ஆச்சரியத்தோடு கவனமாய்க் கேட்டுக்கொண்டிருந்தார்கள். நேரம் அதிகமாய் விட்டதால்,

ஐயர்:—"இப்போது நேரமாகிவிட்டது, இவர்கள் யாவரும் தங்கள் வேலைகளுக்குப் போகவேண்டும். இன்று சாயுங்காலம் மறுபடியும் யாவரும் வந்தால் இதைத் தொடர்ந்தேச்சியாய்ப் பேசலாம்" என்று சொல்ல யாவரும் ஐயருக்கு வந்தனமளித்து ஏகோபித்து விடை பெற்றுக்கொண்டு அவரவர் தம் தம் வழி போயினர்.

(இன்னும் வரும்). உண்மை உரைப்போன்.

THE POVERTY OF JESUS.

இயேசுவின் தரித்திரம்.

இயேசு ஒரு ஏழை மனிதனாயிருந்தார் அவர் ஒரு கிராமத் தச்சனுடைய மகன். பாரம்பரியத்தில் யோசேப்பு தன் வேலையில் அதிக சித்திபெறவில்லையென்றும் ஆகையினால் அதிக பணம் சம்பாதிக்கவில்லையென்றும் சொல்லப்பட்டிருக்கிறது. ஆகையினாலே இயேசுவுக்குத் தன்னுடைய இளம்பிராயத்திலிருந்து எளிமைத்தனம் இன்னதென்று தெரிந்திருக்கவேண்டும். இவ்வுலகத்தின் பெரிய மனிதர் எல்லாரும் எளிமைத்தனத்திலிருந்துதான் உயர்வடைந்திருக்கிறார்கள். ஆனால் இயேசு அவர்களைவிட அதிக ஏழையாயிருந்தார். சாலமோனின் மகிமையைவிட இயேசு அதிக மகிமையோடு வருவார் என்று யூதர்கள் நினைத்தார்கள். ஆனால் அவர் "வரண்ட நிலத்திலிருந்து துளிர்க்கிற வேரை"ப் போல வளர்ந்து வந்தார். எசா. 53: 2. சிலர் இயேசு சிறுவனாயிருக்கும்பொழுதே அவர் தகப்பனார் இறந்துபோனார், ஆகையினாலே அவர் அந்தக் குடும்பத்தின் பாரத்தையும் தன் மேல் எடுத்துக்கொள்ளவேண்டியதாயுமிருந்தது என்று சொல்லுகிறார்கள். நாம் இந்த உலகத்தில் ஏழைகளாயிருந்தால் இயேசுவுக்கு எளிமைத்தனம் எப்படி இருக்குமென்று தெரியும் என்று நம்மைத் தேற்றிக்கொள்வோமாக.

இயேசுவினுடைய எளிமைத்தனம் ஐசுவரியமே. அவர் இந்த உலகத்தில் ஓர் ஏழை மனிதனைப்போலிருந்தபோதிலும், அவருக்கு எல்லாம் சொந்தம். கொச்சி தேசத்துப் பூர்வீக அரசர்களில் ஒருவரான சக்கஹாம் தாம்புரம் தன்னை ஒரு ஏழை மனிதனைப்போல் உடுத்திக்கொண்டு தன்னுடைய பிரஜைகளின் துக்கங்களை அறிய ஆவல் கொண்டவனாய் அங்குமிங்கும் அலைந்து திரிவார். அவர் ஒரு ஏழை மனிதனுடைய உடை தரித்திருந்தாலும் அவர் இன்னும் தன் ராஜ சொத்துகளுக்கெல்லாம் சுதந்தரவாளியாய் இருந்தார். அது போலவே இயேசு மனித ரூபம் பூண்டிருந்தாலும் அவருக்கே சகலமும் சொந்தம். அவரே எல்லாவற்றிற்கும் சிருஷ்டிகராயிருப்பதினால் சகலமும் அவருடையதே. யோவா. 1: 3. இயேசுவினுடைய ஐசுவரியத்தை நம்மால் கணக்கிட முடியாது. பவுல் அதை "மகிமையின் ஐசுவரியம்" என்று அழைக்கிறார். நாம் ஒரு மனிதனை அவனுக்கு இருக்கும் திரவியத்தினுடைய தொகையைப் பார்த்து அவன் ஒரு ஐசுவரியவான் என்கிறோம். அவனுடைய திரவியத்தை லக்ஷலக்ஷமாக எண்ணுகிறோம். ஆனால் இயேசுவினுடைய திரவியத்தை நம்மால் எண்ண முடியாது. "மிகுந்த செல்வமிருக்கத் தன்னைத் தரித்திரனாகப் பாராட்டுகிறவனும் உண்டு" என்று ஞானி சொல்லுகிறார். நீதி. 13: 7. அவர் நிச்சயமாகவே இயேசுவைப்பற்றி பேசுகிறார். ஆகையினாலே இயேசுவின் தரித்திரம் ஐசுவரியமே.

அதுமாத்திரமல்ல இயேசு எளிமைத்தனத்தைத் தானாகவே தெரிந்தெடுத்துக் கொண்டார். அவர் பகிரங்கமாக ஒரு ஏழை மனிதனாயிருக்கத் தெரிந்தெடுத்துக்கொண்டார். பரி: அகஸ்தீன் என்பவர் (St. Augustine.) மனுஷ குமாரர்கள் தேவ குமாரர்களாகும் பொருட்டு, தேவ குமாரன் மனுஷ குமாரனானார்" என்று சொல்லுகிறார். இயேசு பெத்லகேமில் பிறந்தபோது "அவருக்கு சத்திரத்தில் இடமில்லாததினால்" அவரை ஒரு மாட்டுக் கொட்டிலிலே கிடத்தினாள். லூக். 2: 7. அவருடைய ஊழியத்தின் காலத்தில் அவர் வீடில்லாத ஒருவனைப்போல் அலைந்து திரிந்தார். அச்சமயத்தில் ஒருவன் அவரண்டை வந்து "போதகரே! நீர் எங்கே போனாலும் உம்மை நான் பின்பற்றி வருவேன்" என்றான். அதற்கு இயேசு "நரிகளுக்குக் குழிகளும் ஆகாயத்துப் பறவைகளுக்குக் கூடுகளும் உண்டு ஆனால் மனுஷ குமாரனுக்கோ தலை சாய்க்க இடமில்லை என்றார்." மத். 8: 20. நாம் நம்முடைய வீடுகளை நேசிக்கிறோம். நம்முடைய வீட்டை அல்லது நம்முடைய கிராமத்தைத்தவிர வேறெந்த இடமும் நம்மைக் கவரச்செய்யாது. ஆனால் கிறிஸ்து தம்முடைய துக்கத்தின் மத்தியிலும், ஊழியத்தின் ஆயாசங்களின் மத்தியிலும் அவர் ஒரு வீட்டினுடைய சுகத்தை அறியார். அவருக்கு இரவில் மலையே வீடு. அங்கே அவர் தன் ஆத்துமாவை தேவனுக்கு முன்பாக ஜெபத்தின் மூலமாக ஊற்றினார். ஒருதேர்ந்த ஆங்கிலேய கிரந்தகர்த்தா "வேறொருவனுடைய தொழுவத்தில் பிறந்து, வேறொருவனுடைய கல்லறையில் அடக்கம் பண்ணப்பட்டார், அவருடைய முதல் தலையணை வைக்கோல் கடைசி கிரீடம் முட்கிரீடம், முதல் சிநேகிதர் மாடுகள், கடைசி சிநேகிதர்கள் திருடர்கள், அவருடைய முதல் இளைப்பாறும் இடம் மற்றொருவனுடைய மாட்டுத்தொழுவம் கடைசி இளைப்பாறுதலின் இடம் மற்றொருவனுடைய கல்லறை" என்று எழுதியிருக்கிறார். இயேசு ஒரு ஏழை மனிதன் ஆனால் அவர் ஒரு ஐசுவரியவான்.

இயேசுவினுடைய எளிமைத்தனம் மற்றவர்களை ஐசுவரியவான்களாக்கிற்று. அவருடைய தரித்திரம் நம்முடைய ஆஸ்தி. ஒரு மனிதன் அதிக ஆஸ்தி யுடையவனாக இருந்தான். அவன் மரணம் நெருங்கும்போது "உன் ஆஸ்தி எங்கே" என்று கேட்க அவன் "அது ஏழைகளின் மடியிலுண்டென்று" சொன்னான். ஏனென்றால் அவன் தேவையுள்ளவர்களுக்கு அதைக் கொடுத்தான். ஆகையினாலே இயேசுவின் எளிமைத்தனத்தினாலே அநேகர் ஐசுவரியவான்களாக்கப்பட்டார்கள். "அவர் (இயேசு) ஐசுவரியமுள்ளவராயிருந்தும் நீங்கள் அவருடைய தரித்திரத்தினாலே ஐசுவரியவான்களாயிருக்கும்படிக்கு உங்கள் நிமித்தம் தரித்திரரானாரே" 2 கொரி. 8: 9. நாம் ஏழைகளில் ஒருவராயிருந்தபோதிலும் கர்த்தரின் பார்வையில் ஐசுவரியனாயிருக்கலாம். நமக்கு தேவையானவைகளெல்லாமிருந்தாலும் அவற்றையெல்லாம் நாம் குப்பை என்று எண்ணவேண்டும். இயேசுவினுடைய வல்லமை உன்னைத் தேவனிடத்தில் ஐசுவரியனாகும்படிச் செய்த்தா?

H. G. Woodward.

(ORDER IN THE HOME.)

குடும்ப விஷயங்கள்.

(தொடர்ச்சி)

நமது போன பத்திரிகையிலே வீட்டிலுள்ள ஒவ்வொரு ஜாமான்களையும் ஒழுங்காய் வைக்கவேண்டுமென்று பார்த்தோம்: அப்படியே நமது வீட்டிலே ஒவ்வொரு நாளும் செய்கிற வேலைகளுக்கும் ஓர் ஒழுங்கு இருக்கவேண்டும். காலையில் இவ்வளவு நேரத்துக்குப் படுக்கையை விட்டு எழும்பவேண்டும்; எழும்பின நேரமுதல் இன்னின்ன வேலைகளை இன்னின்ன பிரகாரம் ஒன்றன்பின் ஒன்றாக ஒழுங்காய்ச் செய்யவேண்டும்; வீட்டிலுள்ள ஆண் பிள்ளைகள் இன்னின்ன வேலை செய்யவேண்டும்; பெண் பிள்ளைகள் இன்னின்ன வேலை செய்யவேண்டும் என்று ஓர் ஏற்பாடு இருக்கவேண்டும்—உதாரணமாக:—தண்ணீர் மொள்ள, வீடு வாசல் சுத்தம் பண்ண, ஸ்நானம் செய்ய, தலை வாரிக்கட்ட, வரரத்தில் இன்னின்ன நாட்களில் எண்ணெய் ஸ்நானம் செய்ய, வாரத்தில் இன்னின்ன ஆகாரங்கள், பலகாரங்கள், இன்னின்ன நாளில் செய்யவேண்டுமென்றும்; இப்படி ஒவ்வொரு காரியத்திற்கும் ஓர் திட்டமான ஏற்பாடு செய்து, கூடியவாறு அதை யாவரும் நிறைவேற்றப் பிரயாசப்படவேண்டும். இது விஷயமான ஒழுங்குகளில் அநேக பட்சி, பறவை, ஊரும் பிராணிகளுக்கு இருக்கும் ஏற்பாடு முதலாய் நமது இந்தியர்களின் அநேக வீடுகளில் இல்லை யென வெகு விசனத்தோடு சொல்லுகிறேன்.

இதுபோக ஒவ்வொரு வேலையைச் செய்யவும் குறிப்பிட்ட ஓர் இடம் இருக்கவேண்டும்—சாதாரணமாக சமைக்கத்துண்டான இடம் ஒன்று வேண்டும்; அவ்விடத்திலே அதற்குரிய வேலைகள் யாவும் செய்யப்படவேண்டும். சில வேளைகளில் நாம் தலை வாசலிலே நிற்கும்போது கீரைக்காரன் கீரை கொண்டு விற்கவந்து விடுகிறான். அநேக பெண்கள் அதை வாங்கினதும் தலை வாசலிலே, அல்லது முன் விராந்தாவிலே, அல்லது வீட்டின் அறையிலே உட்கார்ந்து, தன்னோடு பேசிக்கொண்டிருக்கும் தோழிமார்களோடு வினவிக்கொண்டே வெகு ஒய்யாரமாயிருந்து, கீரையிலுள்ள புழு, பூச்சி, செடி செதில்களை எடுத்துப்போட ஆரம்பித்து விடுகிறார்கள். அந்த இடம் அதற்குச் சற்று நேரத்துக்கு முன் யாதொரு செடியும் செத்தையுமின்றி, நமது செல்ல மக்களால் சுத்தம் செய்த இடமாயிருக்கலாம். இப்பொழுது உண்டான குப்பை அந்த இடத்தில் அன்று சாயந்தரம் வரை, சில வேளைகளில் அடுத்தநாள் வீடு வாசல் வாரும் வரைக்கும் அதிலேதான் கிடக்கலாம். இப்படி அந்த இடம் அவ்வளவு சீக்கிரத்தில் குப்பையானதை சுத்தம் செய்த நமது சிறு குழந்தைகள் கண்ணாரக் கண்டதும், எத்தனையோ வீடுகளில் அந்தப் பிள்ளைகள் நான் கஷ்டப்பட்டுச் செய்த வேலையை இவ்வளவு நேரத்தில் கெடுத்துப்போட்டார்கள்; கெட்ட அம்மாவென்றும், நாளைக்கு இனிமேல் நான் இந்த வேலையைச் செய்யமாட்டேனென்றும் எவ்வளவோ மனமடிவோடு தன் மதலைச் சொல்லால் சொல்லிச்சொல்லி தேம்பிதங்கள் சந்தோஷங்களை கெடுத்துக்கொள்ளுகிறதில்லையா? அதுவுமன்றி, அந்த இடம் சிறியோர்

பெரியோரின் நடை பாதையாயிருக்குமானால், அவர்கள் கால்களிலே பட்டு வீடு முழுவதும் செடியாகி, சில வேளைகளில் வீட்டிலே சிறு குழந்தைகள் இருக்குமானால் அவைகள் இந்தக் குப்பைகளை வாயிலே எடுத்து வைத்து விழுங்கி, அதினாலே வீட்டிலே திடீரென கூச்சல், கூக்குரல், புருஷன், மனைவி, பிள்ளைகளுக்குள் அனாவசியமான சண்டைகள், அவலட்சணமான வார்த்தைகள் பிறக்கிறதில்லையா?

இன்னும் இதுபோல பிள்ளைகளுக்கு தலை வார உட்கார ஓர் திட்டமான இடமில்லாமல், வாசற்படியிலே தாயும் பிள்ளைகளும், எண்ணெய் பாட்டிலோடு உட்கார அந்தப் பாதையிலே விளையாடிக்கொண்டு ஓடி வருகிற இன்னொரு சிறு பிள்ளையின் அஜாக்கிரதையினாலே எண்ணெய்ப் பாட்டிலில் கால் பட்டு கீழே விழுந்து உடைந்து எண்ணெய் சிந்த, இதினால் தகாத இடமாகிய படியிலே முதலில் உட்கார்ந்தத்தாய் கோபங்கொண்டு, தன் மயிரைப் பின்னக்கொடுத்த பிள்ளையையும், நடைப்பாதையிலிருந்த பாட்டிலை விளையாட்டு உற்சாகத்தில் உடைத்துப்போட்ட பிள்ளையையும், சிந்திப்போட்ட எண்ணெய்க்காகவும், உடைந்துபோன பாட்டிலுக்காகவும் தனது கோபத்திலே அடித்து, அவதூறாக ஏச, இப்படி வீட்டில் சமாதானம் குறைந்து கூச்சல் உண்டாக, இக்கூப்பாட்டால் எழுந்து ஜோலியாய், அல்லது வேறு ஓர் அவசரமான ஜோலியாய் வீட்டின் ஓர் ஒதுக்கிடத்தில் இருந்த புருஷன் ஓடிவந்து, அவரும் கோபத்தோடு ஒன்று மனைவியோடு அல்லது பிள்ளைகளோடு சண்டை செய்து இவ்வித மூடத்தனமான காரியங்களினால் வீட்டிலே உண்டாகிற சமாதானக் குறைவு எத்தனையோ நாளைக்கு வீட்டிலே இருக்கவேண்டியதாயிருக்கிறது.

ஆகையால், வீட்டிலுள்ள ஒவ்வொருவரும், விசேஷமாக தாயாரும் வீட்டு வேலைகளை ஒழுங்காய்ச் செய்வோமானால் நமது புருஷன் தனது ஜோலி விஷயமாய் வெளியே போய்விட்டு அலுத்தும் கவலைப்பட்டும், சில வேளைகளில் மற்றவர்களின் அநேக ஏமாற்றத்தால் வருத்தப்பட்டும், நமது பிள்ளைகள் பள்ளிக்கூடம் போய்ப் படித்துக் களைத்துவரும் போதும், நமது வீடு நிச்சயமாகவே அவர்களுக்குச் சந்தோஷத்தையும், இன்பத்தையும், ஆறுதலையும், தேறுதலையும், உற்சாகத்தையும், கொடுக்கிறதுமாகக் காணப்படும். என் அருமைச் சகோதரியே! உன் வீடு இப்படி யிருக்கிறதா? நமது வீட்டில் நமது புருஷனும், பிள்ளைகளும், தங்கியிருந்து அன்புடன் ஜீவியத்தின் இன்பத்தையும், ஆனந்தத்தையும், அனுபவிக்கிற ஓர் சின்னப் பரதீசுபோலிருக்கிறதா? அல்லது புருஷன் மனைவியைப் பார்த்து இவளை நான் தெரியாமல் அல்லோ விவாகம் செய்துபோட்டேனென்றும், இவளைப்பற்றி என்னிடம் முதலாவதாக புகழ்ந்து பேச வந்த அயோக்கியன் யார் என்றும், பிள்ளைகள் நமது வீட்டில் இருக்கிற ஒழுங்கீனமான ஜீவியத்தினாலும் காலை முதல் மாலை வரை உண்டாகிற பற்பல கூச்சலினாலும், மன வேதனைப்பட்டு தங்கள் சொந்த வீட்டை விட்டு வெளியே போய், அடுத்த வீடு, அண்டை வீட்டிலேயாவது அல்லது வீதிகள், ரஸ்தாக்களிலாவது நின்று தங்கள் நேரத்தைப் போக்கி, வரவாவது பிரியப்படுகிறார்களா? நம்முடைய வீட்டிலே உண்டாகிற அநேக சமாதானக் கேட்டுக்கும், பெரும்பான்மையாக தாய்மாராகிய நாமே காரணராயிருக்கிறோமென்று இதை வாசிக்கிற என் சகோதரிகளாகிய யாவரும் என்னோடு ஒத்துக்கொள்வீர்களென்று எண்ணுகிறேன். ஓர் வேளை இப்படிப்பட்ட ஒழுங்குடன் ஜீவிக்க, ஓர் பெரிய பங்களா தேவை யென்று அநேகர் எண்ணலாம். அப்படியல்ல, நாம் வசிக்கும் சிறு குடிசையிலும், ஒழுங்காயும், கிரமமாயும், அமைதியாயும், அன்பாயும் ஜீவித்தால்தான் ஓர் பெரிய மாளிகையிலும் அப்படியிருக்கத் தெரியும்; ஆகையால் இடவிலாசத்தைப்பார்க்கிலும், மனவிலாசம்தான் தேவை.

எல்லாவற்றிற்கு மேலாக நமது வீடுகளில் காலை மாலை குடும்ப முழுவதுமாக, வீட்டிலே வேலைக்காரர்கள் இருப்பார்களானால் அவர்களையும் கூடச்சேர்த்து, நம்மை இப்பூமியிலே ஜீவிக்கச் செய்திருக்கிற நமது மெய்யான தேவனை நோக்கி, ஒழுங்காய் ஜெபிக்க மறக்கவே கூடாது. இப்பூமியில் அவர் நம்மை உண்டாக்கினதற்காகத் தோத்திரம் செலுத்தி, இந்த லோகத்தில் நமது ஜீவ காலத்தை அவருக்குப் பிரியமாயும், அநேகருக்குப் பிரயோசனமாகவும் செலவழிக்கும்படியும், ஒவ்வொரு நாளும் அவருடைய சமுகம் நமக்கு முன் செல்லும்படியும், அந்தந்த நாளின் கடமைகளைச் செய்கிறதற்கு வேண்டிய பரம உதவிகளுக்காகவும் மன்றாட வேண்டும்.

ஓர் இந்திய சகோதரி.

(இன்னும் வரும்.)

சுகாதார விஷயங்கள்

O. SMITH, M. D. டாக்டர் சிமித்.

(WHAT SHALL WE EAT?)

நாம் எவைகளை உட்கொள்ளவேண்டும்?

வியாதி என்றால் என்னவென்றும், அதின் காரணமென்னவென்றும், வியாதியைத் தடுக்கும் வகை இன்னதென்றும், கடந்த பத்திரிகையில் கூறினோம். அதில் சரியான உணவு நமது தேக சுகத்திற்கும் பலத்துக்கும் அவசியமென்றும், சரியான உணவை உட்கொள்ளாததினால் பலவீனமாய்ப்போய் வியாதி வருகிறதென்றும் பார்த்தோம். இந்தக் காரணத்தினால்தான் ஒரு வியாதியஸ்தன் வைத்தியரிடம் மருந்து சாப்பிடப் போகும்போது தான் எதைச் சாப்பிடவேண்டுமென்றும் எதைச் சாப்பிடக்கூடாதென்றும் தெரிந்துகொள்ள அதிக ஆவலுள்ளவனாயிருக்கிறான். இது ஓர் விசேஷித்த கேள்விதான். நாம் அவைகளை இங்கே அதிக விஸ்தரித்துப் பேசமுடியாது. நாம் எவைகளை உட்கொள்ள வேண்டுமென்றும் எவைகளை விலக்கவேண்டுமென்றும் இப்பொழுது பொதுவாகச் சுருக்கமாய்ப் பார்ப்போம்.

என்னத்தை உண்போம்? என்பது முதல் கேள்வி. நமது சரீரம் பல வஸ்துக்கள் சேர்ந்து உண்டாக்கப்பட்டிருக்கிறதென்று நம்மெல்லாருக்கும் தெரியும். நமது கைகளிலும் கால்களிலும் இன்னும் சரீரத்தின் மற்றப் பாகங்களிலும் தசை நார்கள் உண்டு. இந்தத் தசை நார்களின் உதவியால் நாம் அசைகிறோம், வேலை செய்கிறோம். நாம் உட்கொள்ளுகிற ஆகாரத்திலிருக்கிற ஓர்வித உணவுப் பொருளினால் இவைகள் உண்டாகின்றன. நாம் நடக்கும்போதும் வேலை செய்யும்போதும் சில "தசைநார் கிருமிகள்" (Muscle cells) செத்துப்போய் இரத்த ஓட்டத்தில் அடித்துக்கொண்டு போகப்படுகிறது. அவைகளுக்குப் பதிலாக புது தசை நார்க்கிருமிகள் வேண்டியது அவசியம். ஆகவே நாம் உட்கொள்ளும் ஆகாரத்தில் புது தசை நார்க்கிருமிகளை உண்டாக்கும்படியான புரோடீன் என்னும் ஓர்வித உணவுப்பொருள் தேவையாயிருக்கிறது. அந்த உணவுப்பொருள், காய்ந்த பயறு, மொச்சை, பருப்பு, பால், முட்டை, இன்னும் மற்ற தானிய வகைகளில் இருக்கிறது.

தசைநார் அசையும்பொழுதெல்லாம் சரீரத்தில் ஓர்வித சூடு உண்டாகிறது. இந்தக் காரணத்தினால்தான் நாம் பகலின் உஷ்ணமான வேளையில் கடினமான வேலை செய்கிறதில்லை. நாம் உட்கொள்ளுகிற சர்க்கரையிலும் கஞ்சிப் பதார்த்தத்திலும் சரீரத்திற்கு சூட்டையும் உற்சாகத்தையும் கொடுக்கக்கூடிய சக்தி யிருக்கிறது. நாம் வேலை செய்யும்போது தசை நார்களில் சேகரிக்கப்பட்டிருக்கிறவைகளை உபயோகிக்கிறோம். அவைகளைத் திரும்பவும் பெற்றுக்கொள்ளும்படியாக நாம் சாப்பிடுகிறோம். உருளைக்கிழங்கு, சர்க்கரை வள்ளிக்கிழங்கு, காய்ந்த பயறு, மொச்சை, பருப்பு, சோளம், கோதுமை அரிசி முதலிய எல்லாத் தானியங்களிலும் கஞ்சிப் பதார்த்தம் இருக்கிறது. ரொட்டியிலும் மரக்கறிகளிலும் கொஞ்சம் கஞ்சிப் பதார்த்தம் இருக்கிறது. இந்தக் கஞ்சிப்பதார்த்தமுள்ளவைகளை நன்றாய்ச் சமைத்துச் சாப்பிட்டால், சாப்பிட்டபிறகு அவைகள் சர்க்கரைப் பதார்த்தமாக மாறி இரத்தத்தோடு கலந்து தசைநார்களைப் போஷிக்கிறது. ஆகவே நமது சரீரம் சூட்டையும்

உற்சாகத்தையும் பெற்றுக்கொள்ளுகிறதினால் நாம் வேலை செய்கிறதற்குப் பலத்தை அடைகிறோம். நாம் சர்க்கரையால் செய்யப்பட்ட மிட்டாய்களையும் பழவர்க்கங்களையும் தின்னும்போது சூடும் பலமும் உண்டாகிறது. ஆனால் அவைகளை மட்டுக்கு மிஞ்சி உட்கொண்டால் பித்தாசயமானது (Liver) சர்க்கரைப் பதார்த்தத்தினால் நிரம்பி வேலை செய்யக்கூடாததினால் மனிதனுக்கு வியாதி வருகிறது.

நமது சரீரத்திற்கு எண்ணெயும் அவசியமாயிருக்கிறது. தேங்காய், எள், வாதுமைப் பருப்பு, நிலக்கடலை, முதலியவைகளிலிருந்து எண்ணெய் எடுக்கலாம். கடுகு முதலான சிறு விதைகளைச் செக்கிலிட்டு ஆட்டி எண்ணெய் எடுக்கலாம். மிருகங்களின் கொழுப்பிலிருந்தும் எண்ணெய் எடுக்கலாம். ஆனால் இது மற்ற எண்ணெயைப்போல அவ்வளவு நல்லதல்ல. இதைத் தின்றவுடனே இது இரைப்பையில் போய் உறைந்துவிடுகிறதினால் ஜீரணம் ஆவது அதிக கஷ்டம்.

அடுத்ததரம் நாம் எவைகளை உட்கொள்ளக்கூடாதென்று பார்ப்போம்.

ஓ. சிமித், M. D.

கேள்விகளுக்கு விடை

கேள்வி.—நாலைந்து வருஷமாக என் வலது காது கொஞ்சங்கூடக் கேட்கிறதில்லை. அதில் இரைச்சல் உண்டாகிறது. இடது காதினால் அதிகமாய்க் கேட்க முடியவில்லை. ஒருவர் என் சமீபத்தில் நின்று பேசினால் அல்லது அதிக சத்தமாய்ப் பேசினால் மாத்திரம் கேட்க முடியும். இதற்கு நான் என்ன செய்யவேண்டும்?

உத்தரவு.—உன்னுடைய காதில் குறும்பி யிருக்கலாம். கொஞ்சம்கூடக் கேட்கக்கூடாதிருக்கிற காதில் குறும்பி உள்ளே கட்டிப்போயிருக்கலாம். ஆகையினால் சத்தம் உள்ளே செல்லக்கூடவில்லை. மற்றக் காதில் அவ்வளவு ஜாஸ்தியாயில்லாததினால் கொஞ்சம் சத்தம் கேட்கிறது.

இராத்திரி படுக்கப்போகுமுன்னதாக ஒரு கரண்டியில் கொஞ்சம் ஒலிவ எண்ணெயை ஊற்றி சுடவைத்து ஒரு காதில் இரண்டு மூன்று சொட்டுவிட்டு, பிறகு பஞ்சு வைத்து காதை அடைத்துவிடவேண்டும். மறுபடியும் எண்ணெயைச் சுடவைத்து அடுத்த காதில் இரண்டு மூன்று சொட்டுவிட்டு அப்படியே செய்யவேண்டும். ஒரு காதில் ஊற்றின பிறகு மற்றொரு காதில் ஊற்றப்போகும்போது, முதலில் ஊற்றின காதின் பஞ்சைக் கைவிரலால் நன்றாய் அடைத்துக்கொள்ளவேண்டும். அப்படிச்செய்தால் தலையை மறுபக்கம் சாய்க்கும்போது எண்ணெய் கீழே ஒழுகாது.

இரா முழுவதும் எண்ணெய் காதில் சோரவேண்டும். காலையில் எழுந்து மறுபடியும் எண்ணெயைச் சுடவைத்து இரண்டு காதிலும் விட்டுப் பஞ்சை வைத்து அடைக்கவேண்டும். அடுத்த இரவும் அதற்கு அடுத்த காலையும் அப்படியே செய்யவேண்டும். சாயுங்காலத்தில் யாராவது காதுகளிலிருக்கிற குறும்பிகளை எடுத்துவிடவேண்டும். மறுபடியும் பஞ்சை வைத்து அடைக்கவேண்டும்.

இராத்திரி படுக்கப்போகு முன்னதாக எண்ணெயைச் சுடவைத்து இரண்டு காதிலும் விட்டு அடைக்கவேண்டும். இப்படியாக இரவும் பகலும் இரண்டு நாளைக்குச் செய்து பிறகு மறுபடியும் ஒருவரை விட்டு குறும்பியை எடுக்கச் சொல்லவேண்டும். மறுபடியும் பஞ்சை வைத்து அடைத்துவிட்டு இரண்டொரு நாளைக்கு எண்ணெய் ஊற்றாமலிருக்கவேண்டும்.

இதற்குள்ளாகக் காதுகள் சுத்தப்பட்டு நன்றாய்க் கேட்கும். அப்படிச் செய்தும் காது கேளாவிட்டால் காதைப் பரிசோதிக்கக்கூடிய ஓர் வைத்தியரிடம் பரிசோதனை செய்துகொள்ளவேண்டும்.

கேள்வி.—சில சமயங்களில் கண்களில் எரிச்சலெடுக்கிறது. அதற்குக் காரணமென்ன. அதற்கு என்ன செய்யவேண்டும்?

உத்தரவு.—கண்கள் பலவீனப்பட்டுக் களைப்படைந்துபோனால் எரிச்சல் உண்டாகும். அதற்குப் பின்வருமாறு சிகிச்சை செய்யவேண்டும். கால் தேக்கரண்டி உப்பை அரைக்கால் சேர் குளிர்ந்த தண்ணீரிலாவது அல்லது சுடு தண்ணீரிலாவது கரைத்து இராத்திரி படுக்கைக்குப் போகுமுன்னதாக கண்களில் அள்ளி பலமாய்த் தெளிக்கவேண்டும். காலையில் மறுபடியும் அப்படியே செய்யவேண்டும். பகலிலும் இரண்டு மூன்றுதரம் அப்படிச் செய்யவேண்டும். பிறகு இரவு படுக்கு முன்னதாக அப்படிச் செய்யவேண்டும். இரண்டு மூன்று நாளைக்கு இப்படிச் செய்து வந்தால் கண்களுக்கு அதிக சுகமுண்டாகும்.

கேள்வி.—உட்கார்ந்திருந்தாலும் நின்றாலும் பாதங்களில் எரிச்சலுண்டாகிறது. ஏன்? அதற்கு என்ன செய்யவேண்டும்?

உத்தரவு.—நாம் குளிக்கும்போது கால்களை நன்றாகச் சுத்தம் செய்யாவிட்டால் அழுக்கு தங்கி காலின் தோலில் ஒருவித வியாதி வுண்டாகிறது. பாதங்கள் அதிக முறடாயும் வெடித்தும் இருக்கிறதாவென்று பார்க்கவேண்டும். அப்படியிருக்குமானால் பாதங்களை நல்ல சோப்பால் சுடுதண்ணீர் விட்டுக் கழுவி பிறகு கர்பாலிக் தைலம் (Carbolic ointment) தடவவேண்டும். (10 துளி கர்பாலிக் திராவகத்தை (Carbolic acid) ஒரு அவுன்ஸ் வாசிலின் இல் (Vaseline) ஊற்றி நன்றாய்க் குழைப்பதினால் கர்பாலிக் தைலம் உண்டாகும்). ஒவ்வொரு காலையிலும் பாதங்களைக் கழுவி கர்பாலிக் தைலத்தைத் தடவவேண்டும்.

பாதங்கள் வெடித்துப் புண்ணாயிராவிட்டால் கால்களிலுள்ள நரம்புகளினால் அந்த எரிச்சல் உண்டாயிருக்கலாம். அப்படியிருந்தால் அதற்குப் பின்வரும் சிகிட்சை செய்யவேண்டும். இரண்டு கால்களையும் வைக்கும்படியான அகலமான பாத்திரம் இரண்டு வைத்துக்கொள்ளவேண்டும். படுக்கப் போகுமுன்னதாக நன்றாய்க் கொதிக்கிற தண்ணீரை ஒரு பாத்திரத்தில் கொண்டுவரவேண்டும். ஒரு அகண்ட பாத்திரத்தில் கொஞ்சம் கொதிக்கிற தண்ணீரையும் மற்றதில் குளிர்ந்த தண்ணீரையும் ஊற்றவேண்டும். கால் தாங்கும்படியான சூடாக தண்ணீரை விளாவி இரண்டு கால்களையும் அந்த சுடு தண்ணீர் ஊற்றியிருக்கிற பாத்திரத்தில் வைக்கவேண்டும். இரண்டு மூன்று நிமிஷம் கொதிக்கிற தண்ணீரில் காலை வைத்தபிறகு உடனே இரண்டு கால்களையும் குளிர்ந்த தண்ணீர் இருக்கிற பாத்திரத்தில் வைக்கவேண்டும். குளிர்ந்த தண்ணீரில் ஒரு நிமிஷம் மாத்திரம் கால்களை வைத்திருந்த பிறகு மறுபடியும் சுடு தண்ணீரில் இரண்டு மூன்று நிமிஷம் வைக்கவேண்டும். பிறகு குளிர்ந்த தண்ணீரில் வைக்கவேண்டும்.

இப்படியாக அரை மணி நேரம் மாற்றி மாற்றி செய்யவேண்டும். சுடு தண்ணீர் குளிர்ந்துபோனால் கொதிக்கிற தண்ணீரில் கொஞ்சம் ஊற்றி எப்பொழுதும் கால் தாங்கும்படியான சூடாகவே வைக்கவேண்டும். அரை மணி நேரம் கழித்த பிறகு காலைக் குளிர்ந்த தண்ணீரில் விட்டு எடுத்து கால்களை நன்றாய்த் துடைத்துவிட்டுப் படுக்கைக்குப் போகவேண்டும். இப்படியாக ஒரு வாரத்திற்கு ஒவ்வொரு நாள் இரவிலும் செய்யவேண்டும். நேரம் இருந்தால் காலையிலும் இவ்விதமாக ஒருதரம் செய்யவேண்டும். ஆனால் கட்டாயம் படுக்கப்போகு முன்னதாக ஒரு வாரத்திற்கு இப்படிச் செய்தால் சுகமுண்டாகும்.

ஓ. சிமித், M. D.

நிகழ்கால சத்தியம்

வேத சன்மார்க்க சுகாதார விஷயங்களில் தற்கால அறிவுக்கொத்தபடி மனிதர் அபிவிருத்தியடைவதற்கென்று பிரசுரமாகும் ஓர் பத்திரிகை.

மதராஸ் நவம்பர்மீ, **1920.**

இப்பத்திரிகை, பெங்களூரிலிருக்கும், எஸ். டி. ஏ. பப்ளிஷிங்கவுஸ்காக, பட்டணத்தில் வெப்பேரி என்னுமிடத்திலுள்ள அல்பீனியன் அச்சாபீசில் அச்சடிக்கப்பட்டு வருகிறது.

பத்திராதிபர் பாஸ்றர், ஜி. ஜி. லௌரி.
உதவி ,, ,, ஈ. டி. தாமஸ்.
மானேஜர், எல். சி. ஷெப்பார்டு, பி. ஏ.

	ரூ.	அ.	ப.
தனிப்பிரதி ஒன்றுக்கு ...	0	1	6
வருஷ சந்தா, தபாற் கூலி உள்பட ...	1	0	0
சிங்கப்பூர் பினாங்கு முதலிய வெளி ஊர்களுக்கு தனிப் பிரதி ஒன்றுக்கு ...	0	2	0
வருஷசந்தா தபாற்கூலி உள்பட ...	1	4	0

அமெரிக்காவிலுள்ள அநேகர் தங்கள் வயல்களையும் கிராமங்களையும் விட்டுவிட்டு பட்டணங்களில் வசிக்கப்போனதினால் ஒரு பெரிய பஞ்சம் உண்டாகுமென்று தோன்றினது. கடந்த வருஷத்தில் மூன்று லக்ஷம் ஜனங்கள் தங்கள் வயல்களை விட்டுவிட்டுப் பட்டணங்களுக்குப் போனார்கள். இப்படி வேளாளர்கள் குறைவுபட்டுப் போனதினால் பெரிய பாடசாலைகளில் படிக்கும் மாணக்கர்கள் யாவரும் தங்கள் விடுமுறை நாட்களை பயிர்த்தொழில் செய்வதில் செலவிட உத்தேசித்திருக்கிறார்கள்.

சமாசாரக் குறிப்புகள்.

(NEWS AND NOTES)

பல்கேரியா தேசத்திலே இருபது வயதுள்ள ஆண்களும் பதினெட்டு வயதுள்ள பெண்களும் தேசத்தின் பொது நன்மைக்காக ரஸ்தாக்களிலும் இருப்புப்பாதைகளிலும் வேலை செய்யவேண்டுமென்று ஏற்பாடாயிருக்கிறது. வியாதியஸ்தரும், கலியாணம் பண்ணினவர்களும் வயது சென்ற பெற்றோரைப் போஷிக்கிற இளைஞர்களும் இந்தக் கட்டளைக்கு உள்ளானவர்களல்ல. புருஷர்கள் பதினாறு மாதமும் பெண்கள் எட்டு மாதமும் வேலை செய்ய வேண்டும். மாணக்கர்கள் தங்கள் உயர்தர கல்வியை முடித்த பிற்பாடு வேலை செய்ய வேண்டும். குற்றவாளிகள் சிறைச்சாலையிலிருந்து வந்த பிறகு இந்த வேலையைச் செய்யவேண்டும். இப்படிச் செய்வதினால் பிச்சைக்காரர்களுக்கும் சோம்பேறிகளுக்கும் விமோசனம் உண்டாகிறது. ஐரோப்பாக் கண்டத்தில் பல்கேரியா தேசத்தில் மாத்திரம்தான் பொருட்களின் விலை யுத்தத்திற்கு முன் எப்படியிருந்ததோ அப்படியே இப்போதும் இருக்கிறது. தொழிற்சாலைகளில் எல்லாம் வேலை நடந்து வருகிறது. பயிர் இப்போது ஒருதரம் அறுவிடையாகியிருக்கிறது.

அமெரிக்காவிலுள்ள சில ஐசுவரியவான்கள் ஒன்று சேர்ந்து அங்குள்ள சர்க்கரையையெல்லாம் விலைக்கு வாங்கி வைத்துக்கொண்டு ஒரு பவுண்டு சர்க்கரை ஒரு ரூபாயாக ஜனங்களுக்கு விற்கிறார்கள். ஆனால் ஜனங்களில் அநேகர் ஒன்று சேர்ந்து ஒரு பவுண்டு சர்க்கரை 5 அணாவுக்கு விற்கப்படுமட்டும் சர்க்கரை வாங்கக்கூடாதென்று கட்டுப்பாடு செய்திருக்கிறார்கள்.

கொஞ்ச நாட்களுக்கு முன்பாக தென்னிந்தியாவுக்கு வந்த சாது சுந்தர் சிங் என்பவர் இப்பொழுது அமெரிக்காவுக்குப் போயிருக்கிறார். அமெரிக்காவுக்குப் போகிற வழியில் இங்கிலாந்தில் பல வாரம் தங்கியிருந்தார்.

நிகழ்கால சத்தியம்.

Vol. IX. மதராஸ்:—டிசம்பர்மீ, 1920. No. 8.

(EDITORIAL COMMENT.)

பத்திராதிபரின் குறிப்பு.

நாளது 1920-ம் வருஷம் ஜூலை மாதம் பிரசுரமான "ஐக்கிய சபை தூதிகை"யின் 107-ம் பக்கத்தில் 'கிறிஸ்தவர்களின் ஓய்வுநாள்' என்ற தலைப்புடன் எழுதப்பட்டிருக்கிற பத்தியைப் பார்வையிடலானோம். அதின் மூலமாய் இராமநாதபுரம், மதுரை ஜில்லாக்களில் தற்காலத்திலுள்ள சில பக்தியுள்ள வாலிபர்களின் மனதில் ஏழாம் நாளாகிய சனிக்கிழமையோ, அல்லது வாரத்தின் முதலாம் நாளாகிய ஞாயிற்றுக்கிழமையோ நாம் ஆசரிக்கவேண்டிய சரியான ஓய்வுநாள் என்று அறிய வெகு விருப்பமுண்டாகி அதை வெகு தூரம் ஆராய்ச்சி செய்கிறதாக நமக்குத் தெரியலாச்சுது. இப்படிப்பட்ட பெரிய எழுப்புதல் தெய்வ பக்தியுள்ள வாலிபர்க்குள் உண்டாயிருப்பதை அறிந்து கர்த்தருக்குள் வெகுவாய்ச் சந்தோஷப்படுகிறோம். பிரசங்கி 12: 1-ல் 'நீ உன் வாலிபப் பிராயத்திலே உன் சிருஷ்டிகரை நினை' யென்றும் சங்கீதம் 119: 9-ல் "வாலிபன் தன் வழியை எதினால் சுத்தம் பண்ணுவான்? உமது வசனத்தின்படி தன்னைக் காத்துக்கொள்ளுகிறதினால்தானே" என்றும் வாசிக்கிறோம்.

ஆகையால் தன் வழியை தேவனுடைய வசனத்தால் காத்து சுத்தம்பண்ணப் பிரயாசப்படுகிற மேற்படி வாலிபர்களுக்கு நாம் சொல்லுகிற உபதேசம் என்னவென்றால்:—

தேவனுடைய வசனம் நிறைந்த வேதாகம புஸ்தகம் முழுவதிலும் ஒரேஒரு நாளைத்தான் எவ்விடத்திலும் ஓய்வுநாளென்று அழைத்திருக்கிறது—அது எந்த நாள் என்பதைத் திட்டமாய் அறிய தேவனுடைய வசனத்திலிருந்து சில வாக்கியங்களை மாத்திரம் யாதொரு வியாக்கியானமன்றி எழுதுகிறோம். "தேவன் தாம் செய்த தம்முடைய கிரியையை ஏழாம் நாளிலே நிறைவேற்றி, தாம் உண்டாக்கின தம்முடைய கிரியைகளையெல்லாம் முடித்த பின்பு, ஏழாம் நாளிலே ஓய்ந்திருந்தார்; தேவன் தாம் சிருஷ்டித்து உண்டுபண்ணின தம்முடைய கிரியைகளையெல்லாம் முடித்த பின்பு அதிலே ஓய்ந்திருந்தபடியால், தேவன் ஏழாம் நாளை ஆசீர்வதித்து, அதைப் பரிசுத்தமாக்கினார்." ஆதி. 2: 2, 3.

"ஓய்வுநாளைப் பரிசுத்தமாய் ஆசரிக்க நினைப்பாயாக; ஆறு நாளும் நீ வேலைசெய்து, உன் கிரியைகளையெல்லாம் நடப்பிப்பாயாக; ஏழாம்நாளோ உன் தேவனாகிய கர்த்தருடைய ஓய்வுநாள்." யாத். 20: 8-10.

மேலும் இந்தப் பத்தியை எழுதினவர், வாரத்தின் முதலாம் நாளே புதிய ஏற்பாட்டுக் கிறிஸ்தவர்களின் ஓய்வுநாள் என்று துவக்கத்தில் சில வரிகளில் பேசினார்போல் தெரிகிறது. அதற்கு யாதொரு வேத அத்தாட்சியையும் காணோம். ஏதோ சில தப்பறையான

பாரம் பரியங்களைத் தனக்குப் பெலத்த அத்தாட்சியாக வைத்துக்கொண்டு சாதித்தாற்போல் தெரிகிறது. இப்படிப்பட்ட உபதேசத்தைப்பற்றி நமது அருமை இரட்சகர் எச்சரித்த வார்த்தைகளைச் சற்று நன்கு கவனிப்போமாக. "உங்கள் பாரம்பரியத்தினாலே தேவனுடைய கற்பனையை அவமாக்கி வருகிறீர்கள்; மனுஷருடைய கற்பனைகளை உபதேசங்களாகப் போதித்து, வீணாய் எனக்கு ஆராதனை செய்கிறார்களென்று, ஏசாயா தீர்க்கதரிசி நன்றாய்ச் சொல்லியிருக்கிறான் என்றார்." மத். 15: 6, 9.

இன்னும் மேற்படி பத்திரிகையை எழுதினவர் முதலாம் நாள்தான் ஓய்வுநாள் 'என்று, சற்று பிடித்துப் பேசிவிட்டு, பிற்பாடு வாரத்தின் எந்த நாளையும் ஓய்வுநாளென்று அனுசரித்துக்கொள்ளலாமென்றும் சொல்லுவதும் ஆச்சரியமே. இப்பூமியில் எந்த மனுஷனும்தான் பிறந்த நாளை மாற்ற முடியுமா? அல்லது தான் வாஸ்தவத்தில் பிறந்த தினத்தை விட்டுவிட்டு, வேறு ஒரு நாளையாவது, அல்லது வருஷத்தில் எல்லா நாளையும்தான் பிறந்த நாளென்று சாதிக்கமுடியுமா? அப்படியே தேவன் ஓர் நாளில் ஓய்ந்திருந்து அதை ஆசீர்வதித்து, பரிசுத்தப்படுத்தி, அந்த நாளையே அவரது பிள்ளைகள் ஆசரிக்கவேண்டுமென்று தமது சொந்த விரலால் கற்பலகையில் 'ஏழாம் நாளோ உன் தேவனாகிய கர்த்தருடைய ஓய்வுநாள்'என்று தெளிவாய் மாறாப்பிரமாணமாக எழுதிக்கொடுத்திருக்கிறார். சத்தியம் இவ்வளவு திட்டமாய் உள்ளங்கை நெல்லிக்கனிபோலிருக்க ஏழில் ஏதாவது ஓர் நாளை யேகோவாவின் பரிசுத்த ஓய்வுநாளாக வைத்துக்கொள்ளலாமென்று இவர் இப்படித் தன் மனம்போல் 'ஐக்கிய சபை தூதிகை'யில் சொல்லத்துணிந்ததும் வெகு பரிதாபமே. இப்படிப்பட்ட போதகங்களை எதிர்நோக்கியே கர்த்தர் எசேக்கியேலைக் கொண்டு பின் வருமாறு வெகு நேர்த்தியாய் தீர்க்கதரிசனம் உரைத்திருக்கிறார். "அதின் ஆசாரியர்கள் என் வேதத்துக்கு அநியாயம் செய்து, என் பரிசுத்த வஸ்துக்களை பரிசுத்த குலைச்சலாக்குகிறார்கள்; பரிசுத்தமுள்ளதற்கும் பரிசுத்தமில்லாததற்கும் வித்தியாசம் பண்ணாமலும், அசுத்தமுள்ளதற்கும் அசுத்தமில்லாததற்கும் உண்டான வேற்றுமையைக் காண்பியாமலும் இருந்து என் ஓய்வு நாட்களுக்கு தங்கள் கண்களை மூடிக்கொள்ளுகிறார்கள்; அவர்கள் நடுவிலே நான் கனஈனம் பண்ணப்படுகிறேன்; அதின் தீர்க்கதரிசிகள் அபத்தமானதைத் தரிசித்து, பொய்ச் சாஸ்திரத்தை அவர்களுக்குச் சொல்லி, கர்த்தர் உரைக்காதிருந்தும், கர்த்தராகிய ஆண்டவர் உரைத்தாரென்று சொல்லி, அவர்களுக்குச் சாரமற்ற சாந்தைப் பூசுகிறார்கள்." எசே. 22: 26, 28.

இன்னும் அவரது பத்திரியின் கடைசிப் பாகத்தில் ஓர் ஆலோசனையும் சொல்லுகிறார். "சனிக்கிழமைதான் சரியான ஓய்வுநாளென்று இவர்கள் உறுதியாய் நம்பினால், இத்திருச்சபையிலேயே தரித்திருந்து பிரிவினை உண்டாக்காமல் தங்கள் நியாயத்தை எடுத்துரைத்து உலகத்திலுள்ள கிறிஸ்தவர்கள் யாவரும் சனிக்கிழமையை ஆசரிக்கச்செய்யலாம்" இது ஓர் நல்ல ஆலோசனைதான்; இதைப் பார்க்கும்போது அவர் மனதிலும்கூட ஏழாம் நாளாகிய சனிக்கிழமையே ஓய்வுநாளென்று நன்றாய்ப் பதிந்ததுபோல் தெரிகிறது. ஆனால் இந்த ஆலோசனையைக் கையாடியே மருளவிழுந்துபோன சபைகளுக்குள், ஏழாம் நாள் ஓய்வின் சத்தியத்தைப்பற்றி போதித்து, அதற்குரிய சகல நியாயத்தையும் தேவனுடைய புஸ்தகத்திலிருந்து எடுத்து உரைக்கும்போது, அதற்கு உடன் சகோதரர்கள் சற்றேனும் செவிகொடாமல் "மாமியார் கொடுத்த பலகாரத்தைத் தின்னாமல் அதிலுள்ள துளை துவாரங்கள் எத்தனையென்று எண்ணிக்கொண்டே காலம் போக்குகிறார்கள்" என்று பழங்கிளவி கதை சொல்லுகிறதும், "திராட்சத் தோட்டத்தைக் கெடுக்கவந்த குள்ள நரி" யென்று அழைக்கிறதும், இப்படி சத்தியத்தை அறிவிக்கிறவர்களுக்காக 'அனுதாபப்படுகிறோமென்றும்' சொன்னால் என் அன்பான சகோதரனே எப்படி நாம் ஒத்திருக்க முடியும். ஒவ்வாமைக்கு காரணம் யார்? மேலும் பரிசுத்த வேதத்திலே இதைப்பற்றி என்ன சொல்லப்பட்டிருக்கிறது என்றால் 'ஒளிக்கும் இருளுக்கும் ஐக்கியமேது' என்றும் "என் ஜனங்களே

நீங்கள்' அவளுடைய பாவங்களுக்கு உடன்படாமலும், அவளுக்கு நேரிடும் வாதைகளில் அகப்படாமலும் இருக்கும்படிக்கு அவளை விட்டு வெளியே வாருங்கள்" என்றும் சொல்லியிருப்பதை வெகு திட்டமாய் வாசிக்கிறோம். ஆகையால் இது விஷயத்தில் நாம் சொல்லக்கூடியது என்னவென்றால் "தேவனுக்குச் செவி கொடுக்கிறதைப்பார்க்கிலும் உங்களுக்குச் செவி கொடுக்கிறது தேவனுக்கு முன்பாக நியாயமாயிருக்குமோ என்று நீங்களே நிதானித்துப் பாருங்கள்."

(THE WAR GOD STILL AT LARGE)

யுத்த ஆவி அதிகரித்திருக்கிறது.

மனிதர் மேலான நோக்கத்தோடு உலகத்தில் சமாதானம் நிலைத்திருக்கவேண்டுமென்று ஏற்பாடுகள் பண்ணலாம். ஆனால் மனித முயற்சிக்கு ஒரு எல்லையிருக்கிறது. ராஜ்ய ஐக்கிய சங்கமாவது அல்லது வேறெந்த மனித பிரயத்தனங்களாவது மனித இருதயத்திலுள்ள கலகக் குணத்தை மாற்ற முடியாது. எந்த மனித ஏற்பாடும் இந்த உலகத்திற்கு சர்வ சமாதானத்தை உண்டு பண்ணாது. இதைக்குறித்து ஒரு பத்திராதிபர் பின் வருமாறு சொல்லுகிறார்:

"சுயாதிபத்தியமாவது, ஏகாதிபத்தியமாவது, பிரஜாதிபத்தியமாவது அல்லது வேறெந்த விதமான மனித ராஜாங்கமாவது எவ்வித சமாதான சங்கங்களின் உதவியாலும் இவ்வுலகத்தில் சமாதானத்தை நிலைநிறுத்த முடியாதென்று தேவனுடைய வசனம் தெளிவாய்க் காட்டுகிறது. புறஜாதிகளின் ஆளுகையை அழித்துப்போட்டு கிறிஸ்து தமது ராஜ்யத்தை ஸ்தாபிக்கும்போதுதான் உலகத்தில் நித்திய சமாதானம் நிலைத்திருக்குமென்று தேவ வசனம் தெளிவாய்ப் போதிக்கிறது.

"சமாதானப்பிரபுவே இவ்வுலகத்திற்கு நித்திய சமாதானத்தை அளிப்பார். மனிதர் தங்கள் சுய பலத்தால் தங்களைத் தாங்களே இரட்சித்துக்கொள்ளமுடியுமென்று வேத வெளிப்படுத்தலிலாவது அல்லது வேறெந்த மனித சாஸ்திரத்திலாவது கூறப்பட்டிருக்கிறதில்லை. சமநிலை சங்கத்தைச் சேர்ந்தவர்கள், யாவரும் சகோதரத்துவமுள்ளவர்களாயிருக்கவேண்டுமென்று மனோராஜ்யம் செய்யலாம். கவிராயர்கள் யுத்தக் கொடிகள் யாவும் சுருட்டப்பட்டுப்போகுமென்று கவி பாடலாம். ஆனால் இவைகளெல்லாம் இப்போது நடைபெறுதென்று நாம் நம்புகிறோம். அந்த ஏக ராஜா இவ்வுலகத்தை மாட்சிமையோடு ஆளும்போது இந்த நம்பிக்கையின் உண்மை வெளிப்படும்."

இப்பொழுது சமாதானத்தைப்பற்றிப் பிரசங்கிக்கிறவர்கள் "சமாதானமில்லாதிருந்தும் சமாதானம் என்று சொல்லுகிறார்கள்." "சமாதானமில்லாதிருந்தும் சமாதானம் சமாதானம் என்று சொல்லி, என் ஜனத்தின் காயங்களை மேற்பூச்சாய்க் குணமாக்குகிறார்கள்." எரே. 6: 14. சீக்கிரத்திற்குள்ளாக இன்னொரு யுத்தம் ஆரம்பிக்குமென்று தற்காலத்துப் பெரிய மனிதர்கள் யாவரும் நம்புகிறார்கள். பிரான்சு தேசத்தைச்சேர்ந்த எம். ஜார்ஜ் கிலமென்சோ என்பவர் (M. George Clemencean) பின் வருமாறு சொல்லுகிறார். "சண்டையில் ஜெய மடைந்தோமென்று நான் சொன்னேன். புசலில் ஓர் சிறு அமைதலுண்டாயிருக்கிறதென்று சொன்னால் அதிக பொருத்தமாயிருக்கும். இனி சம்பவிக்கப்போகிறவைகளை நாம் தைரியத்தோடு எதிர்ப்பதே உசிதம்."

1919-ம் ஞு செப்டம்பர்மீ 13-ட்ட வெளியான ஓர் பத்திரிகையில் (Daily Province) ஆங்கில பத்திராதிபர்களில் பேர்போன ஒருவர் (Sir John Foster Fraser) பின் வருமாறு எழுதுகிறார்.

"உலகம் இப்பொழுது குழப்பமான நிலைமையிலிருக்கிறது. இன்னொரு பெரிய யுத்தம் ஆரம்பிக்குமென்பதை நம்பாத ஒரு போர்வீரனாவது கிடையாது........இப்பொழுது ஐக்கியப்பட்டிருக்கிற பெரிய குடியரசு ராஜ்யங்களெல்லாம் சமாதானம் வேண்டுமானால் யுத்தத்திற்கு ஆயத்தமாகவேண்டுமென்கிற நியாயத்தை உடையவர்களாயிருக்கும்போது யுத்தத்தைத் தடுக்க முடியுமா? தடுக்க முடியுமென்று நான் நம்பவில்லை. கடந்த சில மாதங்களாக நான் பிரான்சு, இங்கிலாந்து, அமெரிக்கா முதலிய நாடுகளிலுள்ள ராஜ தர்ம நிபுணர்களையும், போர் வீரரையும் கண்டு பேசினபோது அவர்களும்கூட இதை நம்புவதாகத் தெரியவில்லை. யுத்த ஆயத்தங்கள் நடந்துவருகிறது. ஒரு துரும்பு காற்றின் திசையையும் ஒரு நிழல் ஓர் வஸ்து சமீபத்திலிருக்கிறதென்பதையும் தெரியப்படுத்தும்போது உலக ராஜாக்களின் வீராவேசம் சீக்கிரத்திற்குள்ளாகப் பொங்கி வழியுமென்பதை நாம் அறிந்துகொள்வது கஷ்டமா?

உலக யுத்தமானது நடைபெற்றுக்கொண்டிருந்த காலத்தில் இவ்வுலகம் இருந்த நிலைமையைவிட அதிக கேடான நிலைமைக்கு வந்திருக்கிறதென்று பத்திராதிபர் யாவரும் உணர்ந்துகொள்ளுகிறார்கள்.

"உலகத்தின் பொது நிலைமையைச் சீர்தூக்கிப் பார்க்குமிடத்து யுத்தம் உச்சஸ்தானத்திலிருந்தபோது உலகம் இருந்த நிலைமையைவிட தற்காலத்தில் அதிக கேடுள்ளதாயிருக்கிறது." என்று 1920-ம் வருஷம் பெப்ரவரிமீ 14-ம் ௳ 'சுயாதீனம்' என்னும் ஓர் பத்திரிகையில் (Dearborn "Independent") வெளியாயிற்று.

என்ன சம்பவிக்கும்?

இன்னொரு முறை யுத்தம் ஆரம்பித்தால் என்ன பயங்கரங்கள் சம்பவிக்குமென்று இப்பொழுது மனிதர் பேச ஆரம்பித்துவிட்டார்கள். ஆங்கிலேய தேசத்து முதன் மந்திரி சொன்ன சில விஷயங்கள் 1920-ம் வருஷம் பெப்ருவரிமீ 15-ம் ௳ வாஷிங்டன் பட்டணத்துப் பத்திரிகை ஒன்றில் (Washington, "Post") பின் வருமாறு வெளியாயிற்று.

"இன்னொரு சண்டை ஆரம்பித்தால் என்ன சம்பவிக்குமென்பதை நினைக்கும்போது புத்தி தடுமாறுகிறது. யுத்த சம்பந்தமாக இப்பொழுது புதிதாய்க் கண்டு பிடிக்கப்பட்டவைகளைக் கடந்த சண்டையில் உபயோகித்திருப்போமானால் சொல்லி முடியாத பயங்கர சேதங்களைப் பிறபித்திருக்கும்.

"அப்பேர்ப்பட்ட பயங்கர சேதங்கள் இன்னொரு முறை சம்பவிக்குமானால் நாகரீகம் யாவும் நாசமாய்ப் போகும். இந்த உலகம் "மத்திய" அல்லது "இருண்ட காலங்களில்" (Middle or Dark ages) இருந்த ஸ்திதியைவிட நமது புத்திக்கு எட்டாத ஒரு க்ஷீணதசையை அடையும் என்பதற்குச் சந்தேகமில்லை."

"இன்னொரு யுத்தம் உண்டாகுமானால் இந்த யுத்தம் எப்படி இதற்குமுன் நடந்த எல்லாவற்றைப்பார்க்கிலும் அதிக பயங்கரமாயிருந்ததோ அதுபோல இன்னும் அதிக பயங்கரமான சேதங்களை விளைவிக்கும். குடி ஜனங்கள் பெரும்பான்மையாய் அழிக்கப்பட்டுப்போவார்கள்" என்று லார்டு ராபர்ட் சிசில் என்பவர் (Lord Robert Cecil) எண்ணுகிறார்.

போஸ்டன் (Bosten) பட்டணத்தில் பேக்கர் என்பவர் (Secretary Baker) பின்வருமாறு பேசினாரென்று ஓர் பத்திரிகையில் (Associated Press) வெளியாயிற்று. "ராஜ்ய ஐக்கிய சங்கத்தார் தங்களால் கூடியமட்டும் பிரயாசைப்படாவிட்டால் இன்னொரு யுத்தம் ஆரம்பிக்குமென்றும், அதில், இப்பொழுது முடிந்த யுத்தத்தில் உபயோகித்த ஆயுதங்களைப் பார்க்கிலும் அதிக நாசத்தை உண்டாக்கத்தக்க பிரமாண்டமான யுத்த தளவாடங்கள் உபயோகிக்கப்படும் என்றும் ஒரு பெரிய சபைக்கு உபந்நியாசித்தார்."

இப்படிப் புதிதாய்க் கண்டுபிடிக்கப்பட்ட யுத்த ஆயுதங்களைப்பற்றி ஓர் பத்திராதிபர் ("Commercial appeal" Memphis Tennessee) பின் வருமாறு எழுதுகிறார்.

"இனி வரப்போகிற சண்டையையும் இப்பொழுது முடிந்த சண்டையையும் ஒப்பிட்டுப் பார்ப்போமானால், இப்பொழுதுமுடிந்த சண்டை சிறு பிள்ளைகள் சண்டையைப் போலவும் இனி வரப்போகிற சண்டை ராக்ஷதர்கள் சண்டையிடுவதுபோலவும் இருக்கும். இனி வரப்போகிற சண்டையில் சரியாகக் குறி பார்த்துக் குண்டுகளை நாற்பது மைல் தூரம் வெடிக்கக்கூடிய பீரங்கிகள் உபயோகிக்கப்படும். நமது பாட்டன், பூட்டன் முற்காலத்தில் ராஜாங்க விஷயமாக ஒரு நாளைக்கு நாற்பது மைல் தூரம் பிரயாணம் பண்ணினார்கள்.

"இனி வரும் சண்டையில், 2,100 இராத்தல் நிறையுள்ள பீரங்கிக் குண்டுகள் உபயோகிக்கப்படும். முன்னே ஒரு பீரங்கிக் குண்டினால் உண்டான சேதத்தைப்பார்க்கிலும் இருமடங்கான சேதம் இந்தக் குண்டினால் உண்டாகும்.

"இனி வரப்போகிற சண்டையில் கம்பளியையும் தோலையும் ஊடுருவிச் செல்லக்கூடிய விஷவாயுவை உபயோகிப்பார்கள். இந்த வாயுவின் ஒரு துளி நமது காலில் பட்டால் அந்தக் கால் உடனே அழிந்துபோகும். இந்த வாயுவின் புகையைச் சுவாசித்தவுடனே பிராணன் நீங்கிவிடும். இந்த வாயுவைக் குண்டுகளுக்குள் வைத்துப் பிரயோகிக்கலாம். ஒரு குண்டிலுள்ள வாயு ஐந்து ஏக்கர் விஸ்தீரணத்திலுள்ள எல்லா உயிர்ப்பிராணிகளையும் மிருக ஜீவன்களையும் பயிர் வகைகளையும் அழிக்கக்கூடும். அல்லாமலும் அந்த ஐந்து ஏக்கரைச் சுற்றிலுமுள்ள நிலங்களுக்கும் சேதத்தை உண்டு பண்ணக்கூடும்.

"இனி நடக்கும் யுத்தத்தில் இப்பொழுது இருக்கிற ஆகாயக் கப்பல்களைவிட அதிக பிரமாண்டமான ஆகாயக் கப்பல்கள் உபயோகிக்கப்படும். அவைகள் பெரிய பீரங்கிகளையும் தூக்கிக்கொண்டு செல்லக்கூடும். இந்த ஆகாயக் கப்பல்கள் ஒரு டன் நிறையுள்ள விஷவாயு அடைத்த பாத்திரங்களைத் தூக்கிக்கொண்டு செல்லக்கூடும். ஆகாயக் கப்பல்களிலிருந்து வெடி குண்டுகளைக் கீழே எறிந்தால் அவை 400 அடி விஸ்தீரணத்திலுள்ள எல்லா ஜீவப்பிராணிகளையும் கொல்லக்கூடிய சக்தி யுடையவைகளாயிருக்கும்."

சடுதியாய்ச் சம்பவிக்கும்.

கடைசி உபத்திரவம் நாம் நினையாத நேரத்தில் சடுதியாய் நம்மேல் வரும். இப்பொழுது முடிவுபெற்ற இந்த யுத்தம் எவ்வளவு சடுதியாய்ச் சம்பவித்ததென்று நம்மெல்லாருக்கும் தெரியும். சமாதானம் வியாபித்திருந்த ஐரோப்பாக் கண்டமானது ஒரே வாரத்திற்குள்ளாக அணிவகுத்த போர்க்களமாக மாறினது. பிழைப்புக்காகத் தொழில் செய்துகொண்டிருந்த தொழிற் சாலைகளெல்லாம் யுத்தாயுத சாலைகளாக மாறின. இது உலக சரித்திரத்தில் இதுவரையும் ஒருபோதும் சம்பவியாத சடுதியானவிதமாய்ச் சம்பவித்தது.

1914-ம் வருஷம் ஆகஸ்டுமீ 1-ம் தேதிக்குறிய "லண்டன் தினசரி தந்தி சமாசாரத்தில்" (London Daily Telegraph.) இதைக்குறித்து "இவ்வளவு சடுதியாயும், பயங்கரமாயும், நினையாத பிரகாரமாயும் ஆபத்து வந்ததால் மனிதருக்குப் புத்தி தடுமாறிப்போயிற்று" என்று எழுதப்பட்டிருக்கிறது.

ஐரோப்பாவின் தேச சரித்திரப் புஸ்தகத்தில் 713-ம் பக்கத்தில் ("The History of Modern Contemporary Europe") "காரியங்கள் அவ்வளவு சடுதியாய்ச் சம்பவித்ததினால் உலகம் பிரமிப்படைந்தது" என்று சரித்திரக்காரர் சொல்லுகிறார். ஐரோப்பாவின் ராஜாங்கத்துக்கடுத்த விஷயத்தில் பேர்போனவர்களுக்குக்கூட இந்த மாறுதல் சம்பவிக்குமென்று தெரியாதிருந்தது.

உலக சரித்திரத்தின் கடைசி நாட்களில் காரியங்கள் எவ்வளவு சடுதியாய்ச் சம்பவிக்குமென்பதற்கு இது ஓர் உதாரணம். அந்த மகா நாள் நம்மேல் சடுதியாய் வராதபடிக்கு நம்

மைக் காத்துக்கொள்ளவேண்டும். "இதோ, திருடனைப்போல் வருகிறேன். தன் மாணம் காணப்படத்தக்கதாக நிர்வாணமாய் நடவாதபடிக்கு விழித்துக்கொண்டு தன் வஸ்திரங்களைக் காத்துக்கொள்ளுகிறவன் பாக்கியவான்." வெளி. 16: 15. "உங்கள் இருதயங்கள் பெருந்திண்டியினாலும் வெறியினாலும் லவுகீக கவலைகளினாலும் பாரமடையாதபடிக்கும், நீங்கள் நினையாத நேரத்தில் அந்த நாள் உங்கள்மேல் வாராதபடிக்கும் எச்சரிக்கையாயிருங்கள். பூமியிலெங்கும் குடியிருக்கிற அனைவர்மேலும் அது ஒரு கண்ணியைப்போல வரும். ஆகையால் இனிச் சம்பவிக்கப்போகிற இவைகளுக்கெல்லாம் நீங்கள் தப்பி மனுஷ குமாரனுக்கு முன்பாக நிற்கப் பாத்திரவான்களாக எண்ணப்படுவதற்கு, எப்பொழுதும் ஜெபம் பண்ணி விழித்திருங்கள் என்றார்." லூக். 21: 34-36.

(HEARD IN A PASTOR'S STUDY)

ஐயரின் அறையில் கேள்விப்பட்டது.

(முன் தொடர்ச்சி.)

(ஐயரும் கோல்போட்டரும் மதசம்பந்தமாகத் தர்க்கித்துக்கொண்டிருந்தார்கள். மூப்பனாரும் உபாத்தியாயரும் உபதேசியாரும் தர்க்கத்தைக் கேட்கத் திரும்பி வந்தார்கள்.)

கோல்போட்டர்:—ஐயா, நீங்கள் என்னைக் கேட்ட கேள்விகளுக்கெல்லாம் நான் உத்தரவு சொன்னேன். நான் இப்பொழுது உங்களைச் சில கேள்விகள் கேட்க உத்தரவு கொடுக்கிறீர்களா? என்று கேட்டான். அதற்கு,

உபாத்தியாயர்:—ஐயா, ஒன்றும் தெரியாத இவன் உங்களைக் கேள்வி கேட்பது உசிதமாகத் தோன்றவில்லை. நமக்கு உத்தரவு சொல்லக்கூடாத சில புத்தியீனமான கேள்விகளைக் கேட்டால் அது நமக்கு வெட்கமல்லவா? அவனைப் பேசாமல் வெளியே அனுப்பி விடுவது நல்லது.

மூப்பனார்:—உபாத்தியாயர் சொல்வது சரியல்ல. நாம் கேட்ட கேள்விகளுக்கெல்லாம் கோல்போட்டர் நல்ல உத்தரவு கொடுத்தான். நாம் தர்க்கிக்க ஆரம்பிக்கு முன்னதாகவே அவனும் நம்மைக் கேள்வி கேட்கலாமென்று சொல்லியிருக்கிறோம். ஆகையினால் அவனுக்கு கேள்வி கேட்கும் படியாக உத்தரவு கொடுக்கவேண்டும்.

ஐயர்:—மூப்பனார் சொல்வது சரிதான். கோல்போட்டர் தனக்கு இஷ்டமான கேள்வியைக் கேட்கலாம்" என்றார்.

கோல்:—பேசும்படியாக எனக்கு உத்தரவு கொடுத்ததற்காக ஐயருக்கு வந்தனம். நீங்கள் வேதாகமத்தை விசுவாசிக்கிறீர்களா? வேதாகமம் போதிக்கிறதின்படி கிறிஸ்தவர்கள் விசுவாசித்து நடக்கவேண்டுமென்று விசுவாசிக்கிறீர்களா?

ஐயர்:—ஆம், நான் மெய்யாகவே விசுவாசிக்கிறேன். நான் ஒரு ஐயராயிருந்தும் அப்படி செய்யாமலிருப்பேனா?

கோல்:—நீங்கள் வேதத்தைப் படித்து அநேக வருஷமாக அதைப் பிரசங்கித்து வருகிறீர்கள். கிறிஸ்தவர்கள் ஞாயிற்றுக்கிழமையை ஓய்வுநாளாக ஆசரிக்கவேண்டுமென்று காட்டும் வசனம் வேதாகமத்தில் இருக்கிறதா?

உபா:—(ஐயரை நோக்கி) ஐயா, நான் இந்தக் கேள்விக்கு உத்தரவு சொல்லட்டும். நாம் ஞாயிற்றுக்கிழமையை ஓய்வுநாளாக ஆசரிக்கவேண்டுமென்று ரூபிக்க வேதத்தில் அநேக திருஷ்டாந்தங்கள் இருக்கின்றன. அப்படியில்லாவிட்டால் நாங்கள் அதைப் பரிசுத்த நாளாக ஆசரிப்போமா?

கோல்:—நாம் ஞாயிற்றுக்கிழமையை ஆசரிக்கவேண்டுமென்று வேதத்தில் அநேக திருஷ்டாந்தங்களிருக்குமானால் அவைகளில் சில எங்கே எழுதப்பட்டிருக்கிறதென்று

சொல்லுங்கள். அப்படிச் சொல்லுகிற ஒரு வசனத்தைக் காண்பித்தால் நான் உங்களுக்குப் பத்து ரூபாய் கொடுக்கிறேன்.

உபாத்:—(இதைக் கேட்டவுடன் ஆச்சரியமடைந்து) நான் அப்படி அநேக வசனங்களைப் பார்த்திருக்கிறேனென்று எனக்கு ஞாபகமிருக்கிறது. அந்த வாக்கியம் இன்ன இடத்திலிருக்கிறதென்று சரியாக ஞாபகமில்லை. அந்த வாக்கியம் எங்கேயிருக்கிறதென்று ஐயருக்குத் தெரியுமென்று நினைக்கிறேன்.

ஐயர்:—(உபாத்தியாயரை நோக்கி,) நீ சொல்வது சரியல்ல. நாம் ஞாயிற்றுக்கிழமையை ஆசரிக்கவேண்டுமென்று வேதாகமத்தில் திட்டமாக சொல்லப்படவில்லை. ஆனால் நாம் ஞாயிற்றுக்கிழமையை ஆசரிக்கவேண்டுமென்பதற்குச் சந்தேகமில்லை.

கோல்:—நாம் ஞாயிற்றுக்கிழமையை ஓய்வுநாளாக ஆசரிக்கவேண்டுமென்று ரூபிக்க வேதாகமத்தில் ஒரு வசனமுமில்லையென்று நீங்கள் ஒத்துக்கொள்ளுகிறீர்கள். அப்படியானால் நீங்கள் ஏன் அதைக் கைக்கொண்டு மற்றவர்களையும் அதை ஆசரிக்கும்படியாக உபதேசிக்கிறீர்கள்?

உபாத்:—நான் ஒன்று சொல்லுகிறேன். நம்முடைய முன்னோர்களெல்லாம் நல்ல ஜனங்கள். அவர்களெல்லாரும் மரித்து இப்போது பரலோகத்துக்குப் போயிருக்கிறார்கள். அவர்கள் இவ்வுலகத்திலிருக்கும்பொழுது ஞாயிற்றுக்கிழமையை ஆசரித்தார்கள். "குருவைப்போல சீஷன்" என்கிற பழமொழிப்படி அவர்கள் ஞாயிற்றுக்கிழமையைக் கைக்கொண்டதுபோல நாமும் கைக்கொள்ளவேண்டியதுதான். அது சரிதானே?

கோல்:—ஆம், நமது முன்னோர்கள் விக்கிரகங்களை வணங்கினார்கள். வேதாகம போதகத்திற்கு விரோதமான அநேக காரியங்களைச் செய்தார்கள். அவர்கள் விக்கிரகங்களை வணங்கினதினால் நாமும் அப்படி செய்யலாமா?

மூப்பனார்:—(உபாத்தியாயரை நோக்கி) "நீங்கள் சற்று பொறுமையாயிருங்கள். தர்க்கத்திற்கு இடையூறு பண்ணவேண்டாம். ஐயரைப் பேசவிடுங்கள்" என்றார்.

ஐயர்:—நாம் ஞாயிற்றுக்கிழமையை ஆசரிக்கவேண்டுமென்று வேதாகமத்தில் சொல்லியிராவிட்டாலும் இதில் ஆதிக்கிறிஸ்தவர்கள் நமக்கு முன்மாதிரியாயிருக்கிறார்கள். திருச்சபைச் சட்டம் நம்மை ஞாயிற்றுக்கிழமையைக் கைக்கொள்ளச் சொல்லுகிறது. கிறிஸ்து அந்நாளிலே உயிர்த்தெழுந்தாரென்று நமக்குத் தெரியும். அந்தக் காரணத்தை முன்னிட்டு அநேக படிப்பாளிகள் அந்த நாளை ஆசரிக்கவேண்டுமென்று சொல்லுகிறார்கள். வெளி. 1: 10. அப்போஸ்தலனாகிய யோவான், தான் கர்த்தருடைய நாளிலே ஆவிக்குள்ளானேன் என்று சொல்லுகிறார். ஆகையினால் அவரும் ஞாயிற்றுக்கிழமையை ஆசரித்ததாகத் தெரிகிறது.

கோல்:—கிறிஸ்து ஞாயிற்றுக்கிழமையில் உயிரோடெழுந்தாரென்பதற்குச் சந்தேகமில்லை. அவர் உயிர்த்தெழுந்ததினால் வாரத்தின் முதல் நாளை ஓய்வுநாளாகக் கொண்டாடவேண்டுமென்று அவர் கட்டளையிடவில்லை. யோவான் கர்த்தருடைய் நாளிலே ஆவிக்குள்ளானாரென்பது உண்மைதான். வேதத்தின்படி கர்த்தருடைய நாள் எந்த நாள்?

ஐயர்:—வாரத்தின் முதல் நாளாகிய ஞாயிற்றுக்கிழமைதான் கர்த்தருடைய நாளென்று சாதாரணமாக நம்பப்பட்டு வருகிறது. அந்த நாளில்தான் நாங்கள் யாவரும் கோவிலுக்குப் போகிறோம்.

கோல்:—வாரத்தின் ஏழு நாட்களில் ஒரே ஒரு நாளைத் தேவன் தம்முடையதென்றழைக்கிறார். மற்ற நாட்களையெல்லாம் அவர் மனிதனுக்குக் கொடுத்தார். வாரத்தின் ஏழாம் நாளைத் தேவன் தம்முடையதென்றழைக்கிறார். வாரத்தின் முதலாம் நாளை அவர் அப்படி அழைக்கவில்லை. யாத்திராகமம் 20: 8-11 ல் "ஓய்வுநாளைப் பரிசுத்தமாய் ஆசரிக்க நினைப்பாயாக; ஆறு நாளும் நீ வேலை செய்து, உன் கிரியைகளையெல்லாம் நடப்

பிப்பாயாக; ஏழாம் நாளோ உன் தேவனாகிய கர்த்தருடைய ஓய்வு நாள்; அதிலே......... யாதொரு வேலையும் செய்யவேண்டாம். கர்த்தர் ஆறு நாளைக்குள்ளே வானத்தையும் பூமியையும் சமுத்திரத்தையும் அவைகளிலுள்ள எல்லாவற்றையும் உண்டாக்கி, ஏழாம் நாளிலே ஓய்ந்திருந்தார்; ஆகையால், கர்த்தர் ஓய்வுநாளை ஆசீர்வதித்து, அதைப் பரிசுத்தமாக்கினார்" என்று சொல்லப்பட்டிருக்கிறது. ஏசாயா 58: 13-ல் ஓய்வு நாளை எப்படி ஆசரிக்கவேண்டுமென்று பேசும்போது கர்த்தர் ஓய்வுநாளை "என் பரிசுத்த நாள்" என்று அழைக்கிறார். இந்த வசனங்களிலிருந்து வாரத்தின் ஏழாம் நாள் தேவனுடைய பரிசுத்த நாளென்றும், அல்லது கர்த்தருடைய நாளென்றும் தெளிவாய்த் தெரிகிறது. ஆகையினாலே யோவான் அப்போஸ்தலன் ஞாயிற்றுக்கிழமையிலல்ல வாரத்தின் ஏழாம் நாளிலே ஆவிக்குள்ளானார்.

உபா:—"அப்படியானால் நான் ஒன்றும் பேசாமல் சும்மாயிருக்கவேண்டுமா? நான் ஒரே ஒரு காரியத்தைச் சொல்லிவிட்டுச் சும்மாயிருக்கிறேன். தேவன் ஏழாம் நாளை ஆசரிக்கும்படியாகச் சொன்னாரென்பது வாஸ்தவம்தான். அந்தக் கட்டளை கொடுக்கப்பட்ட பிற்பாடு காலக் கணக்கில் சில தவறுதல் உண்டாயிருக்கிறதே. ஆகையினால் சனிக்கிழமைதான் ஏழாம் நாளென்றும் அல்லது ஞாயிற்றுக்கிழமைதான் ஏழாம் நாளென்றும் சொல்ல நியாயமில்லையே. ஆனால் நான் ஞாயிற்றுக்கிழமைதான் ஏழாம் நாளென்று நம்புகிறேன். ஞாயிற்றுக்கிழமை ஏழாம் நாளாயில்லாவிட்டாலும் அதைப்பற்றி என்ன? நாம் எந்த நாளைக் கைக்கொண்டாலும் அதில் வித்தியாசமில்லை. ஆகவே, நாங்கள் ஏழு நாளில் ஒரு நாளைக் கைக்கொள்ளுகிறோம். இந்த மாதிரி தர்க்கம் எனக்குக் கொஞ்சம்கூட பிடித்தமில்லை. நான் வீட்டுக்குப் போகிறேன்" என்றார்.

ஐயர்:—"உபாத்தியாயர் சொல்வது ஒரு வகையில் சரியாயிருக்கிறது. சனிக்கிழமைதான் ஏழாம் நாள் என்பதற்கு என்ன ரூபகாரமிருக்கிறது. ஆகையால் நாம் நாளைப்பற்றி அவ்வளவு கவலைப்படவேண்டியதில்லை. எந்த நாளும் ஒன்றுதான். கிறிஸ்து ஞாயிற்றுக்கிழமை உயிர்த்தெழுந்தாரென்று நமக்குத் தெரியும். அது ஏழாம் நாளாயிருந்தாலும் அல்லது வேறெந்த நாளாயிருந்தாலும் பரவாயில்லை." என்றார். அதற்கு,

கோல்:—(ஐயரை நோக்கி) நீங்களும் உபாத்தியாயரும் சனிக்கிழமைதான் வாரத்தின் ஏழாம் நாளென்று நிட்சயமாய் நம்பமுடியாதென்று சொல்லுகிறீர்கள். மறுபடியும் நீங்கள் இருவரும் கிறிஸ்து ஞாயிற்றுக்கிழமையில் மரித்தோரிலிருந்து எழுந்தாரென்றும், அந்தக் காரணத்தை முன்னிட்டே ஞாயிற்றுக்கிழமையைப் பரிசுத்தமாக ஆசரிக்கிறீர்களென்றும் சொல்லுகிறீர்கள். கிறிஸ்து ஞாயிற்றுக்கிழமையில் உயிர்த்தெழுந்தாரென்பது வாஸ்தவந்தான். நானும் அதை ஒத்துக்கொள்ளுகிறேன். மத்தேயு 27-ம் அதிகாரத்தின் கடைசி பாகத்தையும், மத்தேயு 28-ம் அதிகாரத்தின் முதல் பாகத்தையும் வாசித்தால் அதில் கிறிஸ்து வாரத்தின் முதலாம் நாளில் உயிர்த்தெழுந்தாரென்று அறிந்துகொள்ளலாம். அப்படியானால் வாரத்தின் முதல் நாளும் ஞாயிற்றுக்கிழமையும் ஒன்றுதானே. ஞாயிற்றுக்கிழமை வாரத்தின் முதல் நாளாயிருக்குமானால் வாரத்தின் ஏழாம் நாள் எது? நமக்காக உபாத்தியாயர் தயவுசெய்து எண்ணுவாரென்று நினைக்கிறேன் என்று சொன்னவுடன்,

உபா:—"முதலாம் நாள், ஞாயிற்றுக்கிழமை; இரண்டாம் நாள், திங்கட்கிழமை; மூன்றாம் நாள், செவ்வாய்க்கிழமை; நான்காம் நாள், புதன்கிழமை; ஐந்தாம் நாள், வியாழக்கிழமை; ஆறாம் நாள், வெள்ளிக்கிழமை; ஏழாம் நாள்,............ஓ, கோ, அவர் சொன்னதுபோல் இருக்கிறதே, அது எப்படி? இதில் நாம் அகப்பட்டுக்கொண்டோமே ஐயர்" என்றார்.

ஐயர்:—ஆம், சனிக்கிழமை ஏழாம் நாளென்று ஒத்துக்கொள்ளுகிறோம். அது போகட்டும். நாங்கள் ஞாயிற்றுக்கிழமையை ஆசரிப்பதற்கு இன்னொரு காரணமிருக்கிறது. ஆதி அப்போஸ்தலர்கள், வாரத்தின் முதல் நாளில் அப்பம் பிட்கவும் சடங்குகளை ஆசரிக்கவும் கூடினார்களென்று அப்போஸ்தலருடைய நடபடிகளில் வாசிக்கிறோம். இதிலிருந்து நாம் அந்த நாளில் கோவிலுக்குப் போகவேண்டுமென்று அறிந்துகொள்ளுகிறோம்.

கோல்:—ஒருதரம் அப்பம் பிட்கும்படியாக அப்போஸ்தலர்கள் வாரத்தின் முதல் நாளில் கூடினது வாஸ்தவம்தான். அப்பொழுது அவர்கள் வாரத்தின் முதல் நாளில் மாத்திரமல்ல மற்ற எல்லா நாளிலும் அப்பம் பிட்டார்கள். அப். 2: 42, 46 பார்க்கவும். அவர்கள் வீடுகள்தோறும் அப்பம் பிட்டார்களென்று வேதம் சொல்லுகிறது. ஆகையினாலே ஞாயிற்றுக்கிழமை ஓய்வுநாளென்றாவது அல்லது அந்த நாளில் கோவிலுக்குப் போகவேண்டுமென்றாவது சொல்ல யாதொரு முகாந்தரமுமில்லை. ஆனால் கர்த்தருடைய கற்பனையில் ஏழாம் நாள் பரிசுத்த நாளென்றும் அந்த நாளில் நாம் தேவனைத் தொழுதுகொள்ளவேண்டுமென்றும் திட்டமாகச் சொல்லப்பட்டிருக்கிறது. இப்பொழுது இதற்கு நீங்கள் என்ன சொல்லுகிறீர்கள்?" என,

ஐயர்:—அதெல்லாம் உண்மையாயிருந்தபோதிலும் நீ கற்பனையென்றும், நியாயப்பிரமாணமென்றும் சொல்லுகிறாயே. நாம் நியாயப்பிரமாணத்துக்குக் கீழ்ப்பட்டிராமல் கிறிஸ்துவுக்குக் கீழ்ப்பட்டிருக்கிறோம். ஆகையினால் இனி நியாயப்பிரமாணம் நம்மை ஆளுகை செய்யாது. நாம் அதைக் கைக்கொள்வது அவசியமல்ல.

கோல்:—"கிறிஸ்துவை விசுவாசிப்பதினால் நாம் அவருக்குக் கீழ்ப்பட்டிருக்கிறோம். ஆகையினால் நியாயப்பிரமாணத்தை மீறி பாவம் செய்கிறதற்கு விடுதலையடைந்திருக்கிறோமென்பது அர்த்தமல்ல. நாம் கிறிஸ்துவுக்குக் கீழ்ப்பட்டிருக்கிறதினால் பொய், களவு, விபசாரம் முதலிய கெட்ட காரியங்களை செய்யலாமா? கிறிஸ்து இவ்வுலகத்திலிருக்கும்போது தேவனுடைய நியாயப்பிரமாணத்தைக் கைக்கொள்ளவில்லையா? அவர் ஓய்வு நாளையும் கைக்கொள்ளவில்லையா? அவர் ஓய்வு நாளை ஆசரிப்பதிலும் இன்னும் மற்றெல்லாக் காரியங்களிலும் நமக்கு முன்மாதிரியாயிருக்கவில்லையா? அப்படியானால் கிறிஸ்தவர்களாகிய நாம் கிறிஸ்துவின் முன்மாதிரியைப் பின் பற்றுவது நல்லதல்லவா? உங்கள் அபிப்பிராயம் என்ன ஐயா?" என்று கேட்க,

ஐயர்:—"ஆம், ஆம், இப்பொழுது நீ சொன்னது நியாயமாய்த் தோன்றுகிறது. ஞாயிற்றுக்கிழமை ஆசரிப்புக்கு வேதாகமத்தில் யாதொரு ரூபகாரமுமில்லையென்று நான் ஒத்துக்கொள்ளுகிறேன். நமது முன்னோர்கள் அப்படிச் செய்ததினால் நாங்களும் அதைக் கைக்கொண்டு வந்தோம். இந்த விஷயத்தைப்பற்றி நான் இன்னும் நன்றாக ஆராய்ச்சி செய்யப்போகிறேன். அப்படி ஆராய்ச்சி செய்தும் ஞாயிற்றுக்கிழமை ஆசரிப்புக்கு யாதொரு அத்தாட்சியும் அகப்படாவிட்டால், ஞாயிற்றுக்கிழமை ஆசரிப்பை விட்டுவிட்டு வேதத்தில் சொல்லப்பட்டிருக்கிறபடி வாரத்தின் ஏழாம் நாளையே ஓய்வு நாளாக ஆசரிப்பேனென்று நிட்சயமாய்ச் சொல்லுகிறேன். தற்சமயம் இந்த விஷயத்தை இதோடு நிறுத்துவோம். இன்னொரு சமயத்தில் இதைப்பற்றிப் பேசலாம்." என்று சொல்லி முடித்தார்.

பின்பு எல்லாரும் ஒருவருக்கொருவர் விடை பெற்றுக்கொண்டு, தம் தம் வீடுபோய்ச் சேர்ந்தனர்.

உண்மை உரைப்போன்.

(THE ORIGIN AND END OF EVIL) No. 2.

பாவ உற்பத்தியும் அதின் முடிவும்.

(தொடர்ச்சி).

பாவம் தலைகாட்டுமுன்னதாக சர்வலோகத்திலும் சமாதானமும் அன்பும் ஐக்கியமும் குடிகொண்டிருந்தது. சிருஷ்டிகள் யாவும் அன்பையே கடைபிடித் தொழுகினார்கள். சிருஷ்டிகருக்கும் சிருஷ்டிகளுக்கும் எக்காலத்திலும் அன்பே நிலைகொண்டிருந்தது. ஊழியம் செய்வதற்காகச் சிருஷ்டிக்கப்பட்ட சிருஷ்டிகள் யாவரும் இடைவிடாத பேரின்பத்தை அனுபவித்து வந்தார்கள். எல்லாரும் தேவ சித்தத்தை முழு இருதயத்தோடும் நடப்பித்த நாள்மட்டும் எல்லாம் கிரமமாக நடந்தேறி வந்தது.

பரலோகத்தில் சாத்தானின் நிலைமை.

லூசிபர் பரலோகத்தின் தேவ தூதர்களில் ஒருவன். பரம ராஜ்யத்தில் அவன் ஓர் உயர் பதவியை அடைந்திருந்தான். ஒரு சிருஷ்டிக்கப்பட்ட வஸ்து அடையக்கூடிய மேலான ஓர் பதவியை அடைந்திருந்தான். அவனைக்குறித்து கர்த்தராகிய ஆண்டவர் "நீ விசித்திரமாய் செய்யப்பட்ட முத்திரை மோதிரம்; நீ ஞானத்தால் நிறைந்தவன்; பூரண அழகுள்ளவன். நீ தேவனுடைய தோட்டமாகிய ஏதேனில் இருந்தவன்; ...... சகலவித இரத்தினங்களும் பொன்னும் உன்னை மூடிக்கொண்டிருக்கிறது......நீ காப்பாற்றுகிறதற்காக அபிஷேகம் பண்ணப்பட்ட கேருப்; தேவனுடைய பரிசுத்த பர்வதத்தில் உன்னை வைத்தேன்; அக்கினி மயமான கற்களின் நடுவே உலாவினாய். நீ சிருஷ்டிக்கப்பட்ட நாள் துவக்கி உன்னில் அநியாயம் கண்டுபிடிக்கப்பட்டதுமட்டும், உன் வழிகளில் குறையற்றிருந்தாய்." என்று சொல்லுகிறார். எசேக். 28: 12-15, 17.

இந்த சிருஷ்டியினிடத்தில் ஓர் மாறுதல் காணப்பட்டதென்று இந்த வசனத்தின் கடைசி பாகத்திலிருந்து தெரியவருகிறது. அவனில் அநியாயம் நுழைந்து அவன் அழகைக் கெடுத்தது. தேவனுடைய கற்பனைகளை மீறினதினால் லூசிபர் இந்தப் பாவத்தைச் செய்ய நேரிட்டது. "என்னையன்றி உனக்கு வேறே தேவர்கள் உண்டாயிருக்கவேண்டாம்" என்றும், "இச்சியாதிருப்பாயாக" என்றும் தேவன் கட்டளையிட்டிருக்கிறார். தேவன் தனக்குக் கொடுத்த நிலைமையில் சாத்தான் திருப்தியடையவில்லை. அவன் தேவனுடைய ஸ்தானத்தை இச்சித்தான். அவன் எல்லாத் தூதர்களாலும் நேசிக்கப்பட்டும் கனப்படுத்தப்பட்டும் இருந்தான். அவன் தேவனால் விசித்திரமாயும் பூரண அழகாயும் சிருஷ்டிக்கப்பட்டிருந்தான். அவன் அவ்வளவு அழகும் கனமுடையவனாகவும் சிருஷ்டிக்கப்பட்டிருந்ததனால் அவன் தேவனுடைய ஸ்தானத்தை இச்சித்து, சர்வலோகத்திற்கும் பொல்லாங்கை விளைவித்தான். "நான் வானத்துக்கு எறுவேன், தேவ்னுடைய நட்சத்திரங்களுக்கு மேலாக என் சிங்காசனத்தை உயர்த்துவேன்; வடபுறங்களிலுள்ள ஆராதனைக் கூட்டத்தின் பர்வதத்திலே வீற்றிருப்பேன் என்றும், நான் மேகங்களுக்கு மேலாக உன்னதங்களில் ஏறுவேன்; உன்னதமானவருக்கு ஒப்பாவேன்" என்றும் சொன்னான். ஏசா. 14: 13, 14. பூரண அழகும் விசித்திரமுமாய் சிருஷ்டிக்கப்பட்ட தூதர்களின் அதிபதியானவன் அன்பை நிக்கிரகம் செய்து தன்னை உண்டாக்கினவருக்கு மேலாகத் தன்னை உயர்த்த ஆரம்பித்தான்.

சாத்தானின் கலகமும் விழுகுதலும்

லூசிபரென்று அழைக்கப்பட்ட சாத்தான் தேவ ராஜாங்கத்துக்கு விரோதமாகக் கலகம் பண்ணினான். தேவன் அநியாயமாய் அரசாளுகிறார் என்று சொல்ல ஆரம்பித்தான். அப்படி அநியாயம் ஒன்றும் நடக்கவில்லையென்று அவன் அறிந்தபோதிலும் தான் சொன்னது சரியென்று தூதர்கள் முன் சாதிக்கும்படியாக பல முயற்சிகள் செய்தான்.

தான் இன்னும் அதிக மகிமையை அடையும்படியாக தேவனுடைய ராஜ்யத்தில் அதிருப்தியை உண்டாக்கினான். இதை மற்ற தூதர்கள் அறியாதபடிக்கு மறைத்து வைத்திருந்தான். தன்னால் தேவனுடைய ராஜாங்கத்தை சீர்படுத்தக்கூடுமென்று வீம்பு பாராட்டினான். இப்படியாகத் தன்னை உண்டாக்கினவருக்கு மேலாக தனக்கு ஞானம் உண்டென்று நினைத்தான். இதில் மற்ற தூதர்களும் தன்னோடு சேர்ந்து உதவி செய்யும்படியாகத் தூண்டினான்.

இது செய்யத்தகாத ஓர் பெரிய தப்பிதமென்று நாம் நினைக்கிறோம். இந்த அதிருப்தியை தூதர்களுக்குள் பரவச் செய்யாதபடி தேவன் ஏன் உடனே பாவத்தை நிர்மூலம் பண்ணக்கூடாதென்று அநேகர் கேள்வி கேட்கிறார்கள். "சர்வ ஞானமுள்ள கர்த்தர் பாவம் உலகத்தில் நுழையாமல் தடுத்திருக்கக்கூடும். அப்படிச் செய்திருந்தால் மனித ஜாதி அனுபவிக்கும் துன்பமும் துக்கமும் யாவும் நீக்கப்பட்டிருக்கும்." ஆனால் அநேக காரணங்களை முன்னிட்டு தேவன் அப்படிச் செய்யவில்லை.

தேவன் உடனே லூசிபரை அவன் உயர்ந்த ஸ்தானத்திலிருந்து தாழ்த்தவில்லை. ஏனெனில் தேவன் நீடிய சாந்தமுள்ளவராயிருக்கிறார். பாவிகள் நல்ல வழியில் திரும்பும்படி அவர் தயவாயும் சாந்தமாயும் பரிந்து பேசுகிறார். லூசிபருக்கும் அப்படியே செய்தார். தேவனிடத்தில் பக்தியாயிருந்த மற்ற தூதர்கள் யாவரும் சாத்தானின் அக்கிரம கிரியைகளைத் தடுக்கப் பிரயாசைப்பட்டார்கள். அவர்கள் தேவ அன்பையும் ஞானத்தையும் அவனுக்கு எடுத்து விஸ்தரித்தார்கள் தான் தெரிந்துகொண்ட வழியில் செல்வதனால் அவனுக்கு வரும் பலனையும் எடுத்துக்காட்டினார்கள் ஆனால் சாத்தான் தன் வழியை விட்டு மாறவில்லை. இதனால் அவன் தன் சிருஷ்டிகரைக் கனயீனம் பண்ணினான்.

பாவத்திற்கும், எவ்விதமான அதிருப்திக்கும் பரலோகத்தில் இடம் கிடையாது. அன்பும் பரிசுத்தமும் சமாதானமும் சதா நிலைகொண்டிருக்கிற இடத்தில் சாத்தானுக்கும் அவன் தூதர்களுக்கும் வசிக்க இடமில்லை. ஆகையினால் அவர்கள் இனி பரலோகத்தில் ஒருபோதும் நுழையாதபடிக்குத் தள்ளப்பட்டார்கள். வெளிப்படுத்தின விசேஷம் 12: 7-9-ல் நாம் "வானத்திலே யுத்தமுண்டாயிற்று; மிகாவேலும் அவனைச்சேர்ந்த தூதர்களும் வலு சர்ப்பத்தோடே யுத்தம் பண்ணினார்கள்; வலு சர்ப்பமும் அதைச் சேர்ந்த தூதரும், யுத்தம் பண்ணியும் ஜெயங் கொள்ளவில்லை. வானத்தில் அவர்கள் இருந்த இடமும் காணப்படாமற் போயிற்று. உலக மனைத்தையும் மோசம் போக்குகிற பிசாசு என்றும் சாத்தான் என்றும் சொல்லப்பட்ட பழைய பாம்பாகிய பெரிய வலு சர்ப்பம் தள்ளப்பட்டது; அதனோடேகூட அதைச் சேர்ந்த தூதரும் தள்ளப்பட்டார்கள்." என்று வாசிக்கிறோம்.

உலகம் சாத்தானுக்குக் கீழ்ப்பட்டது.

சர்வ வல்லமையுள்ள தேவன் சாத்தானையும் அவனைச்சேர்ந்த பொல்லாத தூதர்களையும் உடனே அழித்திருக்க முடியுமென்று நாம் முன்னமே சொல்லியிருக்கிறோம். அப்படி செய்வது சரியல்லவென்று தேவ்னுடைய ஞானத்தில் தோன்றினது. தேவன் சாத்தானையும் அவனைச்சேர்ந்த தூதர்களையும் அப்படி அழித்திருப்பாரானால் மற்ற தூதர்கள் யாவரும் தேவனுக்கு அவ்வளவு அன்பும் இரக்கமும் இல்லையென்று நினைக்க ஏதுவாயிருக்கும். ஆகவே மற்ற சிருஷ்டிகளும் தேவன் கொடுமையாய் அரசாளுகிறாரென்று நினைத்து அவருடைய அன்பிலும் ஞானத்திலும் சந்தேகங் கொள்ளக்கூடும். ஆனால் சாத்தானையும் அவன் தூதர்களையும் பரலோகத்தினின்று நீக்கி இப்பூமியில் தங்கள் வேலையை செய்யும்படி விடுவதினால் அவர்கள் சுபாவம் என்னவென்று சர்வ லோகமும் பார்க்கக்கூடியதாயிருக்கும். நாம் முன் பார்த்த பிரகாரம் உலகமும் அதிலுள்ள குடிகள் யாவரும் கர்த்தருக்குச் சொந்தமானவர்கள். கொஞ்ச காலம் உலகத்தை சாத்தானுடைய ஆளுகைக்குள்

வாக்கி சிருஷ்டிகளைத் தங்கள் சுய இஷ்டப்படி செய்யவிட்டால் சாத்தான் தேவன்பேரில் சாட்டின பொய்க் குற்றத்தின் உண்மை எல்லாருக்கும் தெரியவரும். தேவனுடைய இராஜாங்கத்தைவிட மேலான ஒரு ராஜாங்கத்தை ஸ்தாபிக்க முடியாமல் தன் பிரஜைகளுக்கு சந்தோஷத்தையும் பாக்கியத்தையும் அளிப்பதற்குப் பதிலாக வருத்தத்தையும் துன்பத்தையும் வருவிப்பானுனல் சர்வலோகத்திலுள்ளவர்களும் அதைப் பார்த்து தேவன் அளவற்ற ஞானமும் அன்பு முள்ளவரென்று அறிந்து அவரைப் பின் பற்றுவார்கள். சாத்தானை முதலாவது பரலோகத்திலிருந்து தள்ளி பின்பு கடைசியாக அவனையும் அவனைப் பின்பற்றின பொல்லாதவர்களையும் அழிப்பதினுல் தாம் நீதியுள்ளவரென்று யாவருக்கும் விளங்கப் பண்ணுவார். தேவ ராஜாங்கத்தின் பிரமாணம் மாற்றப்படக்கூடாததாயிருக்கிறது. சாத்தான் தேவனுக்கு மேலாகவோ அல்லது சமமாகவோ ஆவது கூடாத காரியம். இந்த கலகக்காரரோடு தேவன் நியாயமாய்க் நடந்துகொண்டதில் அவருடைய அளவற்ற ஞானம் வெளியாகிறது.

தேவனுடைய வார்த்தையை அவமாக்க சாத்தான் பிரயாசைப்பட்டான். தேவன் பரலோக குடிகளின்மேல் பிரமாணத்தை விதிப்பது அநியாயமென்று ரூபிக்க முயன்றுன். ஆகவே சாத்தானுடைய உண்மையான சுபாவத்தை சர்வலோகத்தாரும் பார்க்கும்படி தேவன் நடந்துகொள்ளவேண்டியதாயிருந்தது. சாத்தான் தன்னுடைய பொல்லாத கிரியைகளினுல் தன் சுபாவத்தை வெளிப்படுத்தக் கொஞ்சம் காலம் வேண்டியதாயிருந்தது. ஆகவே தேவன் சாத்தானையும் அவனைச்சேர்ந்த பொல்லாத தூதர்களையும் உடனே நிக்கிரகம் செய்யவில்லை.

(இன்னும் வரும்.) E. M. Meleen, B. A.

(ORDER IN THE HOME.) No. III.

குடும்ப விஷயங்கள்.

(தொடர்ச்சி)

கடந்த இரண்டு பத்திரிகையிலும், நமது வீட்டுக் காரியங்கள் வெகு ஒழுங்காயும், வரிசையாயும் செய்யப்படவேண்டுமென்று, வற்புறுத்தினேன். அதற்குச் சில காரணங்களும் அவைகளில் சொன்னேன். அவைகள் எல்லாவற்றிற்கு மேலாக இதற்கு இன்னும் சில விசேஷித்த காரணங்களும் இருக்கின்றன. அவைகளாவன:—

நமது வீட்டுக் காரியங்கள் யாவும், இவ்வளவு ஒழுங்காயும், கிரமமாயும், அன்பாயும் செய்யப்பட்டால், பரலோகத்திலிருக்கும் தேவ தூதர்களுக்கு அதிக சந்தோஷத்தை உண்டாக்குகிறது. அப்பொழுது, அவர்கள் நமது வீட்டுக்கு வந்து, நமக்கு எவ்வளவோ உதவி செய்கிறவர்களாயிருக்கிறார்கள். நமது பிள்ளைகள் விளையாடும்போது, கல்லுகள், குன்றுகள், கிணறுகள், குளங்கள் முதலியவற்றில் தவறி விழுந்துவிடாதபடியும், ஆடுகள், மாடுகள் முட்டிப்போடாதபடிக்கும், குதிரைகள், வண்டிகள்மேல் ஏறிவிடாதபடிக்கும் அவர்கள் பக்கங்களில் நின்று அற்புதமாய் உதவி செய்கிறார்கள்—நமது வீட்டு ஜோலிகளில் நமக்கும், நமது புருஷனுக்கும் அகஸ்மாத்தாய் உண்டாகக்கூடிய எத்தனையோ ஆபத்துகள் உண்டாகாதபடியும், நம்மைச்சுற்றிலும் பாளயமிறங்கி காவல் செய்கிறார்கள்—இன்னும் நமது வீட்டில் காலை மாலை நடக்கும் ஜெபங்களுக்கு உத்தரவாக பிதாவினிடத்திலிருந்து உத்தரவு பிறக்கவும், அவைகளை நமக்காகச் செய்துமுடிக்கவும், இப்பூமிக்கு எவ்வளவோ வேகத்தோடு வந்து, மிகுந்த பலத்தோடும், ஞானத்தோடும் நமக்காக ஊழியஞ் செய்கிறார்கள். இப்படியாக நாம் பூமியிலிருக்கும் மட்டும், நமக்கு வேண்டிய பணிவிடை யாவும் செய்து, ஞாகப் புஸ்தகத்தில் நம்மைப்பற்றி குறிக்கவேண்டிய சிறந்த இலட்சணங்களையும் குறித்து;

கடைசியாய் நமது ஓட்டத்தை முடித்து, நாம் அடக்கம் பண்ணப்படும்போது, நமது கல்லறையையும் அடையாளமிட்டு, பிரதான மேய்ப்பர் தமது பரம வாசஸ்தலத்துக்கு தமது ஒழுங்கும், கிரமமுமுள்ள பிள்ளைகளைக் கூட்டிக்கொண்டுபோக வரும்போது, இப்பூமியில் நமது வீடுகளில் வந்து நமக்கு உதவி செய்த அந்த தூதர்களும் நாம் நித்திரை செய்யும் நமது கல்லறைகளை நமக்காகத் திறந்து நம்மை வெகு சந்தோஷத்தோடு அரவணைத்து அந்தப் பரம நகர்கூட்டிச் செல்லுகிறவர்களாயிருக்கிறார்கள்.

அந்தப் பரம வீட்டின் மாட்சிமையையும் அழகையும் என்னுல் சொல்ல முடியாது. அவைகளைப்பற்றித் தேவன் சொல்லியிருக்கிறதை மாத்திரம் சொல்லிவிடுகிறேன். "பின்பு கடைசியான ஏழு வாதைகளால் நிறைந்த ஏழு கலசங்களையுடைய அந்த ஏழு தூதரில் ஒருவன் என்னிடத்தில் வந்து: நீ இங்கே வா, ஆட்டுக்குட்டியானவருடைய மனைவியாகிய மணவாட்டியை உனக்குக் காண்பிக்கிறேன் என்று சொல்லி, பெரிதும் உயரமுமான ஒரு பர்வதத்தின்மேல் என்னை ஆவியில் கொண்டுபோய், தேவனுடைய மகிமையை அடைந்த எருசலேமாகிய பரிசுத்த நகரம் பரலோகத்தை விட்டு தேவனிடத்திலிருந்து, இறங்கி வருகிறதை எனக்குக் காண்பித்தான். அதின் பிரகாசம் மிகவும் விலையுயர்ந்த இரத்தினக் கல்லைப்போலவும், பளிங்கி னொளியுள்ள வச்சிரக்கல்லைப்போலவும் இருந்தது. அதற்குப் பெரிதும் உயரமுமான மதிலும்; கிழக்கே மூன்று வாசல்கள், வடக்கே மூன்று வாசல்கள், தெற்கே மூன்று வாசல்கள், மேற்கே மூன்று வாசல்கள் ஆகப் பன்னிரண்டு வாசல்களு மிருந்தன. வாசல்களின் அருகே பன்னிரண்டு தூதர்களிருந்தார்கள்; அந்த வாசல்களின்மேல் இஸ்ரவேல் சந்ததியாராகிய பன்னிரண்டு கோத்திரத்தாருடைய நாமங்களும் எழுதப்பட்டிருந்தன. நகரத்தின் மதிலுக்கு பன்னிரண்டு அஸ்திபாரக் கற்களிருந்தன; அவைகள்மேல் ஆட்டுக்குட்டியானவருடைய பன்னிரண்டு அப்போஸ்தலரின் பன்னிரண்டு நாமங்களும் பதிந்திருந்தன. என்னுடன் பேசினவன், நகரத்தையும் அதின் வாசல்களையும் அதின் மதிலையும் அளக்கிறதற்கு ஒரு பொற்கோலைப் பிடித்திருந்தான். அந்த நகரம் சதுரமாயிருந்தது, அதின் அகலமும் நீளமும் சமமாயிருந்தது. அவன் அந்தக் கோலினுல் நகரத்தை அளந்தான்; அது பன்னீராயிரம் ஸ்தாதி அளவாயிருந்தது; அதின் நீளமும் அகலமும் உயரமும் சமமாயிருந்தது. அவன் அதின் மதிலை அளந்தபோது, அது தூதனுடைய அளவாகிய மனுஷ அளவின்படியே நூற்று நாற்பத்து நான்கு முழமாயிருந்தது.

"அதின் மதில் வச்சிரக்கல்லால் கட்டப்பட்டிருந்தது; நகரம் தெளிந்த பளிங்குக்கு ஒப்பான சுத்தப் பொன்னுயிருந்தது. நகரத்து மதில்களின் அஸ்திபாரங்கள் சகலவித இரத்தினங்களினுலும் அலங்கரிக்கப்பட்டிருந்தன; முதலாம் அஸ்திபாரம் வச்சிரக்கல், இரண்டாவது இந்திர நீலம், மூன்ருவது சந்திரகாந்தம், நான்காவது மரகதம், ஐந்தாவது கோமேதகம், ஆருவது பதுமராகம், ஏழாவது சுவர்ணரத்தினம், எட்டாவது படிகப்பச்சை, ஒன்பதாவது புஷ்பராகம், பத்தாவது வைடூரியம், பதினேராவது சுநீரம், பன்னிரண்டாவது சுகந்தி இவைகளே. பன்னிரண்டு வாசல்களும் பன்னிரண்டு முத்துக்களாயிருந்தன; ஒவ்வொரு வாசலும் ஒவ்வொரு முத்தாயிருந்தது. நகரத்தின் வீதி தெளிவுள்ள பளிங்குபோலச் சுத்தப் பொன்னுயிருந்தது.

"அதிலே தேவாலயத்தை நான் காணவில்லை; சர்வ வல்லமையுள்ள தேவனுகிய கர்த்தரும் ஆட்டுக்குட்டியானவருமே அதற்கு ஆலயம். நகரத்திற்கு வெளிச்சங்கொடுக்கச் சூரியனும் சந்திரனும் அதற்கு வேண்டுவதில்லை; தேவனுடைய மகிமையே அதைப் பிரகாசிப்பித்தது, ஆட்டுக்குட்டியானவரே அதற்கு விளக்கு.

"இரட்சிக்கப்படுகிற ஜனங்கள் அதின் வெளிச்சத்திலே நடப்பார்கள். பூமியின் ராஜாக்கள் தங்கள் மகிமையையும் கனத்தையும் அதற்குள்ளே கொண்டுவருவார்கள். அங்கே இராக்காலம் இல்லாதபடியால், அதின் வாசல்கள் பகலில் அடைக்கப்படுவதே இல்லை. உலகத்தாருடைய மகிமையையும் கனத்தையும் அதற்குள்ளே கொண்டுவருவார்கள். தீட்டுள்ளதும் அருவருப்பையும் பொய்யையும் நடப்பிக்கிறதுமாகிய ஒன்றும் அதில் பிரவேசிப்பதில்லை; ஆட்டுக்குட்டியானவரின் ஜீவ புஸ்தகத்தில் எழுதப்பட்டிருக்கிறவர்கள் மாத்திரம் அதில் பிரவேசிப்பார்கள்." இந்த வீட்டில் ஒரு காரியமும் ஒழுங்கின்மையாயிருக்காது; எல்லாம் வரிசையாயும் கிரமமாயும்தான் செய்யப்படவேண்டும். இப்பூமியில், ஓலை வீட்டிலும், குச்சி, குடிசைகளிலும், இன்னும் இடுக்கமும் நெருக்கமுமான வீடுகளிலும், நமக்குச் சொந்த வீடு முதலாய் இல்லையே யென்று இராவும் பகலும் மனதில் திகைத்

தும், அங்கலாய்த்தும் இதினிமித்தமாகச் சில வேளைகளில் தங்கள் புருஷனோடு தகாத சண்டைகள் செய்தும் வருகிற என் அருமைச் சகோதரியே, திகையாதே, பயப்படாதே, உன் கவலைகள் யாவும் மாறி, நீ ஆனந்தபரவசம் அடையத்தக்கதாக உனக்கு ஓர் அழகான தங்க மயமான மாளிகையை நமது பரம தகப்பன் ஆயத்தம் செய்து வைத்திருக்கிறார்—தங்கம், பொன், என்றதும் எனது இந்திய சகோதரிகளுக்கு எவ்வளவோ சந்தோஷம் உண்டாகும். இந்தப் பூமியிலோ அந்தத் தங்கம், பொன், இரத்தினம் என்றவைகளைக் கண்டதும் நமக்கு என்ன செய்கிறது என்று தெரியுதில்லை. எப்படியாகிலும், இரவும் பகலும் அதை நம்மோடு வைத்துக்கொள்ளவேண்டுமென்று எண்ணி, நமது உச்சி முதல் உள்ளங்கால்மட்டும் இருக்கும் அவயவங்களில் யாவும் போட்டுக்கொண்டாலும், ஆசை தீராமல், பிற்பாடு கயிறுகளிலும், சங்கிலிகளிலும், கோர்த்துக்கோர்த்து, நமது தேகத்தில் எங்கே 'யெல்லாம் தொங்கவைக்க முடியுமோ அங்கே யெல்லாம்தொங்கவிடுகிறோம்; மறுபடியும் ஆசை தீராமல், எவ்விதமான வடுவில்லாமல் தேவ சாயலாக உண்டாக்கப்பட்ட ஆச்சரியமான தேகத்தின் பல அவயவங்களில், முள்ளைக்கொண்டும், ஊசிகளைக்கொண்டும், கூர்மையான கத்தி முதலிய ஆயுதங்களைக்கொண்டும், இரத்தம் பிதுங்கிச் சிந்தக் காயப்படுத்தி, புண்படுத்தி, துவாரம் உண்டாக்கி, பிற்பாடு அதிலேயும் கோர்த்துப்போட்டுக்கொண்டு, தேவன் நமக்கு எவ்வளவோ பிரயோசனத்துக்கும், தமது மகிமைக்கும் உண்டாக்கின அழகான நமது காதுகளையும், மூக்கையும், உதடுகளையும் கோரப்படுத்தி, தேவ ஏற்பாட்டுக்கும் அவரது சித்தத்துக்கும் எதிர்த்து நிற்கும் என் அருமைச் சகோதரிகளே! கேளுங்கள்!! அந்தப் பட்டணத்திலே நீயும் நானும் ஆசை கொள்ளுகிற இந்தப் பொன் இரவும் பகலும் நாம் நடந்து உலாவுகிற கீழ்த்தளத்திற்குப் பதிக்கப்பட்டிருக்கும். ஆ! என்ன சிலாக்கியம்!! என்ன மகிமை!!! அந்த வீட்டைக் கண் கொண்டு பார்க்குமிடமெல்லாம் தங்கம், பொன், இரத்தினங்கள்தான். தேவன் தாமே இந்த வீட்டுக்கு அஸ்திபாரம் போட்டு பலமாய் உனக்கும், எனக்கும் கட்டி யிருக்கிறார். அந்த இடத்திலே பேர்ய் எப்பொழுதும் சண்டை சச்சரவுமன்றி, அன்போடும், ஐக்கியமாயும், கிரமமாயும், நாம் ஜீவிக்கவேண்டியதாயிருப்பதால் தான் இங்கேயே அந்த ஜீவியத்தை ஆரம்பியென்று சொல்லுகிறேன்.

நமது வீட்டைப் பார்க்க வருகிற யாவரும், நமது வீட்டிலுள்ள சகல காரியங்களையும், ஒழுங்குள்ளதாய்க் கண்டவுடன் நாம் சீக்கிரத்துக்குள்ளாக அந்தப் பரம வீட்டுக்குப் போகிற பிள்ளைகளென்று சொல்லத்தக்கதாய் ஜீவிப்போமாக. நானும் அந்த வீட்டுக்குப் போகக் கடந்த எட்டு ஒன்பது வருஷ காலமாய் பலத்த தீர்மானஞ் செய்து ஜீவித்து வருகிறேன். அந்த வீட்டுக்கு நம்மை அழைக்க, நமது சற்குரு வரும்போது, நீயும் நானும் ஆயத்தப்பட்டவர்களாக ஜீவித்து, ஓர் வேளை மரித்திருபபோமானால் கல்லறையைப் பிளந்து உயிர்ப்பிக்கப்பட்டவர்களாயும், உயிரோடு இருப்போமானால், மறுரூபமாக்கப்பட்டும் அங்கே கொண்டுபோகப்படுவோம். இந்த இரண்டு வழி தவிர வேறு ஓர் வழியாயும் போக முடியாது; யாவரும் மொத்தமாகத்தான் போவோம். அன்றைக்கு என் அருமைத் தேசத்திலிருந்து, அநேகர் வருவீர்களென்றும், நாம் ஒருவரை யொருவர் அந்த வீட்டிலே போய், வெகு சந்தோஷமாயும், ஆனந்தமாயும் குடியிருக்க அந்த வீடுபோய் சேருகிறதற்கு, நீயும் நானும் இந்தப் பூமியில் பட்டபாடுகள், ஜீவித்த சன்மார்க்க ஜீவியம், வீட்டிலே பிள்ளைகளுக்கும், புருஷர்களுக்கும் செய்த ஒழுங்குகள், கடமைகள் யாவையும்பற்றிச் சொல்லிச்சொல்லி, எவ்வளவோ எக்களிப்புடன் கூடிக்கூடி உலாவலாம். கட்டாயமாக அங்கு எப்படியும் குடும்ப சகிதமாய் வந்துவிடப் பிரயாசப்படு. அப்படியானால் இப்பொழுதே இப்பூமியில் உன் வீட்டை ஒழுங்குப்படுத்து. இப்படிக்கு,

உங்கள்பேரில் அன்புள்ள,
ஓர் இந்திய சகோதரி.

(THE RESURRECTION)

உயிர்த்தெழுதல்

1. மரித்த நல்லோர் தீயோர் இருவருக்கும் ஒரு உயிர்த்தெழுதல் உண்டு. அப். 24: 15.

2. இதை இயேசு தெளிவாய்ப் போதித்திருக்கிறார். யோவா. 5: 28, 29.

3. மரித்தவர்கள் கிறிஸ்துவின் வல்லமையினால் எழுப்பப்படுவார்கள். யோவா. 5: 24, 25; 11: 25.

4. "இது தேவனுடைய சித்தம்." யோவா, 6: 39.

5. அப்போஸ்தலர்களும் உயிர்த்தெழுதல் கிறிஸ்துவின் மூலமாய் வருகிறதென்று பிரசங்கித்தார்கள். அப். 4: 2, 17: 18, 32.

6. உயிர்த்தெழுதல் இல்லாதேபோனால் மரித்தோர் அழிந்துபோவார்களென்று அவர்கள் போதித்தார்கள். 1 கொரி. 15: 12-26, 32.

7. சிறுபிள்ளைகளும் உயிர்த்தெழுவார்கள். எரே. 31: 15, 16.

8 இரண்டு உயிர்த்தெழுதல்கள் உண்டு.

முதலாவது—நல்லோரின் உயிர்த்தெழுதல். லூக். 14: 14. இதுதான் முதலாவது உயிர்த்தெழுதல். வெளி. 20: 6. இது கிறிஸ்துவின் இரண்டாம் வருகையில் சம்பவிக்கும். 1 கொரி. 15: 22, 23, 52; 1 தெச. 4: 16.

இரண்டாவது—தீயோரின் உயிர்த்தெழுதல். அப். 24: 15. இது முதல் உயிர்த்தெழுதலுக்கு 1000 வருஷத்திற்குப் பின்பு நடக்கிறது. வெளி. 20: 5.

இரண்டாவது உயிர்த்தெழுந்தவர்கள் இரண்டாம் மரணத்தில் சாவார்கள். வச. 12, 15.

9. இப்போது மரித்தோரை எழுப்பும் வல்லமையில் நல்லோருக்கு அனுபோகமிருக்கும். ரோம. 8: 10, 11.

10. பவுல் இந்தப் பதவியை அடைய ஜாக்கிரதையாய் ஓடினார். பிலி. 3: 10, 11.

11. நம்முடைய சரீரமும் கிறிஸ்துவின் மகிமை பொருந்திய சரீரமாகும். பிலி. 3: 20, 21; 1 கொரி. 15: 47-49.

12. மெய்யான ஆவியுள்ள சரீரமாகும். 1 கொரி. 15: 42-46.

13. தீர்க்கதரிசிகள் அதிக தெளிவாக உயிர்த்தெழுதலைப்பற்றி சொல்லியிருக்கிறார்கள். யோபு சாக்ஷி கொடுக்கிறதாவது:—"என் மீட்பர் உயிரோடிருக்கிறார்." "அவர் கடைசி நாளில் பூமியின்மேல் நிற்பாரென்று நான் அறிந்திருக்கிறேன்."

"இந்தத் தோல் முதலானவைகள் அழுகிப்போன பின்பும் நான் என் மாமிசத்திலிருந்து அவரைப் பார்ப்பேன்."

"அன்னிய கண்களல்ல என் கண்களே அவரைக் காணும்." யோபு. 19: 25-27.

தாவீது சாக்ஷி கொடுக்கிறதாவது:—"நானே நீதியில் உமது முகத்தைத் தரிசிப்பேன்."

"நான் விழிக்கும்போது உமது சாயலால் திருப்தியாவேன்." சங். 17: 15.

ஏசாயா பாடுகிறதாவது:—"மரித்த உம்முடையவர்கள் பிரேதமான என்னுடையவர்களோடுகூட எழுந்திருப்பார்கள்.

"மண்ணில் தங்கியிருக்கிறவர்களே விழித்து கம்பீரியுங்கள் மரித்தோரை பூமி புறப்படப்பண்ணும்." ஏசா. 26: 19.

எசேக்கியேல் தீர்க்கதரிசனமாக உரைக்கிறதாவது:—"கர்த்தராகிய ஆண்டவர் உரைக்கிறார். இதோ என் ஜனங்களே நான் உங்கள் பிரேதக் குழிகளைத் திறந்து உங்களை உங்கள் பிரேதக் குழியிலிருந்து வெளிப்படவும் உங்களை இஸ்ரவேல் தேசத்துக்கு வரவு பண்ணுவேன். என் ஆவியை உங்களுக்குள் வைப்பேன். நீங்கள் உயிரடைவீர்கள். எசே. 37: 12-14.

ஓசியா தேவனுக்காக பேசுகிறதாவது: "அவர்களை நான் பாதாளத்தின் வல்லமைக்கு நீங்கலாக்கி மீட்டேன்."

"அவர்களை மரணத்துக்கு நீங்கலாக்கி விடுவிப்பேன்."

"மரணமே உன் வாதைகளெங்கே."

"பாதாளமே உன் சங்காரமெங்கே." ஓசி. 13: 14.

14. கடைசி சத்துருவும் உயிர்த்தெழுதலால் அழிக்கப்படுவான். 1 கொரி. 15: 24.

15. இயேசுவின் உயிர்த்தெழுதல் அவருடைய ஜனங்களின் உயிர்த்தெழுதலுக்கு நம்பிக்கையும் ரூபகாரமுமாய் இருக்கிறது. 1 தெச. 4: 13, 14; எபி. 2: 9-15; 1 பேது. 1: 3, 5; 2 கொரி. 4: 13, 14.

16. ஞானஸ்நானம் அடக்கம் பண்ணப்படுவதற்கும், உயிர்த்தெழுதலுக்கும் ஓர் அடையாளமாயும், அதை நம்புகிறவனுக்கு நம்பிக்கையின் விஸ்தரிப்பாயு மிருக்கிறது. ரோம. 6: 3-5; கொலோ 2: 12; 3: 1-4.

17. கிறிஸ்தவர்களெல்லாரும் இந்த உயிர்த்தெழுதலுக்காக அதிக கவலையாய் எதிர்நோக்கிக்கொண்டிருக்கவேண்டும். ரோம. 8: 23; 2 கொரி. 5: 1-5.

தே. ஆரோன்.

நிகழ்கால சத்தியம்

வேத சன்மார்க்க சுகாதார விஷயங்களில் தற்கால அறிவுக்கொத்தபடி மனிதர் அபிவிருத்தியடைவதற்கென்று பிரசுரமாகும் ஓர் பத்திரிகை.

மதராஸ் டிசம்பர்மீ, 1920.

இப்பத்திரிகை, பெங்களூரிலிருக்கும், எஸ். டி. ஏ. பப்ளிஷிங்கவுஸ்காக, பட்டணத்தில் வெப்பேரி என்னுமிடத்திலுள்ள அல்பீனியன் அச்சாபீசில் அச்சடிக்கப்பட்டு வருகிறது.

பத்திராதிபர் பாஸ்றர், ஜி. ஜி. லௌரி.
உதவி ,, ,, ஈ. டி. தாமஸ்.
மானேஜர், எல். சி. ஷெப்பர்ட், பி. ஏ.

	ரூ.	அ.	ப.
தனிப்பிரதி ஒன்றுக்கு ...	0	1	6
வருஷ சந்தா, தபாற் கூலி உள்பட ...	1	0	0
சிங்கப்பூர் பினங்கு முதலிய வெளி ஊர்களுக்கு தனிப் பிரதி ஒன்றுக்கு ...	0	2	0
வருஷசந்தா தபாற்கூலி உள்பட ...	1	4	0

ஐரோப்பாக் கண்டத்தில் ரைன் நதிக்கும் ஜூலியன் ஆல்ப்ஸ் மலைக்கும் கிழக்கே இருக்கிற பாகங்களெல்லாம் பாழான நிலைமையி லிருக்கிறது. ராஜாக்களின் உக்கிர கோபத்தினால் உண்டான யுத்தத்தில் பாரீஸ் பட்டணத்துச் சங்கத்தாரின் வேலையும், ராஜ்ய ஐக்கிய சங்கத்தாரின் எண்ணங்கள் யாவும் வீணாய்ப்போயிற்று.

ஆஸ்திரேலியாக் கண்டத்து முதன் மந்திரியாகிய கியூக்ஸ் என்பவர் (Premier Hughes) *ஐரோப்பாவில் இன்னொரு யுத்தம் ஆரம்பிக்கு மென்பதற்கு அடையாளங்கள் தோன்று முன்னதாகவே வேறொரு இடத்தில் யுத்தம் ஆரம்பிக்குமென்று முன்னுரைக்கிறார். அவர் "வரப்போகிற உலக யுத்தம் பசிபிக் மகா சமுத்திரத்தில் நடக்கும்" என்று சொல்லுகிறார்.*—Toronto "Sentinel."

சமாசாரக் குறிப்புகள்.

(NEWS AND NOTES)

இனி வரப்போகிற சண்டையில், வெடி மருந்துகளல்ல, ஆகாயக் கப்பல்களும், மின்சார சக்தியுமே அதி பயங்கர சேதங்களை உண்டு பண்ணுமென்று M. *டர்பின் என்பவர்* (M. Turpin) *சொல்லுகிறார். "நான் செய்த வெடிகுண்டுகளினால் ரொம்ப நாசம் உண்டாயிற்று. நாம் மின்சார சக்தியை அபிவிர்த்தி செய்வோமானால் வரப்போகிற சண்டையில் அவைகள் அதிக நாசத்தை விளைவிக்குமென்று நான் நம்புகிறேன்" என்று சொல்லுகிறார்.*—"French Wireless Service."

பிரேஸில் நாட்டுச் சங்கத்தார் (Brazilian Congress) *இந்த வருஷத்தில் ராணுவ ஆதரிப்புக்காக ரூ.* 82,500,000 *செலவிடத் தீர்மானித்திருக்கிறார்கள். அந்த ராணுவத்தின் மொத்தத் தொகை.* 3,626 *ராணுவ உத்தியோகஸ்தர்,* 25000 *முதல்* 29000 *புது போர்வீரர்கள்.* 10,000 *பழைய போர் வீரர்கள்.*—San Francisco "Chronicle."

இன்னும் நான்கு வருஷத்திற்குள்ளாக அமெரிக்கா ஐக்கிய மாகாணத்தார் உலகத்தில் இதற்கு முன் ஒருபோதும் உண்டாக்கப்பட்டிராத யுத்தக் கப்பல்களை உண்டாக்கப்போகிறதாக போர்க் கப்பல் சங்கத்து அக்கிராசனபதியாகிய பட்லர் என்பவர் (Chairman Butler) *சொல்லுகிறார்.*

1924-ம் வருஷத்தில்

ஆங்கிலேயருக்கு	60	*யுத்தக் கப்பல்களும்*
ஐக்கியமாகாணத்திற்கு	47	,, ,,
பிரான்சுக்கு	26	,, ,,
ஜப்பான்காரருக்கு	15	,, ,,
இத்தாலியருக்கு	13	*யுத்தக் கப்பல்களும்*

இருக்கும், என்று சொல்லுகிறார். அமெரிக்காவும் இங்கிலாந்துமே பலத்த யுத்தக் கப்பல்களுடையவர்களாயிருக்கிறார்கள். அவர்களைப்போல வேறெந்த ராஜ்யத்திற்கும் அவ்வளவு பலமான கப்பல் சேனை கிடையாது. இப்பொழுது ஜெர்மன் கப்பல் சேனை ஒருவாறு அழிக்கப்பட்டுப் போனதினால் இவ்விருவருக்கும் சமமான கப்பல் சேனையையுடைய வேறு ராஜ்யம் உலகத்தில் கிடையாது என்று சொல்லுகிறார்.

நிகழ்கால சத்தியம்.

Vol. X. மதராஸ்—ஜனுவரிமீ, 1921. No. I.

(EDITORIAL NOTES.)

பத்திராதிபக் குறிப்புகள்.

மதுரை அமெரிக்கன் மிஷன் செப்டம்பர் கூட்டம்.

நாளது 1920-ம் வருஷம் செப்டம்பர்மாதம் 22-ம் தேதி இரவு மதுரை அமெரிக்கன் காலேஜில் 'பில்கிரிம் பாதர்ஸ்' என்னும் யாத்திரீக பிதாக்களின் சரித்திர காட்சிகள் காட்டப்பட்டன. அதில் "இங்கிலாந்து திருச்சபையில் கி. பி. 1602-ம் வருஷத்தில் ஆராதனை நடத்தப்படும்போது, மணி யடித்தல், சிலுவை பிடித்து பவனி போதல், கின்னரம் கொட்டல், மெழுகுவர்த்திகள் எரிதல், சிலுவைக்கு முன்போய் தலை குனிதல், ஆசாரியன் (குரு) விசேஷ உடை தரித்தல், பிரசங்கி ஓர் பிரசங்கம் செய்தல், இப்பிரசங்கத்தில் சுத்த சபையார் ஒப்புக்கொள்ளாத அநேக விஷயங்களை அழுத்தம் செய்தல்; இன்னும் தேசத்து ராஜா கர்த்தரால் அபிஷேகம் பண்ணப்பட்டவராகையால் அவரே சபைக்குத் தலைவர், சபைக் குருக்களுக்கு விசேஷ ஸ்தானமும், கண்ணியமும் அதிகாரமும் உண்டு. சபையினாலும் ராஜாவினாலும் ஏற்படுத்தப்படுகிற சகல சட்டதிட்டங்களுக்கும் ஜனங்கள் யாவரும் முறுமுறுப்பில்லாமல் இணங்கவேண்டும்." என்ற ஓர் காட்சி வெகு விமரிசையாய்க் காட்டப்பட்டது.

இப்படிப்பட்ட ஆராதனை ஒழுங்கும், உபதேசங்களும் சற்றேனும் பிடியாமல் 'சுத்த சபையார்' என்று அழைக்கப்பட்டோர் எவ்வளவோ கஷ்டங்களும், துன்பங்களும், உபத்திரவங்களும் அடைந்து தங்கள் மனதிலுண்டான ஆவிக்குரிய உணர்ச்சியை மதித்து, அதற்கு வேண்டிய சுயாதீனத்தைக் கொடுக்கும்படி, தங்கள் சுய தேசங்களைவிட்டுப் புறப்பட்டு, மேபிளவர் என்ற கப்பல் ஏறி, அமெரிக்கத் தேசம் போய்ச் சேர்ந்து, இவ்விதமாய் எவ்வளவோ சுய வெறுப்பினாலும், துன்பத்தின் மூலமாயும் தங்களுடைய மனதின் எழுப்புதலின்படி சுத்த சபையை உண்டாக்கி யிருக்க, கடந்த முந்நூறு வருஷங்களுக்குள் இவர்களுடைய பிள்ளைகளாகிய தற்காலத்து அமெரிக்க புரோட்டாஸ்டாண்டு மிஷனரிகளும், அவர்களுடைய சபையாரும் தங்களுடைய முற்பிதாக்கள் போராடின போராட்டம் யாவற்றையும் மறந்து, மதுரை காலேஜில் அன்று இரவு காட்டப்பட்ட காட்சியின் காரியத்தில் ஒன்றைவிட்டாவது சற்றேனும் நாளது பரியந்தம் பின்வாங்காமலிருக்கிற மேற்படி இங்கிலாந்து திருச்சபையோடு மறுபடியும் ஒன்றுசேர விரும்புவதும், அச்சபையைப்போல தங்களுக்கும் பிஷப் ஏற்பாடு செய்யவேண்டுமென்றும், இன்னும் அவர்களுடைய பிஷப்புகளாலே தாங்கள் மறுபடியும் குருப்பட்டம் பெறுவதும் அவசியமென்று எண்ணுவது எவ்வளவோ ஆச்சரியத்தின்மேல் ஆச்சரியமாயிருக்கிறது. இரண்டாவதாக,

அக்காலத்து சுத்த சபையார் தங்களது மனதிலுண்டாகிய ஆவியின் எழுப்புதலின்படி தேவனை ஆராதிக்கவும், தங்கள் கோட்பாடுகளை பிரதியின் மூலமாயும், தனித்தாள் வேலையினாலும், பரவச் செய்தபடியே, இந்தக் கடைசிக்காலத்திலும் தேவன் நமது குமாரர் மேலும் குமாரத்திகள் மேலும் தமது ஆவியை ஊற்றும்போது, நமது பிள்ளைகளில் அநேகர் ஸ்தாபித சபைகளை விட்டுப்பிரிய ஆரம்பிக்கும்போது, பதினேழாம் நூற்றாண்டு ராஜ உத்தியோகஸ்தரும், ஸ்தாபித சபையின் குருக்களும், சபையாரும், சுத்த சபையாரை அவமதித்து, நிஷ்டூரப்படுத்தினபடி, நாமும் செய்யாமல், நமது பிள்ளைகளின் இருதயத்தில் உண்டாகும் சத்திய ஆவியின் எழுப்புதலை மதித்து, அவர்களுடைய சுத்த மனச்சாட்சியின்படியே அவர்கள் தேவனைச் சேவிக்க நாம் கர்த்தருக்குப் பயந்து, அவர்களுக்கு நம்மால் இயன்ற சகல உதவிகளையும் செய்வோமாக. இப்படிப்பட்ட மார்க்க சுயாதீனம் நமது சபையின் ஜனங்களுக்கு கொடுக்கவேண்டிய விஷயத்தில் கூடி அமெரிக்கன் மிஷன் சங்கத்தார் யாவரும் நமது இந்திய தேசத்தில் நமக்கு சிறந்த முன்மாதிரி காட்டுவார்களென்று உறுதியாய் நம்புகிறோம்.

E. D. T.

(CONVERSION.)

"புதை பொருள் வேதம் என் புத்திக்குப் பொருந்தாது." என்ற ஒரு பிரஞ்ச் பிரபுவின் மனமாறுதல்.

அடியில் வரும் இச்சிறு கதையை அநேகர் வாசிக்கப் பிரியப்படுவார்களென்று அதை ஒரு இங்கிலீஷ் புஸ்தகத்திலிருந்து எடுத்து இங்கே எழுதுகிறேன்.

"சில வருஷங்களுக்கு முன் மெத்த மனச்சோர்பினால் வருத்தப்பட்ட ஒரு பிரஞ்ச் பிரபு, இங்கிலாந்தில் மனநோய்களைத் தீர்ப்பதில் கீர்த்திபெற்ற ஓர் வைத்தியரிடம் வந்தார். பிரபுவோ கௌரவமும் ஐசுவரியமும் பொருந்தினவராயிருந்தார். தன் வீட்டாரால் மிக நேசிக்கப்பட்டுச் சிநேகிதர்களால் வெகுவாய் மதிக்கப்பட்டிருந்தபோதிலும் இப்பிரபுவுக்கு மனோவியாகுலம் மேலிட்டிருந்ததினால் சித்தப்பிரமை பிடித்தவரைப்போலிருந்தார். பிரபுவின் மோசமான நிலைமையை அறிந்த அவருடைய சிநேகிதர் அநேக வைத்தியர்களைக் கொண்டு அவருக்கு சிகிச்சை செய்தும் பயனில்லாமற் போயிற்று. இடமாறினால் சுகமுண்டாகுமென்றவர்கள் சிலர். நீருற்று ஸ்நானத்தால் பயனுண்டாகுமென்றவர்கள் பலர். என்னென்ன சிகிச்சைகள் செய்தபோதிலும் பிரபுவின் மனோ நிலைமாத்திரம் மாறாமலிருந்தது.

இப்படியிருக்கையிற்றான் மேற்சொன்ன இங்கிலாந்திலுள்ள பிரபல வைத்தியரிடம் பிரபு போயிருந்தார். வைத்தியர் பிரபுவை அநேக கேள்விகள் கேட்டபின் ஆழ்ந்தாலோசித்து "உங்களுக்குப் புத்திமாறாட்டமே கிடையாது. உங்களுக்கிருப்பதாக, வெகு வருத்தத்தோடு என்னிடத்தில் சொல்லிக்கொள்ளும் சித்தப் பிரமைக்குரிய அறிகுறிகளில் யாதொன்றையும் நான் உங்களிடத்தில் காண்கிறதில்லை" என்றார்.

"வைத்தியரே! இது விந்தையிலும் விந்தை; நீர் என் மனதை அறியாவிட்டாலும் என்னுடம்பு மெலிந்திருப்பதுகூட உமக்குத் தெரியவில்லையா? அவசியமாய் நீர் எனக்கேதாகிலும் செய்யவேண்டும்" என்றார் பிரபு.

வைத்தியர்:—இந்த உங்களின் வேண்டுகோளுக்குக் காரணமாயிருக்கும் ஒரு பெரிய காரியத்தை முன்னிட்டு ஏதோ ஓர் பேரவா உங்கள் உள்ளத்தை வாதிக்கிறதாக எனக்குப் புலப்படுகிறது.

பிரபு:—வைத்தியரே பெரிய காரியம் ஒன்றையும் நான் ஆசிக்கிறதில்லை. எனக்குள்ளதையே நான் அனுபவித்தால் அதுவே போதுமானது. அதைக்கூட என்னால் அனுபவிக்க முடியவில்லையே.

வைத்.—குடும்பத்தொல்லையுண்டோ? ஏதாவது நஷ்டமாயிற்றா? யாரும் இறந்து போனார்களா?

பிரபு.—இல்லை வைத்தியரே; எங்கள் குடும்பத்தில் அன்பும்சமாதானமும் சதா குடிகொண்டிருக்கிறது.

வைத்.—பகைவர் பயம் ஏதாவது உண்டோ என்க, நானறிந்தமட்டும் யாதொன்றுமில்லையென்றார் பிரபு.

வைத்.—அப்படியானால் உங்களுள்ளத்தில் அடிக்கடி வரும் எண்ணமென்ன? என.

பிரபு.—எனக்கு அதைச் சொல்லப் பிரியமில்லையே அதையே இப்பொழுது நீர் கேட்கிறீர். என்றாலும் சொல்லுகிறேன். நான் கிறிஸ்து மார்க்கச் சந்தேக வாதி. கிறிஸ்தவ போதனை என் புத்திக்கு வேதனை. அதின் இரகசியங்களை நினைக்கையிலும் கேட்கையிலும் என் மூளையிலும் செவிகளிலும் நாராசம் காய்ச்சி விட்டதுபோலிருக்கிறது. வேதாகமம் தேவ வெளிப்படுத்தலென்பதை நான் நம்பாவிட்டாலும் அதின் ஒரு போதகம் மாத்திரம் மாயாவிபோல் என்னை மருட்டிக்கொண்டிருக்கிறது. இது என் மூளை குழப்பத்தாலுண்டான மூட பயமென்று என்னை எத்தனையாய்த் திடப்படுத்தித் தைரியம் பண்ணிக்கொண்டாலும் அப்பயம் மாத்திரம் என்னைவிட்டு நீங்காமல் ஒட்டிக்கொண்டேயிருக்கிறது.

வைத்.—அந்தப் பயந்தானென்ன?

பிரபு.—கடைசி நியாயத்தீர்ப்பின் காக்ஷி என் கண்களுக்கு முன் எப்போதும் கலையாமல் நிற்கிறது. எல்லாக் காரியங்களின் முடிவும் கிட்டி வந்திருப்பதாகவும் மகத்துவமான வெள்ளை ஆசனத்தின்மேல் கடுமையான நியாயத்தீர்ப்பின் தோற்றமுள்ள ஒருவர் உட்கார்ந்திருப்பதாகவும், நான் அவருடைய கூர்மையான பார்வைக்குத் தப்பியோட முயலுகையில் வானமும் பூமியும் ஒழிந்துபோனதாகவும் நான் மாத்திரம் அகப்பட்டுக்கொண்டு போக்கிடமற்றிருப்பதாகவும், சபிக்கப்பட்டவனே என்னைவிட்டகன்று பிசாசுக்கும் அதன் தூதருக்கும் ஆயத்தம் பண்ணப்பட்ட நித்திய அக்கினியிலே போ, என்ற மகா பயங்கர வார்த்தைகளைக் கேட்பதற்கு ஒவ்வொரு நிமிஷமும் நான் எதிர்பார்த்துக்கொண்டிருப்பதாகவும் எப்போதும் என் மனதிற் புலப்படுகிறது. இவ்வெண்ணமே என்னைக் கலங்கச் செய்து என் சரீரத்தை உஷ்ணகால வறட்சியைப்போல் வாட்டி இத்தனை மெலிவாக்கிவிட்டது.

வைத்.—இந்த நியாயத்தீர்ப்புக்கு இத்தனை பயமுண்டாகத்தக்கதாக நடந்துகொண்டீர்களோ?

பிரபு.—மனுஷருடைய பார்வையில் நான் யாதொரு குற்றமுள்ளவனென்று காணப்பட்டதேயில்லை நான் அயோக்கியனாயிருந்தால் ஜனங்கள் என்னை நிந்திக்கமாட்டார்களா? எனக்கு அறிமுகமானவர்களில் அநேகரை நான் குற்றஞ் சாட்டக்கூடுமேயொழிய என்னைக் குற்றஞ்சாட்டக்கூடிய தப்பிதமொன்றும் என்னிலில்லை. அம்மகத்துவப் பிரகாசமுள்ள நியாயத்தீர்ப்பிலோ, அக்களங்கமற்ற பரிசுத்தத்திலோ, நான் எவைகளை மகா புண்ணியகிரியைகளென்று நினைத்துச் செய்தேனோ அவைகளெல்லாம் கன்னங்கரேலென்று பயங்கரமாய்க் காணப்படுகின்றன. நான் குற்றவாளியென்றும் ஆக்கினைக்குள்ளாகத் தீர்க்கப்பட்டவனென்றும் உணர்ந்து அவருடைய பரிசுத்த சந்நிதியினின்று எங்கேயாவது ஓடி ஒளிந்துகொள்ள ஆசைப்பட்டும் ஓரிடமும் எனக்கு அகப்படுகிறதில்லை.

வைத்.—உங்களுக்கிருப்பதாக நீங்கள் சொல்லும் உங்கள் சித்தப் பிரமைக்கு இது தானோ காரணம்.

பிரபு.—அப்படித்தான் நினைக்கிறேன். இப்பயங்கர காக்ஷி முழுவதும் வீணான மனோபாவனையென்று நான் நினைத்தாலும் அதின் பயம் மாத்திரம் நிழல்போல் என்னை எங்கும் தொடர்ந்து பிடிக்கிறது.

வைத்.—உங்கள் பிணிக்குப் பரிகாரமடங்கிய பண்டை கால புத்தகமொன்றென்னிடமுளது, என்று நம்பிக்கையோடு சொல்லிக்கொண்டே அடிக்கடி வாசிக்கப்பட்டதாகக் காணப்படும் ஒரு புத்தகத்தைப் பக்கத்திலிருந்தெடுத்து சில ஏடுகளைத் திருப்பி சில வரிகளைக் காட்டி அவற்றைச் சத்தமாய் வாசிக்கச் சொல்லி எதிரிலிருந்த பிணியாளியிடம் கொடுத்தார்.

அவர் பின்வருமாறு வாசிக்கத் தொடங்கினார்:—

பிரபு.—"எங்கள் மூலமாய்க் கேள்விப்பட்டதை விசுவாசித்தவன் யார்? கர்த்தருடைய புயம் யாருக்கு வெளிப்பட்டது?

வைத்.—"இரண்டாயிரத்து அறுநூறு வருஷங்களுக்கு முன்னதாக ஜனங்களுக்கு அவிசுவாசமிருந்ததென்று தீர்க்கதரிசி கண்டிக்கிறதுபோலத், தற்காலத்திலும் அவிசுவாசம் ஜனங்களுடைய மனதில் குடிகொண்டிருக்கிறது."

பிரபு.—"இளங்கிளையைப்போலவும், வறண்ட நிலத்திலிருந்து துளிர்க்கிற வேரைப்போலவும் அவனுக்கு முன்பாக எழும்புகிறார்; அவருக்கு அழகுமில்லை, சௌந்தரியமுமில்லை; அவரைப் பார்க்கும்போது, நாம் அவரை விரும்பத்தக்க ரூபம் அவருக்கு இல்லாதிருந்தது."

இந்த வசனங்களில் யாரைக்குறித்துச் சொல்லப்பட்டிருக்கிறதென்று பிரபு கேட்க,

வைத்:—நமது பாவங்களைப் போக்கும்படியாக இவ்வுலகத்துக்கு வந்து தம்மைப் பலியாக ஒப்புக்கொடுத்த தேவ குமாரனாகிய கர்த்தராகிய இயேசுக் கிறிஸ்துவைப்பற்றிச் சொல்லப்பட்டிருக்கிறது." என்றார்.

பிரபு—"அவர் அசட்டை பண்ணப்பட்டவரும், மனுஷரால் புறக்கணிக்கப்பட்டவரும், துக்கம் நிறைந்தவரும், பாடு அனுபவித்தவருமாயிருந்தார்; அவரை விட்டு, நம்முடைய முகங்களை மறைத்துக்கொண்டோம்; அவர் அசட்டை பண்ணப்பட்டிருந்தார், அவரை எண்ணாமற் போனோம்."

வைத்.—நாம் அவரை எண்ணவில்லையென்பது வாஸ்தவந்தான்.

பிரபு.—"மெய்யாகவே அவர் நம்முடைய பாடுகளை ஏற்றுக்கொண்டு, நம்முடைய துக்கங்களைச் சுமந்தார்; நாமோ அவர் தேவனால் அடிபட்டு வாதிக்கப்பட்டு, சிறுமைப்பட்டவரென்று எண்ணினோம்."

வைத்.—இந்தத் தீர்க்கதரிசனம் முன்னமே நிறைவேறிவிட்டது.

பிரபு.—நம்முடைய மீறுதல்களினிமித்தம் அவர் காயப்பட்டு, நம்முடைய அக்கிரமங்களினிமித்தம் அவர் நொறுக்கப்பட்டார்; நமக்குச் சமாதானத்தை உண்டுபண்ணும் ஆக்கினை அவர்மேல் வந்தது; அவருடைய தழும்புகளால் குணமாகிறோம். நாமெல்லாரும் ஆடுகளைப்போல வழி தப்பித் திரிந்து, அவனவன் தன் தன் வழியிலே போனோம்; கர்த்தரோ நம்மெல்லாருடைய அக்கிரமத்தையும் அவர்மேல் விழப்பண்ணினார்."

வைத்தியரே இதன் அர்த்தமென்ன என்று பிரபு கேட்டதற்கு அவர், பாவிகள் அடையவேண்டிய தண்டனையைப் பாவிகளுக்குப் பதிலாக தேவ குமாரன் தமது பேரில் ஏற்றுக்கொண்டார் என்றார். அது எப்படி ஆகும்? தெய்வீக மகிமையுள்ளவர் தம்மை எப்படித் தாழ்த்தினார். குற்றமற்றவர் குற்றவாளிக்காக மரிப்பது ஆச்சரியமல்லவா? என்றார் பிரபு. வைத்தியர் அவரை இன்னும் வாசிக்கச்சொல்ல,

பிரபு.—"அவர் நெருக்கப்பட்டும் ஒடுக்கப்பட்டும் இருந்தார், ஆனாலும் தம்முடைய வாயை அவர் திறக்கவில்லை,"

வைத்.—அவர் மனப்பூர்வமாய்த் தம்மை ஒப்புக்கொடுத்தார்.

பிரபு.—"அடிக்கப்படும்படி கொண்டுபோகப்படுகிற ஒரு ஆட்டுக்குட்டியைப்போலவும், தன்னை மயிர் கத்தரிக்கிறவனுக்கு முன்பாகச் சத்தமிடாதிருக்கிற ஆட்டைப்போலவும், அவர் தம்முடைய வாயைத் திறவாதிருந்தார்."

வைத்.—அவர் என்னை மீட்கும்படியாகத் தமது ஜீவனைக் கொடுத்தார்.

பிரபு.—"இடுக்கணிலும் நியாயத்தீர்ப்பிலுமிருந்து அவர் எடுக்கப்பட்டார்; அவருடைய வம்சத்தை யாரால் சொல்லி முடியும்? ஜீவனுள்ளோருடைய தேசத்திலிருந்து அறுப்புண்டு போனார்; என் ஜனத்தின் மீறுதலினிமித்தம் அவர் வாதிக்கப்பட்டார்?

வைத்.—பாவிக்காக அவர் பாடுபட்டார்.

பிரபு.—"துன்மார்க்கரோடே அவருடைய பிரேதக்குழியை நியமித்தார்கள்; ஆனாலும் அவர் மரித்தபோது ஐசுவரியவானோடே இருந்தார்; அவர் கொடுமை செய்யவில்லை; அவர் வாயில் வஞ்சனை இருந்தது மில்லை. கர்த்தரோ அவரை நொறுக்கச் சித்தமாகி, அவரைப் பாடுகளுக் குட்படுத்தினார்."

வைத்.—அவருக்குப் பாவிகளின்மேலிருக்கிற அன்பைப் பார்த்தீர்களா?

பிரபு.—"அவருடைய ஆத்துமா தன்னைக் குற்ற நிவாரண பலியாக ஒப்புக்கொடுக்கும்போது, அவர் தமது சந்ததியைக் கண்டு, நீடித்த நாளாயிருப்பார்; கர்த்தருக்குச் சித்தமானது அவர் கையினால் வாய்க்கும். அவர் தமது ஆத்தும வருத்தத்தின் பலனைக் கண்டு திருப்தியாவார்; என் தாசனாகிய நீதிபரர் தம்மைப் பற்றும் அறிவினால் அநேகரை நீதிமான்களாக்குவார்; அவர்களுடைய அக்கிரமங்களைத் தாமே சுமந்துகொள்வார்." ஏசா. 53. என்று வாசித்து முடித்துவிட்டு வைத்தியரை நோக்கி "தேவ நேசமும் குமாரனின் அன்பும் எத்தன்மையானதென்று இப்போது நான் நன்றாய் அறிந்துகொண்டேன். நான் கிறிஸ்துவின் மரணத்தினால் நீதிமானாக்கப்பட்டிருக்கிறதினால் அந்தக் கடைசி நியாயத்தீர்ப்புக்குக் கொஞ்சமும் அஞ்சேன்" என்றார். அதற்கு,

வைத்.—"நாம் கர்த்தராகிய இயேசுக்கிறிஸ்துவை விசுவாசித்தால் அவர் நமக்கு வாக்கருளியிருக்கும் நித்திய ஜீவனைப் பெற்றுக்கொள்வோம்." என்று சொல்லி யோவான் 5: 24-ஐ வாசிக்கச் சொன்னார்.

பிரபு.—"என் வசனத்தைக் கேட்டு என்னை அனுப்பினவரை விசுவாசிக்கிறவனுக்கு நித்திய ஜீவன் உண்டு; அவன் ஆக்கினைக் தீர்ப்புக்குட்படாமல், மரணத்தை விட்டு நீங்கி, ஜீவனுக்குட்பட்டிருக்கிறான் என்று மெய்யாகவே மெய்யாகவே உங்களுக்குச் சொல்லுகிறேன் என்றார்." யோவான் 5: 24.

பிரபு இச்சத்தியங்களை வைத்தியரிடமிருந்து அறிந்துகொண்டு உற்சாகமான இருதயத்தோடு அவ்விடத்தைவிட்டுப் புறப்பட்டுப்போய், அந்நிமிஷ முதற்கொண்டு தன்னில் அன்பு கூர்ந்து தனக்காக தமது ஜீவனைக் கொடுத்த இயேசு இரட்சகரின் நாம மகிமைக்கென்று ஒரு புது சிருஷ்டியாய் ஜீவியம் செய்ய ஆரம்பித்தார்."

இச்சிறு சரிதையிலிருந்து நாம் பாவப்பிணியால் சித்தப்பிரமைகொண்டிருக்கும் பாவிகளுக்கு வேதாகமமே பெரும் பரமவிழ்தமாயிருக்கிறதென்று அறிந்துகொள்ளலாம். அதில் தேவசித்தம், மனிதநிலைமை, இரக்ஷண்யவழி, பாவிகளின் முடிவு, விசுவாசிகளின் பாக்கியம் என்பவைகளடங்கி யிருக்கின்றன. அதை நாம் தினந்தோறும் ஜெபத்தோடு வாசித்து அதிலடங்கி யிருக்கிற பரம பொக்கிஷங்களை இன்றே பிரயோஜனப்படுத்திக்கொள்வோமாக.

தே. ஆரோன்.

(AN INTERESTING STORY OF SOMETHING THAT HAPPENED NEARLY FOUR THOUSAND YEARS AGO.)

ஏறக்குறைய நாலாயிரம் வருஷங்களுக்கு முன் நடந்த ஓர் இனிய கதை.

ஏறக்குறைய நாலாயிரம் வருஷங்களுக்கு முன்பு நீலநதியைச் சுற்றியுள்ள நாடாகிய எகிப்து தேசத்தில் தேவ பக்தியுள்ள ஜனங்கள் வசித்து வந்தார்கள். இந்த ஜனங்கள் எகிப்தின் ராஜாவின்கீழ் அடிமைகளாயிருந்து கஷ்டத்தை அனுபவித்து வந்தார்கள். ராஜா அவர்களுக்கு சுயாதீனம் கொடுக்காமல் கஷ்டப்படுத்தி வந்தான். ஆகையினால் அவர்கள் தேசத்தைவிட்டு எங்கேயாவது ஓடிப்போய் சுயேச்சையாய் வசிக்க விரும்பினார்கள். அநேக வருஷமாக அடிமைத்தனத்திலிருந்த ஜனங்கள் தங்களுக்கு சுயாதீனம் கிடைக்கக் கூடிய ஒரு நாட்டிற்கு போகத் தீர்மானித்தார்கள். அவர்கள் தங்களுக்கு ஒரு சொந்த ராஜ்யமும் ராஜாவும் வேண்டுமென்று விரும்பினார்கள். தங்கள் இஷ்டப்பிரகாரம் தேவனைத் தொழுதுகொள்ள சொந்த ஆலயம் வேண்டுமென்றும் ஆசைப்பட்டார்கள்.

கொடுங்கோல் அரசனிடமிருந்து தப்பித்துக்கொள்ளும்படியாக, இவர்கள் யாவரும் தயாராயிருந்ததினால் மத்திய தரைக்கடலின் கீழ் பாகத்திலுள்ள பலஸ்தீனா என்னும் நாட்டிற்குப்போகத் தீர்மானித்தார்கள். ஒரு நாள் நடுராத்திரியில் அவர்கள் எகிப்திலிருந்து பிரயாணப்பட்டார்கள். தனது அடிமைகள் யாவரும் ஓடிப்போனதை ராஜா கேள்விப்பட்டு கோபமூண்டு அவர்களை மறுபடியும் பிடித்து வரும்படியாகத் தன் சேனையை அனுப்பினான். ஆனால் தேவன் இந்த ஜனங்களோடிருந்ததினால் அவர்கள் அந்தப் பொல்லாத ராஜாவின் கையிலிருந்து தப்பித்துக்கொண்டார்கள்.

தாங்கள் போகவேண்டுமென்றிருந்த நாட்டிற்குப் போய்ச்சேர அவர்களுக்கு நாற்பது வருஷம் பிடித்தது. இந்த நாற்பது வருஷத்திற்குள்ளாக எகிப்திலிருந்து புறப்பட்ட ஜனங்கள் யாவரும் வழியிலே மரித்து அடக்கம் பண்ணப்பட்டார்கள். அவர்களுடைய பிள்ளைகளே அந்த பலஸ்தீனா நாட்டிற்குப் போய்ச் சேர்ந்தார்கள்.

இவர்கள் எகிப்திலிருந்து கானான் தேசத்திற்குப் போனபோது ஒரு நாள் தேவன் இந்த ஜனங்களின் தலைவனுக்குத் தரிசனமானார். தேவன் இந்த ஜனங்களின் தலைவனாகிய மோசே என்பவனோடு ஜனங்களுடைய உதவிக்காக அநேக காரியங்களைப்பற்றிப் பேசினார். தேவன் இந்த மனிதனுக்குச் சொன்ன ஓர் முக்கியமான விஷயத்தைப்பற்றிச் சொல்ல விரும்புகிறேன். இந்த ஜனங்கள் தேவ பக்தியுள்ளவர்களாயிருந்தபோதிலும் அவர்கள் தேவனைத் தகுந்த விதமாய்த் தொழுதுகொள்ளத் தெரியாதவர்களாயிருந்தார்கள். ஆகவே, தேவன் இந்த ஜனங்கள் தம்மை எப்படித் தொழுதுகொள்ள வேண்டுமென்று காட்ட விரும்பினார். ஒரு நாள் தேவன் மோசேயை ஜனங்கள் பாளைய மிறங்கி இருந்த இடத்திற்குப் பக்கத்திலிருந்த மலையின்மேல் வரும்படி கட்டளை யிட்டார். அப்படியே மோசே அங்கே போனபோது தேவன் அவனுக்குத் தரிசனமாகி ஒரு சிநேகிதன் தன் சிநேகிதனோடு பேசுவதுபோல முகமுகமாய் அவனோடு பேசினார்.

தினந்தோறும் எல்லா ஜனங்களும் கூடிவந்து தேவனைத் தொழுதுகொள்ளும்படியான ஒரு இடத்தைக் கட்டவேண்டுமென்று அவர் மோசேக்குக் கட்டளை யிட்டார். ஜனங்கள் தேவனைத் தொழுதுகொள்ளுகிறதற்கும் தேவன் அவர்கள் நடுவே வாசம் பண்ணுவதற்கும் ஓர் ஆசரிப்புக் கூடாரத்தைக் கட்டவேண்டுமென்று மோசேக்குக் கட்டளை யிட்டார். தனக்கு ஆலயத்தைக் கட்டத் தெரியாதென்று மோசே சொன்னபோது தேவன் எப்படிக் கட்டவேண்டுமென்று, அவனுக்குச் சொன்னார். அதன் நீளம் அகலம் உயரம் இன்னதென்று சொன்னார். அதற்கு இரண்டு அறைகள் இருக்கவேண்டுமென்றும்

ஒன்று மற்றதைவிட சிறிதாயிருக்கவேண்டுமென்றும் சொன்னார். பெரிய அறைக்குப் பரிசுத்த ஸ்தலமென்றும் சின்ன அறைக்கு மகா பரிசுத்த ஸ்தலமென்றும் பெயர். இந்த இரண்டு அறைகளைச் சுற்றிலும் ஒரு பிரகாரம் இருந்தது. ஆசரிப்புக் கூடாரத்தின் வடிவம் இப்படி இருந்திருக்கும்.



ஆசரிப்புக் கூடாரத்தைக் கட்டி முடித்தபின்பு அந்த இரண்டு அறைகளிலும் சில சாமான்களை வைக்கும்படியாக தேவன் மோசேக்குக் கட்டளையிட்டார். பரிசுத்த ஸ்தலத்தில் தேவசமுகத்தப்பங்களை வைக்கும் ஒரு மேஜையையும், ஒரு குத்து விளக்கையும் தூப பீடத்தையும் வைக்கும்படியாகக் கட்டளை யிட்டார். மகா பரிசுத்த ஸ்தலத்தில் உடன்படிக்கைப் பெட்டி மாத்திரம் இருந்தது. அதின் உள்ளே தேவன் எழுதிக்கொடுத்த இரண்டு கற்பலகைகள் வைக்கப்பட்டிருந்தது. அவை பின் வருமாறு :—

முதலாவது.

1. உன்னை அடிமைத்தன வீடாகிய எகிப்து தேசத்திலிருந்து புறப்படப்பண்ணின உன் தேவனாகிய கர்த்தர் நானே. என்னையன்றி உனக்கு வேறே தேவர்கள் உண்டாயிருக்க வேண்டாம்.

2. மேலே வானத்திலும், கீழே பூமியிலும், பூமியின்கீழ்த் தண்ணீரிலும் உண்டாயிருக்கிறவைகளுக்கு ஒப்பான ஒருசொரூபத்தையாகிலும் யாதொரு விக்கிரகத்தையாகிலும் நீ உனக்கு உண்டாக்கவேண்டாம்; நீ அவைகளை நமஸ்கரிக்கவும் சேவிக்கவும் வேண்டாம் உன் தேவனாகிய கர்த்தாயிருக்கிற நான் எரிச்சலுள்ள தேவனாயிருந்து, என்னைப் பகைக்கிறவர்களைக் குறித்துப் பிதாக்களுடைய அக்கிரமத்தைப் பிள்ளைகளிடத்தில் மூன்றும் நான்காம் தலைமுறைமட்டும் விசாரிக்கிறவராயிருக்கிறேன். என்னிடத்தில் அன்புகூர்ந்து, என் கற்பனைகளைக் கைக்கொள்ளுகிறவர்களுக்கோ ஆயிரம் தலைமுறை மட்டும் இரக்கம் செய்கிறவராயிருக்கிறேன்.

3. உன் தேவனாகிய கர்த்தருடைய நாமத்தை வீணிலே வழங்காதிருப்பாயாக; கர்த்தர் தம்முடைய நாமத்தை வீணிலே வழங்குகிறவனைத் தண்டியாமல் விடார்.

4. ஓய்வு நாளைப் பரிசுத்தமாய் ஆசரிக்க நினைப்பாயாக; ஆறுநாளும் நீ வேலைசெய்து உன் கிரியைகளை யெல்லாம் நடப்பிப்பாயாக; ஏழாம் நாளோ உன் தேவனாகிய கர்த்தருடைய ஓய்வுநாள்; அதிலே நீயானாலும், உன் குமாரனானாலும், உன் குமாரத்தியானாலும், உன் வேலைக்காரனானாலும், உன் வேலைக்காரியானாலும், உன் மிருக ஜீவனானாலும், உன் வாசல்களில் இருக்கிற அந்நியனானாலும், யாதொரு வேலையும் செய்ய வேண்டாம். கர்த்தர் ஆறு நாளைக்குள்ளே வானத்தையும் பூமியையும் சமுத்திரத்தையும் அவைகளிலுள்ள எல்லாவற்றையும் உண்டாக்கி, ஏழாம் நாளிலே ஓய்ந்திருந்தார்; ஆகையால், கர்த்தர் ஓய்வு நாளை ஆசீர்வதித்து, அதைப் பரிசுத்தமாக்கினார்.

இரண்டாவது.

5. உன் தேவனாகிய கர்த்தர் உனக்குக் கொடுக்கிற தேசத்திலே உன் நாட்கள் நீடித்திருப்பதற்கு, உன்தகப்பனையும் உன்தாயையும் கனம் பண்ணுவாயாக.

6. கொலை செய்யாதிருப்பாயாக.

7. விபசாரம் செய்யாதிருப்பாயாக.

8. களவு செய்யாதிருப்பாயாக.

9. பிறனுக்கு விரோதமாகப் பொய்சாட்சி சொல்லாதிருப்பாயாக.

10. பிறனுடைய வீட்டை இச்சியாதிருப்பாயாக; பிறனுடைய மனைவியையும், அவனுடைய வேலைக்காரனையும், அவனுடைய வேலைக்காரியையும், அவனுடைய எருதையும் அவனுடைய கழுதையையும், பின்னும் பிறனுக்குள்ள யாதொன்றையும் இச்சியாதிருப்பாயாக.

இந்தக் கற்பனைகளுக்கு தேவனுடைய நியாயப் பிரமாணம் என்று பெயர். ஆசரிப்புக் கூடாரத்தைச் சுற்றிலுமுள்ள பிரகாரத்தில் தண்ணீர் ஊற்றும்படியான ஒரு பெரிய தொட்டியையும், வாசலுக்கு எதிரே ஒரு பலி பீடத்தையும் வைக்கும்படியாக தேவன் மோசேக்குக் கட்டளையிட்டார். ஆசரிப்புக் கூடாரத்தை எப்படிக் கட்டவேண்டுமென்றும், அதில் இன்னின்ன ஜாமான்களை வைக்கவேண்டுமென்றும் மோசேக்குச் சொன்ன பிற்பாடு, ஜனங்கள் தம்மை இந்த ஆசரிப்புக் கூடாரத்தில் எப்படி வணங்கவேண்டுமென்றும் சொன்னார். முதலாவதாக பரிசுத்த ஸ்தலத்தில் சாதாரண ஜனங்கள் ஒருவரும் பிரவேசிக்கக்கூடாது. அவர்கள் பிரகாரத்திலேயே நின்று தேவனைத் தொழுதுகொள்ளவேண்டும். ஆசாரியர்கள் மகா பரிசுத்த ஸ்தலத்துக்குள் பிரவேசிக்கக்கூடாது. அவர்கள் தினந்தோறும் பரிசுத்த ஸ்தலத்திற்குள்ளேயே தங்கள் பூஜையை நடத்தவேண்டும். ஆனால் எல்லா ஆசாரியர்களுக்கும் தலைமையானவனாகிய பிரதான ஆசாரியன் மாத்திரம் வருஷத்திற்கு ஒரே ஒரு முறை மகா பரிசுத்த ஸ்தலத்திற்குள் பிரவேசிக்கவேண்டும். அவன் வேறே எந்த சமயத்திலாவது மகா பரிசுத்த ஸ்தலத்திற்குள் பிரவேசித்தால் உடனே கொலை யுண்ணப்படுவான். மகா பரிசுத்த ஸ்தலத்தில் தேவன் தங்கியிருந்ததினால் ஜனங்கள் அங்கே போகவாவது அதன் உள்ளே பார்க்கவாவது கூடாது.

தேவன் மோசேக்கு மலையில் சொன்ன இந்தக் கட்டளைகளையெல்லாம் அவன் ஜனங்களுக்கு அறிவித்தான். அவர்களெல்லாரும் அதிக சந்தோஷத்தோடு ஆசரிப்புக் கூடாரத்தைக் கட்டி ஆயத்தம் பண்ணினார்கள். மோசே தனக்குக் காண்பிக்கப்பட்ட மாதிரியின்படியே ஆசரிப்புக் கூடாரத்தை உண்டு பண்ணி சகல பணி முட்டுகளையும் அதனதன் ஸ்தானத்திலே வைத்தான்.

நான், காசி, ராமேஸ்வரம், மதுரை, தென் காசி, திருச்சினாப்பள்ளி முதலிய இந்து க்ஷேத்திர ஸ்தலங்களுக்கெல்லாம் போயிருக்கிறேன். அங்குள்ள இந்து ஆலயங்கள் யாவற்றையும் போய்ப் பார்த்திருக்கிறேன். அவைகளெல்லாம் இதேமாதிரியாகத்தான் கட்டப்பட்டிருக்கிறது. அநேக வருஷங்களுக்கு முன் தேவன் மோசேக்குக் கட்டளையிட்ட மாதிரியின்படித்தான் இவைகள் கட்டப்பட்டிருக்கின்றன. ஏறக்குறைய நாலாயிரம் வருஷங்களுக்கு முன்னதாக தேவன் மோசேக்குக் கட்டளையிட்ட மாதிரியின்படியே இந்தியாவிலுள்ள பெரிய க்ஷேத்திரங்களெல்லாம் கட்டப்பட்டிருக்கிறதென்பதற்குச் சந்தேகமில்லை.

அடுத்த மாதத்தில், இந்த ஆசரிப்புக் கூடாரத்தைப்பற்றியும் தினந்தோறும் அங்கே நடந்த பூஜையைப்பற்றியும் கூறுவோம்.

(இன்னும் வரும்.)

G. G. L.

(TO DIE IS GAIN).

"சாவு எனக்கு ஆதாயம்."

"கிறிஸ்து எனக்கு ஜீவன், சாவு எனக்கு ஆதாயம்" பிலிப்பியர் 1: 21. பவுல் அப்போஸ்தலன் ரோமா புரியில் கிறிஸ்து இயேசுவினிமித்தம் கட்டுண்டவராக இருக்கும்பொழுது இவ்வார்த்தைகளைச் சொல்லுகிறார். அநேக உபத்திரவங்களையும் பாடுகளையும் பொறுமையோடு அவர் சகித்ததுமன்றி, மரணம் நேரிட்டாலும் அதினாலே தனக்கு ஓர் ஆதாயம் உண்டாகும் என்று நம்புகிறார். அதாவது தான் மரண மடைந்து பாதாளத்தில் அடக்கம் பண்ணப்பட்டாலும் தனக்கு பின்னால் ஒரு பெரிய நம்பிக்கை யிருக்கிறதாக எண்ணுகிறார். உலகத்தில் பெரும்பான்மையோருக்கு இப்படிப்பட்ட நம்பிக்கை யில்லை.

அநேகர் தாங்கள் புசிக்கிறதும் குடிக்கிறதும் பின்பு சாகிறதுந்தான் தங்களுக்குரிய பலன் என்று எண்ணுகிறார்கள். "ஏனெனில், அநேகர் வேறுவிதமாய் நடக்கிறார்கள்; அவர்கள் கிறிஸ்துவின் சிலுவைக்குப் பகைஞரென்று உங்களுக்கு அநேகந்தரம் சொன்னேன், இப்பொழுது கண்ணீரோடும் சொல்லுகிறேன். அவர்களுடைய முடிவு அழிவு, அவர்களுடைய தேவன் வயிறு, அவர்களுடைய மகிமை அவர்களுடைய இலச்சையே, அவர்கள் பூமிக்கடுத்தவைகளைச் சிந்திக்கிறார்கள்" என்று பவுல் அப்போஸ்தலனே சொல்லுகிறார். பிலி. 3: 18, 19. இப்படிப்பட்டவர்களைக் குறித்து, "நீங்களோ, சந்தோஷித்துக் களித்து, ஆடு மாடுகளை அடித்து, இறைச்சியைச் சாப்பிட்டு, திராட்ச ரசத்தைக் குடித்து: புசிப்போம் குடிப்போம் நாளைக்குச் சாவோம் என்று சொல்லுவீர்கள்" என்று ஏசாயா தீர்க்கதரிசியும் உரைத்திருக்கிறார். ஏசாயா 22: 13. "இம்மைக்காக மாத்திரம் நாம் கிறிஸ்துவின்மேல் நம்பிக்கையுள்ளவர்களாயிருந்தால், எல்லா மனுஷரைப்பார்க்கிலும் பரிதபிக்கப்படத்தக்கவர்களாயிருப்போம்." 1 கொரி. 15: 19.

சாவு எப்படி ஆதாயமாகும்?

தேவனுடைய பரிசுத்தவான்கள் மரித்து கல்லறையிலே அடக்கம் பண்ணப்பட்டாலும் கிறிஸ்துவின் இரண்டாம் வருகையில் உயிர்த்தெழும்புவார்கள். இதுதான் அவர்களுக்குக் கிடைக்கும் ஆதாயம். இவ்விஷயத்தை இயற்கை நமக்கு நன்றாய்ப் போதிக்கிறது. எவ்வகையான தானியமென்றாலும் அது மண்ணோடு கலந்து தரையிலே செத்தால்தான் பின்பு சாரத்தை உண்டு பலன் கொடுக்கும். இதற்கு ஆதாரமாக, "மெய்யாகவே மெய்யாகவே நான் உங்களுக்குச் சொல்லுகிறேன், கோதுமை மணியானது நிலத்தில் விழுந்து சாகாவிட்டால் தனித்திருக்கும், செத்ததேயாகில் மிகுந்த பலனைக் கொடுக்கும்" என்று கிறிஸ்து உரைக்கிறார். யோவான் 12: 24. "ஆகிலும், மரித்தோர் எப்படி எழுந்திருப்பார்கள், எப்படிப்பட்ட சரீரத்தோடே வருவார்களென்று ஒருவன் சொல்வானாகில், புத்தியீனனே, நீ விதைக்கிற விதை செத்தாலொழிய உயிர்க்கமாட்டாதே. நீ விதைக்கிறபோது, இனி உண்டாகும் மேனியை விதையாமல், கோதுமை அல்லது மற்றொரு தானியத்தினுடைய வெறும் விதையையே விதைக்கிறாய். அதற்கு தேவன் தமது சித்தத்தின்படியே மேனியைக் கொடுக்கிறார். மரித்தோரின் உயிர்த்தெழுதலும் அப்படியே இருக்கும். அழிவுள்ளதாய் விதைக்கப்படும், அழிவில்லாததாய் எழுந்திருக்கும்; கனவீனமுள்ளதாய் விதைக்கப்படும், மகிமையுள்ளதாய் எழுந்திருக்கும்; பலவீனமுள்ளதாய் விதைக்கப்படும், பலமுள்ளதாய் எழுந்திருக்கும். ஜென்ம சரீரம் விதைக்கப்படும், ஆவிக்குரிய சரீரம் எழுந்திருக்கும். மேலும் மண்ணானவனுடைய சாயலை நாம் அணிந்திருக்கிறதுபோல, வானவருடைய சாயலையும் அணிந்துகொள்வோம்" என்று எழுதியிருக்கிறது. 1 கொரி. 15: 35-38, 42-44, 49. இவ்விதமாய் தேவனுடைய பிள்ளைகளுக்கு சாவு உயிர்த்தெழுதலின் நாளிலே ஆதாயமாகிவிடும். "என்னை விசுவாசிக்கிறவன் மரித்தாலும் பிழைப்பான்" என்ற வசனத்தின் கருத்தும் இதுவே. யோவான் 11: 25.

"மரித்தோரை பூமி புறப்படப்பண்ணும்."

"உலகத்தோற்றமுதல் தேவன் தம்முடைய பரிசுத்த தீர்க்கதரிசிகளெல்லாருடைய வாக்கினாலும் உரைத்தவைகள் எல்லாம் நிறைவேறித் தீருங்காலங்கள் வருமளவும் பரலோகம் அவரை (இயேசு கிறிஸ்து) ஏற்றுக்கொள்ளவேண்டும்." அப். 3: 21. அதற்கப்புறம் அவர் இப்பூலோகத்திற்கு இரண்டாந்தரம் புறப்பட்டு வருவார். அப்பொழுது அவர் ஆகாயத்தில் நின்றுகொண்டு, நீதிமான்களின் கல்லறைகளைப் பார்த்து: "மண்ணிலே தங்கியிருக்கிறவர்களே, விழித்து கெம்பீரியுங்கள்" என்று சத்தமிடுவார். அப்போது "மரித்தோரை பூமி புறப்படப்பண்ணும்." ஏசா. 26: 19. "ஏனெனில், கர்த்தர் தாமே ஆரவாரத்தோடும், பிரதான தூதனுடைய சத்தத்தோடும், தேவ எக்காளத்தோடும் வானத்திலிருந்து

இறங்கி வருவார்; அப்பொழுது கிறிஸ்துவுக்குள் மரித்தவர்கள் முதலாவது எழுந்திருப்பார்கள்" என்று எழுதி யிருக்கிறது. 1 தெச. 4: 16. வேதாகமத்தில் இவ்வுயிர்த்தெழுதல், "நீதிமான்களின் உயிர்த்தெழுதல்" (லூக்கா 14: 14) என்றும், "நன்மை செய்தவர்களின் உயிர்த்தெழுதல்" (யோவான் 5: 29) என்றும், "மேன்மையான உயிர்த்தெழுதல்" (எபி. 11: 35) என்றும், "முதலாம் உயிர்த்தெழுதல்" (வெளி. 20: 6) என்றும் அழைக்கப்பட்டிருக்கிறது.

பரிசுத்தவான்களின் நம்பிக்கை.

விசுவாசிகளின் தகப்பன் என்று அழைக்கப்பட்ட ஆபிரகாம் சோதிக்கப்பட்டபோது, "மரித்தோரிலிருந்து மெழுப்ப தேவன் வல்லவராயிருக்கிறாரென்றெண்ணி தனக்கு ஒரே பேருனவனையே பலியாக ஒப்புக்கொடுத்தான்" என்று வாசிக்கிறோம். எபி. 11: 18, 19. உயிரற்ற கெர்ப்பத்திலிருந்து ஈசாக்கு உற்பவித்த செய்கையை விசுவாசித்த ஆபிரகாம், தன் மகன் மரித்தாலும் தேவனுடைய வார்த்தையால் உயிர்ப்பிக்கப்படுவான் என்று விசுவாசித்தான்.

யோபின் பொறுமையைக் குறித்து கேள்விப்பட்டிருக்கிறோம். அவன் தன் ஏழு குமாரரையும் மூன்று குமாரத்திகளையும் ஒரே நாளிலே சாகக் கொடுத்தபோதிலும், "கர்த்தர் கொடுத்தார், கர்த்தர் எடுத்தார்; கர்த்தருடைய நாமத்திற்கு ஸ்தோத்திரம்" என்றான். மேலும் அவன் உள்ளங்கால் தொடங்கி உச்சந்தலைமட்டும் கொடிய பருக்களால் வாதிக்கப்பட்டு, ஒரு ஓட்டை எடுத்து தன்னை சுறண்டிக்கொண்டிருக்கும்போதும், "ஆ, நான் இப்பொழுது சொல்லும் வார்த்தைகள் எழுதப்பட்டால் நலமாயிருக்கும்; அவைகள் ஒரு புஸ்தகத்தில் வரையப்பட்டு, அல்லது என்றைக்கும் நிலைக்க அவைகள் கருங்கல்லிலே உளிவெட்டாகவும் ஈய எழுத்தாகவும் பதிந்தால் நலமாயிருக்கும். என் மீட்பர் உயிரோடிருக்கிறார் என்றும், அவர் கடைசி நாளில் பூமியின்மேல் நிற்பார் என்றும் நான் அறிந்திருக்கிறேன். இந்த என் தோல் முதலானவை அழுகிப்போன பின்பு, நான் என் மாம்சத்திலிருந்து தேவனைப் பார்ப்பேன். அவரை நானே பார்ப்பேன்; அந்நிய கண்கள் அல்ல, என் கண்களே அவரைக்காணும்; இந்த வாஞ்சையால் என் உள்ளிந்திரியங்கள் எனக்குள் சோர்ந்துபோகிறது" என்று சொன்னான். யோபு. 19: 23-27. மரித்தாலும் "கடைசி நாளிலே" தன் மீட்பரைப் பார்க்க முடியும் என்ற நம்பிக்கை அவனுக்கிருந்தது.

பின்னும் நான் என்ன சொல்லுவேன்? சகல முற்பிதாக்கள், தீர்க்கதரிசிகள் என்பவர்கள் உயிர்த்தெழுதலின் நம்பிக்கையோடு மரித்தார்கள். விவரமாய்ச் சொல்லவேண்டுமானால் காலம் போதாது. "கிறிஸ்து எனக்கு ஜீவன், சாவு எனக்கு ஆதாயம்" என்பது தான் எல்லா தேவனுடைய பிள்ளைகளுக்கும் இருக்கும் நம்பிக்கை. என் பிரிய சிநேகிதனே! நீர் இந்த அருமையான சத்தியத்தை முழு இருதயத்தோடும் பாரம்பரிய போதனையின்படியல்ல வேதத்தில் காட்டியபடி விசுவாசித்து உத்தம ஜீவியம் செய்வீரானால், மரித்தாலும் நீர் உயிர்த்தெழுதலின் காலையில் சகல பரிசுத்தவான்களோடும் விழித்து எழுந்திருந்து, "மரணமே, உன் வாதைகள் எங்கே? பாதாளமே, உன் சங்காரம் எங்கே" என்று பாடுவீர். ஓசியா 13: 14. அப்போது "மரணம் ஜெயமாக விழுங்கப்பட்டது" என்று எழுதி யிருக்கிற வார்த்தை நிறைவேறும். ஏசா. 25: 8 முதற் பாகம். "இப்பொழுது தேவனுடைய பிள்ளைகளாயிருக்கிறோம், இனி எவ்விதமாயிருப்போமென்று இன்னும் வெளிப்படவில்லை; ஆகிலும் அவர் வெளிப்படும்போது அவர் இருக்கிற வண்ணமாகவே நாம் அவரைத் தரிசிப்பதினால், அவருக்கு ஒப்பாயிருப்போமென்று அறிந்திருக்கிறோம். அவர்மேல் இப்படிப்பட்ட நம்பிக்கை வைத்திருக்கிறவனெவனும், அவர் சுத்தமுள்ளவராயிருக்கிறது போல, தன்னையும் சுத்திகரித்துக் கொள்ளுகிறான்." 1 யோவான் 3: 2, 3.

A. ஆசீர்வாதம்.

(THE ORIGIN AND END OF EVIL.)

பாவ உற்பத்தியும் அதின் முடிவும்.

சாத்தான் எப்படி வானத்திலிருந்து தள்ளப்பட்டானென்றும் சர்வ லோகங்களும் அவன் செய்கையைப் பார்க்கும்படியாக உலகமானது எப்படி சாத்தானின் வசமாக விட்டு வைக்கபட்டதென்பதையும்பற்றி நாம் முன்னே சிந்தித்தோம். நாம் இப்பொழுது,

உலகத்தில் சாத்தானின் வேலை.

என்ன என்பதைப்பற்றிச் சற்று சிந்திப்போம். சாத்தான் பரலோகத்திலிருந்து தள்ளப்பட்டது அவனுக்கு அதிக வெட்கமாயிருந்தது. அவன் மேற்கொள்ளாமற் போனதினால் அதிக கோபங்கொண்டான். அவன் பரலோகத்தின் தூதர்களின்மேல் இனி தன் வல்லமையைச் செலுத்தக்கூடாமற் போயிற்று. ஆகையினாலே தேவன் உண்டாக்கி ஏதேன் என்னும் தோட்டத்திலே வைத்த மனிதனண்டைக்கு வந்து தன் நயவஞ்சகத்தினாலே தேவனுடைய வசனத்தை நம்பாதபடி செய்து அவருடைய கற்பனைகளை மீறும்படியாக ஏவினான். ஆதாமுக்கும் ஏவாளுக்கும் தோட்டத்தின் சகல விருக்ஷத்தின் கனிகளும் ஆகாரமாகக் கொடுக்கப்பட்டிருந்தது. அவர்கள் ஒருவரை ஒருவர் நேசித்து தேவனில் அன்பு கூர்ந்திருந்ததினால் அவர்கள் பாக்கியமாயிருந்தார்கள். தேவனுக்குக் கீழ்படியக்கூடாதென்கிற எண்ணம் அவர்கள் மனதில் உதிக்கவே யில்லை. தோட்டத்திலுள்ள பழங்களைப் பற்றித் தேவன் அவர்களுக்குக் கட்டளையிட்டது நியாயமல்லவென்று சாத்தான் முதலாவது ஏவாளை நம்பும்படி செய்தான். "ஆனாலும் தோட்டத்தின் நடுவில் இருக்கிற விருட்சத்தின் கனியைக் குறித்து, தேவன்: நீங்கள் சாகாதபடிக்கு அதைப் புசிக்கவும், அதைத் தொடவும் வேண்டாம் என்று சொன்னார்." ஆதி. 3: 3. ஆனால் சாத்தான் முதல் பொய்யைச் சொல்ல ஆரம்பித்தான். அவன் "நீங்கள் சாகவே சாவதில்லை" என்றான். அதைப் புசிக்கும் நாளிலே ஞானத்தை அடைந்து தேவர்களைப்போல் ஆவார்களென்று நம்பும்படி செய்தான். ஏவாள் முதலாவது வஞ்சிக்கப்பட்டு தேவனுடைய கற்பனையை மீறினாள். பின்பு ஆதாம் அவளால் வஞ்சிக்கப்பட்டுப் பாவம் செய்தான். இப்படியாக மனிதன் முதலாவதாகப் பாவம் செய்தான்.

சாத்தானின் பொய்யை அநேகர் நம்புகிறார்கள்.

சாத்தான் அதிக நிதானமாக முதல் பொய்யைச் சொன்னான். அவன் அவ்வளவு தந்திரமாய்ச் சொன்னதினால் மனிதர்கள் அதை அந்நாள் முதற்கொண்டு நம்பி வருகிறார்கள். பாவத்தின் சம்பளம் மரணமென்று வேதம் சொல்லக்கொள்ள, நம்மெல்லாருக்கும் ஓர் அழியாத ஆத்துமா உண்டென்று மனிதர் பிடிவாதமாய் நம்புகிறார்கள். இந்தப் பொய்யை மனிதர் பிடிவாதமாய் நம்புகிறதினால் தேவனுடைய வசனத்திலடங்கிய சத்தியங்களைக் காண்பதில் அவர்கள் குருடராயிருக்கிறார்கள். சாத்தானுடைய வல்லமையிலிருந்து மனிதரை மீட்கும்படியாக ஏற்பட்ட இரட்சண்ய ஒழுங்கையும் அவர்கள் அறிந்துகொள்ளவில்லை.

நியாயப்பிரமாணத்தை மீறுகிறது பாவமென்றும் பாவத்தின் சம்பளம் மரணமென்றும் வேதத்தில் சொல்லப்பட்டிருக்கிறது. 1 யோவான் 3: 4. என்றாலும் நாம் மரித்த பிற்பாடு உலகத்தில் ஜீவித்த காலத்திலிருந்ததைவிட அதிக சுறுசுறுப்பாயும் ஞானமுள்ளவர்களாயுமிருப்போமென்று ஆயிரக்கணக்கான படிப்பாளிகள் சொல்லுகிறார்கள். நாம் மரித்தவுடனே மோக்ஷத்திற்கோ நரகத்திற்கோ அல்லது வேறெந்த ஒரு இடத்திற்கோ போய் ஜீவிக்கிறோமென்று சிலர் சொல்லுகிறார்கள். ஒரு மனிதன் இவ்வுலகத்தில் எவ்வளவோ கெட்ட ஜீவியம் செய்தாலும் அவன் மரித்த பிறகு நற்காரியங்களைச் செய்வானென்று நம்புவதும் அதிக விபரீதமாயிருக்கிறது. புருஷர்கள் தங்கள் பெண்ஜாதிகளுக்

குத் தேற்றாவு சொல்ல வருகிறார்களென்றும், குமாரரும் குமாரத்திகளும் தங்கள் பெற்றோருக்கு ஆறுதல் சொல்ல வருகிறார்களென்றும், சிநேகிதர்கள் புத்திமதி சொல்ல வருகிறார்களென்றும் அநேகர் சொல்லுகிறதை நாம் கேட்கிறோம். கோடிக்கணக்கான பேர், இன்னும் சொல்லப்போனால் முழு உலகமும் தேவனுடைய வசனத்தை நம்பாமல் இந்தக் காரியங்களை நம்புகிறார்கள். "மரணத்தில் உம்மை நினைவு கூர்வதில்லை" என்று சங். 6: 5-ல் வாசிக்கிறோம். மரித்தவர்கள் தேவனைப்பற்றி ஒன்றும் நினைக்கமாட்டார்கள். ஆனால் நாம் தேவனுடைய சிங்காசனத்தைச் சுற்றிக் கூத்தாடிப் பாடிக்கொண்டிருக்க முடியாது. பொல்லாதவர்கள் நரக அக்கினியில் தன்னறிவுள்ளவர்களாய்ச் சொல்லி முடியாத அவஸ்தைப் பட்டுக்கொண்டிருக்க முடியாது. ஏனென்றால் அங்கே அவர்கள் தேவனை நினைக்க வேண்டி நேரிடும். "பாதாளம் உம்மைத் துதியாது, மரணம் உம்மைப் போற்றாது; குழியில் இறங்குகிறவர்கள் உம்முடைய சத்தியத்தை தியானிப்பதில்லை" என்று ஏசா. 38: 18-ல் மறுபடியும் வாசிக்கிறோம்.

மரணத்தில் மனிதனுக்கு ஒன்றும் தெரியாது.

நாம் மரித்தபின் தன்னறிவற்றவர்களாயிருக்கிறோமென்று வேதம் போதிக்கிறது. "உயிரோடிருக்கிறவர்கள் தாங்கள் மரிப்பதை அறிவார்களே, மரித்தவர்கள் ஒன்றும் அறியார்கள்; இனி அவர்களுக்கு ஒரு பலனு மில்லை, அவர்கள் பேர் முதலாய் மறக்கப்பட்டிருக்கிறது........நீ போகிற பாதாளத்திலே செய்கையும் வித்தையும் அறிவும் ஞானமும் இல்லையே." பிர. 9: 5, 10.

புதிய ஏற்பாட்டிலும் பழைய ஏற்பாட்டிலும் மரணத்தை நித்திரைக்கு ஒப்பிட்டுப் பேசியிருக்கிறது. இதை நாம் கவனித்துப் பார்க்கவேண்டியது அவசியமாயிருக்கிறது. மரித்தவர்கள் தன்னறிவற்ற நிலைமையிலில்லாமலிருந்தால் அவர்களை நித்திரைக்கு ஒப்பிட்டுப் பேசுவது சரியாயிராது. அப்படிப் பேசினால் மரணத்திற்கும் நித்திரைக்கும் ஒரு ஒற்றுமை இராது. ஏனென்றால் "தாவீது தன் காலத்திலே தேவனுடைய சித்தத்தின்படி அவருக்கு ஊழியஞ் செய்த பின்பு நித்திரை யடைந்து, தன் பிதாக்களிடத்திலே சேர்க்கப்பட்டு அழிவைக் கண்டான்" என்று அப். 13: 36-ல் பார்க்கிறோம். லாசரு மரித்தபோது இயேசு "நம்முடைய சிநேகிதனாகிய லாசரு நித்திரை யடைந்திருக்கிறான்" என்றார். அவருடைய சீஷர்கள் சாதாரண நித்திரையைப்பற்றி அவர் பேசுகிறாரென்று நினைத்தபோது, அவர் தெளிவாய் "லாசரு மரித்துப்போனான்" என்றார்.

மரித்த அன்றைக்கே சிலுவையில் தொங்கின திருடன் கிறிஸ்துவோடுகூடப் பரதீசுக்குப் போனதாக அநேகர் சொல்லுகிறார்கள். பரதீசு தேவனுடைய வாசஸ்தலமாயிருக்கிறதினால் அது பரலோகத்திலிருக்கவேண்டும். (2 கொரி. 12: 4; வெளி. 2: 7 பார்க்க.) ஆனால் மூன்று நாளைக்குப் பிறகு தாம் பரலோகத்துக்கு எழுந்து போகவில்லையென்று கிறிஸ்து தாமே சொல்லுகிறார். யோவான் 20: 17. ஆகையினாலே கிறிஸ்து மரித்தபோது கள்ளனோடு பரதீசில் போய் உயிரோடிருக்கவில்லையென்று தெரிகிறது.

1 தீமோ. 6: 16-ல் தேவன் ஒருவராய்ச் சாவாமையுள்ளவரென்று சொல்லியிருக்கிறது. சாத்தான் இப்பொழுது சொல்லிக்கொள்ளுகிற மாதிரி, மனிதன் இப்பொழுதே சாவாமையுள்ளவனாயிருக்கிறதில்லை. நமக்கு இப்பொழுது அந்த வரமில்லாததால் நாம் அதை அடையும்படி பிரயாசைப்படவேண்டும். நாம் நம்மை தேவனுக்கு முழுவதுமாக ஒப்புக்கொடுத்தால் இந்த வரத்தைப் பெற்றுக்கொள்வோம். நீங்கள் சாகவே சாவதில்லையென்று சாத்தான் சொன்னது பொய்யென்று காட்டும்படியாக வேதத்தில் அநேக வசனங்கள் உண்டு. மனிதர்கள் சாத்தானை நம்பினால் பிற்பாடு தேவனுடைய வசனத்தை நம்புவது அதிக கஷ்டமான காரியம். ஆகையினால் சாத்தான் தன்னுடைய பொய்யை ஜனங்கள் எளிதாக நம்பும்படியாகத் தன் உபாய தந்திரங்களை யெல்லாம் நடப்பித்தான்.

(இன்னும் வரும்.) E. M. Meleen, B. A.

(TEMPERANCE.)
வெறிநீர் விலக்கு

"அஷ்ட தரித்திரத்தைப் போக்கிக்கொண்டு கொஞ்சங்கொஞ்சமாய்த் தனவந்தர்களாக அநேகர் கையாடி காரிய சித்தி யடைந்த கைகண்ட முறையை இச்சஞ்சிகையில் காட்டுவது நமது நேயர்களுக்குப் பிரயோஜனமாகுமென்று நினைக்கிறேன். நான் சொல்லும் முறை யாதெனில் வெறி நீர் விலக்கே. பருகுவோருக்கு வெறி யுண்டாக்கும் இந்நீருக்குச் சாதாரணமாய் மதுபானம் என்கிறார்கள். ஆகவே மது என்னும் கள்ள நாமந் தரித்திருக்கும் குடி யென்னும் பசாசு உலகத்தின் அஷ்ட திசைகளிலும் போய் மானிடரைத் தன் வலைக்குட்படுத்தி பெரியோர் என்றும், சிறியோர் என்றும், கற்றோரென்றும், மூடரென்றும், ஆண் என்றும் பெண் என்றும் பாராமல், அனைவரையும் கெடுத்து நாசப்படுத்தி வருவதை அறியாதவர் யார்? குடியினால் வருவதெல்லாம் நஷ்டமே யன்றி, வேறன்று. ஆத்தும நஷ்டம், சரீர நஷ்டம், செல்வ நஷ்டம், மான நஷ்டம் ஆகிய இவைகளே. அறிவிலிகள் அதன் வசியத்திற்கு எவ்வளவாக உட்பட்டு விட்டார்களென்றால், கஞ்சிக்கு உப்பும், காப்பிக்குப் பாலும், சோற்றுக்குக் குழம்பும் எவ்வளவு அவசியமோ அதிலும் அவசியம் குடியென்று நினைக்குமளவாய்த் தானே. ஆதலால் விழித்திருக்கக் குடிக்கிறோ மென்பர் சிலர். தூக்கம் வரக் குடிக்கிறோமென்பர் சிலர். வாலிபப்பருவத்தைப் பற்றிக் குடிக்கிறோமென்பர் சிலர். விருத்தாப்பியமென்று குடிக்கிறோமென்பர் சிலர். ஜனக் கூட்டத்தைப்பற்றிக் குடிக்கிறோமென்பர் சிலர், தனியாயிருப்பதைப்பற்றிக் குடிக்கிறோமென்பர் சிலர். என்னத்திற்கென்று தெரியாமல் குடிக்கிறோமென்பர் சிலர். ஆனால் குடியின் கோரம் இப்போதுதான் உலகத்திற்கு வெட்டவெளிச்சமாய்த் தெரியவருகிறது. வெறிநீர் வெகு கொடிதென்றும், குடி கெட்டதென்றும் குடும்பங்களில் சொல்லுவார்கள், கோவில்களில் சொல்லுவார்கள், கூடும் சிறிய பெரிய சங்கங்களில் சொல்லுவார்கள், பொது வேத ஜன சபைகளில் சொல்லுவார்கள். இப்போதோ பார்லிமெண்டு என்னும் மந்திராலோசனை சபைகளில் சொல்லுகிறார்கள். இராஜாங்கங்களில் சொல்லுகிறார்கள். உலகமே சொல்லுகின்றது. சமீபத்தில் நடந்து வந்த யுத்தம் ஜெர்மானியரோடு மாத்திரமன்று குடியோடுந்தானென்று அநுபவ ஞானிகள் தீர்மானிக்கிறார்கள் ருஷியா பிரான்ஸ் முதலிய தேசங்களில் குடியை அடியோடு ஓட்டத் தீர்மானித்தார்கள். இங்கிலாந்திலும் அப்படிப்பட்ட முயற்சி நடந்து வருகிறது. குடி தேச விருத்திக்கும், குல விருத்திக்கும், கல்வி விருத்திக்கும், செல்வ விருத்திக்கும் ஒரே வார்த்தையில் எவ்விதமான நல்ல விருத்திக்கும் சத்துருவென்பதற்கு இதிலும் வேறு சாட்சி என்ன தேவை?

ஐயோ பரிதாபம்! கிறிஸ்தவருள்ளும் அநேகர், அஷ்ட தரித்திராயும், ஒழுக்கக் குறைவுள்ளவர்களாயும், வேதாப்பியாச மில்லாதவர்களாயும் முன்னுக்கு வரவேண்டுமென்றும் ஆவலின்றி அசமந்தர்களாயுமிருப்பதற்குப் பாழுங் குடியென்னும் நாசகாலனே காரணமென்று கொஞ்சமாவது அநுபோக முள்ளவர்கள் திட்டமாய்ச் சொல்லக்கூடும். சேற்றில் புரளுகிற பன்றிக்கு அச்சக்தியின் அசங்கியம் தெரியாதிருக்கலாம்; குடியின் படு குழியில் விழுந்திருக்கும் குடியர்கள், ஒருவேளை யில்லாவிட்டாலும் மறுவேளை, குடி கெட்டதே கெட்டதென்று வாய் தப்பிச் சொல்லி விடுவார்கள்.

சருவ ஜீவ தயாபரக் கடவுள் நமக்கும் எல்லாம் சரியாய் அமையப்பெற்ற சரீரத்தையும், திடகாத்திர பலத்தையும், புத்தி ஞானத்தையும், நமது நிலைமையை உயர்த்திக்கொள்ள வேண்டிய சுதந்திரத்தையும் அருள் புரிந்திருக்கிறார். பொதுவாய் யாவரும் அவருடைய சித்தத்திற்கமைந்து தத்தம் அந்தஸ்துக்கேற்றபடி நல்ல சமுசாரிகளாய் ஜீவித்து சுகத்துடன் வாழக்கூடும்.. ஆனால் குடியுடன் செய்யும் சகவாச தோஷத்தினால் அவர்களுக்குச் சதா தரித்திரம். உண்ண உணவுக்கென்றும், உடுக்க உடைக்கென்றும், குடும்ப போஷணைக்கென்றும் கடவுள் அருளும் மாதாந்தர வருமானத்தில் மிகுதியான பாகத்தை சாராயக்காரனுக்கும் கள்ளுக்கடைக்காரனுக்கும் தத்தம் பண்ணினால் மிச்சப்பணம் இந்தக் கஷ்ட காலத்தில் எதற்குத்தான் பற்றும்? குடியும் தரித்திரமும் ஒரே தாய்க்குப் பிறந்த இரட்டைப் பிள்ளைகள். மேலும் வெறி நீருருந்துவோர் வீட்டில் ஒழியாத சண்டை குடும்பத்தில் சமாதான ஈனம். சமுசாரப் பிரிவு. பிள்ளைகளைப்பற்றி விசாரணை இல்லை. அவர்கள் நாய்களைப்போல் அலைந்து பானை திறக்கிற நேரம் பார்த்துப் பதுங்கி வந்து கிடைத்ததை விழுங்கிவிட்டு மெல்ல நழுவி விடுவார்கள். குடும்பப் பொது ஜெபம் கிடையாது. குடியன் வீட்டில் ஜெபமும் உண்டா? பிள்ளைகளுக்குப் படிப்புக் கிடையாது. பெற்றோரோ,

பிள்ளைகளோ, கோவிலுக்குப் போவதும், கொற்றவனைக் கும்பிடுவதும் அபூர்வம். இவர்கள் தங்களுக்கேற்றவர்களோடேயே சகவாசஞ் செய்து மண்ணோருக்கும் விண்ணோருக்கும் அவமானம் விளைவிப்பார்கள். இவர்களை யார் மதிப்பார்கள்? "அவர்கள் கெட்டார்கள் ஈனர்கள், குடியர்கள் ஒழுக்கமற்றவர்கள்" என்று யாவரும் துவேஷிப்பார்கள். இவையெல்லாம் இட்டுக்கட்டின கதையல்ல. அன்றாடகம் கண்ணால் பார்த்து வருகிற காரியம். காதால் கேட்டு வருகிற பேச்சு.

இவர்கள் திருந்துகிறதுதான் எப்படி? குலத்திற்குக் கௌரவமுள்ள அங்கங்களாகவும்; தேசத்திற்குத்தக்க பிரஜைகளாகவும், திருச்சபைக்கு உகந்த பிள்ளைகளாகவும் ஆவதெங்ஙனம்? மதுவிலக்கை அனுசரிப்பதினால்தான். அளவோடு குடிக்கிறேனென்று ஆரம்பித்தவர்கள் அடிவண்டல்மட்டும் மொந்தையைச் சாய்த்துக் கொள்ளுகிறார்கள். சாதத்திற்கு அளவுண்டு, சாராயத்திற்கு அளவுண்டா? சாராயம் குடிக்கக் குடிக்கக் குடியாசை அதிகரித்துக்கொண்டே வரும். ஆனதால் அதை முற்றிலும் தள்ளுவதே முறை. எத்தனை பணக்காரர்கள், படித்தவர்கள், உத்தியோகஸ்தர்கள், அப்போதைக்கப்போது தோன்றி, குடிக்கடலில் ஆழ்ந்து மாண்டு மறைந்தார்கள். இப்போது எத்தனையோ பேர் தங்கள் நல்ல சம்பாதனையைக்கொண்டு நாலு பேர் பார்த்து மதிக்க நன்றாய் வாழ்ந்து, பிள்ளைகளை நற்பயிற்சியில் வளர்க்காமல் குடியில் இறைக்கிறார்கள். என் இந்தப் புத்தி? போதும் போதும் இனியாவது புத்தி வேண்டாமா? இப்போது நம்முள் ஜனங்க மரியாதை (Communal respect) பெருகி வருகிறது. நாலு பேரால் நன்கு மதிக்கப்படவேண்டுமென்றும் ஆசை தோன்றி வருகிறது. முன்னேறவேண்டுமென்னும் ஊக்கம் வளர்ந்து வருகிறது. இதோ ராஜ பாதை. அப்பாதை வழி நடந்தால் வயிறார சாப்பாடு கிடைக்கும். உடம்பார துணி யிருக்கும். குடும்பத்தில் சந்தோஷமும் சமாதானமும் வியாபிக்கும். பிள்ளைகள் பெற்றோருக்குப் பணிந்து நடப்பார்கள். உத்தமர் சகவாசம் கிடைக்கும். முன்னுக்குப்போக ஆவலுண்டாகும். சுய மரியாதை பிறக்கும். அப்பாதை யாதெனில் வெறி நீர் வெறுப்புத்தான். இப்பாதையில் அனேகர் வழி நடந்து முன் மாதிரி காட்டி யிருக்கிறார்கள். யாவரும், அவ்வழி நடந்தால் குலத்தில் உண்டாகும் சீர்திருத்தம் இவ்வளவு அவ்வளவென்று சொல்லுந்தரமல்ல. ஒவ்வொரு விசாரணையிலுமிருக்கும் பெரியோர்கள், விவேகிகள் பிறருக்கு நன்மை செய்யவேண்டுமென்றும் ஆவலுள்ளவர்கள் இக்குடி பழக்கமுள்ள சகோதரர்களுக்கு அன்பாய் புத்தி சொல்லி அவர்களோடு அடிக்கடி ஜெபிப்பார்களாக.

"ஐயோ! யாருக்கு வேதனை? யாருக்குத் துக்கம்? யாருக்குச் சண்டைகள்? யாருக்குப் புலம்பல்? யாருக்குக் காரணமில்லாத காயங்கள்? யாருக்கு இரத்தங் கலங்கின கண்கள்? மதுபானம் இருக்கும் இடத்திலே தங்கித் தரிப்பவர்களுக்கும், கலப்புள்ள சாராயத்தை நாடுகிறவர்களுக்குந் தானே." மேலும் குடி வெறியானது புத்தியைக் கெடுத்து, ஞாபக சக்தியைப் பழுதாக்கி, உடலைச் சுகவீனப்படுத்தி, அழகைக் குலைத்து, பலத்தைக் குறைத்து, இரத்தத்தை அசுத்தப்படுத்தி ஈரலைப் பெருக்கச் செய்து, மூளையை பலவீனப்படுத்தி மனிதர்களை நடை பிணங்களாக்கும். உள்ளேயும் புறம்பேயும் சுகப்படுத்தக்கூடாத காரியங்களை உண்டாக்கும். புத்தியைத் தன் வசப்படுத்திக்கொள்ளும். குடியானது ஆத்துமத்தைப் பறிக்கும் பசாசு. பணப்பையை அபகரிக்கும் திருடன். தரித்திரத்தின் கூட்டாளி. மனைவியின் பிரலாபம். மக்களின் வியாகுலம். குடியானது மனிதர்களை மிருகங்களாக்கும். குடியன் பிறருடைய சந்தோஷத்திற்காகக் குடித்து, இவ்வுலகத்திலும் மறுவுலகத்திலும் தன்னைப் பெரு நஷ்டத்திற்குட்படுத்திக் கொள்ளுகிறான்.

சகோதரரே, இவ்வித பிசாசு ஜெபத்தினாலும் உபவாசத்தினாலும் தலை தெறிக்க ஓட்டம் பிடிக்கும். இது சத்தியம்."

அருணோதயம்.

(THE LAW OF GOD AND THE LAW OF MOSES.)

இரண்டு நியாயப்பிரமாணங்கள்.

1. பழைய ஏற்பாட்டில் வெகு தெளிவாய் நியாயப்பிரமாணம் இரண்டு வகையாய்ப் பிரிக்கப்பட்டு அழைக்கப்படுகின்றன. ஒன்று தேவனுடைய நியாயப்பிரமாணமென்றும் மற்றொன்று மோசேயின் நியாயப்பிரமாணமென்றும் சொல்லப்பட்டிருக்கிறது. தானி 9: 10, 11.

2. பத்துக் கற்பனைகளாகிய நியாயப்பிரமாணம் தேவனாலே மனுஷருக்கு நேரே கொடுக்கப்பட்டது. ஆனால் மற்றொன்று மோசேயின் மூலமாய் கொடுக்கப்பட்டது. 2 ராஜா. 21: 8. நெகே. 9: 13, 14.

இரண்டு நியாயப்பிரமாணங்களுக்குமுள்ள வித்தியாசம் பின்வருமாறு:—

தேவனுடைய நியாயப்பிரமாணம் அல்லது பத்துக் கற்பனை.	மோசேயின் நியாயப்பிரமாணம் அல்லது சடங்காசாரப் பிரமாணம்,
1. பத்துக் கற்பனை தேவனுடைய பிரமாணமென்று அழைக்கப்படுகிறது. யாத் 24: 12. உபா. 33: 2.	1. சடங்காசாரப் பிரமாணம் மோசேயின் பிரமாணமென்றழைக்கப்படுகிறது. தானி. 9: 10. அப். 15: 5. யோசுவா 23: 6.
2. இது ஆதி முதல் சிருஷ்டிப்பிலேயே சம்பந்தப்பட்டதாயிருக்கிறது. யாத். 20: 3-17; 16: 4.	2. இடையிலே உண்டானது. பாவத்துக்குப்பின் நிழலும் முன்னடையாளமுமாயிருந்தது. எபி. 10:1. லேவி. 1-4, 16 அதி.
3. தேவன் தாமே அதைச் சொல்லி பலகைகளில் எழுதிக்கொடுத்தார். உபா. 4: 13; 10: 1-5.	3. மோசேயின் மூலமாய்க் கொடுக்கப்பட்டு ஒரு புஸ்தகத்தில் எழுதப்பட்டது. உபா. 31: 24; 1: 5.
4. இது உடன்படிக்கைப் பெட்டியினுள்ளே வைக்கப்பட்டது. உபா. 10: 4; 5: 1. 1 ராஜா. 8: 9.	4. இது உடன்படிக்கைப் பெட்டியின் பக்கத்தில் வைக்கப்பட்டது. உபா. 31: 24–26.
5. இதில் நாம் தேவனுக்கும் மனிதருக்கும் செய்யவேண்டிய சன்மார்க்கப் பிரமாணங்களடங்கி யிருக்கிறது. யாத். 20: 3–17. பிர. 12: 13.	5. இது பாவ நிவாரண வழியைக் காட்டி பாவி தேவனிடத்தில் ஒப்புரவாக வேண்டிய வழியைக் காட்டுகிறது. லேவி. 1-4, 16 அதி. எபி. 8-10 அதி.
6. இதில் காணிக்கைகளைப்பற்றியாவது முன்னடையாளமான ஒழுங்கைப்பற்றியாவது ஒன்றும் கிடையாது. உபா. 4: 12, 13, 5: 22.	6. கிறிஸ்துவுக்கு முன்னடையாளமானதும் நிழலாட்டமானதுமான சடங்காசாரப் பிரமாண மடங்கி யிருக்கிறது. எபி. 10: 1-9, 9: 10, 11.
7. உடன்படிக்கைப் பெட்டிக்குள்ளிருக்கப்பட்ட இந்த நியாயப்பிரமாணத்தை மீறுகிற விஷயத்தில் இந்தப் பெட்டியின் மேலிருக்கிற கிருபாசனத்தில் பாவ நிவாரணம் செலுத்தப்படவேண்டும். உபா. 10: 4. லேவி. 16: 2, 14-17. அதி.	7. இந்தப் பாவ நிவாரணம் எவ்விதமாக செலுத்தப்பட்டு பாவி மன்னிப்படையும் வகையையும் தேவனோடு ஒப்புரவாகும் வழியையும் தெளிவாகக் காட்டினது. லேவி. 16: 2-22. எபி. 9: 7.
8. ஏழாம் நாளைப் பரிசுத்த ஓய்வு நாளாக ஆசரிக்கவேண்டுமென்று சொல்லியிருக்கிறது. யாத். 20: 8-11. லூக். 23: 56.	8. இதில் யூதருடைய வருஷாந்தர பண்டிகைகளையும் ஓய்வுநாட்களையும்பற்றி சொல்லியிருக்கிறது. யாத். 23: 14-17. லேவி. 23: 4-19. கொலோ. 2: 14-17.
9. இது எப்போதும் மாறாமலிருக்கும். கிறிஸ்துவின் மரணத்தினால் நீக்கப்படவில்லை. சங். 111: 7, 8. மத். 5: 17, 18.	9. இது காணிக்கைகளையும் வருஷாந்தர பண்டிகைகளையும் பூமிக்கடுத்த பரிசுத்த ஸ்தலத்தின் ஆராதனையையும் பற்றியதால் கிறிஸ்துவின் மரணத்தினால் நீக்கப்பட்டது. எபே. 2: 14, 15. எபி. 8: 1-5.
10. கிறிஸ்தவர்கள் யாவரும் இந்தப் பிரமாணத்தைக் கைக்கொள்ளவேண்டும். மத். 5: 17-19.	10. கிறிஸ்துவுக்குப் பின் இந்தப் பிரமாணங்களை ஒருவரும் கைக்கொள்ள அவசியமில்லை. அப். 15: 5, 24. கொலோ. 2: 14-17.
11. யாவரும் இந்தப் பிரமாணத்தினால் நியாயந் தீர்க்கப்படுவார்கள். யாக். 2: 8-12. ரோமர் 2: 12, 14, 23.	11. இந்த நியாயப்பிரமாணம் ஒருவரையும் நியாயந் தீர்க்காது. ஏனெனில் இவைகள் நீக்கப்பட்டுப் போயிற்று. கொலோ. 2: 14-17.

தே. ஆரோன்.

நிகழ்கால சத்தியம்

வேத சன்மார்க்க சுகாதார விஷயங்களில் தற்கால அறிவுக்கொத்தபடி மனிதர் அபிவிருத்தியடைவதற்கென்று பிரசுரமாகும் ஓர் பத்திரிகை.

மதராஸ் ஜனுவரிமீ, 1921.

இப்பத்திரிகை, பெங்களூரிலிருக்கும், எஸ். டி. ஏ. பப்ளிஷிங்கவுஸ்காக, பட்டணத்தில் வெப்பேரி என்னுமிடத்திலுள்ள அல்பீனியன் அச்சாபீசில் அச்சடிக்கப்பட்டு வருகிறது.

பத்திராதிபர் பாஸ்றர், ஜி. ஜி. லோவ்ரி.
உதவி ,, ,, ஈ. டி. தாமஸ்.
மானேஜர், எல். சி. ஷெப்பர்டு, பி. ஏ.

	ரூ.	அ.	ப.
தனிப்பிரதி ஒன்றுக்கு ...	0	1	6
வருஷ சந்தா, தபாற் கூலி உள்பட ...	1	0	0
சிங்கப்பூர் பினாங்கு முதலிய வெளி ஊர்களுக்கு தனிப் பிரதி ஒன்றுக்கு ...	0	2	0
வருஷசந்தா தபாற்கூலி உள்பட ...	1	4	0

சமாசாரக் குறிப்புகள்.

(NEWS AND NOTES)

"ஒரு விநோதமான வழக்கம்.

ஜெர்மனியில் கிராமாந்தரங்களிலிருந்து பட்டணங்களுக்கு பைப் குழாய்கள் மூலமாய் பால் அனுப்பிக்கப்படுகின்றது என்றும் ரயில்வே அல்லது வண்டிகள் மூலமாய் கொண்டு வருவதைவிட பைப் விஷயமாய் அனுப்புவதினால் அதிக செலவு குறைவாக முடிகிறதென்றும் சொல்லப்படுகிறது.

ஒரு தீவிபத்து.

சிட்டார்பூரிலுள்ள அஷ்ரப் சணல் தொழிற்சாலையில் நவம்பர் 16-ம் தேதி காலை தீப்பற்றி 30000 ரூபாய் பெறுமானமுள்ள சேதம் மேற்பட்டிருக்கிறது. பாரி கம்பனியைச்சேர்ந்த 500 எஞ்சினீரிங் வேலைக்காரர்கள் வேலை நிறுத்தம் செய்துவிட்டார்கள்.

ஒரு விதவையின் தற்கொலை.

லீலாபாவின் தாஸி என்ற 22 வயதுள்ள ஒரு வங்காளி விதவை ஏதோ மனக்கவலை காரணமாக, ஓடும் ரயில் வண்டியின் கீழ் திடீரென்று விழுந்து, வண்டிச் சக்கரங்களினால் துண்டாடப்பட்டுப் போனதாக 'வங்காளி'ப் பத்திரிகை அறிவிக்கின்றது.

ஒரு தர்ம ஸ்தாபனம்.

அலகாபாத் பாதிரிக்கூட்டத்தார் மிர்ஸாப்பூரிலுள்ள பூனா தாஸில் ஒரு பொது தர்ம ஸ்தாபனத்தை யேற்படுத்தி அதில், அநாதைப் பிள்ளைகளுக்குக் கல்வி கற்பித்தல், தொழிற்சாலை, விவசாயப் பண்ணை, வைத்திய ஸ்தலம், விதவா ஆச்ரமம் முதலியவைகளை யேற்படுத்தப் போகிறார்களாம். இதில் எல்லா ஜாதியாரும் சேரலாம்.

கலெக்டர் வில்லபியின் கொலை.

கலெக்டர் வில்லபியைக் கொலை செய்ததாகக் குற்றஞ் சாட்டப்பட்டு மரண தண்டனை விதிக்கப்பட்ட நாஸருத்தீன், பாலா ஆமத் மாஷூக் அலி ஆகிய மூவரும் ஐக்கிய மாகாணக் கவர்னருக்கு மனு செய்து கொண்டனர். ஆனால் ஸர் ஹார்க் கோர்ட் பட்லர் இது விஷயத்தில் தாம் தலையிட முடியாதென்று சொல்லிவிட்டார்."

சுதேச மித்திரன்.

"முரட்டுச் செயல்.

கோகட் கன்டோன்மெண்டிலுள்ள கர்னல் போக்ஸ் என்றவர் வீட்டில் கொள்ளைக்காரர்கள் புகுந்து அவரைச் சுட்டுக் கொன்றதோடு அவரது மனைவியையும், வீட்டினின்றும் வெளியே யிழுத்தெறிந்தார்களெனச் சொல்லப்படுகின்றது. இவர் தென்னிந்தியாவில் சிவில் உத்தியோகத்தில் பல நாட்களாக விருந்தார். விசாகப்பட்டணம் பைத்தியக்கார ஆஸ்பத்திரியிலும் மெடிகல் ஸ்கூலிலும் சூபரின்டெண்டண்டாக விருந்தனர்.

OFFICE OF ... 11 FEB 1921 MADRAS

நிகழ்கால சத்தியம்.

Vol. X. மதராஸ்:—பெப்ரவரிமீ, 1921. No. 2.

ஏறக்குறைய நாலாயிரம் வருஷங்களுக்கு முன் நடந்த ஓர் இனிய கதை.

(தொடர்ச்சி.)

(AN INTERESTING STORY OF SOMETHING THAT HAPPENED NEARLY FOUR THOUSAND YEARS AGO.)

தேவ பக்தியுள்ள சில ஜனங்கள் அடிமைத்தனத்திலிருந்து தங்களை விடுவித்துக் கொள்ளும்படியாக எகிப்து தேசத்தை விட்டுவிட்டு, மத்திய தரைக் கடலோரத்திலிருக்கிற கானான் தேசத்திற்குப் பிரயாணமாய் போனார்களென்பதைப்பற்றிக் கடந்த மாதத்தில் பார்த்தோம். அவர்களை வழி நடத்தின மோசேக்குத் தேவன் தரிசனமாகித் தம்மைத் தொழுது கொள்ளும்படியாக ஒரு கூடாரத்தைக் கட்டவேண்டுமென்று கற்பித்தார். அவர்கள் தங்கள் பூஜை பலிகளை நடத்தினதின் நோக்கமென்னவென்றும் அதை எவ்விதமாக நடத்தினார்களென்றும் இப்பொழுது பார்க்கலாம்.

இந்தியாவில் அநேக பாஷைகள் பேசப்பட்டு வருகிறது. நாம் அவற்றை முதலில் கேட்கும்போது ஒன்றையும் அறிந்துகொள்ளமுடியாது அந்தப் பாஷைகள் ஒவ்வொன்றிற்கும் யாதொரு சம்பந்தமிருப்பதாகத் தெரிகிறதில்லை. ஆனால் நாம் அவைகளைப் படிக்கும்போது அவைகளுக்குள்ள சம்பந்தத்தை அறிந்துகொள்ளுகிறோம். அவைகள் ஒரே பாஷையிலிருந்து உண்டானவைகளாயிருக்கவேண்டும். அதுபோலத் தற்காலத்தில் உலகத்தில் அநேக மார்க்கங்களிருக்கின்றன. முதலில் அம்மதங்களில் ஒன்றுக்கொன்று சம்பந்தம் இல்லாததுபோலக் காணப்படும். நாம் கவனித்துப் பார்ப்போமானால் எல்லா மார்க்கங்களிலும் பின்வரும் அநேக காரியங்களைக் காணலாம். முதலாவதாக, எல்லா மார்க்கங்களும் ஒரே எண்ணமும், ஒரே நோக்கமுமுடையதாயிருக்கின்றன. மனிதர் பாவத்தினின்று விடுதலையாகி பாவமில்லாத தேவனைப்போலாகவேண்டுமென்பதே அந்த ஒன்றான நோக்கம். இரண்டாவதாக, இந்த மார்க்கங்களெல்லாம் ஒரே இடத்திலிருந்து உற்பத்தியாயிருக்கவேண்டும். மூன்றாவதாக, ஏறக்குறைய உலகத்திலிருக்கிற எல்லா மார்க்கங்களும் உண்மையான வழியை விட்டு விலகி, மெய்த்தேவனையும், அவரை வணங்குவதின் மெய்யான நோக்கத்தையும் மறந்துவிட்டு, மார்க்கத்தின்பேரில் உற்சாகமான ஆவியில்லாதவர்களாய் வெறும் சடங்காசாரங்களை மாத்திரம் கைக்கொண்டு வருகிறார்கள்.

கூடாரத்தை எப்படிக் கட்டவேண்டுமென்றும் அதில் தினந்தோறும் என்ன வழியங்கள் செய்யப்படவேண்டுமென்றும் தேவன் மோசேக்குச் சொல்லியிருந்தார். அப்பொழுது இருந்த ஜனங்கள் நம்மைப்போல் சாத்தானால் சோதிக்கப்படக்கூடியவர்களாயும் பாவத்தில் விழுகிறவர்களாயுமிருந்தார்கள். ஜனங்கள் பாவத்தைச் செய்த பிறகு அதன்

தண்டனையிலிருந்து எப்படித் தப்பித்துக்கொள்ளவேண்டுமென்று சொல்ல விரும்பினார். இவர்களுடைய அனுபோகத்திலிருந்து நாம் நல்ல பாடங்களைக் கற்றுக்கொள்ளக்கூடியதாயிருக்கிறதினால் அவர்கள் தங்கள் ஊழியங்களை எப்படி நடப்பித்தார்களென்று பார்ப்போம்.

ஆசரிப்புக் கூடாரம் எப்படிக் கட்டப்பட்டதென்றும் அதற்கு இரண்டு அறைகள் இருந்ததென்றும் முன்னே பார்த்தோம். ஒன்று பரிசுத்த ஸ்தலம், மற்றொன்று மகா பரிசுத்த ஸ்தலம். இந்த ஆசரிப்புச் கூடாரத்தைச் சுற்றிலும் ஜனங்கள் நின்று தொழுதுகொள்ளும்படியாகப் பிரகாரம் ஒன்று இருந்தது.

அவர்கள் எப்படித் தொழுதுகொண்டார்களென்பதை விஸ்தரித்துக் காட்டும்படியாக ஒரு மனிதன் தேவனுக்கு விரோதமாகப் பாவம் செய்தானென்று வைத்துக்கொள்வோம். தேவனுடைய வேதத்தில் "பாவத்தின் சம்பளம் மரணம்" என்று சொல்லப்பட்டிருக்கிறது. அதாவது, ஒரு மனிதன் ஒரு பாவம் செய்தால் அவன் கொல்லப்படவேண்டும். இந்த உலகத்தை உண்டாக்கும்பொழுதே தேவன் மனிதனை நோக்கி: நீ பாவம் செய்தால் சாவாயென்றும், கீழ்படிந்தால் பிழைப்பாயென்றும் சொன்னார். ஆனால் இங்கே ஒரு பாவி இருக்கிறானென்று வைத்துக்கொள்வோம். அப்படியானால் அவனை என்ன செய்யவேண்டும்? தான் செய்த பாவத்தின் தண்டனையிலிருந்து தப்பித்துக்கொள்ள ஏதாவது வழி உண்டா? அல்லது தேவன் சொன்னபடி அவன் மரண தண்டனையடையவேண்டியதா? ஆம், தண்டனையினின்று தப்பித்துக்கொள்வதற்கு ஓர் வழி உண்டு. நாம் பாவத்தின் தண்டனையிலிருந்து எப்படித் தப்பித்துக்கொள்ளக்கூடுமென்பதைத் தேவன் மோசேக்குப் பின்வருமாறு விஸ்தரித்துக் காட்டியிருக்கிறார்.

ஒரு மனிதன் பாவம் செய்தவுடனே, தான் தேவனுக்கு விரோதமாய்ப் பாவம் செய்தேனென்று மனஸ்தாபப்பட்டு, உடனே தன் மந்தைக்குப் போய் ஒரு நல்ல இளவெள்ளாட்டைப் பிடித்து அதை ஆசரிப்புக் கூடாரத்திற்குக் கொண்டுவரவேண்டும். அவன் கூடாரத்திற்குப் போகும்போது அங்கே ஆசாரியர்கள் யாவரும் பூஜை பண்ணத் தயாராயிருக்கிறார்கள். அவன் அந்த ஆட்டுக்குட்டியைப் பிரகாரத்திற்குள்ளே கொண்டுபோய்த் தான் பாவம் செய்ததாகவும் அதற்காகப் பிராயச்சித்தம் பண்ணும்படி பலி செலுத்த வந்திருப்பதாகவும் ஆசாரியனுக்கு அறிவிக்கவேண்டும். ஆசாரியன் இதைக் கேள்விப்பட்டவுடனே ஒரு கூரிய கத்தியைக் கொண்டுவந்து அவன் கையில் கொடுப்பான். பின்பு, அந்தப் பாவி, ஆட்டுக்குட்டியின் தலையின்மேல் தன் கைகளை வைத்து தேவனுக்கு முன்பாகவும் ஆசாரியனுக்கு முன்பாகவும், தன் பாவங்களை அறிக்கையிடவேண்டும். தான் பாவியென்று அறிந்திருக்கிறேனென்றும், தன் பாவத்திற்குத் தான் மரிப்பது தகுதியென்றும், ஆனால் தான் மரிப்பதற்குப்பதிலாக இந்த ஆட்டுக்குட்டியைப் பலி செலுத்துகிறேனென்றும் தேவனுக்கு முன்பாக அறிக்கையிடுகிறான். இப்படி அறிக்கை செய்த பிறகு, கத்தியை எடுத்து ஆட்டின் கழுத்தை அறுக்கிறான். இரத்தத்தை ஓர் பாத்திரத்தில் பிடித்துக் கொஞ்சத்தை ஆசாரியன் பலிபீடத்தின்மேல் தெளிக்கிறான். ஆட்டின் மாமிசத்தில் கொஞ்சத்தைப் பலி செலுத்திக் கொஞ்சத்தை ஆசாரியர்கள் தின்னுகிறார்கள். மனிதன் தன் பாவத்திற்காக மரிப்பதற்குப் பதிலாக பாவமறியாத அந்த ஆடு பலி செலுத்தப்பட்டது. இப்படியாக மனிதன் தன் பாவத்திலிருந்து விடுதலையாகிறான். வருஷத்தின் ஒவ்வொரு நாளிலும் ஜனங்கள் நூற்றுக் கணக்காகவும் ஆயிரக் கணக்காகவும் ஆலயத்திற்கு வந்து இவ்விதமாகப் பலி செலுத்துவார்கள்.

அநேக ஆசாரியர்கள் ஆலயத்தில் தேவனுக்கு முன்பாக ஜனங்களுடைய பலிகளைச் செலுத்தினார்கள். இரத்தம் ஆசரிப்புக் கூடாரத்திலிருந்து வெள்ளம்போல ஓடிக்கொண்டிருந்தது. அதை தேவன் பார்த்தபோது அந்த இரத்தத்தைச் சிந்தினவர்கள் தங்கள் பாவங்களுக்காக மனஸ்தாபப் படுகிறார்களென்று அறிந்துகொண்டார்.

ஆடுகள் கடாக்களின் இரத்தம் மனிதனுடைய பாவத்தைச் சுத்திகரிக்கக்கூடுமா என்று ஒருவர் கேட்கலாம். ஒரு மனிதனுடைய பாவத்திற்காக அவன் தன் ஜீவனை இழக்கவேண்டியதாயிருக்கும்போது ஒரு ஆட்டுக் கடாவின் ஜீவன், அவனுடைய ஜீவனை இரட்சிக்கக் கூடுமா? மனிதன், தன் பாவத்திற்காகப் பிராயச்சித்தம் செய்ய ஆட்டுக் கடாவின் இரத்தத்தைப்பார்க்கிலும் மேலான ஒன்று தேவையாயிருக்கிறது. ஜனங்கள் நாள்தோறும் செலுத்திவந்த இந்தப் பலிகள், கிறிஸ்து இவ்வுலகத்திற்கு வந்து உலகத்தின் பாவங்களுக்காக தமது ஜீவனைக் கொடுப்பதற்கு முன்னடையாளமாயிருந்தது. மனிதனுடைய பாவத்திற்காகப் பாவமில்லாத ஆட்டை எப்படித் தெரிந்துகொண்டார்களோ அதுபோலப் பாவமறியாத கிறிஸ்து தம்மில் விசுவாசிக்கிற யாவரையும் நித்திய மரணத்திலிருந்து விடுவிக்கும்படியாக இவ்வுலகத்திற்கு வந்து மரணத்தை உத்தரித்தார். ஆகையினாலே ஆட்டுக் கடாவின் இரத்தம் மனிதனை இரட்சிக்காமல் அதற்கு அடையாளமாயிருந்தவருடைய இரத்தம் அவனை இரட்சிக்கிறது. நாம் பாவத்திலிருந்து விடுதலையாகி அவரைப் போலிருக்கும்படியாக தேவன் ஓர் மகத்தான ஏற்பாட்டை உண்டு பண்ணியிருக்கிறார்.

நான் அநேக இந்துக்களுடைய க்ஷேத்திரங்களுக்குப் போயிருக்கிறேனென்று முன் சொல்லியிருக்கிறேன். அந்த ஆலயங்களெல்லாம் ஏறக்குறைய மோசே கட்டின ஆலயத்தின் மாதிரியாகவே கட்டப்பட்டிருப்பதை நான் கண்டிருக்கிறேன். 4,000 வருஷங்களுக்கு முன் ஜனங்கள் எப்படிப் பலி செலுத்தினார்களோ அதுபோலவே இப்பொழுதும் ஜனங்கள் இந்தக் கோவில்களிலிருக்கிற தேவர்களுக்குப் பலியிடுகிறார்கள். கொஞ்ச நாட்களுக்கு முன் நான் கல்குத்தாவிலிருக்கும் காளி தேவதையின் பெரிய கோவிலுக்குப் போயிருந்தேன். அங்கே அநேக ஆடுகள் அடிக்கப்பட்டதைப் பார்த்தேன். இதைப் பார்த்தபொழுது மோசேக்கும் இதே மாதிரி செய்யும்படியாகக் கட்டளை கொடுக்கப்பட்டதென்பதை நினைத்தேன். ஆடுகளைப் பலியிடுவது தேவனிடத்திலிருந்து பிறந்த கட்டளையென்று நான் நிட்சயமாய் நம்புகிறேன். கல்குத்தாவிலிருக்கிற ஜனங்கள் அதை மெய்யான தேவனுக்குப் பலியிடாமல் காளியென்றும் தேவதைக்குப் பலியிட்டார்கள். அப்படிப் பலியிடுவதின் காரணம் அவர்களுக்குத் தெரியாது. பலியின் மெய்யான அர்த்தத்தை அவர்கள் உணரவில்லை. மிருகத்தைப் பலியிடுவது கிறிஸ்துவின் மரணத்திற்கு முன்னடையாளமாயிருக்கிறதென்பதையும், அந்த ஆட்டுக்கடாவால் முன் குறிக்கப்படுகிற கிறிஸ்துவையும் அவர்கள் அறியவில்லை. சில நாட்களுக்கு முன், நான் திருச்சினாப்பள்ளியில் மலைக்கோட்டையின்மேல் கட்டப்பட்டிருக்கிற அந்த கோவிலுக்குப் போனேன். அங்கே ஒரு ஸ்திரீ கை நிறைய தேங்காய்களைக் கொண்டுவந்து "ஐயோ, நான் ஒரு மாபாவி!" என்று சொல்லிக்கொண்டே அவைகளை கணபதிக் கடவுள்முன் ஒவ்வொன்றாய் உடைத்தாள். முற்காலத்தில் இப்படிச் செய்வது தேவ குமாரனாகிய இயேசுவின் சரீரம் பாடுகளை அனுபவித்து இரத்தம் சிந்தினதை முன்குறித்திருக்கும். முன்னே கிறிஸ்துவின் வருகையையும், அவர் மனித ஜாதிகளின் பாவங்களுக்காக மரிப்பதையும் முன்குறித்த காரியங்கள் யாவும் இப்பொழுது தாழ்த்தப்பட்டு தேவனுக்குப் பலியிடுவதற்குப் பதிலாகக் கணபதிக்குப் பலியிடப்படுகிறது. இந்த முன்னடையாளங்களுக்கெல்லாம் முக்கிய பொருளாயிருந்த நமது இரக்ஷகர் முன்னமே இவ்வுலகத்திற்கு வந்து நமக்காகத் தம்மையே பலியாக ஒப்புக்கொடுத்தார். ஆனால் இந்துக்கள் யூதர்களைப்போல இதை நம்பாமலிருக்கிறார்கள். அவர்கள் அறியாமையினால் இப்படிச் செய்கிறார்கள். இந்துக்கள் தங்கள் அறியாமையை விட்டுத் திரும்பித் தாங்கள் பலவித உருவங்களால் குறிப்பிடுகிற தெய்வம், கிறிஸ்தவர்கள் தொழுதுகொள்ளுகிற தேவன்தானென்று அறிந்துகொள்ளும்படியான ஒரு காலம் வருமென்று ஒவ்வொரு மெய்க் கிறிஸ்தவர்களும் எதிர்பார்க்கவேண்டும்.

ஏறக்குறைய 4,000 வருஷங்களுக்கு முன் மோசே எவ்வண்ணமாக ஆசரிப்புக் கூடாரத்தில் ஊழியத்தை நடப்பித்தாரென்று அடுத்தப் பத்திரிகையில் விபரிப்போம்.

(இன்னும் வரும்.)

G. G. L.

ஓர் மகா மோசம்.

(A GREAT DECEPTION.)

உலகத்தில் தற்காலத்தில் கள்ளப் போதகங்களும் மாறுபாடான உபதேசங்களும் குருட்டு விசுவாசங்களும் பல உள. ஆனால் மரித்தவர்களின் ஆவியுடனே பேசலாம் என்னும் எண்ணத்தைப்போன்ற பயங்கரமான கொள்கை வேறொன்றுமில்லை. இந்தக் கட்சிக்காரர் ஒரு மனிதன் மரித்தபின் அவன் ஆத்துமா உலகத்திற்குத் திரும்பி வந்து தன் பந்து மித்திரரோடு சம்பாஷிக்கக் கூடுமென்று விசுவாசிக்கிறார்கள்.

இது ஓர் நூதனமான கொள்கையல்ல. ஏனெனில் அநேக வருஷங்களாக ஜனங்கள் இதை நம்பி விசுவாசித்து வருகிறார்கள். இப்பொழுது இந்தக் கட்சிக்காரர் அதிகமாக விர்த்தியடைந்து வருகிறார்கள். இலட்சக்கணக்கான பேர் இந்த மோசத்துக்குள்ளாகிறார்கள். இந்தக் கொள்கையைப்பற்றி ஆங்கிலேய பத்திராதிபர் ஒருவர் பின்வருமாறு எழுதுகிறார். "சண்டை ஆரம்பித்தது முதல் இந்தக் கட்சிக்காரரின் தொகை இங்கிலாந்தில் ஆச்சரியமான விதமாக அதிகரித்திருக்கிறது. இவர்கள் இங்கே சர்வ சாமானியமாகிவிட்டதால் இவர்களை "புது மார்க்கத்தார்" என்று அழைக்கிறார்கள். இங்கிலாந்தில் எங்கே பார்த்தாலும் ஜனங்கள் இதைப்பற்றியே பேசிக்கொண்டிருக்கிறார்கள். பொதுக்கூட்டங்களிலும் சங்கங்களிலும் இதைப்பற்றித்தான் பேச்சாயிருக்கிறது." இந்த ஆவிகளோடு சம்பாஷிப்பதில் மத்தியஸ்தராயிருப்பவர்கள் அநேக இடங்களில் கூட்டங் கூடி கல்லறையில் மரித்துக் கிடக்கிறவர்களின் ஆவியை எழுப்பி வந்து ஜனங்களோடு சம்பாஷிக்கச் செய்வதாகச் சொல்லுகிறார்கள்.

இன்னொரு பத்திராதிபர் பின்வருமாறு உரைக்கிறார்:—"யுத்தத்தில் அனேகர் உயிர்ச்சேதமடைந்தபடியால் மரித்தவர்களோடு பேசும் இந்தக் கட்சிக்காருடைய வேலை உற்சாகமாக நடக்கிறது. யுத்தம் நடந்த கடந்த ஐந்து வருஷங்களில் ஒருவனாவது சாகாத வீடு இங்கிலாந்தில் கிடையாது. ஆகையினாலே மரித்த தங்களுடைய இனஜனத்தாரோடு சம்பாஷிக்கும்படியாக ஆவியோடு பேசும் மத்தியஸ்தர்களை ஜனங்கள் தேடுவது இயற்கைதான். ஆகவே, ஆவியோடு சம்பாஷிக்கத் திறமையுடைய மத்தியஸ்தர்கள் தேவையென்று எல்லாப்பத்திரிகைகளிலும் விளம்பரம் செய்யப்பட்டிருக்கிறது." மரித்தோரின் ஆவிகளுக்கு உலகத்தில் நடக்கும் காரியங்களெல்லாம் தெரியுமென்றும் அவர்கள் உயிரோடிருக்கிறவர்களோடு உறவு கொண்டாட விரும்புகிறார்களென்றும் இங்கிலாந்து ஜனங்கள் யாவரும் பொதுவாய் நம்புகிறார்கள். அந்த ஆவிகள் உயிரோடிருக்கிறவர்களோடு உறவு கொண்டாடப் பிரியப்பட்டாலும் உலகத்திலுள்ள தங்கள் இன ஜன பந்துக்களோடு எப்பொழுதும் கூடியிருக்க முடியாதவைகளாயிருக்கின்றன.

நாம் ஒரு கேள்வி கேட்போம். கல்லறைகளிலிருந்து வந்து மனிதர்களோடு சம்பாஷிப்பதாக நம்பப்படுகிற இந்த ஆவிகள் மெய்யான நமது பந்து மித்திரரின் ஆவிகளா? அல்லது அவைகள் தங்களை விசுவாசிக்கிறவர்களை மோசம் செய்யும் பிசாசின் ஆவிகளாயிருக்கக்கூடுமோ?

இயேசுக்கிறிஸ்துவின் அப்போஸ்தலனும் இந்த ஆவிகளோடு அனுபோகப்பட்டவருமாகிய அப்போஸ்தலனாகிய யோவான் பரிசுத்த ஆவியினால் ஏவப்பட்டு பின்வருமாறு எழுதுகிறார்: "பிரியமானவர்களே, உலகத்தில் அநேகம் கள்ளத் தீர்க்கதரிசிகள் தோன்றியிருப்பதினால், நீங்கள் எல்லா ஆவிகளையும் நம்பாமல், அந்த ஆவிகள் தேவனால் உண்டானவைகளோ என்று சோதித்தறியுங்கள். தேவ ஆவியை நீங்கள் எதினாலே அறியலாமென்றால்: மாம்சத்தில் வந்த இயேசுக்கிறிஸ்துவை அறிக்கை பண்ணுகிற எந்த ஆவியும் தேவனால் உண்டாயிருக்கிறது, மாம்சத்தில் வந்த இயேசுக்கிறிஸ்துவை அறிக்கை பண்ணாத

எந்த ஆவியும் தேவனால் உண்டானதல்ல; வருமென்று நீங்கள் கேள்விப்பட்ட அந்திக்கிறிஸ்துவினுடைய ஆவி அதுவே, அது இப்பொழுதும் உலகத்தில் இருக்கிறது."

அசுத்த ஆவிகளும் கள்ளத் தீர்க்கதரிசிகளும் உலகத்தில் தோன்றியிருக்கிறதினால் எல்லா ஆவிகளையும் நம்பக்கூடாதென்று இங்கே நாம் திட்டமாக எச்சரிக்கப்படுகிறோம். 'அந்த ஆவிகள் தேவனுடையவைகளோ அல்லவோ என்பதை சோதித்தறியும்படியாக ஓர்முறை இங்கே சொல்லப்பட்டிருக்கிறது. கிறிஸ்து மாம்சத்தில் வந்தாரென்று தேவ ஆவி அறிக்கை பண்ணுகிறது. மாம்சத்தில் வந்த இயேசுக்கிறிஸ்துவை அறிக்கை பண்ணாத எந்த ஆவியும் தேவனால் உண்டானதல்ல. இதனால் தேவனால் உண்டான ஆவி இயேசுக்கிறிஸ்துவையும் கிறிஸ்து மார்க்கத்தின் மகா முக்கிய போதகங்களையும் அறிந்து பரிசுத்த ஆவியால் அருளப்பட்ட புஸ்தகமாகிய வேதாகமத்தின் உபதேசங்களுக்கு உகந்தமாதிரியாகவே அறிக்கை பண்ணுமென்று நாம் அறிந்துகொள்ளுகிறோம்.

இங்கிலாந்தில் தற்சமயத்தில் பெரிய எழுப்புதல்களை உண்டுபண்ணிக்கொண்டிருக்கிற இந்த ஆவிகளைக் குறித்து ஓர் பத்திராதிபர் சொல்லுகிறதாவது: "தேவன் ஒருவர் உண்டென்றும், அவர் சர்வத்தையும் ஆளுகிறாரென்றும், இயேசுகிறிஸ்துவின் புண்ணியங்களினால் நாம் பாவங்களற இரட்சிக்கபபடுகிறோமென்றும் பரிசுத்த ஆவியினால் நமக்கு சந்தோஷமும் சமாதானமும் உண்டென்றும், உலகத்தாரின் நன்மைக்கென்று ஊழியம் செய்யவேண்டுமென்றும், எல்லா மனித ஜாதியின்மேலும் அன்பும் பற்றுதலுமாயிருக்க வேண்டுமென்றும் விசுவாசிப்பதே மெய்க்கிறிஸ்தவ மார்க்கமாயிருக்கிறது. மெய் மார்க்கத்தின் முக்கிய போதகம் இதுவே, இந்த ஆவிகள் இந்த முக்கிய போதகங்களில் ஒன்றையும் எடுத்துரைக்கக் காணோம். அவைகளுக்கு இவைகளைப்பற்றி யாதொன்றும் தெரிகிறதில்லை. இவைகளைப்பற்றி அந்த ஆவிகளுக்குக் கவலையில்லை." ஆகையினால் இந்த ஆவிகள் தேவனால் உண்டானவைகளல்லவென்று தெளிவாய் விளங்குகிறது.

அவைகள் தேவனால் உண்டான ஆவிகளாயிராவிட்டால் அநேகர் நினைக்கிறபடி அவைகள் மரித்துப்போன மனிதரின் ஆவிகளாயிருக்கக்கூடுமோ? அவைகள் மரித்தோரின் ஆவிகளல்ல. ஒரு மனிதன் மரித்தபின் அவனுக்கு ஒன்றும் தெரியாதென்று வேதத்தில் சொல்லப்பட்டிருக்கிறது. அவனுடைய சந்தோஷமும், துக்கமும், அறிவும் எல்லாம் அழிந்துபோகிறது. ஆவி உடலைவிட்டுப் பிரிந்துபோன அதே நிமிஷத்தில் யோசிக்கும் சக்தி நின்றுவிடுகிறது. அந்த சரீரம், ஜீவனற்றுச் சுவாசமற்றுக் கிடக்கும் வரைக்கும் அவனுக்கு யோசிக்கும் சக்தி கொஞ்சமென்கிலும் கிடையாது. அவனுக்கு யாதொன்றும் தெரியாது. அவனுக்குப் பார்க்கவும் முடியாது, கேட்கவும் முடியாது. ஏனெனில் அவன் மரித்துக் கிடக்கிறான். கிறிஸ்துவின் இரண்டாம் வருகை வரைக்கும் அவன் இதே நிலைமையில் விடப்பட்டிருக்கிறான். அதன் பின்பு அவன் உயிரோடெழுந்திருக்கிறான். உயிர்த்தெழுதல் நடக்கும்போது அவனுடைய சுவாசம் அவனுக்குத் திரும்பவும் வருகிறது. உடனே அவன் பேசவும், நினைக்கவும், கிரியை செய்யவும் ஆரம்பிக்கிறான். ஆனால் அவன் மரித்த நாள்முதல் அவன் உயிரடையும் நாள்மட்டுமுள்ள காலத்தில் அவன் யோசனையற்றுக் கிடக்கிறான். (பிர. 9: 5, 6. சங். 146: 4 பார்க்க) இது இப்படியிருக்கிறதினால் மரித்த நமது பந்து மித்திரரின் ஆவிகள் நம்மிடத்திற்குத் திரும்ப வந்து சம்பாஷிக்கிறதென்று நாம் எப்படி நம்பலாம்? இது விபரீதமும் பைத்தியமுமாய்த் தோன்றுகிறதல்லவா?

ஆனால் ஆவிகள் மனிதர் முன்பாகத் தோன்றி அவர்களோடு சம்பாஷிக்கின்றனவென்பதை நாம் மறுக்க முடியாது. சில சமயங்களில் இந்த ஆவிகள் மரித்த ஒருவனுக்குத் தெரிந்த சில காரியங்களைப்பற்றிச் சொல்லுகின்றனவென்பதும் உண்மையே. ஆகவே அநேக ஜனங்கள் மரித்த ஒரு மனிதனின் ஆவியே திரும்ப வந்து பேசுகிறதென்று நம்பு

வதற்கு ஏதுவாயிருக்கிறது. இந்த ஒரு காரணத்தை முன்னிட்டு நாம் அதை உண்மையென்று ஏற்றுக்கொள்ளலாமா? ஏற்றுக்கொள்ளக்கூடாது. ஏனென்றால், சாத்தானுக்கும் அவனைச்சேர்ந்த தூதர்களுக்கும் மனித ஜீவியத்தின் நடபடிக்கைகளெல்லாம் நன்றாய்த் தெரியும். ஆகவே சாத்தானாவது அல்லது அவனுடைய தூதரில் ஒருவனாவது, மரித்த ஒருவனுடைய சொந்தக்காரனிடத்தில் போய் மரித்த மனிதனுடைய ஆத்துமா சாகாமல் இன்னும் உயிரோடிருக்கிறதென்று சொல்லி அவனை ஏமாற்றுவது எவ்வளவு எளிது. அந்த ஆவி மரித்த மனிதனுடைய சாயலை அணிந்துகொண்டு ஒரு பொதுக்கூட்டத்தில் எழுந்து நின்று மரித்தவனுடைய ஜீவியத்தில் நடந்த ஒரு சம்பவத்தைக் குறித்துப் பேசலாம். இக்காலத்தில் இதனால் இலட்சக்கணக்கான பேர் மோசம் போகிறார்கள். இந்த விஷயத்தைக்குறித்துச் சொல்லப்பட்டிருக்கிற வேதாகம போதகத்தை ஒருவன் நன்குணர்ந்து விசுவாசித்தால் மாத்திரம் அவன் இந்தக் கள்ளப் போதகத்தின் மோசத்தினின்று தப்பமுடியும். நாம் இந்த சாத்தானின் வலையில் விழுந்து சிக்கிக்கொள்ளாதபடிக்கு எச்சரிக்கையாயிருப்போமாக.

G. G. L.

பாவ உற்பத்தியும் அதின் முடிவும்.

(THE ORIGIN AND END OF EVIL.)

ஆதாமும் ஏவாளும் பாவம் செய்தபோதே தேவன் ஏன் அவர்களை அழித்துப்போட்டு அவர்களுக்குப் பதிலாக வேறு இரண்டு பேரை சிருஷ்டிக்கவில்லையென்று சில சமயங்களில் ஜனங்கள் நம்மைக் கேட்கிறதுண்டு. இப்படிச் செய்தால் பாவமும் அதன் பலிதங்களுமெல்லாம் பூமியில் வந்திருக்கமாட்டாது என்கிறார்கள். அல்லது "நாம் பாவம் செய்யும்போதெல்லாம் தேவன் நம்மை ஏன் அழிக்கக்கூடாது" என்று கேட்கலாம். பரலோகத்தில் நடந்த கலகத்தில் தேவன் தமது நடக்கையால் நீதிபரரென்று விளங்கச்செய்ததால் இப்பூவுலகத்திலும் தாம் நீதிபரரென்று விழங்கும்படி இப்படிச் செய்தார். தேவன் உடனே பாவம் செய்த இருவரையும் அழித்துப்போட்டு வேறு புது சிருஷ்டிகளைச் சிருஷ்டித்திருப்பாரானால் சாத்தான் தேவனைக் கொடுமையுள்ளவரென்று காட்டி அந்தப் புது சிருஷ்டிகளையும் பாவத்திற்குத் தூண்டி விடுவான். சாத்தான் தனது ராஜ்ய பாரத்தை உலகத்தில் ஸ்தாபித்து தன் பொல்லாத குணத்தைச் சர்வ லோகங்களுக்கும் வெளிப்படுத்தக்கொள்ள தேவன் தமது சிருஷ்டிகளின்மேல் அன்பையும் இரக்கத்தையும் காட்டி இப்படியாக எல்லா சிருஷ்டிகளும் தம்மை வணங்கும்படியாக மனிதருக்கு ஓர் இரக்ஷண்ய வழியை உண்டு பண்ணினார். சாத்தானுக்காகப் பரிந்து பேசுவர் ஒருவருமிருக்கமாட்டார்கள். அவன் பொய்யனும் ஆதிமுதல் மனுஷ கொலைபாதகனுமாயிருக்கிறானென்று அனைவரும் அறிந்துகொள்ளுவார்கள். தேவன் கடைசியாக சாத்தானையும் அவனைப் பின்பற்றினவர்களையும் நிர்மூலமாக்கும்போது நீதிபரரென்று விளங்குவார்.

இரக்ஷண்ய ஒழுங்கு.

சாத்தானின் சோதனைக்கு மனிதன் தன்னை ஒப்புக்கொடுத்தபோது பரலோகத்தின் தேவ தூதர்களுக்கு மிகுந்த துக்கமுண்டாயிற்று. அவர்கள் நித்திய ஜீவனை இழந்தார்களென்றும், பாவத்தின் சம்பளம் மரணமானதால் மனிதன் தன் ஜீவனை நியாயப்படி இழக்க வேண்டுமென்றும் அவர்கள் அறிந்துகொண்டார்கள். தேவனுடைய நியாயப்பிரமாணம் அவனை மரணத்துக்குள்ளாக்கினது, ஆகையால் அதிலிருந்து தப்பித்துக்கொள்ள வேறு வழியில்லாதிருந்தது. துக்கம் நிறைந்த தூதர்கள் மனிதனை இரட்சிக்கும்படியாகத் தங்கள் ஜீவனைக் கொடுக்கத் தயாராயிருந்தார்கள். ஆனால் அந்தக் கடன் முழு மனித ஜாதியின் பாவங்களையும் நிவிர்த்திசெய்யவேண்டிய அவ்வளவு பெரிதாயிருந்தது. தேவ தூதர்களும்

சிருஷ்டிக்கப்பட்டவர்களானதால் அவர்கள் ஜீவனால் அந்தக் கடன் செலுத்தப்பட முடியாது. தேவனுடைய நியாயப்பிரமாணம் மாறாததாயிருக்கிறதினால் மீறுதலின் பலன் செலுத்தித் தீர்க்கப்படவேண்டும். தேவனுடைய ஒரே பேறான குமாரனாகிய கிறிஸ்துவின் ஜீவன் மாத்திரம் அந்தக் கடனைத் தீர்க்கக்கூடியதாயிருந்தது. அவர் ஒரு சிருஷ்டியல்லாததால் அவருடைய ஜீவன் முழு மனித ஜாதியின் பாவங்களை நிவிர்த்திக்கக்கூடும். பரலோகத்தின் பொக்கிஷங்களிலெல்லாம் அவரே சிறந்தவராயிருந்தார். விழுந்துபோன மனிதனை மீட்கும்படியாக தேவன் தமது ஒரே பேறான குமாரனைத் தத்தம் செய்வதற்கு சிருஷ்டியின்மேல் அவருக்கிருந்த அன்பு எவ்வளவு பெரிதாயிருக்கவேண்டும்? ஆம், அவர் சிருஷ்டிகளின்மேல் அன்பு மிகுந்தவராயிருந்தார். தேவன் உடனே இந்த ஒழுங்கைத் தெரிந்துகொண்டார். ஆதலால் கிறிஸ்து மனிடவதாரமெடுக்கவேண்டியதாயிருந்தது. மனிதர்கள் படவேண்டிய பாடுகள் வருத்தங்கள் துன்பங்கள் யாவற்றையும் அவர் அனுபவித்தார். பெலவீனமுள்ள மனுஷனாக நம்மைப்போல் ஜீவித்தார். அவர் பாவமற்ற ஜீவியம் செய்வாரானால் தேவ பிரமாணம் நீதியுள்ளதென்று விளங்கப்பண்ணுவார். பிதாவோடுகூட பிரமாணத்திற்குக் கர்த்தாவாயிருந்த இவர் பாவியாக வந்து பாவத்தின் தண்டனையைத் தாமே சுமந்து தீர்ப்பாரானால் சாத்தானின் நியாயங்களெல்லாம் அபத்தமாகும். மனிதனை இரட்சிப்பதற்கு மாத்திரம் கிறிஸ்து பாடுபட்டு மரிக்கவில்லை. அவர் நியாயப்பிரமாணத்தை முக்கியப்படுத்தி அதை மகிமையுள்ளதாக்க வந்தார். இந்த மகிமையுள்ள நியாயப்பிரமாணம் மாறக்கூடியதாயிருக்குமானால் கிறிஸ்து பாடுபடவேண்டியது அவசியமாயிராது. ஆனால் இந்த நியாயப்பிரமாணம் நியாயப்பிரமாணிக்கனைப்போலவே, அன்பும் இரக்கமுமுள்ளதாயிருக்கிறதென்று நமக்கு வெளிப்படுத்தப்பட்டிருக்கிறது.

தேவனுடைய நியாயப்பிரமாணத்துக்குக் கீழ்படிவதினால் வரும் பலன்.

தேவனுடைய நியாயப்பிரமாணத்துக்குக் கீழ்படிகிறவர்கள் கிறிஸ்துவின் பெரிதான பலியினால் கிடைக்கும் நித்திய ஜீவனை அடையலாம். கீழ்படியாதவர்களோ அதன் தண்டனையைத் தாங்களே அடைந்து தீரவேண்டும். பொல்லாதவர்களுக்கு ஓர் தண்டனை உண்டென்று முழு மனித ஜாதியும் நம்புகிறார்கள். சாவாமையைப்பற்றி சாத்தான்தான் சொன்னமுதல் பொய்யை உண்மையென்று நிலைநிறுத்தும்படியாக அநேக தப்பறைகளை உண்டு பண்ணினான். மனிதர்கள் தேவனுடைய வசனத்தை நம்பாமல் இதை நம்புகிறார்கள்.

நாம் முந்தின பத்திகளில் மரித்தோர் தன்னறிவற்றவர்களாயிருக்கிறார்களென்றும் ஞானம், வித்தை, பாடு, பாக்கியங்களெல்லாவற்றையும் அறியாதவர்களாய், இல்லாதவர்களைப்போலிருக்கிறார்களென்றும் பார்த்தோம். வேதத்தில் மனிதருக்கு வரும் தண்டனையையும் பலனையும்பற்றிச் சொல்லப்பட்டிருக்குமானால் அது மற்ற வேதாகம போதகத்திற்கு ஒத்திருக்கவேண்டும். ஏனெனில் வேத வாக்கியங்களில் வேற்றுமையின் நிழலென்பதுகூடக் கிடையாது.

இதைப்பற்றி அப்போஸ்தலனாகிய பேதுரு "கர்த்தர் தேவ பக்தியுள்ளவர்களைச் சோதனையினின்று இரட்சிக்கவும், அக்கிரமக்காரரை ஆக்கினைக்குள்ளானவர்களாக நியாயத்தீர்ப்பு நாளுக்கு வைக்கவும் அறிந்திருக்கிறார்" என்று எழுதுகிறார். 2 பேது. 2: 9. அக்கிரமக்காரர் ஆக்கினைக்குள்ளானவர்களாய் நியாயத்தீர்ப்பில் தண்டனை அடையும்படி வைக்கப்பட்டிருக்கிறார்களென்று வேதம் தெளிவாய்ப் போதிக்கக்கொள்ள மனிதர் மரித்த உடனே தங்கள் தண்டனையை அடைகிறார்களென்று சொல்லுவது விபரீதமாயிருக்கிறது.

தேவனுடைய நியாயப்பிரமாணத்தை மீறுகிறதினால் வரும் தண்டனை.

மனித இரக்ஷண்ய ஒழுங்கை தேவன் கிருபையாயும் இரக்கமாயும் உண்டு பண்ணினார். தேவன் அதிக இரக்கமாய் மனிதனை இரட்சிக்கும்படியாக ஏற்பாடு செய்தார்.

இந்த ஏற்பாட்டில் இரண்டு காரியங்கள் அதாவது நியாயமும் இரக்கமும் சம்பந்தப்பட்டிருக்கிறது. ஒரு பாவி நித்தியகாலமாக சொல்லி முடியாத பாடுகளை அனுபவிப்பது நியாயத்திற்கும் இரக்கத்திற்கும் முற்றிலும் விரோதமாயிருக்கிறது. அப்பேர்ப்பட்ட போதனை தேவ ராஜாங்கத்தின் ஒழுங்குக்கு நேர் விரோதமாயிருக்கிறது. இந்தக் கள்ளப் போதகத்தை அன்பின் போதகத்தோடு ஒன்றிக்கச் செய்வதினால் அநேகர் நாஸ்திகர்களாயிருக்கிறார்கள். மனிதரை மோசம் போக்கும்படியாக சாத்தான் இந்த ஏற்பாட்டைத் தெரிந்துகொண்டான்.

மரித்த பொல்லாதவர்கள் இப்பொழுது தண்டனையை அனுபவிக்கிறதில்லை. அவர்கள் நியாயந் தீர்க்கப்பட்ட பிறகு தண்டனை யடைவார்கள். பேதுரு நியாயத்தீர்ப்பையும் பொல்லாதவர்களின் தண்டனையையும் வருங்காலத்தில் பேசி யிருக்கிறார். "இப்பொழுது இருக்கிற வானங்களும் பூமியும் அந்த வார்த்தையினாலேயே அக்கினிக்கு இரையாக வைக்கப்பட்டு தேவ பக்தியில்லாதவர்கள் நியாயந் தீர்க்கப்பட்டு அழிந்துபோகும் நாள்வரைக்கும் காக்கப்பட்டிருக்கிறது." 2 பேது. 3: 7.

தேவ வசனத்தை நாம் உண்மையென்று ஏற்றுக்கொள்ளவேண்டும். மல்கியாவின் புஸ்தகத்தில் துன்மார்க்கர் சமூலமாய் அழிக்கப்படுவார்களென்று சொல்லப்பட்டிருக்கிறது. "இதோ, சூளையைப்போல எரிகிற நாள் வரும்; அப்பொழுது அகங்காரிகள் யாவரும், அக்கிரமம் செய்கிற யாவரும் துரும்பாயிருப்பார்கள்; வரப்போகிற அந்த நாள் அவர்களைச் சுட்டெரிக்கும்; அது அவர்களுக்கு வேரையும் கொப்பையும் வைக்காமற் போகும் என்று சேனைகளின் கர்த்தர் சொல்லுகிறார்." மல்கியா 4: 1.

ஒபதியாவின் வார்த்தைகளும் இதற்கு ஒத்திருக்கிறது: "நீங்கள் என் பரிசுத்த பர்வதத்தின்மேல் மதுபானம் பண்ணினபடியே எல்லா ஜாதிகளும் எப்பொழுதும் மதுபானம் பண்ணுவார்கள்; அவர்கள் குடித்து விழுவார்கள், இராதவர்களைப்போல் இருப்பார்கள்." வச. 16.

துன்மார்க்கர் எங்கே தண்டனை யடைவார்கள்.

கிறிஸ்துவின் இரண்டாம் வருகைக்கு 1000 வருஷத்துக்குப் பின் பொல்லாதவர்களை அழிக்கும்படியாக தேவன் அக்கினிக் கடலின் தீயை மூட்டுவார். வெளி. 20: 7-9. தேவன் துன்மார்க்கரை அழிக்கும் நரகம் இதுவே. இதிலே அவர்கள் கடைசியாக அழிக்கப்படுவார்கள். உலகத்திலே அவரவர் செய்த கிரியைகளுக்குத் தக்கதாக தண்டனையும் பலனும் அளிக்கப்படும். துன்மார்க்கர் தண்டனையை அடைந்து தீர்ந்த பிறகு, இல்லாமற் போவார்கள். இதுவே நீதியும் நியாயமுமாயிருக்கிறது. 2 கொரி. 5:10; வெளி. 20:7-9. துன்மார்க்கர் சதா காலங்களிலும் பாவத்திற்காக வேதனைப் பட்டுக்கொண்டிருப்பார்களானால் தேவன் பாவத்தை சதா காலங்களிலும் விட்டுவைத்திருப்பதற்குச் சரியாயிருக்கும். இது தேவனுடைய சித்தமல்ல: துன்மார்க்கருக்கு அழிவே தண்டனை. தண்டனையின் பலன் சதா காலத்திற்கும் இருக்கும். ஆனால் தண்டனை சதாகாலங்களிலும் நீடித்திருப்பது அவசியமில்லை. சோதோம் கொமோரா என்னும் பட்டணங்களும் இவ்விதமான தண்டனையை அடைந்து, நித்திய அக்கினியின் உதாரணமாயிருக்கிறது. யூதா. 7-ம் வசனம் பார்க்கவும்.

பாவத்தையும் பாவிகளையும் நிர்மூலமாக்கி பூமியை அது முன் சிருஷ்டிக்கப்பட்ட நிலைமைக்குக் கொண்டுவருவதே இரக்ஷண்ய ஒழுங்கின் கடைசி நோக்கமாயிருக்கிறது. இதைக்குறித்து சங்கீதக்காரனாகிய தாவீது பின்வருமாறு சாட்சி கொடுக்கிறார். "இன்னும் கொஞ்ச நேரந்தான், அப்போது துன்மார்க்கன் இரான்; அவன் ஸ்தானத்தை உற்று விசாரித்தாயானால் அவன் இல்லை .... துன்மார்க்கரோ அழிந்துபோவார்கள், கர்த்தருடைய சத்துருக்கள் ஆட்டுக்குட்டிகளின் நிணத்தைப்போல் புகைந்துபோவார்கள், அவர்கள் புகையாய்ப் புகைந்துபோவார்கள்." சங். 37: 10, 20.

தேவன் கடைசியாக உலகத்தைப் பாவமும் அநீதியுமற சுத்திகரித்த பிற்பாடு முழு உலகத்திலும் துன்மார்க்கரின் அழுகை கேட்கப்படமாட்டாது. தீர்க்கதரிசி விஸ்தரிக்கிற காலம் அப்போது வரும்: அவருடைய விஸ்தரிப்பைக் கவனிப்போமாக. "அப்பொழுது, வானத்திலும் பூமியிலும் பூமியின் கீழுமிருக்கிற சிருஷ்டிகள் யாவும், சமுத்திரத்திலுள்ளவைகளும், அவற்றுளடங்கிய வஸ்துக்கள் யாவும்: சிங்காசனத்தின்மேல் வீற்றிருக்கிறவருக்கும் ஆட்டுக்குட்டியானவருக்கும் ஸ்தோத்திரமும் கனமும் மகிமையும் வல்லமையும் சதா காலங்களிலும் உண்டாவதாக என்று சொல்லக் கேட்டேன்." வெளி. 5: 13.

(இன்னும் வரும்.)

E. M. Meleen, B. A.

விசுவாசப் பிரமாணம்.

(A STATEMENT OF BELIEF.)

சில வருஷங்களுக்கு முன்னே ஒருவர் ஓர் பெரிய போதகரை நோக்கி "உமது விசுவாசப் பிரமாணம் என்ன?" என்று கேட்டார். அதற்கு அவர் "நான் தேவனை அவருடைய குமாரனும் என் இரட்சகருமாகிய இயேசுக்கிறிஸ்துவின் மூலமாய் விசுவாசிக்கிறேன்." என்றார். ஏழாம் நாளை ஆசரிக்கும் அட்வென்டிஸ்டரின் விசுவாசத்தைப்பற்றி யாராவது கேட்கும்போது அவர்கள் "வேதாகமத்தில் அடங்கிய 66 புஸ்தகங்களே எங்கள் விசுவாசப்பிரமாணம் என்றும், அவைகள் யாவும் தேவ ஆவியால் எழுதப்பட்டிருப்பதினால் சத்தியம் என்றும் விசுவாசிக்கிறோம்" என்பார்கள்.

தேவனுடைய திருவசனத்தையே தங்கள் விசுவாசத்தின் அஸ்திபாரமாக வைத்துக்கொண்டிருக்கிற அநேக கிறிஸ்தவ மதஸ்தர்கள் சில வேத வாக்கியங்களுக்கு தப்பான வியாக்கியானங்கள் கூறி தங்களுக்குள்ளே பேதங்களை உண்டுபண்ணிக்கொள்ளுகிறார்கள். வேதாகமத்திலே சில தெளிவான சத்தியங்கள் அடங்கியிருக்கிறது. வேதாகமத்தைப் பரிசுத்த ஆவியின் உதவியினாலே வேத வசனங்களைக்கொண்டு ஒத்துப்பார்த்து வாசிக்கும் ஒருவனுக்கு அவைகள் இலேசாய் விளங்கும். அந்த தெளிவான சத்தியங்கள் ஒரு வசனத்திற்கு மாத்திரமல்ல எல்லா வசனங்களுக்கும் ஒத்திருக்கிறதாவென்று பார்க்கவேண்டும். ஓர் கிறிஸ்தவன் தேவ வசனத்தில் கட்டளையிடப்படாத புறம்பான நியமங்களையும் சாக்கிரமந்துகளையும் கைக்கொள்ள வேண்டியதில்லை. நமது முக்கிய போதகங்கள் அப்போஸ்தல மெய்க்கிறிஸ்தவ போதகங்களுக்கும் மெய்ச்சுவிசேஷ மார்க்கத்துக்கும் ஒத்ததாயிருக்கவேண்டுமானால் நமது கொள்கைகள் யாவும் "எழுதியிருக்கிறதே" என்னும் அஸ்திபாரத்தின் மேல் கட்டப்பட்டதாயிருக்கவேண்டும்.

கிறிஸ்து மதத்தை ஸ்தாபித்தவரும், 1529-ம் ஆண்டு எப்பிரல் மீ 19-ம் தேதியில் ஸ்பயர்ஸ் நகரத்தில் கூடிய சங்கத்திலிருந்த இளவரசர்களும் சொன்ன சித்தாந்தத்தை நாங்களும் சொல்லுகிறோம்.

"தேவ வசனத்திற்கு ஒத்திராத கொள்கைகளெல்லாம் சத்தியமானதல்ல, அப்பேர்ப்பட்ட போதகத்தை தேவன் வெறுக்கிறார். வேதாகமத்தில் உள்ள ஒவ்வொரு வசனங்களையும் மற்ற வசனங்களைக்கொண்டு வியாக்கியானப்படுத்தவேண்டும். இப்பரிசுத்த புஸ்தகம் கிறிஸ்தவர்களுக்கு இன்றியமையாததும் இலேசாக அறிந்துக்கொள்ளக்கூடியதும் பாவ இருளைப்போக்கும் பரம அவிழ்தமுமாயிருக்கிறது.

இப்பத்திரிகையை பிரசுரிப்பவர்களுக்கு தங்கள் சபையார் சரியாகக் கைக்கொள்ளும்படியாக ஓர் திட்டமான விசுவாசப்பிரமாணம் இல்லை. வேதத்தை ஆராய்ச்சி செய்து ஓர் திட்டமான விசுவாசப்பிரமாணத்தை வைத்துக்கொள்வது சபைக்கு இனிமேல் ஆவியின் வளர்ச்சி தேவையில்லையென்று சொல்லுவதுபோலிருக்கிறதென்று சரித்திரம் ரூபிக்கிறது.

என்றபோதிலும், அநேகர் எங்களை நீங்கள் விசுவாசிக்கும் சத்தியங்கள் என்னவென்று பல முறை கேட்டிருக்கிறதினாலே நாங்கள் எங்கள் விசுவாச சத்தியங்களை இங்கே சுருக்கமாக எடுத்து எழுதுகிறோம். எங்கள் முழு போதகமும் சத்தியமும் இவைகள்தானென்று இறுதியாக சொல்லுகிறதில்லை. ஏனென்றால் "நீதிமான்களுடைய பாதை நடுப்பகல்வரைக்கும் அதிகமதிகமாய்ப் பிரகாசிக்கிற சூரிய பிரகாசம்போலிருக்கும்." தேவனுடைய வசனத்தைக் கருத்தோடு தினம்தோறும் படித்து ஆராய்ச்சி செய்கிற எந்த மனுஷனும் எங்கத்தாரும் தேவனுடைய வெளிப்படுத்தல்களை அதிகமதிகமாய்க் கண்டடைவார்கள் என்பது சத்தியம்.

ஏழாம் நாளை ஆசரிக்கும் அட்வேன்றிஸ்றர்.

1. திரித்துவ தேவன் உண்டென்றும்,
2. இயேசுக்கிறிஸ்து தேவனென்றும்,
3. பரிசுத்த ஆவி ஆள் தத்துவமுடையவர்,
4. இயேசுக்கிறிஸ்து நமக்காகப் பிணைப்பட்டு பாவ நிவிர்த்திப் பண்ணினார்.
5. இயேசுக்கிறிஸ்து மத்தியஸ்தர்.
6. மனிதன் பாவ சுபாவ முள்ளவன்.
7. மறு பிறப்பு அவசியம்.
8. நற்கிரியைகள் அவசியம்.
9. சாத்தான் மெய்யான ஆள் தத்துவமுள்ளவன்.
10. வேதாகமம் மனித சுபாவத்துக்கு எட்டாததும் பரிபூரணமுள்ளதுமாயிருக்கிறது

(a) அது ஜீவியத்துக்கு ஒன்றான சட்டமாயிருக்கிறது.

(b) மனித இரட்சணியத்திற்கு அவசியமான சத்தியங்களெல்லாம் அதில் அடங்கியிருக்கிறது.

(c) அதின் மொழிபெயர்ப்பிலும் எழுத்திலும் அச்சுப்பிழைகள் இல்லாவிட்டால் அது தேவனுடைய சொந்த வசனமாயிருக்கிறது.

(d) வேதாகமத்தில் சொல்லப்பட்டிருக்கிற முக்கியமான தீர்க்கதரிசனங்கள் கடைசி காலத்திற்கு அடுத்ததாயிருக்கிறது.

11. ஞானஸ்நானம் தண்ணீரில் மூழ்கி பெறவேண்டும்.

12. சுவிசேஷ ஊழியம் தசம பாகங்களினாலும் காணிக்கைகளினாலும் ஆதரிக்கப்படவேண்டும்.

13. இயேசு கிறிஸ்துவின் வருகை.

(a) அது சீக்கிரம் சம்பவிக்கப் போகிறது.

(b) அது ஆயிர வருஷ அரசாட்சிக்கு முன் சம்பவிக்கும்.

(c) அது சகலரும் பார்க்கத்தக்கவிதமாக வெளியரங்கமும் பிரகாசமுமாயிருக்கும்.

(d) அது ஓர் பெரிய ஆபத்து வருகிறதுபோல வரும்.

(14) ஆயிர வருஷ அரசாட்சி உண்டு.

(a) நீதிமான்களின் உயிர்த்தெழுதலாகிய முதலாம் உயிர்த்தெழுதலில் இது ஆரம்பிக்கும்.

(b) அந்த ஆயிர வருஷமளவும் பொல்லாதவர்கள் உலகத்தில் மரித்துக் கிடப்பார்கள். சாத்தான் பாழான இப்பூமியில் அடைபட்டிருப்பான் நீதிமான்கள் யாவரும் பரலோகத்திலிருப்பார்கள்.

(c) ஆயிர வருஷம் முடியும்போது புதிய எருசலேம் இப்பூமிக்கு வரும். பொல்லாதவர்களின் உயிர்த்தெழுதலாகிய இரண்டாம் உயிர்த்தெழுதல் நடக்கும். ஆக்கினைத் தீர்ப்பளிக்கும் நியாயத்தீர்ப்பு நடக்கும். பாவமும் பாவிகளும் நிர்மூலமாக்கப்படுவார்கள். இப்பூமி அக்கினியினாலே புதுப்பிக்கப்படும்.

(15) மனிதன் சாகுந் தன்மையுள்ளவன்.

(a) தேவன் ஒருவரே சாவாமை யுள்ளவர்.

(b) நாம் சாவாமையை தேவனிடத்திலிருந்து கிறிஸ்துவின் மூலமாய் நீதிமான்களின் உயிர்த்தெழுதலாகிய முதலாம் உயிர்த்தெழுதில் பெற்றுக்கொள்ளுகிறோம்.

(c) மரணத்தில் மனிதனுக்கு தன்னறிவு இல்லை.

16. பாவிகள் நிர்மூலமாக்கப்படுவார்கள். பாவிகள் சதாகாலங்களிலும் துன்பத்தை அனுபவிக்காமல் ஆயிர வருஷ அரசாட்சியின் முடிவில் நிர்மூலமாய் அழிக்கப்படுவார்கள்.

17. பூமி புதுப்பிக்கப்படும்.

(a) தற்காலத்திலிருக்கும் இந்தப் பாவ உலகமானது அக்கினியினால் சுட்டெரிக்கப்பட்டு புதிதாக ஏதேனின் நிலைமையை அடையும்.

(b) அது ஆயிர வருஷ அரசாட்சிக்குப் பிற்பாடு சம்பவிக்கும்.

(c) புது பூமி இரக்ஷிக்கப்பட்டவர்களின் வாசஸ்தலமாயிருக்கும்.

18. பத்துக் கற்பனைகள் உண்டு.

(a) கிறிஸ்தவர்கள் அதில் யாதொன்றையும் மீறக்கூடாது.

(b) அவற்றின் ஆதாரத்தில் தேவனுடைய ராஜ்யம் அஸ்திபாரப்படுத்தப்பட்டிருக்கிறதினால் அதை மாற்றவாவது அழிக்கவாவது கூடாது.

(c) பத்துக் கற்பனை, மோசே கொடுத்த கட்டளைகள், சடங்காச்சாரங்கள், நியமங்கள் முதலானவைகளோடு சம்பந்தப்பட்டதல்ல.

(d) பத்துக் கற்பனைகளைக் கைக்கொள்வதினால், நாம் "நியாயப்பிரமாணத்துக்குள்ளானவர்கள்" அல்ல. ஒரு பிரமாணத்தை மீறினால்தான் மீறினவன் அந்தப் பிரமாணத்திற்கு கீழாகிறான்.

19. ஏழாம் நாள் ஓய்வு நாள்.

(a) அது சிருஷ்டிப்பிலேயே ஸ்தாபிக்கப்பட்டது.

(b) அது சிருஷ்டிப்பின் ஞாபகார்த்தமும் இரக்ஷிப்பின் அறிகுறியுமாயிருக்கிறது.

(c) அது திரும்பவும் உறுதிபடுத்தப்பட்டு சீனாயில் தேவனுடைய விரலினால் எழுதிக் கொடுக்கப்பட்டது.

(d) அது யூதருக்கு மாத்திரம் உரியதல்ல.

(e) கிறிஸ்துவும் அவரது அப்போஸ்தலர்களும் கிறிஸ்துவின் மரணத்திற்கு முன்னும் பின்னும் ஓய்வு நாளை ஆசரித்தார்கள்.

(f) எல்லாக் கிறிஸ்தவர்களும் இப்பொழுது ஓய்வு நாளை ஆசரிக்கவேண்டியது கடமை.

(g) ஓய்வு நாள் புதிய பூமியிலும் ஆசரிக்கப்படும்.

(h) ஞாயிற்றுக்கிழமை ஒரு போலி ஓய்வு நாள்.

அது முன்னோர்களால் சூரிய வணக்கத்திற்கென்று பிரதிஷ்டை பண்ணப்பட்டது. பிற்பாடு, ரோமான் கத்தோலிக்க சபையில் ஓர் கிறிஸ்தவ ஆசரிப்பாக ஏற்படுத்தப்பட்டது. இதற்கு வேதாகமத்தில் ஆதாரமே இல்லை.

20. மீதியான சபைக்கு தீர்க்கதரிசன வரம் அளிக்கப்பட்டிருக்கிறது.

21. மன சுயாதீனம், மார்க்க சுயாதீனம், சபையும், ராஜாங்கமும் தன்னில்தானே வெவ்வேறானது.

22. மனித சரீரம் ஜீவனுள்ள தேவனுடைய ஆலயமாயிருக்கிறதென்று வேதம் போதிக்கிறது.

(a) சரீரத்தைப் பேணுதல் கிறிஸ்தவனின் கடமை.

(b) மதுபானம் மயக்கம் தரும் மருந்து, லாகிரி வஸ்துகள், புகையிலை முதலானவைகளால் நமது சரீரத்தைக் கறைபடுத்தக்கூடாது.

(c) தற்காலத்தில் மாம்ச உணவில் அநேகக் கெடுதிகளும் வியாதிகளும் ஜெனிப்பிக்கிறதினால் ஆதியில் மனிதருக்கென்று ஏற்படுத்தப்பட்ட மரக்கறி பதார்த்தமே மேலானது என்றும் விசுவாசிக்கிறார்கள்.

சுகாதார விஷயங்கள்

O. SMITH, M. D. டாக்டர் சிமித்.

நாம் எவைகளை உட்கொள்ளக்கூடாது?

(WHAT WE SHOULD NOT EAT?)

நாம் கடந்த நவம்பர் மாதத்தில் சரீரம் தன் வேலையைச் சரிவரச் செய்யும்படி நாம் எவைகளை உட்கொள்ளவேண்டுமென்று பார்த்தோம். நமது சரீரத்தைச் சுகமும் பெலமுமாய் வைத்திருக்க நாம் எவைகளை உட்கொள்ளக்கூடாதென்று இப்பொழுது பார்ப்போம்.

நாம் முன் சொன்னபடி நாம் உட்கொள்ளுகிற சர்க்கரையும் சர்க்கரைப் பதார்த்தங்களும் இரத்தத்தோடு கலக்கு முன்னதாக பித்தாசயத்தில் சேர்க்கப்படுகின்றன. ஜாஸ்தியான சர்க்கரைப் பதார்த்தம் பித்தாசயத்தில் சேர்க்கப்படுமானல் அது தன் வேலையைச் சரியாய்ச் செய்ய முடியாது. நமது வீடுகளில் கொஞ்சமும் இடமில்லாதபடிக்கு அதிக ஜாமான்களை நிரப்பிவைத்தால் நாம் நமது வேலையை செய்வதற்கு அவை தடையாயிருக்குமல்லவா? அப்படியே பித்தாசயத்திலும் அதிக பதார்த்தங்களிருக்குமானல் அது தன் வேலையைச் சரியாய்ச் செய்யமுடியாததால் மனிதனுக்கு வியாதி வருகிறது. ஆகையினல் நாம் சர்க்கரைப் பதார்த்தங்களையும் கஞ்சிப் பதார்த்தங்களையும் அபரிமிதமாய் உட்கொள்ளக்கூடாது. உஷ்ண காலத்தில் நமது தேகத்திற்கு இந்த உணவு அவ்வளவு அவசியமாயிராததால் குளிர் காலத்தில் இவைகளை உபயோகிப்பதைவிட உஷ்ண காலத்தில் கொஞ்சமாய் உபயோகிக்கவேண்டும்.

நாம் காடியை அதிகமாய் உபயோகப்படுத்தக்கூடாது. அதில் அதிகமான திராவகப் பதார்த்த மிருப்பதால் அது இரைப்பையிலும் பித்தாசயத்திலும் குடல்களிலுமிருக்கிற தசைநார்க்கிருமிகளை சுருங்கச் செய்கிறது. ஒரு சிறு மெல்லிய புழுவின்மேல் சில துளி மண்ணெண்ணெயைவிட்டவுடனே அது எவ்வளவு சீக்கிரத்தில் சுருண்டு செத்துப்போகிறதென்று பாருங்கள். நாம் காரமான காடியை உட்கொள்ளும்போது நமது தேகத்திலிருக்கும் சிறு கிருமிகளுக்கும் இப்படியே சம்பவிக்கும். எப்பொழுதும் காடியை உபயோகித்துக் கொண்டுவருகிற ஒரு மனிதனுடைய பித்தாசயமானது வரவர சுருங்கிப்போய் கடைசியில் ஒரு கட்டியான பந்துபோலாகித் தன் வேலையைச் செய்யமுடியாமற் போகிறது. பிறகு அந்த மனிதன் சீக்கிரம் செத்துப்போகிறன். சாப்பாட்டை ஜீரணிக்கச் செய்யவும் கழிவு பதார்த்தத்தை வெளிப்படுத்தவும் உதவுகிற குடல் நீரானது குறைவுபடுகிறது. இதனல் மலக்கட்டு உண்டாகிறது. ஆகாரம் சரியாய் ஜீரணிக்காததினல் தேகத்திற்கு வேண்டிய உணவுப்பொருள்கள் நாம் உண்ணும் ஆகாரத்திலிருந்து எடுக்கப்படாததால் சரீரம் பலவீன மடைகிறது. மலக்கட்டினல் கழிவு பதார்த்தங்கள் வெளிப்படாததினல் அது உடலில் ஓர்விதமான விஷத்தைப் பிறப்பிக்கிறது. அப்பொழுது மனிதன் வாய் ருசியை இழந்துவிடுகிறன். நாக்கு மரத்துப்போகிறது. நன்றாய் சுவாசிக்க முடிகிறதில்லை. [illegible] வலியும் மயக்கமும் உண்டாகிறது.

காடி ஊற்றிய ஊறுகாய்களைச் சாப்பிடுவதனல் காடியினல் உண்டாகிற கெடுதிகள் மாத்திரமல்ல, அந்த ஊறுகாய் ஜீரணிப்பதும் அதிக கஷ்டமாயிருக்கிறது. அவைகள் மென்று தின்பதற்கு எற்றவைகளல்லாததால் அவைகள் ஒன்று பாதியாய் இரைப்பைக்குட் சென்று அங்குள்ள மெல்லிய சருமத்தை கெடுத்துப்போடுகிறது. ஆகவே அவைகளை நாம் அடிக்கடி உட்கொள்ளக்கூடாது. சமயாசமயத்தில் இரைப்பையானது அதன் வேலையைச் சரியாய்ச் செய்யாமல் தளர்ந்திருக்குமானல் கொஞ்சம் ஊறுகாய் சாப்பிடுவது நல்லது. அப்படிச் சாப்பிடுவதால் இரைப்பையிலுள்ள கிருமிகள் விழிப்படைந்து அதை எப்படியாவது தங்களிடமிருந்து அகற்றிப்போட வழி பார்க்கும். அப்படி கொஞ்சம் உட்கொண்டால் அதுவே போதும். ஆனல் அப்படிப்பட்டவைகளை நாம் சகஜமாய் உபயோகிப்பதினல் இரைப்பைக் கிருமிகள் சீக்கிரம் சோர்வடைந்து நாம் முன் சொன்ன மாதிரி அவைகள் தங்கள் வேலையைச் செய்யாமல் வியாதியைப் பிறப்பிக்கும்.

லவங்கப்பட்டை, கறுவாப்பட்டை, கிராம்பு, ஏலக்காய், இஞ்சி முதலிய வாசனை திரவியங்கள் இரத்தத்தை உறிஞ்சிப்போடுகின்றன. அவைகள் இரத்தத்தை உறிஞ்சுகிறது மாத்திரமல்லாமல் இரத்தகணம் என்னப்படும் இரத்தத்திலுள்ள கிருமிகளை சுருங்கச் செய்து அவைகள் ஆகாயத்தையும் ஆகாரத்தையும் தேகத்தின் எல்லா பாகங்களுக்கும் கொண்டுபோகாதபடி செய்கிறது. தூக்கம் பிடிக்காமல் இளைத்து வெளுத்துப்போன மனிதரை நீங்கள் பார்த்ததில்லையா? அவர்கள் எப்பொழுதும் களைத்துப்போய் பெலவீனராய்க் காணப்படுவார்கள். அவர்களுக்கு இரத்தம் அதிகமாயில்லாததாலும் இருக்கிற இரத்தமும் சுத்தமில்லாததாயிருக்கிறதினலும் அப்படியிருக்கிறர்கள். வாசனை திரவியங்கள் முதலிய உஷ்ண பொருட்கள் இரத்தத்தைச் சுண்டச்செய்து இரத்த கணங்களைத் தங்கள் வேலையைச் செய்யாதபடித் தடுக்கிறது. இதனல்தான் மனிதன் பெலவீனமடைந்து வியாதிப்படுகிறன். மிளகு, கடுகு முதலியவைகளும் இதே மாதிரிதான். நாம் அவைகளைச் சாப்பிடும்போது, வாய் முதல் ஆகாரம் ஜீரணமாகும் இடம் மட்டுமுள்ள மெல்லிய சருமத்தை முரடாக்கி ஜீரண திராவகத்தைப் பிறப்பிக்கிற மாம்சகிரந்திகளை (Glands) அழித்துப்போடுகிறதினல் இரைப்பைக்கும் குடல்களுக்கும் சரியான அளவு ஜீரண திராவகம் வருகிறதில்லை. இவைகளிலிருந்து நாம், காடி, வாசனை திரவியங்கள், மிளகு, முதலிய கார சாமான்களை உட்கொள்ளக்கூடாதென்று நன்றாய் விளங்குகிறது.

நாம் உயர்ந்த சாப்பாட்டை சாப்பிட்டாலும் அதையும் ஜீரணிப்பது கஷ்டம். ஆகையினல் நாம் நமது ஆகாரத்தை நன்றாய்ச் சமைத்து படுக்கைக்குப்போகிறதற்கு அநேக மணி நேரங்களுக்கு முன்னதாகச் சாப்பிட்டால் நாம் இளைப்பாறப் போகுமுன் நமது ஆகாரம் ஜீரணமாயிருக்கும். நாம் ஆகாரத்தை நன்றாய் மென்று தின்னவேண்டும். இப்படிச் செய்தால் உமிழ் நீரும் மற்ற ஜீரண திராவகங்களும் ஆகாரத்தோடு கலக்கிறதினல் ஆகாரம் நன்றாய் ஜீரணமாகும். அரைவேக்காடாக சமையல் செய்யப்பட்ட ஆகாரத்தைப் புசித்தால் திராவகங்களுக்கு அவற்றை ஜீரணிக்கும்படி செய்ய சக்தியில்லாமற் போகிறது. வெந்த பாகத்தை மாத்திரம் ஜீரணிக்கச்செய்து மற்றதை இரைப்பையிலும் குடலிலும் விட்டுவிடுகிறதினல் கெட்ட வாயுவும் விஷமும் உண்டாகிறது. கெட்டுப்போன ஆகாரத்தையும் நாம் உட்கொள்ளக்கூடாது. அதை எறிந்துவிடவேண்டும். ஏனெனில் விஷக்கிருமிகள் நமது சரீரத்திற் சென்று வியாதியை உண்டுபண்ணும். பழங்கள் கொஞ்சம் கெட ஆரம்பித்தால் உடனே அவைகளை வேகவைத்து உபயோகித்தால் அந்த விஷக்கிருமிகள் யாவும் செத்துப்போம். ஆனல் மரக்கறி பதார்த்தங்களை இப்படி உபயோகிப்பது கூடாத காரியமாதலால், நமது சுகத்திற்கென்று கெட்டுப்போனவைகளை அப்புறப்படுத்துவது நல்லது.

கொழுப்பு, நெய், வெண்ணெய் முதலியவற்றில் பொரித்த பண்டங்கள் அவ்வளவு நல்லதல்ல. எண்ணெயில் பொரித்த பண்டங்கள் இரைப்பையில் போனபிறகு கொழுப்பைப்போல கட்டிப்போகிறதில்லை. மாம்சக் கொழுப்பானது இரைப்பைக்குட் சென்றபிறகு கட்டிப்போகிறதினால் ஜீரண திராவகம் அவற்றை ஜீரணிக்க முடியாமல் கழிவு பதார்த்தத்தோடு கலந்துவிடுகிறது. அல்லது இரைப்பையில் தங்கி கெடுதியை உண்டு பண்ணுகிறது.

நாம் வெற்றிலை பாக்கு, புகையிலை முதலிய கெடுதியான வஸ்துக்களை உபயோகிக்கக் கூடாதென்று இங்கு எடுத்துரைக்கவேண்டியதில்லை யென்று நினைக்கிறேன். இவைகளை ஜீரணிப்பதற்கு அதிகமான திராவகம் உபயோகிக்கப்படுவதனால் பிற்பாடு நமது ஆகாரத்தைச் ஜீரணிக்கப்போதுமான திராவகம் இல்லாமற்போகிறது. இவைகளில் நரம்புகளைக் கொல்லும் ஓர்வித விஷமும் இருக்கிறது. இதை அநேக வருஷங்களாக உபயோகிப்பவர்களுடைய நரம்புகள் தளர்வடைந்து சரீரத்தில் பயங்கரமான வியாதிகள் உண்டாகின்றன. பிற்பாடு என்ன மருந்துகளை உபயோகித்தாலும் அவன் குணமடையாமற் செத்துப்போகிறான்.

நாம் அடுத்ததரம் நாம் எவ்வளவு ஆகாரம் உட்கொள்ளவேண்டுமென்றும் எத்தனைதரம் உட்கொள்ளவேண்டுமென்றும் பார்ப்போம்.

Dr. O. Smith.

ஞாயிற்றுக்கிழமையைச் சீஷர்கள் எப்படி ஆசரித்தார்கள்?

(SUNDAY AND THE DISCIPLES.)

1. உயிர்த்தெழுந்த நாளின் சாயுங்காலத்தில் சீஷர்கள் கூடியிருந்ததைப்பற்றி என்ன சொல்லி யிருக்கிறது? யோவா. 20: 19.

2. சீஷர்கள் எல்லாரும் ஒருமித்துக் கூடியிருந்தார்களா? அப். 1: 13.

3. அந்த சமயத்தில் இயேசு மரித்தோரிலிருந்து உயிர்த்தெழுந்தாரென்று சீஷர்கள் விசுவாசித்தார்களா? மாற். 16: 9-13.

4. இயேசு சீஷர்களை சந்தித்தபோது அவர்களுக்கென்ன சொன்னார்? வச. 14.

5. நடந்த காரியம் ஒன்றையும் நம்பாமல் அதைக் கொண்டாடும்படி ஒருமித்துக் கூடுவார்களா? நிட்சயமாகவே கூடமாட்டார்கள்.

6. இயேசு உயிர்த்தெழுந்தாரென்று மற்ற சீஷர்கள் சொன்ன சாக்ஷியை தோமா ஒத்துக்கொண்டானா? யோவா. 20: 24, 25.

7. திரும்பவும் இயேசு சீஷர்களை எப்போது சந்தித்தார்? வச. 26.

8. "எட்டு நாளைக்குப் பிற்பாடு" என்றால் அது எவ்வளவு காலம்? மத். 17: 1 ஐ லூக். 9: 28 ஓடு ஒத்துப்பார்.

9. சிலர் சொல்லுகிறபடி அக்கூட்டம் ஞாயிற்றுக்கிழமையில் நடந்திருக்கக் கூடுமா?

10. துரோவாவில் ஒருதரம் பவுல் எப்போது பிரசங்கித்தார்? அப். 20: 6-8.

11. அக்கூட்டம் பகலில் நடந்ததா இரவில் நடந்ததா? வச. 7, 8.

12. தேவன் கணித்த காலக்கணக்கின்படி ஒரு நாளில் எந்தப் பாகம் முந்தி வருகிறது? ஆதி. 1: 5, 3, 13 முதலியன.

13. ஒரு நாள் எப்போது ஆரம்பித்து எப்போது முடிகிறது? லேவி. 23: 32.

14. எது சாயங்காலத்தைச் சரியாகக் குறிக்கிறது? உபா. 16: 6; மாற். 1: 32.

15. மேலே சொல்லப்பட்ட வாக்கியங்களால் அக்கூட்டம் எப்பொழுது நடத்தப்பட்டது? நாம் இப்போது சொல்லுகிறபடி சனிக்கிழமை இரவு.

16. அவர் எவ்வளவு நேரம் பிரசங்கித்தார்? அப். 20: 7-11.

17. அவர் பிரசங்கிக்கும்போது அவருடைய தோழர்கள் அவர் திட்டம் பண்ணினபடியே என்ன செய்தார்கள்? வச. 13.

18. ஞாயிற்றுக்கிழமை காலையில் பவுல் வெளிச்சத்தோடே என்ன செய்தார்?—துரோவாவிலிருந்து ஆசோ பட்டணத்துக்கு ஏறக்குறைய 20 மைல் தூரம் பிரயாணம் பண்ணினார். வச. 13, 14.

19. பவுலை அவர்களோடு நடுராத்திரிமட்டும் பிரசங்கித்து பின்பு அவர்களோடு அப்பம் பிட்டு அடுத்த நாள் அவ்வளவு தூரம் நடக்கும்படி ஏவினதென்ன?—தான் இனி அவர்கள் முகத்தை பார்க்கமுடியாதலால். வச. 25.

20. வாரத்தின் முதல் நாளில் அப்போஸ்தலர்கள் முற்காலத்துக் கிறிஸ்தவர்களை என்ன செய்யும்படி கட்டளையிட்டார்கள்? 1 கொரி. 16: 1, 2.

21. இந்தக் கட்டளை எல்லாரும் பொதுவாய்ச் சேர்க்குதலைக் குறிக்கிறதா? அல்லது ஒவ்வொரு ஆளும் தன் வீட்டில் சேகரம் பண்ணுகிறதைக் குறிக்கிறதா?

22. கிறிஸ்தவ ஏற்பாட்டில் கர்த்தருடைய நாள் என்று ஒன்று உண்டா? வெளி 1: 10.

23. இந்த வசனம் கர்த்தருடைய நாள் எதென்று குறித்துக் காட்டுகிறதா?—இல்லை.

24. தேவன் ஏசாயாவின் மூலமாய் எந்த நாள் கர்த்தருடைய பரிசுத்த நாள் என்று சொல்லுகிறார்? ஏசா. 58: 13, 14.

25. ஏழாம் நாளைப்பற்றி தேவன் என்ன சொல்லுகிறார்? யாத். 20: 9.

26. கிறிஸ்து, தான் எதற்கு ஆண்டவர் என்று சொல்லுகிறார்? மாற். 2: 28.

27. தேவன் வேறெந்த நாளையும் தனக்குச் சொந்தமான நாள் என்று சொல்லுகிறதாக நமக்கு ஏதாவது ஒரு அத்தாக்ஷி உண்டா?—இல்லை.

28. ஆகையால் தேவன் எப்போதும் தெரிந்துகொண்ட நாள் எது? ஏசா. 56: 1-7.

தே. ஆரோன்.

நிகழ்கால சத்தியம் சமாசாரக் குறிப்புகள்.

(NEWS AND NOTES)

வேத சன்மார்க்க சுகாதார விஷயங்களில் தற்கால அறிவுக்கொத்தபடி மனிதர் அபி விருத்தியடைவதற்கென்று பிரசுரமாகும் ஓர் பத்திரிகை.

மதராஸ் பிப்ரவரி௴, 1921.

இப்பத்திரிகை, பெங்களூரிலிருக்கும், எஸ். டி. ஏ. பப்ளிஷிங்கவுஸ்காக, பட்டணத்தில் வெப்பேரி என்னுமிடத்திலுள்ள அல்பீனியன் அச்சாபீசில் அச்சடிக்கப் பட்டு வருகிறது.

பத்திராதிபர் பாஸ்றர், ஜி. ஜி. லேவரி.
உதவி ,, ,, ஈ. டி. தர்மஸ்.
மானேஜர், எல். சி. ஷெப்பர்டு, பி. ஏ.

	ரூ.	அ.	ப.
தனிப்பிரதி ஒன்றுக்கு ...	0	1	6
வருஷ சந்தா, தபாற் கூலி உள்பட ...	1	0	0
சிங்கப்பூர் பினங்கு முதலிய வெளி ஊர்களுக்கு தனிப் பிரதி ஒன்றுக்கு ...	0	2	0
வருஷசந்தா தபாற்கூலி உள்பட ...	1	4	0

"எஜமானனைச் சுட்டுவிட்ட வேலைக்காரன்.

நல்தங்காவைச் சேர்ந்த ராஜா பகதூர் பி. பி. தியோராஜ் என்பவர் செவ்வாய்க்கிழமை யன்று நடுராத்திரியில் துப்பாக்கியால் சுடப் பட்டார். அப்பொழுது அவர் தமது அறை யில் உட்கார்ந்து புஸ்தக மொன்றைப் படித் துக்கொண்டிருந்தார். தம்மீது வெடிபட்ட வுடனே தமது வேலைக்கார னொருவன் ஓடு வதைக் கண்டார். அவர் அன்று வேலைக் காரனை ஏதோ ஒரு விஷயமாகக் கண்டித்தா ராம் அவ்வேலைக்காரன் பழிவாங்க வேண்டு மென வெண்ணி இக்காரியம் செய்துவிட் டதாகச் சொல்லப்படுகின்றது. ராஜா பகதூர் கல்கத்தா ஆஸ்பத்திரிக்குக் கொண்டுபோகப் பட்டார் அங்கு அவருடைய தேகத்திலி ருந்து ரவைகள் எடுக்கப்பட்டன. வேலைக் காரன் கைது செய்யப்பட்டான்."

"ஏககாலத்தில் மூன்று கொலைகள்.

கருப்பண்ணன் சேர்வை, தொத்தன் சேர்வை, முத்தப்பன், பெரிய கருப்பன் சேர்வை ஆகிய நால்வரும் விலாங்குடி கிரா மத்தில் சில மாதங்கள் முன்பாக ராமன், முத்துக்கருப்பன், வீரணன் மூவரையும் கொன்றதாக இ. பி கோ. 302 செக்ஷன்படி குற்றஞ் சாட்டப்பட்டு ராமனுதபுரம் செஷ ன்ஸ் கோர்ட்டில் விசாரணை நடந்தது. பிரா விகூஷன் தரப்பு கேஸாவது:—கொஞ்ச காலத்திற்குமுன் மிளகனூர் வைத்தியய்யர் வீட்டில் சில சாமான்கள் களவு போயின. வைத்தியய்யர் தன் வீட்டில் முதலாவது எதிரி முதலிய சிலர் சாமான்களைத் திருடி விட்டதாக கொட்ட காச்சி யேந்தல் ராமன், முத்துக்கருப்பன், அரசக்குளம் வீரணன் மூவரிடம் சொன்னார். திருடப்பட்ட சாமான்கள் சூரிக்கனேந்தல் கிராமத்திலிருப் பதாக ராமன், முத்துக்கருப்பன், வீரணன் மூவருக்கும் தெரிந்து, மூவரும் 23-2-20: ல் அந்த கிராமத்துக்கு சாமான்களை மீட்டு வரச் சென்றனர். வழியில் அன்றிரவு கோர்ட் டில் ஆஜர் எதிரிகளும் மற்றும் சிலரும் அவர் களை வழி மறித்து அவர்களைக் கொன்று, தலைகளைத் துண்டித்து நெடுங்குளம் கண் மாய்க்கரையில் புதைத்தும், மற்ற உடல் களை சீலக்குளத்தில் வைக்கோற் படப்பில் போட்டு தீவைத்துக் கொளுத்தியும் விட் டார்கள்.

ஜட்ஜ் எதிரிகள் நால்வரும் குற்றவாளிக ளெனக் கண்டு நால்வருக்கும் ஆயுள் பரியந் தம் தீவாந்திர சிக்ஷை விதித்தார். பிராஸி கூஷன் தரப்புக்காக பப்ளிக் பிராஸிகூடர், மிஸ்டர் ஆரோக்கியசாமி பிள்ளையும் எதிரி களுக்காக பாரிஸ்டர் கோபால் மேனனும் ஆஜரானார்கள்."

"இராஜாங்க சபைக்குத் தெரிந்தெடுக்கப் பட்ட பர்மியப் பிரதிநிதியான மிஸ்டர் பூ போபாய் பர்மியர்களின் பிரதிநிதி யாகமாட் டாரென்றும் அவருக்கு நீர் நெருப்பு வழங் கக் கூடாதென்றும் பர்மியச் சங்கத்தார் ஒரு தீர்மானம் நிறைவேற்றியிருக்கின்றனர்."

சுதேசமித்திரன்.

15 MAR 1921

நிகழ்கால சத்தியம்.

Vol. X. மதராஸ்—மார்ச்சு௴, 1921. No. 3.

இந்தச் சந்ததியின் உச்சஸ்தானம்.

(THE CLIMAX OF THIS GENERATION.)

முற்காலங்களிலே மனுக்குலத்தாருக்கு தேவன் அநுப்பிய விசேஷ எச்சரிப்பின் தூதுகள், அவை எந்தெந்த சந்ததிக்கு அறிவிக்கப்பட்டதோ அந்தந்தச் சந்ததியிலேயே தவறா மல் நிறைவேறி யிருப்பது நாம் கவனிக்கத்தக்கதே.

பூலோகமெங்கும் ஒரு வேலை நடத்தப்பட்டு அது நடந்தேறும்படிச் செய்வதில் "கர்த்தருடைய கண்கள் பூமி யெங்கும் சுற்றிப்பார்க்கிற" போதெல்லாம் அப்படிப்பட்ட கிரியைக்கு ஆதாரமாகிய அஸ்திபாரத்தைப் பார்க்கிறவர்கள் அதின் முடிவையும் பார்க்கி றார்கள். சகரி. 4: 9, 10.

அந்தந்தச் சந்ததிக்கான விசேஷ தூது.

நோவாவின் நாட்களில் அக்கிரமம் மிகுதியாயிருந்தது. தேவனுடைய ஆவியானவர் அந்த ஜனங்களோடு வல்லமையாய்ப் போராடினார். அந்தச் சந்ததியானது நோவாவின் பிரசங்கத்தினால் பூரணமாய் எச்சரிக்கப் படவேண்டுமென்று ஏற்பாடு செய்யப்பட்டது. அந்தச் சந்ததியானது ஜலப்பிரளயம் வருவதைப் பார்க்கவேண்டியதாக விருந்தது. அதில் நீதிமான்கள் இரட்சிக்கப்படுவதையும் பொல்லாதவர்கள் அழிக்கப்படுவதையும் அந்தச் சந்ததி காணவேண்டியிருந்தது.

ஆபிரகாமின் காலத்திலிருந்த சந்ததியும் பொல்லாததாயிருந்தது. "சோதோம் கொமோராவின் கூக்குரல் பெரிதாயிருந்ததினாலும் அவைகளின் பாவம் மிகவும் கொடிதா யிருந்ததினாலும்" அந்தச் சந்ததியும் அதற்கு வரப்போகிற அழிவைப்பற்றி எச்சரிக்கப்பட வேண்டியதாயிருந்தது. அதிலிருந்து நீதியான்கள் பிரிக்கப்படுவதையும் பொல்லாத வர்கள் சுட்டெரிக்கப்படுவதையும் ஆபிரகாமின் கண்கள் காணும்படியாயிருந்தது. தேவன் அந்தச் சமபூமியின் பட்டணங்களை அழிக்கும்போது ஆபிரகாமை நினைத்தார். ஆதி. 19: 29.

மேலும், இஸ்ரவேலர் எகிப்திலிருந்து புறப்பட்டு கானானுக்குப் பிரயாணம் பண் ணின் விஷயத்திலும் அதைப்பற்றிய ஏற்பாடுகள் எந்தச் சந்ததியில் ஆரம்பித்ததோ அதே சந்ததியில் அது நிறைவேறிற்று. "இவ்விதமாய் மோசே வேலையை முடித்தான்." யாத். 40: 33.

சாலமோன் தேவாலயத்தைக் கட்டி முடித்த வேலையும் மகா முக்கியமான ஓர் பெரிய விஷயம். 'என் கண்களும் என் இருதயமும் எந்நாளும் அங்கே யிருக்கும்' என்று யேகோவா அதைப்பற்றிச் சொன்னார். இந்தப் பெரிய வேலையின் நிறைவேறுதலைப்

பற்றியும் "அப்படியே சாலமோன் ஆலயத்தைக் கட்டி முடித்தான்" 1 இரா. 6: 14 என்று வாசிக்கிறோம்.

யோவான் ஸ்நானகனுடைய தூதும் அவருடைய காலத்திலே நிறைவேறினது. அவர் தேவனுடைய ஆட்டுக்குட்டியைக் கண்டார்.

வேத பாரகரும் பரிசேயரும் இயேசுவினிடத்தில் அடையாளத்தைத் தேடினபோது அவர் அவர்களுக்கு மறுமொழியாக: "இந்தப் பொல்லாத விபசார சந்ததியார் அடையாளத்தைத் தேடுகிறார்கள். ஆனாலும், யோனா தீர்க்கதரிசியின் அடையாளமேயன்றி வேறே அடையாளம் இவர்களுக்குக் கொடுக்கப்படுவதில்லை" என்றார். அந்தச் சந்ததிக்கு அறிவிக்கப்பட்ட ஓர் திட்டமான தூதும், திட்டமான அடையாளமும் இருந்தது.

தேவனுடைய ஒரு சந்ததியின் தூதும் நடபடிக்கைகளும் நோவாவின் காலமுதல் சிலுவை வரையிலுமுள்ள சகல சரித்திரத்தையும் அடக்கிக்கொண்டதாயிருக்கிறது.

தற்கால சந்ததி.

பூமியின் குடிகளுக்கு வரப்போகிற அழிவைப்பற்றி அல்லது ஒரு விசேஷ சம்பவத்தைப்பற்றி அவர்களுக்கு ஏற்கனவே எச்சரிப்பின் தூதை அநுப்புவது எப்போதும் தேவனுடைய ஏற்பாடாயிருந்திருக்கிறதென்று பார்த்தோம். தற்காலத்திலும், இன்றைக்கும் அவருடைய ஏற்பாடு அப்படித்தானிருக்கிறதென்று நாம் எதிர்பார்க்கக் கூடாதா?

"அவர் தம்முடைய தாசனாகிய மோசேயைக்கொண்டு சொன்ன அவருடைய நல்வார்த்தைகளிலெல்லாம் ஒரு வார்த்தையாகிலும் தவறிப்போகவில்லை" 1 இரா. 8: 56 என்பது மெய்யாயிருந்தது. அதைப்போலவே இந்தச் சந்ததியைப்பற்றி அவர் கொடுத்த நல்வாக்குத்தத்தங்களும் நிறைவேறாமற் போகாது. அதைப்பற்றி நாம் பயப்படவேண்டியதென்ன? தேவன் நேற்றும் இன்றும் என்றும் மாறாதவராயிருக்கிறார். அவர் முற்காலங்களில் மனிதரிடத்தில் எப்படி நடந்துகொண்டாரோ அப்படியே தற்காலத்திலும் நம்மிடத்தில் நடந்துகொள்ளுவார். முற்காலத்திலிருந்த சந்ததிகளுக்கு அவர் செய்யாமல் விட்டுவிட்டது என்ன, இதிலும் அதிகமாய் என்ன செய்யவேண்டும்? இந்தச் சந்ததிக்கும் அவர் இன்னும் அதிகமாய் என்ன செய்யவேண்டும்?

பிரமிக்கத்தக்க அடையாளங்கள்.

உலக சிருஷ்டிப்பு முதற்கொண்டு முன் எந்தக்காலத்திலும் தற்காலத்தைப்போன்ற முக்கியமும், பொல்லாப்பையும் அழிவையும் காண்பிக்கிறதுமான காலம் இருந்ததேயில்லையென்று ஆயிரக்கணக்கான ஆண்களும் பெண்களும் இக்காலத்தில் ஒப்புக்கொள்ளுகிறார்கள். மார்க்க விஷயத்தில் இப்படிப்பட்ட உயிர்ப்பும், இனி சம்பவிக்கப்போகிற அடுத்த சம்பவம் என்ன என்பதைப்பற்றி உலகத்தில் எங்கே பார்த்தாலும் உண்டாயிருக்கும் ஏக்கமும் முன் எக்காலத்திலும் இவ்வளவாய் இருந்ததில்லை.

முதலாளிகளுக்கும் வேலையாட்களுக்கும் விவாதமும் சண்டைகளில் ஆவிக்குரிய நற்சீர் கெட்டுப்போகுதலும், அறிவுப் பெருக்கமும், வானத்தில் அடையாளங்களும், யுத்தங்களும் யுத்த ஆயத்தங்களும், துன்மார்க்கங்களும், குற்றங்கள் அதிகப்படுதலும், கொலைபாதகங்களுமெல்லாம் இந்தச் சந்ததியின் துவக்கமுதல் அதிகரித்துக்கொண்டே வருவது உண்மையான விஷயம்.

உலகம் எச்சரிக்கப்படுவது.

இயேசுவானவர் தமது இரண்டாம் வருகைக்கு முன்னே நடக்கும் அநேக அடையாளங்களை வரிசையாய்ச் சொல்லிக்கொண்டு வந்து கடைசியாக "இவைகளெல்லாம் சம்பவிக்குமுன்னே இந்தச் சந்ததி ஒழிந்துபோகாதென்று" தெளிவாய்ச் சொல்லியிருக்கிறார். மத். 24; 34.

மனித சம்பவங்களைப்பற்றிய சரித்திரங்களிலே இந்தச் சந்ததியில் மிகப் பெரிய மாறுதல்கள் நடந்தேறி வருகின்றன.

இந்தச் சந்ததியானது, "தேவ ரகசியம்" இப்பூமியில் நிறைவேறுகிறதைப் பார்க்கும். வெளி. 10: 6. இந்த "தேவ ரகசியத்தைப்பற்றி" அல்லது "இராட்சியத்தின் சுவிசேஷத்தைப்பற்றி" பேசும்போது "இராட்சியத்தினுடைய இந்தச் சுவிசேஷம் பூலோகமெங்குமுள்ள சகல ஜாதிகளுக்கும் சாட்சியாகப் பிரசங்கிக்கப்படும். அப்போது முடிவு வரும்" என்று சொன்னார். இது இந்தச் சந்ததியிலேயே நிறைவேறும் என்பதற்கு நமக்குள்ள விசேஷித்த சாட்சிகளில் ஒன்று. இதுவரையில் நடவாத பிரகாரமாக இப்போது இராட்சியத்தின் சுவிசேஷமானது "சகல ஜாதிகளுக்கும் கோத்திரத்தாருக்கும், பாஷைக்காரருக்கும், ஜனக்கூட்டத்திற்கும்" சென்றிருக்கிறது. வெளி. 14, 6, 7.

முற்காலத்திலிருந்த விசேஷித்த சந்ததிகளிடத்தில் தேவன் எப்படி நடந்துகொண்டிருந்தாரோ அப்படியே இந்தச் சந்ததியிலும் நடந்துகொண்டிருக்கிறார்.

நாம் தேவனிடத்தில் சரியாயிருக்கிறோமா?

பரிசுத்த ஆவியானவர் இவ்விஷயமாக உன்னோடு பேசும் சத்தத்தை, நீ, கேட்டால் மற்றவர்கள் செய்ததுபோல உன் இருதயத்தைக் கடினப்படுத்தாதே. தேவன் இப்பூமியில் துரிதமாய் ஒரு வேலை நடப்பிக்கிறார்.

"அவர் நீதியோடே சீக்கிரமாய் தம்முடைய காரியத்தை நிறைவேற்றுவார். கர்த்தர் பூமியிலே சீக்கிரமாகவே காரியத்தை நிறைவேற்றி முடிப்பார்." ரோ. 9: 28. அவருடைய ஆவி எப்போதும் மனிதரோடு போராடுவதில்லை. இப்பொழுதே அவருக்கு உன்னை ஒப்புக்கொடுத்து இந்தச் சந்ததியில் இரட்சிக்கப்பட்டு ஆட்டுக்குட்டியின் இரத்தத்தினால் கழுவப்பட்ட கூட்டத்தில் நீ ஏன் கண்டு பிடிக்கப்படக்கூடாது?

பாவ உற்பத்தியும் அதின் முடிவும்.

(THE ORIGIN AND END OF EVIL)

தங்கள் பொல்லாத வழிகளை விட்டுவிட மனதில்லாமலும் தேவனுடைய கற்பனைகளுக்குக் கீழ்ப்படியாமலும் சாத்தானால் பாவத்தில் விழுந்த ஜனங்கள் சாத்தானோடுகூட அழிக்கப்படுவார்கள். இதைக்குறித்து எபிரேய நிருபத்தை எழுதினவர் "ஆதலால், பிள்ளைகள் மாம்சத்தையும் இரத்தத்தையும் உடையவர்களாயிருக்க, அவரும் அவர்களைப்போல மாம்சத்தையும் இரத்தத்தையும் உடையவரானார்; மரணத்துக்கு அதிகாரியாகிய பிசாசானவனைத் தமது மரணத்தினாலே, அழிக்கும்படிக்கும்,........அப்படியானார்" என்று சொல்லுகிறார். எபி. 2. 14.

இதனால், நம்மைச் சுற்றி நிற்கிற பாவங்கள் யாவற்றிற்கும் ஓர் முடிவு வருமென்று தெரிகிறது. சாத்தான் உலகத்தை அரசாண்டதின் பலனாகப் பொல்லாப்பே வந்ததென்று ருசுப்படுத்தப் போர்ந்த சமயமிருக்கிறது. அவனுடைய பொல்லாத கிரியைகளினால் நீதிமான்களும் துன்பப்படுகிறார்கள். அநேக வேலைகளில் பொல்லாதவர்களின் துன்பத்தைவிட நீதிமான்களின் துன்பம் அதிகமாகத் தோன்றுகிறது. தேவன் நம்மில் ஒருவரையும் சோதிக்கிறவரல்ல. நாம் தேவ பக்தியுள்ளவர்களாயிருக்கிறோமா என்றும் புது உலகத்திற்கு ஏற்ற குடிகளாயிருக்கிறோமா என்றும் அறியும்படியாகத் தேவன் சாத்தானைத் தனது கிரியைகளை நடப்பிக்கும்படியாக விட்டுவைத்திருக்கிறார்.

பொல்லாதவர்கள், தாங்கள் பொல்லாப்பாய் நடப்பித்த கிரியைகளுக்குத்தக்கதாகத் தண்டனையடைவார்களென்றும் தேவனுடைய கற்பனைகளை உத்தமமாய்க் கைக்கொள்ளு

கிறவர்கள் நற்பலனை யடைவார்களென்றும் தேவ வசனம் தெளிவாய்ப் போதிக்கிறது. இந்தப் பிரதி பலன் மரணத்தில்-உடனே அளிக்கப்படுகிறதில்லையென்று முன் பத்திகளில் கூறியிருக்கிறோம். "உயிரோடிருக்கிறவர்கள் தாங்கள் மரிப்பதை அறிவார்களே, மரித்தவர்கள் ஒன்றும் அறியார்கள்." நாம் மரித்து ஒன்றுமறியாதவர்களாயிருக்கும்போது நமக்குப் பிரதி பலனளிக்கப்படுமானால், நாம் அதைப்பற்றின அறிவில்லாதவர்களாயிருப்பதால் அந்த வெகுமதியை ஓர் அற்பமானதென்றே சொல்லலாம். கிறிஸ்து இவ்வுலகத்திலிருந்தபோது இவ்வெகுமதியைக்குறித்து அநேகதரம் பேசியிருக்கிறார். "என் பிதாவின் வீட்டில் அநேக வாசஸ்தலங்கள் உண்டு; அப்படியில்லாதிருந்தால், நான் உங்களுக்குச் சொல்லியிருப்பேன்; ஒரு ஸ்தலத்தை உங்களுக்காக ஆயத்தம் பண்ணப்போகிறேன்" என்றார். யோவா. 14: 2. கிறிஸ்துவின் உத்தம சீஷர்கள் எப்போதும் உலகத்திலிருக்கப் போகிறதில்லை. ஆனால் அவர் அவர்களுக்காக ஆயத்தம் பண்ணியிருக்கிற ஓர் இடத்திற்குப் போகவேண்டியவர்களாயிருக்கிறார்கள். நித்திய ஜீவனுள்ளதும் பாவம் துன்பம் துக்கமற்ற ஒரு இடம் நீதிமான்களின் வெகுமதியாகும். நாம் மரிக்கும்போது இந்த நித்திய ஜீவனைப் பெற்றுக்கொள்ளுகிறதில்லை. "இதைக்குறித்து நீங்கள் ஆச்சரியப்படவேண்டாம்; ஏனென்றால் பிரேதக்குழிகளிலுள்ள அனைவரும் அவருடைய சத்தத்தைக் கேட்குங் காலம் வரும்; அப்பொழுது, நன்மை செய்கிறவர்கள் ஜீவனை அடையும்படி எழுந்திருக்கிறவர்களாகவும் தீமை செய்தவர்கள் ஆக்கினையை அடையும்படி எழுந்திருக்கிறவர்களாகவும் புறப்படுவார்கள்" என்று யோவான் 5: 28, 29 ல் வாசிக்கிறோம். ஆகையினால் மரித்த நல்லார் பொல்லார் யாவரும் தங்கள் பிரேதக்குழிகளிலிருந்து புறப்படும் காலம் வரும் என்று சொல்லப்பட்டிருக்கிறது. பொல்லாதவர்கள் எப்படி தண்டிக்கப்படுவார்களென்று நாம் முன்னமே பார்த்திருக்கிறோம். யோவான் 5: 28, 29-ல் பொல்லாதவர்கள் தங்கள் தண்டனையை அடையுமுன் ஆக்கினைத் தீர்ப்புக்கென்று புறப்படுவார்களென்று பார்க்கிறோம். அந்த ஆக்கினைத் தீர்ப்பளிக்கும் நியாயத்தீர்ப்பு நீதிமான்களின் உயிர்த்தெழுதலில் நடக்கும்.

இந்த உயிர்த்தெழுதல் கிறிஸ்துவின் இரண்டாம் வருகையில் நடக்குமென்று அவர் தாமே அநேக வாக்குத்தத்தம் கொடுத்திருக்கிறார். "நான் போய் உங்களுக்காக ஸ்தலத்தை ஆயத்தம் பண்ணின பின்பு, நான் இருக்கிற இடத்திலே நீங்களும் இருக்கும்படி, நான் மறுபடியும் வந்து உங்களை என்னிடத்தில் சேர்த்துக்கொள்ளுவேன்" என்று யோவான் 14: 3-ல் சொல்லியிருக்கிறார். கிறிஸ்து மரித்தோரிலிருந்து உயிர்த்தெழுந்த பிறகு பரலோகத்திற்கு எழுந்தருளினார். அவர் தமது சீஷர்களோடு பேசிக்கொண்டிருக்கையில் பூமியிலிருந்து உயர எடுத்துக்கொள்ளப்பட்டார். சீஷர்கள், கிறிஸ்துவை மறைத்து எடுத்துக்கொண்ட மேகத்தை அண்ணாந்து பார்த்துக்கொண்டிருந்தபோது, இதோ, இரண்டு தூதர்கள் அவர்களுக்குத் தரிசனமாகி, 'கலிலேயராகிய மனுஷரே, நீங்கள் ஏன் வானத்தை அண்ணாந்து பார்த்து நிற்கிறீர்கள்? உங்களிடத்தினின்று வானத்துக்கு எடுத்துக்கொள்ளப்பட்ட இந்த இயேசுவானவர் எப்படி உங்கள் கண்களுக்கு முன்பாக வானத்துக்கு எழுந்தருளிப்போனாரோ, அப்படியே மறுபடியும் வருவார் என்றார்கள்." இக்காரியத்தைக் குறித்து அப்போஸ்தலனாகிய பவுல் 1 தெச. 4:16, 17-ல் "ஏனெனில், கர்த்தர் தாமே ஆரவாரத்தோடும், பிரதான தூதனுடைய சத்தத்தோடும், தேவ எக்காளத்தோடும் வானத்திலிருந்து இறங்கி வருவார்; அப்பொழுது கிறிஸ்துவுக்குள் மரித்தவர்கள் முதலாவது எழுந்திருப்பார்கள். பின்பு, உயிரோடிருக்கும் நாமும் கர்த்தருக்கு எதிர்கொண்டுபோக, மேகங்கள்மேல் அவர்களோடேகூட ஆகாயத்தில் எடுத்துக்கொள்ளப்பட்டு, இவ்விதமாய் எப்பொழுதும் கர்த்தருடனேகூட இருப்போம்" என்று சொல்லுகிறார்.

இவ்விதமாக, கிறிஸ்துவின் இரண்டாம் வருகையில் நீதிமான்கள் உயிரோடெழுப்பப்படுகிறார்களென்று பார்க்கிறோம். அவர்கள் கிறிஸ்துவுடனேகூட பரலோகத்துக்கு

எடுத்துக்கொள்ளப்பட்டு ஆயிரவருஷமளவும் அவருடனேகூட இருப்பார்கள். வெளி. 20: 5. இந்த ஆயிர வருஷமளவும் சாத்தான் சங்கிலிகளால் கட்டப்பட்ட ஒரு கைதியைப் போலப் பூமியிலே இருப்பான். நீதிமான்கள் யாவரும் பரலோகத்திலிருப்பதால் சோதித்து மோசம் போக்குவதற்கு சாத்தானுக்கு ஒரு நீதிமான்கூட அகப்படமாட்டான். மரித்த பொல்லாதவர்களும் தங்கள் கல்லறைகளிலேயே இருப்பார்கள். பூமியில் தான் நடப்பித்த பொல்லாப்புகளையெல்லாம் சிந்திக்கும்படிக்குச் சாத்தானுக்கு அப்போது சமயமிருக்கும்: தான் கிறிஸ்துவால் ஜெயிக்கப்பட்டாயிற்றென்றும் தன் அழிவு நெருங்கியிருக்கிறதென்றும் சாத்தானுக்குத் தெரியும். ஆயிர வருஷத்திற்குப் பிற்பாடு இரண்டாம் உயிர்த்தெழுதலில் பொல்லாதவர்கள் உயிரோடெழுந்திருப்பார்கள். சாத்தான் அப்பொழுது தன் சங்கிலிகளிலிருந்து விடுவிக்கப்பட்டு முழு உக்கிரத்தோடு தன் பொல்லாப்பை நடப்பிப்பான். அச்சமயத்தில் வானத்திலிருந்து அக்கினி இறங்கி வந்து அவனையும் உயிரோடெழுப்பப்பட்ட பொல்லாதவர்களையும் பட்சித்துப் போடும். (வெளி. 20-ம் அதிகாரம் பார்க்கவும்.)

அப்பொழுது சர்வ லோகமும் பாவமற்றதாயிருக்கும். அப்போது பாவமும் பாவிகளும் அழிக்கப்படுவார்கள். மனித ஜாதிக்காகத் தேவன் நிச்சயித்த சந்தோஷத்தைத் தடைப்படுத்த யாதொன்று மிராது. வியாதி துன்பம், துக்கம் மரணம் யாவும் நீங்கிப்போம். உலகமானது மறுபடியும் தன் ஆதி சிருஷ்டிப்பின் நிலைமையை அடையும். அப்பொழுது சர்வ லோகங்களிலுமுள்ள ஜீவ ராசிகள் யாவும் சிருஷ்டிகரின் அளவற்ற அன்பையும் ஞானத்தையும் அறிக்கையிட்டு அவரை என்றென்றைக்கும் துதிப்பார்கள். சாத்தானையும் அவனைப் பின்பற்றின பொல்லாதவர்களையும் அழிக்கும் அக்கினியானது பூமியைச் சுத்திகரிக்கும். இப்போது தாவர ஜங்கம ராசிகளின் அழகைக் கெடுக்கும் வியாதி முதலான காரியங்கள் அங்கே காணப்படாது. புது பூமியின் பாக்கியத்தைப் பங்கப்படுத்தப் பொல்லார் இருக்கமாட்டார்கள். யோவான் அப்போஸ்தலன் இதைப் பின்வருமாறு விஸ்தரிக்கிறார். "பின்பு, நான் புதிய வானத்தையும் புதிய பூமியையும் கண்டேன்; முந்தின வானமும் முந்தின பூமியும் ஒழிந்துபோயின; சமுத்திரமும் இல்லாமற்போயிற்று. யோவானாகிய நான், புதிய எருசலேமாகிய பரிசுத்த நகரத்தை தேவனிடத்தினின்று பரலோகத்தைவிட்டு இறங்கிவரக் கண்டேன், அது தன் புருஷனுக்காக அலங்கரிக்கப்பட்ட மணவாட்டியைப்போல ஆயத்தமாக்கப்பட்டிருந்தது. மேலும், பரலோகத்திலிருந்து உண்டான ஒரு பெருஞ் சத்தத்தைக் கேட்டேன்; அது: இதோ மனுஷர்களிடத்திலே தேவனுடைய வாசஸ்தலமிருக்கிறது, அவர்களிடத்திலே அவர் வாசமாயிருப்பார்; அவர்களும் அவருடைய ஜனங்களாயிருப்பார்கள், தேவன் தாமே அவர்களோடேகூட இருந்து அவர்களுடைய தேவனாயிருப்பார். அவர்களுடைய கண்ணீர் யாவையும் தேவன் துடைப்பார்; இனி மரணமுமில்லை, துக்கமுமில்லை, அலறுதலுமில்லை, வருத்தமுமில்லை; முந்தினவைகள் ஒழிந்துபோயின என்று விளம்பினது." வெளி. 21: 1-4.

பூமி புதுப்பிக்கப்படுவது தேவ ஏற்பாட்டின் ஓர் முக்கிய அம்சமாயிருக்கிறது. தீர்க்கதரிசிகளும் இதை அறிய அதிக ஆசையாயிருந்தார்கள். இதைப்பற்றி அநேக விஸ்தரிப்புகள் நமக்குக் கொடுக்கப்பட்டிருக்கிறது. இரட்சிக்கப்பட்டவர்கள் யாதொரு நோக்கமுமில்லாமல் அனேகர் நினைக்கிறபடி பட்டுப்பூச்சிகளைப்போலப் பறந்து திரிவார்களென்று நாம் நினைக்கக்கூடாது. அவர்கள் பாவமில்லாத உலகத்தில் சில பிரயோஜனமான ஊழியத்தைச் செய்துகொண்டிருப்பார்கள். நாம் இப்பொழுது புகழ்ந்து பேசும் இயற்கை அழகானது பாவமற்ற காலத்தில் இதைவிடப் பதின்மடங்கு அழகாயிருக்கும். அகண்ட சமபூமிகளில் அமைதலாய் ஓடும் ஆறுகளெல்லாம் அழகிய குன்றுகள் பர்வதங்களாக மாறும். பெரிய விருக்ஷங்களும் அழகிய பூச்செடிகளும் அவைகளைத் தங்கள் அழகினால் சிறப்பிக்கும். ஆதாமும் ஏவாளும் பாவத்தில் விழு முன்னதாக என்ன வேலை செய்துகொண்டிருந்தார்களோ அதே வேலையை இரட்சிக்கப்பட்டவர்கள் செய்வார்கள். அவர்கள் தோட்டங்களை நாட்டி

அதைப் பண்படுத்தி அவைகளின் கனிகளைப் புசிப்பார்கள். வீடுகளைக் கட்டி அவைகளில் சமாதானமாய் வசிப்பார்கள். தேவனுடைய பரிசுத்த வசனம் "என் ஜனம் சமாதான தாபரங்களிலும், நிலையான வாசஸ்தலங்களிலும், அமைதியாய்த் தங்கும் இடங்களிலும் குடியிருக்கும்" என்று சொல்லுகிறது. ஏசா. 32: 18. "இனி கொடுமை உன் தேசத்திலும் அழிவும் நாசமும் உன் எல்லைகளிலும் கேட்கப்படமாட்டாது; உன் மதில்களை இரட்சிப்பென்றும், உன் வாசல்களைத் துதியென்றும் சொல்லுவாய்." ஏசா 60: 18. "வீடுகளைக் கட்டி அவைகளில் குடி யிருப்பார்கள். திராட்சத்தோட்டங்களை நாட்டி அவைகளின் கனியைப் புசிப்பார்கள். அவர்கள் கட்டுகிறதும் வேறொருவர் குடி யிருக்கிறதும், அவர்கள் நாட்டுகிறதும் வேறொருவர் கனி புசிக்கிறதுமாயிருப்பதில்லை;" ஏசா 65: 21, 22. "முட்செடிக்குப் பதிலாகத் தேவதாரு விருட்சம் முளைக்கும்; காஞ்சொறிக்குப் பதிலாக மிருதுச்செடி எழும்பும்;" ஏசா. 55: 13. "இனி மரணமுமில்லை, துக்கமுமில்லை, அலறுதலுமில்லை, வருத்தமுமில்லை;" வெளி. 21: 4.

புது பூமியின் பாக்கியமான ஜீவியத்தை ஒருவர் பின்வருமாறு வர்ணித்துச் சொல்லுகிறார்:—

"நமது நித்திய கால வருஷங்களைக் கழிக்கும்போது நாம் தேவனைப்பற்றியும் கிறிஸ்துவைப்பற்றியும் அதிகமதிகமாய் அறிந்துகொள்ளுவோம். ஞானம் அதிகரிக்கிறதுபோல அன்பும் தேவ வணக்கமும் பாக்கியமும் அதிகரிக்கும். மனிதர் எவ்வளவதிகமாய்த் தேவனைப்பற்றிப் படிக்கிறார்களோ அவ்வளவுக்கதிகமாய் அவர்கள் அவரது குணாதிசயங்களைக் கண்டறிவார்கள். இரட்சண்யத்தின் ஐசுவரியத்தையும் சாத்தானோடு புரிந்த பெரும் போரின் வெற்றியையும் இயேசு அவர்களுக்கு வெளிப்படுத்தும்போது அவர்கள் சந்தோஷ பக்தியோடு தங்கள் தங்கள் வீணைகளை மீட்டி ஆயிரமாயிரமும் பதினாயிரம் பதினாயிரமுமான இனிய ஓசைகளால் துதி பாடுவார்கள்.

"பாவமும் பாவிகளும் இனிமேல் இரார். சர்வ லோகமும் சுத்தமாயிருக்கும். முழு சிருஷ்டிப்பிலும் அன்பும் ஐக்கியமும் சதா குடிகொண்டிருக்கும். சர்வத்தையும் சிருஷ்டித்தவரிடமிருந்து ஜீவனும் வெளிச்சமும் எல்லையில்லா இடமட்டுக்கும் பரம்பும். அகிலாண்ட கோடியிலுள்ள உயிருள்ளதும் இல்லாததுமாகிய சர்வ சிருஷ்டிகளும் தங்கள் பூரண அழகினால் "தேவன் அன்பாய் இருக்கிறார்" என்று விளம்பும்.

E. M. Meleen, B. A.

கடைசி ஏழு வாதைகள்.

(THE SEVEN LAST PLAGUES)

இஸ்ரவேல் ஜனங்களை எகிப்து தேசத்திலிருந்து புறப்படப்பண்ணி, அவர்களை வாக்குத்தத்தம் பண்ணின கானான் தேசத்துக்குக் கூட்டிக்கொண்டு போகும்போது, இஸ்ரவேலரின் தேவனாகிய ஏகோவாவையும், அவருடைய வார்த்தைகளையும் எதிர்த்து, அவரோடே போர்செய்த எகிப்தியரை எப்படி வாதைகளால் தண்டித்து, தமது ஜனங்களை விசேஷித்த பிரகாரமாய், விடுதலை செய்தாரோ அப்படியே இவ்வுலக சரித்திரம் முடியும்போதும், தேவன் இப்பூமியிலிருக்கும் தமது மெய் இஸ்ரவேலரையும், வெகு ஆச்சரியமானவிதமாய், பரிபாலித்து, தாம் ஆயத்தம் பண்ணியிருக்கும் தமது பிதாவின் வீட்டின் வாசஸ்தலத்துக்கு வெகு ஆரவாரத்தோடு கூட்டிக்கொண்டுபோவதுமன்றி, அவருக்கு எதிர்த்தும், அவருடைய பிரமாணங்களையும் எச்சரிப்பையும் அவமதித்தும், நடக்கிற இப்பொல்லாத லோகத்தின் மனுமக்களை அவர் பயங்கரமான ஏழு வாதைகளால் தண்டிக்கப் போகிறாரென்று அவருடைய சத்திய வேதம் விளம்புகிறது. வெளிப்படுத்தின விசேஷம்

15: 1-ல் "பின்பு வானத்திலே பெரிதும் ஆச்சரியமுமான வேறொரு அடையாளமாகிய கடைசியான ஏழு வாதைகளையுடைய ஏழு தூதரைக் கண்டேன்; அவைகளால் தேவனுடைய கோபம் முடிகிறது." என வாசிக்கிறோம். இந்தப் பயங்கர காட்சியை யோவான், பெரிதும் ஆச்சரியமுமான அடையாளமென்கிறார். நிச்சயமாகவே இவ்வுலகம் உண்டான காலமுதல் ஒரு காலமும் சம்பவித்திராத பெரிதும் ஆச்சரியமுமான காட்சி தான். மேலும், 'கடைசியான ஏழு வாதைகள்' என்று இவைகள் அழைக்கப்பட்டிருப்பதால், இத்துடன் இப்பூலோக சரித்திரம் முடியத்தக்கதான கடைசிச் சம்பவமாயுமிருக்கிறது. "அப்பொழுது தேவாலயத்திலிருந்து உண்டான ஒரு பெருஞ் சத்தம் அந்த ஏழு தூதருடனே நீங்கள் போய் தேவனுடைய கோப கலசங்களைப் பூமியின்மேல் ஊற்றுங்களென்று சொல்லக் கேட்டேன். முதலாம் தூதன் போய்த் தன் கலசத்திலுள்ளதைப் பூமியின்மேல் ஊற்றினான்; உடனே மிருகத்தின் முத்திரையைத் தரித்தவர்களும் அதின் சொரூபத்தை வணங்குகிறவர்களுமாகிய மனுஷர்களுக்குப் பொல்லாத கொடிய புண் உண்டாயிற்று." வெளி. 16: 1, 2. எகிப்தியரின்மேல் வாதை அனுப்பப்படும்போது, அவர்கள் தங்கள் பாவங்களை விட்டு மனந்திரும்பி, குணப்பட ஓர் தவணை யிருந்தது. ஆனால் இந்த வாதைகள் வரும்போது ஒருவரும் மனந்திரும்பி, இரட்சிக்கப்படமுடியாதபடி தவணையின் காலம் முடிந்துவிடுகிறது. இதுதான் மிகுந்த பரிதாபம்! ஆகையால்தான் இந்த வாதைகள் அனுப்பப்படுமுன் பலத்த பயங்கர எச்சரிப்புகள் கொடுக்கப்பட்டிருக்கின்றன.

"இரண்டாம் தூதன் தன் கலசத்திலுள்ளதைச் சமுத்திரத்தில் ஊற்றினான்; உடனே அது செத்தவனுடைய இரத்தம்போலாயிற்று; சமுத்திரத்திலுள்ள பிராணிகள் யாவும் மாண்டுபோயின." 16: 3. இதனால் பெரிய நாற்றம் உலகம் முழுதும் உண்டாவதுமன்றி, தன்னைச் சிருஷ்டித்த சிருஷ்டிகரின் சித்தத்தை சற்றேனும் நின்று யோசிக்க நேரம் முதலாய்த் தேடாமல், தங்களது செல்வப் பெருக்குகளையும் பேர்ப் பிரஸ்தாபங்களையும் தேடி, சமுத்திரங்களிலே பிரயாணம் பண்ணின தனவான்கள், இப்பொழுது தங்கள் ஜோலிக்கு பெரிய இடைஞ்சலுண்டாவதைக் கண்டு, சமுத்திரத்தையும் உண்டாக்கி, அதின் அலைகளையும் அதட்டி நிறுத்துகிற வல்லமையுள்ள சற்குருவின் மகத்துவத்தைச் சற்று கவனித்து பிரமிக்கத்தக்கதாயிருக்கும்.

"மூன்றாம் தூதன் தன் கலசத்திலுள்ளதை ஆறுகளிலும், நீரூற்றுகளிலும், ஊற்றினான்; உடனே அவைகள் இரத்தமாயின; அப்பொழுது தண்ணீர்களின் தூதன் இருக்கிறவரும் இருந்தவரும் பரிசுத்தருமாகிய தேவரீர் இப்படி நியாயந்தீர்க்க நீதியுள்ளவராயிருக்கிறீர். அவர்கள் பரிசுத்தவான்களுடைய இரத்தத்தையும் தீர்க்கதரிசிகளுடைய இரத்தத்தையும் சிந்தினபடியினால், இரத்தத்தையே அவர்களுக்குக் குடிக்கக் கொடுத்தீர்; அதற்குப் பாத்திரராயிருக்கிறார்களென்று சொல்லக் கேட்டேன். பலிபீடத்திலிருந்த வேறொருவன்: ஆம், சர்வ வல்லமையுள்ள தேவனாகிய கர்த்தாவே, உம்முடைய நியாயத் தீர்ப்புகள் சத்தியமும் நீதியுமானவைகள் என்று சொல்லக்கேட்டேன். நான்காம் தூதன் தன் கலசத்திலுள்ளதை சூரியன்மேல் ஊற்றினான்; தீயினால் மனுஷரைத் தகிக்கும்படி அதற்கு அதிகாரம் கொடுக்கப்பட்டது. அப்பொழுது மனுஷர்கள் மிகுந்த உஷ்ணத்தினாலே தகிக்கப்பட்டு, இந்த வாதைகளைச் செய்ய அதிகாரமுள்ள தேவனுடைய நாமத்தைத் தூஷித்தார்களேயல்லாமல், அவரை மகிமைப்படுத்த மனந்திரும்பவில்லை." 16: 4-9. சூரிய வணக்கம் மிகவும் பழைமையானதும் எல்லா வகையான விக்கிரகாராதனையிலும் ஜனங்கள் சிருஷ்டிகரை மறந்து, சிருஷ்டிக்கு நேராகக் கையெடுப்பதால், அவர்கள் நமஸ்கரிக்கிற அதே சூரியனைக்கொண்டே ஜனங்களைத் தண்டிக்கிறார். இப்படித்தான் எகிப்தியர்களையும் அவர்கள் நமஸ்கரித்த பொய்த் தேவர்களைக்கொண்டே வாதித்து வெட்கப்படுத்தினார்.

"ஐந்தாம் தூதன் தன் கலசத்திலுள்ளதை மிருகத்தினுடைய சிங்காசனத்தின்மேல் ஊற்றினான்; அப்பொழுது அதின் இராஜ்யம் இருளடைந்தது; அவர்கள் வருத்தத்தினாலே தங்கள் நாவுகளைக் கடித்துக்கொண்டு, தங்கள் வருத்தங்களாலும், தங்கள் புண்களாலும், பரலோகத்தின் தேவனை தூஷித்தார்களேயல்லாமல், தங்கள் கிரியைகளை விட்டு மனந் திரும்பவில்லை." 16: 10-11. வெளிப்படுத்தின விசேஷத்திலும் வேதாகமத்தின் மற்றப் பாகத்திலும் இந்த மிருகம் எது என்று நாம் கண்டு பிடிப்பதற்கு ஏழு வெவ்வேறான பதங்கள் உபயோகிக்கப்பட்டிருக்கின்றன. அதாவது, 'பாவ மனுஷன்' 'கேட்டின் மகன்' 'அந்திக் கிறிஸ்து' 'விசுவாச துரோகம்,' 'பாழாக்கும் அருவருப்பு' 'ஏசபேல்' 'பாபிலோன்' 'அக்கிரமத்தின் இரகசியம்' 'கட்டுக்கடங்காததின் இரகசியம்'—கிறிஸ்துவின் வருகைக்குமுன் உலகமெங்கும் பரம்பியிருக்கிற இப்படிப்பட்ட குணங்களுள்ள தவறிப் போன கொள்கையையுடையவர்களைத் தேவனுடைய கோபாக்கினையால் தண்டிக்கவேண்டியது மிகுந்த அவசியமல்லவா? இன்னும் இதைப்பற்றி நமக்கு என்ன சொல்லப்பட்டிருக்கிறதென்றால், அது சத்தியத்தைத் தரையில் தள்ளிற்று; தேவனுடைய ஆலயத்தில் தேவன்போல் உட்கார்ந்து இருக்கிறது; பிரமாணங்களை மாற்ற நினைக்கிறது; பரிசுத்தவான்களை ஒடுக்கும்; இராஜாக்களை உபசரித்து அவர்களுடைய சிநேகங்களைப் பெறும்; "உலக முழுவதும் ஒரு மகா நகரம்போல் பரவும்; இப்படிப்பட்ட பதங்கள்தான்—இந்த மிருகத்தைப்பற்றி வேதாகமத்தில் உபயோகித்திருக்கின்றன; இந்த மிருகம் எதுவென்று கண்டுபிடிக்க நமக்கு இதற்குமேல் தேவையில்லை எண்ணு என்கிறோம். இந்த மிருகத்தின் சிங்காசனமாகிய அந்த அதிபதியின் மூலஸ்தானத்திலே ஐந்தாம் தூதன் தன் கலசத்திலுள்ளதை ஊற்றுகிறதாக வாசிக்கிறோம்.

"ஆறாம் தூதன் தன் கலசத்திலுள்ளதை ஐபிராத்து என்னும் பெரிய நதியின்மேல் ஊற்றினான்; அப்பொழுது சூரியன் உதிக்கிற திசையிலிருந்து வரும் ராஜாக்களுக்கு வழி ஆயத்தமாகும்படி அந்த நதியின் தண்ணீர் வற்றிப்போயிற்று." 16: 12. இதனால் பயங்கரமான அர்மகெதோன் யுத்தத்திற்கு முன்னதாக உலகத்தின் பெரிய ராஜ்யங்கள் ஐபிராத் நதி யோடுகிற தேசமாகிய துருக்கி ராஜ்யத்தை வற்றிக் காய்ந்துபோகப் பண்ணுவார்களென்று தெளிவாய்க் காட்டுகிறது. "அப்பொழுது வலு சர்ப்பத்தின் வாயிலும், மிருகத்தின் வாயிலும், கள்ளத்தீர்க்கதரிசியின் வாயிலுமிருந்து தவளைகளுக்கொப்பான மூன்று அசுத்த ஆவிகள் புறப்பட்டுவரக் கண்டேன். அவைகள் அற்புதங்களைச் செய்கிற பிசாசுகளின் ஆவிகள்; அவைகள் பூலோகமெங்குமுள்ள ராஜாக்களை சர்வ வல்லமையுள்ள தேவனுடைய மகா நாளில் நடக்கும் யுத்தத்திற்கு கூட்டிச் சேர்க்கும்படிக்குப் புறப்பட்டுப் போகிறது. அப்பொழுது எபிரேயு பாஷையிலே அர்மகெதோன் என்னப்பட்ட இடத்திலே அவர்களைக் கூட்டிச் சேர்த்தான்." 16: 13, 14, 16. மனுஷர்களைச் சண்டைக்கு எழுப்புகிறது சாத்தானுடைய ஆவி என்று பரிசுத்த வேதம் போதிக்கிறது. மேலும் உலகத்தின் பெரிய ராஜ்யங்கள் என்னத்திற்காக யுத்தத்துக்கு ஆயத்தம் செய்கிறதென்பதையும் பரிசுத்த வேதாகமத்திலே திட்டமாய் வாசிக்கலாம்.

பதிமூன்றும் வாக்கியத்தில் சொல்லப்பட்டிருக்கிற வலு சர்ப்பத்தின் வாயானது அஞ்ஞான மார்க்கங்களையும், கள்ளத் தீர்க்கதரிசியின் வாயென்பது மருள விழுந்து போன புரோட்டஸ்டாண்டு மார்க்கத்தையும் சுட்டிக் காட்டுகிற பதங்களாயிருக்கின்றன கலிலேயா நாட்டின் தென்மேற்கிலிருக்கும் Es-draelon என்னும் சமபூமிதான் இங்கே சொல்லப்பட்டிருக்கிற அர்மகெதோன் என்ற இடத்தை குறிக்கிறதாயிருக்கிறது. இச்சமயத்தில் "இதோ திருடனைப்போல் வருகிறேன். தன் மானம் காணப்படத்தக்கதாக நிர்வாணமாய் நடவாதபடிக்கு விழித்துக்கொண்டு தன் வஸ்திரங்களைக் காத்துக்கொள்ளுகிறவன் பாக்கியவான்." 16: 15. என்ற இந்த வசனம் மிகவும் நுட்பமாய் கவனிக்கப்படவேண்டியதாயிருக்கிறது.

இதற்குப் பிற்பாடு கடைசித் தூதனுடைய பயங்கரச் செய்கையைப் பின்வருமாறு வாசிக்கிறோம். "ஏழாம் தூதன் தன் கலசத்திலுள்ளதை ஆகாயத்தில் ஊற்றினான்; அப்பொழுது பரலோகத்தின் ஆலயத்திலுள்ள சிங்காசனத்திலிருந்து ஆயிற்று என்று சொல்லிய பெருஞ் சத்தம் பிறந்தது. சத்தங்களும், இடி முழக்கங்களும், மின்னல்களுமுண்டாயின; பூமி மிகவும் அதிர்ந்தது, பூமியின்மேல் மனுஷர்கள் உண்டான நாள் முதற்கொண்டு அப்படிப்பட்ட பெரிய அதிர்ச்சி உண்டானதில்லை அப்பொழுது மகா நகரம் மூன்று பங்காகப் பிரிக்கப்பட்டது, புறச்சாதிகளுடைய பட்டணங்கள் விழுந்தன. மகா பாபிலோனுக்கு தேவனுடைய உக்கிரமான கோபாக்கினையாகிய மதுவுள்ள பாத்திரத்தைக் கொடுக்கும்படி அது அவருக்கு முன்பாக நினைப்பூட்டப்பட்டது. தீவுகள் யாவும் அகன்றுபோயின. தாலந்து நிறையான பெரிய கல் மழையும் வானத்திலிருந்து மனுஷர் மேல் விழுந்தது. அந்தக் கல் மழையினாலுண்டான வாதையினிமித்தம் மனுஷர்கள் தேவனைத் தூஷித்தார்கள்; அந்த வாதை மகா கொடியதாயிருந்தது." 16: 17-21.

இதை வாசிக்கிற என் பிரிய நண்பனே! இந்தப் பயங்கரமான வாதைகளிலிருந்து, நீயும், நானும் தப்பும்படியாக 1844-ம் வருஷத்திலிருந்து வெளிப்படுத்தின விசேஷம் 14: 6-72-ல் நிறைவேறுதலாக பூமியில் வாசம் பண்ணுகிற சகல ஜாதிகளுக்கும், கோத்திரத்தாருக்கும், ஜனக்கூட்டத்தாருக்கும், அறிவிக்கப்பட்டு வருகிற நித்திய சுவிசேஷத்தை சற்று நின்று கவனித்து, நமது மனம்போன்ற வழிகளையும், நாம் இச்சிக்கிற பாரம்பறையான கொள்கை கோட்பாடுகளையும் விட்டு, மனந்திரும்பி சிருஷ்டிகரின் சித்தத்தைக் கண்டு பிடித்து, எகோவாவின் பிரமாணத்தை முற்றமுடிய மனப்பூர்வமாய்க் கைக்கொண்டு தேவனுடைய முத்திரையைத் தரித்துக்கொள்வோமாக.

ஏறக்குறைய நாலாயிரம் வருஷங்களுக்கு முன் சம்பவித்த ஓர் இனிய கதை.

(AN INTERESTING STORY OF SOMETHING THAT HAPPENED NEARLY FOUR THOUSAND YEARS AGO.)

யூத ஜாதியார் தங்களுடைய தேவாலயத்தின் சடங்குகளை எவ்விதமாய் நிறைவேற்றினார்களென்று முன்னே எழுதியுள்ள விஷயங்களில் காண்பித்திருக்கிறேன். ஆயினும், அவற்றைப்பற்றி இப்பத்திரிகையிலும் சற்றே விரிவாய்ச் சொல்ல விரும்புகிறேன்.

தேவன் மனுக்குலத்தை இரட்சிப்பதற்கு ஏற்படுத்தியுள்ள சகல ஒழுங்குகளும் அவர்களுடைய தேவாலயச் சடங்குகளின் மூலமாய், தெளிவுடன் விஸ்தரிக்கப்பட்டிருக்கிறது. நான் முன் சொன்னபடி, முற்காலத்தில் ஒரு இஸ்ரவேலன் தேவனுக்கு விரோதமாய்ப் பாவஞ் செய்வானானால், அவன் தன் பாவ நிவர்த்திக்கென்று, மந்தையினின்றும் ஓர் பழுதற்ற ஆட்டுக்குட்டியைப் பிடித்து அதை தேவாலயத்தின் வாசலண்டை கொண்டுவந்து, தன்னுடைய இரண்டு கைகளையும் அந்த பழுதற்ற ஆட்டுக்குட்டியின் தலையின்மேல் வைத்தவனாய், தன் பாவங்களை தேவனுக்கு, ஆசாரியன் முன்பு அறிக்கையிடவேண்டும், பிறகு அந்த ஆட்டுக்குட்டி வெட்டப்படும். ஜீவனுள்ள அவ்வாட்டுக்குட்டியினின்று சிந்தும் அந்த ஜீவ இரத்தத்தை ஆசாரியன் பரிசுத்த ஸ்தலத்தினுள் கொண்டுபோய் பலிபீடத்தின்மேல் தெளிப்பான். பாவம் செய்தவன் சாயுங்காலத்துக்குள்ளே மரணத்தை யடையவேண்டும் என்கிற சட்டமானது ஆட்டுக்குட்டியின் பலியினாலே நிவர்த்திக்கப்பட்டு, மரண உபாதையினின்று விடுவிக்கப்படுகிறான். இந்த ஆட்டுக்குட்டி கிறிஸ்துவின் அடையாளமாயிருக்கிறது. எப்படி அம்மனிதனுடைய பாவத்துக்கென்று ஆட்டுக்குட்டி கொல்லப்பட்டதோ,

அதுபோலவே, கிறிஸ்து நாதரும் நமக்காக, இரண்டாயிரம் வருஷங்களுக்கு முன்னே எருசலேமில் சங்கரிக்கப்பட்டார்.

இப்போது நாம் துவக்கின கதையை நோக்கி சற்று முன்னேறிச் செல்லுவோம். வருஷத்தில் ஒவ்வொரு நாளும் இவ்விதமான ஆராதனை கூடாரத்தின் வெளியே பிரகாரத்திலும், பரிசுத்த ஸ்தலத்திலும் நடைபெற்று வரும். ஆனால் வருஷத்துக்கொருமுறை பரிசுத்த ஸ்தலம் சுத்திகரிக்கப்படவேண்டுமென்று தேவன் மோசேயுடன் சொல்லியிருந்தார். ஜனங்கள் பாவ அறிக்கை செய்து தங்கள் பாவங்கள் மன்னிக்கப்படும்படி காணிக்கைகளை செலுத்தியிருந்தபோதிலும், அவர்கள் பாவங்கள் முற்றிலுமாய் நீக்கப்பட்டுப்போகிறதில்லை. ஆனால் வருஷத்தின் கடைசிநாள்மட்டும் அவைகள் பரிசுத்த ஸ்தலத்திலேயே வைக்கப்பட்டிருக்கின்றன. வருஷத்தின் கடைசி நாளிலே, இப்பாவங்கள் அனைத்தும் பரிசுத்த ஸ்தலத்தினின்று நீக்கப்படவேண்டியது. ஜனங்களுடைய பாவங்களை பரிசுத்த ஸ்தலத்தினின்றும் நீக்குவதாகிய இச்சடங்கு "பரிசுத்த ஸ்தலம் சுத்திகரிக்கப்படுவது" என்று அழைக்கப்பட்டது. பரிசுத்த ஸ்தலம் சுத்திகரிக்கப்படுகிற அந்த நாளானது யூத ஜனங்களுக்கு ஓர் முக்கிய நாளாக விருந்தது. அந்த நாளில் அவர்கள் செய்யும் சடங்குகளைப்பற்றி சுருக்கமாய்ச் சொல்லுகிறேன். நான் முன் சொன்னபடி இது நடக்கும் நாளுக்கு முந்தின நாள் ஜனங்களெல்லோரும் பாவ அறிக்கை செய்யவேண்டும். வருஷத்தின் கடைசி நாள் "பாவ நிவாரண நாளென்று" அழைக்கப்படும். அந்நாளிலே சகலரும் தங்கள் தங்கள் வேலைகளை விட்டுவிட்டு பரிசுத்த கூடாரத்தின் பிரகாரத்தில் வந்து கூடுவது வழக்கம். ஆசாரியர்கள் தங்கள் எக்காளங்களை ஊதி, ஜனங்களை கூட்டிச் சேர்ப்பார்கள். அத்தினத்தில் ஜனங்கள் ஒன்றும் சாப்பிடாமல் உபவாசமாயிருக்கவேண்டும். அந்த நாள் மிகவும் பயபக்திக்குரிய ஓர் நாளாக விருந்தது, ஏனென்றால் வருஷ முழுவதிலும் சேர்த்து வைக்கப்பட்டிருந்த ஜனங்களின் பாவங்களை எல்லாம் மகா பரிசுத்த ஸ்தலத்தின் மூலமாய் அவர்கள் பாளயத்தினின்று நீக்கப்பட்டு, இப்படியாய் அது பூரண நிவாரண மடையும். ஜனங்களெல்லோரும் பிரகாரத்தில் வந்து கூடி யிருக்கும்போது, ஆசாரியரும், பிரதான ஆசாரியனும் ஒன்று சேர்ந்து கூடாரத்தின் பரிசுத்த ஸ்தலத்திலே நிற்பார்கள். பின்பு இரண்டு ஆடுகளை மந்தையினின்று தெரிந்துகொண்டு, அவற்றைப் பிரதான ஆசாரியன் முன் கொண்டுவருவார்கள். இவைகளில் ஒன்று தேவனுக்கும், மற்றொன்று சாத்தானுக்குமாக தெரிந்தெடுக்கப்படும். இவற்றை தெரிந்துகொள்வதற்கு அவ்விரு கடாக்கள்மேலும் சீட்டு போடுவார்கள். கர்த்தருக்கென்று தெரிந்தெடுக்கப்பட்ட ஆடு கர்த்தருடைய ஆடு என்று அழைக்கப்பட்டது; ஆனால் சாத்தானுக்காக தெரிந்தெடுக்கப்பட்ட ஆடோ போக்காடு என்று அழைக்கப்பட்டது.

கர்த்தருடைய ஆட்டை சீட்டுப்போட்டு தெரிந்தெடுத்த பிறகு, அந்த ஆடு பிரதான ஆசாரியனால் வெட்டப்படும். அதன் இரத்தம் பிரதான ஆசாரியனால் பலி பீடத்தின் மேலும் தெளிக்கப்படும். பிறகு உடன்படிக்கையின் பெட்டி யிருக்கிற மகா பரிசுத்த ஸ்தலத்திலும், அதாவது, தேவ சமூகத்தில், பிரதான ஆசாரியன் நுழைந்து அக்கிருபாசனப் பெட்டியின்மீது இரத்தத்தை தெளிப்பான். பின்பு அவன் ஒரு வருஷ முழுவதும் மகா பரிசுத்த ஸ்தலத்தில் சேர்த்துவைக்கப்பட்டிருந்த பாவங்களை தன்மேல் சுமந்துகொண்டு வெளியே வருவான். பிரதான ஆசாரியன் இதைச் செய்துகொண்டிருக்கும்போது ஜனங்களெல்லோரும் வெளியே கூடி ஜெபித்துக்கொண்டிருப்பார்கள். ஆசாரியன் மகா பரிசுத்த ஸ்தலத்தை விட்டு வெளியே வந்தவுடன், சாத்தானுக்கு அடையாளமாயிருக்கிற அந்த போக்காட்டின் சமீபத்தில் நின்று தன் கைகளை அதனுடைய தலையின்மேல் வைத்து ஜனங்களுடைய பாவங்களை அதன்மேல் சுமத்துவான். பின்பு இந்த ஆடு பாளயத்தை விட்டு காட்டில் கொண்டுபோய் விடப்பட்டு அது அங்கேயே மரித்துப்போம். இவ்வித

கிரியைகளினால் பரிசுத்த ஸ்தலம் சுத்திகரிக்கப்பட்டு, மறுபடியும் மறு வருஷத்துக்குரிய ஆராதனை துவக்கப்படும்.

மேற் சொல்லியபடி, அங்கு நடந்துள்ள எல்லா காரியங்களும், நமது கர்த்தராகிய கிறிஸ்துவும், தேவனும், நம்மை பாவத்தின் தண்டனையாகிய மரணத்தினின்று இரட்சிப்பதற்கு முன்னடையாளமான ஓர் அறிகுறியாக விருந்தது. இந்தக் கூடாரம் பரலோகத்திலுள்ள கூடாரத்துக்கு அடையாளமாய் மோசேயினால் கட்டப்பட்டது. (எபி. 8: 3) பாவ நிவாரண நாள் கடைசி நியாயத்தீர்ப்புக்கு அறிகுறியாயிருக்கிறது, அப்போது லோகத்தின் சர்வ பாவங்களும் நீக்கப்பட்டு போம். பாவ நிவாரண நாளிலே கொல்லப்பட்ட ஆடு கிறிஸ்துவைக் குறிக்கிறது. போக்காடு சாத்தானுக்கு அறிகுறியாக விருக்கிறது. (லேவி. 16: 5-8.) இஸ்ரவேலருடைய தினசரி பாவங்களெல்லாம் எப்படி மகா பரிசுத்த ஸ்தலத்தில் அடைத்துவைக்கப்பட்டிருந்ததோ அப்படியே, நாமும் நம்முடைய பாவங்களை அறிக்கையிடும்போது அவைகள் நம்மிலிருந்து நீக்கப்பட்டு கடைசி நியாயத்தீர்ப்பு வரைக்கும் பரலோகத்தில் வைக்கப்பட்டிருக்கிறது. எப்படி பூமியிலுள்ள பரிசுத்த கூடாரமானது கிறிஸ்துவின் இரத்தத்துக்கு முன்னடையாளமான ஆட்டின் இரத்தத்தால் வருஷத்துக்கொருமுறை சுத்திகரிக்கப்பட்டதோ, அவ்விதமாகவே உலகத்தின் முடிவிலும் கடைசி நியாயத்தீர்ப்பு வரும்போது பரலோகத்திலுள்ள பரிசுத்த ஸ்தலமும் சுத்திகரிக்கப்படும். எப்படி கர்த்தருக்குரிய ஆடு அடிக்கப்பட்டதோ அப்படியே மாசற்ற ஆட்டுக்குட்டியாகிய கிறிஸ்துவும் அடிக்கப்பட்டார். எப்படி அறிக்கை செய்த பாவங்கள் போக்காட்டின்மீது சுமத்தப்படுகிறதோ, அப்படியே, நீதிமான்களுடைய பாவங்களெல்லாம் சாத்தான்மேல் சுமத்தப்படும். எப்படி அந்த போக்காடு வனாந்தரத்துக்கு அனுப்பிவிடப்படுகிறதோ, அவ்விதமே சாத்தானும் உலகத்தின் பாவங்களை சுமந்தவனாய் நாசமடைவான். நமது பாவங்களுக்கெல்லாம் சாத்தானே காரணமானதால் அவனே அதற்குரிய தண்டனையடைவது நியாயம். நீதிமான்களுடைய பாவங்களெல்லாம் சாத்தான்மேல் சுமத்தப்படுவது, கிறிஸ்து நமக்காக சிந்தின விலையேறப்பெற்ற இரத்தத்தின் புண்ணியமே, ஆகையால் சீக்கிரத்தில் சம்பவிக்கப்போகிற இந்த பெரிய ஆராதனையில் நாம் பங்கு பெற நமக்கு இரண்டு காரியங்கள் அவசியமாயிருக்கின்றன; முதலாவது கிறிஸ்து நம்முடைய பாவங்களுக்காக மரிக்கவேண்டியது, இதை யவர் நிறைவேற்றி முடித்தார் ஆகவே இரண்டாவதாக நாம் கிறிஸ்துவில் அன்பு கூர்ந்து அவருக்கு கீழ்ப்படியவேண்டியது. இதைச் செய்தால் மாத்திரம், கிறிஸ்து நமக்காக செலுத்தின பலி விலையேறப்பெற்றது என்று சொல்லலாம்.

பெரிய பாவ நிவாரண நாள் நடப்பதற்கு இனி நெடுங்காலம் செல்லாது, சீக்கிரத்தில் பரலோகத்திலுள்ள தேவாலயக் கூடாரம் சுத்திகரிக்கப்படப்போகிறது, அந்த நேரம் வரும்போது, நீ இஸ்ரவேலரைப்போல ஜெபத்திலும், உன் பாவங்களை அறிக்கையிடுதலிலும், உபவாசிப்பதிலும் நிலைத்திருக்கிறவனாக காணப்படுவாயா? அப்படியானால் நீ செய்த பாவங்களெல்லாம் முற்றிலும் நீக்கப்பட்டு பூரண சுயாதீனத்தை யடைவாய்.

ஜி. ஜி. லௌரி.

சத்தியம் என்ன?

WHAT IS TRUTH?

"சத்தியமாவது என்ன? என்னும் கேள்வியானது ஏறக்குறைய ஈராயிரம் வருஷங்களுக்கு முன் கிறிஸ்து தேசாதிபதிக்கு முன் விசாரணைக்காக நிறுத்தப்பட்டபோது கேட்கப்பட்டது. இதே கேள்வியை நாம் இப்பொழுதும் கேட்கலாம். நாம் இப்பொழுது அநேக கொள்கைகளும் மதங்களும் நிறைந்துள்ள காலத்தில் வசிக்கிறோம். ஒவ்வொரு கொள்கைக்காரருடைய போதனைகளில் பேதங்களிருந்தாலும் தங்கள் மார்க்கமே சரி

யென்று சொல்லிக்கொள்ளுகிறார்கள். ஹிந்துக்கள் இந்து மார்க்கக் கொள்கையே சரி என்று சொல்லுகிறார்கள். தங்கள் மதம் சத்திய மென்கிறார்கள். ஆனால் அது சத்தியமா? பௌத்த மதஸ்தர் தங்கள் மதம் சத்திய மென்கிறார்கள். அது சத்தியமா? மகமதியர் தங்கள் மார்க்கம் சத்திய மென்கிறார்கள். ஆனால் அது சத்தியமா? அநேக கிறிஸ்தவர்கள் வேதத்தை வாசித்து தங்கள் எண்ணங்களுக்கொத்த சில வசனங்களால் விபரீதமான கொள்கைகளைப் போதிக்கிறார்கள். அவை யாவும் சத்தியமென்றும் கூறுகிறார்கள். ஆயிரக்கணக்கான மனிதர் இவர்கள் கொள்கைகள் சத்தியமென்று ஏற்றுக்கொண்டு அவற்றைப் பின்பற்றுகிறார்கள். எங்கே பார்த்தாலும் ஜனங்களுக்குள்ளே வித்தியாசமான கொள்கைகளும் போதனைகளும் இருக்கிறதைக் காணலாம். ஆனால் ஒவ்வொருவரும் தங்களுடைய கொள்கைதான் சத்தியமென்று சாதிப்பார்கள். இரண்டாயிரம் வருடங்களுக்கு முன்னே "சத்தியமாவது என்ன?" என்று பிலாத்து கேட்டதுபோல இக்காலத்திலிருக்கிற நாமும் அக்கேள்வியைக் கேட்கவேண்டியது அவசியம். இந்த விசேஷித்த கேள்விக்கு நமது போதகரும் கர்த்தருமாகிய இயேசுக்கிறிஸ்து யோவான் 17: 17-ல் "உம்முடைய சத்தியத்தினாலே அவர்களைப் பரிசுத்தமாக்கும்; உம்முடைய வசனமே சத்தியம்" என்று உத்தரவு சொல்லுகிறார்.

வானங்களையும் பூமியையும் சிருஷ்டித்த தேவனுடைய வசனமே எல்லா சத்தியத்தின் அஸ்திபாரமாயிருக்கிறது. தேவனுடைய வசனத்தின் தெளிவான போதனைக்கு ஒத்திராத எந்தக் கொள்கையும் பதருக்கு சமானமாயிருக்கிறது. சத்தியம் ஓர் விலையுயர்ந்த உலோகத்தை ஒத்ததாயிருக்கிறது. ஒரு பொன் கட்டியை எடுத்துப் பொடியாக்கி ஆற்றிலே கரைத்து சமுத்திரத்தில் செல்லவிட்டாலும் அதன் குணம் மாறுமா? அந்தப் பொன் தூளை மறுபடியும் எடுத்துப்பார்த்தால் அதன் குணம் மாறாமல் அது பொன்னாகவே யிருக்கும். சத்தியமும் அப்படிப்பட்டதுதான். மனிதர் சத்தியத்தைத் தரையிலே தள்ளி மனிதருடைய போதகங்களாலும் கட்டளைகளாலும் அதை மூடினாலும் சத்தியம் எப்போதும் சத்தியமே.

'இருண்ட காலம்' (Dark ages) என்றழைக்கப்படும் கி. பி. 538-லிருந்து கி. பி. 1798 வரையில் வேதாகம சத்தியங்களுக்குப் பதிலாக கள்ளப்போதகமும் மனித கட்டளைகளும் பாரம்பரியங்களும் போதிக்கப்பட்டு வந்தது. அந்தக் கள்ளப்போதகங்கள் அநேக தலை முறையாக தகப்பனிலிருந்து மகனுக்கு சுதந்தரமாகி வந்து இக்காலத்தில்கூட ஆயிரக்கணக்கான ஜனங்கள் அவைகளைச் சத்தியமென்று சாதித்து வருகிறார்கள்.

ஒரு புது கொள்கையுடைய மனிதன் நம்மிடத்துக்கு வந்தால் அது கர்த்தரால் உபதேசிக்கப்பட்டிருக்கிறதா என்று ரூபிக்க ஒரு வேதாகம அத்தாட்சி காட்டவேண்டும். நாம் மனிதரின்பேரில் நம்பிக்கை வைக்கக்கூடாது. அவர்களும் நம்மைப்போல மனிதர்களாயிருக்கிறதினால் தவறிப்போகக்கூடியவர்களாயிருக்கிறார்கள். ஆனால் தேவனுடைய வசனமோ என்றென்றைக்கும் நிலைத்திருக்கும். சங்கீதக்காரனாகிய தாவீது "பிரபுக்களையும், இரட்சிக்கத் திராணியில்லாத மனுப்புத்திரனையும் நம்பாதேயுங்கள்" என்று சொல்லுகிறார். சங். 146: 3. ஒருவன் ஒரு பெரிய மனிதனிடத்தில் யோசனை கேட்டு அதின்படி நடப்பது உலக வழக்கமாயிருக்கிறது. ஆனால் நாம் மனிதர்மேல் நம்பிக்கை வைப்பது கூடாது. அவர்களுடைய உபதேசம் தேவனுடைய வசனத்திற்கு ஒத்திராவிட்டால் அவர்களை நம்பக் கூடாது.

ஒவ்வொரு கொள்கையையும் ஒவ்வொரு உபதேசத்தையும் சோதித்தறியும்படியாக கர்த்தர் ஏசாயா தீர்க்கதரிசியின் மூலமாய் நமக்கு ஓர் ஆதாரம் ஏற்படுத்தியிருக்கிறார். "வேதத்தையும் சாட்சி ஆகமத்தையும் கவனிக்கவேண்டும்; இந்த வார்த்தையின்படியே சொல்லாவிட்டால், அவர்களுக்கு விடியற்காலத்து வெளிச்சமில்லை." ஏசா. 8: 20. தட்டான் பொன்னை உரைக்கல்லில் தேய்த்து சோதித்துப்பார்க்கிறதுபோல நாம் மனித உபதேசங்களை வேதாகமத்திலுள்ள தேவனுடைய வசனத்தைக்கொண்டு சோதித்து அறிய வேண்டும். ஒரு குருவாவது அத்தியக்ஷராவது பாப்பானவராவது வேதத்திற்கு விரோதமாகப் போதித்தால் தேவனுடைய பிள்ளைகள் அதை சத்தியமென்று ஏற்றுக்கொள்ளக் கூடாது. "ஆகையால், இந்தக் கற்பனைகள் எல்லாவற்றிலும் சிறிதான தொன்றையாகிலும் மீறி, அவ்விதமாய் மனுஷருக்குப் போதிக்கிறவன் பரலோக ராஜ்யத்தில் எல்லாரிலும் சிறியவன் என்னப்படுவான்;" என்று இயேசு சொல்லுகிறார். மத். 5: 19. சத்தியத்திற்கு ஒரே வழி உண்டு. அது நித்திய ஜீவ வசனமே.

திறப்பானதை அடைக்குதல்

(REPAIRING THE BREACH.)

1. கிறிஸ்துவின் முன் தூதன் அவருடைய முதலாம் வருகைக்காக வழியை ஆயத்தம்பண்ண என்ன சொன்னான்? ஏசா. 40: 3-6.

2. இது எப்படி நிறைவேறினது? யோவா. 1: 19-27; லூக். 1: 13, 16, 17.

3. இவ்வண்ணமாகவே தேவனுடைய ஊழியக்காரர்களும் கிறிஸ்துவின் இரண்டாம் வருகைக்கு அவர் முன்னே வழியை ஆயத்தப்படுத்தவும் அதை எச்சரிக்கவும் கட்டளையிடப்படுகிறார்கள். ஏசா. 62: 10, 11.

4. அவருடைய முதலாம் வருகையிலா அல்லது இரண்டாம் வருகையிலா எதில் பிரதி பலன் வருகிறது?

உலகத்தின் முடிவில் அவரோடு வெகுமதி வருகிறது. கிறிஸ்து, தமது இரண்டாம் வருகையில் அவருடைய ஜனங்களுக்கு வெகுமதி யளிப்பார்? வெளி. 22: 12.

5. எந்த பாதைக்கு அல்லது எந்த வழிக்கு நேராகத் தேவன் தம்முடைய ஜனங்களைத் திருப்பி யிருக்கிறார்? எரே. 6: 16.

6. இந்தப் பூர்வ பாதை என்றால் எது? தாவீது தேவனுடைய கட்டளையே வழி என்று சொல்லியிருக்கிறார். சங். 119: 1, 3.

7. தேவனுடைய கட்டளை, நாம் நடக்கவேண்டிய வழி என்று அழைக்கப்படுகிறதா? சங். 119: 35.

8. இந்தப் பூர்வ பாதைகளில் அவர்கள் போகமாட்டோம் என்று மறுத்தால் அவருடைய கட்டளைகளை மறுத்துத் தள்ளிவிட்டார்களா? எரே. 6: 19.

9. தேவன் அவர்களை எதற்கு செவி கொடுக்கும்படி செய்தார்? வச. 17. அந்த எக்காளம் தேவனுடைய நாள் சீக்கிரம் வருகிறதென்று எச்சரிக்கிறது. ஜனங்கள் இதைக் கேட்க மறுத்தார்கள். யோவே. 2: 1.

10. கர்த்தர் கடைசி காலத்திலிருப்பவர்களுக்கு என்ன எழுதும்படி தீர்க்கதரிசிக்குச் சொன்னார்? ஏசா. 30: 8, 9 (மார்ஜின் வசனம் எட்டு பார்க்க).

11. அவர் இந்த ஜனங்கள் தேவனுடைய வேதத்தைக் கேளாமல் விலகிப்போகப் பிரியமாயிருக்கிறோம் என்று எதனால் சொல்லியிருக்கிறார்? வச. 10, 11.

12. தம்முடைய வேதத்துக்கு விலகுகிறவர்களை எதற்கு ஒப்பிடுகிறார்? வச. 13.

13. தேவன் அவன் தன்னுடைய வெறுப்பை பிதுங்கி நிற்கிற சுவருக்கு நேரே காட்டிகிறது எப்படி யிருக்குமென்று சொல்லுகிறார்? வச. 11.

14. அவருடைய கட்டளையை விட்டு விலகினவர்கள் திரும்பவும் ரக்ஷிக்கப்படுகிறதற்கு என்ன செய்யவேண்டும் என்று சொல்லுகிறார்? வச. 15.

15. தேவனுடைய நாளில் நிற்கும்படி கர்த்தருடைய ஜனங்களை ஆயத்தம் பண்ணாமல் சுவரின் திறப்பை அடைக்கமாட்டோமென்னும் கூட்டத்தாரைப்பற்றி வேதாகமத்தில் சொல்லப்பட்டிருக்கிறதா? எசே. 13: 45.

16. தம்முடைய ஜனங்களிலிருந்து இவர்கள் பேரைக் கிறுக்கும்படி தேவன் என்ன காரணங்களால் தீர்மானம் பண்ணியிருக்கிறார்? வச. 9, 10,

கர்த்தருடைய பிரமாணம் ஜனத்திலிருந்து பாவத்தை நீக்குகிறதால் அது பூரணமான சுவருக்கு ஒப்பிடப்பட்டிருக்கிறது. பிதுங்கி நிற்கிற சுவர் பூரணமில்லாத கட்டளையையும், ஜனங்களுக்குக் குறைந்தது தேவனுடைய பிரமாணத்தில் ஒன்றை மீறி பாவஞ் செய்ய சுவாதீனம் கொடுக்கிறதையும் குறிக்கிறது.

17. எந்தவிதமான சுவரைக் கர்த்தர் வெறுக்கிறார். எசே. 3: 10. (மார்ஜின்)

18. எத்தனை பேர் மண் சுவரை வைக்கிறார்கள்? வச. 10. ஒருவன்.

19. எத்தனை பேர் சாரமற்ற சாந்தைப் பூசுகிறார்கள்? ஒன்றுக்கு மேற்பட்டவர்கள்.

20. அந்த மண் சுவரைக் கட்டின ஒருவன் யார்? தானி. 7: 25; 2 தெச. 2: 3, 4; (Great Apostacy.)

21. பாவ மனுஷன் காலங்களையும் பிரமாணங்களையும் மாற்றுவான் என்கிறதை நிறைவேற்ற எந்த கற்பனை அவசியம் மாற்றவேண்டியது? 4-ம் கற்பனைதான், ஏனென்றால் அது ஒன்றுதான் காலத்தைக் குறிக்கிறது.

22. தள்ளப்பட்டது கர்த்தருடைய ஓய்வு நாள்தான் என்கிறதற்கு தெளிவான ஆதாரம் உண்டா? எசே. 22: 26.

23. எசேக் 13-ல் சொல்லப்பட்ட அதே சங்கதி இங்கே திரும்பவும் சொல்லப்பட்டிருக்கிறதென்பதற்குச் அத்தாட்சி யுண்டா? ஆம் வச. 26-28-ல் திரும்பவும் அது எழுதப்பட்டு விபரிக்கப்பட்டிருக்கிறது.

24. அ.ந்தமானதைத் தரிசித்தார்களென்கிறதை எப்படி விபரிக்கிறார்? எசே. 22: 28.

கர்த்தர் உரைக்காதிருந்தும் கர்த்தர் உரைத்தாரென்று சொல்லப்படுகிறது.

சாந்து பூசுகிற மற்றவர்கள் வேத ஆதாரமற்ற ஞாயிற்றுக்கிழமையினால் பாவ மனுஷன் செய்த சுவரை தாங்கி நிலைநிறுத்தப் பிரயாசப்படுகிறவர்களுக்கு ஒப்பாயிருக்கிறார்கள்.

25. பூர்வ முதல் பாழாய்க்கிடந்த ஸ்தலங்களைக் கட்டுகிறவர்களோடு எந்த நிபந்தனைகளினால் நாமும் சேர்க்கப்படுவோம்? நாம் உலக வேலைகளை எல்லாம் ஒழித்துவிட்டு தேவனுடைய ஓய்வு நாளை ஆசரிக்கிறதினால் நாமும் அவர்களோடு சேர்க்கப்படுவோம். ஏசா. 58: 12-14.

26. அவர் ரக்ஷிப்பு வர சமீபமாயிருக்கிறதால் யார்மேல் அவர் தன்னுடைய விசேஷித்த ஆசீர்வாதத்தை வைத்திருக்கிறார்? ஏசா. 56: 1, 2.

27. இந்தத் தீர்க்கதரிசனம் புறஜாதியாரையும் மற்ற எல்லா ஜனங்களையும் சேர்த்துக் குறிக்கிறதா? வச. 3, 6, 7.

28. கடைசி நாட்களிலிருக்கிற ஜனங்களுக்கு உயர்த்தப்படும்படி என்ன கட்டளையிடப்பட்டிருக்கிறது? ஏசா. 62: 10.

29. தேவனுடைய ஜனங்களுக்குக் கொடி எது? உத்தம கிறிஸ்தவர்களுக்கு வேதாகமமே கொடி.

30. விசுவாசமுள்ள ஆபிரகாமின் குணத்தை எதினால் தேவன் அளந்தார்? ஆதி. 26: 5.

31. ஒவ்வொரு மனிதனுடைய முழு வேலை என்ன? பிர. 12: 13, 14.

32. எதை இயேசு நாதர் ஒவ்வொரு கிறிஸ்தவனுக்கும் சோதனையாக வைத்தார்? தேவனுடைய சித்தத்தின்படி செய்கிறதோ? அல்லது கர்த்தாவே கர்த்தாவே என்கிறதா? மத். 7: 21.

33. பிதாவின் சித்தத்தைச் செய்கிறதில், கிறிஸ்து நமக்கு என்ன முன் மாதிரி வைத்திருக்கிறார்? சங். 40: 7, 8; யோவா. 15: 10.

34. நாம் நிட்சயமாய் தேவனை அறிவோம் என்று வேதாகமம் நமக்கு எப்படி உறுதியாய்ச் சொல்லுகிறது? 1 யோவா 2: 3-6.

35. கர்த்தருடைய மீதியான ஜனங்களைப்பற்றி என்ன சொல்லப்பட்டிருக்கிறது? வெளி. 12: 17.

36. கிறிஸ்துவின் இரண்டாம் வருகைக்கு முன்னே தேவனுடைய ஜனங்கள் வேதாகமத்தையே தங்களுக்கு ஆதாரமாக வைப்பார்களென்று ஒரு தூது இருக்கிறதா? வெளி. 14: 9-12, 14.

37. கர்த்தருடைய நகரத்தில் பிரவேசிக்கிறவர்களுக்கு கடைசி கட்டளை என்ன? வெளி. 22: 14. ஓய்வு நாள் முழு கற்பனையும் ராஜ பக்தி காட்டவேண்டுமென்கிற ஒரு அடையாளமாயிருக்கிறது. யாத். 16: 4, 5, 27-30; எசே. 20: 12, 13, 20.

38. அவருடைய கற்பனைகளைக்கைக்கொள்ளுவதுதான் அவரை சிநேகிக்கிற சிநேகம். 1 யோவா. 5: 3. கர்த்தருடைய ஜனங்களுக்கு வேதாகமமே கொடி. கொடியைக் காலால் மிதிக்கிறது எந்த ராஜாங்கத்திலும் ராஜ துரோகம் செய்கிறதற்குச் சரி. அவர்கள் பெரிய தண்டனைக்கு ஆளாவார்கள். ஆகையினால் கர்த்தர் அவர்களை காலின்கீழ் இருக்கிற ராஜரீகக் கொடியை எடுத்து அதைப் பரிசுத்தமென்றழைக்கவும் அதை மேன்மைப்படுத்தவும் அதை சகல ஜன சதலங்களுக்கும் தெரியும்படி உயர்த்தி அதைப் பார்க்கும்படிச் செய்யவேண்டுமென்று எல்லா மனிதரையும் அழைக்கிறார். தே. ஆரோன்,

? கேள்விகளுக்கு விடை ?

நீங்கள் கேட்க மனதானால் திரும்பி வந்து கேளுங்கள்.

கேள்வி:—தேவன் மோசேயை மரித்தோரிலிருந்து எழுப்பினாரென்று எப்படி அறிந்துகொள்ளலாம்?

உத்தரவு:—வேதத்தை வாசித்திருக்கிற யாவரும் மோசே மரித்து அடக்கம் பண்ணப்பட்டதை அறிவார்களென்பதற்குச் சந்தேகமில்லை. மோசே நேபோ பர்வதத்தில் மரித்து கர்த்தரால் அடக்கம் பண்ணப்பட்டானென்று வேதம் சொல்லுகிறது. உபா. 34: 5, 6. இதற்குப் பிற்பாடு நாம் மோசேயைப்பற்றி இயேசு மலையின்மேல் மறுரூபமானபோது கேள்விப்படுகிறோம். மாற். 9: 4. மோசேயும் எலியாவும் கிறிஸ்துவோடு சம்பாஷித்தார்களென்று இங்கே சொல்லப்பட்டிருக்கிறது. இது, மோசே மரித்து அடக்கம் பண்ணப்பட்டு 1500 வருஷங்களுக்குப்பிற்பாடு நடந்தது. அப்படியானால் மோசே மலையின்மேல் வந்து எப்படி கிறிஸ்துவோடு சம்பாஷிக்கக்கூடும்? அவன் தேவனால் மரிதோரிலிருந்து எழுப்பப்பட்டிராவிட்டால் அங்கே கிறிஸ்துவுடனே சம்பாஷித்திருக்க முடியாது.

மோசே தேவனால் ஆசீர்வதிக்கப்பட்ட ஓர் மனிதனாயிருந்தான். ஆனால் அவன் பாவஞ் செய்ததினால் வாக்குத்தத்தம் பண்ணப்பட்ட தேசத்தைப் பார்க்காமல் மரித்தான். அவன் மரித்தபோது சாத்தானின் காவல் வீடாகிய கல்லறையில் அடக்கம் பண்ணப்பட்டான். ஆகவே, இது சாத்தானுக்கு அதிக சந்தோஷமாயிருந்தது. ஆனால் தேவன் அவனை அப்படியே விட்டுவிடவில்லை. ஏனெனில் யூதா எழுதின நிருபம் 9-ம் வசனத்திலே கிறிஸ்துவுக்கும் சாத்தானுக்கும் மோசேயினுடைய சரீரத்தைக் குறித்துத் தர்க்கம் உண்டாயிற்றென்று நாம் வாசிக்கிறோம். கிறிஸ்து மோசேயின் சரீரத்தை உயிர்ப்பிக்க வந்ததினால்தான் தர்க்கம் உண்டானதென்பதற்கு யாதொரு சந்தேகமுமில்லை. அப்படிக் கில்லாவிட்டால் வேறு எந்தக் காரணத்தை முன்னிட்டு அவர்கள் தர்க்கித்திருக்கக்கூடும்? கிறிஸ்து மோசேயின் சரீரத்தை எடுக்க வந்தபோது அந்த சரீரத்தின்மேல் அவருக்கு அதிகாரமில்லையென்று சாத்தான் தர்க்கித்திருப்பான். கடைசியாக கிறிஸ்து மோசேயை உயிரோடெழுப்பினதினால் அவர் சாத்தானின்மேல் வெற்றி சிறந்தாரென்று பார்க்கிறோம். அவர் மோசேயை உயிரோடெழுப்பினாரென்று எப்படித் தெரியுமென்று கேட்கலாம். மோசே, பேதுரு, யாக்கோபு யோவான் என்பவர்களோடு கிறிஸ்து மறுரூபமான மலையின்மேல் காணப்பட்டதே அதற்குச் சாட்சியாயிருக்கிறது.

இந்த சம்பவத்திலிருந்து தேவன் நமக்கு ஒரு விசேஷித்த பாடத்தைக் கற்பிக்கிறார். கிறிஸ்து மறுரூபமானது அவர் பூமிக்கு இரண்டாந்தடவை வருவதை முன் குறிக்கிறது. மலையின்மேல் மோசே கிறிஸ்துவோடு பிரசன்னமானது மரித்த நீதிமான்கள் கிறிஸ்துவின் இரண்டாம் வருகையில் உயிரோடெழுப்பப்படுவதைக் குறிக்கிறது. எலியா மரணத்தைப் பாராமல் பரலோகத்திற்கு எடுத்துக்கொள்ளப்பட்டது நம்மெல்லாருக்கும் தெரியும். 2 ராஜா 2: 11 பார்க்க. எலியா, மலையின்மேல் கிறிஸ்துவோடு பிரசன்னமானது கிறிஸ்துவின் இரண்டாம் வருகையில் உயிரோடிருக்கும் நீதிமான்களைக் குறிக்கிறது. எலியா மரணத்தைப் பாராமல் பரலோகத்திற்கு எடுத்துக்கொள்ளப்பட்டதுபோல உயிரோடிருக்கும் நீதிமான்களும் கிறிஸ்துவின் இரண்டாம் வருகையில் மரணத்தைப் பாராமல் பரலோகத்திற்கு எடுத்துக்கொள்ளப்படுவோர்கள்.

நிகழ்கால சத்தியம்

வேத சன்மார்க்க சுகாதார விஷயங்களில் தற்கால அறிவுக்கொத்தபடி மனிதர் அபி விருத்தியடைவதற்கென்று பிரசுரமாகும் ஓர் பத்திரிகை.

மதராஸ் மார்ச்மீ, 1921.

இப்பத்திரிகை, பெங்களூரிலிருக்கும், எஸ். டி. ஏ. பப்ளிஷிங்கவுஸ்காக, பட்டணத்தில் வெப்பேரி என்னுமிடத்திலுள்ள அல்பீனியன் அச்சாபீசில் அச்சடிக்கப் பட்டு வருகிறது.

பத்திராதிபர் பாஸ்டர், ஜி. ஜி. லேவெரி.
உதவி ,, ,, ஈ. டி. தாமஸ்.
மானேஜர், எல். சி. ஷெப்பார்டு, பி: ஏ.

	ரூ.	அ.	ப.
தனிப்பிரதி ஒன்றுக்கு ...	0	1	6
வருஷ சந்தா, தபாற் கூலி உள்பட ...	1	0	0
சிங்கப்பூர் பினங்கு முதலிய வெளி ஊர்களுக்கு தனிப் பிரதி ஒன்றுக்கு ...	0	2	0
வருஷசந்தா தபாற்கூலி உள்பட ...	1	4	0

"ஒரு விருத்தரின் விவாகம்.

இங்கிலாந்தில் வைகவுண்ட் மெல்வில் என்ற 77 வயதான ஒரு பிரபுவுக்கும், மயிர் கத்தரிக்கிற தொழிலில் ஒரு சமயம் அமர்ந்திருந்த மார்கரட்டாட் என்ற 40 வயது மாதுக்கும் அதிக ஆடம்பரமில்லாமல் சமீபமாய் விவாகம் நடந்தேறியதாக பிரிட்டிஷ் பத்திரிகைகளில் காணப்படுகின்றது. 1904ம் வருஷத்தில்தான் வைகவுண்ட் மெல்வி லுக்கு பிரபுப்பட்டம் கிடைத்தது. 37 வருஷம்போல் பெரிய உத்தியோகம் பார்த்தவர். ஏற்கெனவே இரண்டு தடவை விவாகம் செய்து கொண்டவர். இரண்டாவது மனைவி இறந்து ஒரு வருஷந்தான் ஆகிறது. 4 பிள்ளைகளும் 2. பெண்களும் இருக்கிறார்கள். 77-வது வயதில் அத்தகைய ஒரு பிரபுவுக்கு விவாகம் நடப்பது பலருக்கும் ஆச்சரியத்தையே உண்டுபண்ணும்."

சமாசாரக் குறிப்புகள்.

(NEWS AND NOTES)

"இத்தாலியில் கலகம்.

இத்தாலியிலிருந்து வரும் தந்திகளைப் பார்த்தால் ராஜீய விஷயமாயும், மதசம்பந்தமாயும் பெரிய கலகங்கள் ஏற்பட்டிருப்பதாகவும், துருப்புகளுக்குள்ளேயே கலகம் ஏற்பட்டிருப்பதாகவும், வேலையில்லாத விவசாயிகள்கூட இதில் சேர்ந்து பல பாகங்களைத் தாக்கியதாகவும் கூட்டத்தில் 8 பேர் மாண்டதாகவும் தெரிகிறது."

"ஒரு ஸப்மரின் கப்பல் மூழ்கிற்று.

இங்கிலிஷ் சானலண்டை ஒரு பிரிட்டிஷ் ஸப்மரீன் கப்பலானது 20-ந் தேதி பாறையில் மோதுண்டோ அல்லது யுத்த காலத்தில் போடப்பட்ட சுறங்கத்தால் அடிபட்டோ 5 உத்தியோகஸ்தர்கள் 51 மனிதர்கள் ஆகியவர்களுடன் மூழ்கிவிட்டதாக ஒரு தந்தி கூறுகின்றது."

"சமாதான உடன்படிக்கையும் ஜெர்மனியின் சைன்யமும்.

சமாதான உடன்படிக்கையின்படி சைன்யத்தைப்பற்றியவரையில் எல்லா நிபந்தனைகளையும் ஜெர்மனி நிறைவேற்றிவிட்டதாகவும், தற்போது 90000 துருப்புகள்தான் இருப்பதாகவும், கப்பல்களும் மிகவும் குறைந்துவிட்டதாகவும் ஜெர்மன் பாதுகாப்பு மந்திரி அறிவிக்கிறார். ஸைலீஷ்யாவின் மேல்புறத்தில் போலாந்து தேசத் துருப்புகளின் தொல்லைகளை நீக்கக்கூடப் போதிய துருப்புகள் இல்லையென்றும் அவர் அறிவிக்கிறார்."

"பாரிஸ்டர் பரீக்ஷையில் தேறிய ஒரு ஸ்திரீ.

இங்கிலாந்தில் பிரசுரமாகி வரும் 'இந்தியா' என்ற பத்திரிகையின் ஆசிரியராயிருந்த மிஸ் ஹெலினு நார்மண்டன் இவ்வருஷத்திய பாரிஸ்டர் பரீக்ஷையில் முதலாவது வகுப்பில் தேறியிருப்பதாகவும், அவர் கிரிமினல் சட்டம், ரோமன் சட்டம், ராஜீய சட்டம் ஆகியவற்றில்தான் தேறியிருப்பதாகவும், அவர் ஹிந்து சட்டம், முகம்மதிய சட்டம் ஆகியவற்றிற்கும் படிக்கப் போகிறதாயும் ஒரு தந்தி கூறுகின்றது."

சுதேச மித்திரன்.

OFFICE OF ... 16 APR 1921

நிகழ்கால சத்தியம்.

Vol. X. மதராஸ்:—ஏப்பிரல்மீ, 1921. No. 4.

ஓர் செட்டியார் கதை

திருநெல்வேலி ஜில்லாவின் தென் பாகத்தில் ஓர் செட்டியார் அடிக்கடி எண்ணெய் கொண்டுவந்து சுற்றுக் கிராமங்களில் விற்றுப் போவார். ஓர் நாள் சாயுங்காலம் அவரை ஓர் வீட்டுத் திண்ணையில் வெகு சோர்வாய்ப் படுத்திருக்கக் கண்டேன். அப்பொழுது நான் அவரைப் பார்த்து, செட்டியாரே! இத்தனை சோர்வாக இதில் படுத்திருக்கிற காரணமென்ன என்றேன்? அதற்கு அவர், ஐயா! இன்றைக்கு நான் உங்களைப்போல சட்டை போடுகிறவர்கள் குடிக்கிற அந்த குடல் கருகின தண்ணீரை குடித்துப்போட்டு இப்படி எழுந்திருக்க முடியாமல் கிடக்கிறேன் என்றார். அப்பொழுது நான், அது என்ன செட்டியாரே எங்களைப்போல் சட்டை போட்டவர்கள் குடிக்கிற குடல் கருகின தண்ணீர் என்கிறீரே! அதின் விவரமென்ன வென்றேன்!! உடனே செட்டியார்:—ஐயா, அது சங்கதி கேளுங்கள்; எங்கள் ஊர் இங்கிருந்து சுமார் நாலு ஐந்து மைலுக்கு அப்பால் இருக்கும். ஒவ்வொரு நாள் காலையிலும் நான் எழுந்து ஸ்நானம் பண்ணி கொஞ்சம் பழைய சாதம் சாப்பிட்டுவிட்டு ஓர் கண்ணாடி குப்பி நிறைய மோர் அல்லது கஞ்சித்தண்ணீர் அடைத்து கையில் எடுத்துக்கொண்டு எண்ணெய் விற்க வெளியே புறப்படுவேன். மத்தியானம் பன்னிரண்டு மணி சுமாருக்கு சீசாவில் இருக்கும் நீராகாரத்தைச் சாப்பிட்டுக் கொள்வேன். அதின் பிறகு சுமார் 3 மணிக்கு வீட்டுக்கு கூடியவாறு நல்ல கெதியாய்த் திரும்பிவிடுவேன். சில வேளைகளில் என் மனைவி நான் இந்த நீராகாரத்தை வெளியே கொண்டுபோகிறதில் சற்றேனும் பிரியமில்லாமல் என்னோடு சண்டைக்கு நிற்கிறாள். அவள் சொல்லுகிறதாவது:—நீர் இப்படி வெளியே விற்கக் கொண்டுபோகிற எண்ணெய்க் கலசத்தோடு இந்தச் சீசா நீராகாரத்தை வெள்ளை வெளேரென்று கொண்டுபோய் என்னை வெட்கம் கெடுக்கிறீரே இதைப் பார்க்கிறவர்கள் சிரிப்பார்களே! உமது பெண் ஜாதிக்கு அரைக்கால்படி காப்பிக்கொட்டைக்கு கெதியில்லையா? இந்தக் காலத்தில் காலையில் காப்பி குடியாத வீடு உண்டா? பிச்சை எடுக்கிறவர்கள் முதல் யாசகத்துக்குப் போகும் இடங்களில் கொஞ்சம் காப்பித்தூள் பிச்சை யெடுத்து விடியற்காலத்திலே போட்டுக் குடித்துக்கொள்ளுகிறார்களே என்று என்னோடு போருக்கு நின்று, சில வேளைகளில் எனக்கு காலையில் காப்பியும் கூட்டுக்கு முறுக்கும் கொடுத்து, இன்னம் இந்தச் சீசா நிறையவும் ஊற்றி அடைத்து, வெளியே எண்ணெய் விற்பனைக்கு அனுப்புவாள். உங்களைப்போல் இப்படி சட்டைபோட்ட பெரியோர்கள் சாப்பிடும் இந்தச் சாப்பாட்டை நான் சாப்பிட்டு வெளியேறும் நாளெல்லாம் சற்றுநேரம் வெகு துடிதுடிப்பாய் அங்கும் இங்கும் ஓடி எண்ணெய் விற்பேன். சுமார் 10 அல்லது 11 மணிக்கெல்லாம் தேகம் முழுவதும் வேர்த்து சற்று ஆயாசம் உண்டாகிவிடும். அப்பொழுது மறுபடியும் சீசாவில் இருக்கும்காப்பியை சாப்பிட்டுக்கொள்வேன். அது வயிற்றுக்குள்ளேபோனதும் தவித்தமாட்டை

சற்று வாலை முறுக்கி அடித்தார்போல் இருக்கும். எப்படியும் மத்தியானம் திரும்பினதும் வயிற்றுக்குள் படபடப்பு உண்டாகிறது. வாயைத் திறக்கும்போதெல்லாம் கொட்டாவிதான் எடுக்கிறது. எதிலேபோய் செத்த சவம்போல் விழலாமென்றுதான் இருக்கிறது. ஐயா, இன்றைக்கும் அந்தப் பாடுதான். வீடு போய்ச்சேர சுமார் 4 மணியாவது பிடிக்கும். அதுவும் அதிகப் பிரயாசத்துடன்தான் என்றார்.

அப்பொழுது நான் அவரைப் பார்த்து சட்டைபோட்டவர்கள் யாவரும் இதைக் குடிக்கிறார்களென்று நீர் எண்ணாதேயும். ஓர் காலத்தில் ஜனங்கள் இந்தப் பானத்தை ஜாஸ்தியாக குடிக்க ஆரம்பித்தார்கள். இப்பொழுது இதினால் உண்டாகும் தீவினையை சட்டை போட்டவர்களுக்குள்ளும், சட்டை போடாதவர்க்குள்ளும், புத்தியுள்ளோர் அநேகர் அறிந்து இந்தப் பானத்தை முழுவதும் குடிப்பதை விட்டுவிட்டார்கள். நான் இதை வெறுத்து சுமார் பத்து வருஷம் ஆகிறது என்றேன். இதைக் கேட்டதும் செட்டியார் வெகுவாய் ஆச்சரியப்பட்டு வாயில் கையை வைத்துக்கொண்டு ஐயா! தாங்கள் இதைக் குடிக்கமாட்டீர்களா!! இது என்ன ஆச்சரியம்!!! நான் இதை என் மனைவியிடம் கட்டாயம் சொல்லவேண்டும் என்றார். அப்பொழுது நான், இதை நான் மாத்திரமல்ல என் மனைவி, பிள்ளைகளும், எங்கள் சபையாரும் சாப்பிடமாட்டோம் என்றேன். அப்பொழுது செட்டியார் ஐயா தங்கள் சின்னப்பிள்ளைகளும் இந்தத் தண்ணீரைக் குடிக்கமாட்டார்களோ வென்றார். ஆம் அது வாஸ்தவம்தான். கர்த்தருடைய கிருபையால் எனக்கு நாலு குழந்தைகள் இருக்கிறார்கள். யாவரும் நல்ல சுகதேகமுள்ளவர்கள். ஆனால் ஒருவரும் இந்தப் பானத்தை அருந்தார்கள் என்றேன். அவருக்கு இதைக் கேட்டதும் இருந்த ஆச்சரியம் அப்படி இப்படியல்ல.

இதை வாசிக்கும் என் பிரிய சிநேகிதனே! நீர் இதைப்பற்றி என்ன எண்ணுகிறீர். அநேகர் இந்தச் செட்டியார் மனைவியைப்போல இதைக் குடிக்காவிட்டால் மிகவும் வெட்கம் என்றும்; உலக மதிப்பு இல்லையென்றும்; நாகரீகமுள்ள ஜனமென்று தங்களை எண்ணமாட்டார்களென்றும் நினைக்கலாம்.

அதிகம் படித்து உயர்ந்த பட்டம்பெற்ற அநேகருடைய வீட்டில் விடியற்காலத்திலிருந்து இரவு படுக்கைக்குப் போகும்வரை அடுப்பில் காப்பிப் பானை இருக்கவேண்டுமென்றும்; பிள்ளைகள் அழும்போதெல்லாம் அதைத்தான் ஊற்றி கிளாஸ், கிளாஸாய்க் கொடுக்கவேண்டுமென்றும்; அநேகர் தப்பான எண்ணங்கொண்டிருக்கிறார்கள். இப்படிப்பட்ட பெரியோரின் முன் மாதிரியைப் பார்த்து எத்தனையோ எளிய ஜனங்கள் தங்கள் வீட்டிலுள்ள நீராகாரங்களை ஆடுமாடுகளுக்கு குடிக்கக் கொட்டிவிட்டு, அதினால் அவைகள் மிகவும் பெலத்துக் கொழுத்திருக்க, இவர்களோ தங்களுடைய பெலத்தையும் இழந்து, இன்னம் தசை நரம்பு, மூளை முதலியவைகளையும் காப்பி, தேயிலை முதலிய கெடுதியான பானங்களால் மிகவும் பெலயீனப்படுத்திக்கொள்ளுகிறார்கள்.

தற்சமயம் நமது நாட்டில் சிறு பிள்ளைகள் தாய்ப் பால் மறக்கவும் குடிக்கப் பழகிறது இதுதான். பெரியோர் திரளானோர் வயது சென்று கல்லறைக்குள் போகுமட்டும் பிரியாச் சிநேகிதராக தெரிந்துகொள்ளும் பானமும் காபித் தண்ணீர்தான். காலஞ் செல்லச் செல்ல கொஞ்சத்தூள் போட்டால் நாவுக்கும், தேகத்துக்கும் சுவானை கெட்டுப்போகிறது. அப்பொழுது அதிக தூள்போட்டு வெகு காரமாய்க் குடிக்க ஆரம்பிக்கிறார்கள். இப்படிப்பட்டோர் கொஞ்சத் தூளைப்போட்டு காப்பி சாப்பிடுகிறவர் வீட்டுக் காப்பியை வெகு கேலி பண்ணி அவர்களை லோபி யென்று முதலாய் அழைக்கத் துணிந்துவிடுகிறார்கள்.

தேயிலை, காப்பி பானங்களைப்பற்றி பேர்பெற்ற வைத்தியர்கள் பின்வருமாறு எழுதுகிறார்கள்:—

ஒரு கோப்பை தேத்தண்ணீரில் சாதாரணமாய் ஒரு தானியமணி அல்லது இரண்டு தானியமணி எடையுள்ள (Theine) தெயின் என்னும் மயக்கந்தரும் வஸ்துவும், ஏறக்குறைய மூன்று தானியமணி எடையுள்ள டானிக் ஆசிடும் சேர்ந்திருக்கிறது. காப்பியிலும் நூற்றுக்கு இரண்டுவீதம் (Caffeine) கேவ்வியன் என்னும் மயக்கந்தரும் வஸ்துவும் நூற்றுக்கு எட்டு அல்லது 10 வீதம் டானிக் ஆசிடும் அடங்கியிருக்கிறது. ஆகவே ஒரு கோப்பை தேத்தண்ணீரில் என்னென்ன சேர்ந்திருக்கின்றனவோ அவைகள் ஒரு கோப்பை காப்பியிலும் அதே அளவாய்ச் சேர்ந்திருக்கின்றன. ஒரு ராத்தல் காப்பிக் கொட்டையில் 150 தானியமணி எடையுள்ள (Caffeine) கேவ்வியன் என்னும் விஷப்பொருள் சேர்ந்திருக்கிறது. இந்த விஷம் நாலு மனிதரைக் கொல்வதற்குப் போதுமானது. ஆங்கிலேய வைத்திய சாஸ்திரப்படி மருந்துகளில் இப்படிப்பட்ட வஸ்துக்களைக் கலக்கும் அளவு ஒரு தானியமணி எடை முதல் ஐந்து தானியமணி எடையுள்ளவரையில்தான். ஆகையால் ஒவ்வொரு கோப்பைத் தேத்தண்ணீரிலும் அல்லது காப்பியிலும் மருந்துகளில் சேர்க்கப்படும் பூரண அளவான விஷப்பொருள் அடங்கியிருக்கிறதென்பது பிரத்தியக்ஷம்.

(Theine) தெயின் என்பது மயக்கந்தரும் பலத்த விஷம். ஒரு தவளையைக் கொல்வதற்கு அதில் ஒரு தானியமணி எடையில் எழில் ஒரு பங்கு போதுமானது. ஐந்து தானியமணிஎடை ஒரு பூனையைக் கொன்றுபோடும். எட்டு தானியமணி எடை ஒரு ஆளுக்கு கொடுத்தால் அவனை விஷப்படுத்தும் கொடிய குறிகளைக் காணலாம். தேயிலையிலும் காப்பியிலும் சரீரத்தைப் போஷிக்கும் வஸ்து ஒன்றுமில்லாமையினால் அவை ஆகாரமல்ல. அவை பசி தீபனத்தைக் குறைத்து, ஜீரண சக்தியையும் கெடுத்துப்போடுகின்றன. அத்தோடு கொஞ்சம் பாலும் சர்க்கரையும் சேர்க்கிறதினாலன்றி மற்றப்படி அதில் போஷணை யுண்டாக்கும் வஸ்து கிடையாது.

அவை ஆகாரமல்லவென்றால், அவை என்ன? அவைகள் மருந்து சரக்குகள், விஷமுள்ள மருந்து சரக்குகள். ஆதலால் அவற்றை மதுபானம், புகையிலை அபின் முதலியவற்றின் அட்டவணையோடு சேர்க்கலாம். அவை மயக்கந்தரும் வஸ்துக்களாயும், வேலை செய்யும் ஒவ்வொரு அவயவத்திற்கும் கொறடாபோலும் இருக்கின்றன.

ஆகையால், இதை வாசிக்கும் என் பிரிய நண்பர்களே! நீங்களும் இந்தப் பானத்தை சாப்பிடுகிறவர்களானால், இந்தச் செட்டியாரைப்போன்ற அனுபோகம் சந்தேகமற உங்களுக்கும் அனந்தம் இருக்கலாம். ஆகையால் இது காரியத்தை நன்கு யோசித்து தெய்வ சாயலாகச் சிருஷ்டிக்கப்பட்ட நாம் நமது சரீரத்தை நல்ல சுகத்தோடும், பலத்தோடும், காப்பாற்றும்படி தீமையான சகல பானங்களையும் நம்மை விட்டு விலக்குவோமாக.

ஈ. டி. தா.

சாஸ்திரமும் வேத வாக்கியங்களின் ஒற்றுமையும்

(SCIENCE AND THE UNITY OF SCRIPTURES.)

நம்முடைய பத்திரிகையை வாசிக்கிற சிலர், நம்மைத் தப்பான அபிப்பிராயமுள்ளவர்களென்று உடனே குற்றஞ் சாட்ட ஆரம்பிப்பார்கள். அவர்கள் குற்றமாக எடுத்துக் காட்டிப் பேசும் விஷயம் என்னவென்றால்:

"ஆதியாகமத்தின் துவக்கத்தில் சொல்லப்பட்டிருக்கும் நாட்கள் யுகங்களல்ல, இருபத்துநான்கு மணி நேரங்கொண்ட நாட்கள்தானென்றும், பிரத்தியேகமாக உலக சிருஷ்

டிப்பு ஆறு நாட்களில் நடந்ததென்றும் நீங்கள் ஸ்திரமாய்ப் பேசி இப்போதகத்தை உறுதிப்படுத்துவதற்குக் காரணம் இன்னதென்பது பிரத்தியட்சமாயும் லேசாயும் விளங்குகிறது.''

''நாங்கள் ஏன் அப்படிச் சொல்லுகிறோம்?'' அதை ரூபகாரப்படுத்த மனமுள்ளவர்களாகவே கேட்கிறோம்.

''நீங்கள் ஏழாம் நாளை ஆசரிக்கிறவர்களாயிருப்பதினிமித்தம் வேத வாக்கியங்களை எழுத்தின் பிரகாரம் அர்த்தப்படுத்தி, திட்டமாய்க் குறிக்கப்பட்ட ஒரு ஓய்வுநாள் உண்டென்று ரூபிப்பதற்கிசைவாய் அப்படிப் போதிக்கிறீர்கள். அந்த நாட்கள் இருபத்து நான்குமணி நேரங்கொண்ட நாட்களல்ல பல யுகங்களைக் குறிக்கிறதென்று நீங்கள் ஒப்புக்கொண்டால், ஓய்வு நாளாகத் திட்டமாய்க் குறிக்கப்பட்ட ஒரு நாள் உண்டென்று நீங்கள் போதிக்கும் போதகம் ரூபகாரப்படாமற் போகும்.

''நீங்கள் சொல்வது சரிதானென்று நாங்கள் ஆக்ஷேபனையின்றி ஒப்புக்கொள்ளுகிறோம்.'' ''இதைப்பற்றித்தானே நாங்களும் எடுத்துப்பேச முயற்சியாயிருக்கிறோம். அதாவது, ஆதியாகமத்தில் சிருஷ்டிப்பைப்பற்றி சொல்லப்பட்டிருக்கும் விபரத்தையும், பத்துக் கற்பனைகளில் நாலாவது கற்பனையையும் கவனிக்கும்போது, ஓர் விசேஷித்த சிருஷ்டிப்பின் கிரியையும் ஓய்வு நாளும் ஒன்றுக்கொன்று அதிக சம்பந்தப்பட்டதாயிருப்பதாக விளங்குகிறது. நாம் ஓய்வு நாளைத் தள்ளிப்போடுவோமானால், தேவனுடைய விசேஷித்த சிருஷ்டிப்பைப்பற்றிய விஷயத்தையும் தள்ளிப்போடுகிறவர்களாயிருக்கிறோம். ஏனென்றால், தேவனுடைய வார்த்தையின் வல்லமையினாலே உலகம் சிருஷ்டிக்கப்பட்டதென்று சொல்லும்போது, அது வேத எழுத்தின்படியே ஆறு நாட்களில் சிருஷ்டிக்கப்பட்டதென்பதும் ஒப்புக்கொள்ளவேண்டிய விஷயமே. ஆகவே, எழுத்தின்படியே ஏழாம் நாளாகிய ஓய்வு நாள், மற்ற ஆறு நாட்களையும் அந்நாட்களில் செய்யப்பட்ட கிரியைகளையும் நினைப்பூட்டும் ஞாபகார்த்தமான நாளாயிருக்கிறது.''

மேலும் தேவன் உலகத்தைத் தமது வார்த்தையினாலே சிருஷடித்தாரென்பதை நாம் தள்ளிப்போட்டு தற்கால சாஸ்திரமென்று சொல்லும் அபத்தமான விஷயத்தைப்பற்றிக்கொண்டு, உலக சிருஷ்டிப்பு பல யுகங்களாக நடந்தேறி வந்ததென்றும், ஆறு நாள் ஏழு நாள் என்பதெல்லாம் நாம் கணக்கிடும் 24 மணி நேரங்கொண்ட நாட்களல்ல கணக்கிலடங்காத யுகங்களென்றும் சொல்வோமானால், சிருஷ்டிப்பின் ஞாபக சின்னமாக ஏழாம் நாளை ஆசரிப்பதற்கு நியாயானுசாரமான காரணம் கிடையவே கிடையாது. ஏனென்றால் அளவிடக்கூடாத யுகத்திற்கு ஞாபக சின்னமாக ஏழாம் நாளை வைப்பது எவ்விதத்திலும் பொருந்தாத விஷயம். பல சரக்குகள் வைக்கப்பட்டிருக்கும் பண்டசாலையின் வாசலில் கம்மாளனுடைய அடையாளம் ஒன்றை வரைந்து வைப்பது எப்படி ஒவ்வாததாயிருக்கிறதோ அப்படித்தான் இதுவும் இருச்கிறது. இவ்விரண்டும் ஒன்றுக்கொன்று இசைவில்லாதவைகளாயிருக்கின்றன.

கர்த்தருடைய வசனம் என்ன சொல்லுகிறதோ அதேதான் அதின் கருத்தாயிருக்கிறதேயன்றி அதற்கு யாதொரு வேறொரு கருத்தைச் சொல்லுகிறதில்லையென்று நாம் நம்புகிறோம். தேவன் ஆறு நாட்களில் வானத்தையும் பூமியையும் படைத்து ஏழாம் நாளிலே ஓய்ந்திருந்தபடியால் ஓய்வு நாளை ஆசரிக்கவேண்டுமென்று தேவ வசனம் சொல்லுகிறது. நாம் அவருடைய முன் மாதிரியைப் பின்பற்ற வேண்டியது. ஆனால் தேவன் அப்படிச் செய்யாமல் உலகத்தை அநேக யுகங்களாகப் படைத்துக்கொண்டேயிருக்கிறார், அவர் அந்தக் கிரியையை முடித்து இன்னும் ஓய்வடையவில்லையென்றால், இல்லாத ஒரு காரியத்தை நாம் செய்யவேண்டுமென்றும், பொய்யான ஒரு ஞாபக சின்னத்தை நாம் வைத்து அதை நினைவுகூரவேண்டுமென்றும் அவர் கட்டளையிட்டதுபோலாகுமல்லவா? தற்கால

சாஸ்திரம் சொல்வது அப்படித்தானிருக்கிறது: ''சிருஷ்டிப்பு முடிவடையாமல் தொடர்ந்தேர்ச்சியாய்ச் சதா காலமும் நடத்தப்படும் கிரியை. அவ்வேலை இன்னும் நடந்துகொண்டிருக்கிறது. அது பூர்த்தியடைய இன்னும் அளவிடக்கூடாத காலம் செல்லும்'' என்று தற்கால சரஸ்திரம் சொல்லுகிறது.

ஓய்வு நாளை ஆசரிக்கிறவர்கள் தப்பிதமான ஓர் அபிப்பிராயமுள்ளவர்களென்றும், ஓய்வு நாள் அநுசரிக்கப்படுவது அவசியமென்று ஸ்தாபிக்கும் நோக்கமாகவே அவர்கள் நியாயம் பேசுகிறார்களென்றும், ஆதியாகமத்தின் முதல் அதிகாரத்தில் சொல்லப்பட்டிருப்பதை எழுத்தின்படி அர்த்தப்படுத்தாமற்போனால் அவர்கள் சொல்லும் நியாயங்கள் ஒன்றும் நிற்காது என்றும் குற்றஞ் சாட்டுவார்கள்.

நாம் ஸ்திரமாய்ச் சொல்வதென்னவென்றால், ஆதியாகமத்தை எழுத்தின் பிரகாரம் அர்த்தப்படுத்தாதபடி அதைத் தள்ளிப்போட்டால் அதினால் ஓய்வு நாள் தள்ளப்பட்டுப் போவது மாத்திரமல்ல, உலக சிருஷ்டிப்பைப்பற்றி சொல்லப்பட்டிருக்கும் விஷயங்களெல்லாம் தள்ளப்படவேண்டியதாயிருக்கும். இதை நாம் நியாயானுசாரப்படி சொல்வது மாத்திரமல்ல; அநுபோகத்தைக் கொண்டும் அறியலாம். ஆதியாகமத்தில் சொல்லப்பட்டிருப்பதை எழுத்தின்படி அர்த்தப்படுத்தாமல் இவ்விதமாய்ப் புரட்ட முயன்றவர்கள் சிருஷ்டிப்பைப்பற்றி வேதாகமம் சொல்வதையெல்லாம் மறுத்துப் பேசும்படியாய்த்தான் முடிந்திருக்கிறது.

திருஷ்டாந்தமாக, அநேக வருஷங்களுக்குமுன்னே கல்வித்திறமையும் புத்திக்கூர்மையுமுள்ள ஒருவர் ஆதியாகமத்தின் முதல் அதிகாரத்திலடங்கிய சத்தியங்களை மறுத்துத் தள்ள ஆரம்பித்தார். அவர் இப்படிச் செய்யத் தொடங்கினபோது, தாம் செய்யும் இந்த மார்க்கபேதகமானது தன்னை எங்கே கொண்டுபோய்ச் சேர்க்குமென்று நினைக்கவேயில்லை. ஆனால் அவர் சென்ற பாதை அவரை எங்கே கொண்டுபோய்விட்டதென்பது இப்பொழுது தெளிவாயிருக்கிறது. சத்திய வேத வாக்கியங்களில் காட்டப்பட்டிருக்கும் அத்துமீறி வேறு பாதையில் கொண்டுபோய்விட்டது.

அவர், தான் இயற்கைப் பொருட்களின் உற்பத்தியைப்பற்றி அறியக் கொஞ்சம் ஆராய்ச்சி செய்ய விரும்பித் தன் பிரயாணத்தை ஆரம்பித்ததாகச் சொல்லுகிறார். அவர், தாம் எடுத்த வழியை விட்டு ஒரு மயிரளவாகிலும் பிசகி வழி தப்பிப்போகாதபடிச் செல்லுகையில் தாம் செல்லும் மார்க்கத்தியெல்லாம் தமது வழியைத் தடுக்கும் உயரமும் பயங்கரமானதுமான வேலிகள் அடைத்திருப்பதாகச் சொல்லுகிறார். அவர் அவற்றை முள்வேலிகள் என்றும், ''சரியான வழியல்ல; இவ்வழியாய்ச் செல்லக்கூடாது'' என்று பலகைகளில் நோட்டீஸ் எழுதி அதனடியில், தேவனுடைய கட்டளைப்படிக்கு, மோசே, என்று கையொப்பமிட்டிருப்பதாகவும் சொல்லுகிறார்.

சாஸ்திரமென்னும் இராட்சியத்தைச்சுற்றிப் பரிசோதித்ததில் தேவனுடைய வசனமானது தடைப்படுத்துகிறதை வெகு அலங்காரமாய் நமக்கு வர்ணித்துச் சொல்லுகிறார். அவருக்கு உண்மையென்று தோன்றினதும், தாம் உண்மையென்று நினைத்துக்கொண்டு பார்த்ததுமானதெல்லாம் எத்திசையிற் சென்றாலும் தேவ வசனமானது அவற்றை மறுத்துப் பேசுவதாகக் கண்டார். இந்த வசனத்தை அவர் மதித்தாரா? அடைப்பாகிய இந்த வேலியை அவர் சட்டை பண்ணினாரா? இல்லை!

அவருடைய மதிப்பில் இந்த அடைப்பாகிய வேலிகளெல்லாம் காய்ந்த குச்சிகளும் தோலும் போராகக் குவிக்கப்பட்ட ஒரு 'குவியல்போலப் பாவித்து,' அதில் யாதொரு கேடுதியும் நஷ்டமுமின்றி ஒருவன் கடந்து செல்லலாமென்று எண்ணிக்கொண்டதாகச் சொல்லுகிறார். அப்படியே அவர் செய்தார்.

இத்தோடே மாத்திரம் அவர் நின்றுபோகவில்லை. கெடுதலான இந்த ஆரம்பத்திலிருந்து அதிகம்திகமான கேட்டிற்கு நடத்தப்பட்டார். இப்படி விலக்கப்பட்ட மார்க்கங்களைத் தைரியமாக அத்துமீறிக் கடந்து செல்லவே, ஆதியாகமத்தில் சொல்லப்பட்ட சத்தியங்களைத் தள்ளிப்போடவேண்டியதாயிருந்ததுபோல், சுவிசேஷத்திலுள்ள சத்தியங்களையும் ஒவ்வொன்றாக அது சரியல்ல, இது சரியல்லவென்று அலட்சியம் பண்ணித் தள்ளவேண்டியதாயிற்று. இப்படிச் செய்ததற்குத் தான் உத்திரவாதியல்லவென்று அவர் சொல்லுகிறார். சிருஷ்டிப்பைப்பற்றி வேதாகமத்தில் எழுதிவைக்கப்பட்டிருக்கும் மெய்யான சாட்சியைப் தள்ளிப்போடத் துணிந்ததானது வரவர சுவிசேஷ சத்தியங்களையெல்லாம் தள்ளிப்போடும்படி செய்தது.

இப்படிச் செய்த ஹக்ஸ்லே (Huxley) என்பவர் வரம்பு கடந்துபோய்விட்டார். அவர் சிருஷ்டிப்பைப்பற்றி வேதாகமத்தில் சொல்லப்பட்டிருப்பதைத் தள்ள முயற்சி செய்து அப்படிப் போனதினாலே, மற்றவர்களும் அப்படித்தான் செய்வார்களென்று சொல்லக்கூடாதென்று அநேகர் நினைப்பார்களென்பதற்குச் சந்தேகமில்லை. ஆனால் இது விஷயமாய் நாம் மறுபடியும் சொல்லுகிறதென்னவென்றால் ஒருவன் வேதாகமத்தில் சொல்லப்பட்டிருக்கும் ஒரு சத்தியத்தை மறுக்கத் துணிவுகொண்டு முதல் அடி எடுத்து வைக்க ஆரம்பித்துவிட்டால் மற்றதெல்லாம் அப்படித்தான் முடியும் என்பதற்குச் சந்தேகமில்லை, யென்று நாம் சொல்ல நியாயமுண்டு.

ஹக்ஸ்லே என்பவர் தான் செய்ததுதான் மகா நியாயமான விஷயமென்றும், தான் செய்ததுபோல செய்ய ஆரம்பித்து, தன்னோடுகூட சில அடி மாத்திரம் எடுத்துவைத்து, சற்று தூரம் ஒற்றுமையாய் வந்து பிறகு தன்னோடு செல்லாமல் நின்றுபோனவர்கள் செய்தது பொருந்தாத காரியமென்றும் நினைத்துக்கொண்டார். வேத வாக்கியங்களில் தெளிவாய் சொல்லப்பட்டிருக்கும் ஒரு சத்தியத்தை உள்ளபடியே அர்த்தப்படுத்தாமல், அது சாஸ்திரத்திற்கு இசைவாயில்லையென்று வேறு அர்த்தங்கொடுக்க ஆரம்பித்தால் சாஸ்திரத்திற்கு ஒற்றுமையாயிராத மற்றெல்லா வேத வாக்கியங்களையும் அப்படித்தான் தள்ளிப்போடவேண்டியதாகும். அவை தெளிவாயிருந்தாலும் அவை சொல்லும் விஷயங்களைத் தள்ளி அவை சொல்லாத வேறொரு அர்த்தத்தை அவற்றிற்குக் கொடுக்கவேண்டியதாய் நேரிடும்.

"எபிரேய பாஷையி லெழுதப்பட்ட வேத எழுத்துக்களை, விசேஷமாய் அவற்றினின்று எடுத்து உண்மையென உத்தேசித்து புதிய ஏற்பாட்டில் காட்டப்பட்டிருப்பவைகளை அபத்தமென்று ரூபிப்பது கிறிஸ்து மார்க்க வேத சாஸ்திரத்திற்குக் கேடாயிருக்கும்" என்று சாதிப்பதில் எவ்வித தோஷமுமிருப்பதாகத் தன் சூட்சும புத்தியைக்கொண்டு கண்டுபிடிக்கக்கூடவில்லை யென்று ஹக்ஸ்லே என்பவர் தானே சொல்லியிருக்கிறார்.

அவர் சொல்லுகிற தென்னவென்றால், "யூதருடைய வேத வாக்கியங்கள் சரித்திர சம்பந்தப்படி நம்பப்படத்தக்கவைகளாயிருக்கின்றனவோ இல்லையோ என்பதற்குத் தக்கபடிதான் கிறிஸ்து மார்க்க வேத சாஸ்திரம் ஸ்திரப்பட அல்லது ஆதாரமின்றி விழுந்துபோகவேண்டியதென்பதை எப்படி ஒருவன் சற்றேனும் சந்தேகிக்கக் கூடும் என்பது எனக்கு அறிந்துகொள்ளக்கூடாமலிருக்கிறது. மேசியா அல்லது கிறிஸ்துவைப்பற்றிய எண்ணமும் கருத்துமே யூத சரித்திரத்தில் பிரிக்கக்கூடாத விதமாய் நெருங்கிய சம்பந்தமுடையதாயிருக்கிறது. இயேசு நாசரேத்தான்தான் அந்த மேசியாவென்று ரூபகாரப்படுத்துவது எபிரேய வேத வாக்கியங்களை அர்த்தப்படுத்துவதைப் பொறுத்ததாயிருக்கிறது. அவைகளோ அவற்றில் குறிக்கப்பட்ட சரித்திர இலக்ஷணங்களையுடையதாயிருந்தாலன்றி மற்றபடி இயேசுதான் மேசியாவென்று ருஜுவு கொடுக்கத்தக்கதாயிருக்கிறதில்லை. ஆபிரகாமோடு உடன்படிக்கை பண்ணப்படாதிருந்தால், விருத்தசேதனமும் பலிகளும் நியமிக்கப்படாதிருந்தால், பத்துக் கற்பனைகள் தேவனுடைய கையினால் கற்பலகையில் எழுதப்படாதிருந்தால், ஆபிரகாம், தேசியஸ் என்பவனைப்போலப் கட்டுக்கதையில் சொல்லப்பட்ட ஒரு வீரனாயிருந்தால், ஜலப்பிரளயத்தைப்பற்றிய சரித்திரம் ஒரு கல்பனையாயிருந்தால், சிருஷ்டிப்பைப்பற்றிய சரித்திரம் ஞானதிருஷ்டிக்காரனுடைய சொப்பனமாயிருந்தால், மெய்யாய் நடந்த சம்பவங்களாகக் காணப்படும் இந்தத் திட்டமான சரித்திரங்களெல்லாம் ரோம ராட்சியத்தின் காலத்துக் கதைகளைவிட விசேஷ மதிப்புள்ளவைகளல்லவென்றால், இவற்றைவிடத் தெளிவற்றதும், விபரிப்பதற்கரியதுமான மேசியாவைப்பற்றிய போதகத்தைப்பற்றி என்ன சொல்லுகிறது? புதிய ஏற்பாட்டின் ஆகமங்களை எழுதினவர்களின் ஆதாரம்தான் என்ன, அவர்கள் அற்பமான கட்டுக் கதைகளை உறுதியான சத்தியமென்று ஒப்புக்கொண்டதுமல்லாமல், கற்பிதமாகிய உதிர் மண்ணின்பேரில் கிறிஸ்து மார்க்க போதகத்தின் அஸ்திபாரத்தைக் கட்டியிருக்கிறார்களல்லவா?"

இவருடைய நியாய சாஸ்திரமானது எவ்வளவு தூரத்திற்கு இவரைக் கொண்டுபோய் விட்டது பார்த்தீர்களா? அவர் நடத்தும் அந்தப் பாதையிலேயே அவரைப் பின்பற்ற ஆரம்பித்தவர்களும் செல்வார்களல்லவா? இம்மோசத்திற்குத் தப்ப ஒரே ஒரு மார்க்கமுண்டு. அவரோடு முதல் ஒரு அடிகூட எடுத்துவைக்காதிருப்பதே உத்தமம்.

இயேசுவின் நாமம்

உலகத்தின் பெரிய கவிராயனான ஷேக்ஸ்பியர் (Shakspeare) "ஒரு பெயரில் என்ன உண்டு" என்று ஒரு கேள்வி கேட்கிறார். ஒரு பெயரில் அநேக காரியங்களுண்டென்று நாம் நினைக்கிறோம். சில பெயர்கள் நமக்கு அதிக விருப்பமுள்ளவைகள். அவைகள் நம்முடைய அருமையான சிலவற்றைப்பற்றி நமக்கு நினைப்பூட்டுகிறது. கிரிமியன் யுத்தம் நடந்துகொண்டிருக்கும்பொழுது ப்ளாரன்ஸ் நைற்றிங்கேல் (Florence Nightingale) என்னும் ஓர் அம்மாள் அந்தப் போர்க்களத்திற்குப் போய் காயப்பட்டவர்களுக்கு உதவி செய்யப்போனார்கள். அவள் அவர்களை அதிக பக்ஷமாய் நடத்தினாள். ஆகையினாலே சில போர்வீரர்களுக்கு அந்தம்மாளுடைய பெயரைக் கேட்டவுடன் அவர்கள் கண்களிலிருந்து கண்ணீர் புறப்பட்டு விடும். வேறொரு பெயரும் அப்படி அவர்களை அழுகச் செய்யாது. சில பெயர் நமக்கு பயத்தை உண்டாக்குகிறது. திருஷ்டாந்தரமாக திப்புவின் பெயர் அவன் உயிரோடிருக்கும்பொழுது அவனை அறிந்த ஜனங்களுக்கு எவ்வளவு கலகத்தையும் பயத்தையும் உண்டாக்கிற்றென்று பாருங்கள். அறிவில்லாத சில ஜனங்கள் தங்கள் பிள்ளைகளுக்குக் கெட்ட பெயர் இடுவதினால் அவர்கள் கெட்ட ஆவியினால் ஒரு தீங்கையும் அடையாமல் இருப்பார்களென்று நம்பி அவர்களுக்கு கெட்ட பெயர்கள் இடுகிறார்கள். சாலமோன் "பரிமள தைலத்தைப்பார்க்கிலும் நற்கீர்த்தியே (நல்ல பெயரே) நல்லது" என்று சொல்லுகிறார். பிர. 7: 1. தூதன் மரியாளுக்கு இயேசுவினுடைய பிறப்பைப்பற்றி அறிவிக்கும்பொழுது "அவருக்கு இயேசுவென்று பெயரிடுவாயாக" என்று சொன்னான். லூக். 1: 31. அக்குழந்தைக்கு ஏன் இயேசுவென்று பெயரிடும்படியாக தேவன் கட்டளையிட்டார்? ஏனென்றால் இயேசுவென்றால் ரக்ஷகர் என்று அர்த்தம். அவருடைய வருகையின் நோக்கம் நம்மைப் பாவத்திலிருந்து ரக்ஷிக்கிறதற்கே. அந்தப் பெயரைவிட நமக்கு வேறொன்றும் இனிமையாகத் தோன்றவில்லை. ஏனென்றால் அப்பெயர் நம்மைப் பாவத்திலிருந்து ரக்ஷிக்கிறவரைக் குறித்துச் சொல்லுகிறது.

இயேசுவின் பெயர் சர்வ லோகத்திலும் பெரிய பெயர். தேவனே அவரை உயர்த்தி அவருக்கு எல்லாப் பெயரைவிட ஒரு பெரிய பெயரைக் கொடுத்திருக்கிறார். பிலி. 2: 9. கிறிஸ்துவுக்கு 700 வருஷத்துக்கு முன் வசித்த ஏசாயா இதோ ஒரு கன்னிகை கர்ப்பவதியாகி ஒரு குமாரனைப் பெறுவாள்...... அவருக்கு இம்மானுவேல் என்று பேரிடுவாயாக.

இம்மானுவேல் என்பதற்கு தேவன் நம்மோடிருக்கிறார் என்று அர்த்தமாம்." மத். 1: 23. வேறெந்த பெயராவது அப்படி உயர்த்தப்பட்டிருக்கிறதா? வேதத்தில் கிறிஸ்துவுக்கு அநேக அர்த்தமடங்கிய பெயர்களுண்டு. லூக்கா அவரை உன்னதத்திலிருந்து உதயமானவரென்றும் யோவான் அவரை "பிரகாசிக்கிற விடிவெள்ளி நக்ஷத்திரமென்றும், சாலமோன் அவரை சாரோனின் ரோஜா புஷ்பமென்றும், பள்ளத்தாக்கின் லீலி என்றும், ஏசாயா அவரை அதிசயமானவர், ஆலோசனைக் கர்த்தா, வல்லமையுள்ள தேவன், நித்திய பிதா, சமாதானப் பிரபு என்றும் அழைக்கிறார். நாமும் சாலமோன் ராஜாவோடுகூடச் சேர்ந்து அவர் பதினாயிரம் பேர்களில் சிறந்தவர் என்று சொல்லலாம். மெய்யாகவே அவருடைய நாமம் ஒரு உயர்த்தப்பட்ட நாமமே.

அவருடைய பெயர் ஒரு வல்லமையுள்ள பெயர். என் நாமத்தினாலே நீங்கள் பிசாசுகளை துரத்துவீர்கள் என்று இயேசு சீஷர்களுக்குச் சொன்னார். பின்பு அந்த சீஷர்கள் சந்தோஷத்தோடே "ஆண்டவரே உம்முடைய நாமத்தினாலே பிசாசுகளும், எங்களுக்குக் கீழ்ப்படிகிறது" என்றார்கள். லூக். 10: 17. நாம் சிறுவர்களாயிருக்கும்பொழுது மந்திரக்காரரைப்பற்றி அனேக கதைகள் வாசித்திருப்போம். ஆனால் அவர்களெல்லாவற்றிலும் பெரியவர் இயேசுக்கிறிஸ்து. ஏனென்றால் பேதுரு இயேசுவினுடைய நாமத்தினாலே அநேக அற்புதங்களையும் அடையாளங்களையும் செய்யலாம் என்று சொல்லுகிறார். அது மாத்திரமல்ல இயேசு தாமே என் நாமத்தினாலே நீங்கள் எதைக் கேட்டாலும் அதை நான் செய்வேன் என்று சொல்லுகிறார். யோவா. 14: 13 உன் ஜெபம் கேட்கப்படவேண்டுமென்று விரும்புகிறாயா? நீ அப்படி விரும்பலாம். இயேசுவின் நாமத்தைக்கொண்டு நீ ஊக்கமான இருதயத்தோடு செய்யும் ஜெபத்தை உலகத்தின் எந்த வல்லமையினாலும் தடுக்க முடியாது. நீ உன் ஜெபத்தை இயேசுவின் நாமத்தைக்கொண்டு முடித்தாயானால் அது கட்டாயமாக கேட்கப்படும்.

இயேசுவினுடைய நாமத்தினால் மாத்திரம் நமக்கு இரக்ஷிப்புண்டு அப்போஸ்தலனாகிய யோவான் இயேசுவின் நாமத்தின் மூலமாய் மனிதர்கள் நித்திய ஜீவன் அடைவதற்காகவே தம்முடைய சுவிசேஷத்தை எழுதினார். எல்லாருக்கும் ரக்ஷிப்படைய ஓர் ஆசை யுண்டு. ஆனால் கொஞ்சம்பேர்தான் அதற்காக சரியான பாதையைத் தேடுகிறார்கள். ஒரு நாள் பேதுருவும் யோவானும் எருசலேமில் பிரசங்கித்துக்கொண்டிருக்கும்பொழுது ஆசாரியர்கள் அவர்களைப் பிடித்து "நீங்கள் எந்த வல்லமையினால் இதெல்லாவற்றையும் செய்கிறீர்கள் என்று கேட்டபொழுது பேதுரு" நீங்கள் சிலுவையில் அறைந்த நாசரேத்தானாகிய இயேசுவின் மூலமாக செய்கிறோம் என்று தைரியமாகச் சொன்னான். "அவராலே யன்றி வேறொருவராலும் ரக்ஷிப்பு இல்லை நாம் ரக்ஷிக்கப்படும்படிக்கு, வானத்தின் கீழெங்கும் மனுஷருக்குள்ளே வேறொரு நாமம் கட்டளையிடப்படவில்லை." அப். 4: 12. இயேசுவின் நாமத்தினால் மாத்திரம் நாம் ரக்ஷிப்பு அடைய முடியும். மேற்குத் தேசங்களில் குருடர்கள் தங்கள் கையால் தடவி வாசிக்கும்படியான புஸ்தகங்களை உபயோகிக்கிறார்கள். அம்மாதிரியே ஒரு குருட்டு ஸ்திரி லண்டன் பட்டணத்து வீதியில் உட்கார்ந்துகொண்டு தன் வேதத்தில் மேற்சொல்லிய கதையை வாசித்துக்கொண்டிருந்தாள். அவளை அநேகர் சூழ்ந்திருந்தார்கள். அவள் "வேறொரு நாமம் இல்லை" என்று சொல்லப்பட்டிருக்கிற இடத்திற்கு வந்ததும் தான் வாசித்த அவ்விடத்தை மறந்து "வேறு நாமம் இல்லை" என்று சொல்லிக்கொண்டே அந்த இடத்தைத் தேடினாள். அப்பொழுது அக்கூட்டத்தில் தேவனை அல்லது ரக்ஷிப்பைத் தேடாத ஒருவனிருந்தான். அவன் அப்பொழுது "நான் வேறொரு நாமத்தினால் ரக்ஷிப்பை அடைய முடியாவிட்டால் அந்த நாமத்தின் மூலமாய் அடைவேன்" என்று நினைத்தான். இதை வாசிக்கும் நண்பனே! நீ இயேசுவின் நாமத்தைப்பற்றி என்ன நினைக்கிறாய். ஒருவேளை நீ அதைப்பற்றிக் கவலைப்படமாட்டாய். ஆனால் ஒரு நாள் வரும், அப்பொழுது சகல நாவும் அந்த நாமத்தை அறிக்கைபண்ணும் என்று வாசிக்கிறோம். இப்பொழுதே நீ அறிக்கை பண்ணுவாயா?

H. G. Woodward.

ஒரு பொற்சிலை

THE GOLDEN IMAGE.

ஏறக்குறைய இராயிரத்து ஐந்நூறு வருஷங்களுக்குமுன்னே நேபுகாத்நேச்சார் என்னும் ஒரு மகா ராஜா ஒருபோதும் செய்யப்பட்டிராத ஒரு பெரிய பொற்சிலையை உண்டு பண்ணினான். சாதாரணமாக எல்லா பொற்சிலைகளும் அதிக சிறியதாகத்தானிருக்கும். சிலது இரண்டு மூன்று அடி உயரம் அல்லது ஆறு அடி உயரம்தானிருக்கும். ஆனால் நேபுகாத்நேச்சார் உண்டாக்கின சிலையோ இவைகளைப் பார்க்கிலும் பதினைந்து மடங்கு பெரியதாயிருந்தது. ஒரு நாள் ராஜா தான் உண்டாக்கின பொற்சிலையை தூரா என்னும் சமபூமியிலே நிறுத்தித் திரளான ஜனக்கூட்டத்திற்கு முன்பாகச் சிலையைப் பிரதிஷ்டை செய்ததைப் பார்ப்பது எவ்வளவு விநோதமான காட்சியாயிருந்திருக்கும்.

ராஜாவின் கட்டளைப்படியே, தேசாதிபதிகளும் அதிகாரிகளும், தலைவரும், நியாயாதிபதிகளும் பொக்கிஷக்காரரும், நாடுகளிலுள்ள உத்தியோகஸ்தர் யாவரும், தூராவின் சமபூமியிலே வந்து இறங்கினார்கள். அவர்கள் தரித்திருந்த விலை யுயர்ந்த ஆடை ஆபரணங்கள் ஜனங்களின் கண்களைக் கவர்ந்தன. ராஜாவின் கட்டளையைச் செய்யும்படியாக அங்கே பலத்த போர்வீரர்களும் இருந்தார்கள். வாத்தியக்காரர்கள் தங்கள் நானாவிதமான வாத்தியக் கருவிகளால் சுரங்களை மீட்டி வாசித்தார்கள். இந்தச் சிலையின் பிரதிஷ்டையை ஒருவரும் மறந்துபோகாவண்ணம் அதிக பணம் செலவிட்டுப் போஜனபான வகைகளையும் வழங்கினார்கள்.

ஆனால் சற்று தூரத்துக்கப்பால் ராஜாங்க உத்தியோகத்தில் தலைமையான மூன்று பேர் மெதுவாகப் பேசிக்கொண்டு அதிக விசனமுற்றிருந்தார்கள். அவர்கள் பேர், சாத்ராக், மேஷாக், ஆபேத்நேகோ. எக்காள சத்தம் கேட்கப்பட்டவுடனே எல்லாம் நிர்சப்தமாயிருந்தது. அப்போது ராஜாவின் தூதாள் ஒருவன் உரத்த சத்தமாய்: வாத்தியங்கள் முழங்கும்போது யாவரும் தாழ விழுந்து சிலையைப் பணிந்துகொள்ளவேண்டுமென்கிற ராஜகட்டளையை யாவரும் கேட்கும்படியாகத் தெளிவாய் உரைத்தான். வாத்தியங்கள் வாசிக்க ஆரம்பித்தபொழுது கூடி வந்திருந்த திரளான ஜனங்கள் சிலைக்கு முன்பாக விழுந்து அதை வணங்கினார்கள்.

அப்பொழுது ராஜாவின் தூதாட்கள், யாவரும் ராஜ கட்டளைக்குக் கீழ்ப்படிந்து சிலையை வணங்குகிறார்களாவென்று பார்த்தார்கள். அப்பொழுது அவர்கள் சாத்ராக், மேஷாக், ஆபேத்நேகோ என்னும் மூவர் நின்றுகொண்டிருக்கக் கண்டார்கள்.

இச்செய்தி ராஜாவுக்கு அறிவிக்கப்பட்டவுடனே அவர் மூன்று பேரையும் அழைத்தனுப்பினார். ராஜாவுக்கு இம்மூன்று பேரையும் நன்றாய்த் தெரியும். இவர்கள் மூவரும் ராஜாவின் உத்தம சிநேகிதர்களாயிருந்தார்கள். ஏனெனில் இவர்கள் ராஜ சமஸ்தானத்தில் அநேக வருஷமாய் உத்தியோகம் செய்திருந்தார்கள். அவர்கள் சிருஷ்டிகராகிய மெய்த் தேவனை வணங்குகிறவர்களானதால் அவர்கள் விக்கிரகத்துக்கு முன் பணியமாட்டார்களென்று ராஜாவுக்குத் தெரியும். ஆனால் தன்னுடைய கட்டளைக்கு யாவரும் கீழ்ப்படியவேண்டுமென்று ராஜா தீர்மானித்திருந்தான். ஆதலால் அவன் சிருஷ்டிகரைத் தூஷித்து, அவர்கள் சிலையை வணங்காமல் எதிர்த்து நிற்பார்களானால் உயிரோடே அவர்களை அக்கினிச் சூளையில் போடுவிக்கத் திட்டம் பண்ணினான்.

ராஜா தீர்மானித்ததை நிறைவேற்றுவாரென்று அவருக்குத் தெரியும். இது உலகத்தில் ஒருபோதும் நடந்திராத ஒரு சம்பவமாயிருந்தது. மெய்சிருஷ்டிகரின் வணக்கம் உலகத்திலிருக்கக்கூடாதென்கிற கட்டளையைப்போலிருந்தது. ராஜகட்டளையை மீறிச் சிலையை வணங்காமல் அக்கினிச் சூளையில் செத்தாலும் தங்கள் சிருஷ்டிகரை மறுதலிப்பது

கூடாத காரியமாயிருந்தது. அவர்கள் ராஜா சமுகத்தில் போய்ச் சிலையை வணங்கமாட்டோமென்று தைரியமாய்ச் சொன்னார்கள். மனிதருக்குரிய கடமைகளில் மாத்திரம் அவர்கள் அரசனுக்குக் கீழ்ப்படியவேண்டுமேயல்லாது தேவனுக்கடுத்த காரியங்களில் அவர்கள் தங்கள் மனச்சாட்சியின் பிரகாரம் தங்கள் சிருஷ்டிகரையே சேவிப்பதென்று தீர்மானித்தார்கள். இவ்வுத்தரவைக் கேட்டு ராஜா கடுங்கோப மூண்டு சூளையை ஏழு மடங்கு அதிகமாகச் சூடாக்கி இம்மூவரையும் அதில் போடுவிக்கத் தன் போர்வீரர்களுக்குக் கட்டளையிட்டான்.

கட்டளை துரிதமாய் நிறைவேறிற்று. முரட்டுப் போர்வீரர்கள் அவர்களைக் கட்டித் தூக்கிக்கொண்டு நெருப்பின் மத்தியில் பாய்ந்து மாண்டனர். இப்பயங்கர காட்சியை ராஜா கண்ணுற்றுப் பார்த்துக்கொண்டிருந்தான். ஆனால் அவன், அக்கினியில் நாலு பேர் உலாவுவதைக் கண்டு நடுக்க முற்றான். நாம் மூன்று பேரை அல்லவோ கட்டுண்டவர்களாக அக்கினியில் போட்டோம். ஆனால் நாலு பேர் இப்போது அக்கினியில் உலாவுகிறார்களே, நாலாவது ஆளின் முகம் தேவ குமாரனின் சாயலுக்கு ஒப்பாயிருக்கிறதே என்று ஓலமிட்டான். தங்கள் மாமிச ஆசை யிச்சைகளின்படி நடந்த ஜனங்கள் நித்தியமானவரைத் தரிசித்தார்கள். ராஜா மூவரையும் அக்கினியினின்று வெளியே வரும்படியாக வருந்திக் கேட்டான். அவர்கள் அப்படியே வெளியே வந்தார்கள்.

அப்போது, ராஜாவும், தேசாதிபதிகளும் உத்தியோகஸ்தர்கள் யாவரும் அக்கினியின் நடுவிலிருந்து சேதப்படாமல் வந்த மூவரையும் சூழ்ந்துகொண்டு அவர்கள் உடைகளை முகர்ந்து பார்த்து, மெய்யான சிருஷ்டிகர் தமக்குக் கீழ்ப்படியும் பிள்ளைகளைத் தமது வல்லமையாலும் பராக்கிரமத்தாலும் மீட்டு ரக்ஷித்தாரென்று உணர்ந்துகொண்டார்கள். அவர்களுடைய தலை மயிரில் ஒன்றுகூட கருகாமலும் அவர்களுடைய சால்வையின் ஒரு நூல் இழைகூட வெந்துபோகாமலும் இருந்தது.

தம்மை உண்மையாய் ஆராதிக்கிற ஜனங்களை விடுவித்த மெய்யான தேவனை, ராஜா ஸ்தோத்தரித்தான். தான் ஒரு அற்ப மனிதனென்றும் தான் உண்டாக்கின தேவன் ஒரு சத்துவமுமற்ற வெறும் பொன்னென்றும், தேவனென்று தான் சொல்லிக்கொண்ட பொற்சிலைக்குக் கை கால் இன்னும் மற்ற அவயவங்களிருந்தபோதிலும் அதற்கு நன்மை அல்லது தீமை செய்வதற்குச் சக்தியில்லையென்றும் ராஜா உணர்ந்துகொண்டான்.

என்ன வித்தியாசம்! என்ன வேற்றுமை! ராஜா வெட்கமடைந்தான். பொன்னான தேவன் பலனற்றதாய்ப் போயிற்று. ஆனால் கேவலமாக நிந்திக்கப்பட்டு அக்கினியில் போடப்பட்ட மனிதர்கள் இப்போது மகிமையையும் கனத்தையும் பெற்றார்கள். இந்த மூவரும் அந்த மகா சந்தர்ப்பத்தில் தங்கள் சிருஷ்டி கர்த்தாவுக்குப் பக்தியாயிருந்ததால் அவர் அவர்களை மகிமைப்படுத்தினார்.

இம்மூன்று புண்ணிய புருஷர்கள் எவ்விதமான குண லக்ஷணங்களையுடையவர்களாயிருந்தார்களோ அதே குண லக்ஷணங்களையுடைய திரளான கூட்டத்தார் சீக்கிரத்தில் இந்தியாவிலும் தோன்றுவார்களாக. சிருஷ்டிகர் மாறாதவராயிருக்கிறதினால் அவரை மகிமைப்படுத்துகிறவர்களை அவர் மகிமைப்படுத்துவார். இப்பத்திரிகையை வாசிப்போர் அக்கூட்டத்தில் ஒருவராயிருக்கும்படிக்குப் பிரயாசைப்படுவார்களாக.

H. L. Peden.

கடக்கக்கூடாத ஒரு பெரிய பிளப்பு.

(A GREAT IMPASSABLE GULF.)

இவ்விடத்திலிருந்து உங்களிடத்திற்குக் கடந்துபோகவும், அவ்விடத்திலிருந்து எங்களிடத்திற்குக் கடந்து வரவும் மனதுள்ளவர்களுக்குக் கூடாதபடிக்கு எங்களுக்கும் உங்களுக்கும் நடுவே பெரும் பிளப்பு உண்டாக்கப்பட்டிருக்கிறது. லூக்கா 16: 26.

இவ்வார்த்தைகள் ஒரு விசேஷித்த உவமையின் பாகம். இரட்சிக்கப்படுவதற்கு இவ்வுலக ஜீவகாலத்தைத் தவிர, வேறு தவணையின் காலம் கொடுக்கப்படமாட்டாது என்று போதிப்பதற்கு இவ்வசனத்தில் சொல்லியிருக்கிறதைப்பார்க்கிலும் தெளிவான வார்த்தைகள் வேறொன்றுமில்லை. உலகத்தில் தோன்றும் ஒவ்வொரு மனுஷனுக்கும் அவனுடைய ஆயுசு நாட்களையே தேவன் அநுக்கிரககாலமாகக் குறித்திருக்கிறார். "கடக்கக்கூடாத ஒரு பெரும் பிளப்பு" என்பது, இப்போது பரிசுத்தவான்களும் நீதிமான்களுமாயிருக்கிறவர்கள் தவணையின் காலம் முடியும்போது துன்மார்க்கராகமாட்டார்கள் என்றும், அப்படியே இப்போது அசுத்தரும் அநீதிமான்களுமாயிருக்கிறவர்கள் அத்தவணையின் காலம் முடியும்போது சன்மார்க்கராக முடியாதென்றும் காட்டுகிறது. மனுக்குலத்தார் எல்லோருக்கும் கிறிஸ்துவின் இரண்டாவது வருகையோடு கிருபையின் காலம் முடிந்து தீரும். அப்போது ஒரு பெரிய தீர்ப்பின் சத்தம் தொனிக்கும். அதாவது, "அநியாயஞ் செய்கிறவன் இன்னும் அநியாயஞ் செய்யட்டும், அசுத்தமாயிருக்கிறவன் இன்னும் அசுத்தமாயிருக்கட்டும்; நீதியுள்ளவன் இன்னும் நீதி செய்யட்டும்; பரிசுத்தமுள்ளவன் இன்னும் பரிசுத்தமாகட்டும். இதோ சீக்கிரமாய் வருகிறேன்; அவனவனுடைய கிரியைகளின்படி அவனவனுக்கு நான் அளிக்கும் பலன் என்னோடேகூட வருகிறது" என்பதே. வெளி. 22: 11, 12. ஆகையால் இரட்சிக்கப்படுவதற்கு மறுதருணம் கிடையாது என்பது ஓர் தெளிவான சத்தியம்.

இது ஒரு உவமையா? அல்லது வெளிப்படையான வசனமா?

பரிசுத்த வேதாகமத்தில், கற்பனைகள், தீர்க்கதரிசனங்கள், உவமைகள், வெளிப்படையான வசனங்கள் என பல பாகங்கள் உண்டு. வேதத்தை வாசிக்கும் பெரும்பான்மையோர் மேற்சொல்லிய பல பாகங்களின் வித்தியாசத்தை அறிந்துகொள்ளக்கூடாமல், எல்லாவற்றையும் வெளிப்படையான வசனமென்றே எண்ணுகிறார்கள். இயேசு கிறிஸ்துவின் பன்னிரண்டு சீஷருங்கூட அவர்களின் மனக்கண்கள் திறக்கப்படுமுன் இப்படித்தான் தப்பிதமாய் எண்ணினதுண்டு. உதாரணமாக, "நம்முடைய சிநேகிதனாகிய லாசரு நித்திரை யடைந்திருக்கிறான்" என்று இயேசு அவர்களைப் பார்த்து உவமையாய்ப் பேசினபோது, அவர்கள் "நித்திரை செய்து இளைப்பாறுகிறதைக்குறித்துச் சொன்னாரென்று நினைத்தார்கள்." அப்பொழுது இயேசு அவர்களை நோக்கி: லாசரு மரித்துப்போனான் என்று வெளிப்படையாய்ச் சொல்லவேண்டியதாயிருந்தது. சில வேளைகளில் ஒரு வெளிப்படையான வசனத்தை விளக்கிக் காட்ட அவர் உவமைகளை உபயோகித்திருக்கிறார். பொருளாசையும் ஐசுவரிய மயக்கமும் நிறைந்த பரிசேயரும் வேதபாரகரும் ஆசாரியரும் மனிதரால் கனம் பெற்றவர்களாயினும் தேவ பார்வையில் அருவருப்பானவர்களென்று காண்பிக்க, ஐசுவரியவானும் லாசருவும் என்ற உவமையைப் பேசினார்.

மேலும் செய்யுள்களிலும் அலங்காரப் பேச்சுகளிலும் உவமைகளிலும் ஜீவனில்லாததை ஜீவனுள்ளதைப்போலவும் ஆளில்லாததை ஆளைப்போலவும் பாவித்து பேசுகிறதுண்டு. இதற்கு இலக்கணத்தில் புருஷாரோபம் (Personification) என்று பெயர். மரித்துப்போன ஐசுவரியவானும் முற்பிதாவாகிய ஆபிரகாமும் சம்பாஷித்ததாகப் பார்க்கிறோம். இது ஒரு சரியான புருஷாரோபம். இவ்விதமாகவே, ஆதி. 4: 9, 10; ஆப

கூக் 2: 11; யாக்கோபு 5: 4 முதலிய வசனங்களில் புருஷாரோபமாய்ப் பேசியிருப்பதைப் பார்க்கவும். ஒரு மனிதன் மரித்து கல்லறையில் வைக்கப்பட்டபின் நன்மையையாவது தீமையையாவது தெரிந்துகொள்ள அவனுக்கு சக்தியில்லை. ஏனென்றால் அவன் மரித்த அந்நாளிலேயே அவனுடைய யோசனைகள் அழிந்துபோகிறது. சங். 146: 4; பிரசங்கி 9: 5, 6, 10. ஆகையால் இது ஒரு உவமையென்றே தீர்க்கிறோம்.

இந்த உவமையின் தாற்பரியம்.

உவமையில் சொல்லப்பட்ட ஐசுவரியவான், தன்னயமுள்ளவர்களுக்கும் பணப்பிரியருக்கும், சுகபோகப்பிரியருக்கும், தேவன்பேரில் சார்ந்திராமல் தங்கள் செல்வத்தின்மேலும் கல்வியின்மேலும் சார்ந்திருக்கிறவர்களுக்கும் ஒப்பனையாகப் பேசப்பட்டிருக்கிறான். ஏழை லாசருவை, உலகப்பிரகாரமாய் தரித்திரராயிருந்தாலும் "விசுவாசத்தில் ஐசுவரியவான்களாயிருக்கிற" நீதிமான்களுக்கு ஒப்பிட்டிருக்கிறது. யாக்கோபு 2: 5.

"தரித்திரன் மரித்து, தேவ தூதரால் ஆபிரகாமுடைய மடியில் கொண்டுபோய் விடப்பட்டான்" என்பது நீதிமான்களாகிய பரிசுத்தவான்கள் மரித்தாலும் கிறிஸ்துவின் இரண்டாவது வருகையிலே உயிரோடெழுப்பப்பட்டு, தேவ தூதர்களால் பூமியின் நான்கு திசைகளிலுமிருந்து சேர்க்கப்பட்டு, பரம பிதாவின் வீட்டில் ஆயத்தமாக்கப்பட்டிருக்கும் வாசஸ்தலங்களுக்குக் கொண்டுபோகப்படுவதைக் குறிக்கும். "ஏனெனில் கர்த்தர் தாமே ஆரவாரத்தோடும், பிரதான தூதனுடைய சத்தத்தோடும், தேவ எக்காளத்தோடும் வானத்திலிருந்து இறங்கி வருவார்; அப்பொழுது கிறிஸ்துவுக்குள் மரித்தவர்கள் முதலாவது எழுந்திருப்பார்கள்" என்றும், "வலுவாய்த் தொனிக்கும் எக்காள சத்தத்தோடே அவர் தமது தூதர்களை அனுப்புவார்; அவர்கள் அவரால் தெரிந்துகொள்ளப்பட்டவர்களை வானத்தின் ஒரு முனை முதற்கொண்டு மறு முனைமட்டும் நாலு திசைகளிலுமிருந்து கூட்டிச் சேர்ப்பார்கள்" என்றும், "என் பிதாவின் வீட்டில் அநேக வாசஸ்தலங்கள் உண்டு; அப்படி யில்லாதிருந்தால் நான் உங்களுக்குச் சொல்லியிருப்பேன்; ஒரு ஸ்தலத்தை உங்களுக்காக ஆயத்தம் பண்ணப்போகிறேன். நான் போய் உங்களுக்காக ஸ்தலத்தை ஆயத்தம் பண்ணின பின்பு, நான் இருக்கிற இடத்திலே நீங்களும் இருக்கும்படி, நான் மறுபடியும் வந்து உங்களை என்னிடத்தில் சேர்த்துக்கொள்ளுவேன்" என்றும் சொல்லப்பட்டிருக்கிறது. 1 தெச. 4: 16; மத்தேயு 24: 31; யோவான் 14: 2, 3.

லூக்கா 16: 23-25-ல் சொல்லியிருக்கிறபடி ஐசுவரியவான் வேதனைப்படுகிற காட்சியின் கருத்து என்னவென்றால், தவணையின் காலம் முடிந்து, கிருபையின் கதவு அடைக்கப்படும்போது, துன்மார்க்கர் எவ்விதமான ஸ்திதியில் இருப்பார்களென்பதைக் காட்டுகிறது. இதற்கு அத்தாட்சியாக, "வீட்டெஜமான் எழுந்து, கதவைப் பூட்டின பின்பு, நீங்கள் வெளியே நின்று: ஆண்டவரே, ஆண்டவரே, எங்களுக்குத் திறக்கவேண்டும் என்று சொல்லிக் கதவைத் தட்டும்போது, அவர் பிரதியுத்தரமாக: நீங்கள் எவ்விடத்தாரோ, உங்களை அறியேன் என்று உங்களுக்குச் சொல்லுவார். அப்பொழுது நீங்கள் (துன்மார்க்கர்): உம்முடைய சமுகத்தில் போஜனம் பண்ணினோமே, நீர் எங்கள் வீதிகளில் போதகம் பண்ணினீரே, என்று சொல்லுவீர்கள். ஆனாலும் அவர்: நீங்கள் எவ்விடத்தாரோ உங்களை அறியேன்; அக்கிரமக்காரராகிய நீங்களெல்லாரும் என்னை விட்டு அகன்றுபோங்கள் என்று சொல்லுவார். நீங்கள் ஆபிரகாமையும், ஈசாக்கையும், யாக்கோபையும் சகல தீர்க்கதரிசிகளையும் தேவனுடைய ராஜ்யத்திலிருக்கிறவர்களாயும், உங்களையோ புறம்பே தள்ளப்பட்டவர்களாகவும் காணும்போது உங்களுக்கு அழுகையும் பற்கடிப்பும் அங்கே உண்டாயிருக்கும்" என்று இயேசு போதித்திருக்கிறார். லூக்கா 13: 25-28. மேலும், துன்மார்க்கர் எல்லாரும் எரிந்து சாம்பலாகப் பஷ்பமாகுமட்டும், அவர்களைப் போட்டிருக்கும் அக்கினிக்கடலின் அகோரம் கொடியதாய்த்தானிருக்கும்.

துன்மார்க்கர் இவ்விதமாய் வேதனைப்படும்போது, தேவனிடத்தில் பாவ மன்னிப்பு பெறுவதற்காகக் கெஞ்சுவார்கள். தங்கள் தீய சுபாவத்தை நற்சுபாவமாக்குவதற்காக அவரை நோக்கி வேண்டிக்கொள்ளுவார்கள். ஒரு காலத்தில், தேவன் "தாகமாயிருக்கிறவன் வரக்கடவன்; விருப்பமுள்ளவன் ஜீவ தண்ணீரை இலவசமாய் வாங்கிக் கொள்ளக்

கடவன்" என்று ஒவ்வொருவனையும் பார்த்துக் கூப்பிட்டார். சிலர் மாத்திரம் அந்த அழைப்பை அங்கிகரித்து, இரட்சிப்பாகிய ஜீவ தண்ணீரை பெற்றார்கள். துன்மார்க்கரோ அவ்வழைப்பை அசட்டை செய்து, இரட்சிப்பைப் பெறவில்லை. ஆனால் தேவன் அவர்களைத் தண்டிக்கும்போது, அவர் தங்களுக்குச் சரியானபடி தமது ஊழியர்களைக் கொண்டு இரட்சிப்பை அறிவிக்கவில்லையென்று அவர்பேரில் குற்றஞ் சாட்டுவார்கள். இது, "லாசரு தன் விரலின் நுனியைத் தண்ணீரில் தோய்த்து, என் நாவைக் குளிரப்பண்ணும்படி அவனை அனுப்பவேண்டும்" என்றும், "என் ஐந்து சகோதரருக்கும் சாட்சியாக அறிவிக்கும்பொருட்டு, நீர் அவனை என் தகப்பன் வீட்டுக்கு அனுப்பும்படி வேண்டிக்கொள்ளுகிறேன்" என்றும் ஐசுவரியவான் சொல்லுகிறதினாலே தெரிகிறது.

அதற்கு ஆபிரகாம்: "அவர்களுக்கு மோசேயும் தீர்க்கதரிசிகளும் உண்டு, அவர்களுக்கு அவர்கள் செவி கொடுக்கட்டும்" என்று ஐசுவரியவானைப் பார்த்து சொல்லுகிறதின் கருத்து யாதெனில், தேவன் தம்முடைய தாசர்கள் மூலமாய் வெளிப்படுத்தியிருக்கும் வேத வாக்கியங்களைக்கொண்டு போதுமான பிரகாரம் துன்மார்க்கரை எச்சரித்திருக்கிறார் என்பதே. சரியானபடி வெளிச்சம் காண்பிக்கப்பட்டது. அவர்களோ அதைப் பற்றிக்கொள்ளவில்லை. யோவான் 5: 39, 40, 45-47 பார்க்கவும். காரியம் இப்படியிருக்கிறதினாலே, மரித்தோரிலிருந்து ஒரு மனுஷன் எழுந்திருந்து, சாட்சியாய் நின்று பேசினாலும் விசுவாசிக்கமாட்டார்கள். உதாரணமாக, பெத்தானியா கிராமத்து லாசருவை கிறிஸ்துவானவர் உயிரோடெழுப்பி அவன் அவரின் தெய்வீகத்தை ரூபிக்கத்தக்க சாட்சியாக நின்றபோதிலும், யூதர்கள் அவரை நம்பினார்களா? அதற்கு எதிரிடையாக, அவர்கள் இயேசுவானவரையும், அவர் உயிர்ப்பித்த லாசருவையும் கொலை செய்ய ஆலோசனை பண்ணினார்கள் என்று எழுதியிருக்கிறதே. யோவான் 11: 53; யோவான் 12; 11.

இவ்விதமாகவே, கடைசியிலும் துன்மார்க்கர் தேவனுக்கு விரோதமாய்க் கலகம் பண்ண எத்தனிப்பார்களேயல்லாமல், மனந்திரும்பமாட்டார்களென்பது திண்ணம். அவர்களுடைய கீழ்ப்படியாமையினாலும், தேவ எச்சரிப்பை அசட்டை பண்ணுகிறதினாலுமே, தங்களுக்கும் நீதிமான்களுக்கும் நடுவே ஒரு பெரிய கடக்கக்கூடாத பிளப்பை உண்டுபண்ணிக்கொள்ளுகிறார்கள். துன்மார்க்கர் இவ்வுலகில் ஜீவிக்கும்போது, எவ்வித குணத்தோடும் எவ்வித ஆசை இச்சைகளோடும் மரித்தார்களோ, அதேவிதமாகத்தான் உயிர்த்தெழுதலுக்குப் பின்னும் இருப்பார்கள். அவர்கள் குணம் எவ்விதத்திலும் மாறாது. தேவன் அவர்கள் துர்க்குணத்தை மாற்றுவதற்கு மறுபடியும் தவணையின் காலம் கொடுக்கவும் மாட்டார்.

முடிவுரை.

இதை வாசிக்கும் என் அருமை நண்பனே, நீர் இந்த உவமையின் கருத்தை நிதானித்தறிந்து, உமது தற்கால ஜீவியம் எப்படியிருக்கிறதென்று சோதித்துப் பாரும். பொருளாசை தேவனுடைய பார்வையில் அருவருப்பானதென்றும், இரட்சிப்படைய மறுதருணம் கிடையாது என்றும் இந்த உவமை நன்றாய்ப் போதிக்கிறது. இந்த ஜீவிய காலத்தில் துன்மார்க்கனாய் நடக்கிற ஒவ்வொருவனும், முடிவிலே அவன் மாம்சமும் சரீரமும் அக்கினியிலே உருவழியும்போது, அவன் துக்கித்து, "ஐயோ, போதகத்தை நான் வெறுத்தேனே, கடிந்துகொள்ளுதலை என் மனம் அலட்சியம் பண்ணினதே! என் போதகரின் சொல்லை நான் கேளாமலும் எனக்கு உபதேசம் பண்ணினவர்களுக்கு என் செவியைச் சாயாமலும் போனேனே! சபைக்குள்ளும் சங்கத்துக்குள்ளும் கொஞ்சங்குறைய எல்லாத் தீமைக்கு முள்ளானேனே!" என்று முறையிடுவான். நீதிமொழிகள் 5: 11-14. மேலும், தேவன் இப்போது கொடுத்திருக்கும் அநுக்கிரக காலத்தை அசட்டை செய்யும் எல்லாத் துன்மார்க்கரும் சேர்ந்து, "அறுப்புக்காலம் (உலகத்தின் முடிவு. மத். 13: 39) சென்றது, கோடைக்காலமும் முடிந்தது, நாமோ ரட்சிக்கப்படவில்லை" என்று கதறுவார்கள். எரேமியா 8: 20. ஆகையால், நாம் கர்த்தரின் நீடிய பொறுமையை இரட்சிப்பென்று எண்ணி, நாம் நமது ஜீவியத்தை சீர்ப்படுத்துவோமாக.

தெய்வ கிருபையைத் தேடி,
பாவி, மனந் திரும்பு;
மீட்பர் தரும் ஈவை நாடி
தூக்கம் விட்டெழுந்திரு.

A. ஆசீர்வாதம்.

சுகாதார விஷயங்கள்

O. SMITH, M. D. டாக்டர் சிமித்.

நாம் மாமிச பதார்த்தங்களை உபயோகிக்கலாமா?

(SHALL WE USE FLESH FOODS.)

படித்த வித்துவான்கள்கூட இக்கேள்விக்கு வித்தியாசமான அபிப்பிராயமுள்ளவர்களாயிருக்கிறதனுல் நாம் திட்டமாக ஒரு சட்டம் விதிப்பது கூடாததாயிருக்கிறது. ஆனுல் நாம் அவற்றின் சில மூலகாரணங்களை ஆராய்ச்சி செய்தால் நன்மை தின்மைகள் வெளியரங்கமாகும்.

மாமிச பதார்த்தம் ஆகாரமென்றும் அது சரீரத்திற்கு போஷணையைக் கொடுக்கிறதென்றும் யாவரும் ஒத்துக்கொள்ளுவார்கள். இக்காரணத்தை முன்னிட்டு மாமிசம் கெடுதியான வஸ்துவென்று தள்ளவேண்டுமென்று தீர்க்க முடியாது. அவைகளிலுள்ள சில பதார்த்த வகைகளை நாம் உட்கொண்டால் அவை சரீரத்தோடு கலந்து சரீரத்திற்கு உஷ்ணத்தையும் போஷணையையும் கொடுக்கிறது. தசைநார்களையும், எலும்புகளையும், மூளை முதலியவற்றையும் போஷிக்கும் திராணி இதற்குண்டு. சில வகையான மாமிச பதார்த்தங்களில் மூளையை போஷிப்புக்கும் ஆகாரம் அபரிமிதமாயிருக்கின்றன. நாம் இவற்றைப் பற்றி இன்னும் ஆழ்ந்து சிந்திப்போம்.

நாம் ஆகாரத்திற்காக உபயோகிக்கும் மிருகமானது சுகமும் பெலனுமுடையதென்று வைத்துக்கொள்வோம். எல்லா உயிர் வாழும் மிருகங்களுக்கும் வளர்வு, தேய்வு, என்னும் இரண்டு சத்திகள் அமைக்கப்பட்டுள. இந்த இரண்டாவது காரியமாகிய தேய்வு சக்தி இருக்குமானுல் எப்போதும் வியாதி மரணம், விஷத்தை தேக முழுவதிலும் பரவச்செய்தல் ஆகிய காரியங்கள் சம்பவிக்கும். இந்த விஷம் அதிகரித்து மிருகத்தின் சக்திக்குமேம்பட்டுப்போய்விட்டால் அதின் பலனுக மிருகத்திற்கு வியாதி யுண்டாகிறது. மிருகம் கொல்லப்படும்போது அதற்கு வியாதி யிராவிட்டாலும், மிருகம் அடிக்கப்பட்டபின் சாகிறதற்கு சங்கடப்படும் அச்சமயத்தில் தசைநார்கள் விம்மிவிம்மி எழும்பும்போது விஷம் அதிகமாகப் பரவுகிறது. அந்த விஷத்தை முறிப்பதற்கு மிருகம் பிராண வாயுவைச் சுவாசிக்கக்கூடாததாயிருப்பதால் அந்த விஷம் மாமிசத்தில் சோரி விடுகிறது. மிருகம் செத்து அசைவற்றுப் போவதற்குள் அதின் சரீர முழுவதிலும் விஷம் பரவி விடுகிறது. பின்பு மனிதர் அந்த விஷம்நிறைந்த மாமிசத்தை உட்கொண்டு தங்கள் சரீரங்களில் விஷத்தையேற்றுக்கொள்ளுகிருர்கள்.

சுகமுள்ள மிருகத்தைப்பற்றி மேலே பார்த்தோம். உள்ளே வியாதியாயிருந்தாலும் வெளிக்கு நன்ருய்த் தோன்றுகிற சில் மிருகங்கள் உண்டு. அவைகள் ஆகாரத்தை உட்கொள்ளும்போது வியாதியைக் கொடுக்கக்கூடிய சில பதார்த்தங்களைத் தின்றுவிடுகின்றன. அசுத்தமான இடத்தில் புல் முதலிய தாவரங்களைத் தின்னும் ஆடுமாடு முதலிய மிருகங்கள் அவைகளைத் தின்று வயிற்றிலே விஷம் உண்டாகி அவையவங்கள் பலவீனமடைந்து வியாதிப்படுகிறதற்கு முன்னதாகவே அடிக்கப்பட்டுப் போகின்றன.

சில வேளைகளில் அடிக்கப்பட்ட ஒரு மிருகத்தை அறுத்துப் பார்க்கும்போது உள்ளே, புண் சீழ் முதலியவை யிருப்பதைப் பார்க்கலாம். ஆனுல் அந்த மிருகத்துக்கு உடையவன் தன் லாபத்தை மேலாக எண்ணி புண்பட்ட பாகத்தை அறுத்து எறிந்துவிட்டு, மற்ற மாமிசத்தை விற்கிருன். அப்படி அதை அறுத்து எறிந்துவிட்டாலும் மிருகத்தின் முழு மாமிசமும் அந்த விஷ ரத்தத்தால் சோரி யிருக்கிறதென்பதை அவன் உணருகிறதில்லை, பட்சிகளும் மீன்களும்கூட அறுக்கும்போது உள்ளே வியாதிப்பட்டிருப்பதைப் பார்க்கலாம். மீன் சுத்த ஜலத்தில் வசிப்பதால் வியாதி ஒன்றுமிராதென்று அநேகர் தப்பாய் அபிப்பிராயப்படுகிருர்கள். முடிவு காலத்துக்கு முன் மனுஷ ஜாதி மாத்திரமல்ல ஜீவப்பிராணிகள் யாவும் க்ஷீணதிசை யடையுமென்று தேவன் சொல்லியிருக்கிருர். நாம் அப்படி வியாதிப்பட்டவைகளின் மாமிசத்தை உட்கொண்டு நமக்கும் வியாதியை வருவித்துக்கொள்ளக்கூடாது. இவ்வகை உணவுகளை நாம் உட்கொள்ளக்கூடாதென்பதற்கு இது ஒரு காரணம்.

வேறு சில காரணங்களைப்பற்றி அடுத்ததரம் சிந்திப்போம்.

Dr. O. சிமித்.

வட இங்கிலாந்தைச்சேர்ந்த டைன், ஸௌத் ஷீல்ட்ஸ், நியூகாஸில் முதலிய விடங்களில் ஸின்பீனர்களால் தீ வைக்கப்பட்டன.

——:o:——

சிறைச்சாலையிலிருந்து வெளியேறிவிட்டனர்.

பெஜவாடாவிலிருந்து ஒரு நிருபர் நமது சகவர்த்தமானப்பத்திரிகை யொன்றில் பின்வருமாறு எழுதியிருக்கிருர்:—கொள்ளை முதலிய கொடிய குற்றங்களுக்காக விசாரணையிலிருந்து வந்த 12-கைதிகள் 10-ம் தேதி பட்டப்பகலில் போலீஸ் பாரக்காரர்களை எதிர்த்து அடித்துவிட்டு சில தோட்டக்காரர்களையும் பிடுங்கிக்கொண்டு ஓடிப்போய்விட்டதாக மாலையில் 6-7 தந்திகள் பறந்துகொண்டிருந்தன. சிறிது காலமாகவே இவர்கள் சிறைச்சாலையில் மிருந்த தொந்திரவு செய்துவந்தனராம். அதற்காக ரிசர்வ் கான்ஸ்டேபிள்களையும் போலீஸ் ஸ்டேஷனில் கொண்டுவந்து வைத்திருந்தார்களாம். போலீஸ் டிப்டி சூப்ரின்டெண்டெண்டு சில கான்ஸ்டேபிள்களுடன் ஸ்தலத்திற்கு ஓடியிருக்கிருர். அப்படி யோடினவர்கள் கிருஷ்ணு, குண்டூர் முதலிய ஜில்லாக்களிலும் நிஜாம் சமஸ்தானத்திலும் உலவிக்கொண்டிருப்பதாகத் தெரிகிறது.

நிகழ்கால சத்தியம்

வேத சன்மார்க்க சுகாதார விஷயங்களில் தற்கால அறிவுக்கொத்தபடி மனிதர் அபிவிருத்தியடைவதற்கென்று, பிரசுரமாகும் ஓர் பத்திரிகை.

மதராஸ் ஏப்பிரல்மீ, 1921.

இப்பத்திரிகை, பெங்களூரிலிருக்கும், எஸ். டி. ஏ. பப்ளிஷிங்கவுஸ்காக, பட்டணத்தில் வெப்பேரி என்னுமிடத்திலுள்ள அல்பீனியன் அச்சாபீசில் அச்சடிக்கப்பட்டு வருகிறது.

பத்திராதிபர் பாஸ்றர், ஜி. ஜி. லேளரி.
உதவி ,, ,, ஈ. டி. தாமஸ்.
மானேஜர், எல். சி. ஷேப்பார்டு, பி. ஏ.

	ரூ.	அ.	ப.
தனிப்பிரதி ஒன்றுக்கு ...	0	1	6
வருஷ சந்தா, தபாற் கூலி உள்பட ...	1	0	0
சிங்கப்பூர் பினங்கு முதலிய வெளி ஊர்களுக்கு தனிப் பிரதி ஒன்றுக்கு ...	0	2	0
வருஷசந்தா தபாற்கூலி உள்பட ...	1	4	0

ஒரு ஆச்சரியமான மரணம்

குணிகல் தாலூகா மத்தி கரையில் சுமார் 25 வயதுள்ள ஒரு முஹமதியருக்கு இன்புளுயன்ஸா காய்ச்சல் ஏற்பட்டு வைத்தியர்கள் பார்த்து 4-3-21-ந் தேதி வெள்ளிக்கிழமை காலை 6 மணிக்கு இறந்துவிட்டார். முஹமதிய வழக்கப்படி குழி வெட்டி கபன் முதலாகியதும் தயாரித்து குளுப்பாட்டபோகும் சமயத்தில் எழுந்து உட்கார்ந்துகொண்டு பேச ஆரம்பித்து, சாப்பாடு கொடுக்க சாப்பிட்டு, நன்றாய் உலாவிக்கொண்டிருந்து அன்று சாயங்காலம் 5 மணிக்கு மயக்கம் வருகிறதென்று படுத்து 6 மணிக்கு உயிர் போய்விட்டது. இரவு 9 மணிக்கு அடக்கம் செய்யப்பட்டது என்று ஒரு முஸ்லிம் சகோதரர் எழுதுகிறார்.

சமாசாரக் குறிப்புகள்.

(NEWS AND NOTES)

கலியுகத்தில் ஓர் அதிசயம்.

லோயர் பர்மா மூப்பின் என்ற ஊரில் காக்கையனுட் ஸ்திரீ ஒருவளுக்கு ஐந்தாறு தினங்களுக்கு முன் ஓர் பெண் குழந்தை பிறந்தது. அதற்கு இரண்டு சிரசுகளும் நான்கு கண்களும் நான்கு செவிகளும் இரண்டு மூக்குகளும் இரண்டு கைகளும் இரண்டு கால்களும் இருந்தன. அந்த க்ஷணமே உயிர் துறந்தது. மேற்படி குழந்தையை ஆஸ்பத்திரியில் திராவகத்தில் போட்டு பொது ஜனங்கள் பார்க்கும்படி வைத்திருக்கிறார்கள். இதுவும் இக்கலியுகத்தில் ஓர் அதிசயமே என்று பிப்ரவரி 29ந் தேதியிட்டு ஒரு நிருபர் எழுதுகிறார்.

சென்னையில் மரண விகிதம்:—மார்ச்சு மாதம் 12-ந் தேதியோடு முடிவான ஒரு வாரத்தில் சென்னை நகரில் 456 பேர்கள் இறந்துபோயிருக்கிறார்கள். இதற்கு முந்திய வாரத்தில் 529 பேர்கள் இறந்துபோயிருக்கிறார்கள். காலரா நோயால் 6 பேர்களும், பெரியம்மையினால் 4 பேர்களும், இன்புளுயன்ஸாவினால் 2 பேர்களும் இதர ஜுரங்களினால் 39 பேர்களும் இறந்திருக்கிறார்கள். சென்ற வருஷம் இதே வாரத்தில் 410 பேர்கள் இறந்துபோனார்கள்.

ஐரோப்பிய மகா யுத்தத்தில் நேச தேசத்தாருக்கு வேண்டிய ஆயுதங்களைத் தயாரித்துக்கொடுத்த விக்கர்ஸ் கம்பெனியில் அக்காலத்தில் தினசரி 107000 பேர்கள் வேலை செய்து வந்ததாகவும், இவர்களில் 32500 பேர்கள் ஸ்திரீகளென்றும், இதைத்தவிர சில்லரை வேலைகளுக்காகப் பல வேறு கம்பெனிகளில் ஆயிரக்கணக்கான நபர்கள் வேலைசெய்து வந்ததாகவும், யுத்த காலத்தில் இவர்களுக்குக் கூலி மாத்திரம் 46,230000 பவுனுக்குமேல் கொடுக்கப்பட்டதாகவும், இக்கம்பெனியார் யுத்தகாலத்தில் மொத்தம் 9078 பீரங்கிகளைத் தயாரித்துக் கொடுத்திருப்பதாகவும் 'டெய்லி எக்ஸ்பிரஸ்' நிருபர் ஒருவர் அப்பத்திரிகையில் எழுதி இருக்கிறார்.'

நிகழ்கால சத்தியம்,

Vol. X. மதராஸ்:—மேமீ, 1921. No. 5.

பிறகென் செய்வாய்?

பல்லாண்டுகளுக்கு முன் இவ்வுலகத்தின் ஆசாபாசங்களை முழுவதுமாய் வெறுத்து, தூயவியான ஓர் மகாத்மா, சர்வ கலாசாலையில் படித்து பாண்டித்தியமடைந்த ஓர் வாலிபனைக் கண்டு 'ஐயா உம்முடைய படிப்பை முடித்ததின்பின் என் செய்வீரென்று வினவ, வாலிப்ன் புன்னகைகொண்டு, படித்தவர்கள் யாது செய்வார்களென்று இவருக்குத் தெரியாதிருக்குமா? தெரியும். ஆயினும் இவர் கேட்கும் கேள்விக்கு யாதாமொரு காரணமிருக்குமெனவெண்ணி' ஐயா! என் தகப்பனார் ஓர் பெரிய செல்வான், அவருக்கு நானொருவனே ஆண் மகனாதலின் என் பிதாவின் மனவிருப்பின்படி லண்டனில் போய் பெரிய பட்டங்களைப் பெற்று வருவேன்? இதனைச் செவியுற்ற சாது 'பிறகென் செய்வாய்' என மலர்ந்த முகத்தோடும் காருண்ய பார்வையோடும் அவரைக் கேட்க 'பாலியன், பிறகா, லண்டனிலிருந்து புறப்பட்டு என் ஊருக்கு வந்து அஷ்டத்திக்கிலுமுள்ள என் இஷ்டர்களின் நடுவில் நானொரு பெரிய மனுஷனாய் இருப்பேன். என் இன ஜனங்கள் யாவரும் என்னிடம் அச்ச முற்று அன்போடிருப்பார். எளியோர்க்கு இன்புரும் தீங்கனியாயிருப்பேன்.'

சன்னியாசி சிரித்து மனதில் விசனமுற்று இப்படியா உலகமிருக்குமென்று எண்ணிக்கொண்டு 'பிள்ளாய்! பிறகென்செய்வாய்,' என்றார். 'எனக்கு செயலிலும், புகழிலும், அழகிலும், குணத்திலும், செல்வத்திலும், படிப்பிலும், எனக்கு ஈடாகக்கூடியவளும், அவளைக் கண்டோர் என்னைக் கண்டார்போல் எண்ணிக்கொள்ளுமாறு எல்லாவற்றிலும் என்னைப்போலிருக்கக்கூடிய ஒரு பெண்ணை விவாகம் செய்துகொண்டு அவளோடு களித்திருப்பேன். அதோடு எனக்கு சில பிள்ளைகளுமிருக்குமானால், அதிலும் அதிகச் சந்தோஷமிருக்கும். அதுதான் சுவர்க்கம்போலிருக்கும். 'அவர்களை என்னிலும் பெரிய நிலைமையில் கொண்டுவருவேன். என் பிள்ளைகளுடைய பிள்ளைகளைக் கண்டு பெரிதும் மகிழ்வுற்றிருப்பேன். ஆ! என் ஆனந்தத்திற்கு அளவுண்டோ! அங்கே ஒரு பிள்ளை தாத்தவென, இங்கே ஒரு பிள்ளை பாட்டியென, மற்றொரு பிள்ளை அழ, இன்னொரு பிள்ளை ஆட, ஓ! என்ன சந்தோஷம். இதுதான் பிறகு செய்வதும், விரும்புவதுமாம்.' பின்னும் அவ்வரியர் அவனைக் கண்ணுற்று, 'பிள்ளாய்! பிறகென் செய்வாய்?' என, வாலிபன் 'பிறகென்ன, பிறகு, பிறகா, மூன்று காலால் நடந்து முன் பல் விழுந்து, சொல்த்தவறி, கூனி குருகி உட்கார்ந்த இடத்தைவிட்டு எழுந்துபோக சக்தியற்று, மற்றவர்களை சார்ந்து சிலகாலம் ஜீவித்து பின்னால் நோயால் கஷ்டப்பட்டு ஜீவனை விடுவதுதான்.'' என்றான்., அவனை உணர்த்துமாறு இன்னும் அவனைப் பார்த்து, 'பிள்ளாய்! பிறகென் செய்வாய்?' என்று மெல்லிய குரலோடு கேட்டார். அவன் மேலே பார்த்து 'பிறகு-பிறகு, பிறகு,

பிறகென்ன' என்று சொல்லி துக்க ஸாகரத்தில் மூழ்ந்தான். அவனுக்குப் பிறகென்ன செய்வது என்று தெரியாது கண்ணீர்விட்டு 'ஐயா! பிறகென்ன செய்வதென்று எனக்குத் தெரியவில்லை. பிறகென்ன செய்யவேண்டும்? எனக்குச் சொல்லுங்கள்' என்றான். சன்னியாசி அவருக்கு மரணத்துக்குப்பின் அனுபவிக்கவேண்டியதையெல்லாம் தெளிவாய் எடுத்துக்காட்ட அவ்வாலிபனும் உலகப்பற்றை நீக்கி நல்வழிப்பட்டான்.

இதை வாசிக்கும் என் அறிய நண்பனே! அந்த சந்நியாசி கேட்ட அக்கேள்வியை உன்னையும் கேட்கிறேன். இதற்குப்பின் என்னசெய்யப் போகிறாய்? ஒருவேளை ஷை வாலிபனைப்போல அநேக காரியங்களைச் சொல்லக்கூடும். நல்லது அவைகளையெல்லாம் இப்பொழுது முடித்து இவ்வுலகத்தை விட்டுப்போன பிற்பாடு என்ன செய்யப் போகிறாய்? அநேகர் சொல்லுகிறமாதிரி இன்னொருதரம் பிறக்கப்போகிறேன். இதற்குமுந்தி எத்தனை ஜென்மமோ, இன்னும் எத்தனை ஜென்மமோ என்று சொல்லுகிறாயா? பிறப்பு இருக்கிறதென்று சொல்வாயானால் இது ஒரு பயங்கரமான நம்பிக்கை. மனுஷன் மறுபடியும் பிறப்பதே யில்லை. இதைப்பற்றி பின்னால் பார்க்கலாம். சரி மறுபடியும் பிறப்பது நிஜமானாலும் இப்பொழுது நல்வினைகளைச் செய்வது நஷ்டமல்ல. ஏனென்றால் நாம் இப்பொழுது நல்வினைகளைச் செய்தால் இன்னொரு பிறப்பில்லாவிடினும் அல்லது இருப்பினும் யாதொரு பயமுமில்லை. எற்கனவே எல்லாவற்றையும் செய்து ஆயத்தமாயிருப்பவர் ஆனந்தப் பதவியை அடைவார்கள். நம்முடைய முன்னோர்களிலாவது அல்லது இப்பொழுதுள்ளவர்களிலாவது ஒருவரும் தன்னுடைய முன்பிறப்பைக் குறித்து நமக்குச் சொல்ல நாம் கேழ்விப்பட்டதில்லை. மற்றவர்கள் சொல்லுகிற மாதிரி முன் பிறப்பில் மனிதராய்ப் பிறந்தவர்கள் இப்பொழுது ஆடாய் மாடாய் பிறந்து அவைகளை நினைத்து துக்கப்பட்டுக்கொண்டிருக்க நாம் பார்க்கிறதேயில்லை. பாவம் செய்த மனிதனைத் தண்டிப்பதற்குப் பதிலாக ஒரு மிருகத்தைத் தண்டிப்பது சரியல்ல. கடவுள் மனுஷனை உண்டாக்கும்பொழுதே ஆடு மாடு முதலிய ஜீவபிராணிகளையும் ஜலத்தில் வசிக்கக்கூடிய ஜெந்துக்களையும், ஊர்வன பறப்பன யாவற்றையும் உண்டாக்கினார் என்று வேதங்களில் பார்க்கிறோம். அப்படியல்லவென்றால் முதலில் மிருகம் எங்கேயிருந்து வந்திருக்கவேண்டும். ஒரு மனுஷனிலிருந்தே தோன்றியிருக்கவேண்டும். அது சரியாகா, அதுவுமன்றி மிருகங்களுக்கு ஆத்துமா அதாவது தேவனைத் தேடும் பாகம் இல்லை. ஆகையால் அவ்விதக் கொள்கை முற்றிலும் தப்பிதமே. அப்படி செய்வது தேவன் மனுஷரை தண்டிப்பதாக மாட்டாது.

மறுபடியும் பிறப்பதே யில்லை. இதைப்பற்றி ஹிந்து மதத்தின் முன்னோர்களுமாகிய பதினெண் மகான்களில் ஒருவராகிய சிவவாக்கியர் என்ன சொல்லுகிறாரென்று பார்ப்போம்.

'கறந்த பால் முலைப்புகா கடைந்த வெண்ணை மோர் புகா
துடைந்துபோன சங்கிஞ்ஞைசை உயிர்களும் உடர் புகா
உதிர்ந்தகா யுதிர்ந்தபூ மீண்டும்போய் மரம் புகா
இறந்தவர் பிறப்பதில்லை. இல்லை, இல்லை, இல்லையே'

அதின் கருத்தாவது, ஆவினின்று பாலைக் கறந்து பிற்பாடு திரும்ப காம்பில் ஏற்றுவதும், வெண்ணெயை எடுத்து அதைத் திரும்ப மோருக்குள் போட்டு பாலாக்குவதும், சங்கினின்று வெளியேபோன ஓசையை திரும்பக் கொண்டுவந்து சேர்ப்பதும், 'மரத்தினின்று கீழே விழுந்த புஷ்பங்களை திரும்பக் கொண்டுபோய் மரத்தோடு சேர்ப்பதும் கோழி, எலி முதலானவைகளின் உடலைவிட்டுப்போன உயிரை திரும்ப அதனிடம் சேர்ப்பதும் எப்படி முடியாதோ, அப்படியே மரித்த நாம் திரும்பத்திரும்ப பிழைப்பது கூடாத காரியம் என்று சொல்லுகிறார். உலகத்தாரெல்லாரும் நம்பி பெரிதாகப் பாராட்டி

வரும் கிறிஸ்தவ சத்திய வேதத்திலும் மறுபடியும் பிறப்பது இல்லை யென்று சொல்லியிருக்கிறது.

இப்பொழுது என் நண்பனே என்ன செய்யப்போகிறாய்? நீ செய்த பாவங்களையெல்லாம் போக்குமாறு உலகத்தில் புண்ணிய ஸ்தலங்களென்று சொல்லப்படும், காசி, ராமேஸ்வரம், குற்றாலம், பாவநாசம், திருவண்ணாமலை, மதுரை என்ற இடங்களுக்கு யாத்திரை போகப்போகிறாயா? அங்கே போவதினால் உன் பாவங்களை போக்கிக்கொள்ள முடியாது. அவ்விதமாய் போய் தங்கள் பாவங்களை போக்கிக்கொண்டு திரும்பி வந்தவர்களை நாம் பார்த்ததேயில்லை. கடவுள் அந்த இடங்களில் மாத்திர மிருந்துகொண்டிருக்கிறதுமில்லை அவர் எங்கும் பராபர வஸ்துவாய் தேடுகிறவர்களுக்கு காணப்படக்கூடியவருமாய் இருக்கிறார். ஷை சொன்ன சிவ வாக்கியரே.

'ஓடி ஓடி ஓடி ஓடி, உட்கலந்த ஜோதியை
நாடி நாடி நாடி நாடி, நாட்களும் கழிந்துபோய்
வாடி வாடி வாடி வாடி, மாண்ட மாந்தர் எத்தனை
கோடி கோடி கோடி கோடி, எண்ணிறந்த கோடியே' என்கிறார்.

அதாவது நம்முடைய இருதயத்தில் வாசம் பண்ணுகிற கடவுளை அறியாமல் அங்கும் இங்கும் ஓடி, நாடி, அலைந்து, தோய்ந்து சடைசியாய் அவரை காணாது மரித்தவர் அநேகர், கணக்கற்றவர்களென்கிறார். அகப்பேய்ச் சித்தர், காசிக்குப் போவதினால் கருமங்களும் இன்னும் மற்ற அனுஷ்டானங்களை அனுசரிப்பதினாலும், முன் செய்த தீவினைகள் நீங்காது நீற்கும் என்கிறார். நான் சில வருடங்களுக்கு முன்னே திருவண்ணாமலைக்குப் போயிருக்கும்போது சிலர் காசிக்குப் போகிறதைக் கண்டேன். நான் அருணாஜல ஸ்டேஷனில் (Station) இறங்கி யிருக்கும்போது சில வயோதிபர் சீக்கிரமாய் வண்டியை விட்டு கீழே இறங்கி தரையில் மிதித்து திரும்ப ஏறிக்கொண்டார்கள். என்ன காரியத்திற்காக அப்படிச் செய்தார்களென்று நான் விசாரித்தபோது திருவண்ணாமலையில் ஒருவனுடைய கால் பட்டுவிட்டால் அவனுடைய பாவங்களெல்லாம் போய்விடும். ஆகையால்தான் அப்படிச் செய்கிறார்கள் என்று சொன்னார்கள். அவர்களுடைய மூடத்தனமான நம்பிக்கையைப் பாருங்கள், இதோ திருவண்ணாமலையிலுள்ளவர்கள் தங்கள் பாவங்களைப் போக்குமாறு காசிக்கும், அங்குள்ளவர்கள் எங்கேயோ இன்னொரு இடத்துக்கும் போகப் பார்க்கிறோம்.

கோவிந்தன் சதகத்தில்,

'கூட்டுக்குள்ளிருப்பவன்
கோவிந்தன் சற்குணன்
நாட்டிலடி கல்லில்
நாதனிருப்பதில்லை' என்று சொல்லப்பட்டிருக்கிறது.

நம்முடைய இருதயத்தில் சற்குண நாதன் வாசம் பண்ணிக்கொண்டிருக்க நாட்டினிலுள்ள கோவில்களைத் தேடித் திரிவது சரியல்ல என்கிறார்.

இன்னும் வரும்.

மூன்று தூதுகள்

THREE FOLD MESSAGE.

வெளிப்படுத்தின விசேஷம் 14: 6-12-ல் பின் கூறிய மூன்று பயங்கர தூதுகள் உலகத்திலிருக்கும் சகல ஜனங்களுக்கும் கொடுக்கப்படுகிறதாக வாசிக்கிறோம். "பின்பு, வேறொரு தூதன் வானத்தின் மத்தியிலே பறக்கக் கண்டேன்; அவன் பூமியில் வாசம்

பண்ணுகிற சகல ஜாதிகளுக்கும், கோத்திரத்தாருக்கும், பாஷைக்காரருக்கும், ஜனக்கூட்டத்தாருக்கும் அறிவிக்கத்தக்கதாக நித்திய சுவிசேஷத்தை உடையவனாயிருந்து, மிகுந்த சத்தமிட்டு தேவனுக்குப் பயந்து அவரை மகிமைப்படுத்துங்கள்; அவர் நியாயத்தீர்ப்புக் கொடுக்கும் வேளை வந்தது; வானத்தையும் பூமியையும் சமுத்திரத்தையும் நீரூற்றுகளையும் உண்டாக்கினவரையே தொழுதுகொள்ளுங்களென்று கூறினான். வேறொரு தூதன் பின்சென்று பாபிலோன் மகா நகரம் விழுந்தது! விழுந்தது! தன் வேசித்தனமாகிய உக்கிரமான மதுவை சகல ஜாதிகளுக்கும் குடிக்கக் கொடுத்தாளே! என்றான். அவர்களுக்குப் பின்னே மூன்றாந் தூதன் வந்து, மிகுந்த சத்தமிட்டு மிருகத்தையும் அதின் சொரூபத்தையும் வணங்கி தன் நெற்றியிலாவது, தன் கையிலாவது அதின் முத்திரையைத் தரித்துக் கொள்ளுகிறவனெவனோ அவன் தேவனுடைய கோபாக்கினையாகிய பாத்திரத்தில் கலப்பில்லாமல் வார்க்கப்பட்ட அவருடைய உக்கிரமாகிய மதுவைக் குடித்து, பரிசுத்த தூதர்களுக்கு முன்பாகவும், ஆட்டுக்குட்டியானவருக்கு முன்பாகவும், அக்கினியினாலும் கந்தகத்தினாலும் வாதிக்கப்படுவான். அவர்களுடைய வாதையின் புகை சதா காலங்களிலும் எழும்பும்; மிருகத்தையும் அதின் சொரூபத்தையும் வணங்குகிறவர்களுக்கும், அதினுடைய நாமத்தின் முத்திரையை தரித்துக்கொள்ளுகிறவர்களுக்கும் இரவும் பகலும் இளைப்பாறுதல் இராது. தேவனுடைய கற்பனைகளையும் இயேசுவின்மேலுள்ள விசுவாசத்தையும் காத்துக்கொள்ளுகிறவர்களாகிய பரிசுத்தவான்களுடைய பொறுமை இதிலே விளங்கும்" என்று கூறினான். 6-12. இந்தத் தூதுகளில் முதலாம் தூதன் தன் வேலையை ஆரம்பித்த காலம் மிகவும் கவனிக்கத்தக்கது. "இரண்டாயிரத்துமுந்நூறு இராப்பகல் செல்லும் பின்பு பரிசுத்த ஸ்தலம் சுத்திகரிக்கப்படும்" என்று தானி. 8: 14-ல் சொல்லியிருக்கிற தீர்க்கதரிசனம் கி. மு. 457-ல் ஆரம்பித்து கி. பி. 1844-ல் முடிந்தது. இந்த வசனத்தில் பரிசுத்த ஸ்தலம் சுத்திகரிக்கப்படும் என்று சொன்னபடி 1844-ல் பரலோகத்தில் கிறிஸ்துவின் வருகைக்கு முன்னதாக நடக்கவேண்டிய நுட்ப நியாய விசாரணை ஆரம்பித்துவிட்டது; ஆகையால்தான் இந்தத் தூதன் இந்தக் காலம் வந்ததும் "தேவனுக்குப் பயந்து அவரை மகிமைப்படுத்துங்கள்; அவர் நியாயத்தீர்ப்புக் கொடுக்கும் வேளை வந்தது." என்று பலத்த சத்தமிட்டுக் கூறுகிறான். 14: 7 இப்படியாக ஒன்றன்பின் ஒன்றாக மனம்போன வழியையும், தங்கள் மனம் இச்சிக்கிற கொள்கைகளையும், தங்களுக்குப் பிரியமான கோடா கோடி தேவர்களையும் உண்டாக்கிவைத்திருக்கிற இந்தச் சீர்கெட்ட உலகத்துக்கு எச்சரிப்பு கொடுக்கப்படுகிறது. நமது இரக்கமுள்ள கடவுள் பழைய லோகத்தை அழிக்குமுன்னும், சோதோம் கொமோராப் பட்டணத்தைக் கவிழ்க்குமுன்னும், எருசலேம் பட்டணத்தை நாசப்படுத்துமுன்னும் எப்படித் தமது ஊழியக்காரரைக் கொண்டு வரப்போகிற அழிவிலிருந்து தமது உத்தம பிள்ளைகளை தப்பும்படி ஏற்ற காலத்தில் மனந்திரும்பச் சொன்னாரோ, அப்படியே இப்பொழுதும் சொல்லுகிறார். இந்தத் தூதைக் கேட்டு உலகத்தைவிட்டுப் பிரிந்து வந்தவர்களில் "தேவனுடைய கற்பனைகளையும் இயேசுவின் மேலுள்ள விசுவாசத்தையும் காத்துக்கொள்ளுகிறவர்களாகிய பரிசுத்தவான்களுடைய பொறுமை" 14: 12 என்ற உன்னத குணங்கள் விளங்கவேண்டுமாம். அப்படியே இதற்குக் கீழ்ப்படிந்து மரிக்கிறவர்களைப்பற்றி "பின்பு, பரலோகத்திலே ஒரு சத்தம் உண்டாகக் கேட்டேன்; அது: கர்த்தருக்குள் மரிக்கிறவர்கள் இதுமுதல் பாக்கியவான்களென்று எழுது; அவர்கள் தங்கள் பிரயாசங்களை விட்டெழுந்து இளைப்பாறுவார்கள்; அவர்களுடைய கிரியைகள் அவர்களோடேகூடப் போம்; ஆவியானவரும் ஆம் என்று திருவுளம் பற்றுகிறார்." 14: 13 என வாசிக்கிறோம். இந்தத் தூதுகள் முடியவும் பிற்பாடு சம்பவிக்கவேண்டிய மாட்சிமையின் காட்சி நமது அருமை இரட்சகரின் மகத்துவ வருகையும், அத்தோடு இப்பூலோக சரித்திரம் முடிதலுமே. "பின்பு நான் பார்த்தபோது, இதோ, வெண்மையான மேகத்தையும், அந்த மேகத்தின்மேல் மனுஷ குமாரனுக்கொப்பானவராய்,

தமது சிரசின்மேல் பொற் கிரீடத்தையும் தமது கையிலே கருக்குள்ள அரிவாளையுமுடைய ஒருவர் உட்கார்ந்திருக்கிறதையும் கண்டேன். அப்பொழுது வேறொரு தூதன் தேவாலயத்திலிருந்து புறப்பட்டு, மேகத்தின்மேல் உட்கார்ந்திருக்கிறவரை நோக்கி, பூமியின் பயிர் முதிர்ந்தது, அறுக்கிறதற்கு காலம் வந்தது. ஆகையால் உம்முடைய அரிவாளை நீட்டி அறுத்துவிடும் என்று மிகுந்த சத்தமிட்டுச் சொன்னான். அப்பொழுது மேகத்தின்மேல் உட்கார்ந்தவர் தமது அரிவாளைப் பூமியின்மேல் நீட்டினார்; பூமியின் விளைவு அறுப்புண்டது" சுமார் 1844-ம் வருஷத்திலிருந்து வெகு பலவீனமாயும் அற்ப ஆரம்பமாயும் ஆரம்பிக்கப்பட்ட இந்தக் கடைசி மூன்று தூதுகளின் வேலை தற்சமயம் உலகமெங்கும் வெகு பலத்தோடும், மகிமையோடும் நடத்தப்பட்டு வருகிறது. இந்த வேலையின் மகிமையால் பூமியெங்கும், உன்னதமானவரின் மாட்சிமையும், அவரது சத்திய வசனத்தின் மேன்மையும் பிரகாசமாய்த் தோன்றுகிறது.

என் அருமை சிநேகிதனே! சீக்கிரம் இந்தப் பெரிய வேலை முடியப்போகிறது. "உங்கள் இருதயம் கலங்காதிருப்பதாக; தேவனிடத்தில் விசுவாசமாயிருங்கள்; என்னிடத்திலும் விசுவாசமாயிருங்கள்; என் பிதாவின் வீட்டில் அநேக வாசஸ்தலங்களுண்டு; அப்படியில்லாதிருந்தால் நான் உங்களுக்குச் சொல்லியிருப்பேன் ஒரு ஸ்தலத்தை உங்களுக்கு ஆயத்தம் பண்ணப்போகிறேன்; நான் போய் உங்களுக்காக ஸ்தலத்தை ஆயத்தம் பண்ணின பின்பு, நான் இருக்கிற இடத்திலே நீங்களும் இருக்கும்படி நான் மறுபடியும் வந்து, உங்களை என்னிடத்தில் சேர்த்துக்கொள்ளுவேன்." என்று வாக்குக் கொடுத்துப் போன பொய்யுரையாத தேவ குமாரன் உன்னையும் என்னையும் கூட்டிக்கொண்டுபோக வரப்போகிறார். அந்தப் பரம நகரில் நாம் பிரவேசிக்க வேண்டுமானால், பின் கூறிய கட்டளையை நன்கு கவனிக்கவேண்டும். "ஜீவ விருக்ஷத்தின்மேல் அதிகாரமுள்ளவர்களாவதற்கும், வாசல் வழியாய் நகரத்திற்குள் பிரவேசிப்பதற்கும் அவருடைய கற்பனையின்படி செய்கிறவர்கள் பாக்கியவான்கள்" வெளி. 22: 14. ஆகையால் தேவன் தாமே தமது சொந்த விரலால் எழுதிக்கொடுத்த அந்தக் கற்பனைகளைக் கைக்கொண்டு, அந்த உன்னத ஸ்தலத்துக்கு ஆயத்தப்படுவோமாக.

ஓய்வு நாள் யூதருக்காக மாத்திரம் உண்டாக்கப்பட்டதா?

(WAS THE SABBATH MADE FOR THE JEWS ONLY?)

பெரியோர் பலர் நாம் ஒரு விபரீதமான காலத்தில் வசிக்கிறோமென்று எண்ணுகிறார்கள். ராஜாங்கத்துக்கடுத்த காரியங்களில் மாத்திரமல்ல மார்க்க சம்பந்தமாகவும் உலகத்தில் பல குழப்பங்கள் நேரிடுகிறது. சில விசேஷித்த கேள்விகளைக் கேட்டு அதைப்பற்றி தர்க்கித்து பின்பு மறுமொழியும் கூறப்படுகிறது. அந்தக் கேள்விகளில் முக்கியமானது ஓய்வு நாளைப்பற்றிய கேள்விதான். முன்னே இதைப்பற்றி வீடுகளில் மாத்திரம் சிறு பேச்சுகள் நடந்தது. ஆனால் இப்பொழுது அது ராஜாங்கக் கூட்டங்களிலும், பெரிய உலக ராஜ்யங்களின் சட்ட நிரூபண சபைகளிலும் பேசப்பட்டு வருகிறது. இனிமேல் நாம் இதை மேலெழிச்சியாய்ப் பார்த்து, விட்டுவிடக்கூடாது. இதை நாம் முற்றிலும் கவனிக்க வேண்டும். நாம் அதை கவனிக்குங் காலம் இப்போது வந்திருக்கிறது.

ஓர் பொதுவான கட்டளை.

நாம் வேதாகமத்தைக் கவனமாய்ப் பார்ப்போமானால் சீனாய் மலையில் தேவன் தாமே திருவாய்மலர்ந்தருளியபோதாவது அல்லது ஆதியாகமம் 2: 1-3-ல் எழுதப்பட்டிருக்கிற

திலாவது ஓய்வு நாள் ஒரு குறிக்கப்பட்ட காலமட்டும்தான் கைக்கொள்ளப்படவேண்டுமென்கிற யாதொரு கட்டளையும் கொடுக்கப்படவில்லை. அப்படியிருக்க அநேகர் அது யாருக்காக பரிசுத்தமாக்கப்பட்டதென்றும், ஓய்வு நாளைப் பரிசுத்தமாய் ஆசரிக்கவேண்டுமென்று யாருக்குக் கட்டளை கொடுக்கப்பட்டதென்றும் கேட்கிறார்கள். நாம் முன் எடுத்துச் சொல்லிய வேத வாக்கியம் ஓய்வு நாள் ஏதேன் தோட்டத்திலேயே பரிசுத்தமாக்கப்பட்டதென்று காட்டுகிறது. ஆகையினாலே ஆதாம் பாவம் செய்யாததற்கு முன்னமேயே ஓய்வு நாள் ஸ்தாபிக்கப்பட்டதென்று இதனால் தெளிவாய் விளங்குகிறது.

மனுஷ ஜாதியின் ஆதித்தாய் தகப்பன்மாருக்கு ஓய்வு நாளை ஆசரிக்கவேண்டுமென்கிற கட்டளை கொடுக்கப்பட்டது. ஆதியாகமத்தில் சொல்லப்பட்டிருக்கிற அந்த ஓய்வு நாள் ஆசரிப்பின் பிரமாணம் பின் வரும் ஒரு சந்ததிக்கென்று அங்கே பரிசுத்தமாக்கப்படவில்லை. ஒவ்வொரு பிரமாணத்திற்கும் இரண்டு கட்சிக்காரர் தேவையாயிருக்கிறார்கள். கட்டளை கொடுப்பது ஒருவர், கட்டளையைப் பெற்றுக்கொள்வது ஒருவர். அதைப் பெற்றுக்கொள்ள ஒருவரும் தயாரா யிராவிட்டால் ஒரு பிரமாணமும் கொடுக்கப்படவே முடியாது. இங்கே தேவன் ஒரு பிரமாணத்தைக் கொடுத்தார். அதை ஆதாமும் ஏவாளும் பெற்றுக்கொண்டார்கள். அவர்களிருவரும் இனி உலகத்தில் ஜீவிக்கப்போகிற முழு மனுஷ ஜாதியையும் குறிக்கிறவர்களாயிருந்தார்கள். ஆதி. 3: 20 பார்க்கவும். ஆகையினாலே ஓய்வு நாள் பிரமாணம் ஆதாம் ஏவாளின் பின் சந்ததியாராகிய எல்லா மனுஷ ஜாதிக்கும் பொருந்தினதாயிருக்கிறது.

இந்தத் தீர்மானம் மாற்கு 2: 27-ல் சொல்லப்பட்டிருக்கிற நமது அருமை இரட்சகரின் வார்த்தைக்கு ஒத்ததாயிருக்கிறது. "ஓய்வு நாள் மனுஷனுக்காக உண்டாக்கப்பட்டது. இங்கே "மனுஷன்" என்னும் வார்த்தை தனிமையாக இன்ன மனிதனென்று வித்தியாசப்படுத்தாமல் எழுதப்பட்டிருக்கிறதினால் அது முழு மனுஷ ஜாதியையும் குறிக்கிறது. இங்கே மனுஷன் என்று மாத்திரம் சொல்லப்பட்டிருக்கிறதினால் அது மனுஷிக்கு அடுத்ததல்லவென்று அர்த்தப்படுத்தலாம். ஆனால் ஓய்வு நாள் பிரமாணத்தை ஸ்திரீகள் கைக்கொள்ளவேண்டியதில்லையென்று ஒருவனும் சொல்லமாட்டான். ஆதி. 1: 27; 2: 7-ல் சொல்லப்பட்டிருப்பதற்கும் மாற்கு 2: 27-ல் சொல்லப்பட்டிருக்கும் 'மனுஷன்' என்னும் பதத்திற்கும் வித்தியாசமான அர்த்தம் உண்டென்று ஒருவனும் சொல்லத் துணியமாட்டான்.

சகல ஜாதிக்கும் எக்காலத்துக்கும் ஓய்வு நாள் ஒன்றே.

முழு மனுஷ ஜாதியும் ஒரே ஓய்வு நாளைக் கைக்கொள்ள வேண்டுமென்பதுதான் தேவன் ஆதியில் கொண்டிருக்கிற நோக்கம். அப்போஸ்தலன் பரிசுத்த ஆவியினால் ஏவப்பட்டு தேவன் "மனுஷ ஜாதியாகிய சகல ஜனங்களையும் அவர் ஒரே இரத்தத்தினாலே தோன்றப்பண்ணி பூமியின்மீதெங்கும் குடியிருக்கச் செய்தார்." என்று எழுதியிருக்கிறார். அப். 17: 26. கோள வடிவமான பூமியையும், அதில் வசிக்கும்படியாக ஜனங்களையும் உண்டாக்கின தேவன் ஓய்வு நாளையும் ஸ்தாபித்தார். அவர் அதை மனுஷனுக்காக உண்டாக்கினார். ஆகையினாலே எல்லா மனிதரும் அதைப் பரிசுத்த ஓய்வு நாளாக ஆசரிக்கவேண்டும். தேவன் எல்லா மனுஷ ஜாதிக்கும் அருளிய மெய்யான ஓய்வாகிய ஏழாம் நாளை பூலோகமெங்குமுள்ள மனிதர் யாவரும் ஆசரிக்கக் கடமைப்பட்டிருக்கிறார்களென்று இதனால் விளங்குகிறது.

தேவன் ஓய்வு நாளை மனிதருக்குக் கொடுத்தது வெகு தெளிவாயிருக்கக்கொள்ள சிலர் தேவ வசனத்தை ஏற்றுக்கொள்ளமாட்டோமென்று தள்ளி கட்டுக்கதையான மனித பாரம்பரியங்களுக்கு தங்கள் செவியைச் சாய்க்கிறார்கள். அவர்கள் அது "யூத ஓய்வு நாள்" என்று அஞ்சாமல் சொல்லுகிறார்கள். வேதாகமத்தில் சொல்லப்பட்ட அந்த ஓய்வு

நாள் யூதருக்கு மாத்திரம் அருளப்பட்டதா? சிருஷ்டிப்பின் முடிவில் தேவன் ஸ்தாபித்த அந்த நாளைப்பற்றி "ஏழாம் நாளோ உன் தேவனாகிய கர்த்தருடைய ஓய்வு நாள்" என்று தேவன் தெளிவாய்ச் சொல்லுகிறார். யாத். 20: 8-11. அது ஒரு ஜாதிக்கும் ஒரு கோத்திரத்திற்கும் மாத்திரம் உரியதல்ல. அது தேவனுடைய நாள். அது தனக்குச் சொந்தமென்று கர்த்தர் சொல்லுகிறார்.

நியாயமற்ற பாத்தியம்.

மனிதர் தேவனுடைய வெளியரங்கமான கற்பனையை அவமதித்து வேறெந்த நாளையாவது தங்களுக்கு ஓய்வு நாளாக நியமித்துக்கொண்டபோதிலும் "ஏழாம் நாளோ கர்த்தருடைய ஓய்வு நாள்" ஆகவே இருக்கும். நாம் தேவனுடைய ஓய்வு நாளுக்குப் பதிலாக மனிதருடைய ஓய்வு நாளைக் கைக்கொள்வோமானால் நாம் தேவனை வணங்குகிறவர்களாயிராமல் மனிதரை வணங்குகிறவர்களாயிருப்போம்.

ஓய்வு நாள் பிரமாணம் சிருஷ்டிப்பிலேயே கொடுக்கப்பட்டு பிற்பாடு சீனாய் மலையில் உறுதி பண்ணப்பட்டபடியால் ஓய்வு நாள் யூதருக்கு மாத்திரம் கொடுக்கப்பட்டதென்று எண்ணுவதற்கு ஏதுவில்லை. ஏனென்றால் ஓய்வு நாள் யூதருக்கு மாத்திரம் அளிக்கப்படவில்லையென்று நாம் பழைய ஏற்பாட்டில் பின் வருமாறு வாசிக்கிறோம்.

"இப்படிச் செய்கிற மனுஷனும், இதைப்பற்றிக்கொண்டிருந்து, ஓய்வு நாளைப் பரிசுத்த குலைச்சலாக்காதபடி, ஆசரித்து, ஒரு பொல்லாப்பையும் செய்யாதபடி தன் கையைக் காத்துக்கொண்டிருக்கிற மனுப்புத்திரனும் பாக்கியவான்." "கர்த்தரைச் சேவிக்கவும், கர்த்தருடைய நாமத்தை நேசிக்கவும், அவருக்கு ஊழியக்காரராயிருக்கவும், அவரைச் சேர்ந்து, ஓய்வுநாளைப் பரிசுத்த குலைச்சலாக்காதபடி ஆசரித்து, என் உடன்படிக்கையைப் பற்றிக்கொண்டிருக்கிற அந்நிய புத்திரர் அனைவரையும், நான் என் பரிசுத்த பர்வதத்திற்குக் கொண்டுவந்து, என் ஜெப வீட்டிலே அவர்களை மகிழப்பண்ணுவேன்; அவர்களுடைய சர்வாங்க தகனங்களும், அவர்களுடைய பலிகளும், என் பலிபீடத்தின்மேல் அங்கிகரிக்கப்பட்டிருக்கும்; என்னுடைய வீடு சகல ஜனங்களுக்கும் ஜெப வீடு என்னப்படும்." ஏசா. 56: 2, 6, 7.

ஓய்வுநாள் பிரமாணம் நியாயப்பிரமாணத்தின் எந்தக் கற்பனையாயிருக்கிறதென்பது ஒரு கேள்வியல்ல. அது பத்துக் கற்பனையில் முதலாவது அல்லது ஐந்தாவது அல்லது பத்தாவது கற்பனையாயிருந்தாலும் அந்தக் கற்பனையின் கட்டளைக்கு நாம் கீழ்ப்படியவேண்டும். அது தேவன் பேசிச் சொல்லிய கற்பனையானபடியால் அதற்கு வல்லமையுண்டு. தேவனுக்குக் கீழ்ப்படியாமலிருந்ததும் பாவம், இருக்கிறதும் பவாம். "நியாயப்பிரமாணத்தை மீறுகிறதே பாவம்." 1 யோவான் 3: 4. நாம் கற்பனையை மீறாவிட்டால் நீதிமான்களாயிருக்கிறோம். நாம் தேவனுடைய பிரமாணத்தை எந்த விதத்திலும் மாற்றாதபடிக்கு நாம் அதைப் பரிசுத்தமும் வல்லமையும் உள்ளதென்று எண்ணி நாம் தேவனுக்கு உகந்தவர்களாக ஜீவித்து இப்படியாக பாவத்தை ஒழித்துவிடுவோமாக.

விஷ ஊற்று

(THE POISON SPRING.)

குந்தியின் மக்களாகிய பஞ்சபாண்டவரும் அவர்களுடைய மனைவி துரோபதையும் வனவாசம் செய்த காலத்தில், காட்டிலே விஷமுள்ள நீரூற்றின் தண்ணீரைக் குடித்து அதினால் அதிக பயங்கரமாய் வேதனைப் பட்டதாக மகா பாரதத்தில் ஓர் கதை யுண்டு.

காடுகளிலுள்ள பள்ளங்களிலே மழைத்தண்ணீர் கட்டுக்கிடையாய் நிற்பதும் இலைகளும் செத்தைகளும் குவியல் குவியலாய் அவற்றில் விழுந்து அழுகிப்போய் அந்தத் தண்ணீர் விஷமுள்ளதாவதும், காட்டு மார்க்கமாய்ப் பிரயாணஞ் செய்கிறவர்கள் சில வேளைகளில் அப்படிப்பட்ட விஷ நீர் நிலைகளைக் காண்பதும் கூடிய விஷயம்தான். அப்படிப்பட்ட அபாயகரமான குளங்குட்டைகளின் ஜலத்தை குடிக்காதபடிப் பிரயாணிகள் எப்போதும் ஜாக்கிரதையாயிருக்கவேண்டும்.

ஆனால் இதிலும் அதிக அபாயமான ஊற்று ஒன்று உண்டு. மனிதர் சஞ்சாரம் செய்யும் இடங்களுக்கு வெகு தூரத்தில் இந்த ஊற்று இருக்கிறதில்லை. அவர்கள் மத்தியிலேயே இருக்கிறது. ஆம், மனிதர் எங்கெங்கே இருக்கிறார்களோ அங்கெல்லாம் அந்த ஊற்று இருக்கிறது. அவர்கள் நாகரீகமுள்ளவர்களாயிருந்தாலும் சரி நாகரீகமற்றவர்களாயிருந்தாலும் சரி.

இந்த ஊற்றிலிருந்து பொல்லாத சிந்தனைகளும், துர்ப்பாஷைகளும், கெட்ட செய்கைகளும் உண்டாகிறது.

அந்த ஊற்று நமக்குள்ளேயே இருக்கிறது. அது நம்முடைய சொந்த ஜீவனையும், அநேக விதங்களில் நமது பிறருடைய ஜீவனையும் கெடுத்துப்போடக்கூடும்.

பொல்லாத மனித இருதயத்தினின்று தோன்றும் விஷத்தினாலுண்டாகும் கெடுதிகளை யார் குணமாக்கக்கூடும்?

புண்ணியம் தேடிக்கொள்ளும்படியாகப் புண்ணிய ஸ்தலங்களுக்கு ஜனங்கள் கூட்டங்கூட்டமாகச் செல்வதை நீ பார்த்திருக்கிறாயா? அவர்கள் அதினால் புண்ணியம் அடைகிறார்களா? அடையக்கூடுமா? ஒவ்வொருவருடைய இருதயத்திலும் விஷ ஊற்று ஒன்று இருக்கக்கொள்ள அவர்கள் புண்ணியம் சம்பாதிக்கக்கூடிய தெப்படி?

மெய்யாய்ப் பாக்கியசாலியாயிருக்கவேண்டுமானால் எவ்வொருவனும் இந்த ஊற்றைத் தேடி அதைச் சுத்தம் செய்யவேண்டும். அது சுத்திகரிக்கப்படவேண்டும். யாராகிலும் அப்படிச் செய்ய முயன்று சித்திபெற்றதுண்டா? நல்லவர்களும் மிகவும் யோக்கியதையுள்ளவர்களுமான மனிதரில் ஒருவர் தன்னைச் சுத்திகரித்துக்கொள்வதற்கு யதார்த்தமாய்ப் பிரயாசப்பட்டார். தான் அதில் சித்தியடைந்துவிட்டதாக நினைத்துக்கொண்டார்.

ஆனால் அவர் பரம ஜோதியில் நடக்கப் பிரயத்தனப்பட்டபோது, தான் இவ்விஷயத்தில் பரிதாபமாய்த் தவறிவிட்டதாகக் கண்டார். நன்மை செய்யவேண்டுமென்னும் விருப்பம் ஒவ்வொரு இருதயத்திலு மிருக்கிறது. ஆனால் அதை நடப்பிக்கச் சக்தி இல்லை. ஏன் அப்படி?

விஷமான ஊற்றில் குடிக்கிறவன் மெலிந்து பலவீனனாய்ப் போகிறான். தான் அருந்தின விஷத்தின் கெடுதியினின்று தன்னை இரட்சித்துக்கொள்வதற்கு அவனுக்கு பலமில்லை.

அதேவிதமாகப் பொல்லாப்பு என்னும் விஷமுள்ள ஊற்று யாருடைய இருதயத்திலிருக்கிறதோ அவன் பலவீனனாயிருக்கிறான். பாவ விஷத்தினின்று தன் இருதயத்தையும் நினைவுகளையும் சுத்தப்படுத்தக் கூடாதவனாயிருக்கிறான். அவனுக்கு உதவி செய்ய ஒருவர் அவசியம் தேவை.

தன் இருதயத்திலுள்ள பொல்லாப்பை மேற்கொள்ளுவதற்கு மனிதனுக்கு உதவி செய்ய யாராகிலும் இருக்கிறார்களா? ஆம், கர்த்தராகிய இயேசு கிறிஸ்து இருக்கிறார். அவர் நம்மை இரட்சிக்கக்கூடும். அவர் நம்முடைய இருதயத்திலிருந்து விஷத்தை சுத்திகரிக்கக்கூடும். பாவ விஷத்தினால் கெட்டுப்போனவர்களை அவர் பரிசுத்தமுள்ளவர்களாக்கக் கூடும்.

இது எப்படி செய்யப்படுகிறது? அது விசுவாசத்தினால் (பக்தியினால்) நடக்கிறது. நாம் அவர்பேரில் விசுவாசம் வைக்கவேண்டும். நாம் நமது இருதயத்திலிருக்கும் விஷத்தினால் வாதிக்கப்படுகிறோம். நாம் அவரை நோக்கி ஜெபிக்கிறோம். அவர் நம்மைக் கேட்கிறார். நாம் அவருடைய பாதையில் நடக்கப் பிரயாசப்படுவதாக வாக்குக் கொடுக்கிறோம். நாம் அவருடைய சித்தத்தை அறிந்து அதற்குக் கீழ்ப்படியப் பிரயாசப்படுகிறோம். இனி நாம் நம்முடைய சித்தத்திற்குக் கீழ்ப்படிந்து நடக்கத் தேடாமல் அவருடைய சித்தத்திற்கே கீழ்ப்படியப் பார்க்கிறோம். அவரே நம்முடைய ஆண்டவரும் குருவும் வழி காட்டியுமாயிருக்கிறார்.

இப்படி நாம் நமது விசுவாசத்தை அவர்பேரில் வைத்தால் அவர் நமது இரட்சகரும், ஆண்டவரும், குருவும் வழி காட்டியுமாகிறார். பாவ விஷத்தினின்று நம்மை இரட்சிக்கிறார். அவருடைய கிருபை அதிசயமான அவிழ்தம். அது விஷத்தை இருதயத்திலிருந்து எடுத்துவிடுகிறது. அது நமது இருதயத்திலுள்ள பொல்லாப்பு என்னும் ஊற்றின் விஷத்தை மாற்றுகிறது. பொல்லாப்பாகிய விஷத்திற்கு பதிலாக அவருடைய பரிசுத்த கிருபை அளிக்கப்படுகிறது.

அந்தக் கிருபையினாலே நாம் நித்திய ஜீவனின் ஆனந்த பாக்கியத்தை அடைகிறோம்.

நியாயத்தீர்ப்பு

(THE JUDGMENT)

நியாயத்தீர்ப்பு அறிவிக்கப்படுதல்.

பாவ நிவாரண நாளுக்காக ஆயத்தப்படும்படி இஸ்ரவேலருக்கு, முன்னதாக அறிவிக்கப்பட்டதுபோல, சுவிசேஷ வேலையின் முடிவிலும் நியாயத்தீர்ப்பைப்பற்றி எல்லாருக்கும் தெரிவிக்கப்படுகிறது. ஒரு தூதன் "நித்திய சுவிசேஷத்தை" யுடையவனாயிருந்து அதைப்பற்றிய தூதைச் சகலருக்கும் அறிவித்து "அவர் நியாயத்தீர்ப்புக் கொடுக்கும் வேளை வந்தது" ஆகையால் சகலரும் இந்தத் தூதுக்கு விசேஷித்த பிரகாரம் செவி கொடுக்க வேண்டுமென்பதாக வெளிப்படுத்தின விசேஷம் 14: 6, 7 வசனங்களில் சொல்லியிருக்கிறது.

இப்படிப்பட்ட ஒரு தூதானது நியாயத்தீர்ப்பு மெய்யாகவே ஆரம்பிக்கும்போதுதான் அறிவிக்கப்படக்கூடும். நியாய சங்கம் உட்காரும் காலம் எப்போது என்பதும் வேத வாக்கியங்களில் காட்டப்பட்டிருக்கவேண்டும். அது எந்தக்காலமென்பது தானி. 8: 14-இல் சொல்லப்பட்டிருக்கும் 2,300 இராப்பகல் என்பதில் அடங்கியிருக்கிறது. இந்தத் தீர்க்கதரிசன காலத்தின் முடிவில் பரிசுத்த ஸ்தலம் சுத்திகரிக்கப்படும் என்று சொல்லப்பட்டிருக்கிறது. அது தேவனுடைய ஜனம் விசாரணைத் தீர்ப்பு செய்யப்படுவதுதான். அந்தத் தீர்க்கதரிசன காலமானது 1844-ம் வருஷத்தோடு முடிவான அதே காலத்திலே வெளி. 14: 6, 7-ல் சொல்லப்பட்டிருக்கும் அந்தத் தூது பூலோகமெங்கும் சென்றுகொண்டிருக்கிறது.

நீதிமான்கள் முடிவுக்கு முன் நியாயந் தீர்க்கப்படுதல்.

கர்த்தருடைய ஜனங்களின் நியாயத்தீர்ப்பானது, அவருடைய வருகைக்கு முன் நடக்கவேண்டியது. ஏனென்றால் அவருடைய வருகையைப்பற்றி "ஒருவன் கிறிஸ்தவனாயிருப்பதினால் பாடுபட்டால் வெட்கப்படாமலிருந்து அதினிமித்தம் தேவனை மகிமைப்படுத்தக்கடவன். நியாயத்தீர்ப்பு தேவனுடைய வீட்டிலே துவக்கும் காலமாயிருக்கிறது. முந்தி நம்மிடத்திலே அது துவக்கினால் தேவனுடைய சுவிசேஷத்திற்குக் கீழ்ப்படியாதவர்களின் முடிவு என்னமாயிருக்கும்?" 1 பேது. 4: 16, 17 என்று சொல்லப்பட்டிருக்கிறது. அக்காலத்தில் அவர்களுடைய எதிரிகளைப்பற்றி அவர் சொல்லுகிறதாவது: "அந்தத் துன்மார்க்க உளையிலே அவர்களோடேகூட நீங்கள் விழாமலிருக்கிறதினாலே அவர்கள் ஆச்சரியப்பட்டு, உங்களைத் தூஷிக்கிறார்கள். உயிரோடிருக்கிறவர்களுக்கும் மரித்தோர்களுக்கும் நியாயத்தீர்ப்பு கொடுக்க ஆயத்தமாயிருக்கிறவருக்கு அவர்கள் கணக்கொப்புவிப்

பார்கள்......எல்லாவற்றிற்கும் முடிவு சமீபமாயிற்று. ஆகையால் தெளிந்த புத்தியுள்ளவர்களாயிருந்து ஜெபம் பண்ணுவதற்கு ஜாக்கிரதையுள்ளவர்களாயிருங்கள்." 1 பேது. 4: 4-7.

அந்த வருகையைப்பற்றிப் பவுல் அப்போஸ்தலன் "நாமெல்லாரும் நித்திரை யடைவதில்லை. ஆகிலும் கடைசி எக்காளம் தொனிக்கும்போது, ஒரு நிமிஷத்திலே, ஒரு இமைப்பொழுதிலே நாமெல்லாரும் மறுரூபமாக்கப்படுவோம். எக்காளம் தொனிக்கும், அப்பொழுது மரித்தோர் அழிவில்லாதவர்களாய் எழுந்திருப்பார்கள். நாமும் மறுரூபமாக்கப்படுவோம்" என்று சொல்லுகிறார். 1 கொரி. 15, 51, 52. உயிரோடெழுப்பப்பட்ட நீதிமான்கள் நியாயந் தீர்க்கப்படுவதற்கு "ஒரு இமைப்பொழுது" மிகவும் கொஞ்ச நேரம்.

பொல்லாதவர்களின் நியாயத்தீர்ப்பு.

பொல்லாதவர்களை நியாயந்தீர்க்கும் வேலையில் நீதிமான்களுக்கும் பங்கிருப்பதாக வேத வாக்கியங்கள் தெரிவிக்கின்றன. முதலாம் உயிர்த்தெழுதலில் பங்குள்ளவர்களாயிருக்கிற பரிசுத்தவான்களையும் பாக்கியவான்களையும்பற்றி "அவர்கள் உயிர்த்து கிறிஸ்துவுடனேகூட ஆயிரம் வருஷம் அரசாண்டார்கள்" என்று சொல்லியிருக்கிறது. வெளி. 20: 4. இந்த ஆளுகையைப்பற்றி இரட்சகர் தம்முடைய சீஷருக்குச் சொன்னதென்னவென்றால் "என் பிதா எனக்கு ஒரு இராஜ்ஜியத்தை ஏற்படுத்தினதுபோல நானும் உங்களுக்கு ஏற்படுத்துகிறேன். நீங்கள் என் ராஜ்ஜியத்திலே என் பந்தியில் போஜன பானம் பண்ணி இஸ்ரவேலின் பன்னிரண்டு கோத்திரங்களையும் நியாயந்தீர்க்கிறவர்களாய் சிங்காசனங்களின்மேல் உட்காருவீர்கள் என்றார்." லூக். 22: 29, 30. இந்த நியாயத்தீர்ப்பானது இஸ்ரவேலின் பொல்லாதவர்களைப் பற்றியதாயிருக்கவேண்டும் என்பதற்குச் சந்தேகமில்லை. நீதிமான்களெல்லாரும் அப்பொழுது இராட்சியத்திலிருப்பார்கள்.

பொல்லாதவர்களின் விஷயங்கள் பரிசோதிக்கப்படும் இந்த விஜாரணைப்பற்றி "பரிசுத்தவான்கள் மகிமையோடே களிகூர்ந்து தங்கள் படுக்கைகளின்மேல் கெம்பீரிப்பார்கள். ஜாதிகளிடத்தில் பழி வாங்கவும் ஜனங்களைத் தண்டிக்கவும் அவர்களுடைய ராஜாக்களைச் சங்கிலிகளாலும் அவர்களுடைய மேன்மக்களை இருப்பு விலங்குகளாலும் கட்டவும், எழுதப்பட்ட நியாயத்தீர்ப்பை அவர்கள்பேரில் செலுத்தவும் அவர்கள் வாயில் கர்த்தரை உயர்த்தும் துதியும், அவர்கள் கையில் இருபுறமும் கருக்குள்ள பட்டயமும் இருக்கும். இந்த கனம் அவருடைய பரிசுத்தவான்கள் யாவருக்கும் உண்டாகும்" என்று சங்கீதப் புஸ்தகத்தில் வாசிக்கிறோம். சங். 149: 5-9.

பவுல் அப்போஸ்தலன் கொரிந்தியருக்குச் சொன்னதாவது: "பரிசுத்தவான்கள் உலகத்தை நியாயந் தீர்ப்பார்களென்று அறியீர்களா........தேவ தூதர்களையும் நியாயந் தீர்ப்போமென்று அறியீர்களா" 1 கொரி. 6: 2, 3. மேலும், அவர் ஒரு எச்சரிப்பும் சொல்லியிருக்கிறார். "ஆனதால் கர்த்தர் வருமளவும் நீங்கள் காலத்துக்கு முன்னே யாதொன்றைக் குறித்தும் தீர்ப்பு சொல்லாதிருங்கள். இருளில் மறைந்திருக்கிறவைகளை அவர் வெளியரங்கமாக்கி இருதயங்களின் யோசனைகளையும் வெளிப்படுத்துவார். அப்பொழுது அவனவனுக்குரிய புகழ்ச்சி தேவனால் உண்டாகும்." 1 கொரி. 4: 5.

இப்போது நடக்கும் நியாயத்தீர்ப்பு.

தீர்க்கதரிசனத்தில் சொல்லப்பட்ட 2,300 நாட்கள் 1844-ம் வருஷத்தோடு முடிந்து, பரிசுத்த ஸ்தலம் சுத்திகரிக்கப்படுதலாகிய தேவனுடைய ஜனத்தின் விசாரணைத்தீர்ப்பு அதுமுதல் ஆரம்பித்தாயிற்று. ஏறக்குறைய எழுபது வருஷ காலங்களாக இந்த நியாயத்தீர்ப்பு மரித்தோரின்பேரில் நடந்துகொண்டிருக்கிறது. வெகு சீக்கிரத்தில் ஜீவனுள்ளோரின் விஷயங்களும் விஜாரிக்கப்பட ஆரம்பிக்கும். அது எவ்வளவு சீக்கிரத்தில் ஆரம்பிக்குமென்று நமக்குத் தெரியாது. "நீதிபரராயிருக்கிற இயேசு கிறிஸ்து இன்னும் நமக்காகப் பிதாவினிடத்தில் பரிந்து பேசுகிறவராயிருக்கிறபடியால்" நாம் எவ்வளவு நன்றி யறிதலுள்ளவர்களாயிருக்கவேண்டும். 1 யோ. 2: 1. "தமது மூலமாய் தேவனிடத்தில் சேருகிறவர்களுக்காக வேண்டுதல் செய்யும்படிக்கு அவர் எப்பொழுதும் உயிரோடிருக்கிறவராகையால் அவர்களை முற்றமுடிய இரட்சிக்க வல்லவராயும் இருக்கிறார்." எபி. 7: 25.

"அநியாயம் செய்கிறவன் இன்னும் அநியாயம் செய்யட்டும்" வெளி. 22: 11. என்னும் பயங்கரமான வாசகம் பரலோகத்திலிருந்து புறப்படுவதற்கு முன்னதாக நம்முடைய பாவங்கள் கிறுக்கப்படும்படியாக நாம் சீக்கிரத்தில் பாவ அறிக்கை செய்யத் துரிதப்படும்படிக்குக் கர்த்தர் நமக்கு ஒத்தாசை செய்வாராக.

சுகாதார விஷயங்கள்

O. SMITH, M. D. டாக்டர் சிமித்.

'அறைக் குழந்தைகளை பாதுகாக்கும் முறை.

வருஷாவருஷம் ஆயிரக்கணக்கான குழந்தைகள், கவனிப்பவர்களின் கவனக்குறைவால் பிறந்த சில நாள்களுக்குள்ளாகவே இறந்துபோகின்றதையோசிக்கும் காலத்து அறைக் குழந்தைகளை பாதுகாக்கவேண்டிய முறையைப்பற்றிய சில விஷயங்களை இங்கு குறிப்பது உபயோகமாயிருக்குமென்று தோன்றுகிறது.

செய்யவேண்டிய காரியங்கள்.

(1) பிறந்த குழந்தையை, ஸ்நாநம் செய்விக்க ஏற்பாடுகள் தயாராகும் வரையில், ஒரு உலர்ந்த சுத்தமான துணியில் சுற்றிவைக்கவேண்டும். குழந்தை பிறப்பதற்குமுன் தாய்வயற்றில் எவ்விதம் குளிர்படாது உஷ்ணம் காக்கப்பட்டு வந்ததோ அப்படியே, பிறந்தபிறகும் குளிர்ந்த காற்றுப்படாமலும் தேகச்சூடு குறையாமலும் வைக்கப்படவேண்டும். குழந்தையை பிறந்த உடனே, தரையில் ஒரு கந்தலின்மேல் போத்தாமல் போட்டுவிடுவது ஸகஜம்; பிறந்த சில நாள்களுக்குள்ளாக அநேகம் குழந்தைகள், சாகிறதற்கு இதுவே காரணமாகிறது. குழந்தை குளிர்ந்த காற்றுப்படாமல் மூடிவைத்திருக்கப்பட்டால் குளிப்பாட்ட ஒரு அவசரமுமில்லை. பிறந்த யிடத்தினுடைய சீதோஷ்ணஸ்திதி முதலானவைகள் குழந்தைக்கு கொஞ்சங்கொஞ்சமாய் ஒத்துக்கொள்ளும்படி செய்யவேண்டும்.

(2) பிறந்த குழந்தையை சுத்தப்படுத்த எண்ணெயைத் தடவி ஸ்னானம் செய்துவைக்கவேண்டும். சுத்தம் செய்யவேண்டுமென்று பலமாய் தேய்த்து அதிக ஜலத்தைவிட்டு ஸ்னானம் செய்துவைப்பதைக்காட்டிலும் இது உத்தமம். குழந்தைகளின் அழுக்கை எடுப்பதற்காக, உள்சதை தெரியும்படியாக சொறிந்து தேய்ப்பதை நான் பார்த்திருக்கிறேன். அம்மாதிரி செய்தாலும்கூட சிசு முற்றும் சுத்தமாவதில்லை. கொஞ்சம் எண்ணெயை உபயோகித்தால் சுலபமாய் ஒரு நிமிஷத்தில் அசுத்தமெல்லாம் அதில் கரைந்து வந்துவிடும். குழந்தையை குளிப்பாட்டுவதற்கு அதிக ஜலம் உபயோகிக்கக்கூடாது. அந்த ஜலம் அதிகச் சூடாயாவது, அல்லது சில்லென்றுவதிருக்கக்கூடாது.

(3) கொதிக்கவைத்து ஆறிய சுத்த ஜலத்தைக்கொண்டு, பிறந்த குழந்தையினுடைய கண்களையும் வாயையும் அலம்பவேண்டும். பிறக்கும் எல்லா குழந்தைகள் விஷயத்திலும் அவைகளின் கண்களை பிறந்த உடனே சரியாய் கவனிக்கப்பட்டிருந்தால், இப்பொழுது பூலோகத்தில் இருக்கும் குருடர்களில் பாதி குறைந்துவிடுமென்று சொல்லப்பட்டிருக்கிறது. வேறு எது எப்படி யிருந்தாலும் ஸரி மருத்துவிச்சியை குழந்தையின் கண்களை சரியாய் அலம்பச்சொல்லவேண்டியதவசியம்; பக்கத்தில் வைத்தியனிருந்தால் தேவையான சிகிச்சையும் செய்யச்சொல்லவேண்டும். அமெரிக்காவில், மருத்துவிச்சிகளும், வைத்தியர்களும் அவர்கள் கவனிக்குமிடங்களில் பிறக்கும் குழந்தைகளுக்கு கண்நோய்களை தடுக்கும்பொருட்டு அவைகளின் கண்களில் நூற்றுக்கு இரண்டு பங்கு வீதம் கலந்த ஸில்வர் நைட்ரேட் (Silver nitrate) திராவகமாவது, அல்லது நூற்றுக்கு பன்னிரண்டரை பங்கு கலந்த ஆர்க்யரால் (argyrol) என்னும்,திராவகத்தையாவது, ஒரு துளி விடவேண்டுமென்று ஒரு ஸர்க்கார் உத்திரவு இருக்கிறது. இந்த சிகிச்சையானது, பிறக்கும் குழந்தைகளில் 100-க்கு 99 பெயர்களுக்கு அனாவசியமாகவே யிருக்கலாம்; ஆயினும் மீதி ஒரு குழந்தை ஸம்பந்தப்பட்டவரையில் இதினால் ஆயுள் பூராவும் குருடராயிருப்பதிலிருந்து காப்பாற்றப்பட்டால் இந்த சிகிச்சையை கைக்கொள்ளவேண்டியது அவசியமென்றாகவில்லையா ?

(4) பிறந்தவுடன் மேற்சொன்ன பிரகாரம் செய்யத் தவறினாலும், பின்னால் சிசுவின் கண்களில் சிவப்போ அல்லது வீக்கமோ கண்டால் தாமதிக்காமல் ஒரு வைத்தியனைக் கொண்டு பார்க்கவேண்டும். கவனியாது இரண்டொரு நாள் விட்டுவிட்டாலும் மோசம் வந்துவிடும். பிறகு வெகு சாமர்த்தியமான வைத்தியனுக்கும் சாத்தியமில்லாமல் போய்விடும். இந்த விஷயத்தை முக்கியமாய் ஞாபகத்தில் வைத்துக்கொள்ளவேண்டும். தங்களுடைய குழந்தைகளின் கண்களைக் காப்பாற்ற ஆயிர ரூபாய் செலவழிக்க தயாராயும், இரவும் பகலும் ஓயாது அதற்காக முயற்சி செய்யும் பெற்றோர்கள்கூட ஆரம்பத்தில் இரண்டொருநாள் தாமதம் செய்த காரணத்தினால், தங்கள் குழந்தைகள், பார்வை இழந்ததற்குத் தாங்களே காரணமாகிறார்கள். ஆரம்பத்தில் ஏதோ, ஒன்றுமில்லாததுபோல் கண்ணில் தோன்றும் வீக்கமும் சிவந்த நிறமும் கவனியாதுவிட்டால் கண்ணை அடியோடு அழித்துவிடும். ஆரம்பத்திலேயே வைத்தியனைக்கொண்டு சாதாரண சிகிச்சை செய்தாலும் கெடுதல் முழுவதும் நிவர்த்தியாய்விடும். பம்பாய் இராஜதானியில், ஜில்லா அதிகாரியாயிருக்கும் மிஸ்டர் ஜி. ஜி. ஹெண்டர்ஸன் துரை யவர்களால் "குருடுக்கு உதவி புரியும் சங்கம்" என்ற ஒரு சங்க மேற்படுத்தப்பட்டிருக்கிறது. இந்த சங்கத்தார் அந்த பட்டணத்தில், குழந்தைகள் பிறந்தவுடன், வீடுகளுக்குச் சென்று குழந்தைகளினுடைய கண்களை தெரிந்தவர்களைக்கொண்டு சரியாய் பார்வையிட்டு, அதற்கு தகுந்த வைத்தியம் செய்ய முயலுகிறார்கள்.

ஆகாரம் போடுவதைப்பற்றி.—பிறந்த குழந்தைக்கு தன்னுடைய தாயின் பாலைக் குடிக்க ஆரம்பிப்பதற்கு முன்பாக, யாதொரு ஆகாரமும், மருந்தும் தேவையில்லை. சாதாரணமாக சிசு முதலில் பாலில்லாமலே தன் சுயபலத்தைக்கொண்டே தாங்கிக்கொள்ளும். பிறந்து ஆறுமணி சாவகாசத்தின் பிறகு காலாகாலத்தில் தாய்ப் பால் கொடுத்துவரவேண்டும். விளக்கெண்ணெயைக்காட்டிலும், தாயின் சீயம்பால் மலத்தைக்கழிக்க மிகவும் நல்லது. குழந்தை தாயினிடத்து சீயம்பாலைக்குடித்தால் நல்லபால் பிறகு சீக்கிரம் சுரக்கும். மூன்று நாள் வரையிலும் சீயம்பாலைக் குடித்து குழந்தை திருப்தியடையாமலிருந்தாலும் நஷ்டமொன்றுமில்லை; அப்பாலினால் மலம் கழிந்து வயிறு சுத்தமாய்விடும். ஆகவே கொடுத்த பாலை ஜெரித்துக்கொள்ள சக்தியுமுண்டாகும். முதலிரண்டு நாள்களில், பசும் பாலையும், விளக்கெண்ணெயையும் கொடுத்து குழந்தையின் வயிற்றைக் கெடுப்பதைக்காட்டிலும் முதலில் கொஞ்சம் பசியுடன் தாய்ப்பால் அகப்பட்டால் போதுமென்ற அவாவுடன் விட்டுவிடுவது எத்தனையோ மடங்கு நலம். வேறொரு உணவும், மருந்தும் கொடாமல் தாய்பாலான சிசுவுக்கு ஏற்பட்ட இயற்கை உணவோடு மாத்திரம் சிசுவை விட்டுவிடுவது மிகவும் நல்லது. பிறந்து மூன்று நாள் வரையில் இம்மாதிரி செய்தால் குழந்தை, எதையும் ஜீரணம் செய்துகொள்கிறது. முதலிரண்டு நாள்களில், விளக்கெண்ணெயில்லாமல் தாய்ப்பாலைக் குடிப்பதினாலேயே கறபபு மலங்களை கழித்துக்கொள்ளுகிறது.

6. தேக சௌக்கியமுள்ள சிசு 24 மணிநேரத்தில் 22 மணி நேரம் தூங்கவேண்டும்; பகலில் இரண்டு மணிக்கொரு தடவையும், இரவில் மூன்று மணிக்கொரு தடவையும் பால் குடிக்கவேண்டும்; முதல், 10 நாள்களில் நாளொன்றுக்கு இரண்டல்லது மூன்று தடவை மலத்தை கழிக்கவேண்டும்.

செய்யக்கூடாதவைகள்.

(1) காற்றடிக்கும் இடத்திலாவது, மூடாமலாவது குழந்தையை வைத்திருக்கக் கூடாது.

(2) குளிப்பாட்டுகையில் வெந்நீரை அதிகமாயாவது மூச்சு திணரும்படியாயாவது விடக்கூடாது.

(3) குழந்தையின் தொப்பிள் கொடிமேல், மண் முதலானவைகள் தடவக்கூடாது.

(4) குழந்தையின் கண்களை கவனியாமல் அஜாக்கிரதையாய் விட்டுவிடக்கூடாது.

(5) பிறந்த சிசுவுக்கு பசும்பாலும், விளக்கெண்ணெயும் கொடுக்கவேண்டாம்; தாய்க்கு பால் சுரக்கும் வரையில் தாமதிக்கலாம்.

(6) அழுகிறபோதெல்லாம் பால் கொடுக்கக்கூடாது. மணிக்கணக்காய் ஒரே நீதியாய் பால் கொடுக்கவேண்டும்.

தாய்மார்கள் அறியவேண்டிய விஷயங்கள்

1916-ம் வருஷம் டிசம்பர்மாதம், சென்னைப் பிரஸவ ஆஸ்பத்திரியின் சூபரின்டென்டென்டான மேஜர் ஹிங்ஸ்டன் செய்த ஒரு பிரசங்கத்தில், அவர் தாய்மார்களுக்குச் சில புத்திமதிகளை எடுத்து விளக்கிக் கூறினர். இப்போது அவைகள் பொது ஜனங்களின் உபயோகத்திற்காக மீண்டும் இந்தப் பிரசுரத்தில் கூறப்பட்டிருக்கின்றன:—

இந்திய வாலிபத் தாய்மார்கள் பொதுவாக தங்களுக்குப் பிரஸவ காலத்தில் உதவியாயிருக்கிற அம்பட்ட ஜாதி மருத்துவச்சிகளின் புத்திமதிகளின்படியும் இன்னும் அக்காலத்திலிருக்கிற இதர ஸ்திரீகளின் புத்திமதிகளின்படியும் கேட்டு நடக்கிறார்கள். இந்தியாவில் குழந்தை பிறக்கும்போது பிரஸவ அறையில் அநேகம் ஸ்திரீகள் கூடியிருப்பது ஸகஜமாயிருக்கிறது. ஓர் ஏழையின் வீட்டில் குழந்தை பிறந்தபோது 24 ஸ்திரீகள் பிரஸவ அறையில் கூடியிருந்ததாக ஒரு வைத்தியர் கணக்கிட்டிருக்கிறார். அவ்வளவுபேர் கூட்ட மத்தியில் பிறந்த குழந்தை அதிக காலம் ஜீவிக்கவில்லையென்றால் அஃதொரு ஆச்சரியமில்லை. சண்டை சச்சரவு செய்துகொண்டும் பேசிக்கொண்டும் பிரஸவ ஸ்திரீகளுக்குப் புத்திமதிகள் கூறுவதை நீங்களே நினைத்துப் பாருங்கள். 24 ஸ்திரீகள் ஓர் அறையில் கூடியிருக்கும்போது அவர்கள் ஒரேவிதமான அபிப்பிராயத்திற்கு வருவார்களாவென்பதை நீங்கள் எங்கேனும் அறிந்திருக்கிறீர்களா?

அனுபவமிருக்கிறதென்று கூறும் மருத்துவச்சிகளில் பலர் தாங்கள் மருத்துவத்தொழிலில் சமர்த்தரென்று சொல்லிக்கொள்வதற்கு யோக்கியதை இல்லை. அவர்கள் குழந்தைகளை எப்படி வளர்ப்பதென்பதைப்பற்றிச் சில விஷயங்களைத் தங்கள் தாய்மார்களிடமிருந்து கற்று அறிந்திருக்கிறார்கள். "சொக்குக்கு ஒரே மதி" என்று சொல்வதுபோல் அவர்கள் தாங்கள் அறிந்த விஷயங்களைப் பெரிதாக எண்ணி பிடிவாதமாயிருக்கிறார்களேயன்றி நல்ல புத்திமதிகளைக் கேட்கிறார்களில்லை. குழந்தைகளை வளர்ப்பதில் கவனித்து அனுஷ்டிக்கவேண்டிய சில பொதுவிதிகளிருக்கின்றன. அவ்விதிகளை எல்லாத் தாய்மார்களும் தாதிகளும் படித்தறிந்துகொள்ளவேண்டும். பொதுவாக ஒரு குழந்தை மற்றொரு குழந்தையைப்போலிராது. ஒவ்வொரு குழந்தையும் அதனதன் தேகதத்துவத்திற்கேற்ப சில தன்மைகளை உடைத்தாயிருக்கும். தாய்மார்கள் குழந்தைகளை வளர்ப்பதற்குச் சில பொது விதிகளை அறிந்து அவைகளின்படி நடக்கவேண்டுமென்று கருதினார்களேயானால், அவர்கள் தத்தம் குழந்தைகளின் நிலைமைக்கு ஏற்றபடி அவ்விதிகளை மாற்றிக்கொள்ளலாம். பின்னர், அவர்கள் ஒன்றுமறியாத அம்பட்ட ஜாதி மருத்துவச்சிகளின் புத்திமதிகளையே நம்பியிருக்கவேண்டிய அவசியமில்லை. தாய்மார்கள் குழந்தைகளுக்கு உடைகள் விஷயமாகவும் ஆகார விஷயமாகவும் சுவாஸிக்கும் காற்று விஷயமாகவும் எது வேண்டியது; எது நல்லது என்று அறிந்துகொள்ள இடமுண்டாகும்.

குழந்தைகளின் ஆகாரம்.

முதல்முதலாகத் தாய்மார்கள் என்ன கவனிக்கவேண்டும்? "குழந்தைக்கு என்ன ஆகாரம் நான் கொடுக்கவேண்டும்" என்று தாய்மார்கள் யோசிக்கவேண்டும். சுகதேகமுள்ள தாய்மார்கள் குழந்தைகள் பிறந்து ஒன்பது மாதங்கள் வரையில் தங்களுடைய பாலே குழந்தைக்கு ஏற்றதென்று அறியவேண்டும். குழந்தைகளுக்கு ஒன்பது மாதங்களான பிறகு தாய்ப்பால் அளவிலும் சாரத்திலும் குறைந்துவிடும். இதையறிந்து தாய்மார்கள் குழந்தைக்கு இன்னும் வேறு ஆகாரமும் கொடுக்கவேண்டும்; தங்களுடைய பால்மாத்திரம் போதாது என்று உணரவேண்டும். அப்போதுதான் குழந்தைகளுக்குப் பால் மறக்கும் காலம்.

ஆனால், தாய்மார்கள் உடம்பு அசௌகரியமாயிருந்தால் அவர்கள் தன் பாலை குழந்தைக்குக் கொடுக்கக்கூடாது. நூற்றுக்கணக்கான தாய்மார்கள் தங்களுடைய தேகபலமெல்லாம் போயும் வெளுத்தும், மெலிந்தும் களைப்படைந்துமிருக்கிறார்கள். இத்தகைய தேகமுடையவர்கள் தங்கள் குழந்தைகளுக்குத் தங்கள் பாலைக் கொடுத்துவருகிறார்கள். துர் அதிர்ஷ்டமுள்ள இக்குழந்தைகள் அரை ஆகாரமே உண்கின்றன. இக்குழந்தைகள் மெலிந்து துர்ப்பலமாயிருப்பதால், எந்த வியாதியும் சீக்கிரம் வரக்கூடியதாயிருக்கின்றன. இதை நாம் கவனியாமலிருத்தல் கூடாது. குழந்தைகள் பிறக்கு முன்பும் பிறந்த பின்பும் தாய்மார்கள் கொஞ்சம் கவலையும் அறிவும் செலுத்தினார்களேயானால் அவர்களுக்கு வியாதி வரவொட்டாமல் தடுக்கமுடியும்.

தாய்மார்கள் சுகதேகமாயிருப்பது அவசியமாகும். தாய்மார்கள் புஷ்டியாயிருந்து முதல் ஒன்பது மாதங்கள் வரையில் பால்கொடுத்தால் அப்படிப் பால் குடித்து வளரும் குழந்தை வயிற்றுப்போக்கு இன்னும் இரைப்பை சம்பந்தமான வியாதிகளுக்கு ஆளாகாமலிருக்கும். பிரிட்டிஷ் ஐல்லில் குழந்தை பிறந்து ஒரு வருஷமாவதற்குள் நூற்றுக்கு 16 குழந்தைகள் இறந்துபோகின்றன. அப்படி இறக்கும் குழந்தைகளில் பெரும்பாகம் தாய்ப்பாலைக் குடிக்காதவைகளாகும். இந்தியாவிலோ பிறந்த குழந்தைகளில் நூற்றுக்கு 33 குழந்தைகள் ஒரு வயதாவதற்குள் இறக்கின்றன. இதற்குப் பல காரணங்களுண்டு. ஆனால் முக்கிய காரணம் தாய்மார்கள் துர்ப்பலமாகவும் தேக அசௌகரியமாகவுமிருப்பதால், இவர்களுடைய பாலும் சாரமற்றதாயிருக்கிறது. ஆனதுபற்றி தாய்மார்கள் தங்கள் பாலைத் தவிர குழந்தைக்குத் தகாத உணவுகளைக் கொடுக்கவேண்டியிருக்கிறார்கள்.

துர்ப்பலமாயுள்ள தாயின் பால் பசும்பாலைக்காட்டிலும் குழந்தைக்குக் கெடுதியானதாகும். ஒவ்வொரு தாய்மாரும் தங்களுடைய பால் நல்லதாக விருக்கிறதாவென்று நிச்சயம் செய்துகொள்ளவேண்டும். குழந்தைப் பிரஸவமாவதற்குள் தாய்மார்கள் திடசரீர தேகத்தை உடைத்தாயிருக்கக் கவனித்துக்கொள்ளவேண்டும். தாய்மார்கள் தேக சுகமாயிருப்பதற்கு நல்ல காற்று சுவாஸிக்கவேண்டும். நல்ல புஷ்டியான ஆகாரமும் உண்ணவேண்டும்.

சில தாய்மார்கள் குழந்தை அழுதால் உடனே அது பசிநிமித்தம் அழுகிறதென்று எண்ணி அழ ஆரம்பித்தவுடன் ஆகாரம் கொடுக்கிறார்கள். இது பிசகு. குழந்தை அழுவதற்கு இன்னும் பல காரணங்களிருக்கலாம். அவைகளினால் குழந்தை அழலாம். தாய்மார்கள் குழந்தை அழுவதற்கு என்ன காரணமென்று கண்டுபிடிக்கவேண்டும். வேறு ஒரு காரணமில்லாவிட்டால் குழந்தை பசியினால் அழுகிறதென்று தீர்மானிக்கவேண்டும். தாய்மார்கள் காலாகாலத்தில் குழந்தைகளுக்கு ஆகாரம் கொடுத்துப் பழக்கவேண்டும். இவ்வாறு தாய்மார்கள் பழக்கம்செய்து வந்தார்களேயானால் பசிவேளை வருவதற்குமுன்பு குழந்தைகள் அழுதபோதே யானால் அப்போது தாய்ப்பால் அக்குழந்தைகளுக்குப் போதவில்லையென்று அறிந்துகொள்ளவேண்டும். பால் நிரம்ப இருக்கலாம். ஆனால் பாலின் சாரம் குறைவாகவிருக்கும். உடனே தாய்மார்கள் தங்கள் பாலை அபிவிருத்திசெய்யவேண்டி நல்ல புஷ்டியான ஆகாரத்தை உட்கொள்ளவேண்டும். சில குறித்த நேரங்களில் தாங்கள் கொடுக்கும் பால் குழந்தைகளுக்குப் புஷ்டியைக் கொடுக்கிறதாவென்று பார்க்க, தாய்மார்கள் குழந்தைகளை நிறுத்துப்பார்க்கலாம். குழந்தைகளின் எடை அதிகமாகாமலிருந்து வேறு விதங்களில் குழந்தை அசௌகரியமாயில்லாவிட்டாலும் தாய்மார்கள் ஒரு வைத்தியரை அழைத்துக் குழந்தைகளைக் காண்பிக்கவேண்டும்.

கீழ்கண்ட சந்தர்ப்பங்களில், தாய்மார்கள் குழந்தைகளுக்குப் பால் கொடுக்கக்கூடாது. (1) தாய்மார்கள் க்ஷய ரோகத்தினால் வருந்தினாலாவது அல்லது கண்டமாலையினால் வருந்தினாலாவது, (2) இதர அபாயமான வியாதியால் வருந்தினாலாவது, (3) மிகவும் துர்ப்பலமாயிருந்தாலாவது, (4) சில காலம் முதுகு வலியால் வருந்தினாலாவது அல்லது களைப்பினாலும் அலுப்பினாலும் வருந்தினாலாவது, தாய்மார்கள் குழந்தைகளுக்குப் பால் கொடுக்கக்கூடாது.

ஏற்கனவே குறிப்பிட்டபடி தாய்மார்கள் தேகம் புஷ்டியாகவிருப்பது குழந்தைகளுக்கு நல்லதாகும். அவர்கள் ஒன்பதுமாத காலம் குழந்தைகளுக்கு தாய்ப்பால் கொடுக்கவேண்டும். ஏதோ துர் அதிர்ஷ்டத்தால் எல்லாக் குழந்தைகளுக்கும் சுகதேகமுள்ள தாய்மார்களிருப்பதில்லை. இதற்குப்பிறகு நாமென்ன செய்யவேண்டும்? நாம் இரண்டிலொன்று செய்யலாம். ஒரு தாதியை ஏற்படுத்திக்கொள்ளலாம். புட்டிப்பால் கொடுக்கலாம்.

இக்காலத்தில் குழந்தைகளுக்குப் புட்டியினின்று ஆகாரம் கொடுப்பதை நாம் அறிந்திருக்கிறோம். ஆகையினாலே, நம் பெரியோர்கள் செய்து வந்ததுபோல், நாம் தாதிகளைக் "குழந்தைகளை வளர்க்க ஏற்படுத்துவது கிடையாது. ஆனால் துர்ப்பலமுள்ள குழந்தைகளுக்கும் அகாலத்தில் பிறக்கும் குழந்தைகளுக்கும் சில சமயங்களில் ஓர் ஆயாவை ஏற்படுத்துகிறோம்."

Publicity Bureau.

லட்சத்து நாற்பத்திநாலாயிரம் பேர்

ONE HUNDREAD AND FORTY FOUR THOUSAND.

இந்த இலக்கம் வேதாகமத்தில் யாவரும் கவனிக்கத்தக்கதான ஓர் விசேஷித்த இலக்கமாயிருக்கிறது. இதைப்பற்றி முதலாவது, வெளி. 7: 4-ல் "முத்திரை போடப்பட்டவர்களின் தொகையைச் சொல்லக்கேட்டேன்; இஸ்ரவேல் புத்திரருடைய சகல கோத்திரங்களிலும் முத்திரை போடப்பட்டவர்கள் இலட்சத்து நாற்பத்துநாலாயிரம் பேர்." என்று வாசிக்கிறோம். பின்பு வெளி. 14: 1-5 ல் இந்த இலக்கத்தைப்பற்றி, அடியிற் காணும்வாறு சொல்லியிருக்கிறது. "பின்பு, நான் பார்த்தபோது, இதோ சீயோன் மலையின்மேல் ஆட்டுக்குட்டியானவரையும், அவரோடேகூட அவருடைய பிதாவின் நாமம் தங்கள் நெற்றிகளில் எழுதப்பட்டிருந்த இலட்சத்து நாற்பத்து நாலாயிரம்பேரையும் நிற்கக்கண்டேன். அல்லாமலும், பெருவெள்ளத்தின் இரைச்சலைப்போலவும், பலத்த இடி முழக்கம்போலவும், ஒரு சத்தம் வானத்திலிருந்து உண்டாகக் கேட்டேன்; நான் கேட்ட சத்தம் சுரமண்டலக்காரர் தங்கள் சுரமண்டலங்களை வாசிக்கிற ஓசையைப்போலிருந்தது. அவர்கள் சிங்காசனத்திற்கு முன்பாகவும், நான்கு ஜீவன்களுக்கு முன்பாகவும், மூப்பர்களுக்கு முன்பாகவும் புதுப்பாட்டைப் பாடினார்கள்; அந்தப் பாட்டுப் பூமியிலிருந்து மீட்டுக்கொள்ளப்பட்ட இலட்சத்து நாற்பத்துநாலாயிரம்பேரேயல்லாமல், வேறொருவரும் கற்றுக்கொள்ளக்கூடாதிருந்தது. ஸ்திரியால் தங்களைக் கறைப்படுத்தாதவர்கள் இவர்களே; கற்புள்ளவர்கள் இவர்களே; ஆட்டுக்குட்டியானவர் எங்கே போனாலும் அவரைப் பின்பற்றுகிறவர்கள் இவர்களே; இவர்கள் மனுஷரிலிருந்து தேவனுக்கும ஆட்டுக்குட்டியானவருக்கும் முதற் பலனாக மீட்டுக்கொள்ளப்பட்டவர்கள். இவர்களுடைய வாயில் கபடம் காணப்படவில்லை; இவர்கள் தேவனுடைய சிங்காசனத்திற்குமுன்பாக மாசில்லாதவர்களாயிருக்கிறார்கள்." இந்த இரண்டு இடத்திலும் இந்த இலக்கம் ஒரே கூட்டத்தாரைத்தான் குறிக்கிறதாயிருக்கிறது. இவர்கள் கிறிஸ்துவில் விசுவாசமுள்ளவர்களா? ஆம்! அப்படித்தான். ஏனென்றால் ஆட்டுக்குட்டியானவர் எங்கேபோனாலும் அவரைப் பின்பற்றுகிறவர்கள் இவர்களே. இவர்கள் நெற்றியில் பிதாவின் நாமம் எழுதப்பட்டிருக்கிறது. இவர்கள் வெளி. 18: 4-ல் "என் பிள்ளைகளே நீங்கள் அவளுடைய பாவங்களுக்கு உட்படாமலும், அவளுக்குநேரிடும் வாதைகளில் அகப்படாமலும் இருக்கும்படிக்கு அவளை விட்டு வெளியே வாருங்கள்." என்று சொல்லப்பட்டிருக்கிற தூதைக் கேட்டு, மனுஷருக்குப் பிரியமும் தேவனுக்கு விரோதமுமான சகல மாறுபாடான உபதேசங்களாலும் தங்களைக் கறைப்படுத்தாமல், சுத்த உபதேசங்களுக்குச் செவி கொடுத்தும், கீழ்ப்படிந்தும், ஆதி பரிசுத்தவான்களுடைய மாசற்ற விசுவாசத்தை யுடையவர்களாயும் காணப்படுகிறார்கள்—இவர்கள் ஆவியின்படி மெய்யான இஸ்ரவேலாக உலகத்தின் கடைசிச் சந்ததியிலிருந்து முத்திரை போடப்பட்டவர்கள் என்று அழைக்கப்பட்டிருக்கிறார்கள். இவர்கள் இப்பூமியிலிருந்து, மீட்டுக்கொள்ளப்படுகிற திரளான ஜனங்களுக்குள் தேவனுக்கும் ஆட்டுக்குட்டியானவருக்கும் முதற் பலனாக மீட்டுக்கொள்ளப்படுகிற ஓர் விசேஷித்த கூட்டத்தார்.

இன்னும் இவர்களைப்பற்றிச் சொல்லியிருக்கிற நற்சாட்சியையும் அவர்களுக்குக் கொடுக்கப்படும் விசேஷித்த சிலாக்கியங்களையும் சற்றுக் கவனிப்போமாக. "அன்றியும், அக்கினி கலந்த கண்ணாடிக் கடல்போன்ற ஒரு கடலையும், மிருகத்திற்கும் அதின் சொரூபத்திற்கும், அதின் முத்திரைக்கும் அதின் நாமத்தின் இலக்கத்திற்கும் உள்ளாகாமல் ஜெயங்கொண்டவர்கள் தேவ சுரமண்டலங்களைப் பிடித்துக்கொண்டு, அந்தக் கண்ணாடிக் கடலருகே நிற்கிறதையும் கண்டேன். அவர்கள் தேவனுடைய ஊழியக்காரனாகிய மோசேயின் பாட்டையும் ஆட்டுக்குட்டியானவரின் பாட்டையும் பாடி சர்வ வல்லமையுள்ள தேவனாகிய கர்த்தாவே, தேவரீருடைய கிரியைகள் மகத்துவமும் ஆச்சரியமுமானவைகள்; பரிசுத்தவான்களின் ராஜாவே, தேவரீருடைய வழிகள் நீதியும் சத்தியமுமுள்ளவைகள். கர்த்தாவே யார் உமக்குப் பயப்படாமலும், உமது நாமத்தை மகிமைப்படுத்தாமலும், இருக்கலாம்? தேவரீர் ஒருவரே பரிசுத்தர், எல்லா ஜாதிகளும் வந்து உமக்கு முன்பாக தொழுதுகொள்வார்கள்; உம்முடைய நீதியான செயல்கள் வெளியரங்கமாயின என்றார்கள்." வெளி. 15: 2-4. இவர்கள் மோசேயின் பாட்டையும ஆட்டுக்குட்டியானவரின் பாட்டையும் பாடுகிறதாக வாசிக்கிறோம். யாத்திராகமம் 15-ம் அதிகாரத்தைச் சிந்தித்துப் பார்ப்போமானால் மோசேயின் பாட்டு அவனுடைய அனுபோகத்தையும், விடுதலையையும் காட்டுகிறதாயிருக்கிறது. அப்படியானால் இவர்களும் வேறு ஒருவரும் அடையாத ஓர் விசேஷித்த அனுபோகத்தை அடைந்து, இதைப பாடுங் காலத்தில் பெரிய விடுதலையை அனுபவிக்கிறவர்களாகக் காணப்படுகிறார்கள்.

ஈ. டி. தா.

நிகழ்கால சத்தியம்

வேத சன்மார்க்க சுகாதார விஷயங்களில் தற்கால அறிவுக்கொத்தபடி மனிதர் அபி விருத்தியடைவதற்கென்று பிரசுரமாகும் ஓர் பத்திரிகை.

மதராஸ் மேமீ, 1921.

இப்பத்திரிகை, பெங்களூரிலிருக்கும், எஸ். டி. ஏ. பப்ளிஷிங்கவுஸ்காக, பட்டணத்தில் வெப்பேரி என்னுமிடத்திலுள்ள அல்பீனியன் அச்சாபீசில் அச்சடிக்கப் பட்டு வருகிறது.

பத்திராதிபர் பாஸ்றர், ஜீ. ஜீ. லேளரி.
உதவி „ „ ஈ. டி. தாமஸ்.
மானேஜர், எல். சி. ஷேப்பர்டு, பி. ஏ.

	ரூ.	அ.	ப.
தனிப்பிரதி ஒன்றுக்கு ...	0	1	6
வருஷ சந்தா, தபாற் கூலி உள்பட ...	1	0	0
சிங்கப்பூர் பினங்கு முதலிய வெளி ஊர்களுக்கு தனிப் பிரதி ஒன்றுக்கு ...	0	2	0
வருஷசந்தா தபாற்கூலி உள்பட ...	1	4	0

முராரி என்றவரும் கந்தன் என்ற வரும் "சாமார்" என்ற வகுப்பைச் சேர்ந்தவர்கள். இவர்கள் ஆக்ராவாசிகள். ஜனக் கணித மெடுக்க வந்த ஒருவரை இவர்கள் குத்திக் கொன்றுவிட்டதாகக் குற்றஞ் சாட்டப் பட்டு மாஜிஸ்டிரேட் முன்னால் விசாரணைக் குக் கொண்டுவரப்பட்டனர். ஜனக்கணித மெடுக்க வந்தவர் இரண்டு எதிரிகளையும் "சாமார்" வகுப்பினர் என்று எழுதியதாக வும் அதற்காக முராரி என்றவர் அவரைக் குத்திவிட்டதாவும் குத்துப்பட்டவரை கந்தன் என்ற எதிரி தாங்கியதாகவும் பிராஸிகூஷன் தரப்பில் சொல்லப்படுகின்றது.

சமாசாரக் குறிப்புகள்.

காலேஜைக் கொளுத்த முயற்சித்ததாக.

கட்டாக், எப்ரல் 16—

நேற்று விடியற்காலை ராவன்ஷா காலேஜ் கட்டிடத்திற் கருகில் 17-வயதுள்ள ஒரு மாணவர் தீப்பெட்டியுடனும் மண்ணெண் ணெய் புட்டியுடனும் நின்றிருக்க ஒரு வேலைக்காரன் கண்டான். கூச்சலிடவே பலர் கூடிவிட்டனர். மற்ற மாணவர்கள், இம்மாணவர் சமீபத்தில் நடந்த வேலை நிறுத்தத்தில் சம்பந்தப்பட்டதால் காலேஜ் தலைவரால் அபராதம் விதிக்கப்பட்டாரென் றும் அதற்காக. அவர் காலேஜ் ஆபீஸைக் கொளுத்திவிட விரும்பினாரென்றும் கூறி னார்கள். இவர் போலீசார் வசம் ஒப்புவிக் கப் பட்டனர் பாட்னாவிலுள்ள பிரபல உத் தியோகஸ்தரின் குமாரர் இவர். இரண்டு நாளைக்குமுன் டிப்டி இன்ஸ்பெக்டரின் உத்தியோக சாலையும் கொளுத்தப்பட்டது.

ஆப்கானிஸ்தானத்திற்கும் பிரிட்டனுக் கும் மீண்டும் சமாதான உடன்படிக்கை யொன்றை யேற்பாடு செய்துவைக்கவேண் டியதை யுத்தேசித்து பேச்சு வார்த்தைகள் நடந்துவருவதாகவும், ஆப்கன் அமிருக்குப் பணமுடை யேற்பட்டிருப்பதால் பிரிட்டி ஷார் முன்போல் மறுபடியும் வருஷ வாரிக் கப்பம் கட்டிவரவேண்டுமென்று அமீர் கேட்கலாமென்றும் ஒரு ஸ்டேட்ஸ்மென் தந்தி தெரிவிக்கிறது.

எம்டன் தளகர்த்தர் வான் முல்லர் இன்னும் உயிரோடுதான் இருக்கிறர்.

பெர்லின், எப்ரல் 14—

வான் மல்லர் சுட்டுக் கொல்லப்பட்ட தாகச் சொல்லப்பட்டது பிசகென்றும், அவர் இன்னம் தமது யுத்த அனுபவத்தைப்பற் றிப் பிரஸங்கம் செய்து வருவதாகவும் ஒரு தந்தி தெரிவிக்கிறது.

நிகழ்கால சத்தியம்.

Vol. X. மதராஸ்:—ஜூன்மீ, 1921. No. 6.

பத்திராதிபர் குறிப்புகள்.

நமது பத்திரிகையில் அடிக்கடி ஓய்வுநாளின் முக்கியத்தைப்பற்றியும், அதின் ஆசரிப் பைப்பற்றியும் பேசும்போது அநேகர் இது அவ்வளவு அவசியமாவென்று பற்பலவகை யாக தாற்பரிக்கிறதுண்டு. ஆனால் இதின் விசேஷத்தை நம்மைப்போல் உணர்ந்தவர் களாய் 1921-ம் வருஷம், மார்ச்சுமாத ஐக்கிய சபைத்தூதிகையில் பத்திராதிபரின் குறிப்பு களின் கீழ் பிரசுரித்திருப்பவைகளை இங்கு எடுத்து வரைகிறோம். யாவரும் அதை வெகு நுட்பமாய் கவனிப்பார்களென்று நம்புகிறோம்.

"ஓய்வுநாள் ஆசரிப்பு—கிறிஸ்தவர்களுக்கும் இதர மதஸ்தருக்கும் புறம்பாகக் காணப் படக்கூடிய ஓர் வித்தியாசம் ஓய்வுநாளை ஆசரிப்பதில் காணப்படும். கர்த்தர் பழைய ஏற்பாட்டில் ஓய்வுநாளை ஆசரிப்பவர்க்கு வரும் ஆசீர்வாதங்களைக்குறித்து அதிகமாய்ச் சொல்லியிருக்கிறார். நியாயப்பிரமாணத்தை அழிக்கவல்ல நிறைவேற்றவந்த கிறிஸ்து வானவரும் மற்றப்பிரமாணங்களுக்கு நூதனமானதும், ஆழ்ந்ததுமான கருத்துகளைக் கொடுத்ததுபோலவே ஓய்வுநாள் ஆசரிப்புக்கும் கொடுத்திருக்கிறார். சடங்காசார ஆசரிப் பினால் ஓய்வுநாள் பிரமாணத்தின் உள்ளான சக்தியை அபாவனை செய்தவர்களை ஆண்டவர் கண்டித்தபோதிலும் ஓய்வுநாளின் முக்கியத்தை உணர்ந்தவராகவும், அநுசரித்தவராகவு மிருந்தார். அப்படியிருக்க இக்காலத்திலோ நமது சபைகளில் ஓய்வுநாள் சரியானபடி ஆசரிக்கப்படுவதாகத் தெரியவரவில்லை. ஆராதனையில் "ஓய்வுநாளைப் பரிசுத்தமாய் ஆசரிக்க நினைப்பாயாக" என்று சொன்னபோதிலும் அதின் கருத்தை உணருவதில்லை. அந்த நாளும் மற்ற நாட்களைப்போலவே வேலைநாட்களாய்ப் போகின்றன. தங்கள் சொந்தப் பேச்சைப் பேசவும் வியாபாரங்கள் நடத்தவும், தங்கள் தொழில்களைச் செய்யவும் பரிசுத்த ஓய்வுநாளை உபயோகிக்கிறார்கள். அதைப்பற்றிப் பேசினாலோ எங்கள் சுயாதீனம் என்று சொல்வார்கள். ஒவ்வொருவருக்கும் சுயாதீனம் உண்டாயினும் அந்த சுயாதீனம் துர்க் குணத்துக்கு மூடலாகக்கூடாதென்று அப்போஸ்தலன் சொல்வதை மறக்கக்கூடாது. அதோடு பத்துக்கட்டளைகளையும் கவனிக்கும்போது இலேசாக நாம் கைக்கொண்டு இதர மதஸ்தருக்கு முன்பாக மாதிரியான ஜீவியம்செய்து காட்டக்கூடிய கட்டளை இதுதானே. அப்படியிருக்க இக்கட்டளையை கைக்கொள்ளுவதில் நாம் அற்ப சொற்பகாரியங்களை ஒறுக் கக்கூடாதாயின் வேறெவ்விதம் மற்றக்கட்டளைகளைக் கைக்கொள்ளுவோம் 5-முதல் 9 முடிய கட்டளைகளைக் கைக்கொள்ளாமல்விட்டால் மற்றவர்களாலும், சர்க்காராலும் அவ மானமும் நஷ்டமும் வரக்கூடும். இதற்குப் பயந்தே அநேகர் அவைகளை மீறுதிருக்கிறார் கள். ஆனால் ஓய்வுநாளுக்குரிய பிரமாணத்தை மீறும்போது அப்படிப்பட்ட யாதொன் றும் நடப்பதாய் தெரியவில்லை. சில சமயங்களில் சபையின் தலைவர்களே இதை மீறு

கிறார்கள் அப்படியானால் மற்றவர்களைக் கேட்பானேன்? நமது சபைகளில் ஆவிக்குரிய வளர்ச்சியில்லாதிருப்பதற்குக் காரணம் ஓய்வுநாளில் அடையக்கூடிய வல்லமையைப் பெற்றுக்கொள்ளாதிருப்பது என்று அறியலாம். ஒருவர் சொல்லுகிறபடி ஓய்வுநாளைச் சரியானபடி ஆசரிக்க அறியாதவன் வார நாளில் சோதனைக்கு முன் எவ்விதம் நிற்பான். ஆகையால் நமது ஐக்கிய சபையைச்சேர்ந்த ஒவ்வொரு சபையிலும் ஓய்வுநாள் ஆசரிப்பை முக்கியப்படுத்துவார்கள் என்று நம்புகிறோம் மற்றவர்களுக்குச் சுவிசேஷத்தைக்கொண்டு போகுமுன் நமது சபைகளை, குடும்பங்களை ஆண்டவருடைய சித்தத்திற்கிசைய சீர்திருத்துவோமாக." (1921-வருஷம், மார்ச்சு-மாதம் ஐக்கிய சபைத் துதிகை).

துதிகையில் சொல்லப்பட்டிருக்கிற மேற்சொன்ன வரிகளோடு பரிசுத்த வேதாகமத்தில் புதிய ஏற்பாட்டிலும் பழைய ஏற்பாட்டிலும் ஓய்வுநாளைப்பற்றி சொல்லியிருக்கிற சில சத்தியங்களையும் இத்துடன் உரைக்கிறோம்.

"மேலும் தேவன் தம்முடைய கிரியைகளையெல்லாம் முடித்து ஏழாம்நாளிலே ஓய்ந்திருந்தார் என்று ஏழாம் நாளைக்குறித்து ஓரிடத்தில் சொல்லியிருக்கிறார்." எபி. 4: 4. "அது என்றைக்கும் எனக்கும் இஸ்ரவேல் புத்திரருக்கும் அடையாளமாயிருக்கும்; ஆறு நாளைக்குள் கர்த்தர் வானத்தையும் பூமியையும் உண்டாக்கி, ஏழாம்நாளில் ஓய்ந்திருந்து பூரித்தார் என்றார்." யாத். 31: 17.

"ஓய்வுநாளைப் பரிசுத்தமாய் ஆசரிக்க நினைப்பாயாக; ஆறு நாளும் நீ வேலைசெய்து, உன் கிரியைகளையெல்லாம் நடப்பிப்பாயாக; ஏழாம் நாளோ உன்தேவனாகிய கர்த்தருடைய ஓய்வுநாள்; அதிலே நீயானாலும், உன் குமாரனானாலும், உன் குமாரத்தியானாலும், உன் வேலைக்காரனானாலும், உன் வேலைக்காரியானாலும், உன் மிருகஜீவனானாலும், உன் வாசல்களிலிருக்கிற அந்நியனானாலும் யாதொரு வேலையும் செய்யவேண்டாம். கர்த்தர் ஆறு நாளைக்குள்ளே வானத்தையும் பூமியையும் சமுத்திரத்தையும் அவைகளிலுள்ள எல்லாவற்றையும் உண்டாக்கி, ஏழாம்நாளிலே ஓய்ந்திருந்தார்; ஆகையால் கர்த்தர் ஓய்வுநாளை ஆசீர்வதித்து அதைப் பரிசுத்தமாக்கினார்." யாத் 20: 8—11.

"என் பரிசுத்த நாளாகிய ஓய்வுநாளிலே உனக்கு இஷ்டமானதைச் செய்யாதபடி, உன் காலை விலக்கி, உன் வழிகளின்படி நடவாமலும், உனக்கு இஷ்டமானதைச் செய்யாமலும், உன் சொந்தப்பேச்சைப் பேசாமலிருந்து, ஓய்வுநாளை மனமகிழ்ச்சியின் நாளென்றும்; கர்த்தருடைய பரிசுத்த நாளை மகிமையுள்ள நாளென்றும் சொல்லி, அதை மகிமையாக எண்ணுவாயானால், அப்பொழுது கர்த்தரில் மனமகிழ்ச்சியாயிருப்பாய்; பூமியின் உயர்ந்த இடங்களில் உன்னை ஏறியிருக்கும்படி பண்ணி, உன் தகப்பனாகிய யாக்கோபுடைய சுதந்தரத்தால் உன்னைப் போஷிப்பேன். கர்த்தருடைய வாய் இதைச் சொல்லிற்று." ஏசா. 58: 13, 14.

"என் ஓய்வுநாட்களைப் பரிசுத்தமாக்குங்கள்! நான் உங்கள் தேவனாகிய கர்த்தர் என்று நீங்கள் அறியும்படிக்கு அவைகள் எனக்கும் உங்களுக்கும் அடையாளமாயிருக்கும் என்றேன்." எசே. 20: 20.

ஈ. டி. தா.

பிறகென் செய்வாய்?

(தொடர்ச்சி)

இன்னும் சிலர் கங்கை, காவேரி முதலிய புண்ணிய நதிகளில் ஸ்நானம் பண்ணினால் பாவம் தீர்ந்துபோகுமென்று எண்ணுகிறார்கள். அதுவும் ஓர் சரியான காரியமேயன்று. நதிகளில் ஸ்நானம் பண்ணினால் பாவம் தீருமென்றெண்ணி புறப்பட்டுக்கொண்டிருந்த என் சிநேகிதனைக் கண்டேன். அப்படிச் செய்வதினால் யாதொரு பிரயோஜனமுமிராதென்று வற்புறுத்தியும் அநேக வேதங்களிலுள்ளவைகளை எடுத்துக்காட்டியும் ஒரே பிடிவாதமாயிருந்தார். அவர் புறப்படும்போது பக்கத்தில் கிடந்த ஓர் பேக்குமுட்டிக்காயை எடுத்து 'என் சிநேகிதனே! நீ நதிகளில் ஸ்நானம் பண்ணும்போது தயவுசெய்து இந்தக் காயையும் அந்த ஜலத்தில் போட்டு கசப்பு நீங்க கழுவிக்கொண்டு வா' வென, அவர் சிரித்துக்கொண்டு, தண்ணீரில் போட்டுக் கழுவினால் காயின் கசப்பு போகுமாவென்று என்னைக் கேட்டார். "சகோதரனே காயிலுள்ள கசப்பு நீங்காவிட்டால் உன் இருதயத்துக்குள்ளிருக்கிற பாவம் எப்படி நீங்கும்" என்று அவரைக் கேட்க, அவர் பிரயாணத்தை நிறுத்தி உண்மை நூலை ஆராய்ந்து நல்வழிப்பட்டார். உனக்கும் அவ்விதமான எண்ணங்களுண்டா? இருந்தால் என் சிநேகிதனைப்போல் யோசி, பின்னால் அவைகளில் பிரயோஜனமொன்றுமில்லை என்று கண்டுகொள்வாய். என் நண்பனே! புண்ணிய ஸ்தலங்களுக்குப் போவதினாலும், நதிகளில் நீராடுவதினாலும் நம்முடைய பாவங்கள் தீர்ந்துபோகிறதில்லை. உன் பாவங்களை நீக்கி மோக்ஷம்சேர ஆசையா? ஆசையானால், எங்கே போனால் பாவம் தீருமென்று உனக்குக் காண்பிக்கிறேன். என் பாவங்களை போக்கிக்கொள்ள வகை காணாதிருக்கும்போது ஒருவர் எனக்கு ஒரு வழியைக் காண்பித்தார். அவ்வழியே போய் என் பாவங்களை நீக்கிக்கொண்டேன். அந்த இடத்தை உனக்கும் காண்பிக்கிறேன். வா அவர் யாரென்று கேட்கிறாயா? அவர் தான் நம்மை யுண்டாக்கி பராமரித்து வருகிறவர். அவர் தான் இயேசுக்கிறிஸ்து, ஓ! அவர் கிறிஸ்தவர்களின் தெய்வம் என்கிறாயோ? ஐயோ, எத்தனை தெய்வங்களுண்டு? அநேக தெய்வங்களுண்டு என்கிற மாதிரியாய்ப் பேசுகிறாயே. உன்னைப்பெற்ற தாய் எத்தனை பேர் என்று கேட்டால் ஒருத்தி என்று தவறாது சொல்வாய், அப்படியே நம்மையுண்டாக்கினவர் ஒருவரே. அந்த ஒரே தெய்வமாகிய மெய் தெய்வம் எங்கே? யார் அவரை தொழுதுகொண்டு வருகிறார்களென்று பார்ப்போம்.

மெய்த்தேவனுடைய மார்க்கம் நிஜமாகவே வளரவேண்டும். ஏனென்றால் பலமுள்ள ராஜன் என்றறிவது அவனுடைய ராஜ்யம் எவ்வளவு தூரம் பரவியிருக்கிறதென்பதைக் கொண்டுதான். அப்படியே நாம் பார்க்கிறபடி கிறிஸ்துவின் ராஜ்யம் உலகமெங்கு மிருக்கிறது; பலத்த ராஜாக்களும் அநேகரும் கிறிஸ்தவர்களே. மற்ற மார்க்கங்கள் கொஞ்சம் கொஞ்சமாய் க்ஷீணதசை யடைந்து வருகிறதைக் கண்ணாரக்கண்டு வருகிறோம். கிறிஸ்துவின் அன்பான வார்த்தைகளையும் அன்பின் போதகங்களையும் கேட்டோர் அல்லலை விட்டு நல்வழிப்பட்டனர். இதை வாசிக்கும் இஷ்டனே! உனக்கும் அவ்விதமான நல்ல தேவனையடைய ஆசையாயிருக்குமென்று நினைக்கிறேன். ஆனால் கிறிஸ்துவாயிருப்பதினால் கொஞ்சம் யோசிக்கிறாயோ.

இயேசு கிறிஸ்து என்ற வார்த்தைக்கு, பாவிகளை ஈடேற்றும்படியாக அபிஷேகம் பண்ணப்பட்டவர் என்பது பொருள். அஃதன்றி அந்நாமம் கசப்புமல்ல, கைப்புமல்ல, விழுங்கக்கூடாத கடைப்பாறையுமல்ல. அதை ருசித்தவராகிய ஒரு பக்தன் 'ஆ! உம்முடைய நாமம் தேனிலும் மதுரம்' என்கிறார். அவருடைய பெயரைக் கேட்டவுடனே பிசாசுகளும் நடுங்குகின்றன. அவர் அதிக அன்பானவர், பாவிகளை இரக்ஷிக்க வந்து அதன்பொருட்டு பலியானார். "வருத்தப்பட்டு பாரஞ் சுமக்கிறவர்களே! என்னிடத்தில்

வாருங்கள். நான் உங்களுக்கு இளைப்பாறுதல் தருவேன்" என்கிறார். "நானே வழியும், சத்தியமும், ஜீவனுமாயிருக்கிறேன். என்னையல்லாமல் நித்திய ராஜ்யத்தில் பிரவேசிக்க முடியாது" என்கிறார். உன் பாவங்களைப் போக்கும் பலியாகிய அவரண்டை வந்து அவர் மூலமாய் நித்திய ஜீவனை அடைய ஆசையா? அப்படியானால் கிறிஸ்தவர்களுடைய வேதத்தை வாங்கி வாசித்துப் பார், அல்லது கிறிஸ்தவர்களிடத்தில் கேட்டுப் பார். கேட்காவிட்டால் சத்திய வேதத்தை வாசிக்காவிட்டால் உனக்கு உலகோர் போற்றும் சத்திய மார்க்கத்தைப்பற்றி எப்படித் தெரியும். ஒருவன் அதிகாலையில் சூரியன் தோன்று முன்னே வானத்தின் தோன்றும் ஜோதி மயமான மேகங்களைப் பார்க்கச்சொல்லுகிறான். நீ மேற்கே திரும்பிக்கொண்டு எங்கே அது அழகாயில்லை என்கிறதோடு அவனைக் கேவலமாய்ப் பேசத் துணிகிறாய். அவன் உன்னை கிழக்கே பார்க்கச் சொல்லுகிறான். நீ மாட்டேன் என்கிறாய் அது உன்மேல் தப்பிதமாகும். மற்றொருவன் இதோ இப்பூ வெகு வாசனையாயிருக்கிறது. இதை முகர்ந்து பார் என்கிறான். நீ மூக்கை மூடிக்கொண்டு எங்கே வாசனை தெரியவில்லை என்கிறாய். மூக்கை திறந்து பார் என்கிறான். நீ மாட்டேன் என்கிறாய். பூவில் வாசனை யில்லாதது நிஜமா? இல்லையே. பின்னை என்ன; செய்திருந்தால் வாசனையை முகர்ந்திருப்பாய்? மூக்கை திரந்து பார்த்திருந்தாலல்லவா? சத்திய வேதத்தை வாங்கி வாசித்துப்பார். அப்பொழுது அதின் உண்மையையும் மேன்மையையும் கண்டுகொள்வாய். அதைப் பார்த்த ஒருவராவது கண்டுகொள்ளாமல் போனதில்லை. இதோ உலசத்தில் வெகுவாய் கெட்டுப்போனவர்களை சத்திய வேதம் சீர்திருத்தியிருக்கிறது. அதில் சொல்லப்பட்டிருக்கிறவைகளெல்லாம் உண்மையானவைகள். வேத நாயகர் சொல்லிப்போனவைகளெல்லாம் நிறைவேறின. கொஞ்சக்காலத்துக்குள் திரும்ப உலகத்துக்கு வந்து தம்மைப் பின்பற்றின பிள்ளைகளுக்கு சந்தோஷத்தையருளப்போகிறார். இப்பொழுது அவரை அசட்டை பண்ணினவர்கள் அப்பொழுது புலம்பப்போகிறார்கள். கடைசியாக என் பிரிய சகோதரனே உனக்கு எந்தக் கூட்டத்தில் சேர இஷ்டம்? என்ற கேள்வியைக் கேட்கிறேன். சந்தோஷத்தை அனுபவிக்கும் கூட்டத்தோடா? நல்லது, இப்பொழுதே ஆயத்தப்படு.

பிறகொன்றும் செய்ய முடியாது.

சாத்தான், கிறிஸ்து, மனிதன்.

(SATAN, CHRIST, MAN)

"பின்னும் கர்த்தர், சீமோனே, சீமோனே, இதோ, கோதுமையைச் சுளகினால் புடைக்கிறதுபோலச் சாத்தான் உங்களைப் புடைக்கிறதற்கு உத்தரவு கேட்டுக்கொண்டான், நானோ உன் விசுவாசம் ஒழிந்துபோகாதபடிக்கு உனக்காக வேண்டிக்கொண்டேன்; நீ குணப்பட்ட பின்பு உன் சகோதரரை ஸ்திரப்படுத்து என்றார்." லூக். 22: 31, 32.

இந்த வசனத்தில் சாத்தானையும் கிறிஸ்துவையும் பேதுருவையும்பற்றி எழுதியிருக்கிறது. சாத்தான் பேதுருவைச் சோதிக்க விரும்பினான். பேதுரு சாத்தானால் சோதிக்கப்படுவது கிறிஸ்துவுக்குப் பிரியமாயிருக்கவில்லை. சாத்தான் பேதுருவை சோதித்து அழித்துப்போட யோசித்தான், ஆனால் கிறிஸ்து அவனை இரட்சிக்க விரும்பினார். கிறிஸ்து ஒரு மனிதனை இரட்சிக்கப் பார்க்கிறார். சாத்தானோ ஒருவனை கெடுக்கப் பார்க்கிறான். கிறிஸ்து ஆதிமுதல் மனிதனை பகைஞனின் வல்லமையிலிருந்து இரட்சிக்கப் பார்க்கிறார். சாத்தான் மனிதனை கிறிஸ்துவிடமிருந்து பறித்துக்கொள்ள வகை பார்க்கிறான்.

ஆதிமுதற்கொண்டு சாத்தான் கிறிஸ்துவுக்கு சத்துருவாயிருந்து தன்னால் கூடியமட்டும், கிறிஸ்துவின் வேலையை அவமாக்கப் பார்க்கிறான். சாத்தான் இப்பூமிக்கு தள்ளப்படாத்தற்குமுன் பரலோகத்திலிருந்தபோது அவன் கிறிஸ்துவுக்கு சத்துருவாயிருந்தான். அவன் கிறிஸ்துவுக்கு விரோதமாக யுத்தம் செய்தானென்று வேதத்தில் வாசிக்கிறோம். "வானத்திலே யுத்த முண்டாயிற்று; மிகாவேலும் அவனைச்சேர்ந்த தூதர்களும் வலுசர்ப்பத்தோடே யுத்தம் பண்ணினார்கள்; வலு சர்ப்பமும் அதைச்சேர்ந்த தூதரும் யுத்தம் பண்ணியும் ஜெயங் கொள்ளவில்லை. வானத்தில் அவர்கள் இருந்த இடமும் காணப்படாமற்போயிற்று. உலக மனைத்தையும் மோசம் போக்குகிற பிசாசு என்றும் சாத்தான் என்றும் சொல்லப்பட்ட பழைய பாம்பாகிய பெரிய வலு சர்ப்பம் தள்ளப்பட்டது; அது பூமியிலே விழத்தள்ளப்பட்டது, அதனோடேகூட அதைச்சேர்ந்த தூதரும் தள்ளப்பட்டார்கள்." வெளி. 12: 7-9.

இந்த யுத்தம் பரலோகத்தில் நடந்த பிறகு சாத்தானும் அதன் தூதர்களும் இப்பூமிக்குத் தள்ளப்பட்டார்கள். சாத்தான் அப்பொழுதுதான் சிருஷ்டிக்கப்பட்ட இந்த உலகத்திலிருந்த ஆதித்தாய் தகப்பன்மாரை சோதிக்க ஆரம்பித்தான். சாத்தான்தான் பூமிக்கு தள்ளப்பட்டதை அறிந்து பூமியில் தேவன் செய்யும் வேலையை கவிழ்த்துப்போட ஆரம்பித்தான். அப்பொழுது அவன் ஏதேனென்னும் தோட்டத்திற்குப்போய் ஆதாமையும் ஏவாளையும் வஞ்சித்து அவர்களைப் பாவத்தில் விழப்பண்ணினான். ஆதி. 3: 4, 5. ஒருவனுடைய கீழ்ப்படியாமையினாலே பாவமும் பாவத்தின் பலனாக வியாதி வருத்தம் மரணமும் இப்பூமிக்கு வந்தது. சாத்தான் இவ்வுலகத்தில் ஆதியில் செய்த கிரியையின் பலனை நாம் நாடோறும் பார்க்கிறோம். சாத்தான் தள்ளப்பட்டது முதல் இதுமட்டும் தேவனுக்கும் அவருடைய ஜனங்களுக்கும் விரோதமாகவே கிரியை செய்து வருகிறான்.

அவன் மனிதனைப் பாவத்தில் விழப்பண்ணின பிற்பாடு தன் வேலையில் தளர்ச்சியடையாமல் யாவரும் வஞ்சிக்கப்பட்டு தேவனை விட்டு வழி தப்பிப்போகும் வரைக்கும் வேலை செய்தான். அபபொழுது தேவன் உலசத்தை ஜலப்பிரளயத்தினால் அழித்தார். சாத்தான் தன் வேலையின் பலனைப் பார்த்து சந்தோஷப்பட்டான். பாபேல் கோபுரத்திலும் சாத்தான் தன் வேலையைச் செய்தான். குற்றமில்லாத பக்திமானான யோபை சாத்தான் தன்னாலானமட்டும் சோதித்தான். தன் சிருஷ்டிகரை மறந்து அவருக்கு விரோதமாய்ப் பாவம் செய்யும்படியாக சாத்தான் மனிதனை சீர வதை செய்வதில் பிரியப்படுகிறான் என்று யோபின் திருஷ்டாந்தத்தினால் தெளிவாகிறது. தற்காலத்தில் உலகத்தில் உண்டாகும் உபத்திரவம் எல்லாம் சாத்தானால் உண்டாகிறது. நமது உபத்திரவங்களுக்கெல்லாம் காரணனாயிருக்கிற சாத்தான் முழுவதுமாக அழிக்கப்படுவது ஒரு நல்ல காரியமல்லவா?

தேவன் இஸ்ரவேல் புத்திரரை எகிப்து தேசத்திலிருந்து கானான் தேசத்துக்கு வழி நடத்தினபோது சாத்தான் அதைத் தடுக்க தன்னால் ஆன பிரயத்தனங்களைச் செய்தான். முறுமுறுத்து அமளி பண்ணி பாவம் செய்யும்படியாக சாத்தான் ஜனங்களை ஏவினான். எகிபது தேசத்தைவிட்டுப் புறப்பட்ட 25 லக்ஷம் புருஷரில் இரண்டுபேர் மாத்திரம் வாகுத்தத்தம் பண்ணபபட்ட தேசத்திற்கு போய்ச் சேர்ந்தார்கள். இது மாத்திரமல்ல, கிறிஸ்து இவ்வுலகத்திற்கு வந்தபோது சாத்தான் அவரோடு எல்லாக்காரியத்திலும் எதிர்த்து நின்றான். அவன் முதலாவதாக யூதருக்கு ராஜாவாயிருந்த ஏரோதுவைத் தன் வசபபடுத்தி பிள்ளையாகப் பிறந்திருந்த கிறிஸ்துவை கொல்ல வகை பார்த்தான். இந்தக் காரியம் கைகூடாமற்போனபடியினால் கிறிஸ்து தேவனைப் பணியாமல் தன்னைப் பணியும்படியாக அவரை சோதித்தான். ஒரு சமயத்தில் அவன் இயேசுவை நாற்பது நாள் இரவும் பகலும் சோதித்தான் என்று வேதத்தில் வாசிக்கிறோம். இதிலும் அவன் கிறிஸ்துவை மேற்கொள்ளாததினால் யூதர்கள் கிறிஸ்துவை தேவ குமாரனல்லவென்று தள்ளிவிடும்படி

யாக பிரயாசைப்பட்டான். யூதர்கள் கிறிஸ்துவைப் புறக்கணித்து சிலுவையிலறைந்து கொன்றுபோட்டார்கள். கிறிஸ்துவின் மரணத்தில் சாத்தான் களிகூர்ந்தான். தான் அவர் மேல் வெற்றி சிறந்ததாக எண்ணினான். ஆனால் மூன்றாம் நாள் கிறிஸ்து சாத்தானையும் பாதாளத்தையும் ஜெயித்த ஜெய சீலராக உயிர்த்தெழுந்தார். அவர் தம்மைமாத்திரம் விடுவித்துக்கொள்ளவில்லை. தம்மை விசுவாசிக்கிற யாவரும் பொல்லாங்கனின் சிறையிலிருந்து தப்பித்துக்கொள்ளும் ஒரு வழியை அவர் ஆயத்தம் பண்ணினார்.

கிறிஸ்து பரத்துக்கேறின பிற்பாடு சாத்தான் ஆதித் திருச்சபையிலுள்ளவர்களை சோதிக்க ஆரம்பித்தான். இயேசுவின் சிஷர்கள் யாவரும் உபத்திரவப்படுத்தப்பட்டு கொலை யுண்ணப்பட்டார்கள். கிறிஸ்துவைப் பின்பற்றினவர்களில் ஒருவராகிய பேதுரு "தெளிந்த புத்தியுள்ளவர்களாயிருங்கள்; ஏனெனில், உங்கள் எதிராளியாகிய பிசாசானவன் கெர்ச்சிக்கிற சிங்கம்போல் எவனை விழுங்கலாமோ என்று வகைதேடிச் சுற்றித் திரிகிறான்." என்று சொல்லுகிறார். 1 பேது. 5: 8.

சாத்தானுடைய வேலை இன்னும் முடியவில்லை. அவன் ஆதியில் தேவனுடைய வேலையைத் தடுக்க எப்படிப் பிரயாசைப்பட்டானோ அதுபோலவே இப்பொழுதும் பிரயாசைப்படுகிறான். அவன் ஆதாமையும் ஏவாளையும் ஏமாற்றினதுபோலவும், பக்திமானான யோபை சித்திரவதை செய்ததுபோலவும், இஸ்ரவேல் புத்திரரை தேவனைவிட்டு வழி தப்பிப்போகப் பண்ணினதுபோலவும், நமது கர்த்தரும் இரட்சகருமாகிய இயேசுவை சோதித்து பாடுபடுத்தி கொலை செய்ததுபோலவே நம்மையும் ஏமாற்றி, சித்திரவதை செய்து தேவனை விட்டு வழி தப்பிப்போகும்படி செய்து கடைசியாக அழித்துப்போட பிரயாசைப்படுகிறான்.

கிறிஸ்துவின் வேலை.

நாம் சாத்தானுடைய வேலையின் தன்மை இன்னதென்பதைப் பார்த்தோம். நாம் இப்போது கிறிஸ்துவின் வேலையை அதோடு சம்பந்தப்படுத்திப் பார்ப்போம். சாத்தான் பேதுருவை சோதிக்க உத்தரவு கேட்டபோது இயேசு பேதுருவின் விசுவாசம் தளர்ந்து போகாதபடி ஜெபம் பண்ணினார். சகோதரனே! கிறிஸ்து ஒரு பாவியின் விசுவாசத்தை வர்த்திக்கப் பண்ணும்படியாக ஜெபிப்பதைப் பாருங்கள். சாத்தானின் வலையிலிருந்து மனிதனை விடுவிப்பதே அவருடைய ஒன்றான நோக்கமாயிருக்கிறது. கிறிஸ்துவே இஸ்ரவேல் ஜனங்களைத் தற்காக்கும்படியாக மேக ஸ்தம்பமாகவும் அக்கினி ஸ்தம்பமாகவும் வனாந்தரத்தில் பிரசன்னமானார். அந்தக் கஷ்டமான நீண்ட பிரயாணத்தில் ஜனங்களுக்கு உண்ண ஆகாரமும் குடிக்க தண்ணீரும் தந்தவர் அவரே. அவர் இவ்வுலகத்திலிருந்த போது சாத்தானால் சோதிக்கப்பட்டு துன்பப்படுத்தப்பட்ட யாவருக்கும் உதவி செய்தார். அவர் தமது முதலாம் பிரசங்கத்திலேயே "கர்த்தருடைய ஆவியானவர் என்மேலிருக்கிறார்; தரித்திரருக்குச் சுவிசேஷத்தைப் பிரசங்கிக்கும்படி என்னை அபிஷேகம் பண்ணினார்; இருதயம் நருங்குண்டவர்களைக் குணமாக்கவும், சிறைப்பட்டவர்களுக்கு விடுதலையையும், குருடருக்குப் பார்வையையும் பிரசித்தப்படுத்தவும், நொறுங்குண்டவர்களை விடுதலையாக்கவும், கர்த்தருடைய அனுக்கிரக வருஷத்தைப் பிரசித்தப்படுத்தவும், என்னை அனுப்பினார்." என்று சொன்னார். லூக். 4: 18, 19. அந்நாள் முதற்கொண்டு சிலுவையிலறையப் படும் வரைக்கும் அவர் சிநேகிதமற்றவர்களுக்கு சிநேகிதராயிருந்தார். அவர் இழந்து போனதைத் தேடுவதிலும் இரட்சிப்பதிலும் தமது ஜீவனை செலவிட்டார்.

அவர் பரலோகத்திற்கு எழுந்தருளிப்போன பிறகு மனித ஜாதிக்காக வேலை செய்வதை நிறுத்தவில்லை. இன்னமும் அவர் நமக்கு உதவி செய்கிறார். அவர் பேதுருவுக்காக ஜெபித்ததுபோல நமக்காகவும் ஜெபிக்கிறார். "என் பிள்ளைகளே, நீங்கள் பாவம் செய்யாதபடிக்கு இவைகளை உங்களுக்கு எழுதுகிறேன்; ஒருவன் பாவம் செய்வானானால் நீதி

பரராயிருக்கிற இயேசுக்கிறிஸ்து நமக்காகப் பிதாவினிடத்தில் பரிந்து பேசுகிறவராயிருக்கிறார்." என்று யோவான் சொல்லுகிறார். 1 யோவான் 2: 1. "மேலும், தமது மூலமாய் தேவனிடத்தில் சேருகிறவர்களுக்காக வேண்டுதல் செய்யும்படிக்கு அவர் எப்பொழுதும் உயிரோடிருக்கிறவரானபடியால் அவர்களை முற்றுமுடிய இரட்சிக்க வல்லவராயுமிருக்கிறார்." எபி. 7: 25.

கிறிஸ்து நமதுமேல் வைத்த பெரிதான அன்பு இதனால் விளங்குகிறது. சாத்தான் அழிக்கப் பார்க்கிறான். கிறிஸ்துவே இரட்சிக்கிறார். நாம் மனிதருக்கும் தேவனுக்கும் விரோதமாக எவ்வளவோ பாவங்களை நடப்பித்தபோதிலும் அவருடைய அன்பு பெரிதாகவே யிருக்கிறது. ஆ! இந்த அன்புக்கு ஒப்புண்டோ? "கிறிஸ்துவின் அன்பை விட்டு நம்மைப் பிரிப்பவன் யார்? உபத்திரவமோ, வியாகுலமோ, துன்பமோ, பசியோ, நிர்வாணமோ, நாசமோசமோ, பட்டயமோ? மரணமானாலும், ஜீவனானாலும், தேவ தூதர்களானாலும், அதிகாரங்களானாலும், வல்லமைகளானாலும், நிகழ் காரியங்களானாலும், வருங் காரியங்களானாலும், உயர்வானாலும், தாழ்வானாலும், வேறெந்தச் சிருஷ்டியானாலும் நம்முடைய கர்த்தராகிய கிறிஸ்து இயேசுவிலுள்ள தேவனுடைய அன்பைவிட்டு நம்மைப் பிரிக்கமாட்டாதென்று நிச்சயித்திருக்கிறேன்." ரோமர் 8, 36, 38, 39.

மனிதனின் நிலைமை

இவ்விதமாக சாத்தான் ஒரு பக்கம் மனிதரை இழுத்து அழித்துப்போடப் பார்க்கிறான். மற்றொரு பக்கத்தில் கிறிஸ்து விழுந்துபோன மனிதனை தூக்கப் பிரயாசைப்படுகிறார். மனிதன் நடுவே யிருக்கிறான். மனித இருதயம் கிறிஸ்துவுக்கும் சாத்தானுக்கும் போர்க்களமாகிறது. சாத்தான் மனிதனை பலவந்தத்தினாலும் உபத்திரவத்தினாலும் வெல்ல முயலுகிறான். ஆனால் கிறிஸ்து அன்பினால் மனிதனை வெல்ல விரும்புகிறார். தன்னைப் பின்பற்றுகிறவர்களுக்கு சாத்தான் துன்பத்தையும் மரணத்தையும் அளிக்கிறான். ஆனால் கிறிஸ்து தம்மைப் பின்பற்றுகிறவர்களுக்கு சந்தோஷத்தையும் சமாதானத்தையும் வாக்களிக்கிறார். இவ்விரண்டு தலைவர்களில் யாரைத் தெரிந்துகொள்ளுகிறாய்? நீ யாருக்குக் கீழ்ப்படிவாய்?

G. G. L.

மரித்தோர் தன்னறிவுடையவர்களா யிருக்கிறார்களா?

(ARE THE DEAD CONSCIOUS.)

புருஷனையும் பிள்ளைகளையும்விட்டு மரித்துப்போன ஒரு அம்மாளுடைய அடக்க ஆராதனைக்குப் போயிருந்தேன். சவப்பெட்டிக்கு முன்நின்று, துக்கிப்பவர்களை நோக்கி ஆறுதலான புத்தி போதனைகள் செய்யவந்த போதகர் சொன்ன வார்த்தைகளாவன: "மரணம் என்பதே கிடையாது; மரித்தவர்கள் வேறொரு மண்டலத்திற்குச் சென்று மெய்யாகவே பிழைத்திருக்கிறார்கள்." மரித்த இந்த அம்மாளின் ஆவியானது எங்கும் சுற்றித் திரிந்துகொண்டிருக்குமென்றும், புருஷன் தனித்திருக்கும் நேரங்களில் அவளைச் சந்தித்துப் பேசி பிள்ளைகளுக்குச் செய்யவேண்டிய ஒழுங்குகள் இன்னதென்று சொல்லி அவருக்கு உதவியாயிருக்குமென்றும் வற்புறுத்திப் பேசினார்.

இவ்வார்த்தைகளை நான் கவனித்துக் கேட்டுக்கொண்டிருந்தபோது, எந்த ஆதாரத்தைக்கொண்டு இவர் இப்படிப் பேசுகிறார் என்று நான் எனக்குள்ளே யோசித்தேன். மெய்யாகவே இவைகள் தேவ வசனத்தில் சொல்லப்பட்டிருக்கும் போதனைகளல்ல. ஆகையால் இவைகள் பொய்யான வார்த்தைகளாயிருக்கவேண்டும். தேவனுடைய வசனமோ சத்தியமாயிருக்கிறது. இவை பொய்யான பேச்சுகளானால் பொய்க்குப் பிதாவாயிருக்கிறவனிடத்தினின்றுதான் இவை தோன்றியிருக்கவேண்டும். ஆகையால் துயரப்படுகிற நேரத்தில் மனிதரை ஆறுதல் படுத்துவதற்கு இவ்வித அபத்தமான சொற்கள் ஏற்றவைகளல்ல.

எதிர் மறுப்பு.

"அதை நீ புசிக்கும் நாளில் சாகவே சாவாய்" என்று தேவன் ஏதேன் தோட்டத்தில் மனிதனுக்குச் சொன்னதற்கு எதிரிடையாக "நீங்கள் சாகவே சாவதில்லை" என்று சாத்தான் சொன்னான். மீறுதலினாலுண்டான பலன் மரணமென்று கர்த்தர் சொன்னபோதிலும் சாத்தான் அதற்கு மாறாக "இல்லை, அவர்கள் சாகவேமாட்டார்கள்" என்று சொல்லுகிறான். தான் சொல்வதுதான் மெய்யென்று உலகத்திற்கு ரூபகாரப்படுத்தும்படியாக அவன் பல தந்திரமான உபாயங்களைச் செய்து, மரித்தவர்களோடு பழகி சம்பாஷிக்கலாமென்று மனிதரை ஏமாற்றி, மரித்த ஆவிகளிருக்கும் மண்டலத்தினின்று அவை வந்து தங்கள் சிநேகிதரோடு பேசுவதாகத் தானே பாவனை காட்டி வருகிறான்.

மரித்தவர்களைப்பற்றிய சரித்திரங்களிலும், அடக்க ஆராதனைப் பிரசங்கங்களிலும் சொல்லப்பட்டிருப்பதுபோல நமது சிநேகிதர்கள் மெய்யாகவே மரிக்காமல் இச்சீவனில் நமக்கு உதவி செய்கிறவர்களாயிருப்பார்களானால், அப்போது சாத்தான் சொன்னதே சத்தியமாகும், நமது துக்கத்திலும் சஞ்சலத்திலும் மரித்த ஆவிகளைப்பற்றிய மார்க்கத்தில்தான் (Spiritualism) ஆறுதல் தேடவேண்டியதாகும்.

அது உண்மையானால் ஏன் துக்கப்படவேண்டும்?

மரணமென்பதே கிடையாதென்றும், செத்துப்போயிருப்பதாக நமக்குத் தோன்றுவது மேலான ஒரு மண்டலத்திற்சென்று அங்கிருந்து நமக்கு அதிக உதவியாயிருப்பது தானென்றும் சொன்னால், பின்னையேன் அதற்காகத் துயரமும் சஞ்சலமுமடையவேண்டும்? அப்படிப்பட்ட உபதேசத்தை நாம் மெய்யென்று நம்பினால் நமது பெற்றோர் அல்லது பிள்ளைகள் இறந்துபோகும் காலத்தில் நாம் கண்ணீர்விடக் காரணமில்லையே. நாம் துயரத்தினால் அழுவதற்கு பதிலாக ஆனந்தக் கண்ணீர் சொரியவேண்டுமே. விசனப்படுவதற்கு பதிலாக நாம் மகிழ்ந்து களிகூரவேண்டுமே. மரித்தவன், செத்தபிறகும் தன்னறிவுள்ளவனாயிருக்கிறானென்பது சரியல்லவென்று நாம் ஆக்ஷேபிக்கிறதற்குச் காரணம் என்னவென்றால், அது உண்மையல்லாத விஷயமாயிருப்பதினால்தான். ஏனென்றால் "சத்தியமாயிருக்கிற" தேவ வசனத்திற்கு அது ஒத்திருக்கிறதில்லை. "பரிகரிக்கப்படும் கடைசி சத்துரு மரணம்" 1 கொரி. 15: 26 என்று வேதாகமம் சொல்லுகிறது. ஆவியின் ஏவுதலினால் எழுதின அப்போஸ்தலன், மரணத்தைச் சத்துரு என்கிறார். ஏன்?—ஏனென்றால் அது நமது தாய் தகப்பன்மாரையும், பிள்ளைகளையும் சிநேகிதர்களையும் கொள்ளை கொண்டுபோய் விடுகிறது. அது துயரத்தையும் வியாகுலத்தையுமே உண்டுபண்ணுகிறது.

மரணம் சத்துருவாயிருப்பது மாத்திரமல்ல அது பெரிய சத்துராதியாகிய சாத்தானின் கிரியையாயுமிருக்கிறது. அப்போஸ்தலனாகிய பவுல் எபி. 2: 14-இல் சொல்லுகிறதாவது: "பிள்ளைகள் மாம்சத்தையும் இரத்தத்தையு முடையவர்களாயிருக்க அவரும் அவர்களைப்போல மாம்சத்தையும் இரத்தத்தையுமுடையவரானார். மரணத்துக்கு அதிகாரியாகிய

பிசாசானவனைத் தமது மரணத்தினால் அழிக்கும்படிக்கு அப்படியானார்." ஆகையால் மரணத்தில் மனிதன் சத்துருவின் அதிகாரத்துக்குட் பிரவேசிக்கிறான் என்பது தெளிவாகிறது. ஒரு மனிதனிடத்தில் சாத்தான் நடப்பிக்கும் காரியங்களெல்லாவற்றிலும் இதுதான் கடைசி கிரியையாயிருக்கிறபடியால், மரணம் கடைசி சத்துரு என்னப்படுகிறது.

மரித்தவர்களும் இச்சீவியத்தின் சம்பவங்களும்

மனிதர் மரித்தபிறகு தன்னறிவுள்ளவர்களாயிருக்கிறதுமில்லை இப்பூலோகத்தில் நடக்கும் காரியங்களில் அவர்கள் எவ்விதத்திலும் சம்பந்தப்படுகிறதுமில்லை. "உயிரோடிருக்கிறவர்கள் தாங்கள் மரிப்பதை அறிவார்களே, மரித்தவர்கள் ஒன்றும் அறியார்கள். இனி அவர்களுக்கு ஒரு பலனுமில்லை. அவர்கள் பேர் முதலாய் மறக்கப்பட்டிருக்கிறது. அவர்கள் சிநேகமும் அவர்கள் பகையும் அவர்கள் பொறாமையும் எல்லாம் ஒழிந்துபோயிற்று. சூரியனுக்குக் கீழே செய்யப்படுகிறதொன்றிலும் அவர்களுக்கு இனி என்றைக்கும் பங்கில்லை." பிர. 9: 5, 6 என்று வேதாகமத்தில் எழுதப்பட்டிருக்கிறது.

"ஸ்திரீயினிடத்தில் பிறந்த மனுஷன் வாழ்நாள் குறுகினவனும் சஞ்சலம் நிறைந்தவனுமாயிருக்கிறான். அவன் பூவைப்போலப் பூத்து, அறுப்புண்கிறான்; நிழலைப்போல நிலைநிற்காமல் ஓடிப்போகிறான்." யோபு. 14: 1, 2.

"அவன் பிள்ளைகள் கனமடைந்தாலும் அவன் உணரான் அவர்கள் சிறுமைப்பட்டாலும் அவர்களைக் கவனியான்." வச. 21.

வேதாகமம் தெளிவாய்ச் சொல்வது.

மேற்கண்ட வேத வாக்கியங்கள் தெளிவாய்க் காட்டுவதென்னவென்றால், மனிதன் மரித்தபின்பு தன்னறிவில்லாமலும் வருத்தம் கஷ்டம் யாதொன்றுமில்லாமலுமிருக்கிறான்.

தேவ ஆவியினால் ஏவப்பட்டு எழுதினவர்கள் இதைப்பற்றி இன்னும் விபரமாய்ப் பேசியிருக்கிறார்கள். "செய்யும்படி உன் கைக்கு நேரிடுகிறது எதுவோ அதை உன் பெலத்தோடே செய். நீ போகிற பாதாளத்திலே செய்கையும் வித்தையும் அறிவும் ஞானமும் இல்லையே." பிர. 9: 10. "அப்படி நான் காத்துக்கொண்டிருந்தாலும் பாதாளம் எனக்கு வீடாயிருக்கும்; இருளில் என் படுக்கையைப் போடுவேன்." யோபு. 17: 13. "பிரேதக்குழிகளிலுள்ள அனைவரும் அவருடைய சத்தத்தைக் கேட்குங்காலம் வரும்" என்று இயேசு சொல்லுகிறார். யோ. 5: 28. இதற்கிசைவாகப் பவுல் அப்போஸ்தலன் கொடுக்கும் சாட்சி என்னவென்றால்: உயிர்த்தெழுதல் இல்லாவிட்டால் "கிறிஸ்துவுக்குள் நித்திரையடைந்தவர்களும் கெட்டிருப்பார்களே" "ஆதாமுக்குள் எல்லாரும் மரிக்கிறதுபோல கிறிஸ்துவுக்குள் எல்லாரும் உயிர்ப்பிக்கப்படுவார்கள். அவனவன் தன்தன் வரிசையிலே உயிர்ப்பிக்கப்படுவான் முதற் பலனானவர் கிறிஸ்து, பின்பு அவர் வருகையில் அவருடையவர்கள் உயிர்ப்பிக்கப்படுவார்கள்." 1 கொ. 15: 18, 22, 23. மேலும் அப்போஸ்தலன்: "கர்த்தர் தாமே ஆரவாரத்தோடும் பிரதான தூதனுடைய சத்தத்தோடும் தேவ எக்காளத்தோடும் வானத்திலிருந்து இறங்கி வருவார் அப்பொழுது கிறிஸ்துவுக்குள் மரித்தவர்கள் முதலாவது எழுந்திருப்பார்கள். பின்பு உயிரோடிருக்கும் நாமும் கர்த்தருக்கு எதிர்கொண்டுபோக மேகங்கள்மேல் அவர்களோடேகூட ஆகாயத்தில் எடுத்துக்கொள்ளப்பட்டு இவ்விதமாய் எப்பொழுதும் கர்த்தருடனேகூட இருப்போம்" என்று சொல்லி "இந்த வார்த்தைகளினாலே நீங்கள் ஒருவரையொருவர் தேற்றுங்கள்" என்கிறார். 1 தெச. 4: 16-18.

ஆகையால் மரித்தவர்கள் தன்னறிவின்றி நித்திரை பண்ணிக்கொண்டிருக்கிறார்களென்றும், கிறிஸ்துவின் இரண்டாம் வருகையில் உயிர்த்தெழுதலுக்கென்று காத்திருக்

கிறார்களென்றும் தெளிவாய்ப் பார்க்கிறோம். இந்த சத்தியம்தான் நமக்கு ஆறுதலைக் கொடுக்கிறதாயிருக்கிறது. மரித்தபின் தன்னறிவுண்டென்றும் மரித்தவர்களின் ஆவிகள் நம்மிடம் வந்துபேசி சம்பாஷித்து நமக்கு உதவியாயிருக்கிறதென்றும் நினைக்கும் தப்பான எண்ணங்களால் நாம் ஆறுதலடைய மாட்டோம்.

சபைக்கு விரோதமாய் சாத்தான் செய்யும் போர்.

(SATAN'S WARFARE AGAINST THE CHURCH.)

வெளிப்படுத்தின விசேஷம் பன்னிரண்டாம் பதின்மூன்றும் அதிகாரங்களில் தேவனுடைய சபைக்கும் சாத்தானுக்கும் கடந்த இரண்டாயிர வருஷகாலமாக நடந்து வருகிற போரைக்குறித்து சொல்லியிருக்கிறது. இந்தப்போர் பூமியில் ஆரம்பிக்கிறதுக்கு முன், பரலோகத்திலே கிறிஸ்துவுக்கும் சாத்தானுக்கும் உண்டாகி, அங்கிருந்து சாத்தான் அந்தப் போரில் தோல்வி யடைந்தவனாகத் தள்ளிவிடப்பட்டு, பிற்பாடு இப்பூமியில் அந்தப் போரை நடத்திவருகிறதாக தெரிவிக்கிறது. (வெளி. 12: 7-10.) கிறிஸ்து இப்பூமியில் பாலகனாய் பிறந்திருக்கும்போது, அந்தக் காலத்தில் உலகத்தை ஆண்ட அஞ்ஞான ரோம ராட்சியத்தின் அதிகாரத்தைக்கொண்டு சாத்தான் சிறு குழந்தையாயிருந்த அவரைக் கொன்றுபோடத்தக்கதாக ஏற்பாடு செய்தான்— பிள்ளையோ அவனது கைக்கு அகப்படாமல் தப்புவிக்கப்பட்டு பரலோகத்துக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது. பிற்பாடு சாத்தான் அந்தப் பிள்ளையின் உபதேசத்தைப் பின்பற்றின சபையை காலம், காலங்கள், அரைக்காலமென்றும், நாற்பத்திரண்டு மாதங்களென்றும், 1260 நாட்களென்றும் அழைக்கப்படுகிற 1260 வருஷ காலமாய் துன்பப்படுத்தினான். அந்தக்காலத்தில் இந்தச்சபை தேவனுடைய பெரிய பாதுகாப்பினால் காக்கப்பட்டது. இன்னும் கடைசியாக உலகத்தில் தேவனுடைய மீதியான சபை ('அவளுடைய சந்ததியான மற்றவர்கள்' வெளி. 12: 17.) ஒன்று இருக்குமென்றும்; அதற்கு தேவனுடைய கற்பனைகளைக் கைக்கொள்ளுகிறதும், இயேசு கிறிஸ்துவைக்குறித்த சாட்சி (வெளி. 12: 17) யென்ற தீர்க்கதரிசனத்தின் ஆவியை (வெளி. 19: 10) யுடைய இரண்டு விசேஷித்த குணாதிசயங்கள் இருக்குமென்றும்; அதற்கு விரோதமாயும் பலத்த போர் சத்தியத்திற்கு எதிராளியாகிய சாத்தானால் செய்யப்படுமென்றும் பார்க்கிறோம். வெளி. 12: 17

பதின்மூன்றும் அதிகாரத்தில் சொல்லப்பட்டிருக்கிற முதலாம் மிருகம் பாப்பின் ரோம ராட்சியத்தைக் குறிக்கிறதாயிருக்கிறது. இந்த மிருகமும் தானியேல் ஏழாம் அதிகாரத்தில் சொல்லப்பட்டிருக்கிற நான்காம் மிருகத்தின் சின்னக்கொம்பும் ஒன்றையே குறிக்கிறதாயிருக்கிறது. வெளி. 13: 1—9-ல் கூறப்பட்டிருக்கிற வேத வாக்கியங்களை வாசித்தால் அந்த அதிகாரத்தின் மூலமாய் தேவனுக்கும் அவருடைய சபைக்கும் விரோதமாய் செய்யப்பட்ட யுத்தத்தின் வரலாறு வெகு தெளிவாயிருக்கிறது.

வெளி. 13: 11—18 களில் இப்படி கடைசியாக அந்த அதிகாரத்தின் வல்லமை குறுகிறபோது இன்னும் ஓர் இராட்சியம் எவ்வகையான கிரீடமும் தரிக்காத அதிபதியுடன் ஆட்டுக்குட்டியைப்போல சாந்தமான இராட்சியமாய் முதலில் எழும்புமென்றும், பிற்பாடு அந்த இராட்சியத்துக்கு அதிகாரம் உண்டாகும்போது, அது முந்தின இராட்சியம் பேசினபடியே பேசுமென்றும் வாசிக்கிறோம். அதுவுமன்றி இதற்கு முன்னதாக அதிகாரம் செய்து பெலயீனப்பட்டிருக்கிற பாப்பின் அதிகாரத்திற்கு இது மறுபடியும் பெலன் கொடுக்கிறதாயுமிருக்கும்.

"அன்றியும் அது மனுஷருக்கு முன்பாக வானத்திலிருந்து பூமியின்மேல் அக்கினியை இறங்கப் பண்ணத்தக்கதாக பெரிய அற்புதங்களை நடப்பிக்கும்" வச. 13, 14, Spiritualism என்ற மானதபூஜை கொள்கை (அதாவது மரித்தவர்களுடைய ஆவியோடு சம்பாஷணை பண்ணுதல்) சுமார் 1848-ம் வருஷத்தில் இதே ராட்சியத்தில் தோன்றி வெகு பிரபல்யமாய் எங்கும் அநேக அற்புதங்களால் பரம்பி திரளான கிறிஸ்தவர்களை சத்திய போதனையினின்று மோசம் போக்கி வருகுதல் இந்த வாக்கியத்தின் நிறைவேறுதலாயிருக்கிறது.

மேலும் அரசாட்சியின் அதிகாரத்தோடு மார்க்க விதிகளையும் பழைய பாப்பு இராட்சியம்போல் ஒன்றுசேர்க்க இந்த இராட்சியம் பின் கூறியவாறு தலைப்படுகிறதாயுமிருக்கும்.

அதாவது மிருகத்தின் முத்திரையாகிய ஞாயிற்றுக்கிழமை ஆசரிப்பை யாவரும் கைக்கொள்ளவேண்டும் என்றும். இராட்சியத்தின் அதிகாரத்தைக்கொண்டு பலாத்காரம் செய்கிறதாகவுமிருக்கும். இதின் விவரத்தை 16-ம் 17-ம் வாக்கியத்தில் வாசிக்கிறோம்.

வெளி. 13-ம் அதிகாரத்தில் சொல்லப்பட்டிருக்கிற இந்த இரண்டாம் மிருகத்தைப் பற்றி 1754-ம் வருஷம் உவஸ்லி போதகர் எழுதுகிறதாவது. "அவன் இன்னும் எழும்பவில்லை. ஆனால் இன்னும் வெகு காலம் செல்லாது. ஏனென்றால் முதலாம் மிருகத்திற்குரிய காலமாகிய 42-ம் மாதத்தின் முடிவிலே வெளிப்படவேண்டும்."

இந்த அதிகாரம் எதுவென்றால் பாப்பு சிறையாகப் பிடிக்கப்பட்டு அவர்களின் அதிகாரம் குறைந்துவருகிறபோது மற்ற இராட்சியங்களைப்போல ஜலத்தினின்று அதாவது, ஜனங்கள், கூட்டங்கள், ஜாதிகள், பாஷைக்காரர்கள் (வெளி. 7: 15) நடுவிலிருந்து யுத்தங்களின் மூலமாய் எழும்பாமல் பூமியிலிருந்து ஓர் செடி யாதொரு சந்தடி யில்லாமல் முளைத்தெழும்பினதுபோல் எழும்பி இருக்கிற அமெரிக்கா தேசத்தின் ஐக்கிய மாகாணமே.

"கர்த்தராகிய ஆண்டவர் தீர்க்கதரிசிகளாகிய தம்முடைய ஊழியக்காரருக்கு தமது இரகசியத்தை வெளிப்படுத்தாமல் ஒரு காரியத்தையும் செய்யார்." ஆமோஸ் 3: 7.

"அதிக உறுதியான தீர்க்கதரிசன வசனமும் நமக்குண்டு; பொழுது விடிந்து விடிவெள்ளி உங்கள் இருதயங்களில் உதிக்குமளவும் இருளுள்ள ஸ்தலத்தில் பிரகாசிக்கிற விளக்கைப்போன்ற அவ்வசனத்தைக் கவனித்திருப்பது நலமாயிருக்கும்." 2 பேது. 1: 19.

"தீர்க்கதரிசனங்களை அற்பமாய் எண்ணாதிருங்கள்" "எல்லாவற்றையும் சோதித்துப் பார்த்து, நலமானதைப் பிடித்துக்கொள்ளுங்கள்."

"பொல்லாங்காய்த் தோன்றுகிற எல்லாவற்றையும் விட்டுவிடுங்கள்." 1 தெச. 5: 20—22.

சுகாதார விஷயங்கள்

O. SMITH, M. D. டாக்டர் சிமித்.

நாம் மாமிச பதார்த்தங்களை உபயோகிக்கலாமா?

(SHALL WE FLESH FOODS.)

நாம் ஆகாரத்திற்கென்று அடிக்கும் மிருகங்கள் எதைத் தின்று ஜீவிக்கின்றன. அவைகள் தங்களுக்குக் கிடைக்கக்கூடிய பசும்புல்லையெல்லாம் தின்னுகிறதல்லவா? இன்னும் எதைத் தின்னுகின்றன? அவைகளுக்குக் கிடைக்கும், கொள்ளு, கோதுமை, சோளம் முதலிய சகல தானிய வகைகளையும் தின்னுகின்றன. தண்ணீரையும் நன்றாய்ப் பருகுகின்றன. வேறொன்றுமில்லை. சில வேளைகளில் அவைகள் சுகத்தைப் பேணிக் கொள்வதற்கு உப்பும் தேவையாயிருக்கிறது. இவ்வித சுத்தமான பதார்த்தத்தையும் தண்ணீரையும் உட்கொள்வதனால் அவைகளின் சரீரம் எவ்வளவு பலமாயிருக்கிறது. நாம் உண்ணுபதற்கென்று அடிக்கிற ஆடுமாடுகள் தங்களுக்கு அதிக பலம் வேண்டுமென்று தாவர வர்க்கங்களைத் தவிர வேறே மாமிச பதார்த்தங்களைத் தின்னுகின்றதா? ஆகவே மனிதன் அவற்றின் மாமிசத்தை உட்கொள்ளும்போது இரண்டாந்தரமான புல், தானியங்கள், உப்பு, தண்ணீர் முதலியவற்றை உட்கொள்ளுகிறானல்லவா. ஆகவே, மிருக சரீரத்தின் வழியாய் வராத முதற்தரமான தாவர வர்க்கத்தை அவன் ஏன் உட்கொள்ளக்கூடாது? இத்தாவர வர்க்கங்களைக் கேவலமான மிருகங்கள் தின்று பலமும் செழிமையுமாயிருக்கக் கொள்ள, மனிதன் தனக்குக் கொடுக்கப்பட்ட உயர்ந்த புத்தி சாமர்த்தியத்தினாலே மனித சரீரத்திற்கு வேண்டிய இயற்கைப்பொருட்களை முதல்தரமாய் நன்றாக சமைத்து உட்கொண்டு ஏன் பலமும் செழிமையுமாயிருக்கக்கூடாது?

மாமிச பதார்த்தத்தை நாம் சாப்பிடுவதனால் நமது இரத்தம் விஷத்தன்மை யடைந்து அதிக சூடாகிவிடுகிறது. உஷ்ண தேசமாகிய இந்தியாவில் வசிக்கிறவர்கள் தங்களை வருஷத்தின் மிச்சமான பாகத்தில் எப்படி குளிராய் வைக்கவேண்டுமென்று பிரயாசைப் படும்போது நமது இரத்தத்தைச் சூடாக்கக்கூடிய வஸ்துக்களை உட்கொள்ளக்கூடாது. நமது இரத்தம் அதிக சூடாயிருக்கும்பொழுது நமது சரீரம் அதிக இலேசாக வியாதிப்படக்கூடும். அப்படி நமக்கு வியாதி வந்தால் நமது இரத்தம் அதிக சூடாயும் விஷத்தன்மையுள்ளதாயுமிருப்பதால் அது நமக்கு மோசமாய் முடியும். ஆதியில் தேவன் மனிதனைப் பூரணமுள்ளவனாகவும் பலமுள்ளவனாகவும் சிருஷ்டித்தார். அவன் அப்படியே எப்போதும் பலமுள்ளவனாயிருக்கும்படிக்குத் தேவன் அவனுக்கு மாமிசத்தை ஆகாரமாகக் கொடுக்கவில்லை. மிருகத்திற்குக்கூட மாமிசத்தை ஆகாரமாகக் கொடுக்கவில்லை. ஆதியாகமம் முதலாம் அதிகாரத்தை வாசித்துப் பார்க்கவும்.

நாம் சிந்திக்கவேண்டிய இன்னொரு காரியம் இருக்கிறது. அக்காரியத்தை எல்லா வைத்திய சாஸ்திரிகளும் ஒத்துக்கொள்ளுகிறார்கள், வியாதிகளைத் தடுக்கவேண்டுமென்று வைத்திய சாஸ்திரத்தால் எவ்வளவோ முயற்சி செய்தாலும் வருஷாவருஷம் நூதனமான வியாதிகள் உண்டாகிக்கொண்டே வருகிறது. அவைகளில் பிளவை என்று சொல்லப்பட்ட நோயானது மாமிசம் சாப்பிடுவதனால் உண்டாகிறதென்று பெரும்பாலும் நம்பப்படுகிறது., வருஷாவருஷம் மாமிசம் சாப்பிடுவதும் அதிகரித்து வருகிறதினால் பிளவை நோயும் அதிகரிக்கிறது. 50 வருஷத்திற்குமுன் இங்கிலாந்தில் 127 சாவில் ஒன்று பிளவையால் உண்டானதென்று கணக்கிடப்பட்டது. ஆனால் இப்பொழுதோ 22-ல் ஒன்றுவீதம் வளர்ந்திருக்கிறதென்று கணக்கிடப்பட்டிருக்கிறது. ஒவ்வொரு மனிதனும், ஸ்திரீயும் பிள்ளையும் ஒரு வருஷத்தில் சராசரி 131 பவுண்டு நிறையுள்ள மாமிசத்தை உட்கொள்ளுகிறார்களென்று டாக்டர். ரோஜர் உவில்லியம்ஸ் என்பவர் லண்டன் பட்டணத்து "Lancet" "லான்செட்" என்னும் பத்திரிகையில் வெளியிட்டார். பன்றி யிறைச்சியைச் சாப்பிடுவதால் பிளவையும் இன்னும் பல கொடிய நோய்களும் உண்டாகிறது.

மாமிச பதார்த்தங்களை உட்கொள்ளக்கூடாதென்பதற்கு இன்னும் ஒரு காரணம் உண்டு. மாமிசத்தைத் தின்று ஜீவிக்கிற மிருகங்களின் குணத்தையும், தாவர வர்க்கங்களைத் தின்று ஜீவிக்கிற மிருகங்களின் குணத்தையும் ஒத்துப்பாருங்கள். அவைகளில் நற்குணம் பொருந்தியிருக்கிறது. இவைகளில் எந்த மிருகங்கள் உன் ஜீவனைப் போக்கக்கூடும்? ஓநாயா ஆடா, கரடியா, வெள்ளாடா, புலியா அல்லது பசுவா? இம்மாதிரி குணங்கள் மனிதருக்குள்ளும் காணப்படுகிறது. மரக்கறி பதார்த்தங்களைத் தின்று ஜீவிக்கிறவர்கள் மாமிசங்களைத் தின்கிறவர்களைப்போல அவ்வளவு துஷ்டரும் முரடரும் சண்டையிடுகிறவர்களுமாயிருக்கிறதில்லை. சில தேசங்களில் ஒரு குற்றவாளிக்குத தண்டனை விதிக்கும்போது, மிருகங்களைக் கொல்லுகிற ஒரு மனிதனை விசாரணை சங்கத்தின் அங்கமாகத் தெரிந்துகொள்ளுகிறதில்லை. மிருகங்களைக் கொல்லுவதும் அவற்றைத் தின்பதும், சாந்தமும் அன்பும், மனிதர்மேல் பட்சமுமுடைய ஒரு மனிதனை மூர்க்கனும் சண்டைக்காரனுமாக மாற்றிவிடும். தேவன் இவை யெல்லாவற்றையும் முன்னறிந்ததினாலே, புதிய பூமியின், சந்தோஷமும் பாக்கியமுமான நிலைமையைப்பற்றிச் சொல்லும்போது அவர் "என் பரிசுத்த பர்வதமெங்கும் அவைகள் தீங்கு செய்வதுமில்லை, கேடுண்டாக்குவதுமில்லை" "சிங்கம் மாட்டைப்போல வைக்கோலைத் தின்னும்" "அப்பொழுது ஓனாய் ஆட்டுக்குட்டியோடே தங்கும், புலி வெள்ளாட்டுக்குட்டியோடே படுத்துக்கொள்ளும்; கன்றுக்குட்டியும், பால சிங்கமும், காளையும், ஒருமித்திருக்கும்; ஒரு சிறு பையன் அவைகளை நடத்துவான்." என்றார்.

டாக்டர் O. சிமித்.

இயேசுவின் அன்பு.

(THE LOVE OF JESUS)

இயேசு அன்பின் அவதாரம். அவர் ஒரு அன்புள்ள மனிதன். அவருக்கு ஒரு அனலுள்ள இருதயம் உண்டு. சில பூர்வீக கிறிஸ்தவர்கள் அவருடைய இருதயம் நெருப்புப்பற்றி எரிகிறதைப்போலிருக்கும் படம் வைத்திருந்தார்கள். அதுவும் ஒரு சரியான சாயலே. அவருடைய இருதயம் அன்பினாலே பற்றி எரிந்தது. துக்கப்படுகிறவர்களுக்காகவும் வியாதியஸ்தருக்காகவும் பாவிகளுக்காகவும் அவருக்கு இருக்கும் அன்பினால் அவருடைய இருதயம் பற்றி எரிந்தது. ஆக்ஸ்போர்ட் (Oxford) சர்வ கலாசாலையின் மாணாக்கனான ஹென்றி மார்டீன் (Henry Martyn) என்பவர் நூறு வருஷங்களுக்கு முன்னே லண்டன் பட்டணத்திற்குப் போதகராக வந்தார். தன் மரணம் சமீபித்தபோது அவர் மனுஷ ஜாதியின் அன்பின் ஊழியத்தில் "இப்பொழுது என்னை தேவனுக்காக எரித்துப்போடுகிறேன்" என்று சொன்னார். தற்காலத்தில் அப்படிப்பட்ட அன்புள்ள ஒருவனும் கிடையாது. இயேசு மெய்யான அன்பு எப்படிப்பட்டதென்று படித்துக் கொடுத்திருக்கிறார்.

இயேசுவின் அன்புக்கோர் அளவில்லை. பவுல் அவ்வன்பை "அறிவுக்கெட்டாதது" என்று அழைக்கிறார். எபே. 3: 19. நாம் கேட்கிறதெல்லாவற்றைப்பற்றி நம்முடைய மட்டுள்ள புத்தியினாலே அறிந்துகொள்ள முடியாது. ஆனால் நாம் இயேசுவினுடைய அன்பைப்பற்றி கொஞ்சமாவது தெரிந்துகொள்ளலாம். ஹென்றி டிரம்மண்ட் (Henry Drummond) என்னும் படிப்பாளி அன்பைப்பற்றி "அது உலகத்தில் இருக்கும் எல்லாவற்றைவிடப் பெரியது" என்று சொல்லுகிறார். இந்த யுகம் பெரிய காரியங்களடங்கிய யுகம், பெரிய மனிதருள்ள யுகம், பெரிய நூதன விர்த்தியுள்ள யுகம், பெரிய ஆபத்துள்ள யுகம் பெரிய நூதனங்கள் கண்டு பிடிக்கப்படும் யுகம். நாம் இப்பொழுதுதான் இந்தப் பெரிய உலக யுத்தம் முடிவுக்குக் கொண்டுவரப்பட்டிருக்கிறதாகக் கேள்விப்படுகிறோம். இவைகளெல்லாவற்றைவிட பெரியது அன்பு அவ்வன்பிலும் பெரிய அன்பு, இயேசுவினுடைய அன்பே.

தாவீது ராஜா தன்னுடைய மரண மடைந்த சிநேகிதனாகிய யோனத்தானின் அன்பை "ஓர் அதிசயப்படத்தக்கது" என்கிறார். நாம் இயேசுவினுடைய அன்பைப் பற்றி என்ன சொல்லலாம். இயேசுவினுடைய அன்பு மாறாதது. நம்முடைய சிநேகிதரின் அன்பு குன்றிப்போகும்போது நமக்கு அதிக மனநோவு இருக்கிறது. ஆனால் இயேசுவினுடைய அன்பைப்பற்றி "தாம் இவ்வுலகத்தில் இருக்கிற தம்முடையவர்களிடத்தில் அன்பு வைத்தபடியே முடிவுபரியந்தமும் அன்பு வைத்தார்" என்று சொல்லப்பட்டிருக்கிறது. உன்னுடைய சிறு பிராயத்திலிருந்து இம்மட்டும் உனக்கிருந்த சிநேகிதர்களையெல்லாம் கணக்கிட்டு அவர்களில் இன்னும் யாரெல்லாம் சிநேகிதர்களாம் இருக்கிறார்களென்று பார். இயேசுவினுடைய அன்பே எல்லாவற்றிலும் பெரியது. ஒரு கவிராயன் 'நான் மாறுகிறேன், அவரோ மாறுகிறதில்லை. அவருடைய அன்புக்கு ஓர் ஓய்வு இல்லை" என்று எழுதியிருக்கிறார். கிறிஸ்துவுக்கு 600 வருஷங்களுக்குமுன் வசித்த எரேமியா அவருடைய அன்பு சதா காலங்களிலும் நிலைத்திருக்கும் என்று சொல்லுகிறார். எரே. 3: 3. C. H. ஸ்பர்ஜன் (C. H. Spurgeon) என்பவர் தன்னுடைய சிநேகிதன் ஒருவனைச் சந்திக்கப்போனபோது அவனுடைய வீட்டிலிருந்த ஒரு காற்றுத் திசைகாட்டியின்மேல் "தேவன் அன்பாகவே இருக்கிறார்" என்று எழுதப்பட்டிருக்கிறதைக் கண்டு, அவனை நோக்கி காற்று பல திசைகளிலும் அடிக்கிறப்போல் தேவனுடைய அன்பும்

மாறுமா என்று கேட்க அவன் "இல்லை, காற்று எங்கெங்கே அடித்தாலும் அங்கேயும் தேவன் அன்பாகவே இருக்கிறார்" என்றான். அம்மாதிரியே நாம் எங்கே திரும்பினாலும் 'எங்கே யிருந்தாலும் இயேசு நம்மை நேசிக்கிறார். 'கிறிஸ்துவின் அன்பைவிட்டு நம்மைப் பிரிப்பவன் யார்" என்று பவுல் கேட்கிறார் அதற்கு நாம் "யாரால் முடியும்" என்று கேட்போமாக.

இயேசுவினுடைய அன்பு அதிக பலமுள்ளது. அதிக காங்கையினாலே கடினமான பாறையையும், கெட்டியான உலோகங்களையும் உருக்கலாம். அம்மாதிரியே நம்முடைய இருதயம் எவ்வளவு கடினமாயிருந்தபோதிலும் அவருடைய அன்பு இளகப்பண்ணும். பாரிஸ் பட்டணத்தில் அப்பட்டணத்துச் சுய அரசாக்ஷிக்காக ஒரு கலகம் உண்டானபோது ஒரு கிறிஸ்தவ பிரசங்கியார் கைதியாக பாஸ்றறல் (Bastile) என்னும் ஊரில் அடைபட்டிருந்தார். அவரைக் கொலை செய்யும்படியாக வெளியே கொண்டு போகப்பட்ட பிற்பாடு அவர் இருந்த அறையின் சிலுவைபோல் இருந்த ஓர் ஜன்னலின் மேல் "உயரம்" என்றும், அடியில் "ஆழம்" என்றும், இரண்டு பக்கங்களிலும் "அகலம்" என்றும் எழுதியிருந்தார். அதாவது கல்வாரியிலிருந்த சிலுவை கிறிஸ்துவின் அன்பின் ஆழத்தையும், அகலத்தையும், உயரத்தையும்பற்றிப் போதிக்கிறது.

இயேசுவினுடைய அன்பு அவரை ஒரு அன்புள்ள மனிதனாக்கிற்று பிள்ளைகள் எப்போதும் அவர்கூட இருக்க சந்தோஷப்பட்டார்கள். அவர் எல்லாரையும் நேசித்தார். ஒருவனும் "அவர் என்னை நேசிக்கவில்லை" என்று சொல்ல முடியாது அதிக தண்ணீரும் அன்பை அணைக்க முடியாது என்று சாலமோன் ஞானி சொல்லுகிறார். அம்மாதிரியே அது இயேசுவினுடைய அன்பையும் அணைக்க முடியாது. அவருடைய அன்பு தன்னைத்தானே பலியாகக் கொடுக்கும் அன்பு. எல்லா மெய்யான அன்பும் அப்படிப்பட்டதே. ஆனால் இயேசு தன்னுடைய ஜீவனையும் பாராமல் நம்மை நேசித்தார். நாம் இன்னும் பாவிகளாயிருக்கும்போதே அவர் நம்மை சிநேகித்தார். நாம் நமக்கு நன்மை செய்கிறவர்களை சிநேகிக்கிறோம். ஆனால் இயேசு நாம் சிநேகிக்கத் தகாதவர்களாயிருக்கும்போதே அவர் நம்மை சிநேகித்தார். அவர் நமக்காக தம்முடைய ஆத்துமாவை மரணத்தில் ஊற்றினார். ஏச. 53: 12. இதைத் திருஷ்டாந்தப்படுத்துவதற்கு நமக்கு ஆர்னல்ட் வின்க்கில்ரெய்ட் (Arnold Winkelreid) என்பவருடைய கதை உண்டு. தம்முடைய தேசம் சத்துருவால் பிடிபட்டு தம்முடைய தேசத்தார் யாவரும் சங்கரிக்கப்பட இருந்தபோது அவர்கள் தப்பித்து ஓட ஓர் வழியில்லை ஆனாலும் ஒன்றுண்டு. அவர் சத்துருக்களின் மத்தியிலோடி அவர்களுடைய ஈட்டியால் தன்னை குத்திக்கொண்டு "விடுதலைக்கு வழி உண்டு பண்ணுங்கள்". என்று சொல்லிக்கொண்டு மடிந்தார். அப்போது ஜனங்கள் தங்கள் சத்துருக்களின் நடுவாய் ஓட முடிந்தது. இம்மாதிரியே இயேசுவும் தம்முடைய ஜீவனைக் கொடுத்து நமக்கு விடுதலைக்கு வழி பண்ணினார். அப்போஸ்தலனாகிய பவுல் அவருடைய அளவற்ற அன்பைக் கண்டு அதினாலே "என்னில் அன்பு கூர்ந்து எனக்காக தம்மைத்தாமே ஒப்புக்கொடுத்த தேவனுடைய குமாரனைப் பற்றும் விசுவாசத்தினாலே பிழைத்திருக்கிறேன் என்று சொன்னார். கலா. 2: 20. அப்படி உன்னால் சொல்லக் கூடுமா?

G. H. Woodward.

நிகழ்கால சத்தியம்

வேத சன்மார்க்க சுகாதார விஷயங்களில் தற்கால அறிவுக்கொத்தபடி மனிதர் அபி விருத்தியடைவதற்கென்று பிரசுரமாகும் ஓர் பத்திரிகை.

மதராஸ் ஜூன்மீ, 1921.

இப்பத்திரிகை, பெங்களூரிலிருக்கும், எஸ். டி. ஏ. பப்ளிஷிங்கவுஸ்காக, பட்டணத்தில் வெப்பேரி என்னுமிடத்திலுள்ள அல்பீனியன் அச்சாபீசில் அச்சடிக்கப் பட்டு வருகிறது.

பத்திராதிபர் பாஸ்றர், ஜி. ஜி. லோளரி.
உதவி „ „ ஈ. டி. தாமஸ்.

	ரூ.	அ.	ப.
தனிப்பிரதி ஒன்றுக்கு ...	0	1	6
வருஷ சந்தா, தபாற் கூலி உள்பட ...	1	0	0
சிங்கப்பூர் பினங்கு முதலிய வெளி ஊர்களுக்கு தனிப் பிரதி ஒன்றுக்கு ...	0	2	0
வருஷசந்தா தபாற்கூலி உள்பட ...	1	4	0

அமெரிக்காவில் இந்திய பொருட் காட்சி.

கல்கத்தா, மே 4—

இந்தியாவின் விளை பொருள்களையும் இந்தியாவின் கைத்தொழிற் பொருள்களையும் மான்ட்ரீல் என்ற விடத்தில் காட்சிக்காக வைக்க ஏற்பாடு நடந்து வருகின்றது. ஜூன் மாதத்தில் வியாபார இலாகா மந்திரி இந்தியாவிலிருந்து பொருள்களை சேகரித்து அனுப்புவார். சணல் நார்வேலை தோல் பதனிட்ட பொருள்கள், தாவர வர்க்கத்தினின்றும் செய்த எண்ணெய், கம்பளம் சித்திர வேலை முதலியவைகள்தான் முக்கிய காட்சிப் பொருளாக விருக்கும்.

சமாசாரக் குறிப்புகள்.

சென்னையில் மரண விகிதம்:—எப்ரல் மாதம் 30-ந் தேதியோடு முடிவான ஒரு வாரத்தில் சென்னை நகரில் 335 பேர்கள் இறந்துபோயிருக்கிறார்கள். இதற்கு முந்திய வாரத்தில் 362-பேர்கள் இறந்துபோயிருக்கிறார்கள். பெரியம்மையால் ஒருவரும் இன்புளுயன்ஸா ஜுரத்தினால் 3 பேர்களும் இதர ஜுரங்களினால் 31 பேர்களும் இறந்து போயிருக்கிறார்கள். சென்ற வருஷம் இதே வாரத்தில் 327 பேர்கள் இறந்து போயிருக்கிறார்கள்.

நேரே உயரப் பறத்தல்.

வானத்தேர்கள் இதுவரை திசைகளை நோக்கிப் பறப்பதுபோல், நேரே உயரச் செல்லுதல் இயலாமலிருந்தது இப்போது ப்ரிடிஷ் ஆகாசபடை மந்திரியின் கார்யஸ்தர்களால் ஒரு ஆஸ்திரிய ராணுவ உத்தியோகஸ்தர் கண்டுபிடித்ததாகக் கூறப்படும் புதுமாதிரி யந்த்ரம் நேராக உயரப்பறந்து வட்டமிட்டுக்கொண்டிருக்க வல்லதென்று லண்டன் "டைம்ஸ்" பத்திரிகை தெரிவிக்கிறது. இந்த யந்த்ரத்தின் அடியில் இரண்டு காற்றுத் திருகுகள் இருக்கின்றன. இவை பரஸ்பரம் எதிரிடையாகச் சுழலுகின்றன. யந்த்ரத்தை மேல்நோக்கித் தள்ளிக்கொண்டு செல்லும் தன்மையுடையன. வானத்தேர் கண்டுபிடித்தது எத்தனை முக்கியமோ அத்தனை இந்த புதுமையும் முக்கியமென்று அந்த விஷயத்தில் நிபுணராவோர் தெரிவிக்கின்றனர்.

நிஜாம் ராஜ்யத்தில் பஞ்ச நிவர்த்தி.

சக்கிந்தராபாத், மே 4—

நிஜாம் ராஜ்யத்தில் எந்தெந்த பாகங்களில் பஞ்சம் ஏற்பட்டதோ அந்த பாகங்களுக்கெல்லாம் ஸர் அலி இமாமும் இன்னொருவரும் சென்று பார்வையிட்டுவந்தனர். இவர்கள் சுற்றுப்பிரயாணத்தை முடித்துக்கொண்டு திரும்பியவுடன் நிஜாம் மன்னர் பஞ்சத்தால் வருந்தும் ஊர்களில் ஒரு வருஷம் வரி வசூலிக்க வேண்டாமென உத்தரவிட்டார். அதோடு அங்குள்ள கூலிகளின் தின சம்பளத்தை ஸர் அலி இமாம் உயர்த்தியதையும் அங்கீகரித்தார், இனி பஞ்சம் நேராமல் தடுப்பதற்கான திட்டங்களைப் போடுவதில் வெகு மும்முரமாய் வேலை நடந்து வருகின்றது. தாராளமாய் ஜல வசதி செய்யப்பட்டிருக்கின்றது. எல்லா இலாகா தலைவர்களும் ஒன்றுகூடி யோசித்து காரியம் நடத்தி வருகின்றனர்.

நிகழ்கால சத்தியம்.

Vol. X. மதராஸ்:—ஜூலை மீ, 1921. No. 7.

THE SECOND-CHANCE DELUSION OF RUSSELISM.

"ரசல் மார்க்கத்தின் மருளான, மறுதருண உபதேசம்."

கிறிஸ்துவின் இரண்டாம் வருகைக்கு முன்னதாக நடக்கும் பெரிய அடையாளங்களில் ஒன்று, கள்ளக் கிறிஸ்துகளின் எழுச்சியும், கள்ளத்தீர்க்கதரிசிகளுடைய எழுச்சியுமே இவ்வுலகில், பிரபலமாயிருக்குமென்று கிறிஸ்து தமது சீஷர்களுக்கு சொல்லியிருந்தார். பொய்யும் மெய்யும், கபடும் உண்மையும், களிம்பும் தங்கமும், சரிச்சரியாய், எப்போதாவது, எக்காலத்திலும், ஒன்றையொன்று அடுத்து நின்றதே கிடையாது. மார்க்க துரோகமானது வரக்காத்திருந்த ஓர் பெருந்தீமை. மேலும் பூர்வ காலங்களில் இதைப் போலொத்த வேதப்பொருத்தமும், நியாயப் பொருத்தமும் இல்லாத, ஏமாற்றத்தக்கும் பொய்க்கலைகள் இருந்ததில்லை ஆனால் இக்காலத்திலோ! தத்துவ ஞானமென்ற பெரிய விஷத்தால் மறைக்கப்பட்டிருக்கும் போலிக் கொள்கைகளுக்கும், மற்றும், கபடான அநேக வேத ரூபகாரங்களுக்கும், திரளான ஜனங்கள் தங்கள் செவியைச் சாய்த்துக்கொண்டிருக்கிறார்கள்.

ரசல் மார்க்கமும், பரிசுத்த ஆவிகளில் ஐக்கியத்தையுடைய மார்க்கமும், (Spiritualism) *இவைபோன்ற இன்னும் மற்ற மார்க்கங்களும், பாவத்தில் அமிழ்ந்து அழிந்து போகிற இவ்வுலகத்துக்கு, சர்வ ரோக அவுஷதமாக, அநேக விசித்திரமான கோட்பாடுகளை வைத்திருப்பதாக ஒவ்வொன்றும் சொல்லுகிறது. பொய் மறையின் நாமங்கள் திரள் திரளாய் இருந்தாலும், மெய் வேதாகம சத்தியம் ஒன்றுதான் இருக்கவேண்டும். பூர்வீக புத்தகமானது தனது சத்தியத்தின் தொனியை, இன்னும் தொனித்துக்கொண்டிருக்கிறது. அல்லாமலும் நமது முற்பிதாக்களின் விசுவாசம் ஒரு காலத்திலும் அசைக்கப்பட்டதேயில்லை. ஆத்துமத்தை உயிர்ப்பிக்கச் செய்யும் அப்போஸ்தலர்களுடைய தூதுகள் தங்களுடைய உண்மையையும், வல்லமையையும் இழந்து, ஒருநாளும் இளக்கரித்துப்போனதேயில்லை. வேத எழுத்துகளைச் சரியாய் பகுத்தறியும் விதத்தை யறியாமல், மனத்தோற்றமான கோட்பாடுகளில் மூர்க்கமாய் ஓடி, சீர் தப்பி நடக்கிற அநேகர் இப்போது தோன்றியிருக்கிறார்கள். ஆனபடியால், எவ்வித மனோ ராட்சியமான அர்த்தமும், வேதத்தில் கட்டளையிடப்படாத தீர்மானமும், முற்றிலும்பற்றற விலக்குவது அவசியம்.*

மறு தருண போதகம், ஓர் கொடூரமான வஞ்சகம்.

ரசல் மார்க்கமானது, குழப்பமும் கிளர்ச்சியும் பொருந்தினதாய், சாவுக்கேதுவான விஷ நிறைந்த பொய்யையுடையதாயிருக்கிறபடியினால், அதனை "வஞ்சகங்களுக்கு-அரசி" யென்று ஐயமறச் சொல்லத்தகும். பாவ இருளடைந்த இவ்வுலகத்துக்கு, ரசல் மார்க்கத்தாரால் கொடுக்கப்படும் "ஆயிர வருஷ அரசாட்சியில் இரட்சிப்பு," என்ற இக்கொள்கை மகா கொடியதாயிருக்கிறது. இப்போது பூமியில் வசிக்கிற ஆயிரக்கணக்கான மனுஷர்கள், நித்திய அழிவாகிற அப்பாறையின்மேல் விழுந்து நாசமடைவதற்கு ஏதுவாக, இவ்வுபதேசம் அவர்களுக்கு நல்ல வசதியாயிருக்கிறது.

மத்தியஸ்தராகவும், பிரதான ஆசாரியராகவும், வேலை செய்யும் கிறிஸ்துவானவர்: ராஜாதி ராஜனாகவும், கர்த்தாதி கர்த்தனாகவும், இப்பூமிக்கு வருமுன்னே தமது ஊழியத்தை பூரணமாய் நிறைவேற்றித் தீர்ப்பார். அப்போது அவர் தமது நீதியை நிறைவேற்றவேண்டி, தமது ஆசாரிய உடைகளை களைந்து ராஜ வஸ்திரம் தரித்துக்கொள்வார். முன்பு, பத்தொன்பது நூற்றாண்டுகளுக்கு முந்தி கிறிஸ்துவானவர், இழந்துபோனதை தேடவும், இரட்சிக்கவும், வந்தார். ஆனால், இனி இரண்டாந்தரமாக, பிரேதக்குழியின் பெரிய விலங்கிலிருந்து நீதிமான்களை மீட்டு, மகிமையின் பூமியில் கட்டப்பட்டிருக்கும் வாசஸ்தலத்துக்கு அவர்களை மறுரூபப்படுத்திக்கொண்டு போகும்படியாக வருகிறார். அவர் அநீதிமான்கள்பேரில் நீதியைச் சரிக்கட்டுதற்கு வருகிறாரே யல்லாமல், அவர்களை ரட்சிக்கும்படிக்கல்ல.

கிறிஸ்துவின் இரண்டாம் வருகைக்கு முன்னதாக தவணையின் காலம் முடிவடையும், என்று காட்டுவதற்கு அறிகுறியாக ஓர் கட்டளை பிறப்பிக்கப்படும். அதாவது: "அநியாயஞ் செய்கிறவன் இன்னும் அநியாயஞ் செய்யட்டும்; அசுத்தமாயிருக்கிறவன் இன்னும் அசுத்தமாயிருக்கட்டும்; நீதியுள்ளவன் இன்னும் நீதி செய்யட்டும்; பரிசுத்தமுள்ளவன் இன்னும் பரிசுத்தமாகட்டும். இதோ, சீக்கிரமாய் வருகிறேன்; அவனவனுடைய கிரியைகளின்படி அவனவனுக்கு நான் அளிக்கும் பலன் என்னோடேகூட வருகிறது." (வெளி. 22: 11, 12.)

இயேசு இப்பூமிக்கு வருவதற்கு சற்று முன்னே, தேவ கோபாக்கினை யென்ற "கடைசி ஏழு வாதைகளை," இப்பூமியின் துன்மார்க்கர்பேரில் ஊற்றுவார். நீடிய பொறுமையாகிய தேவ கிருபையை, அவருடைய நீதியானது, அக்காலங்களில், முற்றிலுமாய் தடை செய்யும். அப்போது நியாயத்தீர்ப்பு பூரணமாய் முடிவடைந்த நீதிமான்களுக்கு "இரட்சிப்பு" அளிக்கப்படும். "அன்றியும் ஒரேதரம் மரிப்பதும், பின்பு நியாயத்தீர்ப்பு அடைவதும் மனுஷருக்கு நியமிக்கப்பட்டிருக்கிறபடியே, கிறிஸ்துவும் அநேகருடைய பாவங்களைச் சுமந்து தீர்க்கும்படிக்கு ஒரே தரம் பலியிடப்பட்டு, தமக்காகக் காத்துக்கொண்டிருக்கிறவர்களுக்கு இரட்சிப்பை அருளும்படி இரண்டாந்தரம் பாவமில்லாமல் தரிசனமாவார். (எபி. 9: 27, 28.)

முற்பிதாக்களின் காலத்திலிருந்த உலகத்துக்கும், கிறிஸ்துவின் வருகைக்கு சற்றுமுன்னேயுள்ள உலகத்துக்கும் உள்ள சமமான தாரதம்மியம், கிறிஸ்துவின் தீர்க்கதரிசனங்களில் தீர்க்கமாய் கூறப்பட்டிருக்கிறது. தேவனுடைய பொறுமை நீடித்ததாயிருந்தும், சீர்கேட்டின் மிகுதியினாலும், ஈனமான அக்கிரமங்களினாலும், தங்களைக் கொடுத்துக்கொண்டிருந்தபடியால், அந்த முன்னான சந்ததியார் சீக்கிரம் அழிக்கப்பட்டுப்போனார்கள். அவர்களுக்கு நேரிட்ட சம்பவமே, கிறிஸ்துவின் இரண்டாம் வருகையில் அழிக்கப்படப்போகிற இவ்வுலகத்துக்கு, ஓர் முன்னடையாளமாக வைக்கப்பட்டிருக்கிறது. (2 பேது. 2: 4-6.) தெய்வ தத்துவத்தை திரையினால் மறைக்கும் இக்கொள்கை, உண்மையிலேயே அதிக

வியப்பை யுண்டாக்குகிறது. முன்னிருந்த உலகத்தைப்பற்றி, தேவன் தீர்த்த நியாயம் சரியல்லவென்று, சந்தேகங்கொண்டு அவர்களுக்கு மறுபடியும் ஓர் தவணை உண்டென்று மருளான போதகத்தை போதிக்கிறது. ஆனால் தேவன், அவர்கள்மீது நீடிய பொறுமையுள்ளவராயிருந்தாலும், தங்கள் அக்கிரமங்களில் தாங்களே விழுந்து அழிந்துபோனார்கள். பிற்காலத்தில் கொடுக்கப்படப்போகும் வசதியுள்ள மறு தருண காலத்தில், சாத்தான் மனிதரை மோசம்போக்கமாட்டானென்றும், நீதியைச் செய்வதற்கு எவ்வித பிரயோகமும் அவசியமிராதென்றும் சொல்லுகிறது. இவ்விதமாய் உபதேசிக்கிற ரசல் மார்க்க கொள்கை, தேவ நீதியாகிய மூலைக்கல்லைத் தகர்த்து, வேதாகமத்தின் இரட்சண்ய வழியை எறிந்துபோடுகிறது மேலும், ஆயிரக்கணக்கான வருஷங்களுக்கு இப்பூமியானது நீடித்திருக்கவேண்டுமானாலும், அவர் தமது ஜனங்களுக்கு செய்திருக்கிற ரட்சண்ய வழிக்கு மேலாக வேறொன்றும் செய்யவே மாட்டார். வான ராட்சியத்தின் திரளான ஐசுவரியம், கிறிஸ்து நாதரின் வரத்தின் மூலமாய் ரொம்பவும் செலவிடப்பட்டிருக்கிறது. அவரது அன்பின் தாதை மறுத்துத்தள்ளின அவர்களுக்கு மறு தருணம் கொடுக்கப்படுமானால், கிறிஸ்துவின் இரட்சிப்பை மறுத்தவர்களும், தூஷணங்கள் கூறி தங்கள் பற்களை பகையின் துவேஷத்தினால் கடித்த அவர்கள், அதை மறுபடியும் பற்றிக்கொள்வார்களோ?

நிலையற்ற அவர்கள் தேதியை இப்போது 1925-ம் வருஷத்துக்கு மாற்றியிருக்கிறார்கள்.

இப்போது வசிக்கிற ஆயிரக்கணக்கான ஜனங்கள், மரணத்தை ருசிப்பதில்லை, என்ற கொள்ளிவாய்ப் பிசாசைப்போலொத்த போதகம், ரசல் மார்க்கத்தாரால் போதிக்கப்படுகிறது. கடைசி காலத்தின் நிலைமையைப்பற்றிய தீர்க்கதரிசனத்தின் நிறைவேறுதல்: இப்பூமியில் வாசம் பண்ணுகிற நீதிமான்களில் அநேகர், கிறிஸ்துவின் வருகையிலே மரணத்தைக் காணாமலே மறுரூபமாக்கப்படுவார்களென்று நமக்கு நிச்சயத்தைக் கொடுக்கிறது. மேலும் உலகத்தில் வசிக்கிற அநேக ஆயிரங்களான ஜனங்களில், வெகு சொற்பப்பேர் மாத்திரம், மறுரூப பதவிக்கு தகுதியுள்ளவர்களென்று தீர்க்கப்படுவார்கள். விசால பாதையில் நடக்கிற அநேக பிரயாணிகளை, அப்பாதையானது, அழிவுக்கு வழி நடத்துகிறதேயன்றி; மறுதருணமாகிற, மனத்தோற்றமான கொள்கையில் ஒருபோதும் நடத்துகிறதேயில்லை. நெருக்கமான பாதையில் நடக்கிற சிலர், கிறிஸ்துவின் இரண்டாம் வருகையின்போது பரலோக மாளிகையிலே அவரோடுகூட ஆயிர வருஷம் அரசாட்சி செய்யும்படி எடுத்துக்கொள்ளப்படுவார்கள். (வெளி. 20: 4). ஆயிர வருஷகாலத்தில் பூமியானது வெறுமையாயும், பொல்லாதவர்கள் மரணமடைந்தும், இருப்பார்கள். (வெளி. 20:) அதிகாரத்தில் சொல்லப்பட்டிருக்கும் சந்தேகமற்ற சத்தியமானது, மேற்சொன்னவற்றைத் தவிர, யாதொரு அர்த்தமும் கொடாது.

இப்பூமியின்மேல் 1925-ம் வருஷம் வரையிலும் உயிரோடிருக்கும் ஜனங்கள், மரியாமல் ஜீவித்திருப்பார்களென்றும்; அப்போது சாத்தானுடைய சகல சோதனைகளும் நீக்கப்பட்டு, கிறிஸ்துவின் அரசாட்சி இப்பூமியில் ஸ்தாபிக்கப்படுமென்றும் போதித்து, தெளிவான வேத உண்மையை பொய்யாக்கும்படி ரசல் மார்க்கம் முயலுகிறது. வெளி. 20: 5-ல், "மரணமடைந்த மற்றவர்கள் அந்த ஆயிரம் வருஷம் முடியுமளவும் உயிரடையவில்லை. இதுவே முதலாம் உயிர்த்தெழுதல்." என்ற தெளிவான சத்தியத்தை புரட்டித்தள்ளி; அதற்குப்பதிலாக, ஆயிர வருஷ துவக்கத்தில் பொல்லாதவர்கள் உயிரடைந்து, இரண்டாம் தவணையின் சலாக்கியத்தை பெறுவார்களென்றும் போதிக்கிறது. இவ்விதமாய் தெளிவான வேத சத்தியங்கள், போலியான வேத மாணாக்கர்களாலும், வேதத்துக்கு அடாததும் அழிவுக்கேதுவானதுமான கொள்கைகளினாலும் சின்னபின்னமாக்கப்படுகிறது.

ஒவ்வொரு மனுஷனும் நியாயாசனத்துக்குமுன் நிற்கவேண்டும்.

தீர்க்கதரிசிகளும் அப்போஸ்தலர்களும் சேர்ந்து சம ஒற்றுமையாய் எழுதியிருக்கும் சாட்சிகளனைத்தும், "இதுவே இரட்சிப்பின் காலம்," "இதுவே இரட்சண்யநாள்" என்று அதிக உறுதியாய் நம்மை ஸ்திரப்படுத்துகிறது. "அறுப்பு உலகத்தின் முடிவு" அறுப்புக் காலம் தீர்ந்துபோனபிறகு, இரட்சிப்பின் சலாக்கியம் முற்றிலுமாய் ஒழிந்துபோம். மனுஷன் செய்த கிரியைகளின் காரியத்தையே, நியாயத்தீர்ப்பில் விசாரித்து பலன் அளிக்கப்படும். கிறிஸ்துவின் சுவிசேஷத்துக்கு கீழ்படியாதவர்களுக்கு, தேவ உக்கிர கோபமே, அவர்களின் பலனாக வைக்கப்பட்டிருக்கும். இரட்சிப்பை மறுத்த அனைவருக்கும், எவ்வித மன்னிப்பும், நியாயத்தீர்ப்பில் கொடுக்கப்படவேமாட்டாது. இரட்சிக்கப்படும்படி எல்லோருக்கும் போதுமான காலம் கொடுக்கப்பட்டிருக்கிறது. சர்வ லோகத்தின் நியாயாதிபதியானவர், ஒவ்வொரு மனுஷனுக்கும் சத்தியத்தை அறிந்துகொள்வதற்கு கொடுக்கப்பட்டிருக்கிற நற்சமயங்கள் எவ்வளவென்று, சீர்தூக்கிப் பார்க்கிறார். வேதாகம சத்தியங்களை தங்கள் வழிகாட்டியாக வைத்துக்கொள்ளாத அநேகரிலும், சிலர், தாங்கள் நியாயத்தீர்ப்பின் காலத்தில் குற்றஞ் சாட்டப்படுவார்கள். அல்லது மன்னித்துவிடப்படுவார்கள் என்று, அவர்கள் எண்ணமும் மனச்சாட்சியுமே சாட்சியிடுகிறது. அப்போஸ்தலனாகிய பவுல் ரோமருக்கு எழுதியுள்ள இக்கீழ் வரும் வாக்கியங்களில், ஆயிரவருஷ காலத்தில் மறுதருணம் உண்டென்று சொல்லும் கொள்கையை, வேரோடே முற்றிலுமாய் அறச்செய்கிறார். "அல்லது தேவ தயவு நீ குணப்படும்படி உன்னை எவுகிறதென்று நீ அறியாமல், அவருடைய தயவு பொறுமை நீடிய சாந்தம் இவைகளின் ஐசுவரியத்தை அசட்டை பண்ணுகிறாயோ? உன் மனக்கடினத்துக்கும் குணப்படாத இருதயத்துக்கும் ஏற்றபடி, தேவனுடைய நீதியுள்ள தீர்ப்பு வெளிப்படும் கோபாக்கினையின் நாளிலே உனக்காகக் கோபாக்கினையைக் குவித்துக்கொள்ளுகிறாயே. தேவன் அவனவனுடைய கிரியைகளுக்குத் தக்கதாய் அவனவனுக்கு பலனளிப்பார். சோர்ந்துபோகாமல் நற்கிரியைகளைச் செய்து, மகிமையையும் கனத்தையும் அழியாமையையும் தேடுகிறவர்களுக்கு நித்திய ஜீவனையளிப்பார். சண்டைக்காரராயிருந்து, சத்தியத்திற்குக் கீழ்படியாமல், அநியாயத்திற்குக் கீழ்படிந்திருக்கிறவர்களுக்கோ உக்கிர கோபாக்கினை வரும். முன்பு யூதரிலும் பின்பு கிரேக்கரிலும் பொல்லாங்கு செய்கிற எந்த மனுஷ ஆத்துமாவுக்கும் உபத்திரவமும் வியாகுலமும் உண்டாகும். முன்பு யூதரிலும் பின்பு கிரேக்கரிலும் எவன் நன்மை செய்கிறானோ அவனுக்கு மகிமையும் கனமும் சமாதானமும் உண்டாகும். தேவனிடத்தில் பட்சபாதமில்லை. எவர்கள் நியாயப்பிரமாணமில்லாமல் பாவஞ் செய்கிறார்களோ, அவர்கள் நியாயப்பிரமாணமில்லாமல் கெட்டுப்போவார்கள்; எவர்கள் நியாயப்பிரமாணத்துக்குட்பட்டவர்களாய்ப் பாவஞ் செய்கிறார்களோ, அவர்கள் நியாயப்பிரமாணத்தினாலே ஆக்கினைத் தீர்ப்படைவார்கள். நியாயப்பிரமாணத்தைக் கேட்கிறவர்கள் தேவனுக்கு முன்பாக நீதிமான்களல்ல, நியாயப்பிரமாணத்தின்படி செய்கிறவர்களே நீதிமான்களாக்கப்படுவார்கள். அன்றியும் நியாயப்பிரமாணமில்லாத புறஜாதிகள் சுபாவமாய் நியாயப்பிரமாணத்தின்படி செய்கிறபோது, நியாயப்பிரமாணமில்லாத அவர்கள் தங்களுக்குத் தாங்களே நியாயப்பிரமாணமாயிருக்கிறார்கள். அவர்களுடைய மனச்சாட்சியும்கூடச் சாட்சியிடுகிறதினாலும், குற்றமுண்டு குற்றமில்லையென்று அவர்களுடைய சிந்தனைகள் ஒன்றையொன்று தீர்க்கிறதினாலும், நியாயப்பிரமாணத்துக்கேற்ற கிரியை தங்கள் இருதயங்களில் எழுதியிருக்கிறதென்று காண்பிக்கிறார்கள். என் சுவிசேஷத்தின்படியே, தேவன் யேசுக்கிறிஸ்துவைக்கொண்டு மனுஷருடைய அந்தரங்கங்களைக்குறித்து நியாயத்தீர்ப்பு கொடுக்கும் நாளிலே இது விளங்கும். (ரோமர் 2: 4-16.)

கிறிஸ்து இனி வரப்போகிறவராய் இருக்கிறார், ஆனால் இன்னும் வரவில்லை.

கள்ளக்கிறிஸ்துகள் எழும்புவார்களென்று, கிறிஸ்துவினால் முன்னுரைக்கப்பட்டதானது, இப்போது ரசல் மார்க்கத்தாரில் நிறைவேறுகிறது. கிறிஸ்துவின் வருகையானது மகிமை பொருந்திய ஒரு சம்பவமாயிருக்கிறது. மின்னல்போன்ற மகிமையுடனும், "ஆரவாரத்தோடும், பிரதான தூதனுடைய சத்தத்தோடும் தேவ எக்காளத்தோடும்" வான சேனைகளால் சூழப்பட்டு இப்பூமியில் தோன்றுவார். அவருடைய மகிமையானது நீதிமான்களை அழியாமையுள்ளதாக்குகிறது. கிறிஸ்துவுக்குள் மரித்தவர்கள் முதலாவதாக எழுந்திருக்க, பின்பு உயிரோடிருக்கும் நீதிமான்களும் மறுரூபப்பட்டு, இவ்விதமாய் வான ராட்சியம் சேருவார்கள். மாசற்ற தேவ மகிமையின் முன்னாக பாவம் நில்லாது, அன்றியும் பொல்லாதவர்கள் அவருடைய வருகையின் பிரசன்னத்தினாலே அழிக்கப்படுவார்கள்.

1878-ம் ஆண்டு முதல் கிறிஸ்து இப்பூமியிலிருக்கிறார், என்று மாறுபாடாய்ச் சொல்லும், கிறிஸ்துவின் வருகை இப்போது ரசல் மார்க்கத்தாரால் போதிக்கப்படுகிறது. அவருடைய இரண்டாம் வருகையின்போது, மத்தேயு 24-ம் அதிகாரத்தில் சொல்லப்பட்டிருக்கும் "மின்னல்," என்பதும்; தெசலோனிக்கேயர் 4-ம் அதிகாரத்தில் சொல்லப்பட்டிருக்கும், "ஆரவாரம்," "பிரதான தூதனுடைய சத்தம்," "எக்காளம்," என்ற இந்த வெளிப்படையான பொருள்களை, ஆவிக்குறிய அர்த்தமென்றும், அறிகுறியான பதம் என்றும் சொல்லி தெளிவான வேத சத்தியங்களை புரட்டித் தள்ளுகிறார்கள். புத்தகங்களுக்கெல்லாம் பெரிய புத்தகமென்று விளங்குகிறவற்றின் தெளிவான அரிய சத்தியங்களை, மனத்தோற்றமான அர்த்தத்தினால் வியாக்கியானம் செய்வோமானால், கிறிஸ்து மார்க்கத்தாராகிய நமக்கு, நாம் இப்போது ஊன்றி நிற்கிற, சத்தியமென்ற அப்பாறையே இல்லாமற் போய்விடும். ரசல் மார்க்கத்தின் வேத சாஸ்திரம், வஞ்சக புதை மணலின்மேல் நாட்டப்பட்ட ஒரு கட்டடத்துக் கொப்பாயிருக்கிறது. ஆனால் வேதாகமத்தின் வெளிப்படையான கொள்கையோ, உறுதியான பாறையைப்போல் என்றும் நிற்கிறது. ரசல் மார்க்கமானது போலி நியாயங்களில் சார்ந்திருக்கிறதுபோல, பொய்யும் உண்மையோடு சார்ந்திருக்கிறது. இது சாவுக்கேதுவான வஞ்சகமேயொழிய வேறல்ல. இப்போது வசிக்கிற ஆயிரக்கணக்கான ஜனங்கள் நாள்தோறும் மரித்து, தங்களை கிறிஸ்துவைவிட்டு நித்திய காலமாக பிரித்துக்கொள்ளுகிறார்கள். ஆயிரக்கணக்கான ஜனங்கள், தேவனுடைய கடைசி எழு வாதைகளை அநுபவிப்பதற்கென்று வைக்கப்பட்டிருக்கிறார்கள். ஆயிரக்கணக்கான ஜனங்கள் கிறிஸ்துவின் வருகையினாலுண்டான பிரகாசத்தில் அழிக்கப்படும்படிக்கு வைக்கப்பட்டிருக்கிறார்கள். ஆயிரக்கணக்கான ஜனங்கள், நாளுக்குநாள், மன்னிப்பாகிற தேவ தயவை அசட்டை செய்து, மறுதருண தவணை யென்கிற பொய்யான நம்பிக்கையையுடையவர்களாயிருக்கிறார்கள். கடைசியாய் ஒன்று மாத்திரம் நமது ஞாபகத்திலிருக்கட்டும். அதாவது "தமக்காகக் காத்துக்கொண்டிருக்கிறவர்களுக்கு இரட்சிப்பை அருளும்படி இரண்டாந்தரம் பாவமில்லாமல் தரிசனமாவார். எபி. 9: 28.

வி. யோவான்.

"நமக்கு சுகமுண்டாகும்படிக்கு, தேவனால் கொடுக்கப்பட்டிருக்கிற பரிகாரங்களை நாம் உபயோகிக்கிறதினால், தேவன்மேலுள்ள விசுவாசத்தை அடிக்கடி காண்பிக்கக் கூடும்."

(THE NEED OF A STANDARD.)

பிரமாணத்தின் அவசியம்

அங்கீகாரம்பெற்ற ஓர் சன்மார்க்கப் பிரமாணம் உலகத்தின் எக்காலத்தைவிட இக்காலத்திற்கு மகா அவசியம். சகலவித தத்துவ சாஸ்திரங்களும், நீதி சாஸ்திரப் போதனைகளும் கற்பிக்கப்படும் கல்விச்சாலைகள் ஏராளமாயிருக்கின்றன. ஆனால் அவையெல்லாம் மனிதருக்கு உதவியாயிருப்பதற்கு பதிலாக அடிக்கடி மனதைக் குழம்பச்செய்கின்றன. ஆகிலும் உலகத்திற்கு அவசியமாய் வேண்டிய அந்தப் பிரமாணம் தேவனிடத்திலிருக்கிறது. அது அவருடைய பரிசுத்த பிரமாணமாகிய பத்துக் கற்பனைகள்தான். பிர. 12: 13, 14; யாக். 2: 8-12. சபைக்கு அந்தப் பிரமாணமே அவசியம். அந்தப் பிரமாணம் நம்மை இரட்சிக்கமுடியாது. ஆனால் அது நம்மை அழிக்கும் காரியங்கள் எவையென்று நமக்கு எடுத்துக்கூறி, பெயர் சொல்லி, சுட்டிக் காண்பித்து, வெளியாக்குகிறது. ரோ. 3: 20; 7: 7; 1 யோ. 3: 4. அது பாவியை ஆக்கினைக்குள்ளாகத் தீர்த்து, இரட்சகராகிய கிறிஸ்துவைக் காண்பிக்கிறது. கர்த்தர் நமக்குக் கொடுக்கும் விசுவாசத்தினாலுண்டாகும் நீதியை அது ஒப்புக்கொண்டு அதற்குச் சாட்சி கொடுக்கிறது. ரோ. 3: 21, 22. பிறகு நம்முடைய கர்த்தராகிய கிறிஸ்துவைப்பற்றும் விசுவாசமானது, விசுவாசியின் இருதயத்தில் தேவனுடைய பிரமாணத்தை நிலைநிறுத்துகிறது. ரோ. 3: 31.

"பாவம் இன்னதென்று நியாயப்பிரமாணத்தினால் நான் அறிந்தேனேயன்றி மற்றப்படி அறியவில்லை" என்று முதலில் பரிசேயனாயிருந்த சவுல் சொல்லுகிறார். அவர் தன்னை நீதிமானென்று எண்ணிக்கொண்டார். ஆனால் தேவ ஆவியானவர் தேவப்பிரமாணமாகிய அந்தப் பெரிய வெளிச்சத்தை, உள்ளத்தை ஊடுருவப் பார்க்கும் அந்தப் பரம கருவியை அவருடைய இருதயத்தில் ஒளி வீசும்படிச் செய்தார். உடனே சவுல் பாவம் மகா பயங்கரமாயிருப்பதையும், தான் மரண தண்டனை விதிக்கப்பட்ட நிர்ப்பாக்கியனாயிருப்பதையும் கண்டுகொண்டார். உலகத்தில் தற்காலத்திலும் மனிதரின் பாவமுள்ள இருதயங்களில் அந்தத் தெளிவான பிரமாணத்தின் வெளிச்சம் வல்லமையாய்ப் பிரகாசிக்கவேண்டியது அவசியம். பாவத்திலும் சிற்றின்பத்திலும் நித்திரை செய்துகொண்டிருப்பவர்களை எழுப்புவதற்குச் சீனா மலையின் இடி முழக்கம் அவசியம் தேவை. மகத்துவமான பரிசுத்த பிரமாணத்தை மனுஷனுக்கு வெளிப்படுத்துவதற்கு தேவனுடைய சத்தம் தேவை. அதற்கு மனிதன் தன் மனச்சாட்சியைக் கீழ்ப்படுத்தவேண்டும். பாவம் அதிகரித்திருக்கும் இருதயத்தை உருவக் குத்துவதற்கும், பாவிக்கு அவனுடைய ஜீவியத்தின் நினைவுகள் யோசனைகள் அபிப்பிராயங்கள் நோக்கங்கள் எல்லாவற்றையும் எடுத்துக் காட்டுவதற்கும் இந்த ஆவியின் பட்டயம் அவசியம். எபி. 4: 12.

தேவ ஊழியன் தன் வேலையில் தேவப்பிரமாணத்தின் முக்கியத்தை எடுத்துணர்த்துவதை விசேஷமாய்ச் செய்தால் அதிகமான மனமாறுதல் உண்டாவதை நாம் பார்க்கலாம். அதினால் மெய் மனஸ்தாபமும் உண்மையான குணப்படுதலும் உண்டாகும். நியாயப்பிரமாணம் இல்லாமல் சுவிசேஷத்தைப் போதிக்கிறவன் "என் ஜனத்தின் குமாரத்தியினுடைய" காயங்களைக் கொஞ்சமாய் மாத்திரம் குணமாக்குகிறானென்று Adam Clarke என்பவர் மெய்யாய்ச் சொல்லியிருக்கிறார். தேவனுடைய சபையானது அவருடைய பெரிய பிரமாணத்திற்குத் திரும்பி வந்தால் சிவில் சம்மந்தமான சட்டங்களும் கிரிமினல் சட்டங்களும் அதிகம் தேவையாயிராது. தேவப்பிரமாணம் மனிதரின் இருதயங்களில் தேவ பயத்தையுண்டாக்கும். ஜீவப்பிரமாணமாகிய அவரைப்பற்றும் விசுவாசத்தினாலே ஒவ்வொரு கற்பனையும் எவ்வளவு முக்கியமென்பதைக் கிறிஸ்தவன் கண்டுகொள்வான்.

"THE GLORIOUS APPEARANCE OF CHRIST."

கிறிஸ்துவின் மகிமைப் பிரசன்னம்.

"இதோ, மேகங்களுடனே வருகிறார்."

சிநேகிதர்களே!

"**இப்படி வருகிறவர் ஆர்?** கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவே வருகிறார். இவரே நித்தியானந்தமுள்ள ஏக சக்கிராதிபதி; இவரே ராஜாதி ராஜாவும், கர்த்தாதி கர்த்தாவும், ஒருவராய்ச் சாவாமையுள்ளவருமாயிருக்கிறவர்; இவரே ஆதியிலே பூமியை அஸ்திபாரப்படுத்தினவர். வானங்கள் இவருடைய கரத்தின் கிரியையாயிருக்கிறது. இவைகளெல்லாம் அழிந்துபோகும் காலத்திலும் இவர் ஒருவரே நிலைத்திருப்பார். இவர் ஒருவரே மாறாதவர். இவருடைய ஆண்டுகளுக்கு முடிவில்லை. இவரே 1921 வருஷங்களுக்கு முன்னே இந்தப் பூமியிலே மனுஷனாய்ப் பிறந்து, நன்மை செய்கிறவராயும் பசாசின் வல்லமையில் அகப்பட்ட யாவரையும் குணமாக்குகிறவராயும் சுற்றித்திரிந்தார். குற்றமும் மாசுமில்லாத மகா பரிசுத்தராய் அவர் நடந்து, ஒழுக்கம் இன்னது தேவபக்தி இன்னது என்று தமது நடக்கையினாலே வெளிப்படுத்தினார். மனுஷர்கள் மீறின தேவ கட்டளையை அவர் அவர்களுக்காகக் கைகொண்டு நிறைவேற்றினார். அப்படி தேவ கட்டளையை மீறின பாவிகளுக்கு வரவேண்டிய நீதியுள்ள தேவ தண்டனையை நீக்கும்படி, அவர்களுக்காகத் தம்மைத்தாமே பாவ நிவாரணப் பலியாகச் செலுத்தினார். அதினிமித்தமே அவர் சிலுவையில் அறையப்பட்டு, மிகுந்த வேதனையை அனுபவித்து, தமது ஜீவனைப் பலியாக ஒப்புவித்து மரித்தார். அவர் மூன்றாம் நாளிலே திரும்பவும் உயிர்த்தெழுந்து வந்து, தமது சீஷருக்குப் பலதரமும் தரிசனையானார். நாற்பது நாள் சென்ற பின்பு அவர் மேகத்தின் வழியாய்ப் பரலோகத்திற்குப்போய், அங்கே நமது மத்தியஸ்தராய் வீற்றிருக்கிறார்.

"**அவர் எப்படி வருகிறார்?** "இதோ, மேகங்களுடனே வருகிறார்." இந்த இயேசுவானவர் எப்படி வானத்துக்கு எழுந்தருளிப்போனாரோ, அப்படியே மறுபடியும் வருவார். முன் அவர் பூமியிலிருந்தபோது, தம்மைத்தாமே வெறுமையாக்கி அடிமையின் ரூபமெடுத்து, மனுஷரால் அசட்டைப் பண்ணப்பட்டவராயிருந்தார். இப்பொழுதோ, அவர் மேகங்களில் வருகிறார். அவருடைய சிங்காசனம் அக்கினிச் சுவாலையும் அதினுடைய சக்கரங்கள் எரிகிற நெருப்புமாயிருக்கிறது; அக்கினி நதி அவருடைய சந்நிதியிலிருந்து புறப்பட்டு ஓடுகிறது. ஆயிரமாயிரம்பேர் அவரைச் சேவிக்கிறார்கள். கோடாகோடிபேர் அவருக்கு முன்பாக நிற்கிறார்கள். சகல ஜனங்களும் ஜாதியாரும் பாஷைக்காரரும் அவரையே சேவிக்கும்படி அவருக்குக் கர்த்தத்துவமும் மகிமையும் ராஜரீகமும் கொடுக்கப்பட்டிருக்கிறது. அவருடைய கண்கள் அக்கினிச் சுவாலையைப்போலிருக்கிறது. அவருடைய பாதங்கள் உலைக்களத்தில் காயும் பிரகாசமான வெண்கலம்போலிருக்கிறது. அவருடைய முகம் வல்லமையாய்ப் பிரகாசிக்கிற சூரியனைப்போலிருக்கிறது. அவருடைய சிரசின்மேல் அநேக கிரீடங்கள் இருக்கிறது. ஜெயித்தவராய் ஜெயிக்கும்படி புறப்பட்டு வருகிறார். பரலோகத்திலுள்ள சேனைகள் வெண்மையும் சுத்தமுமான மெல்லிய வஸ்திரம் தரித்தவர்களாய் வெள்ளைக் குதிரைகளின்மேல் ஏறி, அவருக்குப்பின் செல்லுகிறார்கள். இப்படியே, பாவிகளின் இரட்சகராகிய இயேசுவானவர் தம்முடைய பிதாவின் மகிமை பொருந்தினவராய்த் தம்முடைய தூதரோடுங்கூட வானத்தின் மேகங்களின்மேல் மகா மகிமையோடும் வல்லமையோடும் வருகிறார்.

"**அவர் எப்பொழுது வருகிறார்?** நாம் நினையாத நேரத்தில் அவர் வருவார். அந்த நாளையும் நாழிகையையும் தேவன் ஒருவர் தவிர மற்ற யாரும் அறியமாட்டார்கள். ஆகி

லும், தம்முடைய ஜனங்கள் இனி வரும் ஆபத்துகளை முன்னறிந்து, அவைகளுக்குத் தப்பிக்கொள்ளவும், தமது வருகைக்கு விழிப்போடே எதிர்பார்த்துக் காத்திருந்து, தமது மகிமையில் சேரவுந்தக்கதாய், தமது வருகைக்குமுன் உலகத்தில் நேரிடும் சில அடையாளங்களை அவர் தமது சீஷர்களுக்குச் சொல்லியிருக்கிறார். அந்த அடையாளங்கள் எப்பொழுது சம்பவிக்கிறதோ, அப்பொழுது அவருடைய வருகை வாசலினருகே சமீபமாய் வந்திருக்கிறதென்று நாம் அறிந்து, அதற்கு விழித்திருக்கவேண்டும். சிருஷ்டிப்பின் சம்பந்தமாயும், ராஜ்யங்களின் சம்பந்தமாயும் சபையின் சம்பந்தமாயும் தமது வருகைக்குமுன் நடக்கும் என்று அவர் சொல்லிவிட்டுப்போன அடையாளங்களில் அநேகம் இக்காலத்தில் திட்டமாய்ச் சம்பவிக்கின்றன. ஆகையால் அவர் வர இனிக் காலஞ்செல்லாது நாம் நினையாத நாளிலும் நாழிகையிலும் அவர் வருவார்.

“அவர் எவ்விடத்திற்கு வருகிறார்? இந்தப் பூமிக்கே திரும்ப வருகிறார். தேவன் இந்தப் பூமியை மிகவும் சிறப்பாய்ச் சிருஷ்டித்து, அதை ஆண்டுகொள்ளும்படி மனுஷனை ஏற்படுத்தினார். அவனோ தேவன் கொடுத்த கற்பனையை மீறி, பாவியாகி, தன்மேலும் தன் சந்ததியின்மேலும் மரணத்தை வருவித்து, பூமியின்மேல் தனக்குண்டாயிருந்த உரிமையையும் இழந்துபோனான். இப்படிப் பாவத்தினால் கெட்டுப்போன மனிதர்களை மாத்திரமல்ல, அவர்களுடைய சுதந்தரமாகிய இந்தப் பூமியையும் மீட்டுக்கொள்ளும்படி அவர் இந்தப் பூமியிலே மனுஷ ரூபமாக வந்து, உத்தரவாதியாகப் பாடுபட்டு மரித்தபடியால், வானத்துக்கும் பூமிக்கும் சகல அதிகாரமும் அவருக்கே கொடுக்கப்பட்டிருக்கிறது. அவர் பிறந்ததும் இந்தப் பூமியிலேயே. அவர் பாடுபட்டு மரித்ததும் இந்தப் பூமியிலேயே. அவர் மீட்டதும் இந்தப் பூமியையே. அவருக்குச் சுதந்தரமும் இந்தப் பூமியே. இப்போது அவர் தமது சுதந்தரமாகிய பூமியின் ஆளுகையைப் பெற்றுக்கொண்டு வரும்படி தூரதேசமாகிய பரலோகத்திற்குப் போயிருக்கிறார். அவர் தமது ராஜ்யத்தைப் பெற்றுக்கொண்டு, இதோ இங்கே வருகிறார். வானத்தின் கீழெங்குமுள்ள ராஜ்யங்களெல்லாம் அப்பொழுது அவருடையவைகளாகும். அவர் சதா காலமும் அதில் அரசாளுவார். அப்பொழுது உலகத்தின் ராஜ்யங்களெல்லாம் அழிந்துபோம். வானமும் பூமியும் புதிதாக்கப்படும். அவைகளில் நீதி வாசம்பண்ணும். இதுவே நீதிமான்களுக்கு வாக்குத்தத்தம் பண்ணப்பட்டிருக்கிற நித்திய சுதந்தரம். இதற்கே அவர் வருகிறார்.

“அவர் ஏன் வருகிறார்? (1) மரித்தோரையெல்லாம் உயிரோடெழுப்புகிறதற்கு அவர் வருகிறார். அப்பொழுது எக்காளங்கள் தொனிக்கும். மரித்தோர் யாவரும் மனுஷகுமாரனின் சத்தத்தைக் கேட்பார்கள். சுடுகாட்டில் சாம்பலாய்ப் போனவர்களும், இடுகாட்டில் மண்ணாய்ப்போனவர்களும் உயிரடைந்துவருவார்கள். அப்பொழுது மரணமும் பாதாளமும் தங்களிலுள்ள மரித்தோரை ஒப்புவிக்கும். சமுத்திரமும் தன்னிலுள்ள மரித்தோரை ஒப்புவிக்கும். (2) ஜீவனுள்ளோரையும் மரித்தோரையும் நியாயந்தீர்க்கும்படி அவர் வருகிறார். அப்பொழுது சரீரத்தில் அவனவன் செய்த நன்மைக்காவது தீமைக்காவது தக்க பலனை அடையும்படிக்கு, உலகத்தாரெல்லாரும் கிறிஸ்துவின் நியாயாசனத்திற்கு முன்பாகக் கூட்டப்படுவார்கள். மரித்தோராகிய சிறியோரும் பெரியோரும் அவருக்கு முன்பாக நிற்பார்கள். அப்பொழுது புஸ்தகங்கள் திறக்கப்படும். அந்தப் புஸ்தகங்களில் எழுதப்பட்டவைகளின்படியே மரித்தோர் தங்கள் கிரியைகளுக்குத்தக்க பலனை அடைவார்கள். ஜீவபுஸ்தகத்தில் பேர் எழுதப்பட்டவனாகக் காணப்படாதவனெவனோ அவன் அக்கினிக்கடலிலே தள்ளப்படுவான். (3) நீதிமான்களுக்குப் பலனளிக்கும்படி அவர் வருகிறார். அப்பொழுது வலுவாய்த் தொனிக்கும் எக்காளச் சத்தத்தோடே அவர் தமது தூதர்களை அனுப்பி, தம்மால் தெரிந்துகொள்ளப்பட்டவர்களைத் தம்மிடத்தில் சேர்த்துக்கொள்ளுவார். அப்பொழுது நீதிமான்கள் அழியாமையையும் ஜீவனையும் மகிமையையும் தரித்து, தங்கள் பிதாவின் ராஜ்யத்தில் சூரியனைப்போலப் பிரகாசிப்பார்கள்.

இவ்வுலகத்திலிருக்கும்போது பொய்த்தேவர்களையும் பாவசந்தோஷங்களையும் நாடாமல், மெய்த்தேவன் ஒருவரையே வணங்கி, கர்த்தராகிய இயேசு கிறிஸ்து ஒருவரையே தங்கள் இரட்சகராக விசுவாசித்து, இவ்வுலகத்தின் பாவதோஷங்களால் கறைப்படாமல் தங்களைக் காத்து, அவர் சுத்தமுள்ளவராயிருக்கிறதுபோல தங்களையும் சுத்திகரித்துக்கொண்டு, சோர்ந்துபோகாமல் நற்கிரியைகளைச் செய்து, மகிமையையும் கனத்தையும் அழியாமையையும் தேடுகிறவர்களுக்கு அதை அளிப்பார். அப்படிப்பட்டவர்கள் சதா காலமும் தேவனுக்கு முன்பாக ராஜாக்களும் ஆசாரியருமாயிருந்து பூமியில் ஆளுகை செய்வார்கள். (4) துன்மார்க்கருக்கும் பாவிகளுக்கும் தண்டனை செலுத்தும்படி அவர் வருகிறார். கர்த்தராகிய இயேசு தமது வல்லமையின் தூதரோடும் ஜுவாலித்து எரிகிற அக்கினியோடும் வானத்திலிருந்து வெளிப்படும்போது, தேவனை அறியாதவர்களுக்கும் கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் சுவிசேஷத்திற்குக் கீழ்ப்படியாதவர்களுக்கும் நீதியுள்ள ஆக்கினை செலுத்தப்படும். அவர்கள் கர்த்தருடைய சந்நிதானத்திலிருந்தும், அவருடைய வல்லமை பொருந்திய மகிமையிலிருந்தும் நீங்கலாகி, நித்திய அழிவாகிய தண்டனையை அடைவார்கள் அப்பொழுது, பயப்படுகிறவர்களும், அவிசுவாசிகளும், அருவருப்பானவர்களும், கொலைப்பாதகரும், விபசாரரும், சூனியக்காரரும், விக்கிரகாராதனைக்காரரும், பொய்யர் அனைவரும் இரண்டாம் மரணமாகிய அக்கினியும் கந்தகமும் எரிகிற கடலிலே பங்கடைவார்கள். அப்படிப்பட்டவர்கள் இந்தப் பூமியிலிருந்தபோது தங்களை நித்திய ஜீவனுக்கு அபாத்திரராக்கிகொண்டபடியால், அவர்கள் அக்கினிக் கடலில் தள்ளுண்டு வாதிக்கப்படுவார்கள். ஆகையால் சிநேகிதர்களே! அழியாத மகிமையும், மாறாத சந்தோஷமும், நித்திய ஜீவனும் அடைய விரும்பினால், இப்பொழுதே நீங்கள் கர்த்தராகிய இயேசுவின் தஞ்சம் வந்தடைந்துகொள்ளுங்கள். “இதோ, அவர் மேகங்களுடனே வருகிறார்.”

“அவர் வருகிறபோது இந்தப் பூமியிலுள்ளவர்கள் என்ன ஸ்திதியிலிருப்பார்கள்? நோவாவின் நாட்களிலுள்ளவர்கள், ஜலப்பிரளயம் வருகிறதற்குமுன்னே இருந்ததுபோல, இயேசுநாதர் இந்த உலகத்துக்கு வருகிற வேளையிலும் அநேகர் தங்கள்மேல் வரும் சடுதியான அழிவைக்குறித்துக் கனவிலும் எண்ணாமல், புசிக்கிறதிலும் குடிக்கிறதிலும், பெண் கொள்ளுகிறதிலும் கொடுக்கிறதிலும் ஜாக்கிரதையாயிருப்பார்கள். லோத்தின் நாட்களில் சோதோமின் ஜனங்கள், வானத்திலிருந்து அக்கினியும் கந்தகமும் வருஷித்து, தங்களைச் சர்வ நாசமாய் அழிப்பதைப்பற்றி அறியாமல், புசிக்கிறதிலும் குடிக்கிறதிலும், வியாபாரங் கொள்ளுகிறதிலும் விற்கிறதிலும், தோட்டங்களை நடுகிறதிலும் வீடுகளை கட்டுகிறதிலும் கவலையாயிருந்ததுபோல், இயேசுநாதர் பூமியில் வரும் காலத்திலிருக்கிறவர்களும் தங்கள்மேல் சடுதியாய் வரும் ஆபத்தைப்பற்றிச் சற்றும் உணராமல், உண்டு உடுத்து, குடித்து வெறித்து, களித்துச் செழித்து, கூடியாடி கொண்டாடிக்கொண்டிருப்பார்கள். அவர்கள் தங்களுக்குச் சமாதானமும் சௌக்கியமும் உண்டென்று சொல்லும்போது, கர்ப்பவதியானவளுக்கு வேதனை வருகிறதுபோல அழிவு சடுதியாய் அவர்கள்மேல் வரும், அவர்கள் தப்பிப்போவதேயில்லை. அப்பொழுது வானங்கள் மடமட என்று அகன்றுபோம். பூதங்கள் வெந்து உருகிப்போம். பூமியும் அதிலுள்ள கிரியைகளும் எரிந்து அழிந்துபோம். அப்பொழுது பூமி மிகவும் அதிரும். மலைகள் தீவுகள் யாவும் தங்கள் இடங்களை விட்டு அகன்றுபோகும். அந்த வேளையில் மனுஷ குமாரனுடைய அடையாளம் வானத்தில் காணப்படும். அப்பொழுது மனுஷகுமாரன் வல்லமையோடும் மிகுந்த மகிமையோடும் வானத்தின் மேகங்கள்மேல் வருகிறதைப் பூமியிலுள்ள சகல கோத்திரத்தாரும் கண்டு புலம்புவார்கள். பூமியின் ராஜாக்களும் பெரியோர்களும் ஐசுவரியவான்களும் சேனைத்தலைவர்களும் பலவான்களும் அடிமைகள் யாவரும் சுயாதீனர் யாவரும் பர்வதங்களின் குகைகளிலும் கல்மலைகளிலும் ஒளித்துக்கொண்டு, பர்வதங்களை

யும் கல்மலைகளையும் நோக்கி; நீங்கள் எங்கள்மேல் விழுந்து, சிங்காசனத்தின்மேல் வீற்றிருக்கிறவருடைய முகத்திற்கும் ஆட்டுக்குட்டியானவருடைய கோபத்திற்கும் எங்களை மறைத்துக்கொள்ளுங்கள்; அவருடைய கோபாக்கினையின் மகா நாள் வந்துவிட்டது, யார் நிலைநிற்கக்கூடும் என்று சொல்லிப் புலம்புவார்கள்.

“குடித்து வெறித்து, குலாவி யுலாவி, பட்டுடுத்துப் பொட்டிட்டு, பொன்னினாலும் விலையேறப்பெற்ற கற்களாலும் உன்னை அலங்கரித்து, தேவ பயமின்றி சிற்றின்பப் பிரியனாய்த்திரியும் வாலிப சிநேகிதனே! நாளைத்தினம் கர்த்தர் வந்தால் உன் நிலைமை என்னமாயிருக்கும்? உன் முடிவு எப்படியிருக்கும்? ஐயையோ! சல்லாவும் இரத்தாம்பரமும் சிவப்பாடையும் தரித்து, பொன்னினாலும் இரத்தினங்களினாலும் முத்துக்களினாலும் உன்னைச் சிங்காரித்து, சந்தனம் சவ்வாது பூசி, பஞ்சுமெத்தையில் துஞ்சி, தேவ பயமின்றி சுகபோகமாய் வாழுகிற உயிரோடே செத்திருக்கும் உல்லாசக்காரியே! இன்று இரவு கர்த்தர் வந்து, உன் வாழ்வுக்கு முடிவு செய்வாரானால், இலச்சையான உன் எல்லா மகிமைகளாலும் உனக்கு என்ன லாபமிருக்கும்? இந்த வீண் ஆடம்பரங்களால் உனக்கு என்ன இன்பம் கிடைக்கும்? பொன், வெள்ளி, இரத்தினம், முத்து, தானிய தவசம், ஆமொடு முதலிய சரக்குகளை கடற்கரை மணலத்தனையாய்க் கப்பல்கள் வழியாயும் வண்டிகள் வழியாயும் தூரதேசங்களிலிருந்து வருத்திக்குவித்து, அதிக லாபத்திற்கு விற்கலாமென்று நினைத்துக்கொண்டு, நாங்கள் இன்றைக்கு அல்லது நாளைக்கு இன்ன பட்டணத்திற்குப்போய் அங்கே ஒரு வருஷந் தங்கி வியாபாரஞ் செய்து, சம்பாத்தியம் பண்ணுவோமென்கிற வர்த்தகனே! நாளைத்தினம் கர்த்தர் வருவாரானால் உன் யோசனைகள் எப்படி முடியும்? இப்படிச் சம்பாதித்து, திரட்டிவைத்திருக்கிறவைகளினால் உன் ஜீவனை இரட்சித்துக்கொள்ளுவாயா? தேவனுக்கென்று ஐசுவரியவனாயிராமலும், எளியவனுக்கு இரங்கி பசித்தவனுக்கு அன்னமிட்டு, தர்ம சிந்தையாய் நடவாமலும், உலோபியாயிருந்து, உனக்கென்றே வாழ்ந்து பிழைத்து, களஞ்சியங்களை இடித்து பெரிதாகக் கட்டி, விளைந்த தானியத்தையும் உன் பொருளையும் அங்கே சேர்த்துவைத்து, அநேக வருஷங்களுக்கு நான் இளைப்பாறி, புசித்துக் குடித்துப் பூரிப்பாயிருப்பேன் என்று மனதில் எண்ணிக்கொண்டு குபேரனைப்போல வாழும் செல்வவானே! நாளைத்தினத்தில் இயேசுவானவர் வருவாரானால் நீ சேகரித்துவைத்திருக்கிறவைகள் யாருடையதாயிருக்கும்? இனிவரும் கோபத்துக்கு உன் திரவியப்பெருக்கம் உன்னைத் தப்புவிக்குமா? பெற்றோரையும் குடும்பத்தையும் விட்டு, நாலுதிசைகளிலுமிருந்து வந்து, உயர்தரக் கலாசாலைகளைச் சேர்ந்து, இரவு பகலாய் விழித்திருந்து படித்து, பரீட்சைகள் கொடுத்து, உயர்ந்த உத்தியோகங்கள் செய்து, மகிமையோடே வாழ்ந்திருப்பேனென்று கனாக்காணும் வித்தியார்த்தியாகிய சிநேகிதனே! நாளைத்தினம் இயேசுவானவர் வந்து இந்த உலக வியாபாரத்துக்கு முடிவு செய்துவிடுவாரானால், உன் பாடு என்னமாயிருக்கும்? உன் யோசனைகள் என்னவாகும்? உன் முடிவு எப்படியிருக்கும்? ஆகையால் சிநேகிதர்களே, இப்பொழுதே கர்த்தராகிய இயேசுவை விசுவாசித்து, அவருக்குத் தொண்டர்களாகுங்கள். அப்படியானால், வரும் கோபத்துக்குத் தப்பிப் பிழைப்பீர்கள். இல்லாவிட்டால் நித்திய அழிவுக்கு இரையாவீர்கள்.”

கிறிஸ்துவானவர் யூதர்கள் மத்தியிலே செய்துவந்த போதகத்தையும், அற்புத வேலைகளையும் அவர்கள் எப்போதும் மறுத்துக்கொண்டே வந்தார்கள். இப்படி மறுத்துக்கொண்டேவந்த தன்மையானது யூத குலத்தின் தலைவர்களுக்குள்ளும் இருந்து, கிறிஸ்து தன்னுடைய களங்கமற்ற வேலையைச்செய்து முடிக்குமட்டும் வளர்ந்துகொண்டிருந்தது; கடைசியாய் அவரை பெயேல்செபூல் என்றும் தீர்த்தார்கள். ஆனால் முடிவில் அவர்களுடைய பைத்தியமான மனச்சாட்சியானது ஜீவனுள்ள தேவகுமாரனாகிய கிறிஸ்துவைக் கல்வாரியின் சிலுவையின்மேலடித்துக்கொல்ல ஏவினது. அச்சம்பவங்களில் நின்று, இக்காலத்தில் நாம் அறிந்துகொள்ளவேண்டிய ஓர் பெரிய பாடமிருக்கிறது. பரலோகத்திலிருந்து திட்டமாய் நமக்கு அருளுகிற சத்திய வெளிச்சத்துக்கு நமது முகங்களைத் திருப்பிக்கொள்ளுவது மகா அபாயகரமாயிருக்கிறதென்று அறியக்கடவோம்.

(ARE THE DEAD ALIVE?)

மரித்தோர் உயிரோடிருக்கிறார்களா?

நமது பெரிய சத்துராதியாகிய சாத்தானைப்பற்றி பேசும்போது இயேசு “அவன் சத்தியத்திலே நிலைநிற்கவில்லை, அவன் பொய்யனும் பொய்க்குப் பிதாவுமாயிருக்கிறபடியால் அவன் பொய் பேசும்போது தன் சொந்தத்தில் எடுத்துப் பேசுகிறான்” என்று சொன்னார். யோவா. 8: 44.

ஆறாயிரம் வருஷமாக மோசம் போக்குகிறவன் என்று பெயர் பெற்றவன் முழு மனித ஜாதியையும் வஞ்சிக்க முடியும் என்பது விபரீதமாய்த் தோன்றலாம். அவன் ஏதேன் தோட்டத்திலே இரண்டகம்பண்ணி தன் நடத்தையைத் துவக்கினான். கீழ்படியாமையின் பயன் மரணமென்று தேவன் சொன்னார். ஆனால் சாத்தான் “நீங்கள் சாகவே சாவதில்லை” என்றான். ஆகையினால் ஜனங்கள் எங்கும் ஒருவன் செத்தபிற்பாடு உயிரோடிருக்கிறான் என்று நம்புகிறார்கள். சிலர் மரணமே இல்லையென்றும் சுவாசம் சரீரத்தை விட்டுப் பிரிந்தபிறகு மனிதன் உண்மையாகவே சாகாமல் ஒரு மேலான ஜீவியத்தில் பிரவேசிக்கிறானென்றும் சொல்லுகிறார்கள்.

பரிகரிக்கப்படுகிற கடைசி சத்துரு மரணமென்று வேதம் சொல்லுகிறது. மரணம் மனிதர் எண்ணுகிறபடியே சரியாயிருந்து உத்தமமும், பரிசுத்தமும் மேன்மையுமான வாழ்வுக்குக் கொண்டுபோகும் வாசலாயிருக்குமானால் அதைச் சத்துருவென்று அழைப்பது எவ்வளவு விநோதமாயிருக்கிறது!

கிறிஸ்துவை அன்னியில் ஜீவன் இல்லையென்று இரக்ஷகர் தாமே நீக்கோதேமோடு பேசின வார்த்தையில் தெளிவாய் விளங்குகிறது. “குமாரனிடத்தில் விசுவாசமாயிருக்கிறவன் நித்திய ஜீவனை உடையவனாயிருக்கிறான்; குமாரனை விசுவாசியாதவனோ ஜீவனைக் காண்பதில்லை, தேவனுடைய கோபம் அவன்மேல் நிலைநிற்கும் என்றான்.” யோவா. 3: 36.

மனிதன் மரண மடைந்தவுடன் மோக்ஷத்துக்கு அல்லது நரகத்துக்குப் போகாவிட்டால் அவர்கள் எப்பொழுது தங்கள் பலனை அடைவார்கள்? பவுல் ஒரு நல்ல மனிதனாயிருந்தான்; ஒருவன் மரணத்தில் தன் பலனை அடைவானானால் நிட்சயமாகவே பவுலும் அடையவேண்டும். ஆனால் இதைப்பற்றி அவன் என்ன சொன்னானென்று கேளுங்கள். இது அவனுடைய கடைசி வார்த்தைகள். “ஏனென்றால், நான் இப்பொழுதே பான பலியாக வார்க்கப்பட்டுப் போகிறேன்; நான் என் தேகத்தை விட்டுப்பிரியும் காலம் வந்தது. நான் நல்ல போராட்டத்தைப் போராடினேன், ஓட்டத்தை முடித்தேன், விசுவாசத்தைக் காத்துக்கொண்டேன். இது முதல் நீதியின் கிரீடம் எனக்காக வைக்கப்பட்டிருக்கிறது, நீதியுள்ள நியாயாதிபதியாகிய கர்த்தர் அந்நாளிலே அதை எனக்குத் தந்தருளுவார்; எனக்கு மாத்திரமல்ல, அவர் பிரசன்னமாகுதலை விரும்பும் யாவருக்கும் அதைத் தந்தருளுவார்.” 2 தீமோத். 4: 6-8. கிறிஸ்து வெளிப்படும்போதுதான், ஒவ்வொருவரும் தங்கள் கிரியைகளின்படி பலனளிக்கப்படுவார்கள். நியாயத்தீர்ப்புக்கு முன்னதாக பலனை எதிர்பார்ப்பது நியாயமாய்த் தோன்றுகிறதில்லை. பவுலின் காலத்தில் நியாயத்தீர்ப்பு இனி வருகிறதாயிருந்தது. ஏனென்றால் அவன் “இனி வரும் நியாயத்தீர்ப்பைக் குறித்துப் பேசினான். அப். 24: 25. மரித்த நீதிமான்களும் பொல்லாதவர்களும் மரணத்தில் தங்கள் பலனை அடைந்தாயிற்று என்று வைத்துக்கொள்ளுவோம். “நியாய சங்கம் உட்கார்ந்து புஸ்தகங்கள் திறக்கப்பட்டபொழுது” தானி. 7: 10. அவர்கள் இருக்கவேண்டிய சரியான இடத்தில் வைக்கப்பட்டிருக்கிறார்களா என்று பார்க்கும்படி

அவர்களைத் திரும்பக் கொண்டுவரவேண்டும். இப்படிச் செய்வது அநியாயமாயிருக்குமென்று நமக்கு உடனே விளங்குகிறதல்லவா? தேவன் ஒருபோதும் இவ்விதமாய்த் தம்முடைய வேலையைச் செய்யமாட்டார். "அந்தப் புஸ்தகங்களில் எழுதப்பட்டவைகளின்படியே மரித்தோர் தங்கள் தங்கள் கிரியைகளுக்குத் தக்கதாக நியாயத்தீர்ப்படைந்தார்கள்" என்று சொல்லப்பட்டிருக்கிறது. வெளி. 20: 12. நியாயத்தீர்ப்புக்கு முன்னதாக இவைகளெல்லாம் நடந்தேற முடியாது.

உலக நியாயஸ்தலங்களிலும்கூட நியாயாதிபதி அல்லது ஜியூரி சாட்சியின் வாக்குமூலத்தைக்கேட்டு தீர்ப்பு செய்யுமுன்னதாக ஒருவனையும் தண்டிக்கிறதில்லை. "மனுஷன் தேவனைப்பார்க்கிலும் நீதிமானாயிருப்பானோ? மனுப்புத்திரன் தன்னை உண்டாக்கினவரைப்பார்க்கிலும் சுத்தமாயிருப்பானோ?" யோபு. 4: 17.

வேதாகமத்தில் மரணம் நித்திரை என்றழைக்கப்படுகிறது. ஒருதரம் லாசருவின் மரணத்தைக்குறித்து இயேசு பேசும்போது "நம்முடைய சிநேகிதனாகிய லாசரு நித்திரை அடைந்திருக்கிறான்" என்றார். "நான் மரண நித்திரை அடையாதபடிக்கு என் கண்களைத் தெளிவாக்கும்" என்று தாவீது கர்த்தரை நோக்கி ஜெபித்தான். அயர்ந்த நித்திரையில் உணர்ச்சியே கிடையாது. ஆகையால் "மரித்தவர்கள் ஒன்றும் அறியார்கள்" என்றும் பிர. 9: 5. "மரித்தவர்களும் மவுனத்தில் இறங்குகிற அனைவரும் கர்த்தரைத் துதியார்கள்" என்றும் சங். 115: 17. ஒரு மனிதன் சாகும்போது "அவனுடைய ஆவி பிரியும், அவன் தன் மண்ணுக்குத் திரும்புவான், அந்நாளிலே அவன் யோசனைகள் அழிந்துபோம்" என்றும் சங். 146: 4 சொல்லப்பட்டிருக்கிறது.

மனிதனுடைய ஜீவிய சரித்திரத்திற்கு இதுவே முடிவானால் நிட்சயமாய் இது அதிக பரிதாபமாயிருக்கும். ஆனால் "நாமெல்லாரும் நித்திரை அடைவதில்லை, ஆகிலும் கடைசி எக்காளம் தொனிக்கும்போது, ஒரு நிமிஷத்திலே, ஒரு இமைப்பொழுதிலே, நாமெல்லாரும் மறுரூபமாக்கப்படுவோம். எக்காளம் தொனிக்கும்; அப்போது மரித்தோர் அழிவில்லாதவர்களாய் எழுந்திருப்பார்கள்; நாமும் மறுரூபமாக்கப்படுவோம்........மரணம் ஜெயமாக விழுங்கப்பட்டது என்று எழுதியிருக்கிற வார்த்தை நிறைவேறும்." 1 கொரி. 15: 51-54.

கிறிஸ்தவனுடைய நம்பிக்கை தமது சீஷருக்கு "ஒரு ஸ்தலத்தை உங்களுக்கு ஆயத்தம் பண்ணப்போகிறேன். நான் போய் உங்களுக்கு ஸ்தலத்தை ஆயத்தம் பண்ணின பின்பு, நான் இருக்கிற இடத்திலே நீங்களும் இருக்கும்படி, நான் மறுபடியும் வந்து உங்களை என்னிடத்தில் சேர்த்துக்கொள்ளுவேன்." யோவா. 14: 2, 3 என்று வாக்களித்த கிறிஸ்துவினுடைய இரண்டாம் வருகையையே நோக்கியிருக்கிறது.

கிறிஸ்து, நாம் தம்மிடத்திலே இருக்கும்படியாக வந்து அழைத்துப் போகுமட்டும் நாம் கிறிஸ்துவோடு இருப்பதில்லையென்று இதினால் நமக்குத் திட்டமாய்த் தெரிகிறது. பவுல் மற்றெல்லாப் பரிசுத்தவான்களோடுகூட நித்திய ஜீவனை சுதந்தரித்துக்கொள்ளுவதுமல்லாமல் தனக்கும் மற்ற நீதிமான்களுக்கும் வைக்கப்பட்டிருக்கும் கிரீடத்தையும் பெற்றுக்கொள்ளுவார்.

நியூயார்க்கிலுள்ள ஓர் பத்திராதிபன் சொல்லுகிறதாவது: கிரகஸ்த முறைகளானது நல்லொழுக்கங்களின் அஸ்திபாரமல்ல, ஆனால் இன்னொரு விஷயத்தில், நாம் நல்ல குடும்ப முறைகளை யுடையவர்களாயிருக்கவேண்டுமானால், "நல்லொழுக்கங்களையே நாம் அஸ்திபாரமாக முதலில் உடையவர்களாயிருக்கவேண்டும்." தேவனுடைய சத்திய வசனங்களை ஏற்றுக்கொள்வதனாலும், அவருடைய வசனத்தைப் படிப்பதனாலும், உண்டாகும் பரிமபலமே அந்த நல்லொழுக்கமாம்; மேலும் இக்காலத்துக்கு இது மகா பிரயோஜனமுள்ளது.

THE PRIMEVAL FOOD OF THE HUMAN RACE.

மனுஷ ஜாதியின் ஆதி ஆகாரம்.

நமது தேசத்தில் அநேகர் அதிக நாகரீகமும், கல்வியு முண்டாகுமானால் எவ்விதத்திலும் மாமிசம் சாப்பிடவேண்டும் என்றும்; விசேஷமாய் சத்திய மார்க்கமாகிய கிறிஸ்து மார்க்கத்தை ஒப்புக்கொண்டால் கட்டாயம் சகலவித மாமிசமும் புசிக்கவேண்டுமென்றும் எண்ணுகிறார்கள். இப்படிப்பட்ட தப்பான எண்ணம் ஜனங்களின் இருதயத்தில் இருக்கிறதை நாம் அறிந்து அதிக விசனப்படுகிறோம். ஆகையால் இது விஷயத்தில் கிறிஸ்தவர்களுடைய வேதம் என்ன போதிக்கிறதென்பதையும், அதிக நாகரீகமும் கல்வியும் உடையவர்கள் இது விஷயத்தைப்பற்றி தற்காலம் என்ன அபிப்பிராயம் கொண்டிருக்கிறார்கள் என்பதையும் நமது பத்திரிகையின் மூலமாய் பிரசுரிக்க யோசித்திருக்கிறோம். இது விஷயங்களைப்பற்றி அநேகர் அதிக திட்டமாய் அறியப் பிரியப்படுவதால் பத்திரிகை ஒன்றும் தவறாமல் வாங்கி வாசிக்கும்படிக் கேட்டுக்கொள்ளுகிறோம்.

பராபரன் ஆதியில் இப்பூமியை சிருஷ்டித்த வரலாற்றையும், பின்பு கடைசியாக மனுஷ ஜாதியின் ஆதி பெற்றோரை உண்டாக்கி, அவர்களுக்கு கொடுத்த அதிகாரம், ஆசீர்வாதம் ஆகாரங்களையும் பின்கூறிய வேத வசனங்களில் நன்கு கவனிப்பீர்களாக:—

"ஆதியிலே தேவன் வானத்தையும் பூமியையும் சிருஷ்டித்தார். பூமியானது ஒழுங்கின்மையும் வெறுமையுமாய் இருந்தது; ஆழத்தின்மேல் இருள் இருந்தது; தேவ ஆவியானவர் ஜலத்தின்மேல் அசைவாடிக்கொண்டிருந்தார். தேவன் வெளிச்சம் உண்டாகக்கடவது என்றார், வெளிச்சம் உண்டாயிற்று. வெளிச்சம் நல்லது என்று தேவன் கண்டார்; வெளிச்சத்தையும் இருளையும் தேவன் வெவ்வேறாகப் பிரித்தார். தேவன் வெளிச்சத்துக்குப் பகல் என்று பேரிட்டார். இருளுக்கு இரவு என்று பேரிட்டார்; சாயங்காலமும் விடியற்காலமுமாகி முதலாம் நாள் ஆயிற்று. பின்பு தேவன்: ஜலத்தின் மத்தியில் ஆகாய விரிவு உண்டாகக்கடவது என்றும், அது ஜலத்தினின்று ஜலத்தைப் பிரிக்கக்கடவது என்றும் சொன்னார். தேவன் ஆகாய விரிவை உண்டுபண்ணி, ஆகாய விரிவுக்குக் கீழே இருக்கிற ஜலத்திற்கும் ஆகாய விரிவுக்குமேலே இருக்கிற ஜலத்திற்கும் பிரிவுண்டாக்கினார்; அது அப்படியே ஆயிற்று. தேவன் ஆகாய விரிவுக்கு வானம் என்று பேரிட்டார்; சாயங்காலமும் விடியற்காலமுமாகி இரண்டாம் நாள் ஆயிற்று. பின்பு தேவன்: வானத்தின் கீழே இருக்கிற ஜலம் ஓரிடத்தில் சேரவும், வெட்டாந்தரை காணப்படவும் கடவது என்றார்; அது அப்படியே ஆயிற்று. தேவன் வெட்டாந்தரைக்கு பூமி என்றும், சேர்ந்த ஜலத்திற்குச் சமுத்திரம் என்றும் பேரிட்டார்; தேவன் அது நல்லதென்று கண்டார். அப்பொழுது தேவன்: பூமியானது புல்லையும், விதையைப் பிறப்பிக்கும் பூண்டுகளையும், பூமியின்மேல் தங்களில் தங்கள் விதையையுடைய கனிகளைத் தங்கள் தங்கள் ஜாதியின்படியே கொடுக்கும் கனி விருக்ஷங்களையும் முளைப்பிக்கக்கடவது என்றார்; அது அப்படியே ஆயிற்று. பூமியானது புல்லையும், தங்கள் தங்கள் ஜாதியின்படியே விதையைப் பிறப்பிக்கும் பூண்டுகளையும், தங்கள் தங்கள் ஜாதியின்படியே தங்களில் தங்கள் விதையையுடைய கனிகளைக் கொடுக்கும் விருட்சங்களையும் முளைப்பித்தது; தேவன் அது நல்லது என்று கண்டார். சாயங்காலமும் விடியற்காலமுமாகி மூன்றாம் நாள் ஆயிற்று. பின்பு தேவன்: பகலுக்கும் இரவுக்கும் வித்தியாசம் உண்டாகத்தக்கதாக வானம் என்கிற ஆகாய விரிவிலே சுடர்கள் உண்டாகக்கடவது அவைகள் அடையாளங்களுக்காகவும் காலங்களையும் நாட்களையும் வருஷங்களையும் குறிக்கிறதற்காகவும் இருக்கக்கடவது என்றார். அவைகள் பூமியின்மேல் பிரகாசிக்கும்படிக்கு வானம் என்கிற ஆகாய விரிவிலே சுடர்களாயிருக்கக்கடவது என்றார்; அது அப்படியே ஆயிற்று. தேவன்: பகலை ஆளப் பெரிய சுடரும்,

இரவை ஆளச் சிறிய சுடரும் ஆகிய இரண்டு மகத்தான சுடர்களையும், நட்சத்திரங்களையும் உண்டாக்கினார். அவைகள் பூமியின்மேல் பிரகாசிக்கவும், பகலையும் இரவையும் ஆள்வும், வெளிச்சத்துக்கும் இருளுக்கும் வித்தியாசம் உண்டாக்கவும், தேவன் அவைகளை வானம் என்கிற ஆகாய விரிவிலே வைத்தார்; தேவன் அது நல்லது என்று கண்டார். சாயங்காலமும், விடியற்காலமுமாகி நாலாம் நாள் ஆயிற்று.

பின்பு தேவன்: நீந்தும் ஜீவ ஜந்துக்களையும், பூமியின்மேல் வானம் என்கிற ஆகாய விரிவிலே பறக்கும் பறவைகளையும், ஜலமானது திரளாய் ஜநிப்பிக்கக்கடவது என்றார். தேவன், மகா மச்சங்களையும், ஜலத்தில் தங்கள் தங்கள் ஜாதியின்படியே திரளாய் ஜனிப்பிக்கப்பட்ட சகலவித நீர்வாழும் ஜந்துக்களையும், சிறகுள்ள ஜாதிஜாதியான சகலவிதப் பட்சிகளையும் சிருஷ்டித்தார்; தேவன் அது நல்லது என்று கண்டார். தேவன் அவைகளை ஆசீர்வதித்து, நீங்கள் பலுகிப் பெருகி, சமுத்திர ஜலத்தை நிரப்புங்கள் என்றும், பறவைகள் பூமியில் பெருகக்கடவது என்றும் சொன்னார். சாயங்காலமும் விடியற்காலமுமாகி ஐந்தாம் நாள் ஆயிற்று.

பின்பு தேவன்: பூமியானது ஜாதிஜாதியான ஜீவ ஜந்துக்களாகிய நாட்டு மிருகங்களையும், ஊரும் பிராணிகளையும், காட்டு மிருகங்களையும், ஜாதிஜாதியாகப் பிறப்பிக்கக்கடவது என்றார்; அது அப்படியே ஆயிற்று. தேவன் பூமியிலுள்ள ஜாதி ஜாதியான காட்டு மிருகங்களையும், ஜாதிஜாதியான நாட்டு மிருகங்களையும், பூமியில் ஊரும் பிராணிகள் எல்லாவற்றையும் உண்டாக்கினார்; தேவன் அது நல்லது என்று கண்டார்.

பின்பு தேவன்: நமது சாயலாகவும் நமது ரூபத்தின்படியேயும் மனுஷனை உண்டாக்குவோமாக; அவர்கள் சமுத்திரத்தின் மச்சங்களையும், ஆகாயத்துப் பறவைகளையும், மிருக ஜீவன்களையும், பூமி யனைத்தையும், பூமியின்மேல் ஊரும் சகல பிராணிகளையும் ஆளக் கடவர்கள் என்றார். தேவன் தம்முடைய சாயலாக மனுஷனைச் சிருஷ்டித்தார். அவனை தேவ சாயலாகவே சிருஷ்டித்தார்; ஆணும் பெண்ணுமாக அவர்களைச் சிருஷ்டித்தார். பின்பு தேவன் அவர்களை நோக்கி: நீங்கள் பலுகிப் பெருகி, பூமியை நிரப்பி, அதைக் கீழ்ப்படுத்தி, சமுத்திரத்தின் மச்சங்களையும் ஆகாயத்துப் பறவைகளையும், பூமியின்மேல் நடமாடுகிற சகல ஜீவ ஜந்துக்களையும் ஆண்டுகொள்ளுங்களென்று சொல்லி, தேவன் அவர்களை ஆசீர்வதித்தார்.

பின்னும் தேவன்: இதோ, பூமியின்மேல் எங்கும் விதை தரும் சகலவிதப் பூண்டுகளையும், விதை தரும் கனி மரங்களாகிய சகலவித விருட்சங்களையும் உங்களுக்குக் கொடுத்தேன், அவைகள் உங்களுக்கு ஆகாரமாயிருக்கக்கடவது; பூமியிலுள்ள சகல மிருக ஜீவன்களுக்கும், ஆகாயத்திலுள்ள சகல பறவைகளுக்கும், பூமியின்மேல் ஊரும் பிராணிகள் எல்லாவற்றிற்கும் பசுமையான சகல பூண்டுகளையும் ஆகாரமாகக் கொடுத்தேன் என்றார்; அது அப்படியே ஆயிற்று. அப்பொழுது தேவன் தாம் உண்டாக்கின எல்லாவற்றையும் பார்த்தார், அது மிகவும் நன்றாயிருந்தது; சாயங்காலமும் விடியற்காலமுமாகி ஆறும் நாள் ஆயிற்று."

(ஆதியாகமம் முதலாம் அதிகாரம்.)

(இன்னும் வரும்.) ஈ. டி. தா.

விசுவாசமானது, யுக்திக்கும் புத்திக்கும் நற்சாட்சிகளுக்கும் ஒத்து இராத ஓர் கபடான அங்கீகாரமல்ல. தேவனுடைய வசனங்கள் நமது விசுவாசத்திற்கு நல்ல சாட்சி கொடுக்கின்றன, இச்சாட்சிகள் தெளிவாயும் மகா திட்டமான தன்மையுடையதாயுமிருக்கின்றது. இவ்விசுவாசத்தின் மூலமாகவே, உன்னதத்தின் வல்லமையை யூகமாய் கிரகித்து அவைகளை கையாடுகிற அறிவும் உண்டாகிறது.

?	கேள்விகளுக்கு விடை நீங்கள் கேட்க மனதானால் திரும்பி வந்து கேளுங்கள்.	?

வினா:—1 பேதுரு 3: 19-ல் சொல்லப்பட்டிருக்கிற 'காவலிலுள்ள ஆவிகளை'ப்பற்றி தயவுசெய்து உங்கள் பேப்பர் மூலமாய் நன்கு விளக்கி காட்டவும்.

விடை:—அக்காவலிலுள்ள ஆவிகளைப்பற்றி வேத சாஸ்திர பண்டிதராகிய கிளார்க் என்பவர் சொல்லுகிற சத்தியமாவது:—

ஜலப்பிரளயத்துக்கு முன்னிருந்த உலகத்தார் தேவனுக்கு விரோதமான கொடிய அக்கிரமக்காரர்களாக எண்ணப்பட்டு அழிக்கப்படுவதற்கென்று நியாயமான தீர்ப்புப் பெற்றிருந்தார்கள். ஆனால் அவர்கள் மனந்திரும்புவார்களோவென்று பார்க்கும்படி அவர்களுக்கு வரவேண்டிய தண்டனை சிலகாலம் நிறுத்திவைக்கப்பட்டிருந்தது. இதினாலே அவர்களுக்குத் தவணையாக கொடுக்கப்பட்டிருந்த நூற்றிருபது வருஷ காலமும் தேவன் நீடிய பொறுமையோடு காத்திருந்தார். இந்தக் காலமெல்லாம் தேவ நீதி என்னும் தடையினால் தண்டனை நிறுத்தப்பட்டு அவர்கள் விசாரணையாகித் தீர்ப்புபெற்ற குற்றவாளிகளைப் போல் காவலில் இருந்ததாக மேற்சொன்ன வசனத்தில் காட்டப்பட்டிருக்கிறது.

அந்தத் தேவ நீதியானது அவர்களுடைய மனந்திரும்புதலுக்காகவாவது அல்லது கூறப்பட்ட தண்டனை சுமத்தப்படும் காலம் நிறைவேறுவதற்காகவாவது காத்துக்கொண்டிருந்தது. இந்தக் கருகலான வாக்கியத்தின் கருத்து இதுதான் என்பதை நான் வெகு காலமாய் நம்பி வந்திருக்கிறேன். இது தவிர வேறெந்தக் கருத்தும் வாக்கியத்தின் முழுச் சந்தர்ப்பத்துக்கு ஏற்றதாயில்லை. தேவனுடைய ஆவி பழைய உலகத்தாரோடு போராடி அவர்களைக் குற்றவாளிகளாகத் தீர்த்துக் கண்டித்து உணர்த்தினது என்பது ஆதியாகமம் 6-ம் அதிகாரம் 3-ம் வாக்கியத்தினால் தெளிவாகிறது. 'ஆவிகள்' என்பதைக் குறிக்கும் மூல பதமானது இந்த அபிப்பிராயத்துக்கு ஒத்ததாயில்லை என்று உத்தேசிக்கப்படுகிறது. ஏனென்றால் இது உடலினின்று பிரிந்த ஆவிகள் என்றே அர்த்தம் கொள்ளவேண்டியதாயிருக்கிறது. ஆனால் இது அப்படியல்ல என்பது நிச்சயம். ஏனென்றால் "பூரணராக்கப்பட்ட நீதிமான்களுடைய ஆவிகள்" (எபி. 12: 23) என்று சொல்லும்போது நீதிமான்களும் இன்னும் போராட்டத் திருச்சபையிலிருக்கிற மனுஷரும் என்றே அர்த்தமாகிறது. "ஆவிகளின் பிதா" (எபி. 12: 9) வென்று சொல்லும்போதும் 'ஆவிகள்' என்பது இன்னும் சரீரத்திலிருக்கிற மனுஷரென்றே அர்த்தமாகிறது.

அப்படியே "மாம்சமான யாவருடைய ஆவிகளுக்கும் தேவன் (எண். 16: 22; 27: 16) என்று சொல்லும்போது 'ஆவிகள்' என்பது உடலினின்று பிரிந்து போனவர்கள் என்றல்ல, உயிரோடிருக்கிற மனுஷரென்றே அர்த்தம்.' "A Commentary and Critical Notes" Adam Clarke, D.D., on 1 Peter 3: 19. New York: Phillips & Hunt, 1833.

"நமது இருதயத்திலிருக்கும் ஒவ்வொரு பாவமும் தேவனுடைய சத்துருவாயிருக்கிறது. அவைகள் நமக்குங்கூட சத்துருதான். நாம் அவைகளை ஜெயிக்கவேண்டும்; அல்லது அழிவுக்குள்ளாகவேண்டும்."

நிகழ்கால சத்தியம்

வேத சன்மார்க்க சுகாதார விஷயங்களில் தற்கால அறிவுக்கொத்தபடி மனிதர் அபி விருத்தியடைவதற்கென்று பிரசுரமாகும் ஓர் பத்திரிகை.

மதராஸ் ஜூலைமீ, 1921.

இப்பத்திரிகை, பெங்களூரிலிருக்கும், எஸ். டி. ஏ. பப்ளிஷிங்கவுஸ்காக, பட்டணத்தில் வெப்பேரி என்னுமிடத்திலுள்ள அல்பீனியன் அச்சாபீசில் அச்சடிக்கப் பட்டு வருகிறது.

பத்திராதிபர் பாஸ்றர், ஜி. ஜி. லௌரி.
உதவி ,, ,, ஈ. டி. தாமஸ்.

	ரூ.	அ.	ப.
தனிப்பிரதி ஒன்றுக்கு ...	0	1	6
வருஷ சந்தா, தபாற் கூலி உள்பட ...	1	0	0
சிங்கப்பூர் பினங்கு முதலிய வெளி ஊர்களுக்கு தனிப் பிரதி ஒன்றுக்கு ...	0	2	0
வருஷசந்தா தபாற்கூலி உள்பட ...	1	4	0

ஓர் பஞ்சம்.

இங்கிலாந்தில் மிகுந்த தண்ணீர்ப்பஞ்ச மேற்பட்டதின் காரணமாக ஒரு மரக்கால் ஜலம் $3\frac{1}{2}$-பென்ஸ் வீதம் விற்கப்பட்டு வருகிறதாம். கவர்ன்மெண்டார் தண்ணீரைச் சேமித்து வருகிறார்கள்.

ஆனால், "இதோ, நான் தேசத்தின்மேல் பஞ்சத்தை அனுப்பும் நாட்கள் வரும்; ஆகாரக் குறைவினால் உண்டாகிய பஞ்சமல்ல, ஜலக்குறைவினால் உண்டாகிய தாகமுமல்ல, கர்த்தருடைய வசனம் கேட்கக் கிடையாத பஞ்சத்தை அனுப்புவேன் என்று கர்த்தராகிய ஆண்டவர் சொல்லுகிறார்." ஆமோஸ் 8: 11. ஆகையினால் இப்பொழுதே திருவசனத்தை நன்றாய்ப் படிக்கத் தவறாதிருப்போமாக. இன்னும் அதின்படி நடக்க சற்றேனும் பின் வாங்காதிருப்போமாக ஏனென்றால் பின்னால் சமய மில்லை. "இப்பொழுதே அனுக்கிரக காலம். இப்பொழுதே இரட்சண்ய நாள்."

சமாசாரக் குறிப்புகள்.

மதுரைக்கோயிலில் இரண்டு கழுகுகள்.

மதுரை, ஜூன் 18—

காலை $10\frac{1}{2}$-மணிக்கு ஸ்ரீ மீனாக்ஷியம்மன் கோவில் பொற்றாமரையில் இரண்டு வெள்ளைக் கழுகுகள் ஸ்நானஞ் செய்து கரையிலுட்கார்ந்திருந்தன. கோவிலில் அதிகாரிகளால் அன்னம் நெய் முதலியன அவைகளுக்கு கொடுக்கப்பட்டன பின்னர் புகைப் படம் பிடிக்கப்பட்டது. அவைகளைப் பார்ப்பதற்காக ஏராளமான ஜனங்கள் பொற்றாமரையைச் சுற்றி கூடிவிட்டனர். பின்பு அவைகளை ஒரு சேவகன் கையில் பிடித்துக்கொண்டு போய் ஸ்வாமி தரிசனஞ் செய்துவைத்து கோவில் நந்தவனத்தில் விட்டான். கொஞ்ச நேரம் அக்கழுகுகளிரண்டும் அங்கே யிருந்துவிட்டுப் பின் எங்கோ பறந்து போய்விட்டன. இங்குள்ளவர்கள் இதை ஒரு பெரிய விசேஷமாகக் கருதுகிறார்கள். அக்கழுகுகளிரண்டும் திருக்கழுங்குன்றத்திலிருந்து வந்திருந்ததாகவும் சொல்லப்படுகின்றது.

ஜீவ ஜெந்துக்களை இப்படி விசேஷமாக எண்ணுகிறவர்கள் 'தங்களை ஞானிகளென்று சொல்லியும் பயித்தியக்காரராகி, அழிவில்லாத தேவனுடைய மகிமையை அழிவுள்ள மனுஷர்கள் பறவைகள் மிருகங்கள். ஊரும் பிராணிகள் ஆகிய இவைகளுடைய ரூபங்களுக்கு ஒப்பாக மாற்றி,......சிருஷ்டிகரைத் தொழுது சேவியாமல் சிருஷ்டியைத் தொழுது சேவிக்கிறார்கள்.' 'அவரே என்றென்றைக்கும் ஸ்தோத்திரிக்கப்படத் தக்கவர். ஆமென்.'

அமெரிக்க யுனைட்டெட் ஸ்டேட்ஸைச் சேர்ந்த வியாமிங் சமஸ்தானத்திலுள்ள ஜாக்ஸன் நகரவாஸிகள் அந்நகர நிர்வாகத்தை அத்தேச ஸ்திரீகளைக்கொண்டே நடத்திவர சம்மதித்து விட்டார்களாம்; மிஸெஸ் கிரேஸ் ஜீ. மில்லர் என்னும் சீமாட்டி நகர மேயராகவும், அவருக்கு உதவியாக 4 ஸ்திரீ மெம்பர்களும் தெரிந்தெடுக்கப்பட்டிருக்கிறார்களாம். மிஸ் பேர்ல் வில்லியம்ஸ் என்ற சீமாட்டி நகர மார்ஷலாக யிருந்து சிறந்த ஊழியம் செய்து வருகிறாராம்.

நிகழ்கால சத்தியம்.

Vol. X. மதராஸ்:—ஆகஸ்டுமீ, 1921. No. 8.

எல்லா பிரமாணங்களைவிட மகா பெரிய பிரமாணம்.

THE GREATEST LAW.

எவ்விடத்தில் அரசும் அரச பரிபாலனமும் உண்டாயிருக்கிறதோ, அங்கே பிரமாணமும் அத்தியாவசியமாயிருக்கிறது. வல்லரசு அல்லது சிற்றரசுவான எத்தேசத்திற்கும் ஒரு சட்டம் உண்டு. அதனை ஆட்சி புரிவர் சக்கிரவர்த்தியாய், ஆங்கில அரசாங்கத்தின் சக்கிரவர்த்தியைப்போலவும், அல்லது தேசாதிபதியாய், ஜனங்களால் தெரிந்தெடுக்கப்பட்டு ஆளுவதற்கு நியமகம் பெற்ற ஐக்கிய மாகாணத்து சங்கத் தலைவரைப்போலவும் எப்படியிருக்கினும்; ஒவ்வொரு ஜாதியாருக்கும் சட்டமானது அத்தியாவசியமாயிருக்கிறது. சட்டமென்ற ஒன்று இல்லாவிடில் அப்போது அரசாங்கத்தில் எங்கும் குழப்பமே யுண்டாயிருக்கும். ஆனால் குடிகளுக்கு ராஜ சட்டம் இன்னதென்று தெரிந்திருந்து, அவர்களும் ராஜ பக்தியுள்ளவர்களாயிருப்பார்களேயாகில், அப்போது அவர்கள் அதற்கு முழுவதுமாய் கீழ்படிந்து நடப்பார்கள். அன்றியும் அதற்கு எவனொருவன் கீழ்ப்படியாமலிருக்கிறானோ அவன் தண்டனையையும் பெறுவான். தீமையைச் செய்கிற ஒருவனுக்கு பிரமாணமானது ஓர் சுமையைப்போலவிருக்கிறது; ஆனால் நன்மையைச் செய்கிற மனுஷனுக்கோ, அதுவே ஒரு ஆசீர்வாதமாயிருக்கிறது.

இப்போது ஒரு மனிதன் சென்னையிலிருந்து கல்கத்தாவுக்கு போக விரும்புகிறானென்று வைத்துக்கொள்வோம். இப்போதும் அவன், சரியான பாதையில் நடந்து செல்வானாகில், நிச்சயமாகவே தான் நிர்ணயித்த இடத்துக்கு போய்ச் சேருவான். ஆனால் சரியான பாதை எதுவென்று அவன் அறிந்துகொள்ளக்கூடும்? எதினாலென்றால், பாதை நெடுக நாட்டப்பட்டிருக்கும் மைல் கற்களைக்கொண்டு சரியான வழி இன்னதென்று அறிந்துகொள்ளுகிறான். அப்படியே பிரமாணங்களும் ஜீவ பாதையின் சரியான வழியை நமக்குக் காட்டுகின்றன. இவ்வுலகத்தில் அநேக பெரிய அரசர்கள் ஆளுகை செய்துகொண்டிருக்கிறார்கள்; ஆகிலும் இவர்களெல்லோரைப்பார்க்கிலும் மகா பெரிய அரசன் ஒருவரிருக்கிறார். அவரே சர்வ லோகத்தையும் சிருஷ்டித்தவர். அவரே ராஜாதிராஜா, அவர் இப்பிரபஞ்சத்துக்குமட்டும் அதிபதியாயிராமல், சூரிய சந்திர நட்சத்திரங்களையும் சிருஷ்டித்தவராயிருக்கிறபடியினால், அவைகள்மேலும் அவர் ஆளுகை செலுத்துகிறார். இந்த மகா பெரிய அரசனுக்குத்தான் தேவன் என்று பெயர். அவர் இவ்வுலக அரசர்களைப்போலிராமல், முடிவற்றவரும், நித்தியரும், சர்வ வல்லவரும், சர்வ ஞானமுடையவராயிருக்கிறார்.

இந்த அரசருக்கு அநேக பிரமாணங்கள் உண்டு. இவைகளில் சில இயற்கைப் பிரமாணங்களென்று அறியப்பட்டிருக்கிறது. தண்ணீர் எப்போதும் இறக்கமான இடத்தை நோக்கியே பாய்கிறது. அக்கினி எரிகிறது. பூமியானது கோளமையத்தின்மேல் இருபத்து நான்கு மணிக்கொருமுறை சுழலுகிறது. இவையெல்லாம் தேவனுடைய இயற்கைப் பிரமாணங்களாயிருக்கிறது.

"மேலும் நாம் ஆண்டவரை மகிமைப்படுத்தும்படிக்கும், நம்மைச் சுற்றியுள்ள மனிதருக்கு ஓர் ஆசீர்வாதமாயிருக்கும்படிக்கும், நமது ஜீவியத்தை ஆண்டு நடத்துவதற்கென்றும், மற்றும் அநேக பிரமாணங்களும் கொடுக்கப்பட்டிருக்கின்றன. தேவன் தமது பரமசித்தத்தை, பரிசுத்த வேதாகமமென்று பரிசுத்த ஆவியினால் ஏவப்பட்டு எழுதியுள்ள புத்தகத்தின் மூலமாய் நன்றாய் தெரியப்படுத்தியிருக்கிறார்.

பிரமாணம் ' அல்லது "பத்துக்கற்பனைகள்" என்று அழைக்கப்படுகிற தேவ சட்டங்களை, பரிசுத்த வேதாகமத்தின் ஒரு பங்காகிய "யாத்திரை ஆகமம்" என்ற புத்தகத்தில் நாம் பார்க்கிறோம். இப்பிரபஞ்சத்தின் அரசர்களுக்குரிய பிரமாணத்தைப்போலவே இத்தேவப் பிரமாணமும் இருபங்காக பிரிக்கப்பட்டிருக்கிறது: அவை நம்மை யாளுபவருக்கு செய்யவேண்டிய கடமையும், நமது உடன் மனுஷருக்கு செய்யவேண்டிய கடமைகளையும் காட்டுகிறது. இவற்றுள் முதலாவதான கற்பனை: "என்னை யன்றி உனக்கு வேறே தேவர்கள் உண்டாயிருக்கவேண்டாம். எந்த ராட்சியத்திலும் ஒரே அரசனுக்குத்தான் கீழ்படிவது வழக்கம். ஆகையினால் நாம் சிருஷ்டிகருக்கு கீழ்படிந்து இருக்கிறோமானால், அவருக்கொத்திருக்கிற மற்ற எவருக்கும் கீழ்ப்படியக்கூடாது. ஏனென்றால் சிருஷ்டிகரென்று ஒருவரே யன்றி அநேகம்பேர்கள் இருப்பது அசாத்தியம். ஆனபடியினால் இரண்டாவதான கற்பனை: "மேலே வானத்திலும், கீழே பூமியிலும், பூமியின் கீழ்த் தண்ணீரிலும் உண்டாயிருக்கிறவைகளுக்கு ஒப்பான ஒரு சொரூபத்தையாகிலும் யாதொரு விக்கிரகத்தையாகிலும் நீ உனக்கு உண்டாக்கவேண்டாம்; நீ அவைகளை நமஸ்கரிக்கவும் சேவிக்கவும்வேண்டாம்; உன் தேவனாகிய கர்த்தராயிருக்கிற நான் எரிச்சலுள்ள தேவனாயிருந்து, என்னைப் பகைக்கிறவர்களைக்குறித்துப் பிதாக்களுடைய அக்கிரமத்தைப் பிள்ளைகளிடத்தில் மூன்றாம் நான்காம் தலைமுறைமட்டும் விசாரிக்கிறவராயிருக்கிறேன். என்னிடத்தில் அன்பு கூர்ந்து, என் கற்பனைகளை கைக்கொள்ளுகிறவர்களுக்கோ ஆயிரம் தலைமுறைமட்டும் இரக்கஞ் செய்கிறவராயிருக்கிறேன்." ஒரு சொரூபத்தை யென்கிலும், அல்லது கல்லை யென்கிலும், அல்லது ஒரு மிருகத்தை யென்கிலும் கனம் பண்ணி, நமது விண்ணப்பங்களை அதற்கு ஓர் அரசனுக்கு செலுத்துவதுபோல் செலுத்தி, இவ்விதம் செய்து வருவோமானால்; இக்காரியங்கள் எல்லாம் இவ்வுலக அரசனுக்கு முதலாய் வெறுப்புண்டாக்கும். இது இப்படியிருக்கக்கொள்ள, உணர்ச்சியற்ற சொரூபங்களையும் இன்னும் இதர பொருள்களையும் கனம் பண்ணுவதற்குப் பாத்திரமுள்ளதென எண்ணி, அதற்கு முன்னே சாஷ்டாங்கமாய் விழுந்து பணிந்துகொள்வது, இவைகளையெல்லாம் உண்டு பண்ணின பரா சிருஷ்டிகருக்கு எவ்வளவு மகிமைக் குறைச்சலாய் இருக்கும். ஒரு சிநேகிதன் நமக்கு சில உபயோகமுள்ள பணிமுட்டுகளை கொடுப்பானாகில், இவ்விரண்டில் எதற்கு நாம் நன்றி செலுத்தவேண்டும்? பணி முட்டுகளுக்கோ? அல்லது அவற்றை நமக்குக் கொடுத்த சிநேகிதனுக்கோ? மூன்றாங் கற்பனையாவது: "உன் தேவனாகிய கர்த்தருடைய நாமத்தை வீணிலே வழங்காதிருப்பாயாக; கர்த்தர் தம்முடைய நாமத்தை வீணிலே வழங்குகிறவனை தண்டியாமல் விடார்." இவற்றின் தாற்பரியமாவது: தெய்வ நாமத்தின் மேல் பொய்ச்சத்தியம் சொல்வதும், தெய்வ நாமத்தைக்கொண்டு வாயினால் சபித்தலும் ஆகிற இவைபோன்ற காரியங்கள் மிகவும் பொல்லாதவை.

நாலாங்கற்பனையாவது: "ஓய்வுநாளைப் பரிசுத்தமாய் ஆசரிக்க நினைப்பாயாக; ஆறு நாளும் நீ வேலை செய்து, உன் கிரியைகளையெல்லாம் நடப்பிப்பாயாக; ஏழாம் நாளோ

உன் தேவனாகிய கர்த்தருடைய ஓய்வுநாள்; அதிலே நீயானாலும், உன் குமாரனானாலும், உன் குமாரத்தியானாலும், உன் வேலைக்காரனானாலும், உன் வேலைக்காரியானாலும், உன் மிருகஜீவனானாலும், உன் வாசல்களில் இருக்கிற அன்னியனானாலும் யாதொரு வேலையும் செய்யவேண்டாம். கர்த்தர் ஆறு நாளைக்குள்ளே வானத்தையும் பூமியையும் சமுத்திரத்தையும் அவைகளிலுள்ள எல்லாவற்றையும் உண்டாக்கி, ஏழாம் நாளிலே ஓய்ந்திருந்தார்; ஆகையால், கர்த்தர் ஓய்வுநாளை ஆசீர்வதித்து, அதைப் பரிசுத்தமாக்கினார்." இங்கே கொடுக்கப்பட்டுள்ள இதற்கு நாம் கீழ்படிதலுள்ளவர்களாயிருப்பதற்கு அநேக காரணங்கள் உண்டு. நமது தினசரி வேலையிலிருந்து நாம் ஓய்ந்திருப்பதனாலே, தேவனுடைய சிருஷ்டிப்பு நமக்கு நினைப்பூட்டப்படுகிறது. மற்றொரு காரணம்: நாம் தினந்தோறும் தேவனைச் சேவித்து அன்பு கூர்ந்து இருந்தாலும், ஒவ்வொரு வாரத்திலும் அவரைத் தொழுதுகொள்வதற்கென்று ஒரு விசேஷித்த நேரம் இருக்கவேண்டும். இந்த நேரமானது-தேவன் சொல்லுகிறபடி வாரத்தின் ஏழாம் நாள் அல்லது சனிக்கிழமையாயிருக்கிறது.

மற்ற கடைசி ஆறு கற்பனைகளும் நாம் நமது உடன் மனிதருக்கு செய்யவேண்டிய கடமைகளைக் காட்டுகிறது. நமது உடன் மனுஷர்களுக்கெல்லாம் அதிக முக்கியமானவர்கள் நமது பெற்றோர்கள்தான். ஆகையினால் ஐந்தாவது கற்பனையில் தேவன் சொல்லுகிறதாவது: "உன் தேவனாகிய கர்த்தர் உனக்குக் கொடுக்கிற தேசத்திலே உன் நாட்கள் நீடித்திருப்பதற்கு, உன் தகப்பனையும் உன் தாயையும் கனம் பண்ணுவாயாக." மீதியாயிருக்கிற இதர கற்பனைகள், நாம் நமது அயலாருக்கு செய்யும் தீங்குகளை பகுத்துக் காட்டுகின்றன. கற்புடைமை, திரவியம், கீர்த்தி என்கிற விஷயங்களின் காரணமாய் ஓர் உயிருக்குச் செய்யப்படும் தீங்கை அவை பிரித்துக் காட்டுகின்றன. ஒவ்வொரு காரியத்தையும் பற்றிய பெரிய தீங்கும் பரிஷ்காரமாய் விலக்கப்பட்டிருக்கிறது. உயிருக்குச் செய்யப்படும் பெரிய தீங்கிலொன்று கொலை, ஆனபடியினால் கற்பனையும் அதைப்பற்றி அறிவிக்கிறது: "கொலை செய்யாதிருப்பாயாக." திரவியத்தினிமித்தம் செய்யப்படும் பெரிய தீங்கு களவு செய்தலாம், ஆதலால் கற்பனையும் அதைப்பற்றி கூறுகிறது: "களவு செய்யாதிருப்பாயாக." கற்புடைமையை குலைப்பதற்கு செய்யப்படும் பெரிய தீங்கு விபசாரமாம், அப்படி கற்பனையும் "விபசாரம் செய்யாதிருப்பாயாக" என்று சொல்லுகிறது. கீர்த்திக்கு விரோதமாய் செய்யப்படுகிற பெரிய தீங்கு பொய்ச்சத்தியமாம். அதனால் தேவன் "பிறனுக்கு விரோதமாய் பொய்ச்சாட்சி சொல்லாதிருப்பாயாக." என்று கட்டளையிட்டிருக்கிறார். இப்படியாக இதே விதமான சிறிய குற்றங்களும் பெரியவை யென்றுதான் நிதானிக்கிறோம். உதாரணமாக: இவ்வுலகமானது என்றும் அறிந்திராத பெரிய சாஸ்திரியாகிய கிறிஸ்துவென்னும் தேவ குமாரனானவர் தாமே இதைப்பற்றி சொல்லுகிறதாவது: "தன் சகோதரனை நியாயமில்லாமல் கோபித்துக்கொள்ளுகிறவன் நியாயத்தீர்ப்புக்கு ஏதுவாயிருப்பான்," "தன் சகோதரனைப் பகைக்கிற எவனும் மனுஷ கொலைபாதகனாயிருக்கிறான்" என்பதுதான். இப்பெரிய பிரமாணம், பிரமாணங்களுக்கெல்லாம் பெரியவையாயிருக்கிறது, நமது அயலாருக்கு அடாத சிந்தைகளை தவிர்க்கும்படிக்கு கட்டளையிடுகிற கற்பனைகளோடு பூரணமாய் முடிகிறது. கடைசியாய், பத்தாவது பிரமாணம் கூறுகிறதென்னவெனில்: "பிறனுடைய வீட்டை இச்சியாதிருப்பாயாக; பிறனுடைய மனைவியையும், அவனுடைய வேலைக்காரனையும், அவனுடைய வேலைக்காரியையும், அவனுடைய எருதையும், அவனுடைய கழுதையையும், பின்னும் பிறனுக்குள்ள யாதொன்றையும் இச்சியாதிருப்பாயாக" என்பதேயாம்.

நாம் இவ்வுலகில் பாக்கியத்தை யடைய விரும்பினவர்களாய் உண்மையான ஊழியஞ்செய்து இவ்வுலக ஜீவியத்தை முடித்த பிறகு இதன் பலாபலனை யடைய விரும்புகிறோமா? அப்படியானால் கர்த்தாதி கர்த்தரும், இராஜாதி ராஜரும் கட்டளையிட்டிருக்கிற இந்த பிரமாணங்களை கைக்கொண்டு, அவரை நமது ரட்சகரென்று ஏற்றுக்கொள்ளுகிற அனைவருக்கும் அந்த இரட்சண்யமாகிற நித்திய ஜீவனை அவர் அளிக்கத் தயாராயிருக்கிறார்.

F. W. Smith.

ஓர் பெரிய குடும்பம்

(A GREAT FAMILY.)

இவ்வையகத்தில் வசிக்கும் மானிடர்களாகிய நாம், சமுத்திரத்திலுள்ளவைகளினாலும், பூமியிலுள்ளவைகளினாலும், ஆகாயத்திலுள்ளவைகளினாலும், பிராணிகளையும், தாவரங்களையும் தாதுக்களையும், இன்னும் மற்றும் இயற்கை பொருட்கள் யாவற்றையும் உண்டாக்கி நடத்தி வருகிற கடவுள் ஒருவர் இருக்கிறார் என்று கண்டறிந்துகொள்ளுகிறோம். இன்னும் சற்று சிந்தித்து யோசிக்குமிடத்தில், 'படைப்பெல்லாம் படைத்தான் மனுவுக்காக; மனுவைப் படைத்தான் தம்மை வணங்க என்றபடி, இவ்வுலகத்தில் உண்டாயிருக்கிற யாவும் கடவுள் மனுஷனுக்காக உண்டாக்கியிருக்கிறார் என்றும் தெரிகிறது. இதினால் அவர் மனுஷ ஜாதியின்மேல் வைத்திருக்கிற அன்பு எவ்வளவோ பெரிது என்று விளங்குகிறது.

ஒரு கடவுள் உண்டென்பதையும், அவர் மனுப்புத்திரர்மேல் அன்பு கூருகிறாரென்பதையும் ஒருவராவது மறுக்கமாட்டார்கள். இன்னும், நாம் பார்க்கும் காட்சிகளினாலும், கேட்கும் செய்திகளினாலும், அறியும் ஒவ்வொரு சம்பவங்களினாலும் மனுஷனுடைய இருதயத்தின் தோற்றங்கள், நினைவுகள், பேச்சுகள், சம்பாஷணைகள், செய்கைகள், நடக்கைகள் யாவும் பொல்லாதவைகளாகவே இருக்கிறதென்றும் யாவரும் ஒப்புக்கொள்வார்கள். அதாவது, நீதிமான்களென்று சொல்லத்தகும் மனுஷர்கள் இப்பூவுலகில் கிடையாது. ஏனென்றால், "எல்லாரும் பாவஞ் செய்து" மகா பாவிகளாகவே இருக்கிறோம். ஆனால், நீதிமான்களாகும் வழிகளை அறிந்து, நீதிமான்களாகும்படியாக இன்னமும் தேவன் தமது அன்பை அதிகமதிகமாய் விளங்கப் பண்ணுகிறார். பாவத்தை விட்டு நீதிமான்களாகும்படி ஏற்படுத்தப்பட்டிருக்கும் ரட்சண்ய வழியில், மனுஷருக்கு உதவி செய்யும்படியாக ஒரு பெரிய கூட்டத்தையும் ஆயத்தப்படுத்தி உதவி செய்து வருகிறார். ஆ! தேவனுடைய அன்பு எவ்வளவு பெரிது!

"எனதன்பின் பெருக்கும், ஆழம் நீளம் உயரமும்
சொல்லி முடியாது பார்! என்னைப்போன்ற நேசனார்?"

என்று பராபரன் மனுஷ ஜாதியைப் பார்த்துக் கேட்கிறார். அவருடைய அன்பின் ஆழத்தையும், நீளத்தையும், உயரத்தையும் பூரணமாய் உணர்ந்துகொள்ளக்கூடியவன் உண்டோ? கிடைக்கவே கிடையாது. என்றாலும், மனுஷனுடைய மட்டுப்பட்ட ஞானத்தால் அவருடைய அளவைச் சற்றே உணர்ந்து, வாக்குக் கடங்காத ஆனந்தக் களிப்புடன் கடவுளைப் புகழுகிறான்.

அவருடைய அன்பினால் மனுஷருக்குதவியாக அவர் ஏற்படுத்தியிருக்கும் அந்தப் பெரிய கூட்டத்தைப்பற்றி, உங்களோடு இப்பத்திரிகையின் மூலமாய்ப் பேசலாமென்றெண்ணுகிறேன். இதைப்பற்றி அநேகர் பற்பல எண்ணமுடையவர்களாயிருக்கிறார்கள். சிலர் இந்தக் கூட்டம் எண்ணிக் கைக்கடங்காத தேவர்களென்றும், சிலர் மரித்த பரிசுத்தவான்களென்றும், இன்னும் சிலர் மரித்தவர்களின் ஆவிகளென்றும் தப்பாக எண்ணிக்கொண்டிருக்கிறார்கள். இதை வாசிக்கும் நண்பர்களே! என்னோடுகூட இதைப்பற்றிச் சிந்தித்து அறிய அதிக ஆவலுள்ளவர்களாயிருப்பீர்களென்று நம்புகிறேன்.

தேவன் ஒருவரே என்று ஒப்புக்கொள்ளுகிற நாம், மற்றவர்களைத் தேவர்களென்று அழைக்கத் தகுமோ? தகாதே. ஆனால், இந்தக் கூட்டம் பரலோகக்கூட்டம். இந்தக் கூட்டத்தார் தூதர்கள் என்று அழைக்கப்படுகிறார்கள். இவர்கள் தேவதூதர்கள்—தேவனுடைய தூதர்கள்; தேவனுடைய தூதை மற்றவர்களுக்கு அறிவிக்கிறவர்கள்; தேவனுக்கு ஊழியஞ்

செய்கிறவர்கள்; அவர் இடும் சகல கட்டளைகளையும், அவர் அனுப்பும் சகல செய்திகளையும் கொண்டுவந்து மனுஷருக்கு வெளிப்படுத்துகிறவர்கள். இவர்கள் பரலோகத்தில் ஒரு பெரிய குடும்பமாக இருக்கிறார்கள். அந்தக் குடும்பம் அன்பினால் கட்டப்பட்டிருக்கிற குடும்பம். ஒரு மனுஷன் தன் குடும்பத்தில்தான், தான் காட்டக்கூடிய எல்லாவித அன்பையும் காட்டுகிறான். அப்பொழுது அந்தக் குடும்பம் மிகவும் சந்தோஷமாக இருக்கிறது. அதுபோல இப்பெரிய குடும்பம் அளவற்ற சந்தோஷமுற்றிருக்கிறது. "இதினிமித்தம் நான் பரலோகத்திலும் பூலோகத்திலுமுள்ள முழுக் குடும்பத்துக்கும் நாமகாரணராகிய, நம்முடைய கர்த்தராயிருக்கிற இயேசு கிறிஸ்துவினுடைய பிதாவை நோக்கி முழங்கால் படியிட்டு," எபேசியர் 3: 14, 15. இதனால் பரலோகக் குடும்பம் வேறே பூலோகக் குடும்பம் வேறே என்று தெரிகிறது. பரலோகக் குடும்பத்திலுள்ளவர்கள் பூலோகக் குடும்பத்தாரல்ல. அதாவது, தேவதூதர்கள் மனுஷர்களல்ல; அல்லது மனுஷர்கள் தேவதூதர்களல்ல.

"நான் பூமியை அஸ்திபாரப்படுத்துகிறபோது நீ எங்கே இருந்தாய்? நீ அறிவாளியானால் அதை அறிவி. அதற்கு அளவு குறித்தவர் யார்? அதின்மேல் நூல் போட்டவர் யார்? இதை நீ அறிந்திருந்தால் சொல்லு. அதின் ஆதாரங்கள் எதின்மேல் போடப்பட்டது? அதின் கோடிக்கல்லை வைத்தவர் யார்? அப்பொழுது விடியற்காலத்து நட்சத்திரங்கள் ஏகமாய்ப் பாடி, தேவ புத்திரர் எல்லாரும் கெம்பீரித்தார்களே." யோபு 38: 4-7. இந்த உலகத்தையும் இதில் வசிக்கிற மனுஷனையும் அவன் அனுபவிக்கிற யாவற்றையும் சிருஷ்டிக்கு முன்னேயும் சிருஷ்டிக்கும்போதும், இந்தப் பெரிய குடும்பத்தாராகிய தேவ புத்திரர்கள், அல்லது தேவ தூதர்கள், தேவனோடிருந்து சந்தோஷங்கொண்டாடியிருக்கிறார்கள். "அவர் மனுஷனைத் துரத்திவிட்டு ஜீவ விருட்சத்துக்குப் போம் வழியைக் காவல் செய்ய ஏதேன் தோட்டத்துக்குக் கிழக்கே கேருபீன்களையும் வீசிக்கொண்டிருக்கிற சுடரொளிப் பட்டயத்தையும் வைத்தார்." ஆதியாகமம் 3: 24. இன்னும், மனுஷன் பாவஞ் செய்து, பாவத்தின் பலனாக வந்த மரணத்தை அடையுமுன், அதாவது ஒரு மனுஷனாவது மரிக்கிறதற்கு முன்னதாகவே, தேவதூதர்களின் ஒரு வகுப்பாராகிய கேருபீன்களிருந்தார்களென்றும் காண்கிறோம். இந்த வகுப்புகளைப்பற்றி பின்னால் உரைக்கிறேன்.

இப்பொழுது நாம் அறிந்திருக்கிறபடி, தேவன் ஒருவரே என்றும், இந்தக் கூட்டம் அவருடைய வேலைபாட்களாகிய தூதர்களென்றும், மனுஷன் உண்டாக்கப்படுமுன்னும், அவன் மரிக்குமுன்னும் தேவதூதர்கள் இருந்திருக்கிறதினால் இவர்கள் மரித்த பரிசுத்தவான்களல்லவென்றும், அல்லது மரித்தவர்களின் ஆவிகளல்லவென்றும் தெளிவாய்த் தெரிகிறது. மனுஷருக்குதவியாக கடவுள் சிருஷ்டித்திருக்கிற இந்தப் பரம குடும்பத்திற்காகக் கர்த்தருக்கு அனந்த ஸ்தோத்திரம்.

V. D. கோவிற் பிள்ளை.

தாய்மார்கள் அறியவேண்டிய விஷயங்கள்

குழந்தைகளுக்குப் புட்டி ஆகாரம் கொடுப்பதென்று தீர்மானித்துவிட்டால், எந்தப் புட்டி ஆகாரத்தைக் கொடுப்பதென்பதைப்பற்றி யோசிக்கவேண்டும். குழந்தைகளுக்கு பசுமாடு, வெள்ளாடு, கழுதை இந்த மூன்று மிருகங்களின் பால் கொடுக்கலாம். இம்மூன்று மிருகங்களின் பாலில் வெள்ளாட்டுப்பால் புஷ்டியைத் தரத்தக்கது. அது பசும்பாலைக் காட்டிலும் கெட்டியானது.

ஆனால், பொதுவாக பசும்பால் சௌகரியமானதாகும். பசு நல்ல தேகத்துடனிருந்து அதன் கன்று சரியான வயதுடையதாயிருந்தால், அந்தப் பசுவின்பாலைக் குழந்தைகளுக்குக் கொடுக்கலாம். வீட்டில் நல்ல பசுமாடாயில்லாவிட்டால், பால்காரனிடம் நல்ல பாலை விலைக்கு வாங்கிக்கொள்ளலாம்.

பாலை நன்றாய்க் காய்ச்சவேண்டும். காய்ச்சுவது சுலபமான காரியம். பாலைக் காய்ச்சிய பிறகு ஒரு சுத்தமான பாத்திரத்தில் அதைக் கொட்டிவைக்கும்போது ஜாக்கிரதையாகவிருக்கவேண்டும். காலையிலும் மாலையிலும் பாலைக் காய்ச்சவேண்டும். பால் பாத்திரங்களைப் பிரதிதினம் பத்து நிமிஷம் காய்கிற வெந்நீரில் போட்டுவைத்து பிறகு அவைகளை ஒவ்வொரு தடவை ஆகாரம் கொடுத்தபிறகு சுத்தமாக ஸோடா பஸ்மம் போட்டுக் கழுவிவைக்கவேண்டும். பிறகு அவைகளைக் காய்ச்சிய குளிர்ந்த ஜலத்தில் மறுபடியும் உபயோகப்படுத்தும் வரையில் வைத்திருக்கவேண்டும். இரண்டு புட்டிகளும் பல பாத்திரங்களுமிருக்கவேண்டும். புட்டிகளுக்குக் குழாய்களிருக்கக்கூடாது. இருபுறத்திலும் துவாரங்களிருந்தால் அத்துவாரங்களை அடைக்கும் தக்கைகளைப் பிரதிதினம் காய்ச்சவேண்டும். தாய்மார்கள் இந்த வேலைகளை வேலைக்காரர்களிடம் ஒப்புவித்தல் கூடாது. இந்த வேலைகளைத் தாய்மார்களே செய்யவேண்டும். அல்லது வேலைக்காரர்களைக்கொண்டு செய்யும்படி கவனிக்கவேண்டும்.

இந்தியாவில் பசுப்பாலில் போதுமான புஷ்டி கிடையாது. ஆதலால், சர்க்கரையும் கிரீமும் சேர்க்கவேண்டும். கிரீம் அகப்படுவது கஷ்டமாயிருந்தால், காட்லிவர் ஆயிலில் 15 துளிகள் பகலில் சேர்க்கவேண்டும். முதன்முதலாக புட்டி ஆகாரம் கொடுக்கும்போது 5 துளிகள் காட்லிவர் ஆயில் சேர்க்கவேண்டும். மற்றொரு முறை புட்டி ஆகாரம் கொடுக்கும்போது 5 துளிகளும் மூன்றும்முறை பகலில் புட்டிபபால் ஆகாரம் கொடுக்கும்போது 5 துளிகளும் காட்லிவர் ஆயில் அதனோடு சேர்த்துக் கொடுப்பது அவசியம். எல்லாம் மொத்தமாக ஒருநாளில் 15 துளிகளுக்கு மேலாகக் காட்லிவர் ஆயில் கொடுப்பது அனாவசியம்.

அகாலத்தில் குழந்தைகளுக்கு ஆகாரம் கொடுப்பதைவிட ஒரேவிதமான ஆகாரத்தைக் குறித்த வேளையில் கொடுப்பதுதான் முக்கியமாகும். தாய்மார்கள் புட்டிப்பால் ஆகாரம் கொடுத்தாலும் தாய்ப்பால் கொடுத்தாலும் குறித்த வேளையில் குழந்தைகளுக்கு ஆகாரம் கொடுக்கப்படவேண்டுமென்பதை ஞாபகத்தில் வைத்துக்கொள்ளவேண்டும்.

தாய்மார்கள் தங்கள் குழந்தைகள் எவ்வளவு பெருமனுயிருக்கவேண்டுமென்பதைப் பற்றி ஆச்சரியமுறுகிறார்கள். குழந்தை பிறந்தபோதுள்ள நிறையைக்காட்டிலும் ஐந்தாவது மாதக் கடைசியில் அது சுமார் இரண்டுமடங்கு நிறையிருக்கவேண்டும். பனிரெண்டாவது மாதக் கடைசியில் குழந்தை, பிறந்தபோதிருந்த நிறையைவிட மூன்று மடங்கு நிறையிருக்கவேண்டும்.

தாய்மார்கள் என்ன கவனிக்கவேண்டுமென்றால், தங்களுடைய பாலே குழந்தைகளுக்கு ஏற்றதென்று ஞாபகத்திலிறுத்திவைக்கவேண்டும். ஆனால், அவர்களுடைய பால் நல்லதாயிருக்கவேண்டும் சாரமற்ற தாய்ப்பாலைக் குடித்து வளரும் குழந்தைகளைக் காட்டிலும் பசும்பாலைக் குடித்து வளரும் குழந்தை புஷ்டியாக வளரும். தாய்மார்கள் தத்தம் குழந்தைகள் ஏன் பலமாகவும் சுறுசுறுப்பாகவும் வளரக்கூடாதென்று அடிக்கடி கேட்கிறார்கள். காரணம் நூற்றுக்கு 99 குழந்தைகள் உட்கொள்ளும் ஆகாரம் அவைகளின் தேகத்திற்கு இசைந்ததாயில்லை யென்பதாகும். சில சமயங்களில் வேறு காரணங்களினாலும் குழந்தைகளுக்குக் கெடுதி யுண்டாகலாம். அவைகள் (1) சுத்தமான காற்றில்லாமை, (2) அசுத்தம், (3) காலாகாலத்தில் உணவு கொடாமல் அகாலத்தில் உணவு கொடுத்தல், (4) தேகத்திற்கு ஒவ்வாத ஆகாரத்தைக் கொடுத்தல், (5) ஜீரணசக்தி குறைவு, ஆக இந்த ஐந்து காரணங்களாகும்.

பால் காய்ச்சும் பாத்திரங்களும் பால்கொடுக்கும் பாத்திரங்களும் சுத்தமாயிராவிடில் குழந்தைகளுக்குக் கெடுதியாகும்.

சில தாய்மார்கள் தங்கள் குழந்தைகளுக்குக் குறித்த காலங்களில் ஆகாரத்தைக் கொடுத்துப் பழக்கம் செய்யாமல் அகாலங்களில் தங்களுக்குச் சௌகரியமானபோதும், அல்லது குழந்தைகள் அழும்போதும் கொடுக்கிறார்கள். இந்தப் பழக்கம் குழந்தைகளுக்குக் கெடுதி.

அநேகம் தாய்மார்கள் அதிகப் பசையுள்ள ஆகாரங்களைக் குழந்தைகளுக்குக் கொடுக்கிறார்கள். அந்த விதமான ஆகாரத்தைச் சிறு குழந்தைகள் ஜீரணம் செய்யமுடியாது. கஞ்சி, அரிசிச்சாதம், ரொட்டி, பிஸ்கோத் முதலிய ஆகாரங்களில் அதிகப் பசையிருக்கிறது. குழந்தை ஆறு மாதங்களானபிறகு பசையுள்ள ஆகாரம் பிரத்தியேகமாக தயார் செய்யப்பட்டிருந்தால், கொடுக்கலாம்.

பிரத்தியேகமாக தயார் செய்யப்பட்ட ஆகாரங்களான மால்டட் ஆகாரம், மெல்லின்ஸ் புட், பெங்கர்ஸ் புட், அலன் அஹென்பரிஸ்புட் முதலியவைகளாகும். ஆறுமாதங்களான பிறகு இந்த ஆகாரங்கள் குழந்தைகளுக்கு நல்ல ஆகாரங்களாகும். இவைகளை உபயோகப்படுத்துவது நல்லதாகும்.

சில சமயங்களில் நல்ல பசும்பால் அல்லது வெள்ளாட்டுப்பால் கிடைப்பது கஷ்டமாயிருக்கிறது இதற்காக கிளாக்ஸோ மில்க், ஹார்லிக்ஸ் மில்க், அலன்பரீஸ் மில்க் முதலிய பால்களைக் கொடுக்கலாம். இந்தமாதிரி செயற்கை ஆகாரங்களைக் குழந்தைகளுக்குக் கொடுக்கும் தாய்மார்கள் வாரத்திற்கு இரண்டு அல்லது மூன்றுமுறை ருசியான ஆரஞ்சுப் பழத்தின் ரசத்தைக் கொடுக்க மறக்கக்கூடாது.

இத்தேசத்தில் பல தாய்மார்கள் கண்டென்ஸ்டு மில்கை (Condensed milk) குழந்தைகளுக்குக் கொடுக்கிறார்கள். இந்தப் பாலில் அதிக சர்க்கரை யிருக்கிறது. இதனால், குழந்தைகளின் இரைப்பை கோளாறு படுகிறது. தாய்மார்கள் இன்னுமொரு பெரிய தப்பிதம் செய்கிறார்கள். வெண்ணெய் எடுக்கப்பட்ட கண்டென்ஸ்டு பாலை குழந்தைகளுக்குக் கொடுக்கிறார்கள். இந்தப் பாலில் குழந்தை வளருவதற்குரிய அவசியமான ஸத்துக்களில்லை. குழந்தைகளுக்குக் கண்டென்ஸ்டு பாலை கொடுப்பதாயிருந்தால் வெண்ணெய் எடுக்கப்படாத கண்டென்ஸ்டு பாலை கொடுக்கவேண்டுமேயன்றி வெண்ணெய் எடுக்கப்பட்ட, பாலைக் கொடுக்கக்கூடாது. வெண்ணெய் எடுக்கப்படாத பாலில் குழந்தைகள் வளருவதற்குரிய ஸத்துக்களிருக்கின்றன.

குழந்தைகள் பலமாகவும் பெரிதாகவும் வளராமலிருப்பதற்கு மற்றொரு காரணமிருக்கிறது. சில குழந்தைகளுக்குத் துர்பலமுள்ள ஜீரணகோச மிருக்கிறது. ஆனதால் அவைகள் அடிக்கடி வயிற்றுப்போக்கினாலும் ஒக்காளத்தினாலும் கஷ்டப்படுகின்றன. இந்த மாதிரியாகக் குழந்தைகள் கஷ்டப்படும்போது உடனே டாக்டரை வரவழைத்துக் காண்பிக்கவேண்டும். அவர் சொல்லியபடி நடக்கவேண்டும். குழந்தைகளுக்குக் கொடுக்கப்பட்டு வரும் ஆகாரத்தை அவரிடம் அறிவிக்கவேண்டும். அந்த ஆகாரம் குழந்தைகளுக்கு ஏற்றதாவென்று அவரைக் கேட்கவேண்டும். இந்த விஷயத்தில் சினேகிதர்களுடைய யோசனைகளும் தாதிகளின் யோசனைகளும் பிரயோஜனமாயிராது. வைத்தியருடைய புத்திமதிகளைக்கேட்டு அவைகளின்படி நடக்கவேண்டும். ஒரு ஸ்திரி வைத்தியர் பக்கத்தில் குடியிருந்தால் அவருடைய யோசனைகளையும் கேட்டு நடக்கலாம்.

இரண்டு வயதுக்குட்பட்ட குழந்தைகள் கோணல் கால்களுடன் நடக்கின்றன. இது தாய்மார்களுக்கும் தாதிமார்களுக்கும் பெருத்த அவமானமாகும். குழந்தைகளுக்கு ஒவ்வாத ஆகாரத்தைக் கொடுத்து வந்தால், அவைகள் அவ்வாறு நடக்கின்றன. "ரிக்கட்ஸ்" என்னும் வியாதியினால் அதாவது கணைச்சூட்டினால் தாக்கப்பட்டு எலும்புகள் மிருதுவாய் விடுகின்றன. கால்களின் எலும்புகள் மிருதுவாயிப்பதால், அவைகள் தேகபளுவைத் தாங்க முடியாமல் வெளிப்புறமாக வளைகின்றன. ஆனதுபற்றி குழந்தைகள் கோணலாக நடக்கின்றன.

குழந்தைகளுக்கு எந்தவிதமான தேகப்பயிற்சி அவசியம்? என்பது முக்கிய கேள்வி. குழந்தைகளுக்கு நல்ல தேகப்பயிற்சி அவசியம். 15 அல்லது 16 மாதங்களாவதற்குள் குழந்தைகளை நடக்கவிடுதல் கூடாது.

குழந்தைகளுக்கு எவ்வளவு நேரம் தூக்கம் வேண்டும். பிறந்து பதினாறு நாள் வரையில் ஒவ்வொரு முறையும் ஆகாரம் கொடுத்தபிறகு குழந்தைகள் தூங்கவேண்டும். அதாவது ஒருநாளில் 24-மணிக்கு 19-மணிநேரம் குழந்தைகள் தூங்கவேண்டும். குழந்தைகளுக்கு ஒரு மாதமானபிறகு பிரதிதினம் மாலையில் ஒருமணி சாவகாசம் அவைகள் விழித்திருக்கும்படி செய்யவேண்டும். மாலையில் ஒருமணி நேரம் விழித்திருந்தால் இரவில் அது நன்றாகத் தூங்கும். குழந்தைகள் வளரவளர பகலில் பலதடவைகள் அவைகள் விழித்திருக்கவேண்டும். 12-மாதங்களானபிறகு இரவில் $9\frac{1}{2}$ மணி முதல் காலை 6-மணி வரையில் குழந்தைகள் தூங்கவேண்டும். இதோடு பகலில் 11-மணி முதல் 3-மணி வரையிலும் பிறகு மாலை $6\frac{1}{2}$-மணி முதல் 9-மணி வரையிலும் தூங்கவேண்டும். கொஞ்சகாலமான பிறகு குழந்தைகள் இரவில் 12-மணிநேரம் தூங்கவேண்டும். குழந்தைகளை வளர்ப்பதற்கு இவைகளெல்லாம் முக்கியமான விதிகளாகும். இவ்விதிகளை அனுஷ்டானம் செய்வது முக்கியமாகும்.

சுகாதார விஷயங்கள்

O. SMITH, M. D. டாக்டர் சிமித்.

மலேரியா காய்ச்சல்.

(HEALTH & TEMPERANCE)

காரணமும் குறிகளும்.

1. இரத்தத்தில் அதை உறிஞ்சுகின்ற மிகவும் சிறிய கிருமிகள் இருப்பதால் இந்த முறை காய்ச்சல் உண்டாகின்றது. இந்தக் கிருமிகள் இரத்தத்திலிருந்துகொண்டு விர்த்தியாகின்றன. ஷை கிருமிகளின் எண்ணிக்கை ஏராளமான உடனே ஜுரத்தைக் கொண்டுவருகிறது.

2. மலேரியா கிருமிகள் இருப்பதின் முக்கியமான அடையாளம் யென்னவென்றால் சாதாரணமாய் தீர்மானிக்கக்கூடிய ஓர் விதமான ஜுரம் வருவதுதான். இந்த ஜுரம் அடிக்கடி தணிந்துவிடுகின்றது. தேக உஷ்ணமானது ஒருவேளை சம ஸ்திதிக்காவது அதற்கும் கீழ் ஸ்திதிக்காவது வந்து மறுபடியும் உயரும். இச்ஜுரம் வழக்கமாக யேற்பட்ட காலக்கிரமங்களில் வரும். 24-மணிக்கு ஒரு தடவையாவது, 48 மணிக்கு ஒரு தடவையாவது, அல்லது 72 மணிக்கு ஒரு தடவையாவது வரும்.

3. எந்தவிதமான ஜுரமாயிருந்தபோதிலும் அதற்கு மூன்று நிலைமைகளுண்டு: குளிர்ச்சியான நிலைமை, வெப்பமான நிலைமை, வேர்வை விடும்படியான நிலைமை. குளிர்ச்சியான நிலைமையில் தேக முழுமையும், தலை முதல் கால்வரையில், நடுக்கமுண்டாகும். இந்த குளிர்ந்த நிலைமையிலிருந்தும் உஷ்ணம் மாத்திரம் அதிகமாய்க் கொண்டுவரும். சிறு நேரத்தின் பிறகு நடுக்கும் நின்றுபோய் உஷ்ணம் மாத்திரம் 103 அல்லது 104 சில வேளைகளில் 105 டிக்கிரீ அல்லது அதற்கு மேலும் அதிகமாகும். சுமார் ஒரு மணி நேரத்தின் பிறகு உஷ்ண நிலைமை மறைந்துபோய் நோயாளிக்கு விசேஷமாக வேர்வை விட்டு ஜுரமும் சீக்கிரம் குறைந்துவிடுகிறது.

தடுக்கும் முறை.

4. முறை ஜுரம் தொத்து வியாதி. அது கொசுக்கள் மூலமாய் பரவுகிறது. முறை ஜுரம் வந்திருக்கும் ஒரு மனிதனை ஒரு கொசு கடித்தால் அம்மனிதன் உதிரத்திலிருக்கும் கிருமிகளில் சிலது அக்கொசுவின் வயிற்றில் புகும். அது அனுபலிஸ் சாதியில் சேர்ந்தவைபோன்ற ஓர் விதமான கொசுவாயிருந்தால் அதனுடைய வயிற்றில் அந்தக் கிருமிகள் அபிவிர்த்தியடைந்து வயிற்றிலிருந்து ரத்தம் வியாபிப்பதால் வாயின் எச்சலில் சேரும். அந்தக் கொசு ஒருவனை கடிக்கும்போது இந்த விஷத்தை அம்மனிதன் ரத்தத்தில் பிரவேசிக்கச் செய்கிறது. பிறகு யாருடைய ரத்தத்திலிருந்து அந்த விஷம் யெடுக்கப்பட்டதோ அவனுக்கு நேர்ந்த ஜுரம்போலவே இவனுக்கும் உண்டுபண்ணுகிறது. ஆகையால் மலேரியா ஜுரங்கள் கொசுக் கடியினால்தான் உண்டாகின்றன.

5. முன்னொரு காலத்தில் நினைத்திருந்தபடி நமக்கு மலேரியா ஜுரம் அசுத்தமான ஜலம் பானம் செய்வதினாலாவது பூமியிலிருந்து அசுத்தமான காற்றை கிரஹிப்பதினாலாவது உண்டாவதில்லை. ஜலமும் காற்றும் மலேரியாவுக்கு எவ்விதமாக சம்பந்தப்பட்டவையென்றால் அவைகள் மலேரியாவைக் கொண்டுவரும் கொசுக்களுக்கு இருப்பிடமாக இருக்கின்றன. மலேரியா ஜுரங்கள் கொசுக்கள் மூலமாய்த்தான் வியாபிக்கிறதென்பதும் ஒரு மனிதனிடத்திலிருந்து மற்றொருவனுக்கு வேறே எவ்விதமாயும் பரவச்செய்யமுடியாதென்பதும் நிச்சயமாய் தீர்மானிக்கப்பட்ட விஷயங்கள்.

6. ஆகையினால் கொசுக் கடிக்காமல் தடுப்பதே முக்கியமான காரியம். இதை செய்வதற்கு இரண்டு வழிகள் உண்டு:—(a) உங்களுக்குச் சமீபமாய் இருக்கிற கொசுக்கள் உங்களைக் கடிக்காமல் பார்த்துக்கொள்ளலாம், (b) நீங்கள் இருக்கிற இடத்திற்குச் சமீபமாய் கொசுக்கள் இல்லாமலும் செய்துகொள்ளலாம்.

(a) கொசுக்கள் உங்களைக் கடிக்காமல் தடுப்பது

7. முத்தின கொசுக்கள் சூரிய உஷ்ணத்தைத் தங்காது ஆகையினால் அந்தக் கொசுக்கள் பகற்காலத்தில் வெப்பமாகயிருக்கும்பொழுது வீடுகளில் புகுந்து அடங்குகின்றன. அப்படிச் செய்வதினால் பகற் காலத்தில் கொசு கடிக்கும் என்ற பயம் அதிகம் இல்லை. அனோபிலீஸ் என்னும் கொசுக்களின் முக்கிய குணம் அவை இராத்திரியில்மட்டும்தான் கடிக்கும் (அதாவது சூரியன் மறைவதற்கும் மறுபடியும் எழும்புவதற்கும் இடையில்தான்). ஆகையால் பகற் காலத்தைப்பார்க்கிலும் இராக்காலத்தில் விஷஜுரம் அதிகமாய் உண்டாகுவதற்கு ஏது இருக்கிறது.

8. சாயந்திரம் சூரியன் மறைந்த பின்பாவது காலையில் சூரியன் எழும்புவதற்கு முன்பாவது நீங்கள் இராக்காலத்தில் வெளியே போகும்பொழுது உங்களை கொசுக்கள் கடிக்காமலிருக்கும்படி காப்பாற்றிக்கொள்ள உங்கள் தேகம் முழுவதும் வஸ்திரத்தால் மூடிக்கொள்ளுங்கள். உங்களால் வாங்கிக்கொள்ளக்கூடுமானால் கொசுவலைக்குள் தூங்குங்கள். அல்லது நீங்கள் தூங்கும் வீட்டிலுள்ள கதவுகளுக்கும் ஜன்னல்களுக்கும் கொசுவலை வைத்துத் தைத்துக்கொள்ளுங்கள்.

9. எல்லாக் கொசுக்களிலும் ஜுரம் உண்டாக்கும் விஷம் இருப்பதில்லை. ஆகையால் உங்களைக் கொசு கடிக்கும்பொழுதெல்லாம் உங்களுக்கு ஜுரம் வராது. ஆனால் அடிக்கடி உங்களைக் கொசு கடித்தால் உங்களுக்கு அநேகமாய் ஜுரம் வரக்கூடும்.

(b) நீங்கள் இருக்கும் இடத்திற்குச் சமீபத்தில் கொசுக்கள் இல்லாமல் தடுப்பது

10. கொசுக்கள் கட்டுக்கிடை தண்ணீரில்தான் முட்டையிடுகின்றன. இந்த முட்டைகள் வெடித்து கொசுப் புழுகளாகின்றன. இக்கொசுப் புழுக்கள் நாளடைவில் கொசுக்களாகின்றன. சமீபத்தில் கட்டி நிற்கும் தண்ணீர் இல்லாவிட்டால் கொசுமுட்டைகள் கொசுப்புழுக்களாகாது. கொசுக்களும் இராது. கொசுக்கள் தாங்கள் உண்டான இடங்களிலிருந்து அதிக தூரம் பறந்துபோகாது. ஆகையினால் உங்கள் வீட்டிற்குச் சமீபத்தில் கட்டுக்கிடை தண்ணீர் இல்லாமல் செய்துகொண்டால் அங்கே கொசுக்கள் இல்லாமல் போய்விடும்.

11. பாய்ச்சலில்லாத குட்டைகளையெல்லாம் உலர்ந்த மண்ணால் நிரப்பிவிடவேண்டியது. வீட்டைச்சுற்றிலும் ஜலம் நன்றாய் போகும்படியான ஜலதாரைகள் கட்டிவிடவேண்டியது. வீடு எங்கும் உலர்ந்து இருக்கவேண்டும். வெளியே போக்க முடியாத மீதி ஜலம் இருந்தால் அதில் கொசுக்கள் உற்பத்தியாகாமலிருக்கும்பொருட்டு அஜ்ஜலத்தின்மேல் மண்ணெண்ணெய் ஊற்றலாம். அந்த மண்ணெண்ணெய் ஜலத்திலிருக்கும் புழுக்களை கொன்றுவிடுவதோடுங்கூட ஜலத்தின்மேல் முட்டையிட வரும் பெரிய கொசுக்களையும் கொன்றுவிடுகிறது. மலேரியா ஜுரங்கள் இருப்பதாக தெரிந்த விடங்களில் எந்த மாதிரியான நீர்தாங்கலும் 10 நாள் அல்லது 14 நாள் நின்றிருக்குமாயின் ஆரோக்கியத்தின் அபாயமாகவே நினைக்கவேண்டும்.

12. ஜலம் தங்கக்கூடிய உபயோகமற்ற உடைந்த வீட்டு சாமான்கள் அதாவது காலியான பூந்தொட்டிகள் வெறும் தகர டப்பிகள் முதலானவைகளை ஜாக்கிரதையாய் அழித்துவிடவாவது அல்லது ஒழித்துவிடவாவது வேண்டியது. வீட்டின் உபயோகத்திற்காக தண்ணீரைக் கொண்டுவந்து சேர்ப்பதற்கு ஆதாரமான யெல்லா தொட்டிகளையும வாய்க்கால்களையும் குறைந்த பக்ஷத்தில் 8 நாளைக்கு ஒரு தடவையாவது சுத்தி செய்ய வேண்டியது. கனத்த ஒரு மழை பெய்தவுடனே தோட்டத்தின் நிலத்தை பரிசோதித்து அங்குமிங்குமிருக்கும் சிறிய பள்ளங்களையெல்லாம் நிரப்பி சமமாக்க வேண்டியது.

13. தும்பு சேர்ந்த உடுப்புகளையாவது திரைகளையாவது, இன்னும் அழுக்கு வஸ்திரங்களையாவது ஆணிகளிலும் முளைகளிலும் தொங்கவிட்டு வைக்கக்கூடாது. இவைகளால்தான் முக்கியமாய் கொசுக்கள் வந்து சேருகிறது. ஆகையால் அவைகளை நன்றாய் மூடப்பட்ட பெட்டிகளில் வைக்கவேண்டியது.

14. எவ்விதமான புகையும் கொசுக்களை துரத்திவிடும். இன்னும் புகை ஜாஸ்தியாயிருந்தால் அவைகளை அடக்கிவிடும். கொசுக்களை கொல்லவேண்டுமென்றால், வீட்டின் சந்துகள் எல்லாவற்றையும் நன்றாய் மூடிவிட்டு புகை நேராய் அந்த கொசுக்களிடத்தில் சேரும்படி செய்யவேண்டியது. சாதாரணமாய் ஆட்சேபனை இல்லாததும் இந்துக்கள் எல்லா வீடுகளிலும் கிடைக்கக்கூடியதுமானது சாம்பிராணி. இதையும் மற்றும் கந்தகம், வேப்பிலை, புகையிலை முதலானவைகளையும் எரிக்கலாம்.

15. சிகிச்சை.—உங்களுடைய குடல்கள் சுத்தமாகவேண்டியது அவசியமாக இருப்பதால் அதற்காக பேதிக்குச் சாப்பிடவேண்டியது அவசியம்.

பேதிக்குச் சாப்பிட்ட உடன் ஒரு தடவைக்கு பத்து கிரேயின் கொயினாவை எலுமிச்சம்பழரசமும் ஜலமும் கலந்த நீரில் கரைத்து ஒரு நாள் ஒன்றுக்கு மூன்று தடவை சாப்பிடவேண்டும். அவ்வாறு மூன்று நாளைக்குச் சாப்பிடவேண்டும். அதன்பிறகு ஒரு வாரத்திற்கு ஒவ்வொரு இரவிலும் பத்து கிரேயின் கொயினாவை சாப்பிடவேண்டும்.

மூடின முத்துக்கதை.

(A DISPUTE BETWEEN WATER AND WINE).

"மிகுந்த ஆடம்பரமாய் நடந்த ஓர் கலியாண வீட்டில் விருந்து மேசை விசேஷித்த போஜன பானாதிகளால் நிறைந்து, மிகவும் சிறப்பாய் விளங்கினது. அந்த மேசையில் வைத்திருந்த அழகான பல பாத்திரங்களினிடையில், பிரகாசமான இரண்டு கண்ணாடிக் கிண்ணங்கள் ஒன்றில் தண்ணீரும் ஒன்றில் திராட்ச ரசமும் நிறைந்திருந்தது. அந்தப் பாத்திரங்களிலிருந்த இரண்டு பானங்களுக்கும் பின்வரும் தர்க்கம் நடந்தது. திராட்ச ரசம்: நான் எவ்வளவோ சிவப்பும் சிறப்புமாயிருக்கிறேன்; காலைச் சூரியனின் நிறத்தைப் பழிக்கிற பளபளப்பான செந்நிறம் பொருந்திய நான் இந்தக் கண்ணாடிக்குள்ளே இருந்து ஜொலிப்பதைப் பார்க்கிற மனுகுலத்தார், ஆனந்த ஆழியில் அமிழ்ந்தி, என்னை அதிக உவப்போடும் வியப்போடும் புகழ்ந்துபோற்றுகிறார். தண்ணீரே, உன்னைப் பார்த்தாலோ, பிணியாளியைப்போல வெளிறி, அந்தக்கேடும் அவலட்சணமுமாயிருக்கிறாய். உன் அந்தக்கேடு நீ இருக்கிற அலங்காரமான கண்ணாடியின் நிறத்தையுங்கூடக் கெடுக்கிறது. நீ என் பந்துவாகவுமுண்டு. உன்னைப் பார்க்கையில் எனக்கு மெத்த வெட்கமும் பரிதாபமுமாயிருக்கிறது.

தண்ணீர்:—உன் பேச்சைக் கேட்கையில் "கொண்டைக்குப் பூச்சூடிச் சண்டைக்கு நிற்பது" போலிருக்கிறது. உன் செந்நிறம் நன்னிறமென்று யார் ஒப்புவார்? "உருவத்தை யல்ல குணத்தைப் பார்" என்ற முதியோர் மொழியை நீ கேட்டிருப்பதில்லையா? நீ அழகாயிருந்தும் அதிக கேடாயிருக்கிறாய். "பசுத்தோல் போர்த்துப் புலிப்பாய்ச்சல் பாய்கிறாய்." வெளிக்கு அலங்காரமாய்த் தோன்றுகிறதெல்லாம் மெய்யான அழகுடையதென்று நினைத்தாயோ? அநேக வஸ்துக்கள் "புறம்பூசி உள்ளழுகி யிருப்பதை" நீ கண்டதும் கேட்டதும் இல்லையோ? எனக்கு அழகான நிறமில்லையென்றும் நான் அவலட்சணமானதென்றும் தூஷிக்கிறாய். ஆனாலும் இந்த மேசையிலிருக்கப்பட்ட போஜனபானாதிகள் என்னைப் பற்றித் தப்பெண்ணங்கொள்ளாதிருக்கும்படி, என் தன்மையை தாழ்மையாய் விவரிப்பது அவசியந்தான். நான் நீ சொல்லுகிறபடி அந்தக்கேடான பானமல்ல. அந்தக்கேடாய்த்தான் இருக்கிறேன் என்று வைத்துக்கொள்ளுவோம். மின்னுவதெல்லாம் பொன்னாயிராததுபோலவும், வெளுத்ததெல்லாம் பாலாயிராததுபோலவும், கறுத்ததெல்லாம் கரியுமல்ல; கசந்ததெல்லாம் காஞ்சொறியுமல்ல. "ஆனை கறுத்திருந்தும் ஆயிரம் பொன் பெறும்" என்று இருக்கிறதல்லவா? ஆதலால் எவ்விதத்திலும் நீ என்னை நிந்திக்க நியாயமில்லை.

திராட்ச.—நீ அந்தக்கேடான பானமாகவேயிருக்கிறாய். அப்படியில்லையென்றால், அதை விளக்கிக் காண்பி; உன் தத்துவத்தைப் பார்ப்போம்.

தண்.—பார்த்தால் பார்த்தால்போலத்தானிருக்கும். உன்னைப் பாவ மனுஷர் உண்டுபண்ணினார்கள்; என்னை பரிசுத்த கடவுள் உண்டுபண்ணினார். பல பதார்த்தங்களைப் புளிக்கப்பண்ணி, அவைகளிலே காட்டிலுள்ள கசந்த பட்டைகளை ஊறப்போட்டு, உன்னை வடிக்கிறார்கள். என்னையோவென்றால் சர்வ வல்லமையுள்ள சிருஷ்டி கர்த்தாவானவர் சூரிய சந்திராகிய பெற்றாரும் அவர்கள் பிள்ளைகளுமாகிய நட்சத்திரங்களும் அலங்காரமாய் வாழ்கிற ஆகாயத்தினின்றும், மாடமாளிகைகளும் கூடகோபுரங்களும் நிறைந்த மைதானங்களினின்றும், திமிங்கலமும் சுறாவும் தீர்க்கமாய் நீந்தி விளையாடுகிற திரைகடலினின்றும், குயில்கள் பாடி மயில்கள் ஆடி மரைகள் சாடி மான்கள் ஓடுகிற மலைகளினின்றும், இரைந்து சாடி விரைந்து பாய்ந்து பாறைகளிலே மோதி வரைக்கட்டுகளிலே தலைகீழாய் விழுந்து சென்ற இடங்களையெல்லாம் செழிப்பாக்குகிற நதிகளினின்றும், முத்துப்போல் குமிளிவிட்டுச் சுரந்து அமிர்தம்போல் ஊறும் ஊற்றினின்றும் வடித்தெடுத்தார். சர்வ ஞானி வடித்தெடுத்த தண்ணிய பானமாகிய நான் அருவிகளிலும், ஆறுகளிலும், தடாகங்களிலும், ஊற்றுகளிலும், சுனைகளிலும், இந்தத் தம்பிளரிலும் சூரியப் பிரகாசத்தை அடைந்து ஜொலிக்கும்போது, என்னைப் புகழாதவர்கள் இப்பூலோகத்தில் இருக்கமாட்டார்கள். புறத்தில் மட்டுமல்ல அகத்திலும் நான் அழகுபொருந்திய பானந்தான்; எனக்குள்ளே விஷமே கிடையாது; என் நுரை பைத்தியத்தையும், என் மண்டி மரணத்தையும் பிறப்பிக்கிறதில்லை; நான் ஒருபோதும் தாய்மாரின் உள்ளத்தை உடைக்கிறதில்லை; நற்கீர்த்தியைக் கொன்று துற்கீர்த்தியைப் பிறப்பிக்கிறதில்லை; ஆத்துமாக்களை நரகாக்கினியிலே அகாதமாய்த் தள்ளுகிறதில்லை. இவ்விதமாய் எனக்குக் குணமிருக்கிறது, வருணமுமிருக்கிறது. உனக்கோ வருணமே அல்லாமல் குணமே இல்லை.

திராட்ச.—என்ன தண்ணீரே, உன்னைப்பார்த்தால் பரமார்த்தியாயிருக்கிறாய்; சண்டைக்கு இரணபத்திரகாளியாகவல்லோ நிற்கிறாய். "கூடம் ஒன்று போடுமுன் சுத்தியல் இரண்டு போடுகிறதே." நான் இரண்டொரு வார்த்தை பேசுமுன் நீ அம்பாணி தைத்தது போல என்னவெல்லாம் பேசிவிட்டாய்; நல்லதாகட்டும்; இப்போதுன் நாக்கை மடக்குகிறேன். எனக்கு வருணமே யல்லாமல் குணமில்லை என்றாயே; அதை ருசுப்படுத்து பார்ப்போம்.

தண்.—அடே அப்பா! உன் குணக்கேட்டை நிரூபிக்கவா? நீ தீமையின் அவதாரமாய் முழுத்தீமையாயிருக்கிறாயே. உன் தீயதன்மையை நிரூபிக்கவும் வேண்டுமா? "மணற்சோற்றிலே கல்லாராய்கிறதுண்டோ? "அம்பட்டன் குப்பையைக் கிளறினால்

அத்தனையும் மண்ணும் மயிருந்தானே." உனக்கு வேண்டுமானால் உன் குணக்கேட்டிலும் குரூரங்களிலும் சிலவற்றைச் சொல்லுகிறேன்.

திராட்ச.—சொல்லுகிறேன், சொல்லுகிறேன் என்கிறாய்; ஒன்றும் சொல்லவில்லை. சொல்; கேட்கிறேன்.

தண்.—முடுக்காதே; உன் பிறவிக்குணத்தைச் சற்றுநேரம் அடக்கிவைத்துக்கொண்டு, நான் சாவதானமாய்ச் சொல்லுகிறதை நீயும் சாவதானமாய்க் கேள். உன் குணத்தைக் கூறுமுன் உன்னிடத்தில் ஒரு கேள்விக் கேட்கவேண்டியது. நீயும் சாராயம், சோமபானம், கள், பிராந்தி, உவிஸ்கி முதலான மற்றும் பானங்களும் ஏகதன்மையுடையவைகள்தானா?

திராட்ச.—எங்களுக்கு அற்பமான நிறபேதமும் சுவை பேதமுமே ஒழிய, உள்ளுக்குள்ளான காரசார குணங்களில் யாதொரு பேதமுமில்லை. நாங்களெல்லாரும் ஏககுடும்பத்தாரும் தாயாதிகளுமாயிருக்கிறோம்.

தண்.—அப்படியானால் இந்த சம்பாஷணையில் மது வகைகள் யாவற்றையும் உன் பேரால் அழைப்பேன்; இது உனக்கு சம்மதந்தானா?

திராட்ச.—சம்மதந்தான். என் தாயாதிகளுக்கு நான் தலைமையும் பிரதிநிதியுமாய் நிற்பது எனக்குக் கண்ணியந்தானே.

தண்.—இனி உன் தன்மையை விவரிக்கிறேன்; கேள். உயர்திணைச் சிருஷ்டிகளாகிய மனுஷர் கடவுளுக்குப்பின் அஃறிணைச் சிருஷ்டிகளாகிய நமக்குத் தேவர்களாயிருக்கிறார்கள். ஆனால் நீயோ அவர்களுக்குமேல் தெய்வமாக உன்னை உயர்த்திக்கொண்டாய்.

திராட்ச.—அப்படி உயர்த்திக்கொள்ளவில்லை; ஏன் புளுகுகிறாய்?

தண்.—புளுகுகிறேனா; இருக்கு வேதத்தின் ஒன்பதாம் புஸ்தகத்தில் உன்னைத் தெய்வமாகப் பாவித்து உனக்கு ஸ்துதியாகத் தொளாயிரத்துப்பதினாறு சுலோகங்கள் இயற்றியிருக்கிறதல்லவா?

திராட்ச.—ஆசாரியர்கள் அப்படிச் செய்தார்கள். அதற்கு நானா பழி? மேலும் இந்துக்கள் உன்னையும் தெய்வமாக எண்ணி, உன்னை கங்காதேவி என்றும், வருண பகவான் என்றும் வணங்கி வருகிறார்களல்லவா? உன் பேச்சைக் கேட்கையில் கண்ணற்ற ஒருவன் கண்ணற்ற இன்னொருவனைக் குருடா குருடா என்று பரிகாசித்ததுபோலிருக்கிறது.

தண்.—உன்னை தெய்வமென்று வணங்குகிறவர்கள் உன்னை குடித்து, உன்னால் புத்தி மயங்கி, உன்னை வணங்குகிறார்கள். ஆதலால் அந்தத் தோஷமெல்லாம் உன் தலைமேலேதான். என்னைப் பலர் வணங்குவதும் வாஸ்தவந்தான். ஏன்றாலும் அதற்கு நான் காரணமல்ல; அவர்கள் மதியீனமே காரணம்.

திராட்ச.—தீயது தீயதென்று பாடினாயே; என் தீமை இதுதானா?

தண்.—இது பிள்ளையார் வட்டம். இன்னும் கிடக்கிறது விடியுமட்டும் நமக்கு ஆண்டவன்மாராயிருக்கப்பட்ட மனுஷரை நீ இன்னும் என்ன பாடெல்லாம் படுத்துகிறாய் அவர்கள் பலவீனரும் ரோகிகளும் மருந்தேற்காதவர்களுமாகும்படி அவர்கள் சரீரத்தைக் கெடுக்கிறாய்; அதினாலேதான் "கள் முன்னே காய நோய் பின்னே" என்ற பழமொழி வந்தது. அவர்கள் அறிவீனரும், படிக்கும் சத்தியற்றவர்களும், பயித்தியக்காரருமாகும்படி, அவர்கள் மனசைக் கெடுக்கிறாய்; அதினிமித்தமே "மது உள்ளவர மதி வெளியே வரு" என்கிறார்கள். அவர்கள் மெய்யான இரட்சகரை நம்பிப் பாவ விமோசனம் பெற்றுப் பரிசுத்த பாதையில் நடந்து, பரமபதவி அடையாதபடி அவர்கள் மனதைக் கெடுக்கிறாய். இந்தக் காரணத்தினாலேதான் மனுஷர் பொதுவாய் "கள் குடியனுக்குக்

கடவுளில்லை" என்கிறார்கள். அவர்கள் பந்துக்களுக்கு அவர்கள் மூலமாய் நீ செய்கிற குரூரத்தை நினைக்கையில் எனக்கு வேதனை எழும்புகிறது. அநேக மனைவிகள் கந்தை கட்டினவர்களாய், கழுத்தில் வெறும் நூல் தாலியை மாத்திரம் உடையவர்களாய், கண் குழிந்தவர்களாய், காயத்தில் எலும்பும் தோலுமாத்திரமுடையவர்களாய்க் கதறி அழுது கண்ணீர் சிந்தித் திரியப்பண்ணுவது நீயல்லவா? அவர்கள் பிள்ளைகள் குடிக்கக் கஞ்சியற்றவர்களாய், ஒருச்சரிந்து படுக்க ஓலைப்பாயற்றவர்களாய்ப் பெற்றோரற்ற அநாத பிள்ளைகளிலும் கேடாய்த் தேரோடு நின்று தெருவோடலையப்பண்ணுவது நீயல்லவா? ஐயோ! எண்ணிறந்த ஏழை மனுஷர் "குடிக்கிற பாலை வெடிப்பிலே வார்க்கிறதுபோல," அருமையான தங்கள் காசை உனக்கென்று கொடுத்துக் கஷ்டத்தை வாங்கிக் கெடாத கேடும் படாத பாடும்படப் பண்ணிவைப்பது நீயல்லவா? ஒருதரம் கண்ணியவான்களாயிருந்தவர்களை நீ உன் மாய வலைக்குள் அகப்படுத்தி, அவர்கள் வயிற்றுக்குள்ளும் மண்டைக்குள்ளும் பிரவேசித்து, அவர்கள் தலைச்சீலை அவிழ்ந்து கீழே விழுந்து காலில் சிக்கித் தள்ளாட, அரைச்சீலை அவிழ்ந்து அம்மணமாகியவரும் நகைக்க, கையிலுள்ள பொருளைக் கள்ளர் அபகரிக்க, நல்லார் பெரியாரோடு வலிய சண்டை தொடுக்க, அவர்கள் "குடிமதம் அடிபட்டால் தீரும்" என்று தடிப்பூசை கொடுக்க, வருத்தமும் வெட்கமும் அடையப் பண்ணுவது நீயல்லவா? கிறிஸ்தவர்கள் என்று சொல்லப்படுகிறவர்களிலும் பலரைக் "கள்ள விசுவாசம் கழுத்தெல்லாம் ஜெபமாலை" என்று சொல்லத்தக்கதாய், அவர்கள் மார்க்க அனுஷ்டானங்களை மாரீசமாக்குவது நீயல்லவா? ஒருதரம் ஒரு பெரிய குபேரன்மாராயிருந்தவர்களும், ஊருண்டு பிச்சைக்கு, குளம் உண்டு தண்ணீருக்கு, தெருவுண்டு நித்திரைக்கு என்று சொல்லத்தக்கதாய்த் தாழ்த்தி குடியில் பிறந்த அவர்களையும் குரங்காட்டம் ஆட்டுகிற குரூரன் நீயல்லவா? மேலும் ஒரு குடிகாரன் மனைவி மனமுறுகித் தேவனை நோக்கிப் பண்ணின விண்ணப்பத்தைப் பார்க்கும்போதும், உன் குரூரம் எவ்வளவோ கொடிதென்பது தெளிவாகிறது.

திராட்ச.—அவள் எப்படி விண்ணப்பம் பண்ணினாள்?

தண்.—அவள் மன்றாடினதாவது: ஜெபத்தைக் கேட்கிற ஜெகத்தீசா, கண்ணீரைக் காண்கிற கருணாகரா, துன்பத்தைத் தீர்க்கிற துய்யனே, அடியாளுக்கு அநேக ஆசீர்வாதங்களை அளித்து, அழகும் ஆஸ்தியும் அந்தஸ்துமுடைய ஆமுடையானைத் தந்தீரே. அவரை இப்போது பாரும்; ஓ, பரமாத்துமாவே பாரும். அழகு அவரைவிட்டு அகன்று, அலங்கோலம் அவரைப் பிடித்தது; தனம் அவரைவிட்டுப் பிரிந்து, தரித்திரம் அவரைத் தொடர்ந்தது; அன்பு அவரை விட்டுப் போய், வன்பு அவரிலே வளர்ந்தது. விமல வஸ்துவே எங்கள் வீட்டிலே உமது விழியைத் திருப்பும். பணப்பெட்டி பாழானது; ஆபரணப் பெட்டி அதமானது; உடுப்புப் பெட்டிகள் உடைந்தன; சாமான் பெட்டிகள் சாராயக் கடைக்குப் போயின; அலுமாரிகள் அடகலாயின; நாற்காலி மேசைகள் நாசமாயின. இவைகள் மட்டுமா ஈசனே! இப்போது வீட்டுக்காரன் வந்து வாடகை கொடாததினால் வீட்டைவிட்டு எங்களை வெளியாக்குவான். நானும் என் நாலு பிள்ளைகளும் அரக்குக்கடைக்குப் போயிருக்கிற என் அன்பனும் என்ன செய்வோம்! ஐயோ! என்ன செய்வோம்! என் குழந்தைகளைப் பாரும் குணாகரா. அவர்களுக்கு உண்ண உணவில்லை; உடுக்க உடை இல்லை; ஒருச்சரிந்து படுக்க ஓலைப்பாயில்லை. அவர்கள் பசியினால் படுகிற பாட்டைப் பார்த்துப் பரிதபித்தருளும். தகப்பன் குடித்து வெறித்து வந்து குரூரமாய்த் தாக்கித்தாக்கி அறைவார் என்று பயந்து பதுங்கி யிருக்கிறார்கள். அவர்கள் மெய் மெலிந்து போயிருக்கிறதையும், அவர்கள் வயிறு பசியினால் பதைக்கிறதையும், அவர்கள் நெஞ்சு பயத்தினால் படபடென்று அடிக்கிறதையும், அவர்கள் கண் கண்ணீர் சொரிகிறதையும் பார்த்துப் பெற்ற மனம் பொறுக்குதில்லையே பூரணனே. இந்தக் கஷ்டக் கடலிலிருந்து அடியாளைக் கரையேற்ற மாட்டீரா? என் புருஷனுக்குப் புத்தியை அருளுவீரானால், அவர் குடியை விட்டுக் குணப்படுவாரே; வேலை செய்து வீட்டை நடத்துவாரே; பிள்ளைகளைப் பேணிப் பெரியவர்களாக்குவாரே; நரக பாதையை விட்டு மோட்ச பாதையைத் தொடர்வாரே. ஓ! பரம வஸ்துவே, பரிசுத்த இரட்சகர் நிமித்தம் என் பர்த்தாவைப் பூரத்கமான இந்தப் பானத்தினின்று பாதுகாத்தருளும்., ஆமென்."

(இன்னும் வரும்.)

மரித்துப்போன துன்மார்க்கர் எங்கே?

WHERE ARE THE WICKED DEAD?

நித்திய மரணம்.

1. துன்மார்க்கரைக் குறித்து பேதுரு அப்போஸ்தலன் உரைப்பது என்ன?

"நியாயத்தீர்ப்பு தேவனுடைய வீட்டிலே துவங்குகிற காலமாயிருக்கிறது. முந்தி நம்மிடத்திலே அது துவங்கினால் தேவனுடைய சுவிசேஷத்திற்கு கீழ்படியாதவர்களின் முடிவு என்னமாயிருக்கும்?" 1 பேதுரு 4: 17.

2. சத்திய வேதம். பாவத்தின் சம்பளத்தைக் குறித்து சொல்லுவது என்ன?

"பாவத்தின் சம்பளம் மரணம்." ரோ. 6: 23.

"பாவஞ் செய்கிற ஆத்துமாவே சாகும்." எசே. 18: 4.

குறிப்பு:—"மரிப்பது என்றால் ஜீவனை அல்லது உயிரை இழப்பது. ஒரு முடிவான, திரும்பி வராத, சலனமற்ற, உயிர்நிலையற்ற நிலைமை. சாவு, முடிவு, அழிவு." Webster.

3. மரணத்தின் தன்மை என்ன?

"அவர்கள் கர்த்தருடைய சந்நிதானத்திலிருந்தும், அவருடைய வல்லமை பொருந்திய மகிமையிலிருந்தும் நீங்கலாகி, நித்திய அழிவாகிய தண்டனையை அடைவார்கள்." 2 தெச. 1: 10.

4. துன்மார்க்கர் முழுவதுமாய் அழிந்துபோய் விடுவார்களா?

"ஆத்துமாவையும், சரீரத்தையும் நரகத்தில் அழிக்க வல்லவருக்கே பயப்படுங்கள்." மத். 10: 28.

"இதோ சூளையைப்போல எரிகிற நாள் வரும். அப்பொழுது அகங்காரிகள் யாவரும், அக்கிரமஞ் செய்கிற யாவரும் துரும்பாயிருப்பார்கள். வரப்போகிற அந்த நாள் அவர்களைச் சுட்டெரிக்கும். அது அவர்களுக்கு வேரையும் கொப்பையும் வைக்காமல் போகும் என்று சேனைகளின் கர்த்தர் சொல்லுகிறார்." மல். 4: 1-3.

துன்மார்க்கர் உபயோகமற்றதும், அழிந்துபோகிறவைகளுக்கும் சமமானவர்கள்.

5. துன்மார்க்கருடைய தண்டனையை எதற்கு ஒப்பிட்டிருக்கிறது?

"துன்மார்க்கரோ அழிந்துபோவார்கள், கர்த்தருடைய சத்துருக்கள் ஆட்டுக்குட்டிகளின் நிணத்தைப்போல் புகைந்துபோவார்கள்; அவர்கள் புகையாய் புகைந்துபோவார்கள்." சங். 37: 20.

6. துன்மார்க்கரை குறித்து யோவான் ஸ்நானகன் விஸ்தரிப்பது என்ன?

"எனக்குப்பின் வருகிறவரோ, என்னிலும் வல்லவராயிருக்கிறார்.........தூற்றுக்கூடை அவர் கையில் இருக்கிறது அவர் தமது களத்தை நன்றாய் விளக்கி, தமது கோதுமையை களஞ்சியத்தில் சேர்ப்பார். பதரையோ அவியாத அக்கினியினால் சுட்டெரிப்பார்." மத். 3: 11, 12.

துன்மார்க்கருக்கு ஒரு கடம் ஏற்பட்டிருக்கவில்லை.

7. மரித்த துன்மார்க்கனுடைய இடம் எது?

"இன்னும் கொஞ்ச நேரந்தான், அப்போது துன்மார்க்கன் இரான்; அவன் ஸ்தானத்தை (இடத்தை) உற்று விசாரித்தாயானால் அவன் இல்லை. சங், 37: 10.

குறிப்பு:—மரண மடைந்த துன்மார்க்கருக்கு ஒரு இடம் குறிக்கப்படவில்லையானால், அவர்கள் நித்திய தண்டனையை அனுபவிப்பது கூடாத காரியம். சிலர் போதிக்கிறபடி துன்மார்க்கர் நித்திய தண்டனையை அடைய ஒரு இடம் அவசியமென்று தெரிகிறது. ஆனால் சத்திய வேதம் அவர்களுக்கு "இடம்" இல்லை என்று தெளிவாக்குகிறது.

8. நீதிமான்களுக்கும், துன்மார்க்கருக்கும் பிரதி பலன் அளிக்கப்படுவது எங்கே?

"இதோ நீதிமானுக்கு பூமியில் சரிக்கட்டப்படுமே; துன்மார்க்கனுக்கும், பாவிக்கும் எத்தனை அதிகம்." நீதி. 11: 31.

கடைசி நியாயத்தீர்ப்பில் துன்மார்க்கர் முழுவதுமாக அழிக்கப்படுவார்கள்.

9. துன்மார்க்கர் மரித்தவுடனே தண்டிக்கப்படுகிறார்களா? அல்லது நியாயத்தீர்ப்பு வரை காத்திருக்கவேண்டுமா?

"கர்த்தர் தேவபக்தியுள்ளவர்களை சோதனையினின்று ரட்சிக்கவும், அக்கிரமக்காரரை ஆக்கினைக்குள்ளானவர்களாக நியாயத்தீர்ப்பு நாளுக்கு வைக்கவும் அறிந்திருக்கிறார். 2 பேதுரு 32: 9.

10. கடைசி நாட்களின் அக்கினி செய்வது என்ன?

"தேவனுடைய நாள் சீக்கிரமாய் வரும்படி ஆவலோடு காத்திருங்கள். அந்த நாளில் வானங்கள் வெந்து அழிந்து பூதங்கள் எரிந்து உருகிப்போம். பூமியும், அதிலுள்ள கிரியைகளும் எரிந்து அழிந்துபோம்." 2 பேது. 3: 12, 10.

11. அவர்களை அழிக்க அக்கினி வருவது எப்பொழுது?

"அவர்கள் (துன்மார்க்கர், பூமியெங்கும் பரம்பி, பரிசுத்தவான்களுடைய பாளயத்தையும், பிரியமான நகரத்தையும் வளைந்துகொண்டார்கள். அப்போது வானத்திலிருந்து அக்கினி இறங்கி அவர்களை பட்சித்துப்போட்டது." வெளி. 20: 9.

குறிப்பு:—இந்த விதமாக தேவன் பாவிகளை அழித்து பாவம் நிறைந்த உலகத்தை சுத்தப்படுத்துவார். இப்போது இருக்கும் இதே பூமியிலுள்ள சகல அசுத்தங்களும் நீக்கப்பட்டு பரிசுத்தமாக்கப்படும். பாவத்தின் பலனாக வந்த சகலமும், அடியோடே அழிக்கப்படும். வெளி. 20: 14.

இது இரண்டாம் மரணம்.

12. துன்மார்க்கர் எப்படி யாவார்கள்?

"துன்மார்க்கரை மிதிப்பீர்கள் நான் இதை செய்யும் நாளிலே, அவர்கள் உங்கள் உள்ளங்கால்களின் கீழ் சாம்பலாயிருப்பார்கள் என்று சேனைகளின் கர்த்தர் சொல்லுகிறார்." மல். 4: 3.

குறிப்பு:—துன்மார்க்கர் முழுவதுமாய் அழிக்கப்பட்டு போகிறார்கள். அதாவது புகையாய் புகைந்து சாம்பலாக்கப்படுகிறார்கள். பாவத்தில் வீழ்ந்து, அதிலிருந்து தங்களை விடுவித்துக்கொள்ள மனமற்றவர்கள் யாவரும் நித்திய ஜீவனுக்குரிய பாத்தியதையை இழந்து சாவையும், அழிவையும் அடைவார்கள். அவர்களுடைய சொந்த செய்கையினாலேயே, உபயோகமற்றவர்களாக் காட்டுகிறார்கள். இதனாலேயே அவர்கள் பதருக்கும், முள்ளுக்கும் ஒப்பிடப்பட்டிருக்கிறார்கள். அவர்களுடைய அழிவினால் யாதொரு நஷ்டம் இல்லை அவர்களை முழுவதுமாய் அழித்துவிடுவது தேவ சித்தமாயிருக்கிறது. தேவன் அவர்களை அவர்களுடைய பாவங்களிலேயே நிலைத்திருக்கச் செய்தால், அவர் துக்கம், வேதனை, சாவு முதலியவற்றையும் நிலைத்திருக்க செய்கிறவராவார். புதிய உலகத்தின் சந்தோஷத்தையும் கெடுக்கக்கூடியவராயிருப்பார். துன்மார்க்கரின் முடிவு பயங்கரமானது! பாவமும், பாவிகளும், பாவத்தின் காரணனாகிய சாத்தானும் அழிக்கப்பட்ட பின்பு, இந்த பூமியானது சுத்திகரிக்கப்பட்டு, பாவமில்லாத பரிசுத்தவான்களால் குடியேற்றப்படும், அப்போது பாவம், வியாதி, வேதனை மரணம், அழுகை முதலியதொன்றும் தேவனுடைய பிள்ளைகளை அணுகாது. 2 பேதுரு 3: 13.

13. இந்த விதமான துன்மார்க்கரின் முடிவு எப்படி அழைக்கப்படுகிறது?

"இது இரண்டாம் மரணம்." வெளி. 20: 14.

14. அந்த எரிகிற நாளைக்கு பின்பு என்ன சம்பவிக்கும்?

"அவருடைய வாக்குத்தத்தின்படியே, நீதிவாசமாயிருக்கும். புதிய வானங்களும் புதிய பூமியும் உண்டாகுமென்று காத்திருக்கிறோம். 2 பேது 3: 13.

நிகழ்கால சத்தியம்

வேத சன்மார்க்க சுகாதார விஷயங்களில் தற்கால அறிவுக்கொத்தபடி மனிதர் அபி விருத்தியடைவதற்கென்று பிரசுரமாகும் ஓர் பத்திரிகை.

மதராஸ் ஆகஸ்டுமீ, 1921.

இப்பத்திரிகை, பெங்களூரிலிருக்கும், எஸ். டி. ஏ. பப்ளிஷிங்கவுஸ்சார், பட்டணத்தில் வெப்பேரி என்னுமிடத்திலுள்ள அல்பீனியன் அச்சாபீசில் அச்சடிக்கப் பட்டு வருகிறது.

பத்திராதிபர் பாஸ்றர், ஜி. ஜி. லேளரி.
உதவி ,, ,, ஈ. டி. தாமஸ்.

		ரூ.	அ.	ப.
தனிப்பிரதி ஒன்றுக்கு	...	0	1	6
வருஷ சந்தா, தபாற் கூலி உள்பட	...	1	0	0
சிங்கப்பூர் பினங்கு முதலிய வெளி ஊர்களுக்கு தனிப் பிரதி ஒன்றுக்கு	...	0	2	0
வருஷசந்தா தபாற்கூலி உள்பட	...	1	4	0

ஓர் ஐசுவரியவான்.

அறுபது வருஷங்களுக்கு முன்னே அமெரிக்காவில் இரண்டு கோடீஸ்வரர் மாத்திர மிருந்தார்கள். ஆனால் தற்சமயம் இரு பதினாயிரத்திற்குமேல் இருக்கின்றார்கள்.

நியுயார்க் பட்டணத்திலுள்ள ஒருவன் கடந்த வருஷத்தில் அடைந்த வரும்படி நாலு கோடிக்கும் ஐந்து கோடிக்கும் மத்தியிலுள்ள ஓர் தொகை. அதாவது ஒவ்வொரு விநாடிக்கும் ஒவ்வொருடாலராக அவ்வருஷ முழுவதும் லாபம் அடைந்திருக்கிறான்.

இதே சமயத்தில் ஐரோப்பாவில் சேர்டா கோடி ஜனங்கள் பட்டினியினால் வருந்துகின்றனர். இவ்விதமாக, ஏககாலத்தில் ஐசுவரியவான்கள் பெருகுவதும் தரித்திரர் அதிகப்படுவதும் இவ்வுலக முடிவுக்கு (கிறிஸ்துவின் வருகைக்கு) அடையாளமாகும். யாக். 5; 1-5; 2 தீமோ. 3; 1, 2.

சமாசாரக் குறிப்புகள்.

யுத்த யுக்தி.

கடந்த வருஷத்தில் மேஜர் Schrocder என்பவர் 33000 அடி உயரம் பறந்து சென்றுரென்று உலக ரெக்கார்ட்டில் குறிக்கப்பட்டிருக்கிறதாம். மிஸ்றர் Rohlfe மணி ஒன்றுக்கு 138 மைல் தூரம் பறந்தோடினராம். 178 மைல் வீதம் ஓடுகிறவனுக்கு இனம் அளிக்கப்படும் என்று கூறப் பட்டதாம்.

அமெரிக்காவில் இரண்டு பெரிய யுத்த ஆகாயக் கப்பல்கள் செய்யப்பட்டிருக்கின்றன. அவைகளில் ஒன்று, பறக்கிற ஒரு கோட்டையைப்போலிருக்கிறது. அதில், ஏககாலத்தில் மின்சாரத்தினால் வெடிக்கும் பதினைந்து துப்பாக்கிகளும், ஒரு பீரங்கியும் இருக்கின்றன. இதில் ஆயுதங்களும், ஆறு யந்திரங்களுமிருக்கின்றன. இது ஒரு மணிக்கு 100 மைல் தூரம் போகுமென்று எதிர்பார்க்கப்படுகிறது. மற்றொரு கப்பல், மனுஷர் இருப்பதற்கென்று அவற்றில் யாதொரு இடமும் ஏற்படுத்தாமல், முழுக் கப்பலினும் குண்டு மருந்து இவைபோன்ற யுத்த ரஸ்துக்கள் கொண்டு செல்லும்படியாகவே அமைக்கப்பட்டிருக்கிறது, அதைச் செலுத்துவதற்குஓர்மனிதன் அவசியமில்லை. ஏனென்றால், அதுதான் செல்லவேண்டிய திசையைவிட்டு சற்றும் பிசகாமல் அதற்கு குறிப்பிட்டிருக்கும் இடத்திற்கு நேரே செல்லும் வண்ணமாக அதன் சுக்கானை அவ்வளவு நவீனமாய் அமைத்திருக்கிறார்கள். இன்னும் அது குறிக்கப்பட்ட இடம் சென்றவுடன் திடீரென எதிரிகளின்மேல் விழுந்து, அதனுள் ஏற்றியிருக்கிற வெடி குண்டுகள் ஏகமாய் வெடித்து சத்துருக்களை நாஸ்தி பண்ணும்படியாக, அது செல்லும் தூரத்திற்குத் தக்கபடி, அதன் வேகத்தை மட்டிட்டு, கிரமப்படுத்தி யிருக்கிறார்கள். இன்னும் அது குறிப்பிட்ட இடம் போனவுடன் அதனுள் இருக்கும் எரி கருவிகளும் யந்திரமும் தானாகவே நின்றுபோய் சத்துருக்கள்மீது விழும் வண்ணமாக உண்டு பண்ணப்பட்டிருக்கிறது.

இவைகளை யெல்லாம் பார்க்கும்போது, இனிமேல் சமாதானம் இருக்குமா அல்லது சண்டை உண்டாகுமா? எப்படித் தோன்றுகிறது. மேலும் இவை கடைசி யுத்தமாகிய அர்மகெதோனுக்கு ஆயத்தமாகக் காணப் படவில்லையா? சமாதானப் பிரபு இப் பூமிக்கு வந்தாலொழிய சமாதானம் ஏற்படாது. அந்த நாள் சீக்கிரம் வருவதாக.

27 SEP 1921
MADRAS.

நிகழ்கால சத்தியம்.

Vol. X. மதராஸ்:—செப்டம்பர்மீ, 1921. No. 9.

NON CO-OPERATION IN INDIA.

இந்தியாவில் ஒத்துழையாமை

இந்தியாவின் நிலைமையை யான் என்னென்று சொல்வேன்? நாகரீகம் ஒரு புறம் பெருக, துன்பம் மறு புறம் பெருகின்றனவே? இப்பொழுதும் இந்தியாவின் நிலைமை என்ன? கடந்த ஐரோப்பா யுத்தத்திற்குமுன் சமாதானமாயிருந்த இந்த இந்தியாவிற்கு, யுத்தம் நடக்கையில் ஏதோ நேரிட்டது என்று நினைத்தோமே? யுத்தம் நின்றிருந்தபோதிலும் இந்தியாவின் நிலைமை எப்படி இருக்கிறது? யுத்தத்திற்கு முந்தி இருந்த நிலைமைக்குத் திரும்பி வந்திருக்கிறதோ? ஐயோ! யுத்த காலத்திலிருந்த நிலைமையைப்பார்க்கிலும் அதிகக் கேடான நிலைமையிலிருக்கிறதே! எங்கே பார்த்தாலும் குழப்பந்தான்; நாடெங்கும் சண்டை; கலகத்தின் இரைச்சல் எங்கும் கேட்கப்படுகிறது; சமாதானத்தைக் காணோம்; ஜனங்களுக்குள்ளே அமைதியில்லை; அதிகாரிகளுக்கும் ராஜாங்கத்தாருக்கும் ஒற்றுமை கிடையாது; ராஜாங்கத்தாரோடு சில கூட்டத்தாருக்கு ஒத்துழைக்க இஷ்டமில்லை. இவர்கள் இத்தேச முழுவதும் செய்யும் அமளிக்குக் கணக்கில்லை. குற்றங் கண்டுபிடிக்கிற குணமும், குறை கூறுகிற புத்தியும் எங்கும் அதிகரிக்கிறது. அப்படியானால் இந்தியாவில் புது சீர்திருத்தங்கள் உண்டாக துவக்கிவிடவில்லையா? பிரிட்டிஷ் ராஜாங்கத்தார் இந்தியர் கையில் பொறுப்பான வேலைகளைக் கொடுக்க ஆரம்பித்துவிடவில்லையா? என்று கேட்கலாம்.

ஆம். புது ஏற்பாட்டின்படி ஐரோப்பியரும் இந்தியரும் ராஜாங்க விஷயமாய் ஒத்துழைக்கவேண்டியவர்களாயிருக்கின்றார்கள். ஆனால் சிலருக்கு இப்படி ஒத்துழைக்கப் பிரியமில்லை. ஒத்துழையாமையார் என்னப்பட்ட இக்கூட்டத்தார் இந்தியாவில் அநேக இடங்களில் பரவி இருக்கின்றார்கள். காந்தி எனப் பெயரமைந்த ஓர் புருஷோத்தமர்தான் இவர்களுக்குத் தலைமை. இவருடைய சொல்லை அநேகர் தேவ வாக்குப்போல மதிக்கிறார்கள். இந்தியர்களுக்கு முழுச்சுவாதீனத்தையும் கொடுக்கவேண்டும்; ஆங்கிலேயர் அல்ல, இந்தியரே இந்தியாவை ஆளவேண்டுமென்பதே இவர்கள் முழு வாஞ்சை. இப்பொழுது ஆங்கிலேயர் நடப்பிப்பது தவறு என்பது இவர்கள் கூறும் குறை. இந்திய அரசாட்சியில் இந்தியர் பங்கு பெற்றிருந்தும், இக்கூட்டத்தார் ராஜாங்கத்துக்கு விரோதமாய் போதிக்கும் போதனையும் செய்யும் செய்கையும், அநேக குழப்பங்களுக்கும், அதிக அமளிக்கும் காரணமாயிருக்கிறது. எல்லாத் தொந்தரவுகளுக்கும் இதுதானா காரணம்? இதற்கு உத்தரவு எல்லாத் துன்பத்திற்கும் காரணமாகிய சாத்தானுக்கு நன்றாய்த் தெரியும். இவனுடைய பட்டப் பெயர் இவனது தொழிலை நன்கு விளக்கும். "இரவும் பகலும்......நம்முடைய சகோதரர்மேல் குற்றம் சுமத்தும்பொருட்டு அவர்கள்மேல் குற்றஞ் சாட்டுகிறவன்"

(வெளி. 12: 10) என்பதுதான் அப்பெயர். 'ஐக்கியம் பெலன்' என்று ஒவ்வொரு ஜாதியும் தங்கள் தங்கள் நடக்கைகளில் திருஷ்டாந்தப்படுத்திக் காட்டுவது இவனுக்கு சற்றேனும் சம்மதமில்லை. ஜனங்கள் சமாதானமாய் வாழ இவனுக்கு கிஞ்சித்தேனும் பிடித்தமில்லை. ஒற்றின்மையும் கலகமும் உண்டாக்குவது இவனுக்கு இஷ்டம். இப்படி நடக்கும்படி பிரயாசப்படுவதே இவனது வேலை. மனுஷருள்ளத்தில் மாறுபாடான எண்ணத்தை கிளப்பிவிடுவது இவனுடைய ஆசை. விசேஷமாக இவன் விதைக்கிற வித்தாகிய 'திருப்தியின்மையே' இவைகள் யாவற்றிற்கும் காரணமென்கலாம்; சாத்தான் ஏன் இவ்விதத் தொல்லை எல்லாம் வருவிக்கிறான் ?

எல்லாவற்றையும் கவனித்து வருகிற கடவுளைத் கேட்டுப்பார். "பூமியிலும் சமுத்திரத்திலும் குடியிருக்கிறவர்களே ! ஐயோ, பிசாசானவன் தனக்குக் கொஞ்சக் காலமாத்திரம் உண்டென்று அறிந்து, மிகுந்த கோபங்கொண்டு, உங்களிடத்தில் இறங்கினபடியால், உங்களுக்கு ஆபத்து வரும்" (வெளி. 12: 12) என்று அவர் சொல்லுகிறார். ஆகையால் இவ்வேலை நடைபெற்று வருகிற இக்காலம் கடைசி காலமெனத் தோன்றுகிறது. கடைசி நாட்களில் கொடிய காலங்கள் வருமென்று அறிவாயாக. எப்படியெனில், மனுஷர்கள் தற்பிரியராயும், பணப்பிரியராயும், வீம்புக்காரராயும், அகந்தையுள்ளவர்களாயும், தூஷிக்கிறவர்களாயும், தாய் தகப்பன்மார்களுக்குக் கீழ்ப்படியாதவர்களாயும், நன்றியறியாதவர்களாயும், பரிசுத்தமில்லாதவர்களாயும், சுபாவ அன்பில்லாதவர்களாயும், இணங்காதவர்களாயும், அவதூறு செய்கிறவர்களாயும், இச்சை யடக்கமில்லாதவர்களாயும், கொடுமையுள்ளவர்களாயும், நல்லோரைப் பகைக்கிறவர்களாயும், துரோகிகளாயும், துணிகரமுள்ளவர்களாயும், இறுமாப்புள்ளவர்களாயும், தேவப்பிரியராயிராமல் சுகபோகப்பிரியராயும், தேவ பக்தியின் வேஷத்தைத் தரித்து அதின் பெலனை மறுதலிக்கிறவர்களாயும் இருப்பார்கள். இப்படிப்பட்டவர்களை நீ விட்டு விலகு" என்று முன்னுரைக்கப்பட்டிருக்கிறது. II தீமோ 3: 1-5. இப்படிப்பட்ட காரியங்களை நாம் இப்பொழுது காண்கிறோமல்லவா ? இச்சம்பவங்கள் இந்தியாவில் மட்டுமல்ல, உலகத்தின் நாலுதிசையிலும் இப்படித்தான். சமாதானக் குறைவும் சண்டை சச்சரவும் எத்தேசத்தையும் ஆண்டுகொண்டிருக்கின்றன. எங்கும் "பொல்லாதவர்களும், எத்தருமானவர்கள்" மென்மேலும் கேடுள்ளவர்களாகிக் கொண்டே வருகிறார்கள். (2 தீமோ. 3: 13.) ஐயோ ! இத்துன்பம் தொலையுமா ? எப்போ தொலையும் ?

தொல்லைக்குக் காரணன் சாத்தான் தொலைந்தால்தான் இச்சங்கடமும் தொலையும். சமாதானப்பிரபு இயேசுக்கிறிஸ்து வந்தால்தான் இவ்வுலகத்திற்கு சமாதானம். ராஜாதி ராஜாவாகிய இம்மானுவேல் மன்னன் இப்பூவுலகை ஆட்சி செய்தால்தான் ராஜ்யம் ஒழுங்குக்கு வரும். அதுவரைக்கும் சண்டைதான். ராஜாங்கத்தை சீர்திருத்தம் பண்ணவேண்டும்; நாட்டை முன்னுக்குக் கொண்டுவரவேண்டும் என்று அநேகர் எத்தனிக்கிறார்கள். இது நல்லதுதான். என்றாலும், எவ்வளவுக்கதிகமாக அவ்வெத்தனம் ஏற்படுகிறதோ அவ்வளவுக்கதிகமாக குழப்பங்களும் உண்டாகுவதை நாம் காண்கிறோமே. உலகம் கெட்டுக்கொண்டே போகிறது. "பூமியின்மேல் வரும் ஆபத்துகளுக்குப் பயந்து எதிர்பார்த்திருக்கிறதினால், மனுஷருடைய இருதயம் சோர்ந்துபோகிறது." (லூக். 21: 26) இயேசு பெருமான் இவ்வுலகத்திற்கு வந்தாலொழிய நாடு சீர்படப்போகிறதில்லை. பொழுது விடியும் சற்று நேரத்திற்குமுன் எப்படி வெகு இருட்டாயிருக்கிறதோ, அப்படியே நீதியின் சூரியனாகிய மிகாவேல் உதிக்குமுன் ஒருக்காலுமில்லாத இருளால் உலகம் மூடப்பட்டிருக்கிறது. வெடிபடும் ஓர் குண்டு, ஓர் பெருஞ் சத்தத்துடன் வெடித்து அமைதலுண்டாகிறதுபோல, இவ்வுலகம் மிகவும் கொந்தளிப்படைந்து தன் முடிவை அடையப் போகிறது. அப்படியானால் நாம் செய்யவேண்டியதென்ன ?

ராஜாங்கம் சீர்படவில்லையென்று, அதோடு ஒத்துழையாமல் சுயமுயற்சியால் சீர்திருத்தம் உண்டாக்கவேண்டுமென்ற எண்ணத்தை அகற்றி, ஒருவரே சீர்திருத்தம் உண்டாக்கக்கூடியவரும், இவ்வுலக முழுமையும் ஒரே குடையின்கீழ் சமாதானமாய் அரசாட்சி செய்யக்கூடியவருமான இயேசு இரட்சகரின் வருகைக்கு நமது மனதைத் திருப்புவோமாக. அந்த நாள் சீக்கிரம் வர நாம் வாஞ்சிப்போமாக. 'உம்முடைய இராட்சியம் வருவதாக' என்று எல்லாரும் உட்கருத்துடன் இயேசு பகவானை நோக்கி பிரார்த்தனை செய்வோமாக. அவர் வரும் வரைக்கும், அமளியின் காலத்தில் சமாதானமாய் இருக்கக்கூடிய ஓர் வழியை நாம் இப்பொழுது கையாடுவோமாக. அதாவது, உலகத்தின் எண்ணத்திற்கும் நோக்கத்திற்கும் நமது மனதைச் சாயாமல், உலகம் கொடுக்கக்கூடாத சமாதானத்தைத் தருவேன்; (யோ. 14: 27) என்று சொல்லியிருக்கிற இரட்சகரின் செட்டை ஒதுக்கிலே போய்ப் பதுங்கிக்கொள்வோமாக. அங்கே அவருடைய வசனத்தினாலுண்டாகும் ஆறுதல், சமாதானம், சந்தோஷம், நம்பிக்கை, முதலியவற்றைப் பெற்றுக்கொள்ளலாம். ஏசா. 13: 6-13-இல் காண்கிற பயங்கரங்களினின்று தப்பவேண்டுமானால், பாவத்தை விட்டோடி பரிசுத்த ஜீவியம் பண்ண இரட்சகரைக் கண்டுபிடி, அப்பொழுது ஏசா. 54: 8-14 வரையில் சொல்லப்பட்டிருக்கும் உன்னத ஆசீர்வாதங்களுக்கு நீ பங்காளி யாவாய். இந்நிலைமையே எல்லாவற்றிலும் மகா மேலானது. "துன்மார்க்கரோ கொந்தளிக்குங் கடலைப்போலிருக்கிறார்கள்." "துன்மார்க்கருக்குச் சமாதானம் இல்லையென்று கர்த்தர் சொல்லுகிறார்." ஏசா. 57: 20; 48: 22.

V. D. K.

MOODY SAID.

வேத சாஸ்திரப் பண்டிதராகிய மூடியென்பவர் சொன்னதாவது.

"நான் யாதொரு கொள்கையை பிடிவாதமாய், என் சொந்த அதிகாரத்தைக்கொண்டு உபதேசம் பண்ண எனக்கு விருப்பமில்லை. ஆனால் புதிய ஏற்பாட்டில், மற்ற எல்லா உபதேசத்தைக்காட்டிலும் "உள்ளங்கை நெல்லிக்கனிபோல்," படிப்பிக்கப்பட்டிருக்கும் நமது ரட்சகரின் இரண்டாம் வருகையைப்பற்றிய உபதேசம், என தாத்மாவுக்கு அதிக விலையேறப்பெற்றதாயிருக்கிறது. ஆகையினால் இப்படிப்பட்ட அருமையான உபதேசத்துக்கு அதிகமாய் நான் கவனம் செலுத்துகிறேன். இவ்வுபதேசத்தை அசட்டையாய் நெகிழ்கிற யாவரும், சுவிசேஷத்தை பூரணமாய் அறியாமல் குறையாகவே அறிந்துகொள்ளுகிறார்கள். அவரது வருகையைப்பற்றிய இவ்வுபதேசம், புதிய ஏற்பாட்டில் முன்னூறு தட்வைகளுக்கதிகமாக எழுதப்பட்டிருக்கிறது. மேலும் நான் கிறிஸ்தவச் சபையில் பதினாறு வருஷங்களாகயிருந்தும், இதைப்பற்றி ஒரு பிரசங்கமாவது இதற்கு முன் நான் கேட்டதில்லை. இப்படி இவற்றை அறிந்துகொள்ளக்கூடாதிருந்த காரணம் இன்னதென்று இப்போது எனக்கு நன்கு புலப்படுகிறது: கிறிஸ்தவச் சபையைத் தன் நித்திரை மயக்கத்திலிருந்து தட்டி, விழிக்கும்படி செய்வதற்கு இதைப்போன்ற உபதேசம் வேறு இல்லாதபடியால் நாம் இதைப்பற்றி அறிந்துகொள்வது சாத்தானுக்கு இஷ்டமில்லை. கிறிஸ்து இப்பூமிக்கு வந்து அவருடையவர்களை தம்மோடு அழைத்துப்போகப் போகின்றார் என்று எவனொருவன் உணருகிறானோ, அவனுக்கு இவ்வுலகப்பற்று உடனே நீங்கி ஓடிவிடுகிறது. அப்போது அவன் ஜோலி அவனைத் தடை செய்யாது. அவனது ஆத்மா அப்போதுதான் ஸ்வாதீனமடையும். அப்போது அவன், தன்னை அவருடன் அழைத்துச்செல்லப்போகும் ஆண்டவரின் வருகையை எதிர்நோக்கிக்கொண்டே யிருப்பான்,"

கிறிஸ்தவர்களின் பண்டசாலை.

நீ பசியாயிருக்கிறாயோ? கிறிஸ்துவானவர் ஜீவ அப்பத்தினால் உன்னைப் போஷிப்பார். மத். 5: 6.

நீ தாகமாயிருக்கிறாயோ? உனக்குத் திருப்தி யுண்டாக்குகிற ஒரு பானத்தை அவர் கொடுப்பார். யோவான் 4: 14.

நீ கிழிந்த அழுக்கு வஸ்திரம் தரித்திருக்கின்றாயோ? உனக்கு ஒரு மாற்று வஸ்திரத்தைக் கொடுப்பார். சகரியா 3: 4.

நீ நிர்வாணியாய் காணப்படுகிறாயோ? அவர் நீதி யென்னும் அங்கியினால் உன்னை உடுத்துவிப்பார். ஏசா. 61: 10.

நீ பாவத்தினால் கறைப்பட்டிருக்கிறாயோ? சுத்தம் பண்ணுகிற ஓர் ஜீவ ஊற்று உனக்காகத் திறந்துவிடப்பட்டிருக்கிறது. சகரி. 13: 1.

நீ தனித்து தனிமையாயிருக்கிறாயோ? அவர் உன்னைச் சந்திப்பார். வெளி. 3: 20.

நீ சோர்வடைந்து போனாயோ? அவர் உனக்கு இளைப்பாறுதல் தருவார். மத். 11. 28-30.

நீ துன்பமடைந்திருக்கிறாயோ? அவர் உனக்கு சமாதானம் அருளுவார். யோவான் 14: 27.

நீ விசனமாய் இருக்கிறாயோ? அவர் உனது விசனத்தைத் தேற்றுவார். ஏசா. 61: 2, 3.

நீ ஏழையாயிருக்கிறாயோ? அவர் உன்னை ஐசுவரியவான் ஆக்குவார். யாக்கோபு 2: 5.

நீ பார்வையற்றிருக்கிறாயோ? அவர் உனக்கு பார்வை கொடுப்பார். வெளி. 3: 17, 18.

நீ காயப்பட்டிருக்கிறாயோ? அவர் உன்னைக் காயங் கட்டுவார். சங். 147: 3.

நீ வியாதியாயிருக்கிறாயோ? அவர்தான் மகா பெரிய வைத்தியர். சங். 103: 3.

நீ நண்பர்களற்று இருக்கிறாயோ? அவரே ஒருபோதும் தவறாத நண்பர். ரோமர் 8: 38, 39.

நீ இல்லிடமில்லாமலிருக்கிறாயோ? அவர் உனக்காக ஒரு வாசஸ்தலத்தை ஆயத்தம் செய்திருக்கிறார். யோவான் 14: 1-3.

நீ சிறையிலிருக்கிறாயோ? அவர் உன்னை விடுவிப்பார். ஏசா. 61: 1.

நீ யாதொரு ஆதரவற்றிருக்கிறாயோ? அவருடைய சர்வாயுதவர்க்கங்களும் உனக்குக் கொடுக்கப்படும். எபே. 6: 11-18.

உனக்கு இன்னும் அவசியமானது ஏதாவது இருக்கிறதா? உனக்கு வேண்டிய யாவற்றையும் அவர் உனக்கு அளிப்பார். பிலி. 4: 19.

(THE CREATION OF ANGELS.)

தேவ தூதர்களின் சிருஷ்டிப்பு.

மனிதர்கள் இவ்வுலகத்தில் அநேக காரியங்களை அறிந்துகொள்ளக்கூடாதவர்களாயிருக்கிறார்கள். அவைகள் மனிதருடைய புத்திக்கு எட்டாத ரகசியமாயிருக்கின்றன. மனிதன் தன்னுடைய புத்தியை எவ்வளவு தூரம் விருத்தி பண்ணினபோதிலும், தேவ தூதர்களின் தன்மையை முற்றிலும் அறியக்கூடாதவனாகவே இருக்கிறான். ஆனால் அத்

தன்மையை இவன் அடைந்து 'மரணமே! உன் கூர் எங்கே? பாதாளமே உன் ஜெயம் எங்கே?' என்ற பாட்டைப் பாடும்போதுதான், இதை முற்றிலும் அறிந்துகொள்ளுவான். என்றாலும், இப்பொழுது நமக்கு சில சமாசாரங்கள் அவருடைய ஆவியினால் வெளிப்படுத்தப்பட்டிருக்கிறது.

கடவுளைத்தவிர மற்றவைகள் யாவும் தானாகவே உண்டாகவில்லை. பரலோகத்திலிருக்கிறவைகளும் பூலோகத்திலிருக்கிறவைகளும் அவரால் உண்டாக்கப்பட்டவைகள்தான். தேவனுடைய குமாரனுங்கூட அவரால் ஜெநிப்பிக்கப்பட்டவர்தான். ஆனால், "பிதாவானவர் தம்மில்தாமே ஜீவனுடையவராயிருக்கிறதுபோல, குமாரனும் தம்மில்தாமே ஜீவனுடையவராயிருக்கும்படி அருள் செய்திருக்கிறார்." யோவான் 5: 26. பிதா சிருஷ்டிக்கும்போது தம்முடைய குமாரனைக்கொண்டே சகலத்தையும் சிருஷ்டித்தார். தேவ தூதர்களுடைய தன்மையின் ரகசியத்தை நாம் முழுவதும் அறியக்கூடாதவர்களாயிருந்தபோதிலும் தேவதூதர்கள் சிருஷ்டிக்கப்பட்டவர்களென்றும், மனுஷரை சிருஷ்டித்தவரே அவர்களையும் சிருஷ்டித்தாரென்றும் அறிகிறோம். "(குமாரனாகிய) அவர் அதரிசனமான தேவனுடைய தற்சுரூபமும் சர்வ சிருஷ்டிக்கும் முந்தின பேறுமானவர். ஏனென்றால் அவருக்குள் சகலமும் சிருஷ்டிக்கப்பட்டது; பரலோகத்திலுள்ளவைகளும் பூலோகத்திலுள்ளவைகளுமாகிய காணப்படுகிறவைகளும் காணப்படாதவைகளுமான சகல வஸ்துக்களும், சிங்காசனங்களானாலும், கர்த்தத்துவங்களானாலும், துரைத்தனங்களானாலும், அதிகாரங்களானாலும், சகலமும் அவரைக்கொண்டும் அவருக்கென்றும் சிருஷ்டிக்கப்பட்டது. அவர் எல்லாவற்றிற்கும் முந்தினவர், எல்லாம் அவருக்குள் நிலைநிற்கிறது." கொலோ. 1: 15-17. சகல சிருஷ்டியும் இயேசு கிறிஸ்துவால் உண்டானது. "உண்டானது ஒன்றும் அவராலே யல்லாமல் உண்டாகவில்லை." யோவான் 1: 3. சாத்தான் என்ற தூதனைப்பற்றி பேசுகிற இடத்தில் 'நீ சிருஷ்டிக்கப்பட்ட நாள் துவக்கி' என்று சொல்லப்படுகிறது. (எசே. 28: 15) ஆகையினால் இவனைப்போலுள்ள தூதர்களும் சிருஷ்டிக்கப்பட்டவர்களென்று விளங்குகிறதல்லவா? இப்படியிருக்க தேவ தூதர்களை மரித்த மனுஷர்கள் என்று சொல்வதெப்படி? அவர்கள் பிரத்தியேகமாய் சிருஷ்டிக்கப்பட்டவர்களே.

இந்தத் தூதர்கள் தேவன் பூமியைச் சிருஷ்டிக்கு முன்னதாகவே உண்டாக்கப்பட்டிருந்தார்களென்றும் புலப்படுகிறது. எப்படியெனில், ஆண்டவர் இந்த பூமியை உண்டாக்கி, அதிலே வெளிச்சத்தைப் பிரகாசிக்கப்பண்ணி, ஆகாய விரிவைப் பரப்பி அதிலே சூரிய சந்திர நட்சத்திரங்களை அமைத்து, தரையை, அழகான விருக்ஷங்களினாலும், புல் பூண்டுகளினாலும், பட்சி பறவைகளினாலும், ஊரும் பிராணி மிருக ஜீவன்களினாலும் நிரப்பி, சமுத்திரத்தை பலவித ஜெந்துக்களால் குடியேற்றி, கடைசியாக இவைகளெல்லாவற்றின்மேலும் தமது சாயலாக உண்டாக்கின மனுஷனுக்கு ஆளுகை கொடுத்து கடவுள் பூரித்தபொழுது, இவைகளையெல்லாம் கவனத்தோடு பார்த்துக்கொண்டிருந்த தூதர்களுக்குள்ளே சொல்லிமுடியாத சந்தோஷ முண்டாயிற்று. "அப்பொழுது விடியற்காலத்து நட்சத்திரங்கள் ஏகமாய்ப் பாடி தேவ புத்திரர் எல்லாரும் கெம்பீரித்தார்களே." யோபு 38: 7.

எத்தன்மையாய் தூதர்கள் உண்டாக்கப்பட்டார்கள். சாகுந்தன்மையாகவா? சாகாத் தன்மையாகவா?

தேவ தூதர்கள் மனுஷரைப்போலவும், மற்ற உலகத்தாரைப்போலவும் சாகுந்தன்மையுள்ளவர்களாகவே சிருஷ்டிக்கப்பட்டார்கள். தேவன் ஒருவரே சாவாமையுள்ளவர். "ஒருவராய் சாவாமையுள்ளவராயிருக்கிறவர்." "நித்தியமும் அழிவில்லாமையுமாய் இருக்கிற தேவன்." 1 தீமோ. 6: 16; 1: 17. அவரால் உண்டாக்கப்பட்ட சிருஷ்டிகளெல்லாம் சாகுந்தன்மை உள்ளவைகள்தான். எப்படியெனில், ஆண்டவர் இவர்களை பூரணராக சிருஷ்டித்தார். இவர்களுக்கு புத்தி சித்தம் கொடுத்து, நன்மை தீமை இன்னதென்று

பகுத்தறிந்து செம்மையாய் நடக்கக்கூடிய சக்தியையுடையவர்களாயும் சிருஷ்டித்தார். அதேசமயத்தில் தீநெறியிற் சென்று நடக்க இஷ்டங்கொண்டாலும் அதுவுங் கூடும். இந்த இரண்டு சக்தியையுங் கொடாமல், ஒரு சக்தியைமட்டும் கொடுத்திருப்பாராளுல், இவர்கள் அவர் கையில் ஓர் யந்திரத்தைப்போலிருந்திருப்பார்கள். இவர்களுக்கு பாவஞ்செய்யக்கூடாத சக்தியைக் கொடுத்து இவர்களிடத்தில் வணக்கத்தை அவர் பெற்ருல், அந்த வணக்கம் அவருக்குப் பிரியத்தை உண்டாக்காது. ஏனென்ருல் இவர்கள் சுய இஷ்டமாய் செய்கிற வணக்கமே அவருக்குப் பிரியம். மற்றப்படி இவர்களை கட்டாயப்படுத்தி அவரைச் சேவிக்கச்செய்வதுபோலிருக்கும். இப்படிப்பட்ட வணக்கத்தை அவர் ஒருக்காலும் விரும்பார். இதனுல் அவருக்குப் புகழ்ச்சி உண்டாகவே மாட்டாது; ஏனென்ருல் மனதார அவரை புகழ முடியாததினுலேதான்; இப்படிச் சொல்வதினுல் அவர் இவர்களை பாவஞ் செய்யும்படியாக உண்டாக்கினுர் என்றும் எண்ணக்கூடாது. தீமை செய்யும் சக்தி இருந்தபோதிலும் அவை யெல்லாவற்றையும் மேற்கொண்டு கடவுளை மிகுந்த விருப்பத்தோடே ஆராதிக்கவே இவ்வகையைக் கையாடினுர்.

இவ்வித இரு சக்தியையுமுடையவர்களாக தமது சிருஷ்டிகளை சிருஷ்டிக்கவேண்டியதினுலேதான், அவர்களைச் சாகுந் தன்மையுடையவர்களாகவும் சிருஷ்டிக்கவேண்டியதாயிருந்தது. எப்படியெனில் ஒருவேளை சிலர் பாவஞ் செய்யலாம். அப்படி அவர்கள் பாவஞ் செய்வார்களாளுல் பாவத்திற்கு ஓர் முடிவு உண்டாக்கவேண்டும். ஏனென்ருல் பாவம் அல்லது ஆண்டவருடைய கற்பனையை மீறுதல் என்ற இவைகள், அவருடைய ராஜ்பத்திலிருக்க அவர் விரும்புகிறதில்லை. இன்னும் சட்டம் எங்குண்டோ அங்கே சட்டத்தை மீறுகிறதினுலுண்டாகும் தண்டனையும் உண்டு. இவ்விதமான சட்டமும், தண்டனையும் உலக ராஜ்யங்களிலிருப்பதை நாம் பார்க்கிருேம். ஆகையினுல் "பாவத்தின் சம்பளம் மரணம்" (ரோமர் 6: 23) என்ற ஏற்பாட்டை விதித்தார். தாம் உண்டாக்கின சிருஷ்டி பாவஞ் செய்வானுளுல் அதின் பலனுக சாகவேண்டியது. அவனை சாவாமையுள்ளவனுக சிருஷ்டித்திருப்பாரென்ருல் அவன் பாவஞ் செய்தாலும் அவன் சாகமுடியாது; அவனை சாகப் பண்ணவும் முடியாது. ஏனென்ருல் சாவாமையுள்ளவன் பாவஞ் செய்கிற பட்சத்தில் சாகவேண்டியதாயிருப்பதினுலே, தமது சிருஷ்டிகளை சாகுந் தன்மையுள்ளவைகளாகவே சிருஷ்டித்தார். இதினுலே ஆண்டவர் அவர்களை சாகும்படியாக உண்டாக்கினுர் என்று எண்ணவுங் கூடாது. உதாரணமாக, இந்தப் பத்திரிகை கிழிக்கப்படவேண்டுமென்று பிரசுரிக்கப்படுகிறதில்லை. ஆனுல் கிழிக்கவேண்டுமென்ருல் கிழிக்கவுங் கூடும்; ஆகையினுல் இந்தப் பத்திரிகை கிழியுந் தன்மையுள்ளதென்று சொல்வது சரிதானே. கிழியாமல் வைத்துக்கொள்ளவேண்டுமென்ருலும் அதுவும் கூடுகிற காரியந்தான். அதுபோலவே இந்த சாகுந் தன்மையுள்ள சிருஷ்டி, பாவத்தை அறிந்து தள்ளி, நன்மையை மட்டும் செய்து சாகாமலிருக்கவுங் கூடும். இவ்விதமாய் நாம் பார்க்கும் சமயத்தில், சிருஷ்டிகள் சாகுந் தன்மையாய் உண்டாக்கப்பட்டிருக்குதல், நியாயமும் நீதியுமாயிருக்கிறதென்று துலங்குகிறது. இந்தப்படியே தேவ தூதர்கள் சாகுந் தன்மையாய் சிருஷ்டிக்கப்பட்டிருக்கிறதினுல்தான் கெட்டுப்போன தூதர்கள் அழிக்கப்படப்போகிருர்கள். "அவர்களுடைய அழிவு உறங்காது. பாவஞ் செய்த தூதர்களை தேவன் தப்பவிடாமல், அந்தகாரச் சங்கிலிகளினுலே கட்டி நரகத்திலே தள்ளி நியாயத்தீர்ப்புக்கு வைக்கப்பட்டவர்களாக ஒப்புக்கொடுத்தார்." 2 பேதுரு 2: 4. (மத்தேயு 25: 41; வெளி. 20: 9.)

ஆனுல் பிசாசானவன் ஆதிப்பெற்ருேரிடத்தில் சொன்ன முதல் பொய் என்னவென்ருல் "நீங்கள் சாகவே சாவதில்லை" என்பதே. தேவனே "நீங்கள் 'சாகவே சாவீர்கள்" என்று சொல்லியிருந்தார். இந்த ஆதிப்பொய், நெரிஞ்சில் வித்தைப்போல் எங்கும் பரம்பி, முள்ளையும் குருக்களையும் போன்ற மனுஷன் சாவாமையுள்ளவன்' என்ற கொள்கை அநேகருடைய இருதயத்தைக் கவர்ந்துகொள்ளும்படி செய்திருக்கிறது. அநேகர்

இப்பொய்க் கொள்கையினுல் வஞ்சிக்கப்பட்டு குருடராயிருக்கிருர்கள். இதை வாசிக்கும் என் பிரிய நண்பனே! நீர் இப்படிப்பட்ட தப்பான எண்ணம் கொண்டிருக்கிறீரா? நம்மைப் படைத்த பராபரனின் வாக்கின்படி நாம் சாகுந் தன்மையுள்ளவர்களென்பதை மனுஷர்கள் மரிக்கும்போது நாம் கண்ணுரக்கண்டு சந்தேகங்கொள்ள இடமில்லாமலிருக்கிருேமே. இது எவ்வளவு நேர்த்தியாய் 'உள்ளங்கை நெல்லிக்கனிபோல்' தெளிவாயிருக்கிறது. இதுவே சத்தியமென்று மறுபடியும் வற்புறுத்திச் சொல்லுகிறேன்.

V. D. கோவில் பிள்ளை.

HOME AND MOTHER.

இல்லறமும் நற்தாயும்.

தனது மனையாளை உயிர் துறக்கக் கொடுத்த ஒரு போதகர், மூன்று வருடங்களுக்கு பின்னுல், "இல்லறத்தைப்பற்றி" தான் செய்த ஓர் பிரசங்கத்தில், தான் மூன்று வருஷ காலமாய் வீட்டுத் தாயானவளால் செய்து வந்த வேலையையும், ஒழுங்குகளையும், செய்து அனுபோகமடைந்த பின்னர், அதிக உணர்ச்சியோடு, பதியத்தகுந்த வார்த்தைகளைச் சொல்லுகிருர்: "தாயற்ற வீடும் ஓர் வீடு தானே!" இவர் இதைச் சொல்லும் தருணத்தில், அப்போதகர் எதிரே நாற்காலியில் துக்க முகத்தோடு விழிகளில் நீர் சொறிய தகப்பன் உரைத்த வார்த்தைகளையெல்லாம் உற்றுக் கேட்டுக்கொண்டிருந்த அவரது சிறிய மகள் தன்னை அறியாமலே உரத்த தொனியோடு: "தந்தையே, நீர் என் தாய் செய்து நடத்தின ஒழுங்குபோலவே நீரும் நடத்திவருகிறீர்" என்றது. சந்தேகமற இத்தகப்பனும் தாய் செய்தவந்த விதமாகவே அதிகமாய் வீட்டை நடத்திவந்திருக்கிருர்; என்ருலும் இல்லறத்தை நடத்துகிறவள் உண்மையிலே தாயாகவிருக்கிருள்.

ஒரு வீடு தாயற்றுப்போவதற்கு, அவ்வீட்டுத் தாயானவள் மரித்து அடக்கம் பண்ணப்படவேண்டியதில்லை. தாயுள்ள அநேகம் வீடும் (குடும்பமும்) தாயற்றதைப்போலவே இருக்கிறது. சமீபத்தில், வேளாண்மை செய்யும் கிராமங்களில் வசித்து வந்த ஒரு குடும்பத்தாருக்கு, ஆவிக்குறிய விஷயங்களில் சிற்சில உதவிகள் செய்யும்படியாக நான் அனுப்பப்பட்டேன். நான் அவ்வீட்டினுள்ளே நுழைந்தவுடன், காலைப்போஜனத்தில் உபயோகித்த பாத்திரங்கள் கழுவப்படாமல் பிற்பகல் வரைக்கும் மேஜையின்மேலே யிருக்கக் கண்டேன். இன்னும் மற்ற சாமான்களும் கீழது மேலதாக இருக்கப் பார்த்தேன். பிள்ளைகள், தங்கள் முடிகள் சீவி யொதுக்கப்படாமலும், முகங்கள் கழுவப்படாமலும் அங்குமிங்கும் ஓடித்திரிந்தார்கள். இங்கே இக்குடும்பத் தாயானவளின், சரியான தோற்றம் அவளுடைய பிள்ளைகளில் காணப்படுகிறது. இங்கே இது ஓர் தாயற்ற வீடாயிருந்தது.

தாய்மார்கள் சில சமயங்களில் சிற்சில காரியங்களைச் செய்வதில் அசட்டை செய்யவேண்டியதுதான், ஆனுல் தனது வீட்டையும், குழந்தைகளையும்பற்றிய விஷயங்களில் ஒருபோதும் அசட்டை செய்தல் கூடாது. இதுதான் அவள் பிரதானமாய்ச் செய்யவேண்டிய முதல் வேலை. இதை மற்றொருவர் செய்யும்படிக்கு சுலபமாய் விட்டுவிடுகிற ஓர் வேலையல்ல, ஏனென்ருல் குடித்தன வேலையில் தாய்க்கு இருக்கும் உத்திரவாதத்தைப்போல வேறொருவருக்கும் ஒருபோதும் உண்டாகாது. மற்றொரு குடும்பமும் எனக்குத் தெரியும். அதில் நான்கு பிள்ளைகள் இருந்தார்கள். அம்மனிதனுக்கு சொற்ப சம்பளம்தான் கிடைத்தது; அதிலிருந்து, அம்மனிதன் தன் வீட்டு வாடகைக்கும், உடுப்புகளுக்கும், உணவுக்கும், எடுத்துக்கொண்டு, இச்சொற்பத்திலிருந்தும், தசமபாகமும் காணிக்கையும் செலுத்தி வந்தான். ஆனுல் தாயானவளோ காரியங்களை ஒழுங்குப் பிசகின்றி கிரமமாய்ச் செய்துவந்தாள். அவள் தன் வீட்டிலே ஓர் தேவ ஊழியக்காரியாக இருக்க விரும்பினுள். ஆண்டவர் தான்

செய்யும்படிக்கு கொடுத்திருக்கும் உத்திரவாதமான வேலையை தானே செய்யவேண்டுமென்றும், அதை மற்றவருடைய கரங்களில் கொடுக்கக்கூடாதென்றும் நன்கு அறிந்திருந்தாள். அவள் தன் வீட்டில் ஓர் பாடசாலை வைத்திருந்தாள். ஒவ்வொரு நாளிலும் கற்கப்படப்போகிற பாடங்கள் சித்தம் செய்யப்பட்டன. அவளுடைய பிள்ளைகள் சிறியோராயிருந்தும், வீட்டு காரியங்களில் தாய்க்கு மிகவும் உதவி செய்தார்கள். ஒவ்வொரு நாளிலும் ஒழுங்காய் பாடங்கள் படிக்கவும், பாடத்தை பாராயணம் செய்து சொல்லவும் ஏக்கதாக, நேரம் குறிப்பிடப்பட்டிருந்தது: இவ்வித பயிற்சி தாய்க்கும் பிள்ளைகளுக்கும், அதிக விசேஷித்ததாயிருந்தது. தனது வீட்டுக் காரியங்களிலும், பிள்ளைகளை வளர்ப்பதிலும் அவள் நாளுக்கு நாள் தேர்ச்சி யடைந்தாள். ஆனபடியினால் அக்குடும்பம் முழுதும் மற்ற ஜனங்கள் மத்தியிலே, ஓர் ஆசீர்வாதமாக விருந்தது.

நான் உங்களுக்குச் சொல்லியபடி, நான் சந்தித்த முதல் வீட்டில் இருந்த எட்டு வயதுள்ள ஒரு பெண்ணைப் பார்த்து, "உன்னுடைய வயது எவ்வளவு?" என்று கேட்டதற்கு அச்சிறுமி மறுமொழியாக, "எனக்குத் தெரியாது," என்று சொல்லி இங்கு மங்கும் பார்த்தாள். இரண்டாவது வீட்டில் ஒரு பையன் இருந்தான்; நான் அவனோடு அதிகமாய் பழகியிருந்தேன். எப்போதும் நான் சந்தித்திராத மலர்ந்த முகமும், கூரிய புத்தியும், நல்ல குணமுமுள்ள ஏழு வயதான ஒரு இளைஞனாயிருந்தான். அத்தாயின் மூத்த குமாரனுக்கு பதினைந்து வயது ஆகிறது, அப்பிள்ளையானவன் போதகத்தொழிலில் சேர்ந்து ஊழியம் செய்யும்படி பிரயாசைப்பட்டுக்கொண்டிருக்கிறான். தாய்மார்களுக்கு, சில வேளைகளில், வீட்டுக்குப் புறத்திலுள்ள மற்றைய ஸ்திரீகளிடத்தில் சிநேகமுண்டாகி யிருப்பதுண்டு; ஆகையினால், தாய்மார்கள் அச்சிநேகர்களை சந்திக்கப்போவது முண்டு. இது மிகவும் சரிதான். நமது வீட்டுப் புறத்திலுள்ள இதர மனுஷர்களோடு உறவு உண்டாயிருப்பது மிகவும் பிரயோஜனமாயிருக்கும். ஆனால் இது காரணத்தை வைத்து வீட்டுக் காரியங்களை கவனியாமல் இருத்தல் கூடாது. முதன்மையாக செய்யப்படவேண்டிய விஷயங்கள் எப்போதும் முதலில் செய்து தீர்க்கவேண்டியது தாய்மார்களின் கடமை. தங்களைக் கிறிஸ்தவர்களென்று சொல்லிக்கொள்ளுகிற அநேகருடைய வீடுகளுக்கு நான் போயிருக்கிறேன். அவைகள் மிகவும் அசுத்தமும், ஒழுங்கீனமுமாய் இருந்தது. இப்பேர்க்கொத்தவர்களை சுத்த மார்க்கத்துடன் இணைப்பது மகா கஷ்டம். சுத்தமாயும் கிரமமாயும் நடத்தப்படுகிற வீட்டிற்கு, பாடசாலையிலிருந்து சிறுவர்களும், தன் தினசரி வேலையிலிருந்து அவள் புருஷனும் வருகிறபோது, அவர்களை வாழ்த்தி ஏற்றுக்கொள்ளும் தெய்வ பயமுள்ள தாயானவள், அவர்களை சகல சோதனைகளிலும் பாவங்களிலும் அகப்படாதபடிக்கு அவர்களுக்கு தனது இல்லிடத்தை கொடுக்கிறாள். இப்படிப்பட்ட வீடுகளில் வளர்க்கப்பட்ட பிள்ளைகள் தாங்கள் பாலியர்களாகி வளரும்போது, அவர்கள் வளர்க்கப்பட்ட மாதிரியை உணர்ந்தவர்களாய், தங்களுடைய தாயாரின் தேவனுக்கு அதிக உத்தமர்களாயிருப்பார்கள். ஒரு நல்ல தாயும், அவள் குடும்பமும் சம ஒற்றுமையாய் இணைக்கப்பட்டிருக்கிறது. ஒரு குடும்பத்தை அல்லது வீட்டை கட்டுகிறவள் தாயானவள்தான். அவள் குடும்பத்தைத் தகர்க்கிறவளாயுமிருக்கலாம். கடைசியாக முழுக்குடும்பமும் முக்கியமாய் மனைவியின் பேரிலும் தாயின்பேரிலும் சார்ந்திருக்கிறது.

Daniel H. Kress, M. D.

இயேசுவை நாமே அறிந்திருக்கிறோமா, அல்லது மற்றவர்கள் அவரோடு பழகியிருக்கிறார்கள் என்று மாத்திரம் கேள்விப்பட்டிருக்கிறோமா?

மூடின முத்துக்கதை.

(தொடர்ச்சி)

திராட்ச.—பூலோகத்திலுள்ள சர்வ வஸ்துக்களிலும் நன்மையும் தீமையும் உண்டு பால் விசேஷித்த பானம்; அதுவும் மிதந்தப்பினால் கெடுதிசெய்யும். அதினாலே "அளவுக்கு மிஞ்சினால் அமிர்தமும் நஞ்சு" என்கிறார்கள். என்னையும் கிரமமாய்க் குடித்துக்கொள்ளுகிறவர்களுக்கு நான் உற்சாகத்தையும், சந்தோஷத்தையும், மனத்தைரியத்தையும், காய பெலனையும் அளிக்கிறேன். பகல் முழுவதும் வேலை செய்து வருந்தினவன் இரவு என்னைக் குடித்துக்கொண்டு எத்தனையோ சந்தோஷமாய் நித்திரை செய்கிறான். நெடும் பிரயாணம் பண்ணுகிறவன் என்னைப் பானம் பண்ணினவுடன் குதிரைமேல் ஏறிக் குசாலாய்ப் போகிறதுபோலிருக்கிறது என்கிறான். மன விசாரத்தினால் வருந்துகிறவர்கள் என்னைக் குடித்தவுடன் எவ்வளவோ மனானந்தம் அடைகிறார்கள். வயிற்று வலி, அஜீரணம் முதலியவைகள் என்னைக் கண்டவுடன் சூரியனைக்கண்ட பனிபோல் பறந்து போகும். தொண்டைக்கட்டுக்கு நான் கைகண்ட மருந்து. அதினாலே "தொடை வலிக்கு வெந்நீர்; தொண்டைக் கட்டுக்குச் சாராயம்" என்கிறார்கள். இன்பமான என்னைப் பானம் பண்ணிப் பிணியைத் தீர்ப்பது நல்லதல்லவா? "சர்க்கரை தின்று பித்தம்போனால் கைப்பான மருந்தை என் தின்னவேண்டும்?" இன்னும், பெற்ற ஸ்திரீகளுக்கு நான் செய்கிற உபகாரம் இம்மட்டென்றில்லை. பேர்போன டாக்டர்மாரும் என்னை மருந்திற்காக உபயோகிக்கிறார்கள்.

தண்.—உன்னுடைய பொய்ப் பிரசங்கம்: 'என்னைப்போல குரலும் என் அக்காளைப்போல ஒயிலும் இல்லை" என்ற கழுதையின் கதைபோலிருக்கிறது. உன்னுடைய கிரியைகள் அவலக்ஷணமும் கேடுமானவை. நீயோ அவைகளை இலக்ஷணமும் நன்மையுமானவைகளென்று நடித்துக்கொள்ளுகிறாய். பாலையும் உன்னையும் சமப்படுத்துகிறாயே; அதைவிட ஆலகால விஷத்தையும் அமிர்தத்தையும் ஒன்றென்னலாகாதா? வாரி சூழ்ந்த இந்த வையகத்தில் பாலைக்குடித்துப் பழகி, அதை மிதமிஞ்சிப் பானம் பண்ணினதினால் தரித்திரத்தையும், நிந்தையும், அகால மரணத்தையும், நித்திய நரக வேதனையையும் சம்பாதித்தவர்கள் எத்தனை பேர்? கிரமமாய் உன்னை சேவித்தவர்கள் கிரமத்திற்குள்ளிருக்கிறார்களா? சற்றேறக்குறைய யாவரும் அதிலே தீய ருசிகொண்டு அதிகமதிகமாய்ப் பழகி "தண்ணீரில் அமிழ்ந்தவர்களைவிடச் சாராயத்தில் அமிழ்ந்தவர்கள் அதிகம்" என்றபடி, அதிலே தானே மாண்டுபோகிறார்களல்லவா? இதற்கு எத்தனையோ கணக்கற்ற அத்தாட்சிகளிருக்கின்றன. வேலை செய்து வருந்தினவர்களை நீ இரவிலே மயக்கிக் கிடத்திவிடுகிறதேயொழிய, அவர்களுக்குச் சுகத்தையும் பெலத்தையும் அளிக்கிறதில்லை. ஏனென்றால் அவர்கள் காலையிலே கண் குழி விழுந்தவர்களாகவும், கைகால் தளர்ந்தவர்களாகவும், காயம் மெலிந்தவர்களாகவும், தங்கள் படுக்கைகளை விட்டு எழுந்திருக்கிறார்கள். பிரயாணிகளுக்கும் துக்கப்பட்டவர்களுக்கும் நீ செய்வதெல்லாம் நஷ்டமும் வெட்கமும் தோஷமுமேஒழிய பெலமும் ஆறுதலும் அல்ல. ஆனால் மனுஷருக்கு அநேக பிணிகள், தோஷி, உன்னாலேயே உண்டாகின்றன. அதற்குப் பின்வரும் பாட்டுகளே அத்தாட்சி.

"வேலம்பட்டை பனைவெல்லம் வேர்த்து வடிந்த சாராயம்
சால தேகத்துட் புகுந்தால், சத்திக்கும், குடல் புரட்டும்,
காலுங் கையும் தள்ளாடும், கண் சிவக்கும், வாய் நாறும்,
ஓலமிடும் ஊரிலெங்கும், ஊளையிடும் நரிபோல்."

"விக்கல், வாயு, அரையாப்பு, வீக்கம், சூளை, தலை நோவு,
பக்க வாதம், சன்னி வலி, பாண்டு, குஷ்டம், குடல் வாதம்,
சக்கல், சீரணம், காசம், காக்கை வலி, கண்டமாலி,
மிக்க பல ரோகங்களும் மேனியில் வருத்துவிக்கும்."

மேலும் பிரசவ காலத்திலே உன்னை குடியாத ஸ்திரிகள் எத்தனையோ கோடிக்கணக்கானபேர்கள் சுகமும் பெலமுமாய் வெளிப்படுகிறார்கள். பெரும்பான்மையாய்க் குடிக்கும் வழக்கமுடைய ஆண்களே யொழிய, குடியாதவர்கள் தங்கள் ஸ்திரிகளுக்குப் பிரசவ காலத்தில் இலாகிரிப் பானங்களைக் கொடுக்கிறதில்லை. ஒருதரம் இரத்த ருசி கண்ட வேட்டை நாய் திரும்பவும் இரத்தத்தையே நாடுவதுபோல, பிரசவ காலத்தில் இந்த மாயத் தண்ணீரை வாயில் வைத்தறிந்த மாதர்களில் அநேகர் திரும்பவும் அதையே ஆசித்து வீட்டிலுள்ள வெள்ளி பொன்னையோ தானியங்களையோ திருடி ஆட்களின் வசம் அனுப்பிக் குடித்துக் கெடுக்கிறார்கள். இதைக் கவனிக்கிற புத்திசாலிகள் கெரோசின் எண்ணெயை நெருப்புக்கு விலக்கி வைத்துக்கொள்வதுபோல, தங்கள் ஸ்திரீகளை இந்தத் தீமை ஒருபோதும் அண்டாதபடி பார்த்துக்கொள்ளுகிறார்கள். டாக்ற்றர்மார் உன்னை மருந்துக்கு உபயோகிப்பது வாஸ்தவந்தான். அதைப்போல பாஷாணத்தையும் மற்றும் கொடிய நஞ்சுகளையும் உபயோகிக்கிறார்களே; ஆதலால் அவைகளையும் மனுஷர் தாராளமாய்ச் சாப்பிடலாமா?

திராட்ச.—நான் இருந்த இடையில் இரேனு! சனியனை இழுத்துத் தலைமேல் போட்ட சரித்திரம்போல் ஆகிவிட்டதே. சும்மா இருந்தால் இந்த நிந்தையெல்லாம் உண்டா? வலியச் சண்டைக்குப் போவானேன்; வாயில் வந்ததைக் கேட்பானேன்?

தண்.—என்ன? இன்னும் உன் குணத்தையும் குரூரத்தையும் பன்னி யுரைத்தால் பாரதமாகி விடும்.

திராட்ச.—"தலைக்கு மிஞ்சின தண்ணீர் சாணுயர்ந்தென்ன முழ முயர்ந்தென்ன?" இனி நீ எதைச் சொன்னால்தானென்ன? நீ சொன்னதைவிட இன்னும் அதிகமாய்ச் சொல்ல என்ன உண்டு? உண்டானால் சொல்; கேட்கட்டும்.

தண்.—அநேகம் மாலுமிகள் கப்பலோட்டிகளுடைய வயிற்றுக்குள்ளும் மண்டைக்குள்ளும் பிரவேசித்து, அவர்களை மதிமயக்கி, அவர்கள் கப்பல்களைச் சமுத்திரத்தில் ஆழ்த்திப் புனிதமான அநேக பூங்குழந்தைகளின் கதறுதலையும், மான்போன்ற அநேக மாதர்களின் கதறுதலையும், ஆண்சிங்கம் போன்ற அநேக ஆடவரின் கதறுதலையும், மற்றும் பல பிரயாணிகளுடைய மறுக்கங்களையும் கேட்டு மகா கடினமான காளிபோல் சந்தோஷித்து, அவர்களைக் கடலுக்கு இரையாக்குகிறது பாவி நீ யல்லவா? இராசாக்களைச் சிங்காசனத்தினின்று வீழ்த்தி, இராஜ்யங்களைக் கெடுத்த நச்சுப்பானம் நீயல்லவா? பெரிய அலெக்சந்தருக்கு நீ செய்த கெடுதி யாரால் அளவிட முடியும்.

திராட்ச.—கிறிஸ்தவர்களுடைய வேதாகமத்திலே "உன் கண்ணிலிருக்கிற உத்திரத்தைப்பாராமல் உன் சகோதரன் கண்ணிலிருக்கிற துரும்பைப் பார்க்கிறதென்ன" என்றொரு வாக்கிய முண்டு. அது உனக்கே பொருந்தும். நான் சிலரை சமுத்திரத்தில் ஆழ்த்திவிட்டதா பெரிய காரியமாய்ப் போய்விட்டது? நீ முற்காலத்தில் பிரளயமாகிப் பெருகி, பூமியை நிரப்பி, வானபரியந்தம் உயர்ந்து, சிருஷ்டிகள் யாவற்றையும் சர்வ சங்காரம் பண்ணவில்லையா? தற்காலத்திலும் எத்தனையோ பேரை நதிகளிலும், அருவிகளிலும், தடாகங்களிலும், கடலிலும் உன் விரிவான வாயைத் திறந்து விழுங்கிவிடுகிறாய். இன்னும் நீ மனுஷருக்குச் செய்கிற தீங்குக்குக் கணக்குண்டா?

தண்.—எனக்குள்ளே விழுந்து இறந்தவர்களுக்குக் கையும் கணக்குமில்லை. இதை நான் ஒப்புகிறேன். ஆனால் இதற்குக் காரணம் நானல்ல. மனுஷருடைய பாவத்தினிமித்தம் தேவன் சிருஷ்டிகளை என்னிடத்தில் மூழ்கப் பண்ணினார்; அவர்கள் இறந்தார்கள். மனுஷரும் மதியீனத்தினாலும் குரூரத்தினாலும் எனக்குள்ளே விழுகிறார்கள்; சாகிறார்கள். நீயும் சிலரை எனக்குள்ளே தள்ளுகிறாய். இதற்கு மேற்சொன்ன நீங்கள் காரணமாயிருக்கிறதே யல்லாமல் நான் காரண மல்ல. "எய்தவனிருக்க அம்பை நோகலாமா?"

நீ மறந்துபோன ஒரு காரியத்தை உனக்குச் சொல்லி தருகிறேன். என்னை சில மனுஷர் உபாயமாய்த் தீமைக்குக் கூட்டாளியாக்கிக் கொள்ளுகிறார்கள். அதெப்படியென்றால் இடைச்சி என்னைப் பால் மோர்களில் அதிகமாய்க் கலக்கிறாள். அதினாலே "என்ன மாயம், இடைச்சி மாயம், மோரிலே தண்ணீர் கலந்த மாயம்" என்கிறார்கள். சாராயத்திலும் என்னைக் கலந்து தந்திரம் பண்ணுகிறவர்கள் உண்டு. ஆனால் இயல்பாய் எனக்கு இந்தத் தீய குணமில்லை. மற்றவர்கள் என்னை அப்படி ஆக்கிக் கொள்ளுகிறதற்கு நானா பழி?

திராட்ச.—என்னை உண்டுபண்ணி வியாபாரஞ் செய்கிற எத்தனைபேரோ என்னால் பிழைக்கிறார்கள். ஒருதரம் ஓட்டாண்டியாயிருந்த எத்தனைபேரோ என்னால் குபேராகிறார்கள். அப்படியிருக்க என்னை மனுஷருக்குச் சத்துருவென்று எப்படிச் சொல்லத் துணிந்தாய்?

தண்.—ஆயிரந் தாலியை அறுத்து ஒருத்தி கையில் கொடுத்து, அவளைத் தன்வாட்டியாக்குவது நல்ல தர்மந்தான். அநேக ஜனங்களுடைய பொருளைப் பறித்துச் சில மது வியாபாரிகள் கையில் கொடுக்கிற உன் உதாரத்துவத்தையா உயர்த்திப் பேசுகிறாய்? மேலும் உன்னை வியாபாரம் பண்ணி வயிறு வளர்ப்பதைவிட ஈனமான தொழில் கிடையாது. "கள் விற்றுக் கலப்பணம் சம்பாதிப்பதிலும் கற்பூரம் 'விற்றுக் காற்பணம் சம்பாதிப்பதுமேல்" என்பது தெரியாதா? மதுவே, உன்னை விற்பனை செய்கிற வியாபாரமானது இராஜ நீதியைக் கெடுத்து, இரவும் பகலும் கொள்ளையைக் குவிக்கிறது; ஓய்வுநாளை மீறி, உண்மையைப் புரட்டி, உலகத்தை மறிக்கிறது; தரித்திரர் பொருளினால் தனஞ் சேர்த்துத், தாய்மார் உள்ளத்தை உடைத்துச், சன்மார்க்கத்தைச் சங்கரிக்கிறது; பெரிய வீட்டில் இருந்துகொண்டு, பெருமையாய்ப் பேசிக்கொண்டு, பேரின்பத்தைக் கெடுக்கிறது; அமங்கலிகள் கண்ணீரைப் பார்த்து நகைத்து, அனாத பிள்ளைகளின் அழுகையைக் கேட்டுப் பரிகாசித்து, அவமரியாதை யடைந்த ஆகதிகளைக் கண்டு ஆனந்திக்கிறது; அன்பான புத்திரரின் உள்ளத்தைக் கொள்ளைகொண்டு, அருமையான அன்னையின் அன்பை அகற்றி, அதி நேசமுள்ள சகோதரரைப் பிரிக்கிறது; அழகான புத்திரியை அதர்மக் குகைக்கு வழி நடத்தி, ஆண்மையுள்ள தந்தையை அடிமையாக்கி, ஆனந்தம் நிறைந்த வீட்டை அதிக துக்கத்தில் அமிழ்த்துகிறது; குணசாலியான மனைவியைக் குரூர நீலியாக்கிக், கோவலனைப்போன்ற புருஷனைக் கேவலனாக்கிக், கோலப் புதல்வனைக் காலனுக்கிரையிடுகிறது; மோட்ச மார்க்கத்தை மறக்கப்பண்ணி, மோச மார்க்கத்தை நினைக்கப்பண்ணி, முதிர் வயசடையுமுன் மும்முர நரகாக்கினியில் தள்ளுகிறது. ஐயோ! மதுவே, உன் வியாபாரத்தை நினைக்கையில் தண்ணிய ஜலமாகிய நான் தகிக்கிற வெந்நீராகிறேன். உன்னை வியாபாரம் பண்ணியா உலகம் உய்கிறது? நல்லது, நல்லது, உன் பேச்சை நிறுத்து.

(இன்னும் வரும்.)

I WANT CHIRIST TO COME. Because—

கிறிஸ்துவானவர் சீக்கிரம் வர நான் ஆசிக்கிறேன்.

ஏனென்றால்:—

எனது ஆண்டவரின் வருகைக்காக நான் சென்ற நாற்பது வருஷங்களாக காத்துக்கொண்டிருக்கிறேன், அவரது தீவிரமான வருகையின் நம்பிக்கை எனது இருதயத்தில் அருமையாய் வளர்ந்துகொண்டிருக்கிறது. அச்சம்பவம் எனக்கு அதிக பலனைத் தரும், கிறிஸ்து சீக்கிரம் வர நான் வாஞ்சிக்கிறேன். ஏனென்றால்:—

1. எனது ஜீவியத்தில் என்றும் நான் கண்டிராத மகா அருமையுள்ள நண்பராகிய; எனது அருள்பெற்ற எஜமானோடு அது என்னை ஐக்கியப்படுத்தும். அவருடைய தோழமையில் நான் நிலைவரமான சந்தோஷத்தை கண்டுபிடித்தேன். அவர், எனது துக்கத்தில் ஆறுதலும், மனக்கலக்கத்தில் ஞானமும், உலக ஜீவியத்தின் கஷ்டத்தில் சரீர பலமும் ஜீவனுமாயிருக்கிறார். எனது நண்பர்கள்பேரிலுள்ள நேசமானது, அவர்களோடு, கூடிய மட்டும் என்னை நெருங்கி வாழும்படி எப்படி ஏவுகிறதோ அவ்விதமே, என் ஆண்டவரின் மேலுள்ள அன்பானது அவரது சமுகத்தில் திருமுகத்தை தரிசித்து அவரது தொனியை கேட்கும் சலாக்கியத்தை அடையும்படி முயலுகிறது. அவருடைய சமுகத்தில் பூரண சந்தோஷமும், அவரது வலதுகரத்தில் நித்திய மகிழ்ச்சியு முண்டாயிருக்கும்.

2. அதிசீக்கிரமான கிறிஸ்துவின் வருகை, என்றால் நேசிக்கப்பட்டு கல்லறைகளில் நித்திரை செய்துகொண்டிருப்பவர்களோடு, மறுபடியும் என்னை இணைத்துவிடுகிற ஓர் சம்பவமாயிருக்கிறது. எனக்கு மிகவும் நெருங்கினவர்களும், அருமையுமானவர்களை மரணமானது என்னிடமிருந்து களவு கொண்டுபோய்விட்டது. நான் அவர்கள் கரங்களைத் தழுவிப்பிடிக்கவும், அவர்கள் முகங்களைப் பார்க்கவும், பாதாளத்தின் கரமானது இரக்கமில்லாமல் பிரித்த அந்த பாசபந்தத்தை மறுபடியும் பெற, எப்போது அந்த நாள் வருமோவென்று வாஞ்சிக்கிறேன். ஆனால் அந்த மகிழ்ச்சியின் சந்திப்பு எனது கர்த்தரின் வருகையில் மாத்திரம் நடைபெறும். அவருடைய உயிர்த்தெழுதலாலுண்டான புண்ணியத்தினால், தூளின் படுக்கைகளில் கிறிஸ்துவுக்குள் நித்திரை செய்கிறவர்களை வெளியே கொண்டுவருவார். அவர்கள் அவருடைய வல்லமையினால் அழியாமையை யடைந்தவர்களாய், மரணம் பாதாளமென்ற இவைகளை ஜெயித்து, இதுமுதல் என்றென்றைக்கும் அவருடைய சமுகத்தில் வாசஞ் செய்ய, கெம்பீரத்தோடு எழும்பி வருவார்கள்.

3. கிறிஸ்துவின் இரண்டாம் வருகையினால், இளைப்பாற்றியின்றி துன்ப மனுபவிக்கும் இவ்வுலகத்துக்கு ஓர் முடிவுண்டாகும். அவரது காருண்ய அரசின்கீழ், யுத்தமானது இப்பூமியின் அழகிய இயற்கைப் பொருட்களை இனி கொள்ளை கொண்டுபோகமாட்டாது. போர்களத்தில் வாலிபர் இனி மாளார்கள். யுத்த உற்சவத்தை பஞ்சம் இனி தொடராது, பஞ்சத்தின் பாதைகளில் கொள்ளை நோய் இனி நில்லாது. சமுத்திரம் ஜலத்தால் நிறைந்திருக்கிறதுபோல, பூமியும் நீதியினால் நிறையும். அப்போது, நீதியும் சமாதானமும் நிறைந்த அந்த இடத்தில், இரட்சிக்கப்பட்ட ஒவ்வொரு ஜாதியாரும் பயமின்றி ஓய்ந்திருப்பார்கள்.

4. விரைவான அவரது வருகையின் நோக்கம் என்னவென்றால், துக்கம், வியாதி, உபத்திரவம் என்பவைகளின் பெயரை ஒழியப்பண்ணுவதாம். வியாதியினால் வெளுத்து இரத்தஞ் சுண்டின முகங்களை இனி நாம் பார்க்கமாட்டோம். பிரேதத்தை கல்லறைகளில் க்ஷேமிக்கும்படி போகிற ஜனக்கும்பலையும், திறக்கப்பட்ட பிரேதக்குழிகள் தங்கள் இரைக்காக காத்துக்கொண்டிருப்பதையும், பெருமூச்செறியும் நெஞ்சமும், கண்ணீரோடும் கண்களும், இவையெல்லாம், இனி நாம் காணவேமாட்டோம். அவைகளின் ஞாபகம் முதலாய் இல்லாமற்போகும். முந்தினவைகள் இனி நினைக்கப்படுவதுமில்லை மனதிலே தோன்றுவதுமில்லை. "அவர்களுடைய கண்ணீர் யாவையும் தேவன் துடைப்பார்; இனி மரணமுமில்லை, துக்கமுமில்லை, அலறுதலு மில்லை, வருத்தமுமில்லை; முந்தினவைகள் ஒழிந்துபோயின." (வெளி. 21: 4.) அந்த சந்தோஷமான நாளுக்காக என் இருதயம் சத்தமிடுகிறது.

5. கிறிஸ்துவின் இரண்டாம் வருகை யென்பது, முடிவற்ற இன்பமும், சந்தோஷமும், மகிழ்ச்சியுமாயிருக்கிறது. தற்கால சமாதானத்தை திர்ப்தி செய்துகொள்ளும்படி இவ்வுலக மக்கள் சிற்றின்பப் பிரியத்தில் சாய்ந்துபோயிருக்கிறார்கள். இவ்வுலக சமா-

தானம் எவ்விதத்திலும் நிலையற்றதாயிருக்கிறது. ஒருவன் கட்ட மற்றவன் குடியிருக்கிறான். ஒருவன் திராட்சத்தோட்டத்தை நாட்ட மற்றவன் கனி புசிக்கிறான். மனித ஜீவியத்தின் அளவை, சில குறுகின வருஷங்களால் அளக்கக்கூடும். ஆனால் தேவனுடைய நித்தியத்திற்கு முடிவே கிடையாது.

"பதினாயிர மாண்டுகள் பதிதனில் உய்திட்டாலும்
  சந்திரவ ஒளியைப்போல காந்தியுடன் ஜொலிப்போம்.

பரனடி தொழுதுபோற்ற நாட்களுங் குன்றாதங்கே
  பதிதனில் நாமும் முன்னே பரனையே துதித்தல் போல்."

பரலோக ராட்சியத்தின் மகிழ்ச்சியில் யாதொரு குழப்பமும் இராது; திர்ப்தி செய்வதிலும், மேன்மையைக் கொடுப்பதிலும் அயராத விர்த்தியை யளித்து, புதிய சந்தோஷத்தையும் திர்ப்தியையும் கொடுக்கும்.

6. கிறிஸ்துவின் இரண்டாம் வருகை யென்பது: சடம், ஆவி, மனமென்ற இம் முப்பொருளும், புதிதும் பெரிதுமாவதற்கு கிடைக்கும் சலாக்கியமேயாம். பரலோக ஸ்தலமானது, தெவிட்டலும் பூரண திர்ப்தி யடைவதற்கேதுவானதுமான ஓர் இடமல்ல. ஆனால் இரட்சிக்கப்பட்டவர்கள் ஒப்பற்ற சலாக்கியத்தை யடைந்து விர்த்தி யடையும்படிக்கான ஓர் தேவ கலாசாலையாயிருக்கிறது. எல்லையையுடைய மனுஷ ஞானம் அவ்விடத்தில் இராது. மானுஷ்ய பலவீனம் ஓர் தடையாக அங்கு நில்லாது. தேவனுடைய மகா சர்வ கலாசாலையில், யேசு தாமே பெரிய உபாத்தியாயராக, வான சேனைகளால் பணிவிடை செய்யப்பட்டு விளங்குவார். அப்பெரிய பாடசாலையில் ஸ்தாபிக்கப்பட்டிருக்கும் ரசாயன கர்மசாலை நுட்ப ஆராய்ச்சி செய்யும்படிக்கு நமக்கு உதவியாயிருக்கும். மனிதனைப் பார்க்கிலும் தேவன் பெரியவராயிருக்கும் காலமட்டும், அவரது எல்லையற்ற ஞானம் ஆராய்ச்சி செய்யப்பட்டுக்கொண்டேயிருக்கும். முடிவற்ற நித்தியத்துக்கும் இரட்சிக்கப்பட்டவர்களின் கூட்டம் இதை ஆராய்ச்சி செய்துகொண்டே யிருப்பார்கள்.

7. கிறிஸ்துவின் இரண்டாம் வருகையானது, நாம் உணர்ந்து சரீரத்தில் பரிசிக்கத் தக்க வண்ணமாய் ஓர் நல்ல நம்பிக்கையை கொடுக்கிறது. ஆவிக்குறிய சக்தியையும், சுவிசேஷ ஊழியத்தில் உற்சாகத்தையும், ஏவி எழுப்புகிற ஓர் நம்பிக்கையாயிருக்கிறது. நாம் பெற்றிருக்கிற விசுவாசத்தில் நமது ஜீவனை அதிக கவலையோடும், வைராக்கியத்தோடும் பரிபாலித்து; பின்பு, நமது ஆத்துமத்தை பூரணத்தால் நிரப்பியதும், நமது இருதயத்தை ஏவி எழுப்பினதுமான இச்சத்தியத்தை மற்றவர்களுக்கும் அறிவிக்க ஏவுகிறதுமான ஒரு நம்பிக்கையாயிருக்கிறது.

F. M. Wilecx.

வேதப் புரட்டர்கள் உண்டாகும் விதம்.

அநேக மணிநேரங்களாக லௌகீக விஷயங்களைப்பற்றிய புஸ்தகங்களிலும் சில நிமிஷங்களாக மாத்திரம் வேத புஸ்தகத்திலும் செலவிடுவதே, இந்த மோசமான வேதப் புரட்டர்கள், உண்டாவதற்குக் காரணம். அதை மாற்றி, அநேக மணி நேரங்களாக வேதத்திலே செலவிட்டால், எவ்வளவோ நேர்த்தியாய் அதுதானே விளக்கிக்காட்டும்! எவ்வளவோ அழகாய் அதுதானே வியாக்கியானஞ் செய்யும்! வேத ஆராய்ச்சியில் தோன்றப்படும் கஷ்டங்கள் வேதத்தில் அல்ல, ஆனால் அதைப்பற்றி மனதோற்றமாய் எழுதப்பட்டிருக்கும் புஸ்தகங்களிலேயே உள்ளது.

சுகாதார விஷயங்கள்

O. SMITH, M. D. டாக்டர் சிமித்.

WHAT SHALL WE DRINK.—(Continued.)

நாம் எதைப் பானம் பண்ணவேண்டும் (தொடர்ச்சி.)

வயிற்றுப்போக்கினாலும், வயிற்றுக் கடுப்பினாலும், பீடிக்கப்பட்டிருக்கிற ஒருவர் குளிர்ந்த ஜலத்தை பானம் பண்ணுதல் கூடாது; எனெனில் குளிர்ந்த ஜலமானது வியாதியான குடல்களிலே நுழைந்தவுடன், குடல்களின் வேலையை அதிகரிக்கச்செய்து அதிகமான வயிற்றுப்போக்கு உண்டாவதற்கு காரணமாகிறது. இவ்விதமான காரியங்களை யறியாமல், அநேகர் தங்கள் வியாதியை தாங்களே அதிகரித்துக்கொள்ளுகிறார்கள். ஆகையினால் இவ்வித வேளைகளில் வெந்நீரைத் தவிர மற்றவைகளை பானம் பண்ணுதல் கூடாது. சிற்சில சமயங்களில் இவ்வியாதி வயிற்றில் ஸ்திரமாய் பரவியிருக்கிறதினால், பிணியாளிகளுக்கு வாந்தி அதிகமாயுண்டாகிறது. ஆயினும் இச்சமயத்திலுங்கூட குளிர்ந்த ஜலத்தைப் பருகாமல், அதிக சூடான தண்ணீரை பருகுவதே சுகத்தைக் கொடுக்கும்.

நாம் நமது ஆகாரத்தை புசித்துக்கொண்டிருக்கும் வேளைகளில், நமது இரைப்பையினின்றும், சுரக்கும் ஓர்வித ரசத்தோடு நமது ஆகாரமானது கலக்கப்பட்டு அதனை ஜீரணிப்பதற்குப் பக்குவப்படுத்திக்கொண்டிருக்குமாதலால்; அச்சமயங்களில் ஜலத்தையென்கிலும், அல்லது வேறெந்த பானத்தையென்கிலும் அதிகமாய்ப் பருகுவது சுகத்துக் கேற்றதல்ல. சாப்பாட்டுவேளைகளில், அத்தியாவசியாய் நீர் பருகவேண்டியதென்று கண்டால், அப்போது நமக்கு தேவையானமட்டும் அதிகமாய் உட்கொள்ளாமல் சிறிதுமாத்திரம் பருகுவது மிக்க நலம். நாம் உண்ணுகிற உணவு நன்றாய் ஜீரணமடைந்து பக்குவப்படுவதற்கு, அது நமது வாயிலிருக்கும்போதே நமது வாய் நீரோடே கலந்து இரேகிக்கப்படவேண்டுமாகையினால், உண்கிற ஒவ்வொரு கவளத்துக்கும் இடையில் நீர் பருகுவது தகாது. மேலும் நமது உணவு ஜீரணமடைவதற்கு வாய் நீரே அத்தியாவசியமாயிருக்கிறதினால், அடிக்கடி நீர் பருகுதலானது இவற்றைத் தடை செய்யும். வேண்டுமான ஜலத்தை சாப்பாட்டுக்கு பத்து அல்லது பதினைந்து நிமிஷத்துக்குமுன் பருகி, உண்கிற ஒவ்வொரு கவளத்தையும் வாய் நீரோடு கலந்து நன்றாய் மென்று, இவ்விதமாய் போஜனம் செய்வாயானால் உனக்கு சாப்பிடும் வேளைகளில் தாகம் உண்டாகாது, சாப்பிட்ட பின்புங்கூட ஒரு மணி நேரத்துக்கு தாகம் எடுக்காமலேயிருக்கும். இப்படிச் செய்வதால் ஆகாரமானது இரைப்பையில் சேர்ந்து, அதின் ரசங்களோடு கலந்து யாதொரு தடங்கலுமின்றி, தன் வேலையை நன்றாய்ச் செய்வதற்கு எதுவாயிருக்கும். இராவில் நாம் படுக்கப்போவதற்கு சற்று முன்பும், காலையில் நாம் படுக்கையைவிட்டெழுந்த பின்பும், கொஞ்சம் நீர் பருகுவதானது, நமது ஜீரண உறுப்புகளிலுள்ள அழுக்குகளையெல்லாம் சுத்தப்படுத்துவதற்கு எற்றதாயிருக்கிறபடியினால், இதுவும் சுகத்துக்கேற்ற ஓர் நல்ல முறையென்னலாம்.

சிறு குழந்தைகளுக்கு நீர் பருகும்படி கொடுப்பது தகாது என்பதாய் அநேகர் எண்ணுகிறார்கள். இது ஒரு தப்பிதம். பெரியோர்களுக்கு எப்படித் தாக முண்டாகி நீர் பருகுவதற்கு வாஞ்சையாயிருக்கிறார்களோ? அப்படியே சிசுக்களுக்கும் உண்டாகிறது. குழந்தைகளுக்கு அதன் ஆகாரத்தை எற்ற வேளையில் ஒழுங்காகக் கொடுக்கவேண்டியது அவசியம். ஆனால் அது உறக்கமின்றி அமைதியற்றிருக்குமாயின், அதற்குக் கொஞ்சம் குளிர்ந்த ஜலம் பருகக் கொடுப்பது உத்தமம். குழந்தையானது, அமைதியாயும், சந்துஷ்டியாயும் இருக்கும்படிச் செய்வதற்கு இதுவே எற்ற சாதனம். அநேக ஜனங்களுக்கு இது தெரியாமல், குழந்தை பசியினால் இப்படிச் செய்கிறதென நினைத்து தகாத வேளையில் திரும்பவும் ஆகாரம் கொடுக்கிறார்கள். இப்படிச் செய்வது உசிதமல்ல. குழந்தையின் ஜீரணக் கருவிகள் சிறிதானவைகளாதலால், முதலில் கொடுத்த ஆகாரம் அதின் மெல்லிய குடல்களிலே பக்குவப்படுவதற்கு முன்னமே, திரும்பவும் ஆகாரத்தைக் கொடுப்பது, அதற்கு வியாதிக்குக் காரணமாகும்.

Dr. O. Simith.

? கேள்விகளுக்கு விடை ?

நீங்கள் கேட்க மனதானால் திரும்பி வந்து கேளுங்கள்.

1. கேள்வி:—வீடுகளில் என்னைச்சுற்றிலும் பறந்து திரியும் கொசுக்கள், மலேரியா வியாதியை கொடுக்கக்கூடியனவா இல்லையா என்பதை நான் எப்படி அறிந்துகொள்ளக்கூடும்? அல்லது எல்லாவித கொசுக்களும் வியாதியை கொண்டுவருகின்றனவா?

விடை:—இல்லை, எல்லாக் கொசுக்களும் மலேரியாக் கிருமிகளை கொண்டுவருவதில்லை. ஒரேவித கொசு மாத்திரம் உண்டு, இவைகளில் தான் அவ்விஷக் கிருமிகள் வசிக்கின்றன, ஆகவே இவைகளின் கடியின் மூலமாகவே மலேரியா வியாதியும் உண்டாகிறது. இவ்வித விஷத்தை நமது இரத்தத்தில் கலந்துவிடும் கொசுவினங்களைக் கண்டுபிடிப்பது அதிக சுலபம். அவைகளின் உடல்கள், சாதாரணமாயுள்ள கொசுக்களின் உடல்களைப்பார்க்கிலும் அதிக மெல்லியதாயிருக்கும், மேலும் அவை யாதொரு வஸ்துவின் பேரில் நிற்கும்போது, அக்கொசு தன் தலையை யூன்றி நிற்பதுபோல் காணப்படும். அதன் உடல் சமமாய் சார்ந்திராது. ஆனால் சாதாரண கொசுக்கள் யாதொன்றின்மேல் அமரும்போது அதன் உடல் சமமாய் சார்ந்திருக்கும். இவ்விதமாய் நம்மை உபத்திரவிக்கிற கொசுக்கள், வியாதியைக் கொடுப்பனவோ, அல்லது கொடாதனவோவென்று அறியலாகும்.

இப்படிச் சொல்வதினால் மற்றைய கொசுக்களால் யாதொரு விபத்தும் நேரிடாதென எண்ணி, நம்மை இவைகளினின்றும் பாதுகாவாமலிருத்தல் கூடாது. சாதாரண கொசுக்களும் வியாதியைப் பிறப்பிக்கிற விஷக்கிருமிகளைக் கொண்டுவரக்கூடும். அவைகளினால் நமது இரத்தத்தில் கிருமிகள் ஜநித்து பலவித வியாதிகளுக்கு இடமுண்டாகிறது. அப்படியே அவைகள் தூர்வியாதிகளை கொண்டுவராவிடினும், அவைகளின் கடியினாலே புண்கள் தோன்றி சொஸ்தப்படுவதற்கு நீண்டகாலம் செல்கிறது. இக்காரணம்பற்றியே கொசுக்களை, நமது வீடுகளில் விடாமற்றடுத்து, அவைகளைக்கொன்று, இவ்விதமாய் நம்மை நாமே பாதுகாத்துக்கொள்வது அத்தியாவசியம். நாம் நித்திரை செய்யுங் காலங்களில் இவைகளைத் தடுப்பதற்கு கொசு வலையை உபயோகிப்பது நன்று. இந்தக் கொசுக்கள் அதிக நிழலும் இருட்டுமான ஸ்தலங்களிலும், காற்று போக்கு வரத்தில்லாத ஈரமான இடங்களிலும் அதிகமாய் பலுகிப் பெருகுகிறது. ஆகையினால் நாம் இப்பேர்கொத்த இடங்களில் வாசஞ் செய்யாமலிருப்பதற்கு அதிக ஜாக்கிரதையுள்ளவர்களாயிருத்தல் வேண்டும்.

Dr. O. Smith.

கேள்வி:—வார நாட்களின், எழு நாட்களில் ஒரு நாளை ஓய்வு நாளாகக் கொண்டாடுவது, சரீர இளைப்பாற்றியின் காரணத்தினாலா அல்லது சிருஷ்டிகரை தொழுதுகொள்வதற்கு வசதியாயிருக்கும்படிக்கு திருச்சபையினால் தெரிந்துகொள்ளப்பட்ட ஓர் உபாயமா?

விடை:—"ஓய்வு நாளானது ஓர் மாறாத நியமமாக எப்போதும் நிற்கிறது. மேலும் எல்லா மனிதரையும் கர்த்தருடைய அன்பினால் பற்றியிழுக்கிற அந்த நிச்சயத்தை சிந்திக்கும்படிக்கு அது குறிப்பிடப்பட்டு மிருக்கிறது." உண்மையான ஓய்வு நாளாகிற வாரத்தின் எழாம் நாள், யேசு தாமே கொடுத்ததும், பரிசுத்தமாய்க் கைக்கொண்டதுமாயிருக்கிறது. ஆனால் எழு நாட்களிலொன்று என்பது, முழுவதும் மனிதராலேயே உண்டானது. அதனுடைய ஆதியே சிருஷ்டிப்பின் வல்லமைக்கு ஓர் ஞாபகார்த்தமாக, பரிசுத்தமுள்ள உயர்ந்த நிலைமைக்கு உயர்த்துகிறது. பின்னும், அது சதா காலமாயும், மாறாததாயும், கிறிஸ்துவின் சிருஷ்டிப்புக்கும் இரட்சண்ய அன்புக்கும், ஓர் மாறாத அடையாளமாகவுமிருக்கிறது. இப்படியாக அது பரம ஜோதிகளின் பிதாவினுடைய சிங்காசனத்திலிருந்து நமது ஆத்துமத்திலும் இருதயத்திலும் சுத்தமும் பிரகாசமுமான வைர மணியைப்போல் இலங்குகிறது.

நிகழ்கால சத்தியம் சமாசாரக் குறிப்புகள்.

வேத சன்மார்க்க சுகாதார விஷயங்களில் தற்கால அறிவுக்கொத்தபடி மனிதர் அபி விருத்தியடைவதற்கென்று பிரசுரமாகும் ஓர் பத்திரிகை.

மதராஸ் செப்டம்பர்மீ, 1921.

இப்பத்திரிகை, பெங்களூரிலிருக்கும், எஸ். டி. ஏ. பப்ளிஷிங்கவுஸ்காக, பட்டணத்தில் வெப்பேரி என்னுமிடத்திலுள்ள அல்பீனியன் அச்சாபீசில் அச்சடிக்கப் பட்டு வருகிறது.

பத்திராதிபர் பாஸ்றர், ஜி. ஜி. லேளரி.
உதவி ,, ,, ஈ. டி. தாமஸ்.

	ரூ.	அ.	ப.
தனிப்பிரதி ஒன்றுக்கு ...	0	1	6
வருஷ சந்தா, தபாற் கூலி உள்பட ...	1	0	0
சிங்கப்பூர் பினங்கு முதலிய வேளி ஊர்களுக்கு தனிப் பிரதி ஒன்றுக்கு ...	0	2	0
வருஷசந்தா தபாற்கூலி உள்பட ...	1	4	0

சீனர், தாங்கள் வருந்தும் பசி பட்டணியிலிருந்து தங்கள் தெய்வங்கள் தங்களை ரட்சிக்க முடியாததினாலே, தங்களுடைய விக்கிரகங்களை சொற்ப செம்புக்காசுக்காக விற்பனை செய்கிறார்கள். சீனாவில் மிஷனெரி ஊழியம் செய்ய இதுவே தக்க சமயம்.

யுத்த ரிப்போர்ட்டு.

யுத்தத்தில் மாண்ட உயிர்கள் 3,50,00,000 என்று கணக்கிடப்பட்டிருக்கிறது. போர் செய்த ஐரோப்பா நாடுகளில் ஆண்களுடைய தொகையைப்பார்க்கிலும் பெண்களுடைய தொகை 52,00,000 அதிகமாயிருந்தது. ஆனால் இப்பொழுது 1,50,00,000 அதிகம்.

முனிசிபல் சபைகளில் ஸ்திரீகளுக்கு ஸ்தானம்.

பம்பாய், ஆகஸ்டு 13—

முனிசிபல் சபைகளில் ஸ்திரீகள் ஸ்தானம் வகிக்கக்கூடாதென்றிருப்பதை எடுத்து விட்டு பம்பாய் முனிஸிபல் சட்டத்தைத் திருத்தும் சம்பந்தமாய் யோசனை சொல்லும்படி பம்பாய்க் கவர்ன்மெண்டார் பம்பாய் கார்ப்பொரேஷனைக் கேட்டிருக்கின்றனர்.

அபினி விலக்குச் சங்கம்.

சீனா தேசத்தின் தலை நகராகிய பெகிங் என்ற விடத்தில் சர்வ தேச அபினி விலக்குச் சங்கமொன்று ஸ்தாபிக்கப்பட்டிருக்கின்றது. இந்தியாவில் எவ்வளவு அபினி இறக்குமதியாகின்றதென்றும் எவ்வளவு விற்பனை யாகின்றதென்றும் ஜனங்களுக்கு அதனால் ஏற்படும் கஷ்டங்களென்னவென்றும் அது சம்பந்தமாக கவர்ன்மெண்டார் கொள்ளும் அபிப்பிராய மென்னவென்றும் அறிவிக்கும்படி அச்சங்கத்தார் மிஸ்டர் ஸி. எப். ஆண்டிரூஸுக்கு ஒரு கடித மெழுதி யிருக்கின்றனர்.

இளவரசர் விஜயம்.

ரங்கூன்: இளவரசர் விஜயத்தைப்பற்றியும் கவர்னர் குறிப்பிட்டார். சென்ற வருஷம் இளவரசர் இந்தியாவிற்கு விஜயஞ் செய்யுங் காலையில் பர்மாவிற்கும் வந்து போக வேண்டுமென வேண்டிக்கொண்டோம். அவர் இந்தியாவிற்கே வரவில்லை. இத் தடவை இந்தியாவிற்கு அவர் விஜயஞ் செய்யும்போது ஜனவரி மாதத்தில் பர்மாவிற்கும் விஜயஞ் செய்வாரென அறிவிக்கப்படுகின்றது. பர்மாவிலுள்ள யாவரும் எக்கட்சியைச் சேர்ந்தவராயினும் இளவரசரை வரவேற்பார்களென நான் நிச்சயமாய் நம்பியிருக்கின்றேன்" என அவர் கூறினார்.

இயேசு மகாராஜன் பரலோகமிருந்து பூலோகம் வரப்போகிறார். 'மெய்யாகவே நான் சீக்கிரமாய் வருகிறேன் என்கிறார்.' 'ஆமென் கர்த்தராகிய இயேசுவே வாரும்' என்று சொல்லக்கூடும்படியாக 'உன் தேவனை சந்திக்க ஆயத்தப்படு.'

19 OCT 1921

நிகழ்கால சத்தியம்.

Vol. X. மதராஸ்:—அக்டோபர்மீ, 1921. No. 10.

(பத்திராதிபர் குறிப்புகள்.)

EDITORIAL NOTES.

1918-ம் வருஷம் முதல் இங்கிலாந்து திருச்சபையாரால் 'தமிழ்ச்சபை தீபிகை' யென்னும் ஓர் மாதாந்தப் பத்திரிகை சென்னபட்டணத்தில் அச்சிடப்பட்டு வருகின்றது. அதின் முதல் பத்திரிகையிலே பத்திராதிபர் அந்தப் பேப்பரை தாங்கள் அச்சிடவேண்டியதற்கு அநேக காரணங்கள் சொல்லுவதில் "ஏழாம் நாளை ஆசரிப்போர்" முதலியோர் எழும்பி விசுவாசிகளிலும் அநேகரை மோசம் போக்குகிறார்கள் என்றும், ஆகையால் பக்தரை ஊன்றக் கட்டுகிறதற்கு தங்கள் தீபிகை மிகவும் அவசியம் என்றும் கூறி மேற்படி பத்திரிகையை அச்சிடலாயினர்.

இப்பத்திரிகையை அச்சிடத் தொடங்கின கால முதல் ஆதியாகமம்' 2-ம் அதிகாரம் இரண்டாம் மூன்றும் வசனங்களில் சொல்லியிருக்கிற பின்கூறிய சத்தியத்திற்கும்—"தேவன் தாம் செய்த தம்முடைய கிரியையை ஏழாம் நாளிலே நிறைவேற்றி, தாம் உண்டாக்கின தம்முடைய கிரியைகளையெல்லாம் முடித்த பின்பு, ஏழாம் நாளிலே ஓய்ந்திருந்தார்." இதை அநுசரித்தே சீனாய் மலையில் தேவன் தாமே தமது சொந்த விரலால் எழுதிக்கொடுத்த பத்துக் கற்பனையில் "ஓய்வு நாளை பரிசுத்தமாய் ஆசரிக்க நினைப்பாயாக; (ஏழில் ஏதாவது ஒரு நாளையல்ல) ஏழாம் நாளோ உன் தேவனாகிய கர்த்தருடைய ஓய்வு நாள்" என்றும் சொல்லியிருக்கிற நான்காம் கற்பனைக்கும் எவ்வளவோ அதிசயமான வியாக்கியானங்களும், அநேக பக்கங்களடங்கிய பழங் கதைகளும் சொல்லி, ஜனங்களுடைய மனதை இந்தத் தெளிவான வார்த்தைகளின் பொருளைவிட்டு திருப்பவேண்டுமென்று மேற்சொல்லிய தீபிகையின் மூலமாய் நமது நேயர்கள் அடிக்கடி பிரயாசப்படுவதை வெகு கவனத்துடன் இம்மட்டும் கவனித்தே வந்திருக்கிறோம்.

அவைகளை நன்றாய்க் கவனிக்கும்போது எசேக்கியேல் 13-ம் அதிகாரத்தில் சொல்லிய அடியிற்கண்ட தீர்க்கதரிசனத்தின் நிறைவேறுதலை அவர்களில் பார்க்கிறோம். "சமாதானம் இல்லாதிருந்தும் சமாதானம் என்று சொல்லி, அவர்கள் என் ஜனத்தை மோசம் போக்குகிறார்கள்; ஒருவன் மண் சுவரை வைக்கிறான்; இதோ, மற்றவர்கள் சாரமில்லாத சாந்தை அதற்கு பூசுகிறார்கள். சாரமில்லாத சாந்தைப் பூசுகிறவர்களை நோக்கி: அது இடிந்து விழுமென்று சொல்; வெள்ளமாகப் பெருகிற மழை பெய்யும்; மகா கல் மழையே நீ சொரிவாய்; கொடிய புசல் காற்றும் அதைப் பிளக்கும். இதோ சுவர் விழும்போது: நீங்கள் பூசின பூச்சு எங்கே என்று சொல்வார்கள் அல்லவா?"

'உள்ளங்கை நெல்லிக்கனிபோல்' இவ்வளவு தெளிவாய் இருக்கப்பட்ட ஓய்வு நாள் சத்தியத்திற்கு விரோதமாய் இங்கிலாந்து திருச்சபையைச் சேர்ந்த குருக்களில் பலர் மேற்படி பத்திரிகையில் தாற்பரியம் பண்ண ஆரம்பித்ததில் தங்களுக்குள்ளே ஒருவருக்கு

விரோதமாய் ஒருவர் சாதிக்கிற சாதனைகளிலும், போதனைகளிலும், சிலவற்றை மாத்திரம் இத்துடன் இப்பத்திரிகையில் யாவரும் அறியத்தக்க வண்ணமாய் எடுத்து வரைகிறோம்.

'அந்த நாள் ஆயத்த நாளாயிருந்தது; ஓய்வுநாளும் ஆரம்பமாயிற்று' லூக். 23: 54; 'ஓய்வு நாள் முடிந்து வாரத்தின் முதலாம் நாள் விடிந்து வருகையில் மகதலேனா மரியாளும், மற்ற மரியாளும் கல்லறையைப் பார்க்க வந்தார்கள்' மத். 28: 1 என்ற வேத வசனங்களை அநுசரித்து நமது இரட்சகர் பாடுபட்ட நாள் ஓய்வு நாளுக்கு ஆயத்த நாளாகிய வெள்ளிக்கிழமையென்று ஒரு 'பெரிய வெள்ளிக்கிழமையை' ஏற்பாடு செய்தும், அவர் உயிர்த்தெழுந்த நாள் வாரத்தின் முதலாம் நாளாகிய ஞாயிற்றுக்கிழமையென்று பெரிய வெள்ளிக்கிழமைக்கடுத்த ஞாயிறை 'ஈஸ்றர் ஞாயிறு' என்றும் ஏற்படுத்தியிருக்கிற கிறிஸ்தவ சபையைச்சேர்ந்த குருக்கள் இந்த இரண்டுக்கும் இடையிலுள்ள ஓய்வுநாள் ஏழாம் நாளாகிய சனிக்கிழமைதான் என்று சொல்ல நாவு கூசி தங்கள் கண்களை இருக மூடிக்கொள்வதும் ஆச்சரியமே. இப்படிப்பட்டவர்களைப்பற்றி கர்த்தர் எசேக்கியேல் மூலமாய் வெகு நேர்த்தியாய்ப் பேசியிருக்கிறார். "அதின் ஆசாரியர்கள் என் வேதத்துக்கு அநியாயம் செய்து என் பரிசுத்த வஸ்துக்களை பரிசுத்த குலைச்சலாக்குகிறார்கள்; பரிசுத்தமுள்ளதற்கும் பரிசுத்த மில்லாததற்கும் வித்தியாசம் பண்ணாமலும், அசுத்தமுள்ளதற்கும் அசுத்தமில்லாததற்கும் உண்டான வேற்றுமையைக் காண்பியாமலும் இருந்து, என் ஓய்வுநாள்களுக்கு தங்கள் கண்களை மூடிக்கொள்ளுகிறார்கள்; அவர்கள் நடுவிலே நான் கனஈனம் பண்ணப்படுகிறேன்." எசே. 22: 26.

திருநெல்வேலி ஜில்லா திருச்செந்தூர் தாலுகா, நாலுமாவடியிலிருக்கும் கனம். லூக் ஜான் ஐயர் கடந்த மேய், ஜுன், ஜுலை, ஆகஸ்டு மாத தீபிகையில் நாலாம் கற்பனையில் சொல்லப்பட்டிருக்கிற ஓய்வுநாளுக்கு அநேக குறிப்புகளும், விசேஷங்களும் எழுதியிருக்கிறார்.

'வாரத்தின் முதல் நாள் ஞாயிறு' என்று ஜுலை மாதத் தீபிகை பக்கம் 215-ல் வெகு திட்டமாய் ஒப்புக்கொள்ளுகிற கனம். லூக் ஜான் ஐயரவருக்கு வாரத்தின் ஏழாம் நாள் சனிக்கிழமையென்று தெரியாமற்போனதும் விந்தையே! இது இருபதாம் நூற்றாண்டில் குருக்களுக்கு உண்டாயிருக்கிற நூதன யூகமாயிருக்கிறது.

மேய் மாதத் தீபிகை 152–ம் பக்கத்தில் தேவன் ஓய்ந்திருந்த நாளில் ஆதாம் ஓய்ந்திருக்கவேண்டுமென்று தேவன் கற்பிக்கவில்லையென்றும்; முற்பிதாக்கள் ஓய்வு நாளை ஆதி முதல் ஆசரித்தார்களா என்பதைக் கவனித்தால் அப்படி ரூபிக்க எந்தவிதமான வேத வாக்கியமுமில்லையென்றும்; முற்பிதாக்கள் ஓய்வுநாளை ஆசரித்தார்களென்று சொல்லுவதற்கும் ஏதுவில்லையென்று கனம். லூக் ஜான் ஐயரவர் சொல்லுகிறார்.

ஆனால் 1918-ம் வருஷம் பெப்ரவரி மாதம் பிரசுரமான தீபிகையில் கனம். S. G. மதுரம் ஐயர் பின் வருமாறு ஓய்வுநாளைப்பற்றி எழுதியிருக்கிறார். "ஏதேனில் தேவன் இரண்டு நியமங்களை மனிதனுக்கென்று ஏற்படுத்தினார். ஓய்வு நாள், விவாகம். இவைகளில் ஓய்வுநாள் ஆசரிப்பே முந்தினது. பாவம் வருமுன் ஏற்படுத்தப்பட்ட இந்த முதலாம் நியமம் நித்திய நியமமாகவே இருக்கவேண்டும்."

"ஏதேனில் ஏற்படுத்தப்பட்ட நோக்கம். ஆறு நாளைக்குள்ளே தேவன் வானத்தையும் பூமியையும் உண்டாக்கி, ஏழாம் நாளிலே ஓய்ந்திருந்து பூரித்தார்.' யாத். 31: 17. தேவன் தாம் உண்டாக்கின எல்லாவற்றையும் நல்லதென்று கண்டார். கர்த்தர் தமது கிரியைகளில் மகிழுகிறார் என்றும் மனுஷ குமாரன் அநாதி காலமுதல் மனுமக்களில் மகிழ்ச்சி யடைந்தாரென்றும் வேதம் கூறுகிறது. தமது சிருஷ்டிகளில் மகிழுகிற சுவாமி, தமது சாயலின்படி உண்டாக்கின மனிதனில் மிகுதியாய் மகிழுகிறார். கர்த்தர் தமது ஜனங்களைப்பார்த்து பூரிக்கவும், கர்த்தருடைய ஜனங்கள் தங்கள் தேவனைப் பார்த்து பூரிக்கவும் அவசியமென்று ஓய்வுநாள் ஏற்படுத்தப்பட்டது. ஓய்வுநாளை மனமகிழ்ச்சியின் நாளென்று எண்ணி, கர்த்தரில் மனமகிழ்ச்சியாயிருக்கும்படி ஏசாயா போதிக்கிறார். (58: 13) இது ஏதேனில்தான் மகா பெரிய அவசியம். ஏதேனின் நிலைமைக்கு நெருங்கி வருகிற மனிதன் இம்மையிலே ஓய்வுநாளின் ஆசரிப்பை அதிக முக்கியமாய் எண்ணுவான்."

"பாவம் வருமுன் தேவன் தாமே ஓய்வுநாளை ஆசரித்து மாதிரி காண்பித்தார்." என்று ஓய்வுநாள் ஏதேனில் ஏற்படுத்தப்பட்டதென்றும்; அது மனிதனுக்கென்றே அதிலே ஏற்படுத்தப்பட்டதென்றும் சொல்லுகிறார். அப்பொழுது ஏதேனிலிருந்த மனிதர் யார்? ஆதாம் ஏவாள்தானா? அல்லது வேறு யாருமா? தேவன் தாமே மாதிரி காண்பித்தார் என்றால் மாதிரியைப் பார்த்துப் பின்பற்ற அவருடனே அப்பொழுது யாரும் இருந்ததுண்டா; இல்லையா? இது மனித ஜாதிக்கு ஆதியில் கொடுக்கப்பட்டதென்று ரூபிக்க தனது சொந்த மிஷனைச்சேர்ந்த கனம் S. G. மதுரம் ஐயர் சொல்லும் சத்தியத்தைக் கேட்கிறது கனம். லூக் ஜான் ஐருக்கு போதுமா போதாதா?

1921-ம் வருஷத்து ஜுன் மாதத் தீபிகை 177-ம் பக்கத்தில் கனம் லூக் ஜான் ஐயர் இன்னும் சொல்லுகிறதாவது "கிறிஸ்தவ சபையையும் திங்கட்கிழமையை முதல் வேலை நாளாக ஆரம்பித்து ஞாயிற்றுக்கிழமையாகிய ஏழாம் நாளை ஓய்வுநாளாக ஆசரித்து வருகிறது."

இதைப்பற்றி மகா கனம் அசரியா பிஷப் 1918-ம் வருஷம் ஆகஸ்டு மாதத் தீபிகையில் சொல்லுகிற சத்தியமாவது:—"ஞாயிற்றுக்கிழமையை ஓய்வுநாளென்று பூர்வீக நூல்கள் ஒன்றும் அழைக்கிறது மில்லை."

"ஞாயிற்றுக்கிழமையை ஓய்வுநாளென்று அழைப்பது சரியல்லவென்றறிந்துகொள்வோமாக. ஞாயிறு ஓய்வுநாளல்ல."

தங்களது சொந்தப் பிஷப் சொல்லுகிற இந்தச் சத்தியத்திற்கு கனம் லூக் ஜான் ஐயர் என்ன சொல்லுவார்? வாரத்தின் முதலாம் நாளாகிய ஞாயிற்றுக்கிழமையைப்பற்றி தனது சொந்த இங்கிலாந்து திருச்சபையின் கொள்கை முதலாய் இன்னதென்று தெரியாமல் பேசுகிற கனம் லூக் ஜான் ஐயர் தேவனுடைய பிரமாணங்களை விஸ்தரித்து வியாக்கியானம் செய்து அவைகளை ஜனங்களுக்குப் போதித்து அவர்களைப் பரம இராட்சியம் கொண்டு சேர்ப்பாரென்று ஜனங்கள் எதிர்பார்ப்பதும் பரிதாபமே!!

இவைகளைப் பார்க்கும்போது நமது அருமை இரட்சகர் சொன்ன சத்திய வாக்கு ஒன்று எம் ஞாபகத்துக்கு வருகிறது. "தனக்குத்தானே விரோதமாய்ப் பிரிந்திருக்கிற எந்த ராஜ்யமும் பாழாய்ப்போம்; தனக்குத்தானே விரோதமாய்ப் பிரிந்திருக்கிற எந்தப் பட்டணமும் எந்த வீடும் நிலைநிற்கமாட்டாது." மத். 12: 25.

இதை வாசிக்கும் என் அருமைச் சிநேகிதர்களே, ஓர் தெளிவான சத்தியமாகிய "ஏழாம் நாளோ உன் தேவனாகிய கர்த்தருடைய ஓய்வுநாள்" என்பதை மறுக்க ஆரம்பிக்கும்போது எவ்வாறெல்லாம் உருட்டிப்புரட்டினாலும் சத்தியம் சத்தியமாகவே விளங்குகிறது

ஆகையால் 89–ம் சங்கீதம் 34-ம் வசனத்தில் யெகோவா தாமே சொல்லியிருக்கிற உண்மையை நன்கு கவனிப்போமாக "என் உடன்படிக்கையை மீறாமலும், என் உதடுகள் விளம்பினதை மாற்றாமலு மிருப்பேன்."

நமது அருமை இரட்சகர் தாமே சொல்லியிருக்கிற பின்கூறிய வசனங்களையும் நமது நேயர்கள் நன்றாய்க் கவனிக்கக் கேட்டுக்கொள்ளுகிறோம் "என் பரமபிதா நடாத நாற்றெல்லாம், வேரோடே பிடுங்கப்படும்." 'உங்கள் பாரம்பரியத்தினாலே தேவனுடைய கற்பனையை அவமாக்கி வருகிறீர்கள்.'

'உம்முடைய வசனத்தினாலே அவர்களைப் பரிசுத்தமாக்கும். உம்முடைய வசனமே சத்தியம்' 'வானமும் பூமியும் ஒழிந்துபோம், என் வார்த்தைகளோ ஒழிந்துபோவதில்லை.'

தேவ தூதர்களின் சிருஷ்டிப்பு.

(THE CREATION OF ANGELS.)

(தொடர்ச்சி.)

பரிசேயரோடு இயேசு செய்த சம்பாஷணையில் தேவ தூதரின் தன்மையின் இன்னொரு பாகம் வெளிப்படுகிறது. "இயேசு அவர்களுக்குப் பிரதியுத்தரமாக: இந்தப் பிரபஞ்சத்தின் பிள்ளைகள் பெண் கொண்டும் பெண் கொடுத்தும் வருகிறார்கள். மறுமையையும், மரித்தோரிலிருந்தெழுந்திருக்குதலையும் அடையப் பாத்திரராக எண்ணப்படுகிறவர்களோ பெண் கொள்வதுமில்லை, பெண் கொடுப்பதுமில்லை. அவர்கள் இனி மரிக்கவுமாட்டார்கள்; அவர்கள் உயிர்த்தெழுதலின் பிள்ளைகளானபடியால் தேவ தூதருக்கு ஒப்பானவர்களுமாய், தேவனுக்குப் பிள்ளைகளுமாயிருப்பார்கள்." லூக்கா 20: 34-36. இந்த ஸ்திதியில் அவர்கள் மனுஷரைப்போல் அல்ல. "நீங்கள் பலுகிப்பெருகி பூமியை நிரப்புங்கள்" என்று மனுஷனுக்குக் கட்டளை கொடுத்ததுபோல, அவர்களுக்குக் கட்டளை கொடுக்கப்படவில்லை. ஏனென்றால் அவர்களை உண்டாக்கினபொழுதே அவர்களை ஓர் பெரிய குடும்பமாகவே உண்டாக்கினார். கணக்கற்ற ஏராளமான தூதர்கள் அக்குடும்பத்திலிருக்கிறார்கள். அவர்களுடைய தொகை எவ்வளவு என்று நமக்கு வெளிப்படுத்தப்படவில்லை. அவர்களுடைய கூட்டத்தை தானியேல், தரிசனத்தில் கண்டு, "ஆயிரமாயிரம்பேர் அவரைச் சேவித்தார்கள்; கோடாகோடிப்பேர் அவருக்கு முன்பாக நின்றார்கள்." (தானி. 7: 10) என்று சொல்லுகிறார். யோவான் அப்போஸ்தலனும் தனக்குக் காட்டப்பட்ட காட்சியில், தான் கண்ட தூதர்களின் இலக்கத்தைக்குறித்து இதேவிதமாய்த்தான் கூறுகிறார். அதாவது "பின்னும் நான் பார்த்தபோது.........அநேக தூதர்களுடைய சத்தத்தைக் கேட்டேன்; அவர்களுடைய இலக்கம் பதினாயிரம் பதினாயிரமாகவும், ஆயிரமாயிரமாகவுமிருந்தது." வெளி. 5: 11. நமது இயேசு இரட்சகரும் இந்த எண்ணந்தான் கொண்டிருந்தார் என்று மத்தேயு சுவிசேஷம் 26-ம் அதிகாரம் 53-ம் வாக்கியம் நமக்கு வெளிப்படுத்துகிறது. எப்படியெனில், "நான் இப்பொழுது என் பிதாவை வேண்டிக்கொண்டால், அவர் பன்னிரண்டு லெகியோனுக்கு அதிகமான தூதரை என்னிடத்தில் அனுப்பமாட்டாரென்று நினைக்கிறாயா?" என்று மேற்படி வசனம் சொல்லுகிறது. கொஞ்சம் குதிரை வீரர்களோடு 6000 பேர் அடங்கிய ரோம காலாட் படைக்கு லேகியோன் என்று பெயர். இங்கே 72000 பேர் மட்டுமல்ல. அதற்கதிகமான தூதர்கள் பரலோகத்திலிருக்கிறார்களென்று விளங்குகிறது. பவுல் அப்போஸ்தலன் தேவனுடைய சபை அடைந்திருக்கும் சிலாக்கியத்தைப்பற்றி பேசுகிற இடத்தில் (எபி. 12: 22) ஆயிரம் பதினாயிரமான தேவதூதர்களிருக்கிறார்களென்று வர்ணிக்கிறார். இவைகளை நாம் பார்க்குங்கால், பரலோகத்தில் நம்மால் எண்ணமுடியாத ஏராளமான தூதர்களிருக்கிறார்களென்று நன்கு விளங்குகிறதல்லவா!

நமது பூமியில் 1,600,000,000 பேருக்கு அதிகமான ஜனங்கள் வசிக்கிறார்களென்று கணக்கிடப்பட்டிருக்கிறது. என்றாலும், மனுஷர்கள் எவ்வளவு தூரம் பணத்தை செலவிட்டு, கஷ்டப்பட்டு, பிரயாசமெடுத்தாலும், கடைசியாக அவர்கள் கணிக்கும் குடி மதிப்பின் கணக்குத் தொகை சற்றேனும் பிசகாதது என்று யார்தான் தைரியமாய் சொல்லக்கூடும்? இவ்வுலகக் குடி மதிப்பின் கணக்கை நுட்பமாக கணிக்கக்கூடாததாயிருக்கிறதே; அப்படியானால் பரலோக குடும்பத்திலுள்ளவர்களின் தொகையை மனுஷன் எப்படி கணக்கிடக்கூடும்? ஆனால் நம்முடைய தலை மயிரை எல்லாம் எண்ணியிருக்கிற யெகோவாவுக்குள்ளேயோ சகல தூதர்களின் தொகையின் நுட்பம் யாவும் அடங்கியிருக்கிறது.

தேவதூதருடைய சிருஷ்டிப்புக்கும், மனுஷனுடைய சிருஷ்டிப்புக்கும் இன்னொரு வித்தியாசமுண்டு. யாதெனில், "அவனை (மனுஷனை) தேவதூதரிலும் சற்று சிறியவ

னாக்கினீர்" என்று சங்கீதக்காரன் சொல்லுகிறார். (சங். 8: 5) தேவ தூதர்களை மனுஷனைப்பார்க்கிலும் மேன்மையுள்ளவர்களாக உண்டாக்கவில்லை. ஆனால் மனுஷன்தான் தேவ தூதரைப்பார்க்கிலும் சிறியவனாக உண்டாக்கப்பட்டான். எப்படியென்றால் முதலில் மனுஷன் உண்டாக்கப்படவில்லை; தேவ தூதர்கள்தான் உண்டாக்கப்பட்டார்கள். தேவ தூதரிலும் மனுஷன் என்ன விஷயத்தில் சிறியவனென்றால், தேவதூதரை சிருஷ்டிக்கும்போது, அவர்களை ஆவிக்குரிய சரீரங்களோடு சிருஷ்டித்தார்; ஆனால் மனுஷனை சிருஷ்டிக்கும்போதோ, அப்படி சிருஷ்டிக்காமல் வேறு வகையான சரீரமுடையவனாக சிருஷ்டித்தார்.

நம்முடைய சரீரம் ஆவிக்குரிய சரீரமாயிராதிருப்பதினாலும், நாம் அச்சரீரத்தின் தன்மையைப்பற்றி முழுவதும் நன்குணர சக்தியற்றவர்களாயிருக்கிறதினாலும், அப்படிப்பட்ட ஆவிக்குரிய சரீரம் ஒருவருக்கு மில்லையென்று சொல்லக்கூடாது. ஏனென்றால் மனித ஞானம் பூரணமானதல்ல, மட்டுப்பட்டதுதான். ஞானப் பொக்கிஷங்கள் யாவும் அடங்கியிருக்கிற கர்த்தருரைத்திருக்கிற வார்த்தை அப்படிப்பட்ட சரீரங்களுண்டு என்று சொல்லும்போது, நாம் அப்படிப்பட்டவைகள் கிடையாது என்று சொல்லத் தகுமா? தகாதே. பவுல் அப்போஸ்தலன் காலத்திலும் இக்காரியத்தை மறுத்த ஜனங்களுக்கு அவர் சொன்ன வார்த்தைகளை கவனியுங்கள். அவர் சொன்னதாவது:—"எல்லா மாம்சமும் ஒரே விதமான மாம்சமல்ல; மனுஷருடைய மாம்சம் வேறே, மிருகங்களுடைய மாம்சம் வேறே, மச்சங்களுடைய மாம்சம் வேறே, பறவைகளுடைய மாம்சம் வேறே. வானத்துக்குரிய மேனிகளுமுண்டு, பூமிக்குரிய மேனிகளுமுண்டு; வானத்துக்குரிய மேனிகளுடைய மகிமையும் வேறே, பூமிக்குரிய மேனிகளுடைய மகிமையும் வேறே; சூரியனுடைய மகிமையும் வேறே, சந்திரனுடைய மகிமையும் வேறே, நட்சத்திரங்களுடைய மகிமையும் வேறே; மகிமையிலே நட்சத்திரத்துக்கு நட்சத்திரம் விசேஷித்திருக்கிறது. ஜென்ம சரீரமுமுண்டு. ஆவிக்குரிய சரீரமுமுண்டு." 1 கொரி. 15: 39-41, 44. நம்முடைய சரீரம் மண்ணிலிருந்துண்டானது; இது ஜென்ம சரீரம். வானத்துக்குரிய மேனியையுடைய தேவ குமாரனும் மனிதனை இரட்சிக்கும்படியாக பூமிக்குரிய மேனியையணிந்தார் என்று எபி. 2: 9, 16-ல் வாசிக்கிறோம்.

வானத்துக்குரிய மேனியையுடைய தேவ தூதர்களை, ரோம போர்ச்சேவகர்கள், யோவான் அப்போஸ்தலன், தானியேல் தீர்க்கன், கிதியோன், மனோவா முதலியவர்கள் பார்த்தபொழுதெல்லாம் அவர்களை நடுக்கமும் பயமும் பிடித்ததென்று நாம் வாசிக்கிறோம். ஜென்ம சரீரமுடையவர்களாகிய நாம், ஆவிக்குரிய சரீரமுடையவர்களை நமது சொந்தக் கண்ணால் இப்பொழுது பார்க்கமுடியாதவர்களாயிருக்கிறோம். ஆனால் நமது இரட்சகராகிய இயேசு கிறிஸ்துவின் வருகையில், நாம் அழியாமையைத் தரிக்கும் சமயத்தில் தான், நாம் ஆவிக்குரிய சரீரம் அடைந்து தேவ தூதர்களுக்கொப்பாவோம். அநேகர் நாம் தேவதூதர்களாவோம் என்று நினைக்கிறார்கள். அப்படி "ஆவோம் என்று வேதத்தில் ஒரு இடத்திலாவது சொல்லப்படவில்லை. அவர்களுக்கு ஒப்பாவோமே ஒழிய, தேவ தூதர்களாகமாட்டோம். இதைக்குறித்து கிறிஸ்து தாமே சொல்லுகிறதைக் கவனியுங்கள், "அவர்கள் இனி மரிக்கவுமாட்டார்கள்; அவர்கள் உயிர்த்தெழுதலின் பிள்ளைகளானபடியால், தேவதூதர்களுக்கு ஒப்பானவர்களுமாய் தேவனுக்குப் பிள்ளைகளுமாயிருப்பார்கள்." லூக். 20: 36.

ஆ! அந்த மகிமையுள்ள நாள் வரும்போது என்னமாயிருக்கும்! சாவுக்குரிய தேவனுடைய பிள்ளைகளெல்லாரும் சாவாமையையடைந்து, ஜென்ம சரீரமுடைய அவர்கள் ஆவிக்குரிய சரீரமுடையவர்களாகும்போது, நானும் அந்த வானத்துக்குரிய மேனியை அடைந்தால் அதுவே மேலானது. அந்தப் பதவிக்காகவே என் ஜீவிய காலமெல்லாம் பிரயாசப்படுகிறேன். இதை வாசிக்கும் நண்பர்களே! இந்த உன்னத பதவியை யடைய உங்களுக்குப் பிரியமில்லையா? இதற்காக நீங்கள் பிரயாசப்படமாட்டீர்களா? இதுவே உங்கள் வாஞ்சையாயிருப்பதாக.

V. D. கோவிற் பிள்ளை,

தந்திக்கம்பியில் சிலந்தி வலை.

A WEB ON THE WIRE.

ஜப்பான் தேசத்தில் ஓர்வித சிலந்திப் பூச்சி யொன்று இருக்கிறது. அது தன் வலையை முதலில் தந்திக்கம்பிகளின்மேல் பின்னி பிறகு மரக்கிளைகளில் சுற்றி கடைசியில் பூமியில் கொண்டுவந்து கட்டுகிறது. இப்படியாக, அநேக சிலந்திகள் தங்கள் வலைகளை, இவ்விதம் கட்டுகிறதினால், தந்திக்கம்பிகள் மூலமாய் செய்திகள் செல்ல வழியில்லாமல் போய்விடுகிறது. அச்சிலந்தியின் வலை நமது பார்வைக்கு மகா அற்பமாயிருந்தாலும், அது கம்பியின் மூலமாய்ச் செல்லுகிற செய்தியையும் தடுத்துவிடுகிறது.

ஆகவே இச்சிலந்தி வலையை, நமது பாவங்களுக்கொப்பிட்டு பேசலாம். தம்முடைய ஆத்துமம் தேவனுடைய ஆவியோடு இணைக்கப்பட்டிருக்கிறது. தேவன், தம்முடைய ஆவியைக்கொண்டு நமது மனச்சாட்சியின் மூலமாய் நம்மிடத்தில் பேசி, நாம் ஜீவிக்க வேண்டிய வழியைக் காட்டுகிறார். ஆனால் சில சமயங்களில், எப்படி சிலந்திப் பூச்சியானது கம்பியில் செல்லும் சமாச்சாரங்களைத் தன் வலையைக் கட்டுகிறதினால் தடுக்கிறதோ, அப்படியே சாத்தானும் நமது ஜீவியத்தில் பாவமாகிற சிறு வலைகளை பின்னிவிடுகிறான்; இச்சிறு பாவ வலைகளானது, தேவன் நம்மிடத்தில் பேசுகிறதும், நாம் தேவனிடத்தில் கேட்கிறதுமான இந்த இரண்டு காரியங்களையும் தடுக்கின்றன. பாவத்தினால் நமக்கும் தேவனுக்குமுள்ள சம்பந்தம் தறிப்புண்டு போகிறது. நமது ஜெபத்துக்குரிய உத்தரவை நாம் தேவனிடமிருந்து பெற்றுக்கொள்ளாதபடி தடுக்கிறதும் பாவந்தான். ராஜாவாகிய சவுல் தேவனுக்கு விரோதமாய்ப் பாவஞ் செய்தபடியினால், அவனுடைய ஜெபத்துக்கு அவர் உத்தரவு கொடுக்கவில்லை. நமக்கும் தேவனுக்கும் உள்ள ஐக்கியத்துக்கும், நாம் அவரோடும் அவர் நம்மோடும் பேசுகிறதற்கும் காரணமாயிருக்கிற வழியை நாம் எப்போதும் தெளிவாயும் சுத்தமாயும் வைத்திருக்கவேண்டும். "இதோ இரட்சிக்கக்கூடாதபடிக்குக் கர்த்தருடைய கை குறுகிப்போகவுமில்லை; கேட்கக்கூடாதபடிக்கு அவருடைய செவி மந்தமாகவுமில்லை. உங்கள் அக்கிரமங்களே உங்களுக்கும் உங்கள் தேவனுக்கும் நடுவாகப் பிரிவினை உண்டாக்குகிறது; உங்கள் பாவங்களே அவர் உங்களுக்குச் செவிகொடாதபடிக்கு அவருடைய முகத்தை உங்களுக்கு மறைக்கிறது" (ஏசா. 59: 1, 2.) நாம் செய்கிறது எவ்வளவு சிறிய பாவமாயிருந்தாலும் காரியமில்லை, அதை நம்முடைய இருதயத்தில் நிலைத்திருக்க இடங்கொடுப்போமானால் அது நம்மை எவ்விதத்திலும் சேதப்படுத்திவிடும். ஆகையினால், தெய்வ உதவியைக்கொண்டு சகல பாவங்களையும் நம்மைவிட்டு தூரத்தில் எறிந்துவிடக் கடவோம். "ஆகையால், மேகம்போன்ற இத்தனை திரளான சாட்சிகள் நம்மைச் சூழ்ந்துகொண்டிருக்க, பாரமான யாவற்றையும், நம்மைச் சுற்றி நெருங்கி நிற்கிற பாவத்தையும் தள்ளிவிட்டு, விசுவாசத்தை துவக்குகிறவரும் முடிக்கிறவருமாயிருக்கிற இயேசுவை நோக்கி, நமக்கு நியமித்திருக்கிற ஓட்டத்தில் பொறுமையோடே ஓடக்கடவோம்." (எபி. 12: 1.)

ஜி. ஜி. லௌரி.

பெருங் கணக்கு.

(THE GREAT PROBLEM).

ஆதாமும் ஏவாளும் பாவஞ் செய்த பிறகு, தேவன் அவர்களைத் தம்முடைய பள்ளிக்கூடத்தில் வைத்து, தங்கள் ஆத்தும ரட்சிப்புக்காகவும் இழந்துபோனவைகளை மீட்டுக்கொள்வதற்காகவும் செய்யவேண்டிய ஒரு கணக்கை அவர்களுக்கும் அவர்கள் பின் சந்ததியாருக்கும் கொடுத்தார். இரட்சிப்புதான் இந்தப் பெருங்கணக்கு. இது கர்த்தருடையது

(சங். 3: 8); இது கிறிஸ்துவின் நாமத்தில் காணப்படுகிறது. (அப். 4: 12); வேத வாக்கியங்கள் மூலமாய் அறிவிக்கப்படுகிறது (2 தீமோ. 3: 15). தேவ கிருபை எல்லா மனிதருக்கும் இரட்சிப்பை கொண்டுவந்து (தீத்து 2: 11), பூமியின் எல்லைகள் வரைக்கும் எட்டியிருக்கிறது (சங். 98: 3). தீர்க்கதரிசிகள் இதைக்குறித்து ஆராய்ந்து பரிசோதனை பண்ணியிருக்கிறார்கள் (1 பேது. 1: 10); புதை பொருளைப்போல் அதைத் தேடும்படியாக நாம் எச்சரிக்கப்பட்டிருக்கிறோம்; அதைக் கண்டுபிடித்த பிறகு, 'பயத்தோடும் நடுக்கத்தோடும்' அதைச் செய்யவேண்டும் (பிலி. 2: 12), 'இதைப்பற்றிய கவலைத்தாட்சி ஆத்துமாவுக்கு அபாயத்தைக் கொண்டுவரும் (எபி. 2: 4). இந்தக் கணக்கைச் செய்வதற்கு, சுவிசேஷ கணிதம் உபயோகிக்கப்படவேண்டும்; அதாவது, கூட்டல் (2 பேதுரு 1: 5-7); பெருக்கல் (2 பேதுரு 1: 2); கழித்தல் (1 பேதுரு 2: 1, 2); பிரித்தல் (2 கொரி. 6: 17, 18) என்பவைகளே. இவைகளை உபயோகித்து உத்தரவு (2 பேதுரு 1: 8, 9) பெற்றுக்கொள்ளலாம்.

பாட புஸ்தகம், வேதாகமம் (2 தீமோ. 3: 15); உபாத்தியாயர், பரிசுத்த ஆவியானவர் (யோவா. 16: 13); எழுத்துப்பலகை, இருதயமாகிய சதையான பலகை (2 கொரி. 3: 3, 4). 1844-ம் வருஷத்தில் பரீட்சை துவக்கிற்று (தானி. 7: 9, 10); 'கடைசி எக்காளத்தில்' பலனளிக்கப்படும் (வெளி. 22: 12); அழியாமை அளிக்கப்படும் (1 கொரி. 15: 52, 53); இழந்துபோனவைகள் திரும்ப பெற்றுக்கொள்ளப்படும் (மத். 25: 34).

இந்த ஜீவியத்தில் நாம் இரட்சிப்பின் பள்ளிக்கூடத்தில் பாலர் வகுப்பில் படிக்கிற பிள்ளைகளாயிருக்கிறோம். இனி வரும் வாழ்வில், இப்பொழுது அறிகிற அறிவைவிட, கர்த்தரைப்பற்றிய அறிவையும் அநுபோகத்தையும் அடைவதற்கு மேலான வகுப்பில் படிப்போம் (எபி. 8: 11). இந்த கணக்கைச் செய்வதற்கு நீ ஆரம்பித்துவிட்டாயா? இல்லாவிட்டால், ஏன் ஆரம்பிக்கவில்லையென்று நீயே கேட்டுப் பார் இரட்சிப்புக்கு உன்னுடைய ஆத்துமா தவிக்கிறதா? சங்கீதக்காரன் இதற்காக தாகங்கொண்டார். சங். 119: 81. நாளையல்ல இன்றே இக்கணக்கைச் செய்யவேண்டிய நாள்.

இவ்வுலக புஸ்தகங்களுக்கெல்லாம், மகா பெரியதோர் புத்தகம்.

THE GREATEST BOOK IN THE WORLD.

இவ்வுலகத்தில் கோடிக்கணக்கான அநேக புஸ்தகங்கள் தற்காலமிருக்கிறது; இன்னும் ஆயிரக்கணக்கான புஸ்தகங்கள் வருஷந்தோறும் எழுதப்பட்டுக்கொண்டே வருகிறது. இவற்றில் சில நன்றாகவும் பிரயோஜனமுள்ளனவாகவுமிருக்கிறது, ஆனால் அவற்றுள் பெரும்பான்மையானவை பிரயோஜனமற்றதாயிருக்கிறது. அப்படிப்பட்டவைகளை வாங்குவதனால் பணமும், வாசிப்பதனால் நேரமும் நஷ்டமடைகின்றன.

உலகத்தில் எழுதப்பட்டிருக்கிற புஸ்தகங்களுக்கெல்லாம் வேதாகமமே முதன்மையாயும் மகா பெரியவையாயுமிருக்கிறது. எழுதப்பட்டிருக்கிற புத்தகங்கள் ஒன்றும் இதுகாலமட்டும் செய்திராத மகா பெரிய நன்மையை இவ்வேத புத்தகம் செய்திருக்கிறது. அப்படியிருந்தும், இல்வுலக புத்தகங்களுக்கு என்றும் தோன்றியிராததும் இருந்திராததுமான அநேகம் சத்துருக்கள் இதற்கு இருந்திருக்கிறார்கள். சாத்தானும் தேவ அன்பில்லாதவர்களாகிய அவனுடைய பின்னடியார்களும் ஒன்றாய்ச் சேர்ந்து இப்பெரிய புத்தகத்தை அழிக்கும்படி பல சமயங்களில் முயற்சி செய்திருக்கிறார்கள். ஆனால், இப்புத்தகத்தில் ஜீவன் இருக்கிறபடியால் இதனை அழித்துவிடுவது கூடாத காரியமே. இது காரணம்பற்றியே இப்புத்தகம் மகாபெரியவை யென்று மதிப்பிடப்பட்டிருக்கிறது;

அல்லாமலும் இதனை இயற்றியவரும் தேவனாயிருக்கிறார், இதனை எழுதும்படி ஏவினதும் அவர்தான். ஆகையினால் தேவன் எவ்வளவு காலத்துக்கு நிலைத்திருக்கிறாரோ அவ்வளவு காலமட்டும் அவரது வார்த்தையும் நிலைபெற்றிருக்கும்.

இப்போது, வேதாகமத்தையும் அதன் சரித்திரத்தையும்பற்றிய சில விஷயங்கள் மிகவும் ஆச்சரியகரமாக விருப்பதனால் அதனை மற்றொரு பத்திரிகையிலிருந்தெடுத்து இவ்விடம் எழுதுகிறோம்.

"உலகத்தில் மனிதர், இச்சத்திய ஆகமத்தை ஆட்சேபித்து, அழிவுக்குள்ளாக்கி, இதை முற்றிலுமாய் நீக்கிவிடவேண்டுமென்று துணிந்ததுபோல, மற்றெந்த புத்தகத்தின் மட்டிலும் துணியவில்லை. பல காலங்களிலும் இடைக்கிடையே சிலர் எழும்பி இதனை கவிழ்த்துப்போட முயற்சி செய்திருக்கிறார்கள். மேலும் இவர்களின் செயல் எப்படியிருக்கிறதென்றால்: கனத்த சதுர வடிவுள்ள ஓர் கருங்கல்லை அடிக்கடி கீழது மேலாய் புரட்டித் தள்ளுவதுபோலிருக்கிறது. அதன் கீழ் புறமும் மேல் புறமும் பக்கங்களும் எல்லாம் சம ஒற்றுமையான அளவுடையதாயிருக்கும் காரணத்தினால், அதை ஒருதரம் புரட்டித் தள்ளினாலும் பல தடவைகளாய் புரட்டினாலும், அதன் அளவு என்கிலும் நிலையென்கிலும் கிஞ்சித்தேனும் பேதப்படுகிறதில்லை. காலத்துக்குக் காலம் சிலர் எழும்பி அதைத் தகர்த்துப்போடப்பார்க்கிறார்கள்; ஆனால் அது கீழே விழுந்தவுடன் தன்னுடைய பாதங்களில் தீபமேற்றி, அது முன்னே சென்றதைவிட அதிக விரைவாய் உலகத்தினுள் செல்லுகின்றது. ஏறக்குறைய ஒரு நூற்றாண்டுக்கு முன்னே வால்டேயர் (Voltaire) என்பவருடைய காலத்தில் வேதாகமத்தைத் தகர்த்து முற்றிலுமாய் அழித்துப்போடப் பார்த்தார்கள். இதனால் இந்த வால்டேயர் என்பவர்: இன்னும் ஒரு நூற்றாண்டுக்குள் கிறிஸ்து மார்க்கமானது நிலை பெயர்ந்து முற்றிலுமாய் அழிக்கப்பட்டுப்போய், அதன் அழிவுக்குறிய சம்பவத்தை சரித்திரக்காரர்கள் சரித்திரங்களில் எழுதியும் வைத்துவிடுவார்களென்று ஓர் தீர்க்கதரிசனம் உரைத்தார். தெய்வ பயமற்று தேவன் இல்லையென்று மறுக்கும் ஜனங்கள் பிரான்ஸ் தேசத்தில் அதிகமாயிருந்தபடியினால், அவர்கள் அழிம்பரும், சண்டாளர்களுமாயிருந்தார்கள். ஆகையினாலேயே வால்டேயர் என்பவர் இவ்விதமான தீர்மானங்களைச் செய்தார். ஆனாலும் கடைசியில் வால்டேயர் மரித்தார் அவருடைய சரித்திரத்தை சரித்திரக்காரர்கள் புத்தகங்களில் எழுதிவைத்தார்கள். அது மட்டுமல்ல, அவரிடமிருந்த அச்சு யந்திரமும், அவர் வசித்திருந்த வீடும் அக்காலத்திலிருந்து இம்மட்டும் ஜெனீவா வேதாகம சங்கத்தாரால் (Geneva Bible Society) உபயோகப்படுத்தப்படுத்தப்பட்டு வருகிறது. இன்னும் தாமஸ் பேயின் (Thomas Paine) என்பவரும் அவருடைய காலத்தில் வேதாகமத்தை முற்றிலும் தகர்த்துப்போட வகை பார்த்தார். ஆனால் 1809-ம் ஆண்டில் அவர் தனது கல்லறைக்கு ஓர் வெறியனைப்போல் ஊர்ந்து சென்ற பிற்பாடு, வேதாகமம் வலிமைகொண்டு கெம்பீரமாய் குதித்தெழுந்தது. அக்கால முதல், முன்னிருந்ததைவிட இருபது மடங்குக்கதிகமாய் வேதாகமப் பிரதிகள் அச்சிடப்பட்டு உலகத்தின் சகல திக்குகளுக்கும் அனுப்பப்பட்டது. மனுஷ சிருஷ்டிப்பின் காலத்திலிருந்து அக்காலமட்டும வேதாகமத்துக்கு இதைப்போலொத்த உயிர்ப்பு உண்டானதே யில்லை. இதை அச்சிடத் துவக்கினதிலிருந்து 1800-ம் ஆண்டுமட்டும், 40 லட்சத்திலிருந்து 60 லட்சம் வரைக்கும் எண்ணிக்கையுள்ள திரளான வேதாகமங்களை முப்பது பாஷைகளில் அச்சுப் பதிப்பித்திருக்கிறார்கள். உலகம் தோன்றினதுமுதல் இதைப்போலொத்த விர்த்தி ஒரு காலத்திலும் உண்டானதேயில்லை. பிறகு எண்பது வருஷங்களுக்குப் பிறகு, அதாவது 1880-ம் ஆண்டில் உலகத்திலுள்ள எல்லா வேதாகம சங்கங்களுடைய மொத்த கணக்கின்படி, 80 வேதாகம சங்கங்களும் அதன் கிளைச்சங்கங்களும் ஒன்று கூடி, 165,000,000. வேதாகம பிரதிகளையும், ஆகமங்களையும் 260 பாஷைகளில் மொழி பெயர்த்து உலகத்தில் பரம்பச்செய்திருக்கிறதாக கணக்கெடுக்கப்பட்டிருக்கிறது. இவ்விதமாய் எல்லா சமயங்களிலும் நிராகரித்து தள்ளிவிடப்பட்ட புத்தகமானது, இந்நாள்பரியந்தம் நிலையான ஜீவனையுடையதாயிருப்பதாக நமக்குக் காண்பிக்கிறது.

மூடின முத்துக்கதை.

(தொடர்ச்சி)

திராட்ச.—இந்துக்களுடைய வேதத்தில் சோமபானத்தைத் தேவாமிர்தமாகப் பாவித்திருக்கிறது. மனுஸ்மிருதி 5-ம் அதிகாரம் 56-ம் சுலோகத்தில்: "மாம்ச பக்ஷணத்திலும், மதுபானத்திலும், மைதுனத்திலும் யாதொரு தோஷமும் இல்லை" என்றும்; பிராணதோஷினி என்னும் கிரந்தத்தில்: "மச்ச மாம்சங்கள் புசித்து மதுபானஞ் செய்வது மகா பாதகங்களைப் போக்கும்" என்றும் சொல்லியிருக்கிறது. மேலும் வசிஷ்ட முனி மாம்சம் மது முதலானவைகளைச் சேகரித்து, விஸ்வாமித்திரருக்கும் அவர் சேனைகளுக்கும் விருந்து செய்ததாகவும், பரத்துவாச முனியும் அவர் ஜனங்களுக்கும் பரதனுக்கும் மாம்சம் மது முதலியவைகளை உண்ணக் கொடுத்ததாகவும் இராமாயணத்தில் காண்கிறது. அசுர குருவாகிய சுக்கிராசாரி கள்ளைக் குடத்தோடு குடித்ததாகப் பாரதம் சாட்சி பகர்கிறது. இப்படியெல்லாம் இருக்க நீ என்னை நிந்திக்கத் துணிந்த நியாயம் தெரியவில்லை.

தண்.—இந்துக்களுடைய சாஸ்திரம் அப்படிச் சொல்வது சத்தியந்தான். ஆனால் அவர்கள் நடபடி அதற்குச் சுத்தமாறாயிருக்கிறது. அவர்கள் பெரும்பாலும் உன்னைக் குடிக்கிறதில்லை. மேலும் அவர்கள் உன்னைப் பஞ்சமாபாதகங்களில் ஒன்றாக்கி, நரகத்தைப் பகைக்கிறதைவிட உன்னைப் பகைக்கிறார்கள். ஆதலால் இந்துக்கள் உன்னை மதிக்கிறார்கள் என்கிற எண்ணத்தைமட்டும் விட்டுவிடு.

திராட்ச.—இந்து மார்க்கத்தின் காரியமும் இந்துக்களின் காரியமும் இருக்கட்டும், கிறிஸ்து மார்க்கமும் கிறிஸ்தவர்களும் என்னை அங்கிகரித்து அனுபவிக்கிறார்கள் அல்லவா? கிறிஸ்தவ வேதாகமத்தில் என்னை ஒப்புக்கொண்டிருக்கிறது. இயேசு கிறிஸ்து என்னை அனுபவித்துத், தமது மரணத்தின் அடையாளமாக்கியிருக்கிறார். தீமொத்தேயு என்னை அனுபவிக்கலாமென்று பவுல் அப்போஸ்தலன் உத்தரவு கொடுத்திருக்கிறார். இவைகளே என் மகிமைக்குப் போதுமான சாட்சிகளல்லவா?

தண்.—உன் மகிமையை வெளியே சொல்லாதே; வெட்கம். கிறிஸ்தவ வேதாகமமானது நீ மகிமை கெட்டதென்று சொல்வதே தவிர, மகிமையுள்ளதென்று சொல்லுகிறதில்லை; உன் நீசத்தனத்தையும், நிஷ்ரேத்தையும், அயோக்கியத்தையும், அவமானத்தையும் மகா தெளிவாய் வெளிப்படுத்தி, உன்னை அதிக காரமாய்க் கண்டிக்கிறது அதற்குத் திருஷ்டாந்தம் கேள்: "திராட்ச ரசம் பரியாசஞ் செய்யும்; மதுபானம் அமளி பண்ணும்; அதினால் மயங்குகிற ஒருவனும் ஞானவானல்ல." (நீதி. 20: 21). "சாராயத்தை நாடி, அதிகாலமே எழுந்து, மதுபானம் தங்களைச் சூடாக்கும்படி தரித்திருந்து, இருட்டிப்போகும் வரையும் குடித்துக்கொண்டிருக்கிறவர்களுக்கு ஐயோ!" (ஏசா. 5: 11). "மதுபானப் பிரியரையும் மாம்சப் பெருந்தீனிக்காரரையும் சேராதே" (நீதி. 23: 20). "இவர்கள் திராட்ச ரசத்தால் மயங்கி மதுபானத்தால் வழி தப்பிப்போகிறார்கள்." (ஏசா. 28: 7). "துன்மார்க்கத்திற்கு ஏதுவான மதுபான வெறி கொள்ளாதிருங்கள்" (எபே. 5: 18). இவைகளும் இவைகள்போன்ற வேறு வாக்கியங்களும் நீ சர்வ சண்டாளப் பானம் என்பதைத் தெளிவாய் ரூபிக்கின்றன. உன்னைச் சம்மதிக்கிற வாக்கியங்களும் சில உண்டு.

திராட்ச.—அப்படிச் சொல்லு; அப்படிச் சொல்லு. சம்மதிக்கிற வாக்கியங்களும் உண்டு. ஓகோ, அகப்பட்டுக்கொண்டாய்; தண்ணீரே அகப்பட்டுக்கொண்டாய். ஜெயித்தேன்! ஜெயித்தேன்!

தண்.—நில்லு மதுவே நில்லு; சாடாதே. உன் ஜாதி வேதத்தை ஓதாதே. நான் பேசுமுன் நீ என் வாயிலிருந்து வார்த்தையை வாங்கிப் பறிப்பது சரியல்ல. கனிவஷந் தோடுகிற கஞ்ச மலரைக் கண்ணைக் கெடுக்கிற கள்ளிப்பூ ஜெயிப்பதென்றோ, கற்பு நெறி

தவறாத குலமகளைக் கணிசங்கெட்ட விலை மகள் ஜெயிப்பதென்றோ, அருமையான அமிர்தத்தை ஆலகால விஷம் ஜெயிப்பதென்றோ, அன்றுதான் நீயும் என்னை ஜெயிக்கப்போகிறாய். வேதாகமத்தில் சில இடங்களில் உன்னை சம்மதித்துப் பேசியிருப்பதற்குக் காரணம் சொல்லுகிறேன் கேள். அதைக் கேட்டவுன் உன் குதிப்பு அடங்கி, உன் அகங்காரம் அமையும். யூதருக்குள் இருவகையான இரசபானம் நடப்பாயிருந்தது. ஒரு வகை பழத்திலிருந்து பிசைந்தெடுத்த இரசத்தைப் புளிக்கவையாமல் குடிப்பது; இது இலாகிரி உண்டுபண்ணாதது; இதைத்தான் ஒப்புக்கொண்டிருப்பது. ஒருவகை நன்றாய் புளிக்க வைத்து நுரைக்கப்பண்ணினதைக் குடிப்பது; அது பயங்கரமான வெறிச்சத்துள்ளது; அதுதான் விலக்கப்பட்டிருப்பது. தமிழ் நாட்டிலிருக்கிறவர்களுக்கு இது நன்றாய்த் தெரிந்த காரியந்தான். இந்நாட்டிலுள்ள பனைகளிலிருந்து எடுக்கிற பதனீரும் கள்ளும் இதற்கு ஏற்ற அத்தாட்சியாயிருக்கிறது. ஆதலால் அருளாகமம் விஷ நீராகிய உன்னை ஒப்புக்கொள்ளுகிறதென்பது பொருந்தாது. மேலும் இயேசுவானவர் இராப்போஜனத்தில் ஏற்படுத்தின இரசமும், பவுல் அப்போஸ்தலன் தீமோத்தேயுவுக்குச் சம்மதித்த இரசமும் வெறிச்சத்தில்லா பதனீரைப்போன்ற இரசமே தவிர, மனுஷரை மிருகத்தையும் விட அதிகமாய்த் தாழ்த்துகிற மஸ்துள்ள இரசமல்ல. ஆதலால் மதுவே, நீ: நான் செத்தேன் செத்தேன் என்று சொல்ல நியாயம் இருக்கிறதே அல்லாமல், ஜெயித்தேன் ஜெயித்தேன் என்று சொல்ல நியாயம் இல்லை.

திராட்ச.—நான்தான் உலகத்திற்குப் பெரிய தீமைகளைச் செய்கிறேன் என்று சாதிக்கிறாய். நீ உலகத்திற்கு என்ன நன்மைகளை செய்துவிடுகிறாய்?

தண்.—அப்படிக்கேள். அது சரியான கேள்வி. நான் இல்லாவிட்டால் மண்வெட்டி கலப்பை முதலான கிருஷிக் கருவிகளை மண் உள்ளே விடாது; என் உதவியினாலல்லாமல் புற்பூண்டு புஷ்பாதிகளும், நெல் கேழ்வரகு எள் பயறு முதலான தானியங்களும், மா பலா அத்தி ஆல் முதலான மரங்களும் முளைத்து வளர்ந்து பலன் கொடா, ஊர் வனங்கள், மச்சங்கள், பறவைகள், மிருகங்கள் ஆகியான அஃறிணை ஜெந்துக்களும், பூலோக அதிபதிகளும் உயர்திணைச் சிருஷ்டிகளுமான மனுஷர்களும் பிழைத்து அசைந்து ஜீவியம் பண்ணுவது என்னாலேதான். உலகத்திலுள்ள சகல உணவுகளையும் நான் உண்டுபண்ணிக் கொடுப்பதும் தவிர, நானும் உத்தமமான ஒரு உணவாயிருக்கிறேன். மேலும் இந்த உலகம் பென்னம் பெரிதாய் இருப்பது மெய்தான்; ஆனால் அதிலே முக்காற்பங்கு நான். நான் இல்லையானால் இந்த உலகம் மகா பயங்கரமான ஒரு பெரிய பாறையாயிருக்குமே யல்லாமல், இவ்வளவு அழகும் அலங்காரமுமாயிராது. சர்வ ஜீவராசிகளையும் நான் பிழைப்பூட்டி வருவதால், என்னை அமிர்தமென்றும், நீ அநேகரைக் கெடுக்கிறபடியால், உன்னை நஞ்சென்றும் அறிஞர் சொல்லுகிறார்கள். "வானின்றுலகம் வழங்கி வருவதால்—தானமிழ்தம் என்றுணரற்பாற்று"; 'துஞ்சினார் செத்தாரின் வேறல்லர் எஞ்ஞான்றும்—நஞ்சுண்பார்கள் ளுண்பவர்" என்னும் குறள்களே இதற்குச் சாட்சி.

திராட்ச.—என்னுடைய தீய தன்மையும் உன்னுடைய நல்ல தன்மையும் எனக்கு இப்போதுதான் விளங்கினது. கடவுளுக்குப்பின் இந்த உலகத்துக்குப் பெரிய மித்துரு நீ. பிசாசுக்குப்பின் இந்த உலகத்துக்குப் பெரிய சத்துரு நான். ஆனால் நான் என்று சொல்ல எனக்கு மனமில்லை. ஏனென்றால் நான் ஜீவனும் உணர்வும் அறிவுமற்ற வஸ்து. மனுஷர் என்னை உண்டுபண்ணிக், குடித்துத், தங்களுக்குக் கேட்டையும், எனக்குப் பெரிய நிந்தையையும் உண்டுபண்ணுகிறார்கள். ஐயோ! உயிரும், உணர்வும், விவேகவிற்பனமும், பகுத்தறிவும், ஞானமுமுடைய மனுஷர் உணரார்களா?

வேத வாசகம்

கீழ்ப்படிதலின் முக்கியம்.

(THE IMPORTANCE OF OBEDIENCE)

விசுவாசியையும் கிறிஸ்துவையும் இணைப்பது பரிசுத்த ஆவி.

1. *கிறிஸ்துவுக்கும் சபைக்குமுள்ள சம்பந்தமென்ன?*

'அவரே சபையாகிய சரீரத்திற்குத் தலையானவர்.' கொலோ 1: 18. (எபே. 1: 22).

2. *கிறிஸ்து தமது சபையின் அங்கத்தினரை எதின்மூலமாய் ஆண்டு நடத்துகிறார்?*

'அவர் (சத்திய ஆவியானவர்) உங்களுக்குள்ளே இருப்பதால், நீங்கள் அவரை அறிவீர்கள்." யோவான் 14: 17.

3. *இந்த பரிசுத்த ஆவி இல்லாதவன் எப்படிப்பட்டவன்?*

"கிறிஸ்துவின் ஆவி இல்லாதவன் அவருடையவனல்ல." ரோமர் 8: 9.

4. *சத்திய ஆவியானவரின் வேலை என்ன?*

"சத்திய ஆவியாகிய அவர் வரும்போது, சகல சத்தியத்திற்குள்ளும் உங்களை வழி நடத்துவார்." யோவா. 16: 13.

5. *அவர் நடத்துகிற சத்தியமாவது என்ன?*

'உம்முடைய சத்தியத்தினாலே அவர்களைப் பரிசுத்தமாக்கும்; உம்முடைய வசனமே சத்தியம்.' யோவா. 17: 17.

6. *தேவ வசனமாகிய சத்தியத்தில் பரிசுத்த ஆவி நம்மை எப்படி நடத்துகிறது?*

'என் நாமத்தினாலே பிதா அனுப்பப்போகிற பரிசுத்த ஆவியாகிய தேற்றரவாளனே எல்லாவற்றையும் உங்களுக்குப் போதித்து, நான் உங்களுக்குச் சொன்ன எல்லாவற்றையும் உங்களுக்கு நினைப்பூட்டுவார்.' யோவான் 14: 26.

குறிப்பு:—தேவ வசனத்திற்குக் கீழ்ப்படியும்படி நம்மை நடத்தும். நாம் வேதாகமத்தை படிக்காவிட்டால் அதின் வேலை வீண். வேதாகமத்தைப்பெற சிலாக்கியமுடையவர்கள் அதை அசட்டை செய்தால், அவர்களை பரிசுத்த ஆவி நடத்தாது.

7. *பரிசுத்த ஆவியின் நடத்துதலைக்குறித்து பவுல் கொடுக்கும் எச்சரிப்பென்ன?*

'அன்றியும் நீங்கள் மீட்கப்படும் நாளுக்கென்று முத்திரையாகப்பெற்ற தேவனுடைய பரிசுத்த ஆவியை துக்கப்படுத்தாதிருங்கள்.' எபே. 4: 30.

குறிப்பு:—நமக்கு வெளிப்படுத்தப்படும் தேவ சித்தத்திற்கு கீழ்ப்படிய நாம் மறுக்கும்போது பரிசுத்த ஆவி துக்கப்படுத்தப்படுகிறது.

வெளிச்சத்தில் நடப்பது (கீழ்ப்படிதல்).

8. *வெளிச்சம் வரும்போது அதில் நடக்க மறுப்பதின் பலனென்ன?*

'அதற்கு இயேசு: இன்னும் கொஞ்சக்காலம் ஒளி உங்களிடத்தில் இருக்கும்; இருளில் நீங்கள் அகப்படாதபடிக்கு ஒளி உங்களோடிருக்கையில் நடவுங்கள்; இருளில் நடக்கிறவன் தான் போகிற இடம் இன்னதென்று அறியான். ஒளி உங்களோடிருக்கையில், நீங்கள் ஒளியின் பிள்ளைகளாகும்படிக்கு, ஒளியினிடத்தில் விசுவாசமாயிருங்கள் என்றார்.' யோவான் 12: 35, 36.

குறிப்பு:—தாங்கள் வெளிச்சத்தை அறியாதிருந்தால் உத்தரவாதமுள்ளவர்களாகமாட்டார்களென்று எண்ணி, அநேகர் வேதத்தை படிக்க மறுக்கிறார்கள். ஆனால் இது ஒரு வஞ்சகமும், ஓர் கண்ணியுமாயிருக்கிறது.

9. மனுஷர் வெளிச்சத்தைப்பார்க்கிலும் இருளை ஏன் விரும்புகிறார்கள் ?

'ஒளியானது உலகத்தில் வந்திருந்தும் மனுஷருடைய கிரியைகள் பொல்லாதவைகளாயிருக்கிறபடியினால் அவர்கள் ஒளியைப்பார்க்கிலும் இருளை விரும்புகிறதே அந்த ஆக்கினைத் தீர்ப்புக்குக் காரணமாயிருக்கிறது. பொல்லாங்கு செய்கிற எவனும் ஒளியைப் பகைக்கிறான்; தன் கிரியைகள் கண்டிக்கப்படாதபடிக்கு, ஒளியினிடத்தில் வராதிருக்கிறான்." யோவான் 8: 19, 20.

10. எப்படிப்பட்டவன் வெளிச்சத்தினிடத்தில் வருகிறான் ?

'சத்தியத்தின்படி செய்கிறவனோ, தன் கிரியைகள் தேவனுக்குள்ளாய் செய்யப்படுகிறதென்று வெளியாகும்படிக்கு ஒளியினிடத்தில் வருகிறான்.' வச. 21.

குறிப்பு:—வெளிச்சத்தில் நடந்தால் பாவம் சுத்திகரிக்கப்படும். அல்லாவிட்டால் இல்லை. யோவான் 15: 22-24 பார்க்கவும்.

11. கிறிஸ்துவையுடைய இப்படிப்பட்டவர்களின் பெயர் எங்கே எழுதப்பட்டிருக்கிறது ?

'அவர்களுடைய நாமங்கள் ஜீவ புஸ்தகத்திலிருக்கிறது' பிலி. 4: 3. (தானி. 12: 1; லூக். 10: 20; வெளி. 13: 8.)

குறிப்பு:—ஒருவன் கிறிஸ்துவை ஏற்றுக்கொண்டவுடன் அவன் பெயர் ஜீவ புஸ்தகத்தில் எழுதப்படுகிறது. பிற்பாடு அவன் தானடைகிற வெளிச்சத்தின்படி (சத்தியத்தின்படி) நடக்காவிட்டால் அவன் நாமம் நியாயத்தீர்ப்பின் நாளில் அப்புஸ்தகத்திலிருந்து எடுக்கப்படும். அநேகர் தாங்கள் வளர்ந்த மதத்திலிருந்து பிரிவது தேவ துரோகம் என்றெண்ணுகிறார்கள். ஆனால் அப்படியல்ல. ஒரு சபை, தேவன் மென்மேலும் அனுப்பும் வெளிச்சத்தின்படி முன்னேறிச் செல்லாவிட்டால், அப்போது அது கிறிஸ்துவைவிட்டு விலகிப்போகிறதாயிருக்கிறது. பிறகு அச்சபையிலிருப்பது மிகவும் அபாயமானது.

கீழ்ப்படியாமையின் பாவம்.

12. தேவனுக்கு கீழ்ப்படிய மறுப்பதை அவர் எப்படி எண்ணுகிறார் ?

'அதற்கு சாமுவேல்: கர்த்தருடைய சத்தத்திற்குக் கீழ்ப்படிகிறதைப்பார்க்கிலும், சர்வாங்க தகனங்களும் பலிகளும் கர்த்தருக்குப் பிரியமாயிருக்குமோ ? பலியைப்பார்க்கிலும் கீழ்ப்படிதலும், ஆட்டுக்கடாக்களின் நிணத்தைப்பார்க்கிலும் செவி கொடுத்தலும் உத்தமம். இரண்டகம் பண்ணுதல் பில்லி சூனிய பாவத்திற்கும், முரட்டாட்டம் பண்ணுதல் அவபக்திக்கும் விக்கிரகாராதனைக்கும் சரியாய் இருக்கிறது நீர் கர்த்தருடைய வார்த்தையைப் புறக்கணித்தபடியினாலே, அவர் உம்மை ராஜாவாயிராதபடிக்குப் புறக்கணித்துத் தள்ளினார் என்றான்.' 1 சாமு. 15: 22, 23.

13. சவுல் தான் கீழ்ப்படியாமற்போனதற்கு என்ன சாக்கு சொன்னான் ?

'அப்பொழுது சவுல் சாமுவேலை நோக்கி: நான் ஜனங்களுக்குப் பயந்து, அவர்கள் சொல்லைக்கேட்டு, (பாவஞ் செய்தேன்)' வச. 24.

14. கிறிஸ்து பூமியிலிருந்தபோது அவரை விசுவாசித்த அதிகாரிகள் ஏன் அவரை அறிக்கை பண்ணவில்லை ?

'ஆகிலும் அதிகாரிகளிலும் அநேகர் அவரிடத்தில் விசுவாசம் வைத்தார்கள். அப்படியிருந்தும் ஜெப ஆலயத்திற்குப் புறம்பாக்கப்படாதபடி, பரிசேயர் நிமித்தம் அதை அறிக்கை பண்ணாதிருந்தார்கள். அவர்கள் தேவனால் வருகிற மகிமையிலும் மனுஷரால் வருகிற மகிமையை அதிகமாய் விரும்பினார்கள்.' யோவா. 12: 42, 43.

15. சத்தியத்தை அறிந்தபின் தங்கள் பாவங்களிலே நிலைத்திருப்பவர்களின் முடிவென்ன ?

'சத்தியத்தை அறியும் அறிவை அடைந்தபின்பு நாம் மனப்பூர்வமாய்ப் பாவஞ் செய்கிறவர்களாயிருந்தால், பாவங்களினிமித்தம் செலுத்தத்தக்க வேறொரு பலி இனி இராமல், நியாயத்தீர்ப்பு வருமென்று பயத்தோடே எதிர்பார்க்குதலும், விரோதிகளைப் பட்சிக்கும் கோபாக்கினையுமே இருக்கும்.' எபி. 10: 26, 27.

சுகாதார விஷயங்கள்

O. SMITH, M. D. டாக்டர் சிமித்.

நாம் எதைப் பானம் பண்ணவேண்டும் (தொடர்ச்சி.)

WHAT SHALL WE DRINK.—(Continued.)

ஒருவன் நன்றாய் வேலை செய்து களைப்படைந்திருக்கும் வேளையில், தாகசாந்தி செய்வது நன்மையோவென்று அநேகர் கேட்கிறார்கள். அவன் அதிக களைப்படைந்து நாவறட்சியுடனிருக்கும்போது, போஜன பானம் பண்ணுவதற்கு முன் சற்று இளைப்பாறியிருந்து பிறகு சாப்பிடுவது அதிக நல்லது. இவ்விதமாய் சரீரமானது அதிக உஷ்ணப்பட்டும், கஷ்ட வேலையினால் களைப்படைந்தும் இருக்கும் சமயங்களில்: குளிர்ந்த ஜலத்தை பானம் பண்ணுவதால் சரீரத்தில் பலவித வியாதிகள் தோன்றுவதற்கு காரணமாகிறது. ஆகையினால், இப்பேர்க்கொத்த சமயங்களில் சில நிமிஷங்கள் தாமதித்து பானம் பண்ணினால் சரீரத்திற்கு அதிக சுகத்தைக் கொடுக்கும்.

மேலும் இச்சமயங்களில், பால், கொக்கோ (coco) முதலிய சத்துள்ள பானங்களை உபயோகியாமல், சுத்த ஜலம், சோடா, லெமனேட், (Aerated waters) முதலிய பானங்களையாவது அல்லது பழ ரசத்தில் சிறிது ஜலங் கலந்த பானத்தையாவது சாப்பிடுவது மிகவும் நல்லது. பின்னே சொல்லியுள்ள இப்பான வகைகள் ஜீரணி மடைவது அவசியமில்லை, ஆனால் முதலில் சொன்ன சத்துள்ள பானங்களில் ஆகார பொருட்கள் கலந்திருக்கின்றன வாதலால், அவை ஜீரண கருவிகளினுள்போய் பக்குவமடையவேண்டுவது அவசியம். மனிதன் வேலையினால் அதிக களைப்புற்றிருக்கும்போது அவனுடைய ஜீரண கருவிகள் தம் தம் வேலையை சரியாய்ச் செய்ய சக்தியற்றிருக்கும். அச்சமயங்களில் அவன் பருகும் சத்துள்ள பானங்களும் சரியாய் பக்குவமடையமாட்டாது.

சுத்த ஜலம் பழ ரசங்கள் கலந்த பானம் இவைகள் சரீர ஆயாசத்தைமட்டும் தீர்த்து, ஜீரண கருவிகள் முதலியவற்றை சுத்தம் செய்துவிடுகிறது. மேலும் இவைகளில் சரீர போஷணைக்கேற்ற வஸ்துக்கள் ஒன்றும் இல்லாதபடியினால் இவைகளையே சிறந்த பானங்களாக கையாடுவது நல்லது. சரீர போஷணையைக் கொடுக்கும் பானங்கள் வேண்டிய போது, பால், மோர், அன்னப்பால், முதலியவைகளை உபயோகிப்பது அதிக நல்லது. ஒருவனுடைய இரைப்பை அடிக்கடி பலவீனமடைந்து கெட்டியான ஆகாரத்தை ஜீரணித்துக்கொள்ள தகுதியற்றிருக்கும்போது, இவ்வித திரவ பதார்த்தங்களை அடிக்கடி கொடுப்பதால் அவன் நன்றாய் போஷிக்கப்படுகிறான்.

எளியவர்களான சிலர் தங்கள் உபயோகத்துக்கு அன்னப்பால், மோர், இவைற்றைத் தவிர வேறு ஒன்றுமில்லையென நினைக்கிறார்கள். இது பெரிய தப்பிதம். சுகத்துக்கும், போஷணைக்கும் ஏற்ற நல்ல சத்துள்ள வஸ்து அரிசியின் நுணியில் இருக்கிறது. சாதம் நன்றாய் வெந்தவுடன் இக்கோதுகள் அரிசியை விட்டு பிரிந்து தண்ணீரில் கலந்துவிடுகின்றன வாதலால், இந்த அருமையான சத்தை வெளியில் கொட்டிவிடுவது கூடாது. இவை, மனுஷனுக்கு நல்ல பலத்தையும் சுகத்தையும் கொடுக்கும்படி தேவனால் படைக்கப்பட்டிருக்கின்றதால் அதை எறிந்துவிடக்கூடாது.

மோரும்கூட ஓர் நல்ல உணவுதான். இதை அதிக நேரம் வைத்திருந்து, அதில் அதிக புளிப்பு உண்டாக்காமல், அதை பக்குவத்தோடு பானம் செய்தால், அது போஷணைக்கும் நல்ல ஜீரணத்துக்கும் ஏற்றதாயிருக்கிறது. அதில் அதிக புளிபேறி விடுமானால், அப்புளிப்பு ஜலமானது, ஆகார சத்துக்களையுடையதாயிருக்கிற அந்த வெண்மை நிறத் தயிரை கெடுத்துப்போடுகிறது; பின்பு அதில் யாதொரு பிரயோஜனமுமில்லை. ஆனால் அவற்றில் தயிரானது கெடாமல் கலந்திருக்குமானால், அது (சிறு குழந்தைகள் தவிர) சிறியோருக்கும் பெரியோருக்கும், ஏழைகட்கும் ஐசுவரியவான்களுக்கும், ஏற்ற உணவுப்பொருளாகிறது.

மத்தியானத்திற்குப் பிறகு இரண்டு அல்லது மூன்று மணிக்கு ஒருவன் 'வயிறு நிரம்ப ஆகாரம் புசித்திருக்கிறனென்று வைத்துக்கொள்வோம். ஆனால் இரவில் அவனுக்கு வழக்கமாய் சாப்பிடுகிற அளவுக்கு போஜனம் தேவையில்லை, என்றாலும் சிறிது பசி உண்டாயிருக்கிறது. அப்பேர்ப்பட்ட சமயங்களில், போஷிப்பைக் கொடுக்கக்கூடிய இப்பானங்களின் ஒன்றோடு சிறிது வறட்டின உரொட்டித் துண்டை உண்பதால், மனதுக்கு திருப்தியும் உண்டாக்கி பசியையும் தணிக்கிறது. மேலும் இப்படி அருந்துவதனால் ஜீரண கருவிகளுக்கு அதிக இளைப்பாற்றியும் உண்டாகும்.

Dr. O. Smith.

கேள்விகளுக்கு விடை.

கேள்வி—என்னுடைய இளைய மக்கள் யாவருக்கும் காலையில் அவர்கள் எழுந்தவுடன் கண்களில் பீளை சிறிது இருக்கிறது, சில சமயங்களில் அது நாள் முழுதும் கண்ணில் உண்டாகிறது. இதனால் கண்களுக்கு ஏதேனும் விசேஷித்த கெடுதி உண்டாகுமா? அப்படியானால் அதை நிறுத்தும்படிக்கு நான் என்ன செய்யவேண்டும் ?

விடை:—ஆம், அது கெடுதலானதுதான். இப்படி கண்களில் பீளை உண்டாகிறதானது, இயற்கையிலேயே அக்கண்கள் சிறிது பலவீனமுள்ளவையென தெரிகிறது. மேலும் கண்களில் சில வஸ்துகள் உள்ளேறியிருக்கின்றன அவையும் அதுகளில் இருக்கக்கூடாது. கண்களில் வருகிற கண்ணீரும் பீளையும் இயற்கையின் காரணத்தால் கண்களினின்றும் வெளியே தள்ளப்படுகிறது. கண்களினுட் சென்றிருக்கிற சில வஸ்துகளை வெளியே கழிப்பதற்கு, அவற்றின் மிருதுவான தசை நார்களும் கண்ணிதழ்களும் ஒன்றாய்ச் சேர்ந்து இவ்விதமாய் முயற்சி செய்கிறது. சில வேளைகளில் அணுக்களான பூச்சிகள் கண்களினுள் சென்றுவிடுவதினாலும், மற்றும் தூசுகள் விழுந்துவிடுவதனாலும் கண்களுக்கு இப்படிப்பட்ட உபத்திரவம் உண்டாகிறது. இப்படி இவ்வித வஸ்துகள் கண்களினுட் சென்று இப்படிக்கு விபத்தை எப்போதும் உண்டாக்கும்படி நாம் இடங் கொடுத்தால், அவைகள் சீக்கிரம் பலவீனமடைந்து அதிக கேடான வியாதிகளுக்கு காரணமாயிருக்கும். இது காரணம் பற்றியே கண்களுக்கு இவ்வித இடையூறு உண்டாகும்போது நாம் அவற்றை அதிக கவலையுடன் பரிபாலிக்கவேண்டும்.

இதன் உபயோகத்துக்கென்று மருந்து கடையில் விற்கிற போரிக் ஆசிட் கிரிஸ்டில் (Boric acid crystals) என்ற மருந்தில் ஒரு அவுன்ஸ் (one ounce) வாங்கி வரவேண்டும். அப்படி ஷாப்புகளில் கிரிஸ்டில் (Crystals) கிடைக்காவிட்டால் அம்மருந்தின் பொடியையாவது உபயோகிக்கலாம். ஆனால் கிரிஸ்டில் (Crystals) தான் தண்ணீரில் சுலபமாய் கரையக்கூடியதாகையால் அதுவே அதிக நல்லது. அரை அவுன்ஸ் (½ oz) மருந்தை கொதிக்கிற சூடான ஜலத்திலிட்டு அதை ஓர் சீசாவில் அடைத்து அது நன்றாய், மருந்து கரையும் வரையிலும் குலுக்கவேண்டும். பிறகு அம்மருந்து நன்றாய் ஆறின பிறகு உபயோகப்படுத்தலாம்.

மருந்தை உபயோகிக்கும் முறையாவது: ஒரு சிறு கோப்பையில் ஒரு தேக்கரண்டியளவு மருந்தை விட்டு அதோடு ஒரு தேக்கரண்டி வெந்நீரை கலந்து வைத்துக்கொள்ளவும். பிறகு கொஞ்சம் பஞ்சு, அல்லது மெல்லிய சிறு துணியைக்கொண்டு, கண்களையும், இதழ்களையும், அப்பீளையானது கண்ணோரங்களில் சிறிதும் ஒட்டியிரா வண்ணமாய் மெதுவாக கழுவவேண்டும். கழுவும்போது அதிக ஜாக்கிரதையுடன் செய்யவேண்டும், கண்ணிதழ்களில் ரத்தம் சொறியும்படிக்கு பலமாய் அழுத்தலாகாது. இவ்விதமாய் இரு கண்களும் சுத்தமாய்க் கழுவப்பட்ட பின்னர் கோப்பையிலிருப்பதை கொட்டிவிட்டு; சீசாவிலிருக்கும் மருந்தில் சில துளிகள் கோப்பையில் விட்டு, அதோடு சில துளி வெந்நீரும் கலந்துகொண்டு, கண்ணிரப்பைகளை திறந்து கண்ணுக்கு நாலு சொட்டு வீதம் ஊற்றவும், ஊற்றும் இம்மருந்து கண்ணினுட் போய் நன்றாய் வேலை செய்யும்படிக்கு அது கண்ணில் சில நிமிஷங்கள் இருக்கவேண்டும். இவ்விதமான பக்குவம், காலை மாலை இரு வேளைகளிலும், கண்களில் பீளை நின்றுபோகுமளவும் செய்யவேண்டும்.

இன்னும் மத்தியான வேளைகளில், ஒரு தேக்கரண்டி சுத்தமான உப்பில் நாலிலொரு பங்கு எடுத்து, அதை அரைக்கால்படி சுடு ஜலத்தில் கரைத்து ஆறிய பிறகு, அத்தண்ணீரை கண்களில் சில சொட்டுகள் விடுவதால்: பலவீனமடைந்திருக்கும் கண்ணுக்கு நக்க பலத்தை இந்த உப்பு ஜலமானது கொடுக்கும்.

Dr. O. Smith.

? கேள்விகளுக்கு விடை ?

நீங்கள் கேட்க மனதானால் திரும்பி வந்து கேளுங்கள்.

கேள்வி.—மத். 24: 44-ல் கிறிஸ்துவின் வருகை என்பது மரணத்தை குறிக்கிறதில்லையா ?

உத்தரவு.—"அவனை (யோவானை) கண்டு. பேதுரு இயேசுவை நோக்கி: ஆண்டவரே இவன் காரியமென்ன என்றான். அதற்கு இயேசு: நான் வருமளவும் இவனிருக்க எனக்குச் சித்தமானால், உனக்கென்ன, நீ என்னை பின்பற்றி வா. என்றார், ஆகையால் அந்தச் சீஷன் மரிப்பதில்லை என்கிற பேச்சு சகோதரருக்குள்ளே பரம்பிற்று. ஆனாலும் இயேசு அவன் மரிப்பதில்லையென்று சொல்லாமல், நான் வருமளவும் இவனிருக்க எனக்குச் சித்தமானால் உனக்கென்னவென்று சொன்னார்." யோவா. 21: 21-23. இவ்வசனத்தினால், ஆதியிலிருந்த சீஷர்கள், கிறிஸ்துவின் இரண்டாம் வருகையையும், மரணத்தையும், இரண்டு தனித்தனியான காரியங்களாக மதித்தார்களென்பது பிரத்தியக்ஷமாகிறது.

"ஆகையால் நீங்களும் ஆயத்தமாயிருங்கள், நீங்கள் நினையாத வேளையிலே மனுஷகுமாரன் வருவர்." (மத் 24: 44). "சிலர் இது மரணத்தை குறிக்கிறது என்று சொல்லுகிறார்கள். ஆனால் கர்த்தருடைய வார்த்தை அது மரணத்தை குறிக்கிறதில்லை என்று சொல்லுகிறது. சாவு நம்முடைய சத்துரு. மரணத்தின் திறவுகோல்களை நம்முடைய கர்த்தர் வைத்திருக்கிறார். அவர் மரணத்தையும், நரகத்தையும் பாதாளத்தையும் ஜெயித்தார். கிறிஸ்து ஜீவாதிபதி. அவர் இருக்குமிடத்தில் மரணமில்லை. அவர் வரும்போது மரணம் பறந்தோடுகிறது. அவர் தொட்டபோதும், பேசினபோதும் பிரேதங்கள் உயிரடைந்து குதித்தெழுந்தன. அவருடைய வருகை மரணமல்ல. அவரே ஜீவனும், உயிர்த்தெழுதலுமாயிருக்கிறார். அவர் தம்முடைய ராஜ்யத்தை ஸ்தாபிக்கும்போது நித்திய ஜீவனைத் தவிர, மரணமே இருக்காது."

கிறிஸ்து கடைசியாக தம்முடைய சீஷர்களுடனே பேசும்போது, "நான் போன பின்பு, உங்களை என்னிடத்தில் சேர்த்துக்கொள்ளும்படியாக, உங்களுக்கு மரணத்தை அனுப்புவேன்' என்றாரோ? இல்லவே இல்லை. 'நான் மறுபடியும் வந்து உங்களை என்னிடத்தில் சேர்த்துக்கொள்ளுவேன் என்றார். (யோவா. 14: 3). 'ஒருவன் மரிக்கும்போது அது அவனுக்கு கிறிஸ்துவின் வருகை என்பது சுத்த அபத்தமே.' 'ஏனெனில் கர்த்தர் தாமே...வருவார்' என்று பவுல் அப்போஸ்தலன் 1 தெச. 4: 16-ல் சொல்லுகிறார். கிறிஸ்துவின் வருகை நமது நம்பிக்கை (யோபு 19: 23-27); ஆனால் மரணம் பரிகரிக்கப்படும் கடைசி சத்துரு." (1 கொரி. 15: 26). ஆகையால் மரணம் கிறிஸ்துவின் வருகையைக் குறிக்கவே குறிக்காது.

ருஷ்யாவில் பஞ்சம்.

ருஷ்யாவில் 3 மாதம் ஏற்பட்ட பஞ்சத்தால் வெட்டுக்கிளிகள்கூட ஆகாரமில்லாமல் சாகிறதாம். பல குடும்பங்கள் கொஞ்ச மாவுக்காக அடிமைகளாகி வருகிறார்கள். எங்கும் கெட்ட நடத்தையும் புத்தி தடுமாட்டமும் ஏற்பட்டுவிட்டன. உணவின்றி 200 லக்ஷம் பேர்கள் சாகுந் தருணத்திலிருக்கிறார்கள்.

தற்கால யுத்தக் கப்பலின் கிரயம் சராசரி 23 கோடியே 44 லட்சம் ரூபாயாகிறது. அதை செய்வதற்கு இரண்டு வருஷமாகிறது. இப்படிப்பட்ட கப்பல் 10 வருஷம் உபயோகிக்கப்படக்கூடுமென்றெண்ணப்படுகிறது. இது அழிக்கப்பட்ட பிறகு இதற்குப் பதிலாக, இதைப் பார்க்கிலும் பெரிய கப்பல் செய்யப்படவேண்டியதாகும்.

நிகழ்கால சத்தியம்

வேத சன்மார்க்க சுகாதார விஷயங்களில் தற்கால அறிவுக்கொத்தபடி மனிதர் அபிவிருத்தியடைவதற்கென்று பிரசுரமாகும் ஓர் பத்திரிகை.

மதராஸ் அக்டோபர்மீ, 1921.

இப்பத்திரிகை, பெங்களூரிலிருக்கும், எஸ். டி. ஏ. பப்ளிஷிங்கவுஸ்காக, பட்டணத்தில் வெப்பேரி என்னுமிடத்திலுள்ள அல்பீனியன் அச்சாபீசில் அச்சடிக்கப்பட்டு வருகிறது.

பத்திராதிபர் பாஸ்றர், ஜி. ஜி. லேளரி.
உதவி ,, ,, ஈ. டி. தாமஸ்.

		ரூ.	அ.	ப.
தனிப்பிரதி ஒன்றுக்கு	...	0	1	6
வருஷ சந்தா, தபாற் கூலி உள்பட	...	1	0	0
சிங்கப்பூர் பினங்கு முதலிய வெளி ஊர்களுக்கு தனிப் பிரதி ஒன்றுக்கு	...	0	2	0
வருஷ சந்தா தபாற்கூலி உள்பட	...	1	4	0

இளவரசனின் சந்திப்புக்காக, இந்திய கவர்ண்மெண்டாருக்கு 20 லட்சம் ரூபாய் செலவாகுமென்றெண்ணப்படுகிறது. 'உன் தேவனை சந்திக்க ஆயத்தப்படு'வதற்கு உனக்கு எவ்வளவு செலவாகிறது?

ஐரோப்பிய ஆஸ்பத்திரிகளில் இப்பொழுது பிறக்கும் பாலர்கள் வஸ்திரப் பஞ்சத்தினல், நியூஸ் பேப்பர்களில் சுற்றப்படுகிறார்களாம்.

சமாசாரக் குறிப்புகள்.

ஜனக்கூட்டத்தை அழச்செய்தல்.

நியூயார்க் ஜூலை 20:-அமெரிக்க சேனாதிபதி ஒருவர், ஒரு புதிய கலகத்தை யடக்கும் இயந்திரம் கண்டுபிடித்திருக்கிறார். அதை நேற்று பிலடெல்பியா நகரில் பிரதிஷ்டை செய்து அதன் சக்தியை பரீட்சார்த்தமாக அந்த நிபுணர் காண்பித்தார். எப்படியெனில் 200 போலீஸ்காரர்களை ஒரு கலகக் கூட்டமாக பாவித்து நிறுத்தி, அவர்களை எதிர்க்க நாலைந்து போலீஸாரிடம் மேற்படி காற்று குண்டுகள் கொடுக்கப்பட்டன. சிறிது நேரத்திற்கெல்லாம் மேலே சொன்ன 200 பேருக்கு கண்ணிலிருந்து ஜலம் கொட்டிக் கொண்டேயிருந்தது. அவர்களுடைய உடுப்பும் புகைபட்டு மஞ்சள் நிறமாகிவிட்டது. ஆனல் புகையில் விஷமில்லை. இம்மாதிரிப் பெரிய கலகக் கூட்டங்களை மேற்சொன்ன காற்று குண்டுகளால் தாக்கினல் பலருக்கும் கண்ணிலிருந்து நீர் விழ ஆரம்பித்து ஒன்றுஞ் செய்யமுடியாமற் போய்விடும்; மஞ்சள் உடுப்புடன் ஓடுவோரைக் கண்டுபிடிப்பதும் சுலபமாயிருக்கும்.

மலையாள குழப்பம்.

மலையாளத்தில் மாப்பிள்ளைமார்களென்ற ஜாதியாரால் கொலையும் கொள்ளையும் களவும் அதிகமாய் ஏற்படுகின்றது. ஜனங்கள் பயந்து வீடுகளை விட்டோடுகிறார்கள். அதன் பயனாக பஞ்சம் அங்கே தலை காட்டுகின்றது. இப்போது ராணுவத்தாரால் கலகக்காரர்கள் தங்கள் தலைவர்களுடன் கைதியாக்கப்பட்டு வருகிறார்கள்.

இதுபோலவே, இந்தியா முழுதும், உலக முழுமையும் கலகமும் குழப்பமுமாகத் தானிருக்கிறது. இவைகள் இந்த உலகத்திற்கு ஏதோ சம்பவிக்கபோகிறதென்று காட்டுகிறதில்லையா? 'வெறித்தவனைப்போல தேசம் தள்ளாடி, ஒரு குடிலைப்போலப் பெயர்த்துப் போடப்படும்; அதின் பாதகம் அதின்மேல் பாரமாயிருக்கையால், அது விழுந்துபோம், இனி எழுந்திராது' அது தன் முடிவை சீக்கிரம் அடையப் போகிறபடியால், அப்பொழுது நாம் ரட்சிக்கப்படும்படி இப்பொழுது நமது பாவத்தை விட்டு விலகுவோமாக.

9 - NOV 1921

நிகழ்கால சத்தியம்.

Vol. X. மதராஸ்:—நவம்பர்மீ, 1921. No. 11.

ஓர் உபதேசியாரும் பல்லியும்

*சில தினங்களுக்குமுன் ஓர் கிறிஸ்தவ கிராமத்திலுள்ள ஓர் குடும்பத்தின் சகோ
தரர்க்குள்ளிருந்த குடும்ப வழக்குகளைப் பேசி முடிவு செய்யும்போது நானும் அவ்விடம்
வழக்காளிகளுடன் இருக்கவேண்டிய சந்தர்ப்பம் ஏற்பட்டது. வழக்கு முகத்தில் உபய
வாதிகள் தங்கள் வாக்குமூலத்தைச் சொல்லவும் வழக்காளிகள் தங்களுடைய பற்பல அபிப்
பிராயங்களை சொல்ல ஆரம்பித்தார்கள். அப்பொழுது வழக்காளிகளில் ஒருவர் தங்களுடன்
வந்திருந்த அத்தலத்து உபதேசியாரைப் பார்த்து ஐயா! உபதேசியாரவர்களே!! நாங்கள்
எங்கள் மனதில் தோன்றிய நியாயங்களை பலவாறு சொல்லக் கேட்டீர்களே, உங்கள்
அபிப்பிராயத்தையும் நீங்கள் இப்பொழுது சொல்லவேண்டாமா என்னவும்—உபதேசியார்,
நான் என்ன சொல்லுகிறது ஐயா, நான் இருவருக்கும் பொது மனுஷன். இருவரும்
எனக்கு வேண்டியவர்கள். அப்படியிருக்க நான் இந்தக் காரியத்தில் ஏதாவது ஒன்று என்
வாயால் சொல்லுகிறது சரியல்ல என்னவும், பக்கத்தில் ஓர் பழைய சுவரின் புதருக்குள்ளி
ருந்த ஓர் பசித்த பல்லி செத், செத்தென்று சத்தம்போட ஆரம்பித்தது. உடனே உப
தேசியார், ஐயா பார்த்தீர்களே! நான் சொன்னபடியே உத்தரவையும் பார்த்தீர்களா!!
அதுவும் அப்படித்தான் சொல்லுகிறது என்றார்!!!*

*இந்த வார்த்தைகள் என் காதில் விழுந்ததும் எனக்கு எப்படி யிருந்ததென்று உங்
களுக்குத் தெரியுமா? அதை என்னல் இப்பொழுது விஸ்தரிக்கவே முடியாது. அதுவோ
ஓர் பூர்வீக கிறிஸ்தவ ஊர்; அங்கே எத்தனையோ ஐரோப்பிய மிஷனரிகளின் ஸ்தாப
கங்கள் வருஷக் கணக்குகளாக உண்டு; ஆண் பெண்களின் உயர்தர கலாசாலையு முண்டு;
இவ்விருள் நிறைந்த பூலோகத்தில் ஜெகஜோதியாக உதித்த இயேசு பெருமானின் ஊழி
யத்தைச் செய்யும்படி அநேக உபதேசியார்களையும், குருக்களையும் பயிர்ச்சி செய்யும் ஓர்
விசேஷித்த கிராமமது. அவ்விடத்திலிருக்கும் ஓர் பெரிய உபதேசியார் இப்படி
பல்லியின் அரவத்தை மதித்து, அதற்கு அஞ்சுவாரானல், அவரின்கீழ் உபதேசிக்கப்படும்
ஜனங்களிடத்தில் வேறு எந்த விதமான குருட்டாட்டங்களான சகுனங்களெல்லாம் இராது
என்று எண்ணுகிறீர்கள். இதைப்போல் இன்னும் எத்தனையோ பட்டிகளிலும், பட்டணங்
களிலுமுள்ள கிறிஸ்தவ சபையாரும், உபதேசியாரும், குருக்களும் பல்லி சகுணம், தும்
மல், அஞ்சனம் பார்க்குதல், குறி கேட்குதல், முதலிய அநேக வழி பாடுகளுக்குள் விரை
வாய் வளர்ந்து வருகிறதையும்; நாட்களையும், மாதங்களையும், வருஷங்களையும் கவனிப்ப
தைப் பார்க்கும்போது பின்கூறிய வேத வசனம் நிட்சயமாகவே தற்காலத்துச் சபையாகிய
லவோதிக்கேயா சபையில் திட்டவட்டமாய் நிறைவேறி வருகிறதென்பதை ஐயமறச் சொல்
லலாம். நீ நிர்ப்பாக்கிய முள்ளவனும், பரிதபிக்கப்படத்தக்கவனும், தரித்திரனும், குருட*

னும், நிர்வாணியுமாயிருக்கிறதை அறியாமல், நான் ஐசுவரியவானென்றும், திரவிய சம்பன்னனென்றும், எனக்கு ஒரு குறைவுமில்லையென்றும் சொல்லுகிறபடியால்; நான் நீ ஐசுவரியவானாகும்படிக்கு நெருப்பிலே புடமிடப்பட்ட பொன்னையும், உன் நிர்வாணமாகிய அவலட்சணம் தோன்றாதபடிக்கு நீ உடுத்திக்கொள்வதற்கு வெண் வஸ்திரங்களையும் என்னிடத்திலே வாங்கிக்கொள்ளவும், நீ பார்வை யடையும்படிக்கு உன் கண்களுக்கு கலிக்கம் போடவும் வேண்டுமென்று உனக்கு ஆலோசனை சொல்லுகிறேன்." வெளி. 3: 17, 18.

'இப்படிப்பட்ட அருவருப்பான காரியங்களைப்பற்றி தேவன் தம்முடைய ஜனமாகிய இஸ்ரவேலருக்கு என்ன கட்டளை கொடுத்திருக்கிறார் என்பதை பின்கூறிய வசனங்கள் மூலமாய் நன்றாய் அறிந்துகொள்வோமாக.

"உன் தேவனாகிய கர்த்தர் உனக்குக் கொடுக்கும் தேசத்தில் நீ போய்ச் சேரும்போது, அந்தச் ஜாதிகள் செய்யும் அருவருப்புகளின்படி செய்யக் கற்றுக்கொள்ளவேண்டாம். தன் மகனையாவது தன் மகளையாவது தீக்கடக்கப்பண்ணுகிறவனும், குறி சொல்லுகிறவனும், நாள் பார்க்கிறவனும், அஞ்சனம் பார்க்கிறவனும், சூனியக்காரனும், மந்திரவாதியும், சன்னதக்காரனும், மாயவித்தைக்காரனும், செத்தவர்களிடத்தில் குறி கேட்கிறவனும் உங்களுக்குள்ளே இருக்கவேண்டாம்.—இப்படிப்பட்டவைகளைச் செய்கிறவன் எவனும் கர்த்தருக்கு அருவருப்பானவன்; இப்படிப்பட்ட அருவருப்புகளினிமித்தம் உன் தேவனாகிய கர்த்தர் அவர்களை உன் முன்னின்று துரத்திவிடுகிறார்.—உன் தேவனாகிய கர்த்தருக்கு முன்பாக நீ உத்தமனாயிருக்கக்கடவாய். நீ துரத்திவிடப்போகிற இந்த ஜாதிகள் நாள் பார்க்கிறவர்களுக்கும் குறி சொல்லுகிறவர்களுக்கும் செவி கொடுக்கிறார்கள்; நீ அப்படிச் செய்கிறதற்கு உன் தேவனாகிய கர்த்தர் உத்தரவு கொடார்." உபா. 18: 9-14.

அப்போஸ்தலனாகிய பவுல் கலாத்தியருக்கு சொல்லுகிற அடியிற் கண்ட புத்திமதியையும் பாருங்கள். "இப்பொழுதோ, நீங்கள் தேவனை அறிந்திருக்க, அல்லது தேவனாலே அறியப்பட்டிருக்க, பெலனற்றதும் வெறுமையானதுமான அவ்வழிபாடுகளுக்கு நீங்கள் மறுபடியும் திரும்பி, மறுபடியும் அவைகளுக்கு அடிமைப்படும்படி விரும்புகிறதெப்படி? நாட்களையும், மாதங்களையும், காலங்களையும் வருஷங்களையும் பார்க்கிறீர்களே. நான் உங்களுக்காகப் பிரயாசப்பட்டது வீணாய்ப்போயிற்றோ என்று உங்களைக்குறித்து பயந்திருக்கிறேன்." கலா. 4: 9-11.

இன்னும் 2 தீமோத்தேயு 3-ல் நாம் இருக்கப்பட்ட இக்கடைசிக் காலத்தின் தன்மையை நன்றாய் விஸ்தரித்துக் காட்டியிருக்கிறது. "மேலும், கடைசி நாட்களில் கொடிய காலங்கள் வருமென்று அறிவாயாக. தேவ பக்தியின் வேஷத்தைத் தரித்து அதின் பெலனை மறுதலிக்கிறவர்களாயும் இருப்பார்கள்; இப்படிப்பட்டவர்களை நீ விட்டுவிலகு." 2 தீமோ 3: 1, 5.

ஆகையால், இதை வாசிக்கும் என் அருமை சிநேகிதர்களே! நமது அருமை இரட்சகர் கல்வாரி சிலுவையில் சிந்தின இரத்தம் விருதாவாகப் போகாதபடி சகல அருவருப்புகளுக்கும் பிசாசின் உபதேசங்களுக்கும் வெகு தைரியமாய் எதிர்த்து நல்ல போராட்டம் போராடுவோமாக.

உண்மை உரைப்போன்.

---

9 - NOV 1921

சிருஷ்டிப்பு

CREATION.

இவ்வுலக சிருஷ்டிப்பைப்பற்றி, தற்காலத்தில் அநேக தப்பிதமான உபதேசங்கள் உபதேசிக்கப்படுகிறது. ஆனால் இவ்வுலகம், ஆறு நாட்களுக்குள்ளேயே தேவனால் சிருஷ்டிக்கப்பட்டதென்று சத்திய வேதம் தெளிவாய்ச் சொல்லுகிறது. (ஆதி. 1: யாத். 20: யும் பார்வையிடவும்) கடந்த ஆயிரக் கணக்கான வருஷங்களாக நமது முற்பிதாக்கள் இதுவே உண்மையென்று விசுவாசித்து வந்தார்கள், இக்காலத்திலுங்கூட அநேகர் சத்தியவேதம் சொல்வதே உண்மையென விசுவாசிக்கிறார்கள்; ஆனால், பெரும்பான்மையோர் சிருஷ்டிப்பைப்பற்றிய வேத உண்மையில் சந்தேகமுள்ளவர்களாயிருக்கிறார்கள். ஆகையினால் நாம் இந்தக் கேள்வியைப் படித்து இதனுண்மையை உணர்ந்துகொள்வோமாக.

"சிருஷ்டி" என்ற பதத்தின் அர்த்தமென்ன? அகராதியின்படி "ஓர் நிலைமைக்குக் கொண்டுவருதல்," "ஒன்றுமில்லாமையிலிருந்து உண்டுபண்ணுதல்" என்று அர்த்தப்படும். தேவன் இவ்வுலகத்தையும் அவற்றின் நிறைவுகளையும் ஒன்றுமில்லாமையினின்று உண்டுபண்ணினதில்லையென்று அநேக கல்விமான்கள் சொல்லுகிறார்கள். தேவன் இவைகளையெல்லாம் ஒன்றுமில்லாமையினின்று உண்டுபண்ணினார் என்று சொல்வதற்குப் பதிலாக, இவ்வுலகம் தன்னிலேயே சுயமாக நிலைபெற்றதென்று சொல்லுகிறார்கள். முதலில் இவ்வுலகமானது மிகவும் சிறியவையாய், அணுவை யொத்து நமது கண்களுக்குக்கூட புலப்படுவதற்கு கூடாமலிருந்ததெனவும், பின்பு அது வளர ஆரம்பித்து அநேக ஆயிர வருஷங்களுக்குப்பிறகு இப்போது நாம் காண்கிற அளவுக்கு பருமனாக வளர்ந்திருக்கிறதெனவும் சொல்லுகிறார்கள். ஆனால், ஆதியாகமம் முதலாமதிகாரத்தில், தேவன் பேசினாரென்றும், அவர் பேசிய மாத்திரத்தில் சகலமும் உண்டானதென்றும் நமக்குப் போதிக்கிறது. இப்போது இவ்வுலகம் எவ்வளவு பெரிதாயும் பளுவாயுமிருக்கிறதோ, இவ்வண்ணமே சிருஷ்டிப்பின் காலத்திலுமிருந்தது. (ஆதி. 1: 1; எபி. 11: 3 என்ற வசனங்களைப் பார்க்கவும்) மாம்பழமானது துவக்கத்தில் நுண்ணிய வித்திலிருந்து பெரியதாய் வளருகிறதுபோல, இவ்வுலகமும் இப்போதிருக்கிற நிலைமைக்கு வளர்ந்து வந்ததென்று, தத்துவ சாஸ்திரிகள் சொல்லுகிறது உண்மையானால், கடந்த 6,000 வருஷங்களாக இதன் பரிமாணத்தில் ஏன் யாதொரு மாறுதலும் உண்டாகவில்லை? மேலும், இவ்வுலகமானது ஒரு சிறு வித்திலிருந்தே இவ்வளவு பெரிதாக வளர்ந்து வந்திருக்கிறதென்று வைத்துக்கொண்டாலும், அவ்வித்துதான் எங்கிருந்து வந்தது? மனுஷ வல்லமைக்கு மேற்பட்ட ஓர் வல்லமை இதைச் செய்திருக்கவேண்டுமென்றே நாம் ஒப்புக்கொள்ளவேண்டும். இவ்வல்லமைதான் தேவன்.

சிருஷ்டிப்பின் வல்லமை மற்றெல்லா வல்லமைகளைப் பார்க்கிலும் பெரிதாயிருக்கிறது. இதற்கு மிஞ்சின வல்லமை கிடையாது. அதுதான் தேவனுடைய வல்லமையாயிருக்கிறது. தேவன் மாத்திரம்தான் ஒன்றுமிலாமையிலிருந்து சிருஷ்டிக்க வல்லவர். மனிதன் ஒரு மேசையைச் செய்யக்கூடும்; ஆனால் அவன் செய்வதற்கு வேண்டிய மரமும் சாமான்களும் அவசியமிருக்கவேண்டும். அவன் மரத்தை உண்டுபண்ணக்கூடுமா? கூடாது. ஏனெனில், மனுஷ வல்லமைக்கு ஓர் மட்டுண்டு; ஆனால் தெய்வ வல்லமைக்கோ முடிவில்லை. அதினால்தான் அவர் பொருட்களை சிருஷ்டிக்கக்கூடியவராயிருக்கிறார்; மனிதன் கூடாதவனாயிருக்கிறான்.

சுவிசேஷத்திலே எழுதப்பட்டிருக்கிற சிருஷ்டிப்பின் பாவனை, தத்துவ சாஸ்திரத்தோடு இசைந்திருக்கிறதில்லையென்று சிலர் சொல்லுகிறார்கள். சிருஷ்டிப்பின் வாலாறுகளை இச்சாஸ்திரமானது விளக்கிக்காட்டக்கூடாமலிருப்பதின் காரணத்தினால், சிருஷ்டிப்

யைப்பற்றிய வரலாறு தப்பிதமென சொல்லுகிறார்கள். ஆனால் இது உண்மையல்ல, சாஸ்திரமானது ஏற்கனவே நிலைத்திருக்கும் பொருட்களின் தன்மையை மாத்திரமே சொல்லக்கூடுமென்பதை நாம் முதலில் அறியவேண்டும். செடி கொடிகள் எப்படி வளருகிறதென்று சாஸ்திரம் சொல்லக்கூடும். அச்செடிகள் செழிப்பாய் பயிராகும்படி அவற்றிற்கு எவ்வகையான மண் அவசியமானதென்றும் சொல்லக்கூடும். இன்னும் அச்செடியில் என்ன தாதுப் பொருள்கள் இருக்கிறதென்றும், அச்செடி இன்னின்ன "வேலைக்கு பிரயோஜனமானவையென்றும் சொல்லக்கூடும். ஆனால், அச்செடியிலுள்ள ஜீவன் எவ்விட்த்திலிருந்து அதற்கு வருகிறதென்று அந்த சாஸ்திரத்தினால் சொல்லமுடியாது. வித்தானது பூமியில் நன்றாக ஊறிப் பக்குவமடைந்து பூமியிலிருந்து முளைத்துத் துளிர்விடுகிற இச்செயலுக்குக் காரணமாயிருக்கிற வல்லமையை விளக்கிக் காட்டவாவது அல்லது கண்டுபிடிக்கவாவது சாஸ்திரத்தால் முடியாது. என் முடியாது? ஏனென்றால் இதைக் கண்டுபிடிக்கும் இந்த வல்லமை மனுஷனுக்குக் கொடுக்கப்படவில்லை. அப்படியே உலக சிருஷ்டிப்பைப்பற்றிய காரியத்திலும், இந்த அறிவு மனுஷனுக்கில்லை. மனிதர் இப்பூமியின் அளவுப் பிரமாணத்தைக் கணித்துச் சொல்லக்கூடும்; இன்னும் இப்பூமியானது எத்தனைவித பூதப் பொருட்களைக்கொண்டு உண்டாக்கப்பட்டிருக்கின்றனவென்றும் சொல்லக்கூடும். ஆனால் அப்பொருட்கள் எவ்விதம் உண்டாக்கப்பட்டனவென்று 'விவரிக்க சாஸ்திரத்துக்குச் சக்தியில்லை. ஆகவே, 'மனுஷ ஞானத்துக்கும் வல்லமைக்கும் ஓர் மட்டு உண்டென்று நன்கு புலப்படுகின்றது. கடந்து அப்புறம் செல்லக்கூடாத ஓர் எல்லையும் சாஸ்திரத்துக்கு உண்டு.

இப்பூமி எப்படி உண்டாக்கப்பட்டது என்று சொல்லத் திராணியற்றிருப்பவர்கள், பூமி இன்னின்னவிதமாய் சிருஷ்டிக்கப்பட்டது என்று சொல்லுகிற சத்திய வேத உண்மையை எப்படி மறுக்கக்கூடும்? இன்னும், வெறும் வார்த்தையினால் மாத்திரம், இப்பூமியைச் சிருஷ்டிக்க, தேவனால் கூடாமலிருந்தது என்று, அவர்கள் எப்படிச் சொல்லக்கூடும்?

சிருஷ்டிப்பின் தொழிலை சாஸ்திரத்தைக்கொண்டு ஒருகாலும் 'விளக்கிக்காட்ட இயலாது. ஜீவ நிலையின் ரகசியத்தை சாஸ்திரம் எப்படி விளக்கிக்காட்ட முடியும்? ஆண்டவர் இப்பூமியை ஓர் நிலைமைக்குக் கொண்டுவந்தபோது, யாதொரு துணைக் கருவிகளும் அஸ்திபாரமுமின்றியே உண்டாக்கினார். நம்முடைய உலக சிருஷ்டிப்பில், தேவன் முன்னமேயே நிலைத்திருந்த பொருளின்மேல் அவர் சார்ந்திருக்கவில்லை. அவருடைய வாயிலிருந்து வார்த்தை புறப்பட்டவுடனே, காணக்கூடியதும் காணக்கூடாததுமான சகல பொருட்களும் அவர் முன் நின்றது. பரலோகங்களும் அவைகளிலுள்ளவைகளும், பூமியும் அதன் சகல நிறைவும் அவருடைய நித்திய வார்த்தைக்கு கீழ்படிந்து நிலைநின்றன. "கர்த்தருடைய வார்த்தையினால் வானங்களும், அவருடைய வாயின் சுவாசத்தினால் அவைகளின் சர்வ சேனையும் உண்டாக்கப்பட்டது." சங். 33: 6.

அப்படியானால், இதை யெப்படி விளக்கிக் காட்டுவீரென்று சிலர் கேட்கலாம்; அதற்கு நாஙகள் சொல்லும் மறுமொழியாவது: நாம் இதை விளக்கிக் காட்டவே முடியாது. நாங்கள் அதன் உண்மைகளை மட்டும் படித்து மற்றதை தேவனுக்கே விட்டுவிடுகிறோம். ஏனென்றால் தேவன், தம்முடைய வல்லமையினாலேயே இப்பொருட்களெல்லாம் உண்டுபண்ணப்பட்டது என்று நமக்கு வெளிப்படுத்தியிருக்கிறார். இப்போது இவ்வளவுமாத்திரம் அறிந்துகொள்வது அவருடைய பிள்ளைகளுக்கு போதுமானதாயிருக்கிறது. புதிய பூமியில் இக்கருகலான விஷயங்களெல்லாம் நமக்குப் பூரணமாக விளக்கிக் காண்பிக்கப்படுமென்பதற்குச் சந்தேகமில்லை.

நாம் தேவனை பூரணமாய்க் கண்டுபிடிக்க முடியாவிட்டாலும் அதினால் நாம் தேவனுடைய கிரியைகளைப்பற்றி கற்றுணர்ந்துகொள்வதில் அலட்சியமுள்ளவர்களாயிருத்தல்

கூடாது. ஏனெனில் தேவனுடைய கரங்களின் கிரியைகளில் அவருடைய வல்லமை வெளிப்படுத்தப்பட்டிருக்க நாம் காண்கிறோம். "வானங்கள் தேவனுடைய மகிமையை வெளிப்படுத்துகிறது, ஆகாய விரிவு அவருடைய கரங்களின் கிரியையை அறிவிக்கிறது. பகலுக்குப் பகல் வார்த்தைகளைப் பொழிகிறது, இரவுக்கு இரவு அறிவைத் தெரிவிக்கிறது. அவைகளுக்குப் பேச்சுமில்லை, வார்த்தையுமில்லை, அவைகளின் சத்தம் கேட்கப்படுவதுமில்லை. ஆகிலும் அவைகளின் சத்தம் பூமியெங்கும், அவைகளின் வசனங்கள் பூச்சக்கரத்துக் கடைசிவரைக்கும் செல்லுகிறது; அவைகளில் சூரியனுக்கு ஒரு கூடாரத்தை ஸ்தாபித்தார்." சங். 19: 1-4. தேவன் இருந்தார் இருக்கிறார் இருப்பார் என்ற இந்த உண்மையை, இவைகளில் வெளிப்படுத்தப்பட்டிருக்கிற அவருடைய வல்லமை நம்முடைய இருதயத்திலும் மனதிலும், மற்றெதைக்காட்டிலும் நன்றாய்ப் பதியச் செய்கிறது.

ஜி. ஜி. லௌரி.

தேவன் சாத்தானை உண்டாக்கினாரா?

(DID GOD CREATE SATAN)

தேவன் தூதர்களை மற்ற சிருஷ்டிகளைப்போலவே சாகுந் தன்மையுடையவர்களாக சிருஷ்டித்தாரென்று பார்த்தோம். இவர்கள் பாவமற்றவர்களாக சந்தோஷமான நிலைமையிலிருந்தார்கள். இவர்கள் வகுப்புவகுப்பாகப் பிரிக்கப்பட்டு இருந்தார்கள். கேருபீன்கள் (ஆதி. 3: 24) சேராபீன்கள் (ஏசா. 6: 2-6) என்பது இவர்களுடைய வகுப்புகள். இவர்களுக்குள்ளே பிரதான தூதன் ஒருவர் இருந்தாரென்றும் வெளிப்படுகிறது. இது இவர்களுடைய அதிபதி. இவர் வேதத்தில் சேனாதிபதி என்று அழைக்கப்படுகிறார். இந்த அதிபதிக்குப் பேர் மிகாவேல். யூதா 9. மிகாவேல் என்றால் தேவனைப்போலிருப்பவர் என்று அர்த்தமாம். இவர் யாரென்றால், தேவனுடைய குமாரனாகிய இயேசு கிறிஸ்துவே. எப்படியெனில், மிகாவேல், அதிபதியென்றும் (தானி. 12: 1); அதிபதி, கிறிஸ்து என்னும் (அப். 3: 15); கிறிஸ்து, பிரதான தூதனென்றும் (1 தெச. 4: 16); பிரதான தூதன், மிகாவேல் என்றும் (யூதா. 9.) மேற்கண்ட வாக்கியங்களில் சொல்லப்பட்டிருக்கிறது. கிறிஸ்துவுக்குமட்டும் மரித்தோரை எழுப்பும் அதிகாரத்தை பிதா கொடுத்திருக்கிறார். யோவான் 5: 25 பிரதான தூதனுடைய எக்காள சத்தத்தினாலே மரித்தோர் உயிரடைவார்கள் என்று 1 தெச. 4: 16-ல் சொல்லப்பட்டிருக்கிறது. ஆகையினால் பிரதான தூதன் கிறிஸ்துதானென்று தெரிகிறது. சுருக்கிச் சொல்லப்போனால், கிறிஸ்துவானவர், மிகாவேல், பிரதான தூதன், சேனையின் அதிபதி என்ற பெயர்களால் அழைக்கப்படுகிறார் என்று சொல்லலாம். ஏன் இப்படி அழைக்கப்படுகிறாரென்பதை பின்னால் பார்ப்போம்.

தேவனைப்போலிருக்கிறவர் என்று அர்த்தங்கொள்ளும் மிகாவேல் என்ற பேரையுடைய கிறிஸ்து, சகல விஷயத்திலும் பிதாவுக்கு சமானமானவர். பிதாவின் தற்சுரூபமானவர். இவரும் பிதாவும் தன்மையிலும், குணத்திலும், நோக்கத்திலும் ஒத்திருக்கிறார்கள். இந்தக் கிறிஸ்துவுக்கு அடுத்தவன் லூசிபர். (விடிவெள்ளி ஏசா. 14: 12) இவனைத் தேவன் மற்ற தூதர்களைப்பார்க்கிலும் அதிகக் கனத்தினாலும் மகிமையினாலும் முடி சூட்டியிருந்தார். இவன் கேருபீன்களில் ஒருவன். இவனைக்குறித்து "நீ விசித்திரமாய்ச் செய்யப்பட்ட முத்திரை மோதிரம்; நீ ஞானத்தால் நிறைந்தவன்; பூரண அழகுள்ளவன் நீ தேவனுடைய தோட்டமாகிய ஏதேனில் இருந்தவன்; பத்மராகம், புஷ்பராகம், வைரம், படிகப்பச்சை, கோமேதகம், யஸ்பி, இந்திரநீலம், மரகதம், மாணிக்கம் முதலான சகலவித ரத்தினங்களும் பொன்னும் உன்னை மூடிக்கொண்டிருக்கிறது; நீ சிருஷ்டிக்கப்பட்ட

நாளில் உன் மேள வாத்தியங்களும் உன் நாகசுரங்களும் உன்னிடத்தில் ஆயத்தப்பட்டிருந்தது.—நீ காப்பாற்றுகிறதற்காக அபிஷேகம் பண்ணப்பட்ட கேருப்; தேவனுடைய பரிசுத்த பர்வதத்தில் உன்னை வைத்தேன்; அக்கினி மயமான கற்களின் நடுவே 'உலாவினாய்'' என்று எசே. 28: 12-14-ல் சொல்லப்பட்டிருக்கிறது. கிருபாசனத்தின் இருபக்கங்களிலுமிருந்த இரண்டு தூதர்கள் யாரென்றால், பிதாவின் வலது பாரிசத்தில் நிற்கிற இயேசுவும், இடது பாரிசத்தில் நின்ற லூசிபருமே. ஆகையினால் இவன் 'அபிஷேகம் பண்ணப்பட்ட கேருப்' என்று அழைக்கப்படுகிறான்.

தேவன் அன்பாயிருந்தார். இப்பொழுது அவர் அன்பாகவே இருக்கிறார். எப்பொழுதும் அவர் அன்புள்ளவரே. அந்த அன்புள்ள அவருடைய ஆளுகையினாலே பரலோகம் சந்தோஷத்தில் மூழ்கியிருந்தது. தூதர்களுடைய அன்பின் வணக்கம் ஆண்டவருக்கு அதிகமாய் கனத்தையும் மகிமையையும் கொடுத்தது மட்டுமல்ல, தூதர்களுக்குள்ளே பேரின்பத்தையும் உண்டாக்கினது. இவ்வளவு பாக்கியமான நிலைமையிலிருக்கும் சமயத்தில், ஐயோ! ஓர் மாறுதல் நேரிட்டது.

இச்சமயத்தில் பூமி உண்டாக்கப்படவில்லை. இந்தப் பூமியை உண்டாக்குமுன்னதாக பரலோகத்தில் ஓர் கூட்டம் நடந்தது. பரமசேனைகளெல்லாம் வந்து கூடினது. குமாரனும் லூசிபரும் வந்திருந்தார்கள். குமாரன் பிதாவோடுகூட சிங்காசனத்தில் வீற்றிருந்தார். அப்பொழுது, பிதா தேவதூதர்களுக்கு முன்பாக: குமாரன் தமக்கு சமமானவர் என்றும்; அவருடைய சமூகம் எங்கே இருக்குமோ அங்கேயெல்லாம் தம்முடைய சொந்த சமூகம் இருக்கிறதற்குச் சரி என்றும்; தம்முடைய கட்டளைகளுக்கு கீழ்ப்படிகிறதுபோல, அவருடைய கட்டளைகளுக்கெல்லாம் கீழ்ப்படியவேண்டுமென்றும்; தமக்குரிய சகல அதிகாரமும் குமாரனுக்கு உண்டென்றும்; தாம் உண்டாக்கப்போகிற இந்த உலக சிருஷ்டிப்பில் தம்மோடுகூட அவர் சேர்ந்து வேலை செய்வாரென்றும்; தம்மாலேயல்லாமல் குமாரன் தானே ஒன்றும் செய்யமாட்டாரென்றும் சொல்லி அவரை அபிஷேகம் பண்ணி மகிமைப்படுத்தினார். உடனே தூதர்களெல்லாரும் கிறிஸ்துவுக்குக் கொடுக்கப்பட்ட அதிகாரத்தையும், மகத்துவத்தையும் அங்கிகாரம் பண்ணி வணக்கமாய் விழுந்து நமஸ்கரித்தார்கள். (எபி. 1: 4-6) லூசிபரும் மற்றவர்களோடுகூட அவரை வணங்கினான். பிறகு பிதாவும் குமாரனும் ஆலோசனை செய்யப் போய்விட்டார்கள். தேவனுடைய ஆலோசனையில் பங்குபெற அங்கிருந்த லூசிபருக்கு இடங் கொடுக்கப்படவில்லை. என்றாலும், தேவன் இவனை மற்றவர்களுக்குள்ளே மதிப்புள்ளவனாக உண்டாக்கியிருந்தார், இவர்களும் இவனை கண்ணியமாக எண்ணிவந்தார்கள். இப்படிப்பட்ட உன்னத ஸ்தானத்திலிருந்த இவன், யாதொரு காரணமின்றி, திருப்தியற்றவனாகி, குமாரனுக்கு தன்னைப்பார்க்கிலும் கிடைத்திருக்கிற மேலான சிலாக்கியம், தான் ஏன் அடையக்கூடாது; கிறீஸ்து தனக்கு முன்பாக இவ்வளவு தூரம் ஏன் மகிமைப்படவேண்டும்? என்ற சிந்தனைகள் அவன் மனதில் உதித்தன. உடனே பிதாவின் சமூகத்தை விட்டு, கிறிஸ்துவுக்கு விரோதமாய் புறப்பட்டுப் போனான். போய், தூதர்களை கூடிவரச்செய்து, அவர்களைப் பார்த்து, 'என்னை மதியாமல் தேவன் இயேசுவை உயர்த்தினார். இதனாலே நாம் அநுபவித்த சுயாதீனம் ஒழியப்போகிறது; இனிமேல் அவருடைய கட்டளைகளுக்கு கீழ்ப்படிந்து அடிமைகளாகி, நம்முடைய சுயாதீனத்தை நாம் இழக்கக்கூடாது; நான் உங்களைத் தகுந்தவிதமாய் ஆளக்கூடும்.' என்று சொன்னான். உடனே தேவதூதர்களுக்குள்ளேயும் திருப்தியின்மை உண்டாயிற்று. கொஞ்சங்குறைய பாதிப்பேர் லூசிபரோடே சேர்ந்துகொண்டார்கள். தேவகுமாரனாகிய கிறிஸ்துவை உயர்த்தினதின் நோக்கத்தை அறியாமல், அவருடைய அதிகாரத்திற்கு விரோதமாக கலகம் பண்ண ஆரம்பித்தார்கள்.

உண்மையுள்ள தூதர்களோ, கலகக்குணமுள்ள இந்த தூதனை ஒப்புரவாக்கப் பிரயாசப்பட்டார்கள். குமாரனுக்கு இவ்வளவு மகிமையைக் கொடுத்தது நீதிதானென்றும், அதினாலே லூசிபருடைய மகிமை குறையவில்லையென்றும் எடுத்துச் சொன்னார்கள். தூதர்கள் சிருஷ்டிக்கப்படுமுன்னே இயேசு இருக்கிறார்; அவர் எப்பொழுதும் தேவனுடைய வலது பக்கத்திலே நிற்கிறார்; அவருடைய அதிகாரம் நமக்கு சந்தோஷத்தைக் கொடுக்கும் என்றும் விவரித்துக்காட்டினார்கள். இவ்விதமாக, லூசிபர் தன்னுடைய துன்மார்க்க எண்ணத்தை ஒழித்து, சீர்பொருந்தும்படி அவனை ஏவினார்கள்.

என்றாலும் லூசிபர் இவர்களுக்குச் செவி கொடுக்கவில்லை. இந்த நல்ல தூதர்களை தேவனுடைய அடிமைகளென்றும், தன்னோடு சேர்ந்தவர்களுக்கு ஓர் நல்ல ராஜ்யத்தை ஏற்படுத்தி, தேவனைப்பார்க்கிலும் அவர்களை வெகு நேர்த்தியாய் ஆளக்கூடுமென்றும், இன்னும் மற்ற தூதர்களையும் தன் பக்கத்திற்கு இழுத்துக்கொள்ளமுடியுமென்றும் தன்னோடு சேர்ந்த தூதர்களுக்குச் சொன்னான். மறுபடியும் அந்த நல்ல தூதர்கள், தேவனுக்கு எதிர்த்து நிற்பதால் வரும் பலன் என்ன என்பதையும்; தூதர்களை உண்டாக்கினவருக்கு அவர்களை அழிக்கும் வல்லமை உண்டென்பதையும் அவனுக்கு எச்சரிப்பாகச் சொல்லி, தான் எண்ணின கெட்ட எண்ணத்துக்காக ஆண்டவரிடத்தில் மன்னிப்பு பெறும்படியாகவுந் தூண்டினார்கள். ஆனால் இந்த கலகக்காரன், அப்படிச் செய்தால் தன்னுடைய மகிமை போய்விடுமென்றும், தனக்குக் கிடைத்திருந்த அந்த இடம் மறுபடியும் கிடைக்காதென்றும், ஆண்டவரிடத்தில் போய் மன்னிப்புக் கேட்டாலும் அவர் மன்னிக்கமாட்டாரென்றும், இன்னும் பலவிதமாய்ச் சொல்லி கலகம் பண்ணிக்கொண்டேயிருந்தான்.

இப்படிப்பட்ட காரியம் நடக்கும்போது, பிதாவும் குமாரனும் இதைப்பற்றி ஆலோசனை செய்துகொண்டிருந்தார்கள். தேவன், உடனே இதை ஒழித்திருக்கக்கூடும். ஆனால் அப்படிச் செய்வது அவருடைய சித்தமல்ல. இதில் ஒவ்வொரு தூதர்களும் சுயாதீனமுள்ளவர்களாய், தனக்குப் பிரியமானதைச் செய்ய இடங் கொடுத்தார். இன்னும் இவனைத் தண்டியாமல் தவணை கொடுத்திருந்தார். ஆனால் கலகம் அதிகமதிகமாய் அதிகரித்தது. இந்தக் காரியத்தைக்குறித்து விசாரிக்க, தேவதூதர்களெல்லாரும் கூட்டப்பட்டார்கள். அப்படி வந்து கூடியிருக்குஞ் சமயத்தில், தேவன் இயேசுவை உயர்த்தினது தனக்குப் பிரியமல்லவென்றும், இயேசுவோடுகூட தேவனுடைய ஆலோசனையில் தான் பங்குபெறவேண்டுமென்றும் லூசிபர் ஆங்காரமுள்ளவனாய்ப் பேசினான். தேவனோ அது அப்படி ஆகாது என்றும், லூசிபர் சாத்தானாகிப் பரலோகத்திலிருக்க தன்னை அபாத்திரனாக்கிக் கொண்டானென்றும் சொன்னார். உடனே சாத்தான் எதிர்த்துப் பேசி: "என்னோடுகூட சேர்ந்தவர்களையும் தள்ளிவிடுவீரோ? நான் கிறிஸ்துவோடு எதிர்த்து நின்று போராடுவேன்'' என்று கர்வமாய்ப் பேசினான். இவனுக்கும் இவனைச்சேர்ந்த தூதர்களுக்கும் தவணையின் காலம் கொடுத்து இவர்களை சீர்பொருத்தும்படி பார்த்தார். ஆனால், லூசிபரும் அவனோடு சேர்ந்திருந்த பரம சேனையின் மூன்றிலொருபங்கும் பரிசுத்த ஆவியை ஓயாமல் துக்கப்படுத்தி, பாவஞ் செய்வதில் தைரியங்கொண்டு, மனசாட்சியற்றவர்களாய் மன்னிக்கப்படாத பாவத்தைச் செய்துகொண்டு வந்தார்கள்.

இன்னும் தேவனுடைய தூதர்களுக்கு தேவனுடைய பிரமாணம் வேண்டியதில்லையென்று சொல்லி சட்டத்தையும் மீறி தேவ துரோகியானான். லூசிபராயிருந்த அவன் இப்பொழுது சாத்தானாகிவிட்டான். ஆண்டவர் அவனை லூசிபராக சிருஷ்டித்திருந்தார். யாதொரு காரணமுமின்றி, தன் மனமேட்டிமையினால் தன்னைத்தானே சாத்தானாக்கிக் கொண்டான். சாத்தான் என்றால் எதிராளி, சத்துரு, குற்றஞ் சாட்டுகிறவன் என்று அர்த்தப்படும். இதுவரைக்கும் கடவுள் இரக்கத்தைக் காட்டி பொறுமையாயிருந்தார். இப்படி அவன் சாத்தானானவுடனே, அவன் பரலோகத்தை விடவேண்டியதாயிருந்தது. பரலோகம் அவனையும் அவனோடிருந்தவர்களையும் ஏற்றுக்கொள்ளக்கூடாதிருந்தது. உடனே யுத்தம் ஆரம்பித்தது.

V. D. கோவிற் பிள்ளை.

வாத்தை பருக்கவைக்கும் ஓர் விதம்.

STUFFING THE GOOSE.

ஓர் வாத்து நன்றாய்ப் பருக்கவேண்டுமானால், அதை நன்றாய்ப் போஷிக்கவேண்டும். இதுதான் செம்மையான வியாபார ஒழுங்கு. ஆனால் ஒரு வாத்து சுபாவீகத்துக்குமேல் பருமனாகவேண்டுமென்று பசைபோன்ற ஓர்வித மருந்தை அதின் வாயினுட் செலுத்தி ஜெர்மானிய வர்த்தகர் தக்க லாபம் அடைகிறார்கள். லாபமடைவதற்கு கண்டுபிடிக்கப்பட்ட அநேக வழிகளில் இதுதான் அதிசீக்கிரத்தில் பலனைத் தருகிறதாயிருக்கிறது. முன்னான காலங்களில் அவர்கள் செய்துவந்த வழி வகைகள் மிகவும் தாமதமானதாயிருந்தது. மேலும் வர்த்தகர்களுக்கு சரியான பணாபலனைத் தந்தது மில்லை. இதைப்போலொத்த லாபம் சம்பாதிக்கும் வகைகள் அநேக முண்டு. ஆனால் அவைகளின் நோக்கம் எல்லாம் ஒன்றுதான். அதாவது: நியாயமாய்ச் சம்பாதிக்கிற லாபத்தைவிட அளவுக்கதிகமாய்ச் சம்பாதிக்கவேண்டுமென்பதுதான். இப்படி அவன் தந்திரமாய் வியாபாரம் செய்து பணம் சம்பாதித்தவுடன் அவன் தனக்குள்ளே நகைக்கிறான். ஆனால் அது மதிகேடான நகைப்பாயிருக்கிறது. தேவன் இருக்கிறார் என்பதை அவன் மறந்துபோகிறான்.

"இப்படிக்கொத்த கள்ளத்தனமான வர்த்தகங்களுக்கு விரோதமாக சட்டங்களுண்டாயிருக்கவேண்டும்." அப்படி யிருக்குமானால் அந்த அநியாய வாதிகளை அவைகள் தடுத்துக்கொள்ளும். ஆனால் ஒரு பிரமாண மிருக்கிறது; அது தேவன் தாமே கொடுத்த பிரமாணம் என்பதை அந்தக் கள்ள வர்த்தகன் அறியாதே போகிறான்; அது இரண்டு வார்த்தைகளடங்கிய ஓர் சிறிய பிரமாணம். ஆனால் இது நம்பிக்கை மோசத்திற்கும், வாத்துகளை கள்ளத்தனமாய் பருக்கவைக்கும் இவ்வித நியாய துரோகத்திற்கும், மேலாக பெரிதாயிருக்கிறது. "களவு செய்யாதிருப்பாயாக" என்பதே அப்பிரமாணம். பத்துக் கற்பனைகளுக்குள் இது மிகவும் சிறியது. ஆனால் அதை அறியாதிருப்பவர்கள் அபூர்வம். நரமாம்ச பட்சணிகளும், காட்டுத்தனமுள்ள மனுஷருங்கூட இக்கற்பனையை வேத போதகர்கள் மூலமாய், நமது தேசங்களுக்கு அதிக தொலைதூரத்திலிருந்து சீக்கிரம் கற்றுக்கொள்ளுகிறார்கள். ஆனால் எவ்வளவு சீக்கிரம் மனுஷர் இதை மறந்துவிடுகிறார்கள்! தன்னயத்தையா, நேர்மையான வியாபாரத்தில் மோசம் பண்ணும் விதத்தையா, மோசமானவிதமாய் வாத்துகளை கொழுக்கவைக்கும் வகையையா மறக்கிறார்கள்? இல்லை. இவைகளை ஒருபோதும் மறந்துபோகிறதேயில்லை. ஆனால் தேவனையும், அவருடைய கற்பனையையும், சத்திய வசனத்தையும், அவருடைய நியாயத்தீர்ப்பையும் முற்றிலுமாய் மறந்துபோகிறார்கள். இப்படியாய் அந்தக் கள்ள வியாபாரி தன்னுடைய பணப்பையைப் பார்த்து நகைக்கிறபோது, அப்படிப்பட்டவனை பழைய சுகிர்த புத்தகமானது, முன் பார்வையில்லாத ஒரு மந்தமான பட்சிக்கு அவனை ஒப்பிடுகிறது. "அநியாயமாய் ஐசுவரியத்தைச் சம்பாதிக்கிறவன் முட்டையிட்டு அவயங் காத்தும் குஞ்சு பொரிக்காமற்போகிற கவுதாரிக்குச் சமானமாயிருக்கிறான்; அவன் தன் பாதி வயதிலே அதை விட்டு, தன் முடிவிலே மூடனாயிருப்பான்." எரே. 17: 11.

நியாயத்தீர்ப்பென்று ஒரு விஷயம் நமக்கு இராவிட்டால், இந்தக் கற்பனைகளை மறந்துபோவதினால் அவ்வளவு பயங்கரமான அபாயம் நேரிடமாட்டாது. ஆனால் தேவன் ஒருவர் உண்டென்பது எவ்வளவு நிச்சயமோ, அப்படியே மனுஷனை அவன் கிரியைகளுக்குத் தக்கதாக நியாயந் தீர்க்கும்படி அவர் குறித்திருக்கும் நாள் ஒன்றுண்டு என்பதும் நிச்சயம். ஒருவன் அநியாய லாபத்தை சிறிது காலத்துக்குமட்டும்தான் சம்பாதிப்பான்; ஆனால் நியாயத்தீர்ப்பில் அவனுக்கு அவசியமாய்த் தேவையானது நீதியேயாம். ஞானியானவன், வாத்துகளை கள்ளத்தனமாய் பருக்கும்படி செய்வது பலனற்றதென்றும் ஒழுங்கற்றமுறையினால் சீக்கிரத்தில் பணத்தைச் சேர்ப்பது அடாதது என்றும் அறிந்திருக்கிறான். "கோபாக்கினையின் நாளில் ஐசுவரியம் உதவாது நீதியோ மரணத்திற்கு தப்புவிக்கும்." நீதி. 11: 4.

தேவ கோபாக்கினையின் மகா நாள் அதிவேகமாய்த் தீவிரிக்கிறது. கள்ளத்தனமாய் திரவியம் சேர்த்தலானது கடைசி நாளுக்குறிய ஓர் அடையாளமாக யிருக்கிறது. "பர்வதத்தில் கொழுத்தவர்களை அடிக்கும் நாளிலே," "கடைசி நாட்களிலே," மனிதர் திரவியத்தைக் குவித்துவைத்து, "சம்பிரமமாய் வாழ்ந்து," தங்கள் இருதயங்களை சுபபோக உல்லாசங்களினால் நிரப்புகிறார்கள். யாக்கோபு 5: 1—6. இக்காலமே நாம் பொறுமையுடனிருந்து, கர்த்தராகிய இயேசுக் கிறிஸ்துவின் வருகைக்கு எதிர்பார்த்துக்கொண்டிருக்கவேண்டிய காலம்.

A. N. A.

தேவன் பொய் சொன்னாரா?

DID GOD LIE?

ஜாயிஸ் (Joyce) என்ற ஓர் சிறுமி இருந்தாள். அவளுக்கு வயது பத்து. அவள் தாய் கிறிஸ்தவ சபையின் ஓர் அங்கமாயிருந்தும், இச்சிறு பெண் ஞாயிற்றுக்கிழமைகளில் வேத பாட வகுப்புகளுக்கு அடிக்கடி அனுப்பப்படவில்லை. என்றாலும், வகுப்புக்குச் சென்ற சொற்ப தினங்களுக்குள், தேவனுடைய நியாயப்பிரமாணமாகிய பத்துக் கற்பனைகளை நன்றாய்க் கற்றுக்கொண்டாள்; அவைகளில் சிலவற்றை மனப்பாடமாகவும் சொல்லுவாள். ஒரு நாள் தன் தாயாரைப் பார்க்க வந்திருந்த ஒரு ஸ்திரீ "வாரத்தின் ஏழாம் நாள் ஓய்வு நாள் அல்ல" என்பதாய் சம்பாஷித்துக்கொண்டிருக்கக் கேட்டு, அப்பெண் அதிக ஆச்சரியப்பட்டாள். அந்த ஸ்திரீ போன பிறகு அச்சிறுமி தன் தாயை உற்று நோக்கி: "அம்மா, வேதாகமத்தில் பத்துக் கற்பனைகள் எழுதியிருக்கும் இடத்தை எடுத்து எனக்குக் கொடுப்பீர்களா?" என்று கேட்டாள்.

அப்படியே அவளும் தன் மகள் சொல்லுக்கிணங்கி யாத்திராகமம் இருபதாம் அதிகாரத்தை எடுத்து அவளுக்குக் கொடுத்தாள். அப்போது ஜாயிஸ் என்பவள் அதைத் தன் இருகரங்களிலும் வாங்கி, முதல் வாக்கியத்தை வாசிக்க ஆரம்பித்தாள். "தேவன் பேசிச் சொல்லிய சகல வார்த்தைகளுமாவன" என்று மெதுவாய் சில வசனங்களை வாசித்தாள்; அவள் எட்டாம் வசனத்தின்மட்டும் வந்தபோது, சற்று நிறுத்தி தன்னை யறியாமலே உரத்த சத்தமிட்டு பின்வருமாறு சொல்லுகிறாள்:—"அம்மா! ஓய்வுநாளைப்பற்றியது இதோ இங்கிருக்கிறது! நான் வாசிக்கையில் இதனைச் சற்று கவனியுங்கள்." ஓய்வுநாளைப் பரிசுத்தமாய் ஆசரிக்க நினைப்பாயாக; ஆறு நாளும் நீ வேலை செய்து, உன் கிரியைகளையெல்லாம் நடப்பிப்பாயாக; ஏழாம் நாளோ உன் தேவனாகிய கர்த்தருடைய ஓய்வு நாள்; அதிலே நீயானாலும், உன் குமாரனானாலும், உன் குமாரத்தியானாலும், உன் வேலைக்காரனானாலும், உன் வேலைக்காரியானாலும், உன் மிருக ஜீவனானாலும், உன் வாசல்களிலிருக்கிற அந்நியனானாலும், யாதொரு வேலையும் செய்யவேண்டாம். கர்த்தர் ஆறு நாளைக்குள்ளே வானத்தையும் பூமியையும் சமுத்திரத்தையும் அவைகளிலுள்ள எல்லாவற்றையும் உண்டாக்கி, ஏழாம் நாளிலே ஓய்ந்திருந்தார்; ஆகையால், கர்த்தர் ஓய்வுநாளை ஆசீர்வதித்து, அதைப் பரிசுத்தமாக்கினார்."

தேவன் எப்போதும் உண்மையுள்ளவராக விளங்கட்டும்.

"ஏன் அம்மா, வேதாகமம் ஏழாம் நாள்தான் ஓய்வு நாளென்று சொல்லுகிறது; ஆனால் அன்றைக்கு நம் வீட்டிற்கு வந்தவர்கள் சொன்னது உண்மையாயிருக்குமானால், ஏழாம் நாள் ஓய்வுநாளல்லவே அப்படியானால், தேவன் பொய் சொல்லியிருக்கிறார், அப்படியா அம்மா?"

இதை வாசிக்கும் நண்பர்களே! நீங்கள் அந்த தாயாக இருந்தால் எவ்விதமான மறுமொழி சொல்லியிருப்பீர்கள்? ஏழாம் நாள் ஓய்வுநாளா யிராவிட்டால், பிறகு தேவன் பொய் சொன்னாரோ?

தேவன் மனுஷரோடு நேரே பேசினார் என்பதற்கு அத்தாட்சியாக, சுவிசேஷத்தில் இதைத் தவிர இரண்டு சம்பவங்கள்மட்டுமே நடந்திருக்கிறது என்று நாம் வாசிக்கிறோம். இவ்விரண்டிலொன்று கிறிஸ்து நாதர் ஞானஸ்நானம் பெற்றபோதும், மற்றொன்று அவர் மலையின்மீது மறுரூபமானபோதும் நிறைவேறியது. ஆனால் கற்பனையை விளம்பியபோது அக்கினி ஜ்வாலை மத்தியிலிருந்து அங்கு கூடிவந்திருந்த இஸ்ரவேலரோடு பேசினார். நடுநடுங்கத்தக்க மகத்துவமுள்ளவராய், உலகத்தின் சர்வ உண்மைகளுக்கும் அஸ்திபாரமாயிருக்கும் பத்துக் கற்பனைகளை விளம்பினார். ஆகையால் மனுஷ இருதயங்களிலே இப்பத்துக் கற்பனைகளையும் வரைந்த பிறகு மாத்திரமே இம்மனுக்குலத்துக்கு உண்மையான சமாதானம் உண்டாகும். கற்பனைகளாகிய பத்து கனத்த பலகைகளால் கட்டப்பட்டிருக்கும் பீடத்தின்மேல் சர்வ லோகத்திற்கும் அரசாயிருக்கிறவருடைய ராஜாங்கம் நிலைநிற்கவேண்டும். கடுகளவு பொய் அவ்வசனங்களிலொன்றிலேயாகிலும் இருந்தாலும் அவ்வரசாங்கம் நிலைநிற்காமல் விழுந்தே போகும்.

தேவன் பொய் பேசினார் என்று எண்ணவும் இடமுண்டோ? இல்லை! இல்லை! ஒருக்காலும் இல்லை. "தேவனே சத்தியபரர் என்றும் எந்த மனுஷனும் பொய்யன் என்றும் சொல்வோமாக."

மேலும் அவர் பத்துக் கற்பனைகளை விளம்பின சமயத்தில் ஏழாம் நாளே ஓய்வுநாள் என்று சொன்னார். ஆனால், "அதை விசுவாசியாதவனோ அவரைப் பொய்யனாக்குகிறான்."

ஏழாம் நாள் மனுக்குலத்தாருக்கு ஓய்வுநாளாக முன்னேயும் இருந்திருக்கிறது; இப்பொழுதும் இருக்கிறது; இனிமேலும் இருக்கப்போகிறது. சிருஷ்டிப்பின் வாரத்தில் ஆறு நாள் வேலை செய்து, ஏழாவது நாளில் ஓய்ந்திருந்து, ஓய்வுநாளை ஸ்தாபித்தவராகிய ஆண்டவர், அந்த நாளே ஓய்வுநாளென்று வற்புறுத்திச் சொல்லுகிறார். சிருஷ்டிப்பின் வார நாட்களில், பிரமிக்கத்தக்க வேலைகள் செய்யப்பட்டு, ஓர் புதிய உலகம் உண்டாகும்படிக்கு அவ்வளவு பலத்த வேலைகள் அந்நாட்களிலே நடத்தப்பட்டிருந்தும், ஏழு நாட்களுக்குள் கடைசி அல்லது ஏழாம் நாளைப்போல் உலகத்துக்கு அவ்வளவு முக்கியமான நாள் வேறொன்றும் இருந்ததில்லை. இந்நாளிலே சிருஷ்டிகரும் ஓய்ந்திருந்தார். மேலும் அதின்பேரில் ஆசீர்வாதத்தையும் வைத்தார். அவருடைய சமுகத்தினால் அதை சுத்திகரித்து பரிசுத்தமாகவுஞ் செய்தார். பின்பு அதை, மனுஷனுக்கு சிருஷ்டிகரைப்பற்றிய வார ஞாபகார்த்தமாகக் கொடுத்தார்.

ஜாயிஸ் என்ற அச்சிறுமி மலைவான இக்கேள்வியை விபரித்துச் சொன்னதுபோல, எந்த மாசற்ற குழந்தையும் உமது முகத்தை நோக்கி இக்கேள்வியை கேட்காமலிருக்கலாம். ஆனால் சில வேளைகளில் இக்கேள்வி உம்மிடத்தில் கேட்கப்பட்டிருக்கிறது; கேட்கப்படும். இதோ உமக்கு முன் இருக்கிறது. உமது சொந்த புத்தி, யுக்தி, மாறாத தேவனுடைய வசனம் இவைகளைக்கொண்டு தேவன் பொய் சொன்னாரோ என்ற கேள்விக்கு நீர் உமது வார்த்தையினாலும் கிரியைகளினாலும் இவ்வுலகத்திற்கு ஏற்ற விடை யளிப்பீரா?

சுகாதார விஷயங்கள்

O. SMITH, M. D. டாக்டர் சிமித்.

காலரா என்பது என்ன, அதை எப்படி தடுக்கிறது.

காலரா என்பது ஒரு தொத்து வியாதி. அது சாதாரணமாய் கண்ணுக்குத் தெரியாத புழுக்களினால் உண்டாகிறது. ஆனால் அவைகளை பெரிய பூதக்கண்ணாடிகளைக்கொண்டு பார்க்கலாம். காலராவினால் அவஸ்தைப்படும் மனிதர்களுடைய மலத்திலும், மூத்திரத்திலும், வாந்தியிலும் அந்த புழுக்கள் கோடிக்கணக்காக இருக்கின்றன. அந்த பூச்சிகள் கொதிக்கவைப்பதினாலும், கடுமையான வெய்யலில் சுமார் ஒரு மணிநேரம் போடுவதினாலும், அல்லது அவைகளை நாசஞ்செய்யும் மருந்துகளினாலும் கொல்லப்படுகின்றன.

காலராவினால் பாதிக்கப்பட்டிருக்கிற ஒரு மனிதனுடைய மலம், மூத்திரம், வாந்தி இவைகளை ஒட்டி ஏதாவது ஒரு பதார்த்தம் இருந்தாலாவது அல்லது அவைகளுக்கு சமீபத்தில் இருந்தாலாவது, காலரா புழுக்கள் அந்த வஸ்துவில் தொத்தி காலராவை பரவச் செய்யலாம். மேலும் சீக்காளிகளின் மல ஜலங்கள், வாந்திகள் இவைகளை போட்டிருக்கிற இடத்திலிருந்து காற்றால் கிளப்பப்பட்ட தூசி அல்லது புழுதியினாலாவது அல்லது காலரா இருக்கிற இடத்திலிருந்து பறந்து வருகிற ஈக்களினாலாவது அந்த புழுக்கள் பரவி காலராவை அதிகரிக்கலாம்.

சாதாரணமாக அவைகள் ஆகாரத்தையும் தண்ணீரையும் பின்வருமாறு கெடுக்கின்றன. (1) குடிதண்ணீருக்காக உபயோகப்படுத்தப்படும் ஆறு, குளம் அல்லது கிணறு இவைகள் சமீபத்தில் மேற்படி சீக்காளிகளினுடைய பாய்கள் அல்லது துணிகளைக் கழுவுவது. (2) சீக்காளிகளின் மலஜலங்கள், வாந்திகள் இவைகளை வீடுகளின் சமீபங்களிலும் குடிதண்ணீருக்கு உபயோகப்படுகிற கிணறு வகையறா சமீபங்களிலும் போடுவது. (3) காலரா நோய் வந்திருக்கும் வீடுகளிலிருந்து தண்ணீர் பாத்திரங்கள் மேற்படி கிணறு வகையறாக்களில் தண்ணீர் மொள்ளுவதற்காக உபயோகப்படுத்துவது. (4) மேற்படி அசுசியான பாத்திரங்களில் உட்காரும் ஈக்கள் நாம் சாப்பிடக்கூடிய ஆகாரங்களில் உட்கார்ந்து அவைகளை கெடுப்பது.

இவ்விதமாக, கடைகளில் வியாபாரத்திற்காக வைக்கப்பட்டிருக்கும் பக்ஷணங்களும் பலகாரங்களும் ஈக்களினாலும் காலரா ஹேதுகரமாய் செய்யப்படுகின்றன. ஈக்கள் வந்து உட்காருவதினாலும் மேற்சொல்லியபடி கெட்டுப்போன தண்ணீர்களை கலப்பதினாலும் பாலும் கெட்டுப்போகிறது.

காலரா நோய் வராதிருக்கும்பொருட்டு பின்வருமாறு நடந்துகொள்ளவேண்டும்.

(1) குடிதண்ணீருக்கு சமீபத்தில் மேற்படி சீக்காளிகளின் சாமான்களை கழுவக் கூடாது. அவைகளை கொதிக்கும் தண்ணீரைக்கொண்டு தூரத்தில் சுத்தம் செய்யவேண்டும். கொதிக்கும் தண்ணீரானது எல்லா சீக்குகளையும் போக்கிவிடும்.

(2) கால்ராவினால் அவஸ்தைப்படும் சீக்காளிகளின் மலமூத்திரங்களையும் வாந்திகளையும் கண்ட இடத்தில் போடக்கூடாது. ஆனால் கால்ராவை பரவச்செய்யாமலிருப்பதற்காக அவைகளை சுத்தப்படுத்த ஒரு சுகாதார உத்தியோகஸ்தரின் உதவியைத் தேடினால் உத்தமம். இது முடியாவிட்டால் நெருப்பு சாம்பலுட்னவ்து கலந்து, ஜலம் அருகாமையிலில்லாத இடத்தில் அவைகளை புதைக்கவேண்டும். இந்த அசுத்தங்களால் கெடுக்கப்பட்ட தரையில் வைக்கோல் அல்லது உமியைக் கொளுத்துவதினால் சுத்தம் செய்யலாம்.

(3) வீட்டில் உபயோகப்படும் எல்லாப் பாத்திரங்களையும் தண்ணீரை கொதிக்க வைத்து அதினால் கழுவவேண்டும். அதேமாதிரிதான் தண்ணீரை கொதிக்கவைத்து சாப்பிடவேண்டும்.

(4) ஆகாரத்தை சூடாயிருக்கும்பொழுதே சாப்பிடவேண்டும். பழய ஆகாரமாவது, ஆறிப்போனதையாவது, ஈக்கள் உட்கார்ந்ததையாவது, தூசுகள் பட்டதையாவது சாப்பிடக்கூடாது.

(5) ஈக்கள் உட்காரும்படி திறந்துவைத்த பக்ஷணங்களையாவது தூசிவிழுந்த பக்ஷணங்களையாவது சாப்பிடக்கூடாது.

(6) வீடுகளைச்சுற்றி மிகவும் சுத்தமாய் வைத்துக்கொள்ளவேண்டும்.

(7) வீட்டுக்கு சமீபத்தில் யாதொரு விதமான அசுசிகளையும் செய்யக்கூடாது.

(8) இரவு காலங்களில் கண் விழிக்கக்கூடாது.

(9) ஜாஸ்தி ஆகாரமாவது, ஜீரணிக்கக்கூடாத ஆகாரமாவது சாப்பிடக்கூடாது.

(10) கால்ராவினால் பயமடையக்கூடாது. சாதாரணமான முன்ஜாக்கிரதையினால் கால்ரா வராமல் நிச்சயமாய் காப்பாற்றிக்கொள்ளலாம்.

(11) கால்ரா சம்பவிக்கும் பக்ஷத்தில் ஸமீபத்திலுள்ள சுகாதார உத்தியோகஸ்தரிடம் சொல்லி, வீட்டை மருந்துகளைக்கொண்டு சுசிகரமாய் செய்துகொள்ளவேண்டியது முக்கியம்.

(12) சீக்கு சம்பவித்தவுடனே வைத்தியம் தொடங்கவேண்டும். காலதாமதம் கூடாது.

(13) கால்ரா கண்டவனை தொடும்படி நேரிடும் பக்ஷத்தில் கைகளை கொதிக்கவைத்த தண்ணீரினாலாவது அல்லது மருந்துகளினாலாவது சுத்தம் செய்யவேண்டும்.

ஏதாவது ஒரு வீட்டில் கால்ரா கண்டால், அந்த வீட்டின் சொந்தக்காரன் உடனே அந்த விஷயத்தை சமீபத்தில் இருக்கிற சுகாதார உத்தியோகஸ்தரிடமாவது அல்லது ரெவினியூ ஆபீசரிடமாவது ரிபோர்ட்டு செய்யவேண்டும். அப்படி அவன் செய்யத் தவறினால், அக்கம்பக்கத்திலுள்ள வீடுகளுக்கு அது நிச்சயமாய் பரவும். அதற்கு அவன் தான் பாத்திரன் ஆவான்.

சாக்குப்போக்குகளுக்கு உத்தரவு.

நமது இரட்சகரின் ஒரு உவமை என்னவென்றால், "ஒரு மனுஷன் பெரிய விருந்தை ஆயத்தம் பண்ணி, அநேகரை அழைப்பித்தான்." விருந்து ஆயத்தமாக்கப்பட்ட பிறகு, "எல்லாம் ஆயத்தமாயிருக்கிறது வாருங்கள்" என்ற உபசாரமான அழைப்பை அனுப்பினான். ஆனால் "அவர்களெல்லாரும் போக்குச் சொல்லத் தொடங்கினார்கள்." ஒவ்வொருவரும் தங்கள் சொந்த வேலைகளில் கண்ணுங் கருத்துமுடையவர்கள்போல, தங்களுக்குக் கொடுக்கப்பட்ட அருமையான சலாக்கியத்தை அசட்டை செய்யப் பார்த்தார்கள்.

இது நமது காலத்திற்கு ஓர் அடையாளம். நாம் ஆட்டுக்குட்டியானவரின் கலியாண விருந்திற்கு அழைக்கப்பட்டிருக்கிறோம். "ஆவியும் மணவாட்டியும் வா" என்கிறார்கள். ஆனால் இந்த ஆவியின் அழைப்புக்கு அநேகர் சாக்குப்போக்கு சொல்ல ஆரம்பிக்கிறார்கள். எப்படியெனில்:

1. நான் அவசரப்படவேண்டியதில்லை; போதுமான காலமிருக்கிறது.

உத்தரவு:—"நாளைக்கு நடப்பது உங்களுக்குத் தெரியாதே. உங்கள் ஜீவன் எப்படிப்பட்டது? கொஞ்சக்காலந் தோன்றிப் பின்பு தோன்றாமற்போகிற புகையைப்போலிருக்கிறதே." (யாக். 4: 14.) "நாளையத்தினத்தைக்குறித்துப் பெருமை பாராட்டாதே; ஒரு நாள் பிறப்பிப்பதை அறியாயே." (நீதி. 27: 1.)

2. சபையில் அநேக மாயக்காரர்களிருக்கிறார்கள்.

"ஆகையால் மற்றவர்களைக் குற்றவாளியாக தீர்க்கிறவனே, நீ யாரானாலும் சரி, போக்குச்சொல்ல உனக்கு இடமில்லை; நீ குற்றமாக தீர்க்கிறவைகளைவைகளோ, அவைகளை நீயே செய்கிறபடியால், நீ மற்றவர்களைக்குறித்து சொல்லுகிற தீர்ப்பினாலே உன்னைத்தானே குற்றவாளியாகத் தீர்க்கிறாய்." (ரோமர் 2: 1.) "மற்றொருவனுடைய வேலைக்காரனைக் குற்றவாளியாகத் தீர்க்கிறதற்கு நீ யார்? அவன் நின்றாலும் விழுந்தாலும் அவனுடைய எஜமானுக்கே அவன் உத்தரவாதி; அவன் நிலைநிறுத்தப்படுவான்; தேவன் அவனை நிலைநிறுத்த வல்லவராயிருக்கிறாரே." (ரோமர் 14: 4.)

3. நான் எப்போதாவது கிறிஸ்தவனாகவேண்டும் (என்னை சத்தியத்திற்கு ஒப்புக்கொடுக்கவேண்டும்) ஆனால் கொஞ்சம் காலம் பொறுக்கவேண்டும்.

"கர்த்தரைக் கண்டடையத்தக்க சமயத்தில் அவரைத் தேடுங்கள்; அவர் சமீபமாயிருக்கையில் அவரை நோக்கிக் கூப்பிடுங்கள்." (ஏசா. 55: 6.) "அநுக்கிரக காலத்திலே நான் உனக்குச் செவிகொடுத்து, இரட்சணிய நாளிலே உனக்கு உதவி செய்தேன் என்று சொல்லியிருக்கிறாரே; இதோ இப்பொழுதே அநுக்கிரக காலம், இப்பொழுதே இரட்சணிய நாள். (2 கொரி 6: 2.)

4. எனக்கு சவகாசமான காலம் கிடைக்குமட்டும் காத்திருப்பேன்.

"ஆகையால் பரிசுத்த ஆவியானவர் சொல்லுகிறபடியே: இன்று அவருடைய சத்தத்தைக் கேட்பீர்களாகில், வனாந்தரத்திலே கோபமூட்டினபோதும், சோதனை நாளிலும் நடந்ததுபோல உங்கள் இருதயங்களை கடினப்படுத்தாதிருங்கள்." (எபி. 3: 7, 8.) "அடிக்கடி கடிந்துகொள்ளப்பட்டும் தன் பிடரியைக் கடினப்படுத்துகிறவன் சகாயமின்றி சடுதியில் நாசமடைவான்." (நீதி. 29: 1.)

5. நான் மட்டுக்கு மிஞ்சின மகா பெரிய பாவி.

"வழக்காடுவோம் வாருங்கள் என்று கர்த்தர் சொல்லுகிறார்; உங்கள் பாவங்கள் சிவேரென்றிருந்தாலும் உறைந்த மழையைப்போல் வெண்மையாகும்; அவைகள் இரத்தாம்பரச் சிவப்பாயிருந்தாலும் பஞ்சைப்போலாகும்." (ஏசா 1: 18.) "பாவிகளை இரட்சிக்க கிறிஸ்து இயேசு உலகத்தில் வந்தார் என்கிற வார்த்தை உண்மையும் எல்லா அங்கிகரிப்புக்கும் பாத்திரமுமானது; அவர்களில் பிரதான பாவி நான்." (1 தீமோ 1: 15.) "இழந்துபோனதைத் தேடவும் இரட்சிக்கவுமே மனுஷகுமாரன் வந்திருக்கிறார் என்றார்." (லூக். 19: 10.)

6. நான் வயசாகும் வரைக்கும் காத்திருப்பேன். சத்தியத்தை ஏற்றுக்கொள்வதற்கு நான் இப்போ மிகவும் சிறியவன்.

"நீ உன் வாலிப பிராயத்திலே உன் சிருஷ்டிகரை நினை; தீங்கு நாட்கள் வராததற்கு முன்னும், எனக்குப் பிரியமானவைகளல்ல என்று நீ சொல்லும் வருஷங்கள் சேராததற்கும் முன்னும் அவரை உன் வாலிப பிராயத்திலே நினை." (பிர. 12: 1.) "இயேசுவோ; சிறுபிள்ளைகள் என்னிடத்தில் வருகிறதற்கு இடங்கொடுங்கள்; அவர்களைத் தடைபண்ணாதிருங்கள்; பரலோக ராஜ்யம் அப்படிப்பட்டவர்களுடையது என்று சொன்னார்." (மத். 19: 14.)

7. எனக்கு உலகத்தில் அதிகம் இருக்கிறது, ஆகையால் உலக நேசத்தை விட என்னால் முடியாது.

"மனுஷன் உலக முழுவதையும் ஆதாயப்படுத்திக்கொண்டாலும், தன் ஜீவனை நஷ்டப்படுத்தினால் அவனுக்கு லாபம் என்ன? மனுஷன் தன் ஜீவனுக்கு ஈடாக என்னத்தைக் கொடுப்பான்? (மாற். 8: 36, 37.) "தன் ஜீவனைக் காக்கிறவன் அதை இழந்துபோவான்; என்னிமித்தம் தன் ஜீவனை இழந்துபோகிறவன் அதைக் காப்பான்." (மத். 10: 39.)

(இன்னும் வரும்.)

? கேள்விகளுக்கு விடை ?

நீங்கள் கேட்க மனதானால் திரும்பி வந்து கேளுங்கள்.

கேள்வி:—மோசேயின் காலம் வரைக்குமுள்ள ஜனங்களை தேவன் ஓய்வுநாளை ஆச
ரிக்க கட்டளையிட்டாரென்றாவது, அவர்கள் அதை ஆசரித்தார்களென்றாவது வேதத்தில்
சொல்லப்படவில்லை. பிற்பாடு அவர் கொடுத்தபோதும் இஸ்ரவேலருக்கு மட்டுந்தான்
கொடுத்தாரென்று உபா. 5: 15; யாத். 31: 13 ஆல் தெரிகிறது. ஆகையால் அது கிறிஸ்
தவர்களுக்கல்ல என்று எண்ணுகிறேன். இது சரிதானா ?

விடை:—ஆதியிலே தேவன் ஓய்வுநாளை சிருஷ்டிப்பின் ஞாபக சின்னமாக உண்
டாக்கினாரென்று ஆதி. 2: 2, 3; யாத். 20: 8-11 ஆகிய இவ்வாக்கியங்கள் வெளிப்படுத்து
கிறது. சிருஷ்டிப்புக்கு மனுக்குலத்தார் யாவரும் சம்பந்தப்பட்டிருப்பதினால், உண்டாக்கப்
பட்டபோதே 'ஓய்வுநாள் மனுஷனுக்காக (யூதருக்கு மாத்திரமல்ல) உண்டாக்கப்பட்டது'
(மாற். 2: 27) ஆகையால் ஆதாம் முதல் தேவனுக்குக் கீழ்ப்பட்டிருந்தவர்கள் யாவரும்
ஓய்வுநாளை கைக்கொண்டிருந்திருக்கமாட்டார்களென்று எண்ணுவதற்கிடமில்லை. ஆனால்
சுமார் 2400 வருஷ சரித்திரத்திலடங்கிய ஆதியாகமத்தின் சுமார் 60 பக்கங்களுக்குள்ளே
அக்காலத்திலுள்ள வழக்க பழக்கங்களெல்லாம் சொல்லப்படாமலிருப்பது ஆச்சரியமல்
லவே. உதாரணமாக பாபிலோன் இராஜ்யத்திலிருந்து இக்காலம் வரைக்குமுள்ள சரித்
திரத்தை சுமார் 60 பக்கங்களுக்குள்ளே ஒரு சரித்திரக்காரன் எழுதினால் அக்காலத்திற்குட்
பட்ட அநேக வழக்க பழக்கங்கள் அச்சுருக்கமான சரித்திரத்தில் காணப்பட முடியுமா?
முடியாதே. ஆகையால், ஆதியாகமத்தில் ஓய்வுநாள் ஆசரிப்பைப்பற்றி காணப்படாதது
அக்காலத்திலுள்ளவர்கள் ஓய்வுநாளை ஆசரிக்கவில்லை என்பதற்கு தகுந்த ரூபகாரமாகாது.

ஓய்வுநாள் மனுக்குலத்தார் யாவருக்காகவும் உண்டாக்கப்பட்டது. 'உலகத்தையும்
அதிலுள்ள யாவற்றையும் உண்டாக்கின தேவனானவர் மனுஷ ஜாதியான சகல ஜனங்
களையும் அவர் ஒரே இரத்தத்தினாலே தோன்றப்பண்ணி, பூமியின்மீதெங்கும் குடியிருக்கச்
செய்து, முன் தீர்மானிக்கப்பட்ட காலங்களையும் அவர்கள் குடியிருப்பின் எல்லைகளை
யும் குறித்திருக்கிறார். (அப். 17: 24, 26.) முன் குறிக்கப்பட்ட காலங்களில், சிருஷ்டிப்
பில் பிரத்தியேகப்படுத்தி வைக்கப்பட்ட ஓய்வுநாள் ஒன்று; இந்த தேவனுடைய ஞாபக
சின்னம் 'தலைமுறை தலைமுறைக்கும் இருக்கும்.' சங். 135: 13.

ஓய்வுநாளாலேதான் வாரம் ஏற்படுகிறது. பூமி, சந்திரன் இவைகளின் ஓட்டத்தி
னால், நாள்,—மாசம், வருஷம் 'உண்டாகிறதுபோல் ஓய்வுநாளால் வாரம் உண்டா
கிறது. ஓய்வுநாள், காலத்தை வாரங்களாகப் பிரிக்கிறது. மனுஷ ஜாதி குறித்திருக்கும்
வாரநாட்களின் பெயரால், ஏழாம் நாள் ஓய்வுநாளாக முன்னமே ஆசரிக்கப்பட்டு வந்தது
என்று சரித்திரம் காட்டுகிறது.

ஆண்டவர் ஓய்வுநாளை இஸ்ரவேலருக்குக் கொடுத்தது மெய்தான். அவர்கள் தங்களுக்
காகமட்டும் வைக்க அல்ல, ஆனால் மற்றவர்களுக்கும் கொடுக்கவேண்டுமென்றே, மற்ற எல்லா
சத்தியத்தைப்போலவே இதையும் கொடுத்தார். 'அவர்கள் இஸ்ரவேலரே, புத்திர சுவிகார
மும், மகிமையும், உடன்படிக்கைகளும், நியாயப்பிரமாணமும், தேவாராதனைகளும், வாக்
குத்தத்தங்களும் அவர்களுடையவைகளே,' ரோமர் 9: 4. புறஜாதியார் விக்கிரகங்களை
வணங்கி முதல் இரண்டு கற்பனைகளையும் மீறிக்கொண்டு வந்தார்கள். ஆகையினால் அந்தக்
கற்பனைகள் இஸ்ரவேலருக்குத்தான் என்று சொல்லி கற்பனையைத் தள்ளலாமா ? தேவன்
ஏழாம் நாளை எப்பொழுதும் தமது ஓய்வுநாளென்று அழைக்கிறாரே யொழிய, யூத ஓய்வு
நாளென்று ஒருபோதும் அழைக்கிறதில்லை. இன்னும் தேவன், தம்மை ஆபிரகாம்,

ஈசாக்கு, யாக்கோபின் தேவன் என்றழைக்கிறார்; ஆகையால் நாம் அவரையும் தள்ளி
விடுவோமா ?

புதிய உடன்படிக்கையும் இஸ்ரவேலருக்குத்தான்; எல்லா வாக்குத்தத்தங்களும் ஆசீர்
வாதங்களும் அவர்களுக்குத்தான்; பரிசுத்த நித்திய நகரமாகிய புதிய எருசலேமும் இஸ்ரவே
லருடைய பட்டணந்தான். ஏனென்றால் அதின் வாசல்கள் அவர்களுடைய பெயரால்
தான் பெயரிடப்பட்டிருக்கிறது. (வெளி. 21: 12;) இயேசுவும் 'இரட்சிப்பு யூதர் வழி
யாய் வருகிறது' என்கிறார். (யோவா. 4: 22.) வேதாகமம் யூதர்கள் மூலமாய்க் கொடுக்
கப்பட்டிருக்கிறது. இரட்சகரும் ஒரு யூதன்தான்; அப்போஸ்தலர்களும் யூதர்கள்தான்;
முதல் கிறிஸ்தவ சபையும் யூத சபைதான் ஆகையினாலே இவ்வித எல்லா ஆசீர்வாதங்களை
யும் நாம் தள்ளவேண்டுமோ ?

பின்னால் யூதர்கள் நிலைக்காமற்போனதினாலே தேவ சத்தியம் ஒரு விஷயத்திலும்
மாறவில்லை. தேவன் யூதர்களைவிட்டு நீக்கி அதே வெளிச்சத்தை மற்றவர்களிடத்தில்
கொடுத்தார். இப்பொழுது அவ்வெளிச்சத்தை சுமக்கிறவர்கள்தான் தேவனுடைய இஸ்ர
வேலர். புறஜாதியார் விசுவாசத்தினாலே இஸ்ரவேலரானால்தான் அவர்களுக்கு உடன்
படிக்கையின் ஆசீர்வாதங்களும் வாக்குத்தத்தங்களும் அப்படி எல்லாரும் இஸ்ரவேலராக
முடியும். "நீ எகிப்து தேசத்தில் அடிமையாயிருந்தாய் என்றும், உன் தேவனாகிய கர்த்தர்
உன்னை அவ்விடத்திலிருந்து வல்லமையுள்ள கரத்தினாலும் ஓங்கிய புயத்தினாலும் புறப்
படப் பண்ணினார் என்றும் நினைப்பாயாக; ஆகையால் ஓய்வுநாளை ஆசரிக்க உன் தேவனா
கிய கர்த்தர் உனக்குக் கட்டளையிட்டார்." (உபா. 5: 15.) எகிப்தின் அடிமைத்தனத்தில்
இஸ்ரவேலர் இருக்கும்போது ஓய்வுநாளை ஆசரிக்கமுடியாதவர்களாயிருந்தார்கள். (யாத். 5:
1-19.) அதிலிருந்து விடுவித்ததினாலே, அவர்கள் இனிமேல் லேசாய் கைக்கொள்ளலா
மென்று, இது பின்னால் கூட்டப்பட்ட விசேஷித்த காரணமே ஒழிய முக்கிய முதல்
காரணமல்ல. (யாத். 20: 8-11.) இந்தக்காரணம் ஓய்வுநாள் பிரமாணத்திற்கு மட்டு
மல்ல, ஆனால் அநியாயஞ் செய்யாதிருத்தல் (லேவி. 19: 36, 37,) நீதி செய்தல் (உபா.
24: 17, 18), அந்நியரை நேசிக்குதல், தேவனை நேசிக்குதல். (உபா. 10: 19, 22; 11: 1,)
இவைகளுக்கும், சுருக்கிச் சொல்லப்போனால் பத்துக் கற்பனை முழுமைக்கும் இதே இரண்
டாம் காரணம் கொடுக்கப்பட்டிருக்கிறது. 'தம்முடைய ஜனத்தைப் புறப்படப்பண்ணி,
தம்முடைய கட்டளைகளைக் காத்து நடக்கும்படிக்கும், தமது நியாயப்பிரமாணங்களைக் கைக்
கொள்ளும்படிக்கும், அவர்களுக்கு புறஜாதிகளுடைய தேசத்தைக் கொடுத்தார்.' (சங்.
105: 43-45) இதினாலே நாம் கற்பனைகள் யாவையும் மீறி நடக்கலாமென்று சொல்ல
லாமா ? இதுபோல, பாவ, அடிமைத்தனத்திலிருந்து விடுவிக்கப்பட்டவர்கள், தேவனு
டைய கற்பனையை கைக்கொள்வதற்கு அவர்களுடைய இரட்சிப்பும் காரணமாகும். 'உங்
களைப் பரிசுத்தப்படுத்துகிற கர்த்தர் நான் என்பதை நீங்கள் அறியும்படி, இது உங்கள் தலை
முறைதோறும் எனக்கும் உங்களுக்கும் அடையாளமாயிருக்கும்; (யாத். 31: 13.) "கர்த்த
ரைச் சேர்ந்து, ஓய்வுநாளை பரிசுத்த குலைச்சலாக்காதபடி ஆசரித்து, என் உடன்படிக்கையை
பற்றிக்கொண்டிருக்கிற அந்நிய புத்திரன் அனைவரையும்; நான் என் பரிசுத்த பர்வதத்
திற்கு கொண்டுவந்து என் ஜெப வீட்டிலே அவர்களை மகிழப்பண்ணுவேன்' (ஏசா. 56:
6, 7) என்ற வாக்குத்தத்தம் ஓய்வுநாளை ஆசரிக்கும் புறஜாதியாருக்கும் கொடுக்கப்பட்டிருக்
கிறது.

ஒரே தேவன், ஒரே பிரமாணம், ஒரே இரட்சகர், அவருடைய இரட்சிப்பு, அவரு
டைய ஓய்வுநாள், அவருடைய அன்பு சுதந்தரம் யாவும் ஒன்றே. இவைகளை ஏற்றுக்
கொள்ளாதவர்கள், இவ்வுலகத்தில் தேவனற்றவர்களும், நம்பிக்கையற்றவர்களுமாகிய புற
ஜாதியாராக இருப்பார்கள். ஆனால் இவைகளை நேசித்து அனுசரிப்பவர்கள் தேவனுடைய
ஆசீர்வாதங்களுக்கு சுதந்தரராவார்கள்.

நிகழ்கால சத்தியம்

வேத சன்மார்க்க சுகாதார விஷயங்களில் தற்கால அறிவுக்கொத்தபடி மனிதர் அபிவிருத்தியடைவதற்கென்று பிரசுரமாகும் ஓர் பத்திரிகை.

மதராஸ் நவம்பர்மீ, 1921.

இப்பத்திரிகை, பெங்களூரிலிருக்கும், எஸ். டி. ஏ. பப்ளிஷிங்கவுஸ்காக, பட்டணத்தில் வெப்பேரி என்னுமிடத்திலுள்ள அல்பீனியன் அச்சாபீசில் அச்சடிக்கப்பட்டு வருகிறது.

பத்திராதிபர் பாஸ்றர், ஜி. ஜி. லௌரி.
உதவி ,, ,, ஈ. டி. தாமஸ்.

	ரூ.	அ.	ப.
தனிப்பிரதி ஒன்றுக்கு ...	0	1	6
வருஷ சந்தா, தபாற் கூலி உள்பட ...	1	0	0
சிங்கப்பூர் பினங்கு முதலிய வெளி ஊர்களுக்கு தனிப் பிரதி ஒன்றுக்கு ...	0	2	0
வருஷசந்தா தபாற்கூலி உள்பட ...	1	4	0

பப்பாளிக்காயில் குரங்கு.

பாம்பனில் ஒரு முகம்மதியர் வீட்டில் பப்பாளி மரத்தின் காயைப் பறித்து சாப்பிடுவதற்காக வெட்டியதில் குரங்கு வடிவமாய் ஒரு விக்கிரக மிருந்தது. கண் மூக்கு வாய் கால்கள் விரல்களுமிருந்தன. மயிர் தலையோடு சேர்ந்தாற் போலிருந்தது. கைகள் உடலோடு சேர்ந்திருந்தன. சுவரில் செய்யப்பட்ட சொரூபம்போல் ஒரு பாதியில் ஒட்டிக்கொண்டிருந்தது. தேங்காய் பருப்புப்போலிருந்தது. அனேக ஜனங்கள் பார்த்தார்கள். நானும் நேரில் பார்த்தேன். பப்பாளி மரத்தின் பால் எவ்விதமாகவோ காய்க்குள் சென்று குரங்கு சுரூபமாய் விட்டதாய் நான் நினைக்கிறேன். ஆனால் வால் தெரியவில்லை. குரங்குக்கும் இந்த சுரூபத்துக்கும் யாதொரு வித்தியாசமில்லை என்று ஒரு நிருபர் எழுதுகிறார்.

சமாசாரக் குறிப்புகள்.

லண்டன் பெண் பாலர் குறைகளைத் தீர்க்கும் சட்டம் சென்ற 1919-ம் வருஷம் செய்யப்பட்ட பிறகு, புருஷர்களுக்கென்று ஒதுக்கி வைக்கப்பட்ட சில உத்தியோகங்கள் ஒருபுற மிருக்க, கீழ்க்கண்ட உத்தியோகங்களும் புருஷர்களுக்கே உரியனவென்று தீர்மானமாயிருக்கிறது:—ராஜ தந்திர ஸ்தானிகர்கள், குடியேற்ற நாடுகள், சார்புநாடுகள் ஆகியவற்றிற்கு இங்கிலாந்திலிருந்தே நியமிக்கப்படும் உத்தியோகஸ்தர்கள், இந்தியாவில் சிவில் சர்விஸ் உத்தியோகங்கள், வர்த்தக கமிஷனர்கள், மற்றும் வர்த்தக உத்தியோகஸ்தர்கள், ஆகியவைதான். வர்த்தக கமிஷனர் ஆபீஸுகளில் பிரதம குமாஸ்தா வேலைக்குமட்டும் ஸ்திரீகள் அருகராவர்.

ஓர் நெட்டை மரம்.

மேற்கு இந்திய தீவில் ஒரு தனித்த மரம் ஆகாயத்தை அளாவி யிருக்கிறது. அதன் அடிமரம்மட்டும் 25 அடி உயரம். அதற்கு மேல், கொப்பு கிளைகள்கொண்டு அடர்த்தியாயிருக்கிறது. 'ஜாம்பி' என்னும் ஓர் பயங்கர பட்சி அதில் வசிக்கிறது. இந்தப் பட்சியைப் பார்த்தால் மரணம் நேரிடும் என்பது அத்தீவாரின் எண்ணம்.

அவர்களில் ஒருவன் தனக்கு செய்யப்பட்ட தீவினைக்குப் பதில் அடுத்தவனுக்கு செய்யவேண்டுமென்றால், அவன் அந்த மரத்தினிடத்தில் போய் முகங் குப்புற விழுந்து கிடந்து அநேக மந்திரங்கள் சொல்லிய பிறகு, எழுந்திருந்து ஓர் ஆணியை அந்த அடிமரத்தில் பாய்ச்சினால், அந்தப் பட்சி, தான் அம்மனிதனுக்கு பதில் செய்வதாக வாக்குக் கொடுக்கிறதென்றெண்ணுகிறார்கள். இப்படி நூற்றுக்கணக்கான ஆணிகள் அம்மரத்தி லறையப்பட்டிருக்கின்றன. இவர்கள் இந்த மரத்தையும் இந்த பட்சியையும் சிருஷ்டித்த 'சிருஷ்டிகரைத் தொழுது சேவியாமல் சிருஷ்டியை தொழுது சேவிக்கிறார்கள். இது எவ்வளவு பைத்தியம் !

இந்தியாவில் ஒத்துழையாமையின் எழுச்சியினிமித்தம், கலாசாலையில் படிக்கவேண்டிய மாணாக்கர்களில் கொஞ்சங்குறைய 60,000 பேர், தங்கள் படிப்பை நிறுத்தி விட்டார்கள்.

நிகழ்கால சத்தியம்.

Vol. X. மதராஸ்:—டிஸம்பர்மீ, 1921. No. 12

ஓர் கற்பாறையின் பிரயோஜனம்.

(THE VALUE OF A ROCK.)

கொஞ்சக் காலத்திற்கு முன்னாக ஒரு மனிதனைப்பற்றி வாசித்தேன். அவன் கடலில் குளிக்கப்போனானாம். குளித்துக்கொண்டிருக்கும்போது கடலில் அவன் போகக்கூடாத தூரம் ஆழத்தில் போய்விட்டான். கடலில் அலையும் அமளியாயிருந்ததினாலே, அவன் கரைக்கு வரப் பிரயாசப்பட்டும் கூடாமற்போய்விட்டது. அவன் தன்னால் இயன்றமட்டும் தன் பலத்தைக்கொண்டு பிரயாசப்பட்டு களைத்துப்போனான். தான் கரை வந்து தப்பி பிழைப்பேன் என்ற எண்ணம் அவனைவிட்டு நீங்கிற்று. தன் குடும்பம் அடையப் போகிற பரிதாபமான நிலைமையைக் குறித்து சஞ்சலப்பட்டுக்கொண்டிருந்தான்.

இப்படி அவனுடைய நம்பிக்கை போய் அவன் கடலின் அலையினால் மோதி யடிக்கப்பட்டுக்கொண்டிருக்கும்போது, திடீரென்று அவன் கால் ஓர் பாறையில் தட்டுப்பட்டது. அதில் அவன் ஊன்றி நிற்கப் பிரயாசப்பட்டபோது, ஆழமில்லாத தண்ணீரில்தா[illegible] நிற்கக் கண்டு, மிகக் களிப்புடன், "ஆ! இக்கற்பாறை தட்டுப்பட்டது எவ்வளவு நேர்த்தி" என்று சொன்னானாம்.

இதுபோலவே, நமது தற்கால ஜீவியமும் இருக்கிறது. இந்த உலகத்திற்கு ஓர் பயங்கரமான நாசம் வரப்போகிறதென்று இவ்வுலகத்தில் தற்சமயம் நடக்கும் சம்பவங்கள் காட்டும்போது, நாம் பத்திரமாய் நிற்கக்கூடிய நிலையான நித்திய கற்பாறையாகிய தேவ வசனத்தைப்பற்றி அறிவது எவ்வளவு அவசியம்? அறிந்து, அ[illegible]ன்மேல் நிலைநிற்பது எவ்வளவு பாக்கியம்!

இப்படிச் சொல்லும்போது அநேகர், தேவ வசனம் (வேதாகமம்) நம்மை இவ்வுலக அழிவிலிருந்து நீக்க முடியுமென்று அதின்மேல் நமது நம்பிக்கை வைப்பதற்கு அது அவ்வளவு உறுதியுள்ளதா? என்று கேட்கலாம். ஆம்; அது உறுதியானது; அதில் ஒன்றும் தவறாதது என்று ஆயிரந்தடவை சொல்லக்கூடும். 'அதிக உறுதியான தீர்க்கதரிசன வசனங்கள்' அதிலுண்டு. இதுவரைக்கும் ஏற்ற காலத்தில் அதில் சொல்லப்பட்டபடியே உலக சம்பவங்கள் நடைபெற்று வருகிறது. தேவன் தம்முடைய புஸ்தகத்தில் சொல்லியிருக்கும் வார்த்தைகளை நீ நம்பாவிட்டால், 'வானமும் பூமியும் ஒழிந்துபோனாலும்,...... அதில் ஒரு சிறு எழுத்தாகிலும், ஒரு எழுத்தின் உறுப்பாகிலும், ஒழிந்துபோகாதென்று' (மத். 5: 18) அவர் உனக்கு சத்தியம் பண்ணிக்கொடுக்கிறார். 'அந்தப்படி தேவனும் வாக்குத்தத்தம் பண்ணப்பட்டவைகளைச் சுதந்தரித்துக்கொள்ளுகிறவர்களுக்குத் தமது ஆலோசனையின் மாறாத நிச்சயத்தைப் பரிபூரணமாய்க் காண்பிக்கும்படி சித்தமுள்ளவராய், ஓர் ஆணையினாலே அதை ஸ்திரப்படுத்தினார்.' (எபி. 6: 17). தேவன் உனக்கு இப்படி ஆணையிட்டுக் கொடுத்திருக்கும்போது அவர் வசனத்தை நம்ப இன்னும் சந்தேகிப்பாயோ?

சந்தேகிக்கவேமாட்டாய். ஏனென்றால், 'உறுதிபண்ணும்படிக்கு ஆணையிடுதலே சகல விவாதத்திற்கும் முடிவாய்' இருக்கிறது.

பெயர்பெற்ற அநேக வேதமாணாக்கர்கள் கஷ்டமெடுத்து ஆராய்ச்சி செய்து, 'பரிசுத்த ஆகமத்தில் சுமார் 1000 தெளிவான தீர்க்கதரிசன வாக்கியங்கள் இருக்கிறதாகவும் அவைகளில் நூற்றுக்கு 85 வீதம் நிறைவேறியிருக்கிறதாகவும், அந்த நிறைவேறுதலை சரித்திரம் ரூபித்துக் காட்டுகிறது என்றும் கூறுகிறார்கள். தீர்க்கதரிசனம் உரைத்தவர்கள் தங்கள் தீர்க்கதரிசனம் நிறைவேறுவதற் கேதுவாய் காரியங்களை நடப்பித்தார்களென்று சிலர் ஆட்சேபிக்கலாம்; ஆனால் ஒவ்வொரு தீர்க்கதரிசனமும் உரைக்கப்பட்டு சராசரி 600 வருஷங்களுக்குப் பிறகு நிறைவேறி இருப்பதினால் அப்படிச் சொல்வதற்கு வழியில்லை. ஒரு காரியத்தைக் குறித்து சொல்லப்பட்ட தீர்க்கதரிசன குறிப்புகள் யாவும் ஒரு எள்ளளவும் தவறாமல் நிறைவேறியிருப்பதினால், இவைகள் தற்செயலாய் நடந்திருக்கும் என்று சொல்வதற்கும் இடமில்லை. பழைய ஏற்பாட்டில் கிறிஸ்துவைப்பற்றிய தீர்க்கதரிசனத்தில் சுமார் 300 தீர்க்கதரிசனக் குறிப்புகளிருக்கின்றனவென்று வேத மாணாக்கர்கள் கண்டுபிடித்திருக்கிறார்கள். அவைகளில் நூற்றுக்கு 90 வீதத்துக்குமேல் திட்டவட்டமாய் நிறைவேறியிருக்கிறது. உபாகமம் 28-ம் அதிகாரத்தில், யூதர்களைப்பற்றி 70 காரியங்கள் தீர்க்கதரிசனமாக உரைக்கப்பட்டிருக்கிறது. அவைகள் யாவும் நுட்பமாய் நிறைவேறி யிருக்கின்றன. வேத மாணாக்கரின் கணக்கின்படி எகிப்து, தீரு, பாபிலோன், நினிவே முதலிய நகரங்கள் ஒவ்வொன்றைக்குறித்தும் சராசரி 40 காரியங்கள் முன்னுரைக்கப்பட்டிருக்கிறது. அவைகள் யாவும் ஒரு எழுத்தும் பிசகாமல் சொல்லப்பட்டிருந்தபடியே நிறைவேறியிருக்கிறது. இன்னும் நிறைவேறாதவைகள் நிறைவேறினவைகளைப்போலவே வெகு நுட்பமாய் நிறைவேறுமென்பதற்கு கிஞ்சித்தேனும் ஐயமில்லை. 'குறித்த காலத்துக்கு தரிசனம் இன்னும் வைக்கப்பட்டிருக்கிறது; முடிவிலே அது விளங்கும். அது பொய் சொல்லாது; அது தாமதித்தாலும், அதற்குக் காத்திரு; அது நிச்சயமாய் வரும், அது தாமதிப்பதில்லை.' ஆபகூக் 2: 3.

'கற்பாறையாகிய திருவசனத்தின்மேல் நான் நிற்பது எப்படி?' என்பது அடுத்த கேள்வி. உத்தரவு என்னவென்றால், கற்பாறையை அறிந்ததுமட்டும் போதாது; அதில் நிற்கவேண்டும். வேதத்தை ஒவ்வொரு நாளும் ஆராய்ந்து பார்த்து அது உன்னை ஏவுகிறபடி நடப்பதே அதின்மேல் நிற்பதற்குச் சரி. அப்படி செய்தால், துன்மார்க்கருக்கு வரப்போகிற கோபாக்கினையினின்று நீ இரட்சிக்கப்படும்படி அது உன்னை நல்லவனாக்கும். அப்பொழுது நீ பிழைப்பாய். ஒரு வயதுசென்ற கிறிஸ்தவன், தன் பெரிய அனுபோகத்திலிருந்து எடுத்துரைத்திருப்பது கவனிக்கத்தக்கது. அதாவது:—ஒரு கெட்ட மனுஷன் தன் வேதத்தை வாசிக்கும் காலபரியந்தம் அவனைக்குறித்து எனக்கு நம்பிக்கையுண்டு; அவன் எதாவது ஒருநாளில் தேவனிடத்திற்கு திரும்புவான் என்பது நிச்சயம். ஒரு நல்ல மனுஷன் தன் வேதத்தை அசட்டை செய்தால் அவனைக்குறித்து பயமுண்டு; அவன் எப்போதாவது சத்துருவின் கையில் விழுவான்."

இவ்வுலக அழிவில் அமிழ்ந்து அழியப்போகிற நாம் இந்த நிலையான கற்பாறையாகிய திருவசனத்தின்மேல் நமது நம்பிக்கையை வைக்கவேண்டாமா? வருஷத்தின் ஒவ்வொரு நாளிலும், 80,000 வேதாகமங்கள் கொடுக்கப்பட்டு, வாசிக்கப்பட்டு, வருகின்றன. இந்தத் தொகையில் நாமும் சேரவேண்டாமா? அதற்கில்லாமல் உலக பாசமாகிய மணலின்மேல் நின்றால் அந்த பயங்கரமான நாள் நம்மை மோதி யடித்துக்கொண்டுபோகும். அப்போது நமது நிலைமை எப்படிப்பட்டதாயிருக்குமென்று நாவால் விவரித்துச் சொல்லமுடியாது. அது எவ்வளவு பரிதாபமான நிலைமையாயிருக்கும். நாம் இந்த தேவ வசனத்தின்மேல் உறுதியாய் நிற்போமென்றால் அந்தநாள் வரும்போது அந்த மனிதனைப்போலவே களிப்புடன் தேவ வசனத்தின் நிமித்தம் தேவனை ஸ்தோத்திரிப்போம். V. D. K.

கிறிஸ்மஸ் கொண்டாட்டம்.

(CHRISTMAS.)

ஆ! கிறிஸ்மஸ் சீக்கிரம் வரப்போகிறது. ஜனங்கள் சந்தோஷத்தோடு அதற்கு எதிர்பார்த்திருக்கிறார்கள். அதில் சந்தோஷங் கொண்டாடும்படியாக பணம் சேகரித்து துணிமணி வாங்கி இப்பொழுதே ஆயத்தப்படுகிறார்கள். ஏன் ஆயத்தப்படுகிறார்கள்? கிறிஸ்மஸ்வுக்காகவா? ஆம், ஏன் கிறிஸ்மஸ் கொண்டாடுகிறார்கள்? வழக்கத்தினால். யாருடைய வழக்கம்? நமது முன்னோர்களின் வழக்கம். அவர்கள் இந்த வழக்கத்தை எங்கே கற்றார்கள்? இது ஒரு முக்கியமான கேள்வி.

சரித்திரம் இதன் உண்மையை வெளிப்படுத்துகிறது. அஞ்ஞானிகள் வாரத்தில் சூரிய நாளாகிய ஞாயிற்றுக்கிழமையை விசேஷித்த சூரிய நமஸ்காரத்திற்காக பிரத்தியேகப்படுத்தி வைத்தார்கள். வருஷத்தின் கடைசியில்—டிசம்பர் மாதத்தில்—ஒரு நாளை சூரியனின் பிறந்த நாளாகக் கொண்டாடினார்கள். ஏனென்றால், அப்போதுதான் மாரிகாலம் கடந்து சூரியன் தன் கிரணங்களை அதிக பிரகாசமாய் மறுபடியும் வீச துவக்குகிற காலம். இந்த நாள் அஞ்ஞானிகள் குடிக்கவும், வெறிக்கவும், சந்தோஷங் கொண்டாடவும் தக்கதாக நியமிக்கப்பட்ட நாள். அதில் உபயோகப்படுத்தப்படும், யூல மரம், அவர்கள் இயற்கையை நமஸ்கரித்த வணக்கத்திற்கு அறிகுறியாகும்.

மூன்றும் நூற்றாண்டில் அஞ்ஞானம் கிறிஸ்து மதத்தோடு சேர்ந்தபோது முழுதும் குணப்படாத அஞ்ஞானிகள் தங்கள் வழக்கங்களில் அநேகவற்றை கிறிஸ்தவ சபைக்குள் கொண்டுவந்துவிட்டார்கள். இவ்விதமாய் உண்மையான சனிக்கிழமை ஓய்வுநாளை நீக்கி ஞாயிற்றுக்கிழமையை நுழைத்தார்கள். வசந்த காலத்திற்காக கொண்டாடப்பட்ட அஞ்ஞானப்பண்டிகையாகிய ஈஸ்றரும் வந்து நுழைந்தது. சூரியன் பிறந்த நாளாக கொண்டாடப்பட்ட டிசம்பர் 25-ம் தேதியை 'நீதியின் சூரியனின்' ஜனன நாளாக கொண்டாட ஆரம்பித்தார்கள். கிறிஸ்து பிறந்த சரியானநாள் தெரியாமலிருந்ததினாலே, இந்த சூரிய அஞ்ஞான பண்டிகையாகிய (Saturnalia) சற்றெர்னேலியா ஆசரிக்கப்பட்ட நாளை கிறிஸ்து பிறந்த நாளாக கொண்டாடவும் கூடியதாயிற்று, வேத வாக்கியமாவது சரித்திரமாவது கிறிஸ்து பிறந்த நாள் டிசம்பர் 25 என்று சற்றேனும் சொல்லுகிறதில்லை. இப்படியிருக்க இந்த நாளில் இதை ஆசரிப்பதற்கு யாதொரு காரணமேயில்லை.

முதல் முதல் 3-ம் நூற்றாண்டில் கிலமெந்து என்பவன் கிறிஸ்து பிறந்தநாளாக ஜனுவரி 6-ம் தேதியை கொண்டாடும்படி செய்தான். அந்த நாளை (Epiphania) எப்பிபானியா என்று அழைத்தார்கள். ஆனால் இது அதிக காலம் நிலைநிற்கவில்லை. பிறகு, மேற்சொல்லிய பிரகாரம் அஞ்ஞானிகளை கிறிஸ்து மார்க்கத்திற்கு கொண்டுவரும்படியாக அந்த பழைய அஞ்ஞான பண்டிகையாகிய சற்றெர்னேலியாவை தவறிபோன கிறிஸ்தவ மார்க்கம் அனுசரிக்க ஆரம்பித்து, அதற்கு கிறிஸ்தவ நாமம் தரிக்கலானார்கள். சூரியன் பிறந்தநாள் என்பதை கிறிஸ்து பிறந்தநாளென்று மாற்றினார்கள். உண்மையான கிறிஸ்தவர்கள் வருஷத்தில் ஒரு நாளல்ல எந்நாளும் கிறிஸ்துவின் பிறப்பினிமித்தம் சந்தோஷங்கொள்வார்கள்.

குடிக்கவும் வெறிக்கவும் ஏற்படுத்தப்பட்ட இந்த நாளில் அநேகர் செய்வதுபோல, உதவி வேண்டியவர்களுக்கு கொடாமல், தேவையல்லாதவர்களுக்கு விருந்தளிப்பதும் வெகுமதி கொடுப்பதும் அஞ்ஞான மார்க்கத்தின் தன்மையே யல்லாது கிறிஸ்தவ மார்க்கத்தின் லட்சணமல்ல. நாம் கொடுக்கவேண்டுமென்றால் ஏழைகளுக்கும் உதவியற்றவர்களுக்கும் (லூக். 14: 12-14) அல்லது தேவனுடைய சுவிசேஷ வேலைக்கும் கொடுக்கவேண்டும்.

“எவ்விடத்தில் வாசித்தார்?”

(இது ரசல் மார்க்கத்தார் கேட்கும் கேள்வி)

சென்னை வேதமாணாக்கர் ஐக்கிய சங்கத்தார், நமது ஜூலை மாத பத்திரிகையில் காணப்பட்ட “ரசல் மார்க்கத்தின் மருளான மறுதருண உபதேசம்” என்னும் விஷயத்தை வாசித்துப் பார்த்து, 1921-ம் வருஷத்து அக்டோபர் மாதப் பத்திரிகையில் பின்வரும் கேள்விகளைக் கேட்டிருக்கிறார்கள். அதாவது: “1878-ம் ஆண்டுமுதல் கிறிஸ்து இப்பூமியிலிருக்கிறார் என்று அவர் எங்கு வாசித்தாரென்று அறியவிரும்புகிறோம். அன்றியும் இப்போது பிரகாசிக்கப்பட்டோருக்கு மறுதருணம் உண்டென்றும் அக்காலத்தில் நீதியைச் செய்வதற்கு யாருக்கும் எவ்வித பிரயோகமும் அவசியமிராதென்றும் எவ்விடத்தில் வாசித்தார்? யார் எப்போது தேதியை 1925-க்கு மாற்றியது?”

இந்த சங்கத்தார் கடந்த பெப்ரவரி மாத தங்கள் பத்திரிகை 9-ம் பக்கத்தில் எழுதியிருக்கிறதாவது:—“நிறைவேறுதலான யூபிலி 1874-இல் துவக்கமாயிற்றென்று...... அக்டோபர், நவம்பர் மாதப் பத்திரிகைகளில் காண்பித்தோம். நமதாண்டவர் 1874-ல் இவ்வுலகத்திற்கு வந்து, 1878-ல் பேர் திருச்சபைகளைப் புறக்கணித்தார் என்று டிசம்பர் மாதப் பத்திரிகையில் காண்பித்தோம்.” இப்படி ‘நமதாண்டவர் 1874-இல் இவ்வுலகத்திற்கு வந்து, 1878-இல் பேர்த்திருச்சபைகளை புறக்கணித்தார் என்று இவர்கள் சொல்லும்போது, 1878-இல் கிறிஸ்து இப்பூலோகத்தில் இருந்தார் என்று அர்த்தப்படுகிறதில்லையோ? பூலோகத்திலிருந்தாரென்று அவர்கள் வசனமே ஒத்துக்கொள்ளுகிறதல்லவா? ஆகையால் நமது பத்திரிகையில் 1878-இல் கிறிஸ்து இப்பூமிக்கு வந்தாரென்று எழுதாமல் ‘1878-ம் ஆண்டு முதல் கிறிஸ்து இப்பூமியிலிருக்கிறார்’ என்று அவர்கள் போதிப்பதாக எழுதியிருந்ததும் தப்பாகுமோ? மேலும், இப்போது பிரகாசிக்கப்பட்டோருக்கு மறுதருணம் உண்டென்றும், அக்காலத்தில் நீதியைச் செய்வதற்கு யாருக்கும் எவ்வித பிரயோகமும் அவசியமாயிராதென்றும் எவ்விடத்தில் வாசித்தார்?” என்று கேட்கிறார்கள். எங்களுக்குத் தெரிகிறபடி நாங்கள் இவர்கள் கேட்டிருக்கிறதுபோல் எழுதவில்லை என்று எண்ணுகிறோம். ஆனால் “அவர்களுக்கு (துன்மார்க்கருக்கு) ஆண்டவர் தவணை கொடுப்பார்.........மறுதருண காலத்தில் சாத்தான் மனிதரை மோசம் போக்கமாட்டானென்றும், நீதியை செய்வதற்கு எவ்வித பிரயோகமும் அவசியமிராதென்றும்” அவர்கள் சொல்வதாக எழுதியிருந்தோம். இதே காரியம் மேற்படி சங்கத்தார் பிரசுரித்திருக்கிற ‘சந்தோஷமான நற்செய்தியும், பாரம்பரையின் துற்செய்தியும்’ என்ற புஸ்தகம் 3-ம் பக்கத்தில் காணப்படுகிறது. அதாவது “பிரகாசிக்கப்படாத அனைவரும் (துன்மார்க்கர் யாவரும்) பிரகாசிக்கப்படும்படி தக்க காலத்தை குறிப்பது நியாயமே? அத்தக்க காலத்தில் மனுஷரைக் குருடாக்கி அவர்கள் மேன்பட தடையாயிருக்கிற அனைத்தையும் நீக்குவது அவசியமானது.”

இன்னும் நமது பத்திரிகையில், ‘நிலையற்ற அவர்கள் தேதியை இப்போது 1925-ம் வருஷத்துக்கு மாற்றியிருக்கிறார்கள்,’ என்று நாம் சொல்லும்போது ‘யார் மாற்றியது’ என்று கேட்கிறார்கள். ஐயோ! அவர்கள் கொள்கையே அவர்களுக்குத் தெரியாமலிருப்பது மிகவும் பரிதாபமே. அவர்களுக்குள்ளே தலைமை பெற்றிருக்கிறவர் போதிக்கிறது இவர்களுக்குத் தெரிகிறதில்லைபோல் தோன்றுகிறது. இந்த ரசல் மார்க்கத்தாரில் இப்பொழுது மிகவும் தலைமை வாய்ந்தவராகிய ஜே. யி. ரூத்வோர்ட் (Judge J. E. Routhford) என்பவர் சொல்லுகிறதாவது, “நாம் இங்கே காட்டியிருக்கிற பிரகாரம் பெரிய யூபிலி கி. பி. 1925-இல் துவக்கப்போகிறதாயிருக்கிறது.........ஆகையினாலே 1925-இல் ஆபிரகாம் ஈசாக்கு யாக்கோபு இன்னும் விசுவாசமுள்ள முற்கால தீர்க்கதரிசிகள் யாவரும் எழுந்

திருப்பார்களென்று நாம் நம்பிக்கையோடே எதிர்பார்க்கலாம்.” ‘Millions now Living will never die’ பக்கம் 89, 90.

“1925-ம் வருஷம், முற்கால விசுவாசிகளின் உயிர்த்தெழுதலையும், புது சிருஷ்டிப்பின் துவக்கத்தையும் குறிக்கிறதாயிருக்கவேண்டும்.” பக்கம் 97.

அப்பொழுது (1925-இல்) உயிரோடிருக்கும் ஜனங்கள் மரியாமல் ஜீவித்திருப்பார்களென்றும், மரித்த எல்லாரும் உயிரோடெழுப்பப்பட்டு ஜீவனை யடையக்கூடிய சமயம் எல்லாருக்கும் கொடுக்கப்படுமென்றும் இவ்விதமாய் கிறிஸ்துவின் அரசாட்சி இப்பூமியில் ஸ்தாபிக்கப்படுமென்றும், நமது நிகழ்கால சத்தியத்தில் சொல்லப்பட்டிருந்தபடியே மேற்படி புஸ்தகம் 100-ம், 102-ம் பக்கங்களில் சொல்லப்பட்டிருக்கிறது.

வேத மாணாக்கர் யார் தேதியை 1925-க்கு மாற்றியது என்று கோபத்துடனே கேட்டிருக்கிறார்கள். ஆனால் அவர்களுடைய பத்திரிகையில் ‘நிறைவேறலான யூபிலி 1874-இல் துவக்கமாயிற்று’ என்று அவர்கள் சொல்லும்போது அவர்களுடைய முக்கியஸ்தர் ரூத்வோர்ட் ‘பெரிய யூபிலி 1925-இல் துவக்கப்போகிறதாயிருக்கிறது’ என்று அவர்களுக்கு விரோதமாய் சொல்லுகிறார். இவ்விதமாக கிறிஸ்து இன்னின்ன காலத்தில் வருவார் வருவாரென்று காலத்தைக் கடத்திக்கொண்டே போகிறார்கள். இந்த மோசமான சமயத்தில் கிறிஸ்துவின் வசனத்தை மனதில் பேணி நம்மைக் காத்துக்கொள்ளவேண்டும். “அந்த நாளையும் நாழிகையையும் பிதா ஒருவர் தவிர மற்றொருவனும் அறியான்......அக்காலத்தை நீங்கள் அறியாதபடியால் எச்சரிக்கையாயிருங்கள். (மாற்கு 13: 32, 33) என்று கிறிஸ்து நம்மை எச்சரிக்கிறார்.

லூசிபர் சாத்தானான பிறகு என்ன நடந்தது?

(WHAT HAPPENED AFTER LUCIFER BECAME SATAN?)

“வானத்திலே யுத்த முண்டாயிற்று; மிகாவேலும் அவனைச் சேர்ந்த தூதர்களும் வலுசர்ப்பத்தோடே யுத்தம் பண்ணினார்கள்; வலுசர்ப்பமும் அதைச்சேர்ந்த தூதரும் யுத்தம் பண்ணியும் ஜெயங்கொள்ளவில்லை—வானத்தில் அவர்கள் இருந்த இடமும் காணப்படாமற்போயிற்று—உலக மனைத்தையும் மோசம் போக்குகிற பிசாசு என்றும் சாத்தான் என்றும் சொல்லப்பட்ட பழைய பாம்பாகிய பெரிய வலுசர்ப்பம் தள்ளப்பட்டது; அது பூமியிலே விழத் தள்ளப்பட்டது. அதனோடேகூட அதைச்சேர்ந்த தூதரும் தள்ளப்பட்டார்கள்.” வெளி. 12: 7-9. இயேசு சீஷர்களை நோக்கி ‘சாத்தான் மின்னலைப்போல வானத்திலிருந்து விழுகிறதைக் கண்டேன்’ என்றார். லூக். 10: 18. ஐயோ! இவனுக்கு ஏன் இந்த முடிவு வந்தது! “அதிகாலையின் மகனாகிய விடிவெள்ளியே, நீ வானத்திலிருந்து விழுந்தாயே! ஜாதிகளை ஈனப்படுத்தினவனே, நீ தரையிலே விழ வெட்டப்பட்டாயே!—நான் வானத்துக்கு ஏறுவேன், தேவனுடைய நட்சத்திரங்களுக்கு மேலாக என் சிங்காசனத்தை உயர்த்துவேன்; வடபுறங்களிலுள்ள ஆராதனைக்கூட்டத்தின் பர்வதத்திலே வீற்றிருப்பேன் என்றும்—நான் மேகங்களுக்கு மேலாக உன்னதங்களில் ஏறுவேன்; உன்னதமானவருக்கு ஒப்பாவேன் என்றும் உன் இருதயத்தில் சொன்னாயே—ஆனாலும் நீ அகாதமான பாதாளத்திலே தள்ளுண்டுபோனாய்.” ஏசா. 14: 12-15.

மறுபடியும் பரலோகம் சந்தோஷமான நிலைமைக்குள்ளாயிற்று. லூசிபரைத் தள்ளின பிறகு, அவனுக்குப் பதிலாக காபிரியேல் ஏற்படுத்தப்பட்டார். இப்பொழுது இந்தத் தூதன் தான் கிறிஸ்துவுக்கு அடுத்தவர். ‘உங்கள் அதிபதியாகிய மிகாவேலைத் தவிர என்னோடே

கூட அவர்களுக்கு விரோதமாய் பலங்கொள்ளுகிற வேறொருவரும் இல்லை.' என்று அந்தத் தூதன் தாமே சொல்லுகிறார். 'அவருடைய சரீரம் படிகப்பச்சையைப்போலவும், அவருடைய முகம் மின்னலின் பிரகாசத்தைப்போலவும், அவருடைய கண்கள் எரிகிற தீபங்களைப் போலவும், அவருடைய புயங்களும் அவருடைய கால்களும் துலக்கப்பட்ட வெண்கல நிறத்தைப்போலவும், அவருடைய வார்த்தைகளின் சத்தம் ஜனக்கூட்டத்தின் ஆரவாரத்தைப்போலவும் இருந்தது ? தானி. 10: 21, 6. இதில், பிதாவுக்கும் (தானி. 7: 9), குமாரனுக்கும் (வெளி. 1: 13-15) வேதத்தில் கொடுக்கப்பட்டிருக்கும் விஸ்தரிப்பைப் போன்ற விஸ்தரிப்பு இந்த தூதனுக்கும் கொடுக்கப்பட்டிருப்பது கவனிக்கத்தக்க ஓர் விஷயம்.

தேவனும் குமாரனும் தீர்மானித்திருந்தபடியே, இந்தப் பூமி உண்டாக்கப்பட்டது. அதிலே சிருஷ்டிக்கப்பட்டிருந்த மனுஷனானவன் சிருஷ்டிகரை முழு விருப்பத்தோடு சுய இச்சையாய்ச் சேவித்து, தன்னுடைய உண்மையை விளங்கப்பண்ணவேண்டியவனாயிருந்தான். கெட்டுப்போகாத நல்ல தேவதூதர்களும் இவனோடு சம்பாஷித்துக்கொண்டு வந்தார்கள். பரலோகத்தில் நடந்த இந்த மகா சம்பவத்தை அவனுக்குப் போதனையாக எடுத்துச் சொன்னார்கள். என்றாலும், இவனும் ஆண்டவருடைய பிரமாணத்தை மீறி பாவியானான். இந்த மனிதனுக்கு ரட்சிப்பு அளிக்கப்பட்டிருக்கிறது. இதுபோலவே, விழுந்துபோன தூதர்களுக்கும் ரட்சிப்பு அளிக்கப்பட்டிருந்தது. அவர்கள் மட்டும் மனந்திரும்பி யிருப்பார்களென்றால் அவர்கள் பாவம் மன்னிக்கப்பட்டும் இருக்கும். தேவ குமாரன் அந்தத் தூதர்களுக்காக மரிக்கவேண்டியதாயிருந்தாலும் இருந்திருக்கும். ஏனென்றால், 'இரத்தஞ் சிந்துதலில்லாமல் பாவ மன்னிப்பு உண்டாகாது.' எபி. 9: 22. அத்தூதர்களுடைய ரட்சிப்பின் விஷயத்தைப்பற்றி நமக்கு ஒன்றும் வெளிப்படுத்தப்படவில்லை. ஏனென்றால் இந்த வேதாகமம் மனிதருக்கேயன்றி தூதருக்கு வெளிப்படுத்தப்பட்டதல்ல.

மனிதரை ரட்சிக்கும்படி அவர் எப்படி மனிதனானாரோ, அப்படியே தூதர்களை ரட்சிக்கும்படி தூதனாகியிருக்கிறார். ஜெநிப்பிக்கப்பட்ட தேவ குமாரன் முதலில் சிருஷ்டிகராயிருந்து, எல்லாவற்றையும் சிருஷ்டித்தார். அவர் சிருஷ்டிகராகவே விளங்கினார். பின்னால் அவர் வேதத்தில் தூதனென்று அழைக்கப்பட்டிருக்கிறார்.

"வழியில் உன்னைக் காக்கிறதற்கும், நான் ஆயத்தம் பண்ணின ஸ்தானத்துக்கு உன்னைக் கொண்டுபோய்ச் சேர்க்கிறதற்கும், இதோ நான் ஒரு தூதனை உனக்கு முன்னே அனுப்புகிறேன்." யாத். 23: 20, 23; அப். 7: 38. இந்த தூதன் கிறிஸ்துவே. 1 கொரி. 10: 4.

"அவருடைய சமுகத்தின் தூதனானவர் அவர்களை ரட்சித்தார்." ஏசா. 63: 9. "நீங்கள் தேடுகிற ஆண்டவரும் நீங்கள் விரும்புகிற உடன்படிக்கையின் தூதனுமானவர் தம்முடைய ஆலயத்துக்குத் தீவிரமாய் வருவார்." மல். 3: 1. இதனாலே தேவ குமாரன் மனிதருக்கு மாதிரியைக் காட்டி எப்படி மீட்புண்டாக்குகிற இயேசுவானாரோ அப்படியே தேவ தூதருக்கும் மாதிரியைக் காட்டி அவர்களை ரட்சிக்க மிகாவேலானார். இந்த தேவ தூதன் ஊழியத்தை, அவர் இப்பூவுலகில் மனுஷனாகப் பிறக்குமட்டும் செய்துவந்தாரென்று ஒருவர் எழுதியிருக்கிறார்.

சாத்தான் பரலோகத்திலிருந்து தள்ளப்பட்டபோதிலும், தேவன் அவருடைய மட்டற்ற ஞானத்தினாலே அவனை அழிக்கவில்லை. அன்பினால் செய்யும் ஊழியந்தான் அவருக்குகந்தது. அவருடைய சிருஷ்டிகள் அவரின் நீதியை உணரவேண்டும். பாவத்தின் லோஷ்டத்தையும் அதின் பலனையும் முன்னதாகவே அறியக்கூடாதவர்களாக இருந்தார்கள். சாத்தானை உடனே அழித்திருந்தால், அவருடைய நீதி மற்ற பரலோக வாசிகளுக்கும் மற்ற உலகத்தாருக்கும் விளங்கியிராது. அன்பினால் அவரைத் தொழுதுகொள்ளுகிறதற்குப் பதி

லாக பயத்தினாலே அவரைச் சேவிக்கவேண்டியதாக நேரிட்டிருக்கும். ஆகையினால், சிருஷ்டிகளெல்லாருடைய நன்மையின்பொருட்டு, தேவனுடைய நீதியையும், இரக்கத்தையும், அவருடைய பிரமாணத்தின் மாறாத் தன்மையையும் அவர்களெல்லாரும் அறிந்துகொள்ளும்படியாக சாத்தானை அப்போது அழிக்கவில்லை. இப்பொழுது அவனுடைய கிரியையின் பலனை மற்றவர்கள் பார்த்துக்கொண்டு வருகிறார்கள். அவன் மனித ஜாதிக்குள் உண்டாக்கியிருக்கிற செயல்கள் எவ்வளவு பயங்கரமானது என்றும் அறிகிறார்கள். தேவனுடைய அதிகாரத்துக்குக் கீழ்ப்படியாததினால் விளையும் பயன்களையும் உணர்ந்துகொள்ளுகிறார்கள்.

இந்த சாத்தானுடைய காரியத்தில், "அழிவுக்கு முன்னானது அகந்தை; விழுதலுக்கு முன்னானது மனமேட்டிமை." என்ற நீதிமொழியின் உண்மை நன்கு விளங்குகிறதல்லவா? இதை வாசிக்கும் நண்பரே! சாத்தானுக்கும் அவனுடைய தூதர்களுக்கும் தவணையின் காலம் கொடுக்கப்பட்டிருந்ததுபோல, உனக்கும் எனக்கும் தவணையின் காலம் கொடுக்கப்பட்டிருக்கிறது. அந்த தவணையின் காலம் இதுவே, "இதோ இப்பொழுதே அநுக்கிரக காலம், இப்பொழுதே ரட்சணிய நாள்." 2 கொரி. 6: 2. இதிலே நம்முடைய ரட்சிப்பைப்பற்றி கவலையற்றிராதிருப்போமாக. பரிசுத்த ஆவியை துக்கப்படுத்தி அவர் எடுத்துகாட்டும் சத்தியத்துக்குத் துரோகம் செய்து நம்முடைய மனதை கடினப்படுத்தினால், நாமும் சாத்தானாகி விடுவோம். பிறகு, நமக்குத் தவணை கிடையாது. கடைசியாக நம்முடைய முடிவு அழிவுதான். ஆகையால் பிரியமானவரே, உமக்கு இந்தப் பத்திரிகை மூலமாய் காட்டப்படும் சத்தியத்திற்கு உமது மனதை அடையாதேயும். உம்முடைய இருதயத்தை திறந்துவையும். பரிசுத்த ஆவி உம்மிடத்தில் வேலை செய்ய இடங்கொடும். பாவத்தை நீக்கி கிறிஸ்துவின் மூலமாய் தேவனோடு ஒப்புரவாகும். இல்லாவிட்டால் நியாயத்தீர்ப்பு நாளில் நாம் தப்பமாட்டோம்.

V. D. கோவிற் பிள்ளை.

? முப்பத்துமூன்று கேள்விகள் ?
(THIRTY-THREE QUESTIONS.)

வேதத்திற்கு ஒத்து உங்கள் மனம் திருப்தி யடையும்படி இவைகளுக்கு உத்தரவளியுங்கள்.

"ஏழாம் நாளோ ஓய்வுநாள்" என்று கர்த்தர் சொல்லும்போது, முதல் நாள் ஓய்வு நாளென்று அவர் அர்த்தங் கொள்ளுகிறாரோ? "ஏழாம் நாளோ உன் தேவனாகிய கர்த்தருடைய ஓய்வுநாள், அதிலே யாதொரு வேலையும் செய்யவேண்டாம்" என்று அவர் சொல்லும்போது, மற்ற நாளைப்பார்க்கிலும் அந்த நாளில் அதிகமாய் நாம் வேலை செய்யவேண்டுமென்று அவர் எண்ணுகிறார்?

"ஆறு நாளும் நீ வேலை செய்து உன் கிரியைகளையெல்லாம் நடப்பிப்பாயாக; ஏழாம் நாளோ உன் தேவனாகிய கர்த்தருடைய ஓய்வுநாள்; அதிலே யாதொரு வேலையும் செய்ய வேண்டாம்" என்று கர்த்தருரைக்கும்போது, நாம் ஏழாம நாளில் வேலை செய்து வேலை நாட்கள் ஆறிலொன்றில் ஓய்ந்திருக்கவேண்டுமென்று அவர் கருத்து கொள்ளுகிறார்?

ஏழாம் நாள் இனிமேல் தம்முடைய ஓய்வுநாளல்லவென்று தேவன் எப்போதாவது சொல்லியிருக்கிறாரா? அப்படி யிருக்குமானால், எங்கே சொல்லியிருக்கிறார்? ஆனால், நாம் ஏழாம் நாளில் வேலை செய்யவேண்டுமென்று அவர் விரும்புவாரானால் அவர் நமக்கு அப்படி சொல்லியிருக்கவேண்டாமா? வாரத்தின் முதல் நாள் ஓய்வுநாளென்று ஆண்ட

வர் எப்போதாவது சொல்லியிருக்கிறாரா? அப்படியிருக்குமானால், அவர் சொன்னது எங்கேயிருக்கிறது? ஆனால், நாம் வாரத்தின் முதலாம் நாளை பரிசுத்தமாய் ஆசரிக்க வேண்டுமென்று அவர் விரும்புவாரானால், இந்த நாளில் வேலை செய்து ஏழாம் நாளை ஆசரிக்கவேண்டுமென்று அவர் ஒரு தடவை கட்டளை கொடுத்ததுபோல, இதைக்குறித்தும் நமக்கு அவர் சொல்லியிருக்கவேண்டுமல்லவா?

எல்லா நாளும் ஒன்றுதான் என்று சிலர் சொல்லுகிறது வாஸ்தவமாயிருக்குமானால், ஓய்வுநாள் உண்டாயிருக்க முடியுமா? அல்லது மற்றவர்கள் சொல்வதுபோல ஒவ்வொரு நாளையும் ஆண்டவருக்கென்று ஆசரிக்கவேண்டுமென்பது உண்மையாயிருக்குமானால் வேலை நாட்கள் உண்டாயிருக்க முடியுமா?

அநேகர் சொல்வதுபோது எந்த நாளை ஆசரித்தாலென்ன, அதில் வித்தியாசமில்லை யென்பதை நாம் உண்மையாய் எடுப்போமானால், ஞாயிற்றுக்கிழமை ஆசரிப்பைப்போல சனிக்கிழமை ஆசரிப்பும் சரியாயிராதா? அப்படியானால் சனிக்கிழமையை ஆசரிக்கும் படி போதிக்கிற ஏழாம் நாள் விசுவாசிகளின் போதனையை ஞாயிற்றுக்கிழமையை ஆசரிப்பவர்கள் ஏன் தடுக்கிறார்கள்? அல்லது சனிக்கிழமையை ஆசரியாமல் ஞாயிற்றுக்கிழமையை ஆசரிக்குங் காலமட்டுந்தானா எந்த நாளை கைக்கொண்டாலும் வித்தியாசமில்லை?

"வானமும் பூமியும் ஒழிந்துபோனாலும் நியாயப்பிரமாணத்திலுள்ள ஒரு எழுத்தாகிலும் ஒரு எழுத்தின் உறுப்பாகிலும் ஒழிந்துபோகாது" என்று ஆண்டவர் உரைக்கும்போது, கற்பனை முழுதும் ஒழிந்துபோயிற்று என்று நாம் எண்ணும்படி அவர் விரும்புகிறாரோ? "மனுஷருடைய கற்பனைகளை உபதேசங்களாக போதித்து, வீணாய் எனக்கு ஆராதனை செய்கிறார்கள்" (மத். 15: 9) என்று தேவன் சொல்லும்போது, நாம் தேவனுடைய கற்பனையை போதித்தாலும் அல்லது மனுஷருடைய கற்பனையைப் போதித்தாலும் அதில் வித்தியாசம் ஒன்றுமில்லை என்று அவர் அர்த்தங்கொள்ளுகிறார்? வாரத்தின் முதல் நாளை ஆசரிப்பது தேவ கட்டளையா அல்லது மனுஷ கற்பனையா?

"நான் உங்களுக்கு கற்பிக்கிற யாவையும் நீங்கள் செய்வீர்களானால், என் சிநேகிதராயிருப்பீர்கள்" (யோவா. 15: 14) என்று ஆண்டவர் சொல்லுகிறபோது, அவர் நமக்கு கட்டளையிட்டிருக்கிறவைகளை நாம் செய்யப் பிரியப்படாவிட்டால், நாம் அவருடைய சிநேகிதராயிருப்போமா? அவருடைய கற்பனைகளைத் தள்ளி அவர் கட்டளையிடாத சிலவற்றை செய்வதினால் நாம் எப்படி நமது இரட்சகரை மகிமைப்படுத்தக்கூடும்? உயிர்த்தெழுதலின் நாளை கைக்கொள்ளும்படி அவர் எப்போதாவது நமக்கு கட்டளையிட்டிருக்கிறாரா? அப்படியிருக்குமானால் அந்தக் கட்டளை எங்கே காணப்படுகிறது? ஆனால், அந்த நாளை கைக்கொள்ளும்படி அவர் நமக்கு கட்டளையிட்டிராததினாலே, ஏழாம் நாளை கைக்கொள்ளும்படி கற்பிக்கிற அவருடைய கற்பனையைத் தள்ளி, இதை ஆசரிப்பதினால், நாம் அவரை மகிமைப்படுத்த முடியுமா?

"நியாயப்பிரமாணத்தை மீறுவதே பாவம்" (1 யோ. 3: 4) என்றும் அவர் "தமது ஜனங்களின் பாவங்களை நீக்கி அவர்களை இரட்சிக்க" (மத். 1: 21) வந்தார் என்றும், ஆண்டவர் சொல்லும்போது, நியாயப்பிரமாணத்தை மீறுகிறதிலிருந்து நம்மை ரட்சிக்க அவர் வரவில்லையா? நாலாம் கற்பனை, நியாயப்பிரமாணத்தின் ஓர் பாகமில்லையா? அப்படியானால், மற்றக் கற்பனையைப்போலவே, ஓய்வுநாள் கற்பனையை மீறுகிறதிலிருந்து நம்மை இரட்சிக்க அவர் வரவில்லையா?

"ஜீவ விருட்சத்தின்மேல் அதிகாரமுள்ளவர்களாவதற்கு அவருடைய கற்பனையின்படி செய்கிறவர்கள் பாக்கியவான்கள்" (வெளி. 22: 14) என்று தேவன் சொல்லும்போது, தேவனுடைய கற்பனைகளை கைக்கொள்ள பிடிவாதமாய் மறுக்கிறவர்களுக்கு ஜீவ விருட்சத்தில் பங்குண்டா? "தேவனுக்குப் பயந்து அவர் கற்பனைகளைக் கைக்கொள்;

எல்லா மனுஷர்மேலும் விழுந்த கடமை இதுவே." (பிர. 12: 13) என்று கர்த்தர் உரைக்கும்போது, அவருடைய கற்பனைகளை நாம் கைக்கொள்ளக்கூடாது என்று அவர் அர்த்தப்படுத்துகிறார்? அவைகளை மற்றவர்களுக்கு போதிக்கக்கூடாது என்று அவர் எண்ணுகிறார்?

"கர்த்தருடைய வேதத்தில் (பிரமாணத்தில்) பிரியமாயிருந்து இரவும் பகலும் அவருடைய வேதத்தில் (பிரமாணத்தில்) தியானமாயிருக்கிற மனுஷன் பாக்கியவான்" (சங். 1: 2) என்று ஆண்டவர் சொல்லி இருக்கையில் நியாயப்பிரமாணத்தைப்பற்றி ஏதாவது வாசிக்கவும் கேட்கவும் எனக்குப் பிரியமில்லாவிட்டால், நான் சரியான ஆவியுள்ளவனாயிருக்க முடியுமா? நான் தேவனுக்கு கீழ்ப்படிய வேண்டுமா, கீழ்ப்படிய வேண்டாமா? நான் அவருடைய கற்பனையை கைக்கொள்ள வேண்டுமா, கைக்கொள்ள வேண்டாமா? அவருடைய கற்பனையை கைக்கொள்ள எனக்குப் பிரியமில்லாவிட்டால், நான் என் பாவத்திலிருந்து இரட்சிக்கப்பட்டிருக்கிறேனா? என்ன உத்தரவு என்னால் கொடுக்க முடியும்?

சாக்குப்போக்குகளுக்கு உத்தரவு.

(தொடர்ச்சி)

8. சாக்கு.—நான் சத்தியத்தை ஏற்றுக்கொள்ள ஆரம்பித்தால், முடிவுவரைக்கும் அதின்படி நடக்க என்னால் முடியுமோ என்று பயப்படுகிறேன்.

உத்தரவு.—"வழுவாதபடி உங்களைக் காக்கவும், தமது மகிமையுள்ள சந்நிதானத்திலே மிகுந்த மகிழ்ச்சியோடே உங்களை மாசற்றவர்களாய் நிறுத்தவும் (தேவன்) வல்லமையுள்ளவர்." (யூதா. 24.) "நீ பயப்படாதே. நான் உன்னுடனே இருக்கிறேன்; திகையாதே, நான் உன் தேவன்; நான் உன்னைப் பலப்படுத்தி உனக்குச் சகாயம் பண்ணுவேன்; என் நீதியின் வலது கரத்தினால் உன்னைத் தாங்குவேன்." (ஏசா. 41: 10.)

9. முன் ஒரு தடவை பிரயாசப்பட்டும் தவறிவிட்டேன், ஆகையினால் மறுபடியும் பிரயாசப்பட எனக்கு இஷ்டமில்லை.

"என் சத்துருவே, எனக்கு விரோதமாய்ச் சந்தோஷப்படாதே; நான் விழுந்தாலும் எழுந்திருப்பேன்; நான் இருளிலே உட்கார்ந்தால், கர்த்தர் எனக்கு வெளிச்சமாயிருப்பார்." (மீகா. 7: 8.) "நீதிமான் ஏழுதரம் விழுந்தாலும் திரும்பவும் எழுந்திருப்பான்; துன்மார்க்கரோ தீங்கிலே இடறுண்டு கிடப்பார்கள்." (நீதி. 24: 16.)

10. நான் ஒரு சீர்கெட்டவன்; கடவுள் எனக்காகக் கவலைப்படமாட்டாரென்று எண்ணுகிறேன்.

"இஸ்ரவேல் புத்திரர் தங்கள் வழியை மாறுபாடாக்கி, தங்கள் தேவனாகிய கர்த்தரை மறந்ததினிமித்தம் அழுதுகொண்டு விண்ணப்பஞ் செய்யும் சத்தம் உயர்ந்த ஸ்தானங்களிலே கேட்கப்படும். சீர்கெட்ட பிள்ளைகளே, திரும்புங்கள்; உங்கள் சீர்கேடுகளை குணமாக்குவேன் என்றார். இதோ, உம்மிடத்தில் வருகிறோம்; நீரே எங்கள் தேவனாகிய கர்த்தர்." (எரே. 3: 21, 22.)

11. என்னுடைய ஆசாபாசங்களை என்னால் விட முடியாது.

"வாலிபனே உன் இளமையிலே சந்தோஷப்படு, உன் வாலிப நாட்களிலே உன் இருதயம் உன்னைப் பூரிப்பாக்கட்டும்; உன் நெஞ்சின் வழிகளிலும், உன் கண்ணின் காட்சிகளிலும் நட; ஆனாலும் இவை எல்லாவற்றினிமித்தமும் தேவன் உன்னை நியாயத்திலே கொண்டுவந்து நிறுத்துவார் என்று அறி." (பிர. 11: 9.) "ஜீவ மார்க்கத்தை எனக்குத் தெரியப்படுத்துவீர்; உம்முடைய சமுகத்தில் பரிபூரண ஆனந்தமும், உம்முடைய வலது பாரிசத்தில் நித்திய பேரின்பமும் உண்டு." (சங். 16: 11).

12. என்னுடைய கிருபையின் காலம் கடந்துவிட்டது.

"நீங்கள் கர்த்தரிடத்துக்குத் திரும்பினால், உங்கள் சகோதரரும் உங்கள் பிள்ளைகளும் தங்களைச் சிறைப்பிடித்தவர்களுக்கு முன்பாக இரக்கம் பெறுகிறதற்கும், இந்த தேசத்திற்குத் திரும்புகிறதற்கும் அது ஏதுவாகும்; உங்கள் தேவனாகிய கர்த்தர் கிருபையும் இரக்கமுமுள்ளவர்; நீங்கள் அவரிடத்திற்குத் திரும்பினால், அவர் தம்முடைய முகத்தை உங்களைவிட்டு விலக்குவதில்லை." (2 நாளா. 30: 9). "பிதாவானவர் எனக்குக் கொடுக்கிற யாவும் என்னிடத்தில் வரும்; என்னிடத்திடத்தில் வருகிறவனை நான் புறம்பே தள்ளுவதில்லை." (யோவான் 6: 37).

13. என்னுடைய சிநேகிதர்கள் யாவரையும் நான் விடவேண்டியதிருக்கும்.

"சிநேகிதருள்ளவன் சிநேகம் பாராட்டவேண்டும்; சகோதரனிலும் அதிக சொந்தமாய்ச் சிநேகிப்பவனு முண்டு." (நீதி. 18: 24). "தகப்பனையாவது தாயையாவது என்னிலும் அதிகமாய் நேசிக்கிறவன் எனக்குப் பாத்திரன் அல்ல; மகனையாவது மகளையாவது என்னிலும் அதிகமாய் நேசிக்கிறவன் எனக்கு பாத்திரன் அல்ல." (மத். 10: 37). "அது மாத்திரமல்ல, என் கர்த்தராகிய கிறிஸ்து இயேசுவை அறிகிற அறிவின் மேன்மைக்காக எல்லாவற்றையும் நஷ்டமென்று எண்ணிக்கொண்டிருக்கிறேன்." (பிலி. 3: 8).

14. என்னுடைய அலுவல் போய்விடும்; என்னால் பிழைக்க முடியாது.

"முதலாவது தேவனுடைய ராஜ்யத்தையும் அவருடைய நீதியையும் தேடுங்கள், அப்பொழுது இவைகளெல்லாம் உங்களுக்குக்கூடக் கொடுக்கப்படும்." (மத். 6: 33). "தேவனாகிய கர்த்தர் சூரியனும் கேடகமுமானவர்; கர்த்தர் கிருபையும் மகிமையும் அருளுவார்; உத்தமமாய் நடக்கிறவர்களுக்கு நன்மையை வழங்காதிரார்." (சங். 84: 11).

15. என்னால் ஐசுவரியவனாக முடியாதே.

"கர்த்தரின் ஆசீர்வாதமே ஐசுவரியத்தைத் தரும்; அதனோடே அவர் வேதனையைக் கூட்டார்." (நீதி. 10: 22). "பணப்பிரியன் பணத்தினால் திருப்தியடைவதில்லை; செல்வப்பிரியன் செல்வப்பெருக்கினால் திருப்தியடைவதில்லை. இதுவும் மாயையே." (பிர. 5: 10). "உண்மையுள்ள மனுஷன் பரிபூரண ஆசீர்வாதங்களைப் பெறுவான்; ஐசுவரியவானாகிறதற்குத் தீவிரிக்கிறவனோ ஆக்கினைக்குத் தப்பான்." (நீதி. 28: 20).

16. என்னுடைய பாவங்கள் மன்னிக்கப்பட்டிருக்கிறது என்று எனக்கு எப்படித் தெரியும்?

"அவர் ஒளியிலிருக்கிறதுபோல நாமும் ஒளியிலே நடந்தால் ஒருவரோடொருவர் ஐக்கியப்பட்டிருப்போம். அவருடைய குமாரனாகிய இயேசுகிறிஸ்துவின் இரத்தம் சகல பாவங்களையும் நீக்கி, நம்மை சுத்திகரிக்கும். நமக்கு பாவமில்லை யென்போமானால், நம்மை நாமே வஞ்சிக்கிறவர்களாயிருப்போம். சத்தியம் நமக்குள் இராது. நம்முடைய பாவங்களை நாம் அறிக்கையிட்டால், பாவங்களை நமக்கு மன்னித்து எல்லா அநியாயத்தையும் நீக்கி நம்மை சுத்திகரிப்பதற்கு அவர் உண்மையும் நீதியும் உள்ளவராயிருக்கிறார்." (1 யோவா. 1: 7-9). "தன் பாவங்களை மறைக்கிறவன் வாழ்வடையமாட்டான்; அவைகளை அறிக்கைசெய்து விட்டுவிடுகிறவனோ இரக்கம் பெறுவான்." (நீதி. 28: 13). "நான் என் அக்கிரமத்தை மறைக்காமல், என் பாவத்தை உமக்கு அறிவித்தேன்; என் மீறுதல்களைக் கர்த்தருக்கு அறிக்கையிடுவேன் என்றேன்; தேவரீர் என் பாவத்தின் தோஷத்தை மன்னித்தீர்." (சங். 32: 5).

17. இதைப்பற்றி நான் கவலைப்படுகிறதில்லை, நான் அதிக கெட்டவனுமல்ல.

"நித்திரையைவிட்டு எழுந்திருக்கத்தக்க வேளையாயிற்றென்று, நாம் காலத்தை அறிந்தவர்களாய், இப்படி நடக்கவேண்டும். நாம் விசுவாசிகளானபோது இரட்சிப்பு சமீபமாயிருந்ததைப்பார்க்கிலும் இப்பொழுது அது நமக்கு அதிக சமீபமாயிருக்கிறது. இரவு சென்று போயிற்று, பகல் சமீபமாயிற்று; ஆகையால் அந்தகாரத்தின் கிரியைகளை நாம் தள்ளிவிட்டு, ஒளியின் ஆயுதங்களைத் தரித்துக்கொள்ளக்கடவோம்." (ரோ. 13: 11, 12). "நீங்கள் மனந்திரும்பி பிள்ளைகளைப்போல் ஆகாவிட்டால், பரலோக ராஜ்யத்தில் பிரவேசிக்கமாட்டீர்கள் என்று, மெய்யாகவே உங்களுக்குச் சொல்லுகிறேன்." (மத். 18: 3).

சுகாதார விஷயங்கள்

O. SMITH, M. D. டாக்டர் சிமித்.

அபாயகரமான பான வகைகள்.

HARMFUL DRINKS.

கடந்தமுறை நாம், நமது சரீர சுகத்துக்கேதுவான பானங்களை பருகுவதைக் குறித்து தர்க்கித்தறிந்தோம். இம்முறை, அபாயகரமான பானங்களைப்பற்றியும், அவைகள் அப்படி யிருக்கிறதின் காரணத்தைப்பற்றியும் பேசுவதற்கு விருப்பங்கொண்டிருக்கிறோம். இப்பான வகைகளுள், அநேகமாய், தேயிலையும் காப்பியுமே சர்வசாதாரணமாயிருக்கிறது. மேற்சொன்ன இப்பெயர்களில் யாதாவதொன்றை உச்சரித்துவிட்டால், உடனே, சிலர் ஆத்திரங்கொண்டவர்களாய்: "நான் விடாய்த்து பெலனற்று இருக்கும்போது, அதிக பெலனையும் ஊக்கத்தையும் கொடுக்கிற பானம்" இதுதானென்று சொல்லுகிறார்கள். சரி, அவர்கள் சொல்லுகிறபடியே அபாயகரமானதல்ல என்றே வைத்துக் கொள்வோம்; என்றாலும் இதன் விஷயத்தைப்பற்றிய உண்மையையும் சற்றே ஆராய்ந்து பார்ப்போம்.

தேயிலையில் தேனின் (Tannin) என்ற ஓர் வகை விஷப்பொருள் அதிகமாய் சேர்ந்திருக்கிறது. மேலும் தேனின் என்ற இவ்விஷப்பொருள் மனுஷ தசைநார்களில் என்ன வேலை செய்கிறதென்று தெரியுமா? நமது மெல்லிய சருமத்தை மிருகத்தின் பதனிட்ட தோலைப்போல, கெட்டியாயும் கடினமாயு மாக்குகிறது. அல்லாமலும் தேனின் என்ற இப்பொருளையே மிருகங்களின் தோல்களை பதனிட்டு கெட்டிப்படுத்துவதற்கென்று மிகவும் அதிகமாய் உபயோகப்படுத்துகிறார்கள். இவ்விதமே, தேயிலைப்பானம் நமது வயிற்றுக்குள் சென்றவுடன் இரைப்பையினுள் அவயவங்களைச் சுற்றியிருக்கும் மிருதுவான தசையையும் கெட்டிப்படுத்திவிடுகிறது. இம்மிருதுவான தசையில், ஜீரண சக்திக்கு உதவியாயிருக்கிற புளிப்பு ரசத்தை, சுரப்பிக்கும் ஊற்றுக்கண்கள் அநேகம் உண்டு. ஆகவே, இம்மிருதுவான தசை அதிக கெட்டியாயும் கடினமாயும் ஆய்விடுகிறதினால் இப்புளிப்பு ரசத்தை எளிதிலே செலுத்துவதற்கு சத்தியற்றுப்போகிறது. இது மாத்திரமல்ல, அம்மெல்லிய தசையில் இருக்கும் ரச ஊற்றுக்கண்களும் கடினப்பட்டு ஜீரணரசமாகிற புளிப்பு ரசத்தை சுரப்பிக்கக்கூடாமற்போகிறது. ஆகையினால் ஆகாரம் அதனுள் ஜீரணிப்பிக்கும்படி வரும்போது, அங்கே போதுமான ரசம் இல்லாமற்போகிறது.

இன்னும், தேயிலைப்பானத்தில் இதைவிட அதிக கேடான ஓர் பொருள் இருக்கிறது; அது Theobromin என்னப்படும். இவ்விஷம் மகா கொடியதும் சாவுக்கேதுவானதுமாயிருக்கிறதென்பதை கீழ்காட்டியிருக்கிற பரீட்சையில் சோதித்தறியப்பட்டிருக்கிறது. நல்ல புஷ்டியுள்ள ஓர் தவளையின் நாவிலே மேற்சொல்லிய விஷத்தில் ஓர் சொட்டு மாத்திரம் வைக்கப்பட்டவுடனே, சில நிமிஷங்களாக அது வெகு தெளிவாய் காணப்பட்டு பிறகு ஐந்து நிமிஷத்துக்கெல்லாம் மரித்துப்போயிற்றாம். இப்பரீட்சையைக்கொண்டு, Theobromin என்ற விஷம் தனியே உபயோகிக்கப்படுகிறபோது எவ்வளவு கொடிதாயிருக்கிறதென்று நமக்குத் தெரிகிறது. தேயிலைப்பானத்தை உபயோகிக்

கிறவர்கள், அந்த தவளையைப்போல குடித்த மாத்திரத்தில் விழுந்து இறந்துபோகிறதில்லை; ஏனெனில் மேற்சொன்ன விஷமானது, அவர்கள் சாப்பிடுகிற சிறு கோப்பையளவு பானத்தில் அதிகமாயிராததினாலும், தேனின் என்ற விஷமானது வயிற்றின் மிருதுவான பாகங்களைக் கெட்டிப்படுத்திவிடுகிறதினாலும், அவ்விஷம் தவளையின் நாவில் துரிதமாய் பலன் செய்ததுபோல மனிதர்களுக்கு செய்கிறதில்லை. ஆனால் எவ்விதத்திலும் அவ்விஷமானது தனது வேலையைச் செய்கிறதாயிருக்கிறது.

ஒருவர் தேயிலைப்பானத்தை உட்கொண்டபின், அதிக ஊக்கமுடையவராயும், ஆயாசந் தீர்க்கப்பட்டவராயும் உணருகிறது மெய்தான். ஆனால் இவ்வுணர்ச்சி, நாம் முன்னே பார்த்த மயக்கந்தரும் விஷத்தின் வேலையென்றே நமக்கு ரூபகாரப்படுத்தப்பட்டிருக்கிறது. இம்மயக்கந்தரும் வஸ்துவாகிற விஷம் நமது சரீரத்தில் இப்படித்தான் வேலை செய்கிறது. இத்தன்மைபோன்ற விஷப்பொருள்கள் சரீரத்தின் நரம்புக்கொடிகளைத் தாக்கி, பரிசநரம்புகளின் சக்தியை முற்றிலுமாய் நீக்கிவிடுகிறது. இப்பரிச நரம்புகள், நமது சரீரத்தில் உண்டாகும் களைப்பு, வேதனை, வலி ஆகிய இவைகளை உணர்த்தும்படிக்கு ஏற்படுத்தப்பட்ட பணிவிடைக்காரர்களாக இருக்கின்றன. விஷப்பொருள்களினாலும், காயங்களினாலும் உண்டான சேதத்தின் காரணமாக இவைகள் நசிவுண்டு உணர்ச்சியற்று போகிறதால் அந்த இடத்தில் என்ன நடக்கிறதென்று அறிவிக்க அந்த நரம்புகள் கூடாதவையாயிருக்கின்றன. மனுஷ சித்தத்தின் முக்கிய ஸ்தானமாயிருக்கிற மூளைக்கு அறிவிக்கப்படாமலே ஒருவனுக்கு அபாயகரமான விபத்து நேரிட்டிருக்கலாம்; ஆனால் அவன், தானே அதை உணர்ந்துகொள்ளக்கூடாதேபோய், தான் மிகவும் சுகஸ்திதியிலிருப்பதாக நினைக்கிறான். ஆனாலும் சிலர், இது தேயிலைப்பானத்தினால் இவ்விதம் உண்டாகிறதென்பது உண்மையல்ல; ஆனால் பரிச நரம்புகளின் நுனியில் இயக்கம் முற்றிலும் நின்றுபோய் மரத்துப்போகிறதினாலேயே இது சம்பவிக்கிறதென்று சொல்லுகிறார்கள்.

இப்போது தேயிலைப்பானத்தின் கெடுதியைத் தெளிவாய் விளக்கிக்காட்டுவதற்கு கீழே ஒரு திருஷ்டாந்தத்தைக் காட்டியிருக்கிறது: ஓர் குடியானவன் வயலில் உழுதுகொண்டிருக்கிறான். ஏரில் பூட்டியுள்ள எருதுகள் நாள் முழுதும் வேலை செய்ததினாலே களைப்படைந்து மெதுவாய் போகின்றன. அப்போது அக்குடியானவன் அது துரிதமாய் செல்லும்படி அதை அடிக்கிறான். அதனால் என்ன நேரிடுகிறது? சிறிது நேரத்துக்கு அது வேகமாய்ப் போகிறதில்லையா? ஏன் அப்படி வேகமாய்ச் செல்லுகிறது? அந்த அடியானது எருதுக்கு அதிக பலத்தைக் கொடுத்ததா, அல்லது அது சுளுவாய் வேலை செய்யும்படி அதன் களைப்பை குறைத்துவிட்டதா? அல்ல், அது அப்படியல்ல, அது ஓர் தூண்டுகோலாக அதன் சரீரத்தின்மேல் வேலை செய்தது. அடியினால் உண்டான வலி அதன் களைப்பைச் சிறிது நேரமாக மறக்கச்செய்ததேயன்றி அதன் உடலுக்கு பலத்தைக் கொடுத்தது கிடையாது. இவ்விதமே தேயிலையும் வேலை செய்கிறது. மனுஷனை போஷிப்பிக்கும் சத்து யாதொன்றும் தேயிலையில் கிடையாது. ஆனால் விஷமானது நரம்பின் அந்தங்களை சுரணையற்றுப்போகச் செய்கிறது. ஆனால், அம்மனிதன் தான் நல்ல ஸ்திதியிலிருப்பதாக எண்ணுகிறான். அப்படியல்ல, அவன் வயிற்றிலுள்ள நுண்ணிய தசையும் ஜீரணரச ஊற்றுகளும் கடினமடைந்து அவனுடைய நரம்புக்கொடிகள் அதிக பலவீனப்பட்டுப் போயிருக்கிறபடியால் உண்மையிலேயே அவன் சரீரம் மிகவும் கேடாகவே யிருக்கிறது. ஆகையினால் தேயிலையைப்பற்றிய விஷயங்கள் இவ்வளவு உண்டு.

Dr. O. Smith.

கேள்விகளுக்கு விடை.

கேள்வி:—உங்கள் பத்திரிகையில், முட்டைப்பானமானது ஒழுங்காய் முறையோடு செய்யப்படுமானால், சுளுவில் ஜீரணிக்கக்கூடியதும் போஷணையைத் தரத்தக்கதுமான ஓர் பானமென்று சொல்லியிருந்தீர்கள். அதை எப்படிச் செய்து பக்குவப்படுத்துவதென்று சொல்லுங்கள்.

விடை:—புதிதான நல்ல கோழிமுட்டை ஒன்றை தயார் செய்துகொள்ள வேண்டும். (ஏனெனில் முட்டைகளுள் கோழிமுட்டையே சுகமுள்ளதும் அதிக போஷணையைத் தரத்தக்கதுமாயிருக்கிறது.) பிறகு அவற்றை இரண்டு ஆழாக்கு கொள்ளக்கூடிய ஒரு கண்ணாடி அல்லது பீங்கான் பாத்திரத்தில் உடைத்து ஊற்றி மஞ்சட்கரு வெள்ளைக்கரு ஆகிய இரண்டும் ஒன்றாய் கலந்து அதில் நுரை உண்டாகுமளவும் அதை நன்றாய் அடிக்கவேண்டும். பிறகு அதில் ஒரு தேக்கரண்டியளவு வெள்ளைச் சர்க்கரை சேர்த்து அது கரையும் வரையிலும் திரும்பவும் நன்றாய் அடிக்கவேண்டும். பிறகு அப்பாத்திரம் கொள்ளுமளவும் காய்ச்சின பாலை விட்டு அதோடு எலுமிச்சம்பழ சாற்றில் சில துளிகளாவது அல்லது மற்றெந்த வாசனையுள்ள ஷர்பத்துகளில் யாதொன்றும் மனதுக்கு பிரியமானபடி சேர்த்து உடனே குடித்துவிடவேண்டியது.

இப்பானம் அதிக நன்மையென்பதற்கு அநேக காரணங்கள் உண்டு. அதிலிருக்கும் பால் அதிக போஷணையுள்ளதும் சீக்கிரத்தில் ஜீரணிக்கக்கூடியதுமாயிருக்கிறது. சர்க்கரையும் மிதமாய்ச் சேர்த்துக்கொண்டால் வலுவற்ற தசைநார்களை சரீரத்தில் வலுப்படுத்தும் ஓர் ஆகாரமாயிருக்கிறது. முட்டையும் சரீர போஷணைக்குத் தகுந்த ஓர் நல்ல உணவுதான். அதைச் சமைத்து சாப்பிடுவதைப்பார்க்கிலும் பச்சையாய்ச் சாப்பிட்டால் அதிக சுளுவில் ஜீரணமடையும். இந்த ஆகாரம் அதிக போஷணையைத் தரக்கூடியதாகையினால், கெட்டியான உணவுப்பொருள்களை நமது குடல்கள் ஜீரணிக்க சக்தியற்றிருக்கும் வேளைகளிலேயன்றி மற்ற சமயங்களில் அடிக்கடி உபயோகப்படுத்தலாகாது. இப்பானம் மூன்று அல்லது நான்கு மணிக்கொருமுறை உபயோகப்படுத்தலாம். ஆனால் இதே ஆகாரத்தை வெகு நாட்களுக்கு உபயோகப்படுத்தக்கூடாது. இவைகளுக்கிடையில் பால், சூப்பு, கஞ்சி இவை முதலியவற்றையும் உபயோகிப்பது நன்று.

Dr. O. Smith.

கேள்விகளுக்கு விடை
(QUESTIONS AND ANSWERS.)

கேள்வி:—ஐயா, கிறிஸ்துவானவர் பூமியிலிருந்தபோது அவர் மனுஷனேயல்லாமல் எவ்விதத்திலும் தேவ சுபாவத்தை யுடையவராயிருந்ததில்லையென்று ரசல் போதகம் தெளிவாய் உபதேசிக்கிறதாக அநேகர் சொல்லுகிறார்கள். இது உண்மையானால், கிறிஸ்து மரித்தது ஓர் மனுஷன் மரித்ததற்கு ஒப்பிடலாம், ஆகையினால் நாம் மனுஷ ரட்சகனையே உடையவர்களாயிருக்கிறோம் என்றும் எனக்குத் தெரிகிறது. இது இவ்விதம் இருக்குமானால் நாம் எப்படி ரட்சிக்கப்படக்கூடும்?

விடை:—நியாயமானபடி இக்கேள்வி, ரசல் போதகத்தை உபதேசிக்கிறவர்களிடத்திற்கு அனுப்பப்படவேண்டியது. ஒருவேளை அவர்கள் இக்கேள்விக்கு விடையளிக்க சந்தோஷப்படுவார்கள். ஆனால், இக்கேள்வி என்னிடம் கேட்கப்பட்டதினாலும், அவர்களுடைய புஸ்தகங்களின் மூலமாய் இவ்விஷயத்தைப்பற்றிய உபதேசத்தை நான் நன்றாய் அறிந்திருக்கிறபடியினாலும், இக்கேள்விக்கு ஓர் சுருக்கமான விடை சொல்லுகிறேன்,

ஆம். கிறிஸ்துவானவர் இப்பூமியிலிருந்தபோது தேவனாயல்ல, ஆனால் வெறும் மனிதனாகவே யிருந்தாரென்று போதிக்கிறார்கள். இதற்கு உதாரணமாக சில வாக்கியங்களை அவர்கள் புத்தகத்திலிருந்து இவ்விடம் எடுத்துக் கூறுகிறோம்: "யேசுவானவர், மனுஷ சுபாவம் தேவ சுபாவமென்கிற இரண்டும் பொருந்தின ஓர் ஆளல்ல.........யேசு மாம்சத்திலிருந்தபோது, அவர் ஓர் பூரண மனுஷனாயிருந்தார்; அவர் மனுஷ சுபாவத்துக்கு வருமுன்னதாக, ஓர் பூரண, ஆவிக்குரிய ஆளாயிருந்தார்; பிறகு அவருடைய உயிர்த்தெழுதலின் காலத்திலிருந்து, அதி உன்னத பதவியின்படி பூரண ஆவிக்குரியவராயிருக்கிறார்." Plan of the ages. Vol. 1, Pages 179, 180.

"மனுஷனை அவர் இரட்சிக்கும்பொருட்டு, தமக்கிருந்த ஆவிக்குரிய சுபாவத்தையும் ஜீவனையும் என்றுமாக ஒப்புக்கொடுத்து, தாம் ஓர் பூரண மனுஷனாக விருந்தும் தன்னையோர் சாதாரண மனுஷனாக தாழ்த்தி மனிதனானார் என்று வேத வாக்கியங்கள் நமக்கு உணர்த்திக் காட்டுகின்றன." Millennial Hopes and Prospects. Page 4.

"மாம்சமாயிருக்கிற மனுஷ சுபாவம், நமக்கு மீட்கும் கிரயமாக கொடுக்கப்பட்டது." Studies in the Scriptures Vol. 5 Page 466.

"அவர் ஓர் மனிதனைப்போலவே மரணத்துக்குள்ளாக்கப்பட்டார்.........அவரும் ஓர் மனிதனாகவேயிருந்தார்." Same book Vol. 5 Page 453.

இவ்விதமாய், கிறிஸ்து தேவ சுபாவமுள்ளவரல்லவென்று அவர்களுடைய புத்தகங்களிலிருந்தே உபதேசம் செய்கிறார்கள். நமக்காக பிராயச் சித்தஞ் செய்யப்பட்ட பலி, நரபலியென்றும் சொல்லுகிறார்கள். இப்படிச் சொல்லுகிறதானது, மனிதன் மனிதனை இரட்சிக்கிறானென்றும், வேறு விதமாய்ச் சொன்னால், மனிதன் தன்னைத்தானே இரட்சித்துக்கொள்ளுகிறானென்பதற்கும் சரியாயிருக்கிறது.

ஒரு மனிதன் தன்னைத்தானே இரட்சித்துக்கொள்வது கூடாத காரியம். இதைத்தான் இந்துக்களும் ரோமான் கத்தோலிக்கரும் போதிக்கிறார்கள். இதினிமித்தமே மனுஷன் தன்னைத்தானே இரட்சித்துக்கொள்ளத் தகுதியற்றிருக்கிறானென்று அறிந்து, நம்மை இரட்சிக்கும்படி, தமது குமாரனை அனுப்பினார்.

பாவ பரிகாரத்துக்கு நரபலி செலுத்துவது பூரணமானதல்லவென்று காட்டுகிறதற்கு, இங்கோர் உதாரணம் சொல்லுகிறோம். ஓர் கொலை நடத்தப்படுகிறது, பிறகு அக்காரியம் நீதியுடன் சோதித்தறியப்பட்டு குற்றவாளிக்கு மரண தண்டனை விதிக்கப்படுகிறது. ஆனால் அக்கொலையாளி தன் ஜீவனுக்காக விண்ணப்பம் பண்ணுகிறான். நியாயப்பிரமாணம் மீறப்பட்டதனால், அதைத் திர்ப்தி செய்யும்பொருட்டு அவன் சாகவே வேண்டும். அப்போது அவன் தன் மனதில் எண்ணுகிறதாவது: நான் செய்த இக்கொலைக்கு எவ்விதத்திலும் இரத்தம்தான் சிந்தப்படவேணும், அப்படியானால், எனது அருமையான நாயை எனக்குப் பதிலாக மரணத்துக்கு ஒப்புக்கொடுப்பேன் என்று நியாயாதிபதியிடம் போய்: ஐயா எனக்குப் பதிலாக என்னிடத்திலிருக்கும் அருமையான நாயைக் கொண்டுபோய் தூக்கிப் போடுங்களென்று சொல்வானாகில், அந்த நியாயாதிபதி என்ன சொல்லுவார்? அதற்கு அவர் சம்மதிப்பாரோ? ஒருபோதும் சம்மதியார்! செலுத்தப்படுகிற ஈடானது நியாயப்பிரமாணத்தில் மீறினவற்றிற்குச் சரியாயிருக்கவேண்டும். பாவம், பரிசுத்த பிரமாணத்தினுடைய மீறுதலாயிருக்கிறபடியினால், அதற்குச் செலுத்தப்படுகிற ஈடுபலியும் பரிசுத்தமுள்ளதாயிருக்கவேண்டும். மீறப்பட்ட மனுஷ கற்பனைக்கு, நாயின் ஜீவனை ஈடாகச் செலுத்தக்கூடாததுபோல, மீறப்பட்ட பரிசுத்த தேவப் பிரமாணத்துக்கு நரபலியை அதாவது மனுஷ ஜீவனை ஒருபோதும் ஈடாக செலுத்தக்கூடாது. கிறிஸ்துவானவருடைய தன்மையைப்பற்றி வேதாகமம் என்ன சொல்லுகிறதென்று பாருங்கள். "கிறிஸ்து இயேசுவிலிருந்த சிந்தையே உங்களிலும் இருக்கக்கடவது; அவர் தேவனுடைய ரூபமாயிருந்தும், தேவனுக்குச் சமமாயிருப்பதைக் கொள்ளையாடின பொருளாக எண்ணாமல், தம்மைத்தாமே வெறுமையாக்கி, அடிமையின் ரூபமெடுத்து, மனுஷர் சாயலானார். அவர் மனுஷரூபமாய்க் காணப்பட்டு, மரணபரியந்தம், அதாவது சிலுவையின் மரணபரியந்தமும் கீழ்ப்படிந்தவராகி, தம்மைத்தாமே தாழ்த்தினார். ஆதலால் தேவன் எல்லாவற்றிற்கும் மேலாக அவரை உயர்த்தி, யேசுவின் நாமத்தில் வானோர் பூதலத்தோர் பூமியின் கீழானோருடைய முழங்கால் யாவும் முடங்கும்படிக்கும், பிதாவாகிய தேவனுக்கு மகிமையாக இயேசு கிறிஸ்து கர்த்தரென்று நாவுகள் யாவும் அறிக்கை பண்ணும்படிக்கும், எல்லா நாமத்திற்கும் மேலான நாமத்தை அவருக்குத் தந்தருளினார்." பிலி. 2: 5-11. "இருளின்

அதிகாரத்தினின்று நம்மை விடுதலையாக்கி, தமது அன்பின் குமாரனுடைய ராஜ்யத்திற்கு உட்படுத்தினவருமாயிருக்கிற பிதாவை ஸ்தோத்திரிக்கிறோம். (குமாரனாகிய) அவருக்குள், அவருடைய இரத்தத்தினாலே, பாவ மன்னிப்பாகிய மீட்பு நமக்கு உண்டாயிருக்கிறது. அவர் அதரிசனமான தேவனுடைய தற்சுரூபமும், சர்வ சிருஷ்டிக்கும் முந்தின பேறுமானவர். ஏனென்றால் அவருக்குள் சகலமும் சிருஷ்டிக்கப்பட்டது; பரலோகத்திலுள்ளவைகளும் பூலோகத்திலுள்ளவைகளுமாகிய காணப்படுகிறவைகளும் காணப்படாதவைகளுமான சகல வஸ்துக்களும், சிங்காசனங்களானாலும், கர்த்தத்துவங்களானாலும், துரைத்தனங்களானாலும், அதிகாரங்களானாலும், சகலமும் அவரைக்கொண்டும் அவருக்கென்றும் சிருஷ்டிக்கப்பட்டது. அவர் எல்லாவற்றிற்கும் முந்தினவர், எல்லாம் அவருக்குள் நிலைநிற்கிறது. அவரே சபையாகிய சரீரத்துக்குத் தலையானவர்; எல்லாவற்றிலும் முதல்வராயிருக்கும்படி, அவரே ஆதியும் மரித்தோரிலிருந்து எழுந்த முதற்பேறுமானவர்." கொலோ. 1: 13-18; "பூர்வ காலங்களில் பங்குபங்காகவும் வகைவகையாகவும், தீர்க்கதரிசிகள் மூலமாய்ப் பிதாக்களுக்குத் திருவுளம்பற்றின தேவன், இந்தக் கடைசி நாட்களில் குமாரன் மூலமாய் நமக்குத் திருவுளம்பற்றினார்; இவரைச் சர்வத்துக்கும் சுதந்தரவாளியாக நியமித்தார்; இவரைக்கொண்டு உலகங்களையும் உண்டாக்கினார். இவர் அவருடைய மகிமையின் பிரகாசமும், அவருடைய தன்மையின் சொரூபமுமாயிருந்து, சர்வத்தையும் தம்முடைய வல்லமையுள்ள வசனத்தினாலே தாங்குகிறவராய், தம்மாலேதாமே நம்முடைய பாவங்களை நீக்கும் சுத்திகரிப்பை உண்டுபண்ணி, உன்னதத்திலுள்ள மகத்துவமானவருடைய வலது பாரிசத்திலே உட்கார்ந்தார். இவர் தேவ தூதரைப்பார்க்கிலும் எவ்வளவு விசேஷித்த நாமத்தைச் சுதந்தரித்துக்கொண்டாரோ, அவ்வளவு அதிகமாய் அவர்களிலும் மேன்மையுள்ளவரானார்." எபி. 1: 1-4; "ஆதியிலே வார்த்தை இருந்தது, அந்த வார்த்தை தேவனிடத்திலிருந்தது, அந்த வார்த்தை தேவனாயிருந்தது. அவர் ஆதியிலே தேவனோடிருந்தார். சகலமும் அவர் மூலமாய் உண்டாயிற்று; உண்டானதொன்றும் அவராலேயல்லாமல் உண்டாகவில்லை. அவருக்குள் ஜீவன் இருந்தது, அந்த ஜீவன் மனுஷருக்கு ஒளியாயிருந்தது. அந்த ஒளி இருளிலே பிரகாசிக்கிறது; இருளானது அதைப் பற்றிக்கொள்ளவில்லை. தேவனால் அனுப்பப்பட்ட ஒரு மனுஷன் இருந்தான்; அவன் பேர் யோவான். அவன் தன்னால் எல்லாரும் விசுவாசிக்கும்படி அந்த ஒளியைக்குறித்துச் சாட்சி கொடுக்க சாட்சியாக வந்தான். அவன் அந்த ஒளியல்ல, அந்த ஒளியைக்குறித்துச் சாட்சி கொடுக்க வந்தவனாயிருந்தான். உலகத்திலே வந்து எந்த மனுஷனையும் பிரகாசிப்பிக்கிற ஒளியே அந்த மெய்யான ஒளி. அவர் உலகத்திலிருந்தார், உலகம் அவர் மூலமாயுண்டாயிற்று, உலகமோ அவரை அறியவில்லை. அவர் தமக்குச் சொந்தமானதிலே வந்தார், அவருக்குச் சொந்தமானவர்களோ அவரை ஏற்றுக்கொள்ளவில்லை. அவருடைய நாமத்தின்மேல் விசுவாசமுள்ளவர்களாய் அவரை ஏற்றுக்கொண்டவர்கள் எத்தனை பேர்களோ, அத்தனை பேர்களும் தேவனுடைய பிள்ளைகளாகும்படி, அவர்களுக்கு அதிகாரங்கொடுத்தார். அவர்கள், இரத்தத்தினாலாவது மாம்சசித்தத்தினாலாவது புருஷனுடைய சித்தத்தினாலாவது பிறவாமல், தேவனாலே பிறந்தவர்கள். அந்த வார்த்தை மாம்சமாகி, கிருபையினாலும் சத்தியத்தினாலும் நிறைந்தவராய், நமக்குள்ளே வாசம் பண்ணினார்; அவருடைய மகிமையைக் கண்டோம்; அது பிதாவுக்கு ஒரே பேறானவருடைய மகிமைக்கு ஏற்ற மகிமையாகவே இருந்தது." யோ. 1: 1-14.

கிறிஸ்து இப்பூமியிலிருந்தபோது தம்மைத் தேவ மனுஷனென்று சொன்னார். அவர் தேவ குமாரனென்று சொன்னதினாலேயே யூதர்கள் அவரைக் கொலை செய்ய வகை தேடினார்கள். சாத்தானுங்கூட கிறிஸ்துவை தேவ குமாரனல்லவென்று மறுதலித்தான். வனாந்தரத்தில் அவன் அவரைச்சோதித்தபோது, கிறிஸ்து தம்மைத் தேவ குமாரனென்று ரூபிக்கும்படி அவரைக் கேட்டான். இதனாலே சாத்தானும் கிறிஸ்துவினுடைய தெய்வீகத்தை மறுதலித்தான் என்று விளங்குகிறது. கிறிஸ்துவானவர், தம்மைத் தேவகுமாரனென்று சொன்ன இக்காரணமே, அவருடைய மரணத்துக்கு ஏதுவாயிருந்ததேயொழிய, மற்ற விஷயங்களில் யேசுவோடு யூதர்களுக்கு விவாதம் இருந்ததில்லை.

கிறிஸ்துவானவர் தேவனுடைய பரிசுத்த குமாரனாயிருந்தார். நமக்கும் அவர் தெய்வீ[illegible]பலியாகவேயிருந்தார். ஆகையினால், நமக்கு மனுஷ இரட்சகனல்ல, தெய்வீக [illegible]ரே யிருக்கிறார்,

ஜி. ஜி. லௌரி.

நிகழ்கால சத்தியம்

வேத சன்மார்க்க சுகாதார விஷயங்களில் தற்கால அறிவுக்கொத்தபடி மனிதர் அபிவிருத்தியடைவதற்கென்று பிரசுரமாகும் ஓர் பத்திரிகை.

மதராஸ் டிஸம்பர்மீ, 1921.

இப்பத்திரிகை, பெங்களூரிலிருக்கும், எஸ். டி. ஏ. பப்ளிஷிங்கவுஸ்காக, பட்டணத்தில் வெப்பேரி என்னுமிடத்திலுள்ள அல்பீனியன் அச்சாபீசில் அச்சடிக்கப்பட்டு வருகிறது.

பத்திராதிபர் பாஸ்றர், ஜி. ஜி. லோளரி.
உதவி ,, ,, ஈ. டி. தாமஸ்.

	ரூ.	அ.	ப.
தனிப்பிரதி ஒன்றுக்கு ...	0	1	6
வருஷ சந்தா, தபாற் கூலி உள்பட ...	1	0	0
சிங்கப்பூர் பினங்கு முதலிய வெளி ஊர்களுக்கு தனிப் பிரதி ஒன்றுக்கு ...	0	2	0
வருஷசந்தா தபாற்கூலி உள்பட ...	1	4	0

நேசவுத் தொழில்.

இந்தியா முழுமையிலும் நூல் நூற்கும் தொழிற்சாலைகள் 253 இருக்கின்றன; அவைகளில் 67 லட்சத்து 63 ஆயிரம் கதிர்கள் இருக்கின்றன. தரிகளில் ஒரு லட்சத்து 19 ஆயிரம் இருக்கின்றன. 3 லட்சத்து 11 ஆயிரம் ஜனங்கள் சராசரி இத்தொழிற்சாலைகளில் வேலை செய்கிறார்கள். கட்டு ஒன்றுக்கு 392 ராத்தல் பருத்தியுள்ள கட்டுகளாக 20 லட்சம் கட்டுகள் செலவாகின்றன. 1920-ம் வருஷத்தில் இந்தியா முழுமையிலும் 61 கோடி ராத்தல் நூல் நூற்கப்பட்டது, [illegible]ணி 152 கோடி கஜம் நெய்யப்பட்டது. [illegible]வுக்கு 1 லட்சத்து 75 ஆயிரம் கட்டு பருத்தி ஏற்றுமதி செய்யப்பட்டது. அதற்கு முந்தின வருஷத்தில் 2-லட்சத்து [illegible] ஆயிரம் கட்டுகள் அனுப்பப்பட்டன.

சமாசாரக் குறிப்புகள்.

கோதுமை ஏற்றுமதி.

இந்தியா கவர்ன்மெண்டார் கோதுமை ஏற்றுமதியை மார்ச்சு மாதம் வரைக்கும் நிறுத்திவைத்திருக்கிறார்கள். கோதுமை சாகுபடி இப்பொழுது குறைந்திருக்கிறது; விசேஷமாய் பயிர் செய்யவுமில்லை. சீதோஷ்ணஸ்திதி சாதகமாயிருந்தும் விதைத்து சாகுபடி செய்ய போதுமான சௌகரியமில்லை யென்று தெரிகிறது. கோதுமையின் விலை மற்ற தேசங்களைவிட இங்கு அதிகமாயிருக்கிறது. ஆகையால் சைனியங்களுக்குத் தேவையான கோதுமையை இந்திய கவர்ன்மெண்டார் ஆஸ்ட்ரேலியாவிலிருந்து வாங்குகிறார்கள். இந்தியாவில் கோதுமை செழிப்புற சில காலம் செல்லும் என்று தெரியவருகிறது.

மூங்கிலின் பிரயோஜனம்.

சீனர்கள் இம்மூங்கிலின் வேர்க்கொழுந்துகளைத் தம் சாப்பாட்டில் சேர்த்து இனிமையாய் உண்கிறார்கள். வெண்காயத்தை எப்படி ருசியுடன் மற்றவர்கள் உண்கிறார்களோ அப்படியே ஆகாராதிகளுடன் பக்குவஞ்செய்து சீனர்களும் ஜப்பானியர்களும் உண்கிறார்கள். இளம் மூங்கிற் கொழுந்துகளை எடுத்து நீளத்தில் துண்டுதுண்டாக நறுக்கி உப்பு நீரில் இவற்றை ஒரு மணி நேரம் வேகவைக்கிறார்கள். பின்னால் இவற்றை வெண்ணெயுடன் கலந்து ஆகாரத்துடன் கலந்துட் கொள்ளுகிறார்கள். மூங்கிற் குழாய்களைத் தண்ணீர் பாய்ச்ச உபயோகிக்கிறார்கள். இதன் நீண்ட நார்களைப் பாய்களாகவும் கூடைகளாகவும் பின்னுகிறார்கள்.

ஜெர்மன் கலர்.

ஜெர்மனியில் கலர் செய்வோர் ப்ரிட்டிஷ் காரரைவிட வெகு மேன்மையாய் கலப்புக் கலர் தயார் செய்ய ஆரம்பித்துவிட்டார்கள். அம்மாதிரிக் கலரை இவ்வுலகில் வேறெவரும் செய்ய முடியாது. ஆகையால் விலை ஒரு திட்டத்துக்குட்பட்டிராது. பட்டு வஸ்திரங்களுக்குப் போடக்கூடிய கலர்கள் செப்டம்பர் முதல் தேதியிலிருந்து ஒன்றுக்கு மூன்றாய் விலை ஏறிவிட்டது. யுத்தத்துக்கு முன்னுள்ள விலையை ஒப்பிட்டுப் பார்த்தால் ஒன்றுக்கு பன்னிரண்டு நாகம் அதிகமென்றே சொல்லவேண்டும்.